தமிழ் நாட்டில் காந்தி

ஆசிரியர் :
அ. இராமசாமி, பி. ஏ.,

நூற்றாண்டு விழா வெளியீடு

காந்தி நூல் வெளியீட்டுக் கழகம்
சென்னை-2.

© தமிழ்நாடு காந்தி நினைவு நிதி
முதற்பதிப்பு—3000—நவம்பர், 1969.

விலை ரூ. 18

பிரதிகளுக்கு :
தமிழ் நாடு காந்தி நினைவு நிதி
மதுரை-13,
என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

அச்சிட்டோர் :
நா. சிவராமகிருஷ்ணன்,
ஜவரி அச்சகம்,
692/93, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை-5.



தேசப்பிதாவுக்குத் தமிழ் தேசிய கவி அஞ்சலி



வாழ்க நீ எம்மான், இந்த வையத்து
நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலே
தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந்
தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா !
நீ வாழ்க ! வாழ்க !

அடிமை வாழ் வகன்றிந் நாட்டார் விடுதலே
யார்ந்து செல்வம்
குடிமையிலுயர்வு, கல்வி ஞானமும் கூடி
யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும் படிக்கொரு
சூழ்ச்சி செய்தாய் !
முடிவிலா கீர்த்தி பெற்றாய் ! புவிக்குள்ளே
முதன்மை யுற்றாய் !

முன்னுரை

''தமிழ் நாட்டில் காந்தி'' என்னும் இந்நூல் அதன் பெயருக்கு ஏற்பத் தமிழ் நாட்டிற்கும் காந்தியடிகளுக்கும் இருந்த தொடர்பை விளக்குகிறது. தென்னப்பிரிக்காவில் பாலசுந்தரம் என்ற தமிழன் காந்திஜியை ஓர் உதவிக்காக அணுகியதிலிருந்து அண்ணலுடைய கடைசிக் காலம் வரை தமிழகத்திற்கும் அவருக்கும் இருந்த நெருங்கிய தொடர்பை விவரமாக விவரிக்கிறது. தென்னப்பிரிக்காவில் மகாத்மா மேற்கொண்ட போராட்டங்களில் உறுதுணையாகவிருந்த தமிழர் தலைவர்கள், வள்ளியம்மா, நாகப்பன், நாராயண சாமி போன்ற உயிர்த் தியாகிகள் ஆகியோரைப் பற்றி இது வரை வெளி உலகத்திற்குத் தெரியாத பல நுணுக்கமான விவரங்களெல்லாம் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

காந்திஜி முதன் முதலாகத் தமிழகத்திற்கு வந்தது 1896-ஆம் ஆண்டிலாகும். அவர் கடைசி முறையாக இங்கு வந்தது 1946-ஆம் ஆண்டிலாகும். இந்த ஐம்பது ஆண்டுகளில் பலமுறை அவர் தமிழகத்திற்கு வந்துள்ளார். எந்தெந்த ஆண்டுகளில் அவர் தமிழகத்திற்கு வந்தார், அவர் இங்குச் சென்ற ஊர்கள், நகரங்கள் யாவை, அங்கு நிகழ்த்திய சொற்பொழிவுகளில் கூறியதென்ன என்பவை யெல்லாம் தெளிவாக, தேதிக் குறிப்புகளுடன் இந்நூலில் கொடுக்கப் பெற்றுள்ளன.

மேலும், தமிழகத்தைச் சேர்ந்த திரு. இராஜ கோபாலாச்சாரியார், திரு. காமராஜ், திரு. சீனிவாச சாஸ்திரி, திரு. ஜி. ஏ. நடேசன், திரு. ஹரிஹர சர்மா போன்ற பெரிய தலைவர்களுடனும் முக்கிய ஊழியர்களுட னும் காந்திஜிக்கு இருந்த தொடர்பும் நெருங்கிய உறவும் இந்நூலில் ஆங்காங்கு விவரிக்கப் பெற்றுள்ளன. காந்தி யடிகளின் அடிச்சுவட்டைப் பின் பற்றித் தமிழகத்தில் கதர், தீண்டாமை ஒழிப்பு, குஷ்ட நிவாரணம்

போன்ற நிர்மாணப் பணிகள் நடைபெற்றுள்ள வரலாறு, அவைகளில் முக்கியப் பங்கு கொண்டவர்கள் யார் யார் என்ற விவரங்கள் ஆகியவையும் இந்த நூலில் அளிக்கப் பெற்றுள்ளன. வேதாரண்யம் உப்புச் சத்யாக்ரகத்தைப் பற்றிய சுருக்கமான வரலாறும் இடம் பெற்றுள்ளது.

சுமார் மூன்று ஆண்டுகளாகப் பல பத்திரிகைகளையும் நூல்களையும் ஆராய்ந்தும் டில்லியிலிருந்து தென் கோடி வரை நூற்றுக்கு மேற்பட்டோரைப் பேட்டி கண்டும் பெரு முயற்சியுடன் தயாரிக்கப் பெற்ற நூல் இது. இப்பணியைச் சிரத்தையுடன் மேற் கொண்டு மிகுந்த பக்தியுடன் தயார் செய்த ஸ்ரீ அ. இராமசாமி அவர்களுக்கு நம் நன்றி உரியது. இதன் வெளியீட்டிற்காகச் சென்னை அரசாங்கம் கொடுத்திருக்கும் உதவிக்கும் நன்றி.

தமிழ் மக்கள் இதைப் பேராரவத்துடன் வரவேற்றுப் பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

3—11—69
ஸ்ரீ ராமகிருஷ்ண
வித்யாலயம்,
கோவை மாவட்டம்.

தி. க. அவினாசிலிங்கம்,
தலைவர்,
சாந்தி நூல் வெளியீட்டுக்
கழகம்.

ஆசிரியரின் நோற்றுவாய்

மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகிய நால்வரையும் - குறிப்பாக, எனக்கு எல்லாம் ஆகிய என் தந்தை மா. அழகர்சாமி அவர்களை - வணங்கி, இந்நூலைத் தமிழ கத்தின் பொன்னடியில் நான் பணிவோடு வைக்கிறேன்.

மாந்தருள் ஒரு தெய்வமான மகாத்மா காந்தி, தெய்வத் தமிழகத்துடன் கொண்டிருந்த தொடர்பையும் உறவை யும் விளக்குவது இந்நூலின் நோக்கமாகும். மாமனிதர் ஒருவரையும் உலகின் தொன்மைப் புகழ் வாய்ந்த நிலப் பரப்பு ஒன்றினையும் இணைத்து எழுதுவது எளிதான செயல் அல்ல. ஆகவே என்னுடைய வரம்புகளை யெல்லாம் நன்கு உணர்ந்து பணிவுடனும் அடக்கத்துடனும் நான் இம் முயற்சியை மேற் கொண்டுள்ளேன்.

என் வாழ்நாளிலேயே இந்நூலைத் தயாரிப்பதற்காக நான் செலவிட்ட இம்மூன்று ஆண்டுகளைப் போல் புண்ணியம் நிறைந்த, பொருளுள்ள ஒரு காலம் இருந்த தில்லை. இந்நூலைத் தயாரிப்பதற்காக டில்லியிலிருந்து தென் கோடி வரை நான் சுற்றுப் பயணம் செய்திருக்கிறேன். காந்திஜியுடன் தொடர்பு கொண்டிருந்த பலரைச் சந்தித் திருக்கிறேன்; பலருடன் கடிதப் போக்குவரத்து நடத்தி யிருக்கிறேன்; நான் படித்த நூல்கள் பல. மற்றும் காணக்கிடைக்காத அரசாங்கச் சான்றுகளிலிருந்தும் காலத் தாற் புதைந்து போன பல நாளிதழ், சஞ்சிகைகள் கட்டு களிலிருந்தும் சுவையுடன் கூடிய முக்கியமான பல விவரங் களைக் கல்லி எடுத்துள்ளேன்.

''அவர் அமர்ந்த இடமெல்லாம் ஆலயமாகும்'' என்று தமக்கே உரிய கவிதை நடையில் நேரு பெருமகன் கூறினர். ஆகவே அண்ணல் சென்ற குக் கிராமங் களையும் நான் விடவில்லை; அவருடன் தொடர்பு கொண்ட வர்களில் எத்தனைபேர் பெயர்களைக் கூற இயலுமோ அத்தனை பெயர்களையும் குறிப்பிட்டுள்ளேன். 1927-ஆம்

ஆண்டு வருகைக்குப்பின் வரவேற்புக் கூட்டங்களும் வரவேற்பாளர்களும் அதிகமாகி விடுவதால், நூலின் ஓட்டம் குறையாதிருக்க அவைகளை அடைகுறிகளுக்கிடையே ஆங்காங்கு அளித்திருக்கிறேன். ஒவ்வொரு பகுதியைச் சேர்ந்தவர்களும் அவர்கள் பகுதியைப் பற்றிவரும்போது மட்டும் இந்த அடைகுறிகளுக்குள்ளே வரும் விவரங்களைப் படித்துக் கொண்டால் போதுமானது. மற்றவர்கள் அவைகளை விட்டு விட்டுப் படித்துக்கொண்டு போகலாம். அதனால் அவர்கள் இழக்கக் கூடிய முக்கியமான தகவல் எதுவும் இராது. தமிழகத்தில் மகாத்மாவின் புனித பாதங்கள் பட்ட கால விவரங்கள் இப்போது மறைந்து போக இடமில்லை என்றாலுங்கூட அவைகளை ஒரே நூலில் எல்லோரும் காண்பதற்கு வசதியாக இருக்கட்டும் என்பதற்காகத் தேதிவாரியாக விவரமாக அளித்திருக்கிறேன். நூலைப் படித்துக் கொண்டு போகிறவர்கள் தேதிகளைப் பற்றிக் கவலைப்படாது தொடர்ச்சியாகப் படித்துக்கொண்டு போகலாம். ஆனால், எந்தத் தேதியில் எந்த ஊருக்கு வந்திருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள அந்தத் தேதிகள் பயன்படும். இது மட்டுமல்லாது நூலின் இறுதியில், ஒவ்வொரு தேதியிலும் எந்த நேரத்தில் எந்த நிகழ்ச்சியில் அவர் பங்குகொண்டார் என்ற குறிப்புக்களையும் அளித்துள்ளேன். நேரங் கிடைக்காதவற்றைக் குறிப்பிடாது விட்டிருக்கிறேன் என்றாலும், வரிசைக் கிரமத்தில் நிகழ்ச்சிகளை அளித்துள்ளேன் ஆதலின் ஒருவாறு அவைகளின் நேரத்தையும் யூகித்துக் கொள்ள இயலும்.

நரேந்திரர் விவேகானந்தராகி நாடெங்கும் பகவான் இராமகிருஷ்ணரின் அருமை பெருமைகளைப் பரப்பியது போன்று திருத்தணியில் பிறந்த தத்துவஞானியான இராதா கிருஷ்ணன் தரணியெங்கும் மகாத்மாவின் மாண்பினைச் சங்கநாதம் செய்துவந்தார். 1915-இல் அண்ணல் சென்னைக்கு வந்தபோது அவரை அங்கு முதன் முதலாகச் சந்தித்த இப்பேரறிஞர் அதன்பின் அவர் புகழை அவனியெல்லாம் முழங்குவதில் முயன்று ஈடுபட்டார். இருபதாம் நூற்றாண்டில் யாரும் எட்டிப் பார்க்க இயலாத ஓர் உயர்ந்த நிலைக்கு காந்திஜியை உயர்த்தியவை அவர் உலகிற்கு வழித்துக் கொடுத்த சில புதுச் சித்தாந்தங்கள்தாம். இவற்றை அவர் முதன் முதலாகக் கூறிய காலையில் மக்கள் புரிந்துகொள்வதே அருமையாக இருந்தது. அந்நிலையில், அத் தத்துவங்களுக்கு

ஒரு முழு உருக்கொடுத்து அவைகளை உலகிற்கு விளக்கியதில் பாஷ்ய கர்த்தாக்களாகவும் அத் தத்துவங்களில் அண்ணலுக்கு வாரிசாகவும் சில தமிழர்கள் விளங்கினர்கள் எனில் இத் திருநாட்டின், தமிழ்நாட்டின் பெருமையை என்னென்று இயம்புவது? ஆம், அரசியலில் நேரு அண்ணலுக்கு ஒரு வாரிசு என்றால் பொருளாதாரத்தில் டாக்டர் குமரப்பாவும், ஆதாரக் கல்விக்கு அரியநாயகமும் வாரிசாக விளங்கியுள்ளனர். காந்திஜியே தம் தத்துவங்களையும் கருத்துக்களையும், உராய்ந்து பார்க்கும் ஒரு உரை கல்லாக-மனச்சாட்சியின் காவலராக-விளங்கியவரன்றோ அரசியல் வல்லுநராகிய ராஜாஜி! அதுமட்டுமல்ல, மதுவிலக்கில் காந்திஜி வாரிசு ஒருவர் உண்டென்றால் அவ்வாரிசு அவரே. தமிழகமே, அவதாரபுருஷர் ஒருவருக்கு மீண்டும் ஒருமுறை அடியார்களை ஈந்து கொடுத்ததற்கு நீ பெருமைப்படு!

•

கவின் நிறைந்த காந்திஜி வாழ்க்கையில், தமிழகம் எத்தனையோ ''முதன்மை''களை அடைந்திருக்கிறது. காந்திஜி தோற்றுவித்த இப்புது சகாப்தத்தில், எதிரி மீது ஆத்திரமோ கோபமோ கொள்ளாது, மனம் உவந்து உயிர் நீத்த உண்மைத் தியாகிகளின் முதல்வரிசையில் வள்ளியம்மா, நாகப்பன், நாராயணசாமி ஆகிய தமிழர்கள் தலைமை இடந் தாங்கினர்கள். செல்வனைப் போன்ற பல தமிழர்கள் பின்னர் உயிர்த் தியாகம் செய்துள்ளனர். 1932-ஆம் ஆண்டில் கொடி ஏந்தி ஊர்வலம் சென்ற போது போலீசாரால் அடிபட்டு உயிர்நீத்த திருப்பூர்க் குமாரனைத் தமிழகம் உள்ளவரை மறக்க இயலுமோ? பாமர மக்களின் பரம நண்பரான மகாத்மாவிடம் முதன் முதலாகப் பாமர மக்களைக்—கூலிகளைக்—கொண்டுவந்து இணைத்து வைத்தவன் பாலசுந்தரம் என்ற தமிழன்; முதன் முதலாக இந்தியா முழுவதற்கும் பொதுவான ஒரு போராட்டத்தை எவ்வாறு தொடங்குவது என்பதில் விடைகாண முடியாது 'குழம்பி'க் கொண்டிருந்த அஹிம்சா வீரருக்குத் தமிழகத்தில் ஒரு கனவு மூலம் விடை கிடைத்தது; வாழ்நாளெல்லாம் மாணவர்களுடன் இணைபிரியாத தொடர்பு கொண்டிருந்த வள்ளலுக்கு அவர்களுடைய தொடர்பு முதன் முதலாகக் கிடைத்தது தமிழகத்தில்; மேல் அங்கியைக் கழற்றி எறிந்துவிட்டு அரை ஆடை உடுத்துத் தரித்திர நாராயணர்களுடன் அவர் முழு ஐக்கிய மடைந்தது தமிழகத்தில்; விடுதலைக்காக வீரப் போராட்டம்

நடத்திய விடுதலை வீரர் அவ்விடுதலை திட்டவட்டமாக வரப் போகிறது என்பதை அறிந்து பிரிட்டனிலிருந்து வந்திருந்த பாராளு மன்றத் தூதுக்குழுவுடன் பேச்சு நடத்தியது தமிழகத்தில்; முதன் முதலாக அவருக்குத்தேசப்பிதா என்ற பட்டத்தைச் சூட்டியவர்கள் தமிழக மாணவர்கள்; இந்தியாவிற்கு நிலையாகத் திரும்பியபின், தம்முடைய எதிர்காலத் திட்டத்தைப்பற்றி முதன் முதலாக—சூசகமாகவாகிலும்—அவர் கூறியது தமிழகத்தில். இவ்வாறு பல ''முதன்மைகள்'' நமக்கு உண்டு. மேலும், ஒரு சில சமயம் அரசுக்கும் அண்ணலுக்குமிடையே நடைபெற்ற பேச்சுக்கள் முன்னேறுது நிலை நின்றுவிட்டபோது, தம் அரசியல் வலுவெல்லாம் கொடுத்து முட்டுக்கட்டையை அகற்றி அது வெற்றியாக முடியுமாறு செய்த பெருமை சீனிவாச சாஸ்திரியாருக்கு உண்டு. சேலம் விஜயராகவாச்சாரியார் தலைமை தாங்கிய நாகபுரி காங்கிரசில்தான், காந்திஜியின் அஹிம்சா பூர்வமான ஒத்துழையாமைக் கொள்கையைக் காங்கிரஸ் அதிகாரப் பூர்வமாக ஏற்றுக்கொண்டது. ஏற்கனவே புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ் நாடே! இப்பெரும் புகழ்களையெல்லாம் சேர்த்து உன்னால் தாங்க முடிகிறதா!

தமிழகத்திற்குக் கீழ்க் கண்ட காலங்களில் காந்திஜி வந்துள்ளார்:

1. 1896 அக்டோபர் — (தென்னப்பிரிக்காவிலிருந்த போது வந்தது).
2. 1915 ஏப்ரல் — இந்தியாவிற்கு நிலையாகத் திரும்பிய பின்.
3. 1916 பிப்ரவரி
4. 1917 செப்டம்பர்
5. 1919 மார்ச்
6. 1920 ஆகஸ்ட்
7. 1921 ஏப்ரல் } இருமுறை
8. 1921 செப்டம்பர் }
9. 1925 மார்ச்
10. 1927 ஆகஸ்ட் — கதர் யாத்திரை }
11. 1927 நவம்பர் — இலங்கையிலிருந்து திரும்பிய வழியில் } மும்முறை
12. 1927 டிசெம்பர் — சென்னை காங்கிரசுக்கு }

13. 1929 மே — திருத்தணி
14. 1933 டிசெம்பர் } அரிஜன யாத்திரை
15. 1934 ஜனவரி }
16. 1936 மே — பெங்களூர் சென்ற வழியில்
17. 1936 ஜூன் — பெங்களூரிலிருந்து திரும்பிய வழியில்
18. 1937 ஜனவரி } இருமுறை
19. 1937 மார்ச் }
20. 1946 ஜனவரி

இப்புத்தகத்தை நான் எழுதிக் கொண்டுவந்தபோது, இதுவரை இருந்து வந்த சில கருத்துக்களுக்கு நேர்முரணான முடிவுகளுக்கு நான் வரவேண்டியதாயிற்று. தரங்கம்பாடி அருகே உள்ள தில்லையாடியையும் வள்ளியம்மாளையும் இணைத்து இப்போது எத்தனையோ கட்டுக்கதைகள் தமிழகத்தில் பரவிவிட்டன. இவைகளில் ஒரு கதை, வள்ளியம்மாள் தில்லையாடியில் பிறந்த அரிஜனப் பெண் என்றும் காந்திஜி தில்லையாடிக்கு வந்து அப்பெண்ணை அழைத்துக் கொண்டு போனதாகவும் கட்டுரைக்கிறது. பாவம், இவர்களுக்கு, 1915-இல் அண்ணல் முதன் முதலாகத் தில்லையாடிக்கு வருவதற்குப் பல மாதங்களுக்கு முன்னமேயே வள்ளியம்மா வீர சொர்க்கம் சேர்ந்துவிட்டாள் என்பது தெரியாது. வள்ளியம்மா ஜோகன்னஸ்பர்க்கில் பிறந்து, அங்கிருந்த ஆங்கில முறைப் பள்ளியில் படித்த நாகரிகமான ஒரு பெண். அதே போன்று நாகப்பன், நாராயணசாமியும் தென்னப்பிரிக்காவில் பிறந்தவர்களே. நான் விசாரித்து அறிந்த வரையில், இவர்கள் மூதாதையர்கள் தில்லையாடியில் வாழ்ந்தார்கள் என்று கூறுவதற்குமில்லை. அப்படியிருந்திருப்பின் தில்லையாடிக்கு அண்ணல் முதன் முதலாக வந்திருந்தபோது அவ்விவரங்களை அங்குள்ளவர்கள் எடுத்துக் கூறியிருப்பார்கள். அங்கோ அல்லது அவர் திரும்பிவந்தபோது மாயவரத்தில் நிகழ்த்திய வரலாற்றுப் புகழ் மிக்க சொற்பொழிவிலோ அண்ணல் அதை உறுதியாகக் குறிப்பிட்டிருப்பார்.

ஆனால் இதற்காகத் தில்லையாடியில் வள்ளியம்மாவிற்கோ மற்ற தென்னப்பிரிக்கத் தியாகிகளுக்கோ நினைவுச் சின்னங்கள் நிறுவுவது பொருந்தாது என்று யாரும் கூறமாட்டார்கள். ஏனெனில், முதன் முதலாக மகாத்மாவின் மாண்பு

மிக்க பாதங்கள் பட்ட அந்தத் தமிழ்க்கிராமத்தில் தென்னைப் பிரிக்கப் போராட்டத்தில் பலியான தமிழன் செல்வனுடைய மனைவியும் மக்களும் வாழ்ந்து வந்திருக்கின்றனர் என்பதும் தென்னைப்பிரிக்கப் போராட்டத்தில் பல தியாகங்கள் புரிந்த டி. ஏ. சுப்ரமணிய ஆச்சாரியாரின் சொந்த ஊர் அது என்பதும் உறுதியாகத் தெரிகிறது.

அதே போன்று, 1919-இல் ராஜாஜியின் இல்லத்தில் அண்ணல் தங்கியிருந்த போது, அந்தத் தெய்வீகக் கனவை எந்த நாளன்று கண்டார் என்பது குறித்து இதுவரை இருந்த கருத்துச் சரியல்ல என்பதைத் தகுந்த காரணங்களுடன் இந்த நூலில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன். என் முடிவை ஆங்கில காந்தி நூல் தொகுப்பின் தலைமை ஆசிரியரான பேராசிரியர் சுவாமிநாதன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இந்த வரலாற்று நூலை நான் வரைவதற்கு எத்துணையோ அன்பர்கள்—டில்லியிலிருந்து தென்கோடிவரை—எனக்குத் துணை செய்திருக்கின்றனர். அவர்கள் எல்லோரையும் பெயர் சுட்டிக் குறிப்பிடுவது இயலாத காரியமாகுமாலும் மிகவும் முக்கியமான ஒரு சிலரை நான் குறிப்பிட்டுத்தானாகவேண்டும். காந்தி நூல் வெளியீட்டுக் கழக நிருவாகிகள்-குறிப்பாக, அதன் தலைவர் டி. எஸ். அவினாசிலிங்கம் அவர்கள், உறுப்பினர் நா. ம. ரா. சுப்பராமன் அவர்கள், காந்தி நினைவு நிதிச் செயலாளர் க. அருணாசலம் அவர்கள் ஆகியோர் என்னை அன்புடனும் அபிமானத்துடனும் அரவணைத்து இப்பணியில் ஊக்குவித்தார்கள். இந்த நூல் என்று வரும் என்று வரும் என்று ஆவலோடு எதிர்பார்த்த கழகச் செயலாளர் கோ. வேங்கடாசலபதி அவர்கள் - இப்பணியில் எனக்கு வேண்டிய உற்சாகம் ஊட்டி வந்தவர் - இப்போது அமரராகிவிட்டார். ஆங்கில காந்தி நூல் தொகுப்புத் தலைமை ஆசிரியர் பேராசிரியர் சுவாமிநாதன் அவர்கள் என்னைத் தம் தம்பியாகப் பாவித்து வேண்டிய ஆலோசனைகள் கூறி உதவி புரிந்து வந்தார். எங்கள் கழகத் தலைமை ஆசிரியர் ஜெயமணி சுப்ரமணியம் அவர்கள் ஆசிரியத்துறையில் அன்போடு என் பணிக்கு வேண்டிய உதவிகள் எல்லாம் புரிந்தார். சென்னையில் பத்திரிகை அதிபர்கள், ஆசிரியர்களை அறிமுகப்படுத்தி இப் பணியை நான் தொடங்குவதற்குக் கதர் வாரியம் செயலாளரான வெ. பத்மனுபன் அவர்கள் உறுதுணையாக இருந்தார். மற்றும் பல

வழிகளில் சென்னை காந்தி தத்துவப் பிரச்சாரக் திரு க. ரா. கந்தசாமி, தமிழ்நாடு காந்தி நினைவு நிதி நிருவாகி திரு எம். எம். விசுவநாதன் எனக்கு வேண்டிய உதவிகள் புரிந்தனர். ''கலைக் களஞ்சியம்'' துணை ஆசிரியர் திரு எஸ். இராமச்சந்திரன் மூலப் பிரதியைப் பார்த்து உதவினர். ஜவாரி அச்சகம் திரு. என். சிவராமகிருஷ்ணன் அச்சிடும் பணியைத் திறம்பட முடித்தார். சென்னை அரசாங்கத் தகவல் நிலையத்தைச் சேர்ந்த நூல் நிலைய நூலகர் திருமதி வ. பார்கவி இராதாகிருஷ்ணன் வேண்டிய நூல்களும் சஞ்சிகைகளும் வேண்டிய போது கொடுத்து உதவினர். ''இந்து'', ''மெயில்'', ''சுதேசமித்திரன்'' ''ஆனந்த விகடன்'' ஆகிய இதழ்களின் அதிபர்கள் பழங்காலச் செய்திகளை எடுத்துச் சேர்க்க எனக்கு அன்புடன் அனுமதி அளித்தனர். சம்பந்தப்பட்ட அரசாங்கச் சான்றுகளிலிருந்து குறிப்புகள் எடுத்துக் கொள்ளச் சென்னை அரசாங்கத்தார் அனுமதி அளித்தனர். நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களிலிருந்து நான் விவரங்கள் திரட்டியுள்ளதால் அவைகளின் ஆசிரியர் பெயர்களைக் குறிப்பிடுவது இயலாததாக இருக்கிறது. இவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்த நூலைப் படிக்கும் அன்பர்களில் யாராவது இதில் புதுத்தகவல்கள் சேர்க்க வேண்டுமென்றோ முக்கிய மாறுதல்கள் ஏதேனும் செய்ய வேண்டுமென்றோ எண்ணினால், அவைகளுக்கான ஆதாரங்களுடன் செயலாளர், காந்தி நினைவு நிதி, மதுரை-13 என்ற முகவரிக்கு எழுதுமாறு வேண்டுகிறேன்.

பிழை திருத்தப பட்டியல் வழக்கம்போல் இறுதியில் இணைக்கப்பட்டிருக்கிறது. அதை ஒருமுறை பார்த்துக் கொண்டு புத்தகத்தைப் படிக்கத் தொடங்குவது நலமாயிருக்கும்.

வணக்கம்.

அன்பன்,

சென்னை
19—11—'69

அ. இராமசாமி.

பொருளடக்கம்

	முன்னுரை	—	v
	ஆசிரியரின் தோற்றுவாய்	—	vii

தென் ஆப்பிரிக்காவில்

1.	பாலசுந்தரம் வந்தான்	—	1
2.	வள்ளுவரும் காந்தியும்	—	6
3.	காந்தி சென்றபோது தமிழர் நிலை	—	10
4.	தென்னப்பிரிக்க இந்தியர் அறப்போர்	—	17
5.	போராட்டத்தில் தமிழ்ப் பெண்கள்	—	28
6.	உயிர்த்தியாகிகள்	—	34
7.	பிற தியாகிகள்	—	48
8.	பொதுவாகத் தமிழர் பங்கு	—	84
9.	தமிழர்க்கு காந்திஜி பாராட்டு	—	92
10.	இந்தியன் ஒப்பினியன்	—	100

இந்தியாவில்

11.	பாலசுந்தரம் பூமியில்—1896	—	105
12.	நிலவரம் அறியச் சுற்றுலா—1915	—	122
13.	பெசண்ட்-காந்தி போர்—1916	—	188
14.	ராஞ்சிக்குச் சென்ற வழியில்—1917	—	224
15.	அறப்போர் பிறந்தது—1919	—	228

16. ஒத்துழையாமைப் போரின் மத்தியில்-1920 — 263

17. தேசத்தொண்டின் பொற்காலம்—1921 (1) — 301

18. ஆடையில் புரட்சி—1921 (2) — 315

19. கன்னியாகுமரி தரிசனம்—1925 — 379

20. சேர்மாதேவி குருகுலச் சிக்கல் — 439

21. கதர் — 445

22. கதர் யாத்திரை—1927 (1) — 458

23. சென்னை காங்கிரஸ்—1927 (2) — 591

24. ஆந்திரப் பயணத்தின் மத்தியில்—1929 — 596

25. வேதாரண்யப் போர் — 598

26. இலட்சுமி—தேவதாஸ் திருமணம் — 608

27. தீண்டாமை ஒழிப்பு — 614

28. அரிஜன யாத்திரை—1 (1933) — 629

29. அரிஜன யாத்திரை—2 (1934) — 664

30. போன வழியிலும் வந்த வழியிலும்—1936 (1 & 2) — 802

31. ஆலய வழிபாடு—1937 (1) — 805

32. இந்தி சம்மேளனத்திற்காக—1937 (2) — 824

33. தமிழ்—காந்தி — 837

34. இந்தியும் காந்தியும் — 851

35. கடைசி அடிச்சுவடுகள்—1946 — 859

36. அனுபந்தம் — 955

தென் ஆப்பிரிக்காவில்

வழக்கறிஞர் எம். கே. காந்தி பார்-அட்-லா தமது அலுவலக அறையில் அமர்ந்திருந்தார். பாலசுந்தரம் வந்தான். பாலசுந்தரம் ஒரு தமிழன்; ஓர் ஒப்பந்தக்கூலி. வெள்ளையர் ஒருவரிடம் ஒப்பந்தம் செய்துகொண்டு கூலிக்கமர்ந்த ஒருவகை ''அடிமை''. வழக்கறிஞரோ புதியவர்தான். அவர் தொழிலைத் தொடங்கி மூன்று அல்லது நான்கு மாதங்களே ஆகியிருந்தன. ஆனால், இந்தியர்கள்பால் அவருக்கிருந்த பற்றை அவன் கேள்விப் பட்டிருந்தான். மேலும், பாலசுந்தரம் போன்ற ஏழைகள் பெரிய வழக்கறிஞர்களிடம் போகமுடியுமா? ஆகவே இந்த வழக்கறிஞரிடம் மானத்தை மட்டுமல்லாது பற்களையும் இழந்த நிலையில் கிழிந்த கந்தல் ஆடையுடன் அழுது கொண்டே அவன் வந்து சேர்ந்தான்.

தமிழன் வந்தான்

சில நாட்களுக்கு முன், ஏதோ ஒரு காரணமாக, அவனுடைய எசமானருக்கு அவன் மீது கடுங்கோபம் வந்து விட்டது. அவர் அவனை நையப் புடைத்தார். அவனுடைய இரண்டு பற்கள் மேலுதட்டைப் பிய்த்துக்கொண்டு வெளியே வந்துவிட்டன. வாயிலிருந்து குருதி கொட்டியது. அவனுடைய நீண்ட தலைப்பாகையால் துடைத்ததில் அது ஊறிப்போகும் அளவுக்குக் குருதி கொட்டிவிட்டது.

எசமான் நையப் புடைத்தார்

அவன் நேரே மாஜிஸ்ட்ரேட்டிடம் புகார் கொடுப்பதற்காகச் சென்றான். அவனுடைய பரிதாபமான நிலையைக் கண்ட மாஜிஸ்ட்ரேட் மிகவும் மனம் உருகினார். அவனுடைய தலைப்பாகையை நீதிமன்றத்தில் ஒப்படைக்கச் சொல்லிவிட்டு அவனை மருத்துவமனைக்கு அனுப்பினார்.

சில நாட்கள் கழித்து, அவன் ஓரளவு குணமடைந்தபின், அவனை மருத்துவ மனையிலிருந்து அனுப்பிவிட்டார்கள். அவன் நேரே காந்திஜியிடம் வந்தான்.

வந்தகோலம்

ஆனால் அப்போதுகூட அவன் வாய் திறந்து பேசமுடியாத நிலையிலேயே இருந்தான். மரியாதைக்கு அடையாளமாகத் தன் தலைப்பாகையைத் தலையிலிருந்து அகற்றிக் கையில் ஏந்தி, நடுங்கிக்கொண்டே வழக்கறிஞர் முன் அவன் நின்று கொண்டிருந்தான். தலையில் உருமாலாகச் சுற்றும் துணியை எடுத்து, கையில் பிடித்துக் கொள்வது தென்னப்பிரிக்காவில் அப்போது நடைமுறையில் இருந்த மரியாதையின் சின்னம். ஒரு ஐரோப்பியரைக் கறுப்பர்கள் இரண்டு கரங்களையும் கூப்பி வணங்கினால் மட்டும் போதாது ; தலைப்பாகை அல்லது தொப்பியைத் தலையிலிருந்து எடுத்துவிட்டுத் தான் வணக்கந் தெரிவிக்க வேண்டும். 'பார் - அட் - லா படித்து சூட்டும் கோட்டும் போட்ட வழக்கறிஞராயிற்றே' என்று எண்ணி காந்திஜி முன்னும் தலைப்பாகையை அவன் அகற்றி விட்டான்.

அவன் சொல்ல வந்ததைக் காட்டிலும் இதை முதலில் வழக்கறிஞர் கவனித்தார். ''முதலில் உன்னுடைய தலைப் பாகையைக் கட்டு'' என்று சொன்னார்.

மானத்தை மீட்கலாம்

பாலசுந்தரத்திற்கு ஒரே மகிழ்ச்சி. எத்திக் கொண்டிருந்த பற்கள் உள்பட எல்லாப் பற்களும் தெரியுமாறு சிரித்தான். அது அவனுக்கு முதல் வெற்றி. இந்த வழக்கறிஞரிடம் வந்தால் மானத்தை மீட்கலாம் என்பதற்கு அது ஒரு முதல் அறிகுறியாக அவனுக்குத் தோன்றியிருக்க வேண்டும்.

தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களுக்குச் சேவை செய்வதற்காகவென்றே இதற்குச் சிறிது காலத் திற்கு முன் காந்திஜி ''நேட்டால் இந்தியர் காங்கிரஸ்'' என்ற ஒரு அமைப்பைத்

ஒப்பந்தக் கூலிகள்

தோற்றுவித்திருந்தார். அது, தென்னப் பிரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த இந்தியர் களையும், இந்தியாவிலிருந்து போன குமாஸ்தாக்களையும் எட்டியிருந்தது என்றாலும் ஒப்பந்தக் கூலிகளைத் தொட வில்லை. ஒப்பந்தக் கூலிகளுக்குச் சேவை செய்ய எப்போது ஒரு வாய்ப்புக் கிடைக்கும் என்று காந்திஜி ஏங்கிக் கொண் டிருந்தார்.

தான் செய்வது என்னவென்று அறியாமலேயே ஒப்பந்தக் கூலிகளையும் அவர்களுடைய பிற்காலத் தலைவரையும் பாலசுந்தரம் இணைத்து வைத்தான். அவர் கேட்டுக்கொண்டபடி, தன்னுடைய புகாரைத் தமிழில் ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுத்தான். நல்லவேளையாக, காந்திஜியின் (வக்கீல்) குமாஸ்தாவாக இருந்தவர் ஒரு தமிழர். பாலசுந்தரம் தமிழில் எழுதியவைகளையெல்லாம் மொழி பெயர்த்துக் கூறுமாறு அவரை காந்திஜி கேட்டுக் கொண்டார். பின்னர், சான்று பெறுவதற்காக அவனை ஒரு ஐரோப்பிய டாக்டரிடம் அனுப்பினர். அந்த ஐரோப்பிய டாக்டரும் உண்மையை எழுதிக் கொடுத்தார்.

பாலசுந்தரம் இணைத்தான்

அந்த இளம் வயதிலும் பிற வழக்கறிஞர்களிலிருந்து காந்திஜி வேறுபட்டவராகவே இருந்தார். அடித்த ஐரோப்பியரைத் தண்டிக்க வேண்டுமென்று பாலசுந்தரம் எவ்வளவோ வலியுறுத்தினான். ஆனால் அது அவர் நோக்கமாயிருக்கவில்லை. ''உன்னுடைய ஒப்பந்தத்தை மாற்றி வேறு ஒரு எசமானிடம் ஒப்படைத்தால் போதாதா?'' என்று அவர் கேட்டார். ''சரி'' என்பதற்கு அடையாளமாகப் பாலசுந்தரம் தலையை ஆட்டினான். அதன்பின், பழைய எசமானருக்கே காந்திஜி எழுதினர்: ''உங்களைத் தண்டிக்க வேண்டும் என்பது என்னுடைய நோக்கமல்ல. நீங்கள் உங்களுடைய தவற்றை உணர்ந்து இந்த ஒப்பந்தக் கூலியை வேறு ஒருவருக்கு மாற்றிக் கொடுத்தால் போதுமானது.'' அந்த வெள்ளையரும் இந்த வேண்டுதலை ஒப்புக் கொண்டார்.

காந்திஜியின் தனித்தன்மை

ஆனாலும் இந்தத் தமிழனுடைய வழக்கு காந்திஜிக்கு அவ்வளவு எளிதாக முடியவில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் சிக்கல் மாற்றிச் சிக்கலாக வந்து கொண்டேயிருந்தது. கூலிகளின் நலனைப் பாதுகாப்பதற்கென்று நியமிக்கப்பெற்றிருந்த பாதுகாப்பு அதிகாரியிடம் அவனை காந்திஜி அனுப்பிவைத்தார். அவர் தான் ஒப்பந்தத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும். ஆனால் அவரோ அவனைத் தமது அலுவலகத்திலேயே இருக்குமாறு கூறிவிட்டார்.

சிக்கல்

பகவான் இராமகிருஷ்ணரை சுவாமி விவேகானந்தர் கண்டபோது தம்மை அறியாமலே முன்னவருக்குப் பின்னவர் மீது ஒரு தனி அன்பும் அபிமானமும் ஏற்பட்டது. அதே போன்று தமிழர்களும் காந்திஜியும் ஒருவரை ஒருவர் சந்தித்த போது இரு சார்பிலுமே அவர்களை அறியாத தனி அன்பும் அபிமானமும் முகிழ்த்தெழுந்தது. இதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புவோர், தமிழனின் மூதாதையான வள்ளுவரையும் அவர் வகுத்துக் கொடுத்த குறள் நெறியையும் ஒரு சிறிது அறிந்து கொள்ள வேண்டும்.

மூதாதை நெறி

இராமரும் கிருஷ்ணரும் திருமாலின் அவதாரமே. ஆயினும், இராமர் தாம் கிருஷ்ணர் என்று சொல்வதைக் காட்டிலும் வள்ளுவர் தாம் காந்தி என்று சொல்லும் அளவுக்கு இவ்விருவர் வாழ்க்கையிலும் அத்துணை ஒற்றுமைகள் இருந்தன. வள்ளுவருக்கும் காந்திஜிக்கும் வேற்றுமைகளே இல்லை என்பதல்ல; ஆனாலும் அவை குறைவு - மிக மிகக் குறைவு. ''முற்பிறவிகளின் காரணமாகத்தான் எனக்கும் தமிழர்களுக்கும் மகாராட்டிரர்களுக்கும் இவ்வளவு இறுகிய பிணைப்பு ஏற்பட்டிருக்கிறது'' * என்று காந்திஜி பலமுறை கூறியுள்ளார்.

வள்ளுவர்தாம் காந்தி?

தென்னப்பிரிக்காவில் காந்திஜி காலூன்றி, மக்களைத் திரட்டி அணிவகுத்து அறப்போரைத் தொடங்கியபோது தான் அவருடைய கொள்கைகள் கொஞ்சங் கொஞ்சமாய் உருவாகிக் கொண்டிருந்தன. ஆனாலும் மற்ற அரசியல், சமுதாயத் தலைவர்களைப் போன்றல்லாது அவருடைய வழி நேரானதாயும் உறுதியானதாயும் அன்பையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டதாயும் அமைந்தது.

அரசியலில் சத்தியம்

* Day to Day with Gandhi—Page 28

இது பலருக்குப் புதிராக இருந்திருக்கலாம். ''அரசியலில் சத்தியமா?'' என்ற கேள்வியும் வியப்பும் அப்போது நிச்சயமாக எழுந்திருக்கத்தான் செய்யும். ஆனால் தமிழனுக்கு மட்டும் அது தெளிவாகப் புரிந்தது.

காந்திஜியை உயர்த்தினான்

பல்வேறு மொழி இனங்களைச் சேர்ந்த மக்கள் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்று குடியேறியிருந்தனர். அவர்களில் தமிழர்கள் உண்டு; வங்காளியர் உண்டு; குசராத்திகள் பஞ்சாபியர்களுக்கும் குறைவில்லை. ஆயினும் காந்திஜியின் கொள்கைகளையும் திட்டங்களையும் போராட்ட முறைகளையும் தமிழனைப்போல் விரைவாகவும் எளிதாகவும் முழுதாகவும் புரிந்து கொண்டோர் யாருமில்லை. வள்ளுவனைப் பெற்று உலகினுக்கு ஈந்த தமிழன், காந்திஜியை உயர்த்திப் பிடித்து உலகிற்குக் காட்டினான். தமிழர்களின் தளர்வில்லாத ஒத்துழைப்பைக் கண்டு காந்திஜி வியப்படைந்தார். பொய்யாமொழிப் புலவரையும் தமிழர் தம் புனிதப் பண்பாட்டையும் அறிந்த பின்பு தான் அவருடைய வியப்புத் தணிந்தது.

பொதுமறை

வள்ளுவரிடம் அறம் இருந்தது; பொருள் இருந்தது; இன்பமும் இருந்தது. வள்ளுவர் அழியாத கடவுள் நம்பிக்கை உள்ளவர்; அதே சமயம் திருமாலும் சிவனும் அவருக்கு ஒன்றே. அவருடைய அறத்தில் இல்லறத்திற்கும் இடம் உண்டு, துறவறத்திற்கும் இடம் உண்டு; ஆன்மீக வாதியான வள்ளுவர் அரசியலைப் புறக்கணித்து ஒதுக்கவில்லை; தாம் இயற்றிய 133 அதிகாரங்களில் எழுபதை அரசியலுக்கு ஒதுக்கி 'நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே மன்னன் உயிர்த்தே மலர் தலையுலகம்' என்பதை - அரசியலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளார். அவருடைய இன்பத்துப் பாலில் களவியலுக்கும் கற்பியலுக்கும் இலக்கணமுண்டு.

கடவுள் வாழ்த்துப் பாடித்தான் அவர் தமது இறவாப் பெரும் நூலைத் தொடங்கினார். ''வாலறிவன் (இறைவன்) நற்றாள் தொழாஅர் எனின் கற்றதனால் ஆயபயன் என் கொல்?'' என்று அவர் கேட்டார். ''ஒழுக்கம் விழுப்பம் (சிறப்புத்) தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்''

என்றார். ஒப்புரவு செய்யும் பெரிய தகைமை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால், அது எல்லா உறுப்புகளும் தப்பாது பயன்படும் மருந்து மரத்திற்கு வள்ளுவர் குறள் ஒப்பாகும் என்று விளக்கினார். தன்னைத் தோண்டுவோரையும் விழாமல் தாங்குகின்றதே நிலம், அதைப்போல நம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தான் தலையாய அறம் என்றும், இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் என்றும் கூறினார். வள்ளுவர் கருத்துப்படி, உள்ளத்தால் பொய்யாது ஒழுகின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன். அறங்களெல்லாம் ஆகிய செய்கை கொல்லாமை. அரசர்களுக்கு அவர் கூறிய அறிவுரை, ''வேலன்று வெற்றி தருவது; மன்னவன் கோல்; அதும் கோடாது எனின்.'' என்பது. ''பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர்; நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர். அருளொடும் அன்போடும் வாராத பொருளீட்டத்தை அரசர் பொருந்தாது நீக்கி விடவேண்டும். உண்ணற்க கள்ளை'' என்பவை வள்ளுவரின் பொய்யாமொழிகள். அவர் கொள்கைப்படி, உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர். ''பெண்ணிற் பெருந்தக்க யா உள கற்பென்னும் திண்மை உண்டாகப்பெறின்?'', என்று அவர் கேட்டார். மாறுபாடில்லாத உண்டியை (மனம் போன போக்கில் அல்லாது) மறுத்து உண்ணின் உயிர்க்கு மாறுபாடில்லை என்று அறிவுறுத்தினார். சத்தியத்தையும் அஹிம்சையையும் வலியுறுத்தி அவர் கூறிய குறட்பாக்கள்:

> யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
> வாய்மையின் நல்ல பிற.
>
> எனைத்தான்றும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானு
> மாஞ் செய்யாமை தலை.

இவ்வாறெல்லாம் பொய்யாமொழிப் புலவர் தமிழர் சுட்கும் அவர்கள் மூலம் உலகிற்கும் மெய் நெறியை வகுத்துத் தந்தார். இக் கருத்துக்கள் காந்தியடிகளின் உள்ளத்திற்குள் குமுறிக் கிடந்தன. அவை அவர் தம் ஒவ்வொரு செயலிலும் பளிச்சென்று வெளிப்பட்டன. இவைகளை அகற்றிவிட்டால் காந்தி என்ற ஒருவர் தான் உண்டோ?

தமிழன் குறளைக் கற்றிருக்கிறானே இல்லையோ அவன் பண்பாட்டில், மனப்பாங்கில், நடத்தையில், சொல்லில், செயலில் அவனை அறியாது குறள் மங்கலாக இணைந்ததன் மூல வேனும் வெளிப்படுகிறது. குறள் என்று காரணம். அறியாமலேயே அந்நெறியை அவன் அறிந்துள்ளான். ஆகவே அவ்வழியில் தொண்டாற்ற முன்வரும் ஒரு மகானைக் கண்ட பின்னும் அவன் வாளா இருப்பானே? தன் குழந்தையைக் கண்ட தாயின் மார்பில் நினைக்கா முன்னம் பால் சுரக்கும் அன்றே? தமிழ்ச் சமுதாயத்திற்கும் காந்தியடிகளுக்கும் ஏற்பட்ட இணை பிரியா உறவை வேறு எவ்வழியில் உவமைப்படுத்திக் காட்டுவது? நீண்டகாலம் பிரிந்திருந்த நண்பர்கள் ஒன்று சேர்ந்தனர், என்று கூறலாமா? இருவரும் இணைந்ததற்கு மூல காரணம் வள்ளுவரும் அவர் வழிப்பண்பாடும் தான்.

○●○

தென்னப்பிரிக்காவிற்குப் போன இந்தியர்கள் அங்குப் பிழைக்கப்போனர்களேயன்றி 'ஓஹோ' என்று வாழப் போகவில்லை. போன இடத்தில் தற்செயலாகச் சிலர் செல்வந்தர்களாகி வாழ்ந்தார்களென்றாலும் பெரும்பாலானவர் வாய்க்கும் கைக்குமாகத்தான் பிழைத்துக் கொண்டு இருந்தனர். ஆனால் அங்கிருந்த வெள்ளையருக்கு அந்த ஒரு சிலர் வாழ்வதும் பிடிக்கவில்லை. அவர்களுடன் மற்ற இந்தியர்களையும் சேர்த்துக் ''கூண்டோடு கைலாசமாக'' இந்தியாவிற்கு எப்போது அனுப்பிவைக்கலாம் என்று நாளை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். அதே சமயம், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்த இந்தியர்களை ஆசை காட்டி அழைத்தவர்கள் என்னவோ இந்த வெள்ளையர்கள் தாம்.

பிழைக்கப் போனர்கள்

அந்த நாட்டில் கணக்கிலடங்காத கனிவளமும் மண் வளமும் இருந்ததை இந்தியாவிற்குப் புறப்பட்டு வந்து கொண்டிருந்த வழியில் தற்செயலாகக் கண்டு தான் வெள்ளையர்கள் அங்கு வந்து குடியேறினர். இந்த வளங்களை எவ்வளவு முடியுமோ அவ்வளவு கூடுதலாகத் தாங்களே அடைந்து இன்ப வாழ்வு வாழவேண்டுமென்றால், தோட்டங்களிலும் சுரங்கங்களிலும் அவர்களுக்காக நெற்றி வியர்வை நிலத்தில் விழப் பாடுபடக் கூடிய உழைப்பாளிகள் வேண்டும்; அக் கூலிகளும் குறைந்த ஊதியத்திற்கு உழைப்பவர்களாக இருக்கவேண்டும். (ஓரளவு சொந்த நிலம் வைத்திருந்த ஆப்பிரிக்க உழவர்களோ கூலிக்காக வேலைசெய்ய ஆர்வ முடையவர்களாய் இல்லை) ஆகையால், வாணிக நோக்குடன் திட்டமிட்டுப் பிறநாடுகளிலிருந்து கூலிகளை வெள்ளையர் அழைத்தனர். தென்னப்பிரிக்காவில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்த (குடியேற்றப்) பகுதிகளைச்

வரலாறு

சேர்ந்த ஆங்கிலேயர்கள் பிரிட்டிஷ் இந்தியாவுடன் ஒப்பந்தம்பேசி இந்தியர்களை அழைத்திருந்தனர். அந்த அழைப்பை ஏற்று, முதன் முதலாக இந்தியர்கள் தென்னப் பிரிக்காவிற்குச் சென்றது 1860 இல் ஆகும். இவ்வாறு ஒப்பந்தத்தின் பேரில் சென்ற இந்திய உழைப்பாளி மக்களுக்கு ''ஒப்பந்தக்கூலிகள்'' என்று பெயர் வழங்கலாயிற்று. ஒப்பந்தக்கூலிகளின் தேவைகளை நிறைவு செய்யப் பின்னல் இந்திய வணிகர்களும் அங்குச் சென்றனர்.

பிறர் பொருமை

ஆனல், வெள்ளையர் எதிர்பார்த்ததற்கு முரணுக இந்த இந்தியர்களில் ஒரு சிலர் தாங்கள் பெற்ற சிறிதளவு நிலத்தை ஆழ உழுது, புதுவகைக் காய்கறிகளைப் பயிரிட்டு வேளாண்மையில் கொழித்தனர். இந்திய வணிகர்கள், தங்கள் நாட்டுச் சிப்பந்திகளை வைத்துக் குறைந்த செலவில் வாணிக நிலையங்களை நடத்தி, குறைந்தவிலையில் பொருள்களை விற்று, வெள்ளையர் வாணிக நிலையங்களை முறியடித்து வணிகத்தில் செழித்தனர். தென்னப்பிரிக்காவில் இருந்த நீக்ரோக்கள், இந்திய வாணிக நிலையங்களில் பொருள்களை வாங்குவதை விரும்பியது இவர்களுக்குப் பெரிய அனுகூலமாக இருந்தது. அதனலெல்லாம் பொருமை அடைந்த வெள்ளையர் எந்த ஒப்பந்தத்தின் கீழ் இந்த இந்தியர்களைத் தருவித்தார்கள் என்பதைமறந்து, அவர்களை வெளியேற்றப் பார்த்தார்கள்.

ஒப்பந்தம் என்ன ?

ஒப்பந்தம் வேறுவிதமாக இருந்தது. ''இந்தியர் சென்ற ஒப்பந்தக் காலம் முடிவடைந்தபின் அவர்கள் தாங்களே விரும்புவதாயிருந்தால் அவர்களுடைய தாய்நாட்டிற்குத் திரும்பி வந்துவிடலாம். அல்லது, ஒப்பந்தக்காலத்தை நீடித்துக் கொண்டு தென்னப்பிரிக்காவிலேயே மேலும் ஐந்தாண்டுகள் இருக்கலாம். அல்லது, இந்த இரண்டையுமே விரும்பாவிடின், அவர்களுடைய கப்பல் கட்டணத்திற்குச் சமமான மதிப்புடைய நிலத்தை அரசாங்கம் வழங்கும்; அந்த நிலத்தில் அவர்கள் சுதந்திரக் குடிமக்களாக வேளாண்மை நடத்தலாம்'' என்பது ஒப்பந்தத்தில் இருந்த ஏற்பாடு.

தென்னப்பிரிக்காவில் நேடால், கேப், டிரான்ஸ்வால், ஆரஞ்ச்ஃபிரீஸ்டேட் என்ற நான்கு குடியேற்றப் பகுதிகள் இருந்தன; காந்தியடிகள் தென்னப்பிரிக்கா விற்குச் சென்றபோது, அவைகளில் முன்னது இரண்டும் ஆங்கிலேயர்கள் வசமும் பின்னது இரண்டும் டச்சுக்காரர்களிடமும் இருந்தன. ஆனால் டச்சுக்காரர் ஆதிக்கம் இருந்த பகுதிகளிலும் சரி வெள்ளையர் ஆதிக்கம் இருந்த பகுதிகளிலும் சரி இந்தியர்கள் நிலை இரங்கத்தக்கதாகவே இருந்தது. ''ஒப்பந்தக்கூலிகளாகச் செல்லும் இந்தியர்களுடைய ஒப்பந்தக்காலம் முடிந்தபின் சுதந்திரமான குடிமக்களாக அவர்கள் வாழ அனுமதிக்கப்படவேண்டும்'' என்று இந்திய அரசு விதித்த நிபந்தனையை நேடால் அரசு ஏற்றிருந்தது என்றாலும் இதையும் மற்ற வாக்குறுதிகளைப் போல் காற்றில் பறக்கவிட்டது.

காற்றில் பறந்தது

டச்சுக்காரர்களோ இங்கிலாந்துக்காரர்களைவிட இந்தியர்களை வெளியேற்றுவதில் தீவிரமாக இருந்தார்கள். முதன் முதலாக 1885-ஆம் ஆண்டில் டிரான்ஸ்வாலில் இந்தியர்களுடைய நடவடிக்கைகளுக்குக் கட்டுப்பாடுகள் கொண்டு வந்தவர்களே இந்த டச்சுக்காரர்கள் தாம். அப்போது டிரான்ஸ்வாலில் அவர்கள் பிறப்பித்த சட்டத்தின்படி இந்தியர்கள் டச்சுக் குடியுரிமை பெறமுடியாது; இந்தியர்களுக்குக்கென்று ஒதுக்கப்பட்ட இடங்களில்தான் வாழவும் சொத்துக்கள் வாங்கவும் வேண்டும்; இந்திய வணிகர்கள் தனி லைசென்சு பெறவேண்டும். பின்னர் நேடால் அரசாங்கமும் டிரான்ஸ்வாலைப் பின்பற்றிவிட்டது. இந்தியர்கள் குடியிருப்பதற்கும் சொத்துக்கள் வாங்குவதற்கும் ஒதுக்கப்பட்ட இடங்கள், நகரங்களிலிருந்து நெடுந்தொலைவில், சுகாதார வசதிகளோ விளக்கு வசதியோ இல்லாத பகுதிகளாகும். இந்தியாவில் சேரிகளில் வாழும் மக்களைப் போன்று இவர்கள் வாழ்ந்து வந்தனர்; ஆனாலும் அந்தச் சேரிவாழ் மக்களுக்குள்ள அரசியல் உரிமை இவர்களுக்கில்லை.

சேரிகளில் ஒதுக்கினர்

நிறவெறி கோர தாண்டவமாடியது. ''ஓரளவு காட்டுமிராண்டித் தனமுள்ள ஆசிய நாட்டினர் அல்லது ஆசியாவினைச் சேர்ந்த பண்பாடில்லாத இனத்தவர்'' என்று

தான் இந்தியர்களைப்பற்றி தென்னப்பிரிக்க சட்ட நூல்கள் கூறின. பிரிட்டோரியா, ஜோகன்னஸ்பர்க் ஆகிய நகரங்களில் உள்ள தெருக்களில் நடந்து செல்வோருக்கென ஒதுக்கப்பட்டிருந்த பாதையில் இந்தியர்கள் உரிமையோடு நடந்து செல்ல முடியாது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் பி. ஏ., பட்டம் பெற்ற பிள்ளை ஒருநாள் பிரிட்டோரியா நகரில் இப்பாதையில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது அவரைப் பிடித்துத் தள்ளிவிட்டனர். இதைப் பற்றி அவர் செய்தித்தாள்களில் எழுதினார்; பயனில்லை. அங்கிருந்த பிரிட்டிஷ் அரசுப் பிரிதிநிதியின் கவனத்திற்கு இதைக் கொண்டுவந்தார். ''நான் உங்களுக்காக இரக்கப்படுகிறேன். ஆனாலும் இதில் நான் குறுக்கிட முடியாது'' என்ற பதில் தான் கிடைத்தது. டிராம்களில் இருந்த ஆசனங்களில் இந்தியர்கள் அமர அனுமதிக்கப்படவில்லை. ஒரு சமயம், ஒரு தமிழ் கனவான், நவீன நாகரிக ஐரோப்பிய உடை அணிந்திருந்தவர், டிராம் காருக்குள் அமர இடம் இருந்தும், காலடி வைத்து ஏறும் இடத்தில் நின்று கொண்டே வருமாறு கட்டாயப்படுத்தப் பட்டார்.

பிள்ளை பட்ட பாடு

இந்தியர்களை வெள்ளையர்கள் எவ்வளவு கேவலமாக நடத்தினார்கள் என்பதற்கு ''தி டிரான்ஸ்வால் லீடர்'' என்ற செய்தித்தாளில் ''கூலிப்பிரயாணி'' என்ற தலைப்பிட்டு ஒரு வெள்ளையர் எழுதிய கடிதம் ஒரு நல்ல சான்றாகும்: ''சிறிது காலத்திற்குமுன்பு போட்செவ்ஸ்ட்ரோம் என்ற இடத்திலிருந்து பார்க் என்ற இடத்திற்கு நான் இரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தேன். இந்த இரயிலில் இரண்டு கூலிகளும் பயணம் செய்துகொண்டு வந்தார்கள். அவர்கள் வேறு ஒரு பெட்டியில்இருந்தார்கள். ஆனாலும் அதனுல் ஏற்படக்கூடிய தீமை குறைந்து விடவில்லை. அவர்கள் இறங்கியபின் வேறொரு வெள்ளையர் வந்து அந்த இடத்தில் உட்காரத்தானே போகிறார்? மேலும், அங்கு வைக்கப்பட்டிருந்த துண்டில் அந்த இரண்டு கூலிகளும் தங்களுடைய கைகளைத் துடைத்துக் கொண்டார்கள். இந்தத் துண்டை வெள்ளையரும் பயன்படுத்தத்தானே வேண்டும்? ஒரு கூலி பயன்படுத்திய கோப்பையையோ துண்டையோ ஒரு வெள்ளையர் பயன்

ஒரு பானை சோற்றினில்

படுத்த விரும்பமாட்டார் என்பதை நான் உறுதியாகக் கூற முடியும். பொதுமக்களிடம் இன்னும் சற்று நல்லமுறையில் இரயில்வே அதிகாரிகள் நடந்து கொள்ளவேண்டும்.'' தமிழர்களைப்பற்றி அவர் எவ்வளவு மரியாதை வைத்திருந்திருக்கிறார்!

காந்திஜி சான்று

பிற்காலத்தில் ஒரு நாள்; போலீஸ் சூப்பரின்டெண்டெண்ட் வெர்னன் பதிவுச் சான்றுகளைச் சோதனையிடுவதற்காகத் தமிழர்கள் குடியிருந்த பகுதிக்குள் சென்றார். அப்போது, வெர்னனுடன் சென்ற அதிகாரிகள் தமிழர்களை மிகவும் இழிவாகப் பேசிவிட்டனர். சூப்பரின்டெண்டெண்ட் கூறிய ஒரு சொல்லோ மிகவும் கீழ்த்தரமானதாக இருந்தது; ஜோகன்னஸ்பர்க்கில் ஒரு கூட்டத்தில் சொற்பொழிவு ஆற்றியபோது இது குறித்துக் குறிப்பிட்ட காந்திஜி, ''அச்சொல் மிகவும் கேவலமானது; இங்கே நான் சொல்லத் தகுதியான சொல் அல்ல அது; அதை நான் சொல்ல மாட்டேன்,'' என்று சொன்னார். இதிலிருந்து அச்சொல் எவ்வளவு கேவலமானதாக இருந்திருக்கும் என்பதை நாம் யூகித்துக் கொள்ளலாம்.

இனவெறியின் பலன்

இரயில்கள், பஸ்கள், பள்ளிகள், உணவுச்சாலைகள் முதலிய எல்லாவற்றிலும் இந்தியருக்கு எதிரான இனவெறி பரவியது. நான்கு குடியேற்றப் பகுதிகளுக்குள்ளும் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு அனுமதிச் சீட்டு இல்லாமல் இந்தியர்கள் செல்லமுடியாதவாறு தடை பிறப்பிக்கப் பட்டிருந்தது. ஆரஞ்ச் ப்ரீஸ்டேட்டிலோ இந்தியர்களை அறவே வெளியேற்றிவிட்டனர் என்று கூறலாம். 1890-91 இல் எல்லாம் தென்னப்பிரிக்காவில் இருந்த மொத்த இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் ஒன்றரை இலட்சமாகும். இவர்களில் பெரும்பாலோர் நேட்டாலில் தான் இருந்தார்கள். ஒப்பந்தக் கூலிகளிலும் பெரும்பான்மையானவர்கள் சென்னை மாநிலத்தையும் உத்தரப் பிரதேசத்தையும் சேர்ந்தவர்களாகும். வணிகர்கள், குமாஸ்தாக்கள் ஆகியோரில் பெரும்பாலானவர்கள் குசராத்தைச் சேர்ந்தவர்கள்.

தென்னப்பிரிக்காவில் இருந்த ஒன்றரை இலட்சம் இந்தியர்களுக்குள்ளும் ஒற்றுமை இல்லை. இந்தியாவைச் சேர்ந்த பார்சி குமாஸ்தாக்கள் தங்களை போலி கௌரவம் இந்தியர்கள் என்று கூறிக்கொள்வது கேவலம் என்று எண்ணிப் பாரசிகர்கள் என்று 'கௌரவமாக'ச் சொல்லிக் கொண்டார்கள். முஸ்லிம் வணிகர்களோ தங்களை அரேபியர்கள் என்று அழைத்துக் கொண்டனர். வெள்ளைச் சட்டை அணிந்த இந்துக்கள் எதிலும் சேராது தனி 'இனமாக' வாழ்ந்தனர். இவர்கள் தான் தென்னப்பிரிக்காவில் 'உயர்ந்த நிலையில்' இருந்த இந்தியர்கள்--அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்குமானால். சமூக உறவில் இந்த மூன்று வகையினருக்கிடையேயும் தொடர்பு இருந்துவந்தது. ஆனால் இந்தியர்களிலேயே பெரும் பான்மையினராக இருந்த தொழிலாளி மக்களுக்கு இவர்களில் எப்பிரிவினருடனும் சமூக உறவு கிடையாது—அவர்கள் கூலி கொடுத்தபோது உழைத்ததைத் தவிர.

தென்னப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர்களை இரண்டு பிரிவினராகப் பிரிக்கலாம். சுதந்திரமாக அங்குக் குடியேறிய வணிகர்களும் அவர்களுடன் சென்ற சுதந்திரமான பணியாட்களும் முதல் பிரிவினர்; இரண்டாவது பிரிவினர் ஒப்பந்தக் கூலிகள். இந்தியர்களுக்குள் சுதந்திர இந்தியர்களாக இருந்தவர்கள், தங்கள் மீது விதிக்கப்பெற்ற கட்டுப்பாடுகளை எதிர்த்துப் போராடினார்கள் என்பது உண்மைதான். இவர்களில் முசல்மான் வணிகர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் என்றாலும், இவர்கள் இதில் ஒப்பந்தக் கூலிகளுடைய ஆதரவையோ அல்லது முன்னாள் ஒப்பந்தக் கூலிகளுடைய ஆதரவையோ பெற முயலவில்லை. காந்தியடிகள், திலகர் ஆகியோர் சகாப்தத்திற்கு முன் இந்தியாவில் இந்தியர்களின் குறைகளை நீக்க பிரிட்டிஷ் சேரரசியிடம் காங்கிரஸ் மனுக்கள் அளித்து வந்ததுபோல், இவர்களும் அவ்வப்போது தங்கள் தங்கள் குடியேற்றப் பகுதியில் வாழ்ந்த ஆட்சியாளர்களிடம் மனுக்களை அளித்து வந்தனர்; அவ்வளவுதான்.

இரண்டு பிரிவினர்

தென்னப்பிரிக்காவில் இருந்த ஒப்பந்தக் கூலிகளில் பெரும்பாலோர் தமிழர் என்பதைப், பொதுவாக இந்தியர்கள் எல்லோரையுமே "கூலிகள்" அல்லது "சாமிகள்"

என்ற தமிழ்ச் சொல்லால் வெள்ளையர் அழைத்து வந்ததிலிருந்து, நாம் நன்கு உணரலாம். அது மட்டுமல்ல,

எல்லோரும் கூலிகள்

இந்திய வழக்கறிஞர்களைக் கூட ''கூலி வழக்கறிஞர்கள்'' என்றும் இந்திய வணிகர்களைக் கூட ''கூலி வணிகர்கள்'' என்றும் வெள்ளையர்கள் அழைத்து வந்தார்கள். இந்தியர்கள் சமுதாயத்தைக் கூலிகள் சமுதாயம் என்று தளபதி ஸ்மட்ஸ் ஒருமுறை வர்ணித்தார். சட்ட நூல்களில் கூடக் கூலி என்ற சொல் பயன்படுத்தப்பெற்றது. ஒரு வேடிக்கை என்னவென்றால், இந்தியர்கள் மீது வெறுப்பு உணர்ச்சி இல்லாத வெள்ளையர்கள் கூட இந்தச் சொல் பழக்கப்பட்டுப் போய்விட்டதால் இந்தியர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது ''கூலிகள்'' என்று தான் கூறினர்கள். தொடக்கத்தில் காந்திஜியும் ''கூலி வழக்கறிஞர்'' என்று தான் அழைக்கப்பட்டார். இந்தியர்களுக்குள்ளே கூட ஒருவரை ஒருவர் கூலி என்று குறிப்பிட்டுக் கொள்ளும் பழக்கம் இருந்தது. காந்திஜி தென்னப்பிரிக்காவில் காலடி எடுத்து வைத்தபோதும் சரி, அதற்குப் பின்பு அவர் போராடி இவைகளை அகற்றியவரையிலும் சரி, இத்தகைய இக்கட்டான ஒரு சூழ்நிலையில் தான் தென்னப்பிரிக்க இந்தியர்கள்—குறிப்பாக, தமிழர்கள்—வாழ்ந்து வந்தனர்.

—:o:—

தென்னப்பிரிக்காவில் காந்திஜி நடத்திய போராட்டங்களின் வரலாற்றைத் தெரிந்து கொண்டால் தான் அதில் தமிழர்கள் ஆற்றிய பங்கின் சிறப்பை நாம் புரிந்துகொள்ள முடியும். ஆகையால் அந்த வீரப் போராட்டத்தின் சுருக்கமான வரலாற்றை இங்கே காண்போம். பிச்சை அளிப்பதுபோல் இருநூற்றி ஐம்பது இந்தியர்களுக்கே நேடாலில் வாக்குரிமை வழங்கியிருந்தனர். (அந்தக் குடியேற்றப் பகுதியிலிருந்த மொத்த ஐரோப்பிய வாக்காளர்களின் எண்ணிக்கை பத்து ஆயிரம்.) ஆனல், பின்னர், இந்த இருநூற்றி ஐம்பது பேர் கூட வாக்காளராயிருப்பது ஐரோப்பியர்களுக்குப் பொறுக்கவில்லை. அவர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கி விடுவது என்று (அதாவது, இந்தியர்களுக்கு வாக்குரிமையே கூடாது என்று) முடிவு செய்து விட்டனர். இது குறித்து நேட்டால் சட்டசபையில் கொண்டு வருவதற்கான ஒரு மசோதாவையும் தயாரித்துவிட்டனர். காந்திஜிக்கு இந்தியர்கள் பிரிவுபசார விருந்து அளித்துக் கொண்டிருந்த நாளன்று தான் இந்தச் செய்தி வெளிவந்தது.

போரின் தொடக்கம்

1893-ஆம் ஆண்டு மே மாதம் தென்னப்பிரிக்காவிற்கு வந்த காந்திஜி, அவருடைய ஒப்பந்தப்படி வேலையை முடித்துக் கொண்டு 1894-ஆம் ஆண்டு இறுதியில் அங்கிருந்து புறப்படுவதாயிருந்தார். இந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் அவர் செய்த வழக்கறிஞர் தொழிலை விட, மக்கள் சேவையே அதிகமாதலின் அவருக்கு இந்தியர்கள் ஒரு பிரிவுபசார விருந்தளித்தனர். இந்த விருந்தின் போது அங்குக் கிடந்த பத்திரிகை ஒன்றில் வெளிவந்திருந்த இச்செய்தியைத் தற்செயலாக காந்திஜி படித்துவிட்டார். இவ்வாறு இந்தியர்களில் அனைவருக்குமே வாக்குரிமை இல்லாமற்

பயணம் தள்ளிவைப்பு

போவதன் அபாயத்தை அங்கிருந்தவர்களுக்கு அவர் எடுத்துக் கூறி, தாம் தென்னப்பிரிக்காவிலிருந்து போய் விட்டாலும் இதற்கு இந்தியர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவேண்டும் என்றும் யோசனை கூறினர். ''எங்களுக்கு வாணிகம் செய்யத் தெரியும். அரசியல் சிக்கல் ஒன்றில் எவ்வாறு எதிர்ப்புத் தெரிவிப்பது என்பது தெரியாது. ஆகையால் உங்களுடைய பயணத்தை ஒரு மாதம் தள்ளிவையுங்கள்'' என்று அங்கிருந்தவர்கள் காந்திஜியைக் கேட்டுக் கொண்டனர். காந்திஜியும் இந்த வேண்டுகோளை ஏற்று, நேட்டால் சட்டசபைக்கு அளிப்பதற்கான மனு ஒன்றைத் தயாரித்தார். அந்த மனுவை அளிப்பதற்குள் மசோதாவின் இரண்டாவது வாசிப்பு நிறைவேறிவிட்டது. மசோதாவின் மீது விவாதம் தொடங்கியபோது ''வாக்குரிமையை அகற்றிவிடுவதாக மசோதாக் கொண்டு வந்திருக்கிறோம். அதற்குக் கூட இந்தியர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லையே? இந்தியர்கள் வாக்குரிமை பெறத் தகுதியற்றவர்கள் என்பதற்கு இந்த ஒரு சான்றே போதாதா?'' என்று சிலர் கேலியாகப் பேசினர்கள். மனுவைச் சட்டசபைக்கும் அதன் நகல்களைச் செய்தித் தாள்களுக்கும் காந்திஜி அனுப்பிய போது, இந்தியர்களின் கோரிக்கையை ஆதரித்துச் செய்தித் தாள்கள் தலையங்கங்கள் தீட்டின. ஆயினும் மசோதாவின் மூன்றாவது வாசிப்பும் எப்படியோ நிறைவேறிவிட்டது!

பேரரசிக்கு மனு

இதற்குப்பின்னர் இந்திய மக்களில் வயது வந்தோர் அனைவரிடமிருந்தும் கையொப்பம் வாங்கி ஒரு மனுவைக் குடியேற்ற நாட்டு அமைச்சருக்கு அனுப்பி வைப்பதென காந்திஜி முடிவு செய்து, பத்தாயிரம் கையொப்பங்கள் வாங்கி அனுப்பி வைத்தார். நேட்டால் அரசாங்கம் இயற்றியுள்ள சட்டத்தின் மீது பிரிட்டன் மகாராணி தமது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தவேண்டுமென்பதும் இவ்வாறு செய்யுமாறு மகாராணிக்குக் குடியேற்ற நாட்டு அமைச்சர் சிபார்சு செய்ய வேண்டுமென்பதும் இம்மனுவின் கோரிக்கைகளாகும்.

இந்த மனுவிற்கு எந்தவிதமான பதிலும் கிடைக்கு முன்னரே, ஒருமாத காலம் முடிவடைந்தது. மறுபடியும் காந்திஜி தாய் நாட்டிற்குப் புறப்பட்டார். இம்முறையும் காந்திஜி தென்னப்பிரிக்காவில் நீடித்து இருக்க வேண்டு

மென இந்தியர்கள் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர் தங்கினர். நேட்டால் தலைமை நீதிமன்ற வழக்கறிஞராகத் தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

நேட்டால் காங்கிரஸ்

தங்குவதென்று முடிவு செய்ததன் பின்னர் இந்திய தேசிய காங்கிரசை அனுசரித்து, நேட்டால் இந்தியர் காங்கிரஸ் என்ற ஒரு நிறுவனத்தை 1894 ஆகஸ்ட் 22-ஆம் தேதியன்று காந்திஜி தோற்றுவித்தார். அப்துல்லா ஹாஜி ஆடம் என்ற இந்தியப் பெருமகனார் தலைமையின் கீழ், காந்திஜியைச் செயலாளராகக் கொண்டு தோற்றுவிக்கப் பெற்ற நேட்டால் இந்தியர் காங்கிரசில் முதலில் உயர் மட்டத்தைச் சேர்ந்தவர்களே இடம் பெற்றனர். இந்த நிறுவனத்தின் துணைத்தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற இருபத்தி மூன்று பெயர்களில் துரைசாமி பிள்ளை, இராமசாமி நாயுடு, முருகேசபிள்ளை, ரெங்கசாமி படையாச்சி ஆகிய நால்வர் தமிழர்களே. (நாய்ஞ என்று ஒருவர் பெயர் இருக்கிறது. இவர் தமிழரா என்று தெரிய வில்லை. இவரும் தமிழராஞல் மொத்தம் ஐந்து பேராவர்). செயலாற்றுவதற்காக அமைக்கப்பெற்ற காங்கிரஸ் குழுவில் மேற்கண்டவர்களைத் தவிர, முத்துக்கிருஷ்ணன், சுப்பு நாயுடு, ஆர். கந்தசாமி நாயுடு, பெருமாள் நாயுடு, இராயப்பன், வி. நாராயண பத்தர் ஆகிய தமிழர்களும் இடம் பெற்றிருந்தனர்.

தமிழர் ஆர்வம்

காங்கிரஸ் சம்பந்தமான 'செக்கு'களில் செயலாள ராகிய காந்திஜியுடன் சேர்ந்து கையெழுத்துப் போட ஐந்து இந்தியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர் களில் ஒருவர் துரைசாமி பிள்ளை; காங்கிரஸ் சந்தா வசூல் செய்வதில் பேருதவி செய்தவர். உறுப்பினர்களைச் சேர்ப்பதில் பி. (பெருமாள்) நாய்டு நன்கு உதவி புரிந்தார். கூட்டங்களின் நடவடிக்கை களைத் தமிழில் மொழி பெயர்ப்பதிலும் சுற்றறிக்கைகளை விநியோகிப்பதிலும் சோமசுந்தரம் தீவிரப் பணியாற்றினர். தொடக்கத்தில் நேடால் இந்தியர் காங்கிரஸ் கூட்டத்தில் தமிழர்கள் ஆசர் பட்டியல் மிகவும் குறைச்சலாக இருந்த துடன் வந்தவர்களும் குறித்த நேரத்துக்கு வருவதில்லை. ஆனாலும் பாலசுந்தரம் நிகழ்ச்சி நடைபெற்றதன் பின்னும் குறிப்பாக 1896 இல் காந்திஜி தமிழகத்திற்கு வந்ததன்

பின்னும் இவர்களுக்கு ஆர்வம் கூடி விறுவிறுப்பாகச் செயல்பட்டனர்.

இந்தியர்களுக்கு வாக்குரிமை இல்லாமற் செய்யத் தென்னப்பிரிக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைக் கண்டு, இந்தியாவில் மக்கள் சிறி எழுந்தனர்.

சென்னை காங்கிரஸ்

1894 டிசம்பரில் சென்னை மாநகரில் அனைத்து இந்தியக் காங்கிரஸ் கூடியபோது அம்மாநாட்டில் முதல் தீர்மானம் இதைப் பற்றியதாகத் தான் இருந்தது. ''இந்திய மக்களின் வாக்குரிமையை அகற்றி விடுவதெனத் தென்னப்பிரிக்க அரசாங்கம் திறை வேற்றியுள்ள மசோதாவை பிரிட்டிஷ் பேரரசி தமது ரத்து அதிகாரத்தைப் பயன் படுத்தி அகற்றி இந்தியக் குடிமக்களுடைய வேண்டுகோளை ஏற்கவேண்டும்'' என்று இத் தீர்மானம் கூறியது.

நேடால் இந்தியர் காங்கிரஸ் இந்தியர்களின் அரசியல், பொருளாதார உரிமைகளை அடைவதற்காகப் பாடுபட்டது மட்டுமல்லாமல், இந்தியர்களுக்குள்ளேயே சீர் திருத்தப் பணிகளையும் செய்து வந்தது. அதன்

முதல் வெற்றி

முதல் முயற்சியும் வெற்றியடைந்தது; இந்தியர்கள் வாக்குரிமையைப் பிடுங்கும் மசோதாவிற்குப் பிரிட்டன் பேரரசி அனுமதி அளிக்கவில்லை. ஆகவே நேடால் அரசாங்கம் ஆத்திரமடைந்தது. தனது எண்ணத்தை மறைமுகமாக நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்துடன் ஒரு திருத்த மசோதாவை நிறைவேற்றியது.

இதன்பின், 1896 ஆம் ஆண்டில் தமது குடும்பத்தினரை அழைத்து வருவதற்காக காந்திஜி இந்தியாவிற்கு வந்தார்.

இந்தியா வருகை

அப்போது அவர் பம்பாய், சென்னை, கல்கத்தா ஆகிய நகரங்களுக்குச் சென்று இந்தியர்கள் தென்னப்பிரிக்காவில் படும் இன்னல்களை எடுத்தியம்பினர். (இதில் சென்னை வருகை இந்நூலில் தனியாகப் பின்னால் இடம் பெற்றிருக்கிறது.) இந்தச் சமயத்தில் இந்தியாவில் அவர் நிகழ்த்திய உரைகளைப் பற்றி ''ராய்ட்டர்'' செய்தித்தாபனம் அளித்த தவறான செய்தியால் நேடாலில் இருந்த ஐரோப்பியர்கள் அண்ணலுக்கு எதிராக வெகுண்டு எழுந்தார்கள். ஆனால் பின்னர், உண்மையை அவர் விளக்கிக் கூறியபின், ஓரளவு அமைதி ஏற்பட்டது.

1899 ஆம் ஆண்டில் தென்னப்பிரிக்காவில் பிரிட்டிஷாருக்கும் டச்சுக்காரருக்குமிடையே மூண்ட சண்டையில் காந்திஜி பிரிட்டிஷாருக்கு ஆதரவு தந்தார். பம்பாய் வந்து வாகை திரும்பினார். இந்திய ஆம்புலன்ஸ் படை ஒன்றை அமைத்து 1100 இந்தியர்களைக் கொண்ட அருஞ்சேவை செய்தார். 1901 ஆம் ஆண்டில் தென்னப்பிரிக்காவிலிருந்து விடை பெற்றுக்கொண்டு இந்தியாவிற்குத் திரும்பி வந்த காந்திஜி பம்பாயில் வழக்கறிஞர் தொழில் நடத்தினார். ஆனாலும் பிரிட்டன் குடியேற்ற நாட்டு அமைச்சரான சேம்பர்லின் தென்னப் பிரிக்காவிற்கு அச்சமயம் வந்ததால், அவரிடம் இந்தியர் களின் தரப்பை எடுத்துக் கூற அவரை அழைத்தனர். 1902 ஆம் ஆண்டு டிசம்பரில் டர்பனுக்கு வந்து சேம்பர்லினைச் சந்தித்து, இந்தியர்களின் கோரிக்கையை அவர் எடுத்துக் கூறியபோது, "தென்னப்பிரிக்காவில் உள்ள குடியேற்றப் பகுதிகள் சுயாட்சி உள்ளவை; அவைகளுடன் நீங்கள் தனித் தனியாக உடன்படிக்கைக்கு வரவேண்டும்; நாங்கள் குறுக்கிட முடியாது" என்று கூறி சேம்பர்லின் கையை விரித்து விட்டார். ஆகவே காந்திஜி தென்னப்பிரிக்காவிலேயே தங்கி அங்கிருந்த கொடுமையான இனப்பாகுபாட்டுச் சட்டங்களை எதிர்த்துப் போராடுவதென்ற உறுதியை மேற் கொண்டார். 1914 இல் இந்தியர் கோரிக்கை வெற்றி பெற்றதன் பின்னர் தான் அவர் இந்தியாவிற்குத் திரும்பி னார். காந்திஜி தென்னப்பிரிக்காவில் இருபது ஆண்டுகளுக்கு மேல் தங்கிப் பல போராட்டங்கள் நடத்த நேர்ந்ததன் கதை இதுவே. ஆனாலும் இதற்கிடையில் இப்போராட்டத்தில் எத்தனையோ கடினமான திருப்பங்கள் ஏற்பட்டன.

இந்தியர்களுக்கு இழைக்கப் பெற்ற கொடுமை டிரான்ஸ்வாலில் தான் அதிகமாக இருந்தது. டிரான்ஸ்வாலுக்குள் குடியிருந்த ஒவ்வொரு இந்தியரின் அடையாள அட்டையும் டிரான்ஸ்வால் அரசாங்கம் கேட்டபோதெல்லாம் கேடிகளிடம் வாங்குவது போன்று கொடுமை வாங்கிக் கொள்ள விரும்பியது. டிரான்ஸ்வால் கெசட்டில் 1906 ஆகஸ்ட் 22 ஆம் தேதி வெளியான ஒரு மசோதாவின்படி 8 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொரு இந்தியரும் - ஆணோ பெண்ணோ - பதிவுப் பத்திரத்தில் தங்களுடைய விரல்களின் முத்திரையைப் பதிக்க வேண்டும். இவ்வாறு செய்யத் தவறுபவர்களுக்கு அபராதமோ சிறைத் தண்டனையோ

விதிக்கலாம்; அல்லது நீதிபதி உசிதமெனக் கருதினால் நாடு கடத்தவும் செய்யலாம். எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் இந்தியர்களிடம் பதிவுச் சான்று இருக்கிறதா என்று சோதனையிட அரசாங்க அதிகாரிகளுக்கு உரிமை உண்டு. போயர் யுத்தத்தில் பிரிட்டன் வெற்றி பெற்று டிரான்ஸ்வாலும் கேப் காலனியும் பிரிட்டன் ஆட்சிப் பொறுப்பில் வந்தும் கூட இந்தியர்களுடைய அவதிக்கு ஒரு முற்றுப்புள்ளி ஏற்படாததைக் கண்டு காந்திஜி கவலை அடைந்தார். மசோதாவிற்கு எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருந்துவிட்டால், இது சட்டமாக நிறைவேறி விடும் என்பதையும் அதன் பின் தென்னப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கு அழிவு காலந்தான் என்பதையும் காந்திஜி கண்டார். ஆகவே, உடனடியாக இந்தியப் பெருமகனர்களின் மாநாடு ஒன்றைக் கூட்டி, அம்மாநாட்டில் இந்த அவசரச் சட்டத்திலுள்ள ஒவ்வொரு பிரிவையும் விளக்கிச் சொன்னார். சட்டத்தை எதிர்த்துப் பகிரங்கமாக ஆப்பாட்டம் செய்வதென எல்லோரும் முடிவு செய்தனர். பிரிட்டிஷ் இந்தியர் சங்கத்தின் சார்பாக, காந்திஜி தலைமையின் கீழ் ஒரு தூதுக்குழு குடியேற்ற நாட்டு அமைச்சரைச் சந்தித்து, இந்த அவசரச் சட்டத்தால் இந்தியர்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களை விளக்கியது. அவரும், இந்தியர்களுடைய முறையீட்டைக் கவனிப்பதாகக் கூறியிருந்தார். ஆனாலும் செப்டம்பர் 4-ஆம் தேதியன்று மசோதா நிறைவேறிவிட்டது.

கடவுள் பெயரால்

இதற்கு அடுத்த வாரம் அதாவது செப்டம்பர் 11-ஆம் தேதியன்று இந்தியர்களுடைய பெருங்கூட்டமொன்று ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள யூத எம்பயர் தியேட்டரில் நடைபெற்றது. டிரான்ஸ்வாலின்பல்வேறு பகுதிகளிலுமிருந்து 3000 பிரதிநிதிகள் வரை இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். 'அவசரச் சட்டத்திற்குப் பணிவதில்லை; அவ்வாறு பணியாததால் கிடைக்கக்கூடிய தண்டனைகளை ஏற்றுக் கொள்வது' என்று இக்கூட்டம் முடிவு செய்தது. எல்லோரும் எழுந்து நின்று கைகளை உயர்த்திக் கடவுளின் பெயரால் இவ்வாறு உறுதி மொழி எடுத்துக் கொண்டார்கள். தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்கள் காந்திஜி தலைமையின் கீழ் சத்தியாக்கிரகத்தைத் தோற்றுவித்த வரலாறு இதுவே. இந்தக் கூட்டத்தில் நான்கு மொழி

களில் நிகழ்ச்சிகள் அனைத்தும் மொழி பெயர்த்துக் கூறப் பெற்றன. அவைகளில் ஒன்று தமிழ்.

பிரிட்டன் தந்திரம்

ஆனால் இந்தியர்களின் எதிர்ப்பை டிரான்ஸ்வால் அரசு எள்ளளவும் பொருட்படுத்தவில்லை. இந்தச் சட்டத் திற்குப் பிரிட்டன் பேரரசின் அங்கீகாரம் இல்லாமல் தடுப்பது தான் அப்போதிருந்த ஒரே வழி. ஆகவே காந்திஜியையும் எச். ஓ. அலியையும் கொண்ட ஒரு தூதுக்குழு (1906-இல்) இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்று அங்கு ஆறு வாரங்கள் தங்கி அமைச்சர்களைச் சந்தித்தது. காந்திஜியும் அலியும் திரும்பி வந்து கொண்டிருந்த போது, கப்பலில், மசோதாவை பிரிட்டன் அரசு ஏற்கவில்லை என்ற செய்தி கிடைத்தது. ஆனாலும் அரசினர் அதில் ஒரு தந்திரம் செய்து விட்டார்கள். டிரான்ஸ்வால் குடியேற்றப் பகுதிக்கு அதுவரை பொறுப்பு ஆட்சி உரிமை வழங்கப் பெறவில்லை. பொறுப்பாட்சி வழங்கப் பெற்றபின் டிரான்ஸ்வால் இதே மசோதாவைச் சட்டமாக நிறைவேற்றினால் அதற்கு அங்கீகாரம் தருவதாய் இரகசியமாகக் கூறியிருந்தார்கள். அதன்படி, 1907 ஜூலை முதல் தேதியன்று இந்தச் சட்டத்திற்கு அங்கீகார மகிடைத்து விட்டது.

சமரச உடன்பாடு

பின்னர் இச்சட்டத்தை எதிர்ப்பதற்காக சத்தியாக்கிரகிகள் சங்கத்தை காந்திஜி தோற்றுவித்தார். பதிவு அலுவலகங்களை இந்தியர்கள் மறியல் செய்தார்கள். பதிவு செய்யும் கால வாய்தாவைத் தள்ளிப் போட்டும், அரசாங்கம் தன்னால் இயன்ற முயற்சிகள் அத்தனையும் செய்தும் இறுதியில் பதிவு செய்த இந்தியர்களின் மொத்த எண்ணிக்கை 511 தான். இவ்வாறு பதிவு செய்ய மறுத்ததற்காக, காந்திஜிக்கும் மற்றும் பலருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப் பெற்றது. இதன் பின்னர், ஆல்பர்ட் கார்ட்ரைட் என்பவருடைய முயற்சியின் பேரில் காந்திஜியும் ஸ்மட்ஸும் ஒரு சமரச உடன்பாட்டிற்கு வந்தனர். இந்தியர்கள் தாங்களாகவே முன் வந்து அரசாங்கக் கட்டாயமின்றி - பதிவு செய்து கொள்வார்களானால் ஆசிய மக்கள் பதிவுச் சட்டத்தை அரசாங்கம் கைவிட்டு விடும்: ஏற்கனவே கைதாகியுள்ள இந்தியர்களும் விடுதலை செய்யப் பெறுவார்கள், என்பது இந்த உடன்பாடு.

ஆனால் திட்டமிட்டோ திட்டமிடாமலோ இதில் காந்திஜியை ஸ்மட்ஸ் ஏமாற்றிவிட்டார். அவர் அந்தச் சட்டத்தைக் கைவிடவில்லை; அதற்கு மாறாக, தாமாக ஏமாற்றியதன் முன்வந்து இந்தியர்கள் பதிவு செய்ததை எதிரொலி அங்கீகரிக்க ஒரு புதுச் சட்டம் இயற்றினர். காந்திஜி வெகுண்டெழுந்தார். பதிவுச் சான்றுகள் அனைத்தையும் - இந்தியர்களின் மாபெருங் கூட்டம் ஒன்றைக் கூட்டிச் சொக்கப்பனை கொளுத்துமாறு செய்தார். இந்தியர்கள் புதிதாக டிரான்ஸ்வாலில் குடியேறக் கூடாது என்று பிறப்பிக்கப்பட்ட சட்டத்தை மீறுவதையும் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தின் ஒரு அம்சமாகச் சேர்த்துக் கொண்டார். சில இந்தியப் பிரமுகர்கள் நேடால் எல்லையைக் கடந்து சட்டத்தை மீறி டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்து கைதாஞர்கள். தெருவில் விற்பனை செய்த வணிகர்களிடம் அதிகாரிகள் வந்து அவர்களுடைய லெசென்சைக் கேட்டபோது அவைகளைக் காண்பிக்க மறுத்து விட்டுப் பலர் சிறைக்குச் சென்றார்கள். அரசாங்கத்தின் கெடுபிடி அதிகமாயிற்று; சிறையில் இந்தியர்கள் கடுங்காவலில் வைக்கப்பட்டுக் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். இவ்வாறு கைதாகிக் கடுங்காவல் தண்டனை பெற்ற கைதிகளில் காந்திஜியும் ஒருவராஞர். இது வரை, சிறைகளில் இடங் கொள்ளாது என்று கருதியும் அரசாங்கத்தின் செலவு அதிகமாகிறது என்று எண்ணியும், பல இந்தியர்கள், நாடு கடத்துவது என்ற பெயரால், பக்கத்துக் குடியேற்றப் பகுதிகளான நேடால், ஆரஞ்ச் ப்ரீஸ்டேட் ஆகியவைகளுக்கு அனுப்பப் பட்டு வந்தார்கள். ஆனால் இப்போது இந்தியாவிற்கே அவர்களை டிரான்ஸ்வால் அரசு நாடு கடத்திற்று. இதை எதிர்த்து சுப்ரீம் நீதிமன்றத்தில் காந்திஜி வழக்குத் தொடர்ந்தார். ''இந்தியாவிற்கு நாடு கடத்துவது சட்டவிரோதம்'' என்று அந்த நீதிமன்றமும் தீர்ப்பளித்தது. இதன் பின்னர்ப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் இந்தியர்களின் பிழைப்பைச் சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகளைத் தனிப்பட்ட வெள்ளையர்கள் மேற் கொள்ளத் தொடங்கினர். அதனால் பல இந்திய வணிகர்கள் 'பாப்பர்' களாஞர்கள். போராட்டத்தில் தீவிரமாக இருந்த இந்தியர்கள் கூடச் சற்றுச் சலனத்துப் போஞர்கள். மறுபடியும் (அதாவது 1909 ஆம் ஆண்டில்) இங்கிலாந்திற்கு காந்திஜி பயணமாஞர். ஆனால் அவர் வெற்றி பெறவில்லை.

இந்தச் சமயத்தில் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்குப் பணவசதி இல்லாது, பெரிய நெருக்கடி ஏற்பட்டது. இந்தியாவிலிருந்து சில தொழில் அதிபர்களும் அரசியல் நிறுவனங்களும் மன்னர்களும் பணம் அனுப்பி வைத்தனர். ஜோகன்னஸ் பர்க்கில் இருந்து இருபத்தியோருமைல் தூரத்தில் 1100 ஏக்கர் பண்ணை ஒன்றை காலன்பாக் என்ற ஜெர்மானியர் வாங்கிக் கொடுத்து உதவினர். ஆகையால் சத்தியாக்ரகத்தில் பங்கு கொண்டதற்காகப் பிழைப்பை இழந்த குடும்பங்கள் இப்பண்ணையில் வேலை செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற ஒரு ஆறுதலான நிலைமை ஏற்பட்டது. இந்தப் பண்ணையை 'டால்ஸ்டாய் பண்ணை' என்று காந்திஜி அழைத்தார். சிறைக்குச் சென்றவர்கள் குடும்பங்கள் ஒரே இடத்தில் ஒரு கூட்டுறவுக் குடியிருப்பாக வாழ்ந்தனர். இந்தப் பண்ணையில் குசராத்திகள், தமிழர்கள், தெலுங்கர்கள் ஆகியோரும் மற்றும் பல வட இந்தியர்களும் குடியேறினர்கள். இப்பண்ணையில் சுகாதாரப் பொறுப்பும் ஜோகன்னஸ்பர்க் நகருக்குச் சென்று சாமான்கள் வாங்கி வரும் பொறுப்பும் தம்பி நாயுடு என்ற தமிழரிடம் ஒப்படைக்கப்பெற்றன.

டால்ஸ்டாய் பண்ணை

டால்ஸ்டாய் பண்ணை அமைக்கப்பட்டபோது அதில் தமிழ்ப் பெண்கள் குடியேற வந்தது ஒரு சுவையான கதை. முதலில் அங்கு காலென்பாக்கும், காந்திஜியும், அவரது இருகுமாரர்களும் போய்க்குடியேறி, மற்ற சத்தியாக்ரகிகளுக்கு வேண்டிய வீடுகளை நிர்மாணித்துக் கொண்டிருந்தனர். அப்போது தமிழகப் பெண்கள் சிலர் தம்பி நாயுடு, கோபால் நாயுடு ஆகிய இருவருடனும், வாடகை வீடு பார்க்க வருபவர்களைப் போன்று, அங்கு வந்து புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற வீடுகளைப் பார்வையிட்டார்கள். அப்போது காந்திஜியும் மற்றவர்களும் வந்த விருந்தினர்களுக்கு உணவு சமைத்துப் போட்டார்கள்! காலெக்பாக் பண்ணையைச் சுற்றிக்காண்பித்தார். அவர்கள் எல்லோரும் அங்கே வந்து குடியேற மனநிறைவு தெரிவித்தார்கள். கோபால் நாயுடு அங்கேயே தங்கி விட்டார். சில தமிழர்கள், வேலைகள் முடிவடைவதற்கு முன்னேயே அங்கு வந்து விட்டார்கள். அங்குச் சாலைகள் போட்டபோது சாலையுருளி (ரோட் ரோலர்) யை இழுத்தவர்கள் சின்னன், குப்புசாமி, மணிலால் காந்தி,

குடியேறிய கதை

காந்திஜி ஆகியோர் ஆவர். கோபால் நாயுடுவுக்குச் சமையல் வேலை அளிக்கப்பெற்றது.

காந்திஜி ஆசிரியர்

இந்தப் பண்ணையில் அமைக்கப்பெற்ற பள்ளியில் பல வேறு மொழிகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் இருந்தனர் என்பது மட்டுமல்லாமல், அவர்கள் பல்வேறு வயதுப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாகவும் இருந்தனர். காந்திஜி காலன்பாக் ஆகியோருடன் சில இளைஞர்களும் இப்பள்ளி ஆசிரியர்களாக இருந்தனர். ஆனால் இந்த ஆசிரியர்களில், காந்திஜியைத் தவிர மற்ற யாருக்கும் தமிழ் கொஞ்சமும் தெரியாது. ஆகையால், அங்கிருந்த தமிழ் மாணவர்களுக்கு காந்திஜியே தாம் அறிந்த அளவில் சிறிது தமிழ் கற்றுக்கொடுத்தார்! காந்திஜியிடம் படித்த மாணவர்கள் முதலில் கோபால், சின்னன், குப்புசாமி ஆகிய வயது வந்தவர்களும் குப்புசாமியின் இரண்டு மகன்களுமாவர்.

சத்தியாக்ரகி விடுதலை

இதற்கு பின்பு சத்தியாக்ரகப் போராட்டம் நான்கு ஆண்டுகள் தொடர்ந்து வேகமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்றது. 1911 பிப்ரவரியில் இன வேற்றுமைத் தடைகளை அகற்றுவதாகத் தென்னப்பிரிக்க அரசு அறிவித்தது. ஒரு குறிப்பிட்ட அளவு படித்தவர்கள் எந்த இனத்தவராய் இருந்தாலும் டிரான்ஸ்வாலுக்குள் நுழையலாம் என்று அனுமதி தந்தது. காந்திஜிக்கும் ஸ்மட்ஸுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டில் இந்தியர்கள் தங்களுடைய தொழிலைத் தொடர்ந்து நடத்தலாம் என்று ஸ்மட்ஸ் ஒப்புக் கொண்டார். ஜூன் முதல் தேதியன்று சத்தியாக்ரகிகள் விடுதலை செய்யப் பெற்றார்கள்.

கோகலேயிடம் வாக்குறுதி

1912 ஆம் ஆண்டில் கோகலே தென்னப்பிரிக்காவிற்கு வந்து சுற்றுப் பயணம் செய்தார்; அவர் சென்ற இடங்களிலெல்லாம் வெள்ளையர்களும் சேர்ந்து கூடி அவருக்குச் சிறப்பான வரவேற்பு அளித்தனர். 1912 ஆம் ஆண்டு இறுதிவரை சமரச உடன்பாட்டில் எந்த உடைப்பும் ஏற்படவில்லை. ஆனால் கோகலே இந்தியாவிற்குப் புறப்பட்டாரோ இல்லையோ "மூன்று பவுன் வரியை எடுக்க முடியாது" என்று ஸ்மட்ஸ்

கண்டிப்பாகக் கூறிவிட்டார். இந்தச் சிக்கலை வைத்துச் சத்தியாக்கிரகம் நடத்துவது குறித்து காந்திஜி திட்டம் தீட்டிக் கொண்டிருக்கையில் தான் ஒரு பயங்கரமான நீதி மன்றத் தீர்ப்பு வெளிவந்தது.

கண்ணகி பரம்பரை

கண்ணகியின் கற்பு நெறி தவறுத பாரம்பரையில் தோன்றிய தமிழ்ப் பெண்களின் கோபக்கனலைத் தென்னப்பிரிக்க அரசு கண்டு குலைபதற வேண்டிய ஒரு கட்டம் காந்திஜி நடத்திய போராட்டத்தில் தோன்றியது. கையில் காற்சிலம்புடன் பாண்டியன் அரண்மனைக்குச் சென்ற ஒரே ஒரு தமிழ்ப் பெண், அங்கு அரியணை ஏறியிருந்த கொற்றவனையும் அவன் பட்டத்து ராணியையும் அவர் தம் அமைச்சரவையையும் நடுங்க வைத்து ''அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றுகு மாறு'' செய்தாள் என்ற வரலாற்றை அறியாத தென்னப்பிரிக்க அரசு அப்பாவிகள் போல் பார்வைக்குத் தோன்றிய இந்தியப் பெண்களின் கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய ஒரு முடிவில் இறங்கியது. தமிழ்ப் பெண்கள் அனைவரும் கண்ணகித் தாய்களாக உருவெடுத்தார்கள்.

அத்துமீறிய தீர்ப்பு

தென்னப்பிரிக்கத் தலைமை நீதிமன்ற நீதிபதிகளில் ஒருவராகிய சியர்ல் என்பார், 1913 மார்ச் 14-ம் தேதியன்று ஒரு வழக்கில் தென்னப்பிரிக்க அரசுச் சட்டத்தின் படி நடைபெற்ற திருமணங்களும், கிறித்தவ மணமுறைப்படி நடைபெற்ற திருமணங்களும் பதிவு செய்யப் பெற்ற திருமணங்களும் தான் தென்னப்பிரிக்காவில் செல்லுபடியாகும் என்று தீர்ப்பளித்து விட்டபடியால் இந்தியாவிலோ தென்னப்பிரிக்காவிலோ இந்து, முகம்மதிய, ஜோராஷ்ட்ரிய முறைப்படி முடிக்கப் பெற்ற திருமணங்கள் எதுவுமே செல்லுபடியாகமாட்டா என்று ஆகிவிட்டது. ஆகவே இந்திய முறைப்படி திருமணம் செய்து கொண்டு கணவன்மார்களுடன் வாழ்ந்து வந்த பெண்கள், இத்தீர்ப்புக்குப் பின், சட்டப்படி மனைவிமார்களாக இல்லாமல், வைப்பாட்டிகள் எனப்படும் இழி நிலைக்குக் கொண்டு வரப்பெற்றனர்; அவர்களுக்குப் பிறந்த பிள்ளைகளுக்கும் சொத்துரிமை இல்லாமற் போய்விட்டது.

இத்தீர்ப்பை எதிர்த்துச் சத்தியாக்ரகம் செய்வதென்றும், அச்சத்தியாக்கிரகத்தில் பெண்களைப் பங்கு கொள்ள முன் வருமாறு அழைப்பதெனவும் முடிவாயிற்று. முதன் முதலில் டால்ஸ்டாய் பண்ணையில் இருந்த பெண்களை அழைத்தபோது அவர்களும் மகிழ்ச்சியுடன் முன் வந்தனர். இப்போராட்டத்தில் இயல்பாகவே பெண்களின் வீரஉணர்வு அதிகம் சுடர் விட்டது. காந்திஜி, தமது வழக்கப்படி, முன்னெச்சரிக்கையாக, போராட்டத்தில் ஈடுபடுவதில் உள்ள இன்னல்களைப் பெண்களுக்கு எடுத்தியம்பினர். ''உணவு, உடையில் தட்டுப்பாடுண்டாகும். ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடம் செல்வதற்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பெறலாம். சிறையில் துணி மணிகளைத் துவைப்பது போன்ற கடினமான வேலைகள் செய்ய வேண்டிநேரும். வார்டர்கள் அவதூறுகவும் பேசுவார்கள்'' என்றெல்லாம் சொன்னர். ஆயினும் டால்ஸ்டாய் பண்ணையிலிருந்து மட்டும் அஞ்சா நெஞ்சம் படைத்த பதினேறு மாதர் குலத்திலகங்கள் போரணியில் முன்னிற்க முன் வந்தனர். அவர்களில் பத்துப் பேர் தமிழ்ப் பெண்கள் என்றால் தமிழகப் பெண்குலத்தின் வீரத்திற்குத் தரணியில் வேறொரு சான்றும் வேண்டுமோ? இவ்வாறு, சத்தியாக்ரகப் போராட்டத்தில் பங்கு கொள்வதாக டால்ஸ்டாய் பண்ணையிலிருந்து பெயர் கொடுத்த பதினேறு வீரத்தாய்கள்:- 1. திருமதி. தம்பி நாயுடு, 2. திருமதி என். பிள்ளை, 3. திருமதி கே. முருகேச பிள்ளை, 4. திருமதி ஏ. பெருமாள் நாயுடு, 5. திருமதி பி. கே. நாயுடு, 6. திருமதி கே. சின்னசாமி நாயுடு, 7. திருமதி என். எஸ். பிள்ளை, 8. திருமதி ஆர். அமுதலிங்கம், 9. திருமதி பவானி தயாள், 10. திருமதி மீனாட்சி பிள்ளை, 11. திருமதி பாக்கியம் முருகேச பிள்ளை ஆகியோராவர். இவர்களில் திருமதி பவானிதயாளைத் தவிர மற்ற அனைவரும் தமிழ்ப் பெண்கள்.

இவ்வாறு இந்தப் பதினேறு பேரும் சத்தியாக்ரகத்தில் பங்கு கொள்ள முன் வருவதாகப் பெயர் கொடுத்தபோது ஒரு சகோதரி கர்ப்பிணியாக இருந்தாள். மற்றும் ஐந்து சகோதரிகள் கைக்குழந்தைகளுடன் இருந்தனர். இம்மாதர் குலத்திலகங்கள் இன்னல்களைத் துச்சமாக மதித்து, சிறைக்குச் செல்ல முன்வந்த தென்னவோ உண்மை தான்; ஆனாலும் இவர்களைக் கைது செய்வதற்குத் தான் டிரான்ஸ்வால் அரசு தயாராக இல்லை. முதன் முதலாக, அனுமதிச்

போலிசார் மௌனம்

சீட்டு எதுவும் இன்றி வெரினிசிங்க் என்ற இடத்தில் டிரான்ஸ்வாலுக்குள் இந்தச் சகோதரிகள் நுழைந்த போது இவர்கள் கைது செய்யப் பெறவில்லை. அனுமதி (லெசென்சு) இன்றிப் பலர் தெருவில் வீலை கூறி விற்பனை செய்த போதும் போலீசார் பேசாமல் இருந்து விட்டனர் ஆகவே இவர்க ளுடைய போராட்டத்தில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டது.

காந்திஜிக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. கடைசி ஆயுதமாகத் தம் மனதில் எண்ணியிருந்த ஒரு நடவடிக்கையை அவர் மேற் கொண்டார். அனுமதிச் சீட்டு சிறைக்குள் எதுவும் இல்லாது, போனிக்ஸ் பண்ணையில் பெண்கள் (கூட்டாக சத்தியாக்கிரகிகள் எல்லோரும் சேர்ந்து வாழவும் இந்தியன் ஒப்பினியன் பத்திரிகையை வெளியிடவும் 1904 இல் காந்திஜி டர்பன் அருகே தொடங்கிய ஆஷ்ரமம் தான் போனிக்ஸ் பண்ணை) இருந்த தமது சக ஊழியர்களை டிரான்ஸ்வாலுக்குள்ளும் டிரான்ஸ்வாலுக்குள் இருந்த மேற்கண்ட சகோதரிகளை நேடாலுக்குள்ளும் நுழையுமாறு செய்வது என்று ஏற்பாடு செய்தார். அப்போதும் இச்சகோதரிகள் கைதாகாவிட்டால் இவர்கள் நேரே நேடாலுக்குள் இருந்த நியூகேசில் நிலக்கரிச் சுரங்கத்திற்குச் சென்று அங்கு பணியாற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யுமாறு தூண்ட வேண்டும் என்றும் அவர் கூறினர். நியூகேசில் சுரங்கத்தில் வேலை செய்த தொலாளர்களில் பெரும்பாலோர் தமிழர் களாதலாலும், இச்சகோதரிகளிலும் பெரும்பாலோர் தமிழர்களாதலாலும் இவர்கள் தங்களுடைய வேண்டுகோளை எளிதாகச் சொல்ல முடியும் என்பதும் அவர்களும் இவர் களுடைய வேண்டுகோளை ஏற்று வேலை நிறுத்தத்தை மேற் கொள்வார்கள் என்பதும் காந்திஜியின் நம்பிக்கை. இத் திட்டத்தின்படி போனிக்ஸ் குடியிருப்பிலிருந்து அனுப்பப் பெற்ற பதினாறு பேரில் சாலமன் ராயப்பன், ராஜ் கோவிந்து, வி. கோவிந்தராஜுலு, குப்புசாமி மூன்லேட் முதலியார் ஆகிய தமிழர்கள் இருந்தனர். இக்குழுவில் முதல் முதலாக கஸ்தூரிபா காந்தியும் போராட்டத்திற்குச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. காந்திஜி திட்டம் வெற்றி பெற்றது. இந்த போனிக்ஸ் குழு, எல்லையைத் தாண்டி டிரான்ஸ் வாலுக்குள் நுழைந்த உடனேயே (செப்டம்பர் 23, 1913) கைதாயிற்று. இதிலும் ஒரு அதிசயம், என்னவென்றால் டிரான்ஸ்வாலிலிருந்து நேட்டாலுக்குள் அனுமதிச் சீட்டு

இன்றி நுழைந்த சகோதரிகள் இப்போதும் கைது செய்யப்பட வில்லை. போனிக்ஸ் பண்ணையைச் சேர்ந்தவர்கள் மட்டும் கைதாகி தாங்கள் கைதாகவில்லையே என்பதை எண்ணிப் பார்த்தபோது, ஜோகன்னஸ்பர்க் (டிரான்ஸ்வால்) சகோதரிகளின் உணர்ச்சி பெருக்கெடுத்தது. மேலும் மேலும் அதிகமான பேர் போராட்டத்திற்கு முன்வந்தனர். தம்பி நாயுடுவின் குடும்பத்தினர் முழுவதுமே—அவருடைய மைத்துனி, மாமியார் உள்பட—வந்து விட்டனர். வள்ளியம்மாவும் இச்சமயத்தில் தான் போராட்டத்தில் பங்கு கொண்டார். காந்திஜி முதலிலேயே அவர்களுக்கு வகுத்துக் கொடுத்த திட்டப்படி அவர்கள் நேரே நியூகேசிலுக்குச் சென்று 3 பவுன் வரிக் கொடுமையைத் தொழிலாளர்களுக்கு எடுத்துக் கூறியபோது அவர்கள் மனம் உருகி, இச்சகோதரிகள் கேட்டுக் கொண்டவாறு வேலை நிறுத்தத்தைத் தொடங்கி விட்டனர். இதற்கு மேலும் அரசாங்கம் பேசாமல் இருக்குமா? வேலை நிறுத்தம் செய்த நியூகேசில் தொழிலாளர்களுடன் பேசிக்கொண்டிருந்தவர்களை நாடோடிகள் எனக் கைது செய்து ஒவ்வொருவருக்கும் மூன்று மாதக் கடுங் காவல் தண்டனை விதித்து போனிக்ஸ் குழுவினரை அடைத்து வைத்திருந்த அதே சிறைக்கு (அக்டோபர் 21, 1913) இச்சகோதரிகளை அனுப்பி வைத்தது. எந்த ஊரில் காந்திஜி முதல் வகுப்பு டிக்கட் பெற்று, இரயிலில் ஏறி இருந்த போது இறக்கிவிடப் பெற்றாரோ, கறுப்பு இனத்தவரின் உரிமைக்காகப் பாடுபடுவதென்று எந்த ஊரில் காந்திஜி உறுதி மேற்கொண்டாரோ அந்த மாரிட்ஸ்பர்க் ஊர்ச் சிறையில் தான் இச்சகோதரிகள் அடைக்கப் பெற்றனர். கொலை, கொள்ளை, திருட்டு போன்ற குற்றங்கள் செய்து சிறைத் தண்டனை அளிக்கப் பெற்றவர்களுடன் இப்பெருமகளிரும் அடைக்கப் பெற்றதை அறிந்த போது தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் இந்தியர்கள் உள்ளமெல்லாம் கொதித்தது. இப்பெண்கள் எண்ணற்ற கொடுமைக்குள்ளாயினர்; படு மோசமான உணவு இவர்களுக்கு வழங்கப்பெற்றது; இவர்களுக்கு அளிக்கப்பட்ட வேலையோ சலவை வேலை. இவர்களுடைய சிறைத் தண்டனை முடிவுற்ற காலம் வரை (அநேகமாக) இவர்களுக்கு வெளியிலிருந்து உணவு வழங்க அனுமதி அளிக்கப் பெறவே இல்லை. இன்னும் எத்தனையோ கொடுமைகள்,

ஆனாலும் சிறைச்சாலைக்குள் சென்ற பெண்கள் மனந்தளரவே யில்லை. அவர்கள் எண்ணிக்கையும் கூடிக்கொண்டே தான் வந்தது.

பெண்களின் வீரம்

பண்டைக் காலத் தமிழ்ப் பெண்கள், போர் முரசின் ஒலியைக் கேட்டவுடனே அதில் மயங்கியவர்களாய்த் தங்கள் வீட்டிலிருந்து தங்கள் கணவனையோ அண்ணனையோ தம்பியையோ மகனையோ அனுப்பி வைப்பார்கள் என்று தமிழ் இலக்கியங் கூறும். மூதின் மகளிர் ஒருவரைப் பற்றி ஒக்கூர் மாசாத்தியார் என்னும் பெண்பாற் புலவர் ஒருவர் தாம் இயற்றிய பாடலில், அப்பெண்ணின் கணவன் போரில் ஒருநாள் இறந்தும் மற்றொரு நாள் அவளுடைய தந்தை செத்தும் மனங்கலங்காது, செருப்பறை கேட்டு விருப்புற்று, மயங்கி, தெருவில் விளையாடிக் கொண்டிருந்த தனது மகனை சிறுவனை - அழைத்து அவனுக்கு வெள்ளை ஆடை அணிவித்து தலையைச் சீவி விட்டு, வேலைக் கையிலே கொடுத்துப் போருக்கு அனுப்பி வைத்தாள் என்று கூறுகிறார். இது எல்லாம் கதையல்ல, கற்பனையல்ல, தமிழ்ப் பெண்ணின் உடலிலே, ரத்தத்திலே ஓடிக்கொண்டிருந்த உண்மை வீரம் தான் என்பதைத் தென்னாப்பிரிக்காவில் காந்திஜி கண்டார். 1909 டிசெம்பரில் தமிழ்ப் பெண்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய காந்திஜி, "இக்கூட்டத்தில் பங்கு கொள்ளும் பெண்களெல்லோரும் சத்தியாக்கிரகிகள் என்றும் இவர்கள் தங்களுடைய கணவன்மார்களையோ உடன் பிறந்தவர்களையோ மக்களையோ சிறைச்சாலைக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றும் நான் அறிகிறேன். அஞ்சா நெஞ்சத்துடன் செயல் புரிந்து தங்களுடைய தாய் நாட்டின் கவனத்தையும் அவர்கள் ஈர்த்திருக்கிறார்கள்" என்று கூறிப் புகழ்ந்தார்.

நகைகள் அணிவதில்லை

1910 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வழக்கறிஞர் காந்திஜி அலுவலகத்தில் உள்ளத்தை உருக்கிய ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. திருமதி அம்மாகண்ணு திருமதி பக்கிரிசாமி என்ற இரு மாதர் குலத் திலகங்கள் மேற்கண்ட அலுவலகத்திற்கு வந்து, தங்களுடைய நகைகளையெல்லாம்-தோடு, மூக்குத்தி சங்கிலி, வளையல், மோதிரம் ஆகிய எல்லாவற்றையும் கழற்றி விட்டனர். தாலிகளை அணிந்திருந்த சங்கிலிகளைக்கூடக்

கழற்றிவிட்டனர். அதுமட்டுமல்லாது, போராட்டம் முடியும் வரை தாங்கள் நகைகளே அணிவதில்லை என்று உறுதி மொழி எடுத்துக் கொண்டனர். ''என்னுடைய மூத்தமகன் சிறைக்குச் செல்லவிருக்கிறான். இன்னும் சில நாட்களில் என்னுடைய கணவரும் கைதாவார். இந்த நிலைமையில் என்னால் நகைகள் அணிந்துகொள்ள முடியாது'' என்று திருமதி பக்கிரிசாமி கூறினர்.

''இவ்வாறு சிறைக்குள் சென்று இன்னல் ஏற்ற பெண்ணரசிகள் உயரிய கல்வி கற்ற மேதைகளல்லர்; அவர்களில் எழுத்தறிவே இல்லாதவர்கள்தான் அளவில்லாத் அதிகம். பலருக்கு நாடு, நாட்டுப்பற்று தியாகம் என்பனவற்றைப் பற்றிய உயரிய தத்துவங்கள் எதுவும் தெரியாது'' என்று அண்ணலே கூறியுள்ளார். ஆனாலும் இந்தியர்களின் கௌரவத்திற்கு ஏதோ ஓர் அபாயம் வந்துவிட்டதாக அவர்கள் உணர்ந்த போது, அதைத் துடைப்பதற்கு எவ்விதத் தியாகம் செய்யவும் அவர்கள் தயங்கவில்லை. அவர்களுடைய தியாகத்தையும் பக்தியையும் யாரும் சொற்களால் அளந்துவிட முடியாது. இப்பெண்மணிகளில் பலர் சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்தபோது உடல் மெலிந்து குற்றுயிரும் குலை உயிருமாக இருந்தனர். ஒரு பெண்ணோ, வந்த சில நாட்களில் எமனுக்கே இரையாகி விட்டாள். அவள்தான் வீராங்கனை வள்ளியம்மாள்.



வள்ளியம்மாள்

காந்திஜி நடத்திய போராட்டங்கள் ஒன்றிரண்டல்ல, பல. அப்போராட்டங்களில் அஞ்சாநெஞ்சத்துடன் ஆருயிர் ஈந்தவர்களும் ஓரிருவர் அல்லர், எத்துணையோ பேர். ஆனாலும் வள்ளியம்மாளைப் போன்று அண்ணலின் உள்ளத்தைத் தொட்டவர்கள் யாரும் இல்லை. அவருடைய பொது வாழ்வின் தொடக்க காலத்திலேயே வள்ளியம்மை இன்னுயிர் ஈந்தது இதற்கு ஒரு காரணமாய் இருக்கலாம். ஒரு பெண் - மிக மிக இளம் வயதில் - முழுமனதோடு உயிரை விட்டது மற்றொரு காரணமாக இருக்கலாம்.

யாரும் இணை இல்லை

ஜோகன்னஸ்பர்க்கில் தின்பண்டங்களும் மற்றும் பல சரக்குகளும் விற்பனை செய்யும் கடை வைத்திருந்த ஆர். முனுசாமி முதலியார் என்பவரின் குமாரத்தி வள்ளியம்மாள். அவளுடைய தந்தை புதுச்சேரி முதலியார் ஆவார். தாய் தஞ்சை மாவட்டத்தில் தில்லையாடி (அல்லது அதன் அருகே உள்ள கிராமத்தைச்) சேர்ந்தவர் என்று கூறப் படுகிறது. முதன் முதலாக டிரான்ஸ்வாலில் போய்க் குடி யேறிய இந்தியர்களில் அவளுடைய தந்தையும் ஒருவர். வள்ளி யம்மாள் பிறந்தது தென்னப்பிரிக்காவில் தான். அவளுடைய இளம் வயதிலேயே அவர்களுடைய குடும்பம் நாகரிகமான குடும்பமாகத்தான் இருந்திருக்கிறது. வள்ளியம்மாளும் நாகரிகமான முறையிலேயே வளர்க்கப் பெற்றிருக்கிறாள். அவள் அங்கிருந்த அரசாங்கப்பள்ளியில் படித்தவள்.

தாய் தந்தையர்

தென்னப்பிரிக்கப் போராட்டம் வெற்றியடைந்ததற்கு யாருடைய தியாகம் காரணம் என்பது குறித்துத் ''தென்னப்பிரிக்க சத்தியாக்ரகம்'' என்ற நூலில் அண்ணல் ஆராய்ந்திருக்கிறார். தியாகம் எந்த அளவு தூய்மையாக இருக்கிறதோ அந்த அளவு பலன் தரும் என்பதில் அண்ணலுக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. ஆகவே,

வெற்றியின் காரணம்

யாராவது ஒருவர் அல்லது சிலருடைய தூய்மையான, பலன் கருதாத, சத்தியமான தியாகத்தினால் தான் தென்னுப்பிரிக்கப் போராட்டம் வெற்றி பெற்றிருக்க வேண்டும் என்பது அவர் முடிவு. ஆனால் அந்த ஒருவர் அல்லது சிலர் யார்? இதற்கு அண்ணலே விடை தருகிறார். ''தென்னுப்பிரிக்காவில் யாருடைய தியாகம் ஆண்டவன் ஏற்கத்தக்கதாக இருந்து அரும்பலன் தந்தது என்று யாருங் கூற முடியாது. ஆனால் ஒன்று நமக்குத் தெரியும். வள்ளியம்மையின் தியாகம் பலன் தந்தது. அதே போன்று மற்ற சகோதரிகளின் தியாகமும் பலன் அளித்தது'' என்று அண்ணல் எழுதியிருக்கிறார். இதில் வள்ளியம்மையின் பெயரை மட்டும குறிப்பிட்டு எழுதியிருப்பதைக் காண்க.

தியாகிகள் குடும்பம்

வள்ளியம்மாள் இறந்த போது அவளுக்குப் பதினேறு வயது தான் நடந்துகொண்டிருந்தது. டிரன்ஸ்வாலில் ஜோகன்னஸ்பர்க் நகரில் 1898-ஆம் ஆண்டு தம் பெற்றோர்களுக்கு மூத்தமகளாகப் பிறந்த வள்ளியம்மாள், 1914 பிப்ரவரி 22-ஆம் தேதி யன்று காலமானார். வள்ளியம்மாள் தோன்றிய குடும்பமே ஒரு தியாகிகள் குடும்பந்தான். அவள் சிறைக்குச் செல்வதற்கு முன்னே அவளுடைய தந்தை சிறை வாசத்தை அனுபவித்துப் பார்த்திருக்கிறார். அவளுடைய தாய் ஜானகியோ வள்ளியம்மையுடன் சேர்ந்து சிறை சென்றவர்.

உள்ளங் கொதித்தது

பதினேறு வயதே ஆன அந்த இளநங்கையின் உள்ளங் கொதித்தெழச் செய்தது ''இந்திய முறைப்படி நடைபெற்ற திருமணங்கள் செல்லா'' என்ற தீர்ப்புத்தான். ''இந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதானால், என்னுடைய தாய் என் தந்தைக்குக் கட்டிய மனைவி ஆக மாட்டாளே! நான் அவர்களுக்கு முறைப்படி பிறந்த மகள் ஆக மாட்டேனே?'' என்று எண்ணியபோது வள்ளியம்மாளுடைய நெஞ்சமே வெடித்து விடும்போல் இருந்தது.

''மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்வரின்''

என்பது தெய்வத்திருமறை அன்றே? அவளுடைய தந்தையார் அந்தச் சமயத்தில் மிகவும் நோய்வாய்ப்

பட்டிருந்தார். ஆகவே அவரை மருத்துவ மனையில் விட்டு விட்டு வள்ளியம்மாளும் அவளுடைய தாயும் இந்த அநியாயச் சட்டத்தை எதிர்க்க வரிந்து கட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டனர்!.

1913 அக்டோபர் 29-ஆம் தேதியன்று ஜோகன்னஸ் பர்க்கிலிருந்து நியூகாசிலுக்குப் புறப்பட்ட பெண்கள் பேரணியில் சேர்ந்து கொண்டாள் வீராங்கனை வள்ளியம்மாள். அவள் இளநங்கையாக இருந்தாலும் தாயும், அணியில் நடந்து சென்றதுடன் தனது கடமை முடிந்து விட்டதாக எண்ணவில்லை. சார்லஸ்டவுன், டண்டி, லேடிஸ்மித், மாரிட்ஸ்பர்க், டர்பன் போன்ற முக்கியமான இடங்களில் சத்தியாக்ரகப் படையினர் தங்கிச் சென்றபோது அந்த ஊர்களிலெல்லாம் அவளால் இயன்ற தொண்டு புரிந்திருக்கிறாள். அவள் சென்ற குழு கைதாகவில்லையாதலால் மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்தது. அப்போது அவளையும் அவளுடைய அன்னையையும் மற்ற பெண்களையும் வால்க்ஸ்ரஸ்ட் என்ற இடத்தில் 1913 டிசம்பர் 22-ஆம் தேதியன்று கைது செய்து, அவர்களுக்கு மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை விதித்து மாரிட்ஸ்பர்க் சிறையில் அடைத்தனர் அரசாங்கத்தார்.

உடல் நலம் கெட்டது

சிறைச்சாலையில் அடைக்கப்பெற்ற உடனேயே வள்ளியம்மாளின் உடல் நலம் பாதிக்கப்பெற்று விட்டது; சிறைக்குள் படுத்த படுக்கையாகவே இருந்தாள். விடுதலையான சமயத்திலோ கடும் நோய். காந்திஜிக்கும் ஸ்மட்ஸுக்கும் இடையே ஏற்பட்ட தற்காலிக உடன்பாட்டின்படி அவளுடைய தண்டனை முடிவதற்கு முன்னமேயே, பிப்ரவரி 11 ஆம் தேதியன்று, விடுதலையாளாள் வள்ளியம்மாள். அவள் ஜோகன்னஸ் பர்க்கில் இருந்த தனது வீட்டிற்குக் கொண்டு வரப்பெற்ற இரண்டு நாட்களில் இறந்து விட்டதாக காந்திஜி குறிப்பிட்டிருக்கிறார். அவள் காலமானது பிப்ரவரி 22-ஆம் தேதி. ஆகையால் அவள் விடுதலையான இடத்திலேயே சில நாட்கள் வைத்திருக்க வேண்டிய அவசியம் இருந்திருக்கிறதோ என்று ஐயுற இடம் இருக்கிறது. குறிப்பிட்ட காலத்திற்கு முன்பே விடுதலை ஆகியிராவிட்டால் அவள் சிறைச்சாலையிலேயே இறக்க நேர்ந்திருக்கும். வள்ளியம்மாள்

வீட்டிற்கு அழைத்து வரப் பெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர்த் தான் அவளுடைய தந்தை முனுசாமி முதலியார் மருத்துவமனையில் இரண சிகிச்சை செய்து குணமாகி வீட்டிற்கு வந்திருக்கிறார்.

சிறைச்சாலையிலிருந்து வள்ளியம்மாள் விடுதலையான அன்று காந்திஜியும் போலக்கும் சிறைச்சாலைக்கு வந்தார்கள். தள்ளாடித் தள்ளாடி வள்ளியம்மாள் வெளியே வாசலுக்கு வந்தபோது இவர்களும் வந்து விட்டார்கள். அவள் மயக்கம் போட்டு விழக்கூடிய நிலையில் இருந்தாள். வள்ளியம்மாளின் தாய், விரைவாக மகளை வீட்டிற்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமென்ற ஆவலில் இருந்தார். சிறைச்சாலையில் சத்தியாக்கிரகிகள் மிகுந்த கட்டுப்பாடாக நடந்து கொண்டதால் மெத்தை, ஸ்டிரெச்சர் போன்ற எந்த வசதிகளும் கேட்பதில்லை. ஆகையால் ஒரு சமுக்காளத்தை விரித்து அதில் வள்ளியம்மாளைப் படுக்கவைத்து வள்ளியம்மாளின் தாயாரும் போலக்கும் காந்திஜியும் மெதுவாக வெளியே தூக்கி வந்தார்கள். தம்மால் இவ்வாறு கவலையும் பரபரப்பும் அடைய வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டுவிட்டதே என்று காந்திஜி கவலைப்பட்டார்.

பரிதாப நிலை

வள்ளியம்மா நல்ல வளர்த்தியான, அழகான பெண், ஆகவே உடல் நோயினால் வாடி அவள் மெலிந்து கிடந்த போது பார்ப்பதற்குப் பரிதாபமாயிருந்தது. மீண்டும் வள்ளியம்மாளை அவளது வீட்டில் போய்ச் செல்லத்தயார் பார்த்த காந்திஜிக்கு மிகுந்த வருத்தமாகப் போய் விட்டது. ''வள்ளியம்மா ! நீ சிறைக்குச் செல்ல நேர்ந்ததற்காக வருந்தவில்லையா,'' என்று காந்திஜி கேட்டார்.

•

''வருந்துவதா ? இப்போது கூடச் சிறைக்குச் செல்லத் தயாராய் இருக்கிறேன்'', என்றாள் அந்த வீராங்கனை.

'' ஆனால் இது உன் மரணத்தில் முடிந்தால் ?''

''நான் அதற்காகக் கவலைப்படவில்லை. தாய் நாட்டிற்காக உயிரை விட யார் தாம் தயாராய் இருக்கமாட்டார்கள் ?''

இந்த உரையாடல் நடைபெற்ற ஒரு சில நாட்களில் வள்ளியம்மாள் இவ்வுலகவாழ்வை நீத்து வானுலகு அடைந்துவிட்டாள். எலும்பாலும் தோலாலும் ஆன உடம்பை விட்டுப் புகழுடம்பை எய்தி விட்டாள்!

''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில் எழுதிய குறிப்பில் காந்திஜி கூறினர்: ''இந்தியாவின் புனித மகள் ஒருத்தியை இழந்து விட்டதற்காக வருந்து கிறேம். ஏன், எதற்கு என்று கேட்காமல் தனது கடமையை உணர்ந்து ஆற்றிய காரிகை அவள். மாதர்களுக்கு அணிகலங்களான துன் பத்தைச் சகிக்கும் மனோபலம், தன்மானம், நல்லொழுக்கம் ஆகியவற்றிற்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தவள். அவளு டைய உதாரணம் இந்திய சமுதாயத்தில் வீணாய்ப் போகாது என நம்புகிறேன்''. மற்றொரு முறை உணர்ச்சியோடு அவர் சொன்னார்: வள்ளியம்மா! அந்த இளம் பெண்! நான் பேசும் போதே அவளுடைய உருவம் என் கண் முன்னால் வந்து நிற்கிறது. சத்தியத்திற்காக உயிர் நீத்தவள் அவள். நம்பிக்கை தான் அவள் ஆயுதம். எனக்கு இருந்த கல்வி அறிவு அவளுக்கு இல்லை. சத்தியாக் ரகம் என்றால் என்ன வென்று அவளுக்குத் தெரியாது. சத்தியாக்ரகத்தினால் இந்தியர்களுக்கு என்ன நன்மை ஏற்படும் என்பதும் அவளுக்குத் தெரியாது. ஆனால் தனது நாட்டு மக்களுக்காக அவள் எல்லையில்லா உத்வேகத் தோடு சிறைக்குச் சென்றாள் - உடல் நலம் முற்றி லும் பாதிக்கப்பட்டு வெளியே வந்தாள் - சில நாட்களில் இறந்தாள்''.

காந்திஜி அஞ்சலி

வள்ளியம்மாளைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்த போதெல்லாம் அண்ணலின் உள்ளம் நெகிழ்ந்து விடும். ''ஒரு வேளை, என்னுடைய தமைய னரின் (இலட்சுமிதாஸ் காந்தியின்) மரணத் தைக் காட்டிலும் வள்ளியம்மாளின் மரணம் எனக்குப் பேரிடியாக இருக்கலாம்!'' என்று ஒரு முறை அவர் குறிப்பிட்டார். மற்றொரு முறை, வள்ளி யம்மாளும் நாகப்பனும் நாராயணசாமியும் செய்த தியா கத்தை எண்ணிப்பார்க்கும் போது, (தாம் உள்பட) இந்தி யர்கள் அனைவரும் செய்த சேவையெல்லாம் தமக்குச் சிறிதா கப் படுவதாகக் கூறி அஞ்சலி செலுத்தியிருக்கிறார்.

உள்ளம் நெகிழும்

வள்ளியம்மாளின் உயிர்த் தியாகத்தைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் முறையில் ''வள்ளியம்மாள் மண்டபம்'' ஒன்று நிறுவுவதென்று இந்தியர்கள் முடிவு செய்தனர். ''தென்னப்பிரிக்க சத்தியாக்ரகம்'' என்ற நூலில் இதைக் குறிப்பிட்டு விட்டு, காந்திஜி கூறிய சொற்கள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியவையாகும். அவர் சொன்னார் ''அவளுடைய சேவையைக் கொண்டு ஓர் ஆலயத்தையே நிர்மாணித்துக் கொண்டாள். அவளுடைய புனித உருவம் அநேகர் உள்ளங்களில் இன்று கூடப் பதிந்து நிற்கும். இந்தியா வாழும் வரை தென்னப்பிரிக்க சத்தியாக்ரக வரலாற்றில் வள்ளியம்மாளின் பெயரும் நிலைத்து நிற்கும்.'' ஆம், இன்றும் அது நிலைத்து நிற்கத்தான் செய்கிறது.

அவள் தியாகம்

பெண்ணுக்கு ஆண் என்ன இளப்பமா என்று கூறுவது போன்று மற்றும் சில தமிழ் இளைஞர்கள் காந்திஜி நடத்திய போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களை ஈந்து ஆண்களின் மானத்தைக் காப்பாற்றியிருக்கின்றனர். அவர்களில் முக்கிய மானவர்கள் நாகப்பனும் நாராயணசாமியும் ஆவர்.

நாகப்பன்

தென்னப்பிரிக்க இந்தியர் சிக்கலைக் குறித்து பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு அமைச்சருடன் பேச்சு நடத்துவதற்காக அண்ணல் காந்தி ஒருமுறை இலண்டனுக்குப் போயிருந்தார் என்று குறிப்பிட்டோமல்லவா? அப்போது அவரது மூத்த குமாரரான ஹரிலால் தென்னப்பிரிக்காவில் கைதாகி இருப்பதாக அவருக்குச் செய்தி கிடைத்தது. அப்போது, அவர் தமிழ் இளைஞனை நாகப்பனை நினைவுபடுத்திக் கொண்டு ஆறுதல் அடைந்தாராம். அவரே கூறியிருக்கிறார். நாகப்பனுடைய முன்னுதாரணத்தை அவ்வளவு சிறந்ததாக அண்ணல் கருதினார். ''நாகப்பா, தாய் நாட்டிற்காக உன் உயிரை நீ ஈந்தபோது நீயும் ஓர் இளைஞன் தானே? உன் குடும்பத்திற்கு அருளப்பெற்ற ஓர் ஆசீர்வாதமாகவே உன் தியாகத்தை நான் கருதுகிறேன். நீ இறந்து விட்டாய் என்றாலும் சிரஞ்சீவியே. ஆகவே என் மகன் சிறை சென்றதற்காக நான்

காந்திஜியின் பெருமிதம்

ஏன் திடங்குலைய வேண்டும்?'' என்று அவர் நினைந்து நினைந்து மனமுருகியதாக ''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில் எழுதியிருக்கிறார்.

போருக்கு அஞ்சாத வீரத் தமிழ் மரபில் பிறந்தவர்கள், உயிரையேனும் பலிகொடுப்பார்களல்லாது மானம் பறி போகுமாறு வளைந்து கொடுக்கமாட்டார்கள் என்பதை வள்ளியம்மா, நாகப்பன், நாராயண சாமி ஆகியோர் வரலாற்றில் நாம் காண்கிறோம். இந்த மூன்று பேரும் இருபது வயது கூட ஆகாத இளம் பருவத்தினர். ஆனாலும் சிங்கம் போல் ஆண்மையுடனும் வீரத்துடனும் போராடி, தாய் நாட்டையும் தாய் நாட்டு மக்களையும் நினைத்துக் கொண்டே, தங்கள் இன்னுயிரை மகிழ்ச்சியுடன் ஈந்தவர்கள். அந்தக் காலத்தில் அண்ணல் காந்தி, தாம் சென்ற இடங்களிலெல்லாம் இவர்கள் சிறப்பைச் செப்பிவிட்டுத் தான், தமது சொற்பொழிவை நிகழ்த்துவார் என்றால் இவர் தம் பெருமை அளக்க வல்லதோ? அடக்கு முறையின் உச்சாணியையே டிரான்ஸ்வால் அரசு எட்டிப்பிடித்து, சிறைத் தண்டனையை மேலும் மேலும் கடுமைப் படுத்திக் கொண்டிருந்தும் இந்தியக் கைதிகளின் எண்ணிக்கை குறையாததைக் கண்டு அது இவர்களைப் பணியவைப்பதற்கு வேறு வழிகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது. நாடு கடத்தும் நடவடிக்கை செயலுக்கு வந்ததன் பின், அடியின் மேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பதுபோல, பல இந்தியர்கள் போராட்டத்திலிருந்து பின்வாங்கினர். வைரம் பாய்ந்த நெஞ்சினர் தான் அஞ்சாது அப்போதும் போராட்ட அணியில் அணிவகுத்து நின்றனர். இந்தக் கடத்தில் சிறைச்சாலைக்குள் இயற்றப்பட்ட கொடுமைகளோ எண்ணிப்பார்ப்போர் இதயத்தையே வெடிக்கச் செய்வனவாக இருந்தன. எல்லோரையும் ஒரே அறையில் அல்லது பொதுவான இடத்தில் அடைப்பதை நிறுத்தி, தனித்தனியாகப் பிரித்து விட்டனர் சிறை அதிகாரிகள்-அவர்களைத் துன்புறுத்துவது இலகுவாக இருக்கும் என்பதற்காக. அறப்போர் நடத்திக் கைது ஆன அஹிம்சாவாதிகளுக்கு அளிக்கப்பட்ட பணிகள் மண் தோண்டுவது, கல்லுடைப்பது, சாலை போடுவது ஆகியவை தாம். சத்தில்லாத உணவுகூடப் போதுமான அளவு அளிக்கப் பெறவில்லை. கை உறைந்து போகும் கடுங்குளிரில், போதுமான கம்பளியோ ஆடையோ இல்லாது, இந்தியக்

கைதிகளைச் சாலை வேலைகளுக்கு அழைத்துச் சென்று வதைத் தனர். இவ்வாறு அழைத்துச் சென்றபோது பிறர் போய் அவர்களைப் பார்க்கவோ அவர்களுடன் பேசவோ முடியாது. இவ்வாறு ஒரு திறந்த புல் வெளிக்கு வேலைக்காக அழைத்துச் சென்ற போது, இரட்டை நிமோனியாவால் பீடிக்கப்பட்டு, உயிர் நீத்தவன் தான் உத்தமத் தமிழன் சுவாமி நாகப்பன். (தேதி: ஜூலை 6, 1909). இரண்டு கம்பளிகள் தேவை யாக இருந்த குளிரில் அவைகளை அளிக்காததுடன், வயிற்றுக்குச் சாப்பாடும் போடாமல் (ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள சிறையிலிருந்து) வேலை செய்ய வேண்டிய முகாமிற்கு அழைத்துச் சென்றதனால்தான் அவனுக்கு நிமோனியா பீடித்தது. சிறைக் கொடுமைகளின் காரணமாக அவனு டைய உயிர் பலியானதை அறிந்து, காந்திஜி மிகவும் மனம் வருந்தினர். அவன் இறந்த சமயம், பிரிட்டிஷ் அரசாங் கத்தின் மூலமாக இந்தியர் சிக்கலில் ஒரு நல்ல முடிவு காண, இங்கிலாந்திற்குச் சென்ற வழியில் நடுக்கடலில் கப்பலில் அவர் பயணம் செய்து கொண்டிருந்தார். இத் தவப் புதல் வன்? சிறையின் விதிகளை நூல் பிசகாமல் அனுசரித்து வந்த துடன், தனக்கு அங்கு அளிக்கப்பட்ட வேலைகளைத் தளர் வின்றிச் செய்து வந்தவனுவான். இத்துணை கொடுமை களையும் இன்னல்களையும் அனுபவித்தும் சிறைக்குச் சென்ற தற்காக அவன் ஒரு நாளும் வருந்தியதில்லை. "சத்தியாக் ரகம் வெற்றி பெறவேண்டும்," "சத்தியாக்ரகம் வெற்றி பெறவேண்டும்"- இது தான் அவன் ஒவ்வொரு கணமும் விட்ட மூச்சு. நீண்டகாலமாகப் பிரிந்திருந்த ஒரு நண்பனை அரவணைத்துக்கொள்வது போன்று அவன் சாவை அர வணைத்துக் கொண்டான்.

இத்துணைக்கும் அந்த இளைஞனுக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனை பத்து நாள் கடுங்காவலே. பத்து நாள் சிறைவாசத்திற்குள்ளேயே உயிரைப் பலி கொடுக்கும் அளவிற்குச் சிறை அதிகாரிகள் அவனைக் கொடுமைப் படுத்தி விட்டனர்.

மருத்துவ சிகிச்சை

ஜூன் மாதம் 21-ஆம் தேதி தண்டிக்கப் பெற்றுச் சிறைக்குச் சென்ற நாகப்பன், ஜூன் 30-ஆம் தேதி யன்று சாகும் நிலையில் விடுதலையாகி வெளியே வந்து, ஜூலை 6-ஆம் தேதியன்று மடிந்தான். இவனை வேலை வாங்கிய சிறை வார்டர்கள் - ஆப்பிரிக்கர்கள்- இவனிடம் மிருகத்தன மாக நடந்து கொண்டிருக்கின்றனர். இவன் காய்ச்சலால்

விதமான துன்பத்தையும் சகித்துக் கொள்ளும் மனத் திண்மையும் பொறுமையும், நாட்டுப் பற்றும், சாவுக்கு அஞ்சாத மன உறுதியும் இருந்தன. இவைகளை விட ஒரு மனிதனுக்கு வேறு என்னதான் வேண்டும்?'' இவனைப் போன்ற மற்றொரு இளைஞன் தான் நாராயணசாமி.

நாராயணசாமி

ஆப்பிரிக்கத் தமிழன்

இந்தியாவிற்கு நாடு கடத்தப் பெற்றுத் தென்னப்பிரிக்காவிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தபோது, இழைக்கப் பெற்ற இன்னல்களால் இன்னுயிரைப் பலி கொடுத்தவன் ஏ. நராயணசாமி (தேதி: 16-10-1910) நாடு கடத்தப் பெற்றதில் இருந்த இன்னல்கள் அவன் உயிரைக் குடித்து விட்டதாக அண்ணலே ''தென்னப்பிரிக்க சத்தியாக்ரகம்'' என்ற தமது நூலில் தெளிவாகத் தீட்டியிருக்கிறார். நாராயணசாமி தென்னப்பிரிக்காவிலேயே பிறந்து வளர்ந்த தமிழன்; நாடு கடத்தப்பெற்று இந்தியாவிற்கு வந்த சமயத்தில் தவிர ஒரு போதும் அவன் இந்தியாவைப் பார்த்ததில்லை.

பயணத்தில் கொடுமை

இந்தியாவிற்கு நாடு கடத்தப்பெற்ற தென்னப்பிரிக்க இந்தியர்கள் அந்த உத்தரவை எதிர்த்து 1910-ஆம் ஆண்டு செப்டம்பர் மாத இறுதியில் ''எஸ். எஸ். சுல்தான்'' என்ற கப்பலில் தென்னப்பிரிக்காவிற்குத் திரும்பி வந்து கொண்டிருந்தனர். இவர்களை, காந்திஜியின் நண்பரும் வழக்கறிஞரும் இந்தியர் போராட்டத்தில் உறுதுணையாக இருந்தவருமான போலக் அழைத்து வந்தார். கப்பலில் வந்தவர்களில் நாராயணசாமி ஒருவன். இவர்கள் டர்பனில் இறங்குவதற்கு அனுமதி தர அரசு மறுத்து விட்டது. ஆகையால் நாராயணசாமியும் மற்றும் 31 இந்தியர்களும் போர்ட் எலிசபெத் துறைமுகத்திற்குப் பயணமானார்கள்; அங்கும் இறங்க அனுமதி கிடைக்கவில்லை; கேப் துறைமுகம் சென்றனர்; அங்கும் அனுமதி கிட்டவில்லை. ஆகையால் இந்தியாவிற்கே திரும்பிச் சென்று விடலாம் என்ற எண்ணத்துடன் மீண்டும் டர்பனுக்கே திரும்பி வந்தனர். நாராயணசாமியும் அவனுடன் வந்த பிற சத்தியாக்ரகிகளும் பூட்ஸ்களும் தொப்பிகளும் இல்லாமல் கப்பல்களில்

'டெக்' பயணிகளாக ஏற்றிவரப் பெற்றனர். அவர்களுடைய துணிமணிகள் எலிசபெத் துறைமுகத்தில் களவாடப் பெற்றுவிட்டதால், போதுமான துணிகள் இல்லாமல் குளிரில் நடுங்கிக்கொண்டே அவர்கள் பயணம் செய்ய வேண்டியதாயிற்று. கேப் டவுனில் வாழ்ந்த இந்தியர்கள் பெரிய மனதுடன் உதவியிராவிட்டால் அவர்கள் பட்டினியாகவே டர்பனுக்குத் திரும்ப நேர்ந்திருக்கும்; கப்பலில் வந்த சிலருக்கு அவர்கள் உடைகளும் அளித்து உதவியிருக்கின்றனர். இவ்வளவு வன்கொடுமையான ஒரு சூழ்நிலையில் இந்தச் சத்தியாக்ரகிகள் இரண்டு மாதகாலம் கப்பலில் காலத்தைக் கழிக்க வேண்டியதாய் இருந்தது. கடைசி முறையாக அவர்கள் டர்பனுக்கு வந்தபோது தென்னப் பிரிக்கத் தலைமை நீதிமன்றம், "அவர்களை நேடால் எல்லைக்கு வெளியே கொண்டு செல்ல வேண்டாம்" என்று ஆணையிட்டபோதிலும் அந்த ஆணைக்கு ஒரு புது வியாக்கியானங்கொடுத்து, உள்நாட்டு அமைச்சர் உத்தரவின் பேரில், அவர்களை டெல்கோவா வளை குடாவிற்குக் குடியேற்ற நாட்டு அதிகாரி அனுப்பி வைத்தார். அதன் பலன் - நாராயணசாமியின் சாவு தான். சில நாட்கள் அவன் பட்டினி கிடக்கவும் நேர்ந்தது. டெல்கோவா வளைகுடாவில் லூரென்கோமார்க்ஸ் என்ற இடத்தில் அவனுடைய சாவு ஏற்பட்டது. நாகப்பனுடைய சாவு சட்டப்பூர்வமான படுகொலை என்று வருணித்த காந்திஜி, நாராயணசாமியின் சாவும் அதே தான் என்று எழுதினார்.

சாது நாராயணன்

நியாயமான சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்து வந்த ஒரு "சாது" நாராயணசாமி. அவன் தென்னப் பிரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பெற்று இந்தியாவிற்குச் சென்றபோது, நல்ல உடல் நலத்துடனேயே சென்றிருக்கிறான். ஆனாலும் ஆறு வாரங்களாகக் கப்பல் பயணம் செய்ததில், அதுவும் பல்வேறு வெப்ப தட்ப நிலைகளில், பல்வேறு கப்பல்களை மாற்றிப் பயணம் செய்துகொண்டு வந்ததில், அவனுடைய உடல் நலம் சீர் கெட்டுப் போயிற்று. டேபிள் (Table Bay) வளை குடாவில் அவனும் பிற சத்தியாக்ரகிகளும் வந்த கப்பல் நிறுத்தப் பெற்றிருந்தபோது, அவர்களுடைய நண்பர்களோ வழக்கறிஞர்களோ அவர்களைக்

காண அனுமதிக்கப்படவில்லை. கடைசியில், தலைமை நீதி மன்றத்திற்கு மனுச் செய்து நீதி மன்றத்தின் உத்தரவைப் பெற்ற பின்னர்த் தான் காணமுடிந்தது.

பரிபூரண சத்யாக்ரகி

"சட்டத்தை மீறும்போது, இன்னல்கள் ஏற்பட்டால் அவைகளைப் பொருட்படுத்தக் கூடாது என்று சத்தியாக்ரகிகளுக்கு நாங்கள் அறிவுரை கூறி வருகிறோம். இதைப் பெருமையுடன் சத்தியாக்ரகிகளும் ஏற்றிருக்கிறார்கள். தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமானவைகளாக இருக்கும் சட்டங்களை வேண்டுமென்றே மீறும்போது அதனால் விளையக் கூடிய சாதாரணத் துன்பங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதில்லை. ஆனால் இந்த விஷயத்தில் (அதாவது நாராயணசாமி விஷயத்தில்) இருப்பதைப் போன்று ஒரு மரண தண்டனையாக முடியும் அளவுக்குத் துன்பந் தருவதைப் பொது மக்கள் ஒருபோதும் ஏற்க மாட்டார்கள் என்பதை நான் தைரியமாகக் கூறமுடியும்", என்று காந்திஜி கண்டிப்போடு எழுதினார். பின்னர் நாராயணசாமியைப் பாராட்டி "இந்தியன் ஓப்பினியனில்" எழுதியபோது காந்திஜி சொன்னார்: "எந்தப் பெரிய சத்தியாக்ரகிக்கும் சூட்டமுடியாத புகழ்மாலை நாராயணசாமிக்குப் பொருந்தும். அவன் ஒரு பரிபூரண சத்தியாக்ரகியாக இறந்தான். நாகப்பனையும் நாராயணசாமியையும் பெற்றெடுத்த தாய்மார்களுக்கு ஜே!"

மற்றும் பலர்

தென்னப்பிரிக்காவிற்கு காளட் இளவரசர் வந்தபோது, அவருக்கு அளிக்கப் பெற்ற வரவேற்பில் இந்தியர்கள் கலந்து கொள்ளாததற்கு நாராயணசாமியின் சாவும் ஒரு காரணமாகும். இவ்வாறு உயிர் நீத்தவர்கள் வள்ளியப்பன், நாகப்பன், நாராயணசாமி, ஆகிய மூவர் மட்டுமல்லர். வேறு சிலரும் வெவ்வேறு வகைகளில் மரணத்தைத் தழுவியிருக்கிறார்கள் என்று தெரிகிறது. உதாரணமாக செல்வன் என்பவனும் சூர்சை, பச்சையப்பன் என்ற மற்ற இருவரும் ஐரோப்பிய தோட்ட அதிபர்களால் சுடப்பட்டு மாண்டிருக்கிறார்கள். இவர்களுடைய குடும்பத்தினரைக் கண்டு ஆறுதல் கூறவேண்டும் என்ற ஆவலுடன் 1915 இல் அண்ணல் தரங்கம்பாடிக்கு வந்தார். ஆனால் இவர்களைப் பற்றிய விவரங்கள் சரிவரத் தெரியவில்லை. "தென்னப்பிரிக்க

சத்தியாக்ரகம்'' என்ற நூலிலும் அண்ணல் குறிப்பிடவில்லை. இந்த உயிர்த்தியாகிகளைத் தவிர, உயிருடன் இருந்து, பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்து காந்தியடிகளின் புனிதப் போராட்டத்திற்கு உதவிய தமிழர்கள் பலர். அவர்களில் தலையாயவர் தம்பி நாயுடு என்று கூறலாம்.

—:o:—

தம்பிநாயுடு

''தன்னலமற்ற தியாகம் செய்வதில், தம்பி நாயுடுவுக்கு ஈடான ஒருவரை இந்தியாவில் கூடக் காண்பது அரிது'' என்று காந்திஜி 1911-ஆம் ஆண்டில்-இந்தியாவில் தென்னப்பிரிக்கப் போராட்டத்தின் இறுதிக் கூட ஈடில்லை கட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது— ஒரு பொதுக் கூட்டத்தில் கூறினார்... தென் னப்பிரிக்காவில் இரண்டே இரண்டு பேரைத் தலை சிறந்த சத்தியாக்ரகிகள் என அவர் குறிப்பிடுவதுண்டு; ஒருவர் சோரப்ஜி என்ற பார்சி, மற்றொருவர் தம்பிநாயுடு என்ற தமிழர்.

1907-ஆம் ஆண்டில் கறுப்புச் சட்டத்திற்குப் பணிந்து, கைவிரல் ரேகைகளை அளித்து, தங்களைப் பதிவு செய்து கொள்ள மறுத்ததாக, அண்ணல் காந்தியுடன் உத்தரவிற்குப் தமிழர் தலைவரான தம்பிநாயுடு, சீனர் தலைவ பணிய மறுப்பு ரான குயின் ஆகியோர் மீது தனித்தனியாக வழக்குகள் தொடரப்பெற்றன. இவர்களை விசாரணை செய்த மாஜிஸ்ட்ரேட், 'மூவருமே டிரான்ஸ்வாலை விட்டு வெளியேற வேண்டுமென' ஆணை பிறப்பித் தார். ஆனால் இவர்கள் வெளியேறவில்லை; வெளியேற வேண்டிய நாள் 1908 ஜனவரி 10-ஆம் தேதியுடன் காலாவதியாகி விட்டது. ஆகையால், அன்று இவர்களு டைய வழக்கு மீண்டும் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. இவர்கள் மூவருமே, தாங்கள் பணிய மறுத்தது உண்மை என்பதை நீதிமன்றத்தில் ஒப்புக் கொண்டனர். அதன் பேரில் மூவருக்கும் இரண்டு மாதச் சாதாரணச் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்று மூவருமே ஒரு சிறை யில் வைக்கப் பெற்றனர்.

இவ்வாறு, தென்னப்பிரிக்கப் போராட்டத்தில் தீவிரப் பங்கு கொண்டு, முதல் அணியிலேயே சிறைக்குச் சென்று, புகழ்படைத்த மாவீரர்களில் வீரத்தமிழர் பல மொழிகள் தெரியும் தம்பிநாயுடு ஒருவராவார். தமிழகத்திலிருந்து மௌரிஷியசிற்குப் போய்க் குடியேறிய பெற்றோர்களுக்குப் பிறந்த தம்பிநாயுடு, வாடகை வண்டி காண்டிராக்டராகவும் ஒரு சாதாரண வணிகராகவும் இருந்தவர்; உயர்ந்த பட்டப்படிப்பு எதுவும் இல்லாதவர். ஆனாலும் அவருடைய விரிவான அனுபவமே அவருக்கு ஒரு ஆசானாக அமைந்து, ஆங்கிலத்தை நன்கு பேசவும் எழுதவும் கூடிய திறமையை அளித்தது. இது தவிர, அவருக்கு இந்தி, தெலுங்கு, மற்றும் ஓரிரு மொழிகளில் பேசவுந் தெரியும். அவர் நல்ல மதியூகி; எந்தக் கடுமையான சிக்கலையும் விரைவிலும் எளிதாகவும் புரிந்து கொள்ளக் கூடியவர். எந்தச் சிக்கலுக்கும் உடனடியாகத் தீர்வு கூறக்கூடிய அவருடைய ஆற்றலைக் கண்டு பலர் வியப்படைந்திருக்கிறார்கள். அவர் ஒரு முறை கூடத் தமது தாய் நாடாகிய பாரதத்தைப் பார்த்ததில்லையென்றாலும், அவருடைய நாட்டுப் பற்று எல்லையில்லாததாக இருந்தது. அவருடைய ஒவ்வொரு சொட்டு இரத்தத்திலும் நாட்டுப் பற்றுச் சுடர் விட்டுக் கொண்டிருந்தது என்று கூறலாம். டிரான்ஸ்வாலில் கறுப்புச் சட்டம் அமுலுக்கு வந்த போது, அதைக் கடுமையாக எதிர்த்தவர்களில் தம்பிநாயுடு ஒருவராவார். "நான் சாவேனேயொழிய இந்தச் சட்டத்திற்குப் பணியமாட்டேன்", என்று (தமிழில்) அவர் கூட்டங்களில் முழங்குவது வழக்கம். தென்னப்பிரிக்காவில் இந்தியர்களின் பொதுக் கூட்டங்களில் அவர் முக்கிய பங்கு கொள்வதுண்டு.

மறியல் அணிக்குத் தம்பி நாயுடுவே தலைவராக இருந்தார். சோர்வு என்பதையே அறியாத நாயுடு எவ்வளவு உறுதி வாய்ந்தவர் என்பதை எல்லாவற்றி அவருடைய முகமே எடுத்துக் காட்டிற்று. லும் முதன்மை எந்த வேலையானாலும் அதை அவர் இழிவாக கருதியதில்லை; அதில் சோடைபோனது மில்லை. பொதுக்கூட்டங்களுக்குத் தலைமை வகிப்பதாக இருந்தாலும், போராட்டத்தில் மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களை நடத்திச் செல்வதாக இருந்தாலும், சுமை தூக்கும் வேலை, சமையல் போன்ற வேலையாக இரு

லும் தம்பிநாயுடு முதன்மையாகத்தான் இருப்பார். டால்ஸ்டாய் பண்ணை அமைக்கப்பெற்ற போது அதன் சுகாதாரப் பொறுப்பும் ஜோகன்னஸ்பர்க் சென்று சாமான்கள் வாங்கிவரும் பொறுப்பும் அவரிடந்தான் ஒப்படைக்கப் பெற்றிருந்தன.

சிறைச்சாலைக்குச் சென்ற போது, தொடக்கத்தில் கைதிகள் எண்ணிக்கை குறைச்சலாக இருந்தது; அவர்கள் தாங்களே சமையல் செய்து கொள்வது பற்றி எண்ணவும் இல்லை, ஆனால் பின்னர் அதிகமான இந்தியர்கள் கைதாகி உள்ளே வந்தனர்; சிறையில் சமையலும் மோசமாக இருந்தது. ஆகையால் தாங்களே சமைத்துக் கொள்ள அவர்கள் அனுமதி பெற்றனர். இதில் சமையல் வேலையை அற்புதமாகச் செய்தவர் தம்பிநாயுடு; பரிமாறுவதில் பெயர் பெற்றவர் காந்திஜி. தம்பிநாயுடு சிறைச்சாலையில் சும்மாயிராமல் குசராத்தியும் தையல் கலையும் கற்றுக் கொண்டு வந்தார்.

சிறையில் சமையல்

கறுப்புச் சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்தில் காந்திஜியும் மற்றவர்களும் கைதாகிச் சிறையில் இருந்தபோது, ஆல்பர்ட் கார்ட்ரைட் என்ற பத்திரிகாசிரியரின் முயற்சியால் ஒரு சமரசம் ஏற்பட்டது. (1) இந்தியர்கள் தாங்களாகவே தங்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும், (2) பெரும்பாலான இந்தியர்கள் பதிவு செய்துகொண்ட பின்னர், அரசாங்கம் கறுப்புச் சட்டத்தை அகற்றிவிடும் என்பது இந்தச் சமரச உடன்பாடு. உடன்பாட்டு நகலை காந்திஜியிடம் கார்ட்ரைட் அளித்தபோது காந்திஜி தாம் கையொப்பமிட்டதுடன் குய்ன், தம்பிநாயுடு ஆகிய இருவரின் கையொப்பங்களையும் சேர்த்து வாங்கி அனுப்பினர் என்பதிலிருந்து தம்பி நாயுடுவுக்கு இந்தியர்களிடையே இருந்த செல்வாக்கு நன்கு தெரிகிறது.

இந்தியர் செல்வாக்கு

பின்னர் இந்தியர்களின் கூட்டங்களைக் கூட்டி, இந்தச் சமரச உடன்பாட்டை காந்திஜி விளக்கினர். அரசாங்கக் கட்டாயத்தின் பேரில் கைவிரல்ரேகைகளைப் பதிப்பதற்கும் இந்தியர்களே தாமாக முன் வந்து ரேகைகளை அளிப்பதற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துச் சொன்னர். சமரச உடன்பாட்டை இந்தியர்களுக்கு விளக்குவதில் தம்பி

மீர் ஆலம் தாக்குதல்

நாயுடு காந்திஜிக்குச் சலியாது உதவினர். இந்தியர்களைப் பதிவு செய்வதில், பதிவுத்துறை அதிகாரிகளுக்கும் நன்கு உதவி புரிந்தார். ஒப்பந்தத்தின்படி பதிவு அலுவலகத்திற்கு காந்திஜி சென்றபோது மீர் ஆலம் என்ற பட்டாணியன் மற்றும் சிலருடன் நின்று அவரை வழிமறித்து ஒரு பெரிய தடியால் அடித்துவிட்டான். ''ஹே, ராமா'' என்று கூறிக்கொண்டே அவர் கீழே சாய்ந்தார். இந்தச் சமயத்தில் காந்திஜியுடன் சென்றவர்களான யூசுப்மியான், தம்பிநாயுடு ஆகிய இருவரும்தான் மீர் ஆலமும் அவனுடைய தோழர்களும் மேலும் காந்திஜியைத் தாக்காமல் தடுத்தனர். இல்லாவிடில் அன்று காந்திஜிக்கு என்ன முடிவு ஏற்பட்டிருக்கும் என்பதைச் சொல்ல முடியாது. மீர் ஆலம் ஆத்திரமும் அவனுடைய சகாக்களின் கோபமும் இவர்கள் மீது திரும்பிவிட்டது; இவர்களுக்கும் நல்ல உதை கிடைத்தது.

நீண்டகால தண்டனை

1908 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தம்பி நாயுடு, கோ. கிருஷ்ணசாமி பிள்ளை, வீராசாமி நாயக்கர் ஆகியோரும் அண்ணல் காந்தியின் மூத்த குமாரராகிய ஹரிலால் காந்தி உள்படச் சில இந்தியர்களும் 'லைசென்ஸ்' இல்லாமல் தெருவில் விலை கூறி வாணிகம் செய்து கைதானார்கள். இவர்களில் தம்பி நாயுடுவும் கிருஷ்ணசாமி பிள்ளையும் ஹரிலால் காந்தியும் தங்களுடைய வழக்கறிஞரான காந்திஜியின் மூலமாக, தங்களுக்கு எவ்வளவு கடுமையான தண்டனை அளிக்கமுடியுமோ அதை அளிக்குமாறு நீதிமன்றத்தைக் கேட்டுக் கொண்டனர். ''இவர்கள் வெளியே வந்தாலும் மீண்டும் இதே குற்றத்தைச் செய்யத்தான் போகிறார்கள்; ஆகையால், நீண்டகால தண்டனை அளிப்பதன் மூலம் நீதிபதிக்கும் காலம் மிச்சமாகும், அவர்களுக்கும் உடல் நலம் பாதிக்கப்படாமல் இருக்கும்,'' என்று காந்திஜி தமது வாதத்தின் போது எடுத்துக் கூறினர். ஆனாலும் தம்பி நாயுடுவுக்கு மட்டும்தான் இரண்டு வாரக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. மற்ற இருவருக்கும் ஒரு வாரக் கடுங்காவல் தண்டனை தான் நீதிபதி அளித்தார். இதற்குப் பின்னர் சி. ரெங்கசாமி பிள்ளை, சுப. வீராசாமி நாயக்கர், இராமசாமி, எம். சிவலிங்கம்பிள்ளை மீதும் இதே குற்றம்சாட்டப் பெற்று ஒவ்வொருவருக்கும் ஒருவாரக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பெற்றது.

166679 தஞ (ம). 211 3168

இம்முறை தம்பி நாயுடு சிறைத் தண்டனை அடைந்த போது, அண்ணல் காந்தி அவரைப் பாராட்டி ''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில் ''இந்தியர்களில் ஒரு சிலரே துணிவில் தம்பி நாயுடுவை நெருங்கிவர இயலும். 'கைக்கும் வாய்க்கு மாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்' என்று கூறு மளவு அவர் மிகவும் ஏழையாக இருக்கிறார். அவருடைய மனைவியோ நிறை கர்ப்பிணியாக இருக்கிறார். இவைகளை யெல்லாம் பொருட்படுத்தாது சிறையிலிருந்து விடுதலை யானவுடன் அவர் மீண்டும் சிறைச் சாலைக்குத் திரும்பிச் சென்று விட்டார். சிறையிலும் அவர் நல்ல முறையில் நடந்து கொள்கிறார். சிறை அதிகாரிகளெல்லாம் அவரைப்பற்றி மன நிறைவு தெரிவிக்கிறார்கள். அதே சமயம் அவர் யாரையும் வீண்முகஸ்துதி செய்வதில்லை. மறியல் அணியின் தலைவர் என்ற முறையிலும் அவர் சிறந்த சாதுரியத்துடன் நடந்து கொண்டார். இவரைப் போன்ற வீரர்களை இந்திய சமு தாயம் உருவாக்கும் என்று நம்புகிறேன்,'' என்று எழுதி யிருந்தார்.

சீரிய வீரர்

அஞ்சாநெஞ்சம் படைத்த தம்பி நாயுடுவுக்குச் சோத னைக்கு மேல் சோதனை ஏற்பட்டுக் கொண்டே இருந்தது. அவருடைய மனைவி பிரசவித்தபோது, குழந்தை - ஆண் குழந்தை - இறந்து பிறந் தது. சிறையில் இருந்த தம்பிநாயுடுவுக்கு இது தெரியாது. இந்தப் பிரசவத்தைக் குறித்து காந்திஜி மிகவும் மனம் வருந்தினர். ''குழந்தையின் மரணத்திற்கு டிரான்ஸ்வால் அரசாங்கம் தான் பொறுப்பு'' என்று அவர் குற்றஞ்சாட்டினர். ''திருவாளர் நாயுடு சிறைக்குச் சென்றதுதான் இவ்வாறு குழந்தை இறந்து பிறந்ததற்குக் காரணமாய் இருக்கலாம். அவர் சிறைக்குச் சென்ற அதே நாளன்று நான் திருமதி நாயுடுவைப் பார்த் தேன். அந்த அம்மையார் மிகவும் பரிதாபமான நிலையில் இருந்தார். மற்றொரு பெண், அவ்வளவு துணிச்சலோடு, இரண்டாவது முறையாகத் தமது கணவன் சிறைக்குச் சென்றதைத் தாங்கியிருக்க மாட்டாள். அதுவும், திருமதி நாயுடு இருந்த நிலையில் எந்தப் பெண்ணிடமிருந்தும் அவ் வளவு துணிச்சலை நாம் எதிர்பார்க்க முடியாது'' என்று அவர் ''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில் புகழ்ந்து எழுதியிருந்தார். அதுமட்டுமல்ல, 1908 ஆகஸ்ட் 10-ஆம்

இறந்து பிறந்தது

தேதியன்று இந்தியர்களின் பொதுக் கூட்டமொன்றில் காந்திஜி பேசியபோது "நாயுடுவின் குழந்தையைக் கொன்ற பாவம் தளபதி ஸ்மட்ஸைத் தான் சாரும். நாயுடு சிறைக்குச் சென்றபோது அவருடைய மனைவி பிரசவ வேதனையில் இருந்தார். அவர் பிரசவித்தபோது, குழந்தை இறந்து பிறந்தது. தளபதி ஸ்மட்ஸ் இதற்குப் பொறுப்பாகா விட்டால் வேறு யார் தாம் இதற்குப் பொறுப்பாவார்கள்? ..... தளபதி ஸ்மட்ஸ் ஒரு கிறித்தவர். இந்த உலகத் திற்கு அப்பால் ஒரு உலகம் இருக்கிறது என்பதில் நம்பிக்கை யுள்ளவர். இவைகளுக்கெல்லாம் அங்கு அவர் பதில் கூற வேண்டியிருக்கும்," என்றும் கூறினர். இவ்வளவு துன்பங் கள் நேர்ந்திருந்தாலும் சிறையிலிருந்து வெளியே வந்த போது தம்பி நாயுடுவின் உள்ளத் துணிவு கூடியதே ஒழியக் குறையவில்லை. அவரைப் பாராட்டுவதற்காகத் தமிழர் களுடைய கூட்டம் ஒன்றும் இந்தியர்களுடைய கூட்டம் ஒன்றும் நடைபெற்றன.

அத்துமீறிய செயல்

1908 - செப்டம்பர் 26 ஆம் தேதியன்று, இந்தியர்க ளுடன் ஒரு வித உடன்பாடுங் காணுமலேயே ஸ்மட்ஸ் ஒரு புதுச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந் தார். இந்தச் சட்டம் அறிவிக்கப்பெற்ற முறை காந்திஜிக்கு மன நிறைவு அளிக்கவில்லை. இந்தியர்களில் யாரும் அவசரப்பட்டு இதன் படி எதுவும் செய்துவிடவேண்டாம் என்றும் முதலில் அரசிற் கும் இந்தியர்களுக்கும் ஒரு உடன்பாடு ஏற்படவேண்டுமென் றும் அவர் அறிவித்தார். ஹாஸ்கன் என்பவர் இவ்வித உடன் பாட்டிற்கான திட்டம் ஒன்றை அளித்து, ஆறு இந்தியர் களை இந்தியர்களின் சார்பாகப் பேச அழைத்திருந்தார். அவர்களில் தம்பி நாயுடுவும் ஒருவர். ஆனல் ஹாஸ்க னுக்கு காந்திஜி எழுதிய பதிலில் அவர் எழுப்பிய சில கோரிக்கைகளை ஸ்மட்ஸ் ஏற்காததால் இச்சமரச முயற்சி தோல்வியடைந்தது.

பழக்கம்

தம்பி நாயுடுவுக்கு அடிக்கடி காபி, தேயிலை பானங் கள் அருந்தும் பழக்கமும் புகைபிடிக்கும் பழக்கமும் உண்டு. ஒரு மணி நேரத்திற்கு ஒரு முறை அவருக் கு காபி அல்லது தேயிலை வேண்டும். விடைபெற்ற போது, அவர் சிறைக்குச் சென்ற இந்தப் பழக்கங்களையெல்லாம் நிலையாக உதறித்தள்ளி விட்டார். 'போராட்டம் நடை பெறும்

காலத்தில் மீசை வளர்ப்பதில்லை' யென்ற விரதமும் பூண்டார். ''இத்தகைய வீரர்கள் இந்தியர்களிடையே இருக்கும் வரை நமது போராட்டம் தொடர்ந்து நடை பெறுவதுடன், நமக்கு இறுதி வெற்றி கிடைப்பதும் உறுதி'' என்று காந்திஜி அவரைப் பாராட்டினார். சில அறப்போர் வீரர்கள் சிறைக்குள் திருட்டுத்தனமாகப் பலகாரங்களைக் கொண்டு வர ஏற்பாடு செய்து உண்பது ஒரு பழக்கமாக இருந்தது. இப்படிப்பட்ட ஏற்பாடுகளின் காரணமாக, கைதிகளாவதற்கு முன் புகை பிடிப்பது, புகையிலை போடுவது போன்ற பழக்கம் இல்லாதவர்கள் கூட இப்பழக்கங்களுக்கு உள்ளானார்கள். ''இப்படிப்பட்ட கைதிகள் தங்கள் செய்கைக்காகத் தாங்களே வெட்கப் படுவதுடன், நாயுடுவின் முன் மாதிரியைப் பின்பற்ற வேண்டும்'' என்று காந்திஜி அறிவுரை கூறினார்.

மிகத் துணிவு உள்ளவர்

பிற்காலத்தில் சர்தார் படேலின் வீரத்தைப் புகழ்ந்தது போன்று, தென்னப்பிரிக்காவில் இருந்த போது தம்பி நாயுடுவின் வீரத்தை காந்திஜி பன்முறை புகழ்ந்திருக்கிறார். தம்பி நாயுடுவைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்த போது, 'சிங்கம் போன்றவர்', 'அஞ்சாநெஞ்சம் படைத்தவர்' என்ற அடைமொழிகளை அவர் இணைத்துச் சொல்வது வழக்கம். 1909 டிசெம்பர் 6-ஆம் தேதியன்று, தென்னப்பிரிக்காவிலுள்ள அறப்போர் நிலவரத்தை விளக்கி, கோகலேக்கு எழுதிய கடிதத்தில் காந்திஜி கூறினார்; ''சிறையில் உள்ள கைதிகள் எல்லோரையும் விடத் தம்பி நாயுடு துணிவுள்ளவர், உறுதியுள்ளவர் என்று கூறலாம். இப்போராட்டத்தின் உணர்வை அவரைப் போன்று அறிந்த இந்தியர் வேறு எவராவது இருப்பாரா என்று எனக்குத் தெரியவில்லை. அவர் மௌரீஷியசில் பிறந்தவர்தான் என்றாலும், நம்மில் பெரும்பாலானோரை விடச் சிறந்த இந்தியர். அவர் தம்மை முழுதுமாகத் தியாகம் செய்து விட்டார். நான் பணிந்தாலும்.... அவர் தன்னந்தனியாக இருந்து எதிர்த்து, டிரான்ஸ்வால் சிறைகளில் ஒன்றில் சாகப் போவதாக எனக்குக் கண்டிப்பான கடிதம் ஒன்று எழுதியிருக்கிறார்''.

1910-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தம்பி நாயுடுவும் என். எஸ். படையாச்சி, என். கோபால், என். எஸ் பிள்ளை ஆகிய தமிழர்களும் மற்றும் சில இந்தியர்களும் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்தனர். அப்போது பொதுமக்கள் சார்பாக அவர்களைப் பாராட்டித் தந்தியோ கடிதமோ வரவில்லை; இதைக் கண்டு காந்திஜி மிகவும் மனம் வருந்தினர். ''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையிலும் எழுதினர். நாயுடு போன்ற முக்கியமான ஒருவர் வெளியே வந்தபோது இந்தியர் சமுதாயம் சாதாரணமாகக் காண்பிக்க வேண்டிய உபசரிப்பு மனோபாவங் கூடக் காண்பிக்காமல் இருந்தது வருந்தத்தக்கது என்று அவர் குறிப்பிட்டார்.

பாராட்டுவார் இல்லை

தம்பி நாயுடு டிப்க்ளூப் சிறையில் இருந்தபோது, சிறைக் கைதிகளுக்குப் போதுமான உணவு அளிக்காது ஓரளவு பட்டினி போட்டுவிட்டார்கள். இதைச் சிறை மருத்துவ அதிகாரிக்குத் தம்பி நாயுடு புகார் செய்தபோது அந்த அதிகாரி நாயுடுவைப் ''பொய்யர்'' என்று திட்டியது காந்திஜியின் மனதைப் புண்படுத்திவிட்டது. அந்த அதிகாரியைப் பற்றிப் புகார் செய்து, சிறைச்சாலைத் தலைமை அதிகாரிக்குக் கடிதம் எழுதினர். ''பிரிட்டிஷ் இந்தியர் சங்கம் தம்பி நாயுடுவை அஞ்சாநெஞ்சம் படைத்தவர்களில் ஒருவராகக் கருதுகிறது. அவர் பொய் சொல்லக் கூடிய வரல்ல என்பதும் உறுதி. சிறைக் கைதிகள் ஓரளவு பட்டினி கிடப்பதாக மருத்துவ அதிகாரிக்கு அவர் புகார் செய்தபோது, அந்த அதிகாரி அவருக்குப் பொய்யர் என்று பட்டங் கட்டியிருக்கிறார்,'' என்று காந்திஜி தமது கடிதத்தில் கூறினர்.

அதிகாரி எதிர்ப்பு

தம்பி நாயுடுவை வெளியில் வைத்திருக்கத் தென்னப்பிரிக்க அரசு அஞ்சியது என்று கூறலாம். அவர் விடுதலையாகி வெளியே வந்த உடனே போலீசார் அவரைக் கைது செய்து சிறைச்சாலைக்குக் கொண்டுபோவது வழக்கமாக இருந்தது. 1910 ஜூன் 6ஆம் தேதியன்று அவர் எட்டாவதுமுறையாகக் கைதானார். அன்று காலையில் தான் மூன்று மாதச் சிறைவாசத்தை முடித்துக்கொண்டு, தம்பி நாயுடுவின் குமாரர் விடுதலையாகி வெளியே வந்து தமது

போலீசார் அச்சம்

தந்தையாரைச் சந்தித்தார். ஆனால் தந்தையும் மகனும் ஒரு நாள் கூடச் சேர்ந்து வாழ அரசுக்குப் பொறுக்க வில்லை. அன்று பிற்பகலிலேயே தம்பி நாயுடுவைக் கைது செய்துவிட்டது! 1913-ஆம் ஆண்டில் நடைபெற்ற மாபெரும் அணிவகுப்பில் அக்டோபர் 30-ஆம் தேதியன்று நியூகேசில் பட்டணத்திலிருந்து புறப்பட்ட முந்நூறு பேர்களுக்குத் தம்பிநாயுடு தலைமைதாங்கி நடத்திச் சென்றார். அதே ஆண்டில் நவம்பர் 21-அம் தேதியன்று மாரிட்ஸ்பர்க்கில் வேலை நிறுத்தம் அறிவிக்கப் பெற்றபோது தம்பி நாயுடு கைதானார்.

இவ்வாறு இன்னல்களுக்கும் அடக்குமுறைக்கும் மத்தியிலும் அஞ்சாநெஞ்சம் படைத்த ஆண் சிங்கமாக இருந்த தம்பிநாயுடு, பிற்காலத்தில் தமிழர் நல சங்கத்தின் தலைவராகவும் ஆனார். அவரது கடைசிக் காலத்தில் அவர் ஜோகன்னஸ்பர்க் நகரிலேயே குடியிருந்தார். ஆனால், இவ்வளவு சிறப்புக்களுக்கும் மத்தியில் தம்பி நாயுடுவிடம் ஒரு குறை இருந்தது. "ஆத்திரமோ கோபமோ மட்டும் இல்லாதவராக இருந்திருந்தால் கச்சாலியா இல்லாத காலங்களில் இவரே இந்தியர்களின் தலைவராக இருந்திருப்பார். டிரான்ஸ்வால் போராட்டம் நடைபெற்ற போது இவர் கோபத்திற்கு இடங்கொடுக்கவில்லை. இவருடைய ஒப்பில்லாத குணங்கள் வைரங்களையும் வைடூரியங்களையும் போன்று ஒளிவிட்டுக் கொண்டிருந்தன. ஆனால் பிற்காலத்தில் அவருடைய கோபம் அவருடைய பரம எதிரியாக முடிந்தது. அவருடைய நல்ல குணங்களை அது இருட்டடித்து விட்டதாகக் கேள்விப்பட்டேன்", என்று "தென்னப்பிரிக்க சத்தியாக்ரகம்" என்ற நூலில் மகாத்மா குறிப்பிடுகிறார்.

கோபம் குறைந்தது

பி. கே. நாயுடு

பதிவுச் சான்று எதுவும் இல்லாது, டிரான்ஸ்வாலுக்குள் நுழையும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்த போது (1909 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்) வால்க்ஸ்ரஸ்ட் என்னும் இடத்தில் காந்திஜிக்கும் மற்றும் ஏழுபேருக்கும் பதிவுச் சான்றுகளைக் காண்பிக்க மறுத்ததற்காக மூன்று மாதக் கடுங்காவல் தண்டனை அளிக்கப்

இயக்கம் வேகமடைந்தது

பெற்றது. இந்தத் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்தபோது தான் தமிழர்களுக்குத் தம்முடைய நன்றியைத் தெரிவிப்பதற்காக, தமிழ் மொழியைக் காந்திஜி கற்கத் தொடங்கினார். காந்திஜியைக் கைது செய்ததனாலோ அவரைத் தண்டித்ததனாலோ இயக்கம் பாதிக்கப்படாது மேலும் மேலும் வேகமடைந்து கொண்டுதான் இருந்தது.

எப்போதும் தயார்

இந்தியர்கள் பின் வாங்காததைக் கண்ட அரசு, நிலைமையைச் சமாளிப்பதற்கு, இந்தியர்களை இந்தியாவிற்கே நாடு கடத்திவிடுவது என்று முடிவு செய்து நாடு கடத்திய போது, நாடு கடத்தும் உத்தரவு பெற்ற இந்தியர்கள், இந்தியாவிற்குச் செல்லத் தங்களுக்கு ஒரு வழிகாட்டி அவசியம் என்று கருதினார்கள். முதன் முதலாக நாடு கடத்தப் பட்ட குழுவை ஏற்றிச் சென்ற கப்பல் புறப்படுவதற்கு ஒரு சில மணி நேரமே இருந்தபோது அக் குழுவினர் தங்களுடன் ஒரு வழிகாட்டியையனுப்பி உதவுமாறு காந்திஜியைக் கேட்டுக் கொண்டனர். ஆகவே காந்திஜி தம்முடைய சக ஊழியர்களில் ஒருவராகிய பி. கே. நாயுடுவை அழைத்து ''இந்த ஏழைச் சகோதரர்களை இந்தியாவிற்கு அழைத்துச் செல்ல முடியுமா?'' என்று கேட்டார்.

பி. கே. நாயுடு: ஏன் முடியாது?

காந்திஜி :- ஆனால் கப்பல் இப்போது புறப்படப் போகிறது.

பி. கே. நாயுடு :- புறப்படட்டுமே?

காந்திஜி :- உங்களுடைய உடை, உணவு?

பி. கே. நாயுடு: உடையைப் பொறுத்தவரை, நான் இப்போது அணிந்திருக்கும் இந்த சூட்டே போதுமானது. உணவோ கப்பலில் போதுமானது கிடைக்கும்.

இவ்வளவு மன உறுதியோடு உடனடியாகப் புறப்படக்கூடிய ஒருவர் கிடைத்தது குறித்து காந்திஜிக்கு மிகவும் மகிழ்ச்சி. இதுதான் பி. கே. நாயுடுவின் இயல்பு.

''நான் ஒரு உண்மையான சிப்பாய் என்பதை மெய்ப்பிக்க முயலுவேன்'' என்று கூறிக்கொண்டே பி. கே. நாயுடு கப்பலில் ஏறினார்.

எவ்வளவு கடினமான வேலையையும் எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலும் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவராகப் பி. கே. நாயுடு இருந்தார். 'சத்தியத் காந்திஜியின் தின் மீது கொண்டிருந்த பக்தியை மெய்ப் பாராட்டு பிக்க, கொதிக்கும் எண்ணெயில் குதிக்க வேண்டுமென்று, பக்தர் சுதன்வரைக் கேட்டுக் கொண்ட போது, அவர் தயக்கமின்றிப் புன்முறுவலோடு அதில் குதித்தார். ஒவ்வொரு சத்தியாக்ரகியின் மனப்பாங்கும் இவ்வாறுதான் இருக்க வேண்டும்; பி. கே. நாயுடு இதற்குச் சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார்', என்று காந்திஜி அவரைப் பாராட்டி எழுதியிருக்கிறார். தென்னப்பிரிக்காவிலேயே பிறந்த பி. கே. நாயுடு தொடர்ந்து எல்லாச் சத்தியாக்கிரகங்களிலும் பங்கு கொண்டு, மீண்டும் மீண்டும் சிறை சென்று தாம் சிறந்த போராட்டவாதி என்பதை மெய்ப்பித்திருக்கிறார்; தமிழர் நல சங்க நிருவாகிகளில் ஒருவராகவும் பதவி வகித்திருக்கிறார்.

பி. கே. நாயுடுவுக்கு ஒரு சில சமயம் கோபம் வந்து, அவர் வன்முறைச் செயல்களில் ஈடுபட்டு விடுவதுண்டு. ஒரு முறை, சத்தியாக்ரகியான பி. கே. நாயுடு கோபத்தால் வுக்கும் மற்றொரு சென்னை வாசிக்குமிடையே வந்த சிறுமை பதிவு செய்வது சம்பந்தமாக வாய்ச் சண்டை தொடங்கி அது கைச் சண்டையாக முடிந்தது. சத்தியாக்ரகிகளின் பேச்சைக் கேட்காது, பதிவு அதிகாரி அலுவலகத்திற்குப் போய்ப் பதிவு செய்து கொண்டு வந்து விட்ட அந்தச் சென்னை வாசியைப் பி. கே. நாயுடு அடித்து விட்டார். பி. கே. நாயுடுவின் மீது தொடரப் பெற்ற வழக்கை விசாரணை செய்து மாஜிஸ்ட்ரேட், அவருக்குப் பத்து ரூபாய் அபராதம் விதித்தபோது அவருடைய நண்பர்கள் அதைச் செலுத்தி விட்டனர். ''இந்த வழக்கு, பதிவுசெய்து கொள்வது பற்றியதாதலின், நான் அபராதம் விதியாது, சிறைத் தண்டனை விதித்திருக்க வேண்டும்'', என்று மாஜிஸ்ட்ரேட்டும் வருத்தத்துடன் கூறினார். இவ்வாறு பி. கே. நாயுடு ஒருவரைத் தாக்கிய

தும் சிறைத் தண்டனை பெருமல் அபராதம் செலுத்திய தும் காந்திஜிக்குப் பெரும் வருத்தத்தை ஏற்படுத்தின. ''நாயுடுவின் செயலுக்கு நான் அனுதாபப்படவில்லை. இத்தகைய செயல்களால் நமக்குத் தான் தீங்கு. வன் முறைக்கு நமது போராட்டத்தில் இடமே இல்லை. விடுதலை பெறுவதற்காக அபராதத்தைச் செலுத்துவது இன்னும் மோசமானது. இந்த அபராதத்தைச் செலுத்திய நண்பர் களுக்கும் அது அவமானந்தான். வன்முறை மூலம் பிறர் பதிவு செய்து கொள்வதைத் தடுக்க நினைப்பவர்கள், இந்த மாபெரும் சமய அரசியல் போராட்டத்தின் தன்மையைப் புரிந்து கொள்ளாதவர்களாவர்'', என்று (''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில்) காந்திஜி கண்டித்து எழுதி னார். கொள்கையை மீறுவோர் நண்பராயினும் காந்திஜி எவ்வளவு கண்டிப்பாயிருந்திருக்கிறார் என்பது இதிலிருந்து நன்கு தெரியவரும்.

> ''அழிவி னவைநீக்கி ஆறுய்த்து ; அழிவின் கண் அல்லல் உழப்பதாம் நட்பு''

(தவறான வழிகளில் செல்லும் போது தடுத்து நல்ல வழி களில் நடக்கச் செய்து, துன்பம் வந்த போது உடன் இருந்து அதை அனுபவிப்பதே நட்பு) என்பது தானே குறள்?

போராட்டத்தில் பங்கு

இந்தியர் போராட்டத்தின் தொடக்க காலத்திலிருந்தே அதில் பங்கு கொண்டு வந்தவர் பி. கே. நாயுடு. 1908 ஜனவரியில் ஆசிய பதிவுச் சட்டத்தின் படி பதிவுச் சான்றுகளைப் பெறாத குற்றத்திற் காக, காந்திஜிக்கு இரண்டு மாதச் சாதாரணச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்ற அன்றே சி. எம். பிள்ளை முதலிய ஐவர் அவருடன் சிறைக்குச் சென்றனர். பி. கே. நாயுடு அவர்களில் ஒருவராவார். தம்பி நாயுடுகூட நான்கு நாட்களுக்குப் பின்னர்த் தான் காந்திஜி இருந்த சிறைக்குக் கொண்டுவரப் பெற்றார்.

முடிவெட்டுவதில் நிபுணர்

முடிவெட்டுங் கலையில் பி. கே. நாயுடு அற்புதமான திறமை பெற்றவர். இக்கலையில் காந்திஜியை விடப் பி. கே. நாயுடு தான் கை தேர்ந்தவர் என் பதை முன்னவரே ஒப்புக் கொண்டிருக்கிறார். சிறைச்சாலையில் இருந்த காலத்தில் இவ்விரு வரும் நாள்தோறும் சுமார் இரண்டு மணி நேரம் இப்பணியில் ஈடுபட்டுப் பலருக்கு முடிவெட்டியிருக்

கிறார்கள். இவர்களே இப்பணியில் ஈடுபடுவதைக் கண்ட சாதாரணத் தொண்டர்கள் இக்கலையைக் கற்குங் கருத்து இல்லாமல் இருப்பார்களோ ?

கண்களை உறுத்தியவர்

டிரான்ஸ்வால் அரசின் கண்களை உறுத்திய இந்தியத் தலைவர்களுள் பி. கே. நாயுடு ஒருவராவார். உதாரணமாக 1910-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் அவர் சிறையிலிருந்து விடுதலையாகி வெளியே வந்த உடனே தனது குடும்பத்தைப் போய்ப் பார்க்கக்கூட அவகாசம் அளிக்காது மறுபடியும் அவரைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்து மூன்று மாதக் கடுங் காவல் தண்டனை அளித்து விட்டுத்தான் அரசாங்கம் வேறு வேலை பார்த்தது! இத்துணைக்கும் போயர் யுத்தத்தில் இந்திய அம்புலன்ஸ் படையில் தொண்டாற்றி, அவர் போர்ப் பதக்கமும் பெற்றிருந்தார். அவர் சிறைக்குச் சென்றபோது காந்திஜிக்கும் இராயப்பனுடைய தாயாருக்கும் எழுதிய கடிதங்கள் அவருடைய அஞ்சாநெஞ்சத்திற்குச் சான்று கூறின. இக்கடிதங்களை ஒரு பொதுக் கூட்டத்தில் காந்திஜி படித்துக் காண்பித்து, நாயுடுவின் முன்னுதாரணத்தை மற்றவர்களும் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இம்முறை அவருடன் தண்டனை அனுபவித்துச் சிறையிலிருந்து வெளிவந்தவர்கள், ராஜு நாயுடு என்ற தொண்டரும் காந்திஜியின் புதல்வரான மணிலால் காந்தியுமாவர்.

காந்திஜி நம்பிக்கை

பி. கே. நாயுடுவின் நேர்மையையும் நியாய உணர்வையும் காந்திஜி எந்த அளவு போற்றிப் பாராட்டியிருக்கிறார் என்பது ஒரு நிகழ்ச்சியால் தெளிவாகத் தெரிகிறது. பி. கே. நாயுடுவுக்கு ஆங்கிலம் அதிகம் தெரியாதாதலால், ஆங்கிலத்தில் எழுதவேண்டியவைகளுக்குப் பி. எஸ். ஐயர் என்பவரின் உதவியை அவர் நாடுவது வழக்கம். டர்பனிலிருந்து வெளியான ''ஆப்ரிகன் கிராணிகிள்'' என்ற பத்திரிகையின் ஆசிரியரும் சொந்தக்காரரும் ஆன பி. எஸ். ஐயர் மூன்று பவுன் வரியை எதிர்த்துத் தீவிரமாகப் போராடியவர்களில் ஒருவராவார். இதற்காகவென்றே 'மூன்று பவுன் எதிர்ப்பு லீக்' என்ற பெயரில் ஒரு சங்கத்தைத் தோற்றுவித்து, அதற்கு அவர் கௌரவச் செயலாளராகவும் பணியாற்றினார். 'தி நேடால் மெர்க்

குரி', 'பிரிட்டோரியா நியூஸ்' என்ற பெயரில் நடை பெற்ற ஐரோப்பியர்களின் பத்திரிகைகள் ஆதரவையும் இப்போராட்டத்திற்கு ஆதரவாக அவரால் திருப்ப முடிந் தது. ஆயினும் காந்திஜிக்குப் பி. எஸ். ஐயர் நாணயத்தின் மீது நம்பிக்கை இல்லை. அவர் தமது ஆங்கில ஞானத் தைக் கொண்டு பி. கே. நாயுடுவை ஏமாற்றுகிறார் என்பது அவருடைய எண்ணம். ஆகையால் ஐயரைப் பற்றி எச்சரிக்கையாக இருக்குமாறு அவர் நாயுடுவுக்கு ஒரு கடிதம் எழுதினார். இது குறித்துப் போலக்கிற்கு எழுதிய கடிதத்தில் அவர் கூறியிருந்ததாவது:

''மூன்று பவுன் வரி சம்பந்தமாக எழுதப் பெற்ற ஒரு மனுவின் நகலைத் திருத்திக் கொடுப்பதற்காக நாயுடு என்னிடம் அனுப்பியிருக்கிறார். இந்த மனுவை நாயுடுவோ அல்லது ஐயரோ தயாரித்திருக்க ஐயர் மீது அவநம்பிக்கை லாம். உங்களுடைய கடிதமொன்றில், நீங்கள் எவ்வளவோ கூறியிருந்தும், நான் இன்னும் ஐயரின் நல்லெண்ணத்தில் மிகவும் அவநம்பிக்கையுள்ளவ னாகவே இருக்கிறேன். அவர் நேரத்திற்கு ஏற்றபடி நடந்து கொள்பவர். இன்று ஒன்றை எழுதுவார். இதற்கு நேர் மாறான கருத்தை நாளை எழுதுவார். அவர் முற்றிலும் யோக்கியப் பொறுப்பில்லாத மனிதர். பொது விவகாரம் எதிலும் அவர் ஈடுபடுவதைக் காண எனக்கே மிகுந்த அச்சமாக இருக்கிறது. என்னை அவர் புகழத் தொடங்கி விட்டாலோ எனக்கு நடுக்கமே வந்து விடுகிறது. நாலு பேருக்கு முன்னால் அவர் என்னைத் திட்டும்போதும் பகிரங்க மாக என்னை எதிர்க்கும் போதும் நான் அவரை அதிகம் நேசிக்கிறேன். அப்போதுதான் அவரது பொது வேலை களில் அவர் என்னுடைய உதவியை நாடமாட்டார் என் பது எனக்குத் தெரியும். தாம் ஒரு பிராமணர், தமக்கு ஆங்கில அறிவு (நாயுடுவை விட) அதிகம் என்பதையெல் லாம் வைத்து அவர் பி. கே. நாயுடுவை இப்போது ஏமாற்றிக் கொண்டிருக்கிறார். நான் பி. கே. நாயுடு மீது அனுதாபப் படுகிறேன். ஏனென்றால், குணத்தில் அவர் ஐயரைவிட ஈடில்லாத அளவு உயர்ந்தவர்.''

1913 நவம்பர் 6 ஆம் தேதியன்று காந்திஜி தலைமை வகித்து நடத்திச் சென்ற அணி உண்மையிலேயே மாபெரும் அணிதான். அதில் 2037 ஆண்களும் 127 பெண்களும்

57 குழந்தைகளும் இருந்தார்கள். இப் பெரிய அணியின் யாத்திரையில் பி. கே. நாயுடுவின் சேவை பெருமை மிக்கதாக இருந்தது. முதல் நாளன்று இரவு, அணியில் வந்தவர்கள் அலுத்துப்போய் (டிரான்ஸ்வால் எல்லையில் உள்ள நகரான வால்க்ஸ் ரஸ்டிற்கு சுமார் எட்டு மைல் தூரத்தில் உள்ள) பாம்ஸ்பார்டு என்ற இடத்தில் தூங்கிக் கொண்டு இருந்தனர். காந்திஜி வேலைகளையெல்லாம் முடித்துவிட்டு, தாமும் தூங்குவதற்கு ஆயத்தமானர். அந்தச் சமயத்தில் ஒரு ஐரோப்பியப் போலீசு அதிகாரி கையில் ஒரு விளக்கை ஏந்திக் கொண்டு அவரிடம் வந்து ''உங்களை நான் கைது செய்திருக்கிறேன்'' என்று கூறினர். உடனே, காந்திஜி, தம் பக்கத்தில் தூங்கிக்கொண்டிருந்த பி. கே. நாயுடுவை எழுப்பி, தாம் கைதாகியிருப்பதால் அடுத்தாற் போல் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டுமென்பதை எடுத்துச் சொன்னர். பி. கே. நாயுடு அஞ்சவில்லை. காந்திஜி கைதான பின் அணியை அவர் நடத்திச் சென்றார். காந்திஜி அம்முறை, தமது சொந்த சாமீன் பேரில் விடுதலையாகித் திரும்பி வந்து அணியின் பொறுப்பை ஏற்றார். மறுபடியும் 8-ஆம் தேதியன்று, காந்திஜியும் பி. கே. நாயுடுவும் மற்றும் நால்வரும் கைது செய்யப்பட்டபோது, காந்திஜி மட்டும் நேரில் இருந்து காரியங்களைக் கவனிக்கவேண்டியிருந்ததால் மீண்டும் சொந்த சாமீனில் விடுவிக்கப் பெற்றார்; பி. கே. நாயுடு சிறைக்குச் சென்றார்.

அஞ்சாத சேவை

ஜோசப் இராயப்பன்

இந்தியர்கள் தாங்கள் பெற்ற எழுத்துச் சான்றுகளை (சர்ட்டிபிகேட்டுகளை)ச் சொக்கப்பனை கொளுத்தியபின், கறுப்புச் சட்டம் மட்டுமல்லாது குடியேற்றச் சட்டத்திற்கும் சேர்த்து அறப்போர் நடத்து வதென்று முடிவு செய்தனர். ஆகவே, முதலில், படித்த இந்தியர்கள் டிரான்ஸ்வாலுக்குள் நுழையலாமா என்பதை அவர்கள் சோதித்துப் பார்க்க விரும்பினர்கள். முதன் முதலில், சோரப்ஜி ஷபூர்ஜி அட்ஜானியா ('சுத்தத் தங்கம்' என்று காந்திஜியால் பாராட்டப்பெற்ற பார்சி இளைஞர்; தென்னப்பிரிக்கப் போராட்டத்தில் பெரும்பங்கு கொண்டு முதல் தர

உள்ளே நுழையலாமா?

மான அறப்போர்வாதியாக விளங்கியவர்) அரசாங்கத் திற்கு முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு, டிரான்ஸ்வாலுக் குள் நுழைந்தபோது ஜோகன்னஸ்பர்க் சென்றவரை யாருந்தடை செய்யவில்லை. (ஆயினும் பின்னர், அவர் ஏழு நாட்களுக்குள் டிரான்ஸ்வாலை விட்டு வெளியேற வேண்டுமென்று ஆணை பிறப்பித்தனர். அந்த ஆணைக் குப் பணிய அவர் மறுக்கவே அவர் மீது வழக்குத் தொடர்ந்து, ஒரு மாதக் கடுங்காவல் தண்டனையும் விதித் தனர்.)

அரசாங்கத்தின் காலங்கடத்தும் தந்திரத்தைக் கண்ட இந்தியர்கள் வாளா இருக்கவில்லை. சேத் தாவுத் முகமது தலைமையின் கீழ் சத்தியாக்ரகிகள் படை

அனுமதிபெறு வாணிகம்

ஒன்று நேடாலில் எல்லைக்கு வந்து, டிரான்ஸ் வாலுக்குள் நுழைந்தது. இவர்களை டிரான்ஸ் வால் போலீசார் கைது செய்து மாஜிஸ்ட் ரேட் முன் கொண்டு வந்தபோது ஏழு நாட்களுக்குள் இவர்கள் டிரான்வாலைவிட்டு வெளியேற வேண்டும் என்று மாஜிஸ்ட்ரேட் ஆணை பிறப்பித்தார். அவர்கள் அந்த ஆணைக்குப் பணியாததால் மீண்டும் கைது செய்யப்பட்டு, டிரான்ஸ்வாலுக்கு வெளியே அனுப்பப்பட்டனர். ஆனால், அவர்கள் சீலைக்கவில்லை; மீண்டும் டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்தனர். இம்முறை அரசு அவர்களைக் கைது செய்து, அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்ததில் மாஜிஸ்ட்ரேட் அவர்களைத் தண்டிக்காமல் விடவில்லை. இதைக் கண்டு டிரான்ஸ்வால் இந்தியர்களின் உணர்ச்சி பெருக்கெடுத் தது; தியாகத்திற்குத் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொள்வதற்காகப் பலர் சிறைக்குச் செல்ல விரும்பினர் கள்; அவர்கள் சிறைக்குச் செல்வதற்கு ஒரு வழியும் இருந்தது. தெருவில் விலை கூவி வாணிகம் செய்வதற்கு, அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற்றுக வேண்டும். ஆகவே, அவர்கள் அனுமதிபெறுமல் தெருவில் வாணிகம் செய்து, சிறைக்குச் சென்றார்கள். இவ்வாறு சிறைக்குச் சென்றவர்களில் ஒருவர் தான் ஜோசப் இராயப்பன்.

குறைந்த பேச்சும் நிறைந்த செயல் திறனும் வாய்ந்த ஜோசப் இராயப்பன் பி.ஏ., எல்.எல்.பி. (காண்டாப்) நேடாலில் தமிழ் ஓப்பந்தக் கூலிகளாய் இருந்தவர்களுக்குப் பிறந்து, இலண்டனில் போய் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்

தில் பி. ஏ. பட்டமும் லிங்கன்ஸ் இன்னில் பாரிஸ்டர் பட்டமும் பெற்றவராவார். மகாத்மா காந்தியைத் தவிர தென்னப்பிரிக்காவில் இந்திய சமூகத்தில் நிறைந்த செயல் திறன் பாரிஸ்டர் பட்டம் பெற்றவர்கள் மூன்று அல்லது நான்கு பேர்கள் தாம். அவர் களில் இவர் ஒருவராக இருந்தும், வழக்கறிஞர் தொழில் செய்து பணம் திரட்டுவதை நோக்கமாகக் கொள்ளாமல், அறப்போரில் ஈடுபட்டுப் பன்முறை நாடு கடத்தப்பட்டும் சிறைக்குச் சென்றும் எல்லையில்லாத் தொல்லைகளை மகிழ்ச்சியுடன் அனுபவித்திருக்கிறார். தென் ஆப்பிரிக்காவிலேயே பிறந்து தென்னப்பிரிக்காவிலேயே ஐரோப்பிய முறையில் (வீட்டிற்குள்ளேயே பூட்ஸ் போட்டுக் கொண்டுதான் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்வார்) வீட்டில் ஆங்கிலம் பேசி வளர்ந்த அவரை, ஒரு இந்தியர் என்று கூறுவதைக் காட்டிலும், தென்னப் பிரிக்க வாசி என்று அதிகங் கூறலாம். ஆனாலும் இந்திய நாட்டுப் பற்றிலும் இந்தியர்கள் மீது கொண்ட சகோதரத் துவ உணர்ச்சியிலும் அவர் யாருக்கும் சளைத்தவரல்லர்.

1906-ஆம் ஆண்டில் அவர் இங்கிலாந்தில் மாணவ ராக இருந்தபோதே தென்னப்பிரிக்க இந்தியர் போராட் டத்திற்கு ஆதரவான பணிகளில் பெரும்பங்கு படிக்கும் கொண்டார். அவரும் இரத்தினம் பத்தர் போதே சேவை என்ற மற்றொரு தமிழ் மாணவரும் மற்றும் மூன்று தென்னப்பிரிக்க இந்திய மாணவர் களும் சேர்ந்து ஆசியர்கள் (சட்டத்திருத்த) அவசரச் சட்டத்தை எதிர்த்து அப்போது பிரிட்டன் குடியேற்ற நாட்டு அமைச்சராக இருந்த எல்ஜின் பிரபுவுக்கு ஒரு மனுச் செய்து கொண்டார்கள். காந்திஜி தலைமையின் கீழ் டிரான்ஸ்வால் இந்தியர் தூதுக்குழு இங்கிலாந்திற் குச் சென்றிருந்தபோது இராயப்பனும் இரத்தினம் பத்தரும் அக்குழுவின் பணிகளில் தங்களால் இயன்ற அளவில் ஒத்துழைத்து உதவி புரிந்தார்கள்.

ஏழையான இராயப்பன் இங்கிலாந்தில் பணவசதியில் லாது பெருந் துயரடைந்திருக்கிறார். 1908-இல் அவர் பண வசதியில்லாமல் சிரமப்படுகிறார் என்பதை அறிந்த போலக் பிரிட்டிஷ் இந்தியர் சங்கம் தமக்கு வெகுமதியாக அளித்த ஐம்பது பவுனையும் அவருக்கு அனுப்பி வைத்தார். ஆயி

னும் போதுமான பணம் இல்லாததால், படிப்பு முடிந்தும் இலண்டனிலிருந்து நீண்டகாலமாக டிரான்ஸ்வாலுக்குத் திரும்பிவர அவரால் இயலாது இருந்தது. ஆகையால் டிரான்ஸ்வாலில் அவருக்கு ஓர் உதவி நிதி திரட்டி அனுப்பப்பெற்றது. அதன் பின் 1909-இல் அவர் திரும்பி வந்தார்.

சிறைத் தண்டனை

இவ்வாறு திரும்பி வந்தபின் தமது சொந்த ஊரான டர்பனுக்குச் சென்று வயது வந்த தாயுடனும் மற்ற உறவினர்களுடனும் அவர் தங்கியிருந்த ஒரு சில நாட்களிலேயே நாட்டுப் பணி அவரை அழைத்துவிட்டது. 1909-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம், காந்திஜி தலைமையின் கீழ் பாரிஸ்டர் ஜோசப் இராயப்பனும் இந்தியப் பள்ளியின் ஆசிரியர் சாமுவேல் ஜோசப்பும் மொழி பெயர்ப்பாளரும் குமாஸ்தாவும் ஆன டேவிட் ஆண்ட்ரூவும் மணிலால் காந்தியும் மற்றும் பலரும் டிரான்ஸ்வால் எல்லையைக் கடந்து உள்ளே நுழைந்தனர். அரசு கைது செய்யவில்லையாதலால், இவர்கள் ஜோகன்னஸ்பர்க் நகரை அடைந்தனர். அங்கு மேற்கண்ட நால்வருக்கும் (இராயப்பன், ஜோசப், ஆண்ட்ரு, மணிலால்) ஒரு விருந்து அளிக்கப் பெற்றது. இந்த விருந்தில் நாற்பது பொறுப்பான ஐரோப்பிய ஆண், பெண்கள் கலந்து கொண்டனர் என்பதும் அவர்களில் சிலர் மேற்கண்ட நால்வரையும் பற்றிப் பாராட்டிப் பேசினர் என்பதும் குறிப்பிடத் தக்கவையாகும். இதன் பின்னர் மேற்கண்ட நால்வரும் பழக்கூடையைத் தூக்கி வீலூகூவி (லூசென்சில்லாமல்) விற்கத் தொடங்கிவிட்டனர். அரசாங்கத்தினர் ஜோசப் இராயப்பன், ஆண்ட்ரு, சாமுவேல் ஜோசப் ஆகிய மூவரையும் கைது செய்து, டிரான்ஸ்வாலுக்கு வெளியே "நாடு கடத்தினர்". இம்மூவரும் மீண்டும் டிரான்ஸ்வாலில் நுழைந்தபோது இவர்களைப் போலீசார் கைது செய்து வழக்குத் தொடர்ந்ததில், மாஜிஸ்ட்ரேட், ஒவ்வொருவருக்கும் மூன்று மாதச் சிறைத் தண்டனை அளித்தார். இவ்வாறு பாரிஸ்டர் இராயப்பன் சிறைக்குச் சென்றபோது ஐரோப்பியர்கள் கூட வருந்தினர்.

அந்த இளம் பருவத்திலேயே இராயப்பன் சர்வோதயத் தத்துவத்தை நன்கு புரிந்து கொண்டார் என்றே கூறவேண்டும். உடலால் உழைத்தே உயிர் வாழ்வதென்

றும் அதுவும் ஏழையாகவே வாழ்வதென்றும் முடிவு செய்து அற்புதமான முறையில் எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவருக்கு எந்த வேலையும் கேவல மானதல்ல. உடல்வேலை, மூளைவேலை என்று அவர் வேறுபாடு பாராட்டியதில்லை. மக்கள் கூட்டமுள்ள மார்க்கெட்டுகளில் மூட்டை முடிச்சுகளைத் தலையில் சுமந்து கொண்டு அவர் நடந்து செல்வது வழக்கம். அவர் விறகு வெட்டுவார்; துணி துவைப்பார்; ஒரு சாதாரணத் தொழிலாளி போன்று இரயில்வே நிலையங்களில் பணிபுரிவார். இரயில் வாகனங்களிலிருந்து பாரங்களை இறக்கி அவைகளை வண்டிகளில் ஏற்றுவார். அவருடைய வேலைத் திறமைக்கு எத்தனையோ சான்றுகளைக் கூறமுடியும். ஆனால் ஒன்றை மட்டும் எடுத்துக் கொள்வோம். 1910-ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவர் விடுதலையாகி வந்த அன்றே போனிக்ஸ் பண்ணைக்குச் சென்று பண்ணை வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு விட்டார். அதற்கும் அவர் நாடு கடத்தப்படுவதற்கும் இடையே இருந்த சுமார் ஒரு வார காலத்தில் மரம் வெட்டுவது, அறுப்பது, இரயில் வாகன்களிலிருந்து சாமான்களை வண்டி களில் ஏற்றி அனுப்புவது, தண்ணீர் இறைப்பது, சலவை செய்வது ஆகிய எல்லா வேலைகளையும் மற்றும் சில இளைஞர்களைச் சேர்த்துக் கொண்டு முடித்து விட்டார் என்றால் இத்தனை வேலைகளில அவருக்கிருந்த ஆர்வத்தை யும் திறனையும் நாம் எளிதில் காணலாம். முதலில் இராயப்பன் இரயிலில் முதல் வகுப்பிலேயே பயணம் செய்து வந்தார். ஒரு முறை இராயப்பன், காந்திஜியிடம், "நான் மூன்றாவது வகுப்பில் பயணம் செய்ய வேண்டுமா?" என்று கேட்டார். அதற்கு காந்திஜி, "நீங்கள் முதல் வகுப்பிலோ இரண்டாம் வகுப்பிலோ பயணம் செய்தால், மற்றவர்கள் மூன்றும் வகுப்பில் பயணம் செய்ய வேண்டு மென்று நான் எவ்வாறு கூறமுடியும்? உங்களுடைய பாரிஸ்டர் பட்டத்தைச் சிறையில் யார் மதிக்கப் போகிறார் கள்?" என்று பதில் அளித்தார். இதன் பின்னர் இராயப்பன் மூன்றும் வகுப்பிலேயே பயணம் செய்து வந்தார்.

சர்வோதய வாதி

பாரிஸ்டர் பட்டம் பெற்றவராக இருந்தாலும், இந்திய ராகப் பிறந்த குற்றத்திற்காக, இராயப்பன் எத்தனையோ

இன்னல்களுக்கு ஆளாக வேண்டியதாயிற்று. அவரையும் அவருடன் இருந்த மற்றும் மூன்று இந்தியக் கைதிகளையும், முதலில் அவர்களை அடைத்த சிறையிலிருந்து மூப்க்ளுப் சிறைக்குக் கொண்டு சென்ற போது, ஒரு குப்பை வண்டியிலேயே ஏற்றிச் சென்றார்கள்! அத்துடன் காலில் செருப்போ தலையில் தொப்பியோ அல்லது குல்லாயோ இல்லாது இரண்டு மைல் தூரம் நடக்கவும் வைத்து விட்டனர். அது மட்டுமல்ல. அன்று காலை அவர்களுக்கு எந்தவிதமான உணவும் அளிக்கவில்லை. சிறையில் திருட்டு, கொலைக் குற்றவாளிகளை நடத்திய முறையிலேயே இராயப்பன் போன்ற பாரிஸ்டர்களையும் நடத்திக் கொடுமைக்குள்ளாக்கினர்கள். குளிர்ச்சியான கல்தரையில் செருப்பு இன்றி அவரையும் அவர் சகாக்களையும் நிற்க வைத்தார்கள். வாடைக்காற்று வலுவோடு அடிக்கும் பாதையில் ஆடையின்றி நிற்க வைத்தார்கள். கையில் விலங்கிட்டார்கள்; சில வார்டர்கள் அவர்களை இன்னும் காட்டுமிராண்டித்தனமாகவும் நடத்தினர்கள். ஆயினும் இராயப்பனை அவருடைய சகாக்களோ மேலும் அதிக உறுதியும் வைராக்கியமும் கொண்டார்களே தவிர, இந்தச் சோதனைகளில் தோல்வி அடைந்து விடவில்லை.

சிறைச்சாலை இன்னல்கள்

இதன் பின்னர் இராயப்பன் மறுபடியும் டர்பன் சென்று தாயாரையும் உறவினர்களையும் பார்த்துவிட்டு வந்து போராட்டத்தில் இறங்கி, இரண்டாவது முறையாக ஆறு வாரக் கடுங்காவல் தண்டனை அடைந்தார். அவருடைய சகாக்களும் அவரைப் பின்பற்றிச் சிறைக்குச் சென்றனர். அவர் விடுதலையான பின் மீண்டும் "நாடு கடத்தினர்". ஆனாலும் அவர் மீண்டும் டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்து மூன்று மாதக் கடுங்காவல் தண்டனைபெற்றார்.

மேலும் போராட்டம்

கோகலே தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றபோது, அவருக்கு வரவேற்பளிப்பதிலும் அவர் சுற்றுப் பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்வதிலும் காந்திஜியுடன் சேர்ந்து இராயப்பன் பெரும் பங்கு கொண்டார். டர்பனில் நகர மண்டபத்தில் கோகலேக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பில் தங்கத் தட்டில் எழுதப்பெற்ற வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தவர் இராயப்பன் தான்.

கோகலே வரவேற்பு

1910-ஆம் ஆண்டு ஜனவரி மீ 29-ஆம் தேதி வெளியான ''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில் இராயப்பனைப் பற்றி ''படித்த இந்தியர்கள்'' என்ற

படித்தவர்க்கு மகுடமிட்டு உதாரணம்

காந்திஜி எழுதிய கட்டுரை இன்று கூடப் படித்த இந்திய இளைஞர்களுக்குச் சிறந்த அறிவுரையாகும். அவர் அந்தக் கட்டுரையில் எழுதினார்: ''இராயப்பன் தெருவில் விலை கூறிப் பொருள்களை விற்றார். அவர் ஒரு பாரிஸ்டர். ஒரு சில நாட்களுக்கு முன்பு, ஒரு பாரிஸ்டர் தெருவெல்லாம் சுற்றி விலை கூறி வாணிகம் செய்வார் என்று யாராவது கூறியிருந்தால், அவ்வாறு கூறியவரை மக்கள் கேலி செய்திருப்பார்கள். ஆனால் சத்தியாக்ரகமானது, முடியாத ஒன்றை முடியுமாறு செய்திருக்கிறது. இராயப்பனுடைய செயல் அவருக்கு மட்டும் பயனுள்ளது என்பது மட்டுமல்ல, அவருடைய குடும்பத்தினருக்கும் வரப்பிரசாதமாகும். அவர் வழக்கறிஞர் தொழிலைத் தொடங்கியிருந்தால் இந்தியர்களிடமிருந்து ஏதாவது வருமானம் பெற்றிருப்பார். ஆயினும் அந்த வருமானத்தையும் அவர் நியாயமான முறையில் பெற்றிருக்க முடியுமா என்பது ஐயத்திற்கிடமானதே. அவருடைய படிப்புக்கு ஏற்ற அளவு அவருக்கு வருமானம் கிடைத்திருக்குமா என்பதும் ஐயத்திற்கு இடமானதே. இதன் விளைவாக இராயப்பன் கடனில் மூழ்கியிருப்பார்; அவருடைய உறவினர்கள் மனமுடைந்து போயிருப்பார்கள்; முடிவில் ஒவ்வொருவரும் இன்னல் அடைந்திருப்பார்கள். ஆனால் இப்போதோ இராயப்பன் ஏழையாக இருக்கிறார். அவருடைய முன்னுதாரணத்தை மட்டும் அவருடைய குடும்பத்தினர் பின்பற்றுவதாக இருந்தால் உடல் உழைப்பின் மூலம் அவர்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்வார்கள். இந்தியர்களில் யாராவது இராயப்பனுடைய முன்னுதாரணத்தைப் பின்பற்றுவார்களா? இதற்குப் பதில் அளிப்பது கடினமாகும். அவ்வாறு செய்பவர் மகிழ்ச்சியுடன் இருப்பார். எழுத்தறிவில்லாத இந்தியர்களைத் தங்களுடைய இரைபோன்று படித்த இந்தியர்கள் கருதுகின்றனர்; அதனால் படியாத இந்தியர்கள் உதவியற்றவர்களாய்ப் போய் விடுகிறார்கள். இவ்வித நிலையில் படித்த இந்தியர்களின் கடமை என்ன? படியாதவர்கள் என்ன தொழில் செய்கிறார்களோ அந்தத் தொழிலைச் செய்து படித்தவர்கள் வாழ வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலந்தான் படி

யாதவர்களுக்கு அவர்கள் உண்மையிலேயே உதவியாக இருக்கமுடியும்.'' ஜோசப் ராயப்பனின் உறவினரான சாலமன் ராயப்பனும் (டிரான்ஸ்வாலில் குடியிருக்க 1912இல் அனுமதிக்கப் பட்டார்) போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைக்குச் சென்றார்.

இரத்தினம் பத்தர்

இராயப்பனைப் போன்ற மற்றொரு தமிழ் வழக்கறிஞர் இரத்தினம் பத்தர்.

பிடித்த மாணவர்

1906-ஆம் ஆண்டில் அண்ணலும் எச். ஓ. அலி என்பவரும் ஒரு தூதுக் குழுவாக இலண்டன் சென்றார்களல்லவா? அப்போது, ஒரு பதினெட்டு வயது இளைஞரின் படிப்பில் அத்துணை வேலைகளுக்கும் மத்தியில் அண்ணல் அளவு கடந்த கவனம் செலுத்தினார். தமது மூக்கில் ஏற்பட்ட கோளாறுக்கோ அல்லது பல் வலிக்கோ வைத்தியம் பார்த்துக் கொள்ளக்கூட நேரம் இல்லாத நிலையிலும் இந்த மாணவருக்கு உணவும் உறையுளும் காண்பதில் அவர் நேரத்தைச் செலவிட்டார். இந்த மாணவர் தான் டி. இரத்தினம் பத்தர் என்பவர். இரத்தினம் பத்தர் நேடாலில் டர்பன் நகரத்தில் ஓர் ஏழைத் தமிழ்க் குடும்பத்தில் பிறந்தவர். உயர்நிலைப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு பார்-அட்-லா படிப்பிற்காக இலண்டனுக்குச் சென்றார். பாரிஸ்டர் தொழில் புரிய வேண்டுமென்றாலும், தேச சேவை செய்ய வேண்டுமென்றாலும், அவருடைய கல்வி போதாது என்று கருதிய காந்திஜி, இலண்டனில் அவர் மெட்ரிகுலேஷன் படிக்கவும் இலத்தின், பிரெஞ்சு போன்ற மொழிகள் கற்கவும் ஏற்பாடுகள் செய்யப் பகீரத முயற்சிகள் எடுத்துக் கொண்டார். இது சம்பந்தமாகப் பேராசிரியர் பரமானந்த், ஜே. சி. முகர்ஜி, ஜே. எச். போலக், பெட்போர்டு கவுண்டி பள்ளிச் செயலாளர், தலைமை ஆசிரியர், திருமதி இ. ஜே. பெக் முதலிய பல பெரிய மனிதர்களுக்கு அவர் கடிதங்கள் எழுதியிருக்கிறார், அவர்களில் சிலரையும் நேரில் சந்தித்துப் பேசியிருக்கிறார் என்றால் அந்த இளைஞர் மீது காந்திஜி கொண்டிருந்த பிரியம் தெளிவாகத் தெரிகிறது.

''திரு இரத்தினம் பத்தர் உறுதியான, நேசிக்கத்தக்க நற்குணம் எல்லையின்றி அமைந்தவர்'' என்றும் ''இந்த இளம் வயதில் அவருக்கு நல்ல பயிற்சி அளித்தால், மிகவும் சிறந்த மனிதராகக் கூடிய அத்துணை தகுதிகளும் அவரிடம் இருக்கின்றன'' என்றும் காந்திஜி அவரைப் பாராட்டியிருக்கிறார். காந்திஜி எதிர்பார்த்தது போலவே அவர் பார்-அட்-லா படித்து முடித்துத் தென்னப்பிரிக்காவுக்குத் திரும்பியபின் பணம் சம்பாதிப்பதில் நாட்டத்தைச் செலுத்தாது, மக்கள் சேவையில் ஈடுபட்டார்.

தகுதிகள் உண்டு

டி. லாசரஸ்

தொழிலாளர்களே வேலை நிறுத்தம் செய்யச் சொல்வதற்காக நியூகேசிலுக்குப் போனார்களே டிரான்ஸ்வால் தமிழ்ச் சகோதரிகள், அவர்கள் எங்கே தங்குவது? இது ஒரு பெரிய பிரச்னையாக இருந்தது. ஏனென்றால், புதிதாக ஏற்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், இவர்களுக்கு இடங் கொடுக்க முன் வருவதற்குப் பெரிய தனவந்தர்கள் தயங்கினர். சத்தியாக்ரகத்திற்கு ஆதரவு காட்டும் இந்திய செல்வந்தர்களுக்குப் பொருளாதார நாசத்தை ஏற்படுத்தி விடுவதென்று வெள்ளையர்கள் கங்கணங்கட்டிக் கொண்டிருந்ததே இதற்குக் காரணம். இந்திய செல்வந்தர்களும் வணிகர்களும் மறைமுகமாக உதவி செய்யத் தயாராக இருந்தனர் என்றாலும் நேரடியாக உதவித் தங்கள் வாணிகத்தை அழித்துக் கொள்ளவோ அல்லது சிறைக்குச் செல்லவோ தயாராக இல்லை. ஆனால் இச்சகோதரிகள் வந்தபோது அவர்களுக்கு ஊக்கத்துடனும் உறுதியுடனும் ஒரு தமிழர் இடம் அளித்தார். அவர் தான் டி. லாசரஸ்; ஒரு மத்திய தர குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்க் கிறித்தவர். இவர் ஒப்பந்தக் கூலிகளில் ஒருவர்; ஆகையால் மூன்று பவுன் வரிக்கொடுமை இவருக்கு நன்கு புரிந்தது; அந்த வரியை எதிர்த்துப் பிரசாரம் செய்து கொண்டு வந்த மேற்கண்ட சகோதரிகள் மீதும் அனுதாபம் கொண்டார்.

தங்க இடம் அளித்த தமிழர்

இச்சகோதரிகள் கைதானதை அறிந்தவுடன் நியூகேஸில் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் அனைவரும் வேலை நிறுத்தம் செய்துவிட்டு, சுரங்கத்திலிருந்து வெளியேறி வந்துவிட்டனர். இதை அறிந்த காந்திஜி போனிக்ஸிலிருந்து ஓடோடியும் வந்தார். மேற்கண்ட சகோதரிகளுக்கே இடமளிக்கத் தயங்கிய வணிகர்கள் காந்திஜிக்கு இடமளிப்பார்களா? ஆகவே நியூகேஸிலில் எங்கே தங்குவது என்ற சிக்கல் காந்திஜிக்கும் ஏற்பட்டது. செல்வந்தர்களின் தர்ம சங்கடமான நிலையை அறிந்த காந்திஜி அவர்களிடமிருந்து சற்று விலகியே இருந்தார். காந்திஜிக்கும் மேற்கண்ட "ஏழை" லாசரசு இல்லமே தங்குமிடமாக அமைந்தது.

காந்திஜிக்கும் "புகலிடம்"

அது மட்டுமல்ல. காந்திஜி வந்தபின், அவரைத் தேடி வந்த தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடிற்று. அந்த வீடே ஒரு சத்திரம் போலாயிற்று. வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் நிலக்கரி நிறுவனங்களைச் சேர்ந்த வீடுகளில் குடியிருந்ததால், அவர்களுக்கு அச்சுரங்க முதலாளிகள் ஓயாது தொல்லைகள் கொடுத்து, அவர்கள் தாமாக வெளியேறி விடுமாறு செய்து விட்டனர். இதனால் நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் காந்திஜி தங்கியிருந்த வீட்டில் வந்து கூடினர்; அவர்களில் குறிப்பிட்டவர்கள் பலருக்கு அந்த வீட்டிலேயே சமையலும் நடந்தது. இரவும் பகலுமாக அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. ஆயினும் லாசரசோ அவருடைய மனைவியாரோ அஞ்சவில்லை. முக மலர்ச்சியோடு வந்தவர்களை வரவேற்று உபசரித்துக் கொண்டிருந்தனர். லாசரசோ இப்பணியில் சிறைக்குச் செல்லவும் தயாராய் இருந்தார். அது மட்டுமல்ல, தமது குடும்பமே அழிந்து போக வேண்டியிருந்தால் அதற்கும் தயாராக இருந்தார்.

வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் வீடே சத்திரமானது

வின்சென்ட் லாரென்ஸ்

பாலசுந்தரம்கூட காந்திஜியுடன் பழகிய முதல் தமிழன் என்று கூறிவிட முடியாது. தமிழ்க் குலம் அவரிடம் நெருங்கி வருவதற்கு அவன் தான் காரணமாயிருந்தான். ஆயினும் காந்திஜியுடன் முதன் முதலாகப் பழகிய தமிழர் அநேக

மாக அவரிடம் அந்தரங்க எழுத்தராக இருந்த வின்சென்ட் லாரென்ஸ் என்ற தமிழ்க் குலத்தவராகவே இருக்க வேண்டும். பாலசுந்தரம் வந்து தமிழில் கூறியவற்றை ஆங்கிலத்தில் காந்திஜிக்கு மொழிபெயர்த்துக் கூறியவர் இந்த லாரென்ஸ் தான். பின்னல், இந்த லாரென்ஸ் காந்திஜி குடும்பத்தில் ஒருவராக ஐக்கியமாகி நாலரை ஆண்டுகள் அவர்களுடனேயே வாழ்ந்தார். அவரும் அவருடைய மனைவியும் மிகுந்த பக்தியுள்ள ரோமன் கத்தோலிக்கர்கள். கிறித்தவ மதத்திற்கு லாரென்ஸ் செய்த சிறந்த தொண்டிற்காக, போப்பாண்டவர் அவருக்கு ஒரு தங்கப் பதக்கமும் வழங்கியிருக்கிறார்.

முதல் தமிழர்

ஒரு நாள் காந்திஜிக்கும் அவரது நண்பனை ஷேக் மேதாபிற்கும் பெரிய சண்டை வந்துவிட்ட போது அவன், அவரைத் தாக்கிவிடாமல் தடுத்தவர் லாரென்ஸ் தான். ஷேக் மேதாப் காந்திஜியின் பள்ளித்தோழன். பள்ளியில் படித்த போதே அவனுடைய தீய பழக்கங்களை காந்திஜி அறிவார். ஆனலும் அவனைத் திருத்திவிடலாம் என்ற நம்பிக்கையுடன் அவனை நண்பனைக் கொண்டார். தென்னப்பிரிக்காவிற்கு வந்து பொதுவேலைகள் கட்டுக்கடங்காமற் போன போது, வீட்டுக் காரியங்களைக் கவனிப்பதற்காகத் தமது பழைய நண்பனை அழைத்திருந்தார். ஆனல் அவன் ஒரு நாள் ஒரு விலைமாதுடன் அவர் வீட்டு அறையில் இருந்ததைப் பார்த்து அவருக்குக் கோபம் வந்து, உடனே வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறினர். அப்போது இருவருக்கும் ஏற்பட்ட வாய்ச்சண்டையில், அவன் அவரைத் தாக்க வந்தபோது, லாரென்ஸ் பின்னலிருந்து அவனைப் பிடித்துக் கொண்டார். லாரென்ஸும் மேத்தாபும் கட்டி உருள இருந்ததை காந்திஜி தான் விலக்கி விட்டார். காந்திஜிக்காக எந்தத் தியாகமும் செய்யும் அளவிற்கு, அவர் மீது லாரென்சுக்கு அபிமானம் இருந்தது என்பது இந்த நிகழ்ச்சியால் தெளிவாகத் தெரிகிறது.

மேதாபுடன் மோதல்

காந்திஜியிடம் பணியாற்றிய போது, கூட்டங்களில் லாரென்ஸ் அடிக்கடி பேசுவதுண்டு. தமிழ் தெரியாதவர்களுக்கு நாள்தோறும் சென்று தமிழ் கற்றுக் கொடுப்பதும் உண்டு. இவ்வாறு லாரென்ஸ் சென்றபோது இரவு ஒன்பது

மணிக்குள் அவர் வீட்டிற்குத் திரும்பிவர முடியவில்லை யாதலால் அப்போது இருந்த சட்டப்படி அவர் போலீசாரின் தொல்லைக்கும் ஆளாகவேண்டியிருந்தது.

வி. ஏ. செட்டியார்

போராட்டத்தில் தீவிரப்பங்கு கொண்ட பிரமுகர்களில் ஒருவரும், தமிழர் நல சங்கத் தலைவருமான வி. ஏ. செட்டியார் 1909-ஆம் ஆண்டில் இலண்டனுக்குச் சென்ற இந்தியர் தூதுக் குழுவிற்கு ஒரு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார். ஆயினும் அவர் இலண்டனுக்குச் செல்ல இருந்த தருவாயில் அரசாங்கம் அவரைக் கைது செய்து (இரண்டாம் முறையாகச்) சிறையில் அடைத்து விட்டதால் அவ்வாறு செல்ல முடியாமற் போயிற்று. 1909 இல் சுமார் ஐம்பத்தி ஐந்து வயதிற்கும் மேலான செட்டியார் ஜோகன்னஸ்பர்க்கில் தமது குடும்பத்துடன் பத்து ஆண்டுகளுக்கு மேல் குடியிருந்திருக்கின்றார். இவர் இரண்டாம் முறையாகச் சிறைக்குச் சென்ற சமயம், ஐந்தாம் முறையாகச் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த அவரது மகனுக்கு வயது பத்தொன்பது தான் என்பதை அறியும் போது அவனுடைய தீவிர தேசப்பற்றும் நன்கு புலனாகிறது. இரண்டாம் முறை அவர் கைதான போது அவர் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்தார்; ஆயினும் அவரை நேட்டாலுக்கு 'நாடு கடத்துவது' என்று டிரான்ஸ்வால் அரசாங்கம் முடிவு செய்தது. 1910-இல் செட்டியார் மூன்றாவது முறையாகக் கைதானபோது அவருடைய குமாரர் ஏழாவது முறையாகச் சிறை வாசம் சென்றார். அவருடைய உடல் நோயை மனதிற்கொண்டு அவரை இம்முறை நல்ல முறையில் நடத்தும்படி காந்திஜி கூட அரசாங்கத்திற்கு ஒரு கடிதம் எழுதினார். * இவ்வாறு செட்டியாரும் அவருடைய மகனும் ஓயாது ஒழியாது சிறைக்கு யாத்திரை போய்க் கொண்டிருந்ததன் காரணமாக அவருடைய குடும்பத்தைக் கவனிக்க முடியாமற் போய் அது மேலும் மேலும் வறுமை நிலையை அடைந்து கொண்டிருந்தது. ஒரு காலத்தில் நல்ல செல்வ நிலையிலிருந்த செட்டியார் 1910-ஆம் ஆண்டில் ஒரு பாப்பராகி விட்டார். நகைகளை ஒன்றன்பின் ஒன்றாக விற்றுத் தான் அவர் வீட்டுச் செலவை நடத்தவேண்டிய

சிறைப்பறவை குடும்பம்

தாயிற்று. இவைகளையெல்லாம் நேரில் அறிந்த காந்திஜி, ''இத்தகைய வீரர்களைக் கொண்ட ஒரு சமுதாயம் தனது குறிக்கோளை அடையத் தவறிவிடும் என்று யாராவது நினைத்தால் அவன் கடவுள் நம்பிக்கை இல்லாதவனைத் தான் இருக்கமுடியும்'' என்று எழுதினார். ''செட்டியாரின் முன்னுதாரணத்தை மட்டும் அறிந்தால், தோல்வி மனப் பான்மை கொண்ட இந்தியர்களுக்கும் மெய் சிலிர்க்கும். அவர் வயதானர்; தமிழர் சமுதாயத்தின் தலைவர், அவருடைய மகன் பன்முறை சிறைக்குச் சென்றிருக்கிறார்; இப்போது அவருடைய மகனை இந்தியாவிற்கு நாடு கடத்துமாறு உத்தரவிட்டிருக்கிறார்கள். கைதாகும் அச்சம் இல்லாமல் வெளியிலிருந்து செட்டியார் வேலை செய்துகொண்டு வந்தார்; இப்போதோ அவரும் கைதாகி விட்டார். அவருடைய நோயைப் பற்றி அவர் பொருட்படுத்தவில்லை. அவருடைய செல்வத்தை யெல்லாம் இழந்துவிட்டார். சரணடைவதைக் காட்டிலும், மானத்திற்காகவும் நாட்டின் நலனுக்காகவும் உறுதி மொழியைப் பாதுகாக்கவும் சாவது என்ற உறுதி அவருடைய ஒவ்வொரு சொட்டு இரத்தத்திலும் ஊறிக்கிடக்கிறது'', என்றும் பாராட்டி எழுதினார். 1910-மே 14-ஆம் தேதியன்று வெளியான ''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில் செட்டியாரின் படத்தைப் போட்டு, அதன் பக்கத்தில் ஒரு குறிப்பும் எழுதி, செட்டியாரையும் அவருடைய குமாரரையும் தமிழர் சமுதாயத்தையும் காந்திஜி கௌரவித்தார்.

தாய்நாடு திரும்பினர்

1912 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாத வாக்கில் செட்டியார் தென்னப்பிரிக்காவிலிருந்து தாய் நாட்டிற்குத் திரும்பினர். அவர் புறப்படுவதற்கு முன் - அதாவது ஆகஸ்ட்டு முதல் தேதியன்று - அவருக்கு ஒரு பிரிவுபசார விழா நடைபெற்றது. இந்தியர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக இருந்த ஐரோப்பியர்கள் பலர் உள்படச் சுமார் 300 பேர் இவ் விழாவிற்கு வந்திருந்தனர். செட்டியார் செய்த சேவைகளைப் பாராட்டி அண்ணலும் ரெவ. டாக்டர் ராஸ், ரெவ. டோக், ஹாஸ்கன் ஆகிய பெருமக்களும் அவ்விழாவில் பேசினர்கள்.

மற்றும் பலர்

பொதுவாக அறப்போர் வாதிகளுக்கு நீதிபதிகள் அபராதம் விதிப்பதும், அறப்போர் வாதிகள் அதைக் கட்ட மறுத்து விட்டுச் சிறைவாசத்தை ஏற்பதும்

முனுசாமி

தென்னப்பிரிக்கப் போராட்டத்தில் வழக்கமாயிருந்தது. ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வாறு சிறைக்குச் சென்றதால், அரசாங்கத்திற்குப் பெரும் செலவும் பொறுப்பும் ஏற்பட்டதாகையால் நீதிபதிகளால் விதிக்கப் பெற்ற அபராதத்தை எவ்வாறுகிலும் வசூலிப்பது என்று அரசாங்கம் பிடிவாதமாக இருந்தது. அதற்காக இந்தியர்களின் சொத்துக்களை ஏலம் போடவும் தொடங்கியது; சில இடங்களில் பறிமுதலும் செய்தது. உதாரணமாக முனுசாமி என்பவருடைய வழக்கை விசாரித்த மாஜிஸ்திரேட் அவருக்கு இரண்டு பவுன் அபராதம் விதித்தார். ஆனால் அவர் இந்த அபராதத்தைக் கட்ட மறுத்துச் சிறை வாசத்தை ஏற்கவே, அரசாங்கம் அவருடைய 250 பவுன் பெறுமான வீட்டைப் பறிமுதல் செய்து விட்டது.

சிறை வாசத்தினால் நல்வினைப் பயனாக ஒருவர் நன்மை அடைந்த வேடிக்கையான முன்னுதாரணம் ஒன்று இருந்தது.

எல்லாம் நன்மைக்கே

சிறைத் தண்டனை அடைந்த ராஜு நாயுடு என்ற தமிழருக்கு அங்குக் கடுமையான வயிற்றுக் கடுப்பு ஏற்பட்டது. இந்நோய் ஏற்படுவதற்கான காரணத்தை அவர் கூறியபோது எல்லோருக்கும் அது வேடிக்கையாய் இருந்தது. "நாள் தோறும் நான் முப்பது கோப்பை தேயிலை அருந்துவேன். ஆனால் இங்கு அது கிடைப்பதில்லை. அதுதான் என் வயிற்றுக் கடுப்பிற்குக் காரணம்" என்று அவர் சொன்னார். தேயிலை வேண்டுமென்று அவர் கோரிய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆனால் அதற்குப் பதிலாக அவருக்கு மருந்தும் இரண்டு இராத்தல் பாலும் ரொட்டியும் அளிக்கப் பட்டன. வயிற்றுக் கடுப்பும் பறந்தோடிவிட்டது. அவர் நல்ல உடல் நலம் பெற்றார். ராஜு நாயுடு ஒரு அமைதியான தொண்டர்.

இந்தியர்கள் தாமாக முன் வந்து தங்களுடைய கைவிரல் ரேகைகளை அளித்துப் பதிவு செய்து கொள்வதென்றும் அவர்

கள் மீதுள்ள வழக்குகளைத் தென்னப்பிரிக்க அரசுகைவிட வேண்டுமென்றும் ஸ்மட்சுடன் காந்திஜி செய்துகொண்ட ஒப்பந்தம் மீர்ஆலமிடம் மட்டும் அல்லாது அவனுடைய பட்டாணிய இனத்தாரிடையிலேயே கடுமையான எதிர்ப்பை ஏற்படுத்தி விட்டது; டிரான்ஸ்வாலில் இருந்த இந்தியர்களில் சிலரிடையே மட்டுமல்லாது நேட்டாலில் இருந்த சில இந்தியர்களிடமும் கடும் ஆத்திரத்தை மூட்டி விட்டது. ஆகையால், நேட்டாலில் இருந்த இந்தியர்களின் தவறான கருத்தைப் போக்கும் நோக்கத்துடன் காந்திஜி ஜோகன்னஸ் பர்க்கிலிருந்து டர்பனுக்கு வந்து, அங்கு ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் ஒப்பந்தத்தை விளக்கினார். இக் கூட்டத்தின் முடிவில் ஒரு பெரிய கும்புடன் ஒரு பட்டாணியன் மேடை மீது ஏறினான்; உடனே விளக்குகளெல்லாம் அணைக்கப் பட்டன. ஆனாலும் அவன் முயற்சி பலிக்கவில்லை. இந்தக் கூட்டத்தில் காந்திஜிக்கு ஏதாவது ஆபத்து நேரலாமென்ற எச்சரிக்கையுடன் இருந்த சிலர் - காந்திஜியின் ஆதரவாளர்கள் - தங்களுடைய சமயோஜித புத்தியால் காந்திஜிக்கு எவ்வித ஆபத்தும் நேராமல் தடுத்துவிட்டார்கள். கூட்டம் முடிந்து காந்திஜி போனிக்ஸ் ஆசிரமத்திற்குப் புறப்பட்டபோது, ஜாக் முதலி என்ற தமிழரின் தலைமையில் ஒரு சிறிய 'பட்டாளமே' காந்திஜிக்குத் துணையாகச் சென்றது. ஜாக் முதலி நேடாலிலேயே பிறந்து வளர்ந்த ஒரு தமிழர்; அவர் காலத்தில் தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த குத்துச் சண்டை வீரரில் யாருமே அவருக்கு இணையானவர் இல்லை - அவர்கள் வெள்ளையராக இருந்தாலும் சரி, கறுப்பராக இருந்தாலும் சரி. போனிக்ஸில் காந்திஜி படுத்துத் தூங்கியபோது ஜாக் முதலி கண்ணிமையாது விழித்திருந்து காந்திஜியைக் காத்து வந்தார், காந்திஜியிடம் அவருக்கு அவ்வளவு ஆழ்ந்த பக்தி இருந்தது.

ஜாக் முதலி

பிரிட்டிஷ் இந்தியர் சங்கம் என்ற பெயரில் இந்தியர் நலனைப் பாதுகாக்க ஒரு சங்கம் அமைக்கப் பெற்றபோது, அதில் தமிழர்கள் பெரும்பங்கு எடுத்துக் கொண்டனர். ஜேம்ஸ் துரைசாமி என்ற தமிழர், சங்க அலுவலகத்திற்கு வந்து ஊதியம் எதுவும் பெறாது சங்க வேலைகளைச் செய்து விட்டுப் போவது வழக்கம். இவர் ஊதியம் பெறாது பணியாற்றியதைக் குறித்து (19-9-1908 "இந்தியன் ஒப்பினி

துரைசாமி

யன்'' இதழில்) காந்திஜி கீழ்க்கண்டவாறு எழுதினார்: துரைசாமி வேறு வேலை எதுவும் செய்யாததால், அவர் ஊதியம் பெறுது பணியாற்ற முன் வந்தது ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தியர்கள் நாணயமாகப் பிழைப்பதற்கான ஒரு வேலையை ஏற்றுக் கொண்டு பணம் சம்பாதிக்க வேண்டியது அவசியந்தான். எல்லோருமே தங்களுடைய வேலைகளை விட்டுவிட்டுத் தொண்டர்களாக முடியாது. தம் முடைய அன்றாடத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளத் துரைசாமிக்கு வேறு வசதிகள் இருக்கின்றன; ஆகையால் சங்கத்திற்கு உதவக்கூடிய நிலையில் அவர் இருக்கிறார்''. இவ்வாறு அவர் எழுதிப் பொதுத் தொண்டுக்கு வருபவர் கள் தமது வாழ்க்கைச் செலவையோ குடும்பச் செலவையோ ஈடுகட்டுவதற்கு நாணயமான ஏதாவது ஒரு தொழிலைச் செய்துவர வேண்டும் என்பதை வலியுறுத்தியிருக்கிறார்.

•

மாணிக்கம் பிள்ளை

டிரான்ஸ்வால் அரசாங்கத்தின் கொடுமையில் பிரிட்டன் பேரரசும் மறைமுகமாக ஒத்துழைத்ததென்பதற்கு, மாணிக்கம்பிள்ளை என்ற மாணவனை டிரான்ஸ் வாலிலிருந்து இந்தியாவிற்கு நாடு கடத்தி யது ஒரு நல்ல உதாரணமாகும். மாணிக்கம் பிள்ளை நேட்டாலில் படித்துக் கொண்டிருந்த ஒரு மாணவன்; மாணவன் என்ற ஒரே காரணத்திற்காக வேனும் டிரான்ஸ்வாலில் நுழைய இவனுக்கு உரிமை உண்டு. ஆசிய விவகாரங்களைக் கவனித்து வந்த அரசாங் கத்துறைக்கு இவனுடைய தந்தையை நன்கு தெரியும். பதிவு அதிகாரியாய் இருந்தவருக்கோ மாணிக்கம் பிள்ளையையே நன்கு தெரியும். மாணிக்கம் பிள்ளை சரளமாக ஆங்கிலத்தில் பேசுவான். இத்தனை தகுதிகள் இருந்தும் இவனை நாடு கடத்திவிட்டார்கள். தான் ஒரு மாணவன் என்றும் தென்னப்பிரிக்காவில் பிறந்தவனுதலால் நேடா லுக்கு வர முழுஉரிமை உண்டு என்றும் இவன் எவ்வளவோ எடுத்துக் கூறியும் அவர்கள் இவன் கோரிக்கையை ஏற்க வில்லை. இந்தியாவிற்கு நாடு கடத்தப் பெற்ற மாணிக்கம் பிள்ளை மீண்டும் நேடாலுக்குத் திரும்பிவந்து, அங்கிருந்து டிரான்ஸ்வாலுக்குள் நுழைந்து கைதாகி மூப்க்லுப் சிறை யில் அடைக்கப் பெற்றான்.

மாணிக்கம் பிள்ளையைப் போன்ற படிப்புத் தகுதி யிருந்தும் நாடு கடத்தப் பெற்றவர்கள் ஆர். எஸ். சி. பிள்ளை

யும் டி. ஏ. சுப்ரமணிய ஆச்சாரியும் ஆவர். இதே போன்று மற்றும் இரண்டு சகோதரர்கள் - தமிழர்கள் - தென்னப் பிரிக்காவில் பிறந்தவர்கள் நாடு கடத்தப் பெற்றனர். ஆர். எஸ். என். முதலி என் பவர் இருபது ஆண்டுகளாகத் தென்னப்பிரிக் காவில் வாழ்ந்து வருபவர் என்று அவருடைய வழக்கை விசாரித்த மாஜிஸ்ட்ரேட்டுக்கே தெரிந்திருந்தும் அவரை நாடு கடத்தும்படி அந்த மாஜிஸ்ட்ரேட் உத்தரவிட்டு விட்டார்.

நாடு கடத்தப் பெற்றவர்கள்

தென்னப்பிரிக்காவிற்குத் தலைவர் கோகலே வந்த போது, மூன்று பவுன் வரியை எடுத்துவிடப் போவதாக அமைச்சர்களும் பெரிய அரசியல் வாதிகளும் கொடுத்த வாக்குறுதியை நம்பிச் செயல்பட்ட முனியன் என்பவர் பெரிய அல்லலுக்குள்ளா னார். அவர் மூன்று பவுன் வரியைக் கட்டிய பின்பு கூட அவர் மீது நீதிமன்றத்தை அவதூறு செய்ததாகக் குற்றம் சாட்டி, பதினைந்து நாள் கடுங்காவல் தண்டனை விதித்து விட்டார்கள்.

முனியன்

போனிக்ஸ் பண்ணையில் இருந்த சர்வதேச அச்சுக் கூடத்தில் மெஷின் போர்மெனாக இருந்தவர் ஒரு தமிழர்; அவர் பெயர் கோவிந்தசாமி; அவரைச் சுருக்க மாக ''சாம்'' என்ற பட்டப் பெயரால் அழைப்பது வழக்கம். அவர் ஒரு நல்ல வேட்டைக்காரர். வேட்டையாடும் பழக்கத்தை அவர் நிறுத்தி விடுமாறு செய்யவேண்டுமென்று சகன்லால் காந்தி, காந்திஜியிடம் கூறினர். ஆனால், காந்திஜி இதைக் கட்டாயப் படுத்தி நிறுத்த முடியாதென்றும் படிப் படியாக எடுத்துச் சொல்லித்தான் நிறுத்த வேண்டும் என்றும் கூறிவிட்டார். நியூகேசிலிலிருந்து வால்க்ஸ்ரஸ்டிற்கு அணிவகுத்துச் சென்ற படைகளில் ஒன்றுக்குத் தலைமை தாங்கிச் சென்றவர் ஏ. டி. பிள்ளை. அவர் தலைமை வகித் துச் சென்ற அணியில் 200 பேர் இருந்தார்கள்.

சாம்

இளம்வயதிலேயே தென்னப்பிரிக்காவில் காந்திஜி தலைமையின்கீழ் சத்தியாக்ரகியாகப் போராட்டத்தில்

ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றவர்களில் கும்பகோணம் வெ. துரைசாமி பிள்ளை ஒருவர். இந்நூலின் ஆசிரியர் அவரைச் சந்தித்தபோது, அவர் கூறிய தகவல்கள் மிகவும் சுவையானவை : அவர் சொன்னார், ''தென்னப்பிரிக்காவில் குடியேறிய இந்தியர் பலர் விக்கிரகங்களையும் பலவகைப் படங்களையும் வைத்துக் கடவுள் வழிபாடு செய்ததால் தென்னப்பிரிக்கா வெள்ளையர்கள் இந்தியர்களை

துரைசாமி பிள்ளை

Sami, Sami, Ring the Bell,
Cooly, Cooly, go to Hell.

சாமி, சாமி, மணியை ஆட்டு,
கூலி, கூலி, நரகத்திற்கு தொலை.

என்பார்கள். இவ்வாறு இழிவான நிலையில் இருந்த இந்தியர்களுக்குத் தன்மான உணர்ச்சியை ஊட்டி அவர்களைத் தலைநிமிரச் செய்தவர் காந்திஜி ஆவார். காந்திஜியின் குமாரர்கள் எனக்கு அன்புள்ள நண்பர்கள். அவர்களில் குறிப்பாக மணிலால் காந்தி என்னுடைய நெருங்கிய நண்பர் ஆவார். அவருடன் நான் ஒரே சிறையில் இருந்திருக்கிறேன். தென்னப்பிரிக்காவில் என்மீது தொடரப்பட்ட வழக்கை விசாரணை செய்த நீதிபதியின் பெயர் வெர்னேன் என்பதாகும். அவர், நான் மன்னிப்புக் கேட்டால் விடுவிப்பதாகச் சொன்னார். நான் மறுத்து விட்டதால் 6 மாதக் கடுங்காவல் தண்டனை அளித்தார். இரண்டு கிழமை என்னை ஜோகன்னஸ்பர்கிலேயே தங்க வைத்தார்கள். ஆயினும் நான் மன்னிப்புக் கேட்கவில்லை. பிறகு சுமார் 3 மைல் தொலைவில் உள்ள டிப்குலுஃப் சிறைச்சாலைக்கு அனுப்பப் பட்டேன். அச்சிறைச் சாலையில் திருவாளர்கள் மணிலால் காந்தி, ஜோசப் ராயப்பன், சி. கே. நாயுடு முதலியவர்கள் இருந்தார்கள். என்னுடைய சிறைவாசம் முடிந்த பிறகு சிறிதுகாலம் ஜோகன்னஸ்பர்க்கிலேயே தங்கியிருந்து 1913-ஆம் ஆண்டிலே இந்தியாவுக்கு வந்து சேர்ந்தேன். தென்னப்பிரிக்கா தியாகி வள்ளியம்மையாரையும், அவர் தகப்பனார் முனிசுவாமி முதலியாரையும், அவர் தாயார் ஜானகியம்மையாரையும், அவர் தம்பி தங்கைகளையும் நன்கு அறிவேன். நான் இருந்த வீட்டிற்கும் அவர்கள் கடைக்கும் சுமார் 500 அடி தொலைவு இருக்கும்.

தென்னப்பிரிக்காவில் போராட்டத்தில் பங்கு கொண்டு ஆயிரக்கணக்கான தமிழர்கள் சிறைக்குச் சென்றிருக்கின்றனர். அவர்கள் எல்லோருடைய பெயர்களையும் இப்போது அளிப்பதென்பது கடினமான காரியம். ஆனாலும் இதுவரை கிடைத்த எழுத்துச் சான்றுகளிலிருந்து, சிறைக்குச் சென்ற முக்கியமான தமிழர்களின் பட்டியலைக் கீழே காணலாம் :—

மேலும் பலர்

கந்தசாமி பிள்ளை
கந்தசாமி
கந்த முதலி. சி.
கங்கா படையாச்சி
காப்ரியேல் அந்தோனி
கணபதி என். பிள்ளை
கருமுத்து பிள்ளை
ஜே. எம். எஸ். குக்
குருநாதன்
குப்பு
கோவிந்தசாமி என். பிள்ளை
கோவிந்தசாமி படையாச்சி. வி.
கோவிந்து
கோவிந்தசாமி
கோபால். என்.
கிருஷ்ணசாமி நாயுடு. பி.
கிருஷ்ணசாமி பிள்ளை
சவேரி பிள்ளை
சாஞ
சாமிநாதன்
சின்னசாமி
சின்னப்பா ரெங்கசாமி பிள்ளை
சுப்பராயலு நாயுடு
சுப்பையா நாயுடு. கே.
செட்டி. என்.
செட்டி. எஸ்.
செட்டி. பி.
சொக்கலிங்கம் பிள்ளை. ஆர்.
டேவிட் அந்தோனி
தம்பி நாயுடு
நடேசன் எம்.
நரசிம்மலு
நாய்ஞ நாயுடு
நாகப்பன் நாயுடு
நாயுடு. வி.
நாயுடு. எஸ். பி.
நாய்க்கர்
பக்கிரி முதலி
பாவாடை நாயுடு. எஸ்.
படையாச்சி, எம். பி.
பாஞ படையாச்சி
படையாச்சி. ஆர். கே.
பக்கிரி நாயுடு
பெருமாள் நாயுடு
பிள்ளை. எஸ். ஆர்.
பிள்ளை
பிள்ளை, ஏ. என்.
பிள்ளை, ஏ. எஸ்.
பிள்ளை, சி. எம்.
பிள்ளை, ஏ. ஏ.
பீட்டர், என். கே.
பீட்டர், வி. என்.
பீட்டர் அந்தோனி
மதுரமுத்து பத்தர்
மதுரமுத்து
மதுரமுத்து பிள்ளை, எஸ்.
மதுரசாமி படையாச்சி, வி.
முனுசாமி நாயுடு

முத்தையா நாயுடு
முனுசாமி மூன்லேட்
முனுசாமி
முனுசாமி எல்லாரி
மோகன் அந்தோனி
ராஜி நாயுடு
ரங்க படையாச்சி
ராமா
ராஜாபிரான்சிஸ்
இராமசாமி
ரோம் ஜான்
ரெங்கசாமி நாயுடு என்.
இலட்சுமணன் வரதாச்சலம்
வள்ளுபடையாச்சி
வூர்த்தன். வீ.
ரெங்கசாமி நாயுடு. எஸ்.
வீர்து
வீராசாமி நாயக்கர், சுப.
அப்பாசாமி, வி.
அமிர்தலிங்க செட்டி
அப்பாசாமி நாயக்கர்
அப்புச் செட்டி
ஹாரிடாம் அப்ரஹம்
ஜேம்சன் ஆர்
ஹாலா படையாச்சி
எட்வர்ட் வார்மலே
எல்லரி முனுசாமி
ஜான்லாசரஸ்

நாடு கடத்தப் பெற்றவர்கள்

முனுசாமி செல்லன்
முனுசாமி பால்
முத்து முனியன்
முருகன். எல்
முனுசாமி ஆர்
முனுசாமி எஸ்
மாணிக்கம் எஸ்
செல்லையா
செல்ல பத்தர்
பிள்ளை என். ஜி.
பிள்ளை என். கே.
சின்னசாமி பிள்ளை கே.
சின்னசாமி பால்
(16 வயதுப் பையன்)
கோவிந்த செட்டி.
கோவிந்தசாமி எல்.
வீர பிள்ளை
வீராசாமி நாயுடு
சுப்பைய நாயுடு
சுப்ரமணிய ஆச்சாரி. பி. ஏ.
டாம்மி கோவிந்தசாமி
ஜோ சின்னனன்
டேனியல் ஆறுமுகம்
டோபி சாபி
ஆறுமுகம் டி.
பீட்டர் மூன்லேட்
நாராயணசாமி சி.
ஜான் எட்வர்டு
அப்பன்

தமிழரிலும் பதர்கள்

தமிழர்களிலும் சிலர் கீழ்த்தரமாகப் போகத் தயாராய் இருந்தனர் என்பதற்கு சி. எம். பிள்ளை ஒரு சான்றுவார். 1906-ஆம் ஆண்டில் தென்னப்பிரிக்காவில் காந்திஜிக்குத் தூலைவலி இருந்த இந்தியர்களின் சார்பாக காந்திஜியும் எச். ஒ. அலியும் இலண்டனுக்குச் சென்றிருந்த போது, டாக்டர் டபிள்யூ. காட்பிரே என்ப வரும் சி. எம். பிள்ளை என்பவரும் காந்திஜி மீது புகார் செய்து பிரிட்டன் அரசுக்கு ஒரு மனுவை அனுப்பிவைத் தனர். எடின்பரோ பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற டாக்டர் வில்லியம் காட்பிரே, தென்னப்பிரிக்காவில் வழக் கறிஞராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார். இவர் இந்தியர்களுக்காகப் பலமுறை நீதிமன்றத்தில் வாதாடியி ருக்கிறார். சி. எம். பிள்ளை, மொழி பெயர்ப்பைத் தொழி லாகக் கொண்டவர்; அத்தொழிலிலும் அவருக்கு ஒரு நிலை கிடையாது. அவருக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு. வீண் பொழுதுபோக்கிக் கொண்டு திரிந்த "ஒரு சோதா" என்றும் அவரைக் கூறலாம். இந்த இருவரும் தான் காந்திஜிக்கு எதிராக மனு அனுப்பி வைத்தவர்கள். 437 பிரிட்டிஷ் இந்தியர்கள் கையொப்பமிட்டிருந்ததாகக் கூறப் பெற்ற அந்த மனுவில், இந்தியர்களின் பிரதிநிதியாக பிரிட்டன் அரசுப் பிரதிநிதிகளைச் சந்திக்க காந்திஜிக்கு அதிகாரம் இல்லை என்று கூறப்பட்டிருந்தது. இதன் பின்னர் இந்த மனுவை அனுப்பியவர்களைப் பற்றியும் அவர்கள் எந்த நோக்கத்துடன் அதை அனுப்பி வைத் திருக்கிறார்கள் என்பதைப் பற்றியும் காந்திஜி இலண்டனில் விளக்க வேண்டியதாகப் போயிற்று. காந்திஜியின் போராட்டத்தைத் தீவிரமாக ஆதரித்துக் கொண்டிருந்த டாக்டர் காட்பிரே, இலண்டனுக்கு இந்தியத் தூதுக்குழு புறப்பட்டபோது அதில் தாமும் ஒரு உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்படுவார் என எதிர்பார்த்திருக்கிறார். ஆனால் அவ்வாறு அவர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. இதனால் ஆத்திரமடைந்து, மொழி பெயர்ப்பாளராகிய சி. எம். பிள்ளையைத் துணைக்குச் சேர்த்துக் கொண்டு பிரிட்டிஷ் இந்தியர் சங்கத்தின் பெயரைத் தவறான முறை யில் பயன்படுத்தி, வெள்ளைக் காகிதத்தில் 437 இந்தியர் களின் கையொப்பங்களை வாங்கி, தாம் விரும்பியதை மேலே எழுதி அவர் அனுப்பி வைத்திருக்கிறார். இந்த மனு

''அரசியல் ஆர்ப்பாட்டம் செய்வதையே காந்திஜி தொழிலாகக் கொண்டவர்'' என்று குறிப்பிட்டிருந்தது. மேலும் பல அவதூறுகளும் கூறப்பெற்றிருந்தன. ''காந்தி ஒரு ஊதியம் பெறும் அரசியல் ஆர்ப்பாட்டக்காரர்; அந்தத் தொழிலின் மூலம் அவர் ஏராளமாகப் பணம் திரட்டி விட்டார். 1896இல் அவரை வெள்ளையர் அடித்துத் துரத்தி விட்டனர். அவருடைய நடவடிக்கைகளாலும் பெருந்தீங்கு விளைந்திருக்கின்றது; வெள்ளையர்களுக்கும் கறுப்பர்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. பிரிட்டிஷ் இந்தியர் சங்கத் தலைவராய் இருக்கும் அப்துல் கனி என்பவருக்கு இதெல்லாம் ஒன்றுந் தெரியாது. அலி (இவர் தான் காந்திஜியுடன் இலண்டனுக்குச் சென்றவர்) ஒரு புரட்சிக்காரர்; அரசியல் விவகாரங்களிலும் கலீபின் அதிகாரத்தை நிலைநாட்ட வேண்டுமென்று விரும்புபவர். பிரிட்டிஷ் இந்தியர் சங்கத்திற்கு அஞ்சுவதால்தான் மேலும் பல இந்தியர்கள் இந்த மனுவில் கையொப்பமிட மறுக்கிறார்கள்'', என்றெல்லாம் இந்த மனுக் கூறியது. இந்த மனுவின் மீது பிரிட்டன் பாராளுமன்றத்திலேயே ஒரு கேள்வி வந்துவிட்டது என்றால் அது எவ்வளவு தடபுடல் படுத்தப் பெற்றிருக்கும் என்பதை நாம் எளிதில் உணரலாம். கடைசியில் (1906 நவம்பர் 14 ஆம் தேதியன்று), இந்த மனு உண்மையானது தானா இல்லையா என்பதைக் குறித்துத் தாம் விசாரணை நடத்துவதாக சர்ச்சில் அறிவித்தார். இவ்வாறு சி. எம். பிள்ளையால் காந்திஜிக்குக் கடுந்தொல்லைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆயினும் பின்னர் சி. எம். பிள்ளை இந்தியர்கள் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைவாசமும் அனுபவித்திருக்கிறார். சிறையில் புத்தகங்கள் படிக்கும் பழக்கமும் இவருக்கு இருந்திருக்கிறது.

இந்தியர்களிலும் கீழ்த்தரமானவர்கள் இருந்தார்கள் என்பதற்கு மற்றொரு முன்னுதாரணம் பொன்னுசாமி என்ற சலவைத் தொழிலாளி. ஒரு பாவமும் அறியாத இந்தியர்கள் மீது இவன் பெரும் பழிகளைச் சுமத்திச் சாட்சியம் கூறுவது வழக்கம். ஒரு சமயம் இவன் மீது நீதிமன்றத்தில் இந்தியர்கள் வழக்குத் தொடர்ந்ததில், ''இவன் குற்றவாளி தான்'' என்று ஜூரிகள் தீர்ப்புக் கூறினார்கள். இவனுக்கு நீதிபதி பதினெட்டு மாதக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

தமிழர் தம் சேவை

காந்திஜி தொடங்கிய போராட்டங்களிலும் அவர் மேற் கொண்ட சீர்திருத்த, உதவிப் பணிகளிலும் தமிழர்கள் எவ்வளவு சிறந்த தொண்டாற்றி யிருக்கின்றனர் என்பதற்கு மேலும் சில சான்று களைக் கூறமுடியும்.

1897-ஆம் ஆண்டில் இந்தியாவில் பஞ்சம் ஏற்பட்ட போது, தென்னப்பிரிக்காவில் பஞ்ச நிவாரண நிதி ஒன்று காந்திஜியால் திரட்டப்பெற்றது. அதில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தான ரசீதுகள் அடிக்கப்பெற்றன.

1898-ஆம் ஆண்டில் போயர் யுத்தத்தில் பிரிட்டன் தரப்பிற்கு உதவ காந்திஜி தலைமையின் கீழ் முன் வந்தவர் களில் திருவாளர்கள் பி. கே. நாயுடு, ஜே. இராயப்பன், எம். இராயப்பன், ஆர். முதலி, வி. லாரென்ஸ், ஆர். கோவிந்து முதலிய தமிழர்கள் இருந்தார்கள்.

1896-ஆம் ஆண்டில் தமிழர்கள் காந்திஜிக்கு ஒரு தங்க நாணயத்தைப் பரிசாக அளித்திருக்கிறார்கள்.

பேராசிரியர் பரமானந்த் என்பவர் இலண்டனிலிருந்து ஜோகன்னஸ்பர்க்கிற்கு வந்தபோது அவருக்குத் தென்னப் பிரிக்க இந்தியர்கள் சார்பாக அளிக்கப்பெற்ற வரவேற்பில் கையொப்பமிட்ட பதினைந்து பேரில் ஏழுபேர் தமிழர்கள். இந்த வரவேற்புக் குழுத் தலைவரான வி. எம். முதலியார் ஒரு தமிழராவார்.

ஆப்பிரிக்கர்களுக்கு எதிராக நடந்த சண்டையில் ஆங் கிலேயர் தரப்பிற்கு உதவுவதற்காக அமைக்கப்பெற்ற இந்திய அம்புலன்ஸ் படையில் சேர்ந்திருந்த இருபது இந்தியரில் பன்னிரெண்டு பேர் சென்னை மாநிலத்தைச் (அப்போது ஆந்திராவும் சேர்ந்ததாக இருந்தது) சேர்ந்த வர்கள்.

எல்லாப் பொதுக் கூட்டங்களிலுமே, சொற்பொழி வாற்றுவோர் எந்த மொழியில் பேசினாலும், அதைத் தமிழில் மொழிபெயர்த்துக் கூறுவது வழக்கமாய் இருந்தது போராட்டத்திற்கு ஆதரவான மக்களில் பெரும் பகுதியினர் தமிழர்களாக இருந்தனர் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

சில சமயங்களில் இந்தியர்களுடைய பிரச்னையைத் தெளிவாக விளக்குவதற்காக, தென்னிந்தியர்கள் கூட்டம் தனியாக நடத்தப்பெற்றது. இவைகளில் தமிழரே மிகப் பெரும்பாலானவர்களாக இருந்தனர். 1908-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இவ்வாறு நடத்தப்பெற்ற ஒரு கூட்டத் தில் பி. கே. நாயுடு, டபிள்யூ. ஜே. ஆர். நாயுடு, எஸ். மாத்யூஸ், எஸ். லிங்கம், டி. என். நாயுடு, எஸ். குமாரசாமி எஸ். வீராசாமி, தம்பிநாயுடு, எஸ். பி. படையாச்சி, ஆர். கே. நாயுடு, ஆர். தண்டபாணி, கே. கே. சாமி, ஆகிய தமிழர்கள் தொண்டர்களாகச் சேர்ந்தனர்.

தமிழர்களில் பலர் கடை வைத்திருந்தார்கள்; சிலர் டிராலி காண்டிராக்டர்களாக இருந்தார்கள்; சிலர் தெரு வணிகர்களாக இருந்தார்கள்; சிலர் வேலை செய்தார்கள். இவ்வாறு பிறரிடம் வேலை செய்தவர்களுக்கு மாதம் ஆறு பவுனிலிருந்து பதினைந்து பவுன் கிடைத்து வந்தது. சொந் தத் தொழில் அல்லது வாணிகம் செய்தவர்களுக்கு மாதம் இருபதிலிருந்து முப்பது பவுன் கிடைத்தது. சத்யாக்ரகப் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக இவர்கள் இந்த வேலைகளையும் தொழில்களையும் இழந்து ஓட்டாண்டிகளா னார்கள். இவர்களுடைய குடும்பங்கள் வாழ்வதற்கே சத்தியாக்ரக நிதியிலிருந்து உதவித் தொகைகள் அளிக்க வேண்டியதாயிற்று. ஆனாலும் இவர்கள் மனந்தளர்ந்து விடவில்லை. போராட்டத்தின் கடுமை அதிகமாக ஆக அரசாங்கத்தின் அடக்கு முறையும் இயல்பாகவே அதிக மாயிற்று. பொதுவாக, அபாயமான குற்றவாளிகளையும், பணிய வைக்க வேண்டுமென்று அரசாங்கம் நினைக்கும் குற்ற வாளிகளையும் அடைத்து வைப்பதற்கென்றே எந்த அரசும் சில சிறைகளை நிறுவியிருக்கும். அப்படிப்பட்ட சிறைகள் டிரான்ஸ்வாலிலும் இருந்தன; இவைகளில் ஒன்றுதான் டூப்க் ளூப் (குற்றவாளிகள்) சிறை. அங்கு ஒரு கொடுமையான சிறை அதிகாரி (ஜெய்லர்) இருந்தான்; சிறைக் கைதிகளைக்

டூப்க்ளூப் சிறை

கொடுமைப்படுத்தி வேலை வாங்கினான். எத்தனையோ இந்தியர்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வேலைகளை வெற்றிகரமாக முடித்துக் காண்பித்தனர். ஆயினும் அந்த ஜெய்லர் அவர்களை இழிவான முறையில் நடத்தி வந்ததை அவர்களால் தாங்க முடியவில்லையாகையால் 1910 நவம்பரில் ஒரு முறை உண்ணா நோன்பும் இருந்தனர். "ஒன்று இந்த ஜெய்லரை வேறு சிறைக்கு மாற்றவேண்டும்; அல்லது தங்களை வேறு சிறைக்கு அனுப்பவேண்டும்" என்பது அவர்களுடைய கோரிக்கை. இது முற்றிலும் நியாயமான ஒரு உண்ணாவிரதமே. பொதுவாக டிரான்ஸ்வால் சிறைகளிலிருந்த விதி முறைகளே மிகவும் கடுமையானவை; ஆனால் இந்தச் சிறையின் விதி முறைகளோ கொடுமையானவை. இந்த உண்ணாநோன்பு நீடித்ததன் பின், அவர்கள் வேறொரு சிறைக்கு மாற்றப்பட்டனர். இச் சிறையில் நச்சுப் பாம்புகளும் தேள்களும் மிகவும் சாதாரணமாக நடமாடுவதுண்டு. ஒரு முறை டேனியல் ஆறுமுகம் என்ற தமிழரும் மற்றும் சில கைதிகளும் அடைக்கப் பெற்றிருந்த ஓர் அறையில் பாம்பு வந்துவிட்டது. ஆறுமுகம் அரைத் தூக்கமாகப் படுத்துக்கொண்டிருந்தபோது இந்தப் பாம்பு அவருடைய கழுத்தின் மேல் ஊர்ந்து செல்லத்தொடங்கியது. இதை அறிந்தவுடன் ஆறுமுகம் பயந்து எழுந்து, அதை உடம்பிலிருந்து உதறிவிட்டார். நல்ல வேளையாக அந்த அறையில் அப்போது விளக்கு எரிந்துகொண்டிருந்தது. (பெரும்பாலான சமயங்களில் பெரும்பாலான அறைகளில் டீப்க்ளுப்சிறையில் விளக்கு இருப்பதில்லை.) ஆறுமுகம் தனது பக்கத்தில் படுத்திருந்தவரை எழுப்பினார்; அப்போது அவரை நோக்கித் தான் அந்தப் பாம்பு போய்க்கொண்டிருந்தது. உடனே அந்த அறையில் படுத்திருந்த எல்லாக் கைதிகளும் எழுந்துவிட்டனர். அடுத்த அறையிலிருந்த ஒருவர் செருப்பைக் கொண்டுவந்தார்; அதனால் அடித்து அந்தப் பாம்பைக் கொன்றார்கள். இப்படி ஒரு தடவையல்ல, பல தடவைகள் இரவில் கைதிகள் படுத்திருந்தபோது பாம்புகள் நடமாடி அதைக் கைதிகளும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த டீப்க்ளுப் சிறையில் தான், பெரும்பாலான தமிழர்கள் அடைத்து வைக்கப்பெற்றனர். அச்சிறையின் ஒவ்வொரு சுவரும் தமிழனுக்கு இழைக்கப்பட்ட கொடுமையைக் குறித்து ஓராயிரம் கதை சொல்லும்.

சில தமிழர்கள் பிரிட்டோரியா கைதிகள் ரிசர்வ் முகாமிற்கு அனுப்பப்பெற்றனர். அங்கும் கைதிகளுக்கு இழைக்கப் பெற்ற கொடுமை சொல்லொண்ணுத மற்றொரு தாக இருந்தது. குளிப்பதற்கு வசதியே கொடுஞ்சிறை இல்லை. 200 பேர் இருந்த சிறையில் துணி துவைப்பதற்கு ஒரே ஒரு தண்ணீர்த் தொட்டி தான் இருந்தது. நெய் வேண்டுமென்று கேட்ட போது கொழுப்பைப் போட்டுப் பிசைந்து கொடுத்தனர்; கஞ்சி என்று சிறை அலுவலர் கூறியதில் வடித்த தண்ணீர் இருந்ததே தவிர, பருக்கை என்பது எதுவுங் கிடையாது. அவர்கள் அறிவித்த ரேஷன் ஒன்று, வழங்கியதோ அதில் பாதி. குழி தோண்டுவது, கல்லுடைப்பது, மரம் வெட்டுவது, ரோட் ரோலரை இழுப்பது போன்ற வேலைகள் அளிக்கப்பட்டன. இச்சிறைக்குச் சென்ற தமிழ்க் கைதிகளில் சிலர் அறுபது வயதிற்கும் மேற்பட்ட கிழவர்கள் என்றாலும் அவர்களும் நடுக்கும் குளிரில், நீண்டதூரம் உள்ள புல் வெளிக்கு வேலைக்காக அழைத்துச் செல்லப் பெற்றனர். ஆனாலும் அவர்கள் கொஞ்சங்கூட முணு முணுக்காது, வேலை செய்ய வேண்டிய இடத்திற்குச் சென்றனர்.

ஜோகன்னஸ்பர்கில் 1908 ஆகஸ்ட் 23-ஆம் தேதியன்று நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில் பேசிய காந்திஜி அண்ணல், தமிழர்கள் சிறையில் பட்ட துயர் கனை உருக்கமாக எடுத்தியம்பினர். "முதுகு நிமிர்த்தோடு இரணத்தோடு அவர்கள்பட்ட துயரை நான் (சிறையில்) பார்த்திருக்கிறேன். மணல் மூட்டை சுமக்கும் பழக்கமே இல்லாதவர்கள் அவர்கள்; ஆனால் சிறையில் அவர்கள் மணல் மூட்டைகளைச் சுமக்கு மாறு கட்டாயப்படுத்தப் பட்டனர். இவை தான் சிறை விதிகள் என்பது; இந்த விதிகளால் அவர்கள் உடலைப் புண்ணாக்கிக் கொண்டனர்". என்று காந்திஜி கூறியபோது கூட்டத்தினர் துயரத்தால் விம்மி, அரசினர் செயலை "வெட்கம்" "வெட்கம்" என்று அறை கூவிக் கண்டித்தனர்.

தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழர்களின் தேசபக்திக்குச் சிறந்த சான்றாக ஒருமுறை ஓர் உருக்கமான நிகழ்ச்சி

நடைபெற்றது. தென்னப்பிரிக்காவிலிருந்து காந்திஜி இறுதியாக இந்தியாவிற்குத் திரும்பி வருவதற்குச் சற்று முன் (1914 ஜூலை 14 ஆம் தேதியன்று) மக்களே ஜோகன்னஸ்பர்க் நகர மக்கள் அவருக்கும் தானம் கஸ்தூரிபாய் காந்திக்கும் காலன் பாக்கிற்கும் ஒரு பிரிவுபசார விழா நடத்தினர்கள். அந்த விழாவின்போது சி. கே. டி. நாயுடு என்ற தமிழ்ப் பெருமகனர் அவர் சார்பாகவும், அவரது மனைவியார் சார்பாகவும் தமது நான்கு ஆண் மக்களையும் இந்தியாவிற்குச் சேவை செய்வதற்காக காந்திஜியிடம் தானம் வழங்கிய காட்சி காந்திஜியையும் கஸ்தூரிபாயையும் மட்டுமல்லாது அங்கிருந்த அத்துணை பேருடைய உள்ளத்தையும் உருக்கிவிட்டது. பின்னர், அங்கு அளிக்கப் பெற்ற பாராட்டுரைக்கு அண்ணல் பதில் அளிக்கையில் கூறினர்: ''நாயுடுவும் அவரது வாழ்க்கைத் துணைவியாரும் நீண்டகாலச் சிறைப் பறவைகள். இந்த நான்கு ஆண் மக்களையும் தத்துக் கொடுக்கும் அத்துணை சடங்குகளையும் செய்து, அவர்கள் மீதுள்ள உரிமைகளையும் பொறுப்பையும் எங்களுக்கு அவர்கள் வழங்கிவிட்டார்கள். இந்தப் பொறுப்பை ஏற்கும் தகுதி எங்களுக்கு இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இக் கடமையை நிறைவேற்ற எங்களால் இயன்ற முயற்சியெல்லாம் செய்வோம் என்ற உறுதியை மட்டும் நான் அளிக்கிறேன். டால்ஸ்டாய் பண்ணையிலும் பின்னர் போனிக்ஸிலும் நான் சத்தியாக்ரகிகளுக்காகப் பள்ளிகள் நடத்தியபோது இந்த நான்கு பேரும் என்னுடைய மாணவர்களாக இருந்திருக்கிறார்கள். திருமதி நாயுடு சிறை வாசத்தை ஏற்றபோது இந்த நால்வரும் ஜோகன்னஸ்பர்க்கிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இந்த மணிகளை இழந்து விட்டோமோ என்று நான் எண்ணினேன்; ஆனால் மீண்டும் அவை என்னிடம் திரும்பி வந்து விட்டன.'' தென்னப்பிரிக்க இந்தியர்கள் போராட்டத்தில் தமிழர்களுக்கு இவ்வளவு ஆர்வமும் அக்கரையும் இருந்ததால்தான், தென்னப்பிரிக்க அரசைக் கண்டித்து அந்தக் காலத்தில் வைசிராயாக இருந்த ஹார்டிஞ்ச் பிரபு வேறு எந்த நகரிலும் பேசாது சென்னையில் (1913 நவம்பர் 24-ஆம் தேதியன்று) பேசினர்.

இவ்வாறு அண்ணல் கொட்டிய அன்பிற்குத் தகுந்த பாத்திரர்களாகவே தமிழர்களும் நடந்து கொண்டனர்.

மற்ற மொழிகள் பேசுவோர் போராட்டத்தில் தீவிரமாகப் பங்கு கொள்கிறார்களா இல்லையா என்பதைக் குறித்துத் தமிழ் மக்கள் கொஞ்சமும் எண்ணிப்பார்த்த தில்லை. காந்திஜியின் போராட்டம் நியாய மாகத் தெரிந்தவுடனே அவர்கள் அப் போராட்டத் தீயில் ஆயிரந்தடவை மூழ்கி எழுந்திருக்கும் அளவு அஞ்சா நெஞ்சத்துடன் பாய்ந்தார் கள். சிறைக்குச் சென்றது மட்டுமல்லாது, போராட்ட நிதிக்கு ஏராளமான பணமும் திரட்டி வழங்கினார்கள். 1909-ஆம் ஆண்டெல்லாம் தமிழர் தலைவர்களில் யாரும் சிறைக்கு வெளியில் இல்லை. ''நாம் எதிர்பார்த்ததை யெல்லாம் தமிழர்கள் மிஞ்சி விட்டனர்'' என்று காந்தி ஜியே பன்முறை பாராட்டியிருக்கிறார். பிரிடோரியாப் பகுதி யிலோ வெளியில் தமிழர்களே இல்லை என்று கூறும் அளவிற்கு அவர்கள் கைதாகிக்கொண்டு வந்தனர். இவர் களில் பலர் தங்களுடைய குடும்பத்தினர் பிழைப்பதற்கு எத்த விதமான ஏற்பாடும் செய்யாது சிறைக்குச் சென்று விட்டார்கள். இப்பொறுப்பை அப்பகுதியில் உள்ள வணிகர் களே நிறைவேற்ற வேண்டும் என்று காந்திஜியும் கூறி விட்டார்.

தமிழர் தம் தகுதி

1909 ஜூனில், ''அஸ்வத் என்பவர் கடையின் பொறுப் பில் இருப்பதாக யார் யார் கூறுகிறார்களோ அவர்களெல் லாம் கைது செய்யப்படுவர்'' என்ற நிலை இருந்தது. இதனால் நாள் தோறும் ஒருவர் வீதம் தாம் அப் பொறுப்பில் இருப்பதாகக் கூறிக்கொண்டு கைதானார்கள். இவ்வாறு கைதானவர்களில் பெரும்பாலோர் தமிழர்களே. ''இதைக் கண்டு மற்ற இந்திய வகுப்பினர் வெட்கப்பட வேண்டும்'' என்று காந்திஜி கூறினர்.

வெட்கப்பட வேண்டும்

1909 அக்டோபரில் சென்னை மாநகருக்குச் சென் றிருந்த போலக், அப்போது இலண்டனில் இருந்த அண்ண லுக்குச் சென்னை மாநிலத்தில் பல்வேறு இடங் களில் நடைபெற்ற கூட்டங்களைப் பற்றியும் பெருமை மக்களுடைய ஆதரவைப் பற்றியும் தந்தி கொடுத்திருந்தார். 1896-ஆம் ஆண்டிலேயே காந்திஜி சென்னைக்கு வந்து சென்றிருந்தாராதலால் சென்னை மக்களைப் பற்றி ஓரளவு அறிந்திருந்தார். ஆகை

தமிழக மக்கள்

யால் போலக்கிற்கு எழுதிய பதிலில் ''இச்சிக்கலில் வியப் பளிக்கக் கூடியவாறு சென்னை தலையாய இடம் வகிக்கிறது. அங்குள்ள மக்கள் சிறந்த செயல் வீரர்களாக இருக் கின்றனர். ஒரு காரியத்தை அவர்கள் நூற்றுக்கு நூறு திருத்தமாகச் செய்வார்கள்; இல்லையென்றால் அதைச் செய்யமாட்டார்கள்'' என்று கூறியிருந்தார்.

தமிழக உதவி

தென்னப் பிரிக்கா விலிருந்து நாடு கடத்தப் பெற்று இந்தியாவிற்கு வந்த தமிழர்கள் கேட்பாரற்ற அனுதைகளாய்ப் போய்விடுமாறு தமிழகத்தி லிருந்த பெருமக்கள் பார்த்துக் கொண்டு இருந்து விடவில்லை. ஜி. ஏ. நடேசன் இதில் தீவிர கவனம் செலுத்தினார். இந்தியாவி லிருந்து கொண்டு நாடு கடத்தப் பெற்ற இந்தியர்களுக்கு அவர் செய்து வந்த உதவிகளையும் தென்னப்பிரிக்க இந்தியர் போராட்டத்திற்கு உதவியாக நிதி திரட்டி அனுப்பியதையும் காந்திஜி அந்தக் காலத்திலேயே பன் முறை பாராட்டியிருக்கிறார். 1910 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் 23-ஆம் தேதியன்று, டிரான்ஸ்வாலிலிருந்து நாடு கடத்தப் பெற்று இந்தியாவிற்கு வந்த தென்னப்பிரிக்க இந்தியர் களைத் திருப்பி அனுப்புவதற்காக, சென்னை விக்டோரியா மண்டபத்தில் ஒரு பெரிய பொதுக் கூட்டம் நடைபெற் றது. இந்தக் கூட்டத்திற்கு சர். எஸ். சுப்ரமணிய ஐயர் தலைமை வகித்தார்; திருமதி அன்னிபெசன்ட் இந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டார். அந்தக் காலத்திலேயே ஜி. ஏ. நடேசனுக்கும் காந்திஜிக்கும் அடிக்கடி கடிதப் போக்கு வரத்து நடைபெற்று வந்திருக்கிறது.

கோகலேக்குக் கடிதம்

தென்னப்பிரிக்காவிலிருந்து காந்திஜி கோகலேக்கு 1909 ஆம் ஆண்டு ஏப்ரல் 25-ஆம் தேதியன்று எழுதிய ஒரு கடிதத்தில் தமது தமிழ்ச் சகோதரர்களைப் பற்றிக் குறிப் பிட்டிருந்தார்: ''அண்மையிலெல்லாம் இந்தி யர்களைக் கைது செய்வதில் குறிப்பாகத் தமிழர்களைக் கைது செய்வதில் அதிகாரிகள் வெகு தீவிரமாக இருக்கி றார்கள். இந்தப் போராட்டத்தில் தமிழர்களை விட வேறு எவரும் சிறந்த பங்காற்றியதில்லை. தைரியசாலிகளான இவர்கள் மீண்டும் மீண்டும் சிறைக்குச் சென்று கொண்டே இருக்கிறார்கள். அஞ்சா நெஞ்சம் படைத்த தமிழர்

களின் உள்ள உறுதியைப் பணியவைக்க முடியாத ஆசியத் துறை அவர்களை ஒழித்துக் கட்டுவதுடன் நம்முடைய நிதி வசதிகள் வறண்டுபோகும் அளவிற்குச் செலவிழுத்துவிடப் பார்க்கிறது. ஆனால் என்ன நடந்தாலும் சரி தங்களுக்கும் தங்கள் மூலம் இந்தியாவில் உள்ள பொது மக்களுக்கும் தமிழ் ஆண்மக்களோ அல்லது அவர்களுடைய மனைவிமார்களோ சகோதரிகளோ தாய்மார்களோ நாம் வருந்தக் கூடியவாறு பணிந்துவிட மாட்டார்கள் என்ற உறுதி மட்டும் நான் கூறமுடியும்''.

ஆம், அவர்கள் பணிந்து விடவில்லை.

அவ்வாறு பணியாமல் போரிட்டதால் அவர்கள் கண்ட பலன் என்ன என்று சிலர் கேட்கலாம். அவர்களுக்கு ஒரு பலனுமே கிட்டவில்லையா? காந்திஜி தொடங்கிய சத்தியாக்ரகப் போராட்டத்தில் தமிழர்கள் பலர் சிறையில் வதைபட்டதும், சிலர் உயிர் நீத்ததும் தான் கண்டபலனு? இல்லை, அவர்கள் எதிர்பாராத ஒரு உயர்ந்த பலன் கிட்டத்தான் செய்தது. அங்கிருந்து அண்ணல் தாய்த் திருநாட்டிற்குத் திரும்பி வருவதற்கு முன்னரே, (அவர் கூறியது போல்) எந்தெந்தக் கோரிக்கைகளுக்காகத் தமிழர்கள் போராடினார்களோ அந்தக் கோரிக்கைகளையெல்லாம் அவர்கள் அடைந்தார்கள். அது மட்டும் அல்ல. தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழர்கள் சத்தியாக்ரகத்தினால் அடைந்த மற்ற அநேக அனுகூலங்களும் உண்டு. உதாரணமாக, பொருமையினாலும் சிறு சிறு கருத்து வேறுபாடுகளினாலும் பிளவுண்டு கிடந்த தமிழர் சமுதாயத்தில் ஒரே குறிக்கோளுக்காக ஒற்றுமையுடன் பாடுபடும் ஒரு புத்துணர்வு ஏற்பட்டது. தமிழர்களில் எவ்வளவு பெரிய வீரர்களும் வீராங்கனைகளும் இருந்தனர் என்பது உலகிற்குத் தெரியவந்தது. மொத்தமாகச் சொல்லப் போனால் தியாகம் என்னும் தீயில் குளித்து புது ஆன்மீக பலத்துடனும் பொலிவுடனும் தமிழர்கள் வெளியே வந்தார்கள்.

:o:

காந்திஜி தென்னப்பிரிக்காவிலிருந்து இறுதியாக இந்தியாவிற்குப் புறப்படவிருந்த சமயம்; தமிழ் மக்கள் அவருக்கு ஒரு பெரிய பிரிவுபசார விழா நடத்தினர்கள். அப்போது அவர் தமது உள்ளத்தைத் திறந்து, உணர்ச்சிகளைக் கொட்டி நிகழ்த்திய உரை தமிழர் வரலாற்றில் முத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகும். அவர் கூறினார்:

காந்திஜியின் பாராட்டு

"தமிழர்களை நான் சந்தித்தபோது எனது உடன் பிறந்தவர்களைச் சந்திப்பது போன்றே உணர்ந்தேன். எத்தனையோ ஆண்டுகளாக நான் போற்றி வளர்த்து வந்துள்ள மனோ உணர்ச்சி இது. அதற்கான காரணமும் மிக எளிது. இந்தியரிடையே உள்ள பல்வேறு பிரிவினரில் போராட்டத்தின் உக்கிரத்தைத் தாங்கியவர்கள் தமிழர்கள் தான் என்று நான் கருதுகிறேன். சத்தியாக்ரகத்தில் உயிர்த் தியாகம் செய்தவர்களில் மிக அதிகமான பேர் தமிழ்க் குலத்தைச் சேர்ந்தவர்களே. ஓர் அன்புச் சகோதரிக்கும் சகோதரனுக்கும் இரண்டு நினைவுச் சின்னங்கள் எழுப்புவதற்காகக் கல்லறையில் நடைபெற்ற ஒரு திறப்பு விழாவிற்கு இன்று காலையில் தான் நாம் சென்றிருந்தோம். இவர்கள் இருவருமே தமிழர்கள் தாம். இவர்களைத் தவிர, நாராயண சாமியின் எலும்புகள் டெலகோவா வளைகுடாவில் மூழ்கிக் கிடக்கின்றன. அவன் ஒரு தமிழன். நாடு கடத்தப் பெற்றவர்கள் தமிழர்கள். கடைசி வரை போராடியவர்கள், கடைசியாகச் சிறையிலிருந்து வெளியில் வந்தவர்கள் தமிழர்கள். தெருவில் விலை கூவி விற்பனை செய்த வாணிகத்தை அறவே இழந்தவர்கள் அனைவரும் தமிழர்களே. டால்ஸ்டாய் பண்ணையிலிருந்த சத்தியாக்ரகிகளில் பெரும் பாலானவர்கள் தமிழர்களே. எந்தத் தரப்பை எடுத்துக் கொண்டாலும் இந்தியாவின் மிகச் சிறந்த பரம்பரைக்கு மிகச் சிறந்த சான்று தாங்கள் தாம் என்பதைத் தமிழர்கள் மெய்ப்பித்திருக்கிறார்கள். எல்லாவும் மிகைப்படுத்தி

இதை நான் கூறவில்லை. ஆண்டவன் மீதும் சத்தியத்தின் மீதும் தமிழர்கள் காட்டி வந்துள்ள அளவுகடந்த நம்பிக்கை, நீண்ட பல ஆண்டுகளாக நமக்குச் சிறந்த உயிரூட்டும் சக்தியாக இருந்து உதவியிருக்கிறது. சிறைக்குச் சென்ற மாதர்களில் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. கைதாகத் தயார் என்று அறைகூவல் விடுத்து அதிகாரிகளை மீறியவர்கள், நியூகேசிலில் வீடு வீடாகச் சென்று, சுரங்கம் சுரங்கமாகச் சென்று, வேலை செய்யும் கருவிகளைப் போட்டு விட்டு வேலை நிறுத்தம் செய்ய முன்வருமாறு வேண்டிக் கொண்டவர்கள் யார்? யார் அவர்கள்? மீண்டும் தமிழ்ச் சகோதரிகளே. மாதர்களிடையே போராட்டத்திற்கு அணி வகுத்து வந்தவர்கள் யார்? நிச்சயமாகத் தமிழர்களே. ஒரு இராத்தல் ரொட்டியும் ஒரு அவுன்சுச் சர்க்கரையும் உண்டு வாழ்ந்து வந்தவர்கள் யார்? பெரும்பாலானவர்கள் தமிழர்களே. இந்த விஷயத்தில் கல்கத்தாவைச் சேர்ந்தவர் களுடைய தியாகத்திற்கும் நாம் உரிய பங்கை அளிக்க வேண்டும் என்றாலும் பெரும்பாலானவர்கள் தமிழர்களே. அந்தக் கடைசிப் போராட்டச் சங்கநாதத்திற்கு அவர்களும் மிகச் சிறந்த முறையில் செவி சாய்த்திர்களென்றாலும் தமிழர்களைப் போன்று அவ்வளவு சிறந்த முறையில் அல்ல. போராட்டம் முடிந்தபோது அவர்களும் கிட்டத்தட்டத் தமிழர்கள் அளவுக்கு வந்து விட்டனர் என்றாலும், தமிழர் களே கடந்த எட்டு ஆண்டுகளாக இப்போராட்டத்தைத் தாங்கி நிலை நிறுத்தியிருக்கின்றனர். தொடக்கத்திலிருந்தே அவர்களுடைய திறனை எடுத்துக் காட்டியிருக்கின்றனர். ஜோகன்னஸ்பர்க்கில் அவர்களுடைய எண்ணிக்கை மிகச் சொற்பந்தான். ஆனால், மீண்டும் மீண்டும் சிறைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டு பார்த்தாலும் அவர்களுடைய தொகையே அதிகமாக இருக் கும் என்று நான் கருதுகிறேன். மொத்தமாகச் சிறைக் குச் செல்ல வேண்டியிருந்த போதும், தமிழர்களே அதைச் செய்தனர். ஆகையால் தமிழர்கள் கூட்டம் ஒன்றுக்கு வரும்போது இரத்தபாசம் உள்ள உறவினர்களின் கூட்டம் ஒன்றிற்கு வருவதாகவே நான் உணர்கிறேன். அவ்வளவு ஆண்மை, அவ்வளவு நம்பிக்கை, அவ்வளவு கடமை உணர்வு, அவ்வளவு உயர்ந்த எளிமை தங்களிடம் இருக் கிறதென்பதைத் தமிழர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்ற னர். ஆயினும் அவர்கள் இவையனைத்தையெல்லாம் எளனளவும்

பகட்டாக வெளிக் காட்டிக் கொள்ளவில்லை. நான் பேசியது அவர்களுடைய மொழியில் அல்ல. அவர்களுடைய மொழியில் பேசவேண்டுமென்று எனக்கு எவ்வளவோ விருப்பம்தான். ஆனாலும் பேசமுடியவில்லை. எனினும் அவர்கள் தொடர்ந்து உறுதியாகப் போராடினார்கள். அது ஒரு மகத்தான, வளம் பொருந்திய அனுபவம். அதை எனது வாழ்நாள் இறுதிவரைக் கருவூலம் போல் போற்றுவேன். அவர்களுக்கு இந்த உடன் படிக்கையை நான் எப்படி எடுத்து விளக்கமுடியும்? அவ்வாறு நான் விளக்கவேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் அதே சமயம் இதை நான் விளக்கிச் சொல்ல வேண்டுமென்றால் இவ்வாறுதான் சொல்ல முடியும். அவர்களும் அவர்களைச் சேர்ந்தவர்களும் எதற்காகப் போராடினார்களோ அவைகள் எல்லாவற்றையும் இப்போது அடைந்து விட்டார்கள். அதிலும் பெரும்பாலும், அவர்கள் விதைத்த நல்லொழுக்கம் என்னும் சக்தியால் அடைந்து விட்டார்கள். பலனை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. தங்களுடைய மனச்சாட்சிக்குத் திருப்தி என்பதைத் தவிர, வேறு ஒரு பலனையும் எதிர்பார்க்கவில்லை. பிரிட்டிஷ் குடியேற்ற நாடு ஒன்றில் பிறந்தவர்கள் கேப் பகுதியில் நுழைய உரிமை இருக்கிறது என்பதை நிலை நாட்டுவதற்காக அவர்கள் போராடினார்கள். அதை அவர்கள் அடைந்துவிட்டார்கள். சட்டங்கள் நியாயமான முறையில் செயல்படுத்தப் படவேண்டுமென்று அவர்கள் போராடினார்கள். அதையும் அவர்கள் அடைந்து விட்டார்கள். ஆரஞ்சு ப்ரீஸ்டேட்டில் சட்டத்தை அமுல் நடத்துவதில் இன உணர்ச்சி இருப்பதை எதிர்த்து அவர்கள் போராடினார்கள். அதையும் அவர்கள் அடைந்து விட்டார்கள். மூன்று பவுன் வரி என்பது இப்போது கடந்த கால விவகாரமாகப் போய்விட்டது, திருமணச் சிக்கலைப் பொருத்த வரை, சிறைக்குச் சென்ற நமது அன்புச் சகோதரிகளெல்லாம் இன்று தங்களுடைய கணவர்களின் மனைவிமார்கள் என்று கூறிக்கொள்ளலாம். நேற்றோ, ஒரு நண்பர் வேண்டுமானால் அபிமானத்துடன் அவ்வாறு கூறியிருப்பாரேயொழிய, சட்டப்படி அவர்கள் மனைவிமார்கள் அல்ல.''

வள்ளுவர் பரம்பரையில் தோன்றிய தமிழ்ப் பெரும் மக்களை இவ்வாறு வானளாவப் புகழ்ந்தார் அண்ணல் காந்தி. இந்தியாவிலும் சரி, உலகிலும் சரி, வேறு எந்த இனத்தை

யும் இவ்வளவு உயர்வாக அவர் பாராட்டியிருப்பதாய் நாம் எந்த ஏட்டிலுங் காணவில்லை. தமிழனுக்கு இதைவிட வேறு என்ன நற்சான்று வேண்டும்? தொல்காப்பியரையும் வள்ளுவரையும் சங்ககாலப் புலவர்களையும் கம்பனையும் இளங்கோவையும் கண்ணகியையும் வள்ளியம்மாவையும் ஈன்று புறந்தந்த தமிழ்த் தாய்க்குச் சான்று தரத் தகுதி படைத்தோர் அண்ணலை விட வேறு யார் தாம் இருக்கிறார்கள்? ஆனால்.....

வேறு யாரையும்?

தமிழனின் இத்துணைச் சிறப்புக்களையும் கூறிய அஹிம்சா மூர்த்தி, அவர்களிடமிருந்த ஒரிரு குறைகளையும் சுட்டிக் காட்டாமற் போகவில்லை. வரலாற்று முக்கியத்துவம் மிக்க இதே பேருரையில் அவர் தொடர்ந்து கூறினார்: இந்தியாவில் உள்ள மற்ற வகுப்பினருக்கிடையே இருப்பது போன்றே தமிழர்களுக்குள்ளும் பொறுமை உணர்ச்சி இருக்கிறது. போராட்ட சம்பந்தமான விவகாரங்களில் இத்தகைய சிறுமை நிறைந்த பொறுமை உணர்வு அவர்களுக்கு இல்லை என்றாலும் போராட்டத்திற்கு அப்பாற்பட்ட காரியங்களில் இருந்தது. இந்த அற்பத்தனமான பொறுமை உணர்ச்சிகளும் கருத்து வேறுபாடுகளும் அகன்று விடும் என்றும், அதன் மூலம், அவர்கள், தங்களுடைய சொந்தக் கருத்திலும், அவர்களுடைய உயர்ந்த ஒழுக்கச் சிறப்பை எதிர்காலத்தில் அறியும் பேறு பெறப்போகிறவர்களின் கருத்திலும், இன்னும் உயர்வார்கள் என்றும் நம்புகிறேன். இந்தப் பொறுமை மட்டுமல்லாமல், மற்ற எல்லா இந்திய வகுப்பினரையும் போலவே இவர்களுக்குள்ளும் சிறு சிறு வாய்ச் சண்டைகளும் கைச் சண்டைகளும் நிறைய ஏற்படுகின்றன. தாய் நாட்டிற்குத் தங்களை அர்ப்பணிக்கத் தகுதியானவர்கள் என்பதை மெய்ப்பித்த தமிழர்களிடையே இருந்து இவைகள் எல்லாம் அகன்று விட வேண்டும்; இவைகளை அவர்கள் அகற்றிவிட வேண்டும் என்று விரும்புகிறேன். எல்லா வகுப்பினரையும் விடத் தமிழர்கள் தாம் தங்கள் மத்தியிலிருந்து இந்தச் சிறு சண்டைகளையும் சச்சரவுகளையும் அகற்றிவிட வேண்டும் என்பதை நான் எவ்வளவு வலியுறுத்திக் கூறினாலும் தகும். மேலும் நீங்கள் (தமிழர்கள்) ஒரு தலைவரைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களானால், அவரைப் பணிந்து பின்பற்ற வேண்டும். தெருவில்

தமிழரின் குறை

போவோர் வருவோருடைய கருத்துக்களை யெல்லாம் பொருட்படுத்தத் தொடங்கி விட்டீர்களானால், (நீங்கள்) எவ்வளவு பயனுள்ளவர்களாக இருக்க வேண்டுமோ அவ்வளவு பயனுள்ளவர்களாய் இருக்கமாட்டீர்கள். அது மட்டுமல்ல, இன்னொருவர் பலனை அடைந்துகொண்டு போய் விட்டால் அதற்காக நீங்கள் கவலைப்படக் கூடாது. இந்த நில உலகில் பலன் கிடைக்காவிட்டால் இதைக் காட்டிலும் பெரிய பலன் அப்பால் உள்ள உலகில் கிடைத்துவிடும். லோகாயதப் பலன் கருதி நாம் போராடவில்லை. உண்மையான சத்தியாக்ரகி லோகாயதப் பலனைக் குறித்து நினைக்க மாட்டான். பணம், செல்வம் பற்றி நீங்கள் கவலைப்படக் கூடாது. எப்போதுமே இதைக் காட்டிலும் உயர்ந்தவைகளைப் பற்றித் தான் சிந்திக்க வேண்டும். சமூகத்தில் உறைமோர் போல் இருந்து சமூக முழுவதையும் உயர்த்தக் கூடிய வர்களாக நீங்கள் விளங்க வேண்டும்..... இன்னும் ஒரு விஷயம். சென்னையைப் பற்றி ஓரளவு நான் அறிவேன். அங்குச் சாதி வேறுபாடுகள் எவ்வளவு கடுமையாக இருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். அந்தச் சாதி வேறுபாடுகளை இங்கேயும் கொண்டுவந்தீர்களானால் நீங்கள் தென்னைப்பிரிக்காவிற்கு வந்தது வீணே. சாதி முறைக்கும் சில உபயோகங்கள் இருக்கின்றன. ஆயினும் சாதி வேற்றுமை பாராட்டுவதென்பது அதைத் தீய வழியில் பயன்படுத்துவதாகும். அந்த அளவுக்கு நீங்கள் சாதி வேறுபாடுகளைப் பாராட்டி, சிலரை உயர்ந்த சாதிக்காரர் களாகவும் மற்றும் சிலரைத் தாழ்ந்த சாதிக்காரர்களாகவும் பிரிக்கத் தொடங்கினால் அது உங்கள் அழிவில் தான் போய் முடியும். நீங்கள் உயர்ந்த சாதியையோ தாழ்ந்த சாதியை யோ சேர்ந்தவர்களல்ல; எல்லோரும் இந்தியர்கள், எல் லோரும் தமிழர்கள். இதை மறந்து விடக் கூடாது. தமிழர்களைப் பற்றி நான் கூறினேன். ஆனால் இது இந்திய சமூகம் முழுவதற்குமே பொருந்தும்; ஆனால் உங்களிட மிருந்தே பெரும்பாலான காரியங்கள் எதிர்பார்க்கப் படுவ தால், உங்களுக்கே பெரும்பாலும் பொருந்தும்.''

தமிழர்கள் அளித்த பிரிவுபசார விழாவில் இவ்வாறு காந்திஜி கூறினார். தமிழர்களின் உயர்ந்த, சிறந்த குணங் களை வானளாவப் போற்றிய அண்ணல், அவர்களிடமிருந்த குறையையும் கூறத் தயங்கவில்லை. அவர் தான் காந்தி. தமிழர்கள் திருந்த வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்

துடனேயே அவர் இக்குறைகளை எடுத்துக் கூறினார். ஆனாலும் இன்னும் இக்குறைகள் அகலவில்லை என்பது ஒரு புறமிருக்க, ஒரு வகையில் தமிழர்கள் இரத்

நுணுக்கமாகப் புரிந்தார்

தத்தில் ஊறியிருப்பது போன்று நமக்கெல் லாம் தோன்றும் இக்குறைகளை அக்காலத் திலேயே நுணுக்கமாக காந்திஜியால் கண்டு பிடிக்க முடிந்ததை நினைத்துப் பார்க்கும் போது அவர் தமிழர்களுடன் எவ்வளவு நெருங்கிப் பழகியிருக்கி ரூர் என்பது தெளிவாகத் தெரியவரும். இந்த உறவு சாதாரண உறவாக இல்லாமல், ஒரு தெய்வீக உறவாக, ஆன்மீக உறவாக, இரத்தக் கலப்பினால் ஏற்படும் உறவிற்கு மேம்பட்ட உறவாக இருந்து வந்திருக்கிறது.

'தமிழரைப் பின்பற்றுக'

மற்றொரு முறை (1909 மே 24) பெரும்பாலும் சூசராத்தியர்கள் வந்திருந்த கூட்டமொன்றில் பேசுகையில் காந்திஜி சொன்னார். ''நமக்கு என்று ஒரு பத்திரிகை இருக்கிறது: அதில் நாம் பிரச்சா ரம் செய்யவும் முடிகிறது. ஆனால் தமிழர் களுடைய தாய் மொழியில் பத்திரிகை எதுவும் இல்லை. ஆனாலும் அவர்கள் காண்பிக்கும் தைரி யந்தான் என்னே! எவ்வளவு சிறப்பாக அவர்கள் தங்க ளுடைய கடமையைச் செய்கிறார்கள்! ஆண்டவன் மீது அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அவர்களிடமிருந்து நாம் பாடங் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்ற வேண்டும். அவ்வாறு செய் தால் வெகு விரைவில் நமக்கு வெற்றி கிட்டும்''.

தமிழருக்குக் கைம்மாறு

நாகப்பனும் நாராயணசாமியும் உயிர் நீத்த சமயத் தில் காந்திஜி சொன்னார்:- ''மற்ற இந்தியர்கள் தமிழர் களுக்குச் செலுத்த வேண்டிய கடன் நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டு வருகிறது. அதன் புகழ் மேலும் மேலும் விசாலமடைந்து கொண்டு போகிறது. இதெல்லாம் நடந்த தற்குப்பின், தமிழர் தொண்டிற்கு நாம் எவ்வாறு சரியான கைம்மாறு செய்ய முடியும்? அது கற்பிக்கும் பாடத்தை மற்றவர்கள் பின்பற்றி, அரவம் இல்லாமல் தாய் நாட்டிற் காகச் சேவை செய்வது தான் சிறந்த கைம்மாறு. இதில் தவறினாலோ இந்தியர்கள் தங்களையே அவமதிப்பிற்குள் ளாக்கியவர்கள் ஆவார்கள்.''

தமிழர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதும் அவர் களைப் பாராட்டிப் பேசுவதும் காந்திஜிக்கு முக்கனி உண்டது போல் இனித்தது. ஒரு நாள் (1908 டிசெம்பர் 14) ஜோகன்னஸ்பர்க்கில் தமிழர்கள் வரவேற்பு ஒன்றிற்கு காந்திஜி சென்றிருந்த போது, அவருக்குத் தமிழர்கள் ஒரு பூமாலை சூட்டினர். காந்திஜி அப்பூமாலையைத் தம் கழுத்திலிருந்து எடுத்து, கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஒரு தமிழ்ப் பெரியவர் கழுத்தில் சூட்டி, ''இந்தப் பூமாலையைப் பெற்றுக் கொடுத்தவர்கள் உண்மையில் தமிழர்கள் தாம். இப்போராட்டத்தில் தமிழர் சமுதாயம் தனது தகுதியைத் திறம்பட மெய்ப்பித்திருக்கிறது. ஆகையால் நீங்கள் எனக்குச் சூட்டிய இப்பூமாலையை உங்களுடைய தலைவருக்கே திருப்பிச் சூட்டுகிறேன்!' என்று கூறினர். தமிழ்க் குலத்தின் மீது எவ்வளவு பெரிய மதிப்பு இருந்தால் காந்திஜி இவ்வாறு செய்திருப்பாரென்பது யாரும் எளிதில் யூகிக்கக் கூடியதே.

பூமாலை யாருக்கு?

வேறு எந்த இனத்தவரின் வீரத்தையாவது பாராட்ட நேர்ந்தால் அதைத் தமிழர்களுடைய வீரத்துடன் ஒப்பிட்டுக் கூறுவது தான் காந்திஜியின் வழக்கமாய் இருந்தது. ஒரு முறை பார்சிகளின் வீரத்தைப் பற்றிப் பாராட்டி எழுதிய போது, ''தமிழர்களைப் போன்றே பார்சிகளையும் கடைசி மனிதர் வரை போராடினார்கள்'' என்று நாம் கூறலாம்... தமிழர்கள் முன்னும் பார்சிகள் முன்னும் மற்ற இந்தியர்கள் - முஸ்லிம்கள், இந்துக்கள் ஆகியோர் - வெட்கத்தால் தலை குனிய வேண்டும். இந்த இரண்டு வகுப்பினரும் நம் மத்தியில் இருக்கும்போது, இந்தியர்களுடைய தைரியத்தைத் தூண்டுவதற்காக மற்றவர்களுடைய முன்னுதாரணத்தை எதற்கு நாம் எடுத்துக் காட்ட வேண்டும்? தமிழர்களும் பார்சிகளும் தங்களுக்கென்று மாபெரும் வெற்றிக் கொடி நாட்டி விட்டனர்; போராட்டத்தின் இறுதியில் இந்தியர்கள் அனைவருமே இதனால் பயன் அடைவார்கள் என்றாலும் பெருமை அவர்களுக்கு மட்டுந்தான். அவர்கள் தான் ''ஆட்சியாளர்களாய்'' இருப்பார்கள். அந்த உயர்ந்த நிலையைப் பெற அவர்களுக்கு மட்டுந்தான் உரிமை உண்டு, நாமெல்லோரும் அவர்களுடைய குடிமக்களாகவே கருதப் பெறுவோம்'' என்று (20-2-1909) குறிப்

பெருமை அவர்களுக்கே

பிட்டிருந்தார். தென்னப்பிரிக்க இந்தியர் போராட்டத்தில் மூன்றும் முறையாகச் சிறைக்குச் செல்ல நேர்ந்த போது, இந்தியர்களில் மற்ற வகுப்பினரெல்லாம் தயங்கிப் பின் வாங்கிய போது தமிழர்களும் பார்சிகளும் மட்டுமே மிகவும் உறுதியாக இருந்தனர் என்பது இங்குக் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

ஜி. ஏ. நடேசனுக்கு (ஜூலை 21, 1910 இல்) காந்திஜி எழுதிய கடிதத்தில், ''நாடு கடத்தப்பெற்ற அஞ்சா-நெஞ்சம் படைத்த சத்தியாக்ரகிகளே உங்களுடைய தமிழ் நாட்டவர் என்று நீங்கள் கூறுகிறீர்கள்: ஆனால் அவர்கள் உங்கள் நாட்டாரைப் போன்றே எனது நாட்டவரும் ஆவார்கள் என நான் உரிமை கொண்டாடுகிறேன்'', என்று கூறியிருந்தார்.

எனது நாட்டவர்

—○—

தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கு இந்தியர்கள் கருத்து என்ன வென்பதைத் தெளிவுபடுத்தவும் இந்தியர்கள் உள்ளத்தில் உரிமை உணர்வை வளர்க்கவும் காந்திஜி ''இந்தியன் ஒப்பினியன்'' என்ற ஒரு வார சஞ்சிகையைத் தோற்றுவித்திருந்தார்: டர்பனுக்கு 13-ஆவது மைல் தூரத்தில் காந்திஜி நிறுவிய போனிக்ஸ் பண்ணையில் ஒரு அச்சகத்தை நிறுவி இந்த சஞ்சிகையை அச்சிட்டார்கள். ''இந்தியன் ஒப்பினியன்'' என்ற சொற்றொடருக்குத் தமிழில் ''இந்தியர்கள் கருத்து'' என்பது பொருளாகும். இச்சஞ்சிகை முதலில் ஆங்கிலம், குசராத்தி, இந்தி, தமிழ் ஆகிய நான்கு மொழிகளிலும் வெளிவந்தது என்ற உண்மை தமிழர்களின் கருத்தை உருவாக்குவது முக்கியமென அண்ணல் உணர்ந்திருந்ததை எடுத்துக் காட்டுகிறது. ஆயினும் சிறிது காலத்திற்குப் பின்னர், இந்தியிலும் தமிழிலும் கட்டுரைகள் எழுதும் அளவுக்குத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள், அச்சுக் கோர்க்கக்கூடிய கம்போசிட்டர்கள் (இவர்கள் மேற்கண்ட பண்ணையில் வந்து குடியேறக் கூடியவர்களாகவும் இருக்க வேண்டி இருந்ததால்) கிடைக்கவில்லை. மேலும் இவைகளுக்கான வரவு செலவு கட்டுப்படியாகவும் இல்லை. ஆகையால் இந்த இரு மொழிகளில் சஞ்சிகையை வெளியிட இயலாமற் போய்விட்டது. இந்த இன்னல்களையெல்லாம் சமாளித்து தமிழ், இந்திப் பகுதிகளை நீடித்துக் கொண்டுவர காந்திஜி எவ்வளவோ முயன்றார். தமிழில் அச்சுக் கோர்ப்பதற்கு ஆள் இல்லாதிருந்த பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காகத் தமது நெருங்கிய உறவினரான கோகுல்தாஸ் என்பவரை குசராத்தி, ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் தமிழும் கற்குமாறு வலியுறுத்தினர்.

தமிழ் இதழ் நின்றது

அந்தந்த வாரப் பஞ்சாங்கத்துடனும் முதல்வார விலை வாசி நிலவரத்துடனும் தென்னப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குப் புறப்படும் கப்பல்களைப் பற்றிய விவரங்களுடனும் இந்தப் பத்திரிக்கையில் தமிழ்ப் பகுதி வெளிவருவதுண்டு. மேலே பிள்ளையார் சுழி போட்டு அதற்கடியில் ''கடவுள் துணை'' என்று எழுதப்பெற்று அதற்குங் கீழ் ''இந்தியன் ஒப்பினியன்'' என்று பத்திரிக்கையின் பெயர் தமிழில் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப் பெற்றிருந்தது.

கடவுள் துணை

இப்பத்திரிகையில் தமிழில் வெளிவந்த செய்திகளைத் தாமே படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமென்பது அண்ணலுடைய தணியா ஆசை. 1905 ஏப்ரல் 17-ஆம் தேதியன்று சகன்லால் காந்திக்கு ஜோகன்ஸ்பர்க்கிலிருந்து அவர் எழுதிய கடிதத்தில், ''நான் மிகவும் சுறுசுறுப்பாகத் தமிழைக் கற்றுக் கொண்டிருக்கிறேன். எல்லாம் சுமுகமாக நடைபெற்றால் தமிழ்க் கட்டுரைகளை இரண்டே மாதங்களில் என்னால் ஓரளவு புரிந்துகொள்ள முடியும்'' என்று எழுதியிருக்கிறார். இதற்காக அவர் போப்பின் தமிழ் இலக்கணம் உள்பட எல்லா நூல்களையும் தரவழைத்துப் படித்தார். கட்டுரைகளைத் தாம் புரிந்து கொள்வது மட்டுமல்லாமல் தமிழ்ப்பகுதிக்குத் தாமே ஆசிரியராக இருந்து அப்பத்திரிகையைக் கொண்டுவர விரும்பியும் அவர் இவ்வாறு ஆயத்தம் செய்துவந்தார். இதற்காக மகன்லாலையும் ஆயத்தம் செய்ய முயன்றார். ஆயினும் ஒரு கட்டத்தில் இந்தி, தமிழ் இதழ்கள் இரண்டுமே அவர் விரும்பிய தரத்தில் வெளிவர முடியாமற் போய்விட்டன. குசராத்தி அல்லது ஆங்கிலத்தில் காந்திஜி எழுதிய கட்டுரைகளைத் தமிழில் மொழி பெயர்ப்பதற்குக்கூட ஆள் கிடைக்கவில்லை. ஆகையால் வேறு வழியின்றி மிகுந்த தயக்கத்துடனும் வருத்தத்துடனும் அவைகளை நிறுத்திவிட்டார்.

பெருமுயற்சி

காந்திஜி, ''இந்தியன் ஒப்பினியன்'' சஞ்சிகையில், அவ்வப்போது தமிழகப் பெரியார்களைப் பற்றித் தாமே சுவையான மிகு கட்டுரைகள் வரைந்து புகழ்ந்து போற்றியிருக்கிறார். உதாரணமாக, தமிழகத்தில் கும்பகோணத்தில் பிறந்து திருவாங்கூர் சமஸ்தான திவான் ஆன சர் டி. மாதவராவைப் பற்றி 21-10-1905-ஆம் தேதி ''இந்தியன்

தமிழகப் பெரியார்கள்

ஒப்பினியன்'' இதழில் எழுதிய கட்டுரையில் மாதவராவ் மட்டும் இருந்திராவிட்டால் திருவாங்கூர் சமஸ்தானத்தையே திருவாங்கூர் மன்னர் இழந்திருப்பார் என்று புகழ்ந்துரைத்திருக்கிறார். வறுமையில் வதங்கிய ஒரு குடும்பத்தில் தோன்றி தமது அயரா உழைப்பாலும் நுண்ணறிவாலும் உயர் நீதி மன்ற நீதிபதிப் பதவியையே எட்டிப் பிடித்த சர் டி. முத்துசாமி ஐயரைப் பற்றி, காந்திஜி எழுதிய (11-11-1905) கட்டுரையில் ''இன்று கூட அவருடைய தீர்ப்புகள் மிகவும் நியாயமானவையாகவும் நெறி பிறழாதவையாகவும் மிகச் சிறந்த ஆங்கில நீதிபதிகளின் தீர்ப்புக்களுக்கு எந்தவகையிலும் தரத்தில் குறையாதவையாகவும் மதிக்கப் பெறுகின்றன'' என்று போற்றியிருக்கிறார். சென்னையைச் சேர்ந்த பெயர் பெற்ற பேராசிரியரான டாக்டர் சத்தியநாதன், எம்.ஏ., எல்.எல்.பி., காலமான போது அவருக்கு அஞ்சலி தெரிவித்து எழுதிய கடிதத்தில், ''அவருடைய அறிவுத் திறனுக்காகவும் உள்ளத்தின் பண்பிற்காகவும் எல்லாத் தரப்பினராலும் பெரிதும் மதிக்கப் பெற்றார். கல்வித்துறைத் துணை இயக்குநராக அவரை நியமிக்கும் அளவிற்கு, அவர் மீது அரசாங்கத்திற்கு நல்ல நம்பிக்கை இருந்தது'' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

—: o :—

இந்தியாவில்

1896-இல் காந்திஜி இந்தியாவிற்குப் புறப்பட்டு வருவ தற்கு முதல்நாள் அதாவது, 1896-ஜூன்4-ஆம் தேதியன்று,

முதல் நாள்

நேடால் இந்திய காங்கிரஸ் செயலாளர் என்ற முறையில் அவர் இந்தியர்களுக்குச் செய்த சேவைகளைப் பாராட்ட டர்பனைச் சேர்ந்த குசராத்திகளும் தமிழர்களும், அந்நகரில் உள்ள இந்திய காங்கிரஸ் மண்டபத்தில், ஒரு கூட்டம் நடத்தினர். மிகவும் உற்சாகமாக நடைபெற்ற அக்கூட்டத்தில், பாராட் டுரைகளுக்கு மறுமொழி அளித்த காந்திஜி, காங்கிரசில் அது வரை தமிழர்கள் அதிக அக்கறை காண்பிக்கவில்லை யென்ப தைச் சுட்டிக்காட்டி, இனி மேலாவது காங்கிரசில் அவர்கள் அதிகமாகச் சேரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆகவே, 1896-இல் அவர் சென்னைக்கு வந்தவரை நேடால் இந் தியக்காங்கிரசில் தமிழர்களுடைய பங்கு அவ்வளவு அதிகமாக இல்லை என்பது பெறப்படுகிறது; ஆனால் அதன் பின் படிப் படியாக அவர்களுடைய எண்ணிக்கையும் ஆர்வமும் கூடின. அவர் சென்னைக்கு வருகை புரிந்தது இதற்கு ஒரு தூண்டுத லாய் இருந்திருக்கக் கூடும்.

இந்தியா புறப்பாடு

தமது குடும்பத்தினரை அழைத்துக் கொண்டு செல்வ தற்காகவும் இந்தியாவில் இருந்த அதிகார வர்க்கத்தினருக் கும் பொது மக்களுக்கும் தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியர்களின் இன்னல்களை எடுத்துக் கூறுவதற்காகவும் 1896-ஜூன் 5-ஆம் தேதி யன்று மோகன்தாஸ் இந்தியாவிற்கு புறப்பட் டார். தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த முக்கிய இந்தியப் பிரமுகர்கள், தங்கள் சார்பில் இந்தியாவில் தென்னப்பிரிக்க இந்தியர்களின் அல்லல்களை எடுத்துக் கூற, எம். கே. காந்தியை நியமித்திருப்பதாக, எழுத்துமூலம் ஒரு சான்றை அளித்து அனுப்பியிருந்தார்கள். இதில் ஏ. சி. பிள்ளை, கே. எஸ். பிள்ளை (அண்டு கம்பெனி), நாராயண பத்தர்

முதலிய தமிழர்கள் உள்பட நாற்பத்தியோரு பேர் கையொப்பமிட்டிருந்தார்கள்.

அண்ணலின் புனிதபாதங்கள் தமிழக மண்ணில் முதன் முதலாகப் பட்ட தேதி 1896 ஆம் ஆண்டு அக்டோபர் 14 ஆகும். அப்போது அவருக்கு வயது 27 ஆண்டுகள் முடிந்து 12 நாட்களாகியிருந்தது. எதிர்காலத்தில் எத்தனையோ முறை அவர் இச் சென்னை மாநகருக்கு மாபெருந் தலைவராக, தடபுடலான வரவேற்புடன், வந்திறங்க வேண்டியிருக்கும் என்பதை அன்று இறைவன் ஒருவர்தாம் அறிந்திருப் பார்.

தமிழகத்தில் புனிதபாதம்

அந்த இளம் வயதிலும் அண்ணல் ஒரு தலைவராகவே சென்னையில் வந்திறங்கினர். அவருடைய சொற்பொழிவுகளை யும் அறிக்கைகளையும் இங்கிருந்த செய்தித்தாள் கள் முக்கியத்துவங் கொடுத்து வெளியிட்டன. அவைகளைப் பற்றித் தலையங்கங்களும் தீட்டின. ராய்ட்டர் செய்தித்தாபனம், அவரைப் பற்றி இலண்டனுக்குச் செய்திகள் அனுப்பியது. அது இலண்டனி லிருந்து தென்னப்பிரிக்காவிற்கு அனுப்பிய தவறான செய்தி களின் காரணமாக அவர் பட்ட அல்லல் ஒரு துன்ப வரலாறு ஆக முடிந்தது உலகம் அறிந்ததே.

அன்றும் தலைவர்தான்

கப்பல் பயணம் செய்த ஒரு மாதகாலமும் தமிழையும் உருதுவையும் அவர் கற்றுக்கொண்டு வந்தார். கல்கத்தா வில் வந்து இறங்கி இரயிலில் ராஜ்கோட் சென்று அங்கு, தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த பிரிட்டிஷ் இந்தியர்கள் பட்ட துயரை-கப்பலி லேயே எழுதி வந்ததை-ஒரு துண்டுப் பிரசுர மாக அச்சிட்டார். இது தென்னப்பிரிக்காவில் அப்போது வாழ்ந்த ஒரு இலட்சம் இந்தியர்கள் சார்பில் இந்தியப் பொது மக்களுக்கு விடுக்கப்பெற்ற ஒரு வேண்டுகோளாக அமைந்திருந்தது. பச்சை அட்டை போடப் பெற்றிருந்த தால் இது பச்சைப் பிரசுரம் எனப் பெயர் வழங்கலாயிற்று. அந்தக் காலத்தில் இந்தியா முழுவதும் 'அடிபட்ட' அரசியல் வெளியீடு இதைவிட வேறொன்றும் இல்லை என்று கூறிவிடலாம். நேடால், கேப்காலனி, டிரான்ஸ்வால், ஆரஞ்சு ப்ரீஸ்டேட் ஆகிய தென்னப்பிரிக்க குடியேற்ற

தமிழ் கற்றார்

நாட்டுப் பகுதிகளில் இந்தியர்கள் அடைந்த அல்லல்களை காந்திஜி விவரமாக-பத்திரிகைச் செய்திகளின் மேற்கோள் களுடன்—இந்தவெளியீட்டில் வெளியிட்டிருந்தார். பாலசுந்த ரத்தின் கதையும் மிகவும் விவரமாக அளிக்கப்பெற்றிருந்தது. இந்தக் குறைபாடுகளையெல்லாம் எவ்வாறு தவிர்ப்பது என்ப தில் அப்போதும் காந்தி அஹிம்சா காந்தியாகவே ''இந்தியர் கள் தாக்கப்பட்ட நிகழ்ச்சிகளைப் பொருட்படுத்துவதில்லை என்பதுதான்நாங்கள் கடைப்பிடிக்க விரும்பும் செயல் முறை'' என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் அந்தக் காலத்தில் இந்த வாசகத்தில் உள்ள ஆழ்ந்த நுண்பொருளை - அஹிம்சையை - எத்தனை பேர் தான் புரிந்து கொண்டார்களோ! இராஜ் கோட்டிலிருந்து பம்பாய்க்கும் புனேவுக்கும் சென்று ராணடே, பத்துருதீன் தயாப்ஜி, பெரோஸ்ஷா மேத்தா, லோகமான்ய திலகர், டாக்டர் பண்டார்கார் ஆகிய பெரியோர்களைச் சந்தித்து அவர்களிடம் தென்னப்பிரிக்க இந்தியர்களின் இன்னல்களை எடுத்து விளக்கி அவர்களுடைய ஆதரவைப் பெற்றுக்கொண்ட பின் சென்னைக்கு காந்திஜி வந்து சேர்ந் தார். (இங்கிருந்து கல்கத்தாவிற்குச் சென்று சுரேந்திரநாத் பானர்ஜி, மகாராஜா ஜோதீந்திர மோகன் தாகூர், ''இங்கிலீஷ் மேன்'' என்ற நாளிதழின் ஆசிரியர் சாண்டர்ஸ் முதலியோரைச் சந்தித்துவிட்டு அங்கிருந்து பம்பாய்க்குப் போய் குடும்பத்துடன் கப்பலேறி மீண்டும் தென்னப்பிரிக்கா சென்றார்.)

அண்ணலின் வருகையைக் குறித்து, அவர் இங்கு வந்து சேர்ந்த மூன்று நாட்களுக்குப் பின், ''இந்து'' (17-10-1896) ஓர் அழகான குறிப்பு எழுதியிருந்தது.

''இந்து'' வரவேற்பு

''தென்னப்பிரிக்காவிலுள்ள நம்முடைய நாட்டி னரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியான திரு காந்தி, தாம் யார் தரப்பைத் திறமையாக எடுத்துரைக்கிறாரோ அவர்களுக்கு நம்முடைய நகர மக்க ளின் ஆதரவைப் பெறத் தற்போது இந்நகரில் இருக்கிறார். விரைவில் அவர் இங்கு ஒரு பொதுக் கூட்டத்தில் உரை யாற்ற எண்ணியுள்ளார் என்று தெரிகிறது. கடலுக்கு அப்பால் உள்ள நம் நாட்டு மக்கள் மீது நாம் எவ்வளவு மனப்பூர்வமான, நல்லுறவோடு கூடிய, சகோதரத்துவ உணர்ச்சி கொண்டிருக்கிறோம் என்பதை அப்போது அவர் காணமுடியும் என்று நாம் உறுதியாக நம்புகிறோம்,'' என்று ''இந்து'' நம்பிக்கை தெரிவித்திருந்தது.

பெரிய நியாயாதிபதியாக விளங்கிய ஜஸ்டிஸ் சுப்ரமணிய ஐயர், புகழ் பெற்ற வழக்கறிஞர்களாகச் சுடர்விட்ட நார்ட்டன், பாஷ்யம் ஐயங்கார் போன்ற வர்கள், ''இந்து'' நாளிதழின் ஆசிரியர் ஜி. சுப்ரமணிய ஐயர், ''மெட்ராஸ் ஸ்டாண்டர்டு'' ஆசிரியர் பரமேஸ்வரன் பிள்ளை காங்கிரசைத் தோற்றுவித்தவர்களில் ஒருவரான அனந்த சார்லு ஆகியோரின் மனத்தையெல்லாம் இந்த இளைஞர் கவர்ந்து அவர்களைத் தமது ஆதரவாளர்களாகவும், நண்பர்களாகவும் ஆக்கிக்கொண்டார். (மேற்கண்ட இரண்டு ஆசிரியர்களும், ஆனந்த சார்லுவும் அவரைப் பின்னல் பொதுக்கூட்டத்தில் பாராட்டிப் பேசினார்கள்.) தென்னப் பிரிக்காவிலுள்ள இந்தியர்களுடைய நிலைமையை எடுத்துச் சொல்வதற்காகச் சென்னை மகாஜன சபையின் சார்பாக ஒரு பொதுக்கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று வெளியிடப்பெற்ற அறிக்கையில் நாற்பது பெரிய மனிதர்கள் - சமுதாயத்தில் பல்வேறு தரப்பையும் சேர்ந்தவர்கள் - கையொப்பமிட்டிருந்தார்கள். முதலாவது கையெழுத்து அப்போது சென்னையில் பெரிய செல்வந்தராகத் திகழ்ந்த ராஜா சர் இராமசாமி முதலியார் கையொப்பமாகும்.

தலைவரின் கரு

பிற்காலத்தில் அரசியல் உலகத்தில் தனிப் பெருந்தலைவராக விளங்குவதற்கான ''கரு'' அந்த இருபத்து ஏழாம் வயதில் காந்திஜியிடம் இருக்கத்தான் செய்தது. அவருடைய பாணியே தனி பாணியாக இருந்தது. அவர் நிகழ்த்திய சொற்பொழிவை, அவர் எழுதிய கடிதத்தை, இன்று படித்துப் பார்த்தாலும் அதில் ஓரிரு சொற்களைக்கூட மாற்றுவது கடினம். ''நான் இப்போது எனது அறிக்கையில் கூறும் ஒவ்வொரு சொல்லையும் என்னால் மெய்ப்பிக்க முடியும்'' என்று அப்போதே உறுதியாகக் கூற அவரால் முடிந்திருக்கிறது. அந்த இளம் வயதிலும் கொஞ்சங்கூட உணர்ச்சி வயப்படாது அவர் பேசியது அரசியலில் நுழைய முன் வரும் இளைஞர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகும். இவருடைய வருகையானது சென்னை நகரம் தவிர வெளிமாவட்டங்களிலும் எதிரொலியை ஏற்படுத்தியிந்ததென்பது இவருடைய பொதுக்கூட்டத்திற்கு ஆதரவாகச் சேலம் முதலிய நகரங்களிலிருந்து வந்த தந்திகளிலிருந்து தெரிகிறது.

பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாகவே, சென்னை நாளிதழ்கள் அவருடைய வருகையின் நோக்கத்தைப் பற்றி ''விமர்சனம் செய்து கட்டுரைகள் எழுதியிருந்தன. ''மெட்ராஸ் மெயில்'' எழுதியிருந்தது: ''தென்னப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் இந்தியர்களின் குறைகளை எடுத்துக் கூறிவருபவரும் இது குறித்து அண்மையில் ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருப்பவருமான எம். கே. காந்தி பாரிஸ்டர்-அட்-லா தற்போது சென்னையில் இருக்கிறார். சமரச முயற்சிகளால் பிரிட்டிஷ் இந்தியரின் நிலையை உயர்த்த முடியும் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. 'காந்தியின் பிரசுரம் உண்மையானதல்ல; சில பகுதிகளில் அது உணர்ச்சியைத் தூண்டும் நோக்கத்துடன் எழுதப்பெற்றிருக்கிறது!' என்றெல்லாம் ஆங்கில இதழ்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. ''டைம்ஸ் ஆப் இந்தியா'' விற்கு அனுப்பிய கடிதம் ஒன்றில் இதை காந்தியே மறுத்திருக்கிறார். அவருடைய பிரசுரத்தை ஒருமுறை பார்த்தாலே அது இந்தச் சிக்கலைப் பற்றிய சரியான, நியாயமான அறிக்கை என்பது தெரியவரும்.... காந்திக்கு நம்முடைய அனுதாபங்களெல்லாம் உண்டு. ஆனால் இப்போது தென்னப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் இந்தியர்களின், அதாவது தொழிலாளர்களின் நிலையைக் காணும் போது மேற்பட்டவர்களின் குறைகளை எப்படி அகற்ற முடியும் என்பதைக் கண்டுபிடிப்பதுதான் கடினமாக இருக்கிறது... திங்கட்கிழமையன்று நடைபெறும் கூட்டத்திற்கு ஏராளமானவர்கள் வரவேண்டும்''.

பொதுக் கூட்டம்

26-ஆம் தேதி மாலை பச்சையப்பன் மண்டபத்தில் பி. அனந்தசார்லு தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு ஜஸ்டிஸ் சுப்பிரமணிய ஐயர், சங்கர ஐயர், ஜே. ஆடம், என். சுப்ரமணியம் உள்பட ஏராளமான பெரிய மனிதர்கள் வந்திருந்தனர். (பின்னால் இந்தநிகழ்ச்சியைப் பற்றி காந்திஜி தமது ''சத்திய சோதனை''யில் எழுதுகையில், ''பொதுக் கூட்டம் டாக்டர் சுப்ரமணியம் தலைமையில் நடந்ததாக எனக்கு ஞாபகம்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அது அனந்தச்சார்லு தலைமையில் நடைபெற்றது.) காந்திஜியின் உரை சற்று நீளமாகவே இருந்ததென்றாலும் கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் அதைக் கவனமாகவும் ஆர்வத்துடனும்

கேட்டார்கள். இந்தக் கூட்டத்தின் நோக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து சேலம், திருச்சிராப்பள்ளி, ஸ்ரீரங்கம், கன்னனூர் முதலிய இடங்களிலிருந்து வந்திருந்த தந்திகளையும் கடிதங்களையும் டி. ரெங்கச்செட்டியார் படித்தார். இதேபோன்று ஆதரவைத் தெரிவித்தும் காந்திஜியின் முயற்சிகள் வெற்றியடைவதற்கு நல்வாழ்த்துக் கூறியும் ராஜா சேதுபதியிடமிருந்தும் ஒரு தந்தி வந்திருந்தது. (1893-இல் விவேகானந்தரை அமெரிக்காவிற்கு அனுப்பவும் சேதுபதி பெரும் முயற்சி எடுத்துக்கொண்டார் என்பதிலிருந்து அக்காலத்தில் பொது விவகாரங்களில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு புலனாகும்.) இந்தக் கூட்டத்தில் பரமேசுவரன் பிள்ளையும் பேசினார்.

பம்பாய், புனா, சென்னை, கல்கத்தா ஆகிய முக்கிய நகரங்களுக்குச் சென்ற காந்திஜி, பல கூட்டங்களில் பேசியிருக்கிறார். ஆனாலும் சென்னையில் அவர் **சிறந்த சொற்பொழிவு** நிகழ்த்திய சொற்பொழிவைப் போல் ஆணித்தரமாக வேறு எங்குமே அவருடைய பேச்சு அமையவில்லை என்று கூறலாம். ஒரே ஒரு வகையில் சிகாகோவில் விவேகானந்தர் நிகழ்த்திய வரலாற்றுப் புகழ்மிக்க பேச்சையும் இங்கு காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவையும் ஒப்பிடலாம். அங்குச் சொற்பொழிவு முடிந்தவுடன் விவேகானந்தரைத் தொட்டாவது பார்க்க வேண்டும் என்று கூட்டத்திலிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் ஓடோடி வந்தனராம். இங்கு பச்சையப்பன் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் காந்திஜி பேசி முடித்தவுடனேயே அவர் கொண்டு வந்திருந்த பச்சைப் பிரசுரங்கள் எல்லாம் பறந்து கொண்டு விற்பனையாகிவிட்டன: ''நான் முந்தி, நீ முந்தி'' என்று பலர் விரைந்து அதை வாங்கி விட்டதால் எல்லாப் பிரதிகளும் அங்கேயே தீர்ந்துபோய் அவர் மேலும் 10,000 பிரதிகளை அச்சிட ஏற்பாடு செய்தார். பாலசுந்தரத்தின் பூமி அல்லவா தமிழகம்? தன் அருமை மகன் ஒருவனுக்கு காந்திஜி ஆற்றிய அருந்தொண்டை அது மறக்குமா? சென்னை வருகையைக் குறித்து ''சத்திய சோதனை'' யில் காந்திஜியே கூறுகிறார்: ''அடுத்தபடியாக நான் சென்னைக்குச் சென்றேன். அங்கே மக்கள் மட்டற்ற உற்சாகம் கொண்டிருந்தனர். பாலசுந்தரம் பற்றிய சம்பவம் [illegible]க்கூட்டத்தில் எல்லோருடைய உள்ளத்தையும் நான் சந்தித்தவர்களிடத்தில் ஆங்கி[illegible]யிருந்த போதிலும் சொந்த வீட்டில்

இருப்பது போன்றே உணர்ந்தேன். நான் சந்தித்த நண்பர்கள் எல்லோருமே என்னிடம் அன்பைப் பொழிந்தார்கள். நான் கொண்டிருந்த இலட்சியத்திலும் அவர்கள் அதிக உற்சாகம் காட்டினர். அன்பிலும் தகர்த்துவிட முடியாத தடையும் உண்டோ?'' சென்னைக்கு வருவதற்குச் சிறிது காலத்திற்கு முன்புதான், காந்திஜியின் ''பச்சைப் பிரசுரத்தில்'' கூறப்பட்டிருந்த குறைகளை மறுத்து இலண்டனிலிருந்த நேடால் ஏஜெண்ட் ஜெனரல் ஓர் அறிக்கை விடுத்திருந்தார். ஆகவே, மேற்கண்ட பொதுக் கூட்டத்தில் காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவு அவருடைய அறிக்கைக்கு ஒரு மறுமொழியாக அமைந்திருந்தது. தம் பச்சை அறிக்கையில் கூறியிருந்தவை யெல்லாம் உண்மைதான் என்பதை ஏராளமான சான்றுகள் கூறி இந்தச் சொற்பொழிவின் போது அவர் மெய்ப்பித்துக் காட்டினார். ''கனவான்களே,... நாங்கள் இளைஞர்கள், அனுபவம் இல்லாதவர்கள். நீங்கள் எங்களுக்கு மூத்தவர்கள்; எங்களைக் காட்டிலும் சுதந்திரம் உள்ள சகோதரர்கள்* என்ற முறையில்உங்களிடம் முறையிட எங்களுக்கு உரிமை உண்டு. ஆக்கிரமிப்பாளர்களால் நசுக்கப்படும் நாங்கள் ஓலமிடத்தான் செய்யலாம். எங்களுடைய துயரக் குரலையும் நீங்கள் கேட்டு விட்டீர்கள். இனியும் ஆக்கிரமிப்பு நீடித்தால் அக்குற்றம் உங்களைச் சார்ந்ததுதான்,'' என்று உருக்கமாகக் கூறி முடித்தார். காந்திஜி இந்தியாவில் நிகழ்த்திய சொற்பொழிவுகள், நேடாலில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கு, ஆத்திரத்தை ஊட்டின. அதற்கு முக்கிய காரணம், பாலசுந்தரம் தாக்கப்பட்ட நிகழ்ச்சியைத் தாம் இங்கு மக்களுக்கு எடுத்து விளக்கியதை ராய்ட்டர் மிகைப்படுத்திச் செய்தி கொடுத்ததுதான் என்று காந்திஜியே கூறுகிறார். பாலசுந்தரத்தைப் பற்றிச் சென்னையிலேயே அவர் அதிகம் பேசியிருக்கக்கூடும். ஆகையால் ஒருவாறு சென்னைப் பேச்சுத்தான் பின்னர் அவர் டர்பனில் இறங்கியபோது பட்ட அடிக்கும் உதைக்கும் முக்கிய காரணமாயும் இருந்திருக்கலாம்.

---

*முதலில் இந்தியாவில் வாழும் இந்தியர்கள் தென்னப்பிரிக்க இந்தியர்களுக்குப் பெரிதாக உதவிவிட முடியும் என்ற அடிப்படையிலேயே காந்திஜியின் கருத்துக்கள் இருந்தன. ஆனால் பின்னர், அடிமை இந்தியாவும் தென்னப்பிரிக்க இந்தியர்களுக்கு அப்படிப் பெரிதாக உதவமுடியாது என்பதை உணர்ந்தபோது, இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபட அவர் இந்தியாவிற்குத் திரும்பினர்.

இரண்டு வாரங்கள் சென்னையில் காந்திஜி தங்கியிருந்திருக்கிறார். அக்டோபர் 14-ஆம் தேதியன்று வந்த காந்திஜி சொற்பொழிவாற்றிய பொதுக் பயனுள்ள கூட்டம் 26-ஆம் தேதியன்றுதான் நடை முறையில் பெற்றது. இந்த இரண்டு வாரங்களையும் அவர் சுறுசுறுப்பாகவும் பயனுள்ள முறையிலும் செலவிட்டிருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது. இங்கு வந்த பின்புதான் இங்கு நிகழ்த்த வேண்டிய நீண்ட உரையைத் தயாரித்து அதை இங்குள்ள அச்சகம் ஒன்றில் அச்சடித்திருக்கிறார். காந்திஜி தமது சொற்பொழிவைச் சென்னையில் அப்போதிருந்த தி பிரைஸ்கரெண்ட் பிரஸ் (The Price current press, Madras.) என்ற அச்சகத்தில் முன்னமேயே அச்சிட்டுக் கூட்டத்திற்கு விநியோகித்திருந்தார். ''தென்னப்பிரிக்காவில் வாழும் ஒரு இலட்சம் இந்தியர்களில் பெரும்பாலானவர்கள் சென்னை, வங்காளம் ஆகிய இரு மாநிலங்களையும் சேர்ந்தவர்கள்தான். ஆகவே, இந்தியர்கள் என்ற முறையில் நீங்கள் சாதாரணமாகத் தென்னப்பிரிக்க இந்தியர்கள் சிக்கலில் செலுத்தும் கவனத்திற்கும் அதிகமாக அதில் தனி அக்கறை செலுத்த வேண்டியவர்களாயிருக்கிறீர்கள்,'' என்று அதன் முன்னுரையில் கூறியிருக்கிறார். கப்பலில் வரும்போதே தமிழ் கற்றுக் கொண்டுவந்த காந்திஜி அம்மொழி அறிவை மேலும் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்று கருதி தமிழகத்தில் பல தமிழ் நூல்களை வாங்கிச் சேகரித்து வைத்துக்கொண்டிருக்கிறார். இது தவிர இந்தியாவில் தொழிலாளர் சட்டங்கள் சம்பந்தமான நூல்களையும் வாங்கிப் படித்திருக்கிறார். இங்கு வந்து நான்கு நாட்கள் கழிந்த பின் 2 அணாவிற்கு அவர் கந்தகக் களிம்பு வாங்கியதைப் பார்த்தால் இங்கு அவருக்கு இலேசாகச் சொறி அல்லது சிரங்கு வந்திருக்கலாமோ என்று யூகிப்பதற்கும் இடம் உண்டு. வித்தைக்காரர்களுக்குப் பணம் போட்டதாக எழுதியிருப்பதிலிருந்து தெருவில் அந்தக் காலத்தில் களைக் கூத்தாடிகள் நடத்தி வந்த வித்தையை ஆசையோடு அவர் பார்த்து ரசித்திருக்கிறார் என்பதும் தெரிகிறது. அவர் தங்கியிருந்த உணவு விடுதியின் காவலாளி, தோட்டக்காரன் உள்பட எல்லோருக்கும் வெகுமானம் அளித்திருக்கிறார். (அந்தக் காலத்தில் உயர்ந்த வகை உணவையே உண்டிருக்கிறார் என்பதும் அவருடைய செலவின்களிலிருந்து தெரிகின்றது.) அவர் இங்குத் தங்கியிருந்தது பகழ் பெற்ற பக்கிங்காம் ஓட்ட


உயிர் ஈந்த உத்தமர்கள்



எஸ். நாகப்பன்



செல்வி : வள்ளியம்மா



நாராயணசாமி

உயிர்த் தியாகிகள் குடும்பம்



வேலை நிறுத்தத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட பச்சையப்பன் மனைவியும் குழந்தையும்.



காலஞ் சென்ற சூர்சையும் அவர் மனைவியும் குழந்தையும். வேலை நிறுத்த காலத்தில் பலியானவர்களில் சூர்சை ஒருவர்.



வேலை நிறுத்தத்தின் போது சுட்டுக் கொல்லப்பட்ட செல்வனின் மனைவியும் பையன்களும். மூத்த பையன் அந்தோனி முத்துவுக்கும் மூன்று குண்டுக் காயங்கள் பட்டன.

தமிழர் தலைவர்கள்



சி. கே. தம்பி நாயுடு



பி. கே. நாயுடு



வி. ஏ. செட்டியார்




சாலமன் ராயப்பன்



பி. இராமசாமி படையாச்சி



கே. பக்கிரி முதலியார்



குமாரி வள்ளியம்மா முனுசாமி, திருமதி மகாவீர்,
திருமதி வீராசாமி, திருமதி வி. எஸ். நாயுடு, திருமதிமுனுசாமி,
திருமதி வி. எஸ். பிள்ளை, திருமதி முனுசாமி முதலி.




திருமதிகள் எம். டாமி, கே. முருகேசபிள்ளை, குமாரி பாக்கியம்
முருகேசபிள்ளை, திருமதி பி. கே. நாயுடு, திருமதி பெருமாள் நாயுடு,
திருமதி சின்னச்சாமி பிள்ளை, திருமதி தப்பி நாயுடு,
திருமதி என். பிள்ளை, திருமதி என். எஸ். பிள்ளை,
திருமதி பவானி தயாள்.

நினைவுச் சின்னம்




வள்ளியம்மா நினைவுச் சின்னம் ஜோகன்னஸ்பர்க்கில்
திறந்துவைக்கப் பெற்றபோது எடுத்த படம்.

அணி வகுப்பு



டிரான்ஸ்வாலுக்கு அணிவகுத்துச் சென்றபோது எடுத்த படம்.

சென்னையில் தியாகிகள்



தென்னப்பிரிக்காவிலிருந்து நாடுகடத்தப் பெற்றுச் சென்னைக்கு வந்தவர்கள்.
— சென்னையில் எடுத்த படம்:

அடக்குமுறையின் பிரதிநிதிகள்



தளபதி ஜே; சி; ஸ்மட்ஸ்



லூயி போத்தா

தென்னுப்பிரிக்க தலைமை அமைச்சர்கள்

இடுக்கண் களைந்த இந்திய அன்பர்கள்



ஜி. ஏ. நடேசன்
இந்தியாவிலிருந்து
முதன்முதலாக உதவியவர்



சர் சுப்ரமணிய ஐயர்
எதிர்ப்புக் கூட்டத்திற்குத்
தலைமை தாங்கியவர்



கே. நடராஜன்
"இந்தியன் சோஷல் ரிபோர்டர்"
பத்திரிகை ஆசிரியர்

ஆகும். பதினைந்து நாட்களுக்கு அவருடைய ஓட்டல் கணக்கு ரூ. 74-4-0 ஆகியிருக்கிறது. மூன்றரை, நான்கரை விற் கெல்லாம் நல்ல சைவ உணவு கிடைத்துக்கொண்டிருந்த அந்தக் காலத்தில் அவர் உண்ட காலை உணவு 1—6—0 ஆகவும் மதிய உணவு 1—13—0 ஆகவும் இருந்திருக்கிறது.

அந்தக் காலத்திலேயே ஒழுங்காகவும் முறையாகவும் காந்திஜி கடிதப் போக்குவரத்து நடத்தியிருக்கிறார்.

முறையான கடிதம்

சென்னைக்கு வரும் வழியில் புனலில் சந்தித்த கோகலேக்கு சென்னையிலிருந்து அக்டோபர் 18-ஆம் தேதியன்று ஆஸ்திரேலியக் குடியேற்றப் பகுதிகளில் இந்தியர்கள் குடியேறுவதைத் தடை செய்ய முயற்சி நடக்கிறதென்றும், அதைத் தோற் கடிக்காவிடில் திரைகடலோடியுந் திரவியந்தேடும் எண்ணத்தை இந்தியர்கள் கைவிட்டு விடுவார்களென்றும் எழுதியிருக்கிறார். அவர் சொற்பொழிவு ஆற்றிய (26-10-1896ஆம்) தேதியில் சென்னையில் உள்ள ஹிந்து பிரம்மஞான உயர்நிலைப் பள்ளியை (The Hindu Theological High School) பார்வையிட்டு (இராமசாமி ஐயர் பி.ஏ.,எல்.டி. அவருக்குப் பல்வேறு வகுப்புக்களையும் சுற்றிக் காண்பித்தார்.) அதில் தமது கருத்தையும் பொறித்துள்ளார். ''இந்தச் சிறந்த நிறுவனத்தைப் பார்வையிடும் பாக்கியம் எனக்குக் கிட்டிற்று. நான் மிகவும் உற்சாகம் அடைந்தேன். ஒரு குசராத்தி இந்து என்ற முறையில், குசராத்தி கனவான்கள் சிலர் இந்த நிறுவனத்தைத் தோற்றுவித்தார்கள் என்பதை அறிந்தபோது, நான் பெருமையடைந்தேன். இந்த நிறுவனம் எதிர்காலத்தில் சிறந்து விளங்குவதாக! அவ்வாறு விளங்குவதற்கு இது முற்றிலும் தகுதி உடையதே. இந்தகைய நிறுவனங்கள் இந்தியா முழுவதிலும் தோன்றித் தூய ஆரிய சமயத்தைப் பரப்பும் சாதனங்களாக விளங்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.''

காந்திஜி சொற்பொழிவாற்றிய கூட்டத்தைப் பற்றி மறுநாள் ''இந்து'' தெரிவித்திருந்த கருத்தில், ''காந்திஜி ஒரு நீண்ட சொற்பொழிவை மிகவும் தாழ்ந்த, மெல்லிய குரலில் படித்துக்கொண்டிருந்தார்.

கூட்டத்தின் அமைதி

அத்தகைய ஒரு கூட்டத்தில் ஏதாவது குழப்பம் ஏற்படுவது இயல்பு. ஆனாலும் கூட்டத்தினர் மிகவும் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும்

இருந்து அவருடைய சொற்பொழிவைக் கேட்டனர். வந்திருந்தவர்கள் நேட்டால் இந்தியர்களுடைய துயருடன் தங்களை எந்த அளவிற்கு ஐக்கியப்படுத்திக் கொண்டனர் என்பதை இது காட்டிற்று,'' என்று குறிப்பிட்டிருந்தது. செய்தித்தாள்களெல்லாம் இவர் பேச்சை முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. ''மெட்ராஸ் ஸ்டாண்டர்டு'' பத்திரிகையின் ஆசிரியரோ, காந்திஜி என்ன எழுதுவ தானாலும் தமது பத்திரிகையில் இடம் ஒதுக்கத் தயாராய் இருப்பதாக வாக்களித்தார். காந்திஜியை அவ்வப்போது தமது அலுவலகத்திற்கு அழைத்துத் தகுந்த ஆலோசனைகள் கூறியும் உதவினர்.

தீர்மானம்

காந்திஜி தமது சொற்பொழிவை முடித்த பின்னர், தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த இந்தியக் குடிமக்களுக்கு, கூட்டம் தனது முழு ஆதரவையும் தெரிவித் துக்கொண்டது. பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் இந்திய அரசாங்கத்திற்கும் அவர்கள் குறை களை எடுத்துக்கூறி அவைகளை உடனடியாகத் தீர்க்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு விஞ்ஞாபனங்கள் தயாரிக்கவும் அவைகளைத் தலைவர் (அனந்தச்சார்லு) கையெழுத்து வாங்கி அனுப்பவும், அனந்தச்சார்லு, சங்கரநாயர், ஜி. சுப்பிர மணிய ஐயர், என். சுப்பிரமணியம், ஜே. ஆடம், ஹாஜி பாட்ஸா சாகிப் ஆகியோருக்குக் கூட்டம் அதிகாரம் அளித்தது. இரண்டு தீர்மானங்களில் ஒன்றை ஆடம் முன்மொழிய ஜோசப், சாத்தநாடார், ஏ. சி. பார்த்த சாரதி நாயுடு வழிமொழிந்தார்கள். மற்றொரு தீர்மா னத்தைப் பரமேஸ்வரன் பிள்ளை முன்மொழிய எம். வீரராக வாச்சாரி வழி மொழிந்தார். பொதுவாக ஏற்கனவே பம்பாயில் இவர் பேசிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களே இவை. என்றாலும், இங்குக் கூடுதலாக நேடாலுக்கு ஒப்பந்தக் கூலிகளை அனுப்புவதை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்வதாக ஒரு முக்கிய தீர்மா னமும் நிறைவேற்றப்பெற்றது. நேடாலில் குடியேறியிருந்த இந்தியர்களில் அதிகமான பேர் தமிழ் ஒப்பந்தக் கூலிகளே என்பதுதான் இந்தத் தீர்மானம் இங்குப் புதிதாக நிறை வேற்றப்பெற்றதற்குக் காரணமாகும்.

காந்திஜியின் சொற்பொழிவைக் குறித்து, மறுநாள் ''மெயில்'' (27-10-96) ஒரு தலையங்கம் தீட்டியது: ''இந்தி

யர்கள் மீது தென்னப்பிரிக்காவில் உள்ள குரோத உணர்ச் சிக்குப் பெரும்பாலும் இந்தியர்களைப் பற்றிச் சரியான முறையில் (அங்குள்ள வெள்ளையர்) அறிந்து கொள்ளாதது தான் காரணம் என்று காந்தி கூறுகிறார். இது அவ்வளவு சரியாகத் தோன்ற வில்லை..... காந்திஜி தம் பேச்சில் ''தென் னப்பிரிக்காவில் உள்ள வெள்ளையர்களிடம் நாம் படும் அவதூறுகளையும் அவமரியாதைகளையும் பிரிட்டிஷ் அரசாங் கத்தின் நேரடியான குறுக்கீட்டால் அகற்றி விட முடியாது என்பதை நாங்கள் அறிந்துதான் இருக்கிறோம். இவ்வாறு நேரடியாகக் குறுக்கிட வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கவும் இல்லை. எல்லா வகுப்பினர்களிடையேயும் நியாயவான்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய கவனத் திற்கும் பத்திரிக்கைகளின் கவனத்திற்கும் நாம் இதைக் கொண்டு வருகிறோம். அவர்கள் தங்களுடைய கண்டனத் தைத் தெரிவிப்பதானது இவைகளின் கடுமையைக் குறைக் கும்; நாளா வட்டத்தில் முழுதுமாக அகற்றிவிடும். ஆனால் அதே சமயம் இப்படிப்பட்ட குரோத உணர்ச்சி சட்டமாக உருவாகாது பாதுகாக்குமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் நாங்கள் பாதுகாப்புக் கோருகிறோம். எங்கள் வேண்டுகோள் வீணாய்ப்போகாது என்றும் நாங்கள் நம்புகிறோம்,'' என்றும் கூறினர். அவருக்கு இந்தியாவிலுள்ள எல்லோருடைய முழு அனுதாபமும் உண்டு. பிரிட்டிஷ் குடிமகன் சம்பந்தப் பட்ட எந்தச் சட்டத்திலும் குடியேற்றப் பகுதிகளிலுள்ள கடுமையான இனவேற்றுமை உணர்ச்சி இடம் பெற்று விடு மாறு பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதிக்கக்கூடாது. அவ் வாறு அனுமதித்தால் அது தன் கடமையிலிருந்து தவறிய தாகும்.''

தலையங்கம்

காந்திஜிக்கு ஆதரவு

27-ஆம் தேதியன்று ''இந்து'' எழுதிய முதல் தலையங் கம் இதுதான்: ''இந்தியாவில் பொது மக்களுடைய கருத்தை உருவாக்க காந்திஜி மேற்கொள்ளும் முயற்சியின் காரணமாக, நசுக்கப்பட்டுள்ள நம் மக்களுக்கு ஏதாவது நல்ல பயன் கிட்டும் என்று நாம் நம்புகிறோம். காந்திஜி ஒரு இந்து பாரிஸ்டர்-அட்-லா ஆவார்; அவர் நேடாலில் வழக்கறிஞர் தொழில் புரிகிறார். தமது நாட்டு மக்களின் துயர்களை வெளிக்கூறி, இந்திய அரசாங்கம், பிரிட்டிஷ் அரசாங்கம் ஆகியவற்றின் அனுதாபத்தின் மூலமாக அவைகளுக்கு

நிவாரணங் காணும் தேசபக்தி மிக்க பணியை அவர் மேற் கொண்டிருக்கிறார்.... எந்த உயர்ந்த பணிக்காக அவர் இந் நாட்டிற்கு வந்திருக்கிறாரோ அதற்கு இந்திய மக்களின் உளமார்ந்த ஆதரவு இருக்கிறது என்பதையோ அப்பணிக்கு இங்கு அவர் முயற்சிகள் செய்யும்போது இந்திய சமுதாயத் தைச் சேர்ந்த தலைவர்கள் ஒவ்வொரு உதவியும் செய்வார் கள் என்பதையோ நாம் கூறவே வேண்டியதில்லை.''

புறப்பாடு

தமது சொற்பொழிவை முடித்த மறுநாள் அதாவது அக்டோபர் மாதம் 27-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை அவர் சென்னையிலிருந்து கல்கத்தா விற்குப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முன் சென்னையிலுள்ள நாளிதழ்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு காந்திஜி கடிதம் எழுதினார். கூட்டம் எந்த அளவு வெற்றி அடைந்த தாக காந்திஜி கருதினார் என்பதையும், அது அவர் மனதில் என்ன சிந்தனைகளை எழுப்பியது என்பதையும், இந்த நன்றிக் கடிதத்தில் நாம் காண்கிறோம்: ''தென்னாப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் இந்தியர்களின் குறிக்கோளுக்குத் தங்க ளுடைய முழு ஆதரவு இருக்கிறதென்பதை நேற்று மாலை சென்னைப் பொது மக்கள் மெய்ப்பித்தனர். போற்றத்தக்க முறையில் மக்கள் கூடியிருந்தனர். அவர்களுக்கு நன்றி செலுத்தாவிட்டால் நான் நன்றி கெட்டவனாவேன். அக் கூட்டம் உண்மையிலேயே ஒரு மாபெரும் வெற்றிதான்; அது அவ்வாறு வெற்றியடைய ஒவ்வொருவரும் மற்றவரு டன் போட்டி போட்டுக் கொண்டு முன் வந்தது போல் தோன்றியது. இந்த இயக்கத்திற்கு நீங்கள் (பத்திரிகை ஆசிரியர்) அளித்த மனமார்ந்த ஆதரவிற்காக உங்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இயக்கத்தின் குறிக்கோள் முற்றிலும் நியாயமானது என்பதையும் எங்க ளுக்குள்ள குறைகள் உண்மையானவை என்பதையும் இந்த ஆதரவு எடுத்துக் காட்டுகிறது என எண்ணுகிறேன். அபிமானமிக்க சென்னை மகாஜன சபைச் செயலாளர் களுக்கு எனது தனி நன்றி உரித்தாகுக. இந்தக் கூட்டத் திற்கு ஏற்பாடு செய்வதில் சலியாத உற்சாகத்துடன் உழைத்து, எங்கள் குறிக்கோளைத் தங்கள் குறிக்கோளாக அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதுவரை நீங்கள் காட்டிய அனுதாபத்தையும் ஆதரவையும் இனியும்

தொடர்ந்து காட்டுவீர்கள் என்றும் விரைவில் எங்களுக்கு நியாயம் கிடைத்துவிடும் என்றும் நம்புகிறேன்.''

அந்தக் காலத்திலேயே காந்திஜி, தமது வரவு செலவை எழுதுவதில் கண்காணிப்பாக இருந்திருக்கிறார். எவ்வாறு தன்னலமற்ற வாழ்வில் அவர் ஒரு அந்தணரோ

வரவுசெலவுக் ஒரு பேரரசை எதிர்த்துப் போராடியதில்

கணக்கு ஒரு சத்திரியரோ கடமை உணர்வுடன் தொண்டாற்றியதில் ஒரு சூத்திரரோ அதே போன்று 'வரவு செலவில்' அவர் ஒரு வைசியராவார். காலணு, அரையணுச் செலவுகளைக் கூடக் குறித்து வைக்காமல் அவர் விடுவதில்லை. பம்பாயிலிருந்து சென்னைக்கு வர இரயில் கட்டணமாகச் செலுத்தியது ரூ. 49.11.0 என்று அவர் குறித்துள்ளார். அதன் பின் சென்னையில் அவர் செலவு செய்துள்ளவைகளை மட்டும் இங்குக் காண்போம்.

அக்டோபர்-14

சென்னை இரயில் நிலையம்	0 - 4 - 0
வழிகாட்டி	0 - 4 - 0
போர்ட்டர்	0 - 2 - 0
வண்டிச்சத்தம் (நாள் முழுவதும்)	4 - 2 - 3
வித்தைக்காரன்	0 - 0 - 6
பத்திரிகைகள், கவர்	2 - 10 - 0
இரயில் நிலையத்திலிருந்து வண்டிச் சத்தம்	1 - 8 - 0

அக்டோபர்-15

வண்டிச் சத்தம்	4 - 6 - 0
தபால் கொண்டு செல்பவர்	0 - 10 - 0
பத்திரிகை	0 - 4 - 0
டிராம்	0 - 1 - 0

அக்டோபர்-16

ஸ்டாம்ப்	1 - 0 - 0
வண்டிச் சத்தம்	2 - 3 - 0
பத்திரிகை	0 - 8 - 0
சலவைத் தொழிலாளி	1 - 0 - 0

அக்டோபர்-17

பத்திரிகைகள்	0 - 14 - 0
வண்டிச்சத்தம் நாள் முழுவதும்	4 - 3 - 0

அக்டோபர்-18

வண்டிச்சத்தம் (அரைநாள்)	2 - 3 - 0
ஆண்ட்ரூசுக்கு நன்கொடை	7 - 0 - 0
சல்பர் ஆயின்ட்மெண்ட்	0 - 2 - 0
(சிரங்கு, சொறிக்குப் போடும் களிம்பு)	

அக்டோபர்-19

டிராம் கட்டணம்	0 - 9 - 0
தின்ஷாவாச்சா (இந்தியத் தலைவர்களில் ஒருவர்) வுக்குத் தந்தி	1 - 6 - 0
பத்திரிகைகள்	1 - 0 - 0

அக்டோபர்-20

சலவைத் தொழிலாளி	0 - 4 - 0
பத்திரிகைகள்	0 - 12 - 0
பங்கா இழுப்பவன்	0 - 2 - 0

அக்டோபர்-21

நோட் காகிதம்	0 - 11 - 0
மை, பின்	0 - 3 - 0
நாடா	0 - 1 - 0
மந்திரவாதி	0 - 8 - 0
பத்திரிகைகள்	0 - 10 - 0
லேஸ்	0 - 1 - 0

அக்டோபர்-22

வண்டிச் சத்தம்	2 - 4 - 0
இனிப்பு	0 - 5 - 3
போட்டோ	0 - 6 - 0
பத்திரிகைகள்	0 - 12 - 0
டிராம்	0 - 13 - 0

அக்டோபர்-23

வண்டிச் சத்தம்	5 - 0 - 0
டிராம்	0 - 10 - 0
ஸ்டாம்ப்	0 - 8 - 0

அக்டோபர்-24

பள்ளிப் பையன்களுக்கு	0 - 13 - 0
வண்டிச் சத்தம்	2 - 10 - 0
ஆண்ட்ரூஸ்	0 - 8 - 0
டிராம்	0 - 1 - 0
தபால் கொண்டு செல்பவர்	0 - 4 - 0
பத்திரிகைகள்	0 - 10 - 0
சலவைத் தொழிலாளி	0 - 12 - 0
கிழக்கு இந்திய அசாம் கூலிகள் (1)	1 - 0 - 0
சட்டமன்றங்கள் (2)	0 - 6 - 0
ஸ்தல ஸ்தாபன அறிக்கைகள் (3)	5 - 0 - 0
சட்டமன்றங்கள் பற்றிய சட்டம் (4)	0 - 6 - 0
வெளிநாட்டு அறிக்கைகள் (5)	2 - 0 - 0
தென்னப்பிரிக்க குடியரசு அறிக்கைகள் (குறைபாடுகள் சம்பந்தமாக) (6)	0 - 8 - 0
* தார்மிக, (லோகாதய) முன்னேற்றம் பற்றிய அறிக்கை (சென்னை மாவட்ட நகரசபை சட்டம்) (7)	1 - 0 - 0
சென்னை ஸ்தல ஸ்தாபனங்கள் (8) (சட்டம்)	0 - 10 - 0
* தமிழ்ப் புத்தகங்கள் (9)	4 - 12 - 6
புத்தகங்களுக்கு ஆக ஆண்ட்ரூஸுக்கு	1 - 9 - 0

அக்டோபர்-26

தொகுப்பு வாரியாகத் தமிழ்ப் புத்தகங்கள்	7 - 0 - 7
வண்டிச் சத்தம்	0 - 8 - 0
டிராம் கட்டணம்	0 - 4 - 0
பத்திரிகைகள்	0 - 8 - 0
வண்டிச் சத்தம்	2 - 4 - 0

அக்டோபர்-27

வண்டிச் சத்தம்	3 - 4 - 0
உள்நாட்டுத் தந்திகள்	18 - 12 - 0
''மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்'' கணக்கில் தந்திகளும் விலாசமும்	30 - 0 - 0
பட்லருக்கு அன்பளிப்பு	9 - 0 - 0
வெயிட்டர்	1 - 0 - 0
தோட்டி	0 - 8 - 0

சமையல்காரன்	1 - 0 - 0
தோட்டக்காரன்	0 - 2 - 0
காவற்காரன்	0 - 2 - 0
கல்கத்தாவிற்குச் சாமான்களை அனுப்ப	3 - 0 - 0
ஆண்ட்ரூஸ்	5 - 0 - 0
ஓட்டல் கணக்கு	74 - 4 - 0
பத்திரிகைகள்	0 - 10 - 0
சலவைத் தொழிலாளி	0 - 12 - 0
பங்கா இழுப்பவர்கள் (14 நாட்களுக்கு)	3 - 4 - 0
கல்கத்தாவிற்குக்கட்டணம்	122 - 7 - 0
(கைட்) வழிகாட்டி	0 - 2 - 0
ஸ்டாம்புகள்	0 - 4 - 0
அரக்கோணத்தில் பகல் உணவு	1 - 0 - 0

அக்டோபர்-28

காலை உணவு	1 - 6 - 0
மதிய உணவு	1 - 13 - 0
பத்திரிகைகள்	0 - 10 - 0
தண்ணீர்	0 - 0 - 6
கார்டு	0 - 8 - 0
பகல் உணவு	2 - 8 - 6
போர்ட்டர்	0 - 2 - 0

இச் சென்னை வருகையையும் இங்கு மக்கள் அளித்த வரவேற்பையும் பற்றிய நினைவை காந்திஜி தம் வாழ்க்கையில் பொன்னே போல் போற்றியிருக்கிறார். 1915-வெற்றிதான் ஆம் ஆண்டில் அண்ணல் சென்னைக்கு மீண்டும் வந்தபோது, விக்டோரியா பொது மண்டபத்திற்கு வடக்கே உள்ள மைதானத்தில் அவருக்கு அளிக்கப் பெற்ற வரவேற்பில் குறிப்பிட்டார்: "1896-ஆம் ஆண்டில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத ஆழ்ந்த சமய உணர்வு சென்னையில் இருப்பதைக் கண்டேன். 1896-ஆம் ஆண்டில் முன்பின் தெரியாதவனாக, கதியற்ற

(1 முதல் 8—நூல்கள் : இந்தியாவிலுள்ள சட்ட முறைகளைத் தெரிந்து கொள்வதற்காக இவைகளை வாங்கியிருக்கிறார்.)

7. இத்தகைய அறிக்கை ஒன்றை அந்தக் காலத்தில் பாராளுமன்றத்தின் அரசு அளிப்பது வழக்கம்.

9. தமிழ் மொழியைக் கற்றுக்கொள்ள அப்போதே காந்திஜிக்கு இருந்த அக்கறையை இது காண்பிக்கிறது.

வர்கள் சார்பாக வாதாடுபவனாக நான் உங்கள் முன் வந்தேன். சென்னை, நல்ல காரியம் எது, கெட்ட காரியம் எது என்பதைப் பகுத்துப் பார்க்கும் நுண்ணுணர்வு படைத்தது என்பதை அப்போது கண்டேன். தென்னப்பிரிக்காவின் நெருக்கடியான நிலையை இந்தியா முழுவதற்கும் எடுத்துரைக்க நான் முயன்றேன். ஆனாலும் நெருக்கடியை நீங்கள்தான் (சென்னை மாநகர மக்கள்தான்) முழு அளவில் புரிந்துகொண்டீர்கள். (''கேளுங்கள், கேளுங்கள்'' என்ற முழக்கம்)''. முப்பத்தி எழு ஆண்டுகள் கழித்து 1933 டிசெம்பரில் அவர் மீண்டும் தமிழகத்திற்கு வந்தபோதும், சென்னையில் மாணவர்கள் அளித்த வரவேற்பில், அவர் இவ்வருகையைப்பற்றி உள்ளநெக்குருகக் குறிப்பிட்டார். ''நான் உங்களுக்குப் புதியவனல்ல; நீங்களும் எனக்குப் புதியவர்களல்ல. 1896-ஆம் ஆண்டிலேயே உங்களில் பெரும்பாலானவர்கள் பிறந்திராத காலத்திலேயே சென்னை மாணவர்களின் அறிமுகத்தை நான் பெற்றுவிட்டேன். கூலிகளுக்கு - தமிழ் நாட்டின் உண்மையான மக்களுக்கு மட்டும் என்னை ஓரளவு (அந்தத் காலத்தில்) தெரியும். அந்தச் சமயத்தில் மாணவர்கள் எனக்கு எவ்வளவு சிறப்பான வரவேற்பை அளித்தார்கள் என்பது எனக்கு இன்னும் நினைவிருக்கிறது.''

——o——

விடுதலை அடைவதற்கு நூறு ஆண்டுகளுக்கும் முன்பே தமிழகத்தில் தேசியம் துளிர்த்து விட்டது. கரு உருவில் இந்திய தேசிய காங்கிரஸ் ''தோன்றியதே''

தேசிய உணர்வு

சென்னை மாநகரத்தில் தான். தமிழக மக்களின் தேசிய உணர்வு காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்னமேயே தோன்றிவிட்டதுதான் இதற்குக் காரணம். நேரடியாக நாட்டின் விடுதலைக்குப் போராடுவதற்காக அக் காலத்தில் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பெறவில்லை. அதே போன்று காங்கிரசுக்கு முன்பு தமிழ் நாட்டில் துளிர்த்த அந்தத் தேசிய உணர்வும்-படித்த ஒரு சிலரே அதில் பங்கு கொண்டார்கள் - இந்தியாவின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவில்லை. சென்னை மக்கள் சங்கம் (The Madras Native Association) சென்னை இந்து தர்க்க சங்கம் (The Madras Hindu debating Society) என்ற பெயர்களில் படித்தவர்கள் சிலர் சங்கங்களை அமைத்துக் கொண்டு அவைகளின் மூலம் தங்கள் தேசிய உணர்வை வெளியிட்டனர். பிரிட்டிஷ் பேரரசிற்கு மனுக்கள் அளிப்பதே இவர்களுடைய முக்கிய வேலையாக இருந்தது. இந்தியா ஒரே நாடு என்பதில் உறுதியும் இந்தியப் பண்பாடு உயர்ந்தது என்பதில் பெருமிதமும் கொண்டவர்கள் இச் சங்கத்தார். அரசியல் சட்ட நுணுக்கங்களைப் பற்றி அக்கறைப் படாது, வாணிக அடிப்படையில், கிழக்கு இந்தியக் கம்பெனி இங்கு ஆட்சி நடத்தியது இவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அந்தக் காலத்தில் இவர்களுடைய முதல் கோரிக்கை, இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை (கிழக்கு இந்தியக்) கம்பெனியிடம் இருந்து பிரிட்டிஷ் பேரரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதே. 1855-ஆம் ஆண்டில் இவர்கள் பிரிட்டிஷ் பேரரசிற்கு அனுப்பிய மனு கிழ்க்கண்டவாறு கூறியது: 1. பிரிட்டிஷ் அரசியே நேரடியாக ஆட்சியை ஏற்கவேண்டும். 2. அதன்

பின் அரசியல் சட்ட ரீதியில் மக்களுக்குப் பொறுப்பான ஆட்சி நடத்த வேண்டும். நாட்டின் நிருவாகத்தில் தகுந்த பங்கு எடுத்துக்கொள்வதற்கு எங்களுடைய பண்பாடும் கல்வியும் எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கியிருக்கிறது.

பழையதும் புதியதும்

''வேல், வேல், வெற்றி வேல்'' என்று முழக்கமிட்டுக் கொண்டு போர்க்களத்திற்குப் போய், அங்கு எதிரியை நொறுக்கி, வெற்றி வாகை சூடுவதே பழங் காலத் தமிழர்களின் மரபு. தமிழ் மகனின் கடமை என்னவென்பதைப் பாடவந்த பெண்பாற் புலவர் ஒருவர், ''ஒளிருவாள் அருஞ்சமம் முறுக்கிக் களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே'' என்று கூறியிருக்கிறார். ஆங்கிலேயரை வெள்ளைப் பரங்கியர் எனக் கருதி களத்திலே அவர்களைக் சந்தித்து கட்டபொம்மன் தலைமையிலும் சிவகங்கைச் சீமைச் சகோதரர்கள் தலைமையிலும் தமிழ் மக்கள் போராடி, பீரங்கிகளுக்கு இரையாகி வீர மரணம் எய்தியதை நாம் அறிவோம். பிற்காலத்தில் பலாத்கார இயக்கத்தில் தமிழ் இளைஞர் பலர் பங்கு கொண்டதும் மறக்க இயலாத வரலாறே. ஆயினும் தமிழர்களுடைய அரசியல் மனப் பாங்கை ஆராய்ந்த அறிஞர்கள், வள்ளுவர் வழியில் வந்த தமிழர்களில் பெரும்பான்மையோர் அரசியல் சட்டத்திலும் அஹிம்சைப் போராட்டத்திலும் நம்பிக்கை வைத்தனரே அன்றி வன்முறையில் நாட்டம் கொள்ளவில்லை என்று கூறியிருக்கின்றனர். உதாரணமாக ''சென்னை நிருவாகம்'' பற்றிய ஆராய்ச்சி நூலை வரைந்துள்ள டாக்டர் பாலிகா, ''1857-இல் இந்திய சிப்பாய்க் கலகம் வந்தது. ஆனால் அது சென்னை மாநிலத்தில் எந்த விதமான எதிரொலியையும் எழுப்பவில்லை. இம்மாநிலத்தைச் சேர்ந்த மக்களுக்கு வன்முறையின் மூலம் அரசியல் குறிக்கோள்களை அடைந்து கொள்ளும் விருப்பம் இல்லை என்ற உண்மையே இதற்குக் காரணம்'' என்று கூறியுள்ளார்.

ஒரு மாற்றம்

பிரிட்டிஷ் பேரரசே நேரடியாக இந்தியாவின் ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கை இந்தியா முழுவதிலுமே இருந்து வந்தது. கடைசியில் இக்குறிக்கோள் வெற்றியடையவும் செய்தது; எலிசபெத் பேரரசியே 1877-இல் நேரடியாக ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டார். தமிழ்த் தேசிய வாதிகளுக்கு இது மகிழ்ச்சி

அளித்தது என்றாலும் மனநிறைவு அளிக்கவில்லை. கம்பெனி ஆட்சி மாறுவதுடன் பொறுப்பாட்சியும் வேண்டும் என்பதல்லவா அவர்களுடைய கோரிக்கை? ஆகவே அதற்காகப் பாடுபடத் தொடங்கினர்கள்.

காங்கிரஸ் தோன்றியது

பிரிட்டிஷ் அரசாங்கம் அசைந்து கொடுக்கவில்லை. அசைந்து கொடுத்தால் உலகமெல்லாம் கட்டி ஆண்ட பிரிட்டிஷ் பேரரசாக அது எப்படி இருக்க முடியும்? நகரசபைகளிலும் தாலுகா போர்டுகளிலும் இந்தியர்களுக்குச் சிறிது இடம் அளித்தார்கள் என்பது உண்மையே. ஆனால் தமிழ்த் தேசியவாதிகள் கேட்ட பொறுப்பாட்சி மட்டும் வரவில்லை. அதற்குப் பதிலாகக் ''காங்கிரஸ்'' வந்தது. ஆம், இந்தச் சமயத்தில் தான் 1885-ஆம் ஆண்டு மார்ச் மாதம் காங்கிரஸ் தோற்றுவிக்கப் பெற்றது. படித்த மக்களிடையே தெளிவற்ற முறையிலாயினும் - தேசிய உணர்வு விறுவிறுப்பாக இருந்ததற்குக் காங்கிரஸ் தோன்றியது ஒரு சான்று. அது மட்டுமல்ல, சென்னையிலும் மாவட்டங்களின் தலைநகர்களிலும் பல அரசியல் ஏடுகள், செய்தித்தாள்கள் தோன்றி பிரிட்டிஷ் அரசின் வினைகளையும்-குறிப்பாக உப்பு வரியையும்-கடுமையாகக் கண்டித்து எழுதின.

சென்னையில் காங்கிரஸ்

1887-இல், இந்திய தேசிய காங்கிரசின் மூன்றாவது ஆண்டு மாநாடு சென்னை மாநகரில் சிறப்பாக நடைபெற்றது. இது தமிழகத்தின் தேசிய உணர்ச்சியைப் பன்மடங்கு பெருக்குவதற்குத் தூண்டுகோலாக இருந்தது. பத்ருதின் தயாப்ஜி தலைமை வகித்த இந்தக் காங்கிரசில் டி. மாதவராவ், எஸ். சுப்ரமணிய ஐயர், ரங்கைய நாயுடு, ஜி. சுப்ரமணிய ஐயர், சபாபதி முதலியார், எஸ். ஏ. சுவாமிநாத ஐயர், பி. சோமசுந்தரம் செட்டி, சி. விஜயராகவாச்சாரியார், பெயர் பெற்ற வழக்கறிஞர் நார்ட்டன், ஏ. ஓ. ஹ்யூம் ஆகியோர் சென்னையின் பிரதிநிதிகளாகப் பங்கு கொண்டனர். காங்கிரசுக்கு ஓர் ஆண்டு முன் பிறந்த சென்னை மகாஜன சபை, பொதுவாகத் தமிழகத்திலும் குறிப்பாகச் சென்னை மாநகரிலும் காங்கிரசின் கொள்கைகளையும் தேசிய உணர்வையும் பரப்ப உதவியது. அநேகமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆண்டுதோறும் மாநாடு

கள் நடத்தி, அங்குப் பல்வேறு தேசியச் சிக்கல்களைப் பற்றி விவாதித்துத் தீர்மானம் நிறைவேற்றி வந்தனர். சுயராஜ்யம், வெளிநாட்டுத் துணி விலக்கு, வெளிநாட்டுப் பண்டங்கள் விலக்கு, சுதேசித் துணிக்கும் பண்டங்களுக்கும் ஆதரவளித்தல், உள்நாட்டிலேயே தொழிற்சாலைகள் நிறுவுதல், பஞ்சாயத்துக்களுக்குப் புத்துயிர் அளித்தல், மதுவிலக்குப் போன்ற பல சிக்கல்கள் அப்போதே இந்த மாநாடுகளில் விவாதிக்கப் பெற்று வந்தன. மாவட்ட மாநாடுகளில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானங்களும் அரசாங்கத்திற்கு அனுப்பப் பெற்றன. ஆனால் அரசாங்கம் தான் நகரவில்லை.

காந்திஜி வந்தார் ; அரசாங்கமும் நகன்றது ;

''இன்பம் விழையான் வினைவிழைவான், தன்கேளிர் -
துன்பம் துடைத்தூன்றும் தூண்''.

காந்திஜி வந்தார்

(தன் இன்பத்தை விரும்பாமல் முயற்சியை விரும்புபவன், சுற்றத்தாரின் துன்பத்தைப் போக்கித் தாங்கும் தூண் போன்றவனுவான்.) என்பதன்றே பொய்யா மொழிப் புலவர் வாக்கு? ஆகவே இந்திய சகோதரர்களின் துன்பத்தைப் போக்க, தம் இன்பத்தை விரும்பாமல் குறிக்கோள் ஒன்றையே குறியாகக் கொண்ட போர்பந்தர் புதல்வன் வர வேண்டியதாயிற்று.

இந்தியாவில் நிலையாகத் தங்கி, வாழ்நாள் முழுதும் தாய்நாட்டிற்காகச் சேவை செய்வதென்ற முடிவுடன், 1915-ஜனவரி 9-ஆம் தேதியன்று அண்ணல் காந்தி கஸ்தூரிபாவுடன் பம்பாயில் வந்திறங்கினர். தாம் இந்தியாவிற்கு வெளியே நீண்ட காலம் தங்கிவிட்டதால், இந்தியச் சிக்கல்களைக் குறித்துத் திட்டவட்டமான முடிவுகளைத் தெரிவிப்பது நல்லதல்லவென்று கோகலே கூறியதை அப்படியே ஏற்றுக்கொள்வதாக அவர் பம்பாயில் தெரிவித்தார். இந்தியாவிற்கு வந்ததுமே ஒரு கத்தியவார் சட்டை, தலைப் பாகை, பஞ்சகச்சமாக வைத்துக் கட்டப்பட்ட வேட்டி - எல்லாம் இந்திய ஆலைகளில் உற்பத்தியான துணிகள் - ஆகியவைகளை அவர் அணியத் தொடங்கிவிட்டார். பம்பாயிலிருந்த 'நவீன நாகரிக' சூழ்நிலை அவருக்குச் சற்று

சென்னை வருமுன்

'அந்நியமாகத்' தோன்றியது. அங்கிருந்து, அவர் பூனாவிற்குச் சென்று கோகலேயைச் சந்தித்து விட்டு, ராஜ்கோட்டிற்கும் போர்பந்தருக்கும் பயணமானார். அங்கிருந்து தென்னப்பிரிக்காவிலிருந்து தம்முடன் திரும்பி வந்த ஆசிரமவாசிகளைப் பார்ப்பதற்காகப் போல்பூருக்குப் போய் விட்டு, கவி தாகூரைக் கண்டு பேசுவதற்காக சாந்தி நிகேதனுக்குச் சென்றார். ஆனால் அப்போது தாகூர் அங்கு இல்லை.

சுற்றுலா

காந்திஜி சாந்தி நிகேதனத்தில் இருந்த சமயத்தில் கோகலே காலமாகிவிட்டதால், காந்திஜியும் கஸ்தூரிபாவும் மீண்டும் புனாவிற்குத் திரும்பி வந்தார்கள். அதன்பின் இந்தியாவில் உள்ள நிலவரத்தை நேரில் காண்பதற்காக ஒவ்வொரு பகுதியாகச் சுற்றுப் பயணம் செய்துகொண்டு வந்தார். கல்கத்தா வழியாக ரெங்கூன் சென்று விட்டு மீண்டும் சாந்திநிகேதனுக்கு அவர் வந்தபோது தாகூர் அங்கிருந்து அவரை வரவேற்றார். பின்னர் ஹரித்வாரில் நடைபெற்ற கும்பமேளாவிற்குத் தமது ஆசிரம வாசிகளுடன் சேர்ந்து தொண்டு செய்வதற்காகச் சென்ற போது, அவருக்கு ஏராளமான உணவுப் பொருள் வகைகளுடன் தடபுடலாக விருந்துகள் நடைபெற்றன. இது காந்திஜிக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. ஆகையால் ஒரு நாளைக்கு ஐந்து வகை உணவுப் பொருள்களுக்கும் அதிகமாக உண்பதில்லை என்று அங்கு அவர் விரதம் பூண்டார். சென்னைக்கு வந்தபோதும் பழங்கள், முந்திரிப் பருப்பு போன்ற பருப்பு வகைகள் உண்ணும் பழக்கத்தைத்தான் மேற்கொண்டிருந்தார்; சமைத்த உணவை உண்பதில்லை. ஹரித்வாரத்தில் எடுத்துக் கொண்ட விரதத்தின் படி, நாளைக்கு ஐந்து வகைப் பொருள்களை மட்டுமே உண்டு வந்தார்; இரவில் சூரியன் மறைந்த பின்பு உண்பதில்லை. குருகுலம் சென்று மகாத்மா முன்ஷிராமைப் - பிற்காலத்தில் சுவாமி சிரத்தானந்தர் எனப் பெயர் வழங்கியவர் - பார்த்துவிட்டு சென்னைக்கு வந்தார் அண்ணல்.

தமிழகத்துக்கு இம்முறை காந்திஜி வருகை தந்ததன் முக்கிய காரணம் கோகலே கூறிபடி இந்தியாவின் பொது நிலவரத்தை அறிந்து கொள்வதுதான் என்றாலும்

மற்றொரு முக்கிய காரணமும் இருந்தது. கோகலே கூறிய பணிக்காக மட்டும் வந்திருந்தாராஞல் அவர் சென்னைக்கு வந்ததுடன் திரும்பிச் சென்றிருக்கக் கூடும்.

வந்த காரணம்

ஆனல் அவர் தரங்கம்பாடிக்கும் சென்ருர். தென்னப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்த தமிழர்கள் கணிசமாக வாழ்ந்த தரங்கம் பாடிக்கு அவர் சென்றதற்கு அங்கு உயிர்த்தியாகிகள் சிலரின் மனைவிமார்களைச் சந்தித்து ஆறுதல் கூறவேண்டு மென்று அவர் விரும்பியதே முக்கிய காரணம்.

தென்னப்பிரிக்காவில் காந்திஜி இருந்தபோதே அவரை மகாத்மா என்று மக்கள் அழைக்க முற்பட்டுவிட்டார்கள். ஆனலும் அந்தப் பட்டம் காந்தி தமிழகத்

தமிழகத்தில் புகழ்

திற்கு வந்தபோது அவ்வளவு பரவவில்லை. அதனல் தான் இங்கு பத்திரிகையாளர்களும் மற்றவர்களும் அவரை மிஸ்டர் அல்லது ஸ்ரீ காந்தி என்று அழைத்திருக்கிருர்கள். 1919-இல் தான் இங்கு மகாத்மா பட்டம் தாராளமாகப் பயன்படுத்தப் பெற்றிருக்கி றது. அதேபோன்று அவர் கையாண்ட போராட்ட முறை யின் பெயர் 'சத்தியாக்ரகம்' என்பதும் பலருக்குத் தெரி யாதிருந்தது. அதைக் குறிப்பிட்டவர்கள் எல்லாம் - அதன் தத்துவத்தை மிக நன்முக அறிந்தவராகத் தோன்றும் சுப்ரமணிய ஐயர் உள்பட எல்லோரும் ''சாத்விக எதிர்ப்பு'' என்று தான் அழைத்திருக்கிருர்கள். மற்றும் சில விவரங் கள் கூட மக்களுக்கு அவ்வளவு சரியாகத் தெரியவில்லை என்று யூகிக்க இடமுண்டு. உதாரணமாக, கஸ்தூரிபா காந்தியைப் பார்க்கப்போன ஒரு செய்தியாளர், ''காந்திஜி யும் அவரது மனைவியாரும் பிராமணர்கள்'' என்று குறிப் பிட்டிருக்கிருர். காந்திஜிக்கு அளிக்கப்பெற்ற பொது வர வேற்பில் அவரை வரவேற்றுப் பேசிய கிருஷ்ணசாமி ஐயர் அவரை மகாராட்டிரர் என்று கூறியதும் இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். இவைகளெல்லாம் ஒருபுற மிருந்தாலும், காந்திஜியின் புகழ் தமிழகத்தைப் பொறுத்தவரை நன்கு பரவி இருந்தது. ஜி. ஏ. நடேசன் போன்றவர்களுடன் காந்திஜிக்குத் தொடர்பு இருந்து வந்ததும், தென்னப்பிரிக் காவிலிருந்து திரும்பி வந்த அறப்போர் வாதிகள் காந்திஜி யைப்பற்றிக் கூறிவந்ததும் தென்னப்பிரிக்க இந்தியர் சிக் கலைப்பற்றி காங்கிரஸ் அவ்வப்போது தீர்மானங்கள் நிறை வேற்றி வந்ததும் தென்னப்பிரிக்கப் போராட்டத்தைப்

பற்றிய விவரங்கள் அவ்வப்போது செய்தித்தாள்களில் வெளிவந்து கொண்டிருந்ததும் இறுதியில் தென்னப்பிரிக்கப் போராட்டத்தில் காந்திஜி வெற்றி கண்டதும் இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கலாம். இவைகளுக்கெல்லாம் மேலாக ஒரு காரணம் இருந்தது. அந்தக் காரணத்தைத் தான் வள்ளுவர் திருக்குறளில்,

தன்னுயிர் தானறப் பெற்றனே, ஏனைய
மன்னுயிர் எல்லாந்தொழும்

(தவவலிமையால் தன் உயிரைத் தனக்கே உரிதாகப் பெற்ற வனே உலகிலுள்ள மற்ற உயிர்கள் எல்லாம் வணங்கும்) என்று கூறியுள்ளார்.

வீர வரவேற்பு

அவருடைய போராட்ட வரலாற்றைத் தமிழர்கள் நன்கு அறிந்திருந்ததனால் தான் அவரும் கஸ்தூரிபாவும் 1915-இல் சென்னைக்கு வந்தபோது, அவர்களுக்கு வெற்றி வாகைசூடித் திரும்பிய வீர மன்னர்களுக்கு அளிக்கப் பெற்றது போன்ற வரவேற்பை அளித்தனர். தனிப்பட்டவர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், பொது நிறுவனங்கள், அரசியல் அமைப்புகள், சமூகத் தொண்டு நிலையங்கள் ஆகியவைகளைச் சேர்ந்தவர்கள் 'நான்முந்தி, நீ முந்தி' என்று போட்டி போட்டுக் கொண்டு அவருக்கு வரவேற்பு அளித்தனர். (27-4-15) மாணவர்கள் அளித்த வரவேற்பிற்குத் தலைமை தாங்கிய வி. எஸ். சீனிவாச சாஸ்திரி கூறியது போல, சென்னை வரவேற்புகளில், புகழும் பெருமையும் பெற்றதன் ''தண்டனையை'' காந்தி தம்பதிகள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். நான் தோறும் ஓயாத ஒழியாத விருந்தும் வரவேற்பும் பாராட்டுமாகத் தான் இருந்தது. ஆனல் அதே சமயம், இம்முறை காந்திஜிக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பெல்லாம் அவர் தென்னப்பிரிக்காவில் செய்த சேவைக்காகவே என்பதை நாம் கவனிக்க வேண்டும். தரங்கம்பாடியில் காந்திஜிக்கு அளிக்கப் பெற்ற வரவேற்புரையின் தலைப்பு ''தென்னப்பிரிக்க இந்தியர்களின் தலைவரான ஸ்ரீமான் காந்திஜிக்குப் பிறையாறு, தரங்கை சுற்றுப்புற வாசிகள் சமர்ப்பித்த வந்தனோபசாரப் பத்திரம்'' என்று தான் கூறியது. மேலும், நாம் முக்கியமாக கவனிக்க வேண்டிய ஓர் உண்மை உண்டு. அதாவது அவருக்கு அளிக்கப்பெற்ற ஒவ்வொரு வரவேற்

பிற்கும் உயர் நீதிமன்ற நீதிபதிகளும் பெரிய அதிகாரிகளும் மற்றும் பல பெரிய மனிதர்களும் கட்சி வேறுபாடு எதுவும் இன்றி வந்து பங்கு கொண்டதாகும். பின்னால் அவர் அரசியலில் தீவிரமாக இறங்கியபோது, இவர்களால் காந்திஜியிடம் நெருங்கி வரமுடியவில்லை.

தனி அபிமானம்

டெண்டுல்கார் எழுதிய ''மகாத்மா'' என்ற நூலில் ''சென்னை மாநிலத்தில், முன்னாள் தென்னப்பிரிக்க சகாக்களுடன் தாம் இருப்பதாக காந்திஜி உள்ளூர உணர்ந்தார். ஆகையால் அவருடைய கருத்துக்களெல்லாம் இயற்கையாகவே வெளிவந்தன. அவருடைய எதிர்காலத் திட்டத்தைப் பற்றிய சூசகத்தை அவர் இங்கே கூறியது போன்று தோன்றியது'' என்று எழுதியிருக்கிறார். இங்கே சென்னை மாநிலம் என்று அவர் குறிப்பிடுவதை நாம் தமிழகம் என்று தான் எடுத்துக் கொள்ளவேண்டும். ஆகவே தமிழகத்தில் தான் எத்தகைய பணியை இந்தியாவில் மேற்கொள்ளப் போகிறார் என்பதை முதன் முதலில் அவர் சூசகமாக அறிவித்தார் என்று கூறினால் அது தவறாகாது.

எதிர்காலத் திட்டம்

இம்முறை காந்திஜி தமிழகத்திற் குவந்த போது சமூக, பொருளாதாரச் சிக்கல்களைக் குறித்த அவருடைய கருத்துக்களெல்லாம் நன்கு உருப் பெற்றிருந்தன. 1915-இல் காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவுகள் அஹிம்சை, தீண்டாமை ஒழிப்பு, சுதேசி, போராடுவதற்கான உரிமை ஆகியவைகளைப் பற்றிய உபநிடதம் என்று கூறப்படுவதுண்டு. இங்கு ''அசோஷியேடட் பிரஸ்'' செய்தியாளருக்கு 23-4-15-இல் அவர் பேட்டியளித்தபோது, ''தென்னப்பிரிக்காவில் நடத்திவந்த ஆஷ்ரமத்தை இங்கும் நான் தொடர்ந்து நடத்த வேண்டும். ஆயுள் முழுதும் நாட்டுத் தொண்டாற்றுவதற்கு இளைஞர்களைப் பயிற்றுவிப்பதே ஆஷ்ரமத்தின் நோக்கம். தென்னப்பிரிக்காவிலிருந்து என்னுடன் வந்த அநேக இளைஞர்களும் பையன்களும் என் பொறுப்பிலேயே இப்போது இருக்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்ததுதான்'' என்று கூறினார்.

'வரப்போகிறார், வரப்போகிறார்' என்று காந்திஜியின் வருகை பிரம்மாண்டமாக விளம்பரம் செய்யப்பெறுது

இருந்த காலம் 1915. ஆனலும் ஹரித்வாரிலிருந்து டில்லி எக்ஸ்பிரசில் ஏப்ரல் 17-ஆம் தேதியன்று மாலே காந்திஜி சென்னே சென்ட்ரல் இரயில் நிலேயத்தில் வந்திறங்கியபோது அவரை வரவேற்ற மக்கள் காட்டிய ஆர்வம் இருக்கிறதே அதற்கு இணேயான ஒரு ஆர்வத்தை அதற்கு முன் தமிழகம் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சந்தர்ப்பங்களில் தான் கண்டிருக்கும்.

சிறப்பான வரவேற்பு

இம்முறை காந்திஜியுடன் அவரது வாழ்க்கைத் துணேவி யாராகிய கஸ்தூரிபா காந்தியும் வந்திருந்தார். அன்று இரயில்வே நிலேய எல்லேக்குள் காந்திஜியை வரவேற்க வரவேற்கவுங் காணவும் திரள் திரளாக மக்கள் வந்திருந்தனர். அதுபோலவே வரவேற்க வந்த பெரிய மனிதர்களின் பட்டியலேப் பாருங்கள்: எஸ். சீனிவாச ஐயங்கார், பி. என். சர்மா, திவான் பகதூர் எல். ஏ. கோவிந்தராகவ ஐயர், திவான் பகதூர் கருணேகர மேனன், சி. ஆர். திருவேங்கடாச்சாரி கான்பகதூர் வால்ஜி லால்ஜி சேட், யாகுப் ஹாசன், ஜி. ஏ. நடேசன், டி. ரெங்காச்சாரி, திருமதி அன்னி பெஸண்ட், சி. பி. இராமசாமி ஐயர், வித்யாசாகர் பாண்டியா, எஸ். குருசாமி செட்டி, ஜி. நாராயணசாமி செட்டி, சி. எஸ். கோவிந்தராஜ முதலியார், பி. பி. வாடியா, சி. ஹண்டு, டாக்டர் கிருஷ்ணசாமி ஐயர், வி. வி. சினிவாச ஐயங்கார், வி. இராமதாஸ்... முதலியவர்கள். பொது மக்களில் பெரும் பாலானவர்கள் மாணவர்கள்.

காந்திஜியைக் காணவில்லே

சரி, இரயில் வந்தது. ஆனல் காந்திஜியைத்தான் காணவில்லே! சிலர் முதல் வகுப்புப் பெட்டிகளேத் துளாவி விட்டார்கள். சிலர் இரண்டாம் வகுப்புப் பெட்டியில் - இதிலா காந்தி வரப்போகிறார், ஆனலும் பார்த்து வைப்போம் என்ற தயக்கத் தோடு-தேடிப்பார்த்தார்கள். காந்திஜியைக் கண்டுபிடிக்க முடியவில்லே. யாரும் மூன்றுவது வகுப்புப் பெட்டியை எட்டிக் கூடப் பார்க்கவில்லே. "அவ்வளவு பெரிய தலேவர், அத்துணே பெரிய வழக்கறிஞர், அவ்வளவு உயர்ந்த குடும்பத்தில் தோன்றியவர் கேவலம் மூன்றும் வகுப்பிலா வருவார்?" ஆகவே இரயிலில் காந்திஜியைக் காணேம் என்று ஒரு பெரிய மனிதர் மற்றொரு பெரிய மனித

ரின் முகத்தைப் பார்க்கிறார். ஒருவர் முகத்திலும் ஈயாட வில்லை. கூட்டத்திலேயே சிறிது நேரம் பெரிய ஏமாற்றம் காணப்பெற்றது. இந்தச் சமயத்தில் இரயில் கார்டு வந்தார். தேடிவந்தவர்களிடம் அவர் செய்தியைச் சொன் னார்: ''காந்திஜியும் திருமதி காந்தியும் இந்த இரயிலில் வந்திருக்கிறார்கள். அவர்கள், அதோ பாருங்கள், அந்தக் கடைசிப் பெட்டியில் இருக்கிறார்கள்.'' அங்கே ஓடிப்போய்ப் பார்த்தால், மூன்றும் வகுப்புப் பெட்டியில் தம்பதிகள் இரு வரும் நின்று கொண்டிருக்கிறார்கள்! தலைவர் என்றால் ஒரு சிறு தொந்தி, முகத்தில் கொஞ்சம் பசபசப்பு ஆகியவைக ளெல்லாம் இருக்கவேண்டுமே? ஆனால் அதற்கு நேர் முரணாக ஒல்லியாய், கலைத்துப்போய் காந்திஜி கதவோரத் தில் வந்து நின்றார். நான்கு நாட்களாகத் தொடர்ந்து பயணம் செய்ததால், அழுக்கேறிப் போன ஒரு சட்டை அணிந்திருந்தார்; மூட்டை முடிச்சுகளுடன் காந்தி தம்பதி கள் அப்போது இரயிலில் இருந்து இறங்கியதைப் பார்த்தவர் கள் யாரோ வடநாட்டுக் கிராமப்புறத்திலிருந்து வந்த யாத்ரீகர்கள் என்று தான் எண்ணியிருப்பார்கள்.

கூட்டம் நெருக்கியது

காந்திஜியை மக்கள் கண்டுவிட்டார்களோ இல்லையோ, உடனே அந்தப் பெட்டி மீது ஒரு படையெடுப்பு நடத்தி விட்டனர். விருந்தினரை வரவேற்பதில் தமிழ் மக்களுக்குள்ள ஆர்வம் தனி தானே? கூட்டத்தை ஒழுங்கு படுத்துவதற்காக வந்தி ருந்த பன்னிரெண்டு போலீசார் - அந்தக் காலத்தில், இரயிலில் வந்திறங்கும் ஒரு தலைவரை வரவேற்க வரும் கூட்டத்தை ஒழுங்கு படுத்துவதற்காகப் பன்னி ரெண்டு போலீசார் வருவதென்பது அரச மரியாதை - எங்கே போனார்கள் என்று தெரியவில்லை! காந்திஜி பாடு, கூட்டத்தின்பாடு என்று விட்டு விட்டு அவர்கள் போய் விட்டனர். கடமை உணர்ச்சி வாழ்க!

காந்திஜி வாழ்க!

காந்திஜியே இரயில் பெட்டி வாசலில் வந்து நின்றார். சம்பிரதாயமாக அவரை எல். ஏ. கோவிந்தராகவ ஐயர் மாலையிட்டு வரவேற்க வேண்டும். கூட்டமோ வழிமறித்து நின்றது. கடைசியாக எப்படியோ வழி கண்டுபிடித்துக் கொண்டு போய் காந்திஜிக்கு மாலை போட்டாரோ இல்லையோ, ''காந்திஜி வாழ்க'' ''கஸ்தூர்பா வாழ்க'', ''எங்கள்

வீரர் வாழ்க'' ''வந்தேமாதரம்'' என்ற முழக்கங்கள் இரயிலையும் காந்திஜியையும் சேர்த்துத் தூக்கிக் கொண்டு போய்விடும் போல இருந்தன. (பின்னர் ஒரே மாலை சூட்டல் மயந்தான்; வந்திருந்த தாய்மார்கள் கஸ்தூரிபாவிடம் மஞ்சள் குங்குமமும் பூக்களும் வழங்கினர்கள்.) ஆகை யால் காந்திஜி கூட்டத்தினருக்கு வணக்கம் செலுத்தி விட்டு, அவருக்காக நிறுத்தப் பெற்றிருந்த சாரட்டு வண்டிக்கு வந்தார்.

வண்டியை இழுத்தனர்

அங்கு மாணவர்கள் பெருங்கூட்டமாக ஓடி வந்தார் கள். சாரட்டிலிருந்த குதிரைகளை அவிழ்த்து விட்டார் கள். தாங்களே வண்டியை இழுக்கத் தொடங்கி விட்டார்கள்; சுங்குராம செட்டி தெருவில் உள்ள நடேசன் அண்டு கம்பெனி கட்டிடம் வரை இழுத்துச் சென்றார்கள்; வண்டியில் காந்திஜியும் கஸ்தூரிபாவும் உட்காரவில்லை. இரு கைகளையும் கூப்பி வணங்கிக் கொண்டே நின்று கொண்டு வந்தார்கள். வழி நெடுகத் தெருவில் இரு புறங்களிலும் மக்கள் கூட்டம் தான்! ''காந்திஜிக்கு ஜே'' முழக்கம் தான்!

மரியாதை

நடேசன் அண்டு கம்பெனி கட்டிடம் வந்து சேர்ந்த வுடனேயே காந்திஜி உரத்த, தெளிவான குரலில் - காந்திஜி கூட உரத்த குரலில் பேசுவாரா என்று யாருங் கேட்டுவிட வேண்டாம்; ஒலிபெருக்கி இல்லாத அந்தக் காலத்தில், யாரும் உரத்த குரலில் பேசித்தானாக வேண்டும் - வரவேற்ற வர்களுக்குத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ''உங்களுடைய அன்பிற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நான்கு நாட்கள் தொடர்ந்து பயணம் செய்து வந்ததால் எனக்கு மிகவும் களைப்பாக இருக்கிறது. இங்கு நான் தங்கியிருக்கும் நாட்களிலெல்லாம் பிற்பகலில் மூன்றிலிருந்து ஐந்து மணிக்குள் பொது மக்களைச் சந்தித் துப் பொதுச் சிக்கல்களைப் பற்றி விவாதிப்பேன்'' என்று அவர் அறிவித்தார். காந்திஜி வருகையை முன்னிட்டு கணேஷ் அண்டு கம்பெனியார் அவருடைய வரலாற்று நூல் பிரதிகள் பத்தாயிரத்தை (தமிழ், தெலுங்கு, ஆங்கி லம் ஆகிய மூன்று மொழிகளிலும்) இலவசமாக வழங்கி னர்கள். காந்திஜி எவ்வளவு எளிமையாக வாழ்க்கை

நடத்தி வந்தார் என்பது அந்தக் காலத்தில் இங்கே யிருந்தவர்களுக்குத் தெரியாது. ஆகையால் காந்தி தம்பதிகள் தங்கியிருப்பதற்காக ஒதுக்கப் பெற்ற இரண்டு அறைகளில் கட்டில், நாற்காலி, மேசை முதலியவைகளெல்லாம் போடப் பெற்றிருந்தன. காந்திஜி கொஞ்ச நேரம் இவைகளை யெல்லாம் உற்றுப் பார்த்து விட்டுச் சிரித்தார். ''ஓகோ, தென்னப்பிரிக்காவிலிருந்து உங்களுடைய மருமகன் மறு வீட்டிற்கு வந்திருக்கிறாரோ?'' என்று வேடிக்கையாகக் கேட்டார். கட்டில்களையும் தரையில் விரிக்கப் பெற்றிருந்த கம்பளத்தையும் அகற்றிவிடச் சொன்னார். கஸ்தூரிபாவிற்காக ஒதுக்கப் பெற்றிருந்த அறையைப் பொருத்தவரை அங்கு போடப் பெற்றிருந்த அத்தனை நாற்காலிகளையும் மேசையையும் எடுத்துவிடச் சொல்லி விட்டார். இவைகளை அகற்றும் வரை அவர் பிறருடன் தாராளமாகப் பழகக்கூட இல்லை!

இங்கு காந்திஜி அதிகாலையில் எழுந்து, காலைக் கடன்களை முடித்து விட்டுத் தமது துணிகளைத் துவைத்து உலர்த்தி விட்டுத்தான் வேறு வேலை பார்ப்பார். இவ்வாறு அவர் துணிகளை உலர்த்திய பின்பும் விடிவதற்கு நேரம் இருக்கும். அதன் பின் ஜி. ஏ. நடேசனுடைய ''இந்தியன் ரெவ்யூ'' சஞ்சிகையில் துணை ஆசிரியராகச் செயலாற்றிய பி. நடேசனைக் கூடக் கூட்டிக்கொண்டு கடற்கரைக்கு உலவப் போய் விடுவார். முதன் முதலாக இவ்வாறு புறப்பட்டதுமே, ''காபி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்'' என்று நடேசன் கூறினார். அதற்கு காந்திஜி ''நான் அந்த பானத்தைத் தொடுவதில்லை. வேலையா, உணவா, எது முதலில் வேண்டும்?'' என்று கேட்டார்.

துணிகளைத் துவைத்தார்

நடேசன் : காபி தான்!

காந்திஜி : இல்லை வேலை தான்.

முடிவில் அவரவர் தத்துவப்படி அவரவர் செய்தார்கள்! காந்திஜி நடந்து போனார். நடேசன் காபி அருந்திவிட்டு அவரை வேகமாக எட்டிப் போய்ப் பிடித்துக் கொண்டார்.

''இந்து'' நாளிதழ் காந்தி தம்பதிகளை வரவேற்று ஒரு துணைத் தலையங்கம் தீட்டியிருந்தது. ''காந்தி தம்பதி

கள் தங்களுடைய தாய் நாட்டிற்காக, சாத்விக எதிர்ப்பு' என்னும் எளிய - ஆனால் இயக்குவதற்குக் கடினமான ஆயுதத்தைக் கொண்டு போராடியவர்கள்.

பத்திரிகை வரவேற்பு

அவர்கள் இங்கு வந்த போது மக்கள் அவர்களுக்குப் பெரும் முழக்கத்துடன் அளித்த வரவேற்பானது அவர்களிடம் மக்கள் கொண்டுள்ள பெரும் மதிப்பையும் பாராட்டுதலையும் புலப்படுத்திற்று. தமிழ் சத்தியாக்ரகிகளின் அற்புதமான சகிப்புத் தன்மையையும் பணிவையும் பாராட்ட காந்திஜி ஒருபோதும் தயங்கியதில்லை. இப்போது அவர் சென்னைக்கு வந்துள்ள நோக்கங்களில் ஒன்று, தென்னப்பிரிக்காவிலிருந்து திரும்பி வந்துள்ளவர்களுடன் நல்லுறவு ஏற்படுத்திக் கொள்வதேயாகும்.....சுதேசி இயக்கத்தைப் பரப்புவதன் மூலம் இந்தியர்களின் வறுமையைக் குறைக்கலாம் என்றும் இந்தியர்கள் சுயமரியாதையுடன் வாழ்வதற்குத் தாய்மொழிப் பயிற்சி மிகமிக முக்கியம் என்றும் காந்தி எண்ணுகிறார்'', என்று ''இந்து'' கூறியிருந்தது. ''சுதேசமித்திரன்'' தனது துணைத் தலையங்கத்தில் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தது: ''அவர் இத் தேசவாசியே யார்வாராலும் நெடுங்காலம் தென்னப்பிரிக்காவிலேயே இருந்து விட்டாராதலால், இந் நாட்டில் அவர் போன இடங்களிலெல்லாம் இந்தியாவின் சேமத்தில் அக்கறை கொண்ட அயல் தேசவாசி ஒருவருக்குக் கிடைக்கும் மரியாதை போன்ற மரியாதைகள் நடக்கின்றன. அம்மரியாதைகள் அனைத்திற்கும் அவர் உரியவரேயாவார். அவர் தென்னப்பிரிக்காவிலுள்ள இந்தியர்களின் உரிமையை அடிமையினும் சீர்கேடான நிலைமையிலிருந்து புகழ்தற்கரிய தன்மதிப்புக் காட்டியும் எதிர்க்காமல் எதிர்க்கும் உபாயத்தைக் கைப்பற்றியும் செய்திருக்கும் செய்கையும் நடத்தியிருக்கும் நடவடிக்கைகளும் கல்லின் மேல் எழுத்துப் போலப் பல தலைமுறைகளுக்கு நிலைத்து நிற்கும்''.

•

அவதார புருஷன்

காந்திஜியின் வருகை மக்கள் மத்தியில் எவ்வளவு பெரிய உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்தியது என்பதற்கு ஒரு சான்றாக பண்டிட் கே. டி. ஸ்ரீனிவாசாச்சாரியார் ''சுதேசமித்திரன்'' (6.5.'15) இதழில் எழுதியதைக் கூறலாம். அவர் காந்திஜியை அவதார புருஷன் என்று அப்போதே குறிப்பிட்டார். ''மிஸ்டர் காந்தியுடைய முற்போக்குக் குணங்கள் முதலில் பாமரர்களையும் பிறகு

மற்றவர்களையும் நேசிக்கின்றன. மிஸ்டர் காந்தி சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்து இறங்கியது முதல் மிஸ்டர் ஜி. ஏ. நடேசனின் ஜாகைக்குப் போவது வரையில் அவரை முதலில் தரிசித்த பாமரர்கள் (பழம் விற்பவர்களும் இரயில்வே ஸ்டேஷனில் உள்ள கூலிகளும்) இருகரம் கூப்பி ''ஏ! ஏழைகளுக்கு இரங்கும் லோகோபகாரியான மஹாபுருஷனே!'' என்று துதித்தார்கள். பிறகு மற்றோர் இடத்தில் பரம ஏழையும் நொண்டியுமான ஒரு பிச்சைக்காரன் தன் கையிலுள்ள கொப்பரையைக் கீழே வைத்துவிட்டு அவரைப் பார்த்துக் கண்ணும் கண்ணீருமாய் நின்று கொண்டு முற்கூறிய வண்ணம் துதித்தான். இவ்வாறே ஒரு வண்டிக்கார மஹமதியக் கிழவனும் துதித்து நின்றான்.

காந்திஜி சந்திப்பு

• ''சென்ற 19-4-'15 திங்களன்று மாலை 5 மணிக்கு டாக்டர் ஸர் எஸ். சுப்ரமணியம் ஐயர் கிரகத்தில் மிஸ்டர் காந்திஜியின் குணாதிசயங்களைப் பற்றி நான் பேசிக்கொண்டிருக்கையில் மிஸ்டர் ஜி. ஏ. நடேசனுடன் மிஸ்டர் காந்திஜி ஐயரைப் பார்க்க விஜயம் செய்தார். அச்சமயம் அவரைக் கண்ட ஐயருடைய உள்ளக் களிப்பையும் அதற்குரிய முகமலர்ச்சியையும் அறிவின் அளவிற்கு எட்டாத, கடவுளின் உண்மையான சொரூபத்தை இந்த சம்சாரத்தில் பிரத்யட்சமாகக் கண்ட சாதுவின் மன மகிழ்ச்சியோடும் முக மகிழ்ச்சியோடும் ஒப்பிடலாம் என்று நினைக்கிறேன். ஸர் ஐயர் மிஸ்டர் காந்திஜிக்கு நல்வரவு கூறி வரவேற்ற பிறகு என்னையும் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஸர் ஐயரும் ஸ்ரீமான் காந்திஜியும் ஒருவருக்கொருவர் லோக விவகாரங்களைப் பற்றி வெகுவாய் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருக்கும் தருவாயில் ஸ்ரீமான் காந்திஜியினுல் 'சாந்தி' 'அபயம்' என்னும் இரண்டு வடமொழிச் சொற்கள் உபயோகிக்கப்பட்டன. அவர்களிருவரும் சற்று நேரம் கழிந்தவுடன் விடை பெற்றுச் சென்ற பிறகு முற்கூறிய இரண்டு வடமொழிச் சொற்களும் எதற்காக எந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லப்பட்டன என்று ஸர் ஐயரை நான் கேட்க, சாந்தி என்பது நம் மனதில் திடமாகக் குடி கொண்டிருப்பதால் தாம் எப்பொழுதும் அபயமாக இருப்பதாகவும் அதனல் தமக்கு சரீரத் தளர்ச்சி முதலானவை ஏற்படவில்லையென்றும் அவர் சொன்னதாக ஸர் ஐயர் சொன்னர். புராணங்களின்

ரஹஸ்யார்த்தங்களும் மற்ற தர்மங்களும் ஸ்ரீமான் காந்தி இச்சென்னை மாநகரத்தில் எழுந்தருளியதிலிருந்து படித்தவர்களுக்கு நன்கு விளங்குகிறது.''

ஆன்மிக விளக்கம்

''மிஸ்டர் காந்தியை சென்னை மாநகரிலும் மற்ற இடங்களிலும் படித்தவர்களும் பிரபுக்களும் மற்றவர்களும் எவ்வளவோ மேன்மையாக உபசரிக்கின்றார்கள். இவ்வுபசாரத்திற்குப் பயனென்னவெனில் அவருடைய சரீரத்திலுள்ள அணுக்களில் ஒன்றுவது உபசரிப்பவர்களின் சரீரங்களிலும் மற்ற சாமான்யமானவர்களின் சரீரங்களிலும் கலப்பதேயாகுமே யொழிய வேறல்ல. இத்தகைய அவதார புருஷரான ஸ்ரீமான் காந்தியை மனப்பூர்வமான அன்புடன் பூஜிப்பது நம் தேசத்தவர்களுடைய கடமையாகும்.''

இரண்டு நாட்கள் :

ஜி. சு. ஐயர்

இங்கு வந்ததிலிருந்து பல்வேறு தரப்பினர்களையும் சந்தித்துப் பேசுவதிலேயே இரண்டு நாட்களை காந்திஜி கழித்தார். சிலருடைய வீடுகளுக்கும் சென்றார். பெயர் பெற்ற தேசபக்தரும் பத்திரிகையாளருமான ஜி. சுப்ரமணிய ஐயரைப் பார்ப்பதற்காக வி. எஸ். சீனிவாச சாஸ்திரியுடனும் ஜி. ஏ. நடேசனுடனும் அவரது இல்லத்திற்கு காந்திஜி சென்றார். ஜி. சுப்ரமணிய ஐயர் தொழுநோயால் அப்போது மிகவும் அல்லல் பட்டுக்கொண்டிருந்தார். ஆனாலும் தம்மால் இயன்ற அளவு தேசத்தொண்டாற்றிக் கொண்டு தான் இருந்தார். என்றாலும் அதிகம் தொண்டாற்ற முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு இருந்தது. காந்திஜியைக் கண்டவுடன் அண்ணலின் சாதனைகள் குறித்து நாடு மிகவும் பெருமை அடைவதாக அவர் சொன்னார். ''ஆனால் நானும் இருக்கிறேன் பாருங்கள். கடும் நோயினால் ஒன்றும் செய்யச் சக்தியற்றவனைப் போய்விட்டேன். என்னால் நாட்டிற்கு என்ன பயன்...?'' என்று அவர் சொல்லிக் கொண்டுபோன போது அவர் கண்களில் நீர் மல்கத் தொடங்கிவிட்டது. காந்திஜி உணர்ச்சி வயப்பட்டவராய் அவர் அருகில் சென்றார். ''வருந்தாதீர்கள். நீங்கள் நாட்டிற்குப் பெரும் பணி செய்திருக்கிறீர்கள். வருத்தப்படுவதற்கு எவ்விதக் காரண

மும் இல்லை,'' என்று கூறிக்கொண்டே அவருடைய கண்ணீரைத் தமது துண்டால் துடைத்து விட்டார். அது மட்டுமல்ல, தொழுநோயின் காரணமாக அவர் உடம்பிலிருந்த புண்களிலிருந்து வந்த சலத்தையும் தமது துண்டால் துடைத்து விட்டார். பக்கத்தில் இருந்த சாஸ்திரிக்கும் நடேசனுக்கும் உள்ளமே உருகிவிட்டது. பிற்காலத்தில் இதைப்பற்றி சாஸ்திரி பலமுறை குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறார். காந்திஜியின் இரக்க உணர்ச்சி பேராழி போன்றது என்று புகழ்ந்துரைத்துள்ளார்.

20–4–15

கோகலே கிளப்

கோகலேயின் விருப்பப்படி நாட்டில் சுற்றுலா வந்த காந்திஜி, சென்னையில் முதலில் கோகலே கிளப் உறுப்பினர்களைத்தான் இந்திய ஊழியர் சங்கக் கட்டிடத்தில் சந்தித்துப் பேசினார். அனுபவம் வாய்ந்த பெரியவர்களின் வழி காட்டுதலுடன் பொதுச் சிக்கல்களைக் குறித்து இளைஞர்கள் ஆராய்வதற்காக அமைக்கப்பெற்ற சங்கம் இது. இந்த உரையாடலின்போது போனிக்ஸ் குடியிருப்பு அமைக்கப் பெற்றதன் நோக்கத்தையும் அதில் சேருவதற்கு விதிக்கப் பெற்றிருந்த நிபந்தனைகளையும் அவர் விளக்கிக் கொண்டு வந்தார். ''தேச சேவைக்குப் பிரம்மச்சர்யத்தைக் கடைப் பிடிப்பதும் இன்றியமையாதது; ஆகையால், பிரம்மச்சர்யத்தைக் கடைப்பிடிப்பவர்களே போனிக்ஸில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்,'' என்று அவர் கூறினார். அந்தச் சமயத்தில் ''இந்தியா முழுவதுமே பிரம்மச்சரியத்தையும் ஏழ்மையையும் ஏற்கவேண்டும் என்று கூறுவீர்களா?'' என்று ஒருவர் கேட்டார். அதற்கு காந்திஜி: ''ஆம், நிச்சயமாக, ஒருவிதத் தயக்கமும் இன்றிக் கூறுவேன். ஆனால் அதே சமயம் நாடு முழுவதும் அதை ஏற்கமுடியாது என்பதற்காக வாழ்க்கையில் கீழ்க்கண்ட இரண்டு கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கூறுகிறேன்— ஒன்று சத்தியம், மற்றொன்று அஹிம்சை. அஹிம்சை, அஹிம்சை என்றால் உடலுக்கு மட்டுமல்லாது, மனத்திற்கும் தொல்லை கொடுக்கக் கூடாது,'' என்று மறுமொழி அளித்தார்.

அரசியலில் சாத்விக எதிர்ப்பை (சத்தியாக்ரகத்தை) மேற்கொள்வது குறித்து அவர் எச்சரித்தார். ''அது

கடினமான ஆயுதம். இன்றியமையாத ஒரு கடைசிக் கட்டத்தில் தான் அதைப் பயன் படுத்த வேண்டும். (தேசத்தின் மானம் போன்ற) மிக மிக முக்கியமான சிக்கல்களில் தான் பயன்படுத்த வேண்டும்.'' இதன் பின்னர் கையால் செய்யப் பட்ட பொருள்களைத் தாம் ஆதரிப்பது குறித்து அவர் விளக்குகையில், எல்லா இயந்திரங்களையுமே தாம் எதிர்ப்பதாகச் சொன்னார்.

சாத்விக எதிர்ப்பு

21-4-15

1915-ஆம் ஆண்டில் காந்திஜி பேசிய கூட்டத்திற்குத் தலைமை வகித்த ஒரு தமிழர் கூறினார் : ''எனக்கு எழுபத்தி மூன்று வயதாகிறது. இந்த நீண்ட வாழ்க்கை யில் காந்திஜிக்கு வரவேற்பு அளிக்கும் இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதை விட ஒரு பெரும் பேறு எனக்குக் கிடைத்ததில்லை. இந்தியாவின் மிகப்பெரிய மனிதர்களில் ஒருவரை கௌரவிக்க நாம் இங்கே கூடியிருக்கிறோம். வேறு யாரையும் விட, உலகில் இந்தியாவின் மதிப்பை உயர்த்தியவர் அவர். இந்தியா முழுவதிலும் உள்ள ஒவ்வொரு வீடும் அவர் பெயரை அறியும். காந்திஜியின் பாதங்களும் அவர் மனைவி யார் பாதங்களும் பட்டதால் இந்த நகரமே புனிதமடைந் தது. அவரை நேருக்கு நேராகச் சந்திக்கும் பெரும் பேறு பெற்றதற்காக உங்களை நான் பாராட்டவேண்டும். தென் னப்பிரிக்காவில் அவர் கால் வைத்த நாளிலிருந்து இன்று வரை அவருடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மொழியி லும் - தூய அழகிய நடையில் - எழுதி வைக்கவேண்டும். அது ஒவ்வொரு ஆணும் பெண்ணும் குழந்தையும் அறிந்து கொள்ளுமாறு செய்யத் தக்கதாகும். ஆனால் ஒன்று. இதுவரை அவர் செய்த வேலை மகத்தானது தான் என்றா லும் இனி அவர் செய்ய (ஆண்டவன்) விதித்திருக்கும் பணி யைப் பார்க்கும்போது இது வரை செய்த வேலை ஒரு பூர் வாங்கப் பயிற்சியே. இவர் வழக்குரைஞராகவே நீடித்திருந் தால் ஒரு நீதிபதியாகியிருப்பார். பம்பாயிலோ அல்லது இந்தியாவின் வேறொரு பகுதியிலோ இருந்திருந்தால் ஆன் மாவின் சக்தியை அறியும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்திருக் காது. (சத்தியாக்ரகம் என்பது ஆன்மாவின் சக்தி என்று

தொலை நோக்கு

காந்திஜி கூறி வந்தார்.) சாத்விக எதிர்ப்பைப் பயன் படுத்தும் வாய்ப்புக் கிட்டியிருக்காது. அவர் இனிமேல் செய்யப்போகும் பணி, கோகலே பேர்ன்று, சட்ட சபை யில் இந்தியாவின் உரிமைகளைத் திறமையுடன் எடுத்துச் சொல்வதாய் இராது; மக்களுக்காக மக்களால் மக்கள் மத்தியில் செய்யும் பணியாகவே இருக்கும். தென்னப்பிரிக் காவில் அவர் குப்பையிலிருந்து கோமேதகத்தை உருவாக்கி னர். இந்தியாவில் அவர் தமது பணியைத் தொடங்கும் போது உண்மையான சன்னியாசிகள் பலர் அவருடன் சேர்ந்து கொள்வார்கள். தங்கள் உய்விற்காக அல்லாமல் கோடிக்கணக்கான மக்களின் உய்விற்காகப் பணியாற்று வார்கள். காந்திஜியின் முத்திரை பெற்ற ஊழியர்கள் ஆயிரக்கணக்கில் பெருகும்போது இந்திய மக்கள் எல்லோ ரும் உயர்த்தப் பெறுவார்கள். காந்தி எந்த ஆன்மிக சக்தியை உருவாக்க முயலுகிறாரோ அந்த ஆன்மிக சக்தி தான் இந்தியாவிற்குத் தேவை; இராணுவ சக்தி அல்ல.''

சரியான கணக்கு

இந்தியாவில் என்ன செய்வதென்று காந்திஜி தமது எதிர்காலத் திட்டங்களை வகுக்காத ஒரு சமயத்தில், அவ ருடைய சத்யாக்ரகத் தத்துவத்தின் நுணுக் கங்கள் தெரியாத ஒரு காலத்தில் நிகழ்த்திய ஓர் உரை இது என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். காந்திஜியின் தத்து வத்தை எவ்வளவு நன்றாகப் புரிந்து கொண்டு அவருடைய எதிர்காலத்தை எவ்வளவு சரியாகக் கணித்திருக்கிறார் இந்தத் தமிழர். ஆம், இந்தப் பாராட்டுரைகளையெல்லாம் கூறியவர் சர். எஸ். சுப்ரமணிய ஐயர் என்ற தமிழரே யாவார். விக்டோரியா பொது மண்டபத்திற்கு வடக்கே உள்ள திறந்த வெளியில் இந்தியர் தென்னப்பிரிக்க லீகின் சார்பாக காந்தி தம்பதிகளுக்கு வரவேற்பளிக்கப் பெற்ற போது தலைமை வகித்து அவர் ஆற்றிய உரை இது. இக்கூட்டத்திற்கு லீகின் தலைவரான சென்னை பிஷப் அன்று வர இயலாமற் போய்விட்டதற்குக் காரணம் வெளியூரில் அவருக்கு ஒரு முக்கியமான வேலை இருந்ததேயாகும். அவர் காந்தி தம்பதிகளை வானளாவப் புகழ்ந்து ஒரு செய்தி அனுப்பியிருந்தார். ''இந்திய நாட்டிற்காகப் பாடு பட்டவர்கள் பலருண்டாயினும் அவர்களில் யாரும் உங்களை மிஞ்ச முடியாது..... ஒரு ஞானியின் கடவுள் தன்மை, விவேகம் ஆகியவற்றின் சின்னமாக நீங்கள் திகழ்கிறீர்கள்.

மாதர்கள் பண்பே உருவாகக் கொண்டு அவதாரம் செய்த அம்மையாராக எங்கள் கண்ணிற்குத் திருமதி காந்தி புலப்படுகிறார். நிறைந்த காலத்திலும் குறைந்த காலத்திலும் இலாபத்திலும் நட்டத்திலும் வீட்டிலும் சிறையிலும் வரவேற்பிலும் அவர் உங்களுடன் இணைந்து வாழ்கிறார்'' என்று அவர் இக்கடிதத்தில் கூறியிருந்தார். வரவேற்புரையைப் படித்துக் கொடுத்த ஜி. ஏ. நடேசன், அதை ஒரு பேழையில் வைத்து அளிக்கவில்லை. அந்தக் காலத்தில் வரவேற்புரைகளைப் பேழைகளில் வைத்து அளிப்பது தான் வழக்கமாக இருந்தது. பேழையில் வரவேற்புரையைப் பெற காந்திஜி விரும்பமாட்டாராதலால், அதை அவ்வாறு அளிக்கவில்லை என்று நடேசன் கூறினார்.

மகாத்மா காந்தி எழுந்து, தமக்கும் தமது வாழ்க்கைத் துணைவியாருக்கும் அளிக்கப்பெற்ற சிறப்பான வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.

வரவேற்புக்கு பதில்

''இந்த வரவேற்பிற்கு நாங்கள் ஓரளவாவது தகுதி உள்ளவர்களாக இருந்தால் அதற்கு எனது குருவின் (கோகலேயின்) காலடிகள் தாம் காரணம். அவர் ஊட்டிய உணர்ச்சியின் படிதான், நாடு கடத்தப் பெற்றவன் போல் வேறொரு நாட்டில் நான் இதுவரை பணியாற்றி வந்தேன். நாங்கள் சென்னைக்குக் காலந்தாழ்த்தி வந்ததன் காரணம், நாங்கள் விரைந்தோடி வராவிட்டாலும் நீங்கள் எங்களைத் தவருகப் புரிந்து கொள்ளமாட்டீர்கள். உங்கள் இதயத்தில் எங்களுக்கு எப்போதும் இடம் உண்டு, என்ற நம்பிக்கைதான்''. என்று கூறினர். பின்னர் 1896-இல் தாம் சென்னைக்கு வந்த பயணத்தின் போது சென்னை அளித்த வரவேற்பைச் சிறப்பித்துப் பேசினர். இந்திய அரசியலுக்குத் திரும்பி வந்த பின், முதன் முதலாகத் தமிழகத்தில் அவர் பங்கு கொண்டு சொற்பொழிவாற்றிய முதல் பொது நிகழ்ச்சி இது தான் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். பெரிய முழக்கம் எதுவும் இல்லை; கை கால் ஆட்டுவதோ அறை கூவல் விடுவதோ உணர்ச்சி வயப்படுவதோ எதுவும் இல்லை. நின்று கொண்டு நிதானமான குரலில் அவர் பேசினர்; குரலும் ஏற்ற இரக்கம் இன்றி ஒரே மாதிரியாகவே போய்க் கொண்டிருந்தது: ஆனாலும் சொற்களிலும் கருத்துக்களிலும் ஒரு தனி கண்ணியமும் அழகும் இருந்தன: பெரிய முழக்கங்களிலெல்லாம் இல்லாத ஒரு தனிச்சக்தி இருந்தது.

கேட்டோர் உள்ளத்தை இச் சொற்பொழிவு ஊடுருவிப் பாய்ந்தது. காந்திஜி தமிழர்களுக்கு ஒவ்வொரு புகழ் மாலையாகச் சூட்டி மகிழ்ந்து கொண்டிருந்தார்.

அவர் தொடர்ந்து சொன்னார். ''நீங்கள் உங்களுடைய அழகான வரவேற்புரையில், நான் செய்த சிறு தொண்டை மிகைப்படுத்திப் பாராட்டியிருக்கிறீர்கள்.

தமிழர்க்குப் பாராட்டு

நீங்கள் கூறியுள்ள புகழுரையில் பத்தில் ஒரு பங்கிற்காவது நாங்கள் தகுதியாக இருக்கிறோம் என்றே வைத்துக்கொள்ளுங்கள். எங்களையே இப்படிப் பாராட்டினால், தென்னப்பிரிக்காவில் இந்தியர்களின் நல்வாழ்விற்காகத் தங்களுடைய உயிரையே பலி கொடுத்தவர்களின் சேவையை எவ்வாறு பாராட்டப் போகிறீர்கள்? தாய் நாட்டின் மானத்தைப் பாதுகாப்பதற்காக அத்தனைக் கஷ்டங்களையும், அத்தனை சோதனைகளையும் அவமரியாதைகளையும் ஏற்ற பதினாறு பதினேழு வயது வாலிபர்களான நாகப்பன், நாராயணசாமி சேவையை எவ்வளவுதான் பாராட்டுவது? அந்த அழகான பதினேழு வயது இளம் பெண் வள்ளியம்மாளுக்கு- மாரிட்ஸ்பர்க் சிறையிலிருந்து எலும்பும் தோலுமாக விடுதலை செய்யப் பெற்று, காய்ச்சலால் பீடிக்கப்பெற்று, ஒரு மாத காலத்தில் உயிர் நீத்த அந்தப் பெண்ணிற்கு நீங்கள் என்ன பாராட்டுக் கூறப்போகிறீர்கள்? இம்மாபெரும் பணியை ஆற்றுவதற்கு இந்தியர்களிலேயே (இறைவனால்) குறித்துத் தேர்ந்தெடுக்கப் பெற்றவர்கள் சென்னை வாசிகள்தான். நெருக்கடியான கட்டங்களில் ஒரு முறையாவது சிறைக்குச் செல்லாத மதராசியை ஜோகன்னஸ்பர்க்கில் மதராசிகள் மதிப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமா? அந்தப் பெரிய மனிதர்களுக்கும் மாது சிரோன்மணிகளுக்கும் நான் உணர்வூட்டியதாக நீங்கள் கூறியிருப்பதை நான் ஏற்க முடியாது. நம்பிக்கையுடன் - எந்தவிதமான பலனையும் எதிர்பாராது - பணியாற்றிய அந்த எளிய மக்கள் தான் எனக்கு உணர்வூட்டியவர்கள். ஆண்டவன் மீது அவர்கள் வைத்த அழியா நம்பிக்கைதான் அங்கு நான் அப்பணியைச் செய்யுமாறு செய்தது. (அவர்களெல்லாம் தியாகம் செய்ய) எங்களுக்குப் புகழ் கிடைத்தது எங்கள் தீவினைப் பயனே.'' பொதுவாகக் காந்திஜி, இவ்வாறு தமக்கு ஊக்கமும் உணர்ச்சியும் ஊட்டியவர்கள் தமிழர்களே என்று கூறினாலும், அது அவருடைய அடக்கத்தையே காட்டிற்று என்பதைத் தமிழர்கள்

உணர்ந்துதான் இருந்தார்கள். காந்திஜி தான் தென்னுப் பிரிக்கத் தமிழர்களுக்கு வழி காட்டினுர் என்பதில் ஐய மில்லை என்பது அவர்கள் கருத்து. இதை அன்னிபெசன்ட் அம்மையாரும் மற்றும் பலரும் கூறியிருக்கிறுர்கள்.

இந்த வரவேற்பையும், அதில் காந்திஜி ஆற்றிய உரை யையும் குறித்து ''இந்து'' ஆங்கில இதழ் உடனே ஒரு தலையங்கம் எழுதியது. ''அரசியல் வேலை களையோ ஆர்ப்பாட்டத்தையோ மேற்கொள் ளக் கூடிய அமைப்புகளைச் சேர்ந்தவர்களுடைய தேசபக்தி, சேவை உணர்வு ஆகியவைகளி லிருந்து ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்ட காந்திஜி யின் தீவிர தேசபக்தியும் சேவை உணர்வும் முற்றிலும் வேறு பட்டவையாகும். முன்னதை விடப் பின்னது அளவிடற் கரிய அளவு உயர்ந்தது. எளிய துறவியாகத் தோன்றும் இவ்வீரர் மிக எளிய உடைகளையே அணிந்திருக்கிறுர். அதே சமயம், அவருடைய சொற்கள் கேட்பவர்களை உணர்ச்சியடையச் செய்கின்றன; அவரிடம் தேங்கிக் கிடக் கும் பலம் வாய்ந்த தார்மிக, ஆன்மிக நம்பிக்கையின் ஆழத்தை வெளிகாட்டுகின்றன. எத்தனையோ பெரிய இக்கட்டுகளுக்கு மத்தியில் நாகரிக உலகத்தின் முன்னுல் இந்நாட்டின் பெருமையையும் கண்ணியத்தையும் நிலை நிறுத்த இந்நம்பிக்கைகள் தான் அவருக்கு உதவின... தேசிய முன்னேற்றப் பாதையில் எதிர்காலத்தில் நல்ல திற னும் சக்தியும் வாய்ந்த தலைவரை காந்திஜியிடம் நாடு காணும்''. இவ்வாறு அன்று ''இந்து'' கூறிய சோதிடம் பின்னுல் நூற்றுக்கு நூறு மெய்யாயிற்று. ''சுதேசமித்திரன்'' கூறிற்று:- ''நம் பாரத மாதாவானவள் பெறுது பெற்ற அருமைப் புதல்வர்களில் ஒருவரான மிஸ்டர் காந்தியையும் அவரது மனைவியையும் வரவேற்று அட்ரெஸ் ஒன்று வாசித் துக் கொடுத்து உபசரிக்கும்படியான பாக்கியத்தைச் சென்னை நேற்றுப் பெற்றதாகையால் நேற்றைய தினத்தை ஒரு சுபதினம் என்றே கருத வேண்டும். மிஸ்டர் காந்தியை நேருக்கு நேராக வரவேற்று உபசரிக்கும் பெருமை கிடைத் தற்கரிய பெருமையேயாகும்... இந்தியர்களின் பரிதாப நிலைமையையும் ஆட்சி வல்லோராகிய சிவிலியன்களின் இள காத மனப்பான்மையையும் அறிந்தே பாரத மாதவானவள் மிஸ்டர் காந்தி, காலஞ்சென்று விட்ட மிஸ்டர் கோகலே, தாதாபாய் நௌரோஜி போன்ற தேசாபிமான சிரோன்

செய்தித் தாள்கள்

மணிகளைப் பெற்றனள்''. அன்னிபெசன்ட் நடத்திய'' நியூ இந்தியா'', ''தென்னப்பிரிக்காவில் ஆற்றியதைக் காட்டிலும் இங்குப் பெரும் பணியை காந்திஜி ஆற்றுவாரென்று நாமெல்லோரும் எதிர்பார்க்கிறோம். ஏனென்றால் சொல்லாலும் செயலாலும் மற்றவர்களுக்கு உத்வேக மூட்டக் கூடியவர்களில் அவர் ஒருவராவார்'' என்று வாழ்த்தியது.

22-4-15

மறுநாள் காந்திஜிக்கு காஸ்மாபாலிட்டன் கிளப் பைச் சேர்ந்தவர்கள் அளித்த விருந்தில் கிளப் செயலாளரான டி. ரெங்காச்சாரியார், வந்திருந்த தோரில் முக்கியமானவர்களை காந்திஜிக்கு அறிமுகம் செய்து வைத்தார். கிளப்பின் தலைவரான சர். சி. சங்கரன் நாயரும் வந்திருந்தார். துணைத்தலைவரான தியாகராஜ செட்டி காந்திஜிக்கு மாலை அணிவித்தார். இசையரங்கும் நடைபெற்றது. அதன் பின் காந்திஜி வரவேற்பிற்கு நன்றி தெரிவித்துப் பேசிய போது சமூகத்தின் தலைவர்கள் மீது தமக்குச் ''சண்டை'' யிருப்பதாகச் சொன்னார். அந்தக் காலத்தில் சமுதாயத்தின் தலைவர்கள் என்று கூறப்பெற்றவர்கள் ஆடம்பரமான உடைகள் உடுத்திக் கொண்டு, 'கிளப்' களில் சந்தித்து, தேநீர் விருந்துகள் நடத்தி, சொற்பொழிவாற்றிக் கலைந்து விடுவதுடன் தங்கள் பொறுப்பு முடிந்து விட்டதாக எண்ணினார்கள். காந்திஜி இதை விரும்பவில்லை. எளிய உடை உடுத்து, கடைமகனிடம் சென்று, அவனுக்கு ஆறுதல் கூறி, கைதூக்கி விடுவதே சமுதாயத் தொண்டர், தலைவர் ஆகியோருடைய கடமை என்று எண்ணினார்.

நயனெடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்பு பாராட்டும் உலகு.

(நீதியையும் அறத்தையும் விரும்பிப் பிறர்க்கும் தமக்கும் பயன்படும் வண்ணம் வாழ்பவரின் நல்ல பண்பை உலகத்தார் கொண்டாடுவர்) என்பது பொய்யா மொழி. ஆகையால் அக்காலத்தில் இருந்த 'தர்பார் தலைமையை' கடையனைக் கடைத்தேற்ற வேண்டுமென்ற கொள்கையைக் கொண்ட காந்திஜி சாடியதில் வியப்பே

யில்லை. மக்களுடன் ஒன்றுபட்டுத் தொண்டாற்றும் தலைவர்கள் உருவாகி வந்தது காந்தியுகத்தின் புரட்சி என்று சொன்னால் அதில் தவறில்லை. முதலில் கிளப்பில் சொற்பொழிவாற்ற வேண்டுமென்று காந்திஜி விரும்பவில்லை. கிளப் உறுப்பினர்கள் சிலர் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் பேரில் தான் அவர் பேசினார். இதை ''இந்து'' குறிப்பிட்டு எழுதியது; ''இந்தியாவில் உள்ள சமுதாயத் தலைவர்களுக்கும் தமக்கும் சண்டை என்று காந்தி தமது உரையில் சொன்னார். என்ன சண்டை என்று அவர் சொல்லவில்லை. ஆனாலும் இதை யூகிப்பது அவ்வளவு கடினமல்ல. இதைச் சொல்வதற்கு காஸ்மாபாலிடன் கிளப்பைவிடச் சிறந்த இடமும் இருக்க முடியாது. ஏனென்றால் அது காஸ்மாபாலிடன் கிளப் என்று அழைக்கப் பெற்றாலும் (காஸ்மாபாலிடன் என்ற ஆங்கிலச் சொல்லிற்குப் 'பரந்த மனப்பான்மையுள்ள' என்பது பொருள்) உண்மையில் பணக்காரச் சீமான்களின் அமைப்புத்தான்... சமுதாயத்தின் தலைவர்கள் எந்த அளவிற்குத் தங்களைப் பொதுமக்களுடன் ஒன்று படுத்தியிருக்கிறார்கள் என்பதைக் காணுவது தான் காந்திஜியின் நோக்கம்''. காஸ்மாபாலிடன் கிளப்பில் காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவு அக்காலப் பத்திரிகை உலகில் ஒரு பரபரப்பை ஏற்படுத்தியது என்று கூறலாம். காந்திஜி கூறியவற்றை வரவேற்று ''சுதேசமித்திரன்'' தனது நீண்ட தலையங்கத்தில் கூறியது: ''ஜனத்தலைவர்கள் என்று சொல்லிக் கொள்கின்றவர்களுக்கு சாமான்ய ஜனங்களிடம் உள்ளங்கனிந்த அன்பில்லை என்பது அவர் (காந்திஜி) மனத்தில் பட்டிருப்பதாய் நன்றாய்த் தெரிகிறது. அவர்கள் ஜனத்தலைவர்கள் என்று தங்களைச் சொல்லிக் கொண்டு சாமான்ய ஜனங்களுடன் கலப்பதும் அவர்களுடைய சுகதுக்கங்களிலும் சேமலாபங்களிலும் கருத்து வைப்பதும் இல்லை என்பதை மிஸ்டர் காந்தி தாம் போனவிடங்களிலெல்லாம் கண்டு கொண்டு வருகிறார் என்று ஊகிக்க வேண்டியதாய் இருக்கிறது. இந்தியாவின் முன்னேற்றத்தைச் சாதித்துக் கைப்பற்றவேண்டுமென அவர்கள் மனத்தில் பட்டிருக்கும் முறைகளும் மிஸ்டர் காந்தியின் முறைகளும் ஒன்றுகமாட்டா..... மிஸ்டர் காந்தி ஊருக்கு வந்தபோது அவரை வரவேற்கச் சென்றிருந்த ஜனத்தலைவர்களுக்கு நேர்ந்த அனுபவம் என்ன? அவர்கள் காந்தியை எங்கே போய்த் தேடினார்கள்? முதல் வகுப்பு வண்டிகளிலன்றோ போய்த் தேடினார்கள்? தேடினதில்

என்னவாயிற்று ? மிஸ்டர் காந்தி வரவில்லை போலும் என்று தீர்மானித்தார்கள். அவர் எங்கிருந்தார் ? மூன்றுவது வகுப்பு வண்டியில் - இவர்தான் மிஸ்டர் காந்தியாக இருக்க வேண்டுமென்று சந்தேகிப்பதற்கு இடங்கொடுக்கக்கூடிய சின்னங்கள்கூட இல்லாமல் - இருந்தார். மிஸ்டர் காந்தியின் மனப்பான்மைக்கும் இந்திய ஜனத்தலைவர்களின் மனப்பான்மைக்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துக் காட்ட இது ஒன்றே போதுமானது... நமது ஜனத் தலைவர்களின் மனப்பான்மைக்கும் மிஸ்டர் காந்தியின் மனப்பான்மைக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. மிஸ்டர் காந்தி இந்தியாவிற்குத் திரும்பி இந்தியாவின் முன்னேற்றத்திற்கு உழைக்க முற்பட்டிருக்கும் காரணமாக அம் முன்னேற்றத்தை அடைய அனுஷ்டிக்கப்படும் முறைகளில் சில மாறுதல்கள் உண்டாகுமென்று நமக்குத் தோன்றுகிறது.'' இவ்வாறு ''சுதேசமித்திரன்'' கூறிய சோதிடமும் பின்னல் பலித்தது.

காங்கிரஸ் வரவேற்பு

காந்திஜி இல்லாத காங்கிரசை நம்மால் இப்போது நினைத்துக் கூடப்பார்க்க முடியவில்லை. ஆனாலும் 1915-இல் காந்திஜிக்கும் காங்கிரசிற்கும் அவ்வளவு நெருங்கிய உறவு ஏற்பட்டு விடவில்லை. தென்னப்பிரிக்காவில் இந்தியர்கள் சார்பாகப் போராட்டம் நடத்திய ஒரு பெரிய தேசிய வாதி என்ற அளவில் தான் அப்போதைய உறவு. ஆகவே அந்நிலையில் சென்னை மாநில காங்கிரஸ் குழு அவருக்கு ஒரு வரவேற்பு அளித்தது என்றால் அதற்கு ஒரு தனி முக்கியத்துவம் உண்டல்லவா? சென்னை மகாஜன சபையும் சென்னை மாநில காங்கிரஸ் குழுவும் சேர்ந்து இந்த வரவேற்பை அளித்தன. அந்தக் காலத்தில் இந்த இரண்டையும் விடத் தேசியத்தில் தீவிரமாக ஈடுபட்ட வேறு அமைப்புக்கள் எதுவும் தமிழகத்தில் இல்லை. இராயப்பேட்டையில் மகாஜனசபையின் தலைவர் நவாப் சையத் முகம்மதின் இல்லமான 'ஹுமாயூன் மன்சில்' என்ற கட்டிடத்தில் காந்தி தம்பதிகளுக்கு மேற்கண்ட இரண்டு அமைப்புக்களும் வரவேற்பும் தேநீர் விருந்தும் அளித்தன. வரவேற்பு முடிந்த பிறகு ஆர். ஜகநாதபிள்ளையின் புல்லாங்குழல் இசை நிகழ்ச்சியும் கும்பகோணம் கந்தசாமி முதலியாரின் ஆர்மோனிய இசை நிகழ்ச்சியும் நடந்தன. குருப்பம் ராஜாவுடன் காந்திஜி தம்பதிகள் விருந்திற்கு

வந்தார்கள். நவாப் சையத் முகமது பகதூர் வரவேற்புரை யைப் படித்துக் கொடுத்தார்.

வரவேற்பிற்கு நன்றி தெரிவிக்கையில் காந்திஜி அதிக மாகப் பேசவில்லை. ''தூரத்துப் பச்சை கண்ணிற்குக் குளிர்ச்சி என்று சொல்வார்கள். ஆகையால் காந்திஜி நாங்கள் நீண்ட தூரத்தில் செய்த சேவை மறுமொழி உங்களுக்குப் பெரிதாகத் தோன்றுகிறது. ஆனல் இப்போது உங்கள் மத்தியில் தொண்டாற்ற வந்திருக்கிறேம். நீங்கள் எங்களே நெருங் கிப் பார்க்கப் போகிறீர்கள். ஆகையால் நாங்கள் என்ன தவறு செய்தாலும் மன்னித்துப் பரந்த மனப்பான்மை யுடன் எங்கள் தொண்டை ஏற்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்!'' என்று மட்டும் அடக்கத்தோடு சொன் னர். சொல்லொணுத் துயரங்களையும், கடும் சிறை வாசத் தையும் ஏற்று, தாம் சம்பாதித்த பொருள்கள் அனேத்தை யும் மட்டுமல்லாது சன்மானமாகக் கிடைத்த பொருள்களே யுங்கூடப் பொது நலனுக்காக அளித்துவிட்டுத் தென்னுப் பிரிக்காவிலிருந்து திரும்பியிருந்த அண்ணல் எவ்வளவு அடக்கமாகத் தமது தொண்டைப் பற்றி இங்குக் குறிப்பிட் டிருக்கிறார் என்பது எல்லோரும் கவனிக்க வேண்டிய ஒன்றாகும்.

எல்லார்க்கும் நன்றும் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து.

(அடக்கம் எல்லோருக்கும் சிறந்ததேயாயினும் செல்வர்க்கு மேலான் செல்வமாகும்.) இங்குச் செல்வர் என்பதைத் தலேவர் என்று கொண்டாலும் பொருந்தும். இந்த வர வேற்பு சிறப்புற நடைபெறுவதற்கு முக்கிய காரணமா யிருந்தவர்களில் சி. கோபால் மேனன் ஒருவர். இன்று (23-4-15) இரவு தயாப்ஜியின் இல்லத்தில் அண்ணல் தூங்கினர்.

24-4-15

மறுநாள் கஸ்தூரிபா காந்திக்கு அளிக்கப்பெற்ற ஒரு வரவேற்பில் நூற்றி ஐம்பதிற்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டார்கள். இது அந்தக் காலத்தில் பெரிய பெண்கள் கூட்டமாகும். ஜார்ஜ் டவுன் அண்ணுபிள்ளே தெரு வில் தென்னிந்திய பிரம்ம சமாஜத்தின் சார்பில் ஏற்பாடு

செய்யப்பெற்ற, திருமதி ஆதிநாராயணையா தலைமை வகித்த இந்த வரவேற்பில், வந்திருந்த பெண்களுக்கெல்லாம் பழங்களும் இனிப்புகளும் வெற்றிலை பாக்கும் வழங்கப் பெற்றன. வரவேற்புப் பேசிய திருமதி கே. அலர்மேலு மங்கம்மாள், கஸ்தூரிபா இந்திய வரலாற்றில் ஒரு நிலையான இடத்தைப் பெறுவார் என்று கூறி வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். கஸ்தூரிபா ஆங்கிலத்தில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

பாவுக்குத் தனிவரவேற்பு

''வழக்கறிஞர்கள் விருந்திற்குத் தாங்கள் வந்து, பிரிட்டிஷ் பேரரசிற்கு வாழ்த்துத் தெரிவிக்க வேண்டும்,'' என்று சென்னை அட்வகேட் ஜெனரலான எப். எச். எம். கார்பெட் காந்திஜியிடம் கூறிய போது அண்ணல் அதிர்ச்சியடைந்து போய் விட்டார்; ஆனாலும் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டார். காந்திஜி கலந்து கொண்ட விருந்து சென்னை வழக்கறிஞர்களின் சார்பாக நடைபெற்ற மூன்றாவது விருந்தாகும். வெளியூர்களிலிருந்து கூடச் சில வழக்கறிஞர்கள் இந்த விருந்தில் கலந்து கொண்டார்கள். இவர்களுடன் சென்னை நகரைச் சேர்ந்த வழக்கறிஞர்கள், நீதிபதிகள் உள்பட சுமார் நூற்றி ஐம்பது பேர் இவ்விருந்திற்கு வந்திருந்தனர். மூர் மார்க்கெட் அருகே உள்ள 'பீபில்ஸ் பூங்காவில்'' நடைபெற்ற இவ்விருந்திற்கு அட்வகேட் ஜெனரல் தலைமை வகித்தார். தலைமை நீதிபதி ஜான் வாலிஸ் தலைமை விருந்தினராக இருந்தார். உயர் நீதிமன்ற நீதிபதிகளான சி. சங்கரன் நாயர், டி. வி. சேஷகிரி ஐயர், சி. வி. குமாரசாமி சாஸ்திரி, தயாப்ஜி, கூட்ஸ் டிராட்டர், ஸ்மால் காஸ் நீதிபதி ராவ்பகதூர் வி. கிருஷ்ணசாமி ராவ் முதலியோரும் வி. வி. சீனிவாச ஐயங்கார், கே. சீனிவாச ஐயங்கார், டபிள்யூ. டி. பார்ட்டன், டி. ஷாமியர், வி. திருமலைப்பிள்ளை, டி. பிரகாசம், ஜே. கிருஷ்ணராவ், ஜே. எஸ். ரொசாரியோ ஆகியோரும் இந்த விருந்தில் பங்கு கொண்டவர்களில் முக்கியமானவர்களாவர். அட்வகேட் ஜெனரல் கேட்டுக் கொண்டபடி பிரிட்டிஷ் பேரரசிற்கு வாழ்த்துத் தெரிவித்து காந்திஜி பேசினார். பிரிட்டிஷ் பேரரசிடம் அவருக்கிருந்த பெருமதிப்பும் நம்பிக்கையும் குலையாமல் இருந்த காலம் அது. ''ஒரு தேச பக்தரான காந்தி, பிரிட்டிஷ் பேரரசுடன் இந்தியா இணங்கிப் போக முடியுமென்று

வழக்கறிஞர் விருந்து

எவ்வாறு கூறலாம்?'' என்று சென்னைக்கு வருமுன் காந்திஜியைப் பலர் கேட்டிருந்தார்கள். ஆகையால் இந்த விருந்தில் அதற்கு காந்திஜி விளக்கம் அளித்தார்.

பிரிட்டிஷ் பேரரசைப் போன்ற முதிர்ந்த ஜனநாயக அமைப்பு ஒன்றில் அல்லாது ஜெர்மன் நாஜிசம், இத்தாலிய பாசிசம் போன்ற அமைப்புக்களில் காந்திஜி

பிரிட்டிஷ் ஜனநாயகம்

யின் சத்யாக்ரகத்திற்கு இடம் இருந்திருக் குமா என்பது நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு கேள்வி. இந்தக் கேள்விக்கு ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்று முடிவாக மறுமொழி கூறுவது ஒருபுறம் இருக்க, பிரிட்டிஷ் பேரரசில் அதிக சுதந்திரமும் வாய்ப்பும் கிடைக்கிறது என்பதை காந்திஜி அப்போதே ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்த விருந்தில் அதை அண்ணல் விளக்கினார். ''என்னுடைய விசுவாசத் திற்குச் சுயநலமே காரணம். பிரிட்டிஷ் பேரரசின் கீழ் கிடைத்த அளவு சுதந்திரம் வேறு எங்கும் கிடைக்காது என்பதை ஒரு சத்யாக்ரகி என்ற முறையில் நான் கண்டு பிடித்தேன். எந்தவிதச் சூழ்நிலையிலும் ஒரு சத்யாக்ரகி சத்யாக்ரகத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கிறது. ஆனாலும், பிரிட்டிஷ் பேரரசில் ஒவ்வொரு குடிமகனும் தான் விரும்பிய பணியில் முயற்சியைச் செலுத்தலாம். தனது மனச்சாட்சிக்கு ஏற்றது எது என்று நினைக்கிறானே அதில் அவன் தனது சக்தியைச் செலவிடத் தாராளமான உரிமை கிடைக்கிறது. எல்லா அரசுகளிலும் இந்நிலைமை இருப்பதாகக் கூறிவிட முடியாது. ஆனால் பிரிட்டிஷ் பேரரசில் இது இருப்பது உண்மை. அந்த அரசையும் நான் விரும்புபவனல்ல. 'எது குறைவாக ஆள்கிறதோ அதுவே சிறந்த அரசு' என்று பலமுறை நான் கூறிவந்திருக்கிறேன். பிரிட்டிஷ் பேரரசில் மிகவும் குறைந்த அளவில் ஆளப் படுவதற்கு இடம் இருக்கிறது என்பதை நான் கண்டேன். மேலும் அங்குத் தான் கிளர்ச்சி செய்ய உரிமை இருக்கிறது. அதனால் தான் பிரிட்டிஷ் பேரரசிற்கு விசுவாசம் தெரிவிக் கிறேன்'' (பெரிய கைதட்டல்).

இந்தச் சொற்பொழிவிற்குத் தமிழகத்தில் சிலரிடையே கடுமையான எதிரொலி இருந்தது. கோகலேயின் சீடர் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் காந்திஜி, கோகலே யின் முறையை அப்படியே பின்பற்றிச் செல்வார் என்று

ஆவலுடன் எதிர்பார்த்தவர்கள், இந்தியாவின் பிற பகுதி களைப் போலவே தமிழகத்திலும் இருந்தார்கள். பிரிட்டிஷ் பேரரசில் கிளர்ச்சி செய்ய உரிமை உண்டென்று கூறி இதற்காகத் தென்னப்பிரிக்க அரசியல் வரலாற்றிலிருந்துகாந்திஜி சில உதாரணங்களை எடுத்துக் கூறியது இவர்களுக்குப் பிடிக்க வில்லை. கோகலே தம்மைப் பேசவேண்டா மென்று சொன்ன தாகக் கூறிக் கொண்டே இவர் இவ்வளவு பெரிய அதிர் வேட்டை வெடித்திருக்கிறாரே என்று நெல்லையைச் சேர்ந்த கே. ஆர். குருசாமி ஐயர் செய்தித்தாளுக்கு ஒரு கடிதம் எழுதினர். காந்திஜி திடீரென்று ''லாடின்னரில்'' பேசு மாறு அழைக்கப் பெற்றதால் அவ்வாறு பேசிவிட்டாரென் றும் கால அவகாசம் இருந்திருந்தால் வேறு விதமாகப் பேசியிருப்பார் என்றும் இவரே தமக்கு ஆறுதலும் கூறிக் கொண்டார்.

கடும் எதிர்ப்பு

அந்தக் காலத்து முஸ்லிம் லீக் எவ்வாறு செயல் பட்டது என்பதை அறிவதற்கு அது அண்ணலுக்கும் கஸ்தூரிபாவிற்கும் அப்போது மவுண்ட்ரோடு லாலி ஹாலில் வரவேற்பும் விருந்தும் அளித் தது என்ற உண்மையைக் கவனித்தாலே போதுமானதாகும். அக்கூட்டத்தில் காந்தி ஜியை வரவேற்றுப் பேசிய யாகுப் ஹாசன், ''உங்களுடைய உள்ளத்தில் தென்னிந்தியாவிற்கும் கொஞ்சம் இடம் ஒதுக் குங்கள்'' என்று தான் கேட்டுக் கொண்டார். இதிலிருந்து அவர் மனத்தில் முஸ்லிம்களின் தனி நலனைக் காட்டிலும் தென்னிந்தியாவின் பொது நலனே முன்னின்றது தெரிகி றது. ''முஸ்லிம்களும் இந்துக்களுக்குச் சமமாக உங்கள் சேவையில் பெருமை கொள்கின்றனர். நாட்டின் நலனுக் காக நீங்கள் மேற்கொள்ளும் எந்தப் பணியிலும் முஸ்லிம் கள் ஒத்துழைப்பார்கள் என்ற உறுதி மொழியை நான் மனமார அளிக்கிறேன்'' என்று யாகுப்ஹாசன் வாக்குறுதி கொடுத்தார்.

முஸ்லிம் லீக்

காந்திஜி பிறப்பால் வைசியரும் வாழ்க்கையில் சத்திரி யரும் அல்லவா? மேற்கண்ட வாக்குறுதியை அவர் பிடித் துக் கொண்டார். ''இந்த நாட்டிற்காக நான் என்ன நடவடிக்கை மேற்கொள்வதாய் இருந்தாலும் ஒத்துழைப்பதாக நீங்கள் வர்க் குறுதி அளித்துள்ளீர்கள். வாக்குறுதி அளிப்ப தென்பது வேறு; அதை நிறைவேற்றுவது வேறு. இவ்

வாக்குறுதியும் கண்டிப்பும்

வளவு மனமுவந்து கொடுக்கப்பெற்ற ஒரு வாக்குறுதியை நிறைவேற்றி வைக்குமாறு நான் பின்னல் கேட்பேன். அது நிறைவேற்றப் பெறவேண்டு மென்பதில் கண்டிப்பாக வும் இருப்பேன் என்பதை இப்போதே எச்சரிக்கிறேன். உங்களுடைய பொறுப்பை நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று நான் பின்னல் கேட்கும் போது அது உங்களுக்குத் தர்ம சங்கடமாய் இருக்கும்'', என்று அவர் சொல்லி விட்டு தென்னப்பிரிக்காவில் சொன்ன சொல் தவறுமல் இருப்பதற்காக எத்தனையோ இன்னல்களுக்கு ஆளான முசல்மான்களின் முன்னுதாரணங்களைக் கூறினர். சத்தியமே பேசுபவர்களின் வாயிலிருந்து வரும் சொற்கள் எதிர்காலத் தில் உண்மையாகவே ஆகும். பிற்கால வரலாற்றைப் பார்த்தால், 1915-இல் அவர் கூறிய சொற்கள் எவ்வளவு மகத்தான உண்மையாக முடிந்தன!

25-4-15

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை யாதலால், மற்ற நாட் களிலிருந்ததைவிட அதிகமாக காந்தி தம்பதிகளுக்கு வர வேற்புகள் இருந்தன. மன்னடி இராமசாமி தெருவில் உள்ள அபேத ஐக்கிய ஆனந்த சமாஜக் கட்டிடத்தில் அந்த சமாஜத்தைச் சேர்ந்த பெண்கள் பெரிய மகரிஷிகளையும் அவர்களுடைய பத்தினிகளையும் வரவேற்கும் முறையில் காந்திஜி தம்பதிகளின் கால்களைக் கழுவி நெற்றியில் குங்கு மம் இட்டு அவர்களுக்காகப் போடப் பெற்றிருந்த ஆசனங்களில் அமரவைத்தார்கள். பிறகு ஒவ்வொருவ ராகப் போய்க் கீழே தண்டனிட்டு வணங்கினர்கள்; காந்தி தம்பதிகளின் நல்வாழ்விற்காக வழிபட்டுப் பாடல்கள் பாடி னர்கள். அவர்களுடைய வாழ்க்கையைப் பற்றிப் புனையப் பெற்றிருந்த சமஸ்கிருத, தமிழ், தெலுங்குப் பாடல்களையும் இசைத்தார்கள். அதன் பின், அங்கு வந்திருந்தவர்களுடன் காந்திஜி சிறிது நேரம் உரையாடிக் கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டுச் சென்றார். இங்கு காந்திஜியை வரவேற்றுப் பேசிய சமாஜத்தின் செயலாளர் - ''பெண் கல்வி'' பத்திரிகையின் ஆசிரியர் - சகோதரி தாயாரம்மாள் ''காந்தி பிரத்தியட்சராமர்; சீதாதேவிக்கு எவ்விதத்திலும் கஸ்தூரி பாயை ஒப்பிடலாம். தேச சரித்திரம் உள்ளவரை காந்தி யையும் கஸ்தூரிபாவையும் இந்தியர்கள் மறக்க மாட்டார் கள்'' என்று கூறினர். இந்தப் புகழுரையைப் பெற்றபோது

பெண்கள் வரவேற்பு

காந்திஜிக்கு வயது நாற்பத்தி ஐந்து. வரவேற்புரையைத் தமிழ்ப் பாடல்களாகவும் சமஸ்கிருத ஸ்லோகங்களாகவும் படித்துக் கொடுத்ததை காந்திஜி பாராட்டினர்.

சேவா சங்க வரவேற்பு

அன்று மாலை ராணடே மண்டபத்தில், சமூக சேவா சங்கக் கூட்டத்தில் காந்திஜி கூறிய கருத்துக்கள் அவர் அந்தச் சமயத்திலேயே சமூகத் தொண்டில் எவ்வளவு முதிர்ச்சியடைந்திருந்தார் என்பதை எடுத்துக் காட்டின. பெரிய மனிதர்கள் பலர் கலந்துகொண்ட இக்கூட்டத்தில், புகழுக்காகவோ பதவிக்காகவோ ஆசைப்பட்டுச் சமூகத் தொண்டாற்றக்கூடாது என்பதை காந்திஜி வலியுறுத்திப் பேசினர். ''முழு அடக்கத்துடனும் தன்னலமறுப்புடனும் சமூகத் தொண்டாற்றவேண்டும். உண்மையான சமூகத் தொண்டர்களுக்குக் கிடைக்கக்கூடிய பரிசு அவர்கள் ஆற்றிய பணியே என்று கோகலே கூறியதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். பிறருடைய பாராட்டுக் கிடைக்கவில்லை என்பதற்காக ஒரு சமூக ஊழியன் ஊக்கத்துடனும் முழு உற்சாகத்துடனும் தொண்டாற்றத் தயங்கக்கூடாது. அரை மனதுடன் சமூகத் தொண்டு செய்வதைக் காட்டிலும் செய்யாமல் இருப்பது மேலானதாகும்.'' என்றார் காந்திஜி.

கேள்வி - பதில்

சமூக சேவா சங்கத் தொண்டர்கள் கேட்ட கேள்விகளுக்கு அண்ணல் மறுமொழிகள் அளித்தார். குடிப்பழக்கத்தைப்பற்றி காந்திஜி அப்போது என்ன கருத்துக் கொண்டிருந்தார், அதை அகற்றுவதற்கு அவர் அப்போது கண்ட வழி என்ன வென்பது பற்றி இப்போது அறிவது சற்றுச் சுவையாயிருக்கும். ''சமூக சேவா சங்க உறுப்பினர்கள் வாரத்தில் ஒரு சில மணிநேரமே சேவை செய்ய முடியும். அவர்களுக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?'' என்று கேட்டபோது காந்திஜி கூறினார்: ''ஒரு சில மணி நேரமே தொண்டாற்றினாலும் ஒருமனதான கவனத்துடன் தொண்டாற்ற வேண்டும். சரியான மனிதர்கள் சமூகத் தொண்டில் இறங்கினால் வெற்றி கிடைப்பது உறுதியேயாகும்.''

கேள்வி: இராப்பள்ளிகளில் பஞ்சமப் பிள்ளைகளையும் சாதி இந்துக்களுடைய பிள்ளைகளையும் ஒன்றுகக் கலந்து பழக அனுமதிப்பது பற்றித் தங்கள் கருத்து என்ன?

காந்திஜி : இராப்பள்ளிகளிலாவது நாம் இதைச் செய்யவேண்டும். இதைச் செய்வதில் தவறு எதுவும் இல்லை. இங்கு கற்பித்துக் கொடுக்கப்பெறும் நேரம் சுருக்கமாக இருப்பதால், பஞ்சமர் பையன்களோ அல்லது சாதி இந்துப் பையன்களோ பாதிக்கப்பெற மாட்டார்கள்.

கேள்வி : பொதுவான ஆரம்பக் கல்வியை வயது வரையறையின்றிக் கற்றுக்கொடுப்பது குறித்துத் தங்களுடைய கருத்து என்ன?

காந்திஜி : இது விரும்பத் தக்கது தான். ஆனால் அதே சமயம் பொதுமக்கள் சுகாதார முறைகளைக் கடைப் பிடிப்பதற்கு ஆரம்பக் கல்வி கற்றுத்தான் ஆகவேண்டும் என்பதில்லை. எழுத்தறிவு இல்லாதவர்கள் கூடச் சுகாதார முறைகளை அறிந்து பின்பற்றலாம்.

உடல் உழைப்பைப் பற்றிக் கேட்டபோது சக்கிலியர் வகுப்பைச் சேர்ந்த ஒரு பையன் எம். ஏ. படித்திருந்தாலும் அவனுடைய தொழிலே வாழ்க்கை முழுவதும் செய்து கொண்டிருப்பதில் தவறு எதுவும் இல்லை என்றார்.

கேள்வி : குடிப்பழக்கத்தை எவ்வாறு அகற்றலாம்?

காந்திஜி: இப்பழக்கத்தை அகற்றுவது மிகவுங் கடினம். பெரிய சமய ஊழியர்களால் தான் இப்பழக்கத்தை அகற்ற முடியும்.

இந்த உரையாடலில் முடிவாக காந்திஜி சொன்னதாவது : ''சமூகத் தொண்டிற்கு அவசியமானது பணம் அல்ல, மனிதர்கள் தான். அன்பு நிறைந்த வர்கள், தர்ம உள்ளம் படைத்தவர்கள், தங்கள் பணியில் முழு நம்பிக்கை கொண்டவர்கள் வேண்டும். அப்படிப்பட்ட மனிதர்கள் மட்டும் சமூகத் தொண்டில் ஈடுபட்டுவிட்டால் பணம் தானாகவே வரும். பணமே இல்லாமல் எவ்வளவோ சமூகத் தொண்டாற்றலாம். பல படிகள் இறங்கி வந்தாலொழிய படித்த மனிதனுக்குப் பாமர மகனின் அல்லல்கள் தெரியமாட்டா. தொண்டால் கவரப்படாது தனது சொந்த முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு ஒரு மனிதன் - அவன் எவ்வளவு பணக்காரனாக இருந்தாலும் - சமூகத்

பணம் முக்கியமல்ல

தொண்டாற்ற முடியாது. ஊசியிலாவது ஒட்டகம் நுழைந்து விடலாம்; ஆனல் இத்தகைய மனிதனின் தொண்டு எவ்விதப் பலனும் கொடுக்காது.''

இந்த வரவேற்பைக் குறித்து ''சுதேச மித்திரன்'' நீண்ட தலையங்கம் எழுதியது. ''அவரவர்கள் பரம்பரையாகச் செய்து வந்த தொழில்களைச் செய்வதில் இளப்பம் இருக்கிறதென்று ஒருவரும் எண்ணக்கூடாது. சரீரத்தையும் தன் கை முதலிய அவயவங்களையும் பயன்படுத்தி உழைத்துப் பொருளாக்குவதில் இளப்பமில்லை. இத்தகைய தொழில்களிலிருந்து எவரையும் இழக்கச் சமூக ஊழியம் செய்பவர்கள் நினைக்கக்கூடாது. சக்கிலித் தொழிலைப் பரம்பரையாகக் கொண்ட ஒருவன் எம்.ஏ. பரீட்சை தேறினலும் கூட அவன் அந்தொழிலை இளப்பமென்று கைவிடக் கூடாது என்று மிஸ்டர் காந்தி சொன்னர். அப்படிப் படித்தவன் அந்தத் தொழில் செய்வதால் படித்தவனுக்கு இளப்பமில்லை. அந்தத் தொழிலின் திறமையும் உயரும்.... இப்போது மிஸ்டர் காந்தி போன்ற புண்ய ஆத்மாக்கள் தேசப் பணிவிடையையே தமது தொழிலாகக் கொண்டு அந்த வழியில் நம் சிறுவர்களை முன் செலுத்தத் தயாராய் இருக்கும்போது இந்தியாவின் பிற்காலம் கேவலம் இருள் மூடினதாய் இராமல் சிறிது பிரகாசத்தையும் கொண்டிருக்கும்,'' என்று எழுதியிருந்தது.

உரைக்கு வரவேற்பு

கோவிந்தப்ப நாயக்கன் தெரு வசந்த மண்டபத்தில் ஆர்ய வைசிய மகாசபையின் சார்பாக நடைபெற்ற வரவேற்பில், சல்லி குருசாமி செட்டி வரவேற்புரை கூறினர். காந்திஜி பிறப்பால் வைசிய வகுப்பைச் சேர்ந்தவர் என்பதை அறிந்திருந்ததால் வைசியர்கள் தனிப்பட்ட முறையில் சிறப்பாக இந்த வரவேற்பு ஏற்பாட்டைச் செய்திருந்தனர். இவ்வகுப்பைச் சேர்ந்த மாதர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். சபையின் செயலாளரான சி. வேங்கடாசலம் ''இந்திய அரசியலில் தலைமை தாங்கி எங்களுக்கு அரசியல் குருவாக விளங்குவீர்கள் என நம்புகிறோம்,'' என்ற நம்பிக்கை தெரிவித்தார். காந்திஜி மறுமொழி கூறுகையில், எந்தச் சமயத்திலும் தென்னப்பிரிக்காவில் மீண்டும் இந்தியர்களுக்குத் தொல்லைகள் ஏற்படலாம் என்று தெரி

வைசியர் வரவேற்பு

வித்தார். ''தென்னப்பிரிக்காவில் ஐரோப்பியர்களுடன் விவசாயத்திலும் வாணிகத்திலும் இந்தியர்கள் போட்டியிடு கிறார்கள். இந்தியர்களுக்கு உண்டாக்கப்படும் தொல்லைக்கு எத்தனையோ காரணங்கள் இருந்தாலும் இதுவே முக்கிய காரணம். தற்போதைக்கு இந்தியர் சிக்கலில் ஓர் உடன் பாடு ஏற்பட்டிருக்கிறது என்றாலும், கசப்புணர்ச்சி இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இந்தப் போட்டி யுள்ள வரை கசப்புணர்ச்சி இருந்து கொண்டுதான் இருக்கும்'' என்று மேலும் விளக்கினார். இதிலிருந்து அண்ணல் நடைமுறை நிலவரத்தை அறிந்துதான் இருந்தார் என்பதும், உடன்பாடு ஏற்பட்டு விட்டதால் எல்லாம் தீர்ந்து போய்விட்டதாக அவர் கருதிவிடவில்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிகிறது.

போராக்கள் வரவேற்பு

முஸ்லீம்களில் போராக்கள் என்ற வகுப்பினர் காந்திஜிக்கு முகமதலி பசல் அலி கட்டிடத்தில் அளித்த வரவேற்பில் அவர்கள் சார்பில் இந்துவான ஜி. எ. நடேசன் காந்திஜியை வரவேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. போராக்களின் தலைவர்கள் பேசுகையில், இந்துக்கள் முஸ்லிம்கள் நல்லுறவிற்குச் சென்னை மாநிலம் ஒரு முன்னுதாரணமாகத் திகழ்கிறது என்று சொன்னார்கள். அண்ணலும் இந்தியாவில் இந்துக்கள் முஸ்லிம்கள் ஆகிய இரு வகுப்பினரின் குறிக்கோள்களும் ஒன்றாக இருப்பதால் அவர்களுக்குள் ஒரு சிக்கலுக்கும் இடமில்லை என்று சொன்னார். கூட்ட முடிவில் அண்ணலிடம் ஒரு பணமுடிப்பு அளிக்கப்பெற்றது.

26-4-15

''லஸ்'' விருந்து

மறுநாள் இரவு மைலாப்பூர் ''லஸ்''ஸில் உள்ள எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்பில் இந்திய முறையில் விருந்து அளிக்கப் பெற்றது மட்டுமல்ல, சி. ஆர். சீனிவாச ஐயங்கார் வாய்ப்பாட்டு (காலஞ்சென்ற திருக்கோடிக்காவல் கிருஷ்ண ஐயர் குமாரரான) இராமையர் வயலின் முதலிய இசை விருந்துகளும் நடைபெற்றன. அத்துடன் வேதபாராயணமும் நடைபெற்றது.

காந்திஜிக்கு ஏராளமான விருந்துகள் நடைபெற்றன, என்று நாம் படிக்கும் போது, அந்த விருந்துகள் எப்படி

நடைபெற்றன என்பதை அறிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம் என்பது போல எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் நடைபெற்ற விருந்தை அன்னருடைய குமாரத்தி எஸ். அம்புஜம்மாள் நேரே பார்த்தவராதலால் காந்திஜியையும் அவரது பத்தினியையும் விருந்தையும் பாங்குறப் படம் பிடித்துக் காட்டுகிறார் பாருங்கள்: "வெந்த மணிலாக்கொட்டை, தேங்காய் வழுக்கல், ஆப்பிள், ஆரஞ்சு முதலிய பழங்கள், திராட்சை, பேரீச்சம் பழம் போன்ற உலர்ந்த பழங்கள், பாதம் பருப்பு முதலிய பருப்பு வகைகள், நீர்மோர், இள நீர் - பானகம், இவை இந்த நாகரிக யுகத்திலே எங்கேயாவது ஒரு தோட்ட விருந்துக்கு ஏற்ற தின்பண்டங்கள் ஆகுமா? ஆனால் அன்று மாலை - என்னவோ இவைதான் எங்கள் வீட்டிலே தயாரிக்கப்பட்டன. ஜிலேபி, பூந்தி, பேடா, கல்கத்தா சந்தேஷ், காபி, டீ, ஐஸ்க்ரீம்—இவைகளை நம்பி வந்த விருந்தினர்கள், மேஜைமீது வெள்ளிக் கோப்பைகளிலும் தட்டுகளிலும் மேலே சொன்ன பொருள்களே நிரம்பி யிருந்ததைக் கண்டு மலைத்துப் போயிருப்பார்கள்." அந்தக் காலத்தில் கஸ்தூரிபா காந்தி இருந்த தோற்றத்தை அவர் படம்பிடித்துக் காட்டுகிறார்: "(இந்த விருந்தில்) தூய வெள்ளைப் பாவாடையும் தாவணியும் அணிந்திருந்த ஓர் உருவம் எங்களை நாடி உள்ளே வந்தது. சிறிய மெலிந்த உருவம். உலக அனுபவத்திலே கனிந்த முகம்; தாயன்பு சொட்டும் கண். ஏக்கம் தேங்கிய உள்ளன்பு ஒளி வீசிய கண்கள். நீண்ட கைவைத்த வெள்ளை அங்கி ஒன்றைப் போட்டுக் கொண்டிருந்தார். கைகளில் ஒரு ஜதை இரும்புக் காப்பு; வேறு அலங்காரமோ, ஆபரணமோ இடையாது. ஏழைக் குடியானவருடைய நாகரிக மனைவி போலவே காணப்பட்டார். அவரே கஸ்தூரிபா காந்தி. ஸ்ரீமதி காந்தி என்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்தார். நான் சிறுமி: வயது சுமார் பதினேந்து. எனினும் என் உடல் பூராவும் சுமந்திருந்த அத்தனை வைர நகைகளையும் பார்த்து, அவர் இரக்கம் கொண்டே குறுநகை செய்தது போலப் பட்டது எனக்கு. உடனே அவற்றைக் கழற்றி வீசி எறிய வேண்டுமென்ற ஓர் ஆத்திரம், - அந்தப் படாடோபமே அவலட்சணம் என்ற ஓர் உணர்ச்சி - என் மனதில் ஒரு கணம் தோன்றி மறைய, பழையபடி பெரு

விருந்துகள்? என்ன

மிதத்துடன் உட்கார்ந்திருந்தேன். அவரோ என் தாயாரோடு அன்புடன் சகஜமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்.''

லேடீஸ் கிளப்

''மறுநாள் மாலை ஸ்ரீமதிகாந்தி மட்டும் எங்கள் வீட்டுக்கு வந்தார். அவரை என் தாயார் தம்முடன் மைலாப்பூரிலிருந்த 'லேடீஸ் ரிக்ரியேஷன் க்ளப்' புக்கு அழைத்துச் சென்றார். சென்று, அங்கே அவரை வரவேற்கக் காத்திருந்த சீமாட்டிகள் பலருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார். நானும் பொம்மை போலச் சிங்காரித்துக் கொண்டு கூடப் போயிருந்தேன்.''

கிறித்தவர்கள் வரவேற்பு

இராயப்பேட்டை பீடர்ஸ் சாலை வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த ரெவ. டி. சுப்ரமணியம் இல்லத்தில் (சுப்ரமணியம் தென்னப்பிரிக்காவில் வாழ்ந்தவர் என்பதும் அங்கிருந்தபோதே காந்திஜியுடன் தொடர்பு கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.) இன்று கிறித்தவர்கள் வரவேற்பு அளித்தபோது ஐரோப்பிய, இந்தியப் பாதிரிமார்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். எம். டி. தேவதாஸ் பார் அட்லா, வி. சக்கரைச் செட்டியார் ஆகிய இருவரும் சென்னை கிறித்தவர்களின் சார்பாக காந்திஜியை வரவேற்றுப் பேசினர்கள். காந்திஜி தமது மறுமொழியில், தென்னப்பிரிக்காவில் கிறித்தவர்களுக்கும் தமக்கும் இருந்த தொடர்பை விவரித்தார்.

27–4–15

நிறுவனங்கள் பார்வையிடல்

மறுநாள் காலையில் ஜி. ஏ. நடேசனுடன் மைலாப்பூரில் உள்ள இராமகிருஷ்ண மாணவர் இல்லம், வெங்கட்ரமணி ஆயுர்வேத மருத்துவமனை, சமஸ்கிருத கல்லூரி (காலஞ்சென்ற வி. கிருஷ்ணசாமி ஐயரால் நிறுவப்பெற்றது) ஆகியவைகளுக்குச் சென்று அவைகள் எவ்வாறு பணியாற்றுகின்றன என்பதைக் காந்திஜி சுற்றிப்பார்த்தார். அவைகள் ஒவ்வொன்றிலும் உள்ள பார்வையாளர் புத்தகத்தில் தமது கருத்துக்களை எழுதிவைத்திருக்கிறார். இராமகிருஷ்ண மாணவர் இல்லத்தில், இவர் குசராத்தியில் எழுதிவைத்த குறிப்புக் கீழ்கண்டவாறு கூறுகிறது: ''இந்த நிறுவனத்தைக் காண முடிந்ததற்காக நான் அளவிலா மகிழ்ச்சி அடை

கிறேன். இதை நிறுவகிப்பவர்களுடைய உற்சாகத்திற்குக் குறைவில்லை. எத்தனையோ வகைகளில் பலன்கள் அடையலாம் என்பதை அனுபவங் காட்டும்.''

அண்ணல் காந்தியை முதன் முதலாக ''தேசப்பிதா'' என அழைத்தவர் சுபாஷ் சந்திர போஸ் என்று எல்லோரும் கூறுவார்கள். ஒரு வகையில் அது தந்தையும் உண்மையே. சுபாஷ் சந்திரபோசைப் போன்ற மாணவரும் ஒரு பெருந்தலைவர் ''தேசப்பிதா'' என அழைத்ததனால் தான் எல்லோரும் அவரைப் பின்பற்றி மகாத்மாவைத் தேசப்பிதா என அழைத்தார்கள். ஆனாலும் தேசப்பிதா என்று அநேகமாக இந்தியாவிலேயே முதன் முதலாக அழைத்தவர்கள் சென்னை மாநகரைச் சேர்ந்த மாணவர்களாகத் தாம் இருப்பார்கள். 1915-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் தேதியன்று சென்னை ஒய். எம். சி. ஏ. கட்டிடத்தில் காந்திஜிக்கு மாணவர்கள் வரவேற்பு அளித்தபோது, தங்கள் வரவேற்புரையில் காந்திஜியை இவ்வாறு அவர்கள் அழைத்திருந்தார்கள். தமிழக மாணவர்களுடைய எதிர்கால நோக்கு இதைப்போல் எதிலும் ஆண்டவன் அருளால் வெல்க! ''மாசு மருவில்லாத உங்களுடைய ஒழுக்கத்தூய்மை, யாரும் பின்பற்றமுடியாத உங்களுடைய கண்டிப்பான எளிமை, மனத்திட்பத்தால் உருவான உங்களுடைய தளர்விலா ஊக்கம், எள்ளளவும் தன்னலமின்மை, ஆன்மா வரை ஊடுருவும் உங்களுடைய தேச பக்தி, உலகெல்லாம் பரவிய தங்கள் அன்பு, இவைகளுக்கெல்லாம் ஒளியும் உயிரும் ஊட்டும் ஆன்மிக சக்தி ஆகியவை, உங்களை ஒரு தேசத் தந்தையின் நிலைக்கு உயர்த்துகின்றன. குழந்தைகளாகிய நாங்கள் உங்களுடைய வழிகாட்டுதலையும் உள்ளுணர்வையும் பெறக் காத்து நிற்கிறோம்'' என்று இவர்கள் தங்களுடைய வரவேற்பில் குறிப்பிட்டிருந்தார்கள். வரவேற்புரையை மாணவர்கள் சார்பாகச் சின்னசாமி படித்தார். ஏராளமாக மாணவர்களும் பொதுமக்களும் வந்திருந்த இக்கூட்டத்திற்கு வி. எஸ். சினிவாச சாஸ்திரி தலைமை வகித்தார். ''பழையகால ஆன்மிகப் பெருமையை காந்திஜி நினைவு படுத்துகிறார். காந்தி ஒரு பழங்கால ரிஷியாஞல் அவரது மனைவியார் ஒரு ரிஷிபத்தினியாவார்'' என்று சாஸ்திரி தமது தலைமை உரையில் குறிப்பிட்டார். (திருமதி காந்தி அப்போது கூட்டத்தில் இல்லை.)

கல்விமுறை

''கோகலே நமக்குக் கொடுத்த செய்தி இந்திய ஊழியர் சங்கத்தின் விதி அமைப்பில் இருக்கிறது. என்னுடைய வாழ்க்கையின் திசை காட்டியாக அதையே நான் கொள்கிறேன். இந்நாட்டின் அரசியல் வாழ்வை ஆன்மிக மயமாக்க வேண்டும் என்பதே அச்செய்தி. அரசியலை ஆன்மிகத்திலிருந்து பிரிக்க முடியாது. சமயத்திலிருந்து வேறுகப் பிரிக்கப்பெற்ற அரசியல் கீழ்த்தரமானதாகி விடும்,'' என்று காந்திஜி தமது மறுமொழியில் கூறினர். கல்வியில் காந்திஜி காணவிரும்பிய சீர்திருத்தம் அந்தக் காலத்திலேயே அவர் மனதில் பதிந்திருந்தது. ''மாணவர்களே, சென்னை மாணவர்களை மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள மாணவர்கள் அனைவரையும் நான் ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்கள் கற்கும் கல்வி உங்களுடைய தேசியக் குறிக்கோளை அடைய உதவக் கூடியதா? அல்லது, அரசாங்க வேலைகளுக்காக உங்களைத் தயார் செய்யும் தொழிற் சாலையா? நவீன நாகரிகத்தைக் கடுமையாக எதிர்ப்பவன் நான். நம்முடைய மகரிஷிகளின் பரம்பரைக்கு ஏற்றவாறு நாம் வாழவேண்டும். கேவலம் உடல் பலத்தின் செய்தியை மட்டுமல்லாது அன்பின் செய்தியையும் பரப்ப வேண்டும். அப்போது தான் நீங்கள் இரத்தம் சிந்தாமல் ஆன்மிக சக்தியின் பலத்தை மட்டுங் கொண்டு உங்களை ஆள்வோரை வெல்ல முடியும். உங்களையே நீங்கள் எண்ணிப்பாருங்கள். எங்கே கொடுங்கோன்மை தென்படுகிறதோ அங்கே அதை எதிர்த்துப் போராடுங்கள். உங்கள் உரிமையின் மீது யாராவது ஆக்கிரமித்தால் எதிர்த்துப் போராடுங்கள். ஆனால் ஒன்று, எதிரியின் இரத்தத்தைச் சிந்தாமல் நீங்கள் போராட வேண்டும்'', என்று அவர் சொன்னார். இது படித்த மக்களிடையே ஒரு கேள்வியை எழுப்பியது. ''காந்திஜி கோகலேயைத் தமது குரு எனக் கூறினர். ஆனால் கோகலே மேல்நாட்டுக் கல்வி முறையை ஆதரித்தார். கல்வியும் பண்பாடும் பிரிக்க முடியாதவை. மேல் நாட்டுக் கல்வி முறையை கோகலே ஆதரித்தார் என்றால், மேல்நாட்டுப் பண்பாட்டையும் ஆதரித்தார் என்பதே பொருள். ஆனால் காந்திஜி நவீன கல்வி முறையையும் நவீன பண்பாட்டையும் மொத்தமாக எதிர்க்கிறாரே? ஆகவே காந்திஜி கூறும் தத்துவமும் கோகலேயின் தத்துவமும் எப்படி ஒன்றாகும்? இரண்டில் ஏதாவது ஒன்று தவறாக இருக்கவேண்டுமே?'' என்று இவர்கள் கேட்டார்

கள். மாணவர்கள் கூட்டம் முடிந்தவுடன், இதே இடத்தில் ஒய். எம். சி. ஏ. பட்டதாரிகள் கிளப் சார்பாக வரவேற்பு காந்திஜி தம்பதிகளுக்கு சி. ஜி. ஸ்பென்சர் தலைமையின் கீழ் அளிக்கப் பெற்றது. வழக்கறிஞர் பி. சின்னையா காந்திஜியைப் பாராட்டிப் பேசினர்.

காந்திஜிக்கு சேரிகளுக்கு வருகை

மறுநாள் பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் அளித்த வரவேற்பில், கல்வி, சமயம் பற்றி அவர்கள் கேட்ட கேள்விகள் பலவற்றிற்கு காந்திஜி விளக்கமான மறுமொழி அளித்தார். கடையனும் கடைத்தேற வேண்டும் என்ற ஆங்கில ஞானி ரஸ்கினுடைய தத்துவத்தை வாழ்க்கை மதமாக ஏற்றுக் கொண்ட காந்திஜி, சென்னையில் உள்ள சேரிகளுக்குச் சென்று அங்கு வாழும் மக்களின் நிலையை நேரில் கண்டறிந்தார். வண்ணுரப்பேட்டையில் சாயம் போடும் தொழிற்சாலைகளையும் ராவ்பகதூர் தியாகராசச் செட்டியார் நடத்திய நெசவுத் தொழிற்சாலையையும் மற்றவர்கள் நடத்திய கைத்தறிகளையும் பார்த்ததுடன் அத்தொழில்களில் அவர்களுக்கு ஏற்படும் செலவையும் வருமானத்தையும் அத்தொழில்கள் அவர்களுக்குக் கட்டுபடியாகின்றனவா என்பதையும் கவனமாக விசாரித்தார்.

பெசண்ட் வரவேற்பு

இந்தச் சமயத்தில் இந்திய அரசியல் வானில் வடக்கே திலகர் சூரியனைச் சுடர் விட்டுக் கொண்டிருந்தாரென்றால் தெற்கே சந்திரனைத் தன்னொளி வீசியவர் அன்னிபெசண்ட் அம்மையாரே. அவர் தம் முடைய ''நியூ இந்தியா'' பத்திரிகையில் அண்ணலின் வருகைக்கு நல்ல முக்கியத்துவம் அளித்துச் செய்திகள் வெளியிட்டுக் கொண்டு வந்தார். அண்ணல் வந்த அன்றும் இரயில்வே நிலையத்தில் போய் வரவேற்றார்; சுர்ந்திஜியின் டயரியிலிருந்து அவர் சென்னைக்கு வந்த அன்று அவரைச் சந்தித்துப் பேசியிருக்கிறார் என்றும் தெரிகிறது. அண்ணலுக்காக நடைபெற்ற வரவேற்புகள் சிலவற்றிலும் பங்கு கொண்டார். இவைகள் எல்லாம் போதாதென்று, அடையாறு பிரம்மஞ்ஞான சங்கச் சுற்றுவளாகத்திற்குள் உள்ள பிளாவட்ஸ்கி தோட்டத்தில் காந்தி தம்பதிகளுக்கு வீணை இசையுடன் விருந்து வைத்தார். பெரிய நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வணிகர்

கள் மற்ற பெரிய மனிதர்கள் ஆகியோர் பங்குகொண்ட இந்த விருந்திற்கு வருவதற்கு முன், பிரம்மஞ்ஞான சங்கம் நடத்தும் பல்வேறு அமைப்புகளை—அச்சகம், ஊருர் கிராமத்தில் உள்ள பஞ்சமர்கள் பள்ளி, தலைமை அலுவலகம் ஆகியவற்றை—காந்திஜி பார்வையிட்டார். காந்திஜியின் அரசியல், பொதுவாழ்வு ஆல்போல் தழைக்க வேண்டும் என்ற விருப்பத்திற்கு ஓர் அறிகுறி போன்று பெரிய ஆலமரத்தின் அடியில் விருந்து நடைபெற்றது. இந்த வரவேற்பில் அன்னிபெசன்ட் ஒரு நூதன முறையைக் கையாண்டார். காந்திஜிக்கு வரவேற்புரை எழுதிப் படிப்பதற்குப் பதிலாக ''லோவல்'' என்ற கவிஞர் இயற்றிய ''தி கிரைசிஸ்'' என்ற பாடலை அப்படியே படித்தார். வரவேற்பிற்கு மிகவும் பொருத்தமாக இருந்த இந்தக் கவிதையை காந்திஜி மிகவும் கூர்ந்து கவனித்தார்.

•

ஒரு வருத்தம்

டாக்டர் அன்னிபெசன்ட் பற்றியும் அவருடைய நாட்டுத் தொண்டைக் குறித்தும் காந்தியடிகளுக்கு மிகவும் மரியாதை உண்டு. அதனால் அவருடைய நிறுவனங்கள் மீதும் அவருக்குத் தனி அபிமானம் உண்டு. அன்று இரவு விருந்து முடிந்த பின் இந்த விருந்தைப் பற்றித் திருமதி பெசன்ட் தமது டயரியில் கீழ்க்கண்டவாறு எழுதிவைத்திருக்கிறார். ''எங்களுடைய பஞ்சமர் பள்ளிகளில் ஒன்றுக்கு அவர்கள் வந்தார்கள். (அச்சுத் தொழிலில்) நன்கு அனுபவப்பட்டவரான காந்திஜி எங்களுடைய அச்சகத்தைப் பார்வையிட்டார். பெரிய ஆலமரத்தின் கீழ் எங்களுடைய விருந்து நடை பெற்றது. இருநூற்றுக்கும் மேற்பட்ட விருந்தினர்கள் வந்திருந்தார்கள். நாங்கள் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சியடைந்தோம்.'' காந்தி தம்பதிகள் அடையாறு பிரம்மஞ்ஞான சங்கத் தலைமை அலுவலகத்தில் தங்குவதென்பது ஏற்பாடு. ஆயினும் இடையில் நடைபெற்றுவிட்ட ஒரு நிகழ்ச்சி அவர் அங்கு தங்க முடியாமல் செய்து விட்டது. அன்று அவர் (டாக்டர் பெசன்ட்) நடத்திய பல்வேறு நிறுவனங்களையும் காந்திஜிக்கு சுற்றிக் காட்டிய போது, முதலில் டாக்டர் பெசன்ட் தலைமை அலுவலகத்தின் பிரம்மாண்டமான மண்டபத்தையும் அழகான நாற்காலிகளும் மேசைகளும் போடப்பெற்றிருந்த அறைகளையும் காண்பித்தார். அதன் பக்கத்தில் உள்ள ஓர் 'எளிய ஷெட்'டில் தீண்டாதார்களுக்காக நடத்தப்

பெற்ற பள்ளியையும் காட்டினர். தீண்டாதார்களுடைய கல்விக்காகப் பள்ளியே நடைபெறுத காலம் அது. ஆகவே முன்னெடியாக வந்து, பஞ்சமர்களுக்காக அவர் பள்ளி நடத்தியதை வேறு யாராயிருந்தாலும் பாராட்டியிருப்பார் கள். ஆனல் காந்திஜிக்கு மக்களில் ஒரு பிரிவினருக்காக மாட மாளிகை போன்ற கட்டிடங்களும் மற்றொரு பிரிவினருக்கு எளிய 'ஷெட்'டும் ஆகப் பெரிய ஏற்றத்தாழ்வு இருந்தது அருவருக்கத்தக்கதாய் இருந்தது; அவரால் அதைப் பொறுக்கவே முடியவில்லே. அன்று இரவு அங்குத் தங்காமல் ஜார்ஜ் டவுனில் உள்ள ஜி. ஏ. நடேசன் அலுவலகத்திற்கே திரும்பி வந்துவிடுவதென்று முடிவு செய்தார். இம்முடிவை அவர் ஜி. ஏ. நடேசனிடம் கூறிய போது, பின்னவர் எவ்வளவோ சமாதானம் சொல்லிப் பார்த்தார். ''இதனல் டாக்டர் பெசன்ட் வருத்தம் அடைவார்; உங்கள் மீது மட்டுமல்ல என்மீதும் வருத்தப் படுவார்'' என்று நடேசன் கூறியும் காந்திஜி கேட்க வில்லே. இரவு வெகுநேரமாகி விட்டது என்றலும் அடையா றிலிருந்து புறப்பட்டு வந்து விட்டார்.

ஆர்ய பாடசாலே

தம்புச் செட்டித் தெருவில் உள்ள இலட்சுமி ஞாப கார்த்த ஆர்ய பாடசாலேக்கு காந்திஜியும் கஸ்தூரிபாவும் வருகை புரிந்தபோது, அந்தப் பள்ளியின் போஷகரான சி. இராமானுஜம் செட்டியாரும் ஜார்ஜ்வுடன் பள்ளிகள் சப்-அசிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் என். சுவாமிநாத ஐயரும் டாக்டர் எம். கிருஷ்ணசாமி ஐயர், ஏ. குமாரசாமி ஐயர் ஆகியோரும் அவருக்குப் பள்ளி வகுப்புக்களேச் சுற்றிக் காண்பித்தனர். இதன் பின்னர் பவானி அம்மாள் வீணே இசை அரங்கும் ராஜாத்தி, இலட்சுமி வாய்ப்பாட்டும் நடை பெற்றன. ''சி. இராமானுஜம் செட்டியார் போன்று ஒருவரைப் புரவலராகப் பெறுவதற்கு இப்பள்ளி புண்ணியம் செய்ததாகும்'' என்று காந்திஜி சொன்னர்.

29-4-15

காந்திஜி தங்கள் சாதியைச் சேர்ந்தவர் என்று கருதி வைசியர்கள் எவ்வாறு அவருக்கு வரவேற்பு அளித்தார் களோ அதே போன்று குசராத் மாநிலத்தைச் சேர்ந்தவர் என்ற முறையில் (சென்னே மாநகரைச் சேர்ந்த)

குசராத்திகளும் அவருக்கு உற்சாகமான வரவேற்பு ஒன்றை அளித்தார்கள். இராயப்பேட்டை பேட்டர்ஸ் சாலையில் ''கோவிந்த விலாஸ்'' பங்களாவில் நடை

குசராத்திகள் வரவேற்பு

பெற்ற இவ்வரவேற்பில் (அதன் உரிமையாள ரான) லாட் கோவிந்த தாசும் கோகுல்தாஸ் கோவர்த்தன தாசும் விருந்தினர்களை வரவேற் றனர். ''காந்திஜியைப் போன்ற ஒரு பெரிய மனிதர் குசராத்தி வகுப்பைச் சேர்ந்தவர் என்பது எங்களுக்குப் பெருமையாக இருக்கிறது'' என்று லாட் கோவிந்ததாஸ் இக்கூட்டத்தில் குறிப்பிட்டார். திவான் பகதூர் கோவிந்த தாஸ் சதுர்புஜதாஸ் குசராத்தி மொழியில் எழுதப்பெற்றி ருந்த வரவேற்புரையைப் படித்தார். காந்திஜியைப் புகழ்ந்து ஆங்கிலத்திலும் குசராத்தியிலும் இயற்றப் பெற்றிருந்த பாடல்களும் பாடப்பெற்றன. காந்திஜி குசராத்தி மொழியிலேயே பதில் அளித்தார். ''சென்னையில் உள்ள மற்ற வகுப்பினரின் நலன் தான் உங்கள் நலன். ஆகையால் நீங்கள் அவர்களுடன் இணைந்து செயலாற்ற வேண்டும்'', என்று அறிவுரை கூறி விட்டு இந்நகரிலும் மாநிலத்திலும் ஏராளமான குசராத்திகளுக்கு இடமளித்ததற்காகச் சென்னை மாநிலப் பொதுமக்களுக்கும், நன்றி தெரிவித்துக்கொண் டார். சென்னையில் உள்ள குசராத்தி மக்களின் சார்பாகப் பணமுடிப்பு ஒன்றை காந்திஜியிடம் லாட் கோவிந்ததாஸ் அளித்தபோது, ''நான் தனிப்பட்ட முறையில் யாரிடமிருந் தும் எந்த அன்பளிப்பையும் பெறுவதில்லை; இப்பணம் பொதுக்காரியங்களுக்காகச் செலவிடப்படும்'' என்று கூறி வாங்கிக் கொண்டார்.

ஒரு பெரிய அரசியல் தலைவர் துறவி போன்று வாழ்க்கை நடத்தி நாட்டுத் தொண்டு செய்கிறார் என்ற உண்மை அக் காலத்தில் சென்னையிலிருந்த துறவு மனப்

சீடராக ஆர்வம்

பான்மை கொண்ட இளைஞர்கள் பலருக்குப் பெருங்கவர்ச்சியாக இருந்திருக்கிறது. இவர்கள் காந்திஜியை அணுகி, தாங்கள் அவர் தொடங்க இருக்கும் ஆசிரமத்தில் சேர விரும்புவதாகத் தெரிவித்திருக் கிறார்கள். (1915-இல் அவர் சென்னைக்கு வந்தபோது ஆசிர மம் தொடங்கப் பெறவில்லை.) இவர்களில் சிலரைச் சேர்த்துக் கொள்வது என்று அப்போதே காந்திஜியும் முடிவு செய்து விட்டார். சென்னையிலிருந்து எழுதிய ஒரு கடிதத்தில், இங்கிருந்து சிலரை அழைத்துக் கொண்டு வருவதாகத்

தெரிவித்திருக்கிறார். ஞானஸ்நானம் பெறுவது போல ஒருவர் இங்கேயே அவர் முன் பிரதிக்ஞையும் எடுத்துக் கொண்டிருக்கிறார். இதற்கு முன்னரேயே அண்ணா-ஹரிஹர சர்மா-ரெங்கூனுக்கு காந்திஜி சென்றிருந்தபோது உடன் சென்றவர்-தாம் காந்திஜி தொடங்க இருக்கும் ஆசிரமத்தில் சேரவிரும்புவதாகத் தெரிவித்திருந்தார். தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு காந்திஜி வந்தபின் அவருடன் முதன் முதலாக சாந்திநிகேதனத்திலேயே சேர்ந்த தமிழர் அவர்தான். சென்னையில் காந்திஜியைச் சந்தித்து ஆசிரமத்தில் சேரவிருப்பம் தெரிவித்திருந்தவர்களில் ஒருவரான கிருஷ்ணசாமி சர்மா, ஏப்ரல் 22-ஆம் தேதியன்று காந்திஜியை சந்தித்து, தமது வாழ்க்கை விவரங்களைக் கூறி, தாம் நாட்டுத் தொண்டிற்காகவே தம்மை முழுவதும் அர்ப்பணிக்க விரும்புவதைச் சொன்னார். பின்னர் நவம்பரில் ஆசிரமம் போய்ச் சேர்ந்தார். அல்லூரி இராம்ராஜ் என்ற பட்டதாரி ஆசிரமத்தில் சேர விரும்பியதையும் காந்திஜி ஏற்றுக் கொண்டார்; ஜூலை மாதத்தில் அவர் ஆசிரமத்திற்கு வந்து சேருவதென்று ஏற்பாடாயிற்று. காந்திஜியைச் சந்தித்து வாழ்க்கையில் சில விரதங்களைக் கடைப் பிடிப்பது குறித்துப் பேசிய மற்றொருவர் கிருஷ்ணமாச்சாரி வரதாச்சாரியாகும்.

வேலையில் குறுக்கீடு

சுங்குராம செட்டி தெருவில் ஜி. ஏ. நடேசன் அலுவலகத்தில் ஒரு அறையில் காந்திஜி பல பிரமுகர்களுக்கிடையே உட்கார்ந்துகொண்டு ஏதோ அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு சிறு தொண்டர் என்ற முறையில் சுவாமிநாதனும் (காந்தி நூல் ஆங்கிலத் தொகுப்பின் தலைமை ஆசிரியராக இப்போது பணியாற்றும் பேராசிரியர் சுவாமிநாதன்) அங்கு இருந்தார். நகரப் பிரமுகர் ஒருவர் காந்திஜியைப் பார்க்க வந்தார். ''மிஸ்டர் காந்தி, நான் உங்கள் வேலையில் குறுக்கிடவில்லை என்று எண்ணுகிறேன்'' என்ற பீடிகையுடன் அவர் பேச்சைத் தொடங்கினார். அதற்கு காந்திஜி சொன்ன பதிலில் உண்மையும் அன்பும் ஒருங்கே தோன்றின. சாதாரணமாக மற்றவர்களாய் இருந்தால் ''ஒன்றுமில்லை'' என்று சொல்லிப் பேச்சுக் கொடுத்திருப்பார்கள். ஆனால் காந்திஜி சொன்னார்: ''ஆம். நீங்கள் என் வேலையில் குறுக்கிடத்தான் செய்கிறீர்கள். ஆனாலும் வந்துவிட்டீர்கள். உங்களுக்கு ஒரு நிமிடம் கொடுக்கிறேன்,

அதற்குள் வந்த காரியத்தைச் சொல்லி விடுங்கள்'' என்றார். ''மாணவனாக இருந்த எனக்கு இந்த அழுத்தந்திருத்தமான உரை மறக்க முடியாத ஒரு படிப்பினையாக இருந்தது'', என்று இப்போதும் உணர்ச்சியோடு கூறுகிறார் பேராசிரியர். —(இந்த நிகழ்ச்சியின் தேதியைத் தீர்மானமாக முடிவு செய்ய இயலவில்லை.)

தரங்கம் பாடி

தென்னப்பிரிக்காவில் வாழ்ந்த தமிழர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து சென்றவர்கள் தான் என்றாலும் ஒரு சில குறிப்பிட்ட பகுதிகளிலிருந்து சென்றவர்கள் தொகை அதிகம். கணிசமான தமிழர்களைத் தென்னப்பிரிக்காவிற்கு அனுப்பிய பகுதி தரங்கம்பாடியாதலால் நேட்டாலிலிருந்து திரும்பி வந்தவர்கள் பலர் அங்குக் குடியேறியிருந்தார்கள். அவர்களில் பலர் காந்திஜிக்கு நேரடியாக அறிமுகமானவர்கள். தென்னப்பிரிக்காவில் வெள்ளையர்கள் சுட்டதால் உயிரிழந்த இரு தமிழர்களின் மனைவிமார்களும் அப்பகுதியில் வாழ்ந்தார்கள் என காந்திஜி கேள்விப்பட்டிருந்தார். இத்தகைய எளிய மக்களை - தம்முடைய சுக துக்கங்களில் பங்கு கொண்டவர்களை - காந்திஜி ஒரு போதும் மறப்பதில்லை. ஆகையால் அவர்கள் கணிசமாக வாழ்ந்த தரங்கம்பாடிக்குச் சென்று அவர்களைச் சந்திக்க காந்திஜி விரும்பினார். மேலும், தென்னப்பிரிக்க அறப்போரில் பங்கு கொண்ட டி. ஏ. சுப்ரமணிய ஆச்சாரியார் தில்லையாடியைச் சேர்ந்தவராவார். ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்றபோது (5-3-30-இல்) இவர் காந்திஜிக்கு எழுதிய கடிதத்தில் இவருடைய அழைப்பின் பேரிலேயே காந்திஜி தரங்கம்பாடிக்கு வந்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே 1915-இல் தரங்கம்பாடிக்கு காந்திஜியை அழைத்தவர் சுப்ரமணிய ஆச்சாரியார் தாம் என்பது தெரிகிறது. தமிழ் அறப்போர் வீரர்களைக் காண்பதற்காக இன்று (29-4-15) இரவு தூத்துக்குடி எக்ஸ்பிரசில் கஸ்தூரிபாவுடனும் வி. எஸ். சீனிவாச சாஸ்திரியுடனும் எழும்பூர் இரயில்வே நிலையத்திலிருந்து காந்திஜி குழுவினர் புறப்பட்டார்கள்.

30-4-15

மறுநாள் காலையில் மாயவரத்தில் இறங்கி, செம்பனார் கோவில் வழியாக காந்தி தம்பதிகள் தரங்கம்பாடிக்குப்

போனார்கள். மாயவரம் பொதுமக்கள் அவர்களை இரண்டு குதிரைகள் பூட்டிய சாரட்டு வண்டியில் வைத்து ஊர்வல மாகப் பள்ளி மண்டபத்திற்கு அழைத்துச் சென்றார்கள். பள்ளி மண்டபத்திலிருந்து அவர்கள் சாரட்டு வண்டியில் தரங்கம்பாடிக் குச் சென்றவழியில் ராவ்சாகிப் வைத்திய நாத ஐயர் தலைமையின் கீழ் செம்பனார் கோவில் பொது மக்கள் அவருக்கு வரவேற்பும் விருந்தும் அளித்தார்கள்.

செம்பனார் கோவில்

பழங்காலத் தமிழகத்தில், போரில் வெற்றி வாகை சூடித் திரும்பிய வீரத் திருமக்களுக்கு அளிக்கப்பெற்ற வர வேற்பைப் போன்ற ஒன்று, காந்தி தம்பதி களுக்கு தரங்கம்பாடி கோட்டை மைதானத் தில் அளிக்கப்பெற்றது. இதற்காக கே. சி. சுப்ரமணியம் பார்-அட்-லா தலைமையின் கீழ் அமைக்கப் பெற்றிருந்த குழு மிகவும் திறம்படத் தனது பணியைச் செய்திருந்தது. காந்திஜி வந்தபோது தஞ்சை பாண்டு வாத்தியம் இசைத்தது ; அதிர்வெடிகளின் முழக்கம் ஆகாயத்தைக் கலக்கியது. வரவேற்புக் குழுவின ரும் தென்னப்பிரிக்க அறப்போரில் பங்கு கொண்டு திரும்பி யிருந்த 200 சத்தியாக்ரகிகளும் மற்றும் பொதுமக்களும் கோட்டை மைதானத்தில் கூடி நின்று அண்ணலையும் கஸ்தூரிபாவையும் மனங்குளிரப் பூமாலைகள் அணிவித்துக் கைகுலுக்கி வரவேற்று விருந்தினர்கள் தங்குவதற்காக ஏற் பாடு செய்யப் பெற்றிருந்த டேனிஸ்கர் அரண்மனைக்கு அழைத்துச் சென்றார்கள்.

தரங்கம் பாடியில்

தென்னப்பிரிக்காவில் தம்முடன் ஒத்துழைத்து, போராட்டத்தில் ஈடுபட்ட தமிழ்ச் சகோதரர்கள் எல்லோ ரையும் தாமும் தமது மனைவியும் காண விரும்புவதாய் அண்ணல் தெரிவித்தார். அண் ணல் தங்களைத் தேடித் தரங்கம்பாடிக்கு வரு கிறார் என்பதை அறிந்த அறப்போர்வாதிகள் பக்கத்து ஊர்களிலிருந்தும் இங்கு வந்திருந்தார்கள். அறப் போர் வீரர்கள் அனைவரும் வரிசையாக நிற்க, காந்தியடி களும் கஸ்தூரிபாவும் ஒவ்வொருவரையும் தனித்தனியாக நலம் விசாரித்தனர். இதன் பின்னர் நடைபெற்ற விருந் தில் காந்தி தம்பதிகளுக்கு நுங்கு, இளநீர், வேர்க்கடலை, பழங்கள் ஆகியவை அளிக்கப்பெற்றன.

வீரர்கள் சந்திப்பு

அன்று மாலையில் காந்திஜி தம்பதிகளுக்குக் கோட்டை மைதானத்தில் பொது வரவேற்பு; ஏராளமான தோரணங்கள் அழகுறக் கட்டப்பெற்றிருந்தன. வரவேற்பின் காந்திஜி அமரவிருந்த மேடையோ வாழையும் **கோலாகலம்** கமுகும் கட்டி முகூர்த்தப் பந்தல் போல் காட்சி தந்தது. தரங்கம்பாடியிலிருந்தும் சுற்றுப்புறங்களிலிருந்தும் சில அதிகாரிகளும், வழக்கறிஞர்களும் ஆசிரியர்களும் உள்படச் சுமார் மூவாயிரம் பேர் கூடியிருந்தனர். டேனிஸ்கர் அரண்மனையிலிருந்து பந்தல் வரை இருபுறத்திலும் வரவேற்புக் குழுத் தொண்டர்கள் அணிவகுத்து நின்றனர். காந்தி தம்பதிகள் அங்கு வந்த போது மறுபடியும் பாண்டு வாத்தியங்களும் அதிர்வெடிகளும் முழங்கின. விழாவிற்கு கே. சி. சுப்ரமணியன் தலைமை வகித்து, காந்திஜியின் பெருமையைக் குறிப்பிட்டுப் பேசிய போது ''தன்னலமென்பதைக் கிஞ்சிற்றும் கருதாமல் நாட்டுப் பற்றுடன் நாட்டு மக்களுக்காக வைராக்கியத்துடனும் மனஉறுதியுடனும் காந்திஜி உழைத்து வருகிறார். பரந்த ஞானமுடைய பழங்கால மகரிஷிகளில் ஒருவரைப் போல ஒப்புவமையற்றுத் திகழ்கிறார். மனத்தையும் உடலையும் அடக்கியாண்ட தீரபுருஷர் இவர். ஆகையால் இம்மகானுக்கு எக்காலத்திலும் எவ்விதத்திலும் கீர்த்தியும் வெற்றியும் கிட்டத் தடையே இராது'' என்று சொல்லிப் பொறையாறு, தரங்கை சுற்றுப்புறவாசிகளின் சார்பாக வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார்.

புலிகளின் மத்தியில் இருக்கும் போது புலிக்குட்டிக்கு ஒரு தனிப் பீடுநடை வரும் என்று சொல்வார்கள். அதைப் போன்றே, தமது பழைய நண்பர் **அறப்போர்** களான சத்தியாக்ரகிகளின் மத்தியில் இருந்த **மத்தியில்** போது காந்திஜியின் உணர்ச்சிப் பெருக்கே தனியாக இருந்தது. தரங்கம்பாடியிலும் மாயவரத்திலும் காந்திஜி நிகழ்த்திய உரைகள்-அவர் எவ்வளவு பெரிய தீவிரவாதி என்பதை வெளிக் காட்டின. அவர் தேடிவந்த இரண்டு விதவைகளில் ஒரு பெண்ணை (செல்வன் மனைவியை) மட்டும் இங்கு அவரால் காண முடிந்தது. தரங்கம்பாடிக்கு வந்ததன் காரணம் என்ன வென்பதைக் குறித்து காந்திஜி கூறினார். ''தேச சுகத்திற்காகவாவது, யாத்திரை வாசியாகவாவது நான் இங்கு வரவில்லை. தென்னப்பிரிக்கப் போராட்டத்தில் வெள்ளையர்

களால் சுடப்பட்டு இறந்த இருவருடைய மனைவிமார்களைப் பார்த்து அவர்களுக்கு உதவி புரிய வேண்டும் என்பதற் காகவே நான் இங்கு வந்தேன். ஒரு விதவையை இன்று இங்குக் கண்டேன். மற்றொரு பெண் மதுரைப் பகுதியைச் சேர்ந்தவள். அவளையும் நான் விரைவில் இம்மாநிலத்தை விட்டுச் செல்லுமுன் பார்ப்பேன்'' (இந்த அம்மையாரை அவர் சந்தித்தாரா என்பது உறுதியாகத் தெரியவில்லை. ஆனாலும் இம்முறை அவர் மதுரை மாவட்டத்திற்குச் செல்லவில்லை.) இவ்வாறு கூறிவிட்டு அங்குக் கூடியிருந்த பழைய அறப்போர் வீரர்களுக்கு அவர் அறிவுரை கூறினார். முதலில், ''நீங்கள் எல்லோரும் பழைய மனஉறுதியுடன் தானே டிரான்ஸ்வாலிலிருந்து வந்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு சத்தியாக்ரகிகளின் சார்பாக, டி. ஏ. சுப்ரமணிய ஆச்சாரி, 'ஆம், நாங்கள் அதே மன உறுதி யுடன் தான் வந்திருக்கிறோம்' என்றார். ''தென்னப்பிரிக்கச் சத்தியாக்ரகத்தில் ஆன்மசக்தி என்னும் ஆயுதத்தை நீங்கள் பயன்படுத்தினீர்கள். அதை நீங்கள் அந்த நாட்டோடு விட்டு வந்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். இங்கேயும் நீங்கள் தருணம் வாய்க்கும் போது அதைக் கையாளத் தயங்கக்கூடாது''. காந்திஜி ஆங்கிலத்தில் பேசியதை ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை தமிழில் மொழி பெயர்த்தார். பின்னர், காந்திஜி ஆன்ம சக்தி என்று கூறியது என்னவென்பதை, சாஸ்திரி விளக்கினார். ரெவ ரெண்ட் சாமுவேல், எம். பி. துரைசாமி ஐயர் ஆகிய இருவரும் நன்றி கூறியபின் மன்னர் வாழ்த்துடன் கூட்டம் முடிந்தது.

தாழ்ந்தோர் குறைகள்

காந்திஜியின் மனதை அதிகம் உலுக்கிய நிகழ்ச்சி இதைத் தொடர்ந்தது. தென்னிந்தியப் பஞ்சம சாதியா ரின் சார்பாக, காந்திஜிக்குப் படித்துக் கொடுக்கப் பெற்ற வரவேற்பில் அவர்கள் தங்களுக்குள்ள குறைகளை எடுத்துக் கூறியிருந் தார்கள். இந்த வரவேற்புரை எந்த அளவு அண்ணலின் உள்ளத்தை உருக்குமென்று அவர்கள் அப்போது எண்ணியிருக்கமாட்டார்கள். தங்களுக்குக் குடி நீர் வசதியோ வாழ்க்கைக்கு வேண்டிய பிற வசதிகளோ கிட்டவில்லையென்றும் நிலத்தை வாங்கவோ விற்கவோ தங்களால் முடியவில்லையென்றும் தங்கள் குறைகளைத்

தீர்த்துக் கொள்ள நீதிமன்றங்களோ அணுகவும் முடிய வில்லையென்றும் இவர்கள் முறையிட்டிருந்தார்கள். இந்தக் குறைகளைக் கேட்டவுடன் காந்திஜியின் உள்ளம் கொதிக்கத்தான் செய்தது; ஆனாலும் அவருடைய வருத்தத்தை இங்கு அவர் கொட்டிவிடவில்லை. ''இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள் குறித்துத் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அவர்களுக்கும் மற்ற சாதி இந்துக்களுக்கு மிடையே வெட்கமடையத் தக்கவாறுள்ள வேறுபாடுகளெல்லாம் அகலும்வரை, அதாவது தாழ்த்தப்பட்டோர் என்று கூறப்படுபவர்கள் உயர்ந்து சமமான உரிமைகள் பெறும்வரை, அவர்களுக்காகப் பாடுபட வேண்டும்''. என்று மட்டும் இங்கு அவர் கூறினர். ஆனால் தமது உணர்ச்சியையெல்லாம் மாயவரத்தில் அவர் கொட்டித் தீர்த்தார்.

குடந்தை அழைப்பு

தஞ்சாவூருக்கும் கும்பகோணத்திற்கும் காந்திஜி வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு தரங்கம்பாடிக்குத் தந்திகள் வந்தன. ஆனால், காந்திஜி அந்த அழைப்புக்களை ஏற்கவில்லை. ''ஏற்கனவே என்னுடைய அலுவல்கள் வரையறுக்கப்பட்டு விட்டன. ஆகையால் அங்கு வர இயலாதவனாக இருக்கிறேன்,'' என்று வருத்தத்தோடு, ஆனால் கண்டிப்போடு பதில் சொல்லிவிட்டார். இன்று இரவு காந்தி தம்பதிகளையும் சாஸ்திரியாரையும் இரண்டு குதிரைகள் பூட்டிய சாரட்டில் ஏற்றித் தரங்கம்பாடி கோட்டை வீதிகளில் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர்.

1–5–1915

தில்லையாடி வரவேற்பு

மறுநாள் காலையில் இராமபுரத்திற்கும் தில்லையாடிக்கும் காந்திஜி சென்று தென்னப்பிரிக்காவிலிருந்து வந்து அங்கு வாழ்ந்து கொண்டிருந்த சத்தியாக்ரகிகள் குடும்பங்களைச் சந்தித்துப் பேசினர். தமிழகத்திலேயே காந்திஜி முதன் முதலாகக் காலடி எடுத்து வைத்த கிராமம் தில்லையாடிதான் என்று சுப்ரமணிய ஆச்சாரியார் காந்திஜிக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருக்கிறார். ஆகவே முதலில் தில்லையாடிக்கும் அதன்பின் இராமபுரத்திற்கும் காந்திஜி சென்றிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. தில்லையாடியில் சுப்ரமணிய ஆச்சாரியார் தலைமையின் கீழ் ஒரு சிறு வரவேற்பு அளிக்கப்

பெற்றிருக்கிறது. (தில்லையாடி வள்ளியம்மாள் பெற்றோர் களின் ஊர் என்று பரவலாகக் கூறப்படுகிறது. ஆனால் தில்லையாடிக்கு வந்தபோது அதை வள்ளியம்மாளின் ஊர் எனறு காந்திஜி குறிப்பிட்டதாகப் பத்திரிகைகள் மூலமா கவோ வேறு ஆதாரங்கள் மூலமாகவோ தெரியவில்லை. அப்போது அது வள்ளியம்மாளின் ஊர் என்று யாராவது கூறியிருந்தால் அதைப் பற்றிப் பன்முறை அவர் பாராட்டிப் பேசியிருப்பார்.)

செல்வன் மகன்

செல்வனின் மனைவியைத் தரங்கம்பாடியில் பார்த்த காந்திஜி, அவளுடைய குமாரனைத் தம்முடன் அனுப்பி வைக்கும்படி கேட்டார். (முதலில் அந்த அம்மாள் மறுத்ததாகவும் தம்முடைய கணவர் மரணத்திற்குக் காரணமாக இருந்தவர் என்று காந்திஜியைக் கோபித்துப் பேசியதாகவும் கூறப் படுகிறது. இறுதியில் அரும்முயற்சி செய்து எப்படியோ) அந்த அம்மாள் தமது குமாரனைத் தம்முடன் அனுப்பி வைக்கச் சம்மதிக்குமாறு காந்திஜி செய்துவிட்டார். அந்த அம்மாளுக்கும் மாதம் ஐந்து ரூபாய் அனுப்புவதாகக் கூறி னார். செல்வன் குடும்பம் போனிக்ஸில் காந்திஜியுடன் வாழ்ந்த குடும்பமாகும். இந்தப் பையனைக்கூட காந்திஜி மிக நன்முக ஞாபகம் வைத்திருந்திருக்கிறார். போனிக் ஸில் மிகவும் சேட்டைக் காரனுக இவன் இருந்ததாக ஒரு கடிதத்தில் இவனைப் பற்றிக் கூறியிருக்கிறார். நாய்க்கர் என்ற பெயருள்ள இந்தப் பையனைக் கூட்டிக் கொண்டு இன்று மாயவரம் போய்ச் சேர்ந்தார். (பின்னர் நாய்க்கரின் சகோதரனும் அவனுடைய அம்மாவும் சபர்மதி போய் காந்திஜி ஆசிரமத்தில் சேர்ந்தார்கள்.)

மாயவரம் வரவேற்பு

மாயவரத்தில் காந்திஜி தம்பதிகளுக்கு விக்டோரியா நகர மண்டபத்தில் வரவேற்பு அளித்தார்கள். ஒரு வகை யில் இதை நகரசபை வரவேற்பாகக் கூடக் கொள்ளலாம். ஏனெனில், ராவ்பகதூர் வி. கே. இராமானுஜாச்சாரியார் தலைமை தாங்கிய இந்த வரவேற்பில் (நகரில் உள்ள அத்தனை பெரிய மனிதர்களும் வந்து கலந்து கொண்டார் கள் என்பது ஒருபுறமிருக்க) நகரசபைத் தலைவரான எம். எஸ். நடேச ஐயர் தான் வரவேற்புரை படித்துக் கொடுத் தார். இந்த வரவேற்புரைக்குப் பதில் அளித்தபோது

தரங்கம்பாடித் தாழ்த்தப்பட்டோரின் துயரக் கதையைக் கூறத்தொடங்கிவிட்டார் அண்ணல்.

''தரங்கம்பாடியில் பஞ்சம சகோதரர்களின் வரவேற்பு ஒன்றைத் தற்செயலாக நான் பெற்றேன். குடிதண்ணீர் வசதி இல்லை - வாழ்க்கை வசதிகள் இல்லை - நிலம் வாங்கவோ விற்கவோ முடியவில்லை - நீதிமன்றங்களுக்குச் செல்லமுடியவில்லை என் றெல்லாம் அவர்கள் தெரிவித்தனர். இவ்வித நிலைமை ஏற்படுவதற்கு யார் பொறுப்பு? இந்நிலைமை நீடிக்க நாம் அனுமதிக்கலாமா? இதுதான் இந்து மதமா? - எனக்குத் தெரியவில்லை. வெளிநாடுகளில் இருந்து கொண்டு நான் இந்து மதத்தைப் பற்றி அறிந்தவரை தாழ்த்தப்பட் டோர் முதுகில் ஏறி உட்காருவது இந்து மதமல்ல என்றே தெரிந்தது. இதுதான் இந்து மதம் என்று என்னிடம் மெய்ப்பிக்கப்பெற்றால், நான் அதன் பகிரங்க விரோதியா வேன். தீண்டத்தகாதவர்கள் என ஒரு வகுப்பார் உருவாகக் காரணமாக இருந்தவர்கள் யார்? எங்கெங்கே பிராமணர் கள் இருக்கிறார்களோ அங்கெல்லாம் உயர்ந்தவர்கள் என்ற மரியாதையை அவர்களே பெறுவதாக நான் அறிகிறேன். அவர்கள் தான் உயர்ந்தவர்கள் என்ற அருகதை பெறுப வர்கள் என்றால், இந்தப் பாவம் அவர்களையே சாரும். பகவத் கீதை சொல்வதை நினைவிற் கொள்ளுங்கள். ''பண்டிதனுக்கும் பாமரனுக்கும் எவன் வேறுபாடு பார்ப்பட்டு வதில்லையோ அவனே உண்மையான பிராமணன்'', என்று கீதை கூறுகிறது. மாயவரத்தில் உள்ள பிராமணர்கள் தங்களையும் பறையர்களையும் சமநோக்குடன் பார்க்கிறார் களா? ''உங்களுடைய வரவேற்புப் பத்திரத்திற்கு என் னுடைய மறுமொழி இதுவே. நீங்கள் எதிர்பார்க்காமல் இருந்தபோதிலும், நான் உங்களுக்கு வருத்தந் தரக்கூடிய சில சொற்களைச் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. பிராமணர்கள் தங்களுடைய பூர்வீகப் பெருமையை அடைய வேண்டுமானால் அதற்குத் தருணம் இதுவே. மாயவரத்தில் பிராமணர்கள் பஞ்சம சகோதரர்களிடம் சமமாகப் பழகி னால் மற்ற வகுப்பினர் அவர்களைப் பின்பற்ற மாட்டோன் என்று சொல்வார்களா? தங்களுடைய தற்கால நிலைமை பூர்வீகத் தவபலத்தால் தலைமுறைத் தத்துவமாய்க் கிடைத் தது என்று பிராமணர்கள் சொல்வார்களேயானால் அவர் களே தேசத்தை நாசமாக்கும் பாவிகளாவார்கள்.''

இவ்வாறு காந்திஜி அன்று வெகு காரசாரமாகப் பேசினார். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய வி. கே. இராமானுஜாச்சாரியார் முதலில் நிகழ்த்திய தமது தலைமை உரையில் மற்றத் தலைவர்களுடன் காந்திஜி கருத்து வேறுபாடு கொண்டிருப்பதாகவும் சண்டையிட்டுக் கொண்டிருப்பதாகவும் அதை காந்திஜி கொஞ்சம் விளக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதற்கு மறுமொழி அளிக்கும் முறையிலும் காந்திஜி கூறினார்: ''உண்மையில் நான் தேசத்தலைவர்களுடன் சண்டையிடவில்லை. ஆனால் சண்டையிட்டுக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. ஏனெனில் நான் கேள்விப்பட்டவை பல என் மரியாதைக்கும் நாட்டின் கௌரவத்திற்கும் மாறுபாடான வையாக இருக்கின்றன. தலைவர்கள், தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள புனிதமான பொறுப்பைச் சரிவர நிறை வேற்றி வைக்கவில்லை என்று எண்ணுகிறேன். அவர்களுடைய விவேகத்தைப் புரிந்து கொள்ள முயலுகிறேன், ஆனாலும் முடியவில்லை. ஒருவேளை நான் அதற்கான திறமை இல்லாதவனாக, தகுதியற்றவனாக, இருக்கலாம். அவர்கள் செய்வனவும் சொல்வனவும் என் மனத்தைக் கவரவில்லை. உதாரணமாக, காங்கிரசின் திட்டங்களில் சுதேசி பற்றிய ஒரு தீர்மானம் இருக்கிறது. நீங்களோ உங்களுடைய வரவேற்புரையை ஆங்கிலத்தில் அச்சிட்டிருக்கிறீர்கள். ஆகவே உண்மையிலேயே நீங்கள் சுதேசியைக் கடைப்பிடிக்கவில்லை. ஆங்கிலத்தின் மீது எனக்கு வெறுப்புக் கிடையாது. ஆனாலும், தாய்மொழியைக் கொன்றுவிட்டு அதன்மீது ஆங்கில மொழியை வளர்த்தீர்களானால் நீங்கள் சரியான முறையில் சுதேசியத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்பது தான் பொருள். எனக்குத் தமிழ் தெரியாது என்று நீங்கள் எண்ணினால் ஒன்று தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டும். அல்லது, உங்களுடைய வரவேற்புரையை அந்த அழகான மொழியில் (தமிழில்) இயற்றி, அதை எனக்கு மொழி பெயர்த்துக் கூற வேண்டும்.''

கருத்து வேறுபாடு

1927-ஆம் ஆண்டில் அவர் தூத்துக்குடிக்கு வந்திருந்தபோது, ''தமிழ் நாட்டில் ஓரிடத்தில் ஆங்கிலத்தில் எனக்கு வரவேற்புரை வழங்கப் பெற்றது. அதை உடனே நான் மறுத்துரைத்ததை நீங்கள் அறிந்திருக்கலாம்'' என்று

கூறினார். அவர் குறிப்பிட்டது ஒருவேளை இந்த நிகழ்ச்சியாய் இருக்கலாம். ஏனெனில், பத்திரிக்கைகளில் வெளிவந்துள்ள செய்திகளைப் பார்க்கும்போது. இவ்வாறு தமிழில் வரவேற்புரை அளிக்கவேண்டுமென்று அவர் முதன் முதலில் கருத்துத் தெரிவித்த கூட்டம் இதுவாகவே தோன்றுகிறது. (4-5-15 ஆம் தேதி வெளியான) ''சுதேசமித்திரன்'' சென்னையில் உயர் வகுப்பினர்கள் தேசபாஷையில் போதுமான மதிப்பு வைக்காததால் அவைகள் விருத்தியாகாமல் இருக்கின்றன. ஆனால் சென்ற சில வருஷங்களாகப் பொது விஷயங்களில் ஜனங்கள் அக்கறை காட்டி வருவதால் அந்த ஆவலைத் திருப்தி செய்ய மாகாண கான்பரன்ஸ்களிலும் வேறு சில பொதுக் கூட்டங்களிலும் தேசபாஷையில் நடவடிக்கைகள் நடத்தப்பட்டு வருகின்றன. பொது ஜன ஊழியத்தில் அந்த முக்கியத் திருப்பம் இனிக் கை விடப்படமாட்டாது, என்று நம்புகிறோம். இப்போது மிஸ்டர் காந்தி தாம் சாமான்ய ஜனங்களுக்குத் தலைமை வகித்ததைப் பற்றி நேரில் வந்து ஞாபக மூட்டியிருப்பது வீண் போகாதிருக்கும் என்று நம்பலாம்'' என்று எழுதியிருந்தது.

எதிரொலி

காந்திஜி தொடர்ந்தார்: ''நான் மாயவரத்தின் வழியாகச் சென்றபோது, 'இங்குக் கைத்தறிகள் இருக்கின்றனவா? நெசவாளர்கள் இருக்கிறார்களா? என்று விசாரித்தேன். மாயவரத்தில் ஐம்பது கைத்தறிகள் இயங்குவதாகவும் அவை சேலைகள் உற்பத்தி செய்து கொண்டிருப்பதாகவும் கூறினார்கள். ஆகவே நம்முடைய சுதேசி என்பது மாதர்களுக்கு மட்டுந்தானா? ஆண் நண்பர்கள் உடுத்தியிருக்கும் துணியைப் பார்த்தால் அவர்கள் இங்கு உற்பத்தியான துணியை அணியவில்லை என்று தெரிகிறது. (ஒரு குரல்: இங்கு ஆயிரம் தறிகள் இருக்கின்றன.) அப்படியானால் இன்னும் மோசம். இந்த ஆயிரம் கைத்தறிகளும் இயங்கி மாதர்களின் தேவைகளும் உங்களுடைய தேவைகளும் நிறைவு செய்யப் பெற்றால் இந்தியாவில் ஏழ்மையே இராதே? நீங்களும் தலைவர் அவர்களும் உங்களுடைய துணித்தேவைக்கு எந்த அளவு வெளிநாட்டுத் துணிகளை எதிர்பார்த்திருக்கிறீர்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதிகச் செலவில்லாமலே சுதேசித் துணிகளைக் கொண்டு துணித்தேவையை நிறைவு செய்துகொள்ள முடியும் என்பதை நான் அறிவேன்.

மாயவரம் தறிகள்

ஆகவே இத் தீர்மானத்தின் உட்பொருள் என்ன வென்பதைக் குறித்து, காங்கிரசில் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர்களிடம் நான் என்ன கற்றுக்கொள்ள முடியும்? என்னுடைய தலைவர்களின் காலடியில் நின்று, மாயவரம் மக்களின் காலடியில் நின்று, நான் கேட்கிறேன். அவர்கள் இதன் உட்பொருளைக் கூறட்டும். வீடு வாசல் இல்லாதிருப்பவர்களை - உணவுக்காகவும் தண்ணீருக்காகவும் கதறுபவர்களை - விரட்டியடிப்பது தானே தேசியம்? உங்களுக்குப் பிடிக்காத வற்றைக் கூறுவதால், மாணவர்களுடைய அபிமானம் இனி மேலும் எனக்கு இருக்குமா, தலைவர்களின் ஆசிர்வாதம் இருக்குமா என்பதும் எனக்கு ஐயப்பாடாகவே இருக்கிறது. உங்களுடைய பரந்த இதயத்தில் எனக்கு ஒரு சிறு இடம் அளியுங்கள். அன்புடன் எனக்கு விவேகத்தை அளியுங்கள். அதை நான் அடக்கத்தோடும் பணிவோடும் கற்றுக் கொள்கிறேன். கற்றுக் கொடுக்க முடியாவிட்டாலோ தலைவர்களுடன் போர் தொடுப்பதாக மீண்டும் பிரகடனம் செய்வேன்.''

சிற்றுண்டி பேச்சின் எதிரொலி

இந்த உரை முடிந்தவுடன் வீணை இசை அரங்கும் விருந்தும் நடைபெற்றன. காந்திஜிக்குப் பின்னால் பேசிய நாகை எஸ். குப்புசாமி ஐயர், கே. கேசவ ஐயர், எஸ். சுந்தரம் ஆகியோரும் அண்ணலின் அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளும் முறையிலேயே பேசினர். எனினும் இந்தச் சொற்பொழிவு, 1915-ஆம் ஆண்டில், வைதிகர்கள் அதிகமாக உள்ள மாயவரம் போன்ற ஒரு நகரில், எவ்வளவு கடுமையாக உரைத்திருக்கும் என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை. ''வைதிகத்தின் கேந்திரமான அந்நகரில் காந்திஜி இவ்வித உண்மைகளைக் கூறியது பின்னால் கடும் வாக்குவாதத்தைக் கிளப்பியது'' என்று ஜி. ஏ. நடேசனும் கூறியிருக்கிறார். மற்றொரு வகையில் இப்பேச்சு நல்ல எதிரொலியை ஏற்படுத்தியிருந்தது என்பதற்கு ஒரு சான்று மே 8-ஆம் தேதி ''சுதேச மித்திரன்'' இதழில் ''விண்டு நேமி'' என்ற அன்பர் ஒருவர் ஆசிரியருக்கு எழுதிய கடிதமாகும். ''சென்ற சுமார் இரண்டு வாரங்களாக நம் முடைய காந்தி தம்பதிகளை வண்டியில் வைத்திருந்தோம். குதிரை வண்டியிலும் மோட்டார் வண்டியிலும் ஒருவாறு ஊர்வலம் செய்வித்தோம். ஆங்காங்கு சபைகளுக்கும் சங்கங்களுக்கும் சில பெரிய மனுஷாள் வீடுகளுக்கும் இட்டுக்

கொண்டு போய் நல்வரவு, உபசாரப் பத்திரிகைகள் படித் தோம். நோட்டக் கச்சேரி, பாட்டுக்கச்சேரி, சிற்றுண்டிக் கச்சேரி செய்தோம். உகந்தோம், பாடினோம், ஆடினோம். இங்கு காந்தி, அங்கு காந்தி, எங்கும் காந்தியாய், தேரும் திருவிழாவுமாய் இருந்தது. இப்புண்ணிய புருஷர்கள் நேற்றுத் திரும்பிப் போனர்கள். அப்பிரிவு கஷ்டம் என்ப தைச் சொல்ல வேண்டியதில்லை. இது நிற்க. அவர் விஜயத்தின் பயனென்ன? அவருடைய நற்குண நற்செய்கை நல்லொழுக்கங்களால் நாம் கற்றுக் கடைப்பிடித்ததென்ன? நம்மில் எத்தனை பேர் பொதுஜன நன்மைக்காக அவரைப் பின்பற்றி நடக்க ஆரம்பித்தார்கள்? அல்லது எல்லாம் வாய் வளப்பும் வீண் பேச்சும் தானா? ..... ஒன்றும் செய் யாமல், ஊக்கத்தோடு ஒத்துழைக்காமல் ஆடிக்கொருமுறை அமாவாசைக்கு ஒரு முறை கும்புக்கூடிப் போடும் வெளி வேஷமும் செய்யும் அட்டகாசமும் பயனற்றதாய் பரிகாசத் திற்கே இடமாகும். அந்தோ பரிதாபம்!'' என்று இவர் எழுதியிருந்தார்.

2-5-15

மறுநாள் காந்திஜி சென்னைக்குத் திரும்பி வந்தார். நடேசனுடன் தாழ்த்தப் பட்டோர் நிலையை உயர்த்து வது குறித்தும் தீண்டாமை ஒழிப்பைக் ஜி.ஏ.நடேசன் குறித்தும் பேச்சு நடத்தினர். மாணவர் இல்லத்தில் தலைவர்களும் அவரைச் சந்தித்தார்கள். செல்வ னின் குமாரனுகிய நாயக்கரை அழைத்துக் கொண்டு எவ்விதத் தயக்கமும் இன்றி காந்திஜி ஜி. ஏ. நடேசனுடைய இல்லத்திற்கு வந்ததானது அங்கு ஒரு சிறிய பூகம்பத்தையே உண்டாக்கி விட்டது. ஜி. ஏ. நடேச னுடைய இல்லத்தில் அவரைத் தவிர மற்ற எல்லோருமே வைதிக மரபுகளை அனுசரிப்பவர்கள். அதிலும் அவரு டைய வயதான தாயார் மிகவும் ஆசாரமானவர். ஆனல் காந்திஜி இதைப்பற்றியெல்லாம் எண்ணிக் கூடப் பார்க்க வில்லை. தம்மைப்போன்றே அவர் பிறரையும் எண்ணிக் கொள்வது வழக்கம். இங்கு காந்திஜி வருவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையில் கூடிய தாழ்த்தப்பட் டோர் மாநாடு ஒன்றிற்கு ஜி. ஏ. நடேசன் தலைமை தாங்கி, உயர் சாதியார் தாழ்த்தப்பட்டோரை நடத்தும் முறையை வன்மையாகக் கண்டித்துப் பேசியிருக்கிறர்.

இதைக் காந்திஜி அறிந்திருந்தார். ஜி. ஏ. நடேசனின் பேச்சையும் அவர் படித்துப் பார்த்திருந்தார். இது போதாதா காந்திஜிக்கு? 'ஜி. ஏ. நடேசன் தீண்டாமையை எதிர்க்கிறார். ஆகவே அவருடைய இல்லத்தில் உள்ள அனைவரும் அவரைப் போன்றுதான் இருப்பார்கள்' என்று முடிவு கட்டிவிட்டார். அதனால்தான் அந்தத் தாழ்த்தப்பட்ட வகுப்புப் பையனை அழைத்துக்கொண்டு வீட்டுக்குள் வர அவருக்குக் கொஞ்சமும் தயக்கம் ஏற்படவில்லை. ஆனால், நடேசனுக்குத்தான் அது பெரிய தர்ம சங்கடமாகப் போயிற்று. ஒரு புறம் காந்திஜியிடமிருந்த மரியாதை; மற்றொருபுறம் வயது வந்த தாயாரின் மனை உணர்ச்சிகளின் மீது அபிமானத்தின் காரணமாக ஏற்பட்டிருந்த மதிப்பு. இந்நிலையில், வீட்டில் ஏதோ ஒரு தர்ம சங்கடமான நிலை இருப்பதை காந்திஜி விரைவில் உணர்ந்து கொண்டார். ஆகையால் இச்சிக்கலை விடுவிக்க தமக்கே உரிய பாணியில் அவர் முயன்றார். விரைவில் ஒரு வழியும் பிறந்தது.

தாயார் மனமாற்றம்

இடமாற்றத்தின் காரணமாகவோ அல்லது வேறு காரணத்தினாலோ நாய்க்கர் நோய்வாய்ப்பட்டான். தமக்கு ஒழிந்த நேரத்தையெல்லாம் அவனுக்குப் பணி விடை செய்வதிலேயே காந்திஜி கழித்தார். இதை நடேசனின் தாயார் கவனித்துக் கொண்டிருந்தார். எவ்வளவுதான் தீண்டாமையைப் பற்றியும் சமத்துவத்தைப் பற்றியும் அந்த அம்மையாருக்குப் போதித்திருந்தாலும் அது அவர் உள்ளத்தைத் தொட்டிருக்குமா என்பது ஐயப்பாடே. ஆனால் இந்த நிகழ்ச்சி அவருடைய உள்ளத்தைத் தொட்டது; அவருக்கும் மனமாற்றம் ஏற்பட்டு விட்டது. அந்தப் பையன் அங்கு காந்திஜியுடன் தங்குவதை ஏற்றுக்கொண்டார். இதை காந்திஜியும் கவனித்து அறிந்துகொண்டார். பிற்காலத்தில் நடேசனுக்கு காந்திஜி எழுதிய கடிதத்தில் அவர் இதைக் குறிப்பிட்டுக் கீழ்க்கண்டவாறு கூறியிருந்தார்; ''நாய்க்கரிடம் உங்கள் தாயார் எவ்வளவு பெருந்தன்மையுடன் நடந்து கொண்டார். உங்கள் கருத்திற்கு அவரை மாற்ற முடியுமா என்று நீங்கள் ஐயப்பட்டீர்களே? சீர்திருத்த வாதிகளாகிய நாம் இத்தகைய பழக்கத்திற்குத்தான் ஆளாகியிருக்கிறோம். நம்முடைய வீட்டிலிருந்து சீர்திருத்தத்தைத்

தொடங்க வேண்டுமென்று நாம் எண்ணுவதில்லை. நம்மைச் சீர்திருத்துவதே பெரியபாடாக இருக்கிறது.''

சாஸ்திரி வீட்டில்

நாய்க்கரை அழைத்து வந்ததால் முதல் நாள் நடேசன் வீட்டில் இருந்த குழப்பத்தை யூகித்து உணர்ந்து விட்ட அண்ணல், மறுநாள் சாஸ்திரியின் இல்லத்திற்குத் தாம் விருந்தினராகப் போக இருந்ததை நிறுத்திவிட விரும்பினர். ஏனென்றால், நடேசனுடைய தாயாரைப் போன்றே சாஸ்திரியின் தாயாரும் வைதிக மனோபாவம் படைத்தவர். ''நடேசன், நான் நாளை சாஸ்திரியின் இல்லத்திற்கு வரவில்லை என்பதைக் கூறிவிடுங்கள். உங்களுடைய தாயாருக்குப் போதுமான மனத்தொல்லையைக் கொடுத்துவிட்டேன். சாஸ்திரியின் தாயாருக்கும் நான் அத்தொல்லையைக் கொடுக்க வேண்டுமா?'' என்று அவர் கூறினர். நடேசனும் இதை சாஸ்திரியிடம் போய்ச் சொன்னர். ஆனால் சாஸ்திரியோ காந்திஜி தமது இல்லத்திற்கு நாய்க்கருடன் தாராளமாக வரலாம் என்று தெளிவாகக் கூறிவிட்டார். ''நடேசன், உங்களுடைய தாயார் வைதீகத்தில் எவ்வளவோ பிடிவாதமானவர். அவரையே திருப்பிவிட முடிந்தால் என் தாயாரை எளிதாகத் திருப்பிவிடலாம். மேலும் இந்திய ஊழியர் சங்கத்தில் சேரும்போது, நாங்கள் எடுத்துக் கொள்ளும் உறுதிமொழிகளில் சாதி மதம் பாராட்டாது எல்லோருடனும் சேர்ந்து உண்போம் என்பதும் ஒன்றாகும். ஆகையால் ஏற்கனவே திட்டமிட்டபடி, காந்திஜி என் வீட்டிற்கு வரட்டும்'' என்று கூறிவிட்டார். காந்திஜியும் நாய்க்கருடன் (3-5-15) விருந்திற்குப் போய் வந்தார்.

இயற்கை வைத்தியம்

இந்தப் பையனை காந்திஜி எவ்வாறு குணப்படுத்தினர் என்பதை அப்போது ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் வாழ்ந்த அவருடைய சகோதரர் குமாரரான ஜி. வி. கல்யாணம் (2-11-68-ஆம் தேதி 'மெயில்' இதழில்) கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்:

அந்த அரிஜனப் பையனுக்கு ஒரு நாள் இரவில் காய்ச்சல் அதிகமாகி விட்டது. மறுநாள் அதிகாலையில் காய்ச்சலால் நடுங்கிக் கொண்டிருந்தவனைக் கீழே காந்திஜி கொண்டுவந்து, அவனுடைய உடையையெல்லாம் கழற்றி விட்டு குழாயின் அடியில் உட்காரவைத்துக் குழாயைத் திருகி விட்டார். என்னுடைய சித்தப்பாவிற்கு மிகவும்

பயமாகப் போய்விட்டது. எங்களுடைய டாக்டரை அழைத்து வருவதாகச் சொன்னார். ஆனால் காந்திஜி அதைக் கண்டிப்பாக மறுத்து விட்டார். என்னுடைய சித்தப்பாவின் குழப்பம் இன்னும் அதிகமாயிற்று. ''காந்தி, நீங்கள் என் வீட்டில் ஒரு படுகொலை செய்யப் போகிறீர்கள்'' என்று சத்தமிட்டார். அதற்கு காந்திஜி நிதானமாக, ''இல்லை, பேசாமல் இருங்கள் நடேசன்! உங்களுக்குத் தெரியாது'' என்று சொன்னார். பிறகு பையனைத் தூக்கி மாடிக்குக் கொண்டு போய், அங்கு படுக்கையில் படுக்க வைத்தார். ஒரு பழத்தை எடுத்து - அது மூலாம் பழம் போல் இருந்தது - நறுக்கி நன்றாகப் பிசைந்து அந்தப் பையனுக்குக் கொடுத்தார். 104 டிகிரி காய்ச்சலில் இருந்த பையனுக்கு இவ்வாறெல்லாம் செய்தார். அதன் பின் தம் உதவியாளர்களிடம் ''மதியம் 12 மணி வாக்கில் நான் திரும்பி வராவிட்டால் மீதியுள்ள பழத்தையும் பையனுக்குக் கொடுத்து விடுங்கள்'' என்று கூறிவிட்டு வெளியே போய் விட்டார். ஆனால் பத்து மணிக்கெல்லாம் பையனுடைய காய்ச்சல் குறைந்து அவன் விளையாடப் போய் விட்டான்.''

'இரண்டாம் வகுப்பு

காந்திஜி கொள்கைப் பிடிப்புள்ளவர்; ஆனாலும் சிறு காரியங்களில் அவர் விட்டுக் கொடுப்பதும் உண்டு. இங்கு மூன்றும் வகுப்பு வண்டியில் வந்தாரல்லவா? மூன்றாவது வகுப்புப் பயணிகளுடைய துயரைத் தாமே நேரில் அனுபவித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகவும் ஏழை மக்களுடன் ஒன்றுபட்டு வாழ வேண்டும் என்பதற்காகவுமே அவர் மூன்றாவது வகுப்பில் அந்தச் சமயத்தில் பயணம் செய்து வந்தார். ஆனாலும் சென்னை நகரத்துப் பெரிய மனிதர்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர் சென்னையிலிருந்து நெல்லூருக்குச் சென்ற போது இரண்டாம் வகுப்பில் பயணம் செய்தார். அந்தக் காலத்தில் மாநில மாநாடுகள் நடைபெறுவதுண்டு. சென்னை மாநில மாநாடு என்றால் அதில் தமிழகம், ஆந்திரம், கர்னாடகத்தின் ஒரு பகுதி, மலையாளத்தின் ஒரு பகுதி ஆகியவற்றின் பிரதிநிதிகள் வந்து பங்கு கொள்வார்கள். காந்திஜி சென்னைக்கு வந்திருந்த சமயத்தில் இந்த மாநாடு (ஆந்திராவில்) நெல்லூரில் நடைபெற்றது. காந்திஜியும் அம் மாநாட்டிற்கு அழைக்கப் பெற்றார். ஆகையால் காந்தி

தம்பதிகளும் நாய்க்கருடன் அம்மாநாட்டிற்குச் சென்றார்கள்.

3, 4, 5, 6-5-15

நெல்லூர் மாநாடு

மே 3-ஆம் தேதி மாலை, மாநில மாநாட்டில் பங்கு கொள்வதற்காகப் புறப்பட்டு நெல்லூருக்குப் போய் அப்போது மாவட்டக் கலெக்டராக இருந்த திவான் பகதூர் இராமச்சந்திர ராவின் இல்லத்தில் தங்கியிருந்தார். நெல்லூரில் நடைபெற்ற சென்னை மாநில மாநாட்டில் திருமதி பெசண்ட், வி.கே. இராமானுஜாச்சாரி, எஸ். சீனிவாச ஐயங்கார், ஜி. ஏ. நடேசன், சி. பி. இராமசாமி ஐயர், லாட் கோவிந்ததாஸ், வி. எஸ். சீனிவாசசாஸ்திரி, கே. சிதம்பரநாத முதலியார், ஜார்ஜ் ஜோசப் போன்ற பெரிய மனிதர்கள் தமிழகத்தின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டார்கள். அக்காலத்தில் இம்மாநாட்டைப் பார்ப்பதற்குப் பெரிய அரசாங்க அதிகாரிகள் கூட வருவதுண்டு. நெல்லூர் கலெக்டரும் இம்மாநாட்டிற்கு வந்திருந்தார். இம்மாநாட்டில் கல்வி, அரசியல், சமூகச் சிக்கல்களெல்லாம் விவாதத்திற்கு வந்தன. சிறிது காலத்திற்குமுன் காலமான கோகலேக்கு அஞ்சலி தெரிவித்தும் (அப்போது வைசிராயாக இருந்த) ஹார்டிஞ்சின் பதவிக்காலத்தை நீடிக்கவேண்டும் என்று பிரிட்டிஷ் பேரரசைக் கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின. அதன் பின்னர், இந்தியர்களின் தன்மானத்தைக் காப்பதற்காகத் தென்னப்பிரிக்கப் போராட்டத்தில் பெருந்தியாகங்கள் செய்த காந்தி தம்பதிகளுக்கு இம்மாநில மக்களின் நன்றியை நேரில் தெரிவித்துக் கொள்வதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது. இத்தீர்மானத்தைக் கொண்டு வந்த ஜி. ஏ. நடேசன், ஒரு மனிதன் ஆண்மையின் முழு உருவமாகத் திகழ முடியும் என்பதைத் தென்னப்பிரிக்காவில் காந்திஜி காட்டிய வீரத்திலிருந்து நன்குதெரிந்து கொள்ள முடிகிறது என்று பாராட்டினார். அதேபோன்று கஸ்தூரிபாய் பெண்ணின் பெருமையின் உச்ச எல்லையையே எட்டி விட்டார் என்றும் சொன்னார்.

இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசியவர்களில் ஒருவரான திருமதி பெசண்ட் அப்போது சத்தியாக்ரகப் போராட்ட முறையைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் குறிப்பிடத்தக்கனவாகும். பிற்காலத்தில் ஒத்துழையாமை போன்ற நடவடிக்

கைகளை எதிர்த்த பெசண்ட், 1915-இல் சாத்விக எதிர்ப்பு முறையைப் பற்றி என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பது இச்சொற்பொழிவிலிருந்து நன்கு தெரிகிறது. அவர்சொன்னார்: ''சாத்விக எதிர்ப்பு என்ற இந்த ஆயுதம் தென்னப்பிரிக்காவில் மிகவும் விவேகமான முறையில் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல பலன் அளிக்கக் கூடியவாறு பயன்படுத்தப் பெற்றிருக்கிறது. இதற்கு முன்னர், ஓரிரு வரலாற்றுப்புகழ் மிக்க சந்தர்ப்பங்களில், இந்த ஆயுதம் இங்கிலாந்தில் பயன்படுத்தப்பெற்றதுண்டு. ஆனாலும் இந்தியர் போராட்டத்தில், தென்னப்பிரிக்காவில் பயன்படுத்தப் பெற்றதே முதன் முறை. ஒரு பெருங்குறையால் அவதிப்படும் மக்களுக்கு - ஒரு திட்டவட்டமான ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட்டம் நடத்தும் மக்களுக்கு - அரசு ஒரு தீங்கைச் செய்ய முயலும்போது சாத்விக எதிர்ப்பைக் காட்டிலும் பயனுள்ள ஆயுதம் கிடையாது. காந்திஜி செய்த பணிக்காக மட்டும் அல்லாது இந்த ஆயுதத்தை மிகவும் விவேகமான முறையில் அவர் பயன்படுத்தியதற்காகவும் அவரை நான் பாராட்டுகிறேன். தென்னப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களுடைய தன்மானத்தை மட்டுமல்லாது எல்லா இந்தியர்களுடைய தன்மானத்தையுமே காந்திஜி நிலை நாட்டினார். உலகில் இந்தியா ஒரு பண்பாடுள்ள உயர்ந்த நாடு என்பதை அவர் உறுதிப்படுத்தினார்...முற்காலத்தில் ஓர் இந்திய மனைவி கணவனுக்கு எப்படியெல்லாம் விளங்கி வந்தாளோ அதேபோன்று திருமதி காந்தி தம் கணவருக்கு அவருடைய பொது வாழ்வில் சகாவாகவும் தோழியாகவும் ஆதரவாளராகவும் ஊக்குவிக்குந் துணைவியாகவும் இருந்து வந்திருக்கிறார்.''

அன்னி பெசண்ட்

இவ்வாறு இவர்கள் பாராட்டிப் பேசியவைகளெல்லாம் எவ்வாறு குறிப்பிடத்தக்கவையாக இருந்தனவோ அதைப் போன்றே காந்திஜியின் மறுமொழியும் அன்று குறிப்பிடத்தக்கதாய் இருந்தது. ''தென்னப்பிரிக்காவில் நாங்கள் செய்த காரியங்களுக்காக அளவுக்கு மீறிப் புகழ்ந்து, எங்களைக் கெடுத்து விடாதீர்கள். இதனால் நாங்கள் கர்வம் அடைந்து போய் விடலாம், அதன் காரணமாக நீங்கள் எதிர் பார்க்கும் அளவு நாங்கள் சேவை செய்ய முடியாமற்

காந்திஜியின் கண்டிப்பு

போய் நீங்கள் ஏமாற்றமும் வெறுப்பும் அடைய நேரலாம்'' என்று அன்று காந்திஜி அடக்கத்தோடு எச்சரித்தார்.

7-5-15

மீண்டும் சென்னையில்

மூன்று நாட்கள் நெல்லூரில் தங்கிவிட்டு, 7-ஆம் தேதியன்று கல்கத்தா மெயிலில் சென்னைக்குத் திரும்பி வந்த காந்திஜி, அன்று இரவு பெங்களூர் மெயிலில் புறப்படுவதற்கு முன், சென்னையில் தென்னப்பிரிக்க இந்திய லீக் கூட்டத்தில் பங்கு கொண்டு விட்டு சௌகார் பேட்டைக்குச் சென்று ஒரு நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். மாலையில் சுகுண விலாஸ் சபையாரின் அரிச்சந்திரா நாடகத்தைப் பார்த்தார். இந்திய தென்னப்பிரிக்க லீக் என்பது தென்னப்பிரிக்க இந்தியர்களின் போராட்டத்திற்கு உதவுவதற்காக அமைக்கப் பெற்ற ஒரு அமைப்பாகும். ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் நடைபெற்ற இதன் கூட்டத்தில் தென்னப்பிரிக்க இந்தியர் போராட்டத்தைக் குறித்து காந்திஜி ஒரு சிறு அறிக்கையை அளித்து மேலுங் கூறினார் : '' இந்தியாவில் 30 சத்தியாக்ரகிகளும் அவர்களுடைய குடும்பத்தினரும் இருக்கிறார்கள். போராட்டத்தின்போது சுட்டுக் கொல்லப்பெற்ற இரண்டு பேர்களுடைய மனைவிமார்களும் அவர்களுடைய குழந்தைகளும் இதில் அடங்குவார்கள். ஆகையால் லீகிடம் மீதமுள்ள சொற்பத் தொகையை அவர்களுடைய உதவிக்காகப் பயன்படுத்தலாம் என்பது என் யோசனை. போராட்டத்தின் மிக நெருக்கடியான கட்டத்தில் லீக் செய்த அரும் உதவிக்காக அதற்குத் தென்னப்பிரிக்க இந்தியர் சார்பாக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 1909-இல் நாடு கடத்தப்பெற்ற டிரான்ஸ்வால் சத்தியாக்ரகிகள் நலனை அக்கறையுடன் கவனித்த ஜி. ஏ. நடேசனுக்கும் அவர்கள் சார்பாக என்னுடைய இதயபூர்வமான நன்றி உரித்தாகும். '' லீகின் பணி முடிந்து விட்டதால் அதைக் கலைத்து விடுவதென்றும் அதனுடைய நிதியை காந்திஜி வசம் ஒப்புவிப்பதென்றும் கூட்டத்தில் முடிவாயிற்று. பெங்களூருக்குச் சென்ற காந்திஜியை வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, எஸ். சீனிவாச ஐயங்கார், பாண்டியா, டி. கே. வெங்கடராம சாஸ்திரி முதலியோர் இரயில்வே நிலையத்திற்கு வந்து வழியனுப்பி வைத்தார்கள். ஜி. ஏ. நடேசன் காந்திஜியுடன் பெங்களூருக்குச் சென்றார்.

சாதாரணமாகக் கணவனுக்கும் மனைவிக்கும் ஏற்படக் கூடிய பிணக்குகள் காந்திஜிக்கும் கஸ்தூர்பாவிற்கும் அவ்வப்போது ஏற்படத்தான் செய்திருக்கின்றன.

காந்தி கஸ்தூர்பா

காந்திஜி சில கொள்கைகளிலும் கோட்பாடுகளிலும் கண்டிப்பானவராக இருந்ததே இதற்கெல்லாம் காரணம். காந்திஜி சாதாரண மக்களை விட ஊழியர்களிடம் கண்டிப்பாக இருப்பார்; ஊழியர்களைவிட உறவினர்களிடமும், உறவினர்களை விடத் தன் மக்களிடமும், மக்களைவிட மனைவியிடமும் கண்டிப்பாக இருப்பார்; மனைவியைவிடத் தம்மிடம் அதிகக் கண்டிப்பாக இருப்பார். இம்முறை அவர்கள் சென்னைக்கு வந்தபோது இதை வெளிக் காட்டக்கூடியவாறு அவர்களுக்குள் சிறு சண்டையும் ஏற்பட்டிருக்கிறது. இதைக்குறித்து ஜி. ஏ. நடேசன் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்: ''சென்னையில் அவர்கள் தங்கியிருந்தபோது ஒரு சில சமயங்களில் கஸ்தூர்பா வருத்தமாயிருந்ததை நான் கண்டேன். இதை நான் காந்திஜியின் கவனத்திற்குக் கொண்டுவந்தபோது அவர், ''இதெல்லாம் அவளாகவே செய்து கொள்வதுதான். அவளுடைய பேரப்பிள்ளைகளுக்கு விலை உயர்ந்த துணிமணிகள் வாங்க வேண்டுமாம். அதற்கு அவளுக்குப் பணம் வேண்டுமாம்'' என்று சொன்னார். ''நீங்கள் ஒரு கொடுமைக்காரக் கணவனைத்தான் இருக்கிறீர்கள்!'' என்று நான் வேடிக்கையாகச் சொன்னேன். உடனே அவர் பதில் சொன்னார்: ''இங்கே பாருங்கள். நீங்கள் என்மீது வீணாகக் குற்றம் சாட்டுகிறீர்கள். இப்படிப் பட்ட காரியங்களில் நான் அவளுடைய விருப்பத்திற்கு இணங்குவது என்னுடைய கொள்கைகளைக் கைவிடுவதாகும். என் கொள்கைகள் என்னவென்பது அவளுக்குத் தெரியும். என்னுடன் நன்றாகப் பழகியிருக்கிறாள். அவள் ஊருக்குப் போய், தனித்துக் குடித்தனம் செய்து, இந்த வசதிக் குறைவுகளெல்லாம் இல்லாமல் மகிழ்ச்சியாகக் குழந்தைகளுடன் வாழலாம் என்று நான் கூறிவிட்டேன். ஆனால் அவள்தான் அதை ஏற்கவில்லை. விசுவாசமான இந்து மனைவியாக, நான் எங்கெங்கு செல்கிறேனோ அங்கெல்லாம் என்னைத் தொடர்ந்து வரவே விரும்புகிறாள்,'' என்று சொன்னார். மென்மையான உள்ளம் படைத்த காந்தி கொள்கையில் எஃகுப் போன்ற உறுதிபடைத்தவராக இருந்திருக்கிறார் என்பது இதிலிருந்து தெரிகிறது.

இம்முறை காந்திஜி சென்னைக்கு வந்தபோது அவர் புகழும் கஸ்தூர்பா புகழும் மட்டுமல்லாது சாத்விக எதிர்ப்பு முறையின் புகழும் ஓங்கியது. காந்தி தம்பதி சத்தியாக்ரக களுக்கு அளிக்கப்பெற்ற ஒவ்வொரு வரவேற் புகழ் பிலும், சாத்விக எதிர்ப்பைப் பற்றியும் சில வாசகங்கள் இருந்தன. இவ்வாறு, சாத்விக எதிர்ப்பு முறையின் பெருமை அதாவது சத்தியாக்ரக முறையின் பெருமை - திருப்பித் திருப்பிப் புகழப்பெற்றது பலருக்குப் பிடிக்கவில்லை. இவர்களுடைய பிரதிநிதி போன்று ஒருவர், சாத்விக எதிர்ப்பென்பது ஒரு மூட நம்பிக்கை என்று குறிப்பிட்டு ''மெயில்'' ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுதினார். ''தென்னப்பிரிக்காவைப் போன்று இந்தியாவிலும் இம்முறையைக் கையாளலாம் என்று கூறப் படுகிறது. இது ஒரு அபாயமான கொள்கை. இதை உடனடியாகக் கண்டித்துத் தவிர்க்க வேண்டும். சாத்விக எதிர்ப்பு முறையை அரசியல் வாதிகள் கடைப்பிடிக்க முடியாது. சாத்விக எதிர்ப்பிற்கு அளவு கடந்த பொறுமை, பற்றற்ற மனம், திடநம்பிக்கை ஆகியவை தேவைப்படுவ தால் ஆதாம் காலத்திலிருந்து இதுவரை வந்துள்ள எந்த அரசியல் கட்சியும் அதைக் கடைப்பிடிக்க முடியவில்லை. மேலும் சாத்விக எதிர்ப்பிற்கும் நேரடி எதிர்ப்பிற்குமிடையே உள்ள இடைவெளி மிகவும் சுருக்கம். ஆகையால் ஒன்றி லிருந்து மற்றொன்றிற்கு யாரும் தாவிவிடக்கூடும். எந்த நாட்டிற்குமே இது பொருந்தாது. அதிலும் அரசியல் கட்டுப்பாடு இல்லாத, உணர்ச்சி வயப்பட்ட நாட்டிற்கு இது பொருந்தாது. தென்னப்பிரிக்காவில் தன்னைப் பின் பற்றிய வர்கள் மீது காந்திஜிக்கு முழு 'ஆதிக்கம்' இருந்தது. அத்தகைய ஒரு தலைமை இங்கு காந்திஜிக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் தென்னப்பிரிக்கா வில் கூட அது கலவரங்களிலும் துப்பாக்கிச் சூட்டிலும் கொண்டுபோய் விடவில்லையா? விரைவில் அரசியல் குழப் பத்தின் கேந்திரமாக காந்தி ஆய்விடுவார் என்று நான் அஞ்சுகிறேன்'' என்று இவர் எழுதியிருந்தார். இன்றும் அஹிம்சை அறப்போருக்கு எதிராக இதே காரணங்கள் தாம் கூறப்படுகின்றன.

தென்னப்பிரிக்காவில் தமிழர்கள் எவ்வாறு அவரை நன்கு புரிந்து கொண்டார்களோ அதைப் போன்றே

தாய்த் தமிழகத்திலும் வெகு விரைவில் புரிந்துகொண்டார்கள். மாயவரம் சொற்பொழிவிற்குப் பின் ''இந்து'' இதழில் ''இந்தியன் பப்ளிசிஸ்ட்'' என்ற பெயரில் ஒருவர் எழுதியிருந்தார். ''அரசியல் பணியில் மிக உயர்ந்த சோதனை ஒன்றை அவர் முன்வைக்கிறார். ஒழுக்கத்தின் மாத்து என்ன என்ற சோதனைதான் அது; சொல்லிற்கும் செயலுக்கும் எந்த அளவிற்கு உடன்பாடு இருக்கிறது என்றசோதனை. பொது மக்களுடைய உண்மையான முன்னேற்றத்தில் நன் நடத்தையால் மட்டும் சாதிக்கக் கூடியதைப் பற்றிய சோதனை. இந்தியாவில் பலருக்குப் பட்டம் பதவியைப் பெற, புகழடைய, அல்லது உற்சாகமான முறையில் பொழுதைப் போக்க அரசியல் ஒரு சாதனமாக இருக்கிறது. 'சில மாதங்களுக்கு முன் இந்தியா முழுவதிலும் புகழ் பாடப்பெற்ற ஒருவர், சொல்வதைச் செய்கிறார், செய்வதைச் சொல்கிறார், அது மட்டுமல்ல, தம்மைப் போற்றுபவர்களும் அவ்வாறு செய்ய வேண்டுமென்றே எதிர்பார்க்கிறார்,' என்ற உண்மையை இப்போது அவர்கள் திடீரென உணரத் தொடங்கி விட்டார்கள்.... காந்திஜி சில கேள்விகள் கேட்கும் போது அது அவர்களுக்குத் தர்ம சங்கடமாய் இருக்கிறது. தென்னப்பிரிக்காவில் இந்தியர்களுக்கு இழைக்கப்பெற்ற அநீதிகளை இங்கு தாழ்த்தப் பட்டோருக்கு ஏன் இழைக்க வேண்டும்? சுதேசியை ஊக்குவிக்க வேண்டும் என்று காங்கிரசில் தீர்மானங்கள் நிறைவேற்றி யிருக்கிறீர்களே, பெரிய தலைவர்கள் கூட அதைக் கடைப்பிடிக்காமல் இருக்கிறார்களே, அது ஏன்? நம்முடைய மாநாடுகளும் கூட்டங்களும் உள்ளீடும் உண்மையற்றவையுமாக நடைமுறைக்கு அப்பாற்பட்டவையாக இருக்கின்றனவே, ஏன்? இவ்வாறெல்லாம் காந்திஜி கேள்வி கேட்கும் போது தென்னப்பிரிக்க வீரரான காந்தி, சுயாட்சியுள்ள ஒரு காலனியையே வெற்றிகண்ட காந்தி 'நடைமுறைச் சாத்திய மற்ற அரசியல் வாதி', 'முனிவர் தான், ஆனால் அரசியல் தலைவரல்ல' அல்லது 'வெறும் கற்பனை வாதி' என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்'' - என்று எழுதியிருந்தார்.

காந்திஜி எழுதிய டயரி:

1915-ஆம் ஆண்டு எழுதிய டயரியில், தமிழக வருகையைக் குறித்துக் கீழ்க்கண்டவாறு காந்திஜி குறிப்புகள் எழுதியிருக்கிறார்:

ஏப்ரல் 17-சனி

மாலையில் சென்னை சேர்ந்தேன். இரயில்வே நிலையத்தில் பெருங் கூட்டம். வண்டியை அவர்களே இழுத்தார்கள். திருமதி பெசண்டைச் சந்தித்தேன். நடேசனுடன் தங்கினேன்.

ஏப்ரல் 18-ஞாயிறு

மக்களைச் சந்திக்கத் தொடங்கினேன்.

ஏப்ரல் 19-திங்கள்

அநேகரைச் சந்தித்தேன்.

ஏப்ரல் 20-செவ்வாய்

அநேகரைச் சந்தித்தேன்.

ஏப்ரல் 21-புதன்

தென்னப்பிரிக்க லீகின் வரவேற்பு.

ஏப்ரல் 22-வியாழன்

கிருஷ்ணசாமி சர்மா, மெட்ரிகுலேஷன் வரை படித்திருக்கிறார். 1907-இல் தேறினார். தமிழ், தெலுங்கு தெரியும். பகவத் கீதையை மனனம் செய்திருக்கிறார். சிறையில் மூன்று ஆண்டுகள் கழித்திருக்கிறார். 'இந்துநேச'னில் உதவி ஆசிரியர். வாழ்க்கை முழுதும் பிரம்மச்சர்யத்தைக் கடைப்பிடிப்பது, சத்தியம், அஹிம்சை, சேர்த்து வையாமை, திருடாமை ஆகிய பிரதிக்ஞைகள் எடுத்துக் கொண்டிருக்கிறார். முற்றிலும் நாட்டின் தொண்டிற் காகவே தம்மை அர்ப்பணிக்க விரும்புகிறார். காஞ்சிவரத்தில் வீடும் நிலமும் இருக்கிறது. அதிலிருந்து ஆண்டு வருமானம் ரூ. 200 வருகிறது. காஸ்மாபாலிடன் கிளப்பில் இருக்கிறார்.

ஏப்ரல் 23-வெள்ளி

மகாஜன சபை வரவேற்பு. தயாப்ஜி இல்லத்தில் இன்றிரவு தூங்கினேன்.

ஏப்ரல் 24-சனி

முஸ்லிம் லீக் கூட்டம். வழக்கறிஞர்களுடன் விருந்துணவு.

ஏப்ரல் 25-ஞாயிறு

போரா நண்பர்களுடன் விருந்து. சோஷியல் சர்வீஸ் லீக். மாதர்கள் கூட்டம். ஆர்ய வைசிய சபை.

ஏப்ரல் 26-திங்கள்

திரு சுப்ரமண்யம் இல்லம். ரெவ. பாதிரியார், எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லம் ஆகியவற்றில் நிகழ்ச்சி (சுப்ர மணிய இல்லம் என்று அவர் இங்கு குறிப்பிடுவது இந்திய கிறித்தவர்களின் வரவேற்பை.)

ஏப்ரல் 27-செவ்வாய்

திரு சைமன் இல்லத்தில் நிகழ்ச்சி. ஒய். எம். சி. ஏ. யில் நிகழ்ச்சி. மாணவர்கள் வரவேற்பு.

ஏப்ரல் 28-புதன்

பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்களுடன் உரையாடல். திருமதி பெசண்ட் இல்ல நிகழ்ச்சி (தம்முடன்) சேர அல்லூரி ராம் ராஜ் முடிவு. வயது 29, பெற்றோர்கள் இறந்து விட்டார்கள். மொழி தெலுங்கு, தமிழ் தெரியாது. பி. ஏ. படித்தவர், சமஸ்கிருதம் தெரியும், இரண்டு அண்ணன்கள் இருக்கிறார்கள். எப்போதும் பிரம்மச்சாரி யாகவே இருந்திருக்கிறார். 15 ஆண்டுகளாகச் சைவ உணவு. ஆறு பிரதிக்ஞைகள் எடுக்கத் தயார். இரயில் வேக் கட்டணம் கேட்கவில்லை. ஜூலை மாதம் வருவார்.

ஏப்ரல் 29 - வியாழன்

காலையில் ராம் ராஜுடன் பேசினேன். புதன்கிழமை குறிப்பிட்ட பிரதிக்ஞைகளை எடுத்துக் கொண்டார். கிருஷ்ணமாச்சாரி வரதாச்சாரி. வயது 25..... ஆறு ஆண்டுகள் திருமண வாழ்க்கை. பெற்றோர்கள் இல்லை. யாரையும் சம்ரட்சிக்கவேண்டிய பொறுப்பு இல்லை. மெட்ரிகு லேஷனில் தேறி இருக்கிறார். மூன்று ஆண்டுகளாக வேலை யில் சேர்ந்திருக்கிறார். வெங்கடப்பர் சேதுராம ஐயர். வயது 33. 1889 - இல் திருமணமானவர். மூன்று குழந்தை கள் இருக்கின்றன. மகன் 7 (வயது) குமாரத்திகள் 9-உம் 2-உம். பெற்றோர்கள் உயிருடன் இருக்கிறார்கள். யாரையும் பராமரிக்க வேண்டியதில்லை. இருவருக்கும் கொஞ்சம் சொத்து இருக்கிறது. மெட்ரிக்குலேஷனில் தேறியிருக் கிறார்கள். சிறிது சமஸ்கிருதம் தெரியும். கோவிந்ததாஸ் இல்லத்தில் விருந்து.

ஏப்ரல் 30 - வெள்ளி

காலையில் மாயவரம் சேர்ந்தேன். டோங்காவில் தரங்கம்பாடிக்குப் புறப்பட்டேன். வழியில் செம்பனார்

கோவிலில் இறங்கினேன். மாலையில் தரங்கம்பாடியில் கூட்டம். பஞ்சமர்கள் வரவேற்பு.

மே 1 - சனி

காலையில் இராமபுரத்திற்கும் தில்லையாடிக்கும் சென்றேன். மாலையில் மாயவரத்திற்குப் புறப்பட்டேன். அங்கு வரவேற்பு. மாயவரத்தில் ஆயிரம் தறிகள், மாதர் களின் தூணிமணிகள் உற்பத்தி செய்கின்றன. இரவில் இரயிலில் சென்னைக்குப் புறப்பட்டேன். செல்வனின் குமாரனுகிய நாய்க்கர் என்னுடன் வந்தான்.

மே 2 - ஞாயிறு

சென்னை சேர்ந்தேன். நடேசனுடன் பஞ்சமர்களைப் பற்றிப் பேச்சு. மாணவர்களின் சந்திப்பு.

மே 3 - திங்கள்

சாஸ்திரியார் இல்ல விருந்திற்குச் சென்றேன். மாலை யில் நெல்லூருக்குப் புறப்பட்டேன். அங்கு திவான் பகதூர் இராமச்சந்திர ராவுடன் தங்கினேன். நாய்க்கரும் அடாவும் உடன் வந்தார்கள். சி. சீனிவாச ஐயங்கார் 500 ரூபாய் கொடுத்தார். பணத்தை நடேசனிடம் ஒப்படைத் தேன்.

மே 4 - செவ்வாய்

அடா நோய்வாய்ப்பட்டான். பழ உணவு பிடிக்க வில்லை. சமைத்த உணவு சாப்பிட்டான். நாய்க்கருக்கும் அந்த உணவைக் கொடுத்தேன். மாநாட்டில் பங்கு கொண்டேன். பிரகலாத அக்கையன் என்ற தெலுங்கு நாடகம் பார்த்தேன்.

மே 5 - புதன்

மாநாட்டிற்குச் சென்றேன். சமூக மாநாட்டுடன் சனாதன தர்ம மாநாடும் நடந்தது.

மே 6 - வியாழன்

இரண்டு மாநாடுகளுக்கும் சென்றேன். சுதேசி துணி யைப் பார்த்தேன். எங்களைப் பற்றித் தீர்மானம் வந்தது. பதில். இரவில் மீண்டும் மாணவர்களின் வரவேற்பு. அதற் குப் பதில்.

மே 7 - வெள்ளி

காலையில் புறப்பட்டேன். சென்னை சேர்ந்தேன். லீக் கூட்டம். சுகுணவிலாச சபையில் அரிச்சந்திரா நாடகம். சுந்தரத்துடன் பம்பாய்க்குப் புறப்பாடு.

காந்திஜி கடிதம்.

இந்தச் சுற்றுப் பயணம் முடிந்து பம்பாய்க்குச் சென்ற பின் ஜி. ஏ. நடேசனுக்குக் கீழ்க் கண்ட கடிதத்தை காந்திஜி எழுதினர்.

அன்புள்ள ஜி. ஏ. நடேசன்,

என்னிடம் நீங்கள் காண்பித்த அசாதாரணமான அன் பிற்கு நான் எப்படி உங்களுக்கு நன்றி கூற முடியும்? இவை களையெல்லாம் நாட்டிற்காக நீங்கள் செய்ததால் நான் ஏற் றுக் கொண்டேன். நான் அதற்குத் தகுதியானவனாய் இருக்க முயற்சி செய்கிறேன். ஆம், சென்னை இன்னும் என் அபி மானத்திற்குரியதாக இருக்கிறது.

அதிக வசதிக் குறைவில்லாமல் நாங்கள் (இங்கு வந்து) சேர்ந்தோம்..... சுந்தரம் நல்ல முறையில் உருவாகி வரு கிறார். நாய்க்கர் இன்னும் ஒரு மாணிக்கமே.....திருமதி காந்தி உங்களையே சிந்தித்துக் கொண்டிருக்கிறாள்.

தயவு செய்து எனக்கு நீங்கள் தமிழ்ப் புத்தகங்கள் அனுப்பி வைக்கவேண்டும். தமிழ் படிக்கத் தொடங்கு பவர்கள், சுந்தரம் போன்ற வயது வந்தவர்கள் ஆகிய இரு சாராருக்குமான புத்தகங்கள் எனக்கு வேண்டும். டாக்டர் போப்பின் புத்தகங்களெல்லாம் எனக்கு வேண்டும். எவ்வளவு முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக இதை நீங்கள் கவனிப்பீர்களா? அந்தப் போர்வைகளையும் அனுப்பி வைப்பீர்களா?

உங்களுடைய தாயாரையும் மனைவியையும் எங்களை இன்னும் நினைத்துக் கொண்டிருக்கும் மற்ற நண்பர்களையும் நாங்கள் கேட்டதாகச் சொல்லுங்கள்.

உங்கள் உண்மையுள்ள,

எம். கே. காந்தி.

சென்னையிலிருந்து திரும்பிப் போனபின் காந்திஜி செய்த முதல் காரியம் ஆமதாபாத் நகர் சுற்றுப்புறத்தில் உள்ள கோச்ரப் என்ற கிராமத்தில் ஆசிரமம் நிறுவியதாகும். அப்போது அவருடைய ஆசிரமத்தில் இடம்பெற்ற இருபத்து ஐந்து பேர்களில் பதின்மூன்று பேர் தமிழர்கள்; மீதிப் பன்னிரெண்டு பேர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்தவர்கள். இந்தியாவிலும், காந்திஜியுடைய பொது வாழ்வின் தொடக்கக் கட்டத்தில், தமிழர்களுடைய பங்கு அதிகம் என்பதற்கு இது ஒரு சான்றாகும். ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் சத்தியம், அகிம்சை, பிரம்மச்சர்யம், நாவடக்கம், திருடாமை, சொத்துச் சேர்க்காமை, சுதேசி, உடல் உழைப்பு, அஞ்சாமை, சர்வமதசமானத்துவம், தீண்டாமை ஒழிப்பு ஆகிய பதினொரு விரதங்களை ஏற்க வேண்டுமென காந்திஜி நிர்ணயித்திருந்தார்.

ஆசிரமம் தொடக்கம்

மக்களுக்குச் சிறந்த தொண்டாற்றியதற்காக பிரிட்டிஷ் அரசு கெய்சர் - இ - இந்த் தங்கப் பதக்கத்தை 1915-ஜூனில் காந்திஜிக்கு வழங்கியது. ஆகவே, அதுவரை அவரை அது ஒரு 'எதிரியாக'க் கருதவில்லை என்பது உறுதி. சாதாரணமாக அரசாங்கத்திற்கு விரோதமானவர்கள் எனக் கருதப் பெறும் முக்கிய அரசியல் தலைவர்களை ஒரு மாநிலத்திலிருந்து மற்றோர் மாநிலத்திற்குச் சென்றால் அவர்களின் பயணம் அவ்வப்பகுதி மக்களிடையே ஏற்படுத்தும் விளைவினைக் குறித்து, மாநிலத் தலைமைச் செயலாளர்கள் இந்திய அரசின் உள்துறைக்கு அறிக்கைகள் அனுப்புவது வழக்கம். 1915, 16-ஆம் ஆண்டுகளில் காந்திஜி தமிழகம் வந்ததைக் குறித்து இத்தகைய இரகசியக் குறிப்புகள் எதுவும் அனுப்பப் பெற்றதாகத் தெரியவில்லை. இதனாலும் காந்திஜியை

"விரோதி" அல்ல :

ஓர் அரசியல் எதிரியாக அரசு அப்போது கருதவில்லை என்பது புலப்படுகிறது.

பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ், முஸ்லிம் லீக் மாநாடுகளில் காந்திஜி பங்கு கொண்டாராயினும் குறிப்பிடத் தக்க பெரும் பங்கு எதுவும் ஆற்றவில்லை.

காசி விழா

1916-ஆம் ஆண்டில் அவருடைய ஓராண்டு அரசியல் ''மௌனம்'' முடிவதற்கும் காசி இந்துப் பல்கலைக் கழகத் திறப்பு விழா விற்குச் சொற்பொழிவாற்ற வருமாறு அவரைப் பண்டித மதன்மோகன் மாளவியா அழைப்பதற்கும் சரியாக இருந்தது. இவ்விழாவிற்கு அடித்தளக்கல் நாட்ட வந்த வைசிராய் ஹார்டிஞ்ச் பிரபு, கடுமையான போலீஸ் பாதுகாப்பு என்னும் அரணுக்குள்ளேயே அங்கு வாசம் செய்தார். அநேகமாகக் காசி நகரையே போலீசார் முற்றுகையிட்டு விட்டார்களோ என்று ஐயுறும் அளவிற்கு, எண்ணற்ற போலீசார் நிறுத்தப் பெற்றிருந்தனர். இதையும், அந்த விழாவில் காணப்பெற்ற ஆடம்பரத்தையும் காந்திஜி தமது பேச்சின் முக்கிய பொருளாக எடுத்துக் கொண்டார். ஆங்கிலத்தில் கல்வி கற்றுக் கொடுப்பதனால் இந்தியாவிற்கு ஏற்படும் நட்டத்தை விரிவாக விளக்கினர். விவசாயிகளின் உழைப்பால் தான் நாம் உய்ய முடியும் என்றும், வழக்கறிஞர்கள், டாக்டர்கள், பெரிய பணக்காரர்கள் ஆகியோரால் முன்னேற்றம் வந்து விடாது என்றும் வரையறுத்துச் சொன்னார். இவைகளையெல்லாம் கூறிய பின்னர், இம்சை முறைகளின் மூலம் அரசை எதிர்ப்பவர்களைப் பற்றிக் குறிப்பிட்டு, அவர்களுடைய அஞ்சாநெஞ்சம் பாராட்டத் தக்கதுதான் என்றாலும், வெளியே வந்து அரசை எதிர்க்க அவர்கள் அஞ்சுவதற்கு வருந்தினர். ''நாங்கள் மட்டும் இவ்வாறு செய்திராவிட்டால் - சிலர் மட்டும் குண்டுகளை வீசியிராவிட்டால் - பிரிவினை இயக்கத்தைப் பொருத்த வரை நாம் அடைந்ததை அடைந்திருக்க மாட்டோம்', என்று பலாத்காரவாதிகள் என்னிடம் கூறுகிறார்கள்....'' என்று காந்திஜி கூறிக் கொண்டு போன போது, திருமதி பெசண்ட் இடை மறித்து, ''தயவு செய்து இதை நிறுத்துங்கள்'' என்றார். ஆகவே காந்திஜி அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த தர்பங்கா மன்னரை நோக்கி ''என் பேச்சை நிறுத்தி விடுமாறு நீங்கள் சொன்னால் அதற்குப் பணியத் தயாராய் இருக்கிறேன். உங்களுடைய உத்தரவை எதிர்பார்க்கி

றேன். இப்படிப் பேசுவது நாட்டிற்கோ பேரரசிற்கோ தொண்டு செய்வதாகாது என்று நீங்கள் கருதினால், நான் அதை நிறுத்திவிடத் தயார்'', என்று கூறினார். கூட்டத்தில் இருந்தவர்களோ ''பேசுங்கள், தொடர்ந்து பேசுங்கள்'' என்று சத்தமிட்டார்கள். தலைவரும் காந்திஜியின் பேச்சை நிறுத்தச் சொல்லவில்லை. ''நீங்கள் எதைக் கூற வருகிறீர்கள் என்பதைத் தயவு செய்து விளக்குங்கள்'' என்று சொல்லி விட்டார். அதன்பேரில், காந்திஜி தொடர்ந்து பேசினாரோ இல்லையோ மறுபடியும் குறுக்கீடு வந்தது. கூட்டத்தில் இருந்தவர்கள் அமைதி இழந்து விடுவார்கள் என்று கருதிய காந்திஜி, ''நண்பர்களே, இந்தக் குறுக்கீட்டிற்காக வருந்தாதீர்கள். பேச்சை நான் நிறுத்த வேண்டும் என்று திருமதி பெசண்ட் கூறுவதற்குக் கூட அவர் இந்தியாவை நேசிப்பது தான் காரணம்'' என்று கூறி அவர்களை அமைதிப்படுத்தினார். மறுபடியும் அவர் தொடர்ந்து பேசினார். ஆனாலும் அவர் பேச்சை முடிக்கும் முன்பு மறுபடியும் குறுக்கீடு ஏற்பட்டது; மேடையிலிருந்து சிலர் எழுந்து நடந்தார்கள்; பெரிய குழப்பமும் கூச்சலும் உண்டாயிற்று; தலைவரே மேடையைவிட்டு எழுந்து போய்விட்டார்!

வாக்குவாதம்

இந்த நிகழ்ச்சியின் எதிரொலியாக, காந்திஜிக்கும் திருமதி பெசண்டிற்கும் தொடர்ந்து கடுமையான வாக்குவாதம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. காந்திஜியின் பேச்சைத் திருமதி பெசண்ட் வன்மையாகக் கண்டித்துப் பேசினார்; அறிக்கைகளும் விட்டார். புனா, ஹரித்வார், கராச்சி ஆகிய இடங்களுக்குச் சென்று விட்டுச் சென்னைக்கு மீண்டும் காந்திஜி வந்தபோது பெசண்டிற்கும் காந்திஜிக்கும் ஏற்பட்ட இந்த மோதலின் காரணமாகச் சென்னையில் என்ன எதிரொலி இருந்தது என்பது குறித்துச் சென்னை அரசு இந்திய அரசிற்கு அனுப்பிய அறிக்கையில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தது: ''காசியில் காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவையும் திருமதி பெசண்ட் அந்தக் கூட்டத்தில் குறுக்கிட்டதையுங் குறித்து (சென்னை)ப் பத்திரிகைகள் மிகுந்த அக்கறை காட்டியுள்ளன. திருமதி பெசண்டும் பல அறிக்கைகள் விடுத்திருக்கிறார்; இவை அநேகமாக ஒன்றுக்கொன்று முரணாக இருக்கின்றன. அவர் கூறுவது நூற்றுக்கு நூறு உண்மையாக இருக்கும் என்று (இவைகளிலிருந்து) புலப்படவில்லை. அவருடைய அறிக்கை

யைத் திரு காந்தி மறுத்திருக்கிறார். இங்கு வெளியாகும் பத்திரிகைகள் பொதுவாகத் திருமதி பெசண்டை எதிர்க்கின்றன. அவருக்கிருந்த செல்வாக்கெல்லாம் கணிசமாகக் குறைந்துவிட்டதுபோல் தோன்றுகிறது.''

திடுக்கிடும் செய்தி :

காசி நிகழ்ச்சி குறித்து திருமதி பெசண்ட் நடத்திய ''நியூ இந்தியா'' சஞ்சிகையில் வெளிவந்த ஒரு செய்தி மிகவும் பயங்கரமாய் இருந்தது. ''நமது தனிச் செய்தி யாளர்'' அனுப்பியது என்று கூறி ''நியூ இந்தியா'' வெளியிட்டிருந்த இச்செய்தி கீழ்க்கண்டவாறு கூறியிருந்தது.

காந்திஜியின் கூட்டம்

தீவினைப் பயனை நிகழ்ச்சி

கூட்டத்திலிருந்து மன்னர்கள் வெளியேற்றம்

பெருந்தீவினைப் பயனை நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியானது கூட்டத்தின் அழகான முடிவையே சீர்கெடுத்துவிட்டது. தென்னப்பிரிக்காவில் காட்டிய உயர்ந்த வீரத்தால் அனைத்து இந்தியாவின் அன்பையும் மரியாதையையும் கவர்ந்துள்ள காந்திஜி, அரசியல் விவகாரங்களில் ஒரு அப்பட்டமான குழந்தையாக இருக்கிறார். அவர் தீய கருத்துடன் பேசுவதில்லையென்பதைப் புரிந்து கொள்ளாத யாரும், மிகப் பெரிய தப்பர்த்தம் கொள்வதற்கு இடமளிக்கும் வகையில் பேசி விடுகிறார். இவர் அன்று அராஜகம், இம்சை ஆகியவை பற்றி மிகவும் தவறான பொருள் கொடுக்கக்கூடியவாறு பேசிவிட்டார். ஒரு அரசியல் வாதி இவ்வாறு பேசியிருந்தால் அவர் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியிருப்பார். ஆனால் காந்திஜி தவறான எண்ணத்துடன் இவ்வாறு பேசியிருக்கமாட்டார் என்பதை உணர்ந்தவர்கள், அவருடைய பேச்சை, அறியாத, புரியாத உலகில் நடமாடும் ஒரு கற்பனாவாதியின் கனவு என்று முடிவு செய்துகொள்வார்கள்.

அன்னிபெசண்ட் குறுக்கிட்டார்

''இவ்வாறு காந்திஜி பேசிக் கொண்டு போன போது, அதைத் தடுத்து நிறுத்துமாறு, தலைமை வகித்த தர்பங்கா மன்னரிடம் திருமதி அன்னிபெசண்ட் கூறினர்.

காந்தி தொடர்ந்து பேச அனுமதி

ஆனல் காந்திஜி தமது பேச்சைத் திருப்பிப் பெறப் போகிறார் என்றே அல்லது அதற்கு விளக்கங் கூறப் போகிறார் என்றே கருதிய தர்பங்கா மன்னர் அவர் தொடர்ந்து பேச அனுமதித்தார்.

பண்டித மாளவியா மன்னிப்புக் கோருகிறார்

முடிவாக எல்லா மன்னர்களும் கூட்டமாக எழுந்து சென்று விட்டார்கள். இத்தவருன பேச்சுக்காகக் கூட்டத் தினரிடம் பண்டித மதன் மோகன் மாளவியா மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அராஜகத்தைக் கண்டித்தே மாணவர்களுக்குச் சொற்பொழிவாற்றியதாக காந்திஜி தம்மிடம் சொன்னதாய் மாளவியா கூறினர். ஆனல் எல்லோருக்கும் வியப்பளிக்கக் கூடியவாறு, அராஜகத்திற்கு அனுதாபமாகவும், அதை ஆதரிக்கக் கூடிய முறையிலும் தான் அவருடைய பேச்சு இருந்தது.

தமிழர் கோபம்

இச்செய்தி தந்தி மூலம் அனுப்பப் பெற்றது. செய்தியைப் படித்த தமிழகப் பெருமக்கள் கொதித் தெழுந்தனர். காந்திஜியை அரசியலில் ஒரு குழந்தை என்று குறிப்பிட்டது பெருந்தவ றென்று அவர்கள் கருதினர்கள். ஒரு வேளை இச்செய்தியை அன்னிபெசண்டே "விசேட நிருபர்" என்று போட்டு அனுப்பியிருக்கலாம் என்றும் சிலர் கருதினர்கள்.

ராஜாஜி வருகிறார்

இந்தக் கட்டத்தில் தான் சக்கரவர்த்தி இராச கோபாலாச்சாரியாரின் அரசியல் வரலாறு என்னும் கிளைநதி காந்திஜியின் அரசியல் வரலாறு என்னும் பெரு நதியுடன் வந்து கலந்தது. தென்னைப் பிரிக்காவில் காந்திஜி மேற்கொண்டு வெற்றி வாகை சூடிய போராட்டங்களைப் பற்றி ராஜாஜி எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தார். ஆனலும் அவருக்கும் காந்திஜிக்குமிடையே கடிதப் போக்குவரத்தோ வேறு தொடர்போ இல்லை. காந்திஜியின் வழி முறைகளில் ராஜாஜிக்குத் தனிப்பற்றும் பாராட்டுதலும் இருந்தது. ஆகவே அந்தத் தென்னைப்பிரிக்க வீரரைக் காசிக் கூட்டத்தில் திருமதி அன்னிபெசண்ட் அலட்சியம் செய்தது அவருக்கு மிகுந்த மனவேதனை அளித்திருக்கிறது. அவர் "இந்து"

நாவிதழுக்கு பெசண்டின் செயலைக் கண்டித்து ஒரு கடிதம் (12-2-16-ஆம் தேதி இதழில்) எழுதினர்.

இவரைப் போன்று ஏராளமான பேர் பெசண்டைக் கண்டித்துப் பல்வேறு நாளிதழ்களுக்குங் கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்கள். சிலர் தனிப்பட்ட காந்திபோல் முறையில்கூடப் பெசண்டைக் கண்டித்து "குழந்தை" தார்கள். கஸ்தூரி ரங்க ஐயங்கார் எழுதியிருந்தார்: "மன்னரின் விசுவாசம் மிகுந்த அந்தக் குடிமகன், கண்ணியமிக்க தேசியவாதி தொண்டைக் குறித்து நுணுகி அறிந்தவன் என்ற முறையில், அந்தப் பெரிய சபையில் மறுப்புக்குரிய எந்தக் கருத்தையும் காந்திஜி கூறியிருப்பார் என்று ஒரு கணங்கூட என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை.... பெசண்டிற்கு காந்திஜியை நன்கு தெரியும். இந்த இந்தியப் பெருமகனைப் பற்றி ஏற்கனவே அவர் புகழ்ந்து பேசியிருக்கிறார். ஆகவே அவர் தமது விவேகத்தையும் முன்யோசனையையும் பயன்படுத்தியிருக்க வேண்டும். காந்திஜி என்ன முடிவிற்கு வர விரும்புகிறார் என்பதை அவரால் உண்மையிலேயே புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் காந்திஜி தமது பேச்சை முடிக்கும் வரை அவர் பொறுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் 'கடும் நடவடிக்கை' மேற்கொண்டிருக்கிறார்... இவ்வாறு நடந்து கொண்டதேன் என்பதைக் குறித்துப் பொதுமக்களுக்கு அவர் விளக்கிக் கூறக் கடமைப் பட்டிருக்கிறார்.... காந்திஜியை அரசியலில் ஒரு குழந்தை என்று அவர் கூறுகிறார். அவருடைய கருத்தையும், 'பிரிட்டனும் இந்தியாவும் பெற்றுக் கொடுத்த மிகச்சிறந்த அரசியல் வல்லுநர்களான கிளாட்ஸ்டன், கோகலே ஆகியோருடன் ஒப்பிடத்தகுந்தவர்' என்று வங்காள அரசு நிருவாகக் குழு உறுப்பினரான லியான் கூறியதையும் ஒப்பிட்டுப் பார்ப்பது சுவையாக இருக்கும். இந்தியாவின் விடுதலையைப் பெறுவதற்கு வன்முறைகளைக் கையாள வேண்டுமென்று ஒரு போதும் காந்திஜி கூறவில்லை; ஒருபோதுங் கூறவும் மாட்டார். காந்திஜியைப் போன்று இன்னும் சில "குழந்தைகள்" இருந்தால், திருமதி பெசண்டைக் காட்டிலும், ஆயிரக் கணக்கான அரசியல்வாதிகளைக் காட்டிலும், அவர்கள் இந்தியாவின் சுதிமோட்சத்தை வழங்கி விடுவார்கள். திருமதி பெசண்டின் இந்தக் கொடுஞ்செயலைக் கண்டு பொது மக்கள் ஆத்திரமடைந்திருக்கிறார்கள்." இவ்வாறு ஒரு

புறம் இந்தியர் பத்திரிகைகளும் இந்தியப் பெருமக்களும் பெசண்டின் செயலைக் கண்டித்து வந்தபோதிலும் மற்றொரு புறம் ஆங்கிலோ இந்தியப் பத்திரிக்கைகள் பெசண்டை ஆதரித்து எழுதிக் கொண்டிருந்தன. இது ஆங்கில ஆட்சிக் காலத்தில் இயல்புதான்.

மாளவியா மறுப்பு

இந்தச் சமயத்தில் மாளவியாவே ''நியூ இந்தியா'' பத்திரிகைக்கு ஒரு தந்தி அனுப்பினார். ''அராஜகத்திற்கு அனுதாபமாகவும் அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய வழியிலும் காந்திஜி பேசினார் என்று நான் கூறியதாக ''நியூ இந்தியா''வில் வெளியான செய்தி தவறு. பெருமை பொருந்திய விருந்தினர்கள் சிலருக்கு வருத்தம் ஏற்படும் முறையில் காந்திஜியின் பேச்சுத் திரும்பியது. இதற்காக நான் வருந்தினேன். ஆனாலும் அவருடைய நோக்கம் மாணவர்கள் என்றென்றும் அராஜகவாதிகளிடமிருந்து விலகியிருக்க வேண்டுமென எச்சரிப்பது தான்'', என்று அத் தந்தியில் மாளவியாஜி விளக்கியிருந்தார்.

ராஜாஜிக்கு பதில்

''நியூ இந்தியா''வில் செய்தி வெளியிடப் பெற்றிருந்த முறைக்கு ராஜாஜி எதிர்ப்புத் தெரிவித்திருந்ததற்கு ''நியூ இந்தியா'' ஒரு தலையங்கம் வெளியிட்டு பத்திரிகையாளர்களின் கஷ்டங்களை விளக்கி காசியில் பெசண்ட் இருந்தபோது, சென்னையில் வெளியான தந்திகளுக்கோ தலைப்புக்களுக்கோ அவரைக் குற்றம் சாட்டக்கூடாது என்று கேட்டுக்கொண்டிருந்தது. அதற்கு ராஜாஜி எழுதிய மறுமொழியில், ''இந்தத் தலைப்புகள் ஒருபுறம் இருக்கட்டும். அன்னிபெசண்டோ (அல்லது அவருடைய தனிச் செய்தியாளரோ) ''அரசியலில் ஒரு அப்பட்டமான குழந்தை'' என்று காந்திஜிக்குப் பட்டங்கொடுக்க அருகதை உடையவர்களா? ''காந்திஜி மிகவும் தவறான பொருள் கொடுக்கக் கூடியவாறு பேசக்கூடியவர் - ஓர் அரசியல் வாதி அவ்வாறு பேசினால் கடும் கண்டனத்திற்கு உள்ளாவார்'' என்ற தந்திச் செய்தியை அச்சிட அவர்களுக்கு அருகதை உண்டா? மேலும், காந்திஜியை அறியாத, புரியாத உலகில் நடமாடும் கற்பனைவாதி என்று ''நியூ இந்தியா'' கருதுவதை எதிர்க்க இந்தியர்களாகிய எங்களுக்கு உரிமை உண்டு. இத்தகைய வாசகங்களுக்குக் காரணம் என்ன

வென்று தேடிப்பிடிக்குமாறு மக்களே இச்செய்திகள் தூண்டியிருக்கின்றன,'' என்று இடித்துக் கூறி மேலும் சொன்னார்:

என்ன தண்டனை?

''இப்போது வேறொன்று புதிதாகக் கூறப்படுகிறது. காந்திஜியைப் பற்றிய தந்திச் செய்தியைப் போடவேண்டாமென்று அன்னிபெசண்ட் தந்தி அடித்ததாகவும் தற்போது ''நியூ இந்தியா'' அரசாங்க அனுதாபத்தைப் பெற்ற பத்திரிகையாக இல்லாததால் அவருடைய தந்தி உரிய காலத்தில் கிடைக்க முடியாமற் போய்விட்டது என்றும் அதனால் அவர் ஏற்காத ஒரு செய்தியை வெளியிட நேர்ந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.....இந்தத் தர்ம சங்கடமான நிலைக்கு அன்னிபெசண்டை ஆளாக்கிய அந்தத் தனிச் செய்தியாளருக்கு அவர் என்ன தண்டனை அளித்தார்?..... அவரே இச்செய்தியை முதலில் எழுதிவிட்டு, அல்லது அங்கீகரித்து விட்டு, பின்னால் காலங்கடந்த நிலையில் அதை நிறுத்த விரும்பினாரா?''

காந்திஜி வந்தார்

இவ்வாறு காசி நிகழ்ச்சியைப் பற்றி வாதப் பிரதிவாதங்கள் கடுமையாக நடந்து கொண்டிருந்த ஒரு கட்டத்தில் தான், காந்திஜி சென்னைக்கு வந்து சேர்ந்தார். இம்முறை அவர் இங்குத் தங்கியது 5 நாட்கள் தாம். 1916 பிப்ரவரி 13 ஆம் தேதி சென்னைக்கு வந்த காந்திஜி 17-ஆம் தேதி இரவு இங்கிருந்து புறப்பட்டு விட்டார். கோகலேயின் நினைவுநாளை முன்னிட்டுப் புனலில் 19-ஆம் தேதியன்று ஒரு பொதுக் கூட்டத்தில் அவர் பேச வேண்டியிருந்ததால், 17-ஆம் தேதியே இங்கிருந்து புறப்பட்டு விட்டார். அவர் சென்னை நகரத்தைத் தவிர தமிழகத்தில் வேறு எங்கும் போகவும் இல்லை. தென்னப்பிரிக்க வீரராக 1915-இல் வந்த போது அவருக்கு அளிக்கப் பெற்றதைப் போன்ற மாபெரும் வரவேற்பு இம்முறை அவருக்கு அளிக்கப் பெற்றதாகக் கூறமுடியாது. ஆனாலும், இம்முறையும், அவர் பங்கு கொண்ட நிகழ்ச்சிகளில் கூட்டத்திற்கு - அதிலும் குறிப்பாக மாணவர்கள் கூட்டத்திற்குக் - குறைச்சல் இல்லை. இங்கு அவர் ஈடுகொடுக்க வேண்டியிருந்த பொது விவகாரங்களுடன் காசி நிகழ்ச்சியும் சேர்ந்து கொண்டது. ஏனெனில், சென்னை, தமிழகத்தின் தலைநகரம் என்பதுடன் அன்னிபெசண்டின் தலைநகரமும் அல்லவா?

13-2-16

டில்லி எக்ஸ்பிரசில், சோரப்ஜி ரஸ்டம்ஜியுடன் (சாத்விக எதிர்ப்பு இயக்க முன்னணித் தலைவர்களில் ஒருவராகிய பார்சி ரஸ்டம்ஜியின் குமாரர் இவர்) காந்திஜி சென்னை மாநகருக்கு வந்து சேர்ந்தார். சீனிவாச சாஸ்திரியும் இந்திய ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த எச். அனுமந்தராவும் ஏராளமான பொதுமக்களும் அவரை வரவேற்க இரயில் நிலையத்திற்குச் சென்றிருந்தார்கள். காந்திஜி எந்த இரயிலில் வருகிறார் என்ற செய்தி யாருக்கும் உறுதியாகத் தெரியவில்லை. ஆகையால், ஒவ்வொரு இரயிலுக்கும் காத்திருந்து ஏமாற்றமடைந்த பெரும்பாலான மக்கள் களைப்புற்று வீட்டிற்குப் போய்விட்டார்கள். அதிகாலையிலிருந்து ஆவலோடு காத்திருந்த மாணவர்களும் வீடு திரும்பி விட்டார்களாதலால், காந்திஜி வந்திறங்கிய போது இரயில் நிலையத்தில் அதிகக் கூட்டம் இல்லை. வந்திருந்த பெரு மக்களுடன் காந்திஜி சிறிது நேரம் அளவளாவி விட்டு காரில் திருமதி ஓயிட்ஹெட் இல்லத்திற்குச் சென்றார். தேனாம்பேட்டையில் சென்னை பிஷப்இல்லத்தில் அத்தம்பதிகளது விருந்தினராக காந்திஜி தங்கியிருந்தார். அவர் பிற்பகலில் வந்து சேர்ந்து விட்டதை அறியாத சிலர் மாலை 6-மணி இரயிலில் அவர் வருகிறாரா என்று பார்ப்பதற்காகச் சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு வந்திருந்தனர்.

இன்று மாலை எஸ். சீனிவாச ஐயங்காரும் ஜி. ஏ. நடேசனும் மற்றும் சிலரும் மேற்கண்ட இல்லத்தில் அவரைச் சந்தித்துப் பேசினார்கள். அவர் வருகை பற்றிய செய்தி எவ்வாறு வெளியிடப் பெற்றது என்பதை இப்போது நாம் அறிந்து கொள்வது ருசிகரமாயிருக்கும். சென்னைக்கு அவர் வந்து சேர்ந்த செய்தி ''சுதேச மித்திரனில்'' பிப்ரவரி 14-ஆம் தேதி இதழின் 3-ஆம் பக்கத்தில் இரண்டாவது பத்தியில் 8 செய்திகளுக்கும் கீழே 9 வது செய்தியாக **சென்னையில் எம். கே. காந்தி** என்ற ஒருபத்தித் தலைப்பில் அதுவும் சிறிய (12 பாயிண்ட்) தலைப்பில் வெளிவந்திருக்கிறது. அக்காலத்தில் பெரிய தேசிய நாளிதழாக விளங்கிய சுதேசமித்திரனே இவ்வாறு தான் அவர் வருகை பற்றிய செய்தியை வெளியிட்டதென்பதை நாம் கவனிக்க வேண்டும். அவருடைய

இரயில் நிலையத்தில்

செய்திச் சிறப்பு

வருகைக்கு எந்த அளவு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது என்பதை இது ஓரளவு காட்டியது.

14-2-16

சென்னை கிறித்தவப் பாதிரிமார்கள் பொதுவாக இந்தியர்களின் குறிக்கோளுக்கு அனுதாபம் தெரிவித்தார்கள். ஆனால் சுதேசி இயக்கம் மட்டும் அவர்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. ஆகவே, காந்திஜி வாயாலேயே அதைப்பற்றி அறிந்து கொள்ள அவர்கள் விரும்பினார்கள். இதற்காக வெப்பேரியில் உள்ள ரெவ. டபிள்யூ. எல். பெர்கூசன் இல்லத்தில் 'மிஷனரிகள் மாநாடு' ஒன்று மறுநாள் இரவு நடைபெற்றது. காந்திஜி அங்கு நிகழ்த்திய சொற்பொழிவானது ''சுதேசி''யைப் பற்றிய அவருடைய மிகச் சிறந்த சொற்பொழிவுகளில் ஒன்றாகக் கருதப் பெறுகிறது. இம்மாநாட்டில் பங்கு கொண்டவர்கள் ஒருவருக்கொருவர் மனம் விட்டுக் கருத்துப் பரிமாறிக்கொள்ள விரும்பியதால் பத்திரிகையாளர்கள் கூட அனுமதிக்கப்பெறவில்லை. இதன் காரணமாக, இச்செய்தி அந்தக் காலத்தில் அதற்கு உரிய முக்கியத்துவத்தைப் பெறவில்லை. நல்ல வேளையாக, ஜி. ஏ. நடேசன் ''காந்திஜியின் பேச்சும் எழுத்தும்'' என்ற நூலில் இச்சொற்பொழிவின் முழு விவரத்தையும் வெளியிட்டிருந்தார். இச் சொற்பொழிவில் காந்திஜி கூறியிருந்த முக்கியமான கருத்துக்களாவன:

கிறித்தவர் ஏற்பாடு

சொல்லின் பொருள்

''தூரத் தொலைவில் இருப்பவர்களைக் காட்டிலும் நமது பக்கத்தில், சுற்றுப்புறத்தில் இருப்பவர்களுடைய சேவையை நாம் பயன் படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் நம் சேவையை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்றும் நமக்குள் ஓர் உணர்வு இருக்கிறதே அதுதான் சுதேசி என்பது. ஆகவே மதத்தில் சுதேசி என்பது என்ன? நான் என்னுடைய பக்கத்தில் உள்ள சமயச் சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அதாவது, என்னுடைய பூர்வமதத்தினராகவே இருக்க வேண்டும். அது குறைபாடுள்ளதாக இருந்தால் அந்தக் குறைபாடுகளைப் போக்கத் தொண்டாற்ற வேண்டும். அரசியலில் சுதேசி என்பது என்ன? எனது உள்நாட்டு அமைப்புகளை நான் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

"பொருளாதாரத்தில் சுதேசி என்பது என்ன? எனது பக்கத்தில் இருக்கிறார்களே அவர்கள் உற்பத்தி செய்த பொருள்களையே நான் பயன்படுத்தவேண்டும். பொருளாதார இப்பொருள்களை உற்பத்தி செய்யும் தொழில் சுதேசி கள் குறைபாடுள்ளவையாக இருந்தால், அவைகள் அக்குறைபாடுகளைப் போக்கித் திற னுடன் செயலாற்ற நான் தொண்டாற்றவேண்டும். இத் தகைய சுதேசியை நாம் நடைமுறையில் கடைப்பிடிக்கத் தொடங்கி விட்டால், அது பொற்காலத்திற்கு வழிகோலும். ஏசு ஆண்டதாகக் கூறப்படும் பொற்காலத்தை நம்முடைய வாழ்நாளில் அடைய முடியும் என்று நாம் எதிர்பார்க்கி றோம்? ஆனாலும், அதை அடைவதற்கான முயற்சியை நாம் விட்டு விடுவதில்லை அல்லவா? அதேபோன்று இன்னும் பல தலைமுறைகளுக்கு நாம் நூற்றுக்கு நூறு சுதேசியை அடைய முடியாவிட்டாலுங்கூட, நமது முயற்சி யைக் கைவிடாது இருப்போமாக!

"ஆகவே, நான் கூறுவதில் ஏதாவது பொருள் இருப்ப தானால் அதில் ஒன்றைக் கிறித்தவப் பாதிரிமார்கள் முக்கிய மாகக் கவனிக்கவேண்டும். இந்தியாவில் உள்ள கிறித்தவர் கிறித்தவமத அமைப்புகள் இதுவரை செய் கடமை துள்ள பல காரியங்களுக்கும் இப்போது செய்து கொண்டிருக்கும் காரியங்களுக்கும் இந்த நாடு எவ்வளவோ கடன் பட்டிருக்கிறது. ஆனாலும், அவர் கள், மதமாற்றம் செய்வதைக் கைவிட்டு விட்டு, தார்மிகப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்வதன் மூலம் தூய கிறித்தவ சமய உணர்வுக்கு இன்னும் சிறந்த முறையில் சேவை செய்ய முடியும்....உள்ளப்பூர்வமாகவும் உரிய அடக்கத்துடனுமே இதை நான் கூறுகிறேன். என் இதயத்தை ஆதிக்கம் செலுத்துவதில் பகவத்கீதையுடன் மலைப்பிரசங்கம் சமத்துவம் வகிக்கிறது.

"இது மதம் குறித்தது. இதனுடன் நான் நிற்கவில்லை. அரசியல் விவகாரங்களிலும் உங்களுடைய உதவியை நாடு கிறேன். அரசியலுக்கும் சமயத்திற்கும் பஞ்சாயத்து, தொடர்பே இல்லை என்று கூறப்படுவதில்எனக்கு சாதி நம்பிக்கை இல்லை. சமயத்துடன் தொடர்பு இல்லாத அரசியல் என்பது பூமிக்குள் புதைக்க வேண்டிய பிணந்தான்...சுதேசி உணர்வுடன்தான் நான்

உள்நாட்டு அமைப்புகளைப் போற்றுகிறேன். கிராமப் பஞ்சாயத்துக்கள் என்மனதைக் கவருகின்றன. இந்தியா உண்மையில் ஒரு குடியரசு நாடேதான். அதன் காரணமாகத்தான் இதுவரை ஏற்பட்ட அதிர்ச்சிகளிலிருந்தெல்லாம் அது பிழைத்திருக்கிறது. மன்னர்கள் வரிவசூலித்ததுடன் சரி; மக்களுடன் அவர்களுக்குத் தொடர்பு இல்லை....சமுதாயத்தின் சமய சம்பந்தமான தேவைகளையெல்லாம் சாதி என்னும் அமைப்பு நிறைவு செய்து வந்திருக்கிறது. அரசியல் தேவைகளைக் கூட அது நிறைவு செய்தது. சாதி முறையின் மூலம் கிராமவாசிகள் தங்களுடைய உள்நாட்டு விவகாரங்களைத் தீர்த்துக் கொண்டது மட்டுமல்லாமல் ஆளுவோரின் ஆக்கிரமிப்பையும் சமாளித்தனர்.

மொழி

''படித்தவர்களாகிய நமக்கு, ஒரு வெளிநாட்டு மொழி மூலம் கல்வி புகட்டப்பெற்றது. இக்கல்வியால் பாமர மக்களிடையே எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. பாமரமக்களின் பிரதிநிதிகளாக இருக்க நாம் விரும்புகிறோம். ஆனாலும் தோல்வியடைகிறோம்.... கடந்த ஐம்பது ஆண்டுகளாக நம்முடைய தாய்மொழியில் நமக்குக் கல்வி கற்றுக் கொடுக்கப் பெற்றுவந்திருந்தால் நமக்கு மூத்தவர்களும் நமது வேலையாட்களும் நமது சுற்றுப்புறத்தில் உள்ளவர்களும் நமது அறிவில் பங்கு பெற்றிருப்பார்கள். இராமயணத்தையும் மகாபாரதத்தையும் போல ஒவ்வொரு வீடும் போஸ், ரே ஆகியோரின் கண்டுபிடிப்புகளை அறிந்திருக்கும். தாய்மொழி மூலம் பல்வேறு கல்விகளும் அளிக்கப்பெற்றிருந்தால் அவை இப்போது வியப்படையக் கூடியவாறு நன்கு வளம் பெற்றிருக்கும். கிராம சுகாதாரச் சிக்கல் எந்தக் காலத்திலோ தீர்ந்திருக்கும். கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய தனி வழியில் உயிர்ச் சக்தியோடு விளங்கியிருக்கும். இந்தியா, தனது தேவைகளுக்கு ஏற்ற ஒரு வகைச் சுயாட்சியை அனுபவித்துக் கொண்டிருக்கும்.

''இப்போது சுதேசியின் கடைசிப் பிரிவுக்கு வருவோம். பொருளாதாரத் துறையிலும் தொழில் துறையிலும் நமக்கு நாசம் விளையக்கூடிய அளவு சுதேசியிலிருந்து நாம் விலகி நிற்கிறோம். இன்று பொதுமக்களை வறுத்தெடுக்கும் வறுமைக்கு முக்கியகாரணம் இதுவே. வெளிநாட்டிலிருந்து ஒரு

பொருளைக் கூட நாம் வாங்காதிருந்தால், இன்று இந்தியாவில் பாலுந் தேனும் பெருக்கெடுத்தோடும்.... சுதேசி தத்துவம் சரியான தத்துவமாக இருந்தால், வறுமைக்குக் நமக்கு எவ்விதத் தீங்குமில்லாமல் லங்காஷயர் காரணம் ஒதுங்கியிருக்க முடியும். ஆங்கிலேயரைப் பழி வாங்குவதற்காகத் தொடங்கப் பெற்ற ஒரு பகிஷ்கார இயக்கமாக சுதேசி இயக்கத்தை நான் கருதவில்லை. எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு சமயக் கோட்பாடாகவே கருதுகிறேன்.

சுதேசித் தத்துவத்தை நாம் கடைப்பிடிப்பதாலுல், நமக்குத் தேவையான பொருள்களை உற்பத்தி செய்து அளிக்கக் கூடியவர்கள் பக்கத்தில் இருக்கிறார் பக்கத்தில் களா என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும். உள்ளவர்கள் நம் சுற்றுப் புறத்தில் உள்ளவர்களிலேயே நல்ல வேலைக்காகத் தேடிக் கொண்டிருப்பவர்கள் இருக்கிறார்களென வைத்துக் கொள்ளுங்கள். அவர்களுக்கு இப்பொருள்களை உற்பத்தி செய்யும் முறை தெரியாவிட்டால், நாம் அவர்களுக்கு அதைக் கற்பித்துக் கொடுக்க வேண்டும். அப்போது ஒவ்வொரு கிராமமுமே தன்னிறைவுள்ள ஒரு அமைப்பாகிவிடும். ஒரு கிராமம் தன்னுல் உற்பத்தி செய்ய முடியாத பொருள்களை மட்டுமே பிற கிராமங்களிலிருந்து வாங்கலாம்.

"சுதேசிக்கு இன்னும் ஒரு மறுப்பு இருக்கிறது, அதற்கும் நான் மறுமொழி கூறிவிடுகிறேன். இது சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட தத்துவம் என்றும் சுயநலம் நாகரிக உலகத்திற்குப் பொருந்தாது என்றும் அடிப்படையா? இதை எதிர்ப்பவர்கள் கூறுகிறார்கள். அவர்களுடைய கருத்துப்படி, சுதேசியைக் கடைப்பிடிப்பது காட்டுமிராண்டித்தனத்திற்குத் திரும்புவதாகும். ... ஆனுல், இது தான் அடக்கத்திற்கும் அன்பிற்கும் உடன்பாடான தத்துவம் என்று நான் வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். என்னுடைய குடும்பத்திற்கே நான் தொண்டாற்ற முடியாத போது, உலகம் முழுவதற்கும் தொண்டாற்றக் கிளம்புவது அதிகப் பிரசங்கித்தனமாகும். இதைக் காட்டிலும் என்னுடைய குடும்பத்தில் முழு மனதான கவனம் செலுத்தி, அதன் மூலம் நாடு முழுவதற்குமே, ஏன், மனித சமுதாயம் முழுவதற்குமே தொண்

டாற்றுவதை உணர்வது சிறந்ததாகும்... (இதைப் போலவே) சுதேசி வாழ்க்கைத் திட்டத்தில் நான், மற்ற நாடுகளையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு என்னுடைய நாட்டிற்கு மட்டும் சேவை செய்வது போல் தோன்றும். ஆனாலும் நான் வேறு எந்த நாட்டிற்கும் தீங்கு செய்வ தில்லை. ஒரு வகையில் என்னுடைய தேசபக்தி எனது நாட்டிற்கு மட்டுமாக இருந்தாலும், மற்றொரு வகையில், வேறு எந்த நட்டுடனும் போட்டிக்குச் செல்லாததாலும் விரோத உணர்ச்சி கொள்ளாததாலும் என்னுடைய சேவை உலகம் முழுவதற்குந் தான். ஆகையால் அஹிம்சையை யும் அன்பையுங் கடைப் பிடிப்பதற்கு இதுவே சரியான திறவு கோல்.''

'முடிவான சொல்'

''மகாத்மா''வின் வரலாற்றைப் பிற்காலத்தில் எழுதிய வெண்டுல்கார், இந்தச் சொற்பொழிவு சுதேசி பற்றிய 'முடிவான சொல்' என அந்நூலில் குறிப்பிட் டுள்ளார். அவ்வளவு அழகான, சிறந்த, திட்டவட்டமான சொற்பொழிவு இது. காந்திஜி தமது முக்கியமான சொற்பொழிவு களையெல்லாம் எழுதிப் படிப்பதுதான் வழக்கம். அதிலும் (கிறித்தவமதப் பாதிரிமார்கள் எல்லோரும் தாங்கள் சுதேசி யத்தைப் பற்றித் தனியாக நன்கு அறிந்து கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொண்டதாலும் அவர்கள் அனைவரும் படித்தவர்கள், விவரம் அறிந்தவர்கள் என்பதாலும்) இதை ஒரு நல்ல ஆராய்ச்சிக் கட்டுரை போன்று அவர் எழுதிக் கொண்டு வந்திருக்கிறார்.

15-2-16

காலை வரவா?

ஜி. ஏ. நடேசனுடைய கம்பெனிக் கட்டிடத்தில், மாணவர்களைச் சந்திப்பதற்கு ஒரு நேரத்தை காந்திஜி நிர்ண யித்திருந்தார். அதன்படி 15-ஆம் தேதியன்று விக்டோரியா ஹாஸ்டல் மாணவர்கள் சிலர் அவரைச் சந்தித்துத் தங்களுடைய விடுதிக்கு அவர் வரவேண்டுமெனக் கேட்டுக் கொண்ட னர். இவ்வாறு சென்ற குழுவினரில் பின்னர் பெயர் பெற்ற டாக்டராக மதுரையில் விளங்கிய பி. என். இராமசுப்ர மணியம் ஒருவர். அவர் அப்போது ஒரு மாணவராக இந்த விடுதியில் தங்கியிருந்தார். விடுதிக்கு எந்நேரத்தில் வர வேண்டும் என்று மாணவர்களிடம் காந்திஜி கேட்டார்.

மாணவர்களின் பிரதிநிதி : நீங்கள் விரும்பும் நேரத்தில் வரலாம்.

காந்திஜி :- நாளை அதிகாலையில் நான்கு மணிக்கு நான் வருகிறேன்.

வந்திருந்த கல்லூரி மாணவர்களுக்கு இது ஒரு பெரிய அதிர்ச்சியாக இருந்தது.

''ஒரு வேளை மாலை 4 மணி என்று சொல்வதற்குப் பதிலாக...'' என்று அவர்கள் இழுத்தார்கள்.

காந்திஜி :- இல்லை, காலை 4-மணி தான்.

மாணவர் பிரதிநிதி :- அப்போது யாரும் விழித்திருக்க மாட்டார்களே !

காந்திஜி :- அப்படியானால், நான் விரும்பும் நேரத்தில் வரலாம் என்று ஏன் கூறினீர்கள் ? திட்டமாக இன்ன நேரத்தில் நான் வரவேண்டும் என்று சொல்லலாமே ?

16-2-16

மாணவர் அறை

கடைசியாகக் காலை 5-30 மணிக்கு காந்திஜி வருவ தென்று முடிவாயிற்று. அதன்படி அவரும் விடுதிக்கு வந்து சேர்ந்தார். அங்கு சமையல், சாப்பாட்டுப் பிரிவுகளில் ஸ்மார்த்தா, ஐயங்கார், ஆந்திரம், கன்னடம் என்னும் பல்வேறு பிரிவுகள் இருந் ததைப் பார்த்து அவர் வியப்படைந்ததுடன் மாணவர்களை இலேசாகக் கண்டிக்கவும் செய்தார். பின்னர் அவர் உணவு விடுதியைச் சுற்றிப் பார்த்துக் கொண்டுவந்த போது, (விடுதியில் அதிக ஆண்டுகள் இருந்த மாணவர் என்ற முறையில்) வார்டன் காந்திஜியை இராமசுப்ரமணியம் அறைக்கு (180) அழைத்து வந்தார். அறைக்குள் நுழைந்த காந்திஜி, அது சுத்தமாக வைக்கப்பட்டிருந்ததற்காக இராம சுப்ரமணியத்தைப் பாராட்டினார். காந்திஜியுடன் வந்திருந்த சீனிவாச சாஸ்திரி, இராமசுப்ரமணியத்தின் தந்தையும் ஒரு பெயர்பெற்ற டாக்டர் தான் என்று கூறவே, ''ஓ, நீ ஒரு பரம்பரை டாக்டர் !'' என்று கூறி மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.*

* பேட்டி : பி. என். இராமசுப்பிரமணியம்

காலை ஆறுமணிக்கெல்லாம், விக்டோரியா விடுதி மாணவர்கள் காந்திஜிக்கு வரவேற்பு அளித்த கூட்டம் தொடங்கி விட்டது. தென்னைப்பிரிக்காவில் மாணவர்க்கு அண்ணல் செய்த தியாகங்களுக்காக அவரைப் அறிவுரை பாராட்டிவிட்டு, தங்களுக்கு ஏதாவது பொருத்தமான அறிவுரை கூறுமாறு மாணவர் கள் கேட்டுக் கொண்டனர். மாணவர்கள் தர்ம வழியைக் கடைப்பிடித்தால் ஆண்டவனுடைய பேரரசிற்கு அது அழைத்துச் செல்லும் என்று அவர் அறிவுரை சொன்னார்.

அந்தக் காலத்தில் காந்திஜியை வெறும் அரசியல்வாதி யாக அல்லாது துறவு மனப்பாங்குடன் அரசியலில் தொண் டாற்றிய ஒருவராகவே தமிழர்கள் கருதினர் ஆசிரமப் கள். ஆகையால், அவர் நிறுவிய ஆசிரமத் பிரதிக்ஞை தைப் பற்றியும், அதன் அமைப்பு, விதி முறை கள் குறித்தும் நுணுக்கமாக அறிந்து கொள் ளப் பலர் - குறிப்பாக இளைஞர்கள் - ஆர்வமாயிருந்தனர். இம்முறை, காந்திஜி திரும்பிச் சென்ற பின்னர்க் கூட ஆசிரம விதிகளைப் பற்றி ஜி. ஏ. நடேசனுக்குப் (''இந்தியன் ரெவ்யூ'' ஆசிரியர் என்ற முறையில்) பலர் எழுதிக் கேட்டுக் கொண்டேயிருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் நடேசனும் காந்திஜியும் ஒரு சொற்பொழிவைத்தான் சுட்டிக் காட்டுவது வழக்கமாயிருந்தது. இன்று ஒய். எம். சி. ஏ. (கல்விப் பிரி வின்) ஆதரவில் ரெவ. ஜார்ஜ் பிரிட்டன் ட்ரிக் (சென்னை கிறித்தவக் கல்லூரியில் பணியாற்றியவர்) தலைமையில் காந்திஜி ''ஆசிரமப் பிரதிக்ஞைகள்'' என்ற தலைப்பில் நிகழ்த்திய சொற்பொழிவே அது. ஆசிரம வாழ்வைப் பொருத்தவரை அவ்வளவு முக்கியமான சொற்பொழிவாக அது கருதப்பெற்றது. கடந்த ஆண்டில் தம்மை இங்குச் சந் தித்த மாணர்களிடம் தாம் ஓர் ஆசிரமத்தைத் தோற்றுவிக் கப் போவதாகக் கூறியதாகவும் இந்த இடைக் காலத்தில் அதைத் தாம் தொடங்கி விட்டதாகவும் அதைப் பற்றியே பேச விரும்புவதாகவும் பீடிகை போட்டுக் கொண்டு, காந்திஜி தமது பேச்சைத் தொடங்கினர். ''இன்று எல்லா நாடுகளிலுமே நல்லொழுக்கத்தை வளர்ப்பது அவசியமாய் இருக்கிறது. மற்றெல்லா நாடுகளையும் விட நமது நாட்டில் இது மிக அவசியம். இதை நான் என்னுடைய பொது வாழ்வின் பயனாக உணர்ந்திருக்கிறேன். மாபெரும் தேச பக்தரான கோகலேயின் கருத்தும் இதுவே. நம்முடைய

சாத்திரங்கள், சில வாழ்க்கை நியதிகளை வகுத்து, மெய்ப்பிக்கப் பெற்ற சத்தியங்களாக அவைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறுகின்றன. இந்த நியதிகளைக் கடைப் பிடிக்காவிட்டால், சமயத்தைச் சரிவரப் புரிந்து கொள்ளச் சக்தியற்றவர்களாகி விடுவோம். பல ஆண்டுகளாக இவைகளில் நான் முழு நம்பிக்கை வைத்து வந்திருக்கிறேன். இவைகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்க முயன்றும் வந்திருக்கிறேன். இவ்வாறு என்னைப்போன்று கருதக் கூடிய வர்களுடைய கூட்டுறவைப் பெறுவது அவசியம் என்று கருதியே இந்த ஆசிரமத்தை நிறுவினேன். இந்த ஆசிரமத்தில் உறுப்பினராக விரும்பும் ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க வேண்டிய விதிகளை இன்று உங்கள் முன் கூற விரும்புகிறேன்,'' என்று அவர் கூறினார். அவர் மேலுங் கூறியதாவது :

பிரகலாதனின் சத்தியம்

''ஐந்து இயமங்கள் இருக்கின்றன. முதலாவது இயமம் சத்தியமாகும். சத்தியம் என்றால் சாதாரணமாக நாம் புரிந்து கொண்டிருக்கிறோமே அந்தச் சத்தியம் அல்ல.....என்ன இலாபநட்டங்கள் வந்தாலும் ஒரு குறிப்பிட்ட நியதியின் படியே நடந்தாக வேண்டும் என்ற சத்தியம். எதற்காகத் தனது உயிரைப் பலி கொடுக்கவும் பிரகலாதன் தயாராக இருந்தானே அந்தச் சத்தியம். தனக்குக் கிடைத்த தண்டனைகளிலிருந்து தப்பிக்கக்கூடப் பிரகலாதன் முயற்சி செய்யவில்லை. அதற்குமாறாகத் தனது இதழ்களில் புன் சிரிப்புத் தவழ, எத்தனையோ கொடுமைகளுக்கு அவன் உள்ளானான். முடிவில் சத்தியம் வென்றது. சத்தியம் தோல்வியடையாது என்பதை என்றாவது ஒரு நாள் தனது வாழ்நாளில் மெய்ப்பிக்க முடியும் என்று கருதி அவன் சத்தியத்தைக் கடைப்பிடிக்கவில்லை. அந்த உண்மை ஒரு புறம் இருக்கத்தான் செய்தது என்றாலும் (அதை மெய்ப்பிக்க முடியாமல்) சித்திரவதைகளின் மத்தியில் அவன் இறக்க நேர்ந்திருந்தால், அவன் அப்போதும் (மகிழ்ச்சியுடன்) இறந்திருப்பான். நாம் எல்லோரும் அந்தச் சத்தியத்தைத் தான் பின்பற்ற வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.''

இவ்வாறு பொதுவாக, சத்தியத்தைப் பற்றி விளக்கி விட்டு, முதல் நாள் நடந்த ஒரு சுவாரசியமான நிகழ்ச்சியை

யும் அவர் எடுத்துச் சொன்னார்: ''அது ஒருசின்ன நிகழ்ச்சி தான். ஆனால் காற்று எத்திசையில் அடிக்கிறது என்பதை வைக்கோல் துரும்புகள் காட்டுவது போல, அத்தகைய சிறு நிகழ்ச்சிகளும் எடுத்துக் காட்டுகின்றன. நேற்று நான் ஒரு நண்பருடன் பேசிக் கொண்டிருந்தேன். அவர் தனியாகப் பேசவேண்டும் என்றார். நாங்கள் இருவரும் தனியாக உரையாடிக் கொண்டிருந்தோம். அந்தச் சமயத்தில் மூன்றாவது நண்பர் ஒருவர் வந்து விட்டார். ''நான் உங்களுடைய பேச்சில் குறுக்கிடுகிறேனே?'' என்று வந்த நண்பர் மரியாதையோடு கேட்டார். என்னுடன் பேசிக் கொண்டிருந்த நண்பர் ''இல்லை, இங்கு அந்தரங்கம் எதுவும் இல்லை'' என்றார். இதைக் கேட்டு நான் சிறிது அதிர்ச்சியடைந்து போனேன். ஏனென்றால், என்னைப் பக்கத்தில் அழைத்துச் சென்றபோதே, அந்த நண்பரைப் பொறுத்தவரை, நாங்கள் உரையாடியது அந்தரங்கமானது தான். ஆனாலும், அவர் உடனே மரியாதைக்காக - இது அளவுக்கு மீறிய மரியாதை என்றே நான் கருதுகிறேன் - நாங்கள் பேசியது அந்தரங்கமல்ல வென்றும் மூன்றாவது நண்பர் அந்த உரையாடலில் கலந்து கொள்ளலாமென்றும் கூறி விட்டார். சத்தியத்தைப் பற்றி நான் கூறும் விளக்கத்திலிருந்து இது மாறுபட்டது. அந்த நண்பர் எவ்வாறு கூறியிருக்க வேண்டும் தெரியுமா? மிகவும் பண்போடு, அதே சமயம் வெளிப்படையாக ''ஆம், இப்போது நீங்கள் சரியாகக் கூறியது போன்று, நீங்கள் வருவது குறுக்கீடு தான்'' என்று கூறியிருக்க வேண்டும். அதற்கு மாறாக, மரியாதைக்காக அந்த நண்பர் கூறியதைப் போன்று, நாம் தொடர்ந்து கூறிக்கொண்டு போவோமானால், நம் நாடு பாசாங்குக்காரர்கள் நிறைந்த நாடாகிவிடும்.'' (1915-இல் சுவாமிநாதன் அருகில் இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சியை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.)

•

அஹிம்சை

இதற்கு அடுத்தாற்போல் அஹிம்சைத் தத்துவத்தை காந்திஜி விளக்கினார்: ''அஹிம்சை என்ற சொல்லுக்குக் கொல்லாமை என்பது பொருள். ஆனால் எனக்கோ அந்தச் சொல் மிக அளவு பொருள் பொதிந்ததாகும். எல்லையற்ற ஓர் உயர்ந்த நிலையை அது எனக்குக் காட்டுகிறது. நீங்கள் ஒருவருக்கும் தீங்கிழைக்கக் கூடாது; உங்களை விரோதியா

அவர் அதை வைத்திருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் என்னுடைய வாழ்க்கையைப் பொருத்தவரை எனக்குத் தேவையில்லாத எதையும் நான் வைத்துக் கொள்ள மாட்டேன். இந்தியாவில் நாள்தோறும் ஒருவேளை மட்டும் உண்டு வாழக்கூடியவர்கள் முப்பது இலட்சம் பேர் இருக்கிறார்கள். இந்த முப்பது இலட்சம் பேருக்கும் உணவும் உடையும் கிடைக்கும் வரை எதற்கும் ஆசைப்பட நமக்கு உரிமை இல்லை. விவரமறிந்த நாம் இவர்களுக்கு உணவும் உடையும் கிடைப்பதற்காகப் பட்டினி கூடக் கிடக்க வேண்டும். இந்தத் திருடாமையிலிருந்து, சொத்துச் சேர்க்காமை என்ற விரதம் தானே வருகிறது.

சுதேசி

நமது பக்கத்தில் உள்ளவர்களைப் புறக்கணித்துவிட்டு, தூரத்திலிருந்து வரும் பொருள்களைக் கொண்டு நமது தேவையை நிறைவு செய்து கொள்ளும் வரை. நமது வாழ்க்கையின் புனிதமான நியதிகளில் ஒன்றை நாம் மீறுகிறோம். உங்கள் கிராமத்தில் ஒரு சவரத்தொழிலாளி இருக்கும் வரை சென்னையிலிருந்து வரும் திறமையான சவரத்தொழிலாளியை நீங்கள் நாடக்கூடாது. உங்களுடைய கிராமத்துச் சவரத்தொழிலாளி சென்னையில் உள்ள சவரத்தொழிலியைப் போன்று ஆகவேண்டுமானால், நீங்கள் அவனுக்கு அதற்கான பயிற்சியை அளிக்கவேண்டும். இதுதான் சுதேசி. இந்தியாவில் கிடைக்காத பொருள்களைப் பொருத்தவரை, அவைகள் இல்லாமலேயே வாழ்க்கையை நடத்த முயல வேண்டும்.

அஞ்சாமை

இந்தியாவில் படித்தவர்களுக்குக் குலைநடுங்கும் அச்சம் இருக்கிறது. சத்தியத்தை நீங்கள் கடைப்பிடிப்பதானால் உங்களுக்கு அஞ்சாமை இருந்து தீரவேண்டும். அதனால் தான் பிராமணர்களிடம் இருக்க வேண்டிய தலையாய குணம் அஞ்சாமை என்று பகவத்கீதை கூறுகிறது. உண்மையைக் கூறுவதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கு அஞ்சி நாம் உண்மையைக் கூறுமலேயே இருந்துவிடுகிறோம். ஆண்டவனுக்கு அஞ்சி நடப்பவர் இந்த விளைவுகளுக்கெல்லாம் அஞ்சமாட்டார்.

இந்தியா மிகவும் கீழான நிலையில் இருந்தபோது, இந்திய மக்களை ஒட்டிக் கொண்ட தீண்டாமை என்னும்

தீமை இன்னும் அகலாது இருக்கின்றது. இது ஒரு சாபத் தீடு. இந்தச் சாபத் தீடு இருக்கும் வரை, இந்தப்புனித நாட்டில் நாம் அடையும் ஒவ்வொரு இன்னலும், அந்த நிலையான மாபெருங் குற்றத்திற்கு ஆண்டவன் நியாயமான முறையில் நமக்கு அளிக்கும் சரியான தண்டனை தான். ஒருவர் செய்யும் தொழிலுக்காக அவரைத் தீண்டத்தகாதவர் எனக் கருதுவதை என்னுல் புரிந்து கொள்ள முடியவில்லை.

தீண்டாமை ஒழிப்பு

நம்மில் ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் ஆங்கில மொழியில் விற்பன்னராக முடிவதில்லை. எதையும் நம்முடைய தாய் மொழியில் கூறுவது போன்று அவ்வளவு தெளிவாக, ஆங்கில மொழியில் கூறமுடிவதில்லை. நம்முடைய குழந்தைப் பருவத்தில் பதிந்ததையெல்லாம் திடீரென மூளையிலிருந்து அழித்து எடுத்து விடமுடியுமா? ஆனுல் வெளிநாட்டு மொழி ஒன்றின் மூலம் நாம் கல்வி கற்று நம்முடைய உயர்ந்த வாழ்க்கையைத் தொடங்கும்போது இவ்வாறு அழித்து விடவே முயலுகிறோம். இதனுல் தான் நம்முடைய வாழ்க்கையில் பெரிய இடைவெளி ஏற்படுகிறது. தீண்டாமை தவறு என்பது நமக்குத் தெரிந்தாலும் அதை வீட்டில் நிலைநாட்ட நமக்கு அச்சம் வந்து விடுகிறது.

தாய்மொழிக் கல்வி

உடல் உழைப்பின் சிறப்பை இன்னும் நாம் உணர வேண்டியிருக்கிறது. ஒரு சவரத்தொழிலாளியின் மகனே அல்லது ஒரு செருப்புத் தைக்கும் தொழிலாளியின் மகனே கல்லூரியில் படித்தாலும் தன்னுடைய தந்தையின் தொழிலே விட்டு விட வேண்டும் என்பதல்ல. டாக்டர் தொழிலுக்குச் சமமான மதிப்பு சவரத்தொழிலுக்கும் உண்டு என்று நான் கருதுகிறேன்.''

உடல் உழைப்பு

இவ்வாறு ஆசிரமத்தின் பதினேரு விரதங்களையும் காந்திஜி விளக்கிவிட்டு, இந்த நியதிகளின்படியெல்லாம் நடந்த பின்புதான் உள்ள நிறைவடையும் அளவுக்கு ஒருவர் அரசியலில் ஈடுபடலாம் என்று சொன்னர். இதன் பின்னர், அரசியலைக் குறித்தும் அவர் சிறிது விளக்கினர். ''சமய நெறி கலவாத அரசியலில் பொருளே இல்லை,'' என்று

அரசியல்

அவர் எச்சரித்தார். இம்முறையும் இதற்கு முந்திய முறையும் சென்னை மாநகருக்கு வந்தபோது அவருக்கு வீர வரவேற்பு அளித்ததில் மாணவர் உலகமே பெரும் பங்கு கொண்டது என்றாலும், இக்கூட்டத்தில் மாணவர்களுக்கு அவர் விடுத்த ஓர் எச்சரிக்கை ஆழ்ந்து கவனிக்க வேண்டிய தாய் இருந்தது. ''இந்நாட்டில் அரசியல் மேடைகளிலெல்லாம் மாணவர்கள் குழுமியிருப்பது, நமது தேசிய வளர்ச்சிக்குச் சரியான அறிகுறி ஆகாது. அதற்காக மாணவப் பருவத்தில் நீங்கள் அரசியலைக் கற்கக் கூடாது என்பதல்ல. குழந்தைப் பருவத்திலிருந்து கூட அதைக் கற்று வரலாம். ஆசிரமத்தில் உள்ள குழந்தைகளுக்கு இந்நாட்டில் உள்ள அரசியல் அமைப்புகளைப் பற்றிக் கற்றுக் கொடுக்கிறோம். முதலில் குழந்தைகள் சமய உணர்வு பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். இவ்வாறு சமய உணர்வும் அரசியல் அறிவும் பெற்று நீங்கள் கல்லூரிகளை விட்டு வெளியேறினால் உங்களுடைய வாழ்க்கை முழுவதும் இருக்கவே இருக்கிறது. வாழ்க்கையுடன் போராடுவதற்கு முதலில் நீங்கள் தகுதியானவர்களாகக் கல்லூரியிலிருந்து வெளியேற வேண்டும். ஆனால் இப்போது இதற்கு நேர் மாறான நிலைமையே இருக்கிறது. அரசியல் வாழ்வில் பெரும் பகுதி மாணவப்பருவத்துடன் கழிந்து விடுகிறது. கல்லூரியை விட்டு வெளியேறிய பின்னரோ வேலை தேடத் தொடங்கி விடுகின்றனர்.'' மாணவர்கள் தமது ஆசிரமத்திற்கு வந்து கூடவேண்டுமென்று தாம் விரும்பவில்லை என்றும் ஒவ்வொரு வரும் இந்த விரதங்களில் சிலவற்றையோ அல்லது எல்லாவற்றையுமோ கடைப்பிடித்து ஆங்காங்கு இருக்கும் இடங்களிலேயே ஆசிரமவாழ்க்கை வாழ வேண்டும் என்றும் அவர் கூறி முடித்தார்.

புதுமை

இந்தக் கருத்துக்கள் 1916-இல் மாணவர்களுக்குப் புதுமையாக இருந்ததில் வியப்பு எதுவும் இல்லை. மாணவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் கூட அவை புதியனவாகத்தான் இருந்தன. இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் கூடத் தமது முடிவுரையில், ''மிகப் பெரிய நெறிகளையெல்லாம் காந்திஜி சொன்னார். நடைமுறையில் இவைகளைக் கடைப்பிடிப்பது கடினமாயிருக்கும் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்று கூறினார். அந்தக் காலத்தில் ''தராசு'' என்ற தலைப்பின் கீழ் ''சுதேசமித்திர

னில்'' முக்கியமான விமர்சனங்கள் வருவதுண்டு. அதில், இக்கருத்துக்களைப் பற்றிக் காளிதாசன் என்பவர் விமர்சனம் செய்திருந்தார். அந்த விமர்சனத்திலிருந்து அக்காலத்தில் இக்கருத்துக்களைப் பற்றிப் படித்தவர்கள் என்ன நினைத்திருப்பார்கள் என்பதை நாம் ஓரளவு யூகிக்க முடிகிறது. ''அவர் சொல்லுகிற சத்திய விரதம், அகிம்சை, உடைமை மறுத்தல், பயமின்மை ஆகிய நான்கும் உத்தம தர்மங்கள். இவற்றை எல்லோரும் இயன்றவரை பழக வேண்டும். ஆனால் ஒருவன் என்னை அடிக்கும் போது நான் அவனைத் திருப்பி அடிக்கக்கூடாது என்று சொல்லுதல் பிழை. சுதேசியம், சாதி சமத்துவம், தேசபாஷைப் பயிற்சி, தெய்வபக்தி இந்த நான்கையும் இன்றைக்கே பழகிச் சாதனை செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நமது தேசம் அழிந்து போய்விடும். நாக்கைக் கட்டுதல், பிரம்மச்சர்யம் - இவை இரண்டையும் செல்வர்கள் இடை இடையே அனுஷ்டித்தால் அவர்களுக்கு நன்மை உண்டாகும். ஏழைகளுக்கு இந்த உபதேசம் அவசியமில்லை. அவர்களுக்கு நாக்கை ஏற்கனவே கட்டித்தான் வைத்திருக்கிறது. பிரம்மச்சர்யத்தை ஜாதி முழுமைக்கும் ஸ்ரீ காந்தி தர்மமென்று உபதேசம் செய்யவில்லை. அந்த வேலை செய்தால் தேசத்தில் சீக்கிரம் மனிதரில்லாமல் போய்விடும். காந்தி பதினேழு விரதம் சொன்னார். நான் பன்னிரண்டாவது விரதமொன்று சொல்கிறேன். அது யாதெனில் :- ''எப்பாடு பட்டும் பொருள் தேடு ; இவ்வுலகத்திலே உயர்ந்த நிலை பெறு.'' இந்தப் பன்னிரெண்டாவது விரதத்தைத் தேசமுழுவதும் அனுஷ்டிக்க வேண்டும்.''

காந்தி-ஜின்னு பெசண்ட்

இதே சமயத்தில் அன்னிபெசண்டும் ஜின்னுவும் மாணவர்கள் நேரடி அரசியலில் ஈடுபடக்கூடாது என்று வலியுறுத்தி வந்தார்கள். இதே வாரம் பம்பாயில் முஸ்லிம் மாணவர்கள் சங்கக் கூட்டத்தில் ஜின்னு பேசிய போதும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்ற மாணவர்கள் இந்து சங்கக் கூட்டத்தில் அன்னிபெசண்ட் பேசிய போதும் மாணவர்கள் அரசியலுக்காகத் தங்களைத் தயார் செய்து கொள்ள வேண்டுமே தவிர நேரடி நடவடிக்கையில் இறங்கிவிடக் கூடாது என்று கூறினார்கள். ஆகவே காந்திஜி, ஜின்னு, அன்னிபெசண்ட் ஆகிய மூவரும் இந்தச் சமயத்தில் இச்சிக்கலில் ஒருமனதான

கருத்துக் கொண்டிருந்தனர் என்பதும், மாணவர்கள் நேரடி அரசியலில் ஈடுபடக் கூடாது என்பதை வலியுறுத்த வேண்டிய அவசியம் அப்போது இருந்ததென்பதும் தெளிவாகிறது.

பெசண்ட் மகிழ்ச்சி

ஒய். எம். சி. ஏ. சொற்பொழிவை காந்திஜி நிகழ்த்துவதற்கு முன்பே, ஒருவர் ஒரு துண்டுக் காகிதத்தில் காசி நிகழ்ச்சியைப் பற்றி விளக்குமாறு எழுதிக் கொடுத்தார். ஆனால் காந்திஜி அவருடைய கோரிக்கையை ஏற்கவில்லை. ''அந்த நிகழ்ச்சிக் கெல்லாம் நீங்கள் பெரிய முக்கியத்துவம் கொடுக்க வேண்டியதில்லை. அவை, பாலத்தின் அடியில் போகும் தண்ணீரைப் போல, வரும், போகும்,'' என்று சொல்லித் தமது பேச்சைத் தொடங்கி விட்டார். இவ்வாறு காசி நிகழ்ச்சியைப் பெரிது படுத்த வேண்டாம் என்று காந்திஜி சொன்னது அன்னிபெசண்டிற்குப் பெருமகிழ்ச்சி அளித்தது. அவர் இதைப் பற்றி ''நியூ இந்தியா'' பத்திரிகையில் 'தீர்க்கதரிசியும் அரசியல்வாதியும்' என்று மகுடமிட்டு ஒரு தலையங்கமே எழுதிவிட்டார். அதில் காந்திஜிக்குப் புகழ்மாலைகளையெல்லாம் கொட்டிக் குவித்திருந்தார்.

இந்தியாவின் மாஜினி

''இத்தாலியில் தீர்க்க தரிசியான மாஜினி எதைச் செய்தாரோ அதைப்போன்ற ஒன்றைச் செய்வதற்காகவே பிறந்தவர் காந்திஜி. இதற்கு முன் அவர் சென்னைக்கு வந்திருந்தபோதும் அவரைப் பற்றி இதே கருத்தைத்தான் நான் எழுதினேன். இன்று இங்கு வெளியாகியிருக்கும் அற்புதமான சொற்பொழிவில் (ஒய். எம். சி. ஏ-யில் நிகழ்த்திய சொற்பொழிவை அவர் குறிப்பிடுகிறார்.) இப்பெரும் பொறுப்பை அவர் ஆற்றியிருக்கிறார். அந்தப் பெரும் பணிக்காக உருவானவர் அவர். அஞ்சாது தாமே எல்லா இன்னல்களையும் பொறுத்துக் கொண்டு இந்திய குலத்தைச் சாத்விக எதிர்ப்பு இயக்கப் பாதையில் அவர் அழைத்துச் சென்றார்.''

இவ்வாறெல்லாம் புகழ்ந்துரைத்த பெசண்ட் அப் புகழுரைகளுடன் தமது கட்டுரையை நிறுத்திக் கொண்டிருக்கக் கூடாதா? அதுதான் இல்லை. பழைய சிக்கலை மீண்டும்

கிளப்பினர். அரசியலில் அவர் ஒரு குழந்தை என்று கூறுவது மதிப்புக் குறைவாகாது. ஏனெனில் அவருடைய வாழ்க்கையானது அவரை அரசியல் வழி துறைகளில் கொண்டு போய்விடவில்லை. நம்பிக்கை இழந்த மக்களுக்குத் தலைமைதாங்கி அவர் வெற்றிவாகை சூடினார். சாத்விக எதிர்ப்பு மூலம் விடுதலை பெறவேண்டிய போராட்டம் அது. ஆனால் அரசியல் துறையில் விடுதலை பெறுவதற்காக நடை பெறும் போராட்டத்தில் - இன்னலும் அபாயமும் நிறைந் திருந்தாலுங்கூட - தேவையானவர். தீர்க்கதரிசி அல்ல, அரசியல் வாதியே....நேரம், இடம், சூழ்நிலை என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது சத்தியத்திற்குத் துரோகம் செய்வ தாகும் என்று காந்திஜி கருதுகிறார். ஆனால் அரசியல் வாதி என்ற அடக்கமான பங்கேற்றுள்ள நான் இந்த மாபெரும் அரசியல் லீலையில் அவைகள் எல்லாம் முக்கிய அம்சங்கள் என்று கருதுகிறேன்.

மறுபடியும் கிளப்பினர்

''இன்று காலையில், 'காசி நிகழ்ச்சியைப் போன்றவை. பாலத்திற்கு அடியில் ஓடும் தண்ணீரைப் போன்று வரும் போகும், அவைகளைப் பெரிதுபடுத்தக் கூடாது' என்று காந்திஜி கூறியதை மனமார ஏற்கி றேன். ஒன்றிரண்டு பத்திரிகைகள் அதைப் பெரிது படுத்த முயன்றன. ஆனால் அவை கள் வீசிய சகதியை நான் எவ்வாறு அலட்சியம் செய்து விட்டேனோ அதேபோன்று அவைகளுடைய புகழ் மாலையை யும் காந்திஜி அலட்சியம் செய்து விட்டார். வெவ்வேறு வழிகளானாலும் நானும் அவரும் ஆண்டவனுக்கும் மக்களுக்கும் சேவை செய்யவே விரும்புகிறோம். எங்களுடைய வழி வேறுயிருக்கலாம்; ஆனால் குறிக்கோள் ஒன்று தான்.''

குறிக்கோள் ஒன்றே

இவ்வாறு அன்னிபெசண்ட் காந்திஜியைப் பாராட்டி யிருந்த போதிலுங்கூட, தம்முடைய கருத்தை யோ முடிவையோ மாற்றிக் கொள்ளாது காந்தி ஜியை அரசியலில் குழந்தை என்று தாம் கூறியது சரிதான் என்று மீண்டும் விளக்கங் கூறுவது போல கட்டுரை அமைந்திருந்தது. இதனால் இந்தக் கட்டுரையும் (சென்னையில்) காந்திஜி ஆதரவாளர்களின் ஆத்திரத்தைத்தான் தூபம் போட்டு வளர்த்தது. கடைசியில் காந்திஜியும் தமது நிலையை

காந்திஜி பதில்

விளக்க வேண்டியதாகப் போயிற்று. அன்னிபெசண்டின் கட்டுரை 16-2-16-ஆம் தேதி மாலை இதழில் வெளிவந்தது. காந்திஜி அநேகமாக அன்று மாலை இந்தக் கட்டுரையைப் பார்த்துவிட்டு, தமது மறுமொழியை ஓர் அறிக்கையாக எழுதியிருக்கக் கூடும். இந்த அறிக்கையின் ஒரு நகலை அவர் ''நியூ இந்தியா'' விற்கும் அனுப்பியிருக்கக் கூடும். அதனால் தான் இந்த அறிக்கையுடன் அதைப் பற்றிய ''நியூ இந்தியா''வின் தலையங்கமும் மறுநாள் வந்துவிட்டது.

தமது மறுமொழியில் அண்ணல், ''மன்னர்களிடம் காதோடு காதாக ஏதோ சொன்னார் என்று நான் கூறியதைத் திருமதி பெசண்ட் மறுத்திருக்கிறார். முன்னுக்குப் என்னுடைய கண்களையும் காதுகளையும் நான் பின் முரண் நம்புவதானால், நான் விடுத்த பழைய அறிக்கையையே மீண்டும் வலியுறுத்திக் கூற வேண்டியிருக்கிறது,'' என்று கூறியிருந்தார். திருமதி பெசண்ட் மேடையில் எந்த இடத்தில் அமர்ந்திருந்தார். அவர் பக்கத்தில் யார் யார் அமர்ந்திருந்தார்கள் என்பதையெல்லாம் காந்திஜி விளக்கிவிட்டு மேலும் கூறியிருந்தார்: ''நான் பேசிக் கொண்டிருந்த போது திருமதி பெசண்ட் கிட்டத்தட்ட என்பக்கத்திலேயே இருந்தார். (தலைமை வகித்த தர்பங்கா) மகாராஜா எழுந்த போது அவரும் எழுந்து விட்டார். மன்னர்கள் மேடையை விட்டு இறங்குவதற்கு முன்பே நான் எனது பேச்சை முடித்து விட்டேன். மேடையிலிருந்த சிலருடன் திருமதி பெசண்ட் இதைப்பற்றி விவாதித்துக் கொண்டிருந்தார். நான் பேசிய போது குறுக்கிட்டிருக்க வேண்டாமென்றும், நான் கூறிய கருத்துக்களை அவர் ஏற்காவிட்டாலும் அதை என் பேச்சு முடிந்த பின் தெரிவித்திருக்கலாம் என்றும் அமைதியாக அவரிடம் கூறினேன். ஆனால் அதற்கு அவர் சிறிது படபடப்போடு, ''மேடையில் உள்ள எங்கள் எல்லோரையுங் கட்டுப்படுத்தக் கூடியவாறு நீங்கள் பேசும் போது நாங்கள் எவ்வாறு உட்கார்ந்து கொண்டிருக்க முடியும்? நீங்கள் அந்தக் கருத்துக்களைக் கூறியிருக்கக் கூடாது'' என்று சொன்னார். ஆகவே, என் நலனில் அக்கறை கொண்டுதான் என் பேச்சில் குறுக்கிட்டதாக இப்போது அவர் கூறுவது எப்படிப் பொருந்தும்?....

''எனது பேச்சில் நான் கூறிய கருத்துக்களில் எவை அவர் குறிக்கிடும் அளவிற்கு மறுப்புக்குரியனவாக இருந்தன

என்பது இன்னும் எனக்குப் புரியாத புதிராக இருக்கிறது,'' என்று அண்ணல் கூறிவிட்டு தாம் அங்குப் பேசியதன் சுருக்கத்தைக் கீழே அளித்து, (இப்பேச்சின் முழுக்கம் ஏற்கனவே இந்நூலில் அளிக்கப் பெற்றிருக்கிறது.) தொடர்ந்து கூறியிருந்தார்: '' (அங்கே கூடியிருந்த) மாணவர் உலகமும் பாதிக்கப்பட்டதாக என் பார்வைக்குத் தோன்றவில்லை. உண்மையில், மாணவர்களில் சிலர் மறுநாள் காலை என்னிடம் வந்து என்னுடைய கருத்துக்களைச் சரிவரப் புரிந்து கொண்டதாகவே கூறினர்கள்.

பாதிக்கப் படவில்லை

''ஆகவே திருமதி பெசண்டிற்கும் எனக்கும் முழு நீதி கிடைக்கக் கூடியவாறு நான் கீழ்க்கண்ட யோசனையைக் கூறுகிறேன். மன்னர்களை மேடையிலிருந்து 'விரட்டிய' அந்தஒரு வாக்கியத்தை (அதாவது காந்திஜி பேசியதாக அன்னி பெசண்ட் கூறிய வாக்கியம்) அவர் வெளியிட்டு, அவரைத் தற்காத்துக் கொள்ள விரும்பவில்லை என்றும், அந்த வாக்கியத்தை வெளியிடுவதானது எதிரிக்கு (அதாவது பிரிட்டிஷ் அரசுக்கு) இடங்கொடுப்பதாகும் என்றும் அவர் கூறுகிறார். ஆனால் இதற்கு முந்திய அவருடைய அறிக்கையிலோ, என்னுடைய பேச்சுத் துப்பறியும் அதிகாரிகளின் கையில் இருப்பதாகச் சொல்லியிருக்கிறார். ஆகவே, அந்த வாக்கியத்தை அவர் வெளியிடாதிருப்பது எனக்கு எள்ளளவும் பயன்தரப் போவதில்லை. ஆகையால் என் பேச்சை அப்படியே அவர் வெளியிடுவது, அல்லது அவர் குறுக்கிடுவதற்கும் மன்னர்கள் வெளியேறுவதற்கும் காரணமாக இருந்த வாக்கியங்களை (மட்டுமாவது) வெளியிடுவது சிறந்ததாக இருக்குமல்லவா?'' இவ்வாறு கேட்டுவிட்டு, 'பெசண்டின் குறுக்கீடு மட்டும் இல்லாதிருந்திருக்குமானால், சில நிமிடங்களில் எனது பேச்சும் முடிந்திருக்கும். அராஜகத்தைப் பற்றி நான் கூறியவை பற்றியும் தவறான கருத்து ஏற்பட்டிருக்காது'' என்று காந்திஜி தம் அறிக்கையை முடித்திருந்தார்.

• ''மர்ம'' வாக்கியம்

காசி நிகழ்ச்சி குறித்து இவ்வாறு காந்திஜி விடுத்த அறிக்கைக்கு ''நியூ இந்தியா'' விலிருந்து கிளம்பிய எதிரொலி விசித்திரமாக இருந்தது. ''நேற்றுக்காலையில்தான் காசி நிகழ்ச்சி ஒரு சிறியவிஷயம்'' என்று விவேகத்

தோடு காந்திகூறினர். ஆனால் அதற்குள் அவருடைய கருத்தை மாற்றிக்கொண்டு பத்திரிகைகளுக்கு ஒரு நீண்ட அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் கிறித் பெசண்ட் துவப் பாதிரிமார்கள் மத்தியில் தங்கி தாக்கு யிருக்கிறார். ஆகையால் அவருடைய கருத்தை மாற்ற அவர்களுடைய செல்வாக்குப் பயன்பட்டிருக்கிறது. கிறித்துவப் பாதிரிமார்களின் கைக் கருவியாக காந்திஜி இப்போது பயன்பட்டிருக்கிறார். அதிகார வர்க்கம் இதைக்கண்டு மகிழ்ச்சி அடையும். மாணவர்களைத் திருமதி பெசண்டிற்கு எதிராகத் திருப்பு வதற்குப் பெரு முயற்சிகள் செய்யப்படுகின்றன. ஆனால் இந்த வெற்றி சொற்ப காலத்திற்கே நீடிக்கும்,'' என்று ''நியூ இந்தியா''வின் (17-2-16) தலையங்கம் சாடியது. காந்திஜி உடனே பெசண்டிற்கு மறுப்பு அனுப்பினர்; ''கிறித்துவ மதப்பிரசாரகர்களின் செல்வாக்கால் நான் மீண்டும் காசி நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டதாக உங்களுடைய தலையங்கத்தில் எழுதியிருக்கிறீர்கள். என்னுடைய அறிக்கைக்கும் கிறித்துவ மதப்பிரசாரகர்களுக்கும் ஒருவித சம்பந்தமும் இல்லை, எந்த மதப்பிரசாரகருடனும் நான் இதைப்பற்றிப் பேசவில்லை என்பதைக் கூறிக்கொள் கிறேன்.''

காந்திஜிக்கு மறுமொழியாக 19-ஆம் தேதியன்று வெளியான ''நியூ இந்தியா'' பத்திரிகையில் மீண்டும் ஒரு தலையங்கம் எழுதினர் பெசண்ட். இந்தத் பெசண்ட் தலையங்கத்திற்கு அவர் கொடுத்த தலைப்பு மறுமொழி விநோதமானது. ''காந்திக்காக அன்னி பெசண்ட் வக்காலத்து'' (In defence of M. K. Gandhi by Annie Besant) என்று மகுடமிட்டு இந்தக் கட்டு ரையை அவர் எழுதியிருந்தார். ''... (கூட்டம் நடைபெற்ற போது) சி. ஐ. டி. அதிகாரிகள் நடந்துகொண்ட முறை யால் மாணவர்கள் ஆத்திரமடைந்திருந்தனர்கள். அன்று பல மாணவர்கள் கல்லூரியிலேயே காவலில் வைக்கப்பெற்றிருந் தார்கள். சில நாட்களாக நகரில் சில கனவான்கள் கைது செய்யப்பட்டுக் 'கடுமையாக' நடத்தவும் பட்டார்கள். இவ்வாறு, நெருப்பைச் சிறிது காட்டினாலும் குபீரென்று பற்றிக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலையில் கூட்டம் இருந்தது. அவர்களில் சிலருக்கு காந்திஜியின் சாத்விக எதிர்ப்புக் கொள்கை தெரியாது. ஆகையால் வெடிகுண்டு எறிவதனால்

ஏற்படக்கூடிய பலன்களைப் பற்றி அவர் கண்டித்திருந்தாலுங் கூட - அதற்கு அவர் ஆதரவாய் இருப்பதாகவே கருதிவிடு வார்கள் என்று நான் அஞ்சினேன். கட்டாயத்தின் பேரில் தான் இந்தியாவை விட்டு இங்கிலாந்து வெளியேறும் என்று காந்திஜி கூறியது விவேகமானதல்ல என்று நான் கருதுகி றேன். ஆனால் அதே சமயம், (நான் சுயாட்சிக்காகத் தீவிரமாகப் பணியாற்றி வருவதால்) நான் அதைக் கூறியிந் தால் அதற்கு என்ன பொருள் கொள்ளப் பெறுமோ அதே பொருள் காந்திஜி கூறும்போது அதற்கு இராது. நான் அதைக் கூறியிருந்தால் அது ஒரு மிரட்டலாகக் கருதப் பெற்றிருக்கும்...ஆனால் காந்திஜிக்கு இத்தகைய நோக்கம் எதையும் கற்பிக்க முடியாது. ஏனெனில், ' நீங்கள் (மக்கள்) சுயாட்சிக்கு இன்னும் தகுதியாகவில்லை ' என்று அவர் திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். காந்திஜியின் வாயி லிருந்து வந்த சொற்களுக்குப் போராட்ட எண்ணத்தைக் கற்பிக்க முடியாது. அதனால் தான் ஒரு நேரடியான அரசியல் வாதியைப் போன்று அவரைக் கருதமுடியாது என நான் கூறுகிறேன். அவர் தம்முடைய உயிரையும் தம்மைப் பின்பற்றுபவர்களுடைய உயிரையும் பணயம் வைப்பாரே தவிர எதிரிகளுடைய உயிரைப் பணயம் வைக்க மாட்டார். அராஜகம் என்பது குண்டுகளைக் குறிக்கும் ஒரு நாட்டில் '' நான் ஒரு அராஜகவாதி '' என்று தைரிய மாகக் கூறுவது விவேகமல்ல. டால்ஸ்டாயைப் போன்று காந்திஜி, '' அரசு இல்லாத் தத்துவத்தில் '' நம்பிக்கையுள்ள வர் இருவருக்கும் எத்தனையோ ஒற்றுமைகள் உண்டு..... உள்ளே உள்ள தெய்விகச் சட்டம் ஒன்று வழிகாட்டும் போதுதான் வெளியே இருந்துவரும் சட்டத்தை ஒரு மனிதன் புறக்கணிக்க முடியும். முற்றிலும் சுயநலம்இல்லாத வாழ்க்கை - தூய, எளிய வாழ்க்கை - நாள்தோறும் மணி தோறும் தன்னலத்தை மறுக்கும் வாழ்க்கை - வாழ்ந்து வரும் காந்திஜிக்கு வெளியிலிருந்து என்ன சட்டம் வேண்டிக் கிடக்கிறது? இத்தகைய மனிதர்கள் அவர்கள் பிறந்த நாட்டிற்கு விலை மதிக்க வொண்ணுத கருவூலங்கள், வீரமும் நற்குணமும் வளர அவர்கள் உணர்வூட்டுகிறார்கள். அதனால் தான், காந்திஜியின் கருத்துக்கள் சில, இன்றைய உலகத்தைக் காட்டிலும் எதிர்கால சந்ததியினருக்குத் தான் பொருத்தமானவை என்று நாம் கருதினாலும், அவருடைய அரசியலை - அதை அப்படி அழைப்பதானால் - நடைமுறைச் சாத்தியமானது அல்ல என்று நாம் கருதினா

லும், ஏன், அரசியலமைப்பு பூர்வமான மாறுதலுக்கு ஒரு முட்டுக்கட்டை என்று நாம் கருதினாலும், - ஆங்கிலோ இந்தியர்களிடமிருந்தோ அதிகார வர்க்கத்தினரிடமிருந்தோ அவர் மீது தாக்குதல் வரும்போது ஆயிரக்கணக்கில் இலட்சக் கணக்கில் அவரைச் சூழ்ந்து நின்று பாதுகாப்போம்; தற்போதுள்ள கடினமான சூழ்நிலைகளில் அவருடைய கருத்துக்கள் விவேகமற்றவை என்று நாம் எண்ணினாலும் அவருடைய வாழ்க்கைக்காகவும்உயர்ந்த குறிக்கோள்களுக் காகவும் அவருக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்துவோம் என்று நான் கூறுகிறேன்.''

கடும் வாக்குவாதம்

இவ்வாறு வாதமும் எதிர்வாதமும் காரசாரமாகி இந்திய அரசியலின் இருபெரும் தலைவர்கள் மோதிக் கொண்டது மலையும் மலையும் மோதிக் கொண் டது போல் இருந்தது. தமிழ்க் களத்தில் போர் நடைபெற்றதால் தமிழகப் பெரியோர் கள் நெருங்கி இருந்து கவனிக்க முடிந்தது. அப்போது (18-ஆம் தேதியன்று மாலை) ''மெட்ராஸ் மெயில்'' தீட்டிய ஒரு தலையங்கம் கடும் வாக்கு வாதத் தைக் கிளப்பி மீண்டும் தமிழக மக்களுக்கு ஆத்திரத்தை மூட்டியது.

காந்தியே உயர்ந்தவர்

காந்திஜியை டால்ஸ்டாயுடன் ஒப்பிடுவது சரியல்ல என்பது மெயிலின் கருத்து. ஆனால் அன்னிபெசண்டே இதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டார். இதைக் குறித்து அன்னிபெசண்ட் எழுதிய தாவது :- ''வெளிப்படையாக காந்திஜியை டால்ஸ்டாயுடன் ஒப்பிடுவதற்கு ''மெட்ராஸ் மெயில்'' வருத்தந் தெரிவித்திருக்கிறது. ஆனால் இலக்கி யம் தவிர வேறு துறைகளிலெல்லாம் டால்ஸ்டாயை விட காந்திஜியே உயர்ந்தவர். டால்ஸ்டாய் ஒரு விவசாயியாக வாழ்ந்தார். தமது பிழைப்பிற்காகச் செருப்புகள் தைத் தார். காந்திஜியும் அதைப் போன்றே வாழ்கிறார். அவ ருடைய சமூகத்தின் பணிக்கு உதவுகிறார். டால்ஸ்டாயை ருசிய அரசாங்கம் வெறுத்தது; அதே போன்று காந்திஜியைத் தென்னாப்பிரிக்க அரசு வெறுத் தது. ஆனால், அதே சமயம், காந்திஜி தம்முடைய மக்க ளுக்காக எவ்வளவோ இன்னல்களை ஏற்றிருக்கின்றார். அதைப் போன்று டால்ஸ்டாய் ஒருபோதும் இன்னல்

அடைந்ததில்லை.... இரண்டு பேரும் தீர்க்க தரிசிகளே. இரண்டு பேரும் - தூரத்திலுள்ள - பெரும்பாலான மக்களால் பாராட்டப் பெறுகிறார்கள்'' என்று அன்னிபெசண்ட் கூறியிருந்தார்.

''இந்து'' சாடியது

ஆனால் ''இந்து'' இதைக் காட்டிலும் கடுமையாக ''மெட்ராஸ் மெயிலே''க் கண்டித்தது. ''மெயில்'' தனது தலையங்கத்தில் ''காந்திஜி என்னென்ன கூறினாரென்று பெசண்ட் கூறியிருக்கிறாரோ அவைகளைக் கூறியிருந்தால் அவர், ஒன்று, பொது வாழ்க்கையிலிருந்து விலகிக் கொள்ள வேண்டும்; அல்லது, இந்தியாவிலுள்ள நியாய எண்ணம் படைத்த மனிதர் அனைவருடைய விரோதத்தையும் சம்பாதித்துக் கொள்ளத் தயாராய் இருக்க வேண்டும். காந்திஜி கூறியதாகச் சொல்லப்படும் இழிவான கருத்துக்களைச் சொன்ன ஒருவருக்கு, பொதுச் சிக்கல்கள் குறித்து மீண்டும் பேச உரிமை கிடையாது. அடுத்த தடவை காந்திஜி பேசும்போது, எளிய வாழ்க்கையைப் பற்றிப் 'பிதற்றுவதையும்' பசும் வயல்களைப் பற்றிப் பல்லவி பாடுவதையும் விட்டு விட்டு, இந்தக் குற்றச்சாட்டிற்குப் பதில் கூறியாக வேண்டும்,'' என்று எழுதியிருந்தது. இதை, இதே வேகத்தில், மிகவுங் கடுமையாகக் கண்டித்து ''இந்து'' கூறியது; ''நேற்று இரவு வெளியான 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகையில் ஒரு பைத்தியக்காரத்தனமான பிதற்றல் வெளியாகியிருக்கிறது. காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவிற்காகத் திருமதி அன்னிபெசண்ட் அவரைக் குற்றம் சாட்டவில்லை என்பதையும் ஓர் அரசியல் சார்பற்ற கூட்டத்தில் அவர் அக்கருத்துக்களைக் கூறியதற்காகவே குற்றம் சாட்டினார் என்பதையும் ''மெட்ராஸ் மெயில்'' மறந்துவிட்டது... அவர் இழிவான கருத்துக்களைக் கூறியதாகக் குற்றம் சாட்டுகிறது. காந்திஜி தாம் நிகழ்த்திய சொற்பொழிவை முழுதாக வெளியிட வேண்டுமென்றும், அச்சொற்பொழிவைத் தலைவரும் கூட்டத்தை விட்டு வெளியேறிய மன்னர் ஒருவரும் அங்கீகாரம் செய்ய வேண்டுமென்றும் கோருகிறது. (ஆனால் இந்தச் சொற்பொழிவு காந்திஜியிடம் இல்லை.) இவ்வாறு செய்து, பகுத்தறிவில்லாத, அகம்பாவம் நிறைந்த, ஆங்கிலோ இந்தியர் குற்றச் சாட்டிலிருந்து தாம் குற்றமற்றவர் என்பதை காந்திஜி மெய்ப்பிக்க வேண்டும் என்றும் ''மெட்ராஸ்

மையில்'' எழுதியிருக்கிறது. இப்படி எழுதுவது, அருவருக்கத்தக்க, நாகரிகமற்ற முறையில் பெரிய மனிதர் ஒருவரை அவமரியாதை செய்வதாகும்.''

சென்னை சமூக சேவை சங்கம் (சோஷல் சர்வீஸ் லீக்) சார்பில் கரைகாணு உற்சாகத்துடன் கிறித்துவக் கல்லூரி யின் திறந்த வெளி மைதானத்தில் மாணவர் கரைகாணு கள் காந்திஜிக்கு வரவேற்பு அளித்தார்கள். உற்சாகம் முதலில், இக்கூட்டத்தை ஆண்டர்சன் மண்ட பத்தில் நடத்துவதென்று அவர்கள் திட்ட மிட்டிருந்தனர். ஆனல், எதிர்பார்த்ததைக் காட்டிலும் பலமடங்கு அதிகமாகக் கூட்டம் வந்து விட்டதால், இடத்தை மாற்றினர்கள். உண்மையில் அந்தத் திறந்த வெளியும் போதவில்லை. தாழ்வாரத்திலும் மாடியிலும் சுவர்களிலும் மாணவர்கள் நின்று கொண்டும் அமர்ந்து கொண்டு மிருந்தார்கள். இக்கூட்டத்தை விலக்கி, காந்தி ஜியைத் திருமதி ஓயிட்ஹெட்டும் (அவருடைய கணவரும் சென்னை தலைமை பிஷப்புமான) ஓயிட்ஹெட்டும் மேடைக்கு அழைத்து வருவது பெரும்பாடாகப் போயிற்று. ''காந்தி வாழ்க'' என்று ஒரே முழக்கமாக இருந்தது. கூட்டத் தில் அமைதியை ஏற்படுத்தி, தமது உரையைத் தொடங்க, இச்சங்கத்தின் தலைவரும் அன்று அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தவருமான ஓயிட் ஹெட்டிற்குக் கடினமாக இருந்தது. (சங்கத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது.) ''வீண் பேச்சுப் பேசாத செயல்வீரர்'' என்று காந்திஜியைத் தலைவர் அறிமுகம் செய்து வைத்தார். இன்று (16-2-16) ஏராளமான அலுவல்கள் இருந்ததாகவும் அதனல் இப்பேச்சைப் பற்றி யோசிக்கத் தமக்கு அவகாசமில்லை யென்றும் அடக்கமாக முன்னுரை கூறிக்கொண்டு காந்திஜி யும் தமது பேச்சைத் தொடங்கினர்.

''சமூகத் தொண்டிற்கு - ஏன், உலகிலுள்ள எவ்வகை யான தொண்டிற்குமே இன்றியமையாத ஒரு நிபந்தனை உண்டு. தொண்டு செய்பவர்கள் அதற்குரிய தொண்டின் தகுதி பெற்றவர்களாய் இருக்கவேண்டும் என் தகுதிகள் பது தான் அந்த நிபந்தனை. (சில சமயம்) வேலைக்காரர்கள் உதவியாக இருப்பதற்கு மாறுகத் தொல்லையாகவும் இருப்பதில்லையா? நான் இன்று காலை ஒய். எம். சி. ஏ. மண்டபத்தில் கூறிய, பதினேரு

விரதங்கள் இத்தகுதிகள் ஆகும். ஒரு கையில் சத்தியத்தையும் மற்றொரு கையில் அஞ்சாமையையும் ஏந்தி நாம் முன்னேறிச் செல்லவேண்டும். சமய உணர்வு கலக்காத சத்தியத்தால் அபாயம் தான் ஏற்படும். சமயம் இல்லாத வாழ்க்கை கொள்கை இல்லாத வாழ்க்கை; கொள்கை இல்லாத வாழ்க்கையோ மாலுமி இல்லாத கப்பல்தான்.''

மாணவர்க்குப் பாராட்டு

இக்கூட்டத்திற்கு வருவதற்கு முன், காந்திஜி தங்கியிருந்த இல்லத்திற்குப் பின்னுல் உள்ள சேரிக்குத் திருமதி ஓயிட்ஹெட் காந்திஜியை அழைத்துச் சென்றிருந்தார். சங்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்தச் சேரியில் தொண்டாற்றி, நல்ல, புரட்சிகரமான மாற்றங்களைச் செய்திருந்தார்கள். அவர்கள் செய்த சேவையைப் பாராட்டி காந்திஜி சொன்னர்: ''இந்தச் சேரியானது சென்னை நகரின் நடுமத்தியில் உள்ள சில பகுதிகளைக் காட்டிலும் சுத்தமாக இருக்கிறது. தூய்மைக்கும் ஒழுங்கிற்கும் அது ஒரு முன்மாதிரியாக இருக்கிறதென்றும் நான் தைரியமாகச் சொல்ல முடியும்.''

திருந்துவது முக்கியம்

அவர் தொடர்ந்து சொன்னர்: ''நகரங்களில் துப்புரவு செய்யும் வேலையானது நகராட்சிமன்றங்களின் வேலையென்று விட்டு விட்டு நாம் பேசாமல் இருந்து விடக் கூடாது. சமூக சேவைச் சங்கம் போன்ற அமைப்புக்கள் பொறுமையாக இதற்கு முயல வேண்டும். மக்களே அதிக முன்னேற்றம் வேண்டுமென்று முயன்றுலொழிய நகரசபைகள் செய்யக்கூடியது மிகவும் சொற்பமே. அதிகாரிகளின் மிரட்டல்கூடப் பயன்தராது. ''பட்டாக்கத்தியைக் காட்டிக் குடிகாரனுடைய குடிப்பழக்கத்தை நிறுத்துவதைவிட அவன் குடிகாரனுகவே இருந்து விட்டுப் போவது நல்லது,'' என்று ஒரு முனிவர் கூறினர். அவருடைய கருத்தை நான் ஏற்கிறேன். ஒரு மனிதனைச் சீர்திருத்த நாம் எவ்வளவோ முயன்றும் அவன் சாகும்வரை குடித்தே தீருவேன் என்று சொன்னுல் நாம் அவனை விட்டு விட வேண்டியது தான். நம்முடைய ஆலயங்களில் கூடத் துப்புரவு இல்லை. அதற்காக அவைகளையும் அரசாங்கத்தின் வசமோ நகரசபைகளின் வசமோ விட்டுவிட எண்ணக்கூடாது. பள்ளிக்குச் சென்றவுடன் மாணவர்கள் ஆலயங்களை மறந்து விடுகிறர்கள். நாம் இப்பள்ளிக்குத் தகுதி

உள்ளவர்களாக வேண்டுமானால், கல்வி முறையையே புரட்சி கரமாக மாற்றி அமைக்க வேண்டும். நாம் ஒரு தவறான கல்வி முறைக்கு ஆட்பட்டிருக்கிறோம்; இதற்காக அடுத்த சந்ததியினரின் பழிச் சொல்லுக்கு நாம் ஆளாக நேரும்.''

3-ஆம் வகுப்பு பயணம்

மூன்றாவது வகுப்பில் பயணம் செய்வோருடைய துயரைப் பற்றிக் குறிப்பிடுகையில் ''உங்களுடைய வெள்ளைச் சட்டைகளைப் பார்த்து விட்டுச் சிலர் தங்களைத் தாழ்ந்தவர்கள் என்று எண்ணிக் கொள்வார்கள். அவர்கள் மீது அதிகாரம் செலுத்தக் கிளம்பி விடாதீர்கள். அப்படிச் செய்தீர்களானால், நீங்கள் சமூகத் தொண்டு செய்வதற்குத் தகுதியானவர்களல்ல'', என்று அறிவுரை சொன்னார் அண்ணல். இக்கூட்டத்தில் ராவ்பகதூர் டி. விஜயராகவாச் சாரியார் நன்றி கூறினார்.

17-2-16:

தாய்மொழிக் கல்வி

மறுநாள் சென்னையிலிருந்து காந்திஜி புறப்படுவதற்கு முன், மாலையில் கிறித்துவக் கல்லூரி ஆண்டர்சன் மண்டபத்தில், ''நமது கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தாய் மொழி பாடமொழியாக இருக்கலாமா?'' என்பது பற்றிக் கிறித்துவக் கல்லூரியில் இருந்தபல்வேறு சங்கங்களின் கூட்டு ஆதரவில் ஒரு விவாத அரங்கு நடைபெற்றது. இதிலிருந்து, ''தாய் மொழி பாடமொழியாகலாமா?'' என்ற கேள்வி 1916-க்கு முன்பிருந்தே தமிழகத்தில் இருந்து வருகிறது என்பது தெரிகிறது. ஒரு முன்னேற்றம் இன்று ஏற்பட்டிருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகளில் தாய் மொழி மூலம் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதை எல்லாத் தரப்பினரும் ஒப்புக் கொண்டு அது செயலுக்கும் வந்து விட்டது. ''கல்லூரியில் தாய் மொழி மூலம் கல்வி கற்பிக்கலாமா?'' என்பதில் கூட நாம் ஒரு முடிவுக்கு வந்தாலும் செயலுக்கு வந்தும் வராமலும் இருக்கிறோம். இதிலிருந்து, சில சிக்கல்களைக் காலம் தான் தீர்க்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் புலப்படுகிறது.

மேற்கண்ட விவாதத்தில் ஏ. எஸ். ராஜம், இராம நாதன், முத்துகோபாலன், முகமது ஹனீப் முதலிய மாணவர்

கள் பங்கு கொண்டனர். கூட்டத்திற்குத் தலைமை வகித்திருந்த அண்ணல் இறுதியில் தமது கருத்துக்களை எடுத்துக் கூறினார். ''கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தாய் மொழி தாய்மொழியைப் பாட மொழியாக்கினால், இன வேறுபாட்டுச் சிக்கல் எதுவும் வந்து விடாது. நமது நாட்டில் வாழ்ந்தவர்கள் தங்களை ஒரே நாட்டு மக்களாகவே கருதினார்கள். ஆங்கிலேயர் வருவதற்கு முன்னமேயே நாம் ஒரு தேசத்தினராக, ஒரு மதத்தினராக வாழ்ந்தோம். நாடு முன்னேற்றம் அடைவதற்காகவும் மக்கள் நலமடையவும் இந்தச் சிக்கலை அதிகாரத்தில் இருப்பவர்கள் விரைவில் தீர்த்து வைக்க வேண்டும். தாய் மொழி மூலம் கல்வி புகட்டுவதற்கு எதிராகக் கூறப்படும் வாதங்களெல்லாம் ஆதாரமோ அடிப்படையோ இல்லாதவை. ஆகவே மக்களே இந்தச் சிக்கலைத் தீர்ப்பது தான் மிகச் சிறந்த வழி. மக்களுக்குத் தாய்மொழி மூலம் அறிவு புகட்டும் போது, ஆளுவோர் தாமாகவே நிர்வாக நலனை முன்னிட்டு, தாய்மொழியைக் கற்கத் தொடங்கிவிடுவார்கள். நமது தாய்மொழி ஆங்கிலத்தைப் போன்று முன்னேற்றமான நிலையில் இல்லை யென்றால் அதில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவது நமது கடமையல்லவா? தாய்மொழி வளராத வரை நாம் வேண்டும் சுயாட்சி ஒரு நாளும் கிட்டாது.''

புனாவிற்குப் புறப்பாடு

இவ்வாறு, அன்னிபெசண்டுடன் ஒரு பெரிய ''போர்'' நடத்திச் சென்னைக் களத்தில் வாகைசூடி, மக்களின் நல்லாதரவைப் பெற்று, தமது எதிர்கால சேவை எவ்வாறு இருக்கும் என்பதற்கு அறிகுறியான திட்டங்களுக்கு நிலையான இலக்கியம் போன்ற விளக்க உரைகளை நிகழ்த்தி முடித்துவிட்டு 17-ஆம் தேதியன்று இரவு புனாவிற்கு காந்திஜி புறப்பட்டுச் சென்றார். தமிழகத்திற்கு, ஏன், இந்தியாவிற்கே இது ஒரு கொள்கை விளக்கப் பயணமாக அமைந்தது.

—:o:—

இந்திய அரசியலில் 1916-ஆம் ஆண்டின் பிற்பாதியை திலகர் - பெசண்ட் - ஜின்னாகாலம் என்று சொல்லலாம். ஏராளமான மாநாடுகளில் இவர்களுடைய சங்கநாதம்தான் கேட்டுக் கொண்டிருந்தது. முஸ்லிம் லீகிற்கும் காங்கிரசிற்கும் அப்போது பிணக்கு இல்லை. இந்தியாவில் காலடி வைத்த பின், சுமார் இரண்டு ஆண்டுகள் இந்தியா முழுவதிலும் சுற்றுப் பயணம் செய்து நிலவரத்தை அறிந்து ஆங்காங்கு சொற்பொழிவுகளும் நிகழ்த்தி வந்த காந்திஜி, 1917-ஆம் ஆண்டில்தான் செயலில் இறங்கினார். தென்னப்பிரிக்காவில் தாம் நடத்திய போராட்டத்தின் ஒரு தொடர்ச்சி போன்று முதன் முதலாக ஒப்பந்தக் கூலிகளின் சிக்கலை அவர் எடுத்துக் கொண்டார். தனது குடியேற்றநாடுகளுக்கு ஒப்பந்தக் கூலிகளை அனுப்புவதை பிரிட்டன் அரசு நிறுத்திவிட வேண்டும் என்ற கோரிக்கையை அரசின் முன் வைத்து அதை அது நிறைவேற்றுவதற்கு ஒரு இறுதி நாளையும் குறிப்பிட்டார். மக்களுடைய ஆதரவு வலுக்கவே ஒப்பந்தக் கூலிகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதைத் தற்காலிகமாக வைசிராய் நிறுத்தினார். (பின்னர், 1920 ஜனவரி முதல் தேதியிலிருந்து இது அடியோடு நிறுத்தப்பெற்றது.) தென்னப்பிரிக்காவில் காந்திஜி கனவு கொண்டிருந்த ஒரு குறிக்கோள் இவ்வாறு அவர் இந்தியா வந்தபின் இனிது நிறைவேறியது.

முதல் வெற்றி

அனைத்து இந்தியாவிலும் பரவி, பிரிட்டனுடைய நெஞ்சத்தைக் கலக்கிய இயக்கம், அப்போது ஹோம் ரூல் இயக்கம் தான். வடக்கே மகாராஷ்டிரமும் தெற்கே தமிழகமும் தான் ஹோம் ரூல் இயக்கம் மிகவும் தீவிரமாகப் பரவி இருந்த பகுதிகள். அதனால் தான், அப்போது சென்னையில் இருந்த அரசு நீதிக்கட்சியின் உதவியை நாடியது. ஹோம்ரூல் இயக்கத்

ஹோம்ரூல் இயக்கம்

தின் காரணமாக அன்னிபெசண்டும் அவருடைய ஆதர வாளர்களும் கைதாகி, அப்போது இந்தியா அமைச்சராக இருந்த மாண்டேகு குறுக்கீட்டின் பேரில், சிறிது காலங் கழித்து விடுதலையானார்கள்.

ஒரே ஒரு முறை

ஒரே ஒரு முறை காந்திஜி, எந்தவிதமான முன்னறிவிப் பும் இல்லாமல் சென்னைக்கு வந்திருக்கிறார். 1915-இல் இந்தியாவிற்கு அவர் நிலையாகத் திரும்பி வந்த பின், பொது மக்களுடைய ஆரவாரமான வரவேற்பு எதுவும் இல்லாமல், அவர் சென்னை மாநகருக்குள் நுழைந்தது 1917-இல் அவர் சென்னைக்கு வந்தாரே அந்த ஒரே ஒரு முறைதான்.

14–9–17

சென்னை வருகை

சம்பரான் சத்தியாக்ரகத்தை காந்திஜி தொடங்கிய பின் இந்திய அரசியல் வானில் சுடர் விட்ட பெரிய நட்சத் திரங்களில் காந்திஜியும் ஒருவரானார். சம்ப ரான் போராட்டத்தில் அண்ணல் பங்கு கொண்டு அதில் வெற்றியடைந்தது உலகம் அறிந்த ஒரு பேருண்மை. இந்தியாவில் முதன் முதலாக அவர் மேற்கொண்ட அறப்போர் இதுவே. இந்த அறப்போரின் இறுதியில், விசாரணைக்குழு ஒன்று நிறுவப் பெற்று, அதில் காந்திஜியும் ஓர் உறுப்பினராக நியமிக்கப் பெற்றார். ராஞ்சியில் இந்த விசாரணைக்குழு கூடுவதாக இருந்தது. அதில் பங்கு கொள்வதற்காக ஆமதாபாத்திலிருந்து ராஞ்சிக்குச் சென்ற வழியில் அவர் 1917 செப்டம்பர் 14-ஆம் தேதியன்று காலை சென்னை வந்து சேர்ந்தார்.

நியூ இந்தியா செய்தி

இந்த வருகை செய்தியாளர்களுக்காயினும் - அவர் வருவதற்கு முன் - தெரியுமா என்பது ஐயுறத்தக்கதாயிருக் கிறது. ஏனெனில், பத்திரிகைகளில் அவர் வந்தைப் பற்றிய செய்தி எதையுங் காண வில்லை. அன்னிபெசண்ட் நடத்திய ''நியூ இந்தியா'' எப்படியோ அதன் 14-9-17 இதழில் ''திரு எம். கே. காந்தி'' என்ற தலைப்பில் கீழ்க் கண்ட செய்தியை வெளியிட்டிருந்தது: ''நம்முடைய மதிப்பிற்குரிய தேச மகன் ஆமதாபாத்திலிருந்து இன்று காலை சென்னை வந்து சேர்ந்தார். நாளை மாலைவரை அவர்

இங்குத் தங்கியிருக்கிறார். நாளை அவர் பலரைச் சந்தித்துப் பேசுவார்.''

சிறையில் பெசண்ட்

இவ்வளவுதான் அந்தச் செய்தி கூறியது. காந்திஜி இங்கு வந்த சமயம் பெசண்ட், வாடியா, அருண்டேல் ஆகியோர் சிறையில் இருந்தார்கள். அவர் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றதற்கு மூன்று நாட்கள் கழித்து, அதாவது செப்டம்பர் 18-ஆம் தேதியன்று, அவர்கள் விடுதலை அடைந்தார்கள்.

பயண சிரமம்

இந்த வருகையின்போது, சென்னையில் அவர் யார் யாரைச் சந்தித்து என்ன பேசினார் என்பது தெரியவில்லை. அவர் யாருடைய இல்லத்தில் தங்கினார் என்பதும் தெரியவில்லை. (அநேகமாக அவர் ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் தான் தங்கியிருக்கக் கூடும் என்று யூகிக்க இடம் உண்டு.) ஆமதாபாத்திலிருந்து பம்பாய்க்குப் போய், பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்து, சென்னையிலிருந்து புனாவிற்குப் போய், புனாவிலிருந்து ராஞ்சிக்கு அவர் சென்றிருக்கிறார். ராஞ்சியிலிருந்து அவர் மகன்லால் காந்திக்கு எழுதிய கடிதம், இந்த வருகையில் அவர் பட்ட சிரமத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறது. ''நான் உன்னைவிட்டு வந்து பன்னிரெண்டு நாட்களாகின்றன. பதினேழு நாட்களில் ஒன்பது நாட்களை நான் இரயிலில் கழித்திருக்கிறேன். இரண்டே இரண்டு இரவுகளைத் தான் ஒரு நண்பரின் இல்லத்தில் கழித்தேன். இவ்வாறு இருந்தும், என் உடல் நலம் பாதிக்கப்பெறவில்லை. பதினேழு நாட்கள் கழித்து இன்றுதான் எனக்குச் சரியான உணவு கிடைத்திருக்கிறது,'' என்று அவர் எழுதியிருந்தார்.

உறுதியான விவரங்கள்

பொதுவாக இந்தச் சுற்றுப்பயணத்தைப் பற்றி உறுதியாகத் தெரியும் விவரங்கள் : செப்டம்பர் 11-ஆம தாபாத்திலிருந்து சென்னைக்கு காந்திஜி புறப்பட்டிருக்கிறார். செப்டம்பர் 14-சென்னை வந்து சேர்ந்திருக்கிறார். செப்டம்பர் 17-புனா போய்ச் சேர்ந்திருக்கிறார். ஆகவே அவர் 15-ஆம் தேதியன்று இரவுதான் இங்கிருந்து புறப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிகிறது.

பம்பாயிலிருந்து சென்னைக்கு வந்தபோதும் சென்னையிலிருந்து திரும்பிச் சென்றபோதும் இரயில் பயணத்தில் அண்ணல் பட்ட சிரமத்தின் எதிரொலியாய்,

இரயில் பயணம்

பொதுவாக மூன்றும் வகுப்பு இரயில் பயணத்தில் இருந்த சிரமங்களை விளக்கி, ''தி லீடர்'' என்ற செய்தித்தாளின் ஆசிரியருக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதினர். அது மட்டுமல்லாது இக் கடிதத்தின் நகலையும், இரயில் பயணத்தில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்களைப் பற்றிய யோசனைகளையும் டில்லி வாணிக, தொழில்துறைச் செயலாளருக்கு எழுதி அனுப்பினர்.

புனாவிற்கு இங்கிருந்து புறப்பட்டபோது, சென்னையில் அவர் ஏறிய இரயில் பெட்டி சிறியது. ஒன்பது பேருக்குத்தான் அதில் அமர வசதி இருந்திருக்கிறது. ஆனால் 12 பேர் இருந்திருக்கிறார்கள். ஆகையால் காந்திஜி ஏறியபோது, அதில் உட்காருவதற்கே இடமில்லை. அமர்ந்திருந்தவர்களிடம் கூறி, காந்திஜி உட்காருவதற்கு ''ஒரு நண்பர்'' இடம் பிடித்துத் தந்திருக்கிறார். இந்த நண்பர் யாரென்று தெரியவில்லை. (ஒரு வேளை ஜி. ஏ. நடேசனாக இருக்குமோ?) காந்திஜி எழுதிய கடிதத்தில் ''இந்தப் பெட்டியில் கக்கூசு என்று ஒன்றைச் சொன்னார்களே அதைத் தெரியாமல் அவ்வாறு அழைத்துவிட்டார்கள்,'' என்று வேடிக்கையாகக் குறிப்பிட்டிருக்கிறார். ''அதில் குழாய் இருந்தது, ஆனால் தண்ணீர் இல்லை. பெரிய தொற்று நோய் வரும் அளவுக்கு அது அசுத்தமாக இருந்தது என்று நான் சொன்னால், யாரும் அதை மறுக்க முடியாது'' என்றும் கூறியுள்ளார். அவர் மேலும் கூறினார்: ''அந்தப் பெட்டியே ஆபாசமாகத்தான் இருந்தது. பலகை எல்லாம் ஒரே தூசி மயம். அந்தப் பெட்டி, அதன் 'வாழ் நாளில்' சோப் அல்லது தண்ணீரைக் கண்டிருக்குமா என்பது ஐயமே.''. காந்திஜி சென்ற இந்தப் பெட்டியில் நாகரிகமான இரண்டு தமிழ்க் கனவான்கள் சென்றிருக்கிறார்கள். அந்தக் காலத்தில் சென்டிரல் இரயில்வே நிலையத்தில் டிக்கெட்டுகள் வாங்குவதற்குப் பணம் இலஞ்சமாகக் கொடுக்க வேண்டியிருந்ததாக இந்தப் பெட்டியில் சென்ற சக பயணி ஒருவர் காந்திஜியிடம் கூறியிருக்கிறார்; மற்றொரு பயணியோ தாமே ஐந்து ரூபாய் கொடுத்ததாக இதற்குச் சான்று பகர்ந்திருக்கிறார்.

திரும்பிய போது

போருக்கு ஆள் திரட்டல்

அகமதாபாத் ஆலைத்தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தையும் கேடா விவசாயிகள் அறப்போரையும் நடத்தி, பல கடும் திருப்பங்களைச் சமாளித்து, அவர்களுக்கு நீதி கிடைக்க உதவி விட்டு மற்றொரு தர்மசங்கடமான பணியில் அண்ணல் இறங்க வேண்டியதாகப் போயிற்று. முதல் உலகப் போர் முயற்சியில் காந்திஜியின் ஒத்துழைப்பைக் கோரி 1918-ஏப்ரல் மாதம் டில்லியில் நடைபெற்ற மாநாட்டிற்கு அவரை அதிகார வர்க்கத்தினர் அழைத்தார்கள். காந்திஜியும் அம்மாநாட்டில் பங்கு கொண்டு, போருக்கு ஆள் திரட்டுமாறு கேட்டுக் கொண்ட தீர்மானத்தை ஆதரித்தார். வழக்கம் போன்று பேச்சுடன் நின்றுவிடாது செயலில் உடனே இறங்கி குசராத்தில் ஒவ்வொரு கிராமமாகச் சுற்றுப்பயணம் செய்து, படைக்கு ஆள் திரட்டினார். உயிர் பிழைப்பதே பெரும்பாடாகப் போகும் அளவிற்கு அவருடைய உடல் நலம் சீர் கெட்டும் அவர் முன் வைத்த காலைப் பின் வைக்கவில்லை.

வேண்டிய மாண்டேகு அறிக்கை

போர் முடிந்தவுடன் இந்தியாவில் மேற்கொள்ள வேண்டிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் பற்றி இந்தியா அமைச்சரான மாண்டேகும் வைசிராய்செம்ஸ்போர்டும் தயாரித்த அறிக்கை 1918-ஜூலையில் வெளியாயிற்று. நீண்டகால மாகத் தலைவர்களும் மக்களும் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த அறிக்கை இது. அரசியல் வாதிகளில் ஒரு சாரார் இந்த அறிக்கையை எதிர்த்தனர்; மற்றொரு சாரார் முழுமனதோடு ஆதரித்தனர். ஆனால் காந்திஜியோ ''இந்த அறிக்கை மொத்தமாகத் தள்ளி விடக் கூடியதல்ல; இதை அனுதாபமாக நாம் ஆராய வேண்டும். பிரிட்டனுடைய வெற்றிக்காக நிபந்தனை எதுவும் இன்றி இறுதிவரை போராட வேண்டும். அதே

போன்று நமக்கு வேண்டிய சீர்திருத்தங்களைப் பெறவும் இறுதிவரை போராட வேண்டும்'', என்ற கருத்தைத் தெரிவித்தார். இதைப் பற்றி ஆராய பம்பாயில் ஸையத் ஹாசன் இமாம் தலைமையில் விசேடமாகக் கூடிய காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானமும் இந்தியாவில் பொறுப்பாட்சி முறையைத் தொடங்கி வைக்க மாண்டேகும் செம்ஸ்போர்டும் மேற்கொண்ட முயற்சியை ஒருபுறம் பாராட்டிவிட்டு, மற்றொரு புறம், மொத்தத்தில் அச்சீர்திருத்தங்கள் ஏமாற்றம் அளிப்பதாகக் கூறியது. காங்கிரஸ் கருத்தை பிரிட்டனில் பொதுமக்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் எடுத்துச் சொல்லுவதற்காகத் திலகர் பிரிட்டனுக்குச் சென்றார். அண்ணலுக்கோ இன்னும் எழுந்து நடமாட முடியாத நிலை.

ரௌலட் சட்டம்

போர்க் காலத்தின் போது அளித்த வாக்குறுதிகளையெல்லாம் போர் முடிந்த பின்பு பிரிட்டன் மறந்தது. அது மட்டுமல்லாமல், இந்தியாவில் சுயாட்சிக் கோரிக்கையும் அதற்குரிய போராட்டமும் வலுக்கும் என்பதை உணர்ந்து அதற்கு முன்னெச்சரிக்கையாகத் தன்னை ஆயத்தம் செய்து கொள்ள விரும்பி, இந்தியாவில் உள்ள அரசாங்க எதிர்ப்புச் சக்திகளைப்பற்றி ஆராய, வெள்ளை நீதிபதியான ரௌலட் தலைமையின் கீழ் ஒரு குழுவை நியமித்தது. இக்குழு நாடெங்கும் சுற்றுப்பயணம் செய்தபின், இந்திய அரசிற்கு அளித்த அறிக்கையில், நாடெங்கும் புரட்சிக் குழுக்கள் இருந்து வன்முறைகளின் மூலம் அரசைக் கவிழ்க்கச் சதி செய்து வருவதாகவும் தனிச்சட்டம் ஒன்றை இயற்றி அவைகளை அடக்காவிடில் ஆட்சி குலைந்துவிடும் என்றும் கூறியிருந்தது. ஆகவே, கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியவர்களை அடக்குவதற்காகப் புதுச்சட்டங்களை இயற்றித் தனது நிலையை வலுப்படுத்திக் கொள்ள அரசு ஏற்பாடு செய்தது. காலாவதியான இந்தியப் பாதுகாப்புச் சட்டத்திற்கு வேறு உருவத்தில் உயிர் கொடுக்கவும் அரசியல் குற்றவாளிகள் சம்பந்தமாகக் கிரிமினல் சட்டத்தில் திருத்தங்கள் செய்யவும் மசோதாக்கள் (ரௌலட்டின் பெயரில்) இந்தியச் சட்டசபையில் கொண்டு வரப்பட்டன. நாடு முழுவதுமே இதைக் கண்டு ஆத்திரமடைந்தது. அரசாங்கம் இவ்வாறு ஐயுற்ற அராஜகவாதிகள் (அதன் கணக்குப்படியே) முந்நூறு பேர்கள்தாம். இந்த முந்நூறு பேர்களுக்காக முப்பதாயிரம் பேர்களைப் பாதிக்கக் கூடிய

ஒரு சட்டத்தை மக்கள் எவ்வாறு சகிப்பார்கள்? அச்சமயம் முஸ்லிம்களுக்குத் தனியாக ஒரு குறை இருந்தது. தோல்வியடைந்த துருக்கி கலீபை பிரிட்டன் நடத்திய முறையைக் கண்டு அவர்கள் கொதித்தெழுந்தனர்.

காந்திஜி எழுந்தார்

உடல் நலம் இல்லாது சபர்மதி ஆசிரமத்தில் இருந்த போதிலும் காந்திஜியால் இவ்வளவு பெரிய அநீதியைக் கண்டு வாளா இருக்க முடியவில்லை. ஒரு சத்தியாக்ரகப் பிரதிக்ஞையை அங்கேயே தயார் செய்து கொண்டு பம்பாய்க்கு வந்து சத்தியாக்ரக சபை ஒன்றை அமைத்தார். சத்தியாக்ரகப் பிரதிக்ஞையில் கையெழுத்துக்கள் வாங்கும் வேலை தீவிரமாகத் தொடங்கிற்று. பின்னர் டில்லிக்கும் சென்றார். இதைக் கண்டெல்லாம் அரசாங்கம் தனது நடவடிக்கைகளை நிறுத்திவிடவில்லை. இந்தியக் கிரிமினல் சட்டத்திருத்த மசோதா நிர். 1, கிரிமினல் சட்ட அவசர அதிகார மசோதா ஆகியவைகளை அரசாங்கம் கொண்டு வந்தது; இவற்றில் இரண்டாவது மசோதா காந்திஜி (1919-இல்) சென்னைக்கு வந்திருந்த போது சட்டமாயிற்று.

18-3-19

வருகை முக்கியம்

சென்ட்ரல் இரயில் நிலையத்தில் அண்ணல் வந்து இறங்கிய போது வழக்கம் போன்று பெருங்கூட்டம் இருந்தது. காந்திஜி இதய நோயின் காரணமாக மிகவும் வலுவிழந்து இருப்பதாகவும் பொது மக்கள் இரயில் நிலையத்தில் கூடி அவருக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடாது என்றும் முதலிலேயே அறிவிக்கப் பெற்றிருந்தும் ஏராளமான பேர் அண்ணலைக் காண்பதற்காக இரயில் நிலையத்திற்கு வந்து கூடியிருந்தனர். பெரிய அரசியல் நெருக்கடி ஏற்பட்டிருந்த ஒரு காலத்தில், சத்தியாக்ரக இயக்கத்தை மேற்கொண்டு அண்ணல் வந்ததால் நாளிதழ்களும் அவருடைய வருகைக்கு இதுவரை அளித்ததைவிட அதிகமான முக்கியத்துவத்தை அளித்தன. அவருடைய வருகையை ஒரு பத்திச் செய்தியாக வெளியிட்ட நாளிதழ்களெல்லாம் கொட்டை எழுத்துக்களில் மூன்று பத்தித் தலைப்பிட்டு இம்முறை வெளியிட்டன. இரயில் நிலையத்தில் மக்கள் திரளாகக் கூடியிருந்தனரென்றாலும், மிகுந்த கட்டுப்பாட்டுடனும் அமைதி

யுடனும் நடந்து கொண்டார்கள். ரௌலட் சட்ட எதிர்ப்புக் குழுவின் முக்கிய தலைவர்களில் ஒருவரான சரோஜினிதேவி ஏற்கனவே சென்னைக்கு வந்திருந்தாரா தலால் அவரும், சென்னை ரௌலட் சட்ட எதிர்ப்புக் குழுவைச் சேர்ந்த கஸ்தூரிரங்க ஐயங்காரும்; ஏ. ரெங்க சாமி ஐயங்கார், எஸ். சத்தியமூர்த்தி ஆகியோரும் மற்றும் சிலரும் காந்திஜிக்கு மாலையிட்டு வரவேற்றார்கள். வர வேற்புகளும் மிக அமைதியாகவே நடைபெற்றன.

இந்தச் செய்தியை வெளியிட்டிருந்த ''சுதேசமித்தி ரன்'' அண்ணலை இயேசுவுடன் ஒப்பிட்டிருந்தது. ''கிறிஸ்து மத ஸ்தாபகராகிய இயேசுநாதர் இயேசுவுடன் தமது சிஷ்ய ஜனங்களைப் பார்த்து என்னைப் ஒப்பிட்டனர் பின்பற்ற இஷ்ட முள்ளவர்கள் சிலுவையை எடுத்துக் கொண்டு வாருங்கள் என்று சொன்னதாக ஐதிகம் இருக்கிறது.... காந்தி ஸத்ய ஸ்வ ரூபி... ஆகையால் மற்றவர்களுடைய வார்த்தையைவிட அவருடைய வார்த்தையைத்தான் நாம் பின்பற்ற வேண் டும். அவர் சிலுவையைச் சுமந்து தம் பின்வருமாறு சொல்கிறார். பாரத மக்கள் தன்னல மறுப்புடன் அப்படிச் செய்யத் துணிவார்களா?'' என்று ''சுதேசமித்திரன்'' கேட்டிருந்தது.

ரௌலட் சட்டத்தை சாத்விக முறையில், சத்யாக்ரக முறையில் எதிர்க்க வேண்டும் என்று நாடு முழுவதற்கும் காந்திஜி அறிவித்திருந்தார். இதில் பங்கு வருமுன்பே கொள்ள விரும்புவோர் கடைப்பிடிக்க வேண் கூட்டங்கள் டிய நியதிகளை ''சத்தியாக்ரஹ உறுதிமொழி'' என்ற பெயரில் தயாரித்தும் அவர் அறிவித் திருந்தார். இந்தச் சமயத்தில் தான் சத்தியாக்ரகம், சத்தி யாக்ரஹி என்ற பெயர்களெல்லாம் நாடு முழுவதும் பரவின. இந்தியாவிலுள்ள முக்கியமான நகரங்களிலெல்லாம், இந்தச் சாத்விகப் போராட்டத்தை ஆதரிப்பவர்களின் பொதுக் கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன; காந்திஜி வருவதற்கு முன்னரேயே சென்னை மாநகரிலும் நடந்தன. இந்தியாவிலேயே முதன் முதலாக ரௌலட் மசோதாவை எதிர்த்துச் சென்னையில் தான் கூட்டம் நடைபெற்றது.

காந்திஜி சென்னைக்கு வருவதற்குச் சில நாட்க ளுக்கு முன்பு ரௌலட் சட்டத்தை எதிர்த்தும்

சத்தியாக்ரக உறுதிமொழியை வலியுறுத்தியும் சென்னையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டபல பெரியோர்களில் வ. உ. சிதம்பரம்பிள்ளையும் ஒருவராவார். ஆன்மிக சக்தியின் பெருமையை அவர்எவ்வளவு நன்முக உணர்ந்திருந்தார் என்பதை அவர் அன்று ஆற்றிய சொற்பொழிவிலிருந்து காணலாம். "மிருக சக்தியைப் பெருக்குவதில் மேற்கு நாட்டார் திறமை சாலிகள். இந்த மிருக சக்திக்கும் ஆன்ம சக்திக்கும் நடை பெறும் இந்தப் போரில் ஆன்மசக்தியானது வெற்றிபெறுவது உறுதி. நாட்டின் உண்மையான பக்தர்கள் யார் என்பதை இனங்கண்டு கொள்வதற்கு இதுவே தகுந்த தருணமாகும். மகாத்மா காந்தி தலைமையின் கீழ் இந்தியா முழுவதும் சாத்விக எதிர்ப்பை மேற்கொள்வதற்கும் இதுவே கால மாகும். சாத்விக எதிர்ப்பில் நாம் உறுதியாக இருந்தாஸ் அது நாம் சுயாட்சி பெறுவதற்கு நிச்சயம் உதவும்." * என்று கப்பலோட்டிய தமிழர் கூறினர்.

வ. உ. சி.

இதே கூட்டத்தில் பேசிய தேசபக்தர் எஸ். சத்திய மூர்த்தியும் இவ்வாறே காந்திஜியின் ஆன்மிக சக்தியைப் பாராட்டிவிட்டு, வாழ்க்கையில் ஒரே ஒரு முறை கிடைக்கும் இந்த வாய்ப்பை நழுவ விட்டு விடக்கூடாது என்று கேட்டுக் கொண் டார். இதுவரை "கொரில்லாப் போரில்" ஈடுபட்டு வந்த கனவான்கள் இனியாகிலும் அதைக் கை விட்டு வெளிப்படையாகக் கொடி ஏந்தி காந்திஜி தலைமை யின் கீழ்ப் போராட முன்வருமாறும் பிறவி ஞானிகளுக்கே உரிய தேச பக்தி, தெளிந்த நோக்கு, தூர நோக்கு ஆகிய வைகளைக் கொண்ட மகாத்மா காந்தி பல நாட்கள் தூங்கா மல் கழித்து இச்சட்டத்தை எதிர்ப்பதற்கான வழியைக் கண்டிருப்பதாகவும் அவரை எல்லோரும் பின்பற்ற வேண்டு மென்றும் கேட்டுக்கொண்டார்.

சத்தியமூர்த்தி

இச்சமயம் சென்னை மாநகரில் சூத்தியாக்ரகத்தைப் பற்றி ஓயாது சண்டமாருதம் செய்து வந்தவர்களில் பெயர் பெற்ற தமிழறிஞரான எஸ். சோமசுந்தர பாரதியும், ஒருவர். "சத்தியாக்ரகம் என்ற சொல்லே சாத்விக எதிர்ப்பு என்று மொழி பெயர்ப்பது தவறு. ஏனெனில் சத்தியாக் கிரகத்தில் எதிர்ப்பு என்பதே இல்லை." என்று சோமசுந்தர

சோமசுந்தர பாரதி

* "ஹிந்து" 10—3—19 இதழ்

பாரதி கூறியது (இந்து 24-3-19) இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். 1919-இலேயே காந்திஜியின் தத்துவத்தை அவர் நன்முகப் புரிந்திருந்தார் என்பதற்கு இது ஒரு சான்முகும்.

ஆனலும் அண்ணலின் இத்திண்ணிய திட்டத்தை எதிர்த்தவர்களும் சென்னையில் இல்லாமற் போகவில்லே.

மிதவாதிகள் எதிர்ப்பு

சட்டசபையில் இயற்றப் பெற்ற ஒரு சட்டத்தை நேரடி நடவடிக்கையின் மூலம் (சாத்விகமாகக் கூட) எதிர்ப்பது அரசிய லமைப்பு முறையான செயலாகாது என்றும் சட்டசபைகளுக்கு உள்ளேயும் வெளியேயும் பேசியும் எழுதியும் இச்சட்டத்திற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கவேண்டுமென்றும் இவர்கள் கூறினர்கள். இவர்களில் பலர் சமுதாய ஏணியின் உயர் மட்டத்தில் இருந்தவர்கள். ரௌலட் (அவசர) மசோதா நியாய விரோதமானது என்பதை இவர்களும் ஒப்புக்கொண்டார்கள். இந்த மசோதா சட்டமாவதைத் தாங்களும் எதிர்ப்பதாகக் கூறினர்கள். ஆனலும், இந்தச் சட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க சத்தியாக்ரக இயக்கம் சரியான வழியல்ல வென்பது தான் இவர்களுடைய கருத்து. பிரிட்டன் பேரரசுக்கு விண்ணப்பிப்பதன் மூலம், இந்தச் சட்டத்தைத் தடுத்து விடலாம் என்பதும் இவர்களுடைய நம்பிக்கை. ஆகையால் காந்திஜி என்று சென்னை வந்து சேர்ந்தாரோ அன்றே இவர்கள் இவைகளையெல்லாம் தெரிவித்து ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார்கள். இம் மிதவாதிகளில், காந்திஜியின் அபிமானத்தையும் அன்பையும் பெற்றிருந்த ஜி. ஏ. நடேசன் ஒருவராவார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இதற்கு முன்பே சீனிவாச சாஸ்திரி, பானர்ஜி போன்ற அனேத்திந்தியப் புகழ்பெற்ற தலைவர்கள் ரௌலட் மசோதாக்களை எதிர்ப்பதற்குச் சத்தியாக்ரகப் போராட்ட முறையைக் கடைப்பிடிப்பது கூடாதெனத் தனி விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட்டிருந்தார்கள். ஆனல் இவர்களுக்கு மக்களுடைய ஆதரவு கிட்டவில்லே. இவர்களுடைய போக்கை வ. உ. சிதம்பரம் பிள்ளை, எஸ். சத்தியமூர்த்தி, கஸ்தூரிரங்க ஐயங்கார் போன்ற தேச பக்தர்கள் வன்மையாகக்கண்டித்தனர்.

டாக்டர் எஸ். சுப்பிரமணிய ஐயர் 1915-இல் காந்திஜியை வரவேற்றபோது சர் எஸ். சுப்ரமணிய ஐயராக

இருந்தவர். இவர் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகப் பதவி வகித்து ஓய்வு பெற்றபின், அனைத்திந்திய ஹோம் ரூல் லீகின் கௌரவத் தலைவராகவும் காங்கிரஸ் உறுப்பினராகவும் இருந்தார். 1917-ல் அன்னிபெசண்டையும் அந்த அம்மையாரின் ஆதரவாளர்களையும் அரசு கைது செய்தது இவருடைய மனத்தை மிகவும் புண்படுத்தியது. சர் பட்டத்தை உதறித்தள்ளியதுடன் நில்லாது சாத்விக எதிர்ப்பை மேற்கொள்ள வேண்டுமென்று கூறி, அதற்கான உறுதிமொழி ஒன்றையும் தாமே தயார் செய்தார்! ஆகையால் சத்தியாக்ரகத்திற்கு இவர் நல்ல உறுதுணையாக இருப்பார் என்று கருதி சென்னையில் அமைக்கப்பெற்ற சத்தியாக்ரக சபையின் துணைத்தலைவர் பதவியை வகிக்குமாறு இவரை காந்திஜி அழைத்தார். ஆனால் அப்பொறுப்பை வகிக்க இவர் மறுத்து விட்டார். இவருக்கு பெசண்டின் மீது பெரு மதிப்பு உண்டு; பெசண்ட் அம்மையாருடன் அரசியலில் நெருங்கிய தொடர்பு உண்டு. ஆகையால், சத்தியாக்ரக இயக்கத்தில் கட்சி வேறுபாடில்லை என்பதையும் எந்தக் கட்சியினராக இருந்தாலும் இந்த இயக்கத்தில் சேர்ந்தவுடன் அந்தக் கட்சியினராக இல்லாமற்போய் விடுகிறார்கள் என்பதையும் பெசண்ட் அம்மையாரிடம் தெரிவிக்குமாறு இவரை காந்திஜி கேட்டுக் கொண்டார்.

டாக்டர் ஐயர்

தீவிரம்

அரசியலமைப்பு முறையை அதிகம் வலியுறுத்திய மிதவாதிகளின் வாதம் மக்கள் முன்புமட்டுமல்லாது, சிந்தனையாளர்கள் முன்பும் எடுபடவில்லை. ''இந்து'' நாளிதழ் இவர்களுடைய போக்கைக் கண்டித்தும் ''கிண்டல்'' செய்தும் எழுதியது. மக்களுடைய உரிமைகள் மீது அத்துமீறி அரசு குறுக்கிட்டிருக்கிறதாகையால் தங்களுடைய மரியாதையைப் பாதுகாத்துக் கொள்வதற்கான் வழிகளை மக்கள் முடிவு செய்யவேண்டியவர்களாய் இருக்கிறார்களெனவும் அத்தகைய ஒரு சமயத்தில் காந்திஜி இங்கு வருவது மக்களுடைய கடமை உணர்ச்சியைத் தட்டி எழுப்புமென்றும் அது கூறி காந்திஜியின் நடவடிக்கையை எதிர்ப்பவர்கள் பேசிப்பார்த்துவிட்டார்கள் என்றும் இந்திய சட்டசபையிலும் வெளியிலும் சண்டப்பிரசண்டங்கள் நிகழ்த்தி விட்டதாகவும் ஆனால் நடவடிக்கை என்று வரும்போது அவர்

சிந்தனையாளர்

கள் தயங்குவதாகவும் அறிக்கை விடுவதற்கு முன் ''சத்தியாக்ரகம்'' என்றால் என்னவென்பதை இவர் கள் புரிந்து கொண்டால் நலமாய் இருக்கும் என்றும் கூறியது.

இவ்வாறு, சாதகமான ஒரு சூழ்நிலையில்தான் காந்திஜி சென்னைக்கு வந்தார். இங்கு வருவதற்கு முன்னரேயே சென்னை வாழ் மக்களுக்கு ஒரு செய்தியையும் அனுப்பியிருந்தார். அவர் வருவதற்கு முதல் நாள் மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஆந்திர கேசரி டி. பிரகாசம், எஸ். சத்திய மூர்த்தி ஆகிய பெரிய தேச பக்தர்கள் கலந்து கொண்ட ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்தில் இந்தச் செய்தியை சரோஜினிதேவி படித்தார். ''சத்தியாக்ரக உறுதிமொழி யில் கையொப்பமிடுபவர்களெல்லாம் அதன் வெற்றிக்கு உதவி விட மாட்டார்கள். அதன்படி நடப்பவர்கள் தான் உதவுவார்கள்'' என்று இந்தச் செய்தி கூறியது.

அனுப்பிய செய்தி

காந்திஜியும் வந்தார். அன்று மாலையே கடல்மடை திரண்டது போல கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. காந்திஜி முதன் முதலாகச் சென்னைக் கடற்கரைக் கூட்டம் ஒன் றில் பங்கு கொண்டது அன்றுதான். பொது வாக காந்திஜி பங்கு கொண்ட கூட்டங்களி லெல்லாம் கூட்டம் இருப்பது வழக்கமே என்றாலும், இக் கூட்டம் அதிகம். இங்கு உணர்ச்சிப் பெருக்கோடு வந்து அமர்ந்திருந்த அந்த மக்கள் கூட்டம் 'நாங்கள் அஹிம்சைப் போராட்டத்திற்குத் தயாராகி விட்டோம் என்று சொல்லா மல் சொல்லிக் கொண்டிருந்தது. இக்கூட்டத்திற்கு வந்தவர்களின் எண்ணிக்கை சுமார் பதினைந்து ஆயிரம் இருக்கலாம் எனச் செய்தித்தாள்கள் மதிப்பிட்டன. கணிச மான அளவு பெண்களும் இருந்தார்கள். இந்தக் காலத்தில் பதினைந்தாயிரம் என்பது ஒரு பெரிய எண்ணிக்கையாகத் தோன்றாது. ஆனாலும் 1919-இல் அது மாபெரும் கூட்டமே. சென்னைக்கு வருகை புரிந்த மகாத்மா காந்திக்கு வரவேற்பு அளிப்பதும், ரௌலட் சட்டத்தை எதிர்த்துப் போராடு வதற்கு சத்தியாக்ரக உறுதிமொழியை ஏற்பதைத் தவிர வேறு வழியில்லை என்பதை மக்களுக்கு எடுத்துக் கூறுவதுமே இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப் பெற்றதன் நோக்

பொதுக் கூட்டம்

கங்கள். காந்திஜியை சென்னைக்கு அழைத்தவரான கஸ்தூரி ரங்க ஐயங்காரே கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர். இக்கூட்டத்தில் பங்கு கொண்டவர்களில் ஏ. ரெங்க சாமி ஐயங்கார், சரோஜினி நாயுடு, ஜார்ஜ் ஜோசப், எஸ். சத்தியமூர்த்தி, சி. இராஜகோபாலாச்சாரியார் ஆகியோரை இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம். டாக்டர் கில்பெர்ட் ஸ்லேட்டர் என்ற ஐரோப்பியர்கூட இக்கூட்டத்திற்கு வந்திருந்தார்.

மகாத்மா பட்டம்

கூட்டத்தில் நிறைவேற்றப்பெற்ற தீர்மானத்திலுள்ள ஒரு வாசகத்தை நாம் கவனிக்க வேண்டும். மகாத்மா என்ற அடைமொழி இதற்குமுன் காந்திஜி சென்னைக்கு வந்தபோதெல்லாம் பயன்படுத்தப் பெறுமல் இந்த வருகையின் போதுதான் பயன் படுத்தப்பெற்றிருக்கிறது. ஆகவே, 1917-க்கும் 1919-க்கும் இடையில்தான் மகாத்மா என்ற பட்டம் சென்னையில் பயன்படத் தொடங்கியிருக்கிறது என்பது வெளிப்படை. உண்மையில் 1919-ஒத்துழையாமை இயக்கத்தின்போதுதான் இந்த அடைமொழி அதிகமாகப் பரவத்தொடங்கியது.

காந்திஜி முன்னுரை

காந்திஜிக்கு அப்போதும் நின்று கொண்டு பேச முடியாத நிலை. அவர் நீண்ட நேரம் பேசக்கூடாது என்றும் டாக்டர்கள் ஆலோசனை கூறியிருந்தார்கள். ஆகையால் முதலிலேயே தமது சொற்பொழிவைத் தம் செயலாளரான மகாதேவ தேசாயைக் கொண்டு எழுதி, அவரையே கூட்டத்தில் படிக்கச் சொல்லியிருந்தார். ஆனாலும், அந்த உற்சாகமான பெருங்கூட்டம் அவருடைய குரலிலேயே பேச்சைக் கேட்க ஆவலாக இருக்கும் என்பதை அவர் அறியாமல் இல்லை. ஆகையால் அவர் முன்னுரையாகச் சில நிமிடங்கள் பேசினார். இந்தச் சில நிமிடப்பேச்சையும் உரத்த குரலில் அவரால் பேச முடியாததால் பேச்சைத் தமது உரத்த வெண்கலத் தொண்டையில் சத்தியமூர்த்தி திரும்பக் கூறவேண்டியதாயிற்று. இம்முன்னுரையில், நாற்காலியில் இருந்து பேசுவதற்காக மன்னிக்கவேண்டுமென்று காந்திஜி கேட்டுக்கொண்டார். "சத்தியாக்ரகப் பிரதிக்ஞையில் கையெழுத்திடுமுன் எச்சரிக்கையாக இருங்கள். ஆனால் முடிவுசெய்து கையெழுத்திட்டுவிட்டீர்களோ அதிலிருந்து

பிறழாதீர்கள். உறுதிமொழியை நிறைவேற்ற உங்களுக்கு ஆண்டவன் உதவுவானாக!'' என்று கூறி முடித்துக் கொண்டார்.

மற்ற பொதுக்கூட்டங்களுக்கும் இக்கூட்டத்திற்கும் ஒரு பெரிய வேறுபாட்டை காந்திஜி இப்பேச்சில் (மகாதேவ் படித்தது) வலியுறுத்தினர். ''மற்ற கூட்டங்களிலெல்லாம் சொற்பொழிவாளர்களின் பேச்சைக் கேட்டுவிட்டு மக்கள் போய்விடலாம்; ஆனால் இந்தக் கூட்டத்தில் பேச்சைக் கேட்பது மட்டும் போதாது; செயலிலும் ஈடுபடவேண்டும். மக்கள் பெருந்தியாகமும் செய்ய நேரும் என்று அவர் கூறினர். அவர் மேலும் இவ்வுரையில் குறிப்பிட்டிருந்ததாவது:- ''நம்முடைய நாட்டின் சிறந்த தலைவர்கள் சிலர், இந்த சத்தியாக்ரக இயக்கம் நாட்டின் நலனிற்கு உகந்ததல்ல என்று கூறியிருக்கின்றனர். சாஸ்திரியார், நாட்டின் நலனிற்கு எல்லாவற்றையும் தியாகம் செய்த ஒரு அரசியல் வாதி. அவருடைய நேர்மைக்கும் நாணயத்திற்கும் ஈடு இணையே இல்லை. நாட்டுப் பற்றில் அவர்யாருக்கும் சளைத்த வரல்ல. சத்தியாக்ரக இயக்கத்தை எதிர்த்துக் கையொப்பமிட்டிருப்பவர்களுடன் எனக்குப் பிணைப்பு உண்டு. மிகுந்த மனவருத்தத்துடனேயே நான் அவர்களிடமிருந்து கருத்து வேறுபடவேண்டியிருக்கிறது. உற்றார் உறவினரை யெல்லாம் மீறிக்கூடச் சில சமயம் நாம் கட்டுப்படவேண்டிய ஒரு குரல் - மனச்சாட்சியின் குரல்-- இருக்கிறது அல்லவா? எதிர்ப்பு விஞ்ஞாபனங்களில் கையொப்பமிட்டவர்கள் மீது நான் கொண்டிருந்த மதிப்பு எவ்வகையிலும் குறையவில்லை. சத்தியாக்ரகிகளும் அவர்கள்மீது மனவருத்தங் கொள்ளக் கூடாது. அவ்வாறு மனவருத்தங் கொள்வது சத்தியாக்ரக உணர்வுக்கு விரோதமானது. தலைவர்களுக்குள் உண்மையான கருத்து வேறுபாடு தோன்றுவது எனக்கு மகிழ்ச்சியே அளிக்கிறது. நண்பர்களுக்குள் வேறுபாடு தோன்றுவது இன்னும் நல்லது. ஏனெனில் நாம் சரியானபடி நடந்து கொள்வதற்கு அது ஒரு எச்சரிக்கையாக இருக்கும்.'' இக்கூட்டத்தில் காந்திஜி பேசியபின், மூன்று பேர் மூன்று மொழிகளில் சொற்பொழிவாற்றினர்கள். மதுரையைச் சேர்ந்த ஜார்ஜ் ஜோசப் ஆங்கிலத்தில் பேசினர். வ. உ. சிதம்பரம்பிள்ளை தமிழிலும் ஹரிசர்வோத்தமராவ் தெலுங்கிலும் பேசினர்கள். நன்றி கூறியவர் டி. வி. கோபால்

செயல் முக்கியம்

சாமி முதலியார். காந்திஜி தங்கியிருந்த இல்லத்தில் சத்தியாக்ரக உறுதிமொழிப்பத்திரம் வைக்கப்பெற்றிருந்தது. சிலர் அங்கு வந்து கையொப்பமிட்டார்கள்.

19-3-19

மறுநாள் சென்னைத் தொழிலாளர் சங்கக் கூட்டத்தில் காந்திஜி பங்கு கொண்டார். டிராம்வேத் தொழிலாளர் வேலை நிறுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த தால், தொழிற்சங்க இயக்கம் விறுவிறுப் படைந்திருந்த சமயம் அது. பெயர் பெற்ற தொழிற் சங்கத் தலைவரான பி. பி. வாடியா தலைமையின் கீழ் நடைபெற்ற இக்கூட்டத்தைப் பார்த்த உடனேயே அண்ணலுக்குத் தென்னப்பிரிக்காவின் ஞாபகம் —தமிழ் ஒப்பந்தத் தொழிலாளிகளைப் பற்றிய நினைவு வந்து விட்டது. அவர்களுடன் தாம் தங்கியது, வாழ்ந்தது, உழைத்தது, உண்டது முதலியவைகளெல்லாம் தமது நினைவுக்கு வருவதாகக் கூட்டத்தில் அவர் உருக்கத்தோடு வெளியிட்டார். இத்தகைய தொழிலாளர்கள் கூட்டத்தில் தம்மால் தமிழில் பேச முடியவில்லையே என்றும் வருந்தினர்.

தொழிலாளர் கூட்டம்

''தொழிலாளர் இன்றிப் பணம் எதுவும் செய்துவிட முடியாது; பணம் இன்றித் தொழிலாளரும் எதுவும் செய்ய முடியாது. உங்களுடைய உழைப்பைக் கொண்டு உங்களுடைய தொழில் அதிபர்கள் அடையும் இலாபத்தில் ஒரு பகுதி உங்கள் மத்தியில் (ஊதியமாக) விநியோகமாகிறது. ஆகவே உங்களுடைய நிலைதான் அனுகூலமானது. ஆனால் அதே சமயம், நீங்கள் நிறைவேற்றி வைக்க வேண்டிய பல பொறுப்புக்கள் இருக்கின்றன. முதலாவதாக, நீங்கள் உண்மையானவர்களாய் இருக்க வேண்டும். அவ்வாறு உங்களிடம் உண்மை ஒளிவிடுவதற்கு நீங்கள் படித்தவர்களாய் இருக்க வேண்டும். எவ்வளவு வயதானாலும் கற்கமுடியும், கற்றல்தான் உங்களுடைய கடமைகள், உரிமைகள் என்ன வென்பது உங்களுக்குத் தெரியும். குடியிலும் சூதாட்டத்திலும் பணத்தை இரைக்க விரும்புகிறீர்களா?'' அல்லது அப்பணத்தை நீங்களும் உங்கள் குழந்தைகளும் கற்பதில் செலவிடப் போகிறீர்களா?'' என்று காந்திஜி தொழிலாளர்களைக் கேட்டார்.

கற்றல் முக்கியம்

20-3-19

மறுநாள் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், மிகவும் பலவீனமான உடல் நிலையில், சிரமத்தோடு சென்னைக்கு வந்து, சத்யாக்ரக இயக்கத்தை வலுப்படுத்தி யதற்காக, அண்ணலுக்கு நன்றி தெரிவிக்கப் பட்டது. அந்தச் சமயத்தில் சென்னையைச் சேர்ந்த ஆந்திரர் பி. என். சர்மா - மத்திய சட்ட சபையில் உறுப்பினராக இருந்தவர் அதிலிருந்து பதவி விலகியதைப் பாராட்டுவது இக்கூட்டம் கூட்டப் பட்டதன் ஒரு நோக்கம். ரௌலட் மசோதாக்களுக்கு அங்கீகாரம் அளிக்கக்கூடாதென்று வைசிராயைக் கேட்டுக் கொள்வது மற்றொரு நோக்கம். திருவல்லிக்கேணி கடற் கரையில் இக்கூட்டம் நடைபெற்ற அன்று வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது; மழை பெய்வதற்கான அறிகுறி கள் இருந்தன. ஆனாலும் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூட்டத்திற்கு வந்து குழுமியிருந்தது சத்தியாக்ரக இயக்கத்தில் மக்களுக்கிருந்த ஆர்வத்தை மீண்டும் எடுத் துக் காட்டிற்று. இக்கூட்டத்தில் சத்தியாக்ரக இயக் கத்தை எதிர்த்து அறிக்கை விட்டவர்களில் கூடச் சிலர் கலந்து கொண்டார்கள். சேலத்தைச் சேர்ந்த சி. விஜய ராகவாச்சாரியார் தலைமை வகித்தார். மகாத்மா காந்தியே இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கியிருக்க வேண்டுமென்றும் அவருடைய உடல் நிலையின் காரணமாகவே தாம் அப் பொறுப்பை ஏற்றிருப்பதாகவும் அவர் சொன்னார். சரோஜினிதேவி, டி. வி. கோபாலசாமி முதலியார், எஸ். சோமசுந்தரபாரதி (இவர் தமிழில் பேசினார்), டாக்டர் அவதானுலு, மீர்சுல்தான் மொய்தீன் சாகிப் ஆகியோரும் பேசினார்கள். காந்திஜிக்கு நன்றி தெரிவித்து எஸ். சத்திய மூர்த்தி தீர்மானங் கொண்டுவர சேலத்தைச் சேர்ந்த டி. ஏ. ஆதிநாராயண செட்டி ஆதரித்தார்.

•

சத்தியாக்ரகத்தை மறுத்து அப்போது கூறப்பட்டு வந்த கருத்துக்களுக்கு இந்தக் கூட்டத்தில் காந்திஜி மறுமொழி அளித்தார். சத்தியாக்ரகியின் ஆயுதங்கள் சத்தியமும் அஹிம்சையுந்தானாகையால், வன் முறை நிகழ்ந்துவிடுமென்று அஞ்சவேண்டிய தில்லை என்று அவர் கூறினார். ஒரு சத்தியாக் ரகி என்னென்ன குணம்சங்களைக் கொண்டவனாய் இருக்க

காந்திஜி விளக்கம்

வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்தினர். 1. எத்தகைய இன்னல்கள், இக்கட்டுகள் வந்தாலும் அவன் சத்தியத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். 2. தனது எதிரிகளை அன்புடன் நேசிக்க தொடர்ந்து முயற்சி எடுத்து வரவேண்டும். 3. இன்னல்கள் அரசிடமிருந்து வந்தாலும், தன்னுடன் கருத்து வேறுபடுகிறவர்களிடமிருந்து வந்தாலும் அவன் அதை அனுபவிக்கத் தயாராய் இருக்க வேண்டும். ''நல்லுணர்வோடு நாம் இதில் ஈடுபட்டால் ரௌலட் மசோதாக்கள் கைவிடப்படுவது மட்டுமல்லாமல், சத்தியாக்கிரகம் என்பது பலம் பொருந்திய ஆயுதம் என்பதையும் மக்கள் ஒப்புக் கொள்வார்கள்.'' இவ்வாறு காந்திஜி கூறினார்; உண்மையும் அப்படியே ஆயிற்று.

21-3-19

தொழிலாளர் சந்திப்பு

டிராம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் தொடர்ந்து நீடித்துக் கொண்டிருந்தது. சென்னைக்கு வருகை புரிந்திருந்த காந்திஜியைச் சந்தித்து அவருடைய ஆலோசனையைப் பெறுவதற்காக, சுமார் ஆயிரம் டிராம் தொழிலாளர்கள் மார்ச் 21-ஆம் தேதி காந்திஜியின் இருப்பிடத்திற்கு வந்தார்கள். தொழிலாளர் சிக்கல்களில் காந்திஜிக்கு ஆழ்ந்த அக்கறை உண்டென்பது அவர்கள் அறிந்ததுதான். ஆனாலும், அவசரப்பட்டோ ஆத்திரப்பட்டோ அவர் எந்த முடிவிற்கும் வந்துவிடமாட்டார். அவர்கள் சந்தித்தபோது கூட, அங்கு வந்திருந்த தொழிலாளர்களில் ஒருவரைத் தம் பக்கத்தில் அழைத்து (எந்த அளவு அவர்களால் வேலை நிறுத்தத்தைத் தாங்க முடியும் என்பதை அறிந்து கொள்வதற்காக)ச் சில கேள்விகள் கேட்டார்.

மகாத்மா : இன்னும் எத்தனை நாட்களுக்கு உங்களால் வேலை நிறுத்தத்தை நீடித்து மேற்கொள்ள முடியும்? இந்த வேலை நிறுத்தம் உங்களுக்கு அலுத்துப் போகவில்லையா?

தொழிலாளி : அலுத்துப் போகவில்லை. இன்னும் பத்து அல்லது பதினைந்து நாட்களுக்குத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்ய முடியும்.

மகாத்மா : அதற்கு மேலும் வேலை நிறுத்தம் நீடித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள் ?

தொழிலாளி : அதற்கு மேலும் பத்து நாட்களுக்கு வேலை நிறுத்தம் செய்ய முடியுமென்றே நம்புகிறேன்.

இதன் பின்னர் காந்திஜி, அங்கு வந்திருந்த தொழிலாளர்களை நோக்கி, தாம் அவர்களுடைய கோரிக்கைகளின் தராதரத்தை ஆழ்ந்து ஆராய்ந்து பார்க்க வில்லை என்றும் அவைகள் நியாயமானவையாக இருக்கும் என்றும் வேலை நிறுத்தத்திற்கு நியாயம் உண்டு என்றும் நம்புவதாகவும் சொன்னார். டிராம்வேத் தொழிலாளர்களின் ஒழுங்கையும் ஒத்துழைப்பையும் அண்ணல் பாராட்டினார். இதன் பின்னர் வேலை நிறுத்தங்கள் சம்பந்தமாகத் தமது முக்கியமான கருத்துக்கள் சிலவற்றை எடுத்துச் சொன்னார் : 1. தொழிலாளர்களுடைய நியாயமான கோரிக்கைகளைத் தொழில் அதிபர்கள் ஏற்க மறுத்துவிட்டால் தொழிலாளர்களிடம் உள்ள ஒரே நியாயமான ஆயுதம் வேலை நிறுத்தந்தான். 2. வேலை நிறுத்தம் வெற்றியடைய வேண்டுமானால், கோரிக்கை நியாயமாக இருப்பது முதல் அவசியம். 3. வேலை நிறுத்தம் செய்வோர் ஒரு போதும் வன்முறையில் ஈடுபடக்கூடாது. (தொழில் அதிபர் மீதோ, வேலை நிறுத்தத்தில் பங்கு கொள்ளாத தொழிலாளர்கள் மீதோ வன்முறையைப் பயன்படுத்தக்கூடாது.) 4. வேலை நிறுத்தம் செய்யும்போது எத்தகைய இன்னல்கள் வந்தாலும் அவைகளைச் சகித்துக் கொள்ளவேண்டும். 5. எழுத்துமூலமாகவே கோரிக்கைகளை அளிக்க வேண்டும் - சமரசம் ஏற்படக்கூடிய கட்டத்தில் இக் கோரிக்கைகளைப் பெருக்கிக் கொண்டு போகக்கூடாது. 6. தொழிலாளர் ஏற்கக்கூடிய நடுநிலையாளர்களைக்கொண்டு பஞ்சாயத்துச் செய்வதாக இருந்தால் அந்தப் பஞ்சாயத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். 7. வேலை நிறுத்தம் அளவுக்கு மீறி நீடித்துக் கொண்டு போனால், தற்காலிகமாக ஏதாவது வேலை தேடி வாழ்ந்து வரவேண்டும். (உழைத்துப் பிழைக்கக்கூடிய வேலை எந்த வேலை ஆனாலும் கேவலம் இல்லை.) காந்திஜி கூறிய அறிவுரைகளை சி. இராஜகோபாலாச்சாரி தமிழில் மொழி பெயர்த்துக் கூறினார்.

23-3-19

ரௌலட் சட்ட மசோதாவை எதிர்த்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய முக்கியமான தலைவர்கள் கூட்டம் மறுநாள் நடைபெற்றது. சட்டங்கள் அந்தக் கூட்டத்தில், பம்பாய் அதுவரை என் னென்ன நடவடிக்கைகளை மேற்கொண்டிருந் தது என்பது பற்றி ஆராயப் பெற்றது. இதன் பின்னர் ரௌலட் மசோதாவை எதிர்த்து முதன் முதலாகத் தாம் ''கனவிற் கண்ட தோற்றத்தின்'' அடிப்படையில் தமது திட்டங்களை வெளியிட்டார் அண்ணல். ரௌலட் மசோதாக் களில் இரண்டாவதை வைசிராய் அங்கீகரித்ததாகச் செய்தி வெளியானதற்குப் பிந்திய இரண்டாவது ஞாயிற்றுக் கிழமையை அதாவது ஏப்ரல் 6, 1919-ஐ அவமான நாளாகவும் பிரார்த்தனை நாளாகவும் அனுசரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதற்கு அவர் மூன்று வழி முறைகளைக் கூறினார் : (1) வயது வந்தவர்கள், முதல்நாள் இரவு உணவு உண்ட நேரத்திலிருந்து, இருபத்து நான்குமணி நேரம் உணவு உண்ணக்கூடாது. சட்ட மறுப் பிற்குத் தயார் செய்வதற்கு அவசியமான ஒரு கட்டுப்பாடாக சத்தியாக்ரகிகளும், தங்கள் மனம் புண்பட்டிருப்பதற்கு அறி குறியாக சத்தியாக்ரகிரகளல்லாத மற்றவர்களும் இதை மேற்கொள்ள வேண்டும். (2) பொது மக்களுக்கு இன்றி யமையாதவை என்று கருதப்படுபவை தவிர மற்ற அலுவல் களை யெல்லாம் அன்று நிறுத்திவிடவேண்டும். மார்க்கெட்டு களும் மற்ற வாணிக நிலையங்களும் மூடப்பெற வேண்டும். (''அரசாங்க ஊழியர்கள்கூட இந்த இரண்டையும் அனு சரிக்கலாம்'' என்று அண்ணல் தமது அறிக்கையில் கூறி யிருந்தார்.) (3) அன்று இந்தியா முழுவதிலும் - கிராமங்கள் உள்பட-பொதுக்கூட்டங்கள் நடத்த வேண்டும். அக்கூட்டங் களில், இரண்டு ரௌலட் மசோதாக்களையும் கைவிட வேண் டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றவேண்டும். இந்தத் திட்டங்களையெல்லாம் ஒரு அறிக்கையாக காந்திஜி வெளி யிட்டார். மார்ச் 23-ஆம் தேதி அவர் கையொப்பமிட்டு அனுப்பிய இந்த அறிக்கை 24-ம் தேதி நாளிதழ்களில் மிகுந்த முக்கியத்துவங்கொடுத்து வெளியிடப்பெற்றது.

இந்த நடவடிக்கைகளைச் சரிவர மேற்கொள்ள ஆங் காங்கு சத்தியாக்ரக சபைகள் அமைக்கப்பெற்றன.

அறிக்கை சென்னையிலிருந்து இந்தியா முழுவதற்கும் விடுக்கப்பெற்ற ஒன்றாகும். சென்னையில் காந்திஜியையே தலைவராகக் கொண்டு சத்தியாக்ரக சபை அமைக்கப் பெற்றது. அதற்கு டாக்டர் சுப்ரமணிய ஐயர், சி. விஜயராகவாச்சாரியார், எம். சி. நஞ்சுண்டராவ், எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், டி. பிரகாசம் ஆகியோர் துணைத்தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். ஏ. ரெங்கசாமி ஐயங்கார், சி. இராஜகோபாலாச்சாரியார், டி. ஆதிநாராயண செட்டியார், ஜி. ஹரிசர்வோத்தமராவ் ஆகியோர் செயலாளர்களாகவும் டி. வி. வெங்கட்ராமையர் பொருளாளராகவும் நியமிக்கப் பெற்றார்கள். (இந்தத் துணைத்தலைவர் பதவியைத் தான் டாக்டர் சுப்ரமணிய ஐயர் ஏற்கவில்லை.)

சத்தியாக்ரக சபைகள்

இந்திய வரலாற்றில் ஒரு புதுத்திருப்பத்தையும் உத்வேகத்தையும் உண்டாக்கிய ஒரு போராட்டம் இது. தென்னாப்பிரிக்காவிலிருந்து காந்திஜி வந்து நான்கு ஆண்டுகளாகிவிட்டன வென்றாலும், தென்கோடியிலிருந்து வடகோடிவரை, மேல்கோடியிலிருந்து கீழ்க்கோடிவரை அவர் சுற்றிக்கொண்டிருந்தாரென்றாலும், ஏற்கனவே கேடா, சம்பரான் ஆகிய போராட்டங்களை அவர் நடத்தியிருந்தாரென்றாலும், அனைத்திந்திய அடிப்படையில் அவர் இதுவரை எந்தப் போராட்டமும் நடத்தவில்லை, ரௌலட் மசோதாவை எதிர்த்து ஏதாவது ஒருவகைப் போராட்டம் நடத்த வேண்டுமென்று அவர் எண்ணிக் கொண்டிருந்தார். ஆனாலும் அப்போராட்டம் எத்தகையதாக இருக்கவேண்டும் என்பது அவருக்கே தெளிவாகவில்லை. கஸ்தூரிரங்க ஐயங்காருடைய வீட்டில் - ராஜாஜி குடியிருந்து கொண்டு வழக்கறிஞராகப் பணியாற்றிய வீட்டில் - ஒரு நாள் - ஒரு தெய்விகக்கனவாக இத்திட்டம் அவருக்குத் தோன்றியது. (தமிழகத்தில் கண்ட ஒரு கனவின் பேரில்தானே அமெரிக்காவிற்குச் செல்வதென்று சுவாமி விவேகானந்தர் முடிவு செய்தார் என்பதும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளத்தக்கதாகும்.) மீண்டும் மீண்டும் இதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு வந்ததன் காரணமாக அவர் மனதில் எழுந்த ஒரு தோற்றமே இது என்று பலர் எண்ணலாம். ஆனால், அவரே இதை "ஒரு கனவு" என்று தமது கட்டுரைகளிலும் வாழ்க்கை வரலாற்றிலும் குறிப்பிடுகிறார். இக்கனவைப் புனிதமானதாகவும் அவர் போற்றி

தெய்விகக் கனவு

வந்திருக்கிறார். அதிகாலையில் கண்ட கனவு இது. அதிகாலையில் காணும் கனவு உடனே பலிக்கும் என்று கூறுவார்கள். இந்தக் கனவும் உடனே செயலாகப் பலித்து விட்டது. சாதாரணமாகவா பலித்தது? இந்தியாவை ஒரு கலக்குக்கலக்கியது. பிரிட்டன் அரசைத் 'திறுகு விழி விழிக்க' வைத்து விட்டது. இதனுடன் ஒப்பிடும்போது தென்னப்பிரிக்காவில் நடந்த போராட்டம் சிறியது என்று கூறும் அளவிற்குப் பெரிய அஹிம்சா எளிமையாக உலகின் கண்ணிற்பட்டது. இந்தியாவை மட்டுமல்ல, உலகையே புது உலகாக உருவாக்கக் கூடிய ஆற்றல் வாய்ந்த புதுத் தத்துவம் காந்தியின் தத்துவந்தான் என்று எதிர்காலத்தை உணரக்கூடிய ஆற்றல் வாய்ந்தவர்கள் கூறுமாறு செய்தது. இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம், ஒவ்வொரு வீட்டிலும், மகாத்மா என்ற சொல் தெரியுமாறு செய்துவிட்டது. முதலில் இத் திட்டத்தை அறிவித்த போது, இந்தியர் முழுவதும் இதை ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கை காந்திஜிக்கு இல்லை. இதைக் குறித்து மிகவும் அடக்கமாக அவரே தமது ''சத்திய சோதனை''யில் கூறுவதைப் பாருங்கள்:

காரணம் ராஜாஜி

''தென்னாடு எப்பொழுதுமே எனக்குச் சொந்த வீடு போல் தோன்றும். தென்னப்பிரிக்காவில் நான் செய்த வேலையின் காரணமாகத் தமிழர் மீதும் தெலுங்கர்மீதும் எனக்கு ஒரு வகையான தனி உரிமை இருப்பதாகவே நான் உணர்ந்தேன். தென்னாட்டின் நல்ல மக்கள், என் நம்பிக்கையை என்றும் பொய்ப்பித்தது இல்லை. காலஞ்சென்ற ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்காரின் கையொப்பத்துடன் (சென்னைக்கு வர) அழைப்பு வந்தது. ஆனால், அந்த அழைப்புக்கு முக்கியமான காரணஸ்தராக இருந்தவர் இராஜகோபாலாச்சாரியாரே என்பதைப் பிறகு நான் சென்னைக்குப் போன வழியில் தெரிந்துகொண்டேன். அவருடன் எனக்குப் பழக்கம் ஏற்பட்டது அதுவே முதல் தடவை என்று சொல்லலாம்.

''காலஞ் சென்ற ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்கார் போன்ற நண்பர்கள் வற்புறுத்தி அழைத்ததன் பேரிலும், பொது வாழ்க்கையில் மேலும் தீவிரமான பங்கு வகிக்கலாம் என்ற நோக்கத்தின் பேரிலும், அப்பொழுது, கொஞ்ச காலத்திற்குமுன்னால்தான் இராஜகோபாலாச்சாரியார் சென்னையில்

வக்கீல் தொழிலை நடத்தச் சேலத்திலிருந்து வந்திருந்தார். (1919-இல் காந்திஜி சென்னைக்கு வந்தபோது, இராஜகோபாலாச்சாரி சென்னையிலிருந்து வழக்கறிஞர் தொழில் நடத்தி வந்தாராயினும் அவரை அப்போது சென்னைவாசியாகப் பெரும்பாலோர் கருதவில்லை. செய்தித்தாள்கள் அவரைப் பற்றிக் குறிப்பிட நேர்ந்தபோது சேலம் சி. இராஜகோபாலாச்சாரியார் என்று 'சேலத்'தையும் சேர்த்தே குறிப்பிட்டு வந்தன.)

புதுப் பழக்கம்

சென்னையில் அவரோடேயே நாங்கள் தங்கினோம். ஆனால், அவருடன் இரு தினங்கள் தங்கியிருந்ததற்குப் பின்னாலேயே இதை நான் கண்டுபிடித்தேன். ஏனெனில், நாங்கள் தங்கியது ஸ்ரீ கஸ்தூரிரங்க ஐயங்காருக்குச் சொந்தமான பங்களாவாகையால் அவருடைய விருந்தினராகவே நாங்கள் தங்கியிருக்கிறோம் என்று எண்ணினேன். ஆனால், மகாதேவ தேசாய் எனக்கு விஷயத்தைக் கூறினார். அவர் வெகு சீக்கிரத்தில் இராஜகோபாலாச்சாரியாருடன் நெருங்கிய பழக்கம் கொண்டு விட்டார். இராஜகோபாலாச்சாரியாரோ, தமது சங்கோஜத் தன்மையினால் எப்பொழுதும் பின்னுக்கே இருந்து வந்தார். ஆனால், மகாதேவ தேசாய் ''இவருடன் நீங்கள் நெருங்கிய பழக்கம் வைத்துக்கொள்ள வேண்டும்'' என்று ஒரு நாள் சொன்னார்.

வழி தெரியவில்லை

''அவ்வாறே செய்தேன். போராட்டத்தின் திட்டங்களைக் குறித்துத் தினமும் சேர்ந்து விவாதித்தோம். ஆனால், பொதுக்கூட்டங்களை நடத்துவதைத் தவிர வேறு எந்த வேலைத் திட்டமும் அப்பொழுதும் எனக்குத் தோன்றவில்லை.

ரௌலட் மசோதா முடிவில் சட்டமாக்கப்பட்டு விடுமானால், அதை எதிர்த்துச் சாத்விகச் சட்ட மறுப்புச் செய்வது எப்படி என்பது எனக்கு விளங்கவே இல்லை. சட்டத்தை மறுப்பதற்கு அரசாங்கம் சந்தர்ப்பம் அளித்தால் தான் அச்சட்டைத்தை ஒருவர் மீற முடியும். அதில்லாது போனால், மற்றச் சட்டங்களை நாம் சாத்விக முறையில் மீற முடியுமா? அப்படிச் செய்வதாயின் அதற்கு எந்த இடத்தில் வரம்பை நிர்ணயிப்பது? இதையும் இது போன்ற பல விஷயங்களையும் குறித்து நாங்கள் விவாதித்தோம்.

''இந்த ஆலோசனைகளெல்லாம் நடந்து கொண்டிருக்கையில், ரௌலட் மசோதா சட்டமாகப் பிரசுரமாகி விட்டது என்ற செய்தி கிடைத்தது. அதைப் பற்றி யோசித்தவாறே அன்றிரவு தூங்கி விட்டேன். மறுநாள் அதிகாலையில் வழக்கமாக எழுவதற்குக் கொஞ்சம் முன்பாகவே எழுந்து விட்டேன். தூக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையேயுள்ள நிலையில் நான் இருந்தபோது திடீரென்று எனக்கு ஒரு யோசனை தோன்றியது. அது கனவைப் போன்றே இருந்தது. காலையில் அதன் விவரம் முழுவதையும் இராஜகோபாலச்சாரியாரிடம் கூறினேன்.

கனவு

''நேற்றிரவு கனவில் ஒரு யோசனை வந்தது. பொது ஹர்த்தாலை நடத்த வேண்டும் என்று தேச மக்களைக் கேட்டுக் கொள்வது என்பதே அது. ஆன்மத் தூய்மை செய்து கொள்ளும் ஒரு முறையே சத்தியாக்ரகம். நம்முடைய போராட்டமோ, ஒரு புனிதமான போராட்டம். ஆகையால், அதை ஆன்மத் தூய்மை செய்துகொள்வதோடு ஆரம்பிப்பதே சரி என்று எனக்குத் தோன்றுகிறது. எனவே இந்திய மக்கள் எல்லோரும் அன்று தங்கள் வேலைகளையெல்லாம் நிறுத்திவிட்டு உபவாசம் இருந்து பிரார்த்தனை செய்யட்டும். முஸ்லிம்கள் ஒரு நாளுக்கு மேல் பட்டினி விரதம் இருக்கமாட்டார்கள். ஆகவே பட்டினி விரதம் இருக்கும் நேரம் 24 மணி என்று இருக்க வேண்டும். இந்த நமது கோரிக்கையை எல்லா மாகாணங்களுமே ஏற்றுக் கொண்டு நடத்தும் என்று சொல்வதற்கில்லை. ஆனால், பம்பாய், சென்னை, பீகார், சிந்து ஆகிய மாகாணங்கள் அனுசரிப்பது நிச்சயம் என்று எண்ணுகிறேன். இந்த இடங்களிலெல்லாம் ஹர்த்தால் சரியான படி அனுஷ்டிக்கப்பட்டாலும் நான் திருப்தியடையக் காரணம் உண்டு என்றே கருதுகிறேன்.' என்னுடைய இந்த யோசனையை இராஜகோபாலாச்சாரியார் உடனே ஏற்றுக் கொண்டார். பிறகு இதை மற்ற நண்பர்களுக்கு அறிவித்த போது அவர்களும் வரவேற்றார்கள். சுருக்கமான வேண்டுகோள் ஒன்றை நான் தயாரித்தேன்.''

திட்டம்

அவர் என்று இந்தக் கனவைக் கண்டிருக்கலாம்? இக் கனவைக் கண்ட நாளை அவர் திட்டமாகக் குறிப்பிட

வில்லை. (இக்கனவை அவர் 18ஆம் தேதி இரவு அதாவது 19ஆம் தேதி அதிகாலை கண்டிருக்க வேண்டும் என டெண்டுல்கார் கருதுகிறார்.) ஆனாலும் என்று கனவு சென்னைக்கு வந்த சில நாட்களுக்குப் பின்னரே கண்டார் அவர் இதைக் கண்டிருக்கமுடியும் என்பது தெளிவாகத் தெரிகிறது. ஏனெனில், இக் கனவை அவர் முதன் முதலாக இராஜாஜியிடம் தான் கூறியிருக்கிறார். சென்னைக்கு வந்த இரண்டொரு நாட் களுக்குப் பின்னர்த்தான் மகாதேவ தேசாய் மூலமாக அவ ருக்கு ராஜாஜியுடன் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஆகை யால் அவர் சென்னை வந்து சேர்ந்த அன்றிரவு (18-3-19 இரவு 19-3-19 காலை) இக்கனவை அவர் கண்டிருக்க முடியாதென்பது, இதிலிருந்து புலனாகிறது. ராஜாஜி யைப் பற்றி ஒரு நல்ல நம்பிக்கை ஏற்பட்ட பின்பு தான், இவ்வளவு புனிதமான ஒரு கனவை அவரிடம் காந்திஜி கூறியிருக்க முடியும். மேலும், சென்னைக்கு வந்து சில நாட்கள் கழித்த பின்னர், அதாவது, ரௌலட் சட்ட மசோதா - 2 வைசிராயின் கையொப்பமாகிச் சட்டமான செய்தி வெளிவந்த அன்று இக்கனவைக் கண்டதாக காந்தி ஜியே கூறுகிறார். வைசிராய் கையொப்பமிட்ட தேதி 21-3-19 ஆகும். ரௌலட் மசோதா சட்டமான அன்று என்று காந்திஜி கூறவில்லை, ரௌலட் மசோதா சட்டமாகி விட்ட செய்தி வெளி வந்த அன்றுதான் கனவு கண்ட தாகக் கூறுகிறார். ஆகவே இது அச்செய்தி வெளியான 22-ஆம் தேதி இரவு (அதாவது 23ஆம் தேதி காலை) ஆகத்தான் இருக்க முடியும். இதற்கு மற்றொரு ஆதாரமும் இருக்கிறது. மார்ச் 24ஆம் தேதி தஞ்சாவூரில் அண்ணல் பேசியபோது, 2 ஆவது மசோதாவிற்கு வைசி ராய் அங்கீகாரம் அளித்துவிட்டதாக இப்போதுதான் எனக்குத் தந்தி வந்தது எனக் கூறியிருக்கிறார். எல்லாவற் றையும் சேர்த்துக் கவனிக்கும்போது 22-ஆம் தேதி மாலை மசோதா சட்டமான செய்தியை அறிந்து 23-ஆம் தேதி அதிகாலையில் காந்திஜி இக்கனவைக் கண்டிருக்கிறார் என்பது தெளிவு. இந்தப் போராட்டத்தைப் பற்றிய திட்டங்களை 23-ஆம் தேதி காந்திஜி எழுதி அனுப்பி 24-ஆம் தேதி செய்தித் தாள்களில் அவை வெளிவந்திருக்கின்றன என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

பரிவு

1919-இல் காந்திஜி சென்னைக்கு வந்தபோது அவர் வழக்கம்போல ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் தங்கவில்லை. ஜி. ஏ. நடேசனுடைய சகோதரர் குமார ராகிய ஜி. வி. கல்யாணம் (அப்போது ஒரு சிறு பையன்) டைபாய்டு காய்ச்சலினால் பீடிக் கப் பெற்றிருந்ததே இதற்குக் காரணம். ஒரு நாள் நடேசன் இல்லத்திற்குச் சென்று பையனுடைய உடல் நலத்தை விசாரித்து விட்டு வந்தார். மாடியில் பையன் இருந்ததால், அங்குச் சென்று, தோளில் பையனைத் தூக்கிக் கொண்டு வந்து அவனைத் தனது மடியில் வைத்துக் கொண்டே அவர் மற்றவர்களுடன் பேசிக் கொண்டிருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஒரு குடும்பத் துடன் காந்திஜி பழகிவிட்டாரென்றால் அக்குடும்பத்தினரில் ஒருவரே ஆகிவிடுவார் என்பதைக் கூறவும் வேண்டுமோ ?

பாரதி சந்திப்பு

"காந்திஜியின் இந்த விஜயத்தின்போது பாரதியும் அவரும் சந்தித்தார்களென வ. ராமசாமி (வ. ரா.) கூறுகி றார். ராஜாஜியும் இதை ஊர்ஜிதம் செய்கி றார். இந்தச் சந்திப்பு வெகு சுவாரஸ்யமான சம்பவம்: ஒரு நாள் பகல் இரண்டு மணி சுமார். காந்திஜி ஒரு கட்டிலில் மெத்தையில் சாய்ந்திருந்த வண்ணம் தம் காரியதரிசி மகாதேவ தேசாய்க்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். சேலம் பாரிஸ்டர் ஆதிநாராயண செட்டியார் குடகுக் கிச்சிலிப் பழங்களை உரித்துப் பிழிந்து காந்திஜி அருந்துவதற்காகப் பழரசம் தயாரித்துக் கொண்டிருந்தார். அறையில் ஒரு பக்கம் "சுதேசமித்திரன்" ஆசிரியர் ஏ. ரங்கசாமி ஐயங்காரும், எஸ். சத்தியமூர்த்தியும் சுவரில் சாய்ந்து நின்றுகொண்டிருந்தார்கள். எதிரே ராஜாஜியும் மற்றும் சிலரும் நின்று கொண்டிருந்தனர். அறையின் வாயில் காப்போனைக வ. ரா. நின்று கொண்டிருந்தார். யாரையும் உள்ளே விட வேண்டாமென்று கண்டிப்பான உத்தரவு. அச்சமயம் பாரதி அங்கு வந்தார். புதுவையில் தமக்கு அறிமுகமான வ. ரா. நிற்பதைக்கண்டு "என்ன ஓய்" என்று சொல்லிக்கொண்டே அறைக்குள் நுழைந்து விட்டார்.

"பாரதி நேரே காந்திஜியை வணங்கிவிட்டு, அவர் பக்கத்தில் மெத்தையில் உட்கார்ந்து விட்டார். 'மிஸ்டர்

காந்தி! இன்று மாலை ஐந்தரை மணிக்குத் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் ஒரு கூட்டத்தில் பேசப்போகிறேன். அக் கூட்டத்துக்குத் தாங்கள் தலைமை வகிக்க முடியுமா?' என்று கேட்டார்.

''அன்று மாலை தமக்கு என்ன அலுவல் என்று காந்தி மகாதேவ தேசாயைக் கேட்டார். வேறு ஒரு அலுவல் இருந்தது.

''இன்றைக்கு நான் வர இயலாது. தங்கள் கூட்டத்தை நாளைக்கு ஒத்திப்போட முடியுமா?' என்றார் காந்திஜி.

''முடியாது. நான் போய் வருகிறேன். மிஸ்டர் காந்தி, தாங்கள் ஆரம்பிக்கப்போகும் இயக்கத்தை நான் ஆசீர்வதிக்கிறேன்,' என்று சொல்லிவிட்டு பாரதி வெளியே போய்விட்டார்.

''பாரதி போனதும், காந்திஜி, 'இவர் யார்?' என்று வினவினர். யாரும் பதில் சொல்லவில்லை; இராஜகோபாலாச்சாரியார் தான்; 'இவர் எங்கள் தமிழ் நாட்டுத் தேசியக் கவி' என்று அழகுறச் சொன்னார்.

''இதைக் கேட்ட காந்தியடிகள், 'இவரைப் பத்திரமாய்ப் பாதுகாக்கவேண்டும். இதற்குத் தமிழ்நாட்டில் எவரும் இல்லையா?' என்றாராம்.

''மேதை''

''இந்தச் சம்பவம் பாரதியின் சுபாவத்தையும் காந்திஜியின் சுபாவத்தையும் நன்கு காட்டுகிறது. மற்றவர்களெல்லாம் பயபக்தியுடன் நின்று கொண்டிருக்கையில் சரிசமமாய் காந்திஜியுடன் பாரதி அமர்ந்தது அங்கிருந்த பலருக்குத் திகைப்பை யளித்திருக்கக்கூடும். மேலும், காந்திஜியின் இனி வரும் இயக்கத்துக்கு பாரதி ஆசீர்வாதம் செய்ததும் அங்குள்ளோருக்கு விசித்திரமாகப் பட்டிருக்கலாம். ஆனால், காந்திஜிக்கோ அப்படித் தோன்றவில்லை. 'இந்த மேதையைக் காப்பது உங்கள் கடமையல்லவா?' என்று ஒரே வாக்கியத்தில் தமிழ் நாட்டுக்கு அதன் கடமையை நினைவுபடுத்திவிட்டார். காந்திஜியைச் சந்தித்த அந்தக் காலத்தில் பாரதி வேதாந்தம் முற்றிய பித்த

சந்நியாசிபோல் இருந்தாரென்று ராஜாஜி சொல்கிறார். உடலிலும் மனதிலும் அவர் அனுபவித்த வேதனை அவரை அப்படி ஆக்கிவிட்டன போலும்!''

''சித்திர பாரதி'' என்ற நூலில் பாரதி காந்திஜியைச் சந்தித்த நிகழ்ச்சியை ரா. அ. பத்மநாபன் இவ்வாறு அழகாகச் சித்தரித்திருக்கிறார். இதில் அவர் மேலும் கூறியிருக்கிறார்: ''இந்தியத் தலைவர்களில் மகாத்மா காந்தியின் பெருமையை முதன் முதலில் உணர்ந்த வெகு சிலருள் பாரதியாரும் ஒருவர். பாரிஸ்டர் மோகனதாஸ் கரம்சந்திர காந்தி 1908-ல் தென் ஆப்பிரிக்காவில் இந்தியர் நலனுக்காகப் போராட்டம் நடத்தியபோதே காந்தியின் மேன்மையை உணர்ந்து அவரை ''இந்தியா'' (பாரதி ஆசிரியராய் இருந்த நாளிதழ்)வில் வெகுவாகப் பாராட்டியிருக்கிறார் நம் கவிஞர். தென் ஆப்பிரிக்க இந்தியர் போராட்டத்திற்காக நிதி வசூல் செய்து, தாமே ஐந்து ரூபாய் கொடுத்து, பணத்தைத் தென் ஆப்பிரிக்காவுக்கு அனுப்பினார் பாரதி. 'காந்தியின் ஸத்தியாக்ரக இயக்கம் தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது, ஆகையால் இந்தியப் பண்பாடு நிறைந்தது, அவரே வருங்காலத் தலைவர்' என்றுகூட பாரதி தீர்க்க தரிசமாய்க் கண்டிருக்கிறார்.

பாரதி நிதி உதவி

''1908-இல் பாரிஸ்டர் காந்தி தென்னப்பிரிக்க இந்தியர் சார்பில் லண்டனுக்குத் தூது சென்று திரும்பிய சமயம் தென் ஆப்பிரிக்க அரசாங்கம் அவரைக் கைது செய்தது. இதைப் பற்றி பாரதி ஒரு கார்ட்டூன் மூலமாகவும், சித்திர விளக்கம் மூலமாகவும் தம் கருத்தைத் தெரிவித்துள்ளார்....படத்தின் கீழ்க் குறிப்பு கூறியதாவது: 'ஸ்ரீ காந்தியென்ற பசுவானது தனது கன்றுக்குட்டியாகிய இதர இந்தியர்களின் நன்மையின்பொருட்டு இங்கிலாந்துக்குப் போய்ப் பேசிவிட்டு, சிறையிலடைபடுவதற்காக மறுபடியும் திரான்ஸ்வாலுக்கு வந்திருக்கிறது. தென்ஆப்பிரிக்கா உத்தியோகஸ்தர்களாகிய புலிகள் அவருடைய மேன்மையை யறியாமல் சிறையிலடைத்தார்கள்.' மகாத்மா காந்தியை 'வாழ்க நீ எம்மான்!... புவிக்குள்ளே முதன்மை பெற்றாய்!' என்று பிற்காலத்தில் வாயாரப் பாடிப் புகழ்ந்தார் பாரதி. ஆனால், இந்தியத் தலைவர்களில் காந்தியை அறியாதிருந்த 1908-ம் ஆண்டிலேயே பாரதி மேலே குறித்த படத்தையும் குறிப்பையும்

வெளியிட்டதுதான் விசேஷம், அதுவே கவியின் தீர்க்க தரிசனம்.''

தஞ்சைக்குப் புறப்பாடு

தஞ்சை, திருச்சி, மதுரை, தூத்துக்குடி, நாகப் பட்டினம் ஆகிய நகர்களுக்குச் சென்று சத்தியாக்ரகச் செய்தியை எடுத்துக் கூறுவதற்காக 23-ஆம் தேதி இரவு தஞ்சைக்கு காந்திஜி இரயில் ஏறினர். தமிழகத்தில் சென்னைக்குத் தெற்கே அவர் மேற்கொண்ட முதல் அரசியல் சுற்றுப் பயணம் இதுதான். 1915-இல் அவர் தமிழகத்திற்கு வந்த போது தரங்கம்பாடிக்கும் மாயவரத்திற்கும் வந்தா ரென்றாலும் அதன் நோக்கமே வேறு. தமது தென்னைப் பிரிக்க சகாக்களைப் பார்த்து அவர்களுடைய நலனைப்பற்றி விசாரித்து விட்டுப் போகத்தான் அப்போது அவர் தரங்கம் பாடிக்கு வந்தார். 1916, 17-இல் அவர் சென்னையைத் தாண்டி தமிழகத்தின் உள்பகுதிக்கு வரவில்லை. ஆகவே அவருடைய முதல் தமிழக அரசியல் சுற்றுப்பயணம் அவர் 1919-இல் மேற்கொண்டது தான். (டாக்டர் கலேல்காரும், மகாதேவ் தேசாயும், டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும் இச்சுற்றுப் பயணத்தில் அவருடன் வந்தார்கள்.)

ஆக்க சக்தி

காந்திஜி பங்கு கொண்ட ஒவ்வோர் ஊர்க் கூட்டத்தி லும் ரௌலட் மசோதாக்களை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது; பலர் காந்திஜியின் முன்னிலையிலேயே சத்தியாக்ரக உறுதிமொழி யில் கையொப்பமிட்டார்கள். ரௌலட் சட் டத்தால் வன்முறையைப் போக்க முடியாது என்று அண்ணல் கருதினர். அதற்கு மாறாக, தாம் மேற் கொண்டுள்ள சத்தியாக்ரக இயக்கமே அதைச் செய்யும் என்று பறையறைவித்தார். அதன் மூலம் சத்தியாக்ரக இயக்கமானது ஒரு போராட்ட ஆயுதம் மட்டுமல்ல, ஒரு பெரிய ஆக்க சக்தி என்பதை உலகிற்கு எடுத்தோதி னர். அவர் இங்குத் தீவிரமாக, அஹிம்சைப் பிரச்சாரம் செய்தார் என்றுதான் கூறவேண்டும். ''உங்களுக்கு வேண் டியது மேற்கு நாடுகளின் வழியான இம்சை முறையா? அல்லது, இந்தியாவில் பரம்பரை பரம்பரையாக வந்துள்ள அஹிம்சை முறையா?'' என்று அவர் கேட்டுக்கொண்டே வந்தார். கிட்டத்தட்ட ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் பிரகலாதனின் ''சத்தியாக்ரகத்தை'' முன்னுதாரணமாக

எடுத்தாளத் தவறவில்லை. பிரகலாதனுடைய வரலாற்றை நம்ப முடியாதவர்களுக்குத் தென்னப்பிரிக்க அறப்போரில் உயிர் நீத்த நாகப்பன், நாரயணசாமி, வள்ளியம்மா ஆகியோருடைய முன்னுதாரணங்களைச் சொன்னர். தமிழகத்தைத் தட்டி எழுப்புவதற்கு இந்த மூன்று பெயர்களையும் தாரக மந்திரங்களாக காந்திஜி பயன்படுத்தியிருக்கிறார்.

24-3-19

தஞ்சையில்

மறுநாள் காலை அவர் தஞ்சை சேர்ந்தார். பிற்பகலில் ''பெசண்ட் லாட்ஜில்'' வி. பி. மாதவராவ் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சத்தியாக்ரகப் போராட்டத்தில் அரசாங்க ஊழியர்கள் (ஓர் அளவுக்குப்) பங்கு கொள்ளலாம் என்று அண்ணல் கூறினரே, அது சரியா? அரசாங்க ஊழியர்கள் அரசியலில் பங்கு கொள்ளலாமா? என்ற கேள்வி தமிழக முழுவதும் பரவலாக எழுந்தது. ஆகவே இக்கேள்விக்கு இக்கூட்டத்தில் அவர் விளக்கம் கூறினர். ''ஏப்ரல் 6-ஆம் தேதி எல்லோரும் மேற் கொள்ள வேண்டுமென நான் கூறிய உண்ணுநோன்பில் அரசாங்க ஊழியர்களும் பங்கு கொள்ளலாம் என்று நான் கூறியிருக்கிறேன். அரசாங்க ஊழியர்கள் அரசியலில் பங்கு கொள்ளக் கூடாது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனல் அதற்காக அவர்களுடைய மனச்சாட்சிக்கோ நாட்டில் இன்ப துன்பங்களில் அவர்கள் பங்கு கொள்வதற்கோ பூட்டுப்போட்டு விடக்கூடாது'' என்று அண்ணல் கூறினர்.

அகற்றுதல்

ரௌலட் மசோதாக்களை எதிர்த்துக் கூட்டங்கள் நடத்தும் போது அரசாங்கத்தையோ அதனுடைய சட்டங்களையோ பற்றிப் பேச நேர்ந்தால் மிகவும் வன்முறையை கண்ணியமான சொற்களையே பயன்படுத்த வேண்டுமென்று அவர் சொன்னர். ''உறுதி மொழி எடுத்துக் கொள்பவர்கள், பிறருடைய உயிருக்கோ உடமைக்கோ எந்த அபாயமும் விளைவிக்கக் கூடாது என்பதை உணரவேண்டும்'' என்றெல்லாம், சத்தியாக்ரகத்தில் கவனிக்க வேண்டிய அடிப்படையான அம்சங்களை அவர் விளக்கினர். இந்தக் கூட்டத்திலேயே சுமார் ஐம்பதுபேர் சத்தியாக்ரக உறுதிமொழியில்

கையொப்பமிட்டார்கள். இவர்களில் பெரும்பாலோர் முஸ்லீம்கள், ராஜகிரியைச் சேர்ந்த வணிகர்கள்.

25-3-19

காந்திஜி மறுநாள் காலை தஞ்சாவூரிலிருந்து புறப்பட்டுத் திருச்சி போய்ச் சேர்ந்தார். நங்கவரம் மிராசுதார் சுப்பராமய்யரது சிந்தாமணி இல்லத்தில் மகாத்மா தங்கினார். மகாத்மாவை வரவேற்பதில் திருச்சி மக்கள் காண்பித்த ஆர்வத்தைச் சொற்களால் விவரிக்க முடியாது. இவ்வாறு மக்கள் தங்களுடைய அன்பைக் கொட்டியதற்காக ஆயிரம் ஆயிரம் நன்றி என்று மகாத்மாவே கூட்டத்தின் இறுதியில் சொன்னார். காந்திஜியை வைத்து ஒரு பிரம்மாண்டமான ஊர்வலம் நடத்துவதென்று முதலில் திட்டமிடப் பெற்றிருந்தது. இந்த ஊர்வலமும் நடைபெற்றிருந்தால் வரவேற்பு இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால் காந்திஜி வேண்டுகோளின் பேரில் அது கைவிடப் பெற்றது. அளவுக்கு மீறிய வேலைகளால் தாம் மிகவும் களைப்படைந்திருப்பதாகவும் ஊர்வலமும் நடத்தினால் தம்மால் தாங்க இயலாதென்றும் காந்திஜி கூறிவிட்டார். திருச்சி மாவட்ட மக்களின் சார்பாக எழுதப்பெற்றிருந்த வரவேற்புரையை ஸ்ரீ ரெங்க நாதர் பள்ளி கொண்டது போன்று சித்தரிக்கப் பெற்றிருந்த ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து ஸ்ரீரெங்கம் ''ஹிந்து மெஸேஜ்'' ஆசிரியர் டி. கே. பாலசுப்ரமணிய ஐயர் அளித்தார். பண்டித டி. சவுரிராயன் காந்திஜி மீது தாம் இயற்றிய சில பாக்களைப் பாடினார். அதன் பின்னர் காந்திஜி பேசியபோது, தேசிய மொழியாகிய இந்தியைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு மக்கள் படிக்காதது வருந்தத்தக்கது என்றும், தமக்கோ தமிழ் தெரியாதென்றும், ஆகவே ஆங்கிலத்தில் பேசுவதாகவும் கூறிப் பேச்சைத் தொடங்கினார். அவர் மேலுங் கூறியதாவது :

பொதுக் கூட்டம்

''டிரான்ஸ்வால் போராட்டத்தில் ஆன்மாவானது தூலத்தை வென்றதாக உங்களுடைய வரவேற்புரையில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதில் உங்களுக்கு நம்பிக்கை இருக்கிறதா என்பதைச் சோதித்துப் பார்க்க வேண்டிய காலம் விரைவில் வந்து கொண்டிருக்கிறது. வள்ளியம்மாளின் திட நம்பிக்கையுடன் இந்தச் சிக்கலை நீங்கள் அணுகினால், வெகு

அடிப்படை பலம்

விரைவில் இந்த மசோதாக்கள் கைவிடப் பெறுவதைக் காண்பீர்கள். பொதுக் கூட்டங்கள் போட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கூறுவதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. இந்தக் கூட்டங்கள், தீர்மானங்கள் ஆகியவைகளைச் செயல் படுத்தி நமது நாட்டில் ஒருமித்த கருத்தை நிலைநிறுத்த சத்தியாக்ரகம் என்னும் சக்தி நம்மிடம் இருக்கிறது என்பதுதான் அக்காரணம் என்றார் மகாத்மா.

26-3-19

மறுநாள் காலை போட்மெயிலில் திருச்சியிலிருந்து புறப்பட்டு, பிற்பகலில் மதுரைக்கு வந்து சேர்ந்தார் அண்ணல்.

மதுரையில்

திருச்சியிலிருந்து அவர் மதுரை சென்ற வழியில், திண்டுக்கல் இரயில்வே நிலையத்தில், அந்நகரைச் சேர்ந்த ''வரி செலுத்துவோர் சங்க''ச் செயலாளரான எஸ். இராமசாமி ஐயரும் நிருவாகிகளும் உறுப்பினர்களும் அண்ணலுக்கு வரவேற்பு அளித்தார்கள். மாலையில் (பழைய) மதுரைக் கல்லூரி மைதானத்தில் கே. இராம ஐயங்கார் தலைமையின் கீழ் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் (தம் பேச்சுக்கு இடையில்) தற்செயலாக அவர் இந்தியையும் தமிழையும் ஒப்பிட்டுப் பேசினார். ''தமிழ் மொழியைப் பற்றி எனக்கு ஓரளவு தெரியும்; அது அழகான, இசைமயமான மொழி. ஆனால் அதன் இலக்கணத்தைக் கற்றுத் தேறுவதென்பது மிகமிகக் கடினம். இந்தி இலக்கணமோ குழந்தைக்குக் கூட எளிது'' என்றார்.

மதுரைக் கூட்டத்தில் இருபது பேருக்குமேல் சத்தியாக்ரக உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டார்கள்.

ஆலயம் வருகை

காந்திஜி கோயிலுக்கும் மற்றும் சில இடங்களுக்கும் சென்றுவிட்டு, அன்று இரவே தூத்துக்குடிக்குப் புறப்பட்டு விட்டார் என்று பத்திரிகைச் செய்தி கூறுகிறது. மதுரைக் கோவில் என்பது பொதுவாக ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலைத்தான் குறிப்பிடும். ஆனாலும் பின்னால் 1927 இல் காந்திஜியே தாம் ஸ்ரீ மீனாட்சி கோவிலுக்குப் போனதில்லை என்று கூறி விடுவதால் இது வேறு ஆலயமாகத்தான் இருக்க வேண்டும்.

மதுரையில் பெயர் பெற்ற வழக்கறிஞரும் சத்தியாக்ரக இயக்க முன்னணி ஆதரவாளர்களில் ஒருவருமான ஜார்ஜ் ஜோசப் இல்லத்தில் காந்திஜி தங்கினார்.

வந்தோரிடம் கண்டிப்பு

வைகை ஆற்று மேற்பாலத்தில் வடபுற இறக்கத்தில் உள்ள இந்த பங்களாவிற்கு சத்யாக்ரக உறுதிமொழியில் கையொப்பமிட விரும்பியவர்கள் சென்று காந்திஜியைச் சந்தித்துக் கையொப்பமிட்டார்கள். சத்தியாக்ரக உறுதிமொழிப் பத்திரத்தில் ஆசை காட்டி காந்திஜி கையொப்பம் வாங்கவில்லை என்பது மாத்திரமல்லாமல், கையொப்பம் போட வந்தோரிடம் கண்டிப்பாக இருந்தார் என்பதையும் கீழ்க் கண்ட ஓர் உதாரணத்திலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம். ஜார்ஜ் ஜோசப் பங்களாவில் காந்திஜியைச் சந்தித்து உறுதிமொழியில் கையொப்பமிட்டவர்களில் சங்கிலியா பிள்ளை ஒருவர். நீண்டகால காங்கிரஸ் காரரான சங்கிலியா பிள்ளை அச்சமயம் ஒரு வணிகராக இருந்தார். அன்று மாலை அவர் காந்திஜியைச் சந்தித்த போது, அண்ணல் அவரிடம், ''நன்றாக யோசித்து அதன்பின் இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிடுங்கள். இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிடுவோர் சாவதற்கும் தயாராய் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, கொஞ்சங் கூடப் பண இலாபத்தை எதிர்பார்க்க முடியாது. இந்த இரண்டிற்கும் தயாராக இருந்தால் மட்டும் பத்திரத்தில் கையொப்பமிடுங்கள்'' என்று கூறினார். அதற்கு சங்கிலியா பிள்ளை ''மகாத்மாஜி, நான் போகும் வழியில் ஒரு கார் என் மீது ஏறிவிட்டால், அல்லது, எனக்குக் காலரா வந்து விட்டால் நான் என்ன செய்ய முடியும்? அதற்குப் பதிலாக இத்தகைய புனிதமான இயக்கத்தில் இறப்பது மேல் அல்லவா?'' என்று மறுமொழி கூறவே அண்ணல் மிகவும் மகிழ்ச்சியடைந்து, அவர் கையொப்பமிடுவதற்குச் சம்மதித்தார். கிருஷ்ண குந்து, பத்திர ஐயாசாமி, சுந்தரம் பிள்ளை, சோழவந்தான் முனகால பட்டாபிராமையா ஆகியோர் மதுரையில் கையொப்பமிட்டவர்களாவர்.

அண்ணல் விருதுநகரில் இறங்கவில்லை. விருதுநகரைச் சேர்ந்தவரும், பிற்காலத்தில் விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்டவரும், சர்வோதய இயக்க வாதியுமான ஆர். டி. பி. சுப்ரமணிய நாடாருக்கு அப்போது இளம்வயது. அவர் நாலாவது படிவத்தில் படித்

துக் கொண்டிருந்தார். ஆயினும் அவருக்கு காந்திஜியின் மீதும், விடுதலை இயக்கத்தின் மீதும் அளவு கடந்த ஆர்வம் இருந்தது. அவரும் சில மாணவர்களும் காந்திஜியைப் பார்க்க இரயில்வே நிலையத் திற்குச் சென்றனர். ''நீங்கள் மாணவர்கள். அரசியலில் ஈடுபடக்கூடாது. ஆனாலும் ரௌலட் எதிர்ப்பு இயக்கம் ஒரு சமய இயக்கம். ஆகையால் கிராமங்களுக்குப் போய் சத்தியாக்ரக செய்தியைப் பரப்புங்கள்'' என்று காந்திஜி கூறினர். பின்னர், ''நீங்கள் ஜெயிலுக்குப் போகத் தயாரா?'' என்றும் கேட்டார். மாணவர்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இவர்களுடன் வந்திருந்த ஒரு (கணக்கு) ஆசிரியர் ''ஆம், தயார்'' என்று சொன்னார்.

விருதுநகர்

காந்திஜி: எத்தனை பேர்?

ஆசிரியர்: நிச்சயம் ஒருவர்.

காந்திஜி: இந்த ஊரின் மக்கள்தொகை என்ன?

ஆசிரியர்: 25,000.

காந்திஜி உரக்கச் சிரித்துக்கொண்டே, ''25000 பேருக்கு ஒரு சத்தியாக்ரகி வீதம் எனக்குக் கிடைத்தால் அது போதுமே!'' என்று சொன்னார். *

27–3–19

மறுநாள் காலை அண்ணல் தூத்துக்குடிக்குப் போய்ச் சேர்ந்தார். இரயில் நிலையத்திலிருந்து அவர் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த எஸ். இராஜகோபால் இல்லம் வரை, அலங்கரிக்கப் பெற்ற தெருக்களின் வழியாக ஊர்வலமாய் அவர் அழைத்துச் செல்லப்பெற்றார். மாலையில் பிரம்மாண்டமான ஊர்வலம் நடைபெற்றது.

தூத்துக்குடி

மதுரை ஆலயத்திற்கு மகாத்மா சென்றதன் எதிரொலியும் தஞ்சை, ஸ்ரீரங்கம் வழியாக வந்ததன் பலனும் தூத்துக்குடிப் பொதுக்கூட்டத்தில் தெரிந்தது. தென்னிந்தியாவில் உள்ள ஆலயங்களையும் சமய மரபையும் வானளாவப் புகழ்ந்து அண்ணல் பேசினர். ''இந்தியாவிலேயே கிட்டத்தட்டத் தென்கோடி இது. சென்னையிலிருந்து இங்கு

ஆலயம் வந்த எதிரொலி

* ஆர். டி. பி. எஸ். பேட்டி

வந்தது வரை நான் கண்ட சமய உணர்வு என்னை வியப்படையச் செய்துவிட்டது. இந்தியாவின் இத் தென் பகுதியில் ஆலயங்கள் நிறைந்திருக்கின்றன. வேறு எங்கும் இந்த அளவு ஆலயங்கள் இல்லை. கலை அழகு கொழிக்கும் இந்த ஆலயங்களை நிர்மாணிக்க அளவிலாச் செல்வம் கொட்டப் பெற்றிருக்கிறது. நாம் ஆழ்ந்த சமய உணர்வு உள்ளவர்கள் என்பதை, வேறு எதையும்விட இந்த உண்மை நன்கு மெய்ப்பிப்பதாக நான் கருதுகிறேன்,'' என்ற பீடிகையுடன் தூத்துக்குடியில் அண்ணல் தமது சொற்பொழிவைத் தொடங்கினர்.

இந்தக் கூட்டத்தில் காணப்பெற்ற ஒரு நல்ல அம்சம் மகாத்மாவின் மனதைக் கவர்ந்தது. கூட்டத்தில் யாரும் கைதட்டவில்லை; ''கேளுங்கள், கேளுங்கள்'' கூட்டத்தின் ''வெட்கம், வெட்கம்'' என்பன போன்ற அமைதி ஒலிகளை எழுப்பவில்லை. மகிழ்ச்சியோடு அண்ணல் கூறினர்: ''என்னுடைய உடல் நலத்தைக் கருதி நீங்கள் இத்தகைய ஒலிகளை எழுப்பவில்லை. சத்தியாக்ரகிகள் எல்லோருடைய சொற்பொழிவின் போதும் நீங்கள் இதே மரியாதையைக் காட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ''வெட்கம், வெட்கம்''. ''கேளுங்கள், கேளுங்கள்'' என்ற ஒலிகளை எழுப்புவதன் மூலமும் கை தட்டுவதன் மூலமும் நீங்கள் கவனத்தை வேறு புறந் திருப்புகிறீர்கள். அவ்வாறு திருப்பாவிட்டால் பேசப்படும் பொருளில் ஒருமனதான கவனம் செலுத்துவீர்கள். இதனால் பேசுபவருடைய சிந்தனையும் கலையாதிருக்கும். நம்முடைய கூட்டங்கள் எதிலுமே - அது சத்தியாக்ரகிகள் கூட்டமானாலும் சரி, மற்ற கூட்டமானாலும் சரி - இந்த நவீன ஆரவாரம் கூடாது என்றுதான் நான் யோசனை கூறுவேன். எல்லாக் கூட்டங்களுக்கும் பொருந்தியதாக என்னுடைய ஆலோசனையை நீங்கள் ஏற்பீர்களோ, ஏற்க மாட்டீர்களோ, சத்தியாக்ரகக் கூட்டங்களைப் பொறுத்தவரை ஏற்பீர்கள் என நம்புகிறேன்,''

28-3-19

மறுநாள் காலை அவர் தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டு, மதுரைக்குச் சென்று இரயில் மாறி இரவு சுமார் ஒன்பது மணிக்குத் தஞ்சை சேர்ந்தார். மதுரை இரயில் நிலையத்தில்

மகாத்மாவைக் காண்பதற்காக நூற்றுக்கணக்கான மக்கள் கூடியிருந்து அவருக்கு மாலை சூட்டி வழியனுப்பி வைத்தனர்.

தஞ்சை வருகை

தஞ்சை இரயில் நிலையத்தில் அந்நகரைச் சேர்ந்த பெரிய மனிதர்களும் ஏராளமான பொது மக்களும் இரயில் நிலையத்தில் கூடி நின்று அண்ணலை வரவேற்று அழைத்துச் சென்றனர். அன்றிரவு அண்ணல் ராவ்பகதூர் கே. எஸ். சீனிவாசப்பிள்ளை இல்லத்தில் தங்கியிருந்தார்.

29-3-19

தொழிலாளர் கூட்டம்

மறுநாள் காலை அவர் தஞ்சையிலிருந்து புறப்பட்டு இரயிலில் நாகைக்குச் சென்றார். தொழிலாளர்கள் சங்கத்தின் அழைப்பின் பேரிலேயே முக்கியமாக அவர் நாகப்பட்டினத்திற்கு வந்தார். ஆகையால், தொழிலாளர்கள் சிக்கலைப் பற்றியும் சிறிது நேரம் பேசினார். இங்கு நடைபெற்ற கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் பெரும்பாலோர் தொழிலாளர்களாய் இருந்ததும் இவ்வாறு அவர் பேசியதற்குக் காரணமாய் இருந்திருக்கலாம். அவர் கூறினார்: ''தொழிலாளர் இயக்கத்தில் தலைமை தாங்கி நடத்துவோர், உழைப்பின் பெருமையைத் தொழிலாளர்கள் உணருமாறு செய்வார்கள் என நம்புகிறேன். விவசாயிகளையும் தொழிலாளர்களையும் ஒன்றுசேர்த்தால், அவர்கள்தான் இந்தியாவிலேயே மிகப் பெரும்பாலான மக்களாய் இருப்பார்கள். இந்தியாவிலும் சரி, உலகிலும் சரி, எதிர்காலம் உயர் வாக்கத்தினரை மட்டும் பொருத்ததல்ல; சாதாரண மக்களைப் பொருத்ததே. ஆகையால், சமூகத்தில் தங்களுக்குள்ள இடத்தைத் தொழிலாளர்கள் உணரவேண்டியது அவசியம். மேற்கு நாடுகளில் இருப்பதைப் போன்று, நமது நாட்டில் தொழிலாளர்களுக்கும் தொழிலதிபர்களுக்கும் போராட்டம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.'' ஞாயிற்றுக்கிழமையன்று பொது வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென்று தாம் வேண்டுகோள் விடுத்திருப்பதைக் குறிப்பிட்டு, அன்று வேலை செய்ய வேண்டுமென்று தொழில் அதிபர்கள் கூறினால் என்ன செய்வதென்பதை அண்ணல் விளக்கினார். ''ஞாயிற்றுக்கிழமைகளிலும் வேலை செய்ய வேண்டியிருக்கும் தொழிலாளர்கள், தங்களுடைய அதிபர்களின் அனுமதி கிடைத்தால் மட்டும் அன்று வேலை செய்யாமல் இருக்கலாம். தொழில் அதிபர்களின்

நியாயமான உத்தரவிற்குக் கீழ்ப்படிய மறுப்பது சட்ட மறுப்பு ஆகாது,'' என்று அண்ணல் கூறினர்.

தமிழர்க்குப் புகழ் மாலை

நாகபட்டினத்தில் காந்திஜி ஆற்றிய உரையில் முத்தாய்ப்பு வைத்தது போல் இருந்தது, தமிழர் இனத்திற்கு அவர் மீண்டும் சூட்டிய புகழ் மாலையாகும். '' இந்தியாவில் வேறு எப்பகுதியிலும் இல்லாத அளவிற்கு மிக உயர்ந்த முறையில் தேசிய பாரம்பரியத்தை - அதன் வெளி உருவகத்தை - நீங்கள் மிக நன்முய்ப் பாதுகாத்துள்ளீர்கள். ஆண்டவனிடமும் உங்களுக்கு அழியாத நம்பிக்கை இருக்கிறது. உங்களைப் பார்க்கும் போது நம்முடைய மாபெரும் முனிவர்களே நினைவுக்கு வருகின்றனர். இதைக் காட்டிலும் எளிய வாழ்க்கையை நம் முன்னோர்கள் கூட வாழ்ந்திருக்க முடியாது என்று நான் உறுதியாகக் கூற முடியும். இவ்வளவு அழகாக நீங்கள் பாதுகாத்துள்ள இவ்வெளி உருவத்தில், அந்த மாமுனிவர்களின் உள்ளுணர்வைப் புகுத்த வேண்டும். அவ்வாறு மட்டும் நீங்கள் செய்து விட்டால், இந்தியாவில் நீங்கள் சக்தி மிக்கவர்களாகி விடுவீர்கள். இந்நாட்டின் கண்ணியத்தைக் காப்பாற்றி, அதன் எதிர்கால கதிமோட்சத்தையும் நிலைநாட்டி விடுவீர்கள். இதற்கு வேண்டிய வலுவை ஆண்டவன் உங்களுக்கு அளிப்பாராக!'' என்று காந்திஜி கூறினர்.

30-3-19

சென்னை வருகை

மறுநாள் அவர் சென்னைக்கு வந்து மாலையில் அவசரமாக விஜயவாடாவிற்கு இரயிலில் சென்று விட்டதால், அன்று மாலை திருவல்லிக்கேணியில் கே. வி. ரெங்கசாமி ஐயங்கார் தலைமையிலும் சென்னை சத்தியாக்ரக சபையின் ஆதரவிலும் நடைபெற்ற ரௌலட் மசோதா எதிர்ப்புக் கூட்டத்தில் பங்கு கொள்ள இயலவில்லை. வர இயலாமை குறித்தும் தாம் தெரிவிக்க விரும்பிய கருத்துக்களைக் குறித்தும் அவர் எழுதி அனுப்பியிருந்த கடிதத்தை எஸ். சத்தியமூர்த்தி கூட்டத்தில் படித்தார்.

சத்தியாக்ரகத்திற்கு அக்காலத்தில் எழுப்பப் பெற்ற மறுப்புக்களுக்குத் தமது மறுமொழி என்னவென்பதை இக்

கடிதத்தில் அண்ணல் தெரிவித்திருந்தார். இவைகளை யெல்லாங் காட்டிலும் போல்ஷி விசத்தையும் 'காந்தியத் தையும்' ஒப்பிட்டு அதில் அவர் கூறியிருந்த தீர்க்க தரிசனம் இன்று நினைத்துப் பார்த்தாலும் இனிது ஒப்புக்கொள்ளத் தக்கதாய் இருக்கிறது. அவர் அக்கடிதத்தில் கூறியிருந்தார்: 'போல்ஷிவிசம் பீடு நடை போட்டு முன்னேக்கி வந்து கொண்டிருக்கிறது என்று ஏற்கனவே நாம் அச்சங் கொண்டுள்ளோம். உங்கள் சத்யாக்ரகம் அந்த அச்சத்தை மேலும் அதிகப்படுத்துகிறது,' என்று சில நண்பர்கள் என்னிடம் வாதிக்கிறார்கள். இந்தப் பேரபாயம் நமது நாட்டிற்கு வராமல் ஏதாவது ஒன்று தடுக்கக் கூடுமானால் அந்த ஒன்று சத்தியாக்ரகம் தான். போல்ஷிவிசமானது நவீன நாகரிகப் பண்பாட்டின் காரணமாக இயற்கையாக விளையக்கூடிய ஒன்று. இந்த நாகரிகமானது நல்லுணர்வெதுவும் இல்லாது தூலப்பொருளைத் தெய்வமாக ஆராதனை செய்யக் கூடியது. வாழ்க்கையின் நுணுக்கமான அம்சங்களில் எவ்விதத் தொடர்புமில்லாது, லோகாயத முன்னேற்றம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு தத்துவத்தை இது வளர்த்து விட்டது. வரையரையற்ற புலன் நுகர்வு போல்ஷிவிசத் தத்துவமாகும்; புலன்களைக் கட்டுப்படுத்துவது சத்தியாக்ரகத் தத்துவம். அரசியல் அல்லது சமூகத் துறையில் வாழ்க்கையின் முக்கிய அம்சமாக, சத்தியாக்ரகத்தை இந்நாடு ஏற்குமாறு நான் செய்ய முடியுமானால், போல்ஷிவிசப் பிரச்சாரத்தைக் கண்டு நாம் அஞ்ச வேண்டியதில்லை. முரட்டு இம்சையை விடச் சத்தியமும் அன்புமே உயர்ந்தவை என்பதை மெய்ப்பிக்கும் இந்த நியதியை மட்டும் மீறி நடந்தோமானால், ஒரு காலத்தில் மிகவும் புனிதமானதாக இருந்த இந்நாட்டில் இன்னும் சில ஆண்டுகளில் போல்ஷிவிசம் தான் தலைதூக்கி நிற்கும் என்பதை நான் முன்கூட்டியே கூறிவிடுகிறேன்.'' இவ்வாறு அண்ணல் 1919-இலேயே கூறியிருக்கிறார். பல பெரிய அரசியல் வல்லுநர்கள், உலகில் பொதுவுடமை பரவுவதைத் தடுக்க வல்லது காந்தியமே என்று இப்போது கூறுகிறார்கள். ஆகவே எவ்வளவு பெரிய தீர்க்கதரிசனத்தை அன்றே அண்ணல் உணர்ந்து கூறியிருக்கிறார்!

அறிவுடையார் ஆவது அறிவார் ; அறிவிலார்
அஃதறி கல்லாதவர்

[அறிவுடையார் வருவதை முன்னறியக்கூடியவராவர். அறிவிலார் அதனை அறிய மாட்டாதவராவர்.]

மொத்தத்தில் இச்சுற்றுப்பயணத்தில் ஏற்பட்ட பயன் என்ன என்பதையும் அண்ணல் இக்கடிதத்தில் விளக்கிக் கூறியிருந்தார். வேறு யாரும் அவர் இதைக் கணக்கிடுவதைக் காட்டிலும் அவரே கருத்து கணக்கிட்டுச் சொன்னது இன்னும் சரியாக இருக்குமல்லவா ? அவர் சொன்னார்; " தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தூத்துக்குடி, நாகபட்டினம் ஆகிய ஊர்களுக்கு நான் சென்றேன். என் கூட்டங்களுக்கு வந்திருந்தவர்களுடைய எண்ணிக்கை, குறைந்த அளவு முப்பதாயிரத்திற்குக் குறையாது. நமக்கு எச்சரிக்கை விடுக்க உரிமை படைத்தவர்கள், தங்களுடைய ஐயப்பாடுகளைத் தெரிவிக்க உரிமை படைத்தவர்கள், தாய் நாட்டிற்கு நம்மைப்போன்றே சேவை செய்திருப்பதாக உரிமை பாராட்டுபவர்கள், ஒரு அச்சத்தைத் தெரிவிக்கிறார்கள். 'நமது நோக்கம் நல்லதாக இருக்கலாம். இம்சை பரவாமல் தடுக்க நாம் ஆவலாக இருக்கலாம். ஆனாலும் இயக்கத்தில் சேரும் மக்கள் உணர்ச்சி வயப்பட்டு, போதுமான சுய கட்டுப்பாடு இல்லாமல், இம்சையில் ஈடுபட்டால் அவசியமின்றி உயிர்ச் சேதம் ஏற்படலாம்; ஏன், நாட்டின் குறிக்கோளுக்கே பங்கம் ஏற்படலாம்' என்று இவர்கள் கூறுகிறார்கள்...(ஆனால்) இந்த மாநிலத்தில் பல்வேறு நகரங்களுக்கு நான் சென்ற போது, என்னுடைய உடல் நலத்தைக் கருதி, அங்கு மக்கள் சத்தமிட்டு ஆரவாரம் எதுவும் செய்யவில்லை என்பது உண்மையே. ஆனாலும் இதைக் காட்டிலும் உயர்ந்த காரணத்தை (கட்டுப்பாடாக இருக்க வேண்டும் என்பதை) நன்கு உணர்ந்தே அவர்கள் ஆரவாரம் செய்யாதிருந்தனர். இயக்கத்தில் ஈடுபட்டுள்ள தலைவர்களும் சுய கட்டுப்பாட்டின் அவசியத்தை முழுதும் உணர்ந்திருக்கிறார்கள். என்னுடைய இந்த அனுபவங்கள் எதிர்காலத்தைப் பற்றி மிகுந்த நம்பிக்கை கொள்ளுமாறு செய்கின்றன. நம்முடைய நண்பர்கள் எத்தகைய அபாயங்கள் ஏற்படுமென அஞ்சுகிறார்களோ அதைப் போன்ற அச்சம் எதுவும் எனக்கு இல்லை. நான் பங்கு

கொண்ட பல்வேறு கூட்டங்களும் எதிர்காலத்தைப்பற்றிய என்னுடைய நம்பிக்கையை உறுதிப்படுத்தின.''

இந்த வருகை மகாத்மாவின் உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தது என்பது 1946-இல் காந்திஜி கடைசி முறையாகத் தமிழகம் வந்தபோது 46-இல் (சென்னை வந்து சேர்ந்ததற்கு மறுநாள் சொன்னது 22-1-46) பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து தெளிவாகத் தெரிந்தது. அப்போது அவர் ''ரௌலட் சட்டத்தை எதிர்த்து முதன் முதலாக சத்தியாக்ரகம் தொடங்கப் பெற்றது சென்னை மாநகரில் தான். அன்று நான் கண்டபோது ராஜாஜி எப்படி இருந்தாரோ அப்படியே தான் இன்றும் இருக்கிறார். அந்தச் சந்தர்ப்பத்தில்தான் (காலஞ்சென்ற) சேலம் சி. விஜயராகவாச்சாரியாரையும் நான் சந்தித்ததாகும். ராஜாஜியின் இல்லத்தில் தான் ஏப்ரல் 6-ஆம் தேதியன்று புனித சத்தியாக்ரகம் தொடங்கியது. அன்று தோன்றிய சத்தியாக்ரகம் இந்தத் தேசத்தை அதிசயிக்கத் தக்க முறையில் தட்டி எழுப்பியது,'' என்று இந்த வருகையை மனமாரப் போற்றியிருக்கிறார்.

★

இரண்டாவது ஞாயிற்றுக்கிழமையன்று பொது வேலை நிறுத்தம் நடத்த வேண்டுமென்று காந்திஜி கூறியதைத் தவறுதலாகப் புரிந்துகொண்டு ஏப்ரல் 6-ஆம் தேதிக்கு முந்திய ஞாயிறன்றே டில்லி பொது வேலை நிறுத்தத்தையும் ஊர்வலத்தையும் நடத்திவிட்டது. ஊர்வலத்தின்மீது போலீசார் துப்பாக்கியால் சுட்டதில் பலர் மாண்டு போயினர். ஆகவே, (சென்னையிலிருந்து) பம்பாய்க்குச் சென்ற அண்ணல், அங்கு ஏப்ரல் 6-ஆம் தேதியன்று பொது வேலை நிறுத்தத்தை நடத்தி சத்தியாக்ரகத்தைத் தொடங்கி வைத்து விட்டு, மறுநாள் டில்லிக்கும் அங்கிருந்து அமிர்தசரசுக்கும் செல்வதற்காக ரயில் ஏறினார். வழியில் பால்வால் என்ற இடத்தில் அவரைப் போலீசார் அந்த இரயிலிலிருந்து இறக்கி, பல இரயில்கள் மாற்றி (கூட்ஸ் இரயில், பிரயாணிகள் இரயில் உள்பட, முதல் வகுப்பு, மூன்றும் வகுப்பு உள்பட, அவரை மாற்றி)க் கொண்டு சென்றனர். பம்பாயில் கொண்டுவந்து இறக்கி, ''இப்போது நீங்கள் விடுதலையாகி விட்டீர்கள்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார்கள். காந்திஜி கைதானதைக் கண்டு ஆத்திரமடைந்த மக்கள் ஆமதாபாத், அமிர்தசரஸ் போன்ற சில இடங்களில் வன்முறையில் ஈடுபட்டு விட்டனர். இதை காந்திஜி வன்மையாகக் கண்டித்ததுடன் பிராயச்சித்தமாக மூன்று நாட்கள் உண்ணாநோன்பும் இருந்தார்.

இரயில் கைது

ஜாலியன்வாலா பாக்

பிரிட்டன் ஆட்சியில் அழிக்க முடியாத பெருங்கறையாக முடிந்த ஜாலியன்வாலா பாக் படுகொலை நிகழ்ந்தது ஏப்ரல் 12-ஆம் தேதியன்றாகும். ஒரே பொதுக் கூட்டத்தில் பூச்சி, புழுக்களைப்போல 379 பேரை டயர் சுட்டுக்கொன்றார். பஞ்சாபில் ஜாலியன்வாலா பாக் தவிர, மற்றும் சில இடங்களிலும் இதைப்போன்ற படுகொலைகள் நிகழ்த்தப்பெற்றன.

இந்தியாவின் பிறபகுதிகளிலும் அடக்குமுறை தாண்டவ மாடியது. காந்திஜி இதைக்கண்டு மனம் வருந்தினர். போலீசாரின் நடவடிக்கைகளைக் காட்டிலும், மக்கள் (சில இடங்களில்) வன்முறையில் ஈடுபட்டதுதான் அவருக்கு அதிகக் கவலை அளித்தது. சட்டமறுப்புப் போராட்டத்தைக் குறித்து மறு ஆலோசனை செய்வதற்குரிய காலம் வந்து விட்டதாக, இரவீந்திரநாத் தாகூர் போன்று இந்திய சமுதாய வாழ்வில் உயர்ந்த இடம் வகித்த பெரியவர்கள் கருதினர்கள். மக்கள் சரியாக ஆயத்தமாவதற்கு முன்பே தாம் போராட்டத்தைத் தொடங்கி விட்டதாக காந்திஜியும் எண்ணினர். ஆகையால் ஏப்ரல் 18-ஆம் தேதியிலிருந்து போராட்டத்தை நிறுத்தினர். குஜராத்தியில் ''நவஜீவன்'', ஆங்கிலத்தில் ''யங் இந்தியா'' ஆகிய வார இதழ்களின் பொறுப்பை ஏற்று, மக்களுக்கு அஹிம்சையின் ஆற்றலைத் தீவிரமாகப் போதிப்பதில் ஈடுபட்டார்.

''ஒத்துழையாமை''

கடைசியாக, வைசிராய் அனுமதி பெற்று, பஞ்சாபிற்குச் சென்று மக்களுக்கு ஆறுதல் கூறினர்; அங்கு நடைபெற்ற படுகொலைகளின் விவரங்களைச் சேகரித்துக் கொண்டிருந்த காங்கிரஸ் குழுவுடன் சேர்ந்து அலுவல்களைக் கவனித்துவிட்டு டில்லிக்குத் திரும்பி வந்து (நவம்பர் 24-ஆம் தேதியன்று) அங்கு இந்துக்களும் முஸ்லிம்களும் உற்சாகத்துடன் கூட்டிய கிலாபத் மாநாட்டில் பங்கு கொண்டார். ஒத்துழையாமை என்ற சொல்லை அவர் முதன்முதலாகப் பயன் படுத்திய இடம் இம்மாநாடு தான்.

அமிர்தசரஸ் காங்கிரஸ்

டிசெம்பர் மாதம் அமிர்தசரசில் காங்கிரஸ் ஆண்டு மாநாடு நடைபெற்றது. இதுதான் திலகர் பங்கு கொண்ட கடைசிக் காங்கிரசாகும். இராணுவக் கமிஷன் உறுப்பினர் பதவியிலிருந்து டயரை விலக்க வேண்டும் என்றும் வைசிராய் பதவி வகித்த செம்ஸ்போர்டு பிரபுவைத் திருப்பி அழைத்துக் கொள்ள வேண்டுமென்றும் இந்தக் காங்கிரசில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. யார் தவறு செய்தாலும் நடுநிலை தவறாது கண்டிக்கும் இயல்பு படைத்த காந்திஜி, வன்முறையில் மக்கள் ஈடுபட்டதைக் குறை கூறி ஒரு தீர்மானங் கொண்டு வந்தார். அதுவும் நிறைவேறியது. கையால் நூற்பது, கையால் நெய்வது ஆகிய பண்டைக்காலத்

தொழில்கட்கு மீண்டும் புத்துயிரூட்ட வேண்டுமென ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பெற்றது.

போராட்டத் திட்டங்கள்

1920-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தான் டில்லியில் ஒத்துழையாமை இயக்கத்திற்கு விவரமான திட்டத்தை காந்திஜி அளித்தார். கிலாபத் குறித்து பிரிட்டிஷ் அரசாங்கம் அறிவித்த கொள்கைக்கு எதிர்ப்பு நாளாக மார்ச் 19-ஆம் தேதி வெற்றிகரமாக அனுசரிக்கப்பெற்றது. அமிர்தசரஸ் நிகழ்ச்சிகளின் விளைவாக, ஏப்ரல் 6-இலிருந்து 13-வரை, தேசிய வாரமும் அனுசரிக்கப்பெற்றது. அரசியல் சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதற்கு முன்னால் ரௌலட் சட்டத்தை அகற்ற வேண்டுமென்றும் அவ்வாறு செய்யாவிட்டால், அரசுடன் ஒத்துழைப்பது சாத்தியமில்லை என்றும் காந்திஜி அறிவித்தார். இதைத் திலகர் முழுதாக ஏற்றுக் கொள்ளவில்லை. அப்பொழுது அனைத்து இந்திய ஹோம் ரூல் இயக்கத்தின் தலைமைப் பதவியை காந்திஜி ஏற்றுக் கொண்டிருந்தார். தேசத்தின் கவனத்தை சட்டசபைக்குச் செல்வதில் செலுத்த வேண்டுமென திலகர் விரும்ப, கிலாபத் சிக்கலும் பஞ்சாப் சிக்கலும் தீரும்வரை அமைதி இருக்க முடியாது என காந்திஜி கருதினார். இந்தச் சமயத்தில் துருக்கி குறித்து பிரிட்டன், பிரான்சு முதலிய நேச நாடுகள் அளித்த சமாதான நிபந்தனைகள் இந்திய முஸ்லிம்கள் ஏற்கத்தக்கனவாக இல்லை. ஆகையால், மே 28-ஆம் தேதியன்று பம்பாயில் அனைத்து இந்திய கிலாபத் குழு கூடி காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தை ஏற்றது. இதே சமயத்தில் சுதேசி இயக்கத்தை காந்திஜி தீவிரப்படுத்தினார். ஜூலை 7-ஆம் தேதியன்று, காந்திஜி அறிவித்த ஒத்துழையாமைத் திட்டத்தில் நான்கு அம்சங்கள் இருந்தன. (1) பட்டங்களையும் கௌரவப் பதவிகளையும் விட்டுவிட வேண்டும் (2) ஊதியம் பெறும் அரசாங்கப் பதவிகளிலிருந்து விலகவேண்டும் (3) போலீசு, இராணுவ சேவையிலிருந்து விலக வேண்டும் (4) வரி கொடுக்கக் கூடாது.

ஆகஸ்ட் முதல் தேதியன்று ஒத்துழையாமை இயக்கப் போராட்டம் தொடங்கியது. அன்றுதான் திலகரும் காலமானார். ஆகவே 1920 ஆகஸ்டில் அவர் (காந்திஜி) தமிழகத்திற்கு வந்தபோது - அனைத்து இந்தியாவிற்கும் தலைவராகி

விட்டார். 1915-இல் அண்ணல் இந்திய அரசியலில் தொண்டாற்றுவதற்காக, இந்தியாவிற்குத் திரும்பி வந்த ஒரு வாரத்தில் அவருடைய அரசியல் குருவான கோகலே காலமானார் என்பது இங்கு நினைவுறத் தக்கது. 'என்னுடைய அரசியல் வாரிசு வந்துவிட்டார்; ஆகவே என் பணி முடிந்து விட்டது' என்று கூறுவது போன்று அவருடைய மரணம் அமைந்திருந்தது. திலகர் பெருமானின் மரணமும் மேற்கண்டவாறு இந்திய வரலாற்றின் ஒரு முக்கியமான கட்டத்தில் தான் நிகழ்ந்தது. 'தாம் விரும்பிய விடுதலைப் போராட்டம் தொடங்கிவிட்டது; ஆகவே தம் பணி முடிந்துவிட்டது' என்று கூறுவது போன்று திலகர் காலமானார்.

இந்தியாவின் தலைவரானார்

முதல் உலகப் போருக்கு முன், தேசிய உணர்ச்சி படித்த இளைஞர்களிடையே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த ஒரு சமயத்தில், அரசாங்கத்தை எதிர்த்துத் தமிழகத்தில் வன்முறை நிகழ்ச்சிகளும் போராட்டங்களும் நடைபெற்றன. அந்தச் சமயத்தில்தான் திருநெல்வேலி கலெக்டரான ஆஷர் சுட்டுக் கொலை செய்யப்பட்டார். வ. உ. சிதம்பரம்பிள்ளை கப்பல் போக்குவரத்து நடத்தினார். ஏறக்குறைய அந்தச் சமயத்தில் தான் தேசிய கவி சுப்ரமணிய பாரதியின் பாடல்கள் தமிழகமெங்கும் தேசியவாதிகளால் முழங்கப்பெற்றன. அரசை எதிர்த்து அவதூறுகப் பேசியதாக வ. உ. சிதம்பரம்பிள்ளை, சுப்ரமணிய சிவா போன்றவர்கள் கைது செய்யப்பெற்றதெல்லாம் அந்தக் காலத்தில் தான்.

தமிழக தீவிரம்

ஆனாலும் இந்தத் தேசியமெல்லாம் பாமரமக்களிடையே பரவவில்லை. தமிழகத்தைப் பொறுத்தவரை அன்னி பெசண்ட் தொடங்கிய ஹோம் ரூல் இயக்கத்தினால் ஓரளவு தேசிய இயக்கம் மக்கள் மத்தியில் பரவியது. ஆனால் அதுவும் ஒரு சிறு அளவில்தான். காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கியபோதுதான் மக்கள் உணர்ச்சிப் பிழம்பானார்கள். அரசியலும் படித்தவர்கள் அரசியலாக இல்லாமல் மக்கள் அரசியலாயிற்று.

'ஹோம் ரூல்'

ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாக இந்தியத் தேசியத்தில் எத்துணையோ விளைவுகள் ஏற்பட்டன. பொது வேலை நிறுத்தங்களும், ஊர்வலங்களும், பொதுக்கூட்டங்களும் சங்கிலித் தொடர் போல் நடந்துகொண்டிருந்தன.

பிரியத்தின் காரணம்

கள்ளுக்கடை மறியலின் காரணமாக, அதன் விற்பனை என்று அரசாங்கத்திற்குக் கிடைத்து வந்த வருமானம் கணிசமாகக் குறைந்தது. நாடெங்கும் சர்க்காக்கள் சுழன்று கதர் நெசவாகிக் கொண்டு வந்தது. இளைஞர் சங்கங்களும் காங்கிரஸ் கிளைக் குழுக்களும் தோன்றின. இவைகளெல்லாம் முக்கியமே. ஆனால் அரசாங்கத்தை ஒரு நியாயமான காரணத்திற்காக ஒரு சாதாரண மனிதன் எதிர்க்க முடியும் என்ற நம்பிக்கை உதயமாயிற்றே அதுதான் எல்லாவற்றையும்விட முக்கியமானது. போராட்டத்தில் தமிழகம் தலையாய பங்கு வகித்தது என்பதைச் சொல்லவே வேண்டியதில்லை. அப்போது தமிழகத்தில் முன்னணியில் இருந்த அரசியல் தலைவர்களில் கஸ்தூரிரங்க ஐயங்கார், சீனிவாச ஐயங்கார், சி. விஜய ராகவாச்சாரியார், இராஜகோபாலாச்சாரி, எஸ். சத்திய மூர்த்தி, வ. உ. சிதம்பரம்பிள்ளை, கலியாணசுந்தர முதலியார், சிங்காரவேலு செட்டியார், ஈ. வெ. இராமசாமி நாயக்கர், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, யாகூப் ஹாசன் ஆகியோர் முக்கியமானவர்களாவர். "ஹிந்து" "தேசபக்தன்", "சுதேசமித்திரன்" முதலிய செய்தித் தாள்களுடைய சேவையும் குறைந்தவையல்ல. தென்னப் பிரிக்காவில் தமிழர்கள் நெருங்கி ஒத்துழைத்தார்கள் என்பதற்காக முதலில் தமிழர்களையும் தமிழகத்தையும் காந்திஜி நேசித்தார். தமிழகத்தின்மீது அவர் தனி அபிமானம் வைத்திருந்ததற்கு இதுமட்டும் காரணமல்ல. பின்னர் இந்தியாவிற்கு வந்து அவர் மேற்கொண்ட போராட்டங்களிலும் முன்னணியில் நின்று தமிழர்கள் தலையாய தியாகம் செய்தார்கள். நிர்மாணத் திட்டங்களிலும் முழுமூச்சுடன் பங்கெடுத்துக்கொண்டார்கள். கதர், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு போன்ற நிர்மாணப் பணிகளில் தமிழகம் முதன்மை வகித்தது. இதனால்தான் காந்திஜியின் இதயத்தில் அவருடைய கடைசிக் காலம் வரை அழியாத இடம் தமிழகத்திற்குக் கிட்டிற்று.

இதே காலத்தில் 1916-இல் தமிழகத்தில் ஜஸ்டிஸ் (நீதிக்) கட்சி தோன்றியது. பிராமணரல்லாதாரின் நலனைப் பாதுகாப்பதும் சட்ட பூர்வமான முறைகளில் பொறுப்பாட்சி அடைவதும் தனது குறிக் கோள்கள் என்று இது அறிவித்தது. படிப்படி யாக ஹோம் ரூல், ஒத்துழையாமை, கிலாபத் இயக்க காலங்களில் அரசாங்க ஆதரவுடன் இக்கட்சி வளர்ந்துகொண்டுவந்தது. பி. தியாகராசச் செட்டி, டாக்டர் டி. எம். நாயர் ஆகியோர் இக்கட்சியின் பெரும் தலைவர்களாக அப்போது விளங்கினர். 1919-இல் அரசாங்கம் அறிவித்த அரசியல் சீர்திருத்தங்களை இக் கட்சி ஏற்றுப் பதவியும் ஏற்றது. ஆனால் இக்கட்சியின் உதவியைக் கொண்டும் மக்களின் தேசிய உணர்ச்சியை அந்நிய அரசாங்கம் தடுத்து நிறுத்திவிட முடியவில்லை.

நீதிக் கட்சி

1919-ஆகஸ்ட் மாத வாக்கில், அண்ணல் சென்னை மாநிலம் வருவதாக இருந்த ஒரு வதந்தியை வைத்து அப்போதிருந்த சென்னை மாநில அரசு இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தைப் பயன் படுத்தி, அவர் இம்மாநிலத்திற்குள் நுழையக் கூடாது எனத் தடை செய்தது. இதே மாதத்தில் சத்தியாக்ரகிகள் சென்னையில் கூடி சத்தியாக்ரகப் போராட்டத்தை நீடிப்பதா, கூடாதா என்பதைப்பற்றி ஆலோசனை செய்தார்கள். தமிழகத்தில் கிருஷ்ணசாமி சர்மா போன்ற சிலர், சத்தியாக்ரகப் போராட்டத்தை காந்திஜி நிறுத்தி வைத்தது சரியல்லவென்று வெளிப்படை யாகப் பொதுமேடைகளிலும் பேசிக் கொண்டு வந்தார் கள். காந்திஜியின் ஐம்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடு வதற்காக டாக்டர் சுப்ரமணிய ஐயர் தலைமையில் நடை பெற்ற கூட்டத்தில், பஞ்சாப் நிவாரண நிதிக்காக, 'காந்தி நிதி' என்ற பெயரில் நிதி வசூல் செய்வதென முடிவா யிற்று. 1920-ஜூனில் நெல்லையில் எஸ். சீனிவாச ஐயங்கார் தலைமையில் மாநில அரசியல் மாநாடு கூடி பஞ்சாப் விவகாரம், கிலாபத் சிக்கல், ஒத்துழையாமைச் சிக்கல் ஆகியவைகளைப் பற்றி ஆலோசித்தது. திருமதி பெசண்ட், சி. பி. இராமசாமி ஐயர் போன்ற மிதவாதிகளும் இம்மா நாட்டில் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை எடுத்துக் கூறினர்களென்றாலும் அவை எடுபடவில்லை. ராஜாஜியும் முஸ்லிம் தலைவர்களும் இம்மாநாட்டில் அரும் முயற்சி

இயக்கத்திற்கு ஆதரவு

எடுத்து ஒத்துழையாமைக் கொள்கையை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேறுமாறு செய்தார்கள். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தான் காந்திஜியும் சௌகத் அலியும் சென்னை மாநகருக்கு வந்து சேர்ந்தார்கள். ஆகஸ்ட் மாதம் பிறந்தவுடனேயே பலர் தங்களுடைய பட்டங்களையும் (கௌரவப்) பதவிகளையும் துறக்கத் தொடங்கிவிட்டார்கள். காந்திஜி வந்து இங்குச் சுற்றுப்பயணம் செய்த போது மேலும் பலர் அவ்வாறு செய்தார்கள். இம்முறை காந்திஜி சென்னைக்கு வருவதாக அறிவிக்கப்படுமுன் பொதுமக்களுக்கோ அரசாங்கத்திற்கோ அதைப் பற்றிய செய்தி எதுவும் இல்லை. யாகூப் ஹாசன் தாம் இந்த வருகைக்கு ஏற்பாடு செய்தவர். இந்தச் சுற்றுப்பயணத்தையும் தடை செய்யலாமா என்ற எண்ணம் ஒரு வேளை சென்னை அரசிற்கு அப்போது இருந்திருக்கலாம். ஆனாலும் இச்சுற்றுப்பயணந்தில் குறுக்கிட வேண்டாமென மாநில அரசிற்கு இந்திய அரசு எழுதி அதனால் இதில் குறுக்கிட முடியாது செய்து விட்டது.

கடும் கண்டனம்

ஒத்துழையாமை இயக்கத்தைப் பற்றி மக்களுக்குப் புகட்டுவதற்காகப் பொதுவாக இந்தியா முழுவதிலும் காந்திஜி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்தார். அதன் ஒரு அங்கம் தமிழக வருகை என்றாலும் முதலில் இங்கு வந்ததை நாம் கவனிக்கவேண்டும். பிரிட்டிஷ் பேரரசையும் இந்திய அரசையும் அவர் இம்முறை கண்டித்ததைப் போன்று இதற்கு முன் வேறு எந்தச் சமயத்திலும் கண்டித்ததில்லை. இந்த இராவண ராஜ்யத்தை ஒழித்துக் கட்டிவிட்டு காந்திஜியின் இராமராஜ்யத்தை நிறுவ வேண்டும் என்று முழங்கினார். சகாக்கள் கூட, 'இவ்வளவு கடுமையாக காந்திஜியுங் கண்டிப்பாரா?' என்று மூக்கில் விரலை வைத்து வியப்படைந்தனர். மற்றுஞ் சிலரோ, 'இக்கடுங் கண்டனம் காந்திஜியின் அஹிம்சைத் தத்துவத்திற்கே விரோதமானது' என்று குற்றஞ் சாட்டத் தொடங்கி விட்டார்கள். ஆனால் காந்திஜி இந்தக் கருத்துக்களை யெல்லாங் கண்டு மனந்தளர்ந்து விடவில்லை.

இச் சுற்றுப்பயணம் உண்மையிலேயே சூறாவளிச் சுற்றுப் பயணமாக இருந்தது. இடையே இரண்டு நாட்கள் கள்ளிக்கோட்டைக்கும் மங்களூருக்கும் போய்விட்டு வந்தார். அங்கிருந்து சேலத்திற்கு வந்து பெங்களூருக்குப்

போய் மறுநாள் சென்னை வழியாக பெஜவாடாவிற்குச் சென்றார். இவ்வாறு இது உண்மையில் தமிழகச் சுற்றுப் பயணமாக மட்டுமல்லாமல் கர்னாடகம், கேரளம், ஆகியவை உள்ளிட்ட சுற்றுப்பயணமாக இருந்தது. ''நவஜீவனில்'' அண்ணல் எழுதிய கட்டுரையில் இச் சுற்றுப்பயணம் பற்றிக் கீழ்க் கண்டவாறு அவரே கூறியிருக்கிறார்: ''சென்னை தவிர வேறு எந்த இடத்திலும் நாங்கள் தொடர்ந்தாற் போல் இருபத்து நான்கு மணி நேரம் தங்கமுடியவில்லை. சென்னையில் கூட, முதலில் அந்நகருக்குச் சென்ற போது தான், இருபத்து நான்கு மணி நேரத்திற்கு மேல் தங்க முடிந்தது. அதற்குப் பின்பு, (அது மத்திய இடமாகையால்) அதன் வழியாகப் போனபோதும் வந்தபோதும் ஒரு சில மணி நேரங்கள் தங்கினேம். சேலத்திலிருந்து பெங்களூருக்கு 125 மைல் தூரமும் காரிலேயே சென்றோம். இந்த வேகத்தில் சுற்றுப்பயணம் செய்தது அளவுக்கு மீறியதேயாகும்.'' இம்முறை கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவான போராட்டத்திற்கு காந்திஜி வந்ததால், அவருடைய சுற்றுப்பயணத்திட்டத்தில் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நகரங்கள் அதிகம் இடம் பெற்றன.

சூரூவளி பயணம்

தமிழக மக்கள் ஆதரவு

ஒத்துழையாமைப் போராட்டத்தில் இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து செயல்பட முடியும் என்பதை காந்திஜியும் சௌகத் அலியும் நேரடியாக அறிந்து கொள்வதற்கு இச்சுற்றுப்பயணம் நன்கு உதவியது. எங்குப்போனாலும் என்றும் இல்லாத மாபெரும் வரவேற்பு; ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பண முடிப்பாக வழங்கப் பெற்றன. சென்னைக்கு வந்தவுடன் சௌகத் அலிக்கு உடல் நலமில்லாமற் போய்விட்டதால், ஆம்பூருக்கும் வேலூருக்கும் அவர் காந்திஜியுடன் செல்லவில்லை. மற்ற ஊர்களுக்கு அவர் அண்ணலுடன் சென்றார். பொதுவாக, இந்துக்கள் பெரும்பான்மையாக இருந்த கூட்டமாயினும் முஸ்லிம்கள் பெரும்பான்மை இருந்த கூட்டமாயினும் அண்ணலே கதாநாயகராக இருந்தார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

12–8–20

பம்பாய் மெயிலில் காந்திஜியும், மௌலானா சௌகத் அலியும் அமர்ந்திருந்த இரயில் பெட்டி, சென்னை சென்ட்ரல்

இரயில்வே நிலையத்தில் தனியாகக் கழற்றப் பெற்று, (ஸ்டேஷன் மாஸ்டர் பார்லோவிற்கு நன்றி) மக்கள் வரவேற்பதற்காகக் கூடிநின்ற முதல் பிளாட்பாரத்தின் சென்னை ஓரத்தில்கொண்டு வந்து நிறுத்தப் பெற்றது. வந்தார் அவரைக் காண்பதற் காகவும் மாலை சூட்டுவதற்காகவும் மக்கள் முண்டியடித்துக் கொண்டு நெருக்கி முன்னுல் வந்ததில், அவர்கள் இருவருமே உயிர் பிழைப்பார்களா என்று ஐயப்படும் அளவிற்கு, அன்று இரயில் நிலையத்தில் பெருங்கூட்டம் திரண்டிருந்தது. காந்திஜியும், சௌகத் அலியும் கூட்டத்தை விலக்கிக் கொண்டு, ரெயில் நிலையத்தின் முன்னர் ஊர்வலத்திற் காக ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த காரில் அமர்வதற்கு அரைமணி நேரத்திற்கு மேலாகிவிட்டது. வரவேற்க வந்திருந்த பெரிய மனிதர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் ஷான்பகதூர் குத்துஸ்பாட்சா சாகிப், யாகுப்ஹாசன், எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், வித்யாசாகர் பாண்டியா, துரை சாமி ஐயங்கார், அப்துல் ஹகீம், சி. இராஜகோபாலாச்சாரி யார், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், வ.வெ.சு. ஐயர். சல்லா குருசாமி செட்டி, ஆதிநாராயண செட்டி, எஸ். சத்தியமூர்த்தி, ஆகியோராவர். அந்தச் சமயம், கான் பகதூர் குத்துஸ்பாட்ஷா சாகிப் சென்னை மத்திய கிலாபத் குழுத்தலைவராகவும் எஸ். கஸ்தூரிரங்க ஐயங்கார், சென்னை மாநில காங்கிரஸ் குழுத் தலைவராகவும் இருந்தார்கள். பிறைச்சந்திரக் கொடிகள் நிறையப் பறந்து கொண்டிருந்தன. (பிறைச் சந்திரனும் நட்சத்திரமும் இருக்கும் சின்னம் துருக்கிச் சின்னமாகும். இது கிலாபத் இயக்கத்தைக் குறித்தது.) தொழிலாளர்களில் சிம்சன் அண்டு கம்பெனி தொழிலாளர்களும் அரசாங்க அச்சுக்கூடத் தொழிலாளர் களும் முக்கியப் பங்கு வகித்தார்கள். அன்று மகாத்மாவிற்கு அளிக்கப் பெற்ற வரவேற்பைப் பற்றி 'சுதேசமித்திரன்' ''மகாத்மாவும் மௌலானுவும் வண்டியிலிருந்து கீழே இறங்கியவுடன் நாம் கண்ட காட்சியை வர்ணிக்க முடியாது; ஏதோ தேவேந்திரன் புஷ்பக விமானத்தில் இறங்கி வந்து பூலோக வாசிகளுக்குத் தரிசனம் கொடுப்பது போலவே அது காணப்பட்டது'' என்று வர்ணித்திருந்தது.

புரசைவாக்கம் சாலை 63-ஆவது எண் கட்டிடமாகிய சேட் கார்டன்ஸில் தான், ஹாஜி அப்தூல் ரகிம் சாகிப் விருந்தின

ராக, இருதலைவர்களும் (காந்திஜியும் சௌகத் அலியும்) தங்கியிருந்தார்கள். (சென்னை நகருக்கு வந்துசேருவதற்கு முன் இருவர்களும் அரக்கோணத்தில் கிருஷ்ண சாமி சர்மா, வேலூர் கிலாபாத் குழுச் செயலாளர் ஹாபுஜான் தலைமையில் மக்களால் மேளதாளங்களுடன் வரவேற்கப்பட்டனர்.) அண்ணல் தங்கியிருந்த இடத்திற்குப் பல தலைவர்களும் பெரிய மனிதர்களும் ஊழியர்களும் வந்து, ஒத்துழையாமைப் போராட்டத் திட்டம் பற்றிய விவரங்களைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் ''மெயில்'' செய்தியாளரும் போய்ச் சேர்ந்தார். காந்திஜியிடம் பல தர்ம சங்கடமான கேள்விகளை அவர் கேட்டார். ''கடந்த ஆண்டில் சத்தியாக்ரகம் நடத்திய அனுபவத்தின் பின்னரும், ஒத்துழையாமைப் போராட்டத்தை நடத்துவது விவேகம் என்று கருதுகிறீர்களா?'' என்ற கேள்வியுடன் அவர் பேட்டி தொடங்கியது. ''நிச்சயமாக'' என்று மறுமொழி அளித்த அண்ணல், மேலும் கூறியவை அவருடைய மன உறுதியையும் தெளிவான சிந்தனையையும் எடுத்துக் காட்டின; ''முன்பிருந்ததைவிட இப்போது மக்கள் அதிகக் கட்டுப்பாட்டுடன் இருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். மேலும், சட்ட மறுப்புப் போராட்டத்தில் உள்ள அபாயம் ஒத்துழையாமையில் கிடையாது. ஒத்துழையாமைப் போராட்டத்தில், சட்டங்களை மீறுவதை ஒரு மக்கள் இயக்கமாக நாம் ஆக்குவதில்லை. அரசாங்கத்திடமிருந்து மக்கள் தங்களுடைய தொடர்பை முற்றிலும் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்பதும் எனது விருப்பமல்ல. மக்களுடைய உணர்ச்சியை அரசாங்கம் உணர வேண்டிய அளவிற்குப் போராட்டம் நடந்தால் போதும்''.

அன்று மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு காந்திஜியும் மௌலானாவும் இருபது நிமிடங்கள் தாமதித்தே வந்தார்கள். இக்கூட்டத்தில் அவர் பேசியதை, ''ஒரு தீர்க்க தரிசியின் மனோ உணர்ச்சியுடன்'' நிகழ்த்திய சொற்பொழிவாக காந்தி நூல் ஆங்கிலத் தொகுப்புக் கூறுகிறது. ''வாழ்வு பலத்தின் தத்துவத்தில் இந்தியா நம்பிக்கை வைத்த அன்றே, இந்தியன் என்ற முறையில் என்னுடைய வாழ்வு முடிந்து விடும். இந்தியாவுக்கென்று ஒரு தனிக் குறிக்கோள் இருக்

பொதுக் கூட்டம்

எந்த அளவுக்கு

கிறது. எத்தனையோ நூற்றாண்டுகளாக வந்த அனுபவத்தின் பின்னர், 'உலகில் வாழும் மனிதனுக்கு, வன்முறையை அடிப்படையாகக் கொண்ட நீதி நிலையானதல்ல, தன்னல மறுப்பை அடிப்படையாகக் கொண்டதும், யக்ஞத்தை அடிப்படையாகக் கொண்டதுமான நீதி தான் உண்மையானது' என்பதை நமது முன்னோர்கள் கண்டிருக்கிறார்கள். இவைகளை நான் உறுதியாக நம்புவதால் தான் அந்தத் தத்துவத்தை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கிறேன். அதில் என்றென்றும் நம்பிக்கையும் வைத்திருப்பேன்... நான் ஆங்கிலத்தின் எதிரியல்ல. நான் பிரிட்டிஷாரின் எதிரியல்ல. நான் எந்த அரசாங்கத்திற்கும் எதிரியல்ல. ஆனால் அசத்தியத்தை எதிர்ப்பவன், வஞ்சகத்தை எதிர்ப்பவன், அநீதியை எதிர்ப்பவன். அரசாங்கம் அநீதி இழைக்கும் வரை என்னை அது தன் எதிரியாகக் கருதிக் கொள்ளலாம். இரக்கமில்லாத எதிரியாகக் கருதிக்கொள்ளலாம். இந்த முயற்சியில் நான் மரணமடைய நேர்ந்தாலும் அது என் பாக்கியமே,'' என்று மிகவும் உருக்கமாக அவர் பேசினார்.

தமிழகம் மீது நம்பிக்கை

கான்பகதூர் அப்துல் குத்தூஸ் பாஷா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காந்திஜி இதே பாணியில் சுமார் ஒரு மணி நேரம் பேசினார். இருபத்தி யிருந்த இக்கூட்டம் மீன் காட்சிசாலைக்கு அருகில் நடைபெற்றது. இதற்கு முன் சென்னையிலோ அல்லது தமிழகத்தின் வேறு எப்பகுதியிலோ இவ்வளவு பெரிய கூட்டம் கூடியதில்லை என்று அப்போது செய்தித்தாள்களெல்லாம் எழுதின. முன்பு வந்திருந்த போது இருந்ததைவிட இப்போது அண்ணல் நல்ல உடல் நலத்துடன் இருந்தார். அவரால் உரக்கப் பேச முடிந்தது; அவருடைய குரல் தெளிவாக இருந்தது. ஆனாலும் அவரால் இம்முறையும் நின்று கொண்டு பேச முடியவில்லை. அஹிம்சா பூர்வமான ஒத்துழையாமை இயக்கத்தைப்பற்றி, இதுவரை காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவுகளிலெல்லாம் இது அதிக விளக்கமானதாக இருந்தது. தமிழர்கள் மீது தாம் கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் நினைப்பூட்ட அவர் தவறவில்லை. ''உங்களிடம் - சென்னை நகர மக்களிடமும் இம்மாநில மக்களிடமும் - எனக்கு எல்லையற்ற நம்பிக்கை உண்டு. 1893-இல் தென்

ஞப்பிரிக்காவில் தமிழ்க் கூலிகளுடன் முதன் முதலாக எனக்குத் தொடர்பேற்பட்டதிலிருந்து வளர்ந்து வரும் நம்பிக்கை இது. இந்தச் சோதனைக் கட்டத்தில் வேறு எம்மாநிலத்திற்கும் இம்மாநிலம் பின் தங்கியதாக இராது; தியாகத்தில் தலைமை தாங்கி நிற்கும்; ஒவ்வொரு சொல்லையும் செயலில் மெய்ப்பித்துக் காட்டும்'' என்று அவர் தமிழகத்தைப் பாராட்டினர். இம்மாநிலம் என்று ஆந்திராவும் தமிழகமும் சேர்ந்த சென்னை மாநிலத்தை அவர் குறிப்பிட்டுப் பேசியபோது தமிழ்க்கூலிகள் என்று மட்டும் கூறியிருப்பதை நாம் கவனிக்க வேண்டும்.

அரசியல் சட்டம்

பெரிய சட்ட வல்லுநரான எஸ். சீனிவாச ஐயங்கார் தாம், '' அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு ஒத்துழையாமை விரோதமானதல்லவா ?'' என்ற கேள்வியை எழுப்பியவர். அதனால், இக்கேள்விக்கு மகாத்மா காந்தி இக் கூட்டத்தில் மறுமொழி தரவேண்டியதாயிற்று. மகாத்மா அளித்த மறுமொழி அநேகமாக எல்லோருக்கும் மன நிறைவு அளித்தது. ஒத்துழையாமை இயக்கத்தில் உள்ள சில அம்சங்கள் நடைமுறைச் சாத்தியமற்றவையாக இருக்கின்றன என்பது மற்றும் பலர் - இவர்கள்தான் பெரும்பாலோர் - கொண்டிருந்த எதிர்ப்பாகும். '' சுதேசமித்திரன்'' எழுதிய தலையங்கம் இதையே சுட்டியது. ஒத்துழையாமைத் திட்டத்தில் இருந்த தகராறுக்கிடமான அம்சம், பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேற வேண்டும் என்று அவர் கூறியதாகும். பதினெறு வயதிற்கு மேற்பட்ட மாணவர்கள், தாய் தந்தை அனுமதியா விட்டாலுங்கூட, தங்கள் மனச்சாட்சி ஏற்றுக்கொள்வதால் கல்லூரிகளையும் பள்ளிகளையும் புறக்கணிக்க வேண்டும். (இவ்வாறு செய்யும்போது மாணவர்கள் கண்ணியமாகவும், சுய கட்டுப்பாட்டுடனும் நடந்து கொள்ளவேண்டும் என்று அவர் கூறவே செய்தார்.) என்று அவர் கூறியது இன்னும் அதிகமான கருத்து வேறுபாட்டிற்கு இடம் அளித்தது. (இவ்வாறு காந்திஜியின் திட்டம் அளவுக்கு மீறித் தீவிரமான தாய் இருப்பதாகப் பலர் கருத, தீவிரம் போதாது என்று கூறக்கூடிய சிலரும் இருந்தார்கள்.) ஒத்துழையாமைப் போராட்டத்தை சாஸ்திரியார் ஏற்கவில்லை. பள்ளிமாணவர் களைப் பள்ளிக்கும் கல்லூரிக்கும் செல்லாமல் நிறுத்திவிட வேண்டும் என்ற அம்சத்தை அவர் கடுமையாக எதிர்த்தார்.

ஆனால் அவருக்கு காந்திஜியின் கேள்வியோ, ''சாஸ்திரியின் பொருளைத் திருடிப் பள்ளி நடத்தும் ஒருவரின் பள்ளிக்கு அவர் தமது பிள்ளையை அனுப்புவாரா?'' என்பதுதான்.

அரசியலில் ஈடுபடலாமா?

'மாணவர்கள் அரசியல் விவகாரங்களைப் பற்றி அறிந்து கொள்ளவேண்டும். ஆனால், அதில் நேரடியாக ஈடுபடக் கூடாது' என்பதுதான் அண்ணலின் பொது அரசியல் வான கருத்து. ''ஒத்துழையாமை இயக்கத்தின் போது, அரசாங்கம் நடத்தும் பள்ளிகளிலிருந்தும் அரசாங்க ஆதரவு பெற்ற பள்ளிகளிலிருந்தும் மாணவர்கள் வெளியேறிவர வேண்டுமென்பது மாணவர்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடுவதாகாதா?'' என்று சிலர் கேட்டார்கள். ஆனால் பள்ளிகளிலிருந்து வெளியேறி வந்தே அரசியலில் மாணவர்கள் ஈடுபடலாம் என்று அன்று அண்ணல் சொன்னார் என்பதை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இவ்வாறு வெளியேறி வந்த மாணவர்களும் நேரடியாக அரசியல் போராட்டங்களில் ஈடுபட வேண்டும் என்பது அவருடைய முக்கிய நோக்கமல்ல. பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளை மேற்கண்ட பள்ளிகளிலிருந்து திருப்பி அழைத்து, முடிந்தால் தேசியப் பள்ளிகள் நிறுவி அவைகளுக்கு அவர்களை அனுப்ப வேண்டும் என்றுதான் அவர் கூறினார்.

கிலாபத்தில் உறுதி

கிலாபத் இயக்கம் பற்றிக் காங்கிரஸ் கொள்கை என்ன என்பதை அமிர்தசரசில் தனி காங்கிரஸ் மாநாடு கூடி முடிவு செய்வதாக இருந்தது. ஆனால் அதற்கு முன்னமேயே தம் கொள்கை என்ன வென்று காந்திஜி அறிவித்து விட்டார். ''மனச்சாட்சி பூர்வமாகக் கிலாபத் சிக்கலில் அரசை எதிர்ப்பது என்று முஸ்லிம்கள் முடிவு செய்து விட்டனர். அவர்களுடைய கௌரவம் என் பொறுப்பில் இருக்கிறது. ஆகையால் தனி காங்கிரசே கூடி அவர்களுடைய முடிவிற்கு விரோதமாகத் தீர்மானம் நிறைவேற்றினாலும் நான் அதை ஏற்காமல், தன்னந்தனியாக நின்று போராடுமாறு முஸ்லிம்களைக் கேட்டுக் கொள்வேன்'' என்று அவர் அறிவித்து விட்டார். நம்பியவர்களை எந்தக் கடினமான கட்டத்திலும் உறுதியுடன் இருந்து காப்பாற்றுவதென்பது காந்திஜியின் உயர் குணங்களில் ஒன்று. 'காஷ்மீர் மக்கள் இந்திய அரசை நம்பியிருப்பதால், இராணுவத்தை அனுப்பியாவது

அவர்கள் கௌரவத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று அவர் பின்னர் கூறவில்லையா ?

> 'நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின், கொட்பின்றி ஒல்லும் வாய் ஊன்றும் நிலை.'

(நட்பிற்குச் சிறந்த அரசிருக்கையாவது, எக்காலத்தும் மாறுபடுதல் இல்லாமல், அறம் பொருள்களில் தளராமல், தாங்கும் திண்மையாகும்.) என்று பொய்யாமொழிப் புலவர் கூறினரன்றே ?

மித்திரன் எதிர்ப்பு

கடற்கரையில் காந்திஜி நிகழ்த்திய இந்தச் சொற்பொழிவைக் குறித்து ''சுதேசமித்திரன்'' எழுதிய தலையங்கத்தில் - மற்ற பல அம்சங்களை வரவேற்று விட்டு - ஒரு முக்கியமான கருத்து வேறுபாட்டைத் தெரிவித்திருந்தது. ''அவரிடத்தில் (காந்திஜியிடத்தில்) நமக்குள்ள மரியாதைக்கு எல்லையில்லையாகிலும் சட்டசபை பகிஷ்காரம் செய்யும் விஷயமாக அவர் சொல்லும் விஷயத்தை நாம் அங்கீகரிக்க முடியவில்லை. டிசெம்பர் மாதக் கடைசியில் நிலைமை இப்பொழுது உள்ளது போலவே இருக்குமானால் பிரதிநிதிகள் சட்டசபைகளுக்குப் போகாமல் இருந்து விடலாம். நிலைமையில் மாறுதல்கள் ஏற்பட்டு விட்டால் சபைகளில் ஸ்தானத்தை வகித்து விடலாம். அப்படிச் செய்யாமல் இப்பொழுது முதல் சபைகளுக்குப் போகிறதில்லை என்று சும்மா இருந்துவிட்டால் தேசத்திற்குக் கேடு செய்கிறவர்களுக்கு இடம் கொடுப்பதாகும். ஆகையால் இவ்விஷயத்தை மகாத்மா மறுபடியும் யோசனை செய்து பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறோம்'' என்று ''சுதேசமித்திரன்'' எழுதியிருந்தது. அதனுடைய கருத்திற்கு காந்திஜி மிகுந்த மதிப்பு வைத்திருந்தார். இதற்கு அவர் மறுமொழி அளித்த போது, ''சென்னையிலிருந்து வெளிவரும் மிகுந்த செல்வாக்குள்ள தமிழ் நாளிதழ்களில் 'சுதேசமித்திரன்' ஒன்றாகும். அது பலராலும் படிக்கப்படுகிறது. அதில் வெளிவரும் ஒவ்வொரு அம்சமும் முக்கியத்துவம் உள்ளவை. ஒத்துழையாமையை அனுசரிக்கும் போது நடைமுறையில் சில கஷ்டங்கள் இருப்பதாக அதன் ஆசிரியர் கூறியிருக்கிறார். ஆகையால் என்னால் முடிந்த அளவு அவைகளுக்கு மறுமொழி அளிக்க விரும்புகிறேன்'' என்று தமது கட்டுரையை (18-8-20) ''யங் இந்தியா''வில்

தொடங்கியிருந்தார். ''சட்டசபைகளுக்கு ஒத்துழையாமையில் நம்பிக்கை உள்ளவர்கள் செல்வதைப் போன்று, மிதவாதிகளோ மற்றவர்களோ செல்வது அவ்வளவு முக்கியமானதல்ல. மேலே நீங்கள் ஒத்துழைத்துவிட்டு, கீழே ஒத்துழையாமலிருக்க முடியாது. சட்டமன்றத்தில் உறுப்பினராக இருந்து கொண்டு, சபையில் உள்ள மேசையைத் துடைக்கும் குமஸ்தாவைப் பதவி விலகச் சொல்ல முடியாது'' என்பதுதான் காந்திஜி அளித்த மறுப்பின் சாரம்.

மித்திரன் மறுமொழி

''சுதேசமித்திரன்'' விடவில்லை. தனது கருத்தை வலியுறுத்தி மூன்று தலையங்கங்கள் தொடர்ந்து எழுதியிருந்தது. ''மகாத்மா காந்தி நமக்கு உபதேசம் செய்து வரும் ஒத்துழையாமையை விடச் சிறந்த ஆயுதம் நமக்கு வேறு இல்லை என்பது நிச்சயம்'' என்று அது ஒப்புக்கொண்டது. ஆனால் ஒத்துழையாமைப் போராட்டத் திட்டத்தில் ''ஒரு குழப்பம்'' இருக்கிறது என்பதுதான் அதனுடைய முக்கிய வாதம். ''நாம் எழுதிய தலையங்கங்களை கவனித்து நமக்குச் சமாதானம் சொல்லி 'யங் இந்தியா' பத்திரிகையில் மகாத்மா எழுதியிருப்பதை வந்தன பூர்வமாகப் படித்தோமாயினும் அவருடைய வாதங்களை நாம் அங்கீகரிக்கக் கூடாததற்கு வருந்துகிறோம்..... போலீசிலும் இராணுவத்திலும் உள்ளவர்கள் வேலையை விட்டு விடும்படி கேட்கிற காலத்தில் இந்த இரண்டு படைகளின் ஊழியம் தேவையாக இருக்கக் கூடிய நிலையில்தான் தேசம் இருக்குமென்று மகாத்மா(வும்) எதிர்பார்ப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இவர்கள் அனைவரும் சர்க்கார் வேலையை ராஜினமா செய்து விட்டு (காந்திஜி யோசனைப்படி) சமூக நன்மையின் பொருட்டு அதே வேலையை அவர்களிடம் சம்பளம் பெறுமல் செய்து விட்டால், எந்த கவர்ன்மெண்டாரைத் தங்கள் ஒத்துழையாமையால் கட்டாயப்படுத்திவிட உத்தேசித்தார்களோ அவர்களுக்குச் செலவில்லாமலும் சிரமமில்லாமலும் செய்து சௌகரியம் உண்டுபண்ணுவார்கள் என்றே நாம் சந்தேகிக்கிறோம்.... தவிர, வேலையை விட்டு விடுகிறவர்களுக்குத் தேசபக்தி எவ்வளவு இருப்பினும் எப்படித் தாங்கள் ஜீவனம் செய்வார்கள், எப்படி குடும்ப சம்ரக்ஷணை செய்வார்கள்? இந்தச் சங்கடங்களெல்லாம் கிலாபத் கமிட்டிக்குத் தெரியுமென்றும் பரிகாரங்களை அவர்கள்

யோசித்துக் கொண்டிருக்கிறார்களென்றும் மகாத்மா எழுது கிறார். அந்தப் பரிகாரங்கள் என்னவென்று ஜனங்களுக்குத் தெரிய வேண்டுமென்று அவர்கள் எதிர்பார்க்க மாட்டார் களா?'' காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தையே வேறு வகையில் சுதேசமித்திரன் ஆராய்ந்திருந்தது. மேலும், ''மகாத்மா காந்தி தமது 'யங் இந்தியா' பத்திரிகையில் பதில் எழுதியபோது, சட்டசபைகளில் ஒத்துழைப்பதை நிறுத்தாமல் குமாஸ்தாக்கள் வேலையை விடும்படி கேட்பது என்ன நியாயம் என்று கேட்கிறார். சட்டசபை மெம்பர்களும் குமாஸ்தாக்கள் போன்றவர்களும் ஒரு தன்மையான வேலை செய்கின்றவர்கள் என்று நினைக்கக் கூடாது. குமாஸ்தாக்கள் கவர்ன்மெண்டின் வேலையைச் செய்து அவர்களிடம் சம்பளம் வாங்கி வேலை செய்கின்றவர் கள். சட்டசபை மெம்பர்கள் பொது ஜனங்களின் ஊழியத் தைச் சம்பளமில்லாமல் தியாகத்தின் மேல் செய்ய முன் வருகின்றவர்கள். சட்டசபையில் அவர்கள் இருந்து கொண்டு கவர்ன்மெண்டுக்கு முட்டுக்கட்டை போட்டு அவர்கள் ஜனங்களின் கோரிக்கைகளை நிர்ப்பந்தப்படுத்த முடியும். ஆயினும் அவர்களுக்குள் ஒருமிக்க கட்டுப்பாடு ஏற்படுத்திக் கொள்ள முடியுமானால் சட்டசபைகளில் தாங் கள் போய் அமரமாட்டோம் என்று மறுத்துஇதரர்கள் அமரா மலும் செய்து அவர்கள் கவர்ன்மெண்டு நடைபெறுவதில் பெரும்கஷ்டத்தை உண்டு பண்ணிவிட முடியும்...இது பெரிய தேசிய இயக்கமாக இருக்கும்படி செய்ய வேலை செய்ய வேண்டும். ஒருவரைப் பொருத்ததாக இருப்பது போதாது. ஆகையால்தான் காங்கிரசில் உள்ள எல்லோரும் சேர்ந்து முடிவு செய்ய வேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம்'' என்று தனது மனத்தின் அடித்தளத்தையும் சுதேசமித்திரன் வெளியிட்டது.

13-8-20

அந்தரங்கக் கூட்டம்

காந்திஜி சென்னைக்கு வந்த மறுநாள் காலையில் அவரு டைய ஆலோசனைப்படி, கிலாபத் இயக்கத்தைப் பற்றியும் பஞ்சாப் இயக்கத்தைப் பற்றியும் ஆலோசனை செய்ய ஓர் அந்தரங்கக் கூட்டம் நடை பெற்றது. இதில் வி. எஸ். சீனிவாச சாஸ்திரி ஜி. ஏ. நடேசன், சி. பி. இராமசாமி ஐயர், ராவ்பகதூர் டி. ரெங்காச்சாரி, டி. எஸ். எஸ். ராஜன்,

ஜார்ஜ் ஜோசப், குத்தூஸ் பாஷா சாகிப், யாகுப்ஹாசன் முதலிய பல பெரிய மனிதர்கள் பங்கு கொண்டனர். வழக்கம் போலவே ஆங்கிலோ இந்தியப் பத்திரிகைகள், காந்திஜியின் ஒத்துழையாமைத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தன. சென்னையில் ''மெயில்'' அப்போது ஒரு 'சரியான' ஆங்கிலோ இந்திய இதழாக விளங்கி இருக்கிறது. காந்திஜியை ''மெயில்'' செய்தியாளர் பேட்டி கண்ட விவரங்களை வெளியிட்டு, அதன் மீது ஒரு தீர்ப்பையும் தீட்டியிருந்தது அந்த இதழ். ''அப்பட்டமாகச் சொல்லப் போனால், அறிவைக் காட்டிலும் அறியாமையை அவர் (காந்திஜி) நம்பியிருக்கிறார். அவருடைய திட்டத்திலுள்ள பலவீனமும் அபாயமும் அதுதான்'' என்று ''மெயில்'' எழுதியது. மற்றொருபுறம் ஒத்துழையாமைப் போராட்டத் திட்டத்தை ஏற்பதையும் ஏற்காததையும் குறித்து ''இந்து'' ஆசிரியருக்கும் (கஸ்தூரிரங்க ஐயங்கார்) ''நியூ இந்தியா'' ஆசிரியருக்கும்(அன்னிபெசண்ட்) வேறொரு அடிப்படையில் கடும் சொற்போர் நிகழ்ந்து கொண்டிருந்தது. ''ஒத்துழையாமைக் கொள்கையை 'இந்து' ஆசிரியர் ஏற்றுக் கொண்டு விட்டார். ஆகவே, அதற்காக காந்திஜி வகுத்த திட்டத்தையும் ஏற்கத்தானே வேண்டும்?'' என்பது பெசண்ட் கேள்வி. ''ஒத்துழையாமைப் போராட்டத் திட்டம் என்பது ஒரு வேத வாக்கல்ல. எத்தனையோ திட்டங்களைப் போல அதுவும் ஒரு திட்டமே. தனிப்பட்ட மனிதரைவிட நாடுதான் பெரியது'' என்பது கஸ்தூரிரங்க ஐயங்கார் வாதம்.

இன்று திருவல்லிக்கேணி ஜும்மா மசூதியில் முஸ்லிம்களின் கூட்டத்தில் காந்திஜி உரையாற்றிய போது, தாம் சொன்ன நான்கு அம்சங்களில் மூன்றாவது முஸ்லிம்கள் அம்சத்தை எட்டிய உடனே அதாவது கூட்டம் பட்டங்களைவிட்டு, அரசாங்கப் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு, இராணுவ சேவையிலிருந்து விலகியவுடனே இந்தியர் இந்தியாவின் மன்னர்களாகி விடலாம் என்று அவர் சொன்னார். ''பட்டம் உள்ளவர்கள் பட்டத்தைக் கைவிட்டு, கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் தங்கள் பதவிகளிலிருந்து விலகி, வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலை நிறுத்தி, பள்ளிப் பிள்ளைகள் அரசாங்கத்தின் பள்ளிகளுக்கோ அரசாங்கத்தின் ஆதரவில் நடைபெறும் பள்ளிகளுக்கோ செல்லாமல் நின்று, நடை

முறையில் சுதேசி ஊக்குவிக்கப் பெற்று, தலைவர்கள் தங்களுடைய மோட்டார் கார்களைவிட்டு 'கதர் ஆடை அணிந்து' செருப்பு இல்லாமல், வெறுங்காலுடன் நடந்து வரும் வரை, அரசாங்க ஊழியர்களும் சிப்பாய்களும் தங்களுடைய பதவிகளிலிருந்து விலகி வரவேண்டுமென்றே உழவர்கள் வரி கொடா இயக்கம் நடத்த வேண்டுமென்றே நாம் கேட்டுக் கொள்ள முடியாது.'' என்று அவர் சொன்னார். (இம் முறை அவர் சென்னையில் நிகழ்த்திய சொற்பொழிவுகள் பலர் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தின. உதாரணமாக ஒரு கூட்டத்தில் அவரைக் கண்டுதான் க. சந்தானம் அவர் இயக்கத்தில் சேர்ந்தார். பின்னர் இவர் கதர் இயக்கத்திலும் காங்கிரசிலும் சேர்ந்து தொண்டாற்றி ஒரு மாநில கவர்னராகவும் ஆனார். சட்டக் கல்லூரி மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு அக்கல்லூரி முதல்வர் அப்போது அனுமதி தரவில்லை. தற்போது 'அம்பீஸ்கபே' என அழைக்கப்படும் உணவு விடுதியின் பக்கத்தில் அப்போது திறந்த வெளியாக இருந்தது. அங்குச் சட்டக் கல்லூரி மாணவர்கள் கூட்டம் நடத்தினர். அங்குத்தான் முதன் முதலாக என். எஸ். வரதாச்சாரி காந்திஜியைப் பார்த்தார். அநேகமாக க. சந்தானமும் இக்கூட்டத்தில் தான் பார்த்திருக்கலாம். இதன் பின்னர் என். எஸ். வரதாச்சாரி சபர்மதி ஆசிரமம் சென்று இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் இருந்தார். பின்னர் தமிழகக் கதர் சேவையிலும் சேர்ந்தார்.)

14–8–20

வேலூருக்கு பயணம்

மறுநாள் காலை ஆம்பூருக்கும் வேலூருக்கும் அண்ணல் சென்றார். ஆம்பூரில் சில கௌரவ மாஜிஸ்திரேட்டுகள் (பங்கி ஹுயாத் பாஷா சாகிப், மாலிக் அப்துல் ரகுமான் சாகிப், முகமது காசிம், எச். என். செங்கல்பா ஆகியோர் தங்கள் பதவிகளிலிருந்து விலகிக் கொள்வதாக அரசிற்குப் பதவி விலகல் கடிதம் அனுப்பினர்கள்.) அங்கு வட ஆர்க்காடு மாவட்ட கிலாபத் மாநாட்டில் காந்திஜி பங்கு கொண்டார். மாநாடு முடிந்து அவர் வேலூருக்கு வந்து கொண்டிருந்த போது, பள்ளி கொண்டை முஸ்லிம்கள் அவரை வரவேற்றார்கள். மோட்டாரில் வேலூருக்கு மாலையில் வந்து சேர்ந்த காந்திஜியை (அண்ணலுடன் ராஜாஜியும், யாகூப்

ஹாசனும் சென்றிருந்தார்கள்.) ஹஸ்ராத் மக்காவில் உள்ள இரயில்வே கிராசிங்கில் சுமார் நான்காயிரம் மக்களும் சில பெரிய மனிதர்களும் கூடி நின்று வரவேற்று, பொதுக் கூட்டம் நடைபெற்ற இடமான கோட்டை மைதானத் திற்கு அழைத்துச் சென்றனர். இருபதாயிரத்திற்கும் மேற் பட்ட மக்கள் கூடியிருந்த இம்மாபெரும் பொதுக்கூட்டத் தில் காந்திஜி நிகழ்த்திய பேச்சை யாகூப் ஹாசன் இந்துஸ் தானியிலும் ராஜாஜி தமிழிலும் மொழி பெயர்த்தார்கள். கூட்டத்தில் இருந்தவர்கள், காந்திஜியே இந்துஸ்தானியில் சிறிது பேச வேண்டுமென்று கேட்டுக் கொள்ளவே அவரும் சில சொற்கள் பேசினர். சுபேதார் பங்களாவில் அன்றிரவு தங்கிவிட்டு, அதிகாலை நான்குமணி மெயிலில் சென்னைக் குப் புறப்பட்டு வந்தார்.

15-8-20

காங்கிரஸ்குழு தீர்மானம்

15-ஆம் தேதியன்று மாலை சென்னை மாநில காங்கிரஸ் குழு கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைமையில் கூடி, ஒத்துழை யாமைத் திட்டம் பற்றி நான்கு மணி நேரம் ஆலோசித்து இறுதியில், ஒத்துழையாமை இயக்கத்தின் கொள்கையையும் குறிக்கோளை யும் ஏற்றுக் கொள்வதென்றும் ஆனால் அதன் திட்டத்தைப் பற்றி மற்றொரு முறை கூடி மீண்டும் ஆலோசிப்பதென்றும் முடிவு செய்தது. கிலாபத் சிக்கல் மனநிறைவு அளிக்கும் முறையில் தீர்க்கப் பெறுவிட்டால் படிப்படியாய் ஒத்துழையாமையை அனுசரிப்பது இந்நாட்ட வரின் கடமையாய்ப் போய்விடும் என்று திருநெல்வேலி அரசியல் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. அந்தத் தீர்மானத்தையே சென்னை மாநில காங்கிரஸ் குழுவின் தீர்மானமாக ஏற்று, அதை அனைத்து இந்தியாவிலுமுள்ள காங்கிரஸ் குழுக்களுக்கும் அனுப்பி விடலாம் என்று ராஜாஜி யோசனை கூறினார். ஒத்துழையாமை இயக்கத்தைப் பொருத்தவரை, தனி காங்கிரஸ் கூடி முடிவு செய்தால்தான் ஒரு காங்கிரஸ் குழு அதை அதிகார பூர்வ மாக ஏற்க முடியுமென்றும் அப்போதைய நிலையில் காந்திஜி யின் திட்டத்தைத் தேசிய திட்டமாகக் கருத முடியாதென் றும் தேர்தலுக்குப் பின்பும் ஒத்துழையாமையைக் கடைப் பிடிக்க வழி இருக்கிறதென்றும் வழக்கறிஞர்கள் நீதிமன்றங் களுக்குச் செல்லக்கூடாது என்று கூறுவது நடக்காத காரிய மென்றும் பள்ளிகளிலிருந்து மாணவர்களை நிறுத்திவிடுவது

முடியாத காரியம் என்றும் கஸ்தூரிரங்க ஐயங்கார் கூறினார். அந்நிய நாட்டுச் சரக்குகளின் பகிஷ்காரத்தை ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்க்கலாம் என்ற யோசனையையும் இவர் கூறினார்.

மூன்றுவகை கருத்துக்கள்

காந்திஜி வந்த காலத்தில் தமிழக அரசியல் வட்டாரத்தில் ஒத்துழையாமைப் போராட்டத்தைக் குறித்து எத்தனை வகையான கருத்துக்கள் இருந்தன என்பதை அறிவதற்கு இது ஒரு வாய்ப்பாக இருந்தது. ''குழு உறுப்பினர்கள் தாங்களாக இதை முடிவு செய்யட்டும். நாம் நமது செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்கள் எந்த முடிவுக்கும் வருமாறு செய்ய வேண்டாம்'' என்று மகாத்மாவும் மௌலானாவும் கருதியிருப்பார்கள் என்று தோன்றுகிறது. ஏனெனில், அவர்கள் இருவரும் இந்தக் கூட்டத்தில் பங்கு கொள்ளவில்லை. இந்தக் கூட்டத்தில் மூன்று வகையான கருத்துக்கள் கூறப்பெற்றன. ஒத்துழையாமைப் போராட்டமானது அரசாங்கத்தைச் சீர்குலைக்க வைத்து விடக் கூடியதும் அரசியல் அமைப்பிற்கும் காங்கிரசின் விதிமுறைகளுக்கும் விரோதமானதுமான ஒரு போராட்டம் என்று ஒரு சாரார் - மிதவாதிகள் - கருதினார்கள். சட்டமன்றங்களுக்குச் செல்வதை மட்டும் இது தடை செய்யாமல் இருந்தால் இது நல்ல போராட்டந்தான். ஆகையால் இப்போராட்டத் திட்டத்தை சட்டசபைகளுக்குச் செல்வதற்குத் தடை இருக்காத முறையில் மாற்ற வேண்டும் என்று மற்றொரு சாரார் - தேசியக் கட்சியைச் சேர்ந்த வழக்கறிஞர்கள் கூறினார்கள். ஒத்துழையாமைக் கொள்கையையும் திட்டத்தையும் அப்படியே ஏற்கலாம் என்று கூறினர் மூன்றாவது சாரார்.

புதுச்சிக்கல்

அப்போது தமிழகக் காங்கிரசில் இருந்த முஸ்லிம்களில் ஒரிருவர் - விரல்விட்டு எண்ணக் கூடியவர்கள் - கிலாபத் போராட்டத்திற்கு காந்திஜி தலைமை தாங்குவதை விரும்பாதவர்களாய் இருந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. உதாரணமாக, சாதுல்லா பாஷா சாகிபு (காங்கிரஸ் குழுக் கூட்டத்தில்) ஒரு புதுச் சிக்கலைக் கிளப்பினார். காந்திஜி முஸ்லிம் மதத்தலைவராக மாட்டாரென்றும் கிலாபத் சிக்கல் ஒரு சமயச் சிக்கல் என்றும் ஆகவே இந்தச் சிக்கலைத்

தீர்ப்பதற்குச் சமயத் தலைவர்களான முஸ்லிம் உலேமாக்கள் தாம் கூடி முடிவு செய்யவேண்டுமென்றும் அவர்களுடைய முடிவு வரும்வரை தாம் காந்திஜியின் திட்டத்தை ஏற்க முடியாது என்றும் அவர் சொன்னார். மத்திய கிலாபத் குழுவினர் உலேமாக்களின் அனுமதியைப் பெற்றிருந்தார்கள் என்பது இவருக்குத் தெரியாமல் இருந்தது. யாகூப் ஹாசன் இதை ஞாபகமூட்டினார்.

அன்னி பெசண்ட்

ஒத்துழையாமைப் போராட்டத்தைக் குறித்து அன்னி பெசண்ட் கொண்டிருந்த கருத்து ஒரு தனி வகைப்பட்டதாக இருந்தது. அடிப்படையில், ஒத்துழையாமை இயக்கம் தவறானதல்ல என்பது அவருடைய வாதம். ஆனாலும், "இதை விட்டுவிட்டு வேறு வழிகளில் பொறுப்பான ஆட்சியை ஏற்படுத்த முடியாதா?" என்று அவர் கேட்டார். சட்டசபைகளுக்குச் செல்வதை அவர் ஆணித்தரமாக ஆதரித்தார். சட்டமன்றப் பிரதிநிதிகள் கிலாபத், பஞ்சாப் விவகாரங்களில் அரசிற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றுவதானது, ஆயிரக்கணக்கான பொதுக்கூட்டங்கள் நடத்துவதைக் காட்டிலும் அதிகப் பலன் தரும் என்று கருதினார். அதே சமயம், காங்கிரஸ் என்ன முடிவு செய்தாலும், தாம் தமது ஒத்துழையாமை இயக்க வேலைகளைச் செய்து கொண்டு போகப்போவதாய் காந்திஜி கூறியதையும் அவர் ஆதரித்தார். இது அவரவர் மனச்சாட்சியைப் பொருத்த காரியம் என்பதையும் ஒப்புக் கொண்டார். "காங்கிரசை விட யாராகிலும் உயர்ந்தவர்கள் அல்ல என்று மிஸ்டர் வெங்கட்ராமையர் சொன்னது சரிதான். (ஆனால்) அவர் சொல்வது மிஸ்டர் காந்திஜியினிடம் மாத்திரம் செல்லாது. ஏனென்றால், அவர் மனச்சாட்சியின் மேல் நிற்பவர்" என்று அவர் சென்னை மாநில காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் அன்று கூறியதை ("சுதேசமித்திரன்" 17-8-20) இன்று எண்ணிப்பார்த்தாலும் உள்ளம் உருகுகிறது.

மாறுபட்ட கருத்துகள்

காந்திஜியின் நெருங்கிய நண்பரும், தென்னாப்பிரிக்கப் போராட்ட காலத்தில் கூட அவருக்கு உதவி வந்தவருமான ஜி. ஏ. நடேசன் ஒத்துழையாமைப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. "இவ்வளவு விரிவான முறையில் ஒத்துழையாமையை அங்கீகரிப்பது நமது ராஜிய வாழ்வைக் கொலை செய்வதற்குச் சம

மாகும்'' என்று அவர் கூறினர். அச்சமயம் வ. உ. சிதம்பரம் பிள்ளை ஒத்துழையாமையைப் பற்றி என்ன கருத்துக் கொண்டிருந்தார் என்பதும் இங்குக் குறிப்பிட வேண்டியது ஒன்றாகும். 1919-இல் சத்தியாக்ரகத்தை விறுவிறுப்போடு ஆதரித்த வ. உ. சிதம்பரம் பிள்ளை, 1920-இல் ஒத்துழையாமையை அவ்வாறு ஆதரிக்கவில்லை. பதிலுக்குப் பதில் ஒத்துழைக்க வேண்டும் என்ற ஒருவகையான புதுச் சித்தாந்தத்தை அவர் கூறினர் (''சுதேசமித்திரன்'' 17-8-20). ''ஜனங்களுக்கு சக்தியையும் தைரியத்தையும் உண்டு பண்ண வேண்டும் என்பதுதான் எனது நோக்கம். ஒத்துழையாமையை அனுஷ்டிப்பதால் ஜனங்கள் கோழைத்தனமடைந்து விடுவார்கள். ஆனாலும் (முடிவில்) இக் கமிட்டியின் தீர்மானப்படி நடக்க நான் தயாராக இருக்கின்றேன்'' என்று அவர் கூறிவிட்டார்.

ராஜாஜி

ஒத்துழையாமைப் போராட்டத்தில் காந்திஜியின் கருத்தைத் தொடக்கக் கட்டத்திலேயே நன்கு புரிந்து கொண்ட தமிழகத் தலைவர்களில் ராஜாஜியே தலையாயவர் என்று கூறலாம். அக்கருத்தை மற்ற தலைவர்களும் பொதுமக்களும் புரிந்து கொள்ளுமாறு செய்ய அவர் அரு முயற்சி எடுத்துக் கொண்டார். காந்திஜியும் மற்ற தலைவர்களும் ஒன்றுபட்டு இந்தப் போராட்ட முறைகளை வகுப்பதுதான் அதிகப் பலன் தரும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். தனிப்பட்டவர் மனச்சாட்சியை காந்திஜி அதிகம் வலியுறுத்துகிறார் என்பதையும் மற்ற தலைவர்கள் தேசத்தின் மொத்த விருப்பத்தைச் செயல் படுத்த வேண்டும் என்பதை அதிகம் வலியுறுத்துகிறார்கள் என்பதையும் அவர் அறிந்து கொண்டார். இந்த இரண்டிற்கும் இடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்தக் காங்கிரஸ் தலைவர்கள் சாத்தியமான தியாகங்களை யெல்லாம் செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். அவ்வாறு ஒருமைப்பாடு வராவிட்டால், காங்கிரஸ்காரர்கள் வாக்குரிமையைப் பயன்படுத்தாமல் இருப்பதையே ஒத்துழையாமையின் முதல் நடவடிக்கையாகக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மேற்கண்ட காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் இத்தனை வகையான கருத்துக்களும் தெரிந்தன.

பொதுவாக

இவ்வாறு ஒத்துழையாமைப் போராட்டத்தை மேற் கொள்வதா என்பதைக் குறித்து அப்போது காங்கிரசுக் குள்ளும் வெளியிலும் பலத்த வாக்குவாதம் நடைபெற்றிருக்கிறது என்றாலும் பலர்-குறிப்பாக படித்த உயர் வர்க்கத்தினர் அல்லாதார்-காந்திஜியின் ஒத்துழையாமைப் போராட்டத்தையே ஆதரித்திருக்கிறார்கள். நீதிக்கட்சியைச் சேர்ந்த சிலர்கூட ஆதரித்திருக்கின்றனர். நீதிக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் "இந்து"வுக்கு (27-8-1920 - இல்) எழுதிய கடிதத்தில், வன்முறை இல்லாத ஒத்துழையாமையைக் கடைப்பிடிப்பது சட்டவிரோதமாகாது என்றும் "நம்முடைய குறிக்கோள்களே" அடைய அது ஒன்றே கடைசி வழியென்றும் கூறியிருக்கிறார். பொதுவாக ஒத்துழையாமைப் போராட்டத்தில் வன்முறை இராது என்று காந்திஜி கூறிவிட்டதால், இதை ஒரு பயிற்சித்தளமாக வைத்து நாட்டில் ஒரு தேசியப் போராட்டத்தைத் தொடங்கிப் பார்க்கலாமே என்று சிலர் எண்ணினார்கள். காந்திஜியின் தமிழக வருகையால் ஏற்பட்ட மாபெரும் பலன், இச்சிக்கல் மீது எல்லோரும் ஒரே கவனம் செலுத்த அது தூண்டியதாகும்.

தொழிலாளர் கூட்டம்

மகாத்மா காந்தியின் பேச்சைத் தொழிலாளர்கள் கேட்பதற்கு வாய்ப்பு அளிப்பதற்காக, மத்திய தொழிலாளர் போர்டின் ஆதரவில், உயர் நீதி மன்றம் அருகே உள்ள கடற்கரையில் பி. பி. வாடியா தலைமையில் தொழிலாளர் கூட்டம் நடைபெற்ற போது, காந்திஜி எவ்வளவு பழுத்த தொழிற்சங்கவாதியாக இருந்திருக்கிறார் என்பதை நம்மால் யூகித்து உணர முடிகிறது. அவர் சொன்னார்: "கோடீஸ்வரர்களோ, முதலாளிகளோ இல்லாமல் ஒரு தேசத்தின் வாழ்வு நடைபெற்று விடலாம். ஆனால் தொழிலாளர்கள் மட்டும் இல்லாமல் நடைபெற முடியாது. தொழிலாளியாக இருக்க வெட்கப்பட வேண்டியதில்லை. உங்களுடைய உழைப்பிற்கு ஊதியம் கேட்க உங்களுக்கு உரிமை உண்டு. வாங்கும் ஊதியத்திற்கு இயன்ற அளவு நல்ல முறையில் உழைக்க வேண்டியதும் உங்கள் கடமை. தொழிலாளர்கள் எந்த அளவு மனச்சாட்சியுடனும் நல்ல முறையிலும் தங்கள் கடமையைச் செய்கிறார்களோ அந்த அளவு தொழில் அதிபர்கள் தங்கள் பொறுப்பை நிறைவேற்றுவதில்லை என்பதுதான் எல்லா இடங்களிலும் எனக்கு ஏற்பட்

டுள்ள அனுபவம். தொழில் அதிபர்கள் தங்களுடைய பொறுப்பை நிறைவேற்றுமாறு செய்யத் தொழிலாளர்கள் எந்த அளவு என்ன செய்ய முடியும் என்பது அடுத்த கேள்வி. வாடியாவும் மற்றுமுள்ள உங்கள் தலைவர்களும், உங்களுக்கு எழுத்தறிவு அளிப்பதற்குமுன் மனித விவகாரங்களைப் பற்றியும் மனித உறவைப் பற்றியும் தேவையான அறிவை அளிக்கவேண்டும். தொழிலாளர்களுடைய உரிமை என்ன, அதை எவ்வாறு அமுல் செய்வது என்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். இன்று உலகமெல்லாம் வேலை நிறுத்தங்கள் நடை பெறுகின்றன. சிறு காரியங்களுக்காகக் கூடத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தங்கள் செய்து விடுகின்றனர். தொழிலாளர்கள் அதிக ஒற்றுமையும் கட்டுப்பாடும் அடைவதற்கேற்ப வேலை நிறுத்தங்கள் குறையும். தொழிலாளர்கள் மனவெளர்ச்சி அடைவற்கேற்ப நடுநிலையாளர் தீர்ப்பில் அவர்கள் நம்பிக்கை கொள்வார்கள்; வேலை நிறுத்தத்திற்குப் பதிலாக நடுநிலையாளர் தீர்ப்பு நிலைபெறும்.''

16-8-20

தமிழகத்துள் பயணம்

ஞாயிற்றுக் கிழமை (15-8-20) யன்று இரவு சென்னையிலிருந்து போட் மெயிலில் புறப்பட்ட காந்தி மௌலானா சௌகத் அலியுடன் திங்கட் கிழமை காலை கும்பகோணம் போய்ச் சேர்ந்தார். வழியில் உள்ள செங்கற்பட்டு, விழுப்புரம், கடலூர், சிதம்பரம், மாயவரம் ஆகிய இரயில் நிலையங்களிலெல்லாம் மக்கள் திரளாகக் கூடியிருந்து அவருக்கு வரவேற்பு அளித்தார்கள். கும்பகோணம் ஒரு பாக்கியம் செய்த ஊர். காந்திஜி தமிழகத்திற்கு வந்த போது, பல சமயம் குடந்தையில் இறங்கி அதன் வழியாகப் பக்கத்தில் உள்ள ஊர்களுக்குச் சென்றிருக்கிறார். அன்று காந்திஜி கும்பகோணத்திற்கு வந்தபோது அந்நகர் நன்கு அலங்காரம் செய்யப்பெற்றிருந்தது. வெளியூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் (குறிப்பாக ராஜகிரி, நாச்சியார் கோவில், தஞ்சை ஆகிய இடங்களிலிருந்து) காந்திஜியைக் காண்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடியிருந்தார்கள். இரயில்வே நிலையத்திலிருந்து அதிர்வெடிகள் முழங்க, பாண்டு வாத்தியத்துடன் (பக்கத்து ஊர் மடங்களையும் குடந்தை ஆலயங்களையும் சேர்ந்த வாத்தியக் குழுக்களெல்லாம் அன்று காந்திஜியை வரவேற்பதற்காகக் கும்பகோணத்

திற்கு வந்து விட்டனபோல் தோன்றியது) ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பெற்ற காந்திஜியும் சௌகத் அலியும் போர்ட்டர் நகர மண்டபத்தில் பதினாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கூடியிருந்த கூட்டத்தில் பேசினார்கள். ராவ்பகதூர் என். கிருஷ்ணசாமி ஐயங்கார் தலைமை தாங்கிய இக் கூட்டத்தில் சமூக சேவா சங்கம், கிலாபத் குழு, காங்கிரஸ் குழு, ஜைனர்கள் சங்கம் ஆகியவை வரவேற்புரைகளைப் படித்து அளித்தன. கிலாபத் குழுவின் வரவேற்புரை ராவ்பகதூர் என். கிருஷ்ணசாமி ஐயங்கார் படித்தார் என்பதும் முஸ்லிம் சங்கத்தாரின் சார்பாக என். தண்டபாணிபிள்ளை வரவேற்றார் என்பதும் குறிப்பிடத் தக்கதாகும். ஜைனர்கள் அளித்த வரவேற்புரையில் காந்திஜி ஒரு ஜைனர் என்று கூறப்பெற்றிருந்ததை அண்ணல் மறுத்துத் தாம் ஒரு வைஷ்ணவர் என்று கூறினார். ராஜகிரியைச் சேர்ந்த முஸ்லிம்கள் கிலாபத் இயக்கத்திற்காக அளித்த பணமுடிப்பை அப்துல் மஜித் கொண்டு வந்து கொடுத்தார்.

தஞ்சை, நாகை

தஞ்சாவூரிலிருந்து காந்திஜி நேரே நாகப்பட்டினத் திற்குக் காரில் செல்வது என்று முதலில் திட்டமிட்டிருந் ததை, காந்திஜி இருந்த உடல் நிலையில் நீண்ட தூரம் காரில் பயணம் செய்வது உசிதமானதல்லஎன்று கருதிக்கைவிட்டார்கள். இருதலைவர்களும் இரயிலில் தஞ்சாவூர் வழி யாக நாகப்பட்டினத்திற்குச் சென்றார்கள். வழியில் பண்டாரவாடை இரயில் நிலையத்தில், சுற்றுப்புறக் கிராமங் களைச் சேர்ந்த முஸ்லிம்கள் பணமுடிப்புத் தந்தனர். நீடாமங்கலத்தில், அந்த ஊரைச் சுற்றிச் சுமார் பத்து மைல் வட்டாரத்தில் உள்ள ஊர்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் அண்ணலைக் காண்பதற்காக வந்து கூடியிருந்தனர். இவ்வாறு கூடியிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மன்னார்குடி யைச் சேர்ந்தவர்கள்; அவர்களிலும் பெரும்பாலானவர்கள் மாணவர்கள்.

இச்சமயம், மன்னார்குடியில் வெஸ்லியன் மிஷன் கல்லூரி மாணவர்களுக்கும் கல்லூரி முதல்வருக்கும் ஒரு தகராறு இருந்தது. தலைகர் இறந்தபோது, அவருக்கு இரங் கல் தெரிவிக்கும் முறையில் கல்லூரியை ஒருநாள் அடைக்க வேண்டுமென்று மாணவர்கள் கோரினர். அதில்

கல்லூரி முதல்வருக்கும் மாணவர்களுக்கும் வாக்கு வாதம் ஏற்பட்டு, திலகரைப்பற்றி முதல்வர் சில 'தவறுன' சொற்களைப் பயன்படுத்தி விட்டதாகவும் அச் சொற்களை முதல்வர் திருப்பிப் பெறவேண்டும் என்றும் மாணவர்கள் வலியுறுத்தி வந்தனர்.

மாணவர் வருகை

அந்தச் சமயத்தில்தான் காந்திஜி நீடாமங்கலத்திற்கு வந்தார். அவர் வந்த தேதியில் மேற்கண்ட கல்லூரிக்குப் பள்ளி மேற்பார்வையாளர் வருவதாக அறிவிக்கப் பெற்றது. ஆனாலும் மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமல் திரளாக இரயில் ஏறி, நீடாமங்கலத்திற்கு வந்து விட்டார்கள். இரயிலில் இடங் கிடைக்காத மாணவர்கள் நடந்தும் வந்தனர். பலர் நீடாமங்கலத்துடன் நிற்காமல், காந்திஜியுடன் நாகப்பட்டினம் வரை சென்றார்கள். நீடாமங்கலத்திலிருந்து நாகை வரை வழியிலிருந்த இரயில் நிலையங்களிலெல்லாம் ஒரே கூட்டந்தான். திருவாரூர் போனபோது மதிய நேரம்.

நாகப்பட்டினத்தில் ஒரு பெரிய தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டது. காந்திஜியின் இரயில் அங்கிருந்து நாகூருக்குப் புறப்பட்ட போது மக்கள் அதைப் பெருங் கூட்டமாகச் சூழ்ந்து கொண்டனர். இரயிலுக்குள் ஈக்கூட நுழைய முடியாதபடி மக்கள் பிதுங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தனர். வெளியேயோ, அதைச் சுற்றி நின்று கொண்டு காந்திஜியைத் தாங்கள் தாங்கள் காண வேண்டுமென்று ஒவ்வொரு பக்கத்தில் இருந்தவர்களும் கூறிக்கொண்டிருந்தார்கள். (இரயில் மேலேயும் ஏராளமானவர் உட்கார்ந்திருந்தனர்.) சுமார் இரண்டு மணி நேரம் இரயில் புறப்பட முடியவில்லை. கடைசியில் எப்படியோ புறப்பட்டது. நாகப்பட்டினத்தில் நாகூர் முஸ்லிம் லீகும் நாகப்பட்டினம் லீகும் தனித் தனியாகப் பண முடிப்புகள் அளித்தன.

புறப்பட முடியவில்லை

நாகூரில் இரயில்வே நிலையத்திற்கு வந்திருந்தவர்களே பதினாயிரத்துக்கு மேலிருப்பார்கள். தோரணங்கள் கட்டப் பெற்று, விளக்கு அலங்காரங்கள் செய்யப் பெற்றிருந்த தெருக்களின் வழியாக, காந்திஜி, சௌகத் அலி ஊர்வலம் நடைபெற்றது. தர்கா என்ற இடத்தில் மாலிம் சாகிப் என்ற வழக்கறிஞர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு முஸ்லிம்

நாகூரில் வரவேற்பு

பெண்கள் கூட ஏராளமாக வந்திருந்தார்கள். 'கிலாபத் சிக்கலில் முஸ்லிம்கள் உள்ளம் எந்த அளவு புண்பட்டிருக் கிறது என்பதையும் ஒத்துழையாமை இயக்கம் எந்த அளவு அவர்களுடைய உள்ளத்தைத் தொட்டிருக்கிறது என்பதை யும் இது காட்டுவதாக' காந்திஜி தம் உரையில் சொன்னார்.

திரும்பி வந்த வழியில் ஏற்கனவே வாக்குறுதியளித்த வாறு நீடாமங்கலத்தில் சொற்பொழிவாற்றிவிட்டு இரு வரும் தஞ்சாவூர் வந்து சேர்ந்தார்கள்.

பொதுக் கூட்டம்

கிருஷ்ண விலாஸ் தியேட்டரில் வி. பி. மாதவராவ் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், "ஒருவனுக்கு மனச் சாட்சி மட்டும் அங்கீகாரம் அளித்து விட்டால், மற்றவர் கள் தலைமை தாங்கி வழி நடத்திச் செல்ல வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. மனச்சாட்சி காட் டும் வழியில் செல்லவேண்டியதே அவன் கடமை" என்று காந்திஜி விளக்கினார். அண்ணலின் சொற்பொழிவை இ. சூர்யநாராயண ஐயர் மொழி பெயர்த்தார். தஞ்சை யிலிருந்து அவர்கள் திருச்சிக்கு வந்தார்கள்.

அன்று அண்ணலுக்கும் சௌகத் அலிக்கும் திருச்சி யில் அளிக்கப்பெற்ற வரவேற்பைப் போன்ற ஒன்றை மன்னர்கள் கூடப் பெற்றிருக்க மாட்டார்கள்.

திருச்சி வரவேற்பு

மதியம் சுமார் ஒன்றரை மணிக்கு, தஞ்சை யிலிருந்து வந்த தலைவர்களை இரயில் நிலை யத்தில் ஏராளமான பெரிய மனிதர்கள் கூடி நின்று எண்ணற்ற மாலைகளைச் சூட்டி வரவேற்று, டாக்டர் ராஜன் பங்களாவிற்குக் காரில் அழைத்துச் சென்றார்கள். (மகாத்மா வசதியாக இரயில் நிலையத்தில் இறங்க வேண்டும் என்பதற்காக அன்று பிளாட்பாரம் டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்படவில்லை.) ஒத்துழையாமை இயக்கத்தில் அக்கறை கொண்ட ஊழியர்கள் - பிரமுகர்கள் கூட்டத்தில், பலர் எழுப்பிய ஐயப்பாடுகளை அண்ணல் நீக்கி வைத்தார். திருச்சி ராப்பள்ளியின் வரலாற்றிலேயே பெருமிதங் கொள்ளக் கூடிய அந்த பிரம்மாண்டமான ஊர்வலம் பாலக்கரையி லிருந்து வெடிமுழக்கங்களுடன் கிளம்பியது. பெரிய கடைத்தெரு வழியாகச் சுமார் ஒரு மைல் தூரம் சென்று, பொதுக்கூட்டம் நடைபெற்ற இடமான சௌக் மைதா னத்தை அது அடைய வேண்டும். வழியெல்லாம் தோர

ணம், பந்தல்கள்; கோட்டை மார்க்கெட்டிற்கு எதிராக வணிகர்கள் நிர்மாணித்திருந்த பூப்பந்தலின் அழகைச் சொல்லி முடியாது. ஒவ்வொரு கடையிலும் ஆங்காங்கு ஏதோ விசேடம் நடைபெறுவது போன்று, வாழைமரத் தோரணங்களும் கொடிகளும் கட்டப்பெற்றிருந்தன. இதைப்போன்று இந்துக்களும் முஸ்லிம்களும் இணைந்து எந்த விழாவையும் கொண்டாடியதில்லை என்று வியப்புடன் எல்லோரும் கூறும் அளவிற்கு இரண்டு வகுப்பினரும் ஒற்றுமையுடன் செயலாற்றினர். முகமது பஸுதீன் சாகிபைக் கேப்டனாகக் கொண்டு இயங்கிய முஸ்லிம் தொண்டர் படையானது ஊர்வலத்திலும் பொதுக்கூட்டத்திலும் அமைதியை நிலைநாட்டியது. தொண்டர்கள் பலர் குதிரைகள் மீது ஏறிக்கொண்டு முன்னே செல்ல, காந்திஜியும் சௌகத் அலியும் அமர்ந்திருந்த கார் பின்னால் சென்றது. அதற்கும் முன்னால் சாரணர்கள் அணிவகுத்துச் சென்றனர். மாடிகளில் மாதர்கள் நின்று தலைவர்களின் மீது பூக்களையும் பன்னீரையும் அள்ளி வீசினர். வழியில் சிலர் கர்ப்பூர ஆரத்தி எடுத்தனர். திருச்சிநகரிலும் சுற்றுப்புறங்களிலும் இருந்த அத்தனை நாதசுர வித்வான்களும் மேளம் வாசிப்பவர்களும் பேண்ட் வாத்தியக்காரர்களும் அந்த ஊர்வலத்தின் முன்னால் தங்கள் ஆற்றலையெல்லாங் காட்டி இசையை வாரி வழங்கிக் கொண்டு சென்றார்கள். ஒரு மைல் தூரத்தைக் கடந்து செல்ல ஒன்றரை மணி நேரமாகிவிட்டது. கடைசியில் பொதுக்கூட்ட மைதானத்தை ஊர்வலம் அடைந்தது.

பொதுக் கூட்டம்

பொதுக் கூட்டமும் அதுவரை திருச்சியில் கூடியிராத மாபெருங் கூட்டம். தலைவர்கள் அமருவதற்காக ஓர் அழகான சப்பரத்தை அலங்கரித்து வைத்திருந்தார்கள். ஆனால், பின்னர் அதன் மீது அவர்கள் அமர்ந்திருந்தால் மக்களுக்குத் தெரியாது என்று கருதி, புதிதாகப் பந்தல் போடப்பெற்ற மேடையில் அவர்களை அமரச் செய்தார்கள். காந்திஜியைக் காண்பதற்காக மதுரை, திண்டுக்கல், புதுக்கோட்டை ஆகிய நகரங்களிலிருந்தெல்லாம் ஏராளமான மக்கள் திருச்சிராப்பள்ளிக்கு வந்திருந்தார்கள். இருபதாயிரத்திற்கு மேல் மக்கள் கூடியிருப்பார்கள் என்று செய்தித் தாள்கள் கூறியிருந்தன. திருச்சி கிலாபத் குழுச் செயலாளரான வி. எஸ். முகமது இப்ராகிம் தமிழிலும், டாக்டர்

அப்துல் சுபான் சாகிப் இந்துஸ்தானியிலும் டாக்டர் சாஸ்திரி ஆங்கிலத்திலும் வரவேற்புரைகளைப் படித்துக் கொடுத்தார்கள். திண்டுக்கல் கிலாபத் குழுவின் பிரதிநிதியும் திருப்பராய்த்துறை காந்தி சங்கத்தின் பிரதிநிதியும் திருச்சிக்கு வந்து தங்களுடைய வரவேற்புரைகளையும் கொடுத்தார்கள். திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் ஓர் அழகான மாலையை அணிவித்த போது, மகாத்மா காந்தி அதை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். முடிவில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் நன்றியுரை கூறினார். சில்லரைக் கடைக்காரர்கள் பண முடிப்பு ஒன்றைக் கொடுத்தனர். அண்ணல் பேசிய போது திருச்சி, மதுரை போன்ற சில இடங்களிலிருந்து பெரிய காரியங்களைத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறினர். மதுரையை அவர் நினைவு கூர்ந்து கூறியதிலிருந்து அந்நகரைப்பற்றி அவர் கொண்டிருந்த நம்பிக்கை தெளிவாகத் தெரிந்தது. மற்ற படி, கஸ்தூரிரங்க ஐயங்கார் கிளப்பிய மறுப்புக்களுக்கு மறுப்புக் கூறும் முறையிலேயே இங்கு அவருடைய பேச்சு அமைந்திருந்தது. ஐயங்கார் கூறிய மறுப்புக்களை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு அவர் பதில் கூறினர்.

கூட்டத்தில் குழப்பம்

இவ்வாறு காந்திஜி பேசிக்கொண்டு போனபோது, கூட்டத்தின் ஒரு புறத்தில் சிறிது குழப்பம் ஏற்பட்டது; கூட்டத்தில் யாரோ சிலர் வன்முறையில் ஈடுபட்டதை காந்திஜி பார்த்து விட்டார். ஆனாலும் அவர் கோபமோ ஆத்திரமோ அடையாமல், வேடிக்கையாகப் பேசி நிலைமையைச் சமாளித்தார். குழப்பம் சிறிது அமைதி அடைந்தவுடன் ''ஒத்துழைப்பைப் பற்றியும் ஒத்துழையாமையைப் பற்றியும் இப்போது ஒரு நல்ல பாடம் கற்றோம்'' என்று அண்ணல் சொன்னாரோ இல்லையோ கூட்டத்தில் ஒரே சிரிப்பொலி எழுந்தது. இந்தக் கேலிக்கையுடன் அவர் நிற்கவில்லை. ''சில இளைஞர்கள் அங்கே (குழப்பம் நடந்த இடத்தைச் சுட்டிக்காட்டி) சண்டை போட்டுக் கொண்டார்கள். ஒத்துழையாமையில் நமக்குக் கிடைத்த பாடம் இது. ஆனால் இது அபாயமான ஆயுதம். ஒத்துழையாமையைக் கடைப்பிடிப்பது என்று ஒரே ஒருவர் உறுதி பூண்டாலும் போதும். இந்தக் கூட்ட முழுவதிலும் குழப்பத்தை ஏற்படுத்திவிட முடியும். இதற்கு நிதரிசனமான சான்றை இப்போது இந்தக் கூட்டத்திலேயே நாம் பார்த்

தோம்,'' என்று சொன்னார். கூட்டத்திலிருந்தவர்களுக்குச் சிரித்துச் சிரித்து வயிறெல்லாம் புண்ணாகிவிட்டது. '' அதே போன்று ஒத்துழைப்பின் சக்தியையும் இப்போது பார்த் தீர்கள். (சிரிப்பு) அந்தக் கனமான நாற்காலியை எல்லோ ரும் சேர்ந்து தலைமேல் தூக்கி அப்புறப்படுத்தினர். அதற்கு ஒவ்வொரு வரும் ஒரு விரலைக் கொடுத்ததே போதுமானதாக இருந்தது. இந்த அரசாங்கம் இருப்பது அதன் ஆயுத பலத்தால் அல்ல, மக்களுடைய ஒத்துழைப் பின் காரணமாகத்தான். (கேளுங்கள், கேளுங்கள்) இதற்கு நேர் மாறானதும் உண்மையே. அதாவது, ஒத்துழைப்பைக் கைவிட்டால் அரசு நிலைக்க முடியாது. (சிரிப்பு) வெளி நாட்டுச் சரக்குகளை விலக்கவேண்டுமென்று நமது நண்பர் (கஸ்தூரிரங்க ஐயங்கார்) கூறுகிறார். நடைமுறையில் நான் கூறிய எல்லா வழி துறைகளைக் காட்டிலும் இது கடினமானது. ஏனெனில், இதனால் வணிகர்கள் இலட்சத் கணக்கில் நட்டம் அடைய வேண்டியதிருக்கும். மேலும் இது பிரிட்டிஷாரைத்தண்டிக்கும் ஒரு நடவடிக்கை. நான் கூறிய நடவடிக்கைகளெல்லாம் தன்னல மறுப்பு நடவடிக்கை களே தவிரத் தண்டனை நடவடிக்கைகள் அல்ல. திருச்சிராப் பள்ளி மக்களே, இந்தியா முழுவதற்கும் நீங்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டாம். ஒத்துழையாமையின் முதல் நடவடிக்கையை ஏற்கனவே நீங்கள் மேற்கொண்டிரா விட்டால், நாளையே தொடங்கிவிடுங்கள்.'' இவ்வாறு அவர் முடிவாகக் கேட்டுக்கொண்ட போது, பலத்த கையொலி யும் முழக்கமும் எழுந்தன. கஸ்தூரிரங்க ஐயங்கார் கூறிய கருத்துக்களுக்கு காந்திஜி மறுப்பு அளித்து வந்ததானது முன்னவர் மீது அவர் எவ்வளவு பெருமதிப்பு வைத்திருந் தார் என்பதையே எடுத்துக் காட்டியது. ஆனாலும் நீண்ட காலம் இவ்விரு தலைவர்களும் வாக்குவாதம் செய்து கொண் டிருக்க வேண்டிய அவசியம் இருக்க வில்லை. கஸ்தூரிரங்க ஐயங்கார் தாம் சொன்னபடியே நடந்து கொண்டார். ஒத்துழையாமைத் திட்டத்தைக் கல்கத்தா காங்கிரஸ் ஏற்றுக் கொண்டபின் ஒரு விசுவாசமான காங்கிரஸ்காரர் என்ற முறையில், அதை அப்படியே ஏற்றுக் கொண்டார். காந்திஜியின் திட்டத்தைத் தாம் அதற்கு மேல் எதிர்க்கப் போவதில்லை என்பதைக் கடிதத்தின் மூலம் அவர் அண்ண லுக்குத் தெரிவித்தபோது அண்ணல் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

18-8-20

ஈரோடு

திருச்சியிலிருந்து சையத் முத்துஜா சாகிபுடனும் மதுரை வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப்புடனும் இரவில் கள்ளிக்கோட்டைக்குப் புறப்பட்ட தலைவர்கள் இருவரும் அதிகாலை 3-30 மணிக்கு ஈரோடு வந்து சேர்ந்தபோது, அங்குப் பத்தாயிரத் திற்கும் மேற்பட்டமக்கள் கூடி ''அல்லாஹு அக்பர், வந்தேமாதரம்'' என்று முழக்கமிட்டுக் கொண்டி ருந்தார்கள். இரயில்வே நிலையத்தின் ஓரத்தில் அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்த மேடைக்குத் தலைவர்களை அழைத்துச் சென்று மூன்று வரவேற்புரைகளைப் படித்துக் கொடுத்தனர். காந்திஜி மிகவும் சுருக்கமாக, ''இது ஆண்டவனை வழிபடுவதற்கு மிகவும் பொருத்தமான நேரமே தவிர, பொதுக்கூட்டம் நடத்துவதற்கல்ல. ஆகையால், தங்களுக்கு வேண்டிய தைரியத்தை அளிக்குமாறு முகமதி யர்கள் அல்லாவைப் பிரார்த்தனை செய்யவேண்டும்; இன்ன லுக்கு உள்பட்டிருக்கும் முஸ்லிம் சகோதரர்களுக்கு வேண் டிய உதவி செய்வதற்கான நல்லெண்ணத்தை அருளுமாறு இந்துக்கள் தங்கள் கடவுளை வழிபடவேண்டும்,'' என்று கூறிமுடித்தார்.

20-8-20

திருப்பூர்

கள்ளிக்கோட்டைக்குச் சென்றுவிட்டு மங்களூர் வழி யாக இருபதாம் தேதியன்று இரவு சேலத்திற்கு இரு தலைவர்களும் வந்து சேர்ந்தனர். வழியில் உள்ள திருப்பூரில் தேச பக்த சமாஜத்தினர் மகாத்மாவை வரவேற்க மாபெரும் ஏற்பாடு களைச் செய்திருந்தனர். இரயில் நிலையத் திற்கு ஓரத்தில் ஒரு பெரிய பொதுக்கூட்டம் கூட்டித் தலைவர்கள் இருவரையும் வரவேற்றனர். கிலாபத் நிதிக் காகப் பணமுடிப்பை டி. எஸ். துரைசாமி ஐயர் (பொது மக்களின் சார்பாக) அளித்தார்; எம். வி. கருப்பண்ணச் செட்டியார் கையால் நூற்ற நூல் சிட்டங்களைக் கொடுத்தார். இந்த வரவேற்பில் பங்கு கொண்டு விட்டு வந்த இரயிலிலேயே பயணம் செய்தனர் இரு தலைவர்களும்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு போன்ற தலைவரே இரு தலைவர்களையும் நெருங்க முடியவில்லையென்ற உண்மை

யிலிருந்து சேலம் இரயில் நிலையத்தில் அவ் இருவர்களையும் காண்பதற்காகக் கூடியிருந்த மாபெருங் கூட்டத்தை ஓரளவு நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

சேலம்

தலைவர்கள் டாக்டர் வரதரர்ஜுலு நாயுடு இல்லத்திலேயே தங்குவதென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சேவாப்பேட்டையில் மகாத்மாவின் வருகையை முன்னிட்டு நாலாயிரம் ஏழைகளுக்கும் நூற்றுக்கணக்கான பசுக்களுக்கும் உணவு வழங்கப் பெற்றது. அங்கு வணிகர்கள் அங்கமுத்துச் செட்டியார் தலைமையின் கீழ் வரவேற்பு அளித்தனர்.

21-8-20

பெரிய பெரிய தேசியச் சிக்கல்களைப்பற்றி ஆராய்ந்த போதே மாங்கொட்டையின் பலன்களைப் பற்றியுழ் யோசிக்க அண்ணலால் முடிந்தது என்று

குழாய்

லூயிபிஷர் பெருமையோடு குறிப்பிட்டிருக்

திறப்பு விழா

கிறார். மறுநாள் சேலத்திலும் அத்தகைய இரண்டு காரியங்களைத்தான் செய்தார் அவர். ஒருபுறம் தண்ணீர்க் குழாயைத் திறந்து வைத்து மக்களுக்குத் தண்ணீர் 'தர்மம்' கிடைக்க உதவினார். மற்றொரு புறம் பெரிய ஒத்துழையாமை மாநாட்டில் பங்கு கொண்டு தம் சித்தாந்தத்தை வழங்கினார். தேச பக்தி நிறைந்த, பெரிய வணிகரான டி. பி. சின்னகிருஷ்ண செட்டியார் தர்மத்திற்காக நிறுவியிருந்த இரண்டு தண்ணீர்க் குழாய்களை காந்திஜியும், மௌலானாவும் "திறந்து" வைத்தனர். சேலம் கிலாபத் மாநாட்டில் பங்கு கொண்டு ஒத்துழையாமைத் தத்துவத்தைப் பற்றி விளக்கினார்கள். மாலையில் பெங்களூர் போய்ச் சேர்ந்த தலைவர்கள் இருவரும் அங்கு நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டு, சென்னை வழியாக பம்பாய் செல்வதற்காக, அன்றிரவே புறப்பட்டு விட்டனர். அவர்கள் பெங்களூரில் தங்கியதெல்லாம் சுமார் நான்கு மணி நேரந்தான்.

22-8-20

மறுநாள் சென்னை வந்து சேர்ந்த இரு தலைவர்களும் சிறிது நேரம் நகரில் தங்கிவிட்டு பெஜவாடாவிற்குப் புறப்பட்டார்கள். அவர்கள் இங்குத் தங்கியிருந்த சிறிது நேரத்தில், கிலாபத் குழு உறுப்பினர்கள் அவர்களைச் சந்தித்

துப் பேசினர்கள். சட்டக்கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் காந்திஜி உரையாற்றினர். (இக்கூட்டத்தின் சிறப்பைப் பற்றி ஏற்கனவே கண்டோம்.)

மறுபடியும் சென்னையில்

கிலாபத் இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்துக் கிறித் தவப் பெண்மணி ஒருவர் எழுதியிருந்த கடிதம் அன்று காலையில் தான் அண்ணல் கையில் கிடைத்திருந்தது. அந்தக் கடிதத்தை மாணவர்கள் கூட்டத்தில் படித்துக் காண்பித்து முஸ்லிம்களின் ஆன்மிகப் போராட்டத்தில் இந்துக்கள் மட்டுமல்லாது கிறித்தவர்களும் பங்கு கொள்ள வேண்டிய அவசியத்தை அந்த அம்மையார் உணர்ந்திருந்ததைப் பாராட்டினர். இதே போன்று கிறித்தவர்களுக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டால் தாம் அவர்களை ஆதரிப்பது உறுதி என்றும் வாக்களித்தார். ''இந்துக்கள் முசல்மான்களுடைய சகோதரர்கள். அவர்கள் ஒரு போதும் இந்துக்களுடன் சண்டையிட்டுக் கொள்ளக் கூடாது என்று ஆண்டவன் இஸ்லாமிற்கு ஒரு புதுக்கட்டளை பிறப்பிப்பார் என்று நான் உறுதியாக நம்புகிறேன்'' என்றும் அவர் உருக்கத்தோடு குறிப்பிட்டார்.

பிராமணர் அல்லாதார்

நீண்ட காலமாகத் தமிழகத்தில் இருந்து வந்த ஒரு பெரிய சிக்கல் சட்டக்கல்லூரி மாணவர்களும் காந்திஜியும் பேசிக் கொண்டிருந்த போது அவருடைய கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலில் அண்ணலுடைய கருத்தைக் கேட்டார்கள். அதற்கு அண்ணல், ''பிராமணர் - பிராமணரல்லாதார் போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் பிராமணர்கள் சரணாகதி அடைந்துவிட வேண்டும். இதுதான் அவர்களுடைய கடமை. பிராமணரல்லாதார் எத்தனை இடங்கள் கேட்கிறார்களோ அத்தனை இடங்களையும் அளித்துவிட வேண்டும். என்னுடைய அதிகாரத்தில் அது இருந்தால், அதற்கு மேலும் சில இடங்களை அளிப்பேன். பிராமணர்கள் மீது கொண்டுள்ள அவநம்பிக்கையால் தான் பிராமணரல்லாதார் இவ்வாறு இடங்கள் கேட்கிறார்கள். பிராமணர்கள் நீண்ட காலமாக மிகச் சிறந்த தொண்டாற்றியிருக்கிறார்கள். ஆனாலும் தங்களை உயர்வாகக் கருதும் தற்பெருமையின் காரணமாக, தங்களுக்கும் மற்ற வர்களுக்குமிடையே அவர்கள் கற்பிக்கும் வேறுபாடு கொடூரமானது. நாம் எந்த வேறுபாட்டை - அதாவது

ஐரோப்பியர்கள் தங்களுக்கும் கறுப்பர்களுக்கும் இடையே பாராட்டும் வேறுபாட்டை - எதிர்த்துப் போராடுகிறோமோ அந்த வேறுபாட்டின் அளவிற்கு இதுவும் கொடூரமானது.'' (''இந்து'' 23-8-1920) என்று கூறினார்.

அண்ணல் கூறிய இக்கருத்து அப்போது கடும் வாக்கு வாதத்தை எழுப்பியதில் வியப்பில்லை. இக்கருத்து தவறான தகவல்களை அடிப்படையாகக் கொண்டது கடும் என்று சிலர் கூறினார்கள். ''யாருக்கும் கூடுத வாக்கு வாதம் லாகவோ குறைத்தோ இடங்கள் அளிப்பது பிராமணர்களுடைய அதிகாரத்திலிருப்பதாக யூகிப்பது தவறாகும். மற்றவர்களைப் போலவே பிராமணர்களும் தங்களை அழித்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். சமூகத்திற்குத் தொண்டாற்றத் தங்களுக்குள்ள சக்தியையும் அழித்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். காந்திஜியே ஒப்புக் கொள்வது போல, பிராமணர்கள் தங்களால் இயன்ற சிறந்த தொண்டை நாட்டிற்கு ஆற்றி வந்திருக்கிறார்கள் என்பது வரலாறு முழுவதுமே காணக்கிடக்கிறது. இப்போது மட்டும் அதை நிறுத்திவிட முடியாது,'' என்று பிராமணர்கள் தரப்பில் சிலர் கூறினார்கள். இது ஒரு பெரிய சிக்கலாகக் கிளம்பவே, காந்திஜி பங்கு கொண்ட கூட்டத்தில் என்ன நடைபெற்றது என்பதைச் சென்னையைச் சேர்ந்த எஸ். நாராயணன் விளக்கி எழுதினார். பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலை அன்று காந்திஜியிடம் எழுப்பியவர் இவரே. காந்திஜி அன்று கூறிய முழு வாசகமும் வெளிவர வில்லை என்று கூறி அவர் மேலும் கூறியதாகக் கீழ்க் கண்ட விவரத்தை வெளியிட்டிருந்தார். ''நான் ஒரு பிராமணனாக இருந்து, ஒரு பிராமணரல்லாதார் என்னுடைய வீட்டைக் கேட்டால் நான் அதை அளித்து விடுவேன். இதுவரை பிராமணர்கள் உன்னதமான, மதிப்பிற்குரிய நிலையில் இருந்து வந்திருக்கிறார்கள். அதனால் தான் அவர்களிடம் செருக்கு வளர்ந்து கொண்டு வந்திருக்கிறது. அதேபோன்று பிராமணரல்லாதார் மத்தியில், தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணமும் உருவாகி வந்திருக்கிறது. இந்த எண்ணம் உருவாகியதன் காரணமாக அவர்களுக்கு பிராமணர்கள் மீது நம்பிக்கையில்லாமற் போய் விட்டது. தற்போது இவ்வாறு, பிராமணர்கள் உள்ள நிலை அவர்களே ஏற்படுத்திக் கொண்டதாகும். இந்த அவநம்பிக்கையைப் போக்கி ஒருமைப்பாட்டை

ஏற்படுத்த வேண்டுமானால் பிராமணர்கள் தங்கள் மீது அவநம்பிக்கை கொண்டுள்ள பிராமணரல்லாதாருக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காகத் தங்களிடம் உள்ளதை யெல்லாம் அளித்துவிடவேண்டும். நீங்கள் (பிராமணர்கள்) உண்மையிலேயே அவர்களை உடன் பிறந்தவர்களாக எண்ணுகிறவர்கள் என்பதையும் இதுவரை அவர்கள் எவ்வாறு உங்களை நம்பி வந்திருக்கிறார்களோ அதேபோன்று அவர்களை நீங்களும் நம்பி வந்திருக்கிறீர்கள் என்பதையும் அவர்களுக்கு மெய்ப்பித்துக் காட்டுங்கள்'' என்றும் காந்திஜி கூறியதாக இவர் எழுதியிருந்தார். இதற்குப் பின்பு வாக்குவாதம் தளர்ந்தது.

நீண்டகால சிக்கல்

எத்தனையோ முறை பிராமணர்-பிராமணரல்லாதார் சிக்கல் அண்ணலின் கவனத்திற்குக் கொண்டுவரப்பெற்றிருக்கிறது. தமிழகத்தைப் பொருத்தவரை இந்தச் சிக்கல் எப்போது தொடங்கியது என்று தெரியவில்லை; ஏனென்றால் சுவாமி விவேகானந்தர் கூட இதைப் பற்றிப் பேசுகிறார். தம்மிடம் ஒவ்வொரு முறை இச்சிக்கல் கொண்டுவரப்பட்ட போதும் பரந்த விரிவான அடிப்படையில் காந்திஜி இதற்கு மாற்றுக் கூறியுள்ளார். இவைகளில் தனிப்பட்ட, குறிப்பிட்ட சிக்கல்களும் உண்டு; பொதுவகையான சிக்கல்களும் உண்டு. சேர்மாதேவி குருகுலச் சிக்கல் போன்று தர்மசங்கடமான, இலகுவில் விடுவிக்க முடியாத சிக்கல்களும் இருந்தன. ஆனால் இவைகளுக்கெல்லாம் பரிகாரம் கூறிய போது அண்ணல் சில அடிப்படையான கருத்துக்களைக் கொண்டிருந்தார். அவருடைய ஆயுள் காலம்வரை அந்த ''அடிப்படை'' மாறவில்லை என்றே தோன்றுகிறது. அவர் மறைவதற்குச் சில மாதங்களுக்கு முன் தமிழகத்தில் சிறுபான்மையினராக இருக்கும் பிராமணர் வகுப்பைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் மிகுந்த அவதிப்படுவதாகவும் அவர்களுக்கு உரிய இடங்கள் அரசுப் பதவிகளிலோ, கல்லூரிகளிலோ கிடைப்பதில்லையென்றும் பிராமணர் எதிர்ப்பு இயக்கமே இதற்குக் காரணம் என்றும் புகார் செய்து காந்திஜிக்கு ஒரு கடிதம் வந்தது. இதை டில்லியில் தமது மாலைப் பிரார்த்தனைச் சொற்பொழிவில் அண்ணல் குறிப்பிட்டு பிராமணர்கள் இந்நிலையில் என்ன செய்யவேண்டும் என்பதற்குத் தமது அறிவுரையையும் சொன்னார். அண்ணல் மறைந்ததற்குச் சில மாதங்களுக்கு

மூன்புதான் இதைக் கூறினரென்பதால் இது அவருடைய முதிர்ந்த கருத்தாய் இருக்கும் என்பதில் ஐயமில்லை. அவர் சொன்னதாவது :

"பிராமணர்களுக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பதற்காக நான் இரங்குகிறேன். என்றாலும் அவர்களைப் போன்று ஏமாற்றமோ வருத்தமோ எனக்கு ஏற்பட சிறுபான்மை வில்லை. முதலாவதாக, அவர்கள் தங்களைச் யினர் அல்ல சிறுபான்மையினர் என்று கருதிக் கொள்வதை நான் ஏற்க முடியாது. நாம் ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றால் சிறுபான்மையினர், பெரும்பான்மை யினர் என்ற சிக்கல் ஏது? நான் கூட என்னை ஒரு சிறு பான்மையினனாகக் கருதிக் கொண்டு நான் விரும்பும் சலுகைகள் எனக்குக் கிட்டவில்லையே என்று வருத்தப் பட்டுக் கொண்டிருக்கலாம். ஆகையால் இந்திய சமுதா யத்திலிருந்து வேறுபட்ட ஒரு தனி வகுப்பாகத் தங்களைக் கருதிக் கொள்வதை மறந்து விடுமாறு எனது பிராமண நண்பர்களை நான் வேண்டிக் கொள்கிறேன்... இவ்வாறு அவர்கள் தங்களைச் சிறுபான்மையினராகக் கருதிக் கொள் வதை விட்டு விடுவார்களானால் எவ்வாறு சமுத்திரத்தின் பெருமையை அதன் ஒவ்வொரு துளியும் அடையுமோ அதேபோன்று இந்திய (அல்லது இந்து) சமுதாயத்தின் பெருமையில் பங்கு பெற்றவர்களாவார்கள். இந்தியாவில் உள்ள ஏழு இலட்சம் கிராமங்களில் வாழும் கோடிக் கணக்கான கிராமவாசிகளை எண்ணிப்பார்க்கும் போது இந்தக் கல்லூரிகளும் அரசுப் பதவிகளும் எம்மாத்திரம்? கல்லூரிகளுக்கும் அரசுப் பதவிகளுக்கும் ஆசைப்படும் பற்று அகன்று விட்டதே என்று பிராமண அன்பர்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும் என்பதே எனது யோசனை. அப்படிப் பட்டவர்கள் ஒரு சிலர் தான் இருப்பார்கள். கல்லூரிகளி லும் அரசுப்பதவிகளிலும் இடந்தேடும் முயற்சியில் ஈடுபட மறுப்பவர்கள் தான் இந்தியாவின் உண்மையான சேவகர்கள். பள்ளி அல்லது கல்லூரியின் நான்கு சுவர்களுக்குள்ளே தான கல்வி அடங்கிக் கிடக்கிறது?... இந்தச் சந்தர்ப்பத் தில் ஆதாரக் கல்வியையும் அது என்னென்ன பயன்களை அளிக்க முடியுமோ அவைகளையும் அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். நாம் செய்யும் கடமைகளிலிருந்து தான் உரிமைகள் கிடைக்கின்றன என்று நான் கூறி வருவதை மட்டும் அவர்கள் நினைவு படுத்திக்

கொண்டால், அரசாங்கக் கல்லூரிகளில் சேர்த்துத்தான் ஆக வேண்டும் என்ற உரிமை எதுவும் யாருக்கும் கிடையாதென்பதை அவர்கள் உடனடியாக உணருவார்கள். யாராவது ஒரு பையன் அல்லது பெண்ணுக்கு அத்தகைய உரிமை உண்டு என்றால், யாருடைய உரிமை இதுவரை கொடுமையான முறையில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதோ அவன் அல்லது அவளுக்குத்தான் அந்த உரிமை. ஒரு பிராமணனின் கடமை ஆண்டவனை அடைவதும் மற்றவர்கள் அடைய உதவுவதும் தான். அந்தக் கடமையைச் செய்வதால் அவனுக்குக் கிடைக்க வேண்டிய உரிமை, அவன் எந்தச் சமுதாயத்திற்கு அந்தச் சேவையைச் செய்கிறானோ அந்தச் சமுதாயம் அவன் கண்ணியமாக வாழக் கூடியவாறு அவனுக்கு உணவும் உடையும் அளிக்க வேண்டும் என்பதுதான்,'' என்று அண்ணல் கூறியிருந்தார்.

1920-இல் தாம் மேற்கொண்ட தமிழகச் சுற்றுப்பயணத்தால் ஏற்பட்ட விளைவுகள் என்னவென்பதை அண்ணலே ''நவஜீவனில்'' (29.8.20 இதழ்) எழுதினார்.

மக்கள் நம்பிக்கை

''சென்னை மக்கள் என் உள்ளத்தில் பதிந்துள்ள முறையே தனி. சென்னையில் நானும் என்னுடைய நண்பரும் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றினோம். முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்த சில கூட்டங்களில் சௌகத் அலி இந்துஸ்தானியில் பேசினார். மக்களும் முழு அமைதியுடன் இருந்து அவருடைய பேச்சைக் கேட்டனர். என் மனதில் இது நல்ல கருத்தை ஏற்படுத்தியது. சென்னை மக்களுடைய நம்பிக்கை அளவு கடந்தது; அவர்களுடைய விசுவாசம் எல்லையற்றது. ஆனாலும் இந்தச் சுற்றுப்பயணத்தினால் உடனடியாகப் பலன் அதிகம் என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு இடத்திலும் சில வழக்கறிஞர்கள் தொழிலை விட்டிருக்கிறார்கள். சில பெற்றோர்கள், பள்ளிகளிலிருந்து தங்களுடைய பிள்ளைகளை நிறுத்திவிடுவதென்று முடிவு செய்திருக்கிறார்கள். சிலர் தங்களுடைய அலுவலகப் பதவிகளிலிருந்து விலகிவிட்டனர். சிலர் சட்டசபைக்குப் போகும் யோசனைகளைக் கைவிட்டனர். ஆனாலும், மக்கள் என் மீது கொண்டுள்ள அன்பை வைத்துப் பார்க்கும்போது, ஏற்பட்ட பலன் நாம் எதிர்பார்த்த அளவு இல்லை. இதற்கான காரணங்களைப் புரிந்து கொள்வது கடினமல்ல. சில தலைவர்களுக்கு ஒத்துழையாமையில் நம்பிக்கை இல்லை. நம்பிக்கை

உள்ளவர்களுக்குத் தியாகம் செய்யும் ஆற்றல் இல்லை. மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்களோ நாணயமில்லாதவர்கள். அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்று பேசுகிறார்கள். தலைவர்களின் நிலைமையே இவ்வாறு இருப்பதால், மக்கள் உடனடியாகச் செயல்பட இயலாததில் வியப்பில்லை. ஒத்துழையாமை என்னும் இந்தத் தூய்மைப் படுத்தும் இயக்கத்தால், சூழ்நிலை தூய்மையடைந்துவிடும் என்பதையே இந்த அனுபவங் காட்டுகிறது. கபட நாடகமும் குறையும். தூசி துப்பட்டைகள் மேலே வந்துவிடும். இவ்வாறு தூய்மைப்படுத்தாமல் மக்கள் முன்னேற்றமடைய முடியாது.'' ஒத்துழையாமை இயக்கம் விறுவிறுப்பாக மேற்கொள்ளப் பெற்ற வேறு சில மாநிலங்களில், இயக்கத்தை எதிர்த்துப் பேசியவர்கள் கூட்டத்தில் மக்களால் கூச்சலும் குழப்பமும் விளைவிக்கப் பெற்றன. ஆனால் சென்னை மாநிலத்தில் மட்டும் அவ்வாறு இல்லை. இதை மகிழ்ச்சியுடன் ''யங் இந்தியா''வில் காந்திஜி குறிப்பிட்டுள்ளார். சென்னை மாநிலத்தைப்பற்றி காந்திஜிக்கு இருந்த ஒரு தனி மகிழ்ச்சி இது.

—:o:—

ஒரே செயல் வேகம்

காந்திஜி ஒரே செயல் மயமாகக் காட்சி அளித்தார் 'காந்திஜியின் திட்டமானது அறிவீனமான திட்டங் களிலெல்லாம் மிகவும் அறிவீனமானது' என்று வைசிராய் ரீடிங் பிரபு நையாண்டி செய்ததெல்லாம் அவருடைய ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அதிகப்படுத்திற்றே தவிரக் குறைக்கவில்லை. சூறுவளிச்சுழல் போன்று எங்கும் நிற் காது அவர் சுற்றுப்பயணம் செய்து கொண்டே இருந்தார். ஒரு புறம், வன்முறையில் ஈடுபடுவதற்குத் துடிதுடித்துக் கொண்டிருந்த மக்களின் மனப்பாங்கைக் கண்டித்துத் திருத் தினர்; மற்றொரு பக்கம் நாட்டிற்காகத் தியாகம் செய்யத் தயங்கிக் கொண்டிருந்த மக்களுக்குத் தெம்பூட்டி, அவர் கள் ஏதாவதொரு வகையில் நாட்டுத் தொண்டிற்கு உதவி புரிய முன்வர வேண்டுமெனத் தூண்டினர். அவருடைய ஒத்துழையாமைப் போராட்டமானது இந்துக்களையும் முஸ்லிம்களையும் மட்டுமல்லாது, இந்தியாவின் பல்வேறு பகுதியினரையும் சாதியினரையும் மொழி வழி இனத்தவ ரையும் என்றுமில்லாத அளவு இறுக்கி ஐக்கியப்படுத்திற்று.

மூன்று விலக்குகள்

கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசு காந்திஜியின் (ஒத்துழையாமைப்) போராட்டத் திட்டங்களை மிகப் பெரும்பாலான வாக்குகளால் ஏற்றது. இந்தப் போராட்டத்தின் குறிக்கோள் கிலாபத், பஞ்சாப் அநீதிகளைச் சரிப்படுத்தவே என்று முதலில் காந்திஜி கூறிக்கொண்டு வந்தார். ஆனால் இதைவிட ஒரு சிறந்த குறிக்கோளைக் கொள்ள வேண்டும் - சுயராஜ்யம் பெறுவதே குறிக்கோளாக இருக்க வேண்டும் - என்று சேலம் விஜயராகவாச்சாரியாரும் பண்டித மோதிலால் நேருவும் யோசனை கூறியபோது அதை அவர் ஏற்றுக்கொண்டு நியாயமான காரியங்களில் தமது அணு சரித்துப் போகும் தன்மையை மெய்ப்பித்துக் காட்டினர்.

இந்தச் சமயத்தில், கதரைத் தீவிரமாகப் பரப்புவதிலும் அவர் கவனம் செலுத்தி வந்தார். தமது திட்டத்தை மக்கள் சரிவரப் பின்பற்றுவதாலல் இந்தியா ஒரே ஆண்டில் விடுதலை பெற்றுவிடும் என்று உறுதியாகச் சொன்னார். நீதிமன்றங்களை விலக்க வேண்டும், சட்ட மன்றங்களை விலக்க வேண்டும், வெளிநாட்டுத் துணிகளை விலக்க வேண்டும் என்ற மூன்று விலக்குகளும் அவருடைய தாரக மந்திரங்களாக இருந்தன. ஒத்துழையாமை இயக்கத்தை ஏளனம் செய்தவர்கள், அதன் வலுவும் வேகமும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு போவதைக் கண்டார்கள். அதற்கு மேலும் அவர்களால் அப்போராட்டத்தை ஏளனம் செய்ய முடியவில்லை.

இந்தப் போராட்டத்தை மையமாக வைத்துக் கொண்டு மற்றும் சில அடிப்படையான உண்மைகளை மக்களுக்கு அண்ணல் புகட்டினார். ஐரோப்பியப் பண் மேலும் சில பாட்டை அப்படியே 'காபி' அடிப்பதை அடிப்படைகள் அவர் வன்மையாகக் கண்டித்தார். இந்திய இஸ்லாமியப் பண்பாட்டின் பெருமைகளை எடுத்து விளக்கினார். அரசியல் ஆர்ப்பாட்டத்தோடு நிர் மாணத் திட்ட வேலைகளும் நடைபெற்றுக் கொண்டு வந்தன. நாள்தோறும் அரைமணி நேரம் நூற்காமல் உணவு அருந்துவதில்லை என்று அவர் விரதம் பூண்டார். நவம்பர் மாதம் ஆமதாபாத்தில் குசராத் தேசியப்பல்கலைக் கழகத்தை - இந்தியாவின் மொழிகளைப் பாதுகாத்து நாட் டுக்குப் புத்துயிர் ஊட்டுவதற்காக - அவர் தோற்றுவித் தார். இந்துக்கள் குராஜையும், முஸ்லிம்கள் இந்து சாத் திரங்களையும் கற்க இங்கு வாய்ப்புக் கிடைத்தது.

டிசெம்பரில் நாகபுரியில் காங்கிரஸ் கூடியபோது அதற் குத் தலைமை தாங்கிய விஜயராகவாச்சாரி உள்பட்ட பல தலைவர்கள் காந்திஜியின் ஒத்துழையாமைப் நாகபுரி போராட்டத் திட்டங்களை மீண்டும் எதிர்த் காங்கிரஸ் தார்கள். வங்காளத்திலிருந்து ஏராளமான பிரதிநிதிகளுடன் சி. ஆர். தாஸ் வந்திருந் தார். நீதிமன்றங்களுக்குச் செல்வதை விலக்க வேண்டு மென்றும் வழக்கறிஞர்கள் நீதிமன்றங்களுக்குச் சென்று வழக்காடக் கூடாதென்றும் காந்திஜி கூறியதைக் கைவிட வேண்டுமென்று அவர்கள் அண்ணலை எவ்வளவோ வலி

யுறுத்தினர்கள். ஆனல் அவர் இதில் மிகவும் உறுதியாக இருந்தார். கடைசியில் அண்ணலின் தீர்மானம் ஒரு மன தாக நிறைவேறியது; எதிர்த்தவர்களுடைய ஆதரவைக் கூட அவர் பெற்றுவிட்டார். இந்தக் காங்கிரசில் தான் ''சட்ட பூர்வமான, அமைதியான முறைகளின் மூலம் சுயராஜ்யம் பெறுவதே காங்கிரசின் குறிக்கோள்'' என்ற தீர்மானம் நிறைவேற்றப் பெற்றதாகும். ''சத்தியம், அஹிம்சை மூலம்...'' என்று இந்த வாசகம் இருப்பதையே காந்திஜி விரும்பினர். ஆனலும் எல்லோருடைய கருத் திற்கும் உடன்பட்டு வாசகம் மேற்கண்டவாறு அமைந்தது. இந்தக் கோட்பாட்டைக் காங்கிரஸ் ஏற்ற பின்பு, ''நான் உண்மையாகக் காங்கிரசில் சேர்ந்தது இப்போது தான்'' என்று காந்திஜி மகிழ்ச்சியோடு கூறினர். இந்து - முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு, கதர் ஆகியவை சம்பந்த மாகவும் இந்தக் காங்கிரஸ் முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றியது. மொழிவாரியாகக் காங்கிரஸ் மாநிலங் கள் பிரிக்கப்பெற்றன. கிராமங்கள் வரை காங்கிரசின் கிளைகள் வேரூன்றின. ஏற்கனவே, நவம்பரில் நடை பெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் மூன்றில் இரண்டு பங்கு வாக்காளர்கள் வாக்களிக்கச் செல்லாததால் காந்திஜி மா பெரும் வெற்றியடைந்திருந்தார் என்று கூற வேண்டும். டிசெம்பரில் நாகபுரி காங்கிரசில் அவர் அடைந்த வெற்றி அவரை மேலும் உயர்த்தியது. நாகபுரி காங்கிரஸ் உண்மை யான மக்கள் காங்கிரஸ் ஆக உருவாகியதென்றுல் அந்தக் காங்கிரசிற்கு காந்திஜி உண்மையான நிரந்தரத் தலைவரா னர்.

இந்தச் சமயத்தில் பிரிட்டன் ஆதிக்கத்தில் இருந்த சில வெளி நாடுகளில் எல்லாம் பிரிட்டனுக்கு எதிராக ஏதாவது ஒருவகைப் போராட்டம் உருவாகிக் அடக்க கொண்டு வந்தது. ஆகையால், அவைகளில் விருப்பம் மிகப் பெரிய நாடான இந்தியாவில் காந்திஜி தலைமை தாங்கி நடத்திய போராட்டத்தைக் குறித்து ஏதாவது ஒன்று செய்தாக வேண்டும் என்று ஆட்சியாளர்கள் எண்ணினர். இந்திய மிதவாதிகள் சிலர் காங்கிரசிலிருந்து தங்களுடைய தொடர்பைத் துண்டித்துக் கொண்டனர். இதுவரை காங்கிரஸ் மாநாடுகளுக்கு வந்து பங்கு கொண்டிருந்த வி. எஸ். சீனிவாச சாஸ்திரி, இனி

மேலும் தமக்குக் காங்கிரசில் அக்கறையில்லை என்பதை வெளிப்படையாகக் கூறிவிட்டார்.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் நெருங்கிய உறவினரான கான்னாட் பிரபு இந்தியாவிற்கு வந்து சென்னை, டில்லி, பம்பாய், வங்காள சட்ட மன்றங்களைத் தொண்டின் தொடங்கி வைத்தார். காந்திஜி வேண்டு பொற்காலம் கோளின்படி இவருடைய வருகையை மக்கள் புறக்கணித்தார்கள். வங்கத்தில் ஆயிரக் கணக்கான கல்லூரி மாணவர்கள் கல்லூரிகளிலிருந்து வெளியே வந்தார்கள். பாட்னா, அலிகார், ஆமதாபாத், பம்பாய், காசி, டில்லி ஆகிய நகரங்களில் தேசிய வித்யா பீடங்கள் தோன்றின. காந்திஜியும் முகமதலியும் கூட்டாக முயற்சி எடுத்து ஜமியா மில்லியா இஸ்லாமியா என்ற தேசிய முஸ்லிம் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தனர். இந்தியாவின் பிற பகுதிகளிலும் மாணவர்கள் பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டனர். மோதிலால் நேரு, சி. ஆர். தாஸ், வல்லபாய் பட்டேல், இராஜேந்திரப் பிரசாத், இராஜகோபாலாச்சாரியார் போன்ற பெயர் பெற்ற வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலைவிட்டு நாட்டுக்குத் தொண்டாற்றும் ஊதியமில்லாத் தொழிலை ஏற்றது இந்தச் சமயத்தில் தான். நாடெங்கும் ஏராளமான வழக்கறிஞர்கள் காந்திஜியின் சொல்லை ஏற்றுத் தங்கள் தொழிலைக் கைவிட்டார்கள். சுபாஸ் சந்திர போஸ் ஐ. சி. எஸ். பதவியைத் துறந்தார். திலகர் சுயராஜ்ய நிதிக்கு ஜம்னலால் பஜாஜ் ஒரு இலட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார். முஸ்லிம் மாதர்கள் கூட்டத்திற்குத் தாங்களே கண்களைக் கட்டிக்கொண்டு வந்து பங்கு கொண்ட முஸ்லிம் தலைவர்கள் காந்திஜியை அவ்வாறு கட்டிக் கொள்ளாமலேயே பங்கு கொள்ள அனுமதித்ததன் மூலம் 'காந்திஜி தூய்மையானவர், அவர் எங்கும் செல்லலாம்' என்பதை ஒப்புக்கொண்டார்கள். மாட்டுக் கறி உண்பதை முகமதியர்கள் பலர் கைவிட்டனர்; ஈத் விழாவில் பசுவதைத் நின்றது. இவ்வாறாக இது, தேசத் தொண்டின் பொற்காலமாகத் திகழ்ந்தது.

மார்ச் இறுதியில் பெஜவாடாவில் கூடிய அனைத்து இந்தியக் காங்கிரஸ் குழு, திலகர் சுயராஜ்ய நிதிக்கு ஒரு கோடி ரூபாய் வசூல் செய்வதென்று முடிவு செய்தது (இந்த நிதி குறிப்பிட்ட காலத்திற்கும் முன்பே வசூலாயிற்று.)

போராட்டத்தில்மக்கள் கொண்ட ஆர்வத்தைக் கண்டு, அரசாங்கத்தின் அடக்குமுறை மென் மேலும் அதிக மாயிற்று. மக்களைப் பொறுமையாக இருக்கு மாறு மகாத்மாவேண்டிக்கொண்டு வந்தார். பெஜவாடாவில் காங்கிரஸ் குழுக் கூட்டம் முடிந்த உடன் ஆந்திராவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு ஏப்ரல் 8-ஆம் தேதியன்று காந்திஜி சென்னைக்கு வந்தார். சென்னையில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டத்தில் பங்கு கொண்டு விட்டு அன்று இரவே அவர் பம்பாய்க்குப் புறப்பட்டு விட்டார். காந்திஜி வருவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் அலி சகோதரர்கள் (பெஜவாடாவிலிருந்து) சென்னைக்கு வந்து ரோடு வழியாக பெங்களூருக்குச் சென்றிருந்தார்கள்.

சென்னை வந்தார்

தேசியப் போராட்டம் கொந்தளித்துக் கொண்டிருந்த அந்த நேரத்தில், சென்னையில் காந்திஜியைக் காணவும் வரவேற்கவும் அவருடைய பேச்சைக் கேட்க வும் திரளான மக்கள் வந்ததிலும் அளவிடற் கரிய உற்சாகம் காட்டியதிலும் வியப்பே இல்லை. குறிப்பாக மாதர்குலம் இதய பூர்வ மாக மகாத்மாவிற்குத் தனது அன்பையும் ஆதரவையும் தெரிவித்துக் கொண்டது. அவருடைய கூட்டங்களில் ஆயிரக்கணக்கான ரூபாய் பெறுமான தங்க நகைகள் வாரி வழங்கப்பெற்றன. பிரிட்டிஷாருக்கும் அரசாங்கத்திற்கும் எதிரான உணர்ச்சி உச்ச கட்டத்தில் இருந்தது: இதற்குப் பின்பு இதைப்போன்ற ஓர் உணர்ச்சி உப்புச் சத்தியாக்ரகம் நடைபெற்ற போதும் ''இந்தியாவை விட்டுவெளியேறு'' என்ற முழக்கம் நடைபெற்ற 1942-ஆம் ஆண்டுப் போராட் டத்திலும் தான் காணப்பெற்றது. ஆனால் 1942-இல் கூட 1921-இல் இருந்ததைப் போன்ற அஹிம்சா உணர்வு இருந்ததா என்பதை உறுதியாகக் கூறமுடியாது. ''காந்திஜி யின் பிரச்சாரத்தில் ஓரளவு பலன் இருக்கிறது'' என்று அப்போதிருந்த சென்னை அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

உணர்ச்சி மயம்

இந்தச் சமயத்தில் ஒத்துழையாமை இயக்க வாதிகளுக் கும் 'ஒத்துழைப்பாளர்கட்கும்' இடையே தமிழகத்தில் கடும் வாக்குவாதம் நடந்து கொண்டிருந்தது. 'ஒத்துழைப் பாளர்கள்' கட்சிக்கு அன்னிபெசண்ட் தலைமை தாங்கினார் என்று சொல்லலாம். ''நியூ இந்தியா''வில் அவர் மகாத்மா

வின் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டித்து எழுதுவதும், அதற்குத் தேசிய இதழ்கள் கடுமையாக மறுமொழி கொடுப்பதும் அக்காலத்தில் அன்றாட நிகழ்ச்சிகளாகஇருந்தன. உயிருடன் வாழ்ந்த எந்த மகாத்மாவும் அரசியலுக்குத் தலைமை தாங்கியதில்லை என்று 'நியூ இந்தியா'வில் அவர் எழுதினார். உயிருடன் ஒரு மகாத்மா இருந்து தேசியத்தில் ஈடுபடுவதன் காரணமாகத்தான் அரசியலை ஆன்மிக மயமாக்க முடிந்திருக்கிறது என்றும், வன் முறைக்குத் தீ மூட்டி வளர்த்துவரும் ஒரு காலத்தில் புத்தி நிதானத்துடன் இந்தியா செயலாற்ற முடிகிறதென்றும் தேசிய இதழ்கள் அன்னிபெசண்டிற்குச் சுடச்சுடப் பதிலளித்தன.

அன்னி பெசண்ட்

ஆங்கிலோ இந்தியப் பத்திரிக்கைகளோ ஒத்துழையாமை இயக்கத்தை மட்டுமல்லாமல் சென்னை அரசாங்கத்தையும் கடுமையாகச் சாடின. ஒத்துழையாமை இயக்கவாதிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து அவர்களை ஒழித்துக்கட்டிவிட வேண்டுமென்பது அவைகளின் ஆசை. அப்படியே நடவடிக்கை எடுக்காவிட்டாலும், 'ஒத்துழையாமைக்கு எதிரான ஒரு பிரச்சாரத்தையாவது தூண்டிவிடலாமல்லவா?' என்று அவை கேட்டன. சென்னை ''மெயில்'' எழுதியது: ''ஒத்துழையாமை இயக்கத்திற்கு எதிரான அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் அரசாங்கம் முக்கிய பங்கெடுத்துக் கொள்ளவேண்டும் என்பதுதான் விசுவாசமான மக்கள் எல்லோருடைய விருப்பமும். இதைப் பொறுப்புவாய்ந்த செய்தித்தாள்களெல்லாம் சில வாரங்களாக எடுத்துக் காட்டி வருகின்றன. ஆனாலும் கிடைத்த பலன் ஏமாற்றம் அளிக்கிறது.... புரட்சி வாதிகளைச் சமாளிக்க மற்ற மாநில அரசாங்கங்களெல்லாம் உருப்படியான நடவடிக்கைகள் எடுத்து வருவதையும் நமது மாநில அரசு ஒன்றும் செய்யாது இருப்பதையும் காணும்போது நமக்கே அச்சம் ஏற்படுகிறது. எவ்வாறு பெரிய மரக்கட்டைகளை அவைகளுக்குள்ளேயிருக்கும் புழுக்கள் அரித்து அவைகள் பழைய மரக்கட்டைகளாகத் தெரிந்தாலும் பலமில்லாதவைகளாகச் செய்து விடுகின்றனவோ அது போன்று, ஒத்துழையாமை இயக்கவாதிகள் இந்தியாவின் அரசு விசுவாசத்தை அரித்துவிடுகின்றனர்''.

ஆங்கிலேயர் பத்திரிகைகள்

நெல்லூரிலிருந்து காந்திஜியும் கஸ்தூரிபாவும் தேவதாஸ் காந்தியும் கல்கத்தா மெயிலில் சென்னைக்கு வந்தார்கள். காந்திஜி முன்னரே கேட்டுக் கொண்டபடி, ஏப்ரல் 6-ஆம் தேதியிலிருந்து 13-ஆம் தேதி வரையிலான ஒரு வாரத்தைச் சென்னை நகரும் தமிழகத்தின் பிறபகுதிகளும் சத்தியாக்ரக வாரமாக அனுசரித்திருந்தன. காந்திஜி சென்னைக்கு வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர்த் தான், கடற்கரையில் சத்தியாக்ரக வாரத்தை முன்னிட்டு ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் காந்திஜியின் வருகையைக் குறித்தும் அவர் இங்கு பங்கு கொள்ளும் அலுவல்கள் குறித்தும் ராஜாஜி அறிவித்திருந்தார். அவர்களுடைய வருகை தனிப்பட்டது என்று முதலிலேயே அறிவிக்கப் பெற்றிருந்தது. கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக, பேசின்பிரிட்ஜ் இரயில் நிலையத்தில் அவர்கள் இறங்குவதாகத் திட்டமிட்டிருந்தார்கள். அங்கு அவர்கள் இறங்குவது தலைவர்களுக்கு மட்டுந் தான் தெரிந்ததொன்றாகும். ஆனாலும் பொது மக்கள் எப்படியோ "வாடை பிடித்து" அங்கு ஆயிரக்கணக்கில் கூடிவிட்டார்கள். இத்தகைய காரியங்களில் பொது மக்களின் திறமை இருக்கிறதே அதற்கு ஈடு அது ஒன்றேதான்.

மக்கள் கூட்டம்

சாந்தோமில் ராம்ஜி கல்யாண்ஜி பங்களாவில் காந்தி தங்கினார். அவரை ஒத்துழையாமை இயக்க ஊழியர்களும் தலைவர்களும் சந்தித்துப் பேசினார்கள். பல மாலையில் மார்வாடிகள் கூட்டம் ஒன்று அலுவல்கள் பார்க் டவுனில் குஷல்தாஸ் சத்திரத்தில் நடைபெற்றது. அதன் பின்புதான் சென்னைக் கடற்கரையில் பொதுக்கூட்டம்.

காந்திஜி எவ்வளவு இங்கிதம் தெரிந்தவரென்பது இம் முறை அவர் சென்னை வந்தபோது ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் தங்குவதில்லை என்று முடிவு செய்ததிலிருந்து தெளிவாகத் தெரிந்தது. இம் முடிவை அவர் முதலிலேயே மகாதேவ் தேசாய் மூலமாக ஜி. ஏ. நடேசனுக்குத் தெரிவித்திருந்தார். "உங்களுடைய வீட்டில்தான் அவருக்கு மன அமைதி கிட்டும் என்று காந்திஜி கருதுகிறார். ஆனாலும், உங்களுக்குத் தர்மசங்கடத்தை ஏற்படுத்த அவர்

இங்கிதம்

விரும்பவில்லை,'' என்று மகாதேவ் தேசாய் எழுதியிருந்தார். நடேசன் ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரிக்காததால் அவர் இல்லத்தில் காந்திஜி தங்குவதை ஒத்துழையாமை இயக்க ஆதரவாளர்கள் விரும்பமாட்டார்கள் அல்லவா? சில நாட்கள் கழித்து மகாத்மா இதைப்பற்றி நடேசனுக்குக் கடிதம்எழுதினர். '' உண்மையான ஒத்துழையாமை வாதி களோ உண்மையில்லாதவர்களோ, உங்கள் வீட்டில் கூட்டம் போடுமாறு செய்து, நான் உங்களுக்குத் தொல்லை கொடுக்கக் கூடாது. அதேபோன்று நீங்கள் விரும்பாத விஷயங்களைப்பற்றித் தாராளமாக விவாதிக்க உங்கள் வீட்டிற்கு அவர்கள் வருமாறு செய்து அவர்களுக்கும் நான் தொல்லை கொடுக்கக்கூடாது. உங்களை நான் வந்து சந்திக்க முடியாமற் போகலாம். ஆனால், என்னைச் சென்னையில் சிறைப்பிடிப்பவர்கள் எங்கு வைத்திருக்கிறார்களோ அங்கு நீங்கள் வந்து உங்கள் முகத்தைக் காட்டிச் செல்ல வேண்டுமென நான் எதிர்பார்ப்பேன்'' என்று காந்திஜி உருக்கமாக எழுதியிருந்தார்.

பெருங்கூட்டம்

மாலை ஆறு மணிக்குப் பொதுக்கூட்டம் கூடுவதாக இருந்தும் மூன்று மணியிலிருந்தே சாரை சாரையாக மக்கள் கடற்கரையை நோக்கி வரத் தொடங்கினர்கள். இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்தவர்கள் ஆகிய எல்லா மதத்தினருமே இக்கூட்டத்திற்கு வந்து குழுமினர். சுமார் ஐம்பதாயிரம் பேர் அங்குக் கூடியிருப்பார்கள் என்று பத்திரிகைகள் மதிப்பிட்டிருந்தன. அங்கே கூடியிருந்த கூட்டத்தைக் கண்டு சென்னையே பெருமைப் படலாம். கூட்டம் பிரம்மாண்டமான கூட்டம்; பல பெரிய மனிதர்கள், குறிப்பிடத்தக்க மனிதர்கள் அங்கு வந்திருந் தார்கள். (கடை அடைக்குமாறு யாருங் கேட்டுக் கொள்ள வில்லை யென்றாலுங் கூட, காந்திஜியின் மீதும் அவருடைய இயக்கத்தின் மீதும் தங்கட்குள்ள பக்தியைத் தெரிவிக்க விரும்பிக் கடைக்காரர்கள் தாங்களாகவே முன்வந்து கடையடைப்புச் செய்தது குறிப்பிடத்தக்கது.) சுமார் ஆறு மணிக்கெல்லாம் அங்குக் கூடியிருந்த மக்கள் கடலைக் கடவுள்தான் காணவேண்டும். மீனுவிற்கும் கடலுக்கும் மீன் காட்சி நிலையத்திற்கும் பழைய பொறி இயல் கல்லூரிக்கும் இடையே ஒரே மக்கள் மயந்தான். உயர்ந்த அரசாங்க அதிகாரிகள் கூடத் தூரத்திலிருந்து இதைப்

பார்த்தார்கள். சில ஐரோப்பியர்கள் கூடக் கூட்டத்தில் காணப்பெற்றனர். காந்திஜி சுமார் ஒரு மணி நேரம் ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவை, முதலில் ராஜாஜியும் பின்னர் ஏ. ரெங்கசாமி ஐயங்காரும் தமிழில் மொழி பெயர்த்துக் கூறினர்கள்.

வழக்கறிஞர் பரிதாபம்

இந்தக் கூட்டம் தொடங்குவதற்கு முன் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான வழக்கறிஞர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். திடீரென்று சுவாமி சீதானந்தயோகி எழுந்து வழக்கறிஞர்கள் காந்திஜி கூறியவாறு வழக்காடும் தொழிலைக் கைவிடவில்லை யாதலால் அவர்களைப் பெரிய மனிதர்கள் அமரும் இடத்தில் அனுமதிக்கக் கூடாதென்றும், அவர்கள் பேசுவதற்கும் இடமளிக்கக் கூடாதென்றும் கேட்டுக் கொண்டார்! காந்திஜியின் ஆணைக்குப் பணியாதவர்கள் எவ்வளவுதான் சமூகத்தில் உயர்ந்தவர்களாய் இருந்தாலும் அவர்களை மக்கள் விரும்பவில்லை என்பதை இது எடுத்துக் காட்டிற்று.

காகிதப்பூ

கஸ்தூரிரங்க ஐயங்கார் தலைமையில், பொதுக்கூட்டம் தொடங்குவதற்கு முன்பு சில வைதிக பிராமணர்கள் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் உள்ள பிள்ளையார் கோவிலிலிருந்து கிளம்பி வேத மந்திரங்களை உச்சரித்துக் கொண்டே கடற்கரையை அடைந்து காந்தியடிகளிடம் கோவில் மரியாதையோடும், வேத முழக்கத்துடனும் பூர்ண கும்பம் கொடுத்தனர். அண்ணல் நீண்ட ஆயுளுடன் வாழ வேண்டுமென்றும் விடுதலைப் போரில் அவர் வெல்ல வேண்டுமென்றும் வழிபாடு செய்துவிட்டு அவர்கள் வந்திருந்தார்கள். காந்திஜியின் மீதும் கஸ்தூரிபாவின் மீதும் புனித நீர் தெளித்து, மந்திராட்சதை போட்டனர். பின்னர், காந்திஜியைப் பிரதட்சினமாக வந்து தங்கள் இடத்திற்குச் சென்று அமர்ந்தனர். கலசத்தில் போடப்பட்டிருந்த (காகித) மாலையை காந்திஜி தனியாகக் கையில் எடுத்து வைத்துக் கொண்டார். தம் சொற்பொழிவில் இந்த வரவேற்பிற்கு நன்றி செலுத்தியதுடன் அவர் நிற்கவில்லை. ''கும்பத்தைச் சுற்றியிருந்த பூக்கள், காகிதப்பூக்கள். அதைச் சுற்றியிருந்த துணியும் வெளிநாட்டுத் துணி. வெளிநாட்டுத் துணியானது அடிமைத்தனத்தின் சின்னம்.

இதை இந்திய மக்கள் உணர வேண்டிய காலம் வந்து விட்டது. நம் நாட்டில் இயற்கையான பூக்கள் ஏராள மாக இருக்க, வைதிகச் சடங்குகளுக்குக் காகித மாலையை உபயோகித்திருப்பதைக் கண்டு நான் மிகவும் வருந்து கிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே அந்தக் காகித மாலையைக் காற்றில் பறக்க விட்டார். மக்கள் கை கொட்டி ஆர்ப்பரித்தனர். *

1920-இல் எந்த இடத்தில் தமது பேச்சை முடித் தாரோ அந்த இடத்திலிருந்தே இம்முறை தொடங்கினர். ''நம்முடைய ஒத்துழையாமையின் முக்கிய பெரும் அங்கமே அஹிம்சை தான். ஆனல் இந்த அஹிம்சை பல சோதனைக் கட்டங்களைத் தாண்டியாக வேண்டும். எவ்வளவுதான் ஆத் திர மூட்டத்தக்க செயல் நடைபெற்றலும் ஆத்திர மடை யாது மிகுந்த கட்டுப்பாட்டுடன் நடந்துகொள்ள வேண்டும். வன்முறை அபாயம் துளிக்கூட இல்லாத அளவிற்கு நமது பேச்சையும் செயலையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டி யது மிகமிக இன்றியமையாததாகும்,'' என்று அஹிம்சையை வலியுறுத்திவிட்டு, பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலை எடுத்தார். இச்சிக்கலைக் குறித்தே அவருடைய சொற்பொழி வின் பெரும் பகுதி - கருப்பகுதி - அன்று அமைந்திருந்தது. ஒரு வேறுபாடு என்னவென்றல், அவர் சட்டக்கல்லூரி மாண வர்களிடையே பேசியபோது பிராமணர்களுக்கு அறிவுரை கூறினர். இன்றோ, பிராமணரல்லாதாருக்கு ஆலோசனை சொன்னர். இந்தச் சமயத்தில் பிராமணர், பிராமணரல்லா தார் என்ற பிரித்தாளுங் கொள்கையை மாநிலஆட்சி கடைப் பிடிக்க முயன்றதும் பிராமணரல்லாதாரில் சிலர் ஆட்சி யாளர் கையில் சிக்கியதும் காந்திஜியின் இவ்வறிவுரைக்கு முக்கிய காரணமாகும். பிராமணர் - பிராமணர் அல்லா தார் சிக்கலை அவர் குறிப்பிட்டதே ஒரு தனி அழகு. ''இந்து முஸ்லிம் சண்டை என்ற ஆதரவு இப்போது இந்த அரசிற்குக் கிடைக்கவில்லை. ஆகையால் பிராமணர் களுக்கும் பிராமணர்களல்லாதாருக்கும் இடையே உள்ள பிளவைப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறது'' என்று அவர் சொன்னபோது கூட்டத்தில் ஒரே சிரிப்பொலி யும் கையொலியும் எழுந்தன. அவர் மேலும் ''இந்துக்

* ''காந்திஜி காட்டிய வழி'' என்ற நூலில் ஆக்கூர் அனந்தாச்சாரியார் எழுதியது

களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருந்த பிணக்கை நாம் எவ்வாறு தீர்த்து வைத்தோமோ அதேபோன்று பிராமணர் களுக்கும் பிராமணரல்லாதாருக்குமிடையே தோன்றியுள்ள பிணக்கையும் தீர்த்து வைக்க வேண்டும்'' என்று சொல்லி, முன்பு வந்திருந்த போது சட்டக்கல்லூரி மாணவர்களிடம் தாம் சொன்னதை நினைவு படுத்தினர். ''பிராமணர்களின் பெரிய மரபுதான் இந்து சமயத்தின் இன்றைய பெருமைக் குக் காரணமென்பதில் எனக்கு எள்ளளவும் ஐயமில்லை. பிராமணீயத்தைக் குறை கூறுவதன் மூலம் தங்களுடைய நிலையை உயர்த்திக் கொள்ளலாமென்று பிராமணரல்லா தார் எண்ணினார்களானால் அது அடிப்படையிலேயே தவறு கும். இந்தக் கலி காலத்தில் கூட பிராமணர்கள் தாம் தன்னல மறுப்பிலும் தியாகத்திலும் முன்னிற்கிறார்கள். இந்தியா முழுவதிலுமே, ஒவ்வொரு வகுப்பினரின் உரிமை களையும் சலுகைகளையும் அந்தந்த வகுப்பினருக்கு எடுத் துணர்த்தி வருவோரும் பிராமணர்களே...''

இவ்வாறு கூறிக்கொண்டு சென்ற மகாத்மா, சென்னை யில் உள்ள பிராமணரல்லாதார், பிராமணர்கள் மீது சில குறைபாடுகளைக் கூறுகின்றனர் என்பதையும் அதற்கு ஓரளவு காரணமிருக்கிறது என்பதை யும் தாம் அறிவாரென ஒப்புக்கொண்டார்.

அறிவுரை

ஆனால் அதே சமயம் அவர் பிராமணரல்லா தாருக்கு ஓர் அறிவுரை கூறினார். ''பிராமணர்களுடன் சண்டை போடுவதனாலோ அவர்களைப் பற்றிப் பொறு மைப்படுவதனாலோ அவர்கள் மீது அவதூறுகளைக் கூறுவ தனாலோ பிராமணரல்லாதார் உயர்ந்துவிட முடியாது என்பதை நீங்கள் உணர வேண்டும். இதனாலெல்லாம் தாழ்ச்சி அடைவது இந்து சமயம் தான். பிராமணீயத் தின் சாம்பலில் பிராமணரல்லாதார் வளர முயற்சி செய்யாதிருப்பார்களாக. பிராமணரல்லாதார் உண்மையி லேயே இதயப் பூர்வமாக இந்த இயக்கத்தில் பங்கு கொள்ள முடியாவிட்டால், அரசாங்கத்தின் சதியில் சேர்ந்து கொண்டு இந்த இயக்கத்தில் குறுக்கீடு செய்யாமலாவது இருப்பார்களாக!''

இதற்குப் பின்பு, இயல்பாகவே, தீண்டாமை ஒழிப் பிற்குப் பேச்சுத் திரும்பியது. ''பிராமணர்கள் மீது பிராமணரல்லாதார் குறை கூறுகிறார்களே அது, இந்து

சமயத்தின் மீது ஆதிதிராவிடர்களும் பஞ்சமர்களும் கூறும் குறைகளுடன் ஒப்பிட்டால் ஒன்றுமே இல்லை. இந்து சமயமானது இவர்களை ஒருவகைத் தொழுதீண்டாமை நோயர்களாக்கி வைத்திருக்கிறது. நம்மைப் ஒழிப்பு பிரிட்டிஷ் பேரரசு தொழுநோயர்களாக்கி விட்டது இதன் விளைவுதான். பஞ்சமர்கள் வயிற்றுள் ஊர்ந்து போகுமாறு செய்த குற்றம் பிராமணர்களைப் போலவே பிராமணர்களல்லாதாரையும் சாரும். 'நம்முடைய சகோதரர்களை நாம் தீண்டாதாராகக் கருதினோம், அந்தப் பாவத்தின் காரணமாகத்தான் நாம் அடிமைகளாகியிருக்கிறோம்' என்பது எனது தீர்மானமான முடிவு. நான் ஒரு சனாதனி இந்து என்று பெருமையோடு கூறிக் கொள்கிறேன்; என்னால் முடிந்த அளவு சாத்திரங்களைக் கற்றிருக்கிறேன் எனவும் உரிமை பாராட்டுகிறேன்; இந்து சமயத்தின் உட்பொருளைப் புரிந்து இருக்கிறேன்; வேதங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றைப் புரிந்து கொண்டு மனமார்ந்து விரும்பி முன்வந்து கடந்த முப்பது ஆண்டுகளாக சனாதனி இந்துவாக வாழ்ந்திருக்கிறேன்; ஆகவே வேறு எந்த இந்துவும் நான் கூறுவதற்கு முரணாக என்ன கூறியிருப்பினும், என்னுடைய அனுபவங்களின் காரணமாக நான் கூறுவதை நீங்கள் ஏற்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். எந்த மனிதரையும் தீண்டத்தகாதவராகக் கருத நமது சாத்திரங்களில் எதுவுமே கூறப்பெறவில்லை. இந்துவாக இருப்பதில் நான் மனநிறைவடைகிறேன்; ஒரு இந்துவாகச் சாகவும் நான் மனநிறைவடைவேன். எந்தச் சமயத்திலும் என்னுடைய சமயத்திற்காகச் சாக நான் தயாராய் இருக்கிறேன். ஆனால் ஒரு மனிதனைத் தீண்டுவது பாவம் என்று இந்து சமயம் கூறுகிறது என்ற நம்பிக்கை மட்டும் எனக்கு ஏற்பட்டால், அந்தக் கணமே நான் என்னை இந்து எனக் கருதமாட்டேன். ஆகையால், தீண்டாமை என்னும் சாபக்கேட்டை எதிர்த்துப் போராடி அதை அகற்றுமாறு, இந்த மாநிலத்திலுள்ள பிராமணர்களையும் பிராமணர்களல்லாதாரையும் நான் அழைக்கிறேன். ஆனால் அதே சமயம் தீண்டாமை ஒழிப்பு வேறு, கலப்பு மணம், கூடி உணவு உண்பது என்பவை வேறு. இவைகளில் ஒன்றுடன் ஒன்றைக் கலக்க வேண்டாம். பகவத்கீதையில் கூறியிருப்பதைப் போன்று பிராமணனுக்கும் சண்டாளனுக்கும் நமது உள்ளத்தில் ஒரே இடம் அளிக்க முடியுமானால், அந்த நாளே பிராமணரல்லாதார்

சிக்கல் மறைந்துவிடும்,'' என்று அண்ணல் கூறினார். கூட்டம் முடிந்து, தங்கியிருந்த இடத்திற்குத் திருப்பிய பின், சத்தியமூர்த்தியுடன் காந்திஜி நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்துவிட்டு, இரவு மெயிலில் கஸ்தூரிபாவுடன் பம்பாய்க்குப் பயணமானார்.

மித்திரன் வரவேற்பு

காந்திஜியின் சென்பொழிவை ''சுதேசமித்திரன்'' நூற்றுக்கு நூறு வரவேற்றுத் தலையங்கம் தீட்டியது. ''நேற்று மாலை கடற்கரையில் கூடியிருந்த ஜனத்திரளை பிராமணரல்லாதார்கள் தாங்கள் என்று சொல்லிக் கொள்ளும் கனவான்கள் கண்டிருந்தால், இனி அப்படிச் சொல்லிக் கொள்ளத் துணியமாட்டார்கள். கடற்கரையில் நேற்றுக் கூடியிருந்தவர்களில் பெரும்பாலோர் பிராமணரல்லாதாரே. மகாத்மாவின் பிரசங்கத்தில் ஈடுபட்டு, சகல ஜனங்களும் நிசப்தமாக வீற்றிருந்ததைக் கவனித்தால் மகாத்மாவிடத்திலும் ஒத்துழையாமை இடத்திலும் அவர்களுக்கு எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பது விளங்கும். பிராமணரல்லாதார் கூட்டத்தில் அதிகமாயிருப்பதை உத்தேசித்துத்தான் இருவகுப்பினருக்கும் நேற்று மகாத்மா ஸத்புத்தி கூறினார்,'' என்று ''சுதேசமித்திரன்'' கூறியது.

சிலர் வருத்தம்

இச் சொற்பொழிவு பிராமணரல்லாதாரில் சிலருக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியது. காந்திஜிக்கு அவர்கள் கடிதம் எழுதினர்கள். இவர்களில் சென்னையைச் சேர்ந்த சி. கந்தசாமியின் கடிதத்தை மட்டும் ''யங் இந்தியா'' இதழில் (27-4-21) வெளியிட்டு அதற்கு காந்திஜி மறுமொழி அளித்திருந்தார். காந்திஜியின் சொற்பொழிவு பிராமணரல்லாத தேசிய வாதிகளிடையே கடும் மன வருத்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இதைப் பற்றி காந்திஜி பேசாது இருந்திருந்தால் மிகவும் நன்றுயிருந்திருக்கும். அவருடைய பேச்சிலிருந்து, திராவிட நாகரிகம், சமயம், பண்பாடு ஆகியவைகளைப் பற்றியும் பிராமணரல்லாதார் இயக்கத்தின் உட்பொருளையும் நோக்கங்களையும் பற்றியும் அவர் கொஞ்சமும் அறிய மாட்டார் என்பது புலனாகிறது. தென்னிந்தியாவை இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து தனித்துப் பிரித்துக்காட்டும் திராவிட நாகரிகத்தின் தனி

அம்சங்களை இவர் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. இந்தியாவின் சமயத்திற்கும் நாகரிகத்திற்கும் பிராமணர்கள் ஆற்றியுள்ள தொண்டைக் குறித்து அவர் புகழ்ந்துரைத்த போது (இங்கு அவர் வட இந்தியாவையே குறிப்பிடுகிறார் போலும்) பிராமணரல்லாதாருக்கு அவர் களங்கம் கற்பிக்கிறார். தென்னிந்தியாவின் இலக்கியம், சமயம், தத்துவம் ஆகியவற்றை எடுத்துக்கொண்டால், அதன் பெருமைக்கு பிராமணர்களைப் போலவே, சொல்லப்போனால் அதிகமாகவே, பிராமணரல்லாதார் உதவியிருக்கிறார்கள். பிராமணர்களுக்கும் பிராமணர் அல்லாதாருக்கும் இடையே தென்னிந்தியாவில் உள்ள பிளவை நீக்க உண்மையிலேயே காந்திஜி விரும்பினால், முற்றிலும் திறந்த மனத்துடன், யாரைப்பற்றியும் முதலில் எவ்விதக் கருத்துங் கொள்ளாது, இச்சிக்கலை அக்கறையோடு அணுகட்டும். அப்போதுதான் இதை நன்கு ஆராய்ந்து, இச் சிக்கலுக்கான ஒரு தீர்வை அவர் காண முடியும்'' என்று இக் கடிதம் கூறியது. காந்திஜி இதற்குப் பதில் எழுதினார். ''இதைப்போன்று மற்றும் பல கடிதங்கள் எனக்கு வந்திருக்கின்றன. அக் கடிதங்களை எழுதியவர்கள் என்னைத் தவறுகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவு. என்னுடைய பேச்சைப் பத்திரிக்கைகளில் நான் படித்துப் பார்க்க வில்லை. ஆகையால் அதில் தவறான கருத்துக் கொள்ள இடமிருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. திராவிட நாகரிகத்தின் சிறப்பை யாரும் மறுக்கவில்லை. ஆனால் அதே சமயம் திராவிட நாகரிகத்தின் சாதனைகளுக்காக இந்து சமயத்திற்கோ மனித சமுதாயத்திற்கோ பிராமணர்கள் ஆற்றிய தொண்டைக் குறைத்து மதிப்பிட வேண்டியதில்லை. அதனால் இது பாதிக்காது. திராவிடத்திற்கு என்றும் ஆர்ய வடக்கு என்றும் பிரித்துப் பேச வேண்டாமென மேற்கண்ட கடிதங்களை எழுதியவர்களை எச்சரிக்கிறேன். இன்றைய இந்தியா மேற்கண்ட இரண்டு மட்டுமல்ல, மற்றும் பல பண்பாடுகளின் ஒரு தொகுப்பேயாகும்.'' தெற்கு வடக்கு என்று பிரித்துப்பேசுவது அபாயமானது என்பதை 1921-இலேயே அண்ணல் எச்சரித்தது அவருடைய தீர்க்க தரிசனத்தை நன்கு மெய்ப்பிக்கிறது. பிற்காலத்தில் இப்பிரிவினை உணர்ச்சி எவ்வளவு பெரிதாக வளர்ந்தது என்பது நாமெல்லோரும் அறிந்ததுதான்.

இந்தியாவிற்கென ஒரு தேசியக் கொடி வேண்டும் என்பதை 1921 வாக்கிலேயே அண்ணல் உணர்ந்தார்.

தேசியக் கொடி

அந்த ஆண்டு ஏப்ரலில், மசூலிப்பட்டினம் தேசியக் கல்லூரியைச் சேர்ந்த பி. வெங்கையா கூறிய யோசனையை அடிப்படையாக வைத்து, தேசியக் கொடியை உருவாக்கினர். இந்தச் சமயத்தில் ஐரோப்பாவில் இருந்த தாகூர், ஒத்துழையாமை இயக்கத்தை ஆன்மிக அடிப்படையில் கண்டித்திருந்தார். அவருடைய கருத்தை அண்ணல் ஏற்கவில்லை. ஒத்துழையாமையை ஏற்காத ஒத்துழைப்பாளர்கள் தமது நிர்மாணத் திட்டத்தையாவது ஏற்கலாம் என்று அவர் சொன்னார். இப்போராட்டம் புதுமையானதாக இருந்ததால், அதைப் பற்றி அவர் ஒவ்வொரு கூட்டத்திலும் விளக்கங் கூற வேண்டியவராய் இருந்தார். அங்கிலேயர்களையும் அவர் புறக்கணிக்கவில்லை. இந்தியா நியாயம்தான் கேட்கிறது என்பதை அவர்களுக்கு விளக்கிக் கட்டுரைகள் எழுதினர்.

இந்திய அரசியலில் ஏற்பட்ட நெருக்கடி நிலையை வைசிராய் ரீடிங் பிரபு உணர்ந்தார். காந்திஜியைப் பேச்சு நடத்துவதற்காக அழைத்தார். இருவரும் ஆறுமுறை வைசிராயுடன் சந்தித்துப் பேசினர். அலி சகோதரர்களின் பேச்சு பேச்சானது வன்முறையைத் தூண்டிவிடுவதாக இருக்கிறது என்பதை காந்திஜியின் கவனத்திற்கு வைசிராய் கொண்டு வந்தார். அவர்களுடைய பேச்சில் தவறுகள் பொருள் கொள்வதற்கான இடங்கள் இருக்கின்றன என்பதை அண்ணலும் ஒப்புக் கொண்டார். இவ்வித கருத்துக்கு இடமளித்ததற்காக வருத்தந் தெரிவிப்பதாய் அவர்களிடமிருந்து ஒரு கடிதமும் வாங்கிக் கொடுத்தார்.

ஜூலை இறுதியில் பம்பாயில் கூடிய அனைத்து இந்திய காங்கிரஸ் குழு, ஆகஸ்ட் முதல் வெளிநாட்டுத் துணிமணி

களை அணிவதைக் காங்கிரஸ்காரர் கைவிடவேண்டுமென்றும் வெளிநாட்டுத் துணிகளைச் சொக்கப்பனை கொளுத்த வேண்டுமென்றும் வேல்ஸ் இளவரசர் வருகையைப் புறக்கணிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டது. கள்ளுக்கடை மறியலை அங்கீகரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. (இதற்கு முன்பே கராச்சியில் கிலாபாத் மாநாடு கூடி, மிகவும் புரட்சிகரமான முறையில், பிரிட்டிஷ் இராணுவத்தில் முஸ்லிம்கள் பணியாற்றுவதோ மற்றவர்களை இராணுவத்தில் சேருமாறு தூண்டுவதோ சமயத்திற்கு விரோதமான செயல் என்றும் கிறிஸ்துமசுக்குள் கிலாபத் குறித்து எந்தவிதமான உடன்பாடும் ஏற்படாவிட்டால் ஆமதாபாத்தில் கூட இருக்கும் காங்கிரசில் சுதந்திர இந்தியக் குடியரசு அறிவிக்கப்படும் என்றும் முடிவு செய்திருந்தது.) ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் ஆகிய மூன்று மாதங்களிலும் வெளிநாட்டுத் துணிகளை மக்கள் விலக்குமாறு செய்வதில் காந்திஜி ஒரு மனதான கவனம் செலுத்தினர். ஜூலை 31-ஆம் தேதியன்று சுமார் ஒன்றரை இலட்சம் துணி மணிகளைக் குவித்து காந்திஜியே சொக்கப்பனை கொளுத்தினர்; இந்தியா முழுவதிலுமே வெளிநாட்டுத் துணிகளின் தீப்பிழம்பு எழுந்தது. இதன் பின்னர், காந்தி நூல் ஆங்கிலத் தொகுப்பு ஆசிரியர் அழகாகக் கூறியுள்ளது போன்று, மக்களிடையே தாம் ஏற்றி வைக்க விரும்பிய மௌனப் புரட்சிக்கான ஆயத்தங்களைச் செய்ய காந்திஜி நாட்டில் வலம் வந்து கொண்டிருந்தார். மேற்கே கராச்சியும் கிழக்கே திப்ருகாரும் வடக்கே இராவல் பிண்டியும் தெற்கே தூத்துக்குடியும்தான் அவருடைய எல்லைகளாக இருந்தன.

கிலாபத் தீர்மானம்

பிரிட்டிஷ் ஆட்சி முடிந்துவிட்டதாகவும் தாங்கள் விடுதலை பெற்றுவிட்டதாகவும் மலபார் மாப்ளாக்கள் எண்ணி, அங்கு கிலாபத் ஆட்சியை ஏற்படுத்தி விட்டதாக, ஆகஸ்ட் மாதம் அறிவித்தார்கள். மாப்ளாக்களைச் சாந்தப்படுத்துவதற்காக செப்டம்பர் மாதம் காந்திஜி, மௌலானா முகமதலியுடன் வந்து கொண்டிருந்தார். அப்போது ஆந்திராவில் வால்டையர் இரயில் நிலையத்தில், முகமதலியை அரசினர் கைது செய்துவிட்டார்கள். கராச்சியில் கிலாபத் மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானத்தின் விளைவாகவே அவர் கைது செய்யப் பெற்றார். அவரை

வந்த வழியில்

மட்டுமல்லாது, பின்னல் சௌகத் அலியையும் மற்றும் சில தலைவர்களையும் கூடக் கைது செய்து விட்டார்கள்.

மற்றுமொரு காரணம்

வால்டையரில் முகமதலியைக் கைது செய்ததற்கு, மற்றுமொரு முக்கியமான காரணமும் இருந்தது. ஆந்திராவின் கிழக்குக் கடற்கரை மாநிலங்களில் அப்போது குழப்பமான நிலைமை இருந்ததால் (ஆந்திராவும் தமிழகமும் உள்ளிட்ட) சென்னை அரசாங்கமானது, பெஜவாடா வரை முகமதலி வருவதை விரும்பவில்லை. அதனால்தான் பம்பாய்ப் போலீசு அதிகாரி வாரண்டுடன் அவரைக் கைது செய்ய வந்துகொண்டிருந்தும், அவர் வந்து கைது செய்யும் வரை காத்திராமல், விசாகப்பட்டினம் மாவட்ட மாஜிஸ்திரேட்டிற்கு உத்தரவுஅனுப்பி வால்டையரில் அவரைக் கைதுசெய்யுமாறு ஆணையிட்டது. ஆனாலும் காந்திஜி தமது பயணத்திட்டத்தில் எவ்வித மாறுதலும் செய்யாமல் செப்டம்பர் 15-ஆம் தேதியன்று சென்னை வந்து சேர்ந்தார்.

இயக்கத்தின் வேகம்

ஏப்ரல் மாதத்தில் காந்திஜியும் அலி சகோதரர்களும் வந்து போனதன் பலனாக, தமிழகத்தில் ஒத்துழையாமை இயக்கம் அதிக வேகமடைந்தது. ஊழியர்கள் சுழன்று சுழன்று பிரச்சாரம் செய்து வந்தார்கள். அரசாங்க உதவி பெறும் பள்ளிகளுக்குப் பிள்ளைகளை அனுப்பாது நிறுத்தி, தேசியப்பள்ளிகள் நிறுவி, அவைகளுக்கு அனுப்பவேண்டும் என்று அண்ணல் கூறிய அறிவுரைதான் அவருடைய திட்டங்களிலேயே கடுமையானதாகக் கருதப் பெற்றது. ஆனால் அந்தக் கசப்பு மருந்தை உண்ணவும் தமிழகம் தயங்கவில்லை. சேலம், கல்லிடைக்குறிச்சி போன்ற சில இடங்களில் தேசியப் பள்ளிகள் நிறுவப்பெற்று நடந்து கொண்டிருந்தன.

•

கள்ளுக்கடை மறியல்

கள்ளுக்கடை மறியல் எந்த அளவிற்குத் தீந்தமிழ் நாட்டில் வெற்றி அடைந்திருந்தது என்பது ஆகஸ்ட் கடைசி வாக்கில் இந்திய அரசிற்கு மாநில அரசு எழுதிய கீழ்க்கண்ட குறிப்பிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. "மாநில முழுவதிலும் கள்ளுக்கடைகளில் விற்பனை குறைந்திருக்கிறது. பல மாவட்டங்களில் கடைகள் (ஏலத்தில்)

விற்பனையாயின என்பது உண்மையே. ஆனாலும் அதனால் கிடைத்த பண வருவாய் மிகவும் குறைவு. மற்ற மாவட்டங்களிலோ ஏலத்தில் கேட்பாரே இல்லை. கடைகளை விற்கவே முடியவில்லை. இது தங்கள் இயக்கத்தின் வெற்றி என்று ஒத்துழையாமை இயக்கவாதிகள் உரிமை பாராட்டுகின்றனர். ஒத்துழையாமை இயக்கப் பிரச்சாரமும் (சில இடங்களில்) கள்ளுக்கடை மறியலும் இதற்குப் பெரிதும் துணைபுரிந்திருக்கின்றன என்பதில் ஐயமில்லை. அதே சமயம் மற்றும் சில காரணங்களும் இருக்கின்றன. கள்ளுக்கடை மறியலுடன் ஒப்பிட்டால் வெளிநாட்டுத் துணி விலக்கின் முக்கியத்துவம் ஒன்றுமேயில்லை.''

வந்த வரலாறு

காந்திஜி வருவதற்கு முன் ஜூலை மாதத்தில் ராஜாஜியும் எஸ். சீனிவாச ஐயங்காரும் காந்திஜிக்கு ஒரு தந்தி கொடுத்திருந்தார்கள். விரைவில் அண்ணல் தமிழகத்திற்கு வந்து இரண்டு வாரங்கள் சுற்றுப் பயணம் செய்ய வேண்டுமென அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். ஆனால் அப்போது அண்ணலால் வர இயலவில்லை. அனைத்திந்திய காங்கிரஸ் குழு கூடுவது சம்பந்தமாக அவருக்கு நிறைய வேலை இருந்தது. ஆகையால் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னால் தமிழகத்திற்கு வந்து இரண்டு வாரங்கள் தங்க இயலாதென்று அவர் பதில் தந்தி கொடுத்து விட்டார். அதன் பின் செப்டம்பர் மாதம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் தமிழகச் சுற்றுப்பயணத்தை நினைவுபடுத்தவே, தமிழகத்தில் ஒரு சிறு சுற்றுப்பயணத்திற்கு ஏற்பாடு செய்யுமாறும் அச் சுற்றுப்பயணத்தில் ஒவ்வொரு நாளும் மூன்று மணி நேர மௌனத்திற்கு இடம் இருக்க வேண்டுமென்றும் அண்ணல் பதில் அனுப்பியிருந்தார். அதற்கு ஏற்பச் சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப் பெற்றது.

பயணத்திற்கு ஏல்லை

மேலும் இம்முறை வேறு பகுதிகளில் தமக்கு நிறைய அலுவல்கள் இருந்ததால் இங்கு அதிக நாள் தாமதிக்க முடியாது என்று அண்ணல் கூறிவிட்டார். ஆகையால் அவருடைய வருகையை அறிவித்த டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், தமிழகத்தில் கடலூர், பரங்கிப்பேட்டை, கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, தேவகோட்டை, மதுரை, திருநெல்வேலி, திண்டுக்கல், ஈரோடு, கோயம்புத்தூர், கள்ளிக்

கோட்டை, சேலம் ஆகிய இடங்களுக்கு மட்டும் அண்ணல் வருகை புரிவாரென்றும் அவரை அழைத்துள்ள பிற இடங் களுக்கு அவரை அழைத்துவர முடியாது என்றும் அறிவித் தார். தமிழக மக்கள், தர்ங்கள் செயல் வீரர்கள் என்பதை மகாத்மாவின் முன்னர் மெய்ப்பிக்க வேண்டும் என்றும் நினைவுறுத்தினர். ''மகாத்மா வரும்பொழுது கூச்சலும் ஊர்வலங்களும் கூடாது. சுதேசி வேலைதான் நாம் தற்சமயம் செய்ய வேண்டிய முக்கியமான வேலை. மது விலக்கிலும் சுதேசியத்திலும் அபிவிருத்தி காண்பதில் ஒவ்வொரு மாவட்ட வாசியும் போட்டி போட்டு அதிகச் சாதனை காண்பிக்க முயல வேண்டும்,'' என்று அவர் கேட் டுக் கொண்டிருந்தார்.

பாரதி மறைவு

இந்த வேண்டுகோள் 1921 - செப்டம்பர் 13-ஆம் தேதி ''சுதேசமித்திரன்'' இதழிலும் மற்ற செய்தித் தாள் களிலும் வெளிவந்தது. இந்த இதழில் தான் ''தென்னக கவிசிரேஷ்டர் ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் மரணம்'' என்ற செய்தியும் — கடைசிச் செய்தியாக — (சுதேசமித்திரனில்) வெளிவந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. அதாவது சுப்பிரமணிய பாரதியார் காலமான ஒரு சில நாட்களில் தமிழகத்திற்கு அண்ணல் வந்திருக்கிறார். ஆனாலும் அவரைப் பற்றி அண்ணல் தமிழகச் சுற்றுப்பயணத்தில் எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. காரணம் எல்லோரும் அறிந்ததே. பாரதியாரின் பெருமையை அப்போதைய தமிழகம் நன்கு உணரவில்லை.

எதிர்ப் பிரச்சாரம்

ஒவ்வொரு ஊரிலும் திலகர் சுயராஜ்ய நிதிக்கும் கிலாபத் நிதிக்கும் காந்திஜியிடம் மக்கள் வாரி வழங்கி னர்கள். சுற்றுப் பயணத்தில் மகாத்மா, மௌலானா சுபானி ஆகியோருடன் யாகூப் ஹாசன், ராஜாஜி, டி. எஸ். எஸ். ராஜன், தமிழ் நாடு காங்கிரஸ் குழுச் செயலாளரான கே. ராஜகோபாலன் ஆகியோர் சென்றார்கள். இந்தச் சுற்றுப்பயணத்திலிருந்த ஒரு விசித்திர நிலைமை என்ன வென்றால் நகராட்சி போன்ற பொது நிறுவனங்களில் பதவி வகித்தவர்கள் அண்ணலின் வரவேற்பில் பங்குகொள்ள அஞ்சி னர். பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்து அவர் போர்க்கொடி உயர்த்தியது இதற்கு ஒரு காரணமாயிருக்கலாம். டாக்டர்

ராஜன் காந்தியுடன் சென்றதால் அண்ணலின் சொற் பொழிவைப் பெரும்பாலான கூட்டங்களில் அவரே மொழி பெயர்த்தார். சென்னை மாநிலத்தில் அப்போது அமைச்சர் களாயிருந்தவர்களும் ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு காந்திஜியின் இந்தச் சுற்றுப்பயணம் நடைபெற்ற போது தமிழகத்தில் வலம் வந்து கொண்டிருந்தார்கள். திருச்சிராப்பள்ளியில் பிராமணரல்லாதார் மாநாடு நடை பெற்றது; அமைச்சர்கள் பலர் பேசினர். அரசாங்கத் திற்கு விரோதமாக காந்திஜி மேற்கொண்டிருந்த இயக் கத்தை அங்கு அவர்கள் கண்டித்தார்கள். ஆனால் காந்தி ஜியின் பேச்சுக்கு மத்தியில் அவர்களுடைய பேச்செல்லாம் எடுபடவில்லை. சூரியன் தோன்றியவுடன் நட்சத்திரங்கள் இருக்குமிடம் தெரியாமற் போவது போல அந்தச் சொற் பொழிவுகள் எங்கே நடந்தன, யார் என்ன பேசினார்கள் என்பது கூட மக்களுக்கு மறந்துபோய்விட்டது. மாப்ளா கலவரத்தால் தமிழக இந்து மக்களிடையே ஏற்பட்டிருந்த ஆத்திர உணர்ச்சியைத் தணிக்க காந்திஜியின் சுற்றுப்பயண மும் அவருடன் மௌலானா சுபானி வருகை புரிந்ததும் மிகவும் உதவிற்று. பொதுவாக எல்லாக் கூட்டங்களி லுமே மௌலானா சுபானி, மகாத்மா காந்தியின் அடிச் சுவட்டை மக்கள் பின்பற்ற வேண்டும் என்றும் முழுக்க முழுக்க சுதேசியை ஏற்க வேண்டுமென்றும் வெளி நாட்டுத் துணிகளை விலக்கி விட வேண்டுமென்றும் மாப்ளாக்கள் சில இந்துக்களைக் கட்டாயமாக மதம் மாற்றியது இஸ்லாம் சமயத்திற்கே விரோதமானது என்றும் நாட்டிற்காக எந்தத் தியாகத்தையும் ஏற்க மக்கள் தயாராய் இருக்கவேண்டு மென்றும் கூறினார். தமிழகம் பல சிக்கல்களின் இருப்பிட மாக காந்திஜிக்குக் காட்சி தந்தது.

நெருக்கடி நிலை

காந்திஜி வருவதற்கு முதல் நாள் ''இந்து'' தீட்டிய தலையங்கத்தில் கூறியபடி, இம்முறை ஒரு நெருக்கடியான சமயத்தில் காந்திஜி வந்தார். காங்கிரசின் ஒத்துழையாமைத் திட்டத்தை மக்கள் மத்தி யில் பிரச்சாரம் செய்வதற்கு அவர் வரவேண் டியதாக இருந்தது. தேசியப் பத்திரிக்கைகள் கூட ஒத்துழையாமைத் திட்டத்தில் சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்றும் இல்லையேல் அவைகளை நடைமுறை யில் நிறைவேற்ற இயலாதென்றும் எழுதிக் கொண்டிருந் தன. வெளிநாட்டுத் துணிமணிகளை, முற்றிலும் மக்கள்

விலக்குமாறு செய்ய முடியாதென்றும் அவ்வாறு செய்வது சிறந்த பொருளாதாரமாகாதென்றும் கருதப்பெற்றது. மேலும் தொழிலாளர் சிக்கலும் அப்போது சென்னையில் மிகவுங் கடுமையாக இருந்தது. பிராமணர்-பிராமணரல்லாதார் சிக்கல், தீண்டாதார் (பஞ்சமர் என்று அக்காலத்தில் இவர்கள் அழைக்கப் பெற்றனர்) சிக்கல், ஆகியவை முக்கியமானவை. (இவைகளில் ஒரு திட்டத்திற்கு அமோக ஆதரவு இருந்தது என்றால், அது மதுவிலக்குத் திட்டம்தான்.) ஆளுநர் அடக்கு முறைக்கும் அளவில்லை.

தீண்டாமை

ஒத்துழையாமையை அவர் நிறுத்தி வைத்திருந்ததால் வேறு வழிகளில் எவ்வாறு அரசாங்கத்தின் அடக்கு முறைகளுக்கு ஈடுகொடுப்பது என்பதை இச்சுற்றுப் பயணத்தின்போது, வலியுறுத்திக் கொண்டு வந்தார். வெளிநாட்டுத் துணி விலக்கு, கதர் அணிதல், தீண்டாமை ஒழிப்பு, மது விலக்கு ஆகியவைதாம் அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவர் கூறிவந்த திட்டங்கள். ஆனாலும் இம்முறை அவர் அதிகம் வலியுறுத்தியது தீண்டாமை ஒழிப்புத்தான். ''ஒருபுறம் பிராமணர் மற்றொரு புறம் பிராமணரல்லாதார் ஆகிய இரு சாராரினாலும் ஒதுக்கப்பெற்ற தீண்டாதார் மேற்கண்ட இருவகுப்பினராலும் தூள் தூளாக அரைக்கப் பட்டவர் போன்று இருந்தார்கள். ''தமிழகத்தில் வானளாவிய ஆலயங்கள் இருக்கின்றன ; பக்தி உணர்ச்சி ததும்பி வழிகிறது. பெரிய நாமமிட்டு, நீண்ட முடியுடன், சட்டையில்லாமல் திரியும் மக்கள் மகரிஷிகளைப் போன்று தோன்றுகிறார்கள். ஆனாலும் அவர்களுடைய சமயம் இந்த வெளித் தோற்றத்துடன் சரி,'' என்று அவர் எழுதியிருக்கிறார். இராமானுஜர் பிறந்த ஒரு பகுதியில் இத்தகைய கொடிய மனப்பான்மை பரவியிருந்தது அவருக்குப் பெரும் வியப்பை அளித்தது. ஆனாலும் அவர் நம்பிக்கை இழக்கவில்லை. எப்படியாவது தமிழர்களுடைய தீண்டாமை உணர்ச்சியை அகற்றிவிடலாம் என்று உறுதியாக நம்பினார். உலகம் முழுவதும் நம்மைத் தீண்டத்தகாத தொழுநோயர்கள் போல நடத்துகிறார்களே அதற்கு நம்மில் ஐந்தில் ஒரு பகுதியினரை நாம் தீண்டத்தகாதவர்களாக நடத்துவது தான் காரணம் என்று அவர் பலமுறை எச்சரித்ததுண்டு.

காந்திஜி வருகையால் தமிழகத்தில் வழக்கமாக ஏற்படும் பலன் என்னவென்பதை மிகவும் ருசிகரமாக ஒரு குறிப்பில் சென்னை மாநில அரசு குறிப்பிட்டிருந்தது. ''பொதுவாகத் திரு காந்தி அஹிம்சையை வலியுறுத்துகிறார். ஆனால் அவர் இம்மாநிலத்தை விட்டுச் சென்ற பின்போ, அவருடைய ஆலோசனையை மக்கள் அநேகமாக மறந்து விடுவார்கள். அதேசமயம், அவர் இம்மாநிலத்தில் தங்கியிருப்பதோ, ஒத்துழையாமை இயக்கம் மடிந்து கொண்டிருக்கும் இடங்களில் கூட உயிர் பெற்றுவிடுமாறு செய்யும்,'' என்று அரசு கருதியிருக்கிறது. காந்திஜியின் கூட்டங்களுக்குப் பெருந்திரளாக மக்கள் வந்தனர் என்பதை அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது. ஆனாலும் அவருடைய கொள்கையின் ஆதரவாளர்கள், அதை ஏற்றுக் கொள்பவர்கள் ஆகியோரைக் காட்டிலும், வேடிக்கை பார்த்தவர்களே அதிகம் என்று கருதியிருக்கிறது. செல்வந்தர்களான நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் வாழும் பகுதியில் மக்கள் மிக அதிகமாகக் கூடியதற்கு அங்கிருந்து வெளியான பத்திரிக்கை ஒன்றுதான் காரணம் என்றும் காந்திஜிக்கு அற்புதமான சக்திகள் இருப்பதாக அது பிரச்சாரம் செய்து வந்ததாகவும் அரசு கூறியுள்ளது. ராய. சொக்கலிங்கம் ஆசிரியராக இருந்த'' ஊழியன்'' பத்திரிக்கையைத் தான் இங்கு அரசு குறிப்பிடுகிறது போலும்.

அரசின் கருத்து

15-9-21

கஸ்தூரி ரங்க ஐயங்கார், ஏ. ரெங்கசாமி ஐயங்கார், சத்தியமூர்த்தி, ராஜாஜி, டி. பிரகாசம் முதலிய தலைவர்கள் பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்திற்குச் சென்று கல்கத்தா மெயிலில் காந்திஜி வந்த பெட்டியைப் பிரித்து (காந்திஜியும் அவர் குழுவினரும் கல்கத்தாவிலிருந்தே வந்து கொண்டிருந்தனர்) தனி ரெயிலில் சேர்த்து சென்னை மாநகருக்கு அழைத்து வந்தனர். சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வழக்கம்போல் ஏராளமான மக்கள் கூடி இருந்து மகாத்மாவை வரவேற்றார்கள். அங்கிருந்து அண்ணல் சாந்தோமில் சல்லிவான் தெருவில் உள்ள இராம்ஜி கல்யாண்ஜி இல்லத்திற்கு ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பெற்றார். மகாத்மாவுடன் மௌலானா முகமதலியின் மனைவியாரும்,

இரயில் நிலையத்தில்

கான்பூரைச் சேர்ந்த மௌலானா சுபானியும், கொண்டா வேங்கடசுப்பையாவும் சென்னைக்கு வந்தனர். இரயில் நிலையத்தில் இம்முறை காந்திஜிக்கு முதல் மாலையிட்டு வரவேற்றவர் டி. வி. வேங்கடராம ஐயர்.

பேட்டி

கல்யாண்ஜி இல்லத்தில் ஒத்துழையாமை இயக்கத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர்களை காந்திஜி சந்தித்துப் பேசினார். ''டெய்லி எக்ஸ்பிரஸ்,'' ''மெட்ராஸ் மெயில்'' செய்தியாளர்களும் அவரைப் பேட்டி கண்டனர். அவர்களுடைய கேள்விகள் சிலவற்றிற்கு அண்ணல் கூறிய மறுமொழிகள் நிலையான முக்கியத்துவம் உள்ளவையாகும். ''டெய்லி எக்ஸ்பிரஸ்'' செய்தியாளரிடம் அவர் ''சுதேசி''யைப் பற்றிக் கூறியபோது ''உண்மையான சுதேசி என்பது அவரவர் வீடுகளில் உற்பத்தியாகும் பொருள்கள்தான். ஆலைகளில் உற்பத்தியாகும் பொருள்களை நாம் முற்றிலும் விலக்கிவிட வேண்டும். என்னுடைய சுதேசித் தத்துவத்தை விமர்சகர்கள் இருக்கட்டும், ஊழியர்களே சரிவரப் புரிந்து கொள்ளவில்லை'' என்றார். ''மெட்ராஸ் மெயில்'' செய்தியாளர் கேட்டார்: ''இயந்திரங்களைப் பயன்படுத்தாமலேயே நம்முடைய தற்காலத் தேவைகள் போதுமான அளவில், சரிவர நிறைவு செய்யப்படும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

காந்திஜி: தற்காலத் தேவைகளில், துணியைப் பொருத்தவரை, ஆம், அவைகளை நிறைவு செய்ய முடியும். ஆனால் இந்தியா தனக்குத் தேவையான அழகான துணிமணிகள் முழுவதையும் தானே உற்பத்தி செய்து கொள்வதற்கு முடியக் கூடிய காலத்திற்கும் இப்போதைக்கும் இடையில் உள்ள காலத்தில் நாம் நமது தேவையைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

கேள்வி: நமது மக்களையும் அவர்களுடைய தற்போதைய நிலையையும் நீங்கள் ஆராய்ந்து அறிந்தவரை, அரசாங்கத்தின் உதவி இல்லாமல் வெறும் தேசபக்தியைத் தூண்டுவதனால் மட்டும் இவ்வளவு பெரும் அளவிற்கு (துணிமணிகளை) உற்பத்தி செய்ய முடியுமா?

பதில்: நிச்சயமாக முடியும். அதனல் தான் எல்லோரும் நூல் நூற்பதையும் நெய்வதையும் ஏற்றுக் கொண்டுவிட்டால் அது தானுகவே சுயராஜ்யத்திற்கு வழிகோலும் என்று நான் கூறுகிறேன்.

''மெயில்'' செய்தியாளருடன் காந்திஜியின் சித்திரங்களைத் தீட்டப்போன ''மெயில்'' சித்திரக்காரர், எழுத்திலேயே ஒரு சித்திரத்தை வடித்திருந்தார்.

''மெயில்'' சித்திரம்

''(நாங்கள் சென்றவுடன்) 'இவர்கள் மலபார் நிவாரண நிதிக்கு எவ்வளவு பணம் கொடுப்பார்கள்?' என்று காந்திஜி கேட்டார். நாங்கள் ஏதாவது ஒரு சிறு தொகை கொடுப்பதாகச் சொன்னேம். அதன்பின் எங்களை இராஜகோபாலாச்சாரி காந்திஜியின் அறைக்குள் அழைத்துச் சென்றார். போன போது அவர் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். எங்களுடன் மௌனமாக அவர் கை குலுக்கினர். நாற்காலியில் அமரு மாறு சொன்னர். ஆனல் நாங்கள் மறுத்துவிடவே, தொடர்ந்து சாப்பிட்டார். இந்த அறையின் நடுவில் ஒரு இராட்டை வைக்கப் பெற்றிருந்தது அங்குக் காணப்பெற்ற தனிச் சிறப்பாகும். அவர் என்னுடைய நண்பருடன் (''மெயில்'' செய்தியாளருடன்) சாந்தமான குரலில் பேசினர். தேசியத் தலைவர்களிடம் பொதுவாக எதிர் பார்க்கப்படும் தீப்பொறி பறக்கும் பேச்சு எதுவுமில்லை. எத்தனை சித்திரங்கள் வேண்டுமானலும் நான் எழுதிக் கொள்வதற்கு அவர் அனுமதி அளித்தார். அவர் நன்முக நிமிர்ந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார். அவ்வப் போது ஏதாவது எழுதுவதற்காகப் பேச்சை நிறுத்துவார். அயர்லாந்து தலைவரான டிவேலராவைப் போன்று அவருடைய முகத்தோற்றம் இருந்தது. அவருடைய தனிக் கவர்ச்சி அவருடைய பேச்சில் இருந்தது. சந்தர்ப்பத்திற் கேற்றவாறு தமது குரலை உயர்த்தியும் தாழ்த்தியும், மெதுவாக, தெளிவாக, ஆனல் அதே சமயம் நன்கு பதியுமாறு அவர் பேசினர். அவருடைய ஆங்கிலம் சுத்தமாக இருந்தது. அவர் நடந்து கொண்ட முறையும் அற்புதமாக இருந்தது. அவரிடம் நிறையக் கேளிக்கை உணர்ச்சி இருக்கிறது. அவரைச் சந்தித்துப் பேசியபின், அவரிடம் கொடிய எண்ணமோ வன்முறையோ இருக்கும் என்று கற்பனை கூடச் செய்ய முடியாது. தம்மைப் பின்பற்றுபவர்களிடம் அவர் ஒளிவு மறைவு எதுவும் காட்டுவதாகத்

தெரியவில்லை. தமது போராட்டத்தின் எந்த அம்சத்தைப் பற்றியும் யாரிடமும் பேச அவர் தயாராக இருந்தார். அவரைப் பின்பற்றியவர்கள் அவரிடம் கேள்வி கேட்பதையும் அதற்கு அவர் மறுமொழி கூறுவதையும் கேட்பதே மிகவும் கவர்ச்சியாக இருந்தது.'' இவ்வாறு ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையைச் சேர்ந்த சித்திரக்காரர் எழுதியிருக்கிறார்.

பொதுக் கூட்டம்

மாலையில் சென்னை காங்கிரஸ் குழு ஆதரவில் யாகூப் ஹாசன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்தில், அரசாங்கத்தின் அடக்கு முறையைக் கண்டித்தும் ஒத்துழையாமையைத் தவிர இந்தியர்களுக்குப் புகல் இல்லை என்பதை வலியுறுத்தியும் அண்ணல் பேசினார். பொதுவாக மகாத்மா பேசுகிறார் என்றாலே சென்னைக் கடற்கரையில் மாபெருங் கூட்டம் கூடும். மௌலானா கைதானார் என்ற செய்தியும் சேர்ந்து விட்டால் கூட்டத்திற்கும் அதன் விறு விறுப்பிற்கும் கேட்கவேண்டுமா? கணீரென்று ஒலிக்கும் குரலில், தெளிவாக ஒரு மணி நேரத்திற்கும் மேல் காந்திஜி பேசினார். இந்தப் பேச்சை நடுவழியில், முஸ்லிம்கள் தொழுவதற்காக, பத்து நிமிடங்கள் நிறுத்த வேண்டியதாயிற்று. அவ்வாறு நிறுத்துவதற்கு முந்திய பேச்சை ஏ. ரெங்கசாமி ஐயங்காரும், பிந்திய பேச்சை சத்தியமூர்த்தியும் மொழி பெயர்த்தார்கள்.

கதர்

இந்தக் கூட்டத்தில் இயல்பாகவே, முகமதலியை அரசாங்கம் கைது செய்ததையும் மலபாரில் நடைபெற்ற மாப்ளா கலவரத்தையும் முதலில் மகாத்மா குறிப்பிட்டார். அதன் பின்பு அவர் சுதேசிக்கு வந்தார். கூட்டத்திலிருந்த சகோதரிகளுக்கு பீகம் முகமதலி சாகிபாவைச் சுட்டிக் காட்டி, அவர் கதர் அணிந்திருக்க, அவர்கள் அணியாதிருப்பதைக் காணத் தமது இதயமே வெடித்து விடும் போலிருப்பதாகச் சொன்னார். இராட்டையின் பெருமைகளை அண்ணல் கோர்வையாகக் கூறிக்கொண்டே போனார். ''உயர்ந்த வகுப்பினருக்காக மட்டும் நாம் சுயராஜ்யம் கேட்கவில்லை. தீண்டத்தகாதவர்கள் உள்பட, இந்தியாவில் உள்ள பாமர ஏழை ஆண், பெண் உள்பட, எல்லோருக்கர்கவுந்தான் கேட்கிறோம்,'' என்று அவர் வலியுறுத்தினர், இச்சொற்

பொழிவைப் பற்றித் தலையங்கம் தீட்டிய ''சுதேசமித்திரன்'', ''சுயராஜ்யத்தை அடைய சாத்விகத்தைத் தவிர வேறு வழியில்லை. யார் எவ்வளவு ஆத்திர மூட்டினபோதிலும் நாம் நமது வழியிலிருந்து பிறழக் கூடாது என்று மகாத்மா சொன்னதை ஜனங்கள் ஆச்சாரிய உபதேசமாகக் கொள்ள வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டிருந்தது.

மலபார் செல்லத்தடை

இங்கு காந்திஜி வந்து சேர்ந்தவுடன், சென்னை அரசாங்கத் தலைமைச் செயலாளரிடமிருந்து அவருக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. மலபாரில் இராணுவச் சட்டம் அமுலில் இருப்பதாகவும், தற்போதைய நிலையில் காந்திஜி மலபாருக்குச் செல்வதோ அல்லது அங்குத் தங்குவதோ விரும்பத்தக்கதல்ல வென்றும் அந்தக் கடிதம் கூறியது. இந்தக் கடிதத்தைத் தேசிய இதழ்கள் வன்மையாகக் கண்டித்தன. இது வடிகட்டிய அறிவீனம் என்று ''இந்து'' கண்டித்திருந்தது. ''சுதேசமித்திரன்'' இன்னும் சற்றுக் கோபமாக, ''கள்ளிக் கோட்டைக்கு மகாத்மா போகக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறாராம். மகாத்மாவின் காலடித் தூசிபட்ட இடத்தில் சாந்தம் தாண்டவம் புரியும். எங்கேனும் கலவரம் இருந்தால் அங்கு மகாத்மாவை அழைத்துப் போனால் உடனே அமைதி உண்டாகிவிடும். மலையாளத்தில் ஏற்பட்டிருக்கும் நிலைமையைப் பரிகரிக்க கவர்ன்மெண்டார் மகாத்மாவை உபசாரம் செய்து அங்கு அழைத்துக் கொண்டு போக வேண்டும். அப்படிச் செய்யாமல் அவர் அங்கு போகக் கூடாது என்று தடுப்பதானது தானாக வரும் சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளுவதாகும். இந்த அதிகார வர்க்கத்தினருக்கு நல்ல புத்தி எப்பொழுது வருமோ!'' என்று எழுதியிருந்தது.

எதிரொலி

பொதுவாக, மலபார் கலவரங்களின் காரணமாக அப்போது தமிழகத்தில் சில விரும்பத்தகாத எதிரொலிகளும் ஏற்பட்டிருந்தன. உதாரணமாக, காந்திஜி மதுரைக்கு வந்த போது வரவேற்புரை அளிப்பதற்கு, முதலில் மதுரை நகராட்சி மன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருந்தது. மலபார் கலவரங்களுக்குப் பின்னால், ஆதரவாக இருந்த உறுப்பினர்களில் சிலர் ஒதுங்கிக் கொள்ளவே, வரவேற்புக் கூடாது என்பதற்கு ஆதரவு அதிகமாயிற்று.

இதே போன்று திருச்சியிலும் இந்துக்களுக்கும் முஸ்லிம் களுக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கான அறி குறிகள் தென்பட்டன.

குசராத்தி மாதர்

ஜார்ஜ் டவுன் கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் உள்ள சௌந்தர்ய மகாலில் நடைபெற்ற மாதர்கள் கூட்டத்தில் காந்திஜி குசராத்தியிலேயே பேசி னார். ஏனென்றால், இக்கூட்டத்திற்கு வந்தி ருந்த பெண்களில் பெரும்பாலோர் குசராத்தி யினர். ஒரு சிலர்தான் தமிழ், முஸ்லிம் பெண்கள். ஒரு வேடிக்கை என்னவெனில், வந்திருந்த மாதர்களில் ஒருவராவது கதர் அணிந்திருக்கவில்லை. காந்திஜி எவ்வளவு மனம் வருந்தியிருப்பார் என்பதைக் கூறவே வேண்டாம். கதர்க் கட்டவேண்டியதன் அவசி யத்தை வலியுறுத்தியே அவருடைய பேச்சு அன்று அமைந் திருந்தது.

வணிகர் கூட்டம்

வெளிநாட்டுத் துணிமணிகள் வாங்குவதை மக்கள் விலக்க வேண்டும் என்று மட்டுமல்லாது, அவைகளின் விற்பனையை வணிகர்களும் நிறுத்திவிட வேண்டும் என்றும் காந்திஜி கூறி வந்தார். ஆனால் இவ்வாறு வணிகர்கள் செய்வதில் பல சிக்கல்கள் இருந்தன. அவைகளைப்பற்றி விவாதிப்பதற்காக, அண்ணாலை சென்னைத் துணி வணிகர்கள் சங்கப் பேரவைக் கூட்டத்திற்குச் சங்கத்தின் துணைத் தலைவர்களில் ஒருவரான ராம்ஜி கல்யாண்ஜி அழைத்து வந்தார். இதற்கு முதல் நாள் தான் துணி வணிகர்கள் கூடி, அந்நிய ஆடைகளை விலக்க முடியாது என்று தீர்மானித்திருந்தனர். ஆனாலும் மகாத்மாவின் ஆலோசனை யைக் கேட்கலாமே என்ற எண்ணத்தில் இந்தக் கூட்டம் கூட்டப் பெற்றிருந்தது. ஜார்ஜ் டவுனில் இருந்த சங்கக் கட்டிடத்தில் கூட்டம் நடைபெற்றது.

துணி வணிகர் மறுப்பு

மூசாசேட், ஜி. வெங்கடசுப்பையா செட்டி, பி. ஐயணன் செட்டியார் ஆகியோர் வாதத்தில் கலந்து கொண்டவர் களில் முக்கியமானவர்கள். திடீரென வெளி நாட்டுத் துணி வாணிகத்தை நிறுத்துவதால் ஏற்படக்கூடிய சிக்கல்களை இவர்கள் எடுத்துக் கூறினர்கள். "ஏற்கனவே சில வணிகர்கள் இங்கிலாந்து ஆலைகளுடன் பேரம் முடிவு செய்துள்ளார்கள்.

அந்தச் சரக்குகள் வருவதை நிறுத்த முடியாது. சில வணிகர்கள் கடனுக்குத்தான் சரக்குகளை வாங்குகிறார்கள். ஆகவே கொள்முதலைத் திடீரென நிறுத்தினால் அவைகளைக் கொடுத்துக் கொண்டு வந்தவர்கள் தங்களுக்குச் சேர வேண்டிய பணத்தைத் திருப்பிக் கேட்பார்கள். இருக்கும் சரக்குகளை விற்று அவர்கள் கடனைக் கொடுத்து விட்டால், புதிதாகச் சுதேசி வாணிகம் தொடங்குவதற்குப் பணம் இல்லாமற் போய்விடும். சிறு அளவில் புது வாணிகம் தொடங்கினாலோ பழைய கடை வாடகை, லைசென்சுக் கட்டணம், சிப்பந்திகள் செலவு ஆகியவைகளுக்குக் கட்டு படியாகாது. மேலும் சென்னையிலேயே சில ஐரோப்பிய வணிகர்கள் இருக்கிறார்கள். நாம் வெளிநாட்டுத் துணி விற்பனையை நிறுத்தினால் அவர்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தித் கொண்டு இலாபம் அடைந்து விடுவார்கள். ஆகையால் வழக்கறிஞர்கள் தங்கள் தொழிலை நிறுத்து வதற்குக் கால அவகாசம் அளித்தது போல் துணிவணிகர் களுக்கும் அளிக்க வேண்டும்.'' இவைதாம் துணி வணிகர்கள் கூறிய முக்கியமான மறுப்புக்கள்.

காந்திஜி கருத்து

இதன் பேரில் தம்முடைய கருத்து என்னவென்பதை அண்ணல் விளக்கினார். விதேசித் துணிகளை விலக்க வேண்டுமென்பது பெரும்பாலும் பொதுமக்க ளுடைய ஆதரவைப் பொருத்ததே என்பதை அவர் ஒப்புக்கொண்டார். ''ஏற்கனவே செய்து கொண்ட ஒப்பந்தங்களை ரத்துச் செய்யுமாறு நான் கூற வரவில்லை. வணிகர்கள் முயன்றால், துணிகளைப் பொருத்தவரை மக்கள் கருத்தை நல்ல முறையில் உரு வாக்க முடியும். பொருள்களை கடனுக்கு வாங்கி விற்பதை வணிகர்கள் கைவிடவேண்டும். அது எப்போதுமே வணி கத்திற்குக் கெடுதல்தான்'' என்று அறிவுரை சொன்னார். தனிப்பட்ட வணிகர்களுக்கு வெளிநாட்டுத் துணி விலக்கி னால் இன்னல்கள் இருக்கின்றன என்பதைத் தாம் ஒப்புக் கொள்வதாகவும், ஆனாலும் விடுதலை வேண்டுமென்றால் நாம் சில தியாகங்களை ஏற்கத்தான் வேண்டியிருக்கும் என்றும் அவர் சொன்னார். இவைகளையெல்லாம் கேட்ட பின்னும், வணிகர்கள் மன நிறைவடையவில்லை. கூட்டம் எவ்விதத் திட்டமான முடிவுமின்றிக் கலைந்தது; காந்திஜி கடற்கரைத் தொழிலாளர் கூட்டத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். இந்தத் துணி வணிகர் கூட்டத்தைப் பற்றி, பின்னர்

சென்னை அரசு இந்திய அரசின் உள்துறைக்கு அனுப்பிய குறிப்பில், பத்திரிகைகளில் வெளி வந்ததை விட அதிக மாகவே காந்திஜியைத் துணி வணிகர்கள் இடைமறித்துக் கேள்விகள் கேட்டிருக்கின்றனர் என்று நம்பப்படுவதாகக் கூறியிருக்கிறது.

தொழிலாளர் பிளவு

பல்வேறு தொழில் நிலையங்களைச் சேர்ந்த சுமார் பத்தாயிரம் தொழிலாளர்கள் இந்தச் சமயத்தில் சென்னை மாநகரில் வேலை நிறுத்தம் செய்திருந்தார்கள். அதே சமயம், தொழிலாளர்களுக்கு இடையிலேயும் பிளவு இருந்தது. தொழிலாளர்களுக்குள் அரிஜனங்கள், அரிஜனங்களல்லாத உயர் சாதியினர் என்ற இருபெரும் பிரிவுகள் உருவாயின. அரிஜனத் தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பிச் சென்று விட்டார்கள். ஆகையால் மற்றவர்களுக்குக் கடும் ஆத்திரம் உண்டாயிற்று. வேலைக்குத் திரும்பிச் சென்றவர்கள் மீண்டும் வெளியே வருமாறு செய்ய நிர்ப்பந்தமான சூழ்நிலையை ஏற்படுத்தினர். அடிக்கடி சண்டைகளும் சச்சரவுகளும் நடந்து கொண்டிருந்தன. ஆகையால் மகாத்மா வருகையைப் பயன்படுத்தித் தொழிலாளர்களைச் சாந்தப்படுத்தவும், ஒத்துழையாமை இயக்கத்திற்கு அவர்களுடைய ஆதரவைத் திரட்டவும் உயர் நீதிமன்றத்திற்கு எதிரான கடற்கரையில், மத்திய தொழிலாளர் சபையின் ஆதரவில், தொழிலாளர் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. இக்கூட்டத்திற்குத் தொழிலாளர்களும், தொழிலாளர் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் நிறைய வந்திருந்தனர். வேலை நிறுத்தம் செய்திருந்த தொழிலாளர்களில் பெரும் பாலோர் பக்கிங்காம், கர்னாடிக் தொழிலாளர்கள். காந்திஜியின் பேச்சை எம். எஸ். சுப்ர மணிய ஐயர் மொழி பெயர்த்தார். துணி வணிகர்கள் நடத்திய வாதம் இறுதிக் கட்டத்தில் சற்றுக் காரசார மாக இருந்ததால் இக்கூட்டத்திற்குக் குறிப்பிட்ட நேரத்தில் காந்திஜியால் வர முடியவில்லை. தொழிலாளர்களிடையே பிளவுகள் கூடாது என்பதையும் அவர்கள் ஒன்று பட்டுச் செயல் படவேண்டும் என்றும் அண்ணல் வலியுறுத்தினார். இந்தச் சுற்றுப்பயணத்தில் காந்திஜி பங்கு கொண்ட கூட்டங்களிலெல்லாம் விதேசித் துணிகளின் சொக்கப்பனை நடைபெற்றது. பெரும்பாலானவற்றிற்கு அண்ணலே தீ மூட்டி வைத்தார். இங்கும் அவ்வாறு நடைபெற்றது. தொழி

லாளர் மத்தியில் காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவை ''மெயில்'' கூட வரவேற்றிருந்தது. அவருடைய பேச்சில் நியாயம் இருந்தது என்றும் ஆனல் அதைத் தொழிலாளகள் உணர்ந்திருக்க மாட்டார்களென்றும் ''மெயில்'' குறிப் பிட்டிருந்தது.

திருந்திய நிகழ்ச்சி

''காந்திஜி காட்டிய வழி'' என்ற நூலில் ஆக்கூர் அனந்தாச்சாரி கீழ்க் கண்ட சுவையான வரலாறு ஒன்றைக் கூறியுள்ளார். ''ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்த காலத்தில் 1921-ஆம் வருஷத்தில் காந்தியடிகள் சென்னைக்கு வந்திருந்தார். அப்போது விலைமாது ஒருத்தி அவரைத் தரிசிக்க வந்திருந்தாள். ஆனல், காந்திஜியை அவள் அணுகுவது எவருக்கும் விருப்பமில்லை. அவளது தொழிலை மகாத்மா வெறுத்தாராயினும் அவளைப் பற்றிய தகவல் அறிந்ததும் அவளைச் சந்திக்கச் சம்மதித்தார். அவள் ஏன் கெட்ட வழியில் இறங்கினுள் என்பதற்கான காரணங் களைக் கேட்டு அறிந்து கொண்டார். அவள் மீது இரக்கம் மேலிட்டது. அவள் சீர்திருந்த விரும்புவதைக் கண்டு கொண்டார். அவள் விரும்பிய ஒருவரைக் கலியாணம் செய்து கொள்ளுமாறு தூண்டினர். கலியாணமும் ஆயிற்று. அவள் பல வருஷங்கள் நாட்டுப் பணியில் ஈடுபட்டு தியாகத் தில் குதித்து, மாசை அகற்றி நல்ல முறையில் வாழ்ந்து மண்ணிலிருந்து மறைந்தாள்.'' (இந்த நிகழ்ச்சி 21-ஆம் ஆண்டில் முதல் முறை அண்ணல் வந்தபோது நிகழ்ந்ததா அல்லது இரண்டாம் முறை வந்தபோது நிகழ்ந்ததா என்பது தெரியவில்லை.)

17-9-21

கடலூருக்குப் புறப்பாடு

மறுநாள் காலையில் விழுப்புரம், பரங்கிப்பேட்டை வழி யாகக் கடலூருக்கு மகாத்மா புறப்பட்டார். கடலூரி லிருந்து இரவே பரங்கிப் பேட்டைக்குத் திரும்பி வந்து அங்குத் தங்கிவிட்டு மறுநாள் கும்பகோணத்திற்குப் புறப்பட வேண்டும் என்பது பயணத்திட்டம். இந்தச் சுற்றுப் பயணத்தில் காந்திஜியின் உறவினரான பிரபுதாசும், மௌலானு சுபானியின் சீடரான அன்வர்ருதீனும் வந்திருந் தார்கள். வழியில் விழுப்புரம் இரயில்வே நிலையத்தில்

இரயில்வே பிளாட்பாரத்தில் அமைக்கப்பெற்றிருந்த பெரிய மேடையில், காந்திஜியை அமரச் செய்து தென்ஞர்க் காடு மாவட்டக் காங்கிரஸ் குழுவின் சார்பாக, அதன் தலைவர் வி. டி. இராமசாமி ஐயர் வரவேற்புரை கூறினர். இதன் காரணமாகவும் மேலும் சில இடங்களில் காலதாமதமானதன் காரணமாகவும் திருப்பாப்புலியூருக்கு அரை மணி நேரத்திற்கு மேல் தாமதித்து இரயில் வந்து சேர்ந்தது.

பரங்கிப் பேட்டை

பண்ருட்டி வழியாக, பரங்கிப் பேட்டை வந்து அங்கு கிறித்துவ தேசியக்கலாசாலைக் கட்டிடத்தின் அடித்தளக் கல்லை அண்ணல் நாட்டினர். பரங்கிப் பேட்டையிலிருந்து சற்றுத் தொலைவில் திருமதி அன்னி மேரி பீட்டர்சன் என்ற டச்சு அம்மையார் (இவர் 1961-இல் காலமாகி விட்டார்) நிறுவிய சேவா சதனத்தின் ஒரு அங்கம் இப் பள்ளி. அம்மையார் காந்திஜியின் மீது கரை காணு பக்தி கொண்டவர். அண்ணலின் பாத அணி ஒன்றை இந்நிறுவனத்தில் அவர் இறுதிவரை போற்றிப் பாதுகாத்து வைத்திருந்தது ஒன்றே போதும், அண்ணலின் பால் அவருக்கிருந்த பக்தியை மெய்ப்பிப்பதற்கு. அம்மையாரைப் போன்றே, அண்ணலுக்கும் அவர் மீது தனி அபிமானம் உண்டு. பள்ளியின் அடித்தளக்கல்லை நாட்ட அண்ணல் வரவேண்டுமென்று பீட்டர்சன் கேட்டுக் கொண்டதனால்தான் அண்ணல் அந்த ஊரைத் தமது பயணத் திட்டத்தில் சேர்க்க ஏற்பாடு செய்தார்.

கிறித்தவர் வாதம்

இங்கு அடித்தளக்கல் நாட்டு விழாவை நடத்தி வைத்துவிட்டு, அண்ணல் கடலூருக்குச் செல்ல வேண்டியிருந்ததால் வெந்நீரைக் காலில் ஊற்றிக் கொண்டவர் போன்று ஒரே பரபரப்பாக இருந்தார். ஆனால் இவ்வளவு அவசரத்திற் கிடையிலும் அங்கு வந்து கூடியிருந்த கிறித்தவப் பெரு மக்கள் அவருடன் கிறித்துவ சமயத்தைப் பற்றியும் அவர் அதில் சேரவேண்டிய அவசியத்தைப் பற்றியும் தீவிரமாக உரையாடத் தொடங்கிவிட்டனர். ''இவ்வளவு நல்ல மனிதர் ஒருவர் கிறித்துவ சமயத்தில் சேராமல் இருக்கலாமா?'' என்பது அவர்களுடைய ஆசை. ஆண்களும் பெண்களுமாகப் பல கிறித்தவப் பெருமக்கள் பங்கு

கொண்ட இந்த உரையாடலில் காந்திஜியும் உற்சாகமாக ஈடுபட்டார். அண்ணல் அவர்களிடம் சொன்னார்: ''தென்னப்பிரிக்காவில் என்னுடைய நெருங்கிய நண்பர்கள் பெரும்பாலும் கிறித்தவர்களே. என் வாழ்க்கையில், கிறித்தவ சமயத்தைத் தழுவி விடலாமா என்ற எண்ணம் ஏற்பட்ட ஒரு கட்டமும் இருந்தது. ஆனால் ஆண்டவன் எனக்கு வேறு வழி காட்டினான்.

ஒரு கிறித்தவ மாது: நீங்கள் இனியாவது கிறித்தவ சமயத்தைத் தழுவி விடுவீர்கள் என்று இப்போதுகூட எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. கிறித்தவ சமயத்தைத் தழுவாதவர்களுக்கு உய்வில்லை என்பது எங்களுடைய உறுதியான நம்பிக்கை. சாந்தி இளவரசானவர் இயேசு ஒருவரே.

காந்திஜி: (இல்லை என்று கூறும் முறையில் தலையை அசைத்துப் புன்னகை புரிந்து கொண்டே): அது உங்களுடைய நம்பிக்கை. அதே போன்று இந்துமதம் தான் உய்வளிக்கக் கூடியதென்பது இந்து மதத்தினரின் திடமான நம்பிக்கை. முசல்மான்களுக்கும் தங்கள் சமயத்தைக் குறித்து இதே போன்ற நம்பிக்கை உண்டு. உண்மை என்னவென்றால், ஒவ்வொரு சமயத்தின் அடிப்படையான தத்துவங்களையும் நாம் புரிந்து கொண்டால் குரோதமும் வேற்றுமை உணர்ச்சியும் அகலும். மனிதனைத் தூய்மைப்படுத்துவதே ஒவ்வொரு சமயத்தின் நோக்கமாகும். சமயங்களிலேயே மிகவும் விஞ்ஞான பூர்வமானது இந்து சமயம் தான். ஆகையால் இந்து சமயத்தை நான் உளமார நேசிக்கிறேன்.'' இவ்வாறு காந்திஜி கூறியபின் உரையாடல் முடிந்தது.

பரங்கிப்பேட்டையிலிருந்து மாலை சுமார் ஆறுமணி வாக்கில் காந்திஜி கடலூருக்குக் காரில் வருவதென்பது திட்டம். ஆனால் அவர் வந்து சேர இரவு எட்டு மணியாகிவிட்டது. இதற்கிடையில் கூட்டம் சுற்றுப்புறத்தில் சுமார் பத்து, பதினைந்து மைல் தூர அளவில் உள்ள ஊர்களிலிருந்தெல்லாம் மக்கள் வந்து கடலூரை நிறைத்துவிட்டனர். குதிரை வண்டிக்காரர்களுக்கும் மாட்டு வண்டிக்காரர்களுக்கும் வாடகைக் கார்க்காரர்களுக்கும் அன்று கனத்த

கடலூர்

யோகம். திருவண்ணுமலை, பண்ருட்டி, சிதம்பரம், பாண்டிச் சேரி ஆகிய நகரங்களிலிருந்தெல்லாம் மக்கள் திரள் திர ளாக வந்திருந்தார்கள். கதர் அணிந்த தொண்டர்கள் பலர் கதரால் நெய்யப்பெற்ற வரவேற்புரை ஒன்றை எடுத்துக் கொண்டு, பண்ருட்டியிலிருந்து கடலூரில் அமை திய ஏற்படுத்துவதில் உதவி செய்ய வந்திருந்தார்கள். கடலூரில் கடைகளெல்லாம் நேரத்தில் அடைத்து விட்டுக் கடைக்காரர்களும் சிப்பந்திகளும் பொதுக்கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு, காந்திஜி விற்ற ''சரக்கை வாங்க'' வந்துவிட்டார்கள். இவ்வாறு வந்து கூடிய பதினா யிரக்கணக்கான மக்கள் கடிலம் நதியில், பொதுக் கூட்டம் நடைபெறுவதற்காகத் திட்டமிடப்பெற்ற இடத்தில் அண்ணலின் வருகைக்காக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்தது. காந்திஜியை மக்களுக்கு நன்கு காட்ட வீழைவான் போன்று, சந்திரன், தனது தண்ணிய பொற்கிர கணங்களை வீசிக்கொண்டு நீலவானில் பவனி வந்து கொண் டிருந்தான். காந்திஜி வருவதற்குள் மக்களிடமுள்ள வெளி நாட்டுத் துணிமணிகளையெல்லாம், அக்கினி பகவானுக்கு இரை கொடுப்பதற்காக, ஆவலுடன் தொண்டர்கள் வசூல் செய்து கொண்டிருந்தார்கள். தலைவர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து, அண்ணல் வர இருக்கும் செய்தியைக் கூட்டத்திற்கு அறிவித்துக் கொண்டிருந்தனர். கூட்டத் தினர் உற்சாகத்திற்கு எல்லையில்லாமற் போய்விட்டது. மத்தியில் ஓர் அலங்கார மிக்க பந்தல் போட்டு (அண்ணல் அமருவதற்காக) ஓர் உயரமான மேடையும் அமைத்திருந் தார்கள். பந்தலுக்கு வருவதற்கான வழி நெடுகிலும் அழகிய மலர்த் தோரணங்கள் கட்டியிருந்தனர். மகாத்மா அமரவிருந்த மேடையைச் சுற்றி ஒரு சிறு எல்லை வரை மக்கள் நுழையக் கூடாது என்று வரையறுத்து வைத்திருந்தனர். உற்சாகத்தில் நிதானமிழந்த கூட்டம், இந்த எல்லையை யும் தாண்டி மேடை அருகே சென்று விட்டது. ஒரு கணம் ஒரே குழப்பம். என்ன செய்வதென்று யாருக்கும் தெரியவில்லை. இந்தச் சமயத்தில் வெளிநாட்டுச் சொக்கப் பனையிலிருந்து ஜ்வாலை வானை நோக்கி எழுந்தது. மகாத்மா வந்து விட்டார் என்பதற்கு இதுவே சமிக்ஞை. மகாத்மா வும் மேடையில் ஏறி, தம்முடைய அழகிய, நீண்ட பூக் கரங்களை ஆட்டி அமைதியாக இருக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார். என்ன வியப்பு! என்ன கட்டுப் பாடு!! உடனே மக்களெல்லோரும் அவரவர்கள் இருப்பி

டத்தில் அமர்ந்து விட்டனர். கூட்டத்தில் முழு அமைதி நிலவியது. பால்போன்ற ஒளிவிட்டுக் கொண்டிருந்த முழு நிலவும் பக்கத்தில் ஜல் ஜல் என்று நாதமிட்டு ஓடிக் கொண்டிருந்த ஓடை நீரும் ஆற்றுப் பொன் மணலும் கூடியிருந்த மக்கள் கடலுக்குக் கடலூரில் ஒரு தனி அழகை அளித்தன. காந்திஜி கணீரென்ற குரலில் அரை மணி நேரம் பேசினார், எம். கே. ஆச்சார்யா அவர் பேச்சைத் தமிழில் மொழி பெயர்த்தார். கட்டுப்பாடு, அஹிம்சை, இராட்டை, சுதேசி, இந்து முஸ்லிம் ஒற்றுமை, அரிஜனங்கள் நல்ல முறையில் நடத்துதல் ஆகிய அறிவுரைகள் வழக்கம் போல் ஒவ்வொன்றுக அண்ணல் கூறிக்கொண்டு வந்தார்.

அழகிற்கு அழகு செய்வது போன்று, அழகிய தூய கதராடை அணிந்த எஸ். சீனிவாச ஐயங்கார் இக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கி அமர்ந்திருந்தார்.

சீனிவாச ஐயங்கார்

இவர் இக்கூட்டத்திற்கு வந்து தலைமை தாங்குவார் என்று முன் கூட்டித் திட்டம் எதுவும் இல்லை. வழக்கறிஞர் தொழிலை முன்னிட்டு இவர் இங்கு வந்திருந்தார். இவருடைய வருகையை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு இவரைத் தலைமை தாங்குமாறு கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள் கேட்டுக்கொண்டார்கள். இக்கூட்டத்தில், ஒரு புதுச் சகாப்தம் தோன்றிவிட்டது தெளிவாகத் தெரிந்தது. இதுவரை கடலூரில் நடைபெற்ற பொதுக் கூட்டங்களில் சில வழக்கறிஞர்களுக்கும் பெரிய மனிதர்களுக்கும் தனிக் கௌரவம் பாராட்டித் தனி இடங்கள் கொடுக்கப்பெற்று வந்ததுண்டு. ஆனால் இம்முறை இவர்கள் எந்த இடத்தில் எந்தச் சாதாரண மனிதருடன் அமர்ந்திருந்தார்கள் என்பதைக் கவனிப்பார் கூட இல்லை. இவையெல்லாம் உழைப்பாளிகள், விவசாயிகள், பொதுமக்கள் ஆகியோருக்கு முக்கியத்துவம் அளிக்கும் காந்தி சகாப்தம் தோன்றிவிட்டதன் அறிகுறி என்பதைத் தெரிந்தவர்கள் உணர்ந்திருப்பார்கள்.

தென்னார்க்காடு மாவட்டத்தின் சார்பாக ஒரு வரவேற்பும் மாதர்கள் சார்பாக ஒரு வரவேற்பும் படித்துக் கொடுக்கப் பெற்றன. மாதர்கள் சார்பாக

அசலாம்பிகை

அளிக்கப்பெற்ற வரவேற்புரையை அன்று படித்துக் கொடுத்தவர், பின்னர் காந்தி புராணம் பாடிய திருமதி அசலாம்பிகையாவார். பண்ருட்டி

வரவேற்புரை தனி. தென்னார்க்காடு மாவட்டக் காங்கிரஸ் குழுவின் வரவேற்பைத் திருப்பாப்புலியூர் காங்கிரஸ் குழுச் செயலாளரான கிருஷ்ணசாமிசெட்டி படித்தார். சாரங்க செட்டி பண முடிப்பை அளித்தார்.

குருட்டு அன்பு

''குழப்பத்தில் ஆழ்த்தக்கூடிய அன்பு இருக்கிறதே அது குருட்டு அன்பு. இன்று இந்தியாவிற்கு மிகவும் தேவையானது விவேகம் நிறைந்த அன்பாகும். ''சுயராஜ்யம்'' என்ற சொல்லுக்கு வேறு பொருள் இருக்கிறதோ இல்லையோ கட்டுப்பாடு என்ற பொருள் உறுதியாக உண்டு,'' என்பதை காந்திஜி இங்கு வலியுறுத்தினர்.

18-9-21

பார்சல் இரயில்

இரவோடு இரவாக பரங்கிப்பேட்டைக்கு வந்து அங்கு குமரகோவில் எதிரே இருந்த ஒரு பழைய வீட்டில் - இப்போது இது புதிதாகவே கட்டப்பெற்று விட்டது - காந்திஜி தங்கினர். அவர் இங்குக் காலை உணவை அருந்திவிட்டு கும்பகோணத்திற்குப் புறப்படுவதாக இருந்தது. ஆனால் அவருக்காக வெள்ளாடு கொண்டுவருவதாக வாக்களித்தவர் உரிய நேரத்தில் வரவில்லை. காந்திஜி கடிகாரத்தைப் பார்த்தார். குறிப்பிட்ட நேரத்தில் புறப்பட்டு விடவேண்டும் என்று காலை உணவு உண்ணுமலேயே புறப்பட்டுவிட்டார். திருமதி பேட்டர்சன் மிகவும் மனம் வருந்தினர். பரங்கிப்பேட்டை இரயில் நிலையத்திற்குச் சென்றபோதுதான், அன்று கும்பகோணத்திற்குச் செல்வதற்காகத் திட்டமிட்டிருந்த இரயில் ஒரு பார்சல் இரயில் என்பதும் அதில் பயணிகள் ஏற்றப்பெறுவதில்லை என்பதும் தெரிந்தது. நல்ல வேளையாக இரயில்வே நிலைய அதிகாரிகள் மிகுந்த ஒத்துழைப்புடன் காந்தி குழுவினர் ஏறிச் செல்வதற்காக ஒரு பெட்டியைக் காலி செய்து கொடுத்தனர்!* ''வழியில் சிதம்பரம், கொள்ளிடம், சீர்காழி, மாயவரம் ஆகிய இரயில் நிலையங்களிலெல்லாம் ஒரே மக்கள் கூட்டம். இரயில் குறித்த நேரத்தில் ஊர்களுக்குப் போய்ச் சேர வேண்டுமே என்ப

* ''Seven months with Gandhi'' by Krishnadas.

தைப் பற்றியெல்லாம் யாரும் அக்கறைப்பட்டதாகத் தெரியவில்லை. சிதம்பரத்திலும், கொள்ளிடத்திலும் மக்கள் பிளாட்பாரத்தில் அமர்ந்து, காந்திஜியை அங்கு அழைத்து, அவருக்கு வரவேற்புரை படித்துக் கொடுத்து, அவருடைய பேச்சையுங் கேட்டு விட்டுத்தான் வீடு திரும்பினார்கள். சீர்காழியில் இதைக் காட்டிலும் பெரிய தடபுடல் நடை பெற்றது. நாதசுர இசையுடன் மேடைக்குக் கோவில் பட்டுக் குடையைக் கொண்டு வந்து விட்டார்கள். இரண்டு நாற்காலிகளில் இரண்டு தலைவர்களையும் அமர வைத்து, பழங்கள், பூக்கள், கற்கண்டு, சந்தனம் ஆகியவற்றை விநியோகம் செய்யத் தொடங்கிவிட்டனர். கூட்டம் கட்டுக்கடங்காததாக இருந்ததால் அது அமைதியடைந்து அண்ணல் இறங்கி வந்ததற்குள் இரயில் புறப்படுவதற்கு ''கார்டு'' விசில் ஊதிவிட்டார். ஆகவே பழங்களையும் மாலைகளையும் அவசர அவசரமாக மகாத்மாவின் பெட்டிக்குள் வீசி எறிந்தனர். சந்தனமோ அநேகருடைய தலைகளை அலங்கரித்தது. இரயில் ஓட, மகாத்மாவின் முகத்தைப் பார்ப்பதற்காக மக்களும் சிறிது தூரம் ஓடித்தான் நின்றார்கள். அடுத்தாற் போல் மாயவரத்தில் மக்கள் சற்றுக் கட்டுப்பாடாக நடந்து கொண்டதால், அவர்களுடைய பிரார்த்தனை நிறைவேறியது. இருபுறங்களிலும் மாணவர்கள் கைகோர்த்து நின்று வழி ஏற்படுத்திக் கொடுக்க, பிளாட்பாரத்திற்கு வந்து அண்ணல் சிறிது நேரம் பேசிவிட்டுக் கும்பகோணம் சென்றார்.

குடந்தைக் குழப்பம்

குடந்தையில் எது நடக்கக் கூடாதோ அது நடந்தது. கூட்டத்தினர் மோதித் தள்ளியதில் காந்திஜி இரயில் பெட்டியில் மோதி, அவருடைய இடது கையில் இலேசாக வெட்டுக் காயம் ஏற்பட்டது. (ராவ்பகதூர் என். கிருஷ்ணசாமி ஐயங்கார் மாலையிட்டு வரவேற்றார்.) மிகுந்த சிரமத்துடன் எப்படியோ அண்ணல் வெளியே வந்து, தாம் தங்க இருந்த சமூக சேவா சங்கக் கட்டிடத்திற்கு மோட்டாரில் சென்றார். அன்று பிற்பகலில் போர்ட்டர் நகர மண்டபத்தை ஒட்டி உள்ள (டென்னிஸ் ஆடும்) மைதானத்தில் பந்துலு ஐயர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கதர் அணிந்தவர்கள் அதிகமாகக் காணப்பெற்றார்கள். பல நிறுவனங்களின் சார்பாக வரவேற்புரைகளும் (வடபாதிமங்கலம் காங்கிரசின் வரவேற்புரையை ஜனப் தாவுத்ஷா

வும் மகாத்மா காந்தி வாசகசாலை வரவேற்புரையைக் கந்தசாமி பிள்ளையும் படித்துக் கொடுத்தார்கள்.) அரிசிக் கடைக்காரர்களின் சார்பாகப் பண முடிப்பும் அளிக்கப் பெற்ற பிறகு காந்திஜி பேசத் தொடங்கினர். இங்குக் கூட்டத்தில் ஏற்பட்ட சத்தத்தை கிருஷ்ணதாஸ், தமது ''மகாத்மா காந்தியுடன் ஏழு மாதங்கள்'' என்ற நூலில் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்: ''கூட்டத்திலிருந்த ஒவ்வொருவரும் அடுத்தவரை அமைதியாக இருக்கச் சொல்லிச் சத்தம் போடுவது போல் இருந்தது. ''சத்தம் போடாதே'', ''சத்தம் போடாதே'' என்ற கூச்சல்தான் பலமாக இருந்தது. ஆகவே அமைதிக்குப் பதிலாக எங்கும் சத்தம் தான் கேட்டது. அந்த இடம் சுமார் 3000 பேர் தான் அமரக் கூடியது. ஆனால் வந்திருந்த கூட்டமோ பத்தாயிரத்திற்கும் மேலிருக்கும். ஆகையால் மரங்கள், பூக்கத்துக் கட்டிடங்கள், சுவர்கள் எல்லாவற்றிலுமே மக்கள் காய்த்துத் தொங்கினர். காந்திஜியும் விடவில்லை. தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தால் கூட்டம் அமைதி அடைந்துவிடும் என்று கருதிப் பேசிக் கொண்டே போனார்.'' இங்கு கலியாண இராமன் தெருவில் உள்ள விடுதியில் மகாத்மா தங்கியிருந்தார். மகாத்மாவின் பேச்சை பந்துலு வெங்கட்ராம ஐயர் மொழி பெயர்த்தார்.

இந்தக் கூட்டத்தில் சென்னை மாநிலத்தில் அப்போது காணப்பெற்ற இரண்டு பெருங் குறைகளை அவர் சுட்டிக் காட்டினார். ''இந்த மாநிலத்தில் சுதேசி கொஞ்சமும் முன்னேற்ற மடையவில்லை. இந்தியாவிலுள்ள மாநிலங்களிலெல்லாம் சென்னையில்தான் தீண்டாமை அதிகக் கொடுமையாக இருக்கிறது. ஆகையால் குடந்தையில் உள்ளவர்கள் முதலில் தங்களையே எண்ணிப் பார்த்துத் திருத்திக் கொள்ள வேண்டும்,'' என்றார் அண்ணல். அமைதி ஏற்படவில்லை யாதலால் விரைவில் பேச்சை முடித்துக் கொண்டு புறப்பட ஆயத்தமானார். அவருக்குப் பின்னால் மௌலானா சுபானி பேசத் தொடங்கியபோதோ குழப்பம் மிகவும் அதிகமாகி விட்டது. கூட்டம் முடிந்து விட்டதாக காந்திஜியே அறிவித்துவிட்டுத் தமது குழுவினருடன் சென்று விட்டார். கூட்டத்தை முடித்து விட்டுப் பந்துலு ஐயர் இல்லத்திற்குச் சென்ற காந்திஜி, அங்கு அவரைக் காண்பதற்காகக் கூடியிருந்த ஒரு சிறு கூட்டத்

இரு பெருங் குறைகள்

தில் பேசிவிட்டு, இரயிலில் ஏறித் திருச்சிக்குப் புறப்படப் பயணமானார். தென்னப்பிரிக்காவில் அறப்போரில் சிறைத் தண்டனை அனுபவித்த துரைசாமி பிள்ளை இங்கு அவரைச் சந்தித்தார். தாம் சுவாமி மலையில் இருப்பதாகத் துரைசாமி பிள்ளை கூறினார். ''நீ என்னுடன் சபர்மதி ஆசிரமத்திற்கு வர வேண்டும்'' என்றார் காந்திஜி. அதற்கு துரைசாமி பிள்ளை ''எனக்குத் திருமணம் ஆகிவிட்டது. மேலும் நெல்மிஷின் தொழிலில் தொடங்கிவிட்டேன். அங்கே வருவதற்கு தடங்கல்படுமே என்றார். அதற்கு காந்திஜி, ''அப்படியானால் ஒன்று செய், நீ இந்திய தேசிய காங்கிரசிலே சேர்ந்து சுதந்திரம் வரும் வரைக்கும் தொண்டுசெய். உயிர் போனாலும் பொருட்படுத்தக் கூடாது,'' என்றார். துரைசாமி பிள்ளையும் இதற்கு ஒப்புக்கொண்டார். (காந்திஜி சொன்ன வண்ணமே அரசியல் விடுதலை கிடைக்கும்வரை காங்கிரசில் இடைவிடாது பணியாற்றி வந்தார். 1930-இல் காந்திஜி கட்டளைப்படி வேதாரண்யத்தில் உப்புச்சத்தியாக்கிரகத்தில் தமது மனைவி பிரசவித்த ஐந்தாம் நாளே போய்ப் பங்கு கொண்டார். பல திக்குகளிலும் பிரிந்து சென்ற தொண்டர் படையினரில் ஒரு பிரிவினருக்கு இவர் தலைவராக இருந்தார். சட்டமறுப்பு இயக்கத்தில் நான்கு ஆண்டுத் தண்டனை அடைந்து அவர் மதுரைச் சிறையில் இருந்த போது அவரது வாழ்க்கைத் துணைவியார் துளவம்பாள் ஆச்சியார் இயற்கையடைந்தார்.) தஞ்சையை காந்திஜி அடைந்தபோது, மௌனவிரதத்தைத் தொடங்கி விட்டதால் மக்களுக்கு அவருடைய காட்சி தான் கிட்டிற்று.

குடந்தை தீண்டாமை

கும்பகோணத்திலிருந்து ''நவ ஜீவனுக்கு'' அண்ணல் இச் சமயம் எழுதிய ஒரு கட்டுரையில், கும்பகோணத்தில் அக்காலத்தில் இருந்த தீண்டாமைக் கொடுமையைக் குறிப்பிட்டுள்ளார். ''சென்னை மாநிலத்தில் கும்பகோணத்திலிருந்து நான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். இந்த நகரம் ஆலயங்களுக்காகப் பெயர் பெற்றது. இதில் படித்த திராவிடர்கள் பலர் குடியிருக்கிறார்கள். எனினும், ஒரு தோட்டியின் நிழல் தங்கள் மீது விழுந்தால் கூடத் தீட்டுப் பட்டுவிட்டதாக பிராமணர்கள் எண்ணுகிறார்கள். அவ்வாறு நிழல் பட விடும் தோட்டிக்கு நல்ல உதையும் விழலாம். உதை விழாவிட்டாலும் நிச்சயமாகத் திட்டு நிறையக் கிடைக்கும். சென்னை மாநிலத்தைப் போன்று தீண்டா

மைக் கொடுமை கடுமையாக உள்ள இடம் வேறு எதுவுமே இல்லை. தீண்டாதான் ஒருவன் பிராமணர்கள் குடியிருக்கும் தெருக்களின் வழியாக நடப்பது குறித்து எண்ணிக் கூடப் பார்க்க முடியாது. தீண்டாதார், வேண்டுமென்றே அறியாமையில் முழ்கடித்து வைக்கப் பட்டிருக்கின்றனர். ஒரு மிருகம் நோய் வாய்ப்பட்டால் அதைக் கவனிக்க ஆள் உண்டு; ஆனால் ஒரு தீண்டாத காதவனை ஆண்டவன் தான் காப்பாற்ற வேண்டும்,'' என்று அண்ணல் வருத்தத்தோடு எழுதியிருக்கிறார்.

வதந்தி

இதற்கிடையில் மௌலானா சௌகத் அலியும் கைதாகி விட்டார் என்ற செய்தி வந்துவிட்டது. காந்திஜி கைதாகலாம் என்ற வதந்தி காற்று வாக்கில் பறந்து கொண்டிருந்தது. சென்னையில் கூட மகாத்மா கைதாகிவிட்டார் என்ற வதந்தி பரவி மக்கள் செய்தி நிறுவனங்களை நோக்கிப் படையெடுத்து விட்டனர். அடுத்த மாதம் 6-ஆம் தேதி ஆமதாபாத்தில் காங்கிரஸ் செயற்குழு கூட இருந்தது. அதற்கு முன் இந்தியாவில் பொறுக்கி எடுத்த சிலரைச் சந்தித்துப் பேசுவது நலம் என்று கருதி 4-ஆம் தேதி பம்பாயில் கூடிப் பேசலாமென இந்தியா முழுவதிலும் இருபத்து மூன்று பேருக்கு காந்திஜி ஒரு சுற்றறிக்கை அனுப்பினர். இந்த இருபத்து மூன்று பேரில் யாகூப்ஹாசன், இராஜகோபாலாச்சாரி, கஸ்தூரி ரங்க ஐயங்கார் ஆகிய மூவர் தமிழர்கள்.

18-9-21

இரயில் நிலையத்தில்

திருச்சி இரயில்வே நிலையத்திற்கு அண்ணல் வருவதற்கு முன்பே அங்குப் பெருங்கூட்டம் கூடிவிட்டது. நிலைய அதிகாரி ஐம்பது 'பிளாட்பாரம் டிக்கெட்டு' களுக்கு மேல் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டார். இதன் காரணமாக, நகரப் பெரிய மனிதர்களில் கூடப் பலர் வெளியே நிற்குமாறு நேரிட்டது. நல்வினைப் பயனாக மாவட்டப் போக்கு வரத்து சூபரின்டெண்டான எஸ். கிருஷ்ண மாச்சாரி, அவ்வழியாக வந்தவர், இரயில்வே நிலையத்தின் முன் நின்று கொண்டிருந்த பெருங்கூட்டத்தைப் பார்த்து விட்டு, அவர்களுக்கு இலவசமாக இரயில் நிலையத்திற்குள்

செல்ல அனுமதி தந்தார்; இவ்வளவு சிரமத்துடன் அனுமதி கிடைத்ததன் காரணமாகவோ என்னவோ, அண்ணல் வந்தபோது, மக்கள் வரிசையாகப் பிளாட்பாரத்தில் நின்றார்கள். உள்ளே நிற்க முடியாதவர்கள் வெளியேயும் அந்த இரவு நேரத்தில் வரிசையாகத்தான் நின்றனர். இங்கு காந்திஜி டாக்டர் ராஜன் இல்லத்திலும் சுபானி காஜாமியான் இல்லத்திலும் தங்கியிருந்தார்கள்.

19-9-21

அடக்கு முறை

அண்ணல் திருச்சிக்குச் சென்ற மறுநாள்தான் தமிழகத்தின் தவப் புதல்வர்களில் ஒருவராகிய வ. வெ. சு. ஐயர், தாம் எழுதிய கட்டுரை ஒன்றிற்காக ஒன்பது மாதம் சாதாரணச் சிறைத் தண்டனை விதிக்கப் பெற்றார். இந்தச் சமயத்தில் தான் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை மீது ஜாமீன் கேட்கப் பெற்றது.

நகராட்சி வாதம்

மறுநாள் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அண்ணலுக்கு நகராட்சி மன்றத்தின் சார்பாக வரவேற்பு அளிக்கப் பெற்றது. ஆனால் அவ்வாறு வரவேற்பு அளிக்க நகராட்சி முடிவு செய்ததே ஒரு தனிக் கதை. காந்திஜிக்கு வரவேற்பளிப்பது பற்றி ஆலோசிக்க நகராட்சியின் தனிக் கூட்டம் நடந்தபோது, எங்கு வரவேற்பை அளிப்பது என்பது குறித்து விவாதம் வந்தது. அப்போது, நகராட்சி உறுப்பினரான கே. வி. ஜம்புனுத ஐயர் "காந்திஜி வருகையை முன்னிட்டுக் கூட்டம் ஏராளமாக இருக்குமாதலால், எல்லா நிகழ்ச்சிகளையும் ஒரே இடத்தில் - பொதுக் கூட்டம் நடைபெறும் சௌக் மைதானத்தில் - நடத்துவதே சிறந்தது." என்று சொன்னார். ஆனால், நகராட்சித் தலைவராகிய கான் பகதூர் பி. கலிபுல்லா சாகிப் இந்த யோசனையை ஏற்கவில்லை. "மூப்பதாயிரம் பேர் கொண்ட ஒரு பெரிய கூட்டத்தில் நான் நகராட்சி வரவேற்பைப் படிக்கத் தயாராயில்லை" என்று அவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார். கே. வி. ஜம்புனுத ஐயர் இதை ஏற்கவில்லை. "ஒன்று நீங்கள் நகராட்சியின் முடிவை ஏற்கவேண்டும்; அல்லது உங்கள் பதவியை விட்டு விலக வேண்டும்," என்று கூறினார். இதன் பின்னர், நகராட்சி வரவேற்பைச் சௌக் மைதானத்தில் அளிக்க

வேண்டும் என்ற பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பெற்று நிறைவேறியது. ஆனாலும் பொதுக் கூட்டத்திற்கு நகராட்சித் தலைவர் வராததால் (சில அசந்தர்ப்பங்களினால் வரமுடியவில்லை என்று அவர் கடிதம் அனுப்பியிருந்தார்.) நகராட்சி உறுப்பினர்களில் ஒருவராகிய மௌல்வி சையத் மூர்த்துஜா சாகிப் ஆங்கில வரவேற்புரையையும் டி. வி. நரசபிள்ளை தமிழ் மொழி பெயர்ப்பையும் படித்தனர்.

திருச்சியில் காந்திஜியின் பொதுக் கூட்டம் நடைபெற்ற அன்று அண்ணலுக்கு மௌன தினம். ஆகையால் அவருடைய மௌனம் கலைந்து அவர் பேசுவதற்கு ஏற்றாற் போன்று இரவு எட்டு மணிக்குப் பொதுக் கூட்டம் தொடங்கிற்று. இங்கு மகாத்மாவிற்கும் பிற தலைவர்களுக்கும் பூமாலைகள் அணிவதற்குப்பதிலாக நூல் மாலைகள் தாம் அணிய வேண்டும் என்று உடையார்பாளையம், கள்ளத்தூர் கிராமங்களிலிருந்து நூல் மாலைகளை அனுப்பியிருந்தார்கள். திலகர் சுயராஜ்ய நிதிக்கு ரூ. 15,000 வசூலாகியிருப்பதாகவும் தமிழகத்திலேயே திருச்சிதான் இவ் வசூலில் முதன்மையாக இருப்பதாகவும் மாவட்டக் காங்கிரஸ் குழுச் செயலாளர் டாக்டர் டி. வி. சாமிநாத சாஸ்திரி ஒரு அறிக்கையைப் படித்தார். கூட்டம் முடிவதற்கோ இரவு பதினேழு மணியாகி விட்டது. அவ்வளவு பெரிய கூட்டம் மிகவும் ஒழுங்காகவும் அமைதியாகவும் நடைபெறுவதற்கு முதற் காரணமாயிருந்த தொண்டர்களை அன்று பாராட்டாதார் இல்லை.

பொதுக் கூட்டம்

சென்னைப் பொதுக் கூட்டத்திற்குப் பின்பு அவர் நீண்ட நேரம் பேசியது திருச்சிராப்பள்ளிப் பொதுக்கூட்டத்தில் தான் என்று கூற வேண்டும். சென்னையிலிருந்து அவர் புறப்பட்டதற்குப் பின் சௌகத் அலியும் மற்றும் சில தலைவர்களும் கைது செய்யப்பெற்றது அவருடைய மனத்தை மிகவும் புண்படுத்தியிருக்க வேண்டும். ஆகையால் அவர் திருச்சியில் பேசியது ஒரு பெரிய அறைகூவலாக அமைந்து விட்டது. ''மௌலானா சௌகத் அலி 17-ஆம் தேதி பம்பாயில் கைதானார் என்பதை உங்களில் எல்லோரும் அறிந்திருக்கமாட்டீர்கள். பஞ்சாபில் இதே கௌரவம் டாக்டர் கிட்சுலுவிற்கு அளிக்கப்பெற்றுள்ளது. (அலி சகோதரர்களைக் கைது செய்ததற்கு) பம்பாய் அரசு

நீண்ட பேச்சு

அளித்த முதற்காரணம் அவர்கள் இராணுவத்தின் விசுவாசத்திற்குக் குந்தகம் விளைவித்தார்கள் என்பதாகும். இது ஒரு புதுக் குற்றமல்ல. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் இக் குற்றத்தை நானே செய்திருக்கிறேன். செப்டம்பரில் கல்கத்தாவில் கூடிய காங்கிரசும் இதே குற்றத்தைச் செய்தது. இந்தக் கணத்தில் கூட நான் கூறுகிறேன். இந்த அரசாங்கமானது இந்த நாட்டை அட்டையாக உறிஞ்சி விட்டது. இஸ்லாம் மதத்தை உலகத்தின் முன்னிலையில் அவமரியாதை செய்திருக்கிறது. ஜாலியன் வாலாபாக் படுகொலைக்கு இந்த அரசுதான் காரணம். ஆகையால் இந்தியர் என்று தன்னைக் கருதிக் கொள்ளும் படை வீரர் ஒவ்வொருவரையும், அரசாங்க ஊழியர் ஒவ்வொருவரையும்–அவர்கள் சுதேசியின் பொருளை மட்டும் புரிந்து கொண்டால்–அவைகளிலிருந்து வெளியேறி வந்துவிடுமாறு நான் அழைக்கிறேன்,'' என்று முழங்கினார் அண்ணல்.

ஆனால் அதே சமயம் மக்கள் ஆத்திரமடைந்து வன்முறையில் ஈடுபட்டுவிடக் கூடாதே என்பதிலும் அவர் எச்சரிக்கையாக இருந்தார். பயங்கரமான வன்முறை ஆத்திரத்தை அரசு தூண்டியிருந்தாலும் கூடாது அமைதியைக் கடைப்பிடித்ததற்காக மக்களை அவர் பாராட்டினார். ''இந்த நெருக்கடியான கட்டத்தில் தங்களுடைய கடமை என்னவென்று கும்பகோணம், சென்னை ஆகிய நகரங்களைச் சேர்ந்த மாணவர்கள் என்னைக் கேட்டார்கள். அரசாங்கத்தால் நடத்தப் பெறும் பள்ளிகளிலிருந்தும் அரசாங்கத்தின் உதவி பெறும் பள்ளிகளிலிருந்தும் அவர்கள் வெளியேறி வந்துவிட வேண்டும் என்பதுதான் என் அறிவுரை. திருச்சிராப்பள்ளியில் இதை மனமார உணர்ந்து அரசாங்கப் பள்ளிகளிலிருந்து வெளியேறியுள்ள மாணவர்களை நான் பாராட்டுகிறேன். ஆனால் அதே சமயம் பள்ளிகளைவிட்டு ஏதாவது ஒரு காரணத்தால் வெளிவர முடியாதவர்களுக்கும் என்னுடைய அனுதாபம் உண்டு. மனம் மட்டும் இருந்தால் பள்ளிகளில் இருந்து கொண்டும் தங்கள் நாட்டிற்கு அவர்கள் சேவை செய்யலாம். ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் அல்லது இரண்டு மணி நேரம் இந்தியாவின் நலனுக்காக நூற்கலாம்,'' என்று அண்ணல் கூறினார். ''பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வந்த மாணவர்களும், தங்கள் தொழிலை விட்டுவிட்ட வழக்கறி

ஞர்களும், அவ்வாறு செய்யாத மாணவர்களையோ வழக்கறிஞர்களையோ தாழ்வாகக் கருதிவிடக் கூடாது,' என அவர் எச்சரித்தார்.

அந்தக் காலத்தில் புதுக்கோட்டை தர்பாரின் ஆட்சி ஒரு பெரிய தர்பாராக இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஏனெனில் அது பிரிட்டிஷ் ஆட்சியைக் காட்டிலும் ஒருபடி மேலே தாண்டியது. அலி சகோதரர்களைக் கைது செய்த ஆங்கில அரசு, அண்ணலைத் தமிழகத்தில் சுற்றுப்பயணம் செய்ய அனுமதித்தது. ஆனால், புதுக்கோட்டை தர்பாரோ, திருச்சியிலிருந்து புதுக்கோட்டை வழியாக அண்ணல் செட்டிநாடு செல்வதைக் கூடத் தடை செய்து விட்டது. அப்போது புதுக்கோட்டை சமஸ்தான திருவாகியாக இருந்த சர் சிட்னி பர்ன் ஐ. சி. எஸ் (இவர் பின்னால் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதியானார்) அண்ணலுக்கு ஒரு தூதுவர் மூலம் அனுப்பிய ஆணையில் ''நீங்கள் இந்தச் சமஸ்தானம் வழியாகச் செல்ல அனுமதிக்க முடியாது. அவ்வாறு செல்ல முயன்றீர்களானால் எல்லையில் போலீசாரால் நிறுத்தப் பெறுவீர்கள்'' என்று கூறியிருந்தார். இதற்கு அண்ணல் அனுப்பிய பதில் மிகவும் உருக்கமாக இருந்தது. ஒத்துழையாமையை நிறுத்தி வைத்திருந்த அண்ணல் புதுக்கோட்டைக்காக ஒரு புதுச் சிக்கலை உருவாக்க விரும்பவில்லை. புதுக்கோட்டை அதிகாரிக்கு அவர் எழுதியிருந்தார் :

''ஐயா, தங்களுடைய 18-ஆம் தேதிக் கடிதம் கிடைத்தது. புதுக்கோட்டை சமஸ்தானம் வழியாகச் செட்டிநாட்டிற்குச் செல்லலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் உங்களுடைய கடிதத்தின் காரணமாக, என்னுடைய வழியை மாற்றிக் கொள்கிறேன்.''

•

புதுக் கோட்டை அதிகாரி பட்ட பாடு

உத்தரவை காந்திஜியிடம் அளிக்க வந்த புதுக்கோட்டை போலீஸ் அதிகாரி டாக்டர் ராஜனிடம் பட்ட பாடு ஒரு சோகக் கதையாகும். ''தினமணி சுடரில்'' (17-12-67) ஆர். கிருஷ்ணசாமி இதைச் சுவைபடக் கூறியுள்ளார். 'காலை 10 மணியிருக்கும். பெரிய போலீஸ் அதிகாரியொருவர் காந்திஜியைக் காண வந்தார். புதுக்கோட்டை

சமஸ்தானத்திற்குள் காந்திஜி பிரவேசிக்கக் கூடாது என்று தர்பார் பிறப்பித்திருந்த உத்தரவை காந்திஜியிடம் சமர்ப்பித்தார். காந்திஜி பெற்றுக் கொண்டு, அவருக்கு விடையளித்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் அங்குக் கூடியிருந்த காங்கிரஸ் ஊழியர்களும், மற்றவர்களும் சாப்பாட்டுக்கு அழைக்கப்பட்டனர். இலைகள் போட்டு உணவு வகைகள் பரிமாறப்பட்டு வந்தன. டாக்டர் ராஜனும் மற்றும் சில தொண்டர்களும் எல்லோருக்கும் பரிமாறிக் கொண்டு வந்தனர். சாப்பிடுவோர் வரிசையில் அந்தப் போலீஸ் அதிகாரியும் அமர்ந்திருப்பதை டாக்டர் ராஜன் பார்த்து விட்டார். அவ்வளவுதான், கையிலிருந்த பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு, அந்த அதிகாரியைப் பார்த்து, ஆத்திரத்துடன், ''ஓய், உம்மை யாரையா இங்கு சாப்பிட உட்கார்த்தியது? எழுந்திரும். மகாத்மா மீது தடையுத்தரவு சாதரா செய்துவிட்டுச் சாப்பிடவும் உட்கார்ந்து விட்டீரே?'' என்று கத்தினர். அந்த அதிகாரியின் முகம் சுண்டி விட்டது. சரெலென்று எழுந்து வெளியே சென்று விட்டார். ''இந்தச் சம்பவம் காந்திஜியின் காதுக்கு எட்டி விட்டது. அவர் பெரிதும் வேதனைப்பட்டுக் கொண்டு, டாக்டர் ராஜனைக் கூப்பிட்டு அனுப்பினர். அவர் வந்தும், காந்திஜி பெரும் வேதனையுடன், ''ராஜன்! என்ன காரியம் செய்து விட்டீர்கள்? அகிம்சை தர்மத்திற்கே முரணான காரியத்தைச் செய்து விட்டீர்களே? அந்த அதிகாரி தன் கடமையைச் செய்தார். அதற்குக் கிடைத்த பலன் இதுதானே? அவரிடம் நீங்கள் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு அவரை அழைத்து வந்து சாப்பிடச் செய்யும் வரையில் நான் சாப்பிடப் போவதில்லை'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அந்த அதிகாரி அங்குள்ள பஸ் நிலையத்திற்குத் தான் சென்றிருக்க வேண்டும் என்று ஊகித்து, டாக்டர் ராஜன் நேரே அங்குச் சென்றார். அவர் எதிர்பார்த்தபடியே அந்த அதிகாரி அங்கிருந்தார். அவரை அணுகி, ''ஓய், நான் செய்ததற்கு என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். மகாத்மாவுக்கு என் மீது ஒரே கோபம். உங்களைச் சந்தித்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, சாப்பிட வைத்தாலொழிய தாம் சாப்பிடப் போவதில்லை என்று சொல்லிவிட்டார். வாருங்கள் போகலாம்,'' என்று உள்ளமுருகக் கூறினர். அந்த அதிகாரியின் உள்ளம் நெகிழ்ந்தது. இருவரும் நேரே ஜாகைக்குச் சென்றனர்.

20-9-21

மறுநாள் காலை மகாத்மா ஸ்ரீரங்கம் நகரசபை அலுவலகத்திற்குச் சென்று அந்நகரசபையின் வரவேற்பைப் பெற்றுக் கொண்டார். நகராட்சி மன்றத் தலைவரான பி. சீனிவாசராகவ ஐயங்கார் வரவேற்புரையைப் படித்து, வெள்ளிப் பேழையில் வைத்து அளித்தார். நகராட்சிகளுக்கு மூன்று வகையான கடமைகள் உண்டு என்று அன்று அண்ணல் கூறியதை இன்று கூட நகராட்சி மன்றங்கள் எண்ணிப் பார்த்தால் நலமாய் இருக்கும். அவர் கூறிய கடமைகளாவன: (1) ஒவ்வொரு நகராட்சி மன்றமும் அதன் எல்லைக்குள் வாழும் பொது மக்கள் வெளிநாட்டுத் துணிமணிகள் அணியாமலும், கதர் அணியுமாறும் பார்த்துக் கொள்ள வேண்டும். (2) குடிப்பழக்கத்தை முற்றிலும் அகற்றிவிட வேண்டும் (3) தீண்டாமைக்குக் கிஞ்சிற்றும் இடமளிக்கக் கூடாது.

(பின்னே ஓலையில் அச்சிடப் பெற்றிருந்தது.)

ஸ்ரீரங்கம்

இதன்பின், அடுத்தாற்போலுள்ள காரொனேஷன் மண்டபத்திற்குச் சென்று, அங்குப் பொது மக்களின் சார்பாக, டி. வி. சேஷாத்திரி ஐயர் படித்தளித்த வரவேற்புரையைப் பெற்றுக் கொண்டார். இந்த வரவேற்புரையும் ஸ்ரீ வாணி விலாஸ் அச்சகத்தாரால் கலை அழகுடன் பின்னே ஓலையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப் பெற்றிருந்தது. இங்கு அண்ணலிடம் வழங்கப்பெற்ற பொருள்களில் அரிசி மூட்டைகளும் இருந்தன. (இங்கு வழங்கப் பெற்ற) வரவேற்பு இதழ்கள் பின்னே ஓலைகளில் அச்சிடப் பெற்றிருந்த அழகை அண்ணலே தமது சொற்பொழிவில் பாராட்டினார். ''ஒரே ஒரு குறை என்னவென்றால் உங்கள் மொழியிலோ தேசிய மொழியிலோ எழுதப் பெறாமல் அது ஆங்கிலத்தில் எழுதப் பெற்றிருக்கிறதே என்பது தான்'' என்று அவர் வருத்தத்துடன் சொன்னார். ஒவ்வொரு முறையும் ஆங்கிலத்தைப் பேசுவது தமக்குத் தலைக்குனிவாக இருக்கிறது என்றும் அதனால் தான், மார்வாரி நண்பர்களிடம் பணம் வசூல் செய்து சென்னை மாநிலத்தில் இந்திப்பிரச்சார வேலைகளை நடத்தி வருவதாகவும் சொன்னார். பிராமண வகுப்பினரைச் சேர்ந்த பலர் ஆசாரமாக

பொதுக் கூட்டம்

அன்று பொதுக்கூட்டத்தில் வந்து அமர்ந்திருந்தார்கள் என்று தெரிகிறது. அவர்களை நோக்கி அண்ணல் சொன்னார்: ''பல்வேறு வர்ணங்களிலுள்ள வெளிநாட்டுத் துணி மணிகளை ஆடம்பரமாக அணிந்து கொண்டு நம்முடைய மாதர்கள் வெளியே வரும்போது, அவர்களைப் பார்க்க எனக்கு வருத்தமாக இருக்கிறது. மேல் சட்டை எதுவும் இல்லாது, திலகம் இட்டுக் கொண்டு அமர்ந்திருக்கும் நீங்கள் எவ்வளவோ அழகாய் இருக்கிறீர்கள். ஆனல் நீங்களும் வெளிநாட்டுத் துணிமணிகளை நாடிச் செல்லும் போது நம்முடைய நாட்டின் தீவினைப்பயனை நினைத்து நான் வருந்துகிறேன்.''

கரூர் சிக்கல்

காந்திஜி தமிழகத்திற்கு வந்த சமயத்தில் கரூரில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. திலகர் சுயராஜ்ய நிதிக்கு ஒரு திரைப்படக் கொட்டகை நிருவாகி பண உதவி அளிக்க மறுத்து விட்டதால் பலர் சேர்ந்து அந்தத் திரைப்படக் கொட்டகையை முற்றுகையிட்டிருக்கிறார்கள். அதன் எதிரொலியாகப் பல நாட்கள் கழித்துக் கரூர் காங்கிரஸ் குழுவைச் சேர்ந்த 40 உறுப்பினர்களைப் போலீசார் கைது செய்தனர். இந்த நிகழ்ச்சியை காந்திஜியின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவரைக் கரூருக்கு வருமாறு அந்நகரைச் சேர்ந்த மக்கள் அழைத்திருந்தார்கள். ஆனல் அவரால் அங்குப் போக முடியவில்லை. திருச்சியிலிருந்து கரூர் காங்கிரஸ் குழுவிற்கு ஒரு கடிதம் வரைந்துள்ளார். ''கரூருக்கு வர இயலாமல் இருப்பதற்காக வருந்துகிறேன். நீங்கள் எவ்வளவு சிறந்த முறையில் மது விலக்கிற்காகப் பணியாற்றியிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். ஆனல் அதே சமயம் திலகர் சுயராஜ்ய நிதிக்கு நன் கொடை அளிக்குமாறு கொட்டகை நிருவாகிக்குத் துன்பம் கொடுத்ததை அறிய வருத்தமாயிருந்தது'' என்று அவர் இக்கடிதத்தில் கூறியிருந்தார்.

கோட்டையில் எதிரோலி

அண்ணல் தம் கடிதத்தில் கூறியிருந்தபடியே தம் வழியை மாற்றிக் கொண்டார். திண்டுக்கல், மதுரை, வழியாகச் செட்டி நாட்டிற்குச் சென்றார். அதற்கிடையில் புதுக்கோட்டையில் என்ன எதிரொலி ஏற்பட்டது என்பதை நாம் பார்க்க வேண்டும். புதுக்கோட்டை வழியாக காந்திஜி செல்லும்போது அங்குள்ள மாவட்ட காங்கிரஸ்

குழு அலுவலகத்தில் அவரை வரவேற்று வரவேற்புரை களும் பண முடிப்புகளும் அளிக்க வேண்டுமென்று காங்கிரஸ் குழு நிருவாகிகளும் பொதுமக்களும் கணக்கிலடங்கா ஆர்வத்துடன் இருந்தனர். நகராட்சியும் காந்திஜியை வரவேற்பதென்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தது. ஆனல் புதுக்கொட்டை ஆட்சியானது தனது ரத்து அதிகாரத்தைப் பயன்படுத்தி, மேற்கண்ட தீர்மானம் செல்லுபடியாகாமற் செய்து விட்டது. இதையெல்லாம் அறிந்த மக்கள் அடைந்த ஏமாற்றத்தையும் ஆத்திரத்தை யும் சொற்களில் விவரிக்க முடியாது. வழியில் ஆலங்குடி யிலும் குளத்தூரிலும் அண்ணலுக்கு வரவேற்பு அளிக்க வேண்டுமென்ற ஆவலுடன் இருந்த அக்கிராம மக்கள் தங்கள் பண முடிப்புகளை எடுத்துக் கொண்டு காரைக்குடிக்கு ஓடினர்கள். எப்படியும் அண்ணலை நேரில் பார்த்து அவர் கையில் அல்லவா அத்தொகையை அளிக்கவேண்டும்? வேறு பலரோ, எப்படியும் மகாத்மா புதுக்கோட்டைக்கு வந்து விடுவார் என்ற நம்பிக்கையில் அங்கு வந்தார்கள். இந்த நம்பிக்கையுடன் ஆலங்குடி, குளத்தூர், அன்னவாசல், முதலிய கிராமங்களிலிருந்து வந்தவர்கள் ஏராளம். இவ் வாறு வந்த கூட்டம் திலகர், காந்திஜி, அலி சகோதரர்கள் ஆகியோரின் படங்களுக்கு மாலையிட்டு அவைகளைச் சுமந்து கொண்டு, நான்கு முக்கிய தெருக்களின் வழியாக ஊர்வல மாக வந்தது. ''புதுக்கோட்டை ஆட்சியாளரின் உத்தரவு மக்களுக்கு ஏமாற்றம் அளிப்பதாகவும் புதுக்கோட்டை காங்கிரஸ் குழுவின் வரவேற்பைக் காரைக்குடியில் மகாத்மா முன் படித்துக் கொடுப்பதென்றும்'' தீர்மானம் நிறை வேற்றப் பெற்றது.

திண்டுக்கல்

இவ்வாறெல்லாம் புதுக்கோட்டைப் பக்கம் நடந்து கொண்டிருந்தபோது திண்டுக்கல் வழியாக காந்திஜி மதுரைக்குச் சென்றுகொண்டிருந்தார். திண்டுக்கல்லுக்கு இது எதிர்பாராத யோகம். காந்திஜி வருகையை முன்னிட்டு அன்று திண்டுக்கல்லில் ஒரே அலங்காரமாக இருந்தது. இரயில்வே நிலையத்திலும் ஆபிரக்கணக்கில் கூட்டம். ஆனலும் நகராட்சி வரவேற்பிற்கு, திண்டுக்கல் நகராட்சியி லிருந்த இருபது உறுப்பினர்களில் பத்துப்பேரே வந்திருந் தனர். நகராட்சி மன்றக் கூட்டம் நடுமதியத்தில் நடை பெற்றது; அதன் தலைவரான ஆர். இராமசாமி நாயுடு

வரவேற்புரையைத் தமிழில் படித்துக் கொடுத்தார். பொதுக் கூட்டமும் பொருத்தமற்ற ஒரு நேரத்தில் - அதாவது பிற்பகல் மூன்று மணிக்குத்தான் மலைக்கோட்டை மைதானத்தில் கூடியது. காளஸ்திரி தேவஸ்தான கட்டிடத்திற்குச் சென்று இளைப்பாறிவிட்டுப் பொதுக்கூட்டத்திற்கு அண்ணல் வந்தார்.

பொதுக் கூட்டம்

முதலில் காந்திஜி புதுக்கோட்டை வழியாகக் காரைக்குடி சென்று அங்கிருந்து மதுரை செல்வதாக இருந்ததால், திண்டுக்கல் வரும் திட்டம் இல்லை. ஆனால் அவர் தமது பயணத்திட்டத்தை மாற்றி நேரே மதுரை வர இருக்கிறார் என்பதை அறிந்த வுடன் திண்டுக்கல் பிரதிநிதிகள் திருச்சிக்குச் சென்று அவரைத் தங்கள் நகருக்கு வந்து இறங்கிச் செல்லுமாறு அழைத்தார்கள். அழைப்பின் பேரில் தாம் வந்ததைத் தான் காந்திஜி முதலில் கிளப்பினர். காந்திஜி தம்மை பனியா அதாவது வைசிய வகுப்பைச் சேர்ந்தவர் என்று அடிக்கடி வேடிக்கையாகக் கூறிக்கொள்வது வழக்கம். இங்கும் அசல் பனியா தோரணையில் அவர் சொன்னார்: "உங்களுடைய பிரதிநிதிகள் திருச்சிக்கு வந்து மௌலானா சாகிபையும் என்னையும் இந்நகருக்கு வருமாறு அழைத்தார்கள். அவ்வாறு அழைத்தவர்கள் ஒத்துழையாமைக்கு தங்கள் நகரில் அசாதாரணமான ஆதரவு காண்பிப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். நீங்கள் எல்லோரும் கதர் அணிந்திருப்பீர்கள் என்றும் இந்நகரில் ஒவ்வொரு வீட்டிலும் இராட்டை சுழலும் என்றும் எதிர்பார்த்தேன். ஆனால் அதற்குமாறுக, இங்கு நான் என்ன பார்க்கிறேன்! அதிகமான சத்தத்தைத்தான் பார்க்கிறேன்!! நல்ல உற்சாகம் இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும், நமக்கு சுயராஜ்யம் வேண்டுமென்றால், அலி சகோதரர்கள் விடுதலை பெறவேண்டுமென்றால், நம்முடைய உற்சாகம் சரியான வழியில் செயல்பட வேண்டுமல்லவா? என்றார்.

விளையான் விளையாக்கிக் கோடல், நனைகவுள்
யானையால் யானை யாத்தற்று.

(ஒரு செயலால் மற்றொரு செயலையும் முடித்துக் கொள்வது, யானையால் யானையைப் பிடிப்பது போன்றது.)

இதற்குள் திண்டுக்கல்லில் எத்தனை இராட்டைகள் சுழல்கின்றன, அதன் மக்கள் தொகை என்னவென்பதை

யெல்லாம் அண்ணல் விசாரித்துவிட்டார். '' திண்டுக் கல்லில் முந்நூறு இராட்டைகள் நாம் இருக்கின்றன. மக்கள் தொகையோ முப்பதாயிரம்; பத்தாயிரம் பேர் முகமதியர்கள்; இருபதாயிரம் பேர் இந்துக்கள். ஒரு குடும்பத்தில் சராசரியாக ஐந்துபேர் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொண்டாலும் இங்கு 6000 இராட்டைகள் இருக்க வேண்டுமே?'' என்று அவர் கேட்டார். அதோடு நிற்க வில்லை. '' நீங்கள் சிறு சிறு கோஷ்டிப் பூசல்களில் இறங்கியுள்ளீர்கள் என்று கேள்விப்படுகிறேன். ஒவ்வொரு வரும் அவரவர் சுய நலத்தைக் கவனித்துக் கொண்டு போவதானால், நிச்சயமாக சுயராஜ்யம் வராது' என்று எச்சரித்தார் அவர்.

மணப்பாறை

திண்டுக்கல்லுக்கு மெயில் இரயிலில் வந்ததால், மணப் பாறை இரயில் நிலையத்தில் மட்டும் ரெயில் நின்றது. பெருந்திரளாக மக்கள் கூடி நின்று அண்ண லுக்கு மாலையிட்டு வரவேற்பளித்தனர். திண்டுக்கல்லிலிருந்து சாதாரண பயணிகள் (ஷட்டில்) இரயிலில் சென்றதால், அம்மய நாயக்கனூர், வாடிப்பட்டி, கருப்பட்டி, சோழவந்தான், சமய நல்லூர், முதலிய ஒவ்வொரு இரயில் நிலையத்தி லும் திருவிழாப் போன்ற ஒரே கூட்டந்தான். கருப்பட்டி யில் ஆந்திர மாதர்கள் கூட்டம் அதிகமாய் இருந்ததாக அக்காலத்திய செய்தித்தாள்கள் கூறுகின்றன. சோழவந்தா னிலோ இரயில் நிலையகிராதியே சாய்ந்து விட்டது. இவ்வளவு பெரிய கூட்டத்திற்கும் மத்தியில் ஒரு சிறு விபத்துக்கூட நிகழாமல் இரயிலை ஓட்டி வந்தவரையும் வழி நடத்தி வந்த கார்டையும் நாம் பாராட்டத்தான் வேண்டும்.

மதுரையில் உற்சாகம்

காந்திஜி மதுரையில் இறங்குவதற்கு முன் மதுரையை நாம் ஒரு முறைசுற்றிப் பார்த்துவிட்டு வரவேண்டும். சில நாட்களாகவே மதுரையில் ஒரே உற்சாகம். காந்திஜி வரப்போகிறார்; கதரைக் கட்டிக் கொண்டு அவரைக் காண வேண்டும் என்று மக்களுக்குக் கட்டுக்கடங்காத ஆவல். தையல் கடைக்காரர்களுக்குக் குல்லாய்களும் சட்டைகளும் தைப்பதில் நல்ல வேலை கிடைத்தது. கதர் வேட்டிகளும் நிறைய விற்பனையாயின. மாதர்கள் மட்டுமென்ன மட்டமா? அநேகர் கதரிலேயே இரவிக்கை தைத்துக் கொண்டார்கள்.

திராவிட சங்கம் சும்மாயிருக்குமா? காந்திஜியின் வரவேற்பில் திராவிட மக்கள் பங்கு கொள்ள வேண்டாமென்று ஒரு சுற்றறிக்கையை வழங்கியது. காந்திஜி மறுமொழி சொல்லியாக வேண்டுமென்று சில கேள்விகளும் இதில் அச்சிடப் பெற்றிருந்தன. ஆனால் இவைகளையெல்லாம் கவனிப்பார் யார்? இவைகளைப்பார்த்த பின்னும் மக்களுடைய உற்சாகம் கூடியதே தவிரக் குறையவில்லை.

பொதுக் கூட்டம்

காந்திஜியின் இரயில் மதுரை இரயில் நிலையத்திற்கு வந்து சேர்ந்த போது இரயில் நிலையத்தில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்றிருப்பார்கள் என்றாலும், அமைதியாகவே இருந்தார்கள். இரயில் நிலையத்திற்கு வெளியே காந்திஜியை அழைத்து வந்து, காரில் அமரவைத்து நிலையத்தின் ஓரத்திலேயே இருக்கும் மதுரைக் கல்லூரி மைதானத்திற்கு அழைத்துச் சென்றார்கள். வழியெல்லாம் கூட்டம் சமாளிக்க முடியாத அளவு இருந்ததால் அந்தச் சிறிய தூரத்தைக் கடப்பதற்கே பல முறை கார் நிற்க வேண்டியதாயிற்று. பொதுக் கூட்டத்திலோ இன்னும் அதிகக் கூட்டம்; ஐம்பதாயிரத்திற்கும் மேல் மக்கள் இருந்திருப்பார்கள். இரயில் நிலையத்தில் மக்கள் காண்பித்த அமைதிக்குப் பொதுக் கூட்டத்திலிருந்த சத்தம் நேர் முரணாக இருந்தது. கூட்டத்தினர் போட்ட சத்தத்தில் காந்திஜியின் பேச்சுக் கேட்கவே இல்லை. மாவட்ட காங்கிரஸ் குழுவினரும் மதுரை வர்த்தக சமஸ்தாக்கள் சங்கத்தினரும் மதுரை - இராமநாதபுரம் மாவட்ட மகாஜன சபையினரும் அண்ணலுக்கு வரவேற்புரை அளித்தார்கள். எஸ். டி. கிருஷ்ண ஐயர் ஒரு வரவேற்புரையை டைப்படித்துக் கதர்ப்பையில் போட்டுக் கொடுத்தார். அவரே காந்திஜியின் பேச்சையும் மொழி பெயர்த்தார். பெயர் பெற்ற தேசிய வாதியும் நாடக நடிகருமான விஸ்வநாத தாஸ் இங்கு காந்திஜி வருவதற்கு முன் பாடல்கள் பாடிக் கூட்டத்தை அமைதிப் படுத்திக் கொண்டிருந்தார். இந்தக்கூட்டத்தில்தான் தலைவர் காமராஜ் முதன் முதலாக காந்திஜியைப் பார்த்திருக்கிறார். அப்போது அவர் ஒரு சாதாரண ஊழியர்.

பிற்காலத்தில் சென்னை மாநில அரிஜன சேவாசங்கச் செயலாளரான பி. கே. இராமாச்சாரி அப்போது ஒரு

சிறு பையன். மதுரையில் அவரும் பி. வி. சுப்பையா, ராஜாராம் எம். கொண்டா, எஸ். ஆர். முத்துகிருஷ்ணன் என்ற மூவரும் ஒத்துழையாமை இயக்கத்தை அனுசரித்து எஸ். எஸ். எல். சி யில்பள்ளிப் படிப்பை விட்டிருந்தார்கள். அவர்கள் ஆர்வத்தோடு காந்திஜியை வரவேற்கச் சோழவந்தானுக்குப் போய் அங்கிருந்து காந்திஜியின் இரயிலிலேயே வந்தார்கள். மதுரைப் பொதுக்கூட்டத்தில், ஒத்துழையாமை இயக்கத்தின் காரணமாகப் படிப்பை நிறுத்தியவர்கள் என்று பெருமையோடு இந்த நான்கு பேரையும் காந்திஜிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

மாணவர்கள்

கூட்டத்தினர் போட்ட சத்தம் காந்திஜியின் உள்ளத்தை மிகவும் புண்படுத்தியிருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. பேச்சை இரத்தினச் சுருக்கமாக முடித்துக் கொண்டார். அந்தச் சுருக்கமான பேச்சும் முக்காலே மூன்று வீசம் கூட்டத்தினர் போட்ட சத்தத்தைப் பற்றியதுதான். ''ஆயிரக்கணக்கான வரவேற்புரைகளை நீங்கள் அளித்து விட்டாலுங் கூட, நாம் சுயராஜ்யம் பெற்றுவிட முடியாது. இந்தச் சத்தம் எனக்குப் பெரும் மன வருத்தத்தை அளிக்கிறது. இந்த வெட்டிச் சத்தத்தையெல்லாம் கேட்க மதுரைக்கு வந்தேனே என்று வருந்துகிறேன். உங்களுக்கு தர்ம ராஜ்யம் வேண்டுமென்றால், நீங்கள் இராட்டையைச் சுழற்ற வேண்டும். அதுதான் சாந்தியின் சின்னம்; இந்து முஸ்லிம் ஐக்கியத்தின் சின்னம்'' என்று அவர் அறிவுரை வழங்கினார். மதுரையிலும் ராம்ஜி கல்யாண்ஜியின் விருந்தினராக மேலமாசி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் தங்கியிருந்தார். அன்று இரவு மதுரை பெண்கள் சங்கத்தாரும் குசராத்தி வணிகர்களும் முஸ்லிம் வாலிப சங்கத்தாரும் அவரைச் சந்தித்து வரவேற்புரைகளும் பணமுடிப்புகளும் அளித்தார்கள்.

சத்தம்
சத்தம்

காந்திஜி மதுரைக்கு வந்திருந்தபோது, சோழவந்தான் தலைவர்களுக்குள் ஏற்பட்ட சிக்கல் ஒன்று காந்திஜியின் கவனத்திற்குக் கொண்டுவரப் பெற்றது. அந்தக் காலத்தில் மதுரை மாவட்டத்தில் ஒத்துழையாமை இயக்கப் போராட்டத்திற்கு முக்கிய தலைவர்களாக விளங்கியவர்கள் மதுரையில் பெயர் பெற்ற வழக்கறிஞரான ஜார்ஜ் ஜோசப்

சோழவந்தான் சிக்கல்

பும் சோழவந்தானில் முன்கால பட்டாபிராமையாவும் ஆவார்கள். நிலக்கோட்டைத் தாலுகாவில் கள்ளுக்கடை ஏலம் போடப் பெற்றபோது, முன்கால பட்டாபிராமையாவும் மட்டப்பாறை வெங்கட்ராமையர், மதுரை மௌலானா சாகிப், இரும்பாடி நல்லதம்பி பிள்ளை, சோழவந்தான் திருமேனி, மட்டப்பாறை தாசன், மட்டப்பாறை வெள்ளைச் சாமி ஆகிய ஏழு பேரும் மற்றும் பலரும் மறியல் செய்தார்கள். மேற்கண்ட ஏழுபேரையும் கைது செய்த அரசாங்கம், அவர்கள் மீது மறியல் செய்ததாக வழக்குப் போடாமல் கொள்ளையடித்ததாக வழக்குத் தொடர்ந்தது. இவ்வாறு, உண்மைக்கு மாறுக அரசாங்கம் வழக்குத் தொடர்ந்திருப்பதால் நீதி மன்றத்தில் எதிர்த்து வாதாடவேண்டும் என்று பட்டாபிராமையா தவிர மற்ற ஆறுபேரும் கருதினர். ஆனால் பட்டாபிராமையா மட்டும் இதை ஒப்புக்கொள்ளவில்லை. (கள்ளுக்கடை மறியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பெற்றவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டு சிறைக்குச் செல்வதுதான் வழக்கமாக இருந்தது.) ஆகவே, மகாத்மா மதுரைக்கு வந்திருந்தபோது மற்ற ஆறுபேரும் காந்திஜியின் ஆலோசனையை நாடினார்கள். வழக்கை எதிர்த்து வாதாடலாமா கூடாதா என்பது அவர்கள் கேள்வி. அதற்கு அவர், ''உண்மையாக என்ன நடந்ததோ அவைகளை நீதிமன்றத்தில் எடுத்துச் சொல்லுங்கள். எதெது நடக்கவில்லை என்பதை நீங்கள் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் தவறு செய்திருந்தால் தவறை ஒப்புக் கொள்ளுங்கள். செய்யாத தவறைச் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தால் அதை மட்டும் மறுத்து விடுங்கள். ஆனால் எதிர் வழக்காட வேண்டாம்'' என்று கூறிவிட்டார்.

22-9-21

ஆடையின் மாற்றம்

மறுநாள்தான் வரலாற்று முக்கியத்துவம் உள்ள அந்தப் புரட்சிகரமான நடவடிக்கையை அண்ணல் மேற்கொண்டார். சட்டையில்லாமல் அரை ஆடையின் ஆடை புனைந்து வெளியில் அவர் பொது நடவடிக்கைகளுக்கு வந்தது இன்றுதான்.

ஒரு சாதாரண மனிதர் இவ்வாறு சட்டையில்லாமல் வெளியே நடமாடினால் அது சாதாரண நிகழ்ச்சியாகப் போயிருக்கும். ஆனால் மகாத்மா மேற்கொண்ட இந்த நடவடிக்கை உலகப் புகழ் பெற்ற ஒரு நிகழ்ச்சியாகி

விட்டது. சட்டை இல்லாது இடுப்பில் ஒரு துணி மட்டும் அணிந்து கொண்டுதான் பின்னர் அவர் வைசிராய்களையும் பிரிட்டன் பேரரசரையும் பெரிய சர்வாதிகாரிகளையும் சந்தித்துப் பேசினார். இதன் காரணமாக அண்ணலை, ''அரை நிர்வாணப் பக்கிரி'' என்று சர்ச்சில் கேலி செய்தார். முதலில் இவ்வாறு சட்டையில்லாமல் வேட்டி மட்டும் கட்டிக் கொள்வதை ஒரு தற்காலிகமான முடிவாகத் தான் அவர் மேற்கொண்டிருந்தார். ஆனால் பின்னர் அதுவே நிலைத்து விட்டது. அவர் மறையும் வரை அது மாறவே இல்லை. இவ்வளவு பெரிய வரலாற்று முக்கியத்துவம் மிக்க முடிவை காந்திஜி மதுரையம்பதியில் வந்து மேற்கொள்வார் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அவரே கூட, முன் கூட்டி இன்ன தேதியிலிருந்து இன்ன இடத்தில் இந்த நடவடிக்கையை மேற்கொள்வது என்று திட்டமிட்டுச் செய்யவில்லை. அவர் உள்ளத்தில் எழுந்த ஓர் எண்ணம் படிப்படியாக, நாளொரு வண்ணமாக, வளர்ந்து ஸ்ரீ மீனாட்சி சொக்கநாதர் பட்டணமாகிய மதுரையம்பதியில் முழுமை அடைந்திருக்கிறது. காந்திஜின் அபிமான தெய்விகப் புலவரும் திருவாசகத் தேனை வடித்தவருமான மாணிக்கவாசகர் நடராச மூர்த்தியைப் ''பிச்சைத் தேவா'' என்று அழைக்கிறார். ஆகவே அவர் உறையும் மதுரையம்பதியில், பிச்சை எடுப்போருடன் பிச்சை எடுப்பவராக, கடையருடன் கடையராகத் தம்மை இணைத்து வைத்த இந்தத் ''துறவுக் கோலத்தை'' அண்ணல் மேற்கொண்டது பொருத்தமேயாகும். ஒரு வியப்பு என்னவென்றால் இந்தப் புரட்சிகரமான செயலை ஒரு செய்தியாக அந்தக் காலத்துப் பத்திரிக்கைகள் வெளியிடவுமில்லை; அதைப்பற்றித் தலையங்கங்கள் தீட்டவும் இல்லை. மகாத்மா இத்தகைய காரியங்கள் செய்யக்கூடியவர் தாம் என்று ஒரு வேளை அக்காலச் செய்தியாளர்களும் செய்தித்தாள் ஆசிரியர்களும் எண்ணியிருக்கலாம். ''இந்து''வும் ''சுதேசமித்திரனும்'', தனியாக, இது குறித்து அண்ணல் விடுத்திருந்த அறிக்கையை வெளியிட்டிருந்தன. திருநெல்வேலியிலிருந்து அனுப்பிய செய்தியில் செய்தியாளர்கள் மகாத்மா மேலாடையில்லாமல் வந்தார் என்பதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மதுரையில் இடுப்பில் மட்டும் வேட்டி கட்டிக் கொண்டு வெளி வந்தது எப்படி நிகழ்ந்தது என்பதைக் குறித்து ''என்னுடைய முழத் துண்டு'' என்ற தலைப்பில் 2-10-1921-ஆம் தேதி ''நவ ஜீவன்'' இதழில் காந்திஜியே விரிவாக எழுதினார். அவர்

அதில் தம்முடைய வாழ்க்கையில் தாம் மேற்கொண்ட மாற்றங்களெல்லாம் ஆழ்ந்த ஆலோசனையின் பின்னரே செய்யப்பெற்றவை என்றும் அதனால் பின்னர் அம்மாற்றங்களுக்காகத் தாம் வருத்தப்பட நேர்ந்ததில்லை என்றும் கூறியிருக்கிறார். மேலும், ''தவிர்க்க முடியாத நிலையில் அதைச் செய்தேன். அப்படிப்பட்ட புரட்சிகரமான ஒரு மாற்றத்தை என்னுடைய ஆடையில் நான் மேற்கொண்டது மதுரையிலாகும்'' என்று இடத்தையும் ஐயத்திற்கு இடமின்றிக் கூறியிருக்கிறார்.

தோன்றிய வரலாறு

முழத்துண்டு அணிய வேண்டும் என்ற யோசனை முதல் முதலாக காந்திஜிக்கு ஏற்பட்டது பாரிசால் (இது அசாமில் இருக்கிறது) என்ற நகரிலாகும். குல்னு என்ற இடத்தில் ஏற்பட்ட பஞ்சத்தைச் சிலர் குறிப்பிட்டு, அங்கு உணவும் உடையும் இல்லாமல் பலர் மடியும் போது, காந்திஜி வெளி நாட்டுத் துணிகளைச் சொக்கப்பனை கொளுத்துவது நியாயமாகுமா என்று கேட்டார்கள். அந்தச் சமயத்தில், வெறும் இடுப்புத்துணியை மட்டும் தாம் அணிந்துகொண்டு தொப்பியையும் சட்டையையும் குல்னுவிற்கு அனுப்பி வைக்கலாமா என்று அண்ணல் எண்ணியதுண்டு. இதற்கு அடுத்தாற்போல் வால்டைரில் முகமதலி கைதானபோது காந்திஜி அங்குக் கூடியிருந்த மக்களிடையே பேசப்போனாரல்லவா? அப்போது, சட்டையையும் குல்லாயையும் கழற்றிவிடலாம் என்று ஒரு கணம் எண்ணினார். ஆனால் இந்த இரண்டு சமயங்களிலுமே அவர் அவ்வாறு செய்யவில்லை. முதல் யோசனை வந்தபோது அதில் தற்பெருமை கலந்திருக்கிறது என்று விட்டு விட்டார். இரண்டாவது யோசனை வந்தபோது, தாம் பரபரப்பை உண்டாக்குவதாக ஆகிவிடுமே என்று எண்ணி நிறுத்தி விட்டார். மூன்றும் முறையாக மதுரையில் எவ்வாறு இதை முடிவு செய்தார் என்பதை அவரே கூறுகிறார்:

மாற்றம் ஏன்

''என்னுடைய தமிழகச் சுற்றுப்பயணத்தின்போது மூன்றாவது சந்தர்ப்பம் வந்தது. 'கதர் உடுத்திக் கொள்ளலாம் என்றால் போதுமான கதர் கிடைப்பதில்லை. அப்படியே கதர் கிடைத்தாலும் அதை வாங்கிக்கொள்ளப் போதுமான பணம் இல்லை' என்று மக்கள் என்னிடம் சொல்லத் தொடங்கினார்கள். 'தொழிலாளர்கள் தங்களிடமுள்ள

வெளிநாட்டுத் துணிமணிகளை அகற்றிவிட்டால், நங்களுக்கு வேண்டிய கதரை எங்கு வாங்குவது ?' என்று கேட்டார்கள். இந்தக் கேள்வி என் மனதில் நன்கு பதிந்தது. இந்த வாதத்தில் உண்மை இருக்கிறது என்பதை நான் உணர்ந்தேன். ஏழைகளுக்காகச் சொல்லப் பெற்ற அந்த வாதம் என்னை ஆட்கொண்டது. மௌலானா ஆசாத் சுபானி, இராசகோபாலாச்சாரியார், டாக்டர் ராஜன் முதலியோரிடம் என்னுடைய மனத்துயரை வெளியிட்டு, இனிமேல் இடுப்புத் துணியுடன் இருக்கப் போவதாகக் கூறினேன். மௌலானா என்னுடைய மனத்துயரை உணர்ந்து என் யோசனையை அப்படியே ஏற்றார். மற்ற சக ஊழியர்கள் அமைதி இழந்தார்கள். இவ்வாறு நான் செய்வது மக்களை மனக்குழப்பமடையச் செய்து விடும் என்றும் சிலர் அதைப் புரிந்துகொள்ள மாட்டார்களென்றும் சிலர் என்னை ஒரு பைத்தியக்காரன் என்று கருதி விடுவார்கள் என்றும் கூறினார்கள். என்னுடைய முன் மாதிரியை எல்லோரும் பின்பற்ற முடியாது என்றும் சொன்னார்கள். நான்கு நாட்கள் இதைப்பற்றி நான் சிந்தனை செய்தேன். இந்த வாக்குவாதங்களை அசை போட்டுப் பார்த்தேன். 'உங்களுக்குக் கதர் கிடைக்காவிட்டால், இடுப்புத் துணியுடன் மனநிறைவடையுங்கள். ஆனால் வெளிநாட்டுத் துணிகளைத் தூக்கி எறிந்து விடுங்கள்,' என்று நான் சொன்னபோதெல்லாம் மனத் தயக்கத்துடனேயே சொன்னேன் என்பதை நான் அறிவேன். நான் சட்டையும் வேட்டியும் அணிந்திருந்தவரை என் சொற்களுக்குப் போதுமான சக்தி இல்லை. சென்ற மாநிலத்தில் சுதேசித் துணிகள் பற்றுக் குறையாக இருந்ததும் என்னைக் கவலை அடையச் செய்தது. மக்கள் எல்லோரும் அன்பைப் பொழிவதைப்போல் தோன்றியது; ஆனால் அதே சமயம் அது எல்லாமே நீர்மேல் குமிழிபோல் தோன்றியது. மறுபடியும் என் உத்தேசத்தைப்பற்றி நண்பர்களுடன் விவாதித்தேன். அவர்கள் புதிதாக எந்த வாதமும் கூறவில்லை. செப்டம்பர் மாதமோ முடியும் தருவாய்க்கு வந்து விட்டது. அது முடிவதற்குள் வெளிநாட்டுத் துணி விலக்கு நிறைவடைய நான் என்ன செய்யவேண்டும்? என் மனதில் உறுத்திக் கொண்டிருந்த கேள்வி இதுதான். இந்த நிலையில் நாங்கள் 22-ஆம் தேதி இரவு *மதுரைக்குப் போய்ச் சேர்ந்

* ஞாபகமறதியாக 22-ஆம் தேதி இரவு என்று எழுதியிருக்கிறார்; அது 21-ஆம் தேதி இரவு.

தோம். அக்டோபர் 31-ஆம் தேதி வரையாவது இடுப்பு வேட்டியுடன் மன நிறைவடைவது என்று நான் முடிவு செய்தேன். அடுத்தநாள் காலை மதுரை நெசவாளர்கள் கூட்டத்தில் இடுப்பு வேட்டியுடனேயே பேசினேன்!''

அதன் எதிரொலி

காந்திஜி இவ்வாறு ஆடையைக் குறைத்துக் கொண்டவுடன், தம் சமயக் கோட்பாடுகள் எந்த அளவு அனுமதிக்கின்றனவோ அந்த அளவு மௌலானாவும் தம் உடையைக் குறைத்துக் கொண்டார். பொது மக்கள் வியப்புடன் மகாத்மாவை உற்று நோக்கினார்கள். ராஜாஜி, டாக்டர் ராஜன் போன்று காந்திஜியுடன் சென்ற தலைவர்களோ, மக்கள் இதைப் பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டு வந்தார்கள். வெளி நாட்டுத் துணி விலக்கை மக்கள் எல்லோரும் ஊக்கத்துடன் கடைப்பிடிக்க வேண்டும் என்பதற்காகவே அவர் இவ்வாறு செய்தார். பின்னர் மகாதேவ் தேசாய்க்கு எழுதியிருந்த கடிதத்திலும், தம்மால் மனத் துயரைத் தாங்க முடியாததால் தான் இவ்வாறு உடையில் மாறுதல் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

அறிக்கை

மதுரையில் என்று அவர் இடுப்பு வேட்டி மட்டும் அணியத் தொடங்கினாரோ அன்றே இச்சிக்கலில் தமது நிலையை விளக்கிப் பொது மக்களுக்கு ஓர் அறிக்கை விடுத்தார். இந்த அறிக்கையில் அவர் ''வெளிநாட்டுத் துணி விலக்கிற்காக அனைத்து இந்தியக் காங்கிரஸ் குழு கூறிய ஓராண்டுக் கால வாயிதாவிற்கு இன்னும் சில நாட்களே உள்ளன. ஆனாலும் வெளிநாட்டுத் துணியை விட முடியாது என்று பலர் இன்னும் கருதுகிறார்கள். போதுமான துணி கிடைக்காது என்று அவர்கள் கருதுவார்களேயானால், அவர்கள் இடுப்பு வேட்டியுடன் (அவசியமான இடங்களில் மேல் துண்டுடன்) மனநிறைவடைய வேண்டும். அதற்கு ஒரு முன்னுதாரணமாக நானே, சட்டையையும் தொப்பியையும் அகற்றிவிட்டு, இடுப்பு வேட்டியைக் குறைந்தது அக்டோபர் 31-ஆம் தேதி வரையாவது அணிந்துவர வேண்டுமென்று எண்ணியுள்ளேன்'' என்று கூறியிருந்தார். விடுதலைக்காகக் குறிப்பிடப்பெற்ற ஆண்டு முடியும் தருவாய் வந்தும் விடுதலை

கிடைக்காத நிலையில், இந்த உடை சாதாரணமாகத் துக்கம் கொண்டாடுபவர்கள் உடை போன்று இருப்பதும் பொருத்தமாயிருப்பதாக அவர் கருதினர். இந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்ட மற்றொரு யோசனை சுதேசிக்குகதருக்கு - எவ்வளவு பெரிய முக்கியத்துவம் அளித்தார் என்பதைக் காட்டிற்று. சுதேசியைத் தவிர மற்ற எல்லா நடவடிக்கைகளையும் ஒரு மாதத்திற்கு நிறுத்தி வைத்து விடலாம் என்று அறிவுரை கூறவும் தாம் தயாரென்றும் கள்ளுக்கடை மறியலைக் கூட நிறுத்தி வைக்கலாம் என்றும் அவர் சொன்னார்.

அதிகாலையில் வழக்கம் போல் இன்று எழுந்தவர், பக்கத்திலிருந்த விருதுநகர் பழனிக் குமாரு பிள்ளை என்ற தேசியத் தொண்டரை, வேட்டியைப் பிடிக்கச் சொல்லி மடித்துக் கட்டினார். அந்த வேட்டியுடனேயே காந்திப் பொட்டல் என்ற இடத்தில் நடைபெற்ற சௌராஷ்டிரப் பெருமக்களின் கூட்டத்திற்குச் சென்றார். கூட்டத்தின் மேடை மேற்கு ஓரத்தில் கிழக்கு நோக்கிப் போடப்பெற்றிருந்தது. முதல் நாள் காந்திஜியைத் தலைப்பாகை, அங்கவஸ்திரம் ஆகியவற்றுடன் பார்த்தவர்கள் மறுநாள் வெறும் இடுப்பு வேட்டியுடன் பார்த்தபோது மிகவும் வியப்படைந்தனர். இம்முறை காந்திஜி மதுரைக்கு வந்தபோது அவருடைய கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தவர்களில் முக்கியமானவர்கள் டி. ஆர். பத்மனுப ஐயர், கிருஷ்ண குந்து ஆகியோராகும். இக்கூட்டத்தில் சௌராஷ்டிர மக்களின் பல்வேறு அமைப்புக்களின் சார்பாக வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப் பெற்றபின், அவர்களுக்கு அண்ணல் ஓர் அறிவுரை கூறினார். ''சௌராஷ்டிர மக்கள் (சிலர்) குடிப் பழக்க முள்ளவர்கள் என்று கூறப்படுகிறது. அந்தப் பழக்கத்தை அகற்றுவதற்கு அவர்கள் தங்களால் இயன்ற முயற்சியெல்லாம் செய்ய வேண்டும்'' என்றார் அவர்.

சௌராஷ்டிர மக்கள்

இந்தக் கூட்டத்திலிருந்து நேராக காந்திஜியும் அவர் குழுவினரும் செட்டிநாட்டிற்குச் சென்றார்கள். செட்டிநாடு நல்ல செல்வத்துடன் இருந்த காலம் அது. காந்திஜியின் வருகையை முன்னிட்டு அப்பகுதி முழுவதுமே விழாக் கோலம் பூண்டிருந்தது. ஆங்காங்கு சில இடங்களில் காந்திஜியின் காரைச் சில விநாடிகள் நிறுத்தி அவர் மீது

மேலூர்

மலர்களைச் சொரிந்து அதன் மூலம் தங்கள் அன்பையும் சொரிந்து வழி அனுப்பி வைத்தனர் மக்கள். செட்டி நாடே எழுச்சி பெற்றதன் அறிகுறி இவையெல்லாம் என்று மக்கள் பேசிக் கொண்டனர். வழியில் மேலூரில் யூனியன் தலைவரான காசி செட்டியார் காந்திஜிக்கு மாலை அணிவித்தார்.

திருப்பத்தூர்

திருப்பத்தூரில் கூடியிருந்த மக்களின் எண்ணிக்கை பத்தாயிரத்திற்கும் மேலிருக்கும் என்றாலும், மக்கள் அமைதியாகவும் கட்டுப் பாடாகவும் நடந்து கொண்டார்கள். இந்தியாவில் உள்ள மக்கள் எல்லோருக்கும் தேவையான கதரை எவ்வாறு உற்பத்தி செய்ய முடியும் என்ற கணக்குகளை இங்கு அண்ணல் விளக்கினார். இந்தியாவில் உள்ள ஏழை மக்கள், பணக்காரர் ஆகிய எல்லோருக்கும் உடுத்தப் போதுமான துணி கிடைக்கும் வரை முழத்துண்டே உடுத்தப் போவதாகச் சொன்னார். திருப்பத்தூர் மக்கள் அளித்திருந்த வரவேற்பில் தாங்கள் குடிப்பழக்கத்தை அநேகமாக நிறுத்திவிட்டதாகக் கூறியது அண்ணலுக்குப் பெரு மகிழ்ச்சி அளித்தது. இங்கு மௌலானா சுபானி பேசியபோது, ''இஸ்லாம் மார்க்கம் சொல்லுகிறபடி முஸ்லிம்கள் நடக்க முற்பட்டால் மகாத்மா போல் ஆடை அணியவேண்டும். நபிநாயகம் அணிந்திருந்தபடிதான் மகாத்மாஜியும் ஆடை அணிந்திருக்கிறார். மிகவும் அவசியமான ஆடைகளையே நபிநாயகம் அணிந்திருந்தார்'' (''சுதேசமித்திரன்'' 27-9-21) என்று கூறியது குறிப்பிடத்தக்கது.

காஞ்சு காத்தான்

குன்றக்குடியிலும் பலவான் குடியிலும் வரவேற்பைப் பெற்றுக்கொண்டு காஞ்சுகாத்தான் வந்தார் காந்திஜி. நல்ல நடு மதிய நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த அண்ணல் அங்கு ஓர் அழகான பந்தலின் கீழ் ஐயாயிரம் மக்கள் அமைதியாக அமர்ந்திருந்ததைக் கண்டு ஆனந்தமடைந்திருக்க வேண்டும். பல சங்கங்களின் சார்பாக ஏராளமாக வரவேற்புக்களும் பணமுடிப்புக்களும் வழங்கப்பெற்றன. வெளிநாட்டுச் சாமான்களையெல்லாம் விலக்க வேண்டும் என்று இங்கு அறிவுரை கூறிவிட்டு, பள்ளத்தூர், வேலங்குடி வழியாகக் கோட்டையூருக்குப் போனார். அங்கும் ஒரு விசாலமான பந்தலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது;

மாதர்கள் எண்ணிக்கை இங்குக் கணிசமாக இருந்தது தனி அம்சம்.

இவைகளை யெல்லாம் முடித்துக் கொண்டு, காரைக் குடிக்கு காந்திஜி வந்து சேர்ந்தபோது, அந்நகரைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாது புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருந்தும் தலைவர்கள், வழக்கறி ஞர்கள், வணிகர்கள், நகராட்சி மன்ற உறுப்பினர்கள், நிலக்கிழார்கள், பொதுமக்கள் ஆகியோர் அவருக்கு வரவேற்பளிப்பதற்காக அங்கு வந்திருப்பதைக் கண்டார். புதுக்கோட்டையே காரைக் குடியில் குடியேறிவிட்டது போல் தோன்றியது. புதுக் கோட்டையைச் சேர்ந்த பல்வேறு அமைப்புக்களின் சார்பாக அண்ணலிடம் வரவேற்புரைகளும் பணமுடிப்பு களும் அளிக்கப்பெற்றன. ''புதுக்கோட்டையில் ஒரு இலட்சத்து இருபத்து ஐயாயிரம் இராட்டைகள் சுழல்வ தாக என்று நான் கேள்விப்படுகிறேனே அன்று நான் அங்கு இருப்பேன்,'' என்று அண்ணல் கூறினார்.

காரைக்குடி புதுக்கோட்டை தர்பார் மறுபடியும் தர்பார்

புதுக்கோட்டை நகராட்சிமன்ற உறுப்பினர்கள் காரைக்குடிக்குப் போய்ப் புதுக்கோட்டை நகராட்சி மன்றத் தின் சார்பாக வரவேற்புரை படித்துக் கொடுத்ததை அறிந்த பின்னும் புதுக் கோட்டை தர்பார் பேசாது இருக்குமா? இவ்வாறு வரவேற்புரையை அளித்த நக ராட்சி மன்ற உறுப்பினர்களான ஜி. சுந்தரேச சாஸ்திரிகள், ஜி. சுந்தரேச ஐயர், எஸ். விஸ்வநாத ஐயர், கே. பாலுசாமி செட்டி ஆகியோருக்குத் தனித்தனியாக 'நோட்டீஸ்'களை அனுப்பியது. ''புதுக்கோட்டை நகர மக்களின் சார்பாகக் காரைக்குடியில் காந்திஜியிடம் நீங்கள் வரவேற்புரை அளித் திருக்கிறீர்கள் என்றும் நகராட்சி மன்றத்தின் உறுப்பினர் என்ற முறையில் கையொப்பமிட்டிருக்கிறீர்கள் என்றும் தர்பாருக்குத் தெரிய வருகிறது. திரு. காந்தி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பகிரங்க எதிரி. அதன் காரணமாகவே இந்தச் சமஸ்தானத்தின் வழியாகச் செல்லக்கூடாது என்று அவர் தடை செய்யப் பெற்றார். நகராட்சி மன்றம் 18-ஆம் தேதியன்று நிறைவேற்றிய தீர்மானத்தை சமஸ் தான அரசாங்கம் தள்ளுபடி செய்துவிட்டது என்பதை அறிந்த பின்னும் நீங்கள் அவருக்கு அளிக்கப்பெற்ற வர

அளவிலா மகிழ்ச்சி அடைந்ததுடன் அப்பெண்ணையும் பாராட்டினார். இக்கூட்டத்தில் தலைவர் நிகழ்த்திய முடிவுரையில், கையால் நூற்பதும் நெய்வதும் செட்டிநாட்டில் பரம்பரை பரம்பரையாக நிகழ்ந்து வருவதாகவும் மணமகளுக்கு இராட்டை சீதனமாக அளிப்பது வழக்கம் என்றும் சொன்னார். தேவகோட்டையில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு குதிரை இருப்பதுபோல, ஒவ்வொரு வீட்டிலும் ஓர் இராட்டை இருக்க வேண்டும் என்று அண்ணல் கேட்டுக் கொண்டார். ''என்னைப் போன்ற முரட்டுத் துணியை நீங்களும் அணிந்தால், இந்தியாவில் மட்டுமல்லாமல் இரங்கூனிலும் மற்ற இடங்களிலும் உங்களுடைய லேவா தேவி சிறப்பாக நடைபெற முடியும் என்று உங்களுக்கு நான் உறுதியாகக் கூறுகிறேன். ஆந்திராவில் உள்ளவர்களைப் போன்றே இங்குள்ள ஆண்களும் கல் வைத்த மோதிரங்களும் கடுக்கண்களும் அணிவதில் ஆசையுள்ளவர்களாய் இருப்பதைக் காணுகிறேன். அவைகளைத் திலகர் சுயராஜ்ய நிதிக்கோ அல்லது வேறு ஏதாவது ஒரு நிதிக்கோ கொடுத்து விட்டு நீங்கள் பழையபடி எளிமையாக இருக்குமாறு என்னால் செய்யமுடியுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்!'' என்று கூறினார்.

கதருக்குச் செட்டி நாட்டில் இருந்த வரவேற்பை காந்திஜி கண்டு கொண்டார். கதர் சுற்றுப்பயணத்தை 1927-இல் மேற்கொண்ட போது இங்குச் சிலநாட்கள் தங்கினார். ஒவ்வொரு நாளும் காரைக்குடிக்கு அவர் திரும்பி வருவது வழக்கம். அந்தச் சுற்றுப்பயணத்தில் சா. கணேசன் ஒரு சிறு தொண்டர்படையின் தலைவராக இருந்து காந்திஜிக்கு வேண்டிய பணிகளைச் செய்து வந்தார். அந்தச் சமயத்தில் அவரும் மற்றும் சிலரும் பெயர் பெற்ற எழுத்தாளரான வ. ரா. தலைமையில் வர்ணாசிரம தர்மம் வேண்டுமா, வேண்டாமா என்பதைப் பற்றி காந்திஜியுடன் விவாதித்தார்கள். இந்த விவாதம் மூன்று நாட்கள்-ஒவ்வொரு நாளும் அரைமணி நேரம் - நடைபெற்றது. ''சாதி வேற்றுமை கூடாது என்று நீங்கள் கூறுகிறீர்கள். அதே சமயம் வர்ணாசிரம தர்மம் நீடிக்கவேண்டும் என்கிறீர்கள். இது ஒன்றுக்கொன்று முரணானதல்லவா?'' என்று அவர்கள் கேட்டார்கள். இதற்கு காந்திஜி கீழ்க்கண்டவாறு பதிலளித்

வ. ரா. கேள்வி

தார்: ''வர்ணசிரமம் என்பது தொழில் பற்றியது, தொழில் பரம்பரையாக வருமானால், வீண் பணவிரயமும் காலவிரயமும் தவிர்க்கப்படும். ஒவ்வொரு தொழில் துறையும் செம்மையாக வளரும். மற்றபடி தொழில் காரணமாக உயர்ந்த சாதி, தாழ்ந்த சாதி என்ற கருத்துக் கூடாது. ஆகவே, வர்ணசிரம தர்மம் என்பது மக்கள் சமுதாயத்திற்கு வாய்த்த ஒரு நல்ல அமைப்பு. ஆனால் எந்த வருணத்தவரும் கலந்து உறவாடவோ, கொள்வினை, கொடுப்பினை செய்து கொள்ளவோ தடையிருப்பதுதான் தவறு. ஆகவே, சாதி வித்தியாசமும், உயர்வு தாழ்வு கற்பித்தலும் வேறு, வர்ணசிரம தர்மம் வேறு. நான் கூறிய கருத்தில் முரண்பாடு இல்லை என்பதை நீங்கள் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.''*

23-9-21

பாஸ்கரதாஸ்

காரைக்குடியிலிருந்து மதுரைக்கு வந்து நெல்லைக்கு ரெயில் ஏறினார். காந்திஜி ஏறியிருந்த இரயில் பெட்டிக்கு அடுத்த பெட்டியில் காமராஜரும் மற்றும் சில ஊழியர்களும் உட்கார்ந்திருந்தார்கள். பெயர் பெற்ற நாடக ஆசிரியரான பாஸ்கர தாஸ், இரயிலுக்கு வந்து காந்திஜிக்கு மாலை போட்டு, அவரிடம் தாம் இயற்றிய பாடல் புத்தகம் ஒன்றை அளித்தார். அப்புத்தகத்தில் இருந்த பாடல்களில் ஒன்று ''காந்தியோ பரம ஏழை சந்நியாசி'' என்பதாகும். இந்தப் பாட்டு அந்தக் காலத்தில் மேடைதோறும் பாடப் பெற்று வந்த ஒரு பிரபலப் பாட்டு. காந்திஜியிடம் இந்தப் பாட்டின் பொருளை, டாக்டர் ராஜன் ஆங்கிலத்தில் விளக்கினார். காந்திஜி இதைக் கேட்டதும் விழுந்து விழுந்து சிரித்தார். ''சந்நியாசி'' என்று சொன்னதும் அவருக்குச் சிரிப்பு வந்துவிட்டது.†

நெல்லை

அண்ணல் திருநெல்வேலிக்கு வந்து சேர மாலையும் வந்து விட்டது. திருநெல்வேலிக்கு அவர் என்று வந்தாரோ அதற்கு முதல் நாள் அவர் அங்கு வருவதாக முதலில் அறிவிக்கப்பெற்றிருந்தது. புதுக் கோட்டை விவகாரத்தின் காரணமாக மறு நாள் தான் காந்திஜி வரமுடியும் என்ற தகவல் பின்னால்தான் அனுப்பப் பெற்றது. இவ்வாறு பின்னால்

---

* சா. கணேசன் பேட்டி

† காமராஜ் பேட்டி

வந்த தகவல், நெல்லை மாவட்டத்தின் உட்புறங்களில் பரவ வில்லை. ஆகையால் வெளி ஊர்களிலிருந்து முதல் நாளே மக்கள் நெல்லைக்கு வந்து சேர்ந்துவிட்டார்கள். நெல்லை நகர் முழுவதும் ஒரே கூட்டந்தான். நெல்லை மாவட்டத் திலேயே ஒரு புதுச் சகாப்தம் தொடங்கிவிட்டது போன்று தோன்றியது. இந்த மாவட்டத்தில் அப்போது ஒத்துழை யாமை இயக்கத்தில் பங்கு கொண்டு தொழிலை விட்ட ஒரே வழக்கறிஞர் திருகூடசுந்தரம் பிள்ளையாவார். அவரும் அவரைப் போன்று மற்றும் சில ஊழியர்களும் தீவிரமாக முயற்சி எடுத்துக் கொண்டதன் காரணமாக, நெல்லைக் கூட்டங்களில் கதர்க்கட்டியவர்கள் அதிகமாகக் காணப் பெற்றனர். தூத்துக்குடியில் அப்போது இருந்த ஜி. சுப்ர மணியம் சுதேசி ஸ்டோர்களிலிருந்து வந்திருந்த கதர் பேல்களுக்கு நிறைய கிராக்கி இருந்தது. ஏராளமான வர்கள் கதர் வேண்டும் என்று கேட்டதால், எவ்வளவுதான் கதர் வந்தும் போதவில்லை!

கங்கை கொண்டான்

திருகூடசுந்திரம்பிள்ளை மணியாச்சிக்குப் போய் மகாத்மா, அவரது குழுவினருடன் சேர்ந்து கொண்டார். திருநெல்வேலி இரயில் நிலையத்தில் கூட்டம் அதிகமாக இருக்குமாதலால் காந்திஜி அங்கு இறங்குவது கடினமாக இருக்கும் என்று கருதி கங்கை கொண்டான் இரயில் நிலையத்திலேயே அவரை இறக்கி நெல்லைக்குக் காரில் அபோதாரண ஐயர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். நெல்லை இரயில் நிலையத்தில் அண்ணல் வருவார் என்று காத்திருந்த கூட்டம் ஆத்திரமடைந்தது. அவர்களை இரயில்வே நிலைய அதிகாரி கோபால ஐயர் மிகவும் திறமையாகக் கலைத்து அனுப்பினர்.

பொதுக் கூட்டம்

கைலாச புரத்தில் ஆற்றங்கரையில் எஸ். கே. சேக் மொய்தீன் சாகிப் என்ற பேட்டை வணிகர் தலைமையில் மாபெரும் பொதுக் கூட்டம் (சுமார் 20 ஆயிரம் என்று அப்போது மதிப்பிடப்பெற்றுள்ளது) நடைபெற்ற போது இருட்டிவிட்டது. கூட்டம் அமைதியாக இருந்தது. சுற்றுப் புற கிராமங்களிலிருந்து மட்டுமல்லாது, தூத்துக்குடியிலி ருந்தும் வந்தவர்கள் நிறையப் பேர். ஒரு கதர்த்துணி யில் அச்சிடப் பெற்றிருந்த வரவேற்புரையைத் திரிகூட சுந்தரம்பிள்ளை படித்துக் கொடுத்தார். சட்டையில்லாது

காந்திஜி அமர்ந்திருந்த காட்சியை, ''மகாத்மாஜி தமிழகத்திலுள்ள தமிழர்போல் மேலே ஒரு துண்டுடனும் புன்முறுவலுடனும் ஆசனத்தமர்ந்தார்.'' என்று சுதேச மித்திரன் வர்ணித்திருக்கிறது. அண்ணலின் சொற்பொழிவில் முதற் பாதியை டி. ஆர். மகாதேவ ஐயரும் பிற் பாதியை டாக்டர் ராஜனும் மொழி பெயர்த்தார்கள். நெல்லை மக்களின் சார்பாக அன்று அண்ணலிடம் பண முடிப்பை அளித்தவர் டி. ஆர். மகாதேவ ஐயர்.

அண்ணல் சொன்னார்: ''உங்களிடையே பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கல் இருக்கிறது. நாடார்கள், பஞ்சமர்கள் சிக்கலும் இருக்கிறது. [இந்தச் சொற்பொழிவில் நாடார்களைப் பற்றி அண்ணல் என்ன சொன்னார் என்பதை பின்னர் (27-9-21 ''சுதேசமித்திரனில்'') ஒருவர் விளக்கி எழுதியிருந்தார். நாடார்கள் குறை விசேடமாய்க் கவனிக்கத் தக்கது என்றும் தென்னிந்தியாவில் வாணிகத்தில் முன்னணியில் நின்று மிகுந்த பணச் செல்வாக்குடனும் உயர்ந்த ஆச்சாரத்துடனும் இருக்கும் நாடார்களுக்கு இந்து ஆலயங்களில் சமத்துவம் வழங்கப் பெறுதது தமக்கு வியப்பை அளிப்பதாகவும் ஆலயத்தில் நாடார்களுக்கு சமத்துவம் வழங்கிட மறுத்ததால் ஒரு ஆண்டில் அல்ல நூறு ஆண்டுகளில் கூட விடுதலை பெற முடியாது என்றும், ஆகவே நாடார்களுக்கு உடனே சமத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அண்ணல் கூறியதாக அவர் எழுதியிருந்தார்.] இந்தச் சிக்கல்களெல்லாம் தீண்டாமை என்னும் மையத்தைச் சுற்றியே வருகின்றன என்பது எனது கருத்து....'' இரவு கூட்டம் முடிந்த பின்பு, வீட்டிற்குச் சென்று, அங்கு வந்திருந்த பெரிய மனிதர்களுடன் நாட்டு அரசியல் நிலை பற்றி விவாதித்தார். மறுநாள் காலையில் கொல்லம் தேசாபிமானி ஆசிரியரும் ஈழவர்கள் தலைவருமான டி. கே. மாதவன் அண்ணலைச் சந்தித்து ஈழவர்கள் சிக்கலை அவரிடம் எடுத்துக் கூறினர்.

நாடார்கள் சிக்கல்

24-9-21

நெல்லையிலிருந்து காலை மெயில் ரெயிலில் திருச்சிக்குப் புறப்பட்டார். வழியில் மதுரை வழியாகச் சென்றபோது இந்திய முசல்மான்களுக்கு அஹிம்சையின் அவசியத்தை

எடுத்துக் கூறி ஓர் அறிக்கை தயாரித்தார். (பிற்காலத்தில் பெரிய காந்தியவாதியான கோ. வேங்கடாசலபதி ஒரு சிறு பையனாகத் திருமங்கலத்தில் காந்திஜியைப் பார்த்தார்)

25–9-21

திருச்சி, ஈரோடு, திருப்பூர் வழியாக அவர் கோவை சென்றார். திருப்பூர் இரயில்வே நிலையத்தின் பக்கத்தில் ஓர் உயரமான மேடைபோட்டு, அதில் கதர்த் துணிகளை அலங்காரமாகத் தொங்கவிட்டு, ஒரு சில பெண்களையும் இராட்டை வைத்து நூற்க வைத்திருந்தார்கள். பிற்காலத்தில் கதரின் தமிழகத் தலைநகரமாகிய இவ்வூரில் அப்போது கதர்த்துணி வாணிகத்தில் ஈடுபட்டு வந்த வணிகராகிய கருப்பண்ணச் செட்டியார், காந்திஜிக்கு மிகவும் பிடிக்கக் கூடிய முறையில் இந்தச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். கூட்டத்திலிருந்த ஆயிரக்கணக்கான மக்களும் அண்ணல் வந்த போது அமைதியாக அமர்ந்திருந்தனர். காந்திஜிக்குக் கருப்பண்ணச் செட்டியார் கதர்த்துணியையே மாலையாகச் சூட்டினார். வந்திருந்தவர்களை ஆசிர்வதித்து விட்டு அண்ணலும் கோவைக்குப் புறப்பட்டார்.

கோவை சென்றார்

ஈரோட்டிலிருந்து புறப்பட்டு வந்த இந்த ஷட்டில் இரயிலில் காந்திஜி சிங்காநல்லூர் சேர்ந்தவுடன், அங்கு கோவை நகராட்சித் துணைத் தலைவரான கே. சுப்ரமணிய முதலியாரும் சுல்தான் சாகிப், என். எஸ். இராமசாமி ஐயங்கார் முதலியோரும் அண்ணலை வரவேற்றுக் காரில் கோவைக்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

சிங்காநல்லூர்

கோவை நகரசபை அளித்த வரவேற்பு பலவகைகளில் சுவையானது. இரயில்வே நிலையத்திலிருந்து காரனேஷன் பூங்காவிற்கு காந்திஜியை அழைத்து வந்து விட்டார்களே தவிர, அங்கு மக்களால் சூழப் பெற்றிருந்த அந்த உயர்ந்த மேடைக்கு அவரை அழைத்துச் செல்வது அவர்களுக்கு ஒரு பெரிய திகைப்பாகப் போய்விட்டது. கடைசியில் அண்ணலை ஒரு பெரிய பயில்வான் தூக்கிக்கொண்டு போய் மேடையில் சேர்த்தார். கோவையில் சி. எஸ். இரத்தின சபாபதி

நகராட்சி வரவேற்பு

முதலியார் தலைமையின் கீழ் இருந்த நகரசபை காந்திஜியின் ஒத்துழையாமைக் கொள்கையை ஏற்கவில்லை. ஆனால் அதே சமயம் தங்கள் ஊருக்கு வந்துள்ள ஒரு பெரிய தலைவரை வரவேற்காமல் இருக்கவும் அது விரும்பவில்லை. (காந்திஜியை நகராட்சி மன்றம் வரவேற்கலாமா கூடாதா என்பதற்காக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், மிகக் குறுகிய பெரும்பான்மையில்தான் தீர்மானமும் நிறைவேறியது.) ஆகவே அவருக்கு இந்த வரவேற்பை அளித்து தமது வரவேற்புரையில் காந்திஜியின் கொள்கைகளில் எதெதைத் தாங்கள் ஆதரிக்கிறார்கள் என்பதை நகரசபையினர் கூறினார்கள். இரத்தினசபாபதி முதலியார் படித்துக் கொடுத்த இந்த வரவேற்புரையானது (எல்லோரும் கையெர்ப்பமிட்டு இதில் உடன்பாடு தெரிவித்திருந்தனர்.) அரசாங்கத்துடன் ஒத்துழைத்து ஏன் சுயராஜ்யம் பெற முடியாது என்பது தங்களுக்குப் புரியவில்லை என்றும் அதிலும் புதிதாகச் சீர்திருத்தி அமைக்கப்பெற்ற சட்டமன்றங்களின் மூலமாக வெற்றிகரமாக ஏன் இதை அடையக்கூடாதென்றும் கேட்டது. அதே சமயம் மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு, சுதேசி போன்ற மற்ற கொள்கைகளுக்கு நகரசபை ஆதரவு தெரிவித்தது. காந்திஜியோ சத்திய சோதனை செய்பவர். ஆகவே இவ்வாறு நகரசபை உண்மையைக் கூறியதை அவர் மிகவும் வரவேற்றார். அநேகமாக காந்திஜி கோவைக்கு வந்த ஒவ்வொரு முறையும் இவ்வாறு அவருக்கு நகராட்சி மன்றம் தனது கருத்து வேறுபாட்டைத் தெரிவித்து வரவேற்புரை கூறுவதும் அதற்கு காந்திஜி தகுந்த முறையில் மறுமொழி கூறுவதும் வழக்கமாய் இருந்தது.

ஒத்துழையாமை

''நான் கடந்த முப்பது ஆண்டுகளாக அரசுடன் ஒத்துழைத்து வந்திருக்கிறேன். கடைசியில், தற்போதுள்ள அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதால் நாட்டிற்குத்தான் பெரிய நட்டம் என்ற மிக மிக வருந்தத் தக்க முடிவிற்கு நான் வந்திருக்கிறேன். இதை நான் கண்டுபிடித்தவுடன், மாற்று வழி ஒன்றைக் காணப் பொறுமையுடன் முயன்றேன். இச்சிக்கலைத் தீர்ப்பதற்கு ஒரே வழி அரசாங்கத்துடன் ஒத்துழையாமல் இருப்பதுதான் என்ற முடிவிற்கு வந்தேன்.'' என்று விளக்கிவிட்டு இந்த நகராட்சி தமது கொள்கைகளில் எதெதைச் செய்யலாம் என்பதைச் சொன்னார்.

''நகரசபை என்னுடன் கருத்து வேறுபடுவதாகக் கூறுகிறது. ஆனாலும் அவர்கள் என்னுடன் கருத்து உடன்படுகிற கீழ்க்கண்ட மூன்று காரியங்களையும் செய்யலாம் 1. நகராட்சி எல்லைக்குள் தீண்டாமையின் சாபக்கேடு இல்லாமல் ஒழிக்கலாம் 2. நகராட்சியில் உள்ள ஆண், பெண் பள்ளிகளில் இராட்டையைப் புகுத்தலாம் 3. தீண்டாதாரின் நலனில் கவனம் செலுத்தலாம். மது விலக்கிற்காக அரசாங்கத்துடன் நகராட்சி கடுமையாகப் போராட வேண்டும் என்று நான் விரும்புகிறேன்,'' என்று அவர் கூறினார்.

தொழிலாளர்

கோவையில் இதைத் தவிர வேறு சில இடங்களிலும் காந்திஜிக்கு வரவேற்புகள் அளிக்கப் பெற்றன. கோவையையும் போத்தனூரையும் சேர்ந்த தொழிலாளர்கள் பெசண்ட் இல்லத்தில் கூடி அளித்த வரவேற்பில் தொழிலாளர்கள் ஐக்கியமாக இருக்க வேண்டிய அவசியத்தை அண்ணல் வலியுறுத்தினர். (இந்தக் கூட்டத்தில்தான் பிற்காலத்தில் கதர் வளர்ச்சிக்காக அருஞ்சேவை செய்த கோவை அய்யாமுத்து முதன் முதலாக காந்திஜியைப் பார்த்ததாகும். அவர் சாதாரணமாக ஆங்கில உடைகள்தான் அணிவது வழக்கம். இந்தக் கூட்டத்திற்காக அவர் கதர் அணிந்து கொண்டு சென்றார். பின்னர் மகாத்மாவின் தலைமையை ஏற்று அவரும் அவரது மனைவியும் பன்முறை சிறை சென்றார்கள். நிர்மாண வேலைகளிலும் முழுமூச்சுடன் உழைத்தார்கள்.) இதன் பின்னர் இந்திய அரசாங்க முன்னாள் அமைச்சரும் பெரிய பொருளாதார வல்லுனருமாகிய ஆர். கே. சண்முகம் செட்டியார் இல்லத்திற்குச் சென்றபோது அங்கு ஓர் அலங்காரமான மேடை போட்டு காந்திஜியை அதில் அமரவைத்து வேதமந்திரங்கள் ஓதி பூரண கும்பம் வைத்து வரவேற்றார்கள். காரனேஷன் பூங்காவிலும் பெசண்ட் இல்லத்திலும் கூடியிருந்த மக்கள் இங்கு அண்ணலைப் பார்க்க வந்து விட்டனர். இவர்கள் வருவதற்கு முன்பே இங்குக் கூடியிருந்த கூட்டம் வேறு இருந்தது. அவ்வளவு பெரிய கூட்டமும் அமைதியாக இருந்ததுதான் ஒரு பெரிய வியப்பு. சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட தொண்டர்கள் அங்கு இருந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்தியதே இதற்குக் காரணம். இங்கு கோவை நகரப் பொது மக்களின் சார்பாகக் காங்கிரஸ், கிலாபத் குழுக்களும்,

கோவை விஸ்வகர்ம சமூகத்தினரும் தான்ய வணிகர்களும் வன்னியகூத்திரிய குல சங்கமும் வரவேற்பளித்தன. இத்தனை வரவேற்புகளிலும் ஒரு சாராருடைய வரவேற்பு இல்லாதது அண்ணலுக்குப் பெரிய வருத்தமாக இருந்தது. ''என்னுடைய பஞ்சம சகோதரர்களின் வரவேற்பு இல்லையே என்பதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். என்னை அணுகுவதற்குக் கூடப் பஞ்சமர்கள் அஞ்சுகிறார்கள்'' என்று அவர் வருத்தத்தோடு கூறினார். தானிய வணிகர்களின் சார்பாகப் பரமேசுவரன் செட்டியார் ஒரு பண முடிப்பை அளித்தார்.

ஏலம்

தேவகோட்டையில் அளிக்கப்பெற்ற அபூர்வமான பொருள்களை நல்ல விலைக்குப் போகும் என்பதற்காக இந்த ஊரில் ஏலம் விட்டார்கள். ராஜாஜி தாம் ஏலம் விட்டவர். கிட்டத்தட்ட 1500 ரூபாய்க்கு அந்தப் பொருள்கள் ஏலத்தில் போயின. பிளமேட்டைச் சேர்ந்த பொன்னி நாய்க்கர் என்பவர் தாம் அதிகப் பொருள்களை விலைக்கு வாங்கியவர். இந்தக் கூட்டமெல்லாம் முடிந்து காந்திஜி வீட்டிற்குத் திரும்பியபோது நள்ளிரவாகிவிட்டது.

மக்கள் மத்தியில்

ஒத்துழையாமைக் கொள்கை பொதுமக்கள் மத்தியில் நன்கு பரப்பப்படவில்லை என்று அந்தக் காலத்தில் பலருக்கு மனக்குறை இருந்து வந்திருக்கிறது. காந்திஜி இந்தச் சுற்றுப்பயணத்தை முடித்த தருவாயில் (பின்னர் சென்னை மாநில முதல் அமைச்சரான) எம். பக்தவத்சலம் இதை ''இந்து'' ஆசிரியருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித் திருக்கிறார். ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கிராம சபை அமைத்து, வயது வந்த ஒவ்வொருவரையும் காங்கிரசில் சேர்த்து அரசியல் அறிவு புகட்ட வேண்டுமென்று இவர் கூறியிருந்தார். வெளிநாட்டுத் துணியை விலக்கவேண்டும் என்று தலைவர்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதைக் காட்டிலும் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வது நல்ல பலன் அளிக்குமென இவர் கூறினார். இவ்வாறு காந்திஜி யின் சுற்றுப் பயணமானது ஒத்துழையாமைக்கு ஆதரவான ஒரு எழுச்சியைக் கொடுத்தது என்பதில் ஐயமில்லை.

26-9-21 - 27-9-21 :

மறுநாள் அவருக்கு மௌனதினம். ஆகையால் மாலையில் கோவையிலிருந்து புறப்பட்டு நள்ளிரவுக்கு சேலம் போய்ச் சேர்ந்தபோது சேலம் நகராட்சித் தலைவரான வெங்கடப்பச் செட்டியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஆதிநாராயண செட்டியார் முதலியோர் இரயில் நிலையத்திற்கு வந்து அவரை வரவேற்று டாக்டர் வரதராஜுலு நாயுடு இல்லத்திற்கு அழைத்துச் சென்றனர். காலையில் கள்ளக்குரிச்சியைச் சேர்ந்த இராட்டைகள் சுழல்வதை அவர் பார்வையிட்டார். சேவாப்பேட்டை வணிகர்கள், ஒரு நூற்புப் பள்ளி தொடங்குவதற்காகத் தாராளமாகப் பண உதவி அளித்தார்கள். பங்காரு செட்டியார் வரவேற்புரை படித்தார். சேலம் வணிகர்களின் நாட்டுப்பற்றைப் பாராட்டிய அண்ணல், வணிகத்தில், அவர்களுக்கு உள்ள திறனை நாட்டு நலனுக்குப் பயன்படுத்தினால் எவ்வளவோ நலம் உண்டாகும் என்பதை நினைப்பூட்டினார். இதன் பின்னர் நகர மண்டபத்திற்குச் சென்று நகராட்சி மன்றத் தலைவரான வெங்கடப்பச் செட்டியார் படித்தளித்த வரவேற்புரையைப் பெற்றுக்கொண்டார்; வரவேற்புரை வைத்து அளிக்கப்பெற்ற பேழையின் அழகைப் பாராட்டினார். சேலம் நகரத்தில் நடைபெற்றுள்ள ஒத்துழையாமைப் பணிக்கு நகராட்சிதான் முக்கிய காரணம் என அண்ணல் பெரிதும் பாராட்டி, இதே போன்று அவர்களுடைய வேலைத் திட்டத்தில் அஹிம்சை, இந்து முஸ்லிம் ஒற்றுமை ஆகியவற்றையும் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டார்.

சேலம்

ராஜாஜி சேவை

கோவை நகராட்சி மன்றம் தனது வரவேற்புரையில் காந்திஜியின் போராட்ட முறையை ஏற்காது கருத்து வேற்றுமை தெரிவித்தது என்றால், சேலம் நகராட்சி மன்றம் முற்றிலும் அதை ஏற்றுக் கருத்து உடன்பாடு தெரிவித்திருந்தது. தீண்டாமை விலக்கு, மதுவிலக்கு, கதர், இந்தி ஆகிய எல்லாவற்றிலுமே அவர்கள் தங்களுடைய உடன்பாட்டைத் தெரிவித்திருந்தார்கள். நகரசபைச் சட்டம் எந்த அளவிற்கு இடந்தருகின்றதோ அந்த அளவிற்குத் தாங்கள் நிர்மாணத் திட்டத்தைச் செயல்

படுத்திக் காட்ட விரும்புவதாக அவர்கள் தைரியமாய்க் கூறியிருந்தனர். சேலம் நகராட்சி அளித்த வரவேற்பில், ராஜாஜி இதே நகராட்சி மன்றத் தலைவராக இருந்த போது நகராட்சி எல்லைக்குள் இருந்த சாராயக் கடை களையும் கள்ளுக்கடைகளையும் அப்புறப்படுத்தினர் என்றும் ஆனால் அரசாங்கம் பின்னர் அக்கடைகளை நகராட்சி எல்லைக்குள் வைக்க வேண்டுமென உத்திரவிட்டு விட்ட தென்றும் கூறியிருந்தார்கள். அண்ணல் சொன்னார் : ''உங்களுடைய முன்னேற்றத்தை நான் மிகவும் பாராட்டு கிறேன். (அனைத்து இந்திய) காங்கிரஸ் தலைவர் ஒரு வரையும் (சி. விஜயராகவாச்சாரியார்) தலைமைச் செய லாளர் ஒருவரையும் (ராஜாஜி) அளித்த ஓர் ஊரிலிருந்து இதைக் காட்டிலும் குறைவான எதையும் எதிர்பார்க்க முடியாது. சென்னை மாநிலத்தில் மற்ற இடங்களில் இருப் பதை விட சேலத்தில் சுதேசி அதிகம் பரவியிருக்கிறது'' நகராட்சியில் இருந்த பஞ்சம உறுப்பினர் அண்ணலுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றார். இவையெல்லாம் முடிந்து அண்ணல் அஸ்தன் பட்டியில் தாம் தங்கியிருந்த இல்லத்திற்குத் திரும்புவதற்கு மதியமாகிவிட்டது. காந்திஜியின் வருகையை முன்னிட்டு இங்கு நாலாயிரம் ஏழை களுக்கு அன்னம் வழங்கி மக்கள் கொண்டாடினர்கள்.

மாலையில் ஏராளமான நிகழ்ச்சிகள் அண்ணலுக்குக் காத்திருந்தன. மாதர்கள் கூட்டத்தில் பங்கு கொண்டு' வெளிநாட்டுப் பட்டையும் பகட்டையும் விலக்கி நூல் நூற்றுக் கதர் அணியுமாறு அறிவுரை சொன்னார். பல தாய்மார்கள் இங்கு அண்ணலிடம் தங்களுடைய நகைகளைக் கழற்றிக் கொடுத்தார்கள். டாக்டர் வரதராஜுலு நாயுடு வின் மனைவியாரோ தாம் அணிந்திருந்த அத்தனை நகைகளை யும் கொடுத்துவிட்டார். இதன்பின், முக்கியமான நெசவாளர்களும் வணிகர்களும் அண்ணலைச் சந்தித்துப் பேசினார்கள். கல்விச் சங்கம் என்ற ஒரு அமைப்பு எட்டுப் பள்ளிகளை - அரசாங்கத்தின் மான்யம் வேண்டாம் என்று உதறித்தள்ளிவிட்டு-தேசியப்பள்ளிகளாக நடத்திக் கொண்டு வந்தது. இதேபோன்று அரசாங்க உதவி பெற்ற பள்ளிகளி லிருந்து வெளியேறி வந்த மாணவர்களுக்காகக் காங்கிரஸ் குழுவும் ஒரு தொடக்கப்பள்ளியையும் உயர்நிலைப் பள்ளியை யும் நடத்தி வந்தது. இப்பள்ளிகளின் மாணவர்கள் நூல்

பொதுக் கூட்டம்

நூற்றதை அண்ணல் பார்த்து மகிழ்ந்தார். சேலம் இலக்கிய சங்கத்திற்கு சென்று அங்கு லோகமான்ய திலகரின் படத்தை (உள்ளூர் கலைஞரான வி. வி. லிங்கம் தீட்டியது) திறந்து வைத்தார். அதன் பின்பு நகராட்சி உணவு விடுதி மைதான பொதுக் கூட்டத்தில் மாவட்டக் காங்கிரஸ் குழுவின் சார் பாகவும் வன்னியகுல சூத்திரியர் சார்பாகவும் சௌராஷ்டிர வகுப்பினர் சார்பாகவும் வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப்பெற்றன. சேலம் சி. விஜயராகவாச்சாரியார் தலைமை தாங்கிய இக்கூட்டத்தில் வழக்கம் போன்று வெளி நாட்டுத் துணி விலக்கு, கதர், தீண்டாமை ஒழிப்பு ஆகிய வைகளை வலியுறுத்திப் பேசினார். இக்கூட்டத்தை முடித்துக் கொண்டு அவர் நேரே இரயிலில் திருப்பதிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நகை ஆசை

காந்திஜி இம் முறை தமிழகத்திற்கு வருவதற்குமுன், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகளும் காதும் கழுத்தும் நிறைய நகைகளும் அணிய ப் பெண்களுக்குள்ள ஆசையை ஒரு அன்பர் காந்திஜியின் கவனத் திற்குக் கொண்டு வந்திருந்தார். திருப்பதி யைச் சேர்ந்த இந்த வைஷ்ணவ அன்பர் மனம் நொந்து எழுதிய கடிதத்தில் - இவர் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தவர் - ''சென்னையில் நமது இயக்கத்தில் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் நம்முடைய மாதர்களே. இவர்களில் சிலர் மிகவும் பிற்போக்குவாதி களாக இருக்கின்றனர். மேற்கு நாடுகளின் தீய பழக்கங்கள் உயர்ந்த பிராம்மண வகுப்பைச் சேர்ந்த பெண்களில் பலரைப் பற்றிக் கொண்டு விட்டது. குறைந்தது மூன்று முறை யாவது அவர்கள் காபி அருந்துகிறார்கள். இன்னும் அதிக முறை அருந்துவதே அதிக நாகரிகம் என்று கருதுகிறார்கள். உடையிலும் இப்படித்தான். குடும்பப் பெண்கள் புனைய வேண்டிய எளிய உடையை விடுத்து, விலை மதிப்பான வெளி நாட்டுத் துணி மணிகளை நாடிச் செல்கின்றனர். நகை களைப் பொருத்தவரை பிராமணப் பெண்கள் எல்லோரையும் தோற்கடித்து விடுகிறார்கள். பிராமணர்களுக்கிடையில் ஸ்ரீ வைஷ்ணவப் பெண்கள் தாம் பெரும் பாவிகள். ஆண்கள் தூய வாழ்க்கையை நோக்கித் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது பெண்கள் தாம் பெரிய ஊதாரிக ளாகிக் கொண்டு வருகின்றனர். ஆண்டவனை ஆராதிக்க ஆலயத்திற்குச் செல்லும் போது, அவர்களால் சாதாரண,

தூய ஆடையைப் பற்றி எண்ணிப் பார்க்க முடிவதில்லை. மிக உயர்ந்த ஆபரணங்களும் அதற்கும் உயர்ந்த ஜரிகைப் புடவைகளும் அவர்களுக்கு வேண்டும்,'' என்று எழுதியிருந்தார். இதைக் குறித்து (11-8-1921) ''யங் இந்தியா''வில் காந்திஜி தெரிவித்த கருத்துக்கள் இன்று கூடத் தாய்மார்கள் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய பேருண்மையாகும். ''ஆடம்பர மோகத்தில் இந்தியாவின் பிற பகுதிகளை விடத் தமிழ்ச் சகோதரிகள் மோசம் என்பதை நம்ப என்னுடைய மனம் மறுக்கிறது. இருந்தாலும் இந்தக் கடிதம் தமிழ்ச் சகோதரிகளுக்கு ஓர் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். பழைய எளிமைக்கு அவர்கள் மீண்டும் திரும்பவேண்டும். ஆடம்பரமான உடை அணிந்திருப்போரைவிட உள் தூய்மையின் சின்னமாக மாசு மருவற்ற கதர்ச் சேலை அணிவோரையே ஆண்டவன் அதிகம் விரும்புவான் என்பது உறுதி. நம்முடைய ஆலயங்கள் வெறும் பகட்டுக்காக ஏற்பட்டவையல்ல. பக்தியின் சின்னங்களான அடக்கத்திற்கும் எளிமைக்கும் சின்னமாய் இருப்பவை. அன்பர் புகார் செய்திருக்கிற தீமையைப் போக்கச் சென்னை மாநிலத்தில் மாதர்களிடையே தொடர்ந்து பிரச்சாரம் செய்து வர வேண்டும்.''

மறுபடியும் இவர் பட்டாடைகளில் பெண்கள் கொண்டுள்ள மோகத்திலும் தூய வெள்ளைப் புடவைகளைத் தென்னிந்திய மாதர்கள் அணிவது வழக்கமில்லையாதலாலும் இங்கு கதர் வேகமாகப் பரவ முடியவில்லை யென்று காந்திஜிக்கு எழுதியிருந்தார். இவ்வாறு பெண்கள் பட்டு மோகம் கொண்டு அலைவதால், குடும்பங்கள் நாசமாவதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். இந்தக் கடிதம் சென்னைக்கு அண்ணல் வருவதற்குச் சில வாரங்களுக்கு முன் எழுதப் பெற்றிருந்தது. இக்கடிதத்தைக் கண்டு அண்ணல் மிகவும் மனம் நொந்து போயிருக்க வேண்டும் என்று தெரிகிறது. (25-8-21) ''யங் இந்தியா'' வில் இதைப்பற்றி எழுதிய அண்ணல், (இதைக் கேள்விப்பட்ட பின்) ''சென்னைக்கு வருவதற்கே நான் அஞ்சுகிறேன்'' என்று நொந்து கூறியிருந்தார். ''தமிழ்ப் பெண் பட்டுப் புடவையில் அளவுக்கு மீறிப் பற்று வைத்திருக்கிறாள் என்று அன்பர் கூறியிருக்கிறார். எனது கருத்தும் இதுவே. சென்னையைப் போன்று வெப்பமான பருவநிலை உள்ள ஒரு

மோகம்

பகுதிக்குப் பட்டைப் போன்று பொருத்தமற்ற ஆடை இருக்க முடியாது. இந்தியாவைப் போன்ற ஓர் ஏழை நாட்டில் ஒரு புடவைக்காக நூறு ரூபாய் செலவிடுவ தென்பது பாவச் செயலான பணவிரையமாகும். அதிக மான மக்களே வெளிநாட்டு அடிமை வாழ்விற்கு அனுப்பும் பகுதி திராவிட நாடுதான். சர்க்காவிற்கு மீண்டும் உயிர் ஊட்டுவதுதான் இவ்வாறு கட்டாயமாக மக்கள் வெளிநாடு செல்ல வேண்டியுள்ள சிக்கலை இயல்பாகவே தீர்க்கக் கூடியது. வரி முற்றிலும் இல்லாவிட்டாலுங்கூட, ஏழை இந்திய விவசாயிகளுக்கு நிலம் மட்டும் ஆதரவு அளித்து விட முடியாது.''

ஆகவே இவ்விதச் சூழ்நிலையில் வந்த காந்திஜி இங்கு வந்தபின் என்ன கருத்துக் கொண்டார் என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்தச் சுற்றுப்பயணத்தைப் பற்றி அண்ணலே கருத்துக் கூறியிருக்கிறார்; மற்ற சுற்றுப்பயணங்களைப் போன்று இந்தச் சுற்றுப்பயணம் மகாத்மாவிற்கு மன நிறைவு தரவில்லை. அதற்கு நேர்மாறாக ஏமாற்றத்தையே தந்திருக்கிறது. இதனால் அவர் பெரிதும் மனச் சோர்வு அடைந்திருக்கிறார் என்பது அவர் கூறியவற்றிலிருந்து தெரிகிறது: ''எனது சென்னைச் (தமிழகத்தையே இங்கு அவர் குறிக்கிறார்.) சுற்றுப்பயணம் ஒரு ஏமாற்றமாகவே இருந்தது. சென்னை மக்கள்மீது எனக்கு எப்போதுமே பெரும் பாராட்டுதல் உண்டு. எந்த இன்னலையும் ஏற்க அவர்களுக்கு உள்ள சக்தியை நான் பலமுறை பார்த்திருக் கிறேன். ஆனாலும் சுதேசியில் சென்னை பிற்போக்கான நிலையில் இருக்கிறது. சென்னை விழிப்படைந்தால் இன்னும் எவ்வளவோ சாதிக்கலாம். சென்னையில் உள்ள மாதர் களின் சாமர்த்தியத்துடன் ஒப்பிட்டால், குஜராத்தியப் பெண்கள் இருக்குமிடம் தெரியாமல் போய்விடுவார்கள். தமிழகப் பெண்கள் மிகுந்த புத்திக் கூர்மை உள்ளவர்கள். வேறு எந்த இந்தியப் பெண்களுக்கும் இவ்வளவு கைத் திறன் கிடையாது. கொஞ்சங்கூடப் பயனற்ற ஒரு பொருளை விலைபோகுமாறு செய்யக் கூடிய அருந்திறன் அங்குள்ள மாதர்களுக்கு உண்டு.'' அதே சமயம் தமிழ்ப் பெண்கள் கதர் அணியாதது அவருக்கு வருத்தந் தந்தது. (தமிழகத்தில் முஸ்லிம் பெண்கள் முரட்டு வெள்ளைப் புடவைகளை அணிந்திருந்தது புனிதமான

ஏமாற்றம்

தோற்றமாக இருந்தது என்று அவர் பாராட்டியிருக் கிறார்.) "ஊழியர்களுக்கும் அங்குக் குறைச்சல் இல்லை. நம்முடைய ஊழியர்களில் இராஜகோபாலாச்சாரியைப் போன்ற விவேகமும் நாணயமும் திறனும் உள்ளவர்கள் மிக மிகச் சொற்பமே. நம்முடைய போராட்டத்தை அவர் நூற்றுக்கு நூறு சரியாகப் புரிந்து கொண்டிருக் கிறார். நெருக்கடியான கட்டத்தில் அவரால் உறுதியாக வும் பொறுமையாகவும் இருக்க முடியும்." என்றும் கூறியிருக்கிறார். மேலும் அவர் சொன்னார்:

ஏமாற்றம் ஏன்?

"அப்படியானால், சென்னை எனக்கு ஏன் ஏமாற்றம் அளித்தது? இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவதாக, அந்தப் பகுதியில் ஆங்கிலத் தின் மோகம் அவ்வளவு ஆழமாகப் பதிந் திருக்கிறது. சென்னையில் ஆங்கிலம் தெரிந்த யாரும் தமிழைப் பற்றி அக்கறை கொள்வ தில்லை. வங்காளிகளும் ஆங்கிலத்தை நேசிக்கத்தான் செய் கிறார்கள். ஆனாலும் அதற்காக வங்காளி மொழியை அவர்கள் கைவிட்டு விடுவதில்லை.... சென்னையில் தமிழைக் கைவிட்டு விட்டார்கள் என்றே சொல்ல வேண்டும். இதனால், தமிழ் வளர்ச்சியடையவில்லை என்பது மட்டு மல்ல, ஆங்கிலம் பேசும் பிரிவினரிடையேயும் தமிழ் பேசும் வகுப்பினரிடையேயும் ஒரு பெரிய ஏற்றத்தாழ்வு இருக்கி றது. இராஜகோபாலாச்சாரியும் அவருடைய சகாக்களும் இந்த ஏற்றத்தாழ்வைச் சரிகட்டுவதற்காக எல்லா முயற்சி களும் எடுத்து வருகிறார்கள். ஆனால் இதற்குச் சிறிது காலமாகும்.*" (தமிழின் வளர்ச்சிக்கு காந்திஜி எவ்வளவு தூரம் உதவியிருக்கிறார் என்பதை இங்கு நாம் நன்கு உணர முடிகிறது.)

குருட்டு வைதிகம்

"என்னுடைய ஏமாற்றத்திற்கு மற்றொரு முக்கியமான காரணம் யாதெனில், தர்மத்தின் மீது சென்னை மக்கள் உண்மையான மதிப்புக் கொண்டிருந்தாலும் குருட்டுத்தனமான மதவைதிகம் தங்களை முழுதும் ஆட்கொள்ள அவர்கள் இடமளித்து விட்டார்கள். ஆகையால் சமயத்தின் வெளித் தோற்றங்கள் தாம் அங்கே இருக்கின்றன. உட்பொருள்

* காந்தி நூல் ஆங்கிலத் தொகுப்பு 21 — பக்கம் 233

மறைந்து போய்விட்டது. இந்தியாவின் வேறு எந்தப்பகுதியிலும் இல்லாத அளவிற்குப் பஞ்சமர்கள் அங்கு இழிவடைகிறார்கள். வேறு எங்கும் இல்லாத அளவிற்கு பிராமணர்களிலிருந்து பிராமணரல்லாதார் பிரித்து வைக்கப்பட்டுள்ளனர். அதேசமயம் வேறு எப்பகுதியினரும் அவர்கள் அளவு விபூதியையோ, சந்தனத்தையோ, குங்குமத்தையோ செலவழிப்பதில்லை. வேறு எப்பகுதியிலும் அங்குள்ள அளவு ஆலயங்கள் இல்லை; ஆலயங்களுடைய பராமரிப்பிற்காகத் தமிழகத்தில் உள்ள அளவு செலவிடுவதுமில்லை. இதன் காரணமாகப் படித்தவர்கள், சமயத்திலிருந்து ஒதுங்கி எதற்கெடுத்தாலுங் குற்றங் கண்டு பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இது ஒரு புறம். மற்றொரு புறமோ, வைதிகர்களிடையே ஒரே இருளும் அறியாமையும் கவிழ்ந்திருக்கிறது.

நம்பிக்கை ஒளி

''இத்தகைய ஒரு சூழ் நிலையில் இருள் மறைந்து விட்டால் ஒளி தானாகவே வந்து விடுகிறது. தங்கள் உள்ளத்தில் பரவியுள்ள இருளைச் சாதாரண மக்கள் உணர்ந்தவுடனேயே, அது தானாக மறைந்து விடும். இதனால்தான் இருளின் மத்தியில் நம்பிக்கை ஒளியை நான் காண்கிறேன். தாங்கள் எவ்வித முயற்சியும் செய்யாமலேயே மக்கள் இராட்டையைச் சுழற்றத் தொடங்கிவிட்டதாக, காங்கிரஸ் ஊழியர்கள் என்னிடம் கூறினர்கள். காங்கிரஸ் ஊழியர்கள் ஒரு வேலையும் செய்யாத இடங்களில் கூடக் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆயிரக்கணக்கானோர் கதர்க் குல்லாய் அணியத் தொடங்கியிருக்கிறார்கள். காங்கிரஸ் ஊழியர்களில் பெரும்பாலோர் (பெரும்பாலோர்... என்ற சொல்லை இங்குக் கவனிக்க வேண்டும். 1921-இல் காங்கிரஸ் ஊழியர்கள் கதர் அணிவது கட்டாயமாகவில்லை.) முற்றிலும் கதரே அணிகிறார்கள். 'சென்னை அனுபவத்திலிருந்து உங்களுடைய முடிவென்ன?' என்று கேட்பீர்களாயின், இந்த அனுபவத்தின் பின்னும், ஆண்டு முழுயுமுன் சுயராஜ்யம் பெற முடியும் என்ற நம்பிக்கையை நான் இழந்து விடவில்லை என்றே கூறுவேன்.''

''வங்கம் என் உள்ளத்தில் சோர்வை ஏற்படுத்தியது உண்மையே. ஆனால் அதைவிட அதிகமான சோர்வைச் சென்னை ஏற்படுத்திவிட்டது. காங்கிரஸ் ஊழியர்கள் இராட்டையில் நம்பிக்கைகொள்ளுமாறு செய்ய வேண்டும்.

அதுவே உண்மையான வேலை என்பதை நான் அறிவேன். வங்கத்தில் இதை நான் எதிர்பார்த்து ஏமாந்தேன். இங்கேயும் நிலைமை அவ்வாறுதான் இருக்கிறது. அதுதான் என்னைப் பதட்டமடையுமாறு செய்கிறது,'' என்று கோவைக்குச் சென்ற வழியில் அவர் மகாதேவ் தேசாய்க்குக் கடிதம் எழுதினார்.

இந்தச் சுற்றுப்பயணத்தின் போது காந்திஜியிடம் அளிக்கப் பெற்ற பண முடிப்புக்களின் மொத்த விவரமாவது:

ஸ்மர்ணி நிதி :	ரூ. 7,122-2-6
கிலாபத் நிதி :	ரூ. 153-1-9
திலகர் சுயராஜ்ய நிதி :	ரூ. 23,209-6-0

(இந்தக் கணக்கை ராஜாஜி அறிவித்தபோது, ஏலம் போடாத சில பொருள்களும் கையிருப்பில் இருந்தன.)

சென்னையில் கூறியது

சென்னைக்கு வந்து காந்திஜி திரும்பிய பின், பெயர் பெற்ற வழக்கறிஞரும் சாத்திரங்களில் நன்கு தேர்ச்சி பெற்றவருமான ஆர். கிருஷ்ணசாமி ஐயர், சாத்திரங்களில் தீண்டாமைக்கு இடம் இருக்கிறது என்று மனுஸ்மிருதியிலிருந்தும் மற்றும் சில சாத்திரங்களிலிருந்தும் ஆதாரங்களை எடுத்துக் காட்டி எழுதிய கடிதத்தை (20-10-21, 27-10-21 ஆகிய இரண்டு) ''யங் இந்தியா'' இதழ்களில் அண்ணல் வெளியிட்டு, அதற்கு மறுமொழியும் அளித்திருந்தார். அந்த மறுமொழியில் '' தீண்டாதாருக்கு விரோதமாகப் பகுத்தறிவுக்குக் கட்டுப்பாடுகள் விதிப்பதையும் கொடுமையான வேற்றுமை உணர்ச்சி காட்டுவதையுந்தான் சென்னையில் நான் முக்கியமாகக் குறிப்பிட்டுப் பேசினேன். நம்முடைய தாய்மார்களும் சகோதரிகளும் '' தீண்டாதவர்களாய்'' இருக்கும்போது அவர்களை எவ்வாறு நடத்துகிறோமோ அவ்வாறு பஞ்சமர்களை நடத்துகிறோம்? சாத்திரங்களில் எனக்குள்ள அறியாமையை இன்று கூட ஒப்புக் கொண்டாலும், இந்து சமயத்தின் சாரத்தைப் புரிந்து கொண்டிருப்பதாகக் கூறிக் கொள்ள முடியும். இது வரை நாம் கடைப்பிடித்து வந்துள்ளதைப் போன்ற ஒரு தீண்டாமையை இன்னும் தொடர்ந்து நிலையாகக் கடைப் பிடிப்பதென்பது இந்து சமயத்திற்கே பெருங் களங்கமாகும்; ஸ்மிருதிகளைத் தவறான முறையில் பயன்படுத்துவதும் இந்து சமயத்திற்கு

அடிப்படையான, அன்பிற்கு விரோதமான செயலுமாகும். ஆகையால் இன்று கடைப்பிடிக்கப்படும் தீண்டாமையை சத்தான் செயல் என்று நான் சொல்லத் தயங்குவதில்லை. திரு ஐயருக்கு ஆண்டவன் சில திறமைகளை அளித்திருக்கிறார். அந்தத் திறமைகளைத் தீண்டாதாரின் சேவைக்காக அவர் பயன்படுத்த வேண்டுமென்று நான் அழைக்கிறேன். அப்போது, இந்து சாத்திரங்களில் வாழ்க்கைக்குரிய பொருளை நான் காண்பது போலவே அவருங் காண முடியும்'' என்று எழுதியிருந்தார்.

பிராமண சகோதரர்கள்

காந்திஜி ஒரு புரட்சிகரமான சீர்திருத்த வாதி. வர்ணஷ்ரம தர்மத்தை ஆதரிப்பதாக அவர் கூறி வந்ததைக் கொண்டு சிலர் அவரைப் பிற்போக்கு வாதியாகக் கருதினர்கள். ''வர்ணஷ்ரம தர்மம்'' என அவர் அழைத்தது எதை என்பதை அறியாதவர்கள் தாம் இவ்வாறு கருதியவர்கள். சாதாரணமாகப் பொருள் கொள்ளப் படும் வர்ணஷ்ரம தர்மத்திலுள்ள பிற்போக்குத் தனமான, உண்மைக்கு விரோதமான அம்சங்களை அவரைப் போன்று கண்டித்தவர் இல்லை என்பதை இவர்கள் அறியவில்லை. தஞ்சை மாவட்டத்தில் 1921-ஆம் ஆண்டில் இரண்டு பிராமண சகோதரர்கள் உழவுத் தொழிலை மேற்கொண்டார்கள். இதற்காக பிராமண வகுப்பைச் சேர்ந்த மற்ற வர்கள் அவர்களைச் சாதியிலிருந்து தள்ளி வைத்து விட்டார்கள். கும்பகோணம் சங்கராச்சாரியார் அப் பகுதிக்கு வந்தபோது, பிழைப்புக்காக உடலால் உழைப் பது என்ற பாவத்தைச் செய்த பிராமணர்களிடமிருந்து தாம் காணிக்கை எதையும் பெற்றுக் கொள்ள முடியாது என்றுங் கூறிவிட்டார். ஆனாலும் இந்த இரு சகோதரர்களும் சளைக்கவில்லை. தொடர்ந்து தங்கள் உழவுத் தொழிலைச் செய்து கொண்டுதான் இருந்தார்கள். இவர்களில் ஒருவர், காந்திஜிக்குத் தங்களுடைய நிலையை விளக்கிக் கடிதம் எழுதவே, அண்ணல் அவர்களுடைய அஞ்சா நெஞ்சத்தைப் பாராட்டினார். ''கொடுமையான ஒரு சமூகத்திலிருந்து விலக்கிவைக்கப் பெறுவதே ஒரு சிறப்புத்தான்; அதை வரவேற்க வேண்டும்'' என்று அவர் பாராட்டி, ''ஒரு பிராமணர் கலப்பையையே தொடக் கூடாது என்று சொல்வது வர்ணஷ்ரம தர்மத்தையே கேலி செய்வதும் பகவத் கீதைக்குத் தவறான பொருள் கொள்வதுமாகும்'' என்று கண்டித்திருந்தார்.

இந்தியாவின் வீழ்ச்சிக்கு வழிகோலிய ஓர் அரசாங்கத்தில் (பிரிட்டிஷ் இந்திய அரசாங்கத்தில்) அரசு ஊழியராகவோ படை வீரராகவோ சேருவது தேசியத் தன்மானத்திற்கே விரோதமானது என்றும் இதைத் தங்கடைய சொந்தக் கருத்தாகக் கூறுவதாகவும், காந்திஜி வேண்டுகோளின்படி பம்பாயில் கூடிய தலைவர்கள், ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். காங்கிரஸ் செயற்குழு பின்னல் இந்த அறிக்கையை அதிகாரப் பூர்வமாக ஏற்றுக் கொண்டது.

படையில் சேருவது

இந்தச் சமயத்தில், அதாவது (1921 செப்டம்பர் மாதம்) காந்திஜியும் தாகூரும் சந்தித்து இந்திய அரசியல் நிலை பற்றி வாதித்தனர்; ஆனால் அவர்களுக்குள் கருத்து உடன்பாடு ஏற்படவில்லை. அவர்களுக்குள் வெளிப்படையாகக் கருத்துப் போர் நடந்த காலமும் இதுதான். எவ்வளவு தான் பெரிய மனிதராயிருந்தாலும் இந்தியாவைப் போன்ற ஒரு பரந்த நாட்டின் கருத்து ஒரு தனி மனிதரின் விருப்பத்தைப் பொருத்ததாக இருக்கக் கூடாது என்று தாகூர் எச்சரித்தார். கையால் நூற்கவும் நெய்யவும் வேண்டுமென காந்திஜி வலியுறுத்திப் பிரச்சாரம் செய்து வந்ததை அவர் எதிர்த்தார். அவர் மீது அண்ணலுக்கு மிகுந்த மரியாதையும் வாஞ்சையும் உண்டு. ஆகவே அவருக்குப் பணிவாகவும் விநயமாகவும், அதேசமயம் உறுதியாகவும், பதில் அளித்தார். தாம் சொன்னதற்காக அல்லாமல், நிதானமாகச் சிந்தித்துப் பார்த்துத்தான், இந்திய மக்கள் இராட்டையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றார் அண்ணல். கவிஞரை ஒரு புனித காரியமாக எண்ணி இராட்டையைச் சுழற்ற வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

காந்திஜி தாகூர்

இதற்குப்பின், அலி சகோதரர்களுக்கு இரண்டு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றதானது, நாட்டில் மறுபடியும் பெரிய கொந்தளிப்பை உண்டாக்கியது. ஆனல் காந்திஜி, மக்களை யும் தலைவர்களையும் நிதானமாக நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பர் தோலியில் தாம் சட்ட மறுப்பைத் தொடங்கப் போவ தாகவும் அதன் விளைவுகளைப் பார்த்துப் பிற பகுதிகளில் சட்ட மறுப்பைத் தொடங்கலாமென்றும் யோசனை கூறினர்.

மக்கள் கொதிப்பு

இந்தச் சமயத்தில் வேல்ஸ் இளவரசர் இந்தியா வந்தார். அவர் இந்திய மண்ணில் வந்து இறங்கியபோது அவர் சென்ற இடங்களிலெல்லாம் அவரை வரவேற்றது பொதுவேலைநிறுத்தமும் கடை அடைப்புமே. பம்பாயில், இளவரசரை வர வேற்க ஒரு சிலர் சென்றிருந்தார்கள். அவர் களையும் அங்குப் பாதுகாப்பிற்காக வந்திருந்த போலீ சாரையும் ஆத்திரமடைந்த கூட்டம் தாக்கியதைக் கேள் விப்பட்டவுடன், காந்திஜியே அந்த இடத்திற்குச் சென்று, கூட்டத்தினரைக் கலைத்து அனுப்பியதுடன் காயம்பட்ட போலீசாருக்கு முதல் உதவியும் அளித்தார். நாடெங்கும் இவ்வாறு வன்முறைகள் நடைபெற்றதாகப் பின்னர் அவருக்குச் செய்திகள் வந்தன. அத்தகைய ஒரு சூழ் நிலையில் சட்ட மறுப்பைத் தொடங்குவது விரும்பத்தக்க தல்ல எனக்கருதி, பர்தோலி சட்ட மறுப்பு ஏற்பாடுகளைத் தற்காலிகமாகத் தள்ளி வைத்துவிட்டு, அமைதியை நிலை நாட்டுவதற்காக உண்ணுநோன்பை மேற்கொண்டார்.

வேல்ஸ் இளவரசர்

வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்த அன்று சென்னையில் பொதுவேலை நிறுத்தம் முழு வெற்றி அடைந்தது. ஆனலும், அதே சமயம் வன் முறை நிகழ்ச்சிகளும் தாராளமாக நடந்து விட்டன. போலீஸார் சுட்டதில் சிலர் இறந்தார்கள். ''வெல்லிங்டன்'' டாக்கீஸ் முன் மக்கள் கூடிக் கற்களை வீசினர்கள்; கொட்டகை மாடியிலிருந்து ஒருவர் கூட்டத்தை நோக்கிச் சுட்டதில் ஒருவர் அந்த இடத்திலேயே மாண்டார். மற்றும் சிலர் காயமடைந்தார்கள். ஆகையால் கூட்டம் ஆத்திர

சென்னை நிகழ்ச்சி

மடைந்து கொட்டகைக்குள் நுழைந்து, சன்னல்களையும் மேசை நாற்காலிகளையும் தூள் தூளாக்கியது. அப் போது முதல் அமைச்சராய் இருந்த சர் தியாகராச செட்டியார் இல்லத்தையும் மக்கள் சூழ்ந்து கொண்டு சட்ட மன்றத்திற்கு (இளவரசரின் வரவேற்பிற்கு) அவர் வர முடியாது தடுத்து விட்டனர்.

காந்திஜி கவலை

இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் டாக்டர் ராஜன் மூலம் காந்திஜி கேள்விப்பட்டபோது மிகவும் மன வருத்த மடைந்தார். பொது வேலை நிறுத்தம் வெற்றியடைந்தது கூட அவருக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை. வேலை நிறுத்தம் நடைபெற்ற அன்று வன்முறைக் கலவரம் நடைபெற்றி ருக்கிறதே என்பதுதான் அவர் கவலை. (19-1-22-''யங் இந்தியா''வில்) அவர் எழுதினார்: ''பொருள்களை நாசம் செய்தது காலிகள் செயல் என்று கூறுவது ஒரு வாத மாகாது. சென்னையில் ஒத்துழையாமை இயக்க வாதிகள் சுயாட்சிக்குத் தகுதியாகவில்லை என்பதற்கு இது முழுச் சான்று. தகுதியிருப்பதாக உரிமை பாராட்டுவோர், இம்சைச் சக்திகளையெல்லாம் அடக்க முடிந்திருக்க வேண்டும். இது அமைதியான வேலை நிறுத்தம் அல்ல. ஏனென்றால் மற்றவர்கள் கடைகளைத் திறந்து வைத்திருந் தால், பாவம், அந்தத் திரைப்படக் கொட்டகையின் சொந்தக்காரருக்கு ஏற்பட்ட கதிதான் அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கும். திரைப்படக் கொட்டகைக்காரர் சுட்டது நியாயமானதுதான் என நான் கருதுகிறேன். ஏனெனில் அவர் சுட்டிராவிட்டால் அவருடைய கொட்டகையையே இடித்துத் தள்ளியிருப்பார்கள். மேலும் சர் தியாகராச செட்டியார் இல்லத்தைச் சூழ்ந்து கொண்டது, தனியார் சுதந்திரத்தில் கோழைத்தனமாகக் குறுக்கிட்டதாகும். வன்முறைக் கூட்டத்தின் வழியாக இது இருக்கலாம். ஆனாலும் ஒத்துழையாமை இயக்க வாதிகள் கடைப் பிடிக்கக் கூடியவழியல்ல... பம்பாயைப் போன்றே சென்னை யும் நமக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து விட்டது. சுய ராஜ்யத்திற்கான சூழ்நிலையை உண்மையிலேயே உருவாக்கு வதற்கு இன்னும் நாம் எவ்வளவோ செய்தாக வேண்டும். அமைதியான புரட்சி வெற்றி தரும் என்ற நம்பிக்கை நமக்கு வேண்டும். அல்லது, அஹிம்சை என்பது இம்சைக்

காக நாம் நடத்தும் பயிற்சிதான் என்பதில் நமக்கு நம்பிக்கையா? அப்படியானால் நாம் நமது கோட் பாட்டையே மாற்றிக் கொள்ள வேண்டும். ஆனால் இந்தியா குறிப்பிடத்தக்க அளவு அஹிம்சை உணர்ச்சி கொண்டிருக்கிறது என்று நம்பும் அளவிற்கு நான் திட நம்பிக்கை உள்ளவன்.'' இதோடு விட்டாரா? (22-1-22-இல் வெளியான '' நவஜீவனில் '' மீண்டும் இந்த வன்முறை நிகழ்ச்சிகளைக் கடுமையாகக் கண்டித்தார்.) வன்முறை நிகழ்ச்சிகளைப் பற்றி அறிந்த போதெல்லாம் மகாத்மாவின் உள்ளம் விம்மி வெதும்பியிருக்கிறது. அவர் சொன்னார்: ''இந்த நிகழ்ச்சிகள் எதைக் கற்பிக்கின்றன? இந்த ஆட்சி முடியும்போது போக்கிரிகள் தான் ஆள்வார்களே தவிர, நாம் ஆளமாட்டோம்.''

காங்கிரஸ் பொறுப்பு

பொது வேலை நிறுத்தம் நடைபெற்ற அன்று சென்னையில் நிகழ்ந்த வன்முறை நிகழ்ச்சிகளையெல்லாம் பலர் விவரமாக அண்ணலுக்கு எழுதினர்கள். எவ்வாறு டிராம்களும் அவைகளில் சென்ற வர்களும் (மாணவிகள் உள்படத்) தாக்கப் பட்டனர் என்பதையெல்லாம் சென்னை இராஜதானி கல்லூரியைச் சேர்ந்த வி. ஆர். இராஜ கோபாலன் எழுதியிருந்தார். இந்தக் கடிதத்தை அண்ணல் வெளியிட்டு, இந்தியாவின் பிற பகுதிகள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டினர். சென்னை காங்கிரஸ் குழு இந்தத் தவறுகளின் பொறுப்பை ஏற்கும் எனத் தாம் நம்புவதாகவும் தெரிவித்திருந்தார்.

சுப்பிரமணிய சிவா

இந்தச் சமயத்தில், ஒத்துழையாமை இயக்கவாதிகள் சொன்ன சொற்படி நடப்பதில்லை, நம்பிக்கை மோசம் செய்து விடுகிறார்கள் என்ற ஒரு குற்றச் சாட்டை அரசினர் கிளப்பினர். இவ்வாறு முதலில் நம்பிக்கைத் துரோகம் செய்ததாக அரசினரால் குற்றம் சாட்டப் பெற்றவர் தேச பக்தர் சுப்பிரமணிய சிவா ஆவார். இவர், கடும் நோய் வாய்ப்பட்டதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அரசியலில் ஈடுபடுவதில்லை என்று வாக்குறுதி அளித்து விடுதலை கேட்டதாகவும் ஆனால் பின்னர், அவ்வாறு வாக்குறுதி அளிக்கவில்லை என்று மறுப்பதாகவும் அரசு கூறியது. இதைக் குறிப்பிட்டு அண்ணல் எழுதினர்:

''சுப்பிரமணிய சிவா புகழ்பெற்ற ஊழியராவார். தமது நிலையை முழுதும் விளக்கி அவர் அறிக்கை வெளியிடுவார் என்றும் ஒரு பலவீனமான கட்டத்தில் அவர் மன்னிப்புக் கோரியிருந்தால் யாகூப் ஹாசனைப் போன்று ஆண்மையோடு அதை ஒப்புக் கொள்வார் என்றும் நம்புகிறேன். ஓராண்டிற்கு அரசியலில் பங்கு கொள்வதில்லை என்று உறுதி அளித்திருந்தால் அதையும் அவர் காப்பாற்ற வேண்டும்.''

சிவா விளக்கம்

சில நாட்களில் சிவா தமது நீண்ட, விவரமான விளக்கத்தை மக்களுக்கும் மகாத்மாவுக்கும் அளித்தார். ''நான் விடுதலையானது குறித்து அரசாங்கம் வெளியிட்டிருக்கும் அறிக்கை என்னையும் என்னுடைய (தற்போதைய) நிலையையும் என் நாட்டு மக்கள் தவருகப் புரிந்து கொள்ளுமாறு செய்து விடலாம்.... என்னுடைய உறுதிமொழியின் பேரில் தான் விடுதலை செய்ததாகப் பொருள் கொள்ளக் கூடிய முறையில் அரசாங்கத்தின் அறிக்கை இருக்கிறது. ஆனால் திருச்சிராப்பள்ளி மத்திய சிறை சூபரின்டெண்டுக்கு வந்த ஆணை ''கி. பி. கோ..... பிரிவுப்படி, கைதி சுப்பிரமணிய சிவாவின் எஞ்சியுள்ள தண்டனையை நிபந்தனையின்றி ஆளுநர் தள்ளுபடி செய்கிறார்'' என்று தான் கூறியது. அந்த ஆணையில் ''நிபந்தனையின்றி'' என்ற சொல் பயன்படுத்தப் பெற்றிருக்கிறது. என்னுடைய உறுதிமொழியைப் பற்றியோ வேறு எந்த விதமான நிபந்தனையைப் பற்றியோ எதுவும் குறிப்பிடப் பெறவில்லை. சர்ஜன் ஜெனரலும் மாவட்ட மருத்துவ அதிகாரியும் செய்த சிபார்சே என்னுடைய விடுதலைக்கு முக்கிய காரணமாய் இருந்திருக்கலாம். ஆகவே நான் விரும்பும் முறையில் தொண்டாற்ற எனக்கு உரிமை உண்டென்பதை என் நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உறுதி எங்நிலையில் ?

''என் உறுதிமொழியைப் பற்றி ஒரு சொல். என்னுடைய தண்டனைக்குப் பின் நான் கடுமையாக நோய் வாய்ப்பட்டேன். உயிர் போய்விடுமோ என்ற கவலை ஏற்படக்கூடிய நிலையும் இருந்தது. அத்தகைய ஒரு சமயத்தில் தான், 'நான் விடுதலை செய்யப் பெற்றால் எதிர் காலத்தில் அரசியலில் பங்கு கொள்வதில்லை' என்று அரசாங்கத்திற்கு உறுதிமொழி அளித்தேன். சிலர் இதை என்னுடைய பலவீனமான

செயல் என்று கருதலாம். ஆனாலும் நான் அதை எழுதிய சூழ்நிலையையும் நேரத்தையும் கவனத்திற் கொண்டால், மன்னிப்புப் பெற எனக்கு உரிமை உண்டென்றே கருதுகிறேன்.''

இதை (9-3-22) ''யங் இந்தியா''வில் வெளியிட்டு, காந்திஜி எழுதிய குறிப்பானது அவர் எவ்வளவு கண்டிப்பான தலைவர் என்பதற்குச் சான்று பகர்ந்தது.

சொன்ன சொல்

காந்திஜி எழுதினார்: ''சித்திரவதைக்குள்ளாவோர் கூட மன்னிப்புக் கேட்கக் கூடாது என்றுதான் எல்லோரும் எதிர்பார்ப்பார்கள். என்றாலும், உடலில் துன்புறுத்தப்படும்போது ஒருவர் நடந்து கொள்ளும் முறையைக் குறித்து மற்றவர்கள் குறை கூறக் கூடாது. தாம் மன்னிப்புக் கோரியதற்காகப் பொது மக்கள் தம்மைக் கடுமையாகக் குற்றம் சாட்டிவிட வேண்டாமெனச் சிவா வேண்டிக் கொள்வது சரியே. ஆனால் இங்கே கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் என்னவென்றால், ஒரு முறை மன்னிப்புக் கேட்டு வாக்குறுதியும் அளித்து விட்டால், அதை விசுவாசமாக நிறைவேற்றியிருக்க வேண்டும் என்பதுதான். அவருடைய தண்டனையைத் தள்ளுபடி செய்து பிறப்பிக்கப்பெற்ற ஆணையில் ''நிபந்தனையில்லாது'' என்ற சொல் இருப்பதைச் சிவா தமக்கு அனுகூலமாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.''

அடக்குமுறை தாண்டவம்

வன்முறை நிகழ்ச்சிகளின் காரணமாக அரசாங்கத்தின் அடக்குமுறை கடுமையாயிற்று. நாடெங்கும் தடை உத்தரவு பிறப்பிக்கப்பெற்றது; அதைத் தலைவர்களும் ஊழியர்களும் மீறினர். சி. ஆர். தாஸ், லாலா லஜபதிராய், மோதிலால் நேரு, மௌலானா அபுல்கலாம் ஆசாத், ஜவாஹர்லால் நேரு முதலிய முக்கியமான தலைவர்களும் ஆயிரக்கணக்கான தொண்டர்களும் கைதானார்கள். காந்திஜியை மட்டும் அரசாங்கம் கைது செய்யவில்லை. டிசெம்பரில் அகமதாபாத்தில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில், அரசாங்கத்துடன் சமாதானம் செய்து கொள்வது குறித்துக் கொண்டுவரப் பெற்ற தீர்மானத்தின் மீது பேசிய காந்திஜி, ''நான் ஒரு சமாதான வாதிதான்; ஆனாலும் இடுகாட்டில் இருக்கும் அமைதியை நான் விரும்பவில்லை'' என்று முழங்கினார். அரசாங்கத்தின் சட்டங்களையெல்லாம் மீறிச் சட்ட மறுப்புச்

செய்யவேண்டுமென்றும், அஹிம்சா பூர்வமாக இந்தச் சட்ட மறுப்பு நடைபெற வேண்டுமென்றும், அரசாங்கம் தடை உத்தரவு பிறப்பித்திருந்தாலும் நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்றும், தொண்டர் படைகளில் சேர்ந்து இந்தியர்கள் எல்லாம் அமைதியாகக் கைதாக முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்ட தீர்மானம் - காந்திஜி கொண்டு வந்த தீர்மானம் - காங்கிரசில் நிறை வேறியது. அண்ணல் குறிப்பிட்ட தவணையில், அதாவது ஓராண்டில், இந்தியாவிற்கு விடுதலை கிட்டவில்லையானாலும் மனத்தால் இந்தியர்கள் விடுதலை அடைந்தனர். முப்ப தாயிரம் பேர் போராட்டத்தில் கைதானார்கள்; ஆயிரக் கணக்கானவர் கைதாகத் தயாராய் இருந்தார்கள். காந்திஜி காங்கிரசின் தலைமைத் தளபதியானார்.'' ''சிறைச் சாலையானது எங்களுக்கு சொர்க்கமாகி விட்டது; புனித யாத்திரைத் தலமாகி விட்டது,'' என்று சங்கநாதம் செய்தார் ஜவாஹர்லால் நேரு.

ஈரோட்டில் பெரியார் ஈ. வெ. இராமசாமி மது விலக்கு சம்பந்தமாகப் பணியாற்றிக் கொண்டிருந்த சமயத்தில், அங்கு நடைபெற்ற மதுவிலக்குப் பணிகளை காந்திஜி பாராட்டியிருக்கிறார். சென்னையும், ஆந்திராவும் மெதுவாக முன்னால் வந்து கொண்டிருக்கின்றன. வங்கத்தைப் போன்று அங்கும், 1500 பேர் கைதானால் நான் வியப்படைய மாட்டேன். மதுவிலக்கில் ஈரோடு மட்டும் அஞ்சாது பணியாற்றி வந்திருக்கிறது. அதனால் இராமசாமி நாய்க்கருக்கு ஒரு மாதச் சாதாரணச் சிறைத்தண்டனை பரிசாகக் கிடைத்திருக்கிறது. இந்தச் சிறிய ஊரில் மட்டும் ஏற்கனவே 37 பேருக்குத் தண்டனை கிடைத்து விட்டது. இப்போது நாய்க்கரின் மனைவியாரும் அவருடைய சகோதரியும் மறியல் செய்யப் போகிறார்கள்'' என்று, அண்ணல் (22-12-1921-இல் வெளியான) ''யங் இந்தியா''வில் எழுதினார்.

ஈ. வெ. ரா.

இதே சமயம், ராஜாஜி மீது தொடரப் பெற்றிருந்த வழக்கில், தமக்கு எவ்வளவு கூடுதலான தண்டனையை அளிக்க முடியுமோ அவ்வளவு கூடுதலான தண்டனையை அளிக்குமாறு அவர் கேட்டுக்கொண்டிருந்ததைப் பற்றியும் இதே இதழில் அண்ணல் குறிப்பிட்டிருந்தார். ''மாஜிஸ்

திரேட் ராஜாஜி வேண்டுகோளை ஏற்பார் என்று நம்பு கிறேன். அவர் நோய்ப்பட்டிருப்பது அவருடைய சக ஊழியர்களுக்குக் கவலை அளிக்கிறது. ஆகை யால் அவருடைய உடல் நலத்தைப் பாது காக்கும் பொறுப்பை நண்பர்களிடமிருந்து சிறை அதிகாரிகளுக்கு மாஜிஸ்திரேட் மாற்று வார் என்று நம்புகிறேன்'' என எழுதியிருந்தார் அண்ணல்.

ராஜாஜி

மாளவியாவும் ஜின்னாவும் செய்த முயற்சியின் பேரில், அனைத்துக் கட்சிகள் மாநாடு ஒன்று பம்பாயில் நடை பெற்றது. இம் மாநாடு, ஒரு புறம் அரசாங் கத்தின் அடக்குமுறையைக் கண்டித்து விட்டு, மற்றொரு புறம், அரசாங்கத்துடன் நடத்தும் சமரசப் பேச்சின் முடிவு தெரியும் வரை சட்ட மறுப்பை நிறுத்தி வைக்க வேண்டுமெனக் காங்கிரசையும் கேட்டுக் கொண்டது. இந்திய தேசிய அரங்கில் அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டு எவ்வாறு செயலாற்றலாம் என்பது குறித்து ஆராய்ந்து யோசனை கூற அமைத்த குழுவில் ராவ் பகதூர் டி. ரெங்காச்சாரியார், சீனிவாச சாஸ்திரி, சர். பி. எஸ். சிவசாமி ஐயர், எஸ். சீனிவாச ஐயங்கார், சி. இராசகோபாலாச்சாரியார் ஆகியோர் இருந்தார்கள். இம் மாநாட்டின் யோசனையை ஏற்று, சட்ட மறுப்பைக் காங்கிரஸ் தற்காலிகமாகத் தள்ளி வைத்தது. ஆனால் சமரச முயற்சிதான் வெற்றி பெறவில்லை.

அனைத்துக் கட்சிகள் மாநாடு

போராட்டத்தை நிறுத்தி வைக்கத் தாம் ஒப்புக் கொண்ட காலவாயிதா (1922 ஜனவரி 31-) முடிந்த வுடனேயே காந்திஜி, வைசிராய் ரீடிங் பிரபு விற்கு இறுதி எச்சரிக்கை ஒன்றை அனுப்பி னார். ஆனால், அவருடைய கோரிக்கைகளில் எதையுமே வைசிராய் ஏற்கவில்லை. இந்தச் சமயத்தில் சௌரி சௌராவில் - உத்தரப்பிரதேசத்திலுள்ள கோரக்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமம் - வன் முறை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்று விட்டது. மக்களு டைய ஊர்வலம் நடைபெற்று முடிந்ததன் பின்னர், கலைந்து சென்றவர்களைப் போலீசார் சிலர் கேலி செய் தார்கள். இதனால் அவர்களுக்கிடையே வாக்குவாதம் முற்றிக் கூட்டம் திரண்டது; போலீசார் துப்பாக்கியால்

சௌரி சௌரா

சுட்டனர். அவர்களுடைய துப்பாக்கி ரவைகள் எல்லாம் தீர்ந்தவுடன்தான் போலீசு நிலையத்திற்குத் திரும்பிச் சென்றார்கள். ஆத்திரமடைந்த மக்கள் கூட்டமாகப் போலீசு நிலையத்திற்குச் சென்று தீ வைத்தனர். உயிரைக் காப்பாற்றிக் கொள்ள 22 போலீசார் வெளியே வந்த போது அவர்களைத் துண்டு துண்டாக வெட்டித் தீயில் போட்டு எரித்து விட்டார்கள்.

ஆண்டவன் எச்சரிக்கை

போலீசார் எரிந்து விட்டார்கள் என்று கேள்விப்பட்ட போது, காந்திஜியின் உள்ளமும் எரிந்தது. அவர் அதிர்ச்சி அடைந்து போய் விட்டார். ஆண்டவன் காங்கிரஸ் செயற்குழுவை மிகவும் வேண்டி சட்ட மறுப்பை நிறுத்தி அதற்குப் பதிலாக நிர்மாணத் திட்டத்தைச் செயல் படுத்தினர். பிராயச் சித்தமாக ஐந்து நாட்கள் உண்ணா நோன்பு இருந்தார். மக்கள் சட்ட மறுப்பைத் தொடங்குவதற்கு இன்னும் இந்தியா தயாராகவில்லை என்று மூன்றாவது முறையாக ஆண்டவன் தமக்கு அளித்த எச்சரிக்கையாக இதைக் கருதினர். ''சென்னை எனக்கு எச்சரிக்கை தந்தது. ஆனால் நான் அதைப் பொருட்படுத்தவில்லை. இப்போது சௌரி சௌராவின் மூலம் ஆண்டவன் தெளிவாகத் தன்னுடைய கருத்தை எனக்குக் கூறிவிட்டார்,'' என்றார். காந்திஜியின் இம்முடிவை மோதிலால் நேரு, லஜபதிராய் ஆகிய தலைவர்களிலிருந்து கீழே உள்ள சாதாரணத் தொண்டர்கள் வரை எவ்வளவு கடுமையாக எதிர்த்தனர் என்பது உலகம் அறிந்ததே. ஆனாலும் டில்லியில் நடைபெற்ற அனைத்து இந்தியக் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் காந்திஜியின் தீர்மானம் நிறைவேறியது.

6-ஆண்டுக் கடுங்காவல்

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நியாய விரோதமான போக்கைக் கடுமையாகக் கண்டித்து ''யங் இந்தியா'' வில் ஆணித்தரமாகச் சில கட்டுரைகள் எழுதியதற்காக 1922-மார்ச் 10-ஆம் தேதி யன்று சபர்மதி ஆசிரமத்தில் காந்திஜி கைதானார். அவருடைய வழக்கை விசாரணை செய்த செஷன்ஸ் நீதிபதி புரும்ஸ் பீல்ட் அவருக்கு ஆறு ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்தார். முதலில் சபர்மதி சிறையில் வைக்கப்பட்டு, பின்னர் எரவாடா சிறைச்சாலைக்கு அவர் மாற்றப்பெற்றார். எரவாடா

சிறைச்சாலையில் அவர் பட்ட கஷ்டங்கள் பல. (காந்திஜி சிறையில் இருந்த காலத்தில் ராஜாஜியும் ஜார்ஜ் ஜோசப்பும் ''யங் இந்தியா''வின் ஆசிரியர் பொறுப்பை வகித்தார்கள்.)

சட்ட மறுப்பு

சட்ட மறுப்புப் போராட்டத்தை மீண்டும் தொடங்கலாமா என்பதை ஆராய, ஹகீம் அஜ்மல்கான், பண்டித மோதிலால் நேரு, இராஜகோபாலாச்சாரியார், டாக்டர் அன்சாரி, வித்தல்பாய் படேல், கஸ்தூரிரங்க ஐயங்கார், ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பெற்றது. இந்தக் குழு, ''தற்போதைக்குச் சட்டமறுப்பு நடைமுறைச் சாத்தியமற்றது'' என்ற முடிவிற்கு வந்தது. மோதிலால் நேருவும் ஹகீம் அஜ்மல்கானும் வித்தல்பாய் படேலும் சட்டசபைக்குச் செல்வதை ஆதரித்தனர். இ. ஆர். தாஸ் தலைமையில் டிசெம்பர் மாதம் கயாவில் காங்கிரஸ் கூடிய போது, சட்டசபைகளுக்குச் செல்ல வேண்டுமென்று அவரே தமது தலைமை உரையில் கூறலானார். சட்டசபைகளுக்குச் செல்வதை விலக்க வேண்டுமென்று ராஜாஜி தீர்மானம் கொண்டு வந்தார். ராஜாஜியின் தீர்மானம் மிகப் பெரும்பாலான வாக்குகளால் நிறைவேறியதால் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவது என்ற முடிவுடன் காங்கிரஸ் மாநாடு கலைந்தது.

சுயராஜ்யக் கட்சி

1923-ஜனவரி முதல் தேதியில் சுயராஜ்யக் கட்சியை தாசும் மோதிலால் நேருவும் சேர்ந்து (காங்கிரசுக்குள்) தொடங்கினார்கள். காங்கிரசுக்குள் சுயராஜ்யக் கட்சியினருக்கும் மற்றவர்களுக்குமிடையே தொடர்ந்து பலப்பரீட்சை நடந்து கொண்டே இருந்து வந்தது. சில சமயம் சுயராஜ்யக் கட்சியினர் வெற்றி பெறுவதும் மற்ற சமயங்களில் மற்றவர்கள் வெல்வதுமாக நிலைமை இருந்தது. இறுதியில், 1923-ஆம் ஆண்டுத் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு சுயராஜ்யக் கட்சிக்கு அனுமதி கிடைத்தது.

1923 காங்கிரசிற்குத் தலைமை வகித்த மௌலானா முகமதலி, காந்திஜி வெளியிலிருந்து நாட்டிற்குத் தலைமை தாங்கினால் எவ்வளவு நன்றாக இருக்குமென வருத்தத்தோடு தமது தலைமை உரையில் குறிப்பிட்டார். இந்தச் சமயத்தில்

துருக்கியில் முஸ்தபா கமால் பாஷா குடியரசுத் தலைவ ராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றதன் காரணமாக கிலாபத் இயக்கவாதிகள் எதிர்பார்த்ததற்கு முரணான ஒரு முறையில் அங்கு கிலாபத் சிக்கல் ''தீர்ந்தது.'' இதன் காரணமாக இந்தி யாவில் கிலாபத் இயக்கத்தில் ஈடுபட்ட முஸ்லிம்கள் உற்சாகம் இழந்தனர். இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இருந்த உறவு தளர்ந்தது. 1923 ஆகஸ்டில் மாளவியா தலைமையில் காசியில் கூடிய இந்து மகாசபைக் கூட்டத்தில் இந்துக்கள் புது உற்சாகங் காட்டினர். மற்றொரு புறம், வங்காளத்தில் பயங்கர வாதிகள் தலைதூக்கினர்கள். அலிப்பூர் சதி வழக்குத் தொடரப் பெற்றது இந்தக் காலத்தில்தான். அரசியலின் போக்கைப் பற்றி அன்னிபெசண்ட் கருத்துத் தெரிவித்த போது ''இப்போது மிக மிக விந்தையான ஒரு புரட்சி (இந்தியாவில்) நடைபெறுகிறது. திலகருக்குப்பின் அப் புரட்சிக்கு மிக மிக விந்தையான ஒரு தலைவர் கிடைத் திருக்கிறார். இப்போது அதற்கு விந்தையான வீழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது'' என்று கிண்டலாகச் சொன்னார்.

இந்து முஸ்லிம் உறவு

சாஸ்திரிக்கும் காந்திஜிக்கும் இருந்த உறவானது அண்ணன் தம்பி உறவைப் போன்று மிகவும் நெருக்க மானது. காந்திஜி எரவாடா சிறையில் இருந்தபோது ஒரு நாள் குடல் அழற்சி நோய் மிகவுங் கடுமையாகி இரண சிகிச்சை செய்தாலொழிய அவர் உயிர் பிழைக்க மாட்டார் என்ற நிலைமை ஏற்படவே அவரைப் புனே சசூன் மருத்துவமனைக்கு (1924 சனவரி) எடுத்துச் சென்றார்கள். அப்போது, ''யாராவது நண்பர்களைக் காண விரும்புகிறீர்களா?'' என்று அதிகாரிகள் கேட்ட போது காந்திஜி குறிப்பிட்ட மூன்று நண்பர்களில் வி.எஸ். சீனிவாச சாஸ்திரி ஒருவர் என்பதும் அவர் மூன்னிலையில் தான் காந்திஜி இரண சிகிச்சைக்குச் சம்மதம் தெரி வித்துக் கையொப்பமிட்டார் என்பதும் குறிப்பிடத் தக்கவையாகும். காந்திஜியின் இரண சிகிச்சையை முன் னின்று நடத்தி வைப்பது அந்தக் காலத்தில் சாதாரண மான காரியம் அல்ல. காந்திஜியின் உயிருக்கு ஏதாவது அபாயம் நேர்ந்திருந்தால் என்ன நிகழ்ந்திருக்கும், மக்கள் எப்படிக் கொதித்தெழுந்திருப்பார்கள், சாஸ்திரியை எவ்

சீனிவாச சாஸ்திரி

வாறெல்லாம் குற்றம் கூறியிருப்பார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவே அச்சமாக இருக்கிறது. இதன் காரணமாகத்தான் கொத்தமங்கலம் சுப்பு தம்முடைய காந்தி மகான் கதையில் கீழ்க்கண்டவாறு பாடினார்:

தேசத்தைக் காக்கும் பொறுப்பினிலே
சீனிவாச சாஸ்திரியார்

மாசத்த தொண்டொன்று செஞ்சுவிட்டார்
மகாத்துமாவைக் காப்பாத்த

காந்தி யிறந்தால் தேசமெல்லாம்
கட்டி அடிச்சிடும் சாஸ்திரியை

காருண்ணியம் தயவில்லாமல்
காறி உமிஞ்சிடும் சாஸ்திரியை

கட்டி யறுத்து எரியாட்டி
காந்தி யிறப்பது நிச்சயந்தான்

வெட்டி எடுக்கவே உத்தரவு
வேறெருத்தன் தரமாட்டானும்

இந்த நிலைமையில் சாஸ்திரியார்
ஏத்துக்கொண்டா ரிப்பொறுப்பை

நந்தமைக்கொன்று எரிந்தாலும்
நாட்டுக்குழைக்கத் தயங்கலியாம்

செத்துப் புழைச்சார் காந்திமகான்
சீக்கும் சௌக்கிய மாச்சுதய்யா

1922-இல் மகாத்மா காந்தி எரவாடா சிறையிலிருந்த போது, கைதிகளுக்குப் பத்திரிக்கைகள் வழங்கலாம் என்று அரசாங்கம் அறிவித்திருப்பதாக அவரைப் பார்க்க வந்தவர்களிடமிருந்து கேள்விப் பட்டார். ஆகவே, அவர் சிறை சூபரிண்டெண்டிற்கு, ''இந்தியன் ரிவ்யூ'' இதழைத் தமக்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டு கடிதம் எழுதினர். ஜி. ஏ. நடேசன் ஆசிரியராக இருந்த ''இந்தியன் ரிவ்யூ'' சஞ்சிகையை அவர் தேர்ந்தெடுத்தது நடேசன் மீதும் அந்தச் சஞ்சிகை மீதும் அவருக்கிருந்த அபிமானத்தைக் காட்டிற்று.

இந்தியன் ரிவ்யூ

அண்ணல் உடல் நலம் தேறுவதற்குக் கடற்கரை வாசம் அவசியம் என்று மருத்துவ வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்ததன் பேரில் அவரை நிபந்தனை யின்றி விடுதலை செய்தார்கள். ஜூஹு கடற்கரை வாசத்தலத்திற்குச் சென்று காந்திஜி ஓய்வெடுத்துக் கொண்டார். ''யங் இந்தியா''வில் வெளிவந்த காந்திஜியின் கட்டுரைகளை 1919 முதல் 24 வரை எஸ். கணேசன் புத்தகங்களாகத் தொகுத்து வெளியிட்டுக் கொண்டு வந்தார். காந்திஜியின் எழுத்துக் களிலும் பேச்சுக்களிலும் எஸ். கணேசன் காண்பித்த ஆர்வத்தையும் அக்கறையையும் உலகம் மட்டு மல்லாது காந்திஜியும் அறிவார். ஆகையால், தம்முடைய எழுத்துக்களைப் படிக்கவேண்டும் என்று யாராவது விரும் பினால் அவர் எஸ். கணேசன் புத்தக நிலையத்தைத்தான் காண்பிப்பது வழக்கம். ஒருமுறை அமெரிக்காவைச் சேர்ந்த ஆல்பிரெட் சி. மேயருக்கு (15-3-24) இவ்வாறு அவர் கடிதம் எழுதியபோது, ''சென்னையில் எஸ். கணேசன் என்ற பெயரில் புத்தக விற்பனையாளர்கள் இருக்கிறார்கள். நான் ஆசிரியராய் இருக்கும் 'யங் இந்தியா' என்ற வாரசஞ்சிகையில் வெளிவரும் கட்டுரை களில் பெரும்பாலானவற்றை இவர்கள் தொகுத்து விற்பனை செய்து வருகிறார்கள். நீங்கள் வேண்டும் தகவல் களையெல்லாம் இந்தத் தொகுப்புகளில் காணலாம்'' என்று எழுதியிருந்தார்.

சங்கு கணேசன்

முக்கியமான தமிழக தேச பக்தர்கள் மீது வழக்குத் தொடரப் பெற்று வந்த காலம் 1924 ஜூன். அவ்வாறு வழக்குத் தொடரப் பெற்றவர்களில் பெரியார் ஈ. வெ. இராமசாமி ஒருவர். பம்பாய்க்குச் சென்றிருந்த ராஜாஜி, பெரியார் ஈ. வே. இராமசாமி மீது தொடர்ந்த வழக்கு விசாரணை அக்டோபர் 18-ஆம் தேதியன்று வருகிறது என்பதற்காக, அவசரமாகத் திரும்பி வந்தார். தேவதாஸ் காந்தி மேலும் ஒரு நாள் தங்கியிருந்து விட்டுப் போகுமாறு சொன்னதைக் கூட அவர் ஏற்கவில்லை. ''சென்னைக்கு நான் 18-ஆம் தேதி போயாக வேண்டும். அன்று தான் இராமசாமி நாய்க்கரின் வழக்கு இறுதி விசாரணை. அவர் மீது அரசத்துரோகக் குற்றம் சாட்டப் பெற்றிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அவருக்கு நீண்ட காலச்

பெரியார் வழக்கு

சிறைத் தண்டனை கிடைக்கலாம். எங்களுடைய காங்கிரஸ் நடவடிக்கைகளுக்குத் தீவிரம் நிறைந்த தலைவராக(head and active master) அவர் இருந்து வந்திருக்கிறார்'' என்று ராஜாஜி இரயிலிலிருந்து 16-10-24-ஆம் தேதி காந்திஜிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். தமக்கும் காந்திஜிக்கும் இருந்த தொடர்பைக் குறித்துப் பெரியார் இந்த நூல் ஆசிரியரிடம் கூறிய சில கருத்துக்களாவன :

பெரியார் கருத்து

''காந்தியார் மீது நான் காங்கிரசில் இருந்த போது எனக்கு விசுவாசம் இருந்தது. 1921-ஆக இருக்குமென்று நினைக்கிறேன். ஈரோட்டிற்கு காந்தியார் வந்திருந்தார். எங்கள் வீட்டிற்கும் வந்தார். அப்போது தான் நான் அவரை முதன் முதலில் சந்தித்ததாகும்.

இரு கடிதங்கள்

''காந்தியார் எனக்கு இரண்டு முறை கடிதங்கள் எழுதியிருக்கிறார். ஒரு முறை என்னுடைய தொண்டைப் பாராட்டிக் கடிதம் எழுதினார். மற்றொரு முறை அவர் எனக்குக் கடிதம் எழுதியது என்னுடைய கையில் வலி ஏற்பட்டு நான் துன்பப்பட்ட சமயமாகும். 'நீங்கள் இராட்டையை அதிக நேரம் சுழற்றியதால் இந்த வலி ஏற்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது. ஆகையால் வலி குறையும் வரை சிறிது காலத்திற்கு இராட்டையைச் சுழற்றுவதை நிறுத்தி வையுங்கள்' என்று அவர் எழுதியிருந்தார். சட்ட மறுப்புப் போராட்டம் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு காலம். ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண்களும் போராட்டத்தில் பங்கு கொண்டு சிறைக்குச் சென்றுவிட்டார்கள். அந்தச் சமயம் இந்திய அரசுடன் சமாதானப் பேச்சு நடத்தி அரசியலில் அமைதியான நிலையை ஏற்படுத்தக் கருதி சர். சங்கரன் நாயர் ஒரு சமாதான மாநாடு கூட்டினார். சமாதானப் பேச்சைத் தொடங்குவதற்கு முன்பு போராட்டத்தைக் காங்கிரஸ் கைவிட வேண்டுமென்று அவர் ஒரு நிபந்தனை கூறினார். அதை காந்தியார் ஏற்கவில்லை. ''இந்தப் போராட்டத்தை நிறுத்துவது என் கையில் இல்லை; ஈரோட்டில் ஈ. வெ. இராமசாமியின் தங்கை, மனைவி, ஆகியோர் கையில் இருக்கிறது'' என்று அந்த மாநாட்டிலேயே கூறினார்.

தேர்தல் நிபந்தனை

"இவ்வாறு காந்தியார் கூறியதற்குக் காரணமும் இருந்தது. அம்முறை சட்டமறுப்பில் பங்கு கொண்டு என் மனைவி சிறைக்குச் சென்றபின், ஏராளமான பேர் அந்த அம்மாளைப் பின்பற்றிச் சிறைக்குச் சென்றுர்கள். எங்கள் குடும்பத்திற்கு ஈரோட்டில் நல்ல செல்வாக்கு உண்டு. மேலும், நான் நகராட்சித் தலைவராகவேறு இருந்திருக்கிறேன். ஆகையால் நாங்கள் எதிர்பார்த்ததற்கும் அதிகமான பேர்—நண்பர்களும் ஆதரவாளர்களும்—சிறைக்குச் சென்று விட்டார்கள். ஆகையால் அங்கு இருந்த அதிகாரிகள் 144 தடை உத்தரவு போடுவதற்கு யோசிக்க வேண்டியதாகப் போயிற்று. 'சட்டமறுப்புப் போராட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தனிப்பட்ட முறையில் வழக்குத் தொடரட்டும்; அதன் பின் நாம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம். நாமாகத் தடையுத்தரவு போட வேண்டாம். தடையுத்தரவு போட்டால் போராட்டம் சமாளிக்க முடியாத அளவு மேலுங் கடுமையாகலாம்' என்று கருதி விட்டுவிட்டார்கள். இது இந்தியா முழுவதற்கும் ஒரு முன் மாதிரியான வெற்றியாக, 144-ஐயே தோற்கடித்த வெற்றியாகக் கருதப்பெற்றது. நான் காங்கிரசின் மீது பற்றுக் கொண்டிருந்த காலத்தில் இந்தியைப் பரப்புவதிலும் தீவிரமான ஈடுபாடு கொண்டிருந்தேன். ஈரோட்டில் இந்தி கற்றுக் கொடுக்கப் பள்ளி ஒன்றையும் தொடங்கி நடத்தினேன். அந்தப் பள்ளியைத் தொடங்கி வைத்தவர் பண்டித மோதிலால் நேரு ஆவார். அந்தக் காலத்தில் மது விலக்கிலும் எனக்கு ஈடுபாடு இருந்தது. மதுவிலக்கை வெற்றியாக்கும் எண்ணத்துடன் என்னுடைய தென்னந்தோப்பில் இருந்த தென்னைகளை வெட்டினேன். என்னைப் பின்பற்றி என்னுடைய நண்பர்களும் தங்கள் தங்கள் தென்னந்தோப்புகளிலிருந்த தென்னைகளை வெட்டினர்கள். 1924-ஆம் ஆண்டில் தேர்தலில் காங்கிரசு போட்டியிடலாமா கூடாதா என்ற சிக்கல் எழுந்தது. காங்கிரஸ் போட்டியிடக் கூடாது என்பது என் வாதம். ஆனல் காந்தியார் காங்கிரசு தேர்தலில் போட்டியிடுவதற்கு அனுமதி அளித்துவிட்டார். அதற்குப் பின்னர் நான் ஒரு மாற்று யோசனை கூறினேன். தேர்தலில் போட்டியிடுவதாய் இருந்தால், பாதி இடங்களை பிராமணரல்லாதாருக்கு ஒதுக்கிவிட வேண்டும் என்றும்

மீதியுள்ள பாதி இடங்களை எல்லா வகுப்பினர்களுக்கும் தகுதி அடிப்படையில் அளிக்க வேண்டும் என்றும் கூறி னேன். அந்த ஆண்டில் காஞ்சிபுரத்தில் நடைபெற்ற மாநில காங்கிரசு மாநாட்டிற்கும் இதை ஒரு தீர்மான மாகக் கொண்டு போனேன். ஆனால் அந்த மாநாட்டில் இத்தீர்மானத்தை அனுமதிக்க மறுத்து விட்டார்கள். நானும் காங்கிரசிலிருந்து வெளியேறிவிட்டேன். இதற்குப் பின், பெங்களூரில் உடல் நலத்திற்காகத் தங்கி யிருந்த போது எனக்குச் சமாதானம் சொல்வதற்காக என்னை காந்திஜி அழைத்திருந்தார். நானும் திரு இராம நாதனும் சென்றிருந்தோம். ஆனால் அவர் சொன்ன சமாதானத்தை நான் ஏற்கவில்லை. கடைசிக் காலத்தில் காந்தியார் நான் ஏற்கக் கூடிய மூன்று காரியங்களைக் கூறினார். 1. காங்கிரசைக் கலைத்துவிட வேண்டும் என்றார். 2. மதச் சார்பற்ற அரசு அமைக்க வேண்டும் என்றார். 3. பிராமணர்கள் சமயத்துறையில் ஈடுபட்டு ஒதுங்கியிருந்து கொண்டு பிராமணரல்லாதார் படித்துப் பதவிகளுக்கு வர அனுமதிக்க வேண்டும் என்றார். முதன் முதலாகத் தமிழகத்தில் அமைக்கப்பெற்ற கதர் போர்டிற்கு ஐந்து ஆண்டுகள் தலைவராக இருந்தேன். முக்கியமான ஊர்களி லெல்லாம் கதர்க் கடைகள் வைத்துக் கட்டிடங்களை விலைக்கு வாங்கி கதர் வணிகத்தைப் பெருக்கினேன். அப்போது கே. சந்தானம் போர்டின் செயலாளராக இருந்தார். அவருக்கும் எனக்கும் அலுவலர்களை நியமிப்பது குறித்துக் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. காந்தியார் இதை ஓரளவு சமாதானம் செய்து வைத்தார். பின்னர் கதர் போர்டுகளையெல்லாம் இணைத்து அனைத்து இந்திய அடிப்படையில் அகில பாரத சர்க்கா சங்கமாக்கினர்கள். இதனால் மாநில கதர் போர்டுகளுக்கிருந்த அதிகாரமெல் லாம் போய்விட்டது. இது எனக்கு வருத்தத்தை அளித் தது.''

ஆன்மிகக் கருத்து

ராஜாஜியுடன் அண்ணல் கடிதப் போக்குவரத்து நடத் திய அளவு வேறு எந்தத் தமிழருடனும் ஏன், இந்தியருடனே கூட அவர் கடிதப் போக்கு வரத்து நடத்தி யிருப்பாரா என்பது ஐயத்திற்கு இடமானதே. அவர்களுடைய கடிதப் போக்குவரத்தானது, நூல் நூற்பிலிருந்து உயர்ந்த ஆன்மிகத் தத்து வம் வரை எத்தனையோ காரியங்களைப் பற்றி இருந்தது. தன்

உள் மனதில் ஏற்படும் உணர்ச்சிகளையும் எழுச்சிகளையும் கூட அவர் ராஜாஜியிடம் உள்ளத்தைத் திறந்து கொட்டியிருக்கிறார். 1925 ஜூலை 16 ஆம் தேதியன்று ராஜாஜிக்கு அவர் எழுதிய கடிதத்தில், ''என்னுடைய உடலும் மனமும் நான் பாதிக்கப்படாதிருக்கக்கூடிய, ஆனால் அதேசமயம் சோதனைக்குள்ளாகக் கூடிய ஏதோ ஓர் உலகத்தில் இருக்கின்றன. என்னுடைய ஆன்மாவோ என் உடலிலிருந்து தனித்த ஓர் உலகில் இருக்கிறது. ஆனால் அந்த உலகில் நான் பாதிக்கப்படுகிறேன்; பாதிக்கப்பட வேண்டும் என்றும் விரும்புகிறேன்'' என்று எழுதியிருக்கிறார். இவ்வளவு உன்னதமான ஆன்மிகக் கருத்துக்களை அவர் எழுதியது வெகு சொற்பப் பேருக்கே.

கண்ணீர் விட்டார்

1924 ஜூன் மாதம் ஆமதாபாத்தில் நடைபெற்ற காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் கோபிநாத் சாஹா என்ற பயங்கரவாதி குறித்துத் தாம் கொண்டு வந்த தீர்மானத்தை மாற்ற காந்திஜி சம்மதிக்க வில்லை. இதன் காரணமாக தாஸுக்கும் அவருக்கும் ''பெரும்போர்'' நிகழ்ந்தது. காந்திஜி மிகக் குறுகிய பெரும்பான்மையில் வெற்றிபெற்றார். தம் முடைய நெருங்கிய சகாக்கள் சிலர் கூடத் தமது தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்ததைக் கண்டு கூட்டத்திலேயே எல்லோருக்கும் முன்னால் கண்ணீர் விட்டு அழுது விட்டார் காந்திஜி.

பிளவு பெருகியது

கருத்து வேறுபாட்டிற்கும் பிளவுக்கும் ஆளான காலம் விடுதலைப் போராட்ட கால வரலாற்றில் இதைப் போன்ற ஒன்றில்லை. 1920-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நிறைவேற்றப் பெற்ற ஒத்துழையாமைப் போராட்டத் தீர்மானத்தை மாற்றக்கூடாது என்று கூறியவர்கள் தாம் மாறுதலை விரும்பாதார் என அழைக்கப்பெற்றார்கள். அந்தத் தீர்மானத்தின் படி நடைபெற்ற பணிகள் எதிர்பார்த்த அளவு பலன் தரவில்லையாதலால், சட்டமன்றங்களுக்குச் சென்று தேசத் தொண்டு செய்ய வேண்டும் என்று கூறியவர்கள் சுயராஜ்யக் கட்சியினர். சுயராஜ்யக் கட்சியினருக்கும் மாறுதல் வேண்டாதாருக்குமிடையே ஒருபுறமும் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மற்றொரு புறமும் (தென்னாட்டில் மட்டுமல்லாது வடநாட்டிலும்) பிராமணர்களுக்கும்

பிராமணரல்லாதாருக்கும் இடையே பிணக்கு இன்னொரு புறமும் வளர்ந்து கொண்டு வந்தது. ஆகவே கதர், இந்து முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகிய ஆக்கப் பணிகளில் காங்கிரஸ் ஒரு மனதான கவனம் செலுத்தி ஒற்றுமை காண வேண்டுமென்றும் தம்மைப் பொருத்தவரை, ஒத்துழையாமையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவும் தயார் என்றும் காந்திஜி ஆகஸ்ட் இறுதியில் அறிவித்தார். அரசியலில் அண்ணலின் எதிரி என்று கருதப்பெற்ற திருமதி பெசண்ட் கூட இம் மூன்று திட்டங்களையும் அப்படியே ஒப்புக் கொண்டார். காங்கிரசின் பொறுப்பில் உள்ளவர்கள் இதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால், காங்கிரசில் மீண்டும் சேரத் தயார் என்றும் (தமது நாளிதழில்) எழுதினார்.

கலவரங்கள்

1922-மார்ச்சிலிருந்து 1924-பிப்ரவரி வரை காந்திஜி சிறையில் இருந்தாராதலால் ஒத்துழையாமை இயக்கம் அண்ணல் விரும்பிய வழியிலிருந்து சற்றுத் தடம் புரண்டது போலப் போய்க் கொண்டிருந்தது. சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்ட மன்றங்களில் நுழைந்தது, ஒத்துழையாமை இயக்கத்தின் அடிப்படையையே மீறிய செயலாகுமென காந்திஜி கருதினார். ஆயினும் இக் கருத்து வேறுபாட்டைப் பெரிது படுத்தாமல் காங்கிரசை ஒன்றுபட்ட அமைப்பாக்கும் முயற்சியில் அவர் ஈடுபட்டார். காந்திஜி சிறையில் இருந்த காலத்தில் இந்துக்கள் முஸ்லிம்கள் ஆகிய இரு வகுப்பாருக்கு மிடையே நம்பிக்கையின்மை வளர்ந்து கலவரங்களில் முடிந்தது. படிப்படியாக வளர்ந்து கொண்டு போன இந்து முஸ்லிம் வேற்றுமை உணர்ச்சி 1924-இல் மிகவும் கடுமையாகி விட்டது. கலவரங்கள் மிகவும் அதிகமாயின. ஏதாவது செய்து, இந்தத் தீயை அணைக்க வேண்டுமென்று இதயப் பூர்வமாக விரும்பிய அண்ணல், வேறு வழி காணாது, இருபத்தியோரு நாள் உண்ணா நோன்பு மேற் கொண்டார். டில்லியில், முகமதலியின் இல்லத்திலிருந்து கொண்டு இந்த உண்ணாநோன்பை மேற்கொண்டார் என்பது தான் இன்னுங் குறிப்பிடத்தக்கது.

காந்திஜி உண்ணாநோன்பைத் தொடங்கியபோது, அப்போது அண்ணல் இருந்த உடல் நிலையில் அவரால் அந்த

உண்ணுநோன்பைத் தாங்க முடியாதென்று சீனிவாச ஐயங்காரும் ராஜாஜியும் கவலைப்பட்டு அதை நிறுத்த முயன்றார்கள். காந்திஜிக்கு ராஜாஜி தந்தியடித்தார்: 'தற்போதைய உடல் நிலையில் உங்கள் சாவில்தான் இது கொண்டுபோய் விடும்; ஆகையால் உடனே உண்ணுநோன்பைக் கைவிடுங்கள்.' ஆனால், இத்தகைய காரியங்களிலெல்லாம் அண்ணல் முடிவு செய்தால் செய்ததுதான்: யாராலும் அதை மாற்ற முடியாது. ராஜாஜிக்கும் அவருக்கும் தந்திகள் பறந்து கொண்டிருந்தன. அண்ணல் தெளிவாக, 'என்னால் இருபத்தியோரு நாள் உண்ணுநோன்பை வெற்றியாக முடிக்க முடியும். முதலில் நாற்பது நாட்கள் உண்ணுநோன்பு மேற்கொள்வதாக இருந்தேன்; ஆனால் பின்னர், அதிகச் சிரமமில்லாமல் முடிக்கலாமே என்றுதான் இருபத்தியோரு நாட்கள் எனக் குறைத்துக் கொண்டேன்' என்று தந்தியடித்து விட்டார். உண்ணுநோன்பைக் கைவிடுமாறு எஸ். சீனிவாச ஐயங்கார் தந்தி அனுப்பியதற்கும் இதைப் போன்ற மறுமொழிதான் கிடைத்தது.

தமிழகத் தலைவர்கள்

இந்தச் சிக்கல் தீர்ந்தவுடன் மற்றொரு சிக்கல் புதிதாகக் கிளம்பிற்று. வங்க ஆளுநர் ஒரு புது அவசரச் சட்டம் போட்டு, சி. ஆர். தாஸ், சுபாஸ் சந்திரபோஸ் போன்ற பெரிய தலைவர்களின் இல்லம் கலையெல்லாம் சோதனையிடச் செய்ததில் (எதிர்பார்த்த ரிவால்வர்கள் கிடைக்காததால்) போலீசார் சுயராஜ்யக்கட்சி அலுவலகச் சான்றுகளை அள்ளிக்கொண்டு போய்விட்டார்கள். உண்ணுநோன்பின் காரணமாக உடல்நிலை எவ்வளவோ பலவீனமாக இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் கல்கத்தாவிற்குப் போனார் காந்திஜி. கல்கத்தாவில் காந்திஜிக்கும் சி. ஆர். தாசுக்கும் மோதிலால் நேருவுக்கும் ஓர் உடன்பாடு ஏற்பட்டது. இந்த ஆபத்தான கட்டத்தில் நேரு, தாஸ் கரங்களை வலுப்படுத்தவேண்டுமென்று கருதி பல முக்கியமான அம்சங்களில் அவர்களுக்கு காந்திஜி விட்டுக் கொடுத்தார். மூன்று பேரும் சேர்ந்து விடுத்த கூட்டறிக்கையில், சுதேசி என்ற ஓர் அம்சத்தைத் தவிர மற்ற அம்சங்களிலெல்லாம், காங்கிரஸ் தனது ஒத்துழையாமைத் திட்டத்தை நிறுத்தி வைக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். காந்திஜிக்கும் சுயராஜ்யக்கட்சித் தலைவர்களுக்குமிடையே ஏற்

கல்கத்தா புறப்பாடு

பட்ட உடன்பாட்டின்படி, சுயராஜ்யக்கட்சியானது சட்ட மன்றங்களுக்குக் காங்கிரசின் பெயரில் செல்வதை அனுமதிப் பது என்பதை காந்திஜி ஒப்புக்கொண்டார். அதற்குப் பிரதியாக, சுயராஜ்யக்கட்சி நிர்மாணத்திட்டத்தையும் காங்கிரசில் உறுப்பினராக நாள் தோறும் நூற்கவேண்டு மென்பதையும் ஏற்றது.

மாநாட்டிற்கு செய்தி

சுயராஜ்யக் கட்சியினருக்கும் தமக்கும் இடையே உடன் பாடு ஏற்பட்டது குறித்துத் தமிழ்நாடு காங்கிரசில் கருத்து வேறுபாடு இருக்கும் என்பது காந்திஜிக்குத் தெரியும். ஆகையால் 1924 - நவம்பரில் திருவண்ணாமலையில் தமிழ்நாடு அரசியல் மா நாடு கூடியபோது, அதற்கு அவர் அனுப்பிய செய்தியில் தனிப்பட்ட முறையில் தமக்கும் சுயராஜ்யக் கட்சியினருக்குமிடையே ஏற்பட்ட உடன்பாட்டை இம் மாநாடு புரிந்துகொண்டு பாராட்டும் என நம்புவதாகத் தெரிவித்திருந்தார். தமிழகத்தில் அரசியல் கருத்து வேறு பாடுகள் இருந்தாலுங்கூட ஒருவரையொருவர் அனுசரித் துக் கொண்டு போகும் மனோபாவம் இருப்பதாகவும் கூறியிருந்தார்.

மாறுதலே விரும்பாதார்

நாடெங்கும் இருந்த "மாறுதலே விரும்பாதார்", காந்திஜியின் மனதைப் புரிந்து கொள்ளாமல், அவர் இவ் வாறு விட்டுக்கொடுத்ததைக் கண்டித்தார் கள். என்றாலும், வழக்கம்போல், அகில இந்தியக் காங்கிரஸ் குழு இந்த உடன் பாட்டை ஏற்றது. சுயராஜ்யக்கட்சியினருக்கு காந்திஜி அளவுக்கு மீறி விட்டுக் கொடுத்து விட்டார்" என்று ராஜாஜி கருதினர். மாறுதலே விரும்பாதாரில் தமக்கு மிகவும் விசுவாசமானவர்களில் ராஜாஜி ஒருவர் என்று எப்போதுமே காந்திஜிக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. ஆகையால் அவரை மன நிறைவு அடையச் செய்ய வேண்டுமென்று கருதி, தாம் விட்டுக் கொடுத்ததற் கான காரணங்களை அண்ணல் அவ்வப்போது விளக்கி வந் தார். நிர்மாணத்திட்டத்தைச் செயல்படுத்த முடியாவிட் டால் நாமெல்லோரும் காங்கிரசை விட்டு வெளியேறி விடு வது நலம் என்று ராஜாஜி எழுதியதை அண்ணல் ஏற்றுக் கொண்டார். ஆனாலும் செயல்படுத்த முடியுமா, முடி யாதா என்பதை அறிவது கடினம் என்று சொன்னார்.

இவ்வாறு ராஜாஜிக்கு அவர் ஆறுதல் கூறிக்கொண்டு வந்தும் ராஜாஜி ஆறுதல் அடையவில்லை.

இந்த வாக்குவாதத்தின் முடிவில், ராஜாஜிக்குச் சர்க்கா வின் மீது அதிக நம்பிக்கை வளர்ந்தது. அவர் (15-1-25) ''யங் இந்தியா'' வில் எழுதினார்: ''இராட்

சர்க்கா : டைதான் நம்முடைய நம்பிக்கை, ஆனந்தம்,

ராஜாஜி நம் நண்பன், நம் தேவதூதன் எல்லாம். நாம் விழித்திருக்கும்போது அதில் உழைக்க வேண்டும், தூங்கும்போது அதைப்பற்றியே கனவு காண வேண்டும். முதலில் எனக்குப் பொருள் விளங்க வில்லை. அதனால் நியாயமோ ஒளியோ இல்லாத பாதையில் மகாத்மாஜி செல்வதாக எண்ணினேன். ஆனால் இப்போது எனக்குத் தெளிவாகத் தெரிகிறது; என்னைப்போன்று ஐயப் பாட்டில் அலைக்கழிக்கப்பட்டவர்கள் எல்லோரும் உண்மை யைக் காண்பார்கள் என்று நம்புகிறேன். இராட்டையைச் சுழற்றுங்கள், சுழற்றுங்கள், ஓயாமல் சுழற்றுங்கள். மற்ற வர்களும் சுழற்றுமாறு செய்யுங்கள் - இதுவே நமது ஒரே மந்திரம், நமது காயத்ரி.'' மாறுதல் விரும்பாதாரில் முக்கிய தலைவர்கள் இவ்வித மனோபாவங் கொண்டு ஆங்காங்கு ஆசிரமத்தைத் தொடங்கினர்கள். உதாரண மாக பாபு இராசேந்திரப்பிரசாத் பாட்னாவில் சதாகுத் ஆசிரமத்தை தோற்றுவித்தார், சர்தார் வல்லபாய்படேல் பர்தோலியில் சுயராஜ்ய ஆசிரமத்தைத் தொடங்கினர். ராஜாஜியும் திருச்செங்கோடு அருகே புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமத்தை 6-2-1925-இல் நிறுவி கதரை முக்கிய பணியாகக் கொண்டார். இந்த ஆசிரமத்தின் தொடக்க விழாவிற்கு வந்திருந்தவர்களில் பெரியார் ஈ. வே. இராம சாமியும் ஒருவர். காந்திஜி கூறிய நிர்மாணப் பணிகளை ஆற்றுவதற்காக, தமிழகத்தில் ஆங்காங்கு தோன்றிய ஆசிரம அமைப்புக்களில் முதலாவதாகத் தோன்றியது தான் காந்தி ஆசிரமம். பின்னர், திருவெண்ணெய் நல்லூர் காந்திமிஷன் சங்கம், கிருபா ஆசிரமம், கல்லுப் பட்டி காந்தி நிகேதனம், திருப்பத்தூர் கிறித்து குருகுலம் முதலிய பல அமைப்புக்கள் தோன்றின. அவைகளுக்கும் பின்னால், காந்தி கிராமம், கீழே மூங்கிலடி ஆசிரமம் போன்றவை தோன்றின. தமிழகத்தில் நிர்மாண இயக்கம் வளருவதற்கு இவை ஆற்றியுள்ள பணிகளைக் குறைத்து மதிப்பிட முடியாது. முதலில் நிர்மாணப்பணிகளுடன் தேசிய

உணர்வையும் ஊட்டி விடுதலைக்காக மக்களைத் தயார் செய்வது இவைகளின் நோக்கமாக இருந்தது. பின்னாலோ இவை நிர்மாணப்பணிகளுடன் பல சமூகத் தொண்டுகளையும் கல்விப் பயிற்சியையும் ஏற்று மக்கள் - குறிப்பாக கிராம மக்கள் - இந்தியாவின் சிறந்த குடிமக்களாக்குவதற்காக முயன்று வருகின்றன.

காங்கிரஸ் தலைவரானார்

டிசெம்பரில் கூடிய பெல்காம் காங்கிரசுக்கு அண்ணலே தலைவரானார். காந்திஜி பெல்காம் காங்கிரசிற்குத் தலைமை வகித்த ஆண்டில்தான் டாக்டர் சுப்ரமணிய மும், பி. கே. நாயுடும் காலமானார்கள் என்ப தும் தமது தலைமை உரையில் அவர்களுக்கு காந்திஜி இரங்கல் தெரிவித்தாரென்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கவையாகும். காந்திஜி காங்கிரஸ் தலைவராக வேண்டும் என்பதில் காந்திஜியின் நண்பர்களுக் கிடையிலேயே கருத்து வேறுபாடு இருந்தது. சிலர், அவர் காங்கிரஸ் தலைவராக வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்; சிலர் கூடாது என்று தடுத்தார்கள். காந்திஜி காங்கிரஸ் தலைவராவதை ஆதரித்த ''முக்கிய நண்பர்களில்'' ராஜாஜி ஒருவராவார். (காந்தி நூல் ஆங்கில தொகுப்பு 24-பக்கம் 536). காந்தி - நேரு - தாஸ் உடன்படிக்கையைக் காங்கிரஸ் அங்கீகரித்தது. மாறுதலை விரும்பாதார் எப்போதும் தம்மை ஆதரிப்பவர்களாதலால் தாம் ஒருவர் செயற்குழுவில் இருப்பதுஅவர்கள் இருப்பதுபோலத்தான் என்று காந்திஜி கருதியதால் அவர்களைக் காங்கிரஸ் செயற்குழுவில் சேர்க்கவில்லை. இதன் காரணமாக, தமிழகத்தில் டாக்டர் வரதராஜுலு நாயுடு காங்கிரஸ் செயற்குழு உறுப்பினர் ஆனார்.

எல். கே. துளசிராம்

பெல்காம் காங்கிரசில் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளின் கூட்டம் தனியாக நடைபெற்ற போது, மதுரையைச் சேர்ந்த எல். கே. துளசிராம், ''1926-ஏப்ரல் 30-ஆம் தேதிக்குள் மதுரை நகரில் பத்தாயிரம் இராட்டைகளைப் புகுத்தி விடுவதாக வாக்குறுதி அளிக்கிறேன்'' என்று ஒரு சீட்டை காந்திஜியிடம் அளித்தார். காந்திஜிக்கு ஒரே மகிழ்ச்சியாகப் போயிற்று. ''யங் இந்தியா''விலும் இதைப்பற்றி எழுதினார். ''மதுரையில் பத்தாயிரம் இராட்டைகள் வைப்பது என்றால் பத்தாயிரம் காங்கிரஸ் உறுப்பினர்கள் சேர்ப்பது என்பதுதானே பொருள்? மதுரை நகரம் மட்டும்

பத்தாயிரம் உறுப்பினர்களை அளிக்க முடியுமானால் தமிழ் நாடு முழுவதும் எத்தனை உறுப்பினர்களை அளிக்க வேண்டும்?'' என்று அவர் மகிழ்ச்சியோடு கேட்டிருந்தார்.

சேலம் விஜயராகவாச்சாரியாருக்கும் காந்திஜிக்கும் அடிக்கடி கருத்து வேறுபாடுகள் எழுந்ததுண்டு. 1924-தொடக்கத்திலெல்லாம் இந்தியா விடுதலை விஜயராகவாச் பெற்ற பின்பும் பிரிட்டிஷாரின் தொடர்பு, சாரியார் இருக்க வேண்டுமா என்பது குறித்து இவர் கள் கடிதப் போக்குவரத்து நடத்தியிருக்கிறார் கள். ''நீண்ட காலத்துக்கு பிரிட்டிஷாருடைய தொடர்பு இந்தியாவிற்கு அவசியமாயிருக்கும்; அநேகமாக ஒரு நூற் றாண்டிற்கு அவசியமாய் இருக்கலாம்'' என்று விஜய ராகவாச்சாரியார் கருதினார். ஆனால் அண்ணல் இதை ஏற்கவில்லை.

காங்கிரஸ் மாநாட்டிற்குப் பிறகு முதன் முதலாக அண்ணல் செய்த பணி கத்தியவார், மத்திய இந்தியா வங்காளம், மலபார், திருவாங்கூர், ஆகிய சுற்றுப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்ததாகும். பயணம் வைக்கம் செல்லும் வழியில்தான் தமிழகத் திற்கு வந்தார். ஜனவரி கடைசி வாரத்தில் அனைத்துக் கட்சிகள் மாநாட்டிற்குத் தலைமை தாங்கு வதற்காக அவர் டில்லிக்குச் சென்றார். அலி சகோதரர் களுக்கும் அண்ணலுக்கும் அடிப்படையான கருத்து வேறு பாடு முளைத்து விட்டதென்பது முதன் முதலாக காந்திஜி மூலமாக அப்போது வெளியாயிற்று.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் வைக்கம் என்னும் இடத்தில் ஆலயத்திற்குச் சென்ற சாலையை அரிஜனங்கள் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும் என்பதற் சத்தியாக் காக நடைபெற்ற சத்தியாக்ரகம் அண்ண கிரகம் லின் கவனத்தைக் கவர்ந்தது. மன்னர்கள் ஆட்சியில் இருந்த சமஸ்தானங்களில் விடுதலை கோரி சத்தியாக்ரகம் நடத்தக் கூடாது என்பது தான் அப்போது அண்ணலின் கொள்கை. ஆனாலும் அரிஜனங் களின் குறைந்த அளவு கோரிக்கையை-நடை பாதையில் செல்லும் உரிமையைப் பெறுவதற்காகத் தொடங்கப் பெற்ற இந்தச் சத்தியாக்ரகத்தை அவர் ஆதரித்தார்.

எத்தனையோ மாநிலங்கள் தம்மை அழைத்தும் அவை களுக்கெல்லாம் செல்வதைக் காட்டிலும் இங்குச் செல்வதே சிறந்த தொண்டாக இருக்கும் என்று எண்ணிப் புறப் பட்டார். 1925-இல் தமிழகத்திற்கு அண்ணல் வருகை புரிந்தாரென்பது அவர் வைக்கத்திற்குப் போன வழியிலும் வந்த வழியிலும் சென்னைக்கும் மற்றும் சில நகரங்களுக்கும் வந்ததுதான்.

7–3–25

சென்னை செண்ட்ரலில்

பிரம்மாண்டமான வரவேற்பு சென்னை செண்ட்ரல் இரயில் நிலையத்தில் அண்ணலுக்குக் காத்திருந்தது. மரங்களில் மட்டுமல்லாது பக்கத்திலிருந்த மருத்துவமனை, மற்ற கட்டிடங்களின் மதில் களிலெல்லாம் மனிதர்கள் கர்ய்த்துத் தொங்கிக் கொண்டிருந்தார்கள். இன்னும் இரயில் வரவில்லையே வரவில்லையே என்று தலைவர்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பிளாட்பாரத்தில் பரபரப்போடு நடந்து கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கே பேசின் பிரிட்ஜில் இரயில் தாமதப்பட்டுக் கொண்டிருந்தது. காரணம், பெரம்பூர் தொழிலாளர்கள் வரவேற்பு. பெரம்பூர் காங்கிரசின் வரவேற்பை நகராட்சி உறுப்பின ரான பக்தவத்சலு படித்துக் கொண்டிருந்தார். புது உயிர் பெற்று முதன் முறையாக அண்ணல் வருவது போன்று கருதி அவரை வரவேற்றார்கள். அவருடைய வரவேற்புகளிலும் இதைக் கூறியிருந்தார்கள். ஆனால் நேரத்தின் முக்கியத்துவம் அண்ணலுக்குத் தெரியுமல்லவா? வரவேற்புரையைப் பெற்றுக் கொண்டு, அதில் தம்மைப் பற்றிக் குறிப்பிட்டிருந்த அன்பு கனிந்த வாசகங்களுக்கு நன்றி தெரிவிப்பதாக மட்டுங் கூறிக்கொண்டு புறப்பட்டு விட்டார்.

தலைவர்கள்

செண்ட்ரல் இரயில்வே நிலையத்தில், கூடியிருந்த தலைவர்கள் ஏராளம். சி. ஆர். ரெட்டி, எஸ். சத்திய மூர்த்தி, திரு. வி. கல்யாணசுந்தர முதலி யார், டாக்டர் வரதராஜலு நாயுடு, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், கே. வி. ரெங்கசாமி ஐயங்கார் ஆகியோரை மட்டும் நாம் குறிப் பிட்டுச் சொல்லலாம். எஸ். சீனிவாச ஐயங்கார் பேசின் பிரிட்ஜிலிருந்து காந்திஜியுடன் வந்து கொண்டிருந்தார்.

அரசாங்கம் தன்னை அறியாமல் அண்ணலுக்கு அரச வரவேற்பு அளித்துவிட்டது. சுரேந்திரநாத் ஆர்யா, இராமபத்திர உடையார், ஆதிகேசவலு நாய்க்கர் ஆகியோர் தலைமையில் காங்கிரஸ் தொண்டர்கள் நின்றது போதாதென்று, துப்பாக்கிகளுடன் போலீசார் இரயில்வே நிலையத்திற்குள் அணிவகுத்து நின்றனர்; நிலையத்திற்கு வெளியேயோ குதிரைப்படைகள் வரிசை! கூட்டத்தின் அளவைப்பற்றி யூகித்துக் கொள்ள ஒரு சிறு கணக்கைச் சொல்வது பொருத்தமாக இருக்கும். இரயிலிலிருந்து இறங்கி, வெளியிலிருந்த காரில் வந்து ஏற காந்திஜிக்கு அரைமணி நேரம் ஆயிற்று. காந்திஜி காரில் ஏறி அமர்ந்தபோதோ கார் நகர முடியவில்லை. முன்னாலும் பின்னாலும் பக்கவாட்டிலும் ஒரே மக்கள் திரள். ஆகவே காரை எப்படிக் காரோட்டி நகற்ற முடியும்? அண்ணல் எழுந்து நின்று, ''தயவு செய்து கார் போக வழிவிடுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். கூட்டத்தின் நோக்கம் அண்ணலைக் காணவேண்டும் என்பதுதானே? அவர் எழுந்தவுடன், நன்முக அவரைக் கண்டு களித்தது. உடனே விண்ணதிர ஒரு முழக்கம். ''காந்திஜிக்கு ஜே'', ''மகாத்மாவுக்கு ஜே,'' ''அல்லஹு அக்பர்''! மக்கள் முண்டியடித்து எப்படியோ வழிவிட்டனர். காரும் புறப்பட்டுவிட்டது. வழக்கம் போல் பெரியமேட், சிந்தாதிரிப்பேட்டை சுவாமி நாய்க்கன் சாலை, நேப்பியர் பூங்கா, மவுண்ட்ரோடு, ராயப்பேட்டை ஆகிய பகுதிகள் வழியாகச் சென்று லஸ் சர்ச் சாலையில் இருந்த சீனிவாச ஐயங்கார் இல்லத்தை அடைந்தது. அங்குத்தான் இன்று அண்ணல் தங்கினார்.

அரச வரவேற்பு

ஒருமுறை காந்திஜி காக்கிநாடாவிற்கு வந்திருந்தபோது, வாழ்க்கையில் வழுக்கி ஒழுக்கந் தவறிக் கீழ் நிலையை அடைந்த சகோதரிகள் அவரைச் சந்தித்தனர். மீண்டும் நல்வாழ்வு வாழுமாறு அவர்களை அவர் கேட்டுக் கொண்டார். இந்த வேண்டுகோள் வீணுகப் போய்விடவில்லை. கீழ்ப்பாக்கத்தில் சரணாலயம் என்ற அமைப்பாக அது உரு எடுத்திருந்தது. திருமதி யாமுனி பூர்ண திலகம்மா இந்த நிலையத்தைத் தோற்றுவித்து நடத்திக் கொண்டு வந்தார். சென்னைக்கு வந்தவுடன் அண்ணல் பங்கு கொண்ட முதல்

சரணாலயம்

நிகழ்ச்சி இந்த நிலையத்திற்குச் சென்று திலகம்மா படித்தளித்த வரவேற்பைப் பெற்றுக் கொண்டதுதான்.

நகராண்மைக் கழகம்

சென்னை நகராண்மைக் கழகம் இன்று அளித்த வரவேற்பின் சிறப்பிற்கோ ஈடும் இல்லை, இணையும் இல்லை. மன்னர்களுக்கும் சக்கரவர்த்திகளுக்கும் அளித்த வரவேற்பைப் போன்று அது இருந்ததாகச் சொன்னாலும், மன்னர்களுக்கு அளிக்கும் வரவேற்பில் இந்தஉண்மையான, உள்ளப்பூர்வமான மகிழ்ச்சி இருக்குமா என்பது ஐயமே. நுழைவுச் சீட்டுக்களின் மூலம் உள்ளே அனுமதிக்கப்பெற்ற பார்வையாளர்கள் நூற்றுக்கணக்கில் இருக்க, வெளியேயிருந்த பார்வையாளர்கட்குக் கணக்கே இல்லை. ஒரு குறை என்ன வென்றால், இந்த வரவேற்பில் காங்கிரஸ் கொடிகளைப் பறக்க விடுவதற்குப் போலீசார் அனுமதி அளிக்கவில்லை. மீறி முன்வாசலில் பறக்கவிடப்பெற்றிருந்த ஓரிரு கொடிகளையும் அப்புறப்படுத்திவிட்டார்கள்! நகராண்மைக் கழக ஆணையாளரே கொடிகளை அப்புறப்படுத்துமாறு ஆணையிட்டவர் என்பதை அறிந்த போது, அவருடைய செயலைக் கண்டித்து நகராண்மைக் கழகத்தில் தீர்மானம் கொண்டு வந்தார்கள். வரவேற்பிற்கு ஐரோப்பிய உறுப்பினர்கள் வரவில்லை, ஐரோப்பிய அதிகாரிகள் மட்டும் வந்தார்கள். ஏற்கனவே நகராண்மைக் கழகம் இந்நன்னாளை விடுமுறை நாளாகத் தமது அலுவலர்களுக்கு அறிவித்திருந்தது.

நகரின் துப்புரவு

நகராண்மைக் கழகத் தலைவரான டாக்டர் உஸ்மான் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தபின், காந்திஜியின் மறுமொழி தொடங்கிற்று. ''சென்னை நகரம் எனக்குப் புதிதல்ல. உங்களுடைய நகரின் துப்புரவு நிலையைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு நான் இந்நகரில் பலமுறை தங்கியிருந்திருக்கிறேன்'' என்றெல்லாம் பெரிய பீடிகை போட்டுக் கொண்டு அவர் இப்பேச்சைத் தொடங்கினார். ஏனெனில், அடுத்தாற்போல் அவர் சொல்லப்போவதற்கு இத்தகைய பீடிகை தேவையாயிருந்தது. ''உங்கள் நகரத் தெருக்களெல்லாம் மிகவும் அசுத்தமாக இருக்கின்றன. வயதானவர்கள் கூட இந்நகரத் தெருக்களை ஆபாசப்படுத்துகின்றனர். ஆகையால், மற்ற நகரங்களைவிட இங்குத்

தெருக்கள் அதிக ஆபாசமாக இருக்கின்றன. உங்கள் தெருக்கள் வழியாக நடந்து செல்லும்போது நானே ஒரு துடைப்பத்தை எடுத்துப் பெருக்கலாமா என்ற எண்ணம் ஏற்படுகிறது.''

இந்த வரவேற்பில் காந்திஜி கதருக்காகச் செய்த சேவையைப் பற்றி ஒருவரி கூடக் குறிப்பிடப்பெறவில்லை. காந்திஜி இதைச் சுட்டிக் காண்பித்தார். 'மனிதவர்க்கத்திற்காக நான் செய்த சிறு தொண்டுகளில், முதன்மை வாய்ந்தது கதர் தான்' என்று அவர் பெருமையோடு கூறினர். இதை நகராட்சி மன்ற உறுப்பினர்கள் கவனித்து, அவர்களுடைய பள்ளிகளில் அதற்கு ஓர் இடம் அளிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

கதர் பற்றிய குறிப்பு இல்லை

இன்று மதியத்தில், கலாசாலை மாணவிகள் சிலர் காந்திஜியைச் சந்தித்தபோது, அவர்கள் நூற்கப் பழகிக் கொள்ளவேண்டும் என்று அண்ணல் அறிவுரை கூறினர். சீனிவாச ஐயங்கார் இல்லத்தின் அகலமான கூடத்தில் அமர்ந்து நூற்றுக் கொண்டே செய்தியாளர்களுக்கும் அவர் பேட்டி அளித்தார். பொதுவாக அப்போதிருந்த அரசியல் நிலவரம் பற்றியே செய்தியாளர்களுடைய கேள்விகள் இருந்தன. ''மக்களுடைய விரக்தியைப் போக்கி உள்ளத்தில் புத்துணர்ச்சியை ஏற்படுத்த உங்களுடைய யோசனை என்ன?'' என்று கேட்டார். ''சுதேசமித்திரன்'' பிரதிநிதி. ''விரைவில் அரசாங்கம் அடக்கு முறையைக் கையாளுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது நாட்டிற்கு உங்களுடைய செய்தி என்னவாக இருக்கும்?'' என்று கேட்டார், ''ஃபிரீபிரஸ் ஆப் இந்தியா''வின் பிரதிநிதி. ''தென்னாட்டிற்கு உங்களுடைய செய்தி என்ன?'' என்றார் ''சுயராஜ்யா''வின் பிரதிநிதி. ''கதர், கதர், கதர்'' என்று மறுமொழி தந்தார் காந்திஜி.

கதர், கதர், கதர்

திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் மாபெருங் கூட்டம்; பெண்கள் தொகையுங் கணிசமாக இருந்தது. நகராண்மைக் கழக வரவேற்பில் கொடிகள் இல்லாத பற்றுக் குறையை நீக்க இங்குக் கடற் கரையெல்லாங் கொடிகள் மயமாக இருந்தன. காந்திஜியே மேடைக்கு வந்து சேருவது பெரும் பாடாகப் போயிற்று.

பொதுக் கூட்டம்

(இம்முறை காந்திஜி வந்தபோது திருவல்லிக்கேணி கடற்கரையில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்குத் திலகர் கட்டம் என்று பெயர் சூட்டப் பெற்றிருந்தது.) சீனிவாச ஐயங்கார் தலைமை தாங்க, சத்தியமூர்த்தி அண்ணலின் சொற்பொழிவை மொழி பெயர்த்தார். வரவேற்புரைகள் அளிப்பது தொடக்கத்தில் அனுமார்வால் போல் நீண்டு கொண்டே போய்க் கொண்டிருந்தது. மொத்தம் பதினேழு வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன. தமிழ் நாடு காங்கிரசின் சார்பாக ஆதிகேசவ நாயக்கரும் மாநில கிலாபத் குழுவின் சார்பாக ஜனப் எஸ். ஏ. ஷாபி முகமதும் சென்னை மகாஜன சபையின் சார்பாக சி. கோபால் மேனனும், மத்திய தொழிலாளர் சபையின் சார்பாக வி. சக்கரைச் செட்டியாரும், ஆதிதிராவிடர்களின் (திருவள்ளுவர் கல்வீக்கழகம்) சார்பாக ஜெயவேலனும், தொண்டர் சபையின் சார்பாக சீதாபதிநாயகரும், இந்திப் பிரச்சார சபையின் சார்பாகக் கே. பாஷ்யமும், வரவேற்புரைகள் படித்தனர். மற்றும் ஆந்திர காங்கிஸ் இராயபுரம் காங்கிரஸ் குழுக்கள் சார்பாகவும் சென்னை ஆயுர்வேத கலாசாலை மாணவர்கள், பச்சையப்பன் கலாசாலை மாணவர்கள் சார்பாகவும் வரவேற்புரைகள் படித்துக் கொடுத்தார்கள்.

இந்த வரவேற்புரைகளுக்கெல்லாம் பதில் அளிக்கையில் காந்திஜி சொன்ன ஓர் உண்மை ''நியூ இந்தியா'' விற்கு உற்சாகம் அளித்திருக்க வேண்டும்.

அரசியலும் காந்தியும்

1916-ஆம் ஆண்டில், அரசியலில் காந்திஜி ஒரு குழந்தை என்று அப்பத்திரிகை கூறியதும் அதையொட்டி எழுந்த வாக்கு வாதமும் இந்நூலில் ஏற்கனவே இடம் பெற்றிருக்கிறது. ஆகையால் காந்திஜியே அரசியலுக்கும் தமக்குமிருந்த தொடர்பைக் குறித்து, அவர்கள் கருத்திற்குச் சாதகமாகத் தோன்றுகிறாற் போல் பேசிய போது அவர்கள் விட்டு விடுவார்களா? இந்தச் செய்திக்குத் தீனி முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டார்கள். காந்திஜி சொன்ன கருத்து இதுதான்: ''இந்தியாவின் தற்கால அரசியல் நிலையைப் பற்றி நான் ஏதாவது சொல்வேன் என்று நீங்கள் எதிர் பார்த்து இங்கே வந்திருக்கலாம். ஆனால் முற்றிலும் அரசியல் சம்பந்தமான விஷயங்களைப் பற்றி நான் பேசப் போவதில்லை. எனக்கு அதில் ருசி இல்லை. காங்கிரஸ்

மகாசபையின் வேலைகளில் அது ஒரு முக்கியமான அம்சமா யிருந்தாலும் அதில் கவலை கொள்ள வேண்டாம் என்று நான் இருந்து வருகிறேன். எனக்கு அது பிடிக்கவில்லை. ஆனால் மற்றவர்களுக்கும் நம்பிக்கை இருக்கக் கூடாது என்று அர்த்தமில்லை. என்னுடைய காலத்தில் நான் இன்ன வேலைதான் செய்ய வேண்டும் என்று ஒருவிதமாக முடிவு செய்து கொண்டு விட்டேன். நாம் செய்ய வேண் டிய காரியங்களை நாம் ஒழுங்காகச் செய்து விடுவோமாயின் 'இரவு கழிந்தால் பொழுது விடியும்' என்பது போல் மற்றவை தாமாகவே வந்து சேரும். நம்மை நாமே சீர்திருத்திக் கொள்வதுதான் முக்கியம். உள்ளேயிருந்து வரும் சீர்திருத்தம் தான் முக்கியமானது.''

இந்தி

இந்தி மொழிச் சிக்கலைக் குறித்து அவர் நேரடியாகவே பேசினார்: ''நீங்கள் இந்தி கற்றுக் கொள்வீர்கள் என்று கருதித்தான் (வட இந்தியாவிலிருந்து) 75 ஆயிரம் ரூபாய் இங்குக் கொண்டு வந்து செல வழிக்கப் பெற்றிருக்கிறது. ஆனால் நான் இந்தியில் பேசினால் அதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில்தான் இன்றும் நீங்கள் இருக்கிறீர்கள். நானாவது தமிழில் பேசும் அளவிற்குத் தமிழ் கற்றுக் கொண்டிருக்கலாம். எரவாடா சிறைச் சாலையில் என்னு டைய தண்டனைக் காலம் முழுவதையும் நான் கழித்திருந் தால் உறுதியாக அந்தத் தேர்ச்சி அடைந்திருப்பேன். ஆனால் தீவினைப் பயனாக அந்தப் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.'' கூட்டம் முடிந்தபின்பு, நேரே சென்ட்ரல் இரயில் நிலையத்திற்குச் சென்று மேட்டுப்பாளையம் மெயிலில் வைக்கத்திற்குப் புறப்பட்டார்.

ஈரோடு

மறுநாள் காலை சேலம் சென்றபோது காங்கிரஸ் பிரமுகர்களும் மக்களும் திரளாக இருந்து அவரைக் கண்டனர். ஈரோட்டில் ஆரவாரமான மக்கள் கூட்டத்தின் காரணமாக, யார் அவரிடம் வரவேற்புரையைப் படித்து அளிக்க வேண்டு மென்று நினைத்தார்களோ அவர்களால் அண்ணல் அருகே வரக்கூட முடியாமல் போய்விட்டது. மகாத்மாவும் வெளியே வந்து அதைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அன்று ஈரோட்டில் ரெயில்வேத் தொழிலா ளர்கள் சங்க மாநாடு நடைபெறுவதாக இருந்தது. ஈரோடு

தென்னிந்திய இரயில்வேத் தொழிலாளர் மாநாட்டின் சார்பாக அவர்களும் ஒரு வரவேற்புரையை எழுதிக் கொண்டு வந்திருந்தார்கள். அன்று மகாத்மாவை வரவேற்க ஈரோடு இரயில்வே நிலையத்திற்கு வந்திருந்தவர்களில் ஈ. வே. இராமசாமி ஒருவர். திருப்பூரில் மக்கள் வரிசையாகவும் அமைதியாகவும் அமர்ந்திருந்ததால், மகாத்மாவை நன்கு கண்டு கொள்ள முடிந்தது.

போத்தனூர்

போத்தனூரில் கூடியிருந்த நூற்றுக்கணக்கான மக்களுக்கு ஒரு நாற்காலியின் மீது நின்று கொண்டு அண்ணல் சிறிது நேரம் அறிவுரை வழங்க அவகாசம் இருந்தது. அங்குக் கூடியிருந்தவர்களை நோக்கி ''உங்களில் எத்தனை பேர் கதர் உடுத்திக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். பலர் கையைத் தூக்கினார்கள். ''எத்தனை பேர் நூற்கிறீர்கள்?'' ஒரு சில கைகளே எழுந்தன. இது அண்ணலுக்கு வருத்தம் அளித்தது. எல்லோரும் நூற்க வேண்டும் என்றும், தீண்டாமையைக் கைவிட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

வேடிக்கை நிகழ்ச்சி

இந்த இரயில்வே நிலையத்தில் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது. போட்டோ எடுப்பவர் ஒருவர் அண்ணலைப் போட்டோ எடுக்க விரும்பினார். ''நீங்கள் கதர் அணியவில்லை யாகையால் படம் எடுப்பதை நான் அனுமதிக்க முடியாது'' என்று அண்ணல் கண்டிப்பாகக் கூறிவிட்டார். இரயில் புறப்படப் போனபோது ஒரு சிறுவன் இரண்டு ஆரஞ்சுப்பழங்களை இரண்டு கைகளிலும் பிடித்துக் கொண்டு ஓடோடி வந்தான். விக்ரமநாராயணனுக்கு - அந்தப் பையன் பெயர் இதுதான் - எப்படியாவது அண்ணலிடம் அவைகளைக் கொடுக்க வேண்டும் என்று ஒரே ஆவல். இரயில் புறப்பட்டு விட்டது. பின்னாலேயே ஓடி, எப்படியோ சமாளித்து அதை அண்ணல் வசம் கொடுத்து விட்டான். மகாத்மாவும் அந்தப் பையன் முதுகில் தட்டிக் கொடுத்து ஒரு புன்னகை புரிந்தார். அது போதுமே அந்தச் சிறுவனுக்கு! இரயில் நிலையத்திற்கு வந்திருந்தவர்களில் சி. பி. சுப்பையா ஒருவர்.

14-3-25

பாரதத் தாயின் கமல பாதங்கள் படும் இடம் கன்னியாகுமரி. அங்குத்தான் கன்னியாகவும் குமரியாகவும் ஈஸ்வரி அமர்ந்து இமயத்து வாழ் ஈஸ்வரனை மணாளனாக அடையத் தவம் செய்தாள். ஆன் மிகத் துறையில் ஈடுபட்டோர்க்குக் குமரி ஒரு இணையற்ற தெய்வத்தலம். தமிழகத்தின் பெரும் தென்பரப்பைக் கடல் கொண்ட பின்பு அதுவே தமிழகத்தின் தென் எல்லையாக விளங்கி வருகிறது. அது திருவாங்கூர் சமஸ்தான மன்னரின் ஆட்சியில் இருந்த போது கூட அதைத் தமிழ்ப் பகுதியாகவே தமிழ்ப் பெரு மக்கள் கருதி வந்திருக்கிறார்கள். ''வடவேங்கடம் தென் குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்'' என்று இலக் கணம் பாடிய ஒரு புலவர் தமிழக எல்லை இலக்கணத்தை வகுத்துவிட்டுப் போந்தார். ''நீலத்திரைக்கடல் ஓரத்திலே நின்று நித்தந் தவஞ் செய் குமரி எல்லை'' என்று பாரதி யார் பாடிய போதெல்லாம் குமரி முனை சென்னை மாநிலத் தில் இல்லை, திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

குமரியின் பெருமை

இமயத்திலிருந்து கால் நடையாக வந்த இராஜ ரிஷியான சுவாமி விவேகானந்தர், அமெரிக்காவிற்குச் செல்வது என்ற அரும் முடிவை மேற் கொண்டது கன்னியாகுமரிக் கடலில் உள்ள ஒரு பாறையின் மீதே என்பதை உலகம் நினைந்து நினைந்து போற்றுகிறது. ''எனது பணி முடியும் வரை நடந்து யாத்திரை செய்துகொண்டே யிருப்பேன்'' என்று பூதானத் தந்தை வினோபாஜி கிராம சுயராஜ்ய சங்கற்பம் செய்ததும் இங்குத் தான். ஆகவே இப்பெரியார்களை யெல்லாம் கவர்ந்த கன்னியாகுமரி காந்திஜியை எவ்வாறு கவர்ந்தது என்பதை நாம் காண வேண்டியது முக்கியம்.

விவேகானந்தர்

சென்னையிலிருந்து சனிக்கிழமையன்று வைக்கத்திற்குப் புறப்பட்ட காந்திஜி மறு சனிக்கிழமையன்று திருவனந்த புரத்திலிருந்து கன்னியாகுமரிக்கு வந்தார். பிரிட்டிஷ் ரெசிடெண்டின் விடுதியில் (அரசு மாளிகையில் திருவாங்கூர் சமஸ்தான அரசின் விருந்தினராக அண்ணல் தங்க இடம் அளித் திருந்தார்கள்.) சிறிது நேரம் தங்கி ஓய்வு எடுத்துக்கொண்டு,

கன்னியாகுமரி வருகை

மூன்று கடல்களும் ஓடி வந்து அம்மனின்—பாரதத் தாயின்—புனித பாதங்களைத் தொடும் அந்த இடத்தில் கட்டப் பட்டிருக்கும் படிகளில் நின்று கொண்டிருந்தார். ஓர் பெரிய அலை வந்து அண்ணல் உடம்பு முழுவதையும் நனைத்து விட்டது. அண்ணல் சிரித்துக் கொண்டே, ''சமுத்திரத்தாய் என்னை நீராட்டி வரவேற்கிறாள் போலும்'' என்று சொன்னார்.

உள்ள நெகிழ்வு

அண்ணலின் பக்தி உள்ளத்தைக் கன்னியாகுமரி எவ் வளவு நெகிழச் செய்திருக்கிறது என்பதற்கு, ''நவ ஜீவனில்'' (29-3-25 இதழ்) அவர் எழுதிய கட்டுரை சான்றாக விளங்குகிறது. இந்தக் கட்டுரைக்குக் ''கன்னியாகுமரி தரிசனம்'' என்ற அழகான தலைப்பை அளித்துக் கீழே அவர் எழுதியிருந்தார்: ''கம்பீரமாக சூரியன் மறையும் அந்தக் காட்சியைப் பார்த்துவிட்டுப் போகலாமென அரசினர் விருந்து மாளிகையின் வாயில் காப்போர் எங்களை எவ்வளவோ வலியுறுத்தினர். ஆனால் காலில் வெந்நீரை ஊற்றிக்கொண்டு வந்துள்ள நாங்கள் இவ் வளவு பெரிய பாக்கியத்தை அனுபவிக்க எவ்வாறு தங்க முடியும்? பாரதத்தாயின் கால்களைக் கழுவிப் புனிதப் பட்டிருந்த அந்தச் சமுத்திர அலைகள் பட்டு என்னுடைய பாதங்கள் புனிதமடைந்ததுடன் நான் மனநிறைவு அடைய வேண்டியதாயிற்று.''

தேவாம்ருதம்

''... என்னைப் பொருத்தவரை, சமயத்தின் அற்புதம் என்னும் தேவாம்ருதம் இருக்கிறதே அதை மாந்தித் தீர்த்தேன். அங்குள்ள அழகான ஸ்நான கட்டத்தில் என் கால்களை நனைத்துக் கொண்டு நான் நின்றபோது என்னுடைய சகா ஒருவர், ''அங்கேயிருக்கிறதே அந்தப் பாறை, அதில்தான் விவேகானந்தர் சென்று தியானம் செய்தார்'' என்று என்னிடம் காண்பித்தார். உண்மையில் விவேகானந்தர் அப்படிச் செய்தாரோ இல்லையோ, அவரால் அதைச் செய்ய முடியும். நன்றாக நீந்தத் தெரிந்த ஒருவர் அந்த இடத்திற்கு நீந்திச் செல்ல முடியும். தீவு போன்றிருக்கும் அந்தப் பாறையில் முழு அமைதியைத் தவிர வேறு என்னதான் இருக்கும்? கடல் அலைகள் எழுப்பும் நாதம்-வீணையின் இனிய சப்த ஸ்வரங்களைப் போன்று,

யாரையும் தியானத்தில் ஆழ்த்தத்தான் செய்யும். ஆகையால் என்னுடைய சமய வேட்கை இன்னும் வலுவடைந்தது. இந்தப் படிக்கட்டுகளுக்குப் பக்கத்தில் சுமார் நூறு பேர் வசதியாக அமர்ந்திருக்கக் கூடிய ஒரு மேடை இருக்கிறது. அங்கு அமர்ந்து கீதையைப் பாராயணம் செய்யலாம் போல் இருந்தது எனக்கு. ஆனால் அந்தப் புனிதமான ஆசையையும் நான் அடக்கிக் கொண்டேன். என்னுடைய இதயத்தில் கீதாச்சாரியனின் உருவத்தை நிலைநாட்டி கொண்டு, அமைதியாக அமர்ந்தேன்.

கோவிலுக்குள் தடை

''இவ்வாறு எங்களைப் புனிதப்படுத்திக் கொண்டு, நாங்கள் ஆலயத்திற்குச் சென்றோம். தீண்டாமை ஒழிப்புப் போர் வீரர்களில் நானும் ஒருவன். என்னை கோவிலுக்குள் நான் தோட்டி என அழைத்துக் கொள்கிறேன். ஆகையால் நான் ஆலயத்திற்குள் செல்லலாமா என்று எனக்கு ஓர் ஐயம் இருந்தது. எனக்கு எங்குச் செல்ல உரிமை இல்லையோ அங்கு அழைத்துச் செல்ல வேண்டாமெனக் கோவில் நிர்வாகியிடம் சொன்னேன். அந்தக் கட்டுப்பாடுகளை நான் மதிப்பதாகவும் சொன்னேன். ஐந்தரை மணிக்கு மேல்தான் அம்மனின் தரிசனம் என்றும், நாங்கள் நான்கு மணிக்கு வந்திருப்பதாகவும் அந்த நிர்வாகி கூறினர். ஆகவே மற்ற இடங்களையெல்லாம் எங்களுக்குச் சுற்றிக் காட்டுவதாகவும் சொன்னார். அம்மன் விக்ரகம் உள்ள கர்ப்பக்கிரகத்தினுள் செல்லக்கூடாது என்பதுதான் எங்களுக்கு விதிக்கப்பெற்ற தடை. வெளிநாடு சென்று திரும்பிய எல்லோருக்குமே இந்தத் தடை பொதுவானது. இந்தக் கட்டுப்பாட்டை மகிழ்ச்சியுடன் நான் ஏற்றுக்கொள்வதாகச் கூறினேன். ஆனால் இந்த உரையாடல்களுக்குப்பின், கோவில் நிருவாகி என்னை ஆலயத்தினுள் அழைத்துச்சென்று காண்பித்தார்.

கோவிலை சுற்றிவருதல்

''...இத்தகைய இடங்களுக்குச் சென்றுதான் ஒருவன் அதிகப் புனிதமடைய முடியும் என்று எண்ணுவது ஒருவகை விக்கிரக ஆராதனையே. இத்தகைய நம்பிக்கை கொள்வதில் தீங்கு எதுவும் இல்லை. குரான் அல்லது பைபிள் மூலந்தான் ஆண்டவனைக் காண முடியும் என்ற நம்பிக்கையும் விக்ரக ஆராதனையே. அதிலும் தீங்கு இல்லை. ஒரு இந்து இதற்கு

மேல் சென்று, ஒவ்வொருவரும் தாம் விரும்பிய உருவத்தில் ஆண்டவனைத் தொழலாம் என்று கூறுகிறான். கல்லிலோ தங்கத்திலோ வெள்ளியிலோ ஒருவன் விக்ரகம் செய்து அதைத் தெய்விகமானதாகக் கருதி தியானம் செய்து தன்னைத் தூய்மைப்படுத்திக் கொண்டால் அவனும் மோட்சம் அடைய முழுத்தகுதி படைத்தவனே. கோவிலைச் சுற்றிவந்த போது, இவைகளெல்லாம் எனக்குத் தெளிவாயின.

களங்கத்தை அகற்ற

''ஆனால் இங்குக்கூட என்னுடைய மகிழ்ச்சியில் வருத்தம் கலவாமல் இல்லை. நான் முழுப் பிரகாரத்தையும் சுற்றிவர அனுமதிக்கப்பெற்றேன். ஆனாலும் நான் இங்கிலாந்திற்குச் சென்றவனதலால் உள்ளே போக அனுமதிக்கப்பெறவில்லை. தீண்டத் தகாதவர்களுக்காகிலும் அவர்களுடைய பிறப் பின் காரணமாகத் தடை விதிக்கப்பெற்றிருந்தது. இதை எவ்வாறு அனுமதிக்க முடியும்? கன்னியாகுமரி அம்மனைத் தீட்டுப்படச் செய்ய முடியுமா? ஆதி காலத்திலிருந்தே இந்தப் பழக்கம் இருந்து வந்திருக்கிறதா? இருக்க முடியாது என்று என்னுடைய அந்தராத்மா கூறியது. அப்படி இருந்திருந்தாலும் அது பாவமே. ஒரு பாவமான காரியம்—அது பரம்பரை பரம்பரையாக இருந்து வந்திருக்கிறது என்பதனால் மட்டும் பாவமில்லாததாகவோ அல்லது சிறப்பிற்குரியதாகவோ ஆய்விடாது. ஆகையால், இந்தக் களங்கத்தை அகற்றுவதற்கு ஒவ்வொரு இந்துவும் மகத்தான முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும், அது அவனுடைய கடமை என்பதில் எனக்கு அதிக நம்பிக்கை ஏற்பட்டது.''

நாகர் கோவில்

கன்னியாகுமரியிலிருந்து புறப்பட்டு பலராமபுரம் சென்று அங்கு சுயராஜ்ய வித்யா சங்கத்தின் ஆதரவில் நடத்தப் பெற்ற புலையர் பள்ளியைப் பார்வை யிட்டார். நாகர்கோவிலில் அண்ணல் வருகை யின் காரணமாக டாக்டர் எம்பெருமாள் நாயுடு முயற்சியால் நகரே விழாக்கோலம் பூண்டிருந்தது. நகராட்சி மன்றத்தினரும் நாஞ்சல் நாடு விவசாயிகளும் ஸ்காட் கிறித்தவக் கலாசாலை மாணவர்களும் அண்ணலுக்கு வரவேற்புரைகள் அளித்தார்கள். நாகர் கோவில், சுசீந்திரம், ஆகிய ஊர்களின் சார்பாக ஒரு பண முடிப்பும் அண்ணலிடம் அளிக்கப்பெற்றது. அன்று இரவே

அண்ணல் திருவனந்தபுரத்திற்குத் திரும்பிச் சென்று விட்டார்.

19-3-25

செவ்வாய்க் கிழமையன்று இரவு வைக்கத்திலிருந்து புறப்பட்டு, புதன்கிழமையன்று ஆலவாய், திருச்சூர், பாலக்காடு ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு, வியாழக் கிழமை திருப்பூர் வந்து சேர்ந்தார். பாலக்காட்டிலிருந்து வந்த இந்த ஷட்டில் இரயில் வழக்கப்படி போத்தனூரில் சுமார் ஒருமணிநேரம் நின்றது. இங்கு அவர் இரயிலிலிருந்து இறங்கி, காரில் திருப்பூருக்குச் செல்வதென்பது முதலில் செய்யப்பெற்றிருந்த ஏற்பாடு. ஆனால் அண்ணலின் உடல் நிலையை அனுசரித்தும் முதல் நாள் இரவு அவருக்குத் தூக்க மில்லாமல் இருந்ததாலும், இரயிலிலேயே திருப்பூருக்குச் செல்வதென முடிவு செய்தார்கள். இம்முடிவின் காரணமாக இங்கு ஒரு மணி நேரம் தங்குவதற்கு அவகாசம் கிடைத்தது. கோவையிலிருந்து காந்திஜியைப் பார்க்க வந்திருந்தவர் களில் பலர் மாதர்கள் என்பதும் அவர்களில் பலர் கதர் கட்டியிருந்தனரென்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு காந்திஜி ஒரு மணி நேரம் தாமதித்தது இரயில்வேத் தொழி லாளர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பாய் அமைந்தது. இரயில்வே தொழிற்சங்கத் தலைவரான எஸ். எஸ். இராம சாமி ஐயங்கார் படித்துக் கொடுத்த வரவேற்புரையில் இரயில்வேத் தொழிலாளர்கள் மத்தியில் இந்து-முஸ்லிம் என்ற வகுப்புப் பிணக்கோ அல்லது தீண்டாமைச் சிக்கலோ இல்லை என்று கூறியிருந்தது அண்ணலுக்கு மகிழ்ச்சி அளித்தது.

திருப்பூர்

மற்ற ஊர்களுக்கும் திருப்பூருக்கும் ஒரு வேறுபாடு என்னவென்றால், இங்கு வரவேற்க வந்தவர்களில் பெரும் பாலானவர்கள் கதர் அணிந்திருந்தார்கள். ஊர்வலமாக ஆஷர் சேட் பங்களாவிற்கு அழைத்துச் செல்லப் பெற்ற மகாத்மா, அங்குத் தம்மைக் காண ஏராளமான மக்கள் கூடியிருப்பதைப் பார்த்து, மாடி மீது ஏறி, எல்லோருக்கும் காட்சி தந்து நன்றி தெரிவித்துக் கொண்டார். இந்த ஊருக்கு காந்திஜி வருவதற்கு முன்பு, வரக் குட்டைப் பாளை யத்தைச் சேர்ந்த ஜெயராமன் நாயக்கர் மழைக்காகத்

''தவம்'' இருந்தார். அவர் நாற்பத்தியெட்டு நாட்கள் உண்ணு நோன்பு இருந்தார். காந்திஜி அவருக்குப் பேட்டி கொடுத்து, அவர் உண்ணு நோன்பு இருந்தபோது கைக் கொண்ட முறைகளைப் பற்றியெல்லாம் விசாரித்து ''நானும் நீங்களும் வெவ்வேறு நோக்கங்களுக்காக உண்ணு நோன்பு இருந்திருக்கிறோம். ஆகையால் என்னுடைய சகா ஒருவரைக் காண நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று அன்புடன் கூறி அனுப்பினார்.

கதர் உற்பத்தியாளர்

பிற்பகலில், கதர் உற்பத்தியில் அக்கறை கொண்டவர் களுக்கு அண்ணல் பேட்டி அளித்தார். தமிழ்நாடு கதர் போர்டு செயலாளராக இருந்த கே. சந்தானம் இங்கு அவரைச் சந்தித்தபோது, முக்கியமான ஊர்களிலெல்லாம் கதர் விற்பனை நிலையங் களைத் தொடங்க வேண்டும் என்று யோசனை கூறினார். அந்தக் காலத்தில் கேரள மாநிலத்தில் கதர் சரியான புழக்கத்திற்கு வரவில்லை. அண்ணல் அங்குச் சென்றிருந்த போது பலர் அவரிடம் கதர் கிடைக்க வில்லை என்று முறையிட்டார்கள். ஆகையால், கேரள மாநில காங்கிரஸ் குழுவுடன் கலந்தாலோசித்து, கேரளத் திலும் கதர் விற்பனை நிலையங்களைத் தொடங்குமாறு அண்ணல் சொன்னார். (இங்கு வேடிக்கையாக கே. சந் தானத்தின் இராட்டையைச் சுற்றிப் பார்த்துவிட்டு அது நன்றாய் இருப்பதாகச் சொன்னார். பிற்காலத்தில், தமது எழுத்துக்களின் மூலம், காந்திஜியின் கருத்துக்களைப் பரப்புவதற்கு சந்தானம் மிகவும் உதவியாக இருந்தார். அரிஜனங்கள் சிக்கலில் காந்திஜி கொண்டிருந்த கருத்துக் களைக் கண்டித்து அம்பேத்கார் ஒரு புத்தகம் எழுதியிருந் தார். அதற்கு மறுப்பாக இவர் ஒரு நூல் எழுதினார்.) சந்தானத்தைத் தவிர சங்கரப்பச் செட்டியார், ஆர். டி. முத்துசாமி செட்டியார், கே. வி. முத்துசாமி ஐயர், ஊத்துக்குழி பழனியப்பத் தேவர் ஆகியோர் - இவர்களும் கதர் உற்பத்தியிலும் விற்பனையிலும் அக்கறை கொண்ட வர்கள் - அண்ணலைச் சந்தித்தார்கள். கதர் உற்பத்தியில் ஈடுபடுபவர்கள் ஏழைகளாக இருப்பதால் அவர்களுடைய சரக்குகள் உடனுக்குடன் விலையாக வேண்டுமென்று இவர்கள் கேட்டுக் கொண்டனர். இடுவம்பாளையத்திற்குச் சென்று தென்னிந்திய மக்களுக்கேற்ற கதர்த்துணி அங்கு நெய்யப்படுவதைப் பார்த்து அண்ணல் மகிழ்ச்சி அடைந்

தார். காங்கிரஸ் கதர் வஸ்திராலயத்தையும் மற்ற கதர் விற்பனை நிலையங்களையும் பார்வையிட்டார்.

கதர் மன்னர்

திருப்பூர் நகராட்சியின் சார்பாகவும் மற்றும் சில அமைப்புகளின் சார்பாகவும் இங்குப் பொதுக் கூட்டத்தில் அண்ணலுக்கு வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப்பெற்றன. முசல்மான்களும் இக் கூட்டத்தில் தனியாக ஒரு வரவேற்புரையை உருது மொழியில் படித்துக் கொடுத்தார்கள். நகராட்சியின் வரவேற்புரையில் திருப்பூர் கதர்த் தலை நகரம் என்றும் காந்திஜி கதர் மன்னர் என்றும் பாங்காக வர்ணித்திருந்தார்கள். ''கதர்த் தலைநகரம் என்று அழைக்கப் பெறுவதற்கு ஏதாவது ஓர் ஊர் பொருத்தமானது என்றால் அது திருப்பூர் தான்; ஆனால் என்னைக் கதர் மன்னன் என்று அழைப்பதுதான் பொருத்தமில்லாதது'' என்று அண்ணல் அடக்கமாக மறுமொழி அளித்தார். இதன் பின்பு, திருப்பூரில் அற்புதமான கதர்த் துணி வகைகள் உற்பத்தியாவதை மாதிரிகளுடன் விளக்கினார். இக்கூட்டத்தில் பொதுமக்கள் சார்பாகவும் வேளம் பாளையம் வாசிகள் சார்பாகவும் குசராத்திகள் சார்பாக வும் தனித்தனியாகப் பண முடிப்புகள் வழங்கினார்கள். இங்கிருந்து, காந்தி ஆசிரமத்திற்குக் காரில் செல்வதென்ற ஏற்பாட்டையும் ரத்துச் செய்துவிட்டு, கூட்டம் முடிந்த வுடன் இரயிலிலேயே அண்ணல் புறப்பட்டார். ''யங் இந்தியா'' (16-4-25)வில் அவர் திருப்பூரைப் பற்றிப் பாராட்டி எழுதியிருக்கிறார். ''கதர் உற்பத்தியின் அளவும் தரமும் கணிசமாகக் கூடியுள்ளது. விலை குறை வானதாகவும் அதே சமயம் அதிக நாள் தாங்கக் கூடிய தாகவும் கதரை ஆக்குவதற்குப் பல முக்கிய சோதனைகள் நடைபெற்றுள்ளன. இவைகளிலெல்லாம் தலைமையான இடத்தை வகிப்பது திருப்பூர்தான்,'' என்று அவர் எழுதினார்.

காந்தி ஆசிரமம்

காந்தி ஆசிரமம் தொடங்கப்பெற்ற ஒரு சில வாரங் களிலேயே மகாத்மா காந்தி அங்கு வந்து இரண்டு நாட்கள் ஓய்வெடுத்துக் கொண்டது அந்த ஆசிரமத்திற்குப் பெருமையாக இருந்தது. இங்கு இரண்டு நாட்கள் அண்ணல் தங்கியது ஓய்வெடுத்துக் கொள்வதற்காகவே. ஆசிர மத்தின் முன் பகுதியில் உள்ள தோப்பில் அவர் தங்கு

வதற்கு ஒரு தனிக் கொட்டகை போடப்பெற்றிருந்தது. இதில் தான் அவர் தங்கியிருந்தார். ஆசிரமத்தில் உள்ள பார்வையாளர்கள் புத்தகத்தில் அவர் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார்:

குறிப்பு

''ஆசிரமத்தைப் பார்க்கவும் ஆசிரம வாசிகளுடன் தொடர்பு கொள்ளவும் 19-3-1925-ஆம் தேதி மாலையில் இங்கு வந்து சேர்ந்தேன். எனக்காகத் தனியாக அமைக்கப்பெற்ற ஒரு பர்ண குடியில் தங்கி இரண்டு நாட்களை மகிழ்ச்சி யாகக் கழித்தேன்.''

20–3–25

மறுநாள் அவர் ''யங் இந்தியா'', ''நவ ஜீவன்'' ஆகிய சஞ்சிகைகளுக்குக் கட்டுரை எழுதிவிட்டு, பிற்

இரத்தின சபாபதி

பகலில் மிட்டாதார் இரத்தின சபாபதிக் கவுண்டர் இல்லத்திற்குச் சென்று, அங்குப் பல பெண்கள் நூல் நூற்றுக் கொண்டிருந் ததைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். காந்தி ஆசிரமத்தை நிறுவுவதில் ராஜாஜிக்கு இரத்தின சபாபதி கவுண்டர் மிகவும் உதவி செய்தவர். கவுண்டர் இல்லத்தில் காந்திஜியைக் காண்பதற்காக வேறு பல மிட்டாதார்களும் வந்திருந்தார்கள். அவர்கள் எல்லோரும் தங்களுக்குக் கதரிலும் இராட்டினத்திலும் நம்பிக்கை இருப்பதாய்க் கூறினர்கள். அன்று ஆஷ்ரமப் பிரார்த்தனை யில் எல்லோருக்கும் ஒரே உற்சாகம்; அந்தக் குக்கிராமத் தில் ஆசிரமச் சூழ்நிலையில் மாந்தோப்பின் கீழ் காந்திஜி யுடன் அமர்ந்து ஆண்டவனை வழிபடும் வாய்ப்புக் கிடைத்ததே என்று அளவிலா மகிழ்ச்சி. இராஜாஜி, எக்னஸ் பாலாஜிராவ், இராமநாதன், கே. சுப்ரமணியம், சந்தானம் முதலியவர்களும் இந்த வழிபாட்டில் பங்கு கொண்டார்கள். பல்வேறு வகைப் பிரார்த்தனை முறை களை இங்கு அண்ணல் விளக்கினார்.

21-3-25

மறுநாளும் அவர் நன்கு ஓய்வு எடுத்துக் கொண்டு மாலைப் பிரார்த்தனையில் பங்கு கொண்டு ஆசிரமங்களை

நடத்த வேண்டிய வழி முறைகளை விளக்கினார். இரவில் புதுப்பாளையம் பொதுக் கூட்டத்தில் பேசிய போது ஆர் மோனியத்தைப் பற்றியும் பக்திப் பாடல்களைக் குறித்தும் அவர் சொன்ன கருத்து இசையைப் பற்றி அவருக்கு எவ்வளவு அக்கறை இருந்த தென்பதைப் புலப்படுத்திற்று. ''இங்கே உங்களுடைய இசைக் கருவிகளைப் பார்த்த போது, உங்கள் பாடல்களை உங்களுடைய முறையிலேயே பாடக் கேட்க வேண்டுமென்று நான் விரும்பினேன். தேசிய வாழ்க்கையில் பாடல்களுக்கு ஒரு முக்கிய இடம் இருக்கிறது என்பதை நான் அறிவேன். ஆனால் பாடல்களுக்குள்ளேயே பல வகைகள் உண்டு; வேறுபாடுகள் உண்டு. உயர்த்தும் பாடலும் உண்டு; தாழ்த்தும் பாடலும் உண்டு. முழுதும் பக்தி உணர்ச்சியைக் கொண்ட உண்மையான, நல்ல பாடலாக இருந்தால் அது நம்மை உயர்த்துகிறது. இந்தியா முழுவதும் புராதன காலத்திலிருந்த பாடல்கள் அத்தகையனவாகத் தான் இருந்தன. பழங்காலத்தில் நமது என்று கூறக்கூடிய சிலவகை இசைக் கருவிகள் இருந்தன. ஆனால் அந்த உயர்ந்த இசைக் கருவிகளுக்குப் பதிலாக ஆர்மோனியம் இப்போது இடம் பெற்றுவிட்டது. தந்திகள் மூலம் நாதம் இசைக்கும் அந்தப் பழங்கால இசைக் கருவிகளுக்கு நாம் செல்வோமாக! அவைகள் உள்ளத்தில் ஆழமாகப் பதியும் இசையை எழுப்பும்; என்னைப் பொருத்தவரை ஆர்மோனியத்தைக் காட்டிலும் அவை என் உள்ளத்திற்குச் சாந்தத்தை அளிக்கின்றன.''

ஆர்மோனியம்

இவ்வாறு முன்னுரையாகக் கூறிவிட்டு, அவர் கதர்ப் பொருளாதாரத்தைப் பற்றி விளக்கினார். கூட்டத்தில் வந்திருந்தவர்களில் பலர் கதர்த் துணி அணியாமலிருந்தது தமக்கு வருத்தம் அளிப்பதாகச் சொன்னார். ''ஏற்கனவே இராட்டை இல்லாத இல்லங்களில் அவைகளைப் புகுத்துமாறு வேண்டுகிறேன். இராட்டைதான் நமது காமதேனு'' என்று கூறிவிட்டு இரத்தின சபாபதிக் கவுண்டர் குடும்பத்தைப் பற்றிக் குறிப்பிட்டு ''இரத்தினசபாபதிக் கவுண்டர் தம் வீட்டில் ஒரு இராட்டை அல்ல, பல இராட்டைகள் சுழலுமாறு செய்கிறார். நேற்று அவருடைய இல்லத்திற்குச் சென்ற போது அவருடைய குடும்பத்துப் பெண்கள்

காமதேனு

இராட்டையில் நூல் நூற்றுக் கொண்டிருந்தது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி அளித்தது. அவ்வாறு நூற்ற நூலால் நெய்யப்பெற்ற துணியையே அவர் அணிந்திருக்கிறார். அவரும் அவருடைய குடும்பத்தினரும் அணிந்துள்ள துணிமணிகளெல்லாம் கதரே. ஆண்டவன் அவருக்கு நிறையப் பணத்தை அளித்திருக்கிறான். அவர் இராட்டையைச் சுழற்றுவதோ அல்லது கதர் அணிவதோ பணத்திற்காக அல்ல. தம் நாட்டிற்காகவும் சமயத்திற்காகவுந் தான் அவர் அவ்வாறு செய்கிறார்,'' என்று பாராட்டினர். இரத்தினசபாபதிக் கவுண்டரையும் அவர் மனைவியாரையும் இப்பகுதியில் பேசிய மற்ற சில கூட்டங்களிலும் அண்ணல் பாராட்டியுள்ளார்.

தர்மம் பற்றி அண்ணல்

காந்திஜி இங்குப் பேச வருவதற்கு முன், ஒருவர் ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதற்காக அண்ணலிடம் பணம் அளித்தார். ''கையுங் காலும் இருந்து, வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியத்தைத் தேடிக் கொள்ளக் கூடியவர்களுக்கு, அன்னதானம் வழங்குவதில் எனக்கு நம்பிக்கை இல்லை. பகுத்துப் பார்க்காது ஏழைகளுக்குப் (பண) தானம் அளிக்கும் பணக்காரர்கள் தவறான தர்மம் செய்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். குருடர், செவிடர், வேலை செய்யச் சக்தியற்றோர் போன்றோருக்குத்தான் இத்தகைய தர்மம் அளிக்க வேண்டும். ஆகையால் இராஜகோபாலாச்சாரியாருடன் கலந்து ஆலோசித்து, இந்தக் கிராமத்திலோ அல்லது இந்தக் கூட்டத்திலோ உள்ள ஏழை மக்களுக்குக் குறைந்த விலையில் துணி வழங்குவதற்கு இந்தப் பணத்தைப் பயன்படுத்துவது என்ற முடிவிற்கு நான் வந்திருக்கிறேன். உண்மையிலேயே ஏழையாக இருப்பவர்கள் இங்குப் பதிவு செய்து கொண்டு, இனிமேல் கதர் தான் அணிவது என்று உறுதிமொழியுங் கொடுத்தால், அவர்களுக்குக் கடையில் கிடைப்பதைவிடக் குறைந்த விலையில் கதர் வழங்கப்படும். இப்போது அளிக்கப் பெற்றுள்ள நன்கொடை போதாத அளவிற்கு, அதிகமான ஏழை மக்கள் கதர்க் கட்ட முன் வந்தாலும் நான் மேலும் நன்கொடை பெற்றுக் கொடுக்கிறேன். ஆனால் ஒன்று. அவர்கள் இனிமேல் கதர்தான் அணிவது என்று உறுதிமொழி அளிக்க வேண்டும்,'' என்று அண்ணல் கூறினர்.

கோவை மாவட்ட செங்குந்தர் மகாஜன சங்கத்தார் அண்ணலுக்கு வரவேற்புரை படித்துக் கொடுப்பதற்காகவே புதுப்பாளையத்திற்கு வந்திருந்தார்கள்.

தேவதாசி முறை

இவர்கள் தமிழில் படித்துக் கொடுத்த வரவேற் புரையில், தேவதாசிகள் முறையினால் அல்லலு றும் சகோதரிகளின் துயர்களைக் குறித்து முறையிட்டிருந்தார்கள். உருக்கத்தோடு இவ்வரவேற் புரைக்கு அண்ணல் பதில் அளித்தார். இந்த முறையைப் போக்குவதற்கான வழிவகைகளையும் கூறினார். (ஒன்று) குடும்பத்தில் ஒரு பெண்ணைத் தாசியாக்கும் பழக்கமுள்ள குடும்பங்களின் புள்ளிவிவரத்தை எடுத்து அவர்களை அணுகி இந்த முறை முற்றிலும் தவருனது என்பதை எடுத்துக் கூற வேண்டும். (இரண்டு) இப்பிழைப்பில் ஈடுபட்டிருக்கும் மாதர்களுக்கு வேறு பிழைப்புத் தேடிக் கொடுக்க வேண்டும். நூல் நூற்பது மட்டும் இவர்களுக்குக் கட்டுபடியாகாது. நெசவு, தையல், கதரில் பூப்போடுதல் போன்ற வேலைகளை இவர்கள் செய்யலாம். தேவதாசி வகுப்பைச் சேர்ந்தவர் களுடைய எண்ணிக்கை குறைவாகையால், அவர்களைச் சீரமைப்பது கடினமாக இராது.

இவ்வாறெல்லாம் கூறிவிட்டு, காந்திஜி, இந்தப் புனித மான பணியைச் செய்வதற்குத் தமது ஆயுள் முழுவதையும் அர்ப்பணிக்கக் கூடிய ஒரு வல்லுநர் இருக்க

முத்துலட்சுமி ரெட்டி

வேண்டும் என்ற தமது விருப்பத்தைத் தெரி வித்தார். இத்தகைய ஒரு வல்லுநர் சென்னை மாநகரில் அப்போது வாழ்ந்து கொண்டுதான் இருந்தார். அவரையும் அண்ணல் சத்திக்கத்தான் செய் தார்; 1925-இல் அல்ல, 1927-இல். அவர் தாம் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி.

இக்கூட்டத்தின் இறுதியில் ஒரு சுவையான நிகழ்ச்சி நடைபெற்றது. செங்குந்தர் மகாஜன சங்கத்தின் ஆதரவில் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்த

கடுக்கண்கள் கொடை

இலட்சுமண முதலியார் பொதுத் தொண்டிற் காக அண்ணலிடம் தமது கடுக்கண்களையும் மோதிரத்தையும் அன்பளிப்பாக வழங்கினார். இந்த அன்பளிப்புகளை அண்ணல் அவரிடமே திருப்பி அளித்து இவைகளை அடிப்படை முதலாக வைத்துக் கொண்டு தேவ தாசிகள் சீர்திருத்தப் பணிக்கு நிதி திரட்டித் தொண் டாற்றுமாறு கேட்டுக் கொண்டார்.

திருச்செங்கோட்டிற்கு அண்ணல் சென்றபோது அங்குத் திருச்செங்கோடு யூனியன் உறுப்பினர்களும், தல காங்கிரஸ் குழு உறுப்பினர்களும் வாலிப சுயராஜ்ய சங்கத்தினரும் அளித்த வரவேற்புரைகளுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். இங்கு இவர் நிகழ்த்திய உரையை டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் மொழி பெயர்த்தார். இங்கு அவர் கதரைப் பற்றிச் சொன்ன விளக்கங்களும் அறிவுரைகளும் மிகவும் நயமாக இருந்தன. ''இன்று இந்தியாவில் உள்ள வறுமை என்னும் சிக்கலைத் தீர்க்க வல்லது கதர் ஒன்றே. ஒரு தலைமுறை யாகச் சிறந்த அறிஞர்களையெல்லாம் திண்டாட வைத்த சிக்கலுக்கு எளிய, உறுதியான தீர்வு இதுதான். தாய் நாட்டிற்காக மக்கள் செய்யக்கூடிய உயர்ந்த தொண்டும் கதர் அணிவதே,'' என்று அவர் கூறினர்.

திருச்செங்கோடு

ஆசிரமத்தில் அரிஜனப் பையன்கள் வளர்க்கப்பெற்ற முறையும் அண்ணலுக்கு மன நிறைவு அளித்திருக்கிறது. இங்கு அவர் மக்களை நோக்கி, ''ஆசிரமத் திற்குச் சென்று அங்கு வளர்க்கப்படும் பஞ்ச மர் பையன்களைப் பாருங்கள். அவர்களையும் மற்ற சாதிப் பையன்களையும் நீங்கள் பிரித் துக் காட்ட முடியுமா?'' என்று அறைகூவல் விடுத்தார். ''ஆசிரமத்தில் உள்ள உயர்ந்த பிராமணர்கள் எவ்வளவு சுத்தமானவர்களாகவும் கடவுள் பக்தி உள்ளவர்களாகவும் இருக்கிறார்களோ அதே அளவு சுத்தமானவர்களாகவும் கடவுள் பக்தி உள்ளவர்களாகவும் அந்தப் பஞ்சமர் பையன்களும் இருக்கிறார்கள்'' என்று அவர் சொன்னர்.

பஞ்சமர் பையன்கள்

22-3-25

ஞாயிற்றுக் கிழமையன்று காலை சென்னை வந்து சேர்ந்த காந்திஜி முதல் நிகழ்ச்சியாக எழும்பூரில் உள்ள நாராயண்காடு சமூகச் சேவா சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு அங்குவாழ்ந்த தாழ்த்தப்பட்டோர் மக்கள் சார்பில் டி. வி. சேஷகிரி ஐயர் அளித்த வரவேற்புரையைப் பெற்றுக்கொண்டார். இக் கூட்டத்தில் பேசியபோது அண்ணல் ஒரு முக்கியமான தீர்க்கதரிசனத்தைச் சொன்னர்: ''இராட்டையையும் கத

தீர்க்க தரிசனம்

ரையும் அடிப்படையாகக் கொண்டிராத எந்தச் சமூகத் தொண்டும் முழுமை அடையாது. இவ்வாறு நான் கூறுவதைக் கேட்டு ஒருவேளை நீங்கள் சிரிக்கலாம். ஒரு காலம் வரும். அப்போது கதர் அணிந்திராத, நூற்கத் தெரியாத சமூக சேவகன் சமூக சேவகனுகவே கருதப்பட மாட்டான்.'' கதர் அணியும் பழக்கமும் இராட்டையில் நூற்கும் பழக்கமும் அப்போதுதான் பரவிக்கொண்டிருந்த தொடக்கக் காலத்தில் இதை அண்ணல் கூறினர் என்பதை நாம் நினைவிற்கொள்ளும் போது இது எவ்வளவு பெரிய தீர்க்க தரிசனம் என்பது விளங்கும்.

ஏராளமான அலுவல்கள்

இன்று அவருக்கு ஏராளமான அலுவல்கள் இருந்திருக்கின்றன. ''ஏரவாடா சிறை அதிகாரியைக் காட்டிலும் கடினமான ஒரு வேலைத் திட்டத்தை இப்போது என்னைச் சிறைப்பிடித்துள்ள எஸ். சீனிவாச ஐயங்கார் வகுத்திருக்கிறார்,'' என்று அண்ணல் வேடிக்கையாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகையால் இக்கூட்டத்தில் கதரைப் பற்றியும் கல்வி முறையைப் பற்றியும் மட்டும் பேசிவிட்டு அடுத்த கூட்டத்திற்குப் புறப்பட்டு விட்டார். ''நம்முடைய பள்ளிகளில் கற்றுக் கொடுக்கப்படும் கல்வி முறைக்கு நான் எதிரி அல்ல. ஆனால் என் வாழ்க்கையைப் பொருத்தவரை அது இரண்டாமிடமே பெறுகிறது. நம்மை இந்நாட்டிற்குப் பணி புரிபவர்களாக ஆக்காதவரை இக்கல்விக்கு மதிப்பில்லை என்று நான் கருதுகிறேன்'' என்று அவர் கூறினர். இங்கு வந்தபோது ஒயிட்ஹெட் மண்டபத்தையும் நாராயண்கார்டு குப்பத்தையும் அண்ணல் பார்வையிட்டார்.

உதாரணம் சீதை

திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் தெருவில் உள்ள தாரணேத்சவத்தில் ஏராளமான பெண்கள் பங்கு கொண்ட நூற்புப் போட்டியைக் காண அண்ணல் வந்தபோது, போட்டியில் பங்கு கொண்ட பெண்களே அந்நியத் துணிகளை அணிந்து கொண்டு இராட்டைகளைச் சுழற்றிக் கொண்டிருந்ததைப் பார்த்தார். அது ஒருபுறம் அவருக்கு வருத்தமாகவும் மற்றொரு புறம் மகிழ்ச்சியாகவும் இருந்தது. திருமதி சின்னசாமி ஐயங்கார் தமிழில் படித்தளித்த வரவேற்புரைக்கு அண்ணல் ஆங்கிலத்தில் கூறிய மறுமொழியை எஸ். சீனிவாச ஐயங்கார் தமிழில் மொழி

பெயர்த்தார்: ''இந்தியாவின் கதி மோட்சம் இந்தியர்வி லுள்ள பெண்கள் கையில்தான் இருக்கிறது. இந்திய மாதர்கள் ஆண்களுடன் சரிசமமாகப் பங்காற்றுவிட்டால் சுயராஜ்யத்தைப் பற்றி நான் காணும் கனவு ஒன்றும் நடைபெறுது. மாதர்கள் கூட்டங்களில் சுயராஜ்யம் என்பதை இராமராஜ்யம் என்று நான் விளக்கியிருக் கிறேன். ஆயிரக்கணக்கான சீதைகள் இல்லாவிட்டால், இராமராஜ்யம் எவ்வாறு அமைய முடியும்? இந்தியா முழுவதிலும் சீதை நடந்து வந்தபோது உங்களைப் போல் அவள் அந்நிய ஆடைகள் அணிந்திருக்கவில்லை. நவீன பெண்கள்தான் கதரை முரட்டுத்துணி என்று என்னிடம் கூறுகிறார்கள்,'' என்று நயமாகக் கதரின் சிறப்பை அவர் கள் காதில் போட்டு வைத்தார். அதேசமயம் இந்தப் பேச்சின் இறுதியில் அவருடைய இதயத்தின் ஆழத்தில் இருந்த துன்பக் குமுறல் வெளி வந்தது. ''சகோதரிகள் மேலும் மேலும் அந்நியத் துணிகளை அணிந்து கொண்டே இத்தகைய கூட்டங்களுக்கு வருவது என்றால், அவைகளில் பங்கு கொள்வது எனக்குத் தாங்க முடியாத துயரைத் தரும். என்னுடைய குரலை நானே கேட்டுக் கொண் டிருக்க இனியும் விரும்பவில்லை. இன்று பிற்பகலில் நான் கூறியுள்ள இந்தச் சொற்களாவது உங்கள் மனதில் தகுந்த பலனை ஏற்படுத்துமாக!'' என்று அவர் வருத்தத் தோடு கூறினார்.

விடுதலைப் போரில் காந்தி அடிகளுக்குத் தோள் கொடுத்தவர்களில் கஸ்தூரிரங்க ஐயங்கார் ஒருவர். பெயர் பெற்ற ''இந்து'' ஆங்கில நாளிதழின் கஸ்தூரி ரங்க ஆசிரியர் அவர். ஆகவே சொந்த முறையி ஐயங்கார் லும், அச்செய்த்தாளின் மூலமாகவும் அவர் அண்ணலுக்கு எத்தனையோ உதவிகள் அளிக்க முடிந்தது. மேலும் கஸ்தூரிரங்க ஐயங்கார் காந்திஜியுடன் சேர்ந்து பிரிட்டிஷ் பேரரசை எதிர்த்துப் போராடியது மட்டுமல்லாமல் காந்திஜியுடனும் சில சமயங்களில் போராடியிருக்கிறார். ''நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றங் குற்றமே'' என்று சொன்ன தமிழர் வாழ்ந்த தமிழகத்தைச் சேர்ந்தவரன்றோ அவர்? காந்திஜி சொல்வ திலும் தம் மனச்சாட்சிப்படி குறை இருப்பதாகத் தெரிந் தால் அதை அவர் அஞ்சாமல் சொல்லி வந்தார். இதன் காரணமாகவும் அண்ணலுக்கு அவர் மீது தனிப்பிரியம் இருந்

தது. ஆகவே அவர் காலமானபோது (தேதி: 12-12-1923) அண்ணல் மிகவும் மனம் வருந்தினர். இன்று 'இந்து' அலுவலகத்தில் (அப்போது அலுவலகம் ரவுண்ட்டானுவுக்குத் தெற்கே இருந்தது.) அவருடைய முழு உருவப்படத்தைத் திறந்து வைப்பதை அவர் பெரும் பேறுகக் கருதினர். முழங்கால் அளவிற்கு உடுத்திய துணி தவிர மேல் துணி எதுவும் இல்லாத இந்தப் பொக்கைவாய்க் கிழவர், - உலகப் புகழ் பெற்ற பத்திரிகை ஆசிரியர் - மற்றொரு உலகப் புகழ் பெற்ற பத்திரிகை ஆசிரியரின் உருவப் படத்தைத் திறந்து வைத்த நிகழ்ச்சிக்கு நகரில் உள்ள பெரிய பெரிய மனிதர்களெல்லாம் வந்திருந்தார்கள். 'இந்து' அலுவலகத்தின் மேல் மாடியில் உள்ள மண்டபத்தில் சீனிவாச சாஸ்திரி தலைமையில் இந்த விழா நடைபெற்றது. ''இந்து'' அலுவலர்களின் சார்பில் அதன் ஆசிரியர் ரெங்கசாமி ஐயங்கார் அண்ணலுக்கு வரவேற்புரை கூறினர். நாகப்பா என்ற கலைஞர் தீட்டிய அந்த உருவப்படத்தைத் திறந்து வைத்து, கஸ்தூரிரங்க ஐயங்காருடைய உருவப்படத்தைத் திறந்து வைப்பதே பாக்கியம் என்றும், அதிலும் சீனிவாச சாஸ்திரி தலைமையின் கீழ் அதைத் திறந்து வைப்பது இரட்டிப்புப் பாக்கியம் என்றும் அண்ணல் கூறி நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் கஸ்தூரிரங்க ஐயங்காரைப் பற்றியும் ''இந்து'' இதழைப் பற்றியும் ஒவ்வொரு புகழ்மாலையாக அண்ணல் சூட்டிக் கொண்டு போனார். இந்தியாவின் எத்தனை பாராட்டுக்கள் உண்டோ அத்தனை 'டைம்ஸ்' யையும் தாம் சூட்டிவிட்டதாகச் சொற்பொழிவின் இடையே அவர் கூறவும் செய்தார். கஸ்தூரிரங்க ஐயங்காரைப் பற்றி அவர் சொன்னார்: ''இந்தியப் பத்திரிகை உலகில் சில சிறந்த அம்சங்களின் பிரதிநிதியாக அவர் விளங்கினார். அவருடைய நடையே தனி. அவருடைய கண்டனமும் கண்டனமும் தனி வகையைச் சார்ந்தவை. அவர் உங்களை ஆதரித்து எழுதினாலும் எதிர்த்து எழுதினாலும் நீங்கள் அவரைப் பாராட்டாது இருக்க முடியாது. அவருடைய தேசபக்தி ஒரு போதும் ஆட்டங் கொடுத்ததில்லை. பல சந்தர்ப்பங்களில் நான் அவருடன் கருத்து வேறுபட வேண்டியிருந்தது. ஆனாலும் அவருடைய முடிவை நான் மதித்தேன். ஏனெனில் அதன் மூலம் என்னுடைய வாதத்தில் அல்லது என்

நிலையில் எங்கே பலவீனம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொண்டேன். இங்கிலாந்தில் இலண்டன் ''டைம்ஸ்'' ஆசிரியர் எந்த இடத்தை வகித்தாரோ அதே இடத்தை இந்த மாநிலத்தில் அவர் வகிப்பதாகப் பலமுறை எனக்குத் தோன்றிய துண்டு.'' கஸ்தூரிரங்க ஐயங்கார் சிறப்புகளைச் சொல்லும் போது 'இந்து'வின் புகழைச் சொல்லாமல் இருக்க முடியுமா? ''ஒரு மனிதன் 'இந்து'வைப் படித்து விட்டால் உலகச் செய்திகளுக்கு வேறு எந்தச் செய்தித் தாள்களையும் அவன் படிக்க வேண்டியதில்லை. சில செய்தித்தாள்கள் இல்லாமல் நீங்கள் இருக்க முடியாது. அவைகளில் 'இந்து' ஒன்று. கஸ்தூரிரங்க ஐயங்கார் மரணத்தைத் தென்பகுதியில் உள்ளவர்கள் மட்டுமல்லாது, வடஇந்தியாவில் உள்ளவர்களும் உணர்ந்து வருந்துவார்கள். வட இந்தியாவில் உள்ளவர்களும், ஒரு சிக்கலில் 'இந்து' என்ன கூறுகிறது என்பதை அறிய விரும்புகிறார்கள்,'' என்று அவர் கூறினார். ''இந்து'' மேலும் மேலும் ஓங்கி வளரும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார்.

'மெட்ராஸ் மெயில்'

இந்தப் பேச்சின் இடையே, ''மெட்ராஸ் மெயில்'' இதழுக்கும் அவர் ஒரு பாராட்டைச் சொல்லாமல் சொல்லி விட்டார். சென்னை மாநிலத்தைச் சேர்ந்த ஒருவன் 'இந்து'ப் பத்திரிகையைப் படித்து விட்டு, எதிர் முழக்கமான ''மெட்ராஸ் மெயில்''யும் வாசித்துவிட்டால், ஒரு சிக்கலில் உள்ள இரண்டு தரப்புகளையும் பற்றி என்னென்ன வெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமோ அவைகள் அத்தனையையும் தெரிந்து கொள்வான் என்றார் அண்ணல். கஸ்தூரிரங்க ஐயங்காரின் குமாரரான கே. சீனிவாச ஐயங்கார் காந்திஜியிடம் ஒரு வெள்ளி இராட்டையை அளித்தார்.

காஸ்மா பாலிட்டன் கிளப்

காஸ்மாபாலிடன் கிளப்பிற்கு அண்ணல் சென்ற போது, அங்கு சர் தியாகராய செட்டி ஏனோ வரவில்லை. கிளப் துணைத் தலைவரான ஜஸ்டிஸ் சி. வி. குமாரசாமி செட்டி வாயிலில் நின்று அண்ணலை வரவேற்று அழைத்துச் செல்ல, வி. ஆள்வார் செட்டி வரவேற்புரையை வாசித்தளித்தார். கிளப்பின் செயலாளரான டாக்டர் வேங்கட சாமி காந்திஜிக்குக் கதர் மாலை சூட்டியதிலிருந்து காலப்

போக்கை உயர் மட்டத்தில் இருந்தவர்களும் தெரிந்திருந்தனர் என்பது புலப்பட்டது. ''இந்திய அரசாங்கம் பதவியில் இருந்தாலும் சரி, பிரிட்டன் அரசு பதவியில் இருந்தாலும் சரி, பொது மக்களுடைய வறுமை என்னும் சிக்கலைத் தீர்த்து வைத்துத்தானாக வேண்டும். அவர்களுக்கு உதவியளிக்கக்கூடியது, பட்டினியிலிருந்து அவர்களைக் காப்பாற்றக் கூடியது இராட்டை ஒன்றே'' என்று அண்ணல் இங்கு விளக்கிவிட்டு நேரே கடற்கரைப் பொதுக்கூட்டத்திற்குப் புறப்பட்டார்.

பொதுக் கூட்டம்

''காந்திஜியை ரவை இல்லாத துப்பாக்கி என்றும் மக்கள் ஆதரவை இழந்து விட்டவர் என்றும் அரசாங்கம் கருதுகிறது. ஆனால் இந்த மாபெருங் கூட்டமாவது அதன் கண்களைத் திறக்கட்டும்'' என்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கூடியிருந்த மக்கள் கடலைச் சுட்டிக் காட்டி, தலைமை தாங்கியிருந்த யாகூப் ஹாசன் கூறினார். அவ்வளவு பெரிய கூட்டம் அங்கே கூடியிருந்தது. குசராத்தி சேவக மந்திர், அமரபால விலாசினி சபா, நௌரோஜி - கோகலே யூனியன் ஆகிய சங்கங்களின் சார்பாக அவருக்கு வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன. இந்தச் சமயத்தில், காங்கிரஸ் ஓர் அரசியல் அமைப்பாக இருப்பதிலிருந்து மாறி சமூக அமைப்பாகிக் கொண்டு வருவதாகப் பரவலாகக் குற்றச் சாட்டு இருந்து வந்தது. கதர், மதுவிலக்கு போன்றவைகளை காந்திஜி வலியுறுத்தி வந்ததை விரும்பாதவர்களே இக்குற்றச் சாட்டைக் கூறி வந்தவர்கள். இக் கருத்து பலமடைந்து வருகிறது என்பதை யாகூப் ஹாசன் தமது தலைமை உரையில் அண்ணலின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதற்கு காந்திஜியும் பதில் அளித்தார். ''காங்கிரஸ் ஒரு சமூக அமைப்பாகவோ சர்க்கா சங்கமாகவோ இருப்பதை எதிர்க்க விரும்பாதவன் நான். ஏனெனில் சமூக, பொருளாதாரச் சிக்கல்களை நாம் புறக்கணித்தால் விடுதலை பெற முடியாது. சுயராஜ்யக் கட்சி ஓர் அங்கமாக இருக்கும் வரை காங்கிரஸ் ஓர் அரசியல் அமைப்பேயாகும். அரசியலில் ஆசை உள்ளவர்கள் சுயராஜ்யக் கட்சி மூலம் மிக உயர்ந்த நிலையை எட்ட முடியும். ஆனாலும் என் அரசியல் மட்டும் இராட்டைக்கு அப்பால் செல்லவில்லை'' என்று இடித்துரைத்தார்.

ஆனல் காந்திஜியின் பேச்சு இந்தப் போக்கில் செல்வதை ஓர் அன்பர் தடை செய்து விட்டதால், அது வேறு போக்கில் திரும்பியது. ஒரு கேள்வித்தாளை இந்த அன்பர் காந்திஜியிடம் அளிக்கவே அண்ணல் அக் கேள்விகளை ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு மறுமொழி அளிக்கத் தொடங்கி விட்டார். ''வைக்கத்தில் சாலைகளைப் பயன்படுத்தத் தாழ்த்தப்பட்டோரை அனுமதித்து விட்டால், அப்புறம், அவர்கள் ஆலயங்களுக்குள் நுழைவதை ஆதரிப்பீர்களா? சனாதனி இந்து என்பதற்கு நீங்கள் கொள்ளும் பொருள் என்ன? மாமிசம் உண்ணும் பிராமணரல்லாதாருடனும் ஒரு பிராமணர் சேர்ந்து உண்ண வேண்டுமா? வர்ணாஷ்ரம தர்மத்தைப் பற்றி உங்களுடைய கருத்துக்கள் என்ன? வரும் தேர்தல்களில் வாக்காளர்களின் கடமை என்ன? நாங்கள் வாக்களிக்கக்கூடாது என்று கூறுகிறீர்களா?'' என்று கேள்விகள் - அந்தக் காலத்தில் வைதிக சமுதாயத் திற்கு முக்கியமாகத் தோன்றிய கேள்விகள் - இவர் அடுக் கடுக்காகக் கேட்டிருந்தார். இவைகளுக்கெல்லாம் காந்திஜி என்ன பதில் அளித்திருப்பார் என்பது இன்று கூட நாம் எளிதாக யூகித்து உணரக் கூடியது தான். ஆனல் ''தேர்த லில் வாக்களிக்கலாமா?'' என்பது குறித்து அவர் அளித்த பதில் சுவையானது.

பேச்சுத் திரும்பியது

''நான் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்துவதாய் இருந்தால், அபேட்சகர்களில் யாராவது ஒருவர் முற்றிலும் கதர் அணிந்தவராய் இருக்கிறாரா என்பதைப் பார்ப்பேன். இல்லையேல் வாக்குச் சீட்டை என் பெட்டியில் வைத்துப் பூட்டி விடுவேன். அத்தகைய அபேட்சகர் ஒருவர் இருந்தாலும், அவரிடம் சென்று, பணிவாக, ''நீங்கள் தற்போதைக்கு மட்டும் கதர் அணிந்திருக்கிறீர்களா அல்லது, வழக்கமாக, எல்லா நேரங்களிலுமே கதர் அணிவதுண்டா?'' என்று கேட்பேன். ''இல்லை'' என்று அவர் பதில் அளித்தால் மறுபடியும் வாக்குச் சீட்டு என் பெட்டிக்குப் போய்விடும். ''ஆம்'' என்று பதில் அளித்தாரானல் ''நல்லது, நீங்கள் நாள்தோறும் அரை மணி நேரமாவது நூற்கிறீர்களா?'' என்று வினவுவேன். இக்கேள்விக்கும் மன நிறைவு தரும் பதில் வந்து விட்டால், ''இந்து-முஸ்லிம்-பார்சி-கிறித்த வர் - யூதர் ஒற்றுமையில் உங்களுக்கு நம்பிக்கை உண்டா?''

எப்போது வாக்களிப்பார்

என்பேன். இதற்கும் மனநிறைவான பதில் கிடைத்து, அவர் ஒரு இந்துவாகவும் இருந்தால் தொகுதி பொதுத் தொகுதியாகவும் இருந்தால் ''நான் சொன்ன பொருளில் தீண்டாமை ஒழிப்பை நீங்கள் ஏற்கிறீர்களா?'' என்பேன். அதன்பின் ''மது விலக்கை ஏற்கிறீர்களா? நமது பள்ளிகளை யெல்லாம் மூடுவதானாலும் உடனடியாக மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டு வருவதை ஆதரிக்கிறீர்களா?'' என்பேன். அதற்கும் ''ஆம்'' என்றால், பிராமணர்-பிராமணரல்லாதார் சிக்கல் பற்றிச் சில கேள்விகள் கேட்டு அச் சிக்கலில் அவருடைய கருத்து மனநிறைவு தரக்கூடியதாக இருக்கிறதா என்பதைப் பார்ப்பேன். அதன் பின்பு தான் அவருக்கு வாக்களிப்பேன்.''

மாணவர் அரங்கு

சென்னை மாணவர்கள் இல்லங்களின் கூட்டு விவாத அரங்கு கோகலே மண்டபத்தில் இன்று இரவு அண்ணாவுக்கு ஒரு வரவேற்பளித்தது. கடற்கரைப் பொதுக் கூட்டத்திலிருந்து இங்கு வந்து இந்த வரவேற்பை அவர் பெற்றுக் கொண்டு, நீண்ட காலமாக மாணவர்களுக்கும் தமக்கும் இருந்து வந்துள்ள தொடர்பை எடுத்துரைத்தார். ''இன்று வரை மாணவர்களுடன் நான் அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறேன். அதன் காரணமாக மாணவர் உலகத்தின் விருப்பங்கள் என்னவென்பது எனக்கு நன்கு தெரியும். மாணவர்களிடம் நம்பிக்கை இழக்க வேண்டாம் என்று நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் எவ்வாறு நம்பிக்கை இழக்க முடியும்? நானே ஒரு மாணவனாய் இருந்திருக்கிறேன். சென்னையில் தான் என்று நினைக்கிறேன். மாணவர்கள் கூட்டத்தில் நான் உரையாற்றத் தொடங்கியபோது, ''சக மாணவர்களே'' என்றுதான் அவர்களை விளித்தேன். ஒரு மாணவன் தனது உரிமைகளைக் காட்டிலும் கடமைகளையே முதலில் எண்ணிப்பார்க்க வேண்டும். மாணவர்கள் பாமர மக்களைப் புரிந்துகொண்டு அவர்களுக்குத் தொண்டாற்ற வேண்டும். உங்களுடைய உண்மையான படிப்பு, கல்லூரிகளையும் பள்ளிகளையும் விட்டு நீங்கள் செல்லும்போதுதான் தொடங்குகிறது. சேவைக்கும் உண்மையான பயிற்சிக்கும் அடிப்படையானது நூல் நூற்பதே.'' இதுதான் மாணவர்களுக்கு அன்று அண்ணல் கூறிய அறிவுரையின் சாரம்.

தொழிலாளர்கள் கூட்டத்தில் சூலை காங்கிரஸ், சென்னை இலக்கிய சங்கம் ஆகியவற்றின் சார்பாக வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப்பெற்றன. அண்ணலின் மறுமொழியை எம். எஸ். சுப்ரமணிய ஐயர் மொழி பெயர்த்தார். மாணவர்களைச் சக மாணவர்கள் என்று அழைத்த காந்திஜி, இங்குத் தொழிலாளர்களை நோக்கி, ''நான் உங்களுடைய சக தொழிலாளி'' என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். தாம் ஏன் தம்மை ஒரு தொழிலாளர் என அழைத்துக் கொள்கிறார் என்பதையும் அவர் விளக்கினர். ''என்னை நூற்போன், நெசவாளி, விவசாயி, தோட்டி என்றெல்லாம் நான் அழைத்துக் கொள்வதில் பெருமை அடைகிறேன். என்னைப் போன்ற ஒரு மனிதன் எந்த அளவு உங்களுடைய வாழ்வு தாழ்வுகளில் பங்குகொள்ள முடியுமோ அந்த அளவு பங்கு கொள்கிறேன். இந்தியாவின் உய்வு உங்களிடம் இருப்பதே இதற்குக் காரணம்,'' என்று அவர் கூறினர்.

சக தொழிலாளி

இதன் பின் தொழிலாளர்களின் குறைகளை வரிசையாகப் பட்டியல் போட்டு அவர் கூறிக் கொண்டு வந்தது, தொழிலாளர்களுடைய அன்றாட வாழ்வை அவர் எவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார் என்பதைக் காட்டிற்று. ''தொழிலாளர்கள் குடிப்பழக்கம் உடையவர்களாய் இருக்கிறீர்கள். பலர் சூதாட்டத்தில் பணத்தை இழக்கிறீர்கள். அண்டை அயலாருடன் சமாதானமாக வாழாது, சண்டை போட்டுக் கொள்கிறீர்கள். ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொள்கிறீர்கள். உங்களுக்குக் கொடுக்கப்படும் வேலைகளை நீங்கள் பல சமயங்களில் நாணயமாகச் செய்வதில்லை. சரியான வழிகாட்டிகளிடம் நீங்கள் செல்வதில்லை. உங்களுக்கு ஏதாவது தவறு இழைக்கப் பெற்றால் பொறுமை இழந்து விடுகிறீர்கள். இம்சையின் மூலம் தவறைப் போக்கிவிடலாம் என்று சில சமயம் எண்ணுகிறீர்கள். பஞ்சம சகோதரர்களை அருவருப்பாக நடத்துகிறீர்கள். உங்களுக்காக இராப் பள்ளிகள் தொடங்கப் பெற்றால் அவைகளுக்கு நீங்கள் செல்வதில்லை. பள்ளிகளுக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்ப மாட்டீர்கள். ஒரு தேசம் என்றால் என்ன என்று உங்களுக்குப் பல சந்தர்ப்பங்களில் புரிவதில்லை; நாட்டிற்காக வாழாமல் உங்களுக்காகவே வாழ்கிறீர்கள். உங்களைக் காட்டிலும் ஏழைகளாய் உள்ளவர்களைப்பற்றி, நீங்கள் எண்ணிப் பார்ப்

தொழிலாளர் குறைகள்

பதில்லை. கதர் அணிவதில்லை.'' இவ்வளவு தெளிவாகத் தொழிலாளர்களின் குறைபாடுகளைப் பற்றி அண்ணல் அறிந்து வைத்திருந்திருக்கிறார்.

24-3-25

மாணவர் இல்லம்

முற்றிலும் கதராடையே அணிந்த மாணவர்களைக் கொண்ட ஒரு மாணவர் இல்லத்தை 1925-ஆம் ஆண்டில் காண முடிந்தால் அது அண்ணலுக்கு எத்துணை அளவிலா மகிழ்ச்சி அளித்திருக்கும்! மறுநாள் அதிகாலையில் அவர் சென்ற ஸ்ரீ இராமகிருஷ்ண மாணவரில்லத்தில் இந்த அதிசயத்தை அவர் காணத்தான் செய்தார். இம்மாணவரில்லத்தின் செயலாளரான ராவ்பகதூர் இராமசாமி ஐயங்கார் அண்ணலையும் அவருடன் வந்தவர்களையும் வரவேற்று இல்லத்தைச் சுற்றிக் காண்பித்தார். மாணவர்களுக்கு அண்ணல் ஆற்றிய உரையில், மாணவர்கள் எல்லோரும் கதர் உடுப்பதாகக் கேள்விப் பட்டதை அறிந்து தாம் மிகவும் மகிழ்ந்ததாகத் தெரிவித்தார். இந்த இல்லத்தில் அண்ணலுக்கு மகிழ்ச்சி அளித்த மற்றொன்று மாணவர்களுக்குக் கைத்தறி நெசவில் பயிற்சி அளிக்கப் பெற்றதாகும். ''வயிற்றுப் பிழைப்பை நாடிக் கையால் நூற்பதைவிட நாட்டின் நன்மைக்காகத் தியாகம் செய்யும் பாவனையுடன் நூல் நூற்க முன் வந்தால் உங்களுக்கும் நன்மை உண்டு, நாடும் நலமடையும்'' என்று அண்ணல் கூறினர்.

கூட்டுறவாளர்

அங்கிருந்து மைலாப்பூர் சமஸ்கிருத கலாசாலைக்குள் சென்று மாணவர் ஒருவர் வடமொழியில் படித்தளித்த வரவேற்புரையை காந்திஜி பெற்றுக் கொண்டார். திருவல்லிக்கேணி பெரிய தெருவில் ''திருவல்லிக்கேணி அர்பன் கூட்டுறவு சங்கத்தின்'' தலைமை அலுவலகத்திற்கு அவர் வந்த போது பண்டகசாலைத் தலைவரான சி. வ. இராமமேனன் ஒரு வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். ''உலகத்திலேயே பெரிய கூட்டுறவு சங்கத்தை நான் நடத்திக் கொண்டிருக்கிறேன் என்பதை இன்று வேண்டுமானால் நீங்கள் ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம்; ஆனால் பின்னால் ஒப்புக் கொள்வீர்கள். உலகில் 30 கோடி மக்களை ஒரு கூட்டுறவு சங்கமாகச் சேர்ப்பதில் நான் ஈடுப்பட்டுள்ளேன். 'ஒவ்வொருவரும் எல்லோருக்குமாக வாழ்வது; எல்லோரும் ஒவ்வொரு

வருக்குமாக வாழ்வது' என்பதுதான் உங்கள் கோட்பாடு. இந்தக் கோட்பாட்டை ஆழமாக நீங்கள் ஆராய்ந்தால், இராட்டையின் செய்தி அதில் புதைந்திருப்பதைக் காண்பீர்கள். ஆகையால் கூட்டுறவாளர்களாகிய உங்களை உலகிலேயே பெரிய இந்தக் கூட்டுறவு சங்கத்தில் சேருமாறு கேட்டுக் கொள்கிறேன்'', என்று காந்திஜி கூறினார்.

இந்தி வித்யாலயம்

அந்தக் காலத்தில் திருவல்லிக்கேணி பெரிய தெருவில் இருந்த இந்திப் பிரச்சார வித்யாலயத்திற்கு அவர் வந்த போது, அங்கு அவர் மனத்திற்குப் பிடிக்காத முறையில் ஆங்கிலத்தில் உரையாற்ற வேண்டியிருந்தது. இந்த வரவேற்பின்போது ஜி. என். இராமசாமி ஐயர், வ. உ. சி., நாகேஸ்வர ராவ் பந்தலு, கே. சந்தானம், கே. பாஷ்யம், பிரகாசம், அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோர் வந்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நல்ல வேளையாக இறுதியில் கே. பாஷ்யம் இந்தியில் நன்றி உரை கூறி மகாத்மாவிற்குச் சற்று ஆறுதல் அளித்தார்.

ஆயுர்வேத வைத்தியம்

மவுண்ட் ரோடில் இருந்த சென்னை ஆயுர்வேத வைத்திய சாலையில் அதன்நிருவாக இயக்குநரான என். இராமாச்சார்லு அண்ணலை வரவேற்று அண்ணலிடம் 25 பவுன் கனை வழங்கினார். பொதுமக்களின் சார்பாக ஆசி கூறிய சேஷாச்சாரியாரின் பேத்தி ஒரு பவுனைக் கொடுத்தபோது, அதைப் பரதேசித் துணியில் போட்டு அளித்திருக்கக் கூடாது என்று அண்ணல் சிரித்துக்கொண்டே சொன்னார். இக் கூட்டத்தில் ஆயுர்வேத வைத்தியம் பற்றி அவர் கூறிய கருத்துக்கள் இன்றும் பொருந்துபவையாக இருக்கின்றன. ''பண்டைக்கால வைத்தியர்கள் ஆராய்ச்சிகள் நடத்துவதற்காக உயிரையே கொடுத்திருக்கிறார்கள். ஒரு சல்லி கூட வாங்காமல் நோய் களைக் குணப்படுத்தியிருக்கிறார்கள். இந்த இரண்டு பாடங்களையும் இன்றைய வைத்தியர்கள் கடைப்பிடிக்க வேண்டும். இன்று ஆயுர்வேத வைத்தியர்கள் பண்டைக்காலப் பெருமையையே மூலதனமாக வைத்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நோயைக் கண்டுபிடிக்கும் முறையே இன்னும் கற்கால முறையாக இருக்கிறது. மேற்கு நாட்டு முறை அளவுக்கு அது வளர்ச்சி பெறவில்லை. மேற்கு நாட்டு முறையில் குறைகள் ஒரு புறம் இருந்தாலும் அடக்கமும் ஆராய்ச்சியும் இருக்கிறது. தீவினைப் பயனை ஆயுர்வேத வைத்தியர்க

லிடையே, மேலே வரவேண்டும், பணம் திரட்ட வேண்டும் என்ற ஆசைதான் மேலோங்கி நிற்கிறது. இந்த மனோபாவத்துடன் ஆயுர்வேதத்திற்குத் தொண்டாற்ற முடியாது...'' இவ்வாறு குறை கூறிக்கொண்டு போனால், இதற்காகத்தானா இவரை வரவேற்றோம் என்று சிலர் எண்ணக் கூடுமல்லவா? ஆகவே வள்ளுவப் பெருந்தகை கூறிய ஒரு கருத்தை வேறு சொற்களில் இங்கு அண்ணல் நினைவுபடுத்தினார். ''என்னை நீங்கள் இங்கு மனமுவந்து அழைத்துள்ளீர்கள். ஆகவே என் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்துள்ள இந்தக் கருத்தை நான் கூறுவிட்டால், நீங்கள் என்னை உண்மையான நண்பனாகக் கொள்ளமாட்டீர்கள்,'' என்று அவர் கூறினார். வள்ளுவப் பெருந்தகையும்,

நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு

[நட்புச் செய்வது இருவரும் சிரித்துப் பொழுதுபோக்குவதற்கு அல்ல. நண்பர் தவறான செயல் செய்யும்போது முற்பட்டு இடித்துரைப்பதற்காகும்] என்றுதானே கூறினார்?

மதுவிலக்குப் பிரசாரகர்

டாக்டர் அன்னிபெசண்ட் தலைமையில் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற மதுவிலக்குப் பிரசாரகர்கள் கூட்டத்தில், மிகவும் உணர்ச்சிப் பெருக்கோடு அவர் மதுவிலக்குப் ஒரு நீண்ட உரையாற்றியபோது, சிறு வயதில் தமது தாயார் மதுவைத் தொடக்கூடாது என உறுதிமொழி வாங்கியதிலிருந்து மதுவிலக்கில் படிப்படியாகத் தமக்குள் வளர்ந்து வந்த ஈடுபாட்டை விளக்கிக்கொண்டு போனார். தென்னாப்பிரிக்காவில் இந்தியர்களிடையே மதுவிலக்குப் பிரச்சாரம் செய்தபோது 'ஐரோப்பியர்கள் மட்டுங் குடிக்கலாம், நாங்கள் குடிக்கக் கூடாதோ?' என்று அவர்கள் கேட்டதாக காந்திஜி கூறிய போது எல்லோரும் 'கொல்' என்று சிரித்துவிட்டனர். ''அபினிலிருந்தும் குடியிலிருந்தும் கிடைக்கும் வருமானத்தை விட்டு விடுமாறு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நம்மால் எடுத்துணர்த்த முடியுமானால் இன்றே நான் அதைச் செய்ய விரும்புகிறேன். இந்த வருமானம் இல்லாது குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கமுடியாது என்றால் அவர்களுடைய கல்வியை நிறுத்திவிடவும் நான் தயாராய் இருக்கிறேன்'' என்று அவர் உறுதியாகக் கூறினார்.

குடிப்பழக்கம் நிறுத்துதல்

ஒருவன் குடிப்பழக்கம் உள்ளவனுய் இருப்பதன் காரணங்களை ஆராய்ந்து அறிந்தாலொழிய அப்பழக்கத்தை வெற்றிகரமாகத் தடுக்க முடியாது என்று டாக்டர் பெசண்ட் தமது தலைமை உரையில் கூறியதை அண்ணல் ஏற்றுக்கொண்டார். பம்பாயில் உள்ள ஏழைத் தொழிலாளிகளுடைய பரிதாப நிலையை விளக்கி அவர்களுடைய நிலையில் இருந்தால் எல்லோரும் குடிக்கத்தான் செய்வார்கள் என்றும் சொன்னர். ''ஆகையால், வெறும் பேச்சின் மூலம் சிலருடைய குடிப் பழக்கத்தை நிறுத்த முடியாது. சென்னையில் உள்ள சேரிகளில் வாழும் அநேக ஆண், பெண்களுக்கு இது எவ்வளவு பெரிய சிக்கல் என்பது தெரியாது. இச்சிக்கலை முழுதுமாக நீங்கள் ஆராய்ந்து பார்த்தால் பெரும் மனக் குழப்பம் அடைந்துவிடுவீர்கள். ஒரு மனிதர் செய்யக்கூடிய காரியமல்ல இது. இந்த இமாலயப் பணியை எல்லோரும் அவரவர் இருக்கும் இடங்களிலிருந்து ஆற்ற வேண்டும்,'' என்று அண்ணல் கூறினர்.

பெண்கள் கல்லூரி

பிற்பகலில் நுங்கம்பாக்கம் மாதர் கிறித்தவர் கல்லூரிக்கு அவர் சென்றிருந்தபோது, கல்லூரி முதல்வரான செல்வி. மாக்டாகல் என்ற ஐரோப்பிய அம்மையார் அவரை வரவேற்றார். பேச்சைத் தொடங்குவதற்கு முன் அக்கூட்டத்தில் கிறித்தவப் பெண்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்பினர் அண்ணல். அநேகமாக எல்லோருமே கையைத் தூக்கினர்கள். படித்த பெண்களை எங்குப் பார்த்தாலும், ''இந்த நவீன பெண்களைக் கொண்டு இந்தியா என்ன செய்யப்போகிறது?' என்ற கேள்விதான் தம் மனத்தில் எழுவதாக அவர் கூறினர். உலகின் பிறபகுதிகளில், எந்த மக்களிடையே மாணவர்கள் வாழப் போகிறார்களோ அந்த மக்களைக் கல்வியாளர்கள் கவனத்தில் கொண்டு கல்வித் திட்டத்தைத் தயாரிப்பார்கள். ஆனால் இந்தியாவில் மாணவர் உலகம் மக்களிடமிருந்து தனித்துப் பிரிக்கப்படுகிறது. வீட்டு வாழ்க்கைக்கும் பள்ளி வாழ்க்கைக்கும் தொடர்பு இருக்கிறதா என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். கிராமங்களுக்கு நீங்கள் கொண்டு செல்லக்கூடிய செய்தி என்ன என்று என்னைக் கேட்டால், இராட்டை என்று கூறுவேன்.''

மணியகாரர் சத்திரத்தின் அருகே அவர் விருப்பத்திற்கு ஏற்றபடி தோட்டிகள் தெலுங்கில் வரவேற்புரை படித்துக் கொடுக்க, காந்திஜி அதற்கு இந்தியில் மறு மொழி கூறினர்! காந்திஜியின் சொற் பொழிவை ஜி. ரங்கைய நாயுடு தெலுங்கில் மொழி பெயர்த்துக் கூறினர். குளித்து, தூய ஆடைகள் அணிந்து சுத்தமாக இருக்கவேண்டிய அவசியத்தை வலியுறுத்தியதுடன், காலையிலும் மாலையிலும் கடவுளை வழிபட வேண்டுமென்றும் தோட்டிகளுக்கு அண்ணல் அறிவுரை கூறினர். இழிவெனக் கருதி, தோட்டித் தொழிலை விட்டுவிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். சௌகார் பேட்டையில் முல்தானிகளும் மார்வாரிகளும் குசராத்திகளும் பணமுடிப்பு ஒன்று அளித்தனர்.

தோட்டிகள் கூட்டம்

இன்று மாலை சீனிவாச ஐயங்கார் அண்ணலுக்கு அளித்த விருந்தில், சென்னை நகரத்தில் தங்கியிருந்த பெரிய மனிதர்கள் மட்டுமல்லாது வெளியூரிலிருந்து இங்கு வந்திருந்தவர்களும் பங்கு கொண்டனர். உதாரணமாக இராமநாதபுரம் மன்னரும் என். கோபாலசாமி ஐயங்காரும் இவ்விருந்திற்கு வந்திருக்கிறார்கள். இச்சமயத்தில் எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் நடைபெற்ற ஒரு சுவையான நிகழ்ச்சியைக் கூறுவது பொருத்தமாயிருக்கும்: ''சீனிவாசய்யங்கார் வீட்டில் (இம்முறை) காந்திஜி தங்கியிருந்த போது அவருக்கு ஜுரமாக இருந்தது. காந்திஜி சாதாரணமாக மருந்து சாப்பிடமாட்டார். உபவாசம் இருக்கப் போவதாகத் தெரிவித்தார். பிறகு அதைத் தொடர்ந்து சரியானபடி ஆகாரம் உட்கொள்ளாமல் இருந்தார். இது சீனிவாசய்யங்காருக்கும் அவரது மனைவியாருக்கும் மிகுந்த வேதனை அளித்தது. ஏதாவது வழிதேடி எப்படியாவது அவரை அதிகமாகச் சாப்பிட வைக்க வேண்டும் என்று அம்மையார் விரும்பினர். அந்த எண்ணத்துடன், பிரசித்தி பெற்ற, வைத்திய நிபுணரான எஸ். ரங்காச்சாரியாரை அழைத்து வந்தார். காந்திஜி செயற்கைப் பல்லை வைத்துக் கொண்டு ரொட்டி சாப்பிட்டுப் பழரசமும் அருந்தினர். அதைப் பார்த்துக் கொண்டே யிருந்தார் டாக்டர் ரங்காச்சாரியார். பிறகு காந்திஜிக்கு அவர் சில யோசனைகளைக் கூறத் தொடங்கினர். 'பாபுஜி! தங்கள் வாழ்க்கைக்கும் வேலைக்கிரமத்திற்கும் தாங்கள் எடுத்துக்

ஐயங்கார் விருந்து

கொள்ளும் ஆகாரம் அதிகம் என்றே கருதுகிறேன். தாங்கள் செயற்கைப் பல் வைத்துக் கொண்டு சாப்பிடுவதால் பழரசம் பிழிந்து பருகுவதைக் காட்டிலும் ஆகாரங்களைச் சுவைத்து உட்கொள்வதே நலம். தவிர்க்க முடியாத சமயத்தில் சாறு பிழிந்து சாப்பிடலாம்' என்றூர் டாக்டர். இதைக் கேட்டதும் அம்மையாரின் மனேநிலே எப்படி இருந்திருக்கும் என்பதை எவரும் ஊகித்துக் கொள்ளலாம். 'காந்திஜி அருந்தும் உணவு மிகக் குறைவாயிருக்கிறது என்று நினைத்து அதை அதிகமாக்கும்படி சிபார்சு செய்ய, குடும்ப டாக்டரை அழைத்து வந்தால் அவர் இம்மாதிரி மோசம் செய்து விட்டாரே! அவர் எனக்கு விரோதியாக அல்லவா வந்து சேர்ந்தார். நினைத்தது ஒன்று, நடந்தது வேறு. இப்படி நடக்கும் என்று முன்னமே எனக்குத் தெரிந்திருந்தால் வேறு எந்த டாக்டரையாவது அழைத்து வந்திருப்பேனே! இந்த இரண்டு பைத்தியங்களும் இப்படி ஒத்துப்போய் விடும் என்றூ நான் கண்டேன்!' என்று அங்கலாய்த்துக் கொண்டார், அந்த அம்மையார். காந்திஜியிடம் அவருக்கு இருந்த ஆழ்ந்த அன்பும் அளவற்ற பக்தி சிரத்தையும் தான் அவரை இவ்விதம் உரிமை பாராட்டிப் பேச வைத்தன! டாக்டர் ரங்காச்சாரியின் ஆலோசனேயும் உணவுக் குறிப்பும் அம்மையாருக்குப் பிடிக்கவில்லேயே தவிர காந்திஜிக்கு மிகவும் பிடித்தமாய் இருந்தன. அம்மையார் தமிழில் சொன்னதைக் கேட்டு மற்றவர்கள் எல்லோரும் கொல்லெனச் சிரித்தனர். அதை காந்தியடிகள் முதலில் கவனிக்கவில்லே. பிறகு மொழி பெயர்த்துச் சொல்லக் கேட்டதும் மற்றவர்களுடன் சேர்ந்து கொண்டு தாமும் சிரித்து விட்டார்!'' *

பெ. நா. பேட்டை

சென்னேயிலிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு முன் கடைசியாக அவர் பங்கு கொண்ட கூட்டம் பெத்து நாயக்கன் பேட்டையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டமாகும். இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த இக்கூட்டத்தில் அண்ணல் மேடைக்குச் செல்வதே பெரும் பாடாகப் போய்விட்டது. இக்கூட்டத்தில் எஸ். வேங்கட சுப்ரமணியம் செட்டியார் காங்கிரஸ் சபாவின் வரவேற் புரையை மகாத்மாவிடம் படித்துக் கொடுத்தார். கூட்டங்களில் ஆயிரக்கணக்கில் கூடிவிட்டால் மட்டும் போதாது என்றும், அங்குக் கூறப்படுவனவற்றைச் செயலில் செய்து

* ''காந்தி காட்டிய வழி''

காட்ட வேண்டுமென்றும் அண்ணல் கூறினார். ஒவ்வொரு வரும் ஆண்டவனை வழிபட வேண்டும் என்றும் யாருக்கும் தீங்கு நினைக்கக் கூடாதென்றும் அவ்வாறு நடந்து கொண்டால் நாம் எதிர்பார்ப்பதைக் காட்டிலும் விரைவில் விடுதலை வந்து விடுமென்றும் அவர் சொன்னார். இந்தக் கூட்டத்தைத் தொடங்கியபோது ஒரே பேரிரைச்சலாக இருந்தது. ஆகையால், முழக்கங்கள் போடுவதைக் குறித்து அண்ணல் அறிவுரை கூறினார்: ''நீங்கள் ஏதாவது முழக்கங்களைக் கூறுவதாக இருந்தால் இசை நயத்தோடு அதைக் கூறவேண்டும். கண்டபோதெல்லாம் முழக்கங்களைச் சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், அதுவும் தலைவர் சொல்லும் போது திருப்பிச் சொல்ல வேண்டும். நாம் இந்நாட்டின் விடுதலைப் போராட்ட வீரர்களாக இருக்க விரும்பினால், போர் வீரர்கள் எவ்வாறு செய்வார்களோ அவ்வாறுதான் செய்ய வேண்டும். ஆயிரக்கணக்கான பேர் கூடியிருந்தாலும் வசதிக்குறைவோ இரைச்சலோ இல்லாது பங்கு கொள்ளக் கூடியவாறு நாம் கூட்டங்கள் நடத்த வேண்டும்.'' என்று அண்ணல் கூறினார். இங்கு காந்திஜியின் பேச்சை எம். எஸ். சுப்ரமணிய ஐயர் மொழி பெயர்த்தார். இந்தக் கூட்டத்திலிருந்து அவர் நேரடியாக இரயில் நிலையத்திற்குச் சென்றுவிட்டார். மூன்று மாதங்களுக்குள் மறுபடியும் இங்கு வரத் தாம் விரும்புவதாக இக்கூட்டத்திலேயே அவர் அறிவித்தாரென்றாலும், அவரால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்புதான் வரமுடிந்தது.

இந்தச் சுற்றுப் பயணத்தின்போது சென்னை மாநகரில் நடைபெற்ற ருசிகரமான நிகழ்ச்சியைப் பின்னர் (30-4-25) ''யங் இந்தியா''வில் அண்ணல் எழுதியிருக்கிறார். மக்கள் அளவு கடந்த உற்சாகத்தில் தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாது செய்வதற்கு ஓர் உதாரணமாக அவர் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டிருக்கிறார். ''சென்னையில் சீனிவாச ஐயங்காரும் நானும் ஒரு கூட்டத்தில் பங்கு கொண்டோம். மக்கள் ஒரே உணர்ச்சிப் பிழம்பாக இருந்தார்கள். மற்றொரு கூட்டத்திற்கு நேரத்தில் போய்ச் சேருவதற்காக நாங்கள் காரில் போய்க் கொண்டிருந்தோம். ஆனால் என் 'பக்தர்கள்' ஏற்கனவே நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்படாத ஒரு தெருவின் வழியாக என்னை அழைத்துக்கொண்டு போய்க் காட்ட விரும்பினார்கள். நேரம் இல்லை என்று நான் அவர்

காந்திஜியை கடத்தினர்

களிடம் வேண்டினேன், அவரும் வேண்டினார். என்னுடைய உடல் நிலையையும் ஐயங்கார் எடுத்துக் கூறினார். ஆனால் ஒரு பயனும் இல்லை. எங்களை அவர்கள் மோட்டாரில் கொண்டுபோய்விட்டார்கள் - கட்டாயமாகக் கொண்டு போனார்கள் என்றே கூறவேண்டும். இவர்களால் நமது குறிக்கோளுக்குப் பயன் இல்லை, அதற்கு மாறுகத் தொந்தரவுதான் என்று நாங்கள் இருவருமே மனமார உணர்ந்தோம். ஆனால் நான் நேரடியாக இடைவழியில் 'லகானைப் பிடித்து', அந்தக் காரில் செல்லமுடியாது என்று கீழே இறங்கி, அந்தக் கூட்டம் விரும்பினால் என்னைத் தூக்கிச் செல்லலாம் என்று கூறியபோதுதான் நிலைமை சீரடைந்தது. மக்கள் எண்ணிக்கை கூடும்போதுள்ள அபாயத்திற்கு இது ஒரு தெளிவான சான்று. இத்தகைய சான்றுகளை எத்தனையோ நான் கூறலாம். நல்லெண்ணம் படைத்த பலர் அறியாதவர்களாகவும் யோசனை இல்லாதவர்களாகவும் இருக்கிறார்கள்.'' (இந்த நிகழ்ச்சி என்று, எந்தத் தெருவில் நடைபெற்றது, தெருவை மாற்றுவதற்குக் காரணமாய் இருந்தவர்கள் யார் என்பதெல்லாம் தெரியவில்லை.)

இரயில் பெட்டியில்

இராம்தாஸ் காந்தி ஆகியோருடன் அண்ணல் பம்பாய் மெயிலில் பம்பாய்க்குப் புறப்பட்டுச் சென்றார். இரயில் நிலையத்தில் கூட்டம் அதிகமாக இருந்ததால், மகாத்மா நேராகத் தமது பெட்டிக்குள் போய் உட்கார்ந்து கொண்டார். ஆகவே இரயில் நிலையத்திற்கு வந்தவர்கள் அவரைக் காணமுடியாமல் போய்விடுமோ என்று கவலை அடைந்தனர். ஒரு மாற்று ஏற்பாடாக, ஒவ்வொருவராய் அவர் அமர்ந்திருக்கும் இரயில் பெட்டிக்குள் சென்று பார்த்துச் செல்ல அனுமதித்தார்கள். மாலைகளுடன் வந்திருந்த எராளமான முஸ்லிம்கள் உள்ளே போய் மாலை அணிவித்தபோது, அவர்களுடைய மாலைகளைக் காட்டிலும் அவர்கள் அணிந்திருந்த அந்திய ஆடைகள் தாம் காந்திஜியின் கவனத்தை ஈர்த்தன. ''நீங்கள் கதர் போடக்கூடாதா?'' என்று வருத்தத்தோடு அவர் கேட்டார். போனவர்களால் என்ன மறுமொழி கூற முடியும்? இரயில் பம்பாயை நோக்கிப் புறப்பட்டபோது 'வந்தே மோதரம்,' 'மகாத்மா காந்திக்கு ஜே' என்ற முழக்கத்தில் இரயில் ஊதியதுகூடக் கேட்கவில்லை. வந்திருந்தவர்களெல்லாம் ஏக்கத்தோடு பார்த்து நின்று கொண்டிருந்தனர்.

இந்தச் சுற்றுப் பயணத்தில் அண்ணல் வலியுறுத்தியது என்ன என்பதை ''சுதேசமித்திரன்'' அழகாகவும் சுருக்கமாகவும் குறிப்பிட்டிருந்தது. ''இந்தச் சமயத்தில் வெகு அழுத்தமாகவும் உருக்கமாகவும் அவர் வற்புறுத்தும் திட்டம் கதர் இயக்கமே எனலாம். நிர்மாண வேலையின் மற்ற திட்டங்களான சமூக ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு ஆகியவைகளையும் மகாத்மா பெரிதும் வற்புறுத்துகிறார். நமது நாட்டாரை இப்பொழுதும் பெரிதும் வாட்டுவது கொடிய வறுமையே. வறுமைப் பேய் வாயிலிருந்து விடுதலை பெறுவது முதலாவதாகக் கவனிக்கப்பட வேண்டிய காரியம் என்பது அவர் கருத்து. சமூக ஒற்றுமையும் பொருளாதார நிலைமையில் விடுதலையும் ஏற்பட்டுவிடில் அதுவே சுயராஜ்யத்திற்கு அஸ்திவாரம் என்று அவர் சொல்வதை யாவரும் ஏற்றுக்கொள்வார்கள். பொருளாதார நிலைமையில் விடுதலை ஏற்படுவதற்குக் கதர் இயக்கமே கருவியாகும்.''

சொன்னது என்ன ?

1925-இல் தமிழகத்தில் கதர் இயக்கம் அவ்வளவு ஆழமாக வேரூன்றியிருக்கவில்லை. என்பதைத் தமிழக அரசியலில் பொறுப்பு வகித்தவர்கள் உணர்ந்திருந்தார்கள். அண்ணல் சுற்றுப்பயணத்தைக் குறித்து ''சுதேசமித்திரன்'' தீட்டியிருந்த தலையங்கத்தில் அது முடிவாகக் கூறியிருந்த சில கருத்துக்களே அக்காலத் தமிழக அரசியல் தலைவர்களின் கருத்தும் என்று கூறலாம். 'சுதேசமித்திரன்' கூறியது: ''தமிழ் நாட்டாருக்கு மகாத்மாவிடம் மிகுந்த அன்பும் கதரணிவதில் பிரியமும் இருக்கிறது என்பதை நாம் அறிவோம். ஆயினும் நமது நாட்டில் கதரியக்கம் எவ்வளவு தூரம் பரவிப் பலம் பெறலாமோ அவ்வளவு தூரம் பலம் பெறவில்லை என்பதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகவே இருக்கிறது. மூன்று மாதத்திற்குள் மகாத்மா காந்தி மீண்டும் தமிழ் நாட்டிற்கு வருவதாகச் சொல்லிப் போயிருப்பதைப் பற்றிச் சந்தோஷம் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் அந்த மூன்று மாதத்திற்குள் தமிழ் நாடு எங்கும் கதராடைமயமாக இருக்கும்படி செய்வதற்கான முயற்சிகளை யாவரும் செய்வார்கள் என்று நம்புகிறோம்.'' ஆம், சுற்றுப் பயணத்தின் இறுதியில் தமிழகம் கச்சை கட்டிக் கதருக்காகப் பணியாற்றத் தொடங்கிவிட்டது உண்மையே. 1921-இல் அவர் தமிழகம் வந்திருந்தபோது கதரில் தமிழகம் கொண்

படிப்படியாக

டிருந்த ஈடுபாடு போதாது என்று மனம் வருந்தினர். 1925-இல் அவர் தமிழகத்தின் மீது குறைப்பட்டுக் கொள்ள வில்லை என்றாலும் பெரிய பாராட்டு எதையும் (திருப்பூர் ஒன்றிற்குத் தவிர) சூட்டிவிடவில்லை. ஆகவே கதரில் ஈடு பட்ட அன்பர்கள் முழு மூச்சாக இறங்கி அப்பணியில் ஈடு பட்டார்கள். இதற்குப் பின்பு 1927-இல் கதருக்காகவே ஒரு தனி யாத்திரையை மேற்கொண்டு காந்திஜி தமிழகத் திற்கு வந்தார். அதற்கிடையில் இரண்டு முக்கியமான வர லாறுகளை நாம் பார்க்க வேண்டும்.

தொடக்கம்

பண்டைக்கால குருகுல முறையில் தமிழகச் சிறுர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுத்து, அவர்களே நாட்டுப் பற்று உடையவர்களாக உருவாக்க வேண்டும் என்ற வ. வெ. சு. ஐயரின் சீரிய எண்ணத்தின் காரணமாக ''பரத்வாஜ ஆஷ்ரமம்'' என்ற பெயரில் உருவானது தான் சேர்மாதேவி குருகுலம். ஐயர் திருநெல்வேலி மாவட்டத்தில் சேர்மாதேவிக்கு அருகில் ஓர் இடத்தை விலைக்கு வாங்கி அதில் இக் குருகுலத்தைத் தோற்றுவித்தார். அந்தக் காலத்தில் இவ்வாறு தேசியவாதிகள் கல்வி நிலையங்களைத் தோற்றுவிப்பதற்குப் பொது மக்களிடையே நல்ல ஆதரவு இருந்தது. அதிலும் வ. வெ. சு. ஐயரைப் போன்ற புகழ்பெற்ற தேசியவாதி இந்தக் குருகுலத்தைத் தொடங்க முன் வந்ததால், மக்களுடைய ஆதரவு வழக்கத்திற்கும் அதிகமாகவே இருந்தது. தமிழ்நாடு காங்கிரஸ் குழு தனது தேசியக் கல்வி நிதியிலிருந்து பத்தாயிரம் ரூபாய் அளிப்பதாகத் தீர்மானித்து ஐயாயிரம் ரூபாயும் கொடுத்துவிட்டது. தமிழ்நாட்டில் செல்வந்தர்களாகவும், இத்தகைய பணிகளில் அக்கறை உடையவர்களாகவும் இருந்த நகரத்தார்களும் தாராளமாக நிதி உதவி அளித்தார்கள்.

மகாதேவ ஐயர்

இப்பணியில் வ. வெ. சு. ஐயரின் வலக்கரமாக இருந்து அவருக்கு வேண்டிய உதவிகள் புரிந்து வந்தவர் வழக்கறிஞரும் தேச பக்தருமான திருநெல்வேலி மகாதேவ ஐயர் ஆவார். இவர் தேசியப் போராட்டங்களில் ஈடுப்பட்டுப் பல முறை சிறை சென்றவர். ஆயினும் இவருக்குச் சனாதன முறைகளில் முழு நம்பிக்கை உண்டு. குருகுலத்திற்கு நிதி திரட்டுவதற்காக இவர் மலேயா சென்று, அப்போது அங்குத் தொழில் நடத்தி வந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த நகரத்தார்களிடம் இருபதாயிரம் ரூபாய்க்கு மேல் வசூல் செய்தார். ஆயினும் அப்பணத்தைத் தாமே கொண்டு வராமல், அவர்

களிடமே ஒப்படைத்து, பின்னல் அனுப்புமாறு கூறிவிட்டு வந்தார்.

இவ்வாறு குருகுலம் நன்கு வளர்ச்சியடைந்து கொண்டு வந்தபோதுதான் அதில் ஒரு சிக்கல் வந்தது. சிக்கல் என்றால் சாதாரணச் சிக்கல் அல்ல; தமிழ் நாட்டையே உலுப்பிய பெரிய சிக்கல். மகாத்மா காந்தியால் கூடத் தீர்க்க முடியாத சிக்கல் என்றால் அந்தச் சிக்கலின் கடுமையை நாம் ஓரளவு உணர முடிகிறது. அந்தக் குருகுலத்தில் தங்கிப் படித்த மாணவர்கள் சுமார் இருபது பேர்; இவர்களில் கைவிரல் விட்டு எண்ணக்கூடிய சொற்பப் பேர் பிராமணர்கள். இவர்கள் மற்ற வகுப்பைச் சேர்ந்த பையன்களுடன் சேர்ந்து பந்தியில் உட்காருவதில்லை. இவர்களுக்குத் தனி இடத்தில் தனியாக உணவு பரிமாறப் பெற்றது. வேறு எந்த மாணவர் விடுதியிலாவது இப்படி (அந்தக் காலத்தில்) நடந்திருந்தால் அதைத் தமிழகமக்கள் பொருட்படுத்தியிருக்க மாட்டார்கள். ஆனால் ஒரு தேசிய குருகுலத்தில், அதுவும் வ. வெ. சு. ஐயரைப் போன்ற ஒரு தேசபக்தர் நடத்திய குருகுலத்தில், இப்படி நடந்தது தமிழக மக்களுக்கு மிகவும் வருத்தத்தையும் வியப்பையும் அளித்தது. டாக்டர் வரதராஜுலு நாயுடு எதிர்க்கொடி பிடித்தார். திரு வி. கல்யாணசுந்தர முதலியார், பெரியார் ஈ. வே. இராமசாமி போன்ற தலைவர்களெல்லாம் அதை ஆதரித்தார்கள். இவர்கள் சொன்னார்கள்:

எதிர்ப்பு

1. ஐயர் தம் விருப்பப்படி தாம் தொடங்கிய குருகுலத்தை நடத்த உரிமை உண்டு. ஆனால் அவர் குருகுலத்திற்காக நிதி திரட்டிய போதே அவ் விருப்பத்தைத் தெளிவாக வெளியிட்டிருக்க வேண்டும். இப்போது, பெற்றோர் விருப்பப்படி பிராமணக் குழந்தைகளுக்குத் தனி இடத்தில் உணவு பரிமாறப்படுவதாகக் கூறுவது நியாயமல்ல.

2. அப்பெற்றோர் விருப்பப்படி நடத்துவதற்காகக் குருகுலத்தைத் தோற்றுவித்தாரா? அல்லது, ஓர் உயர்ந்த குறிக்கோளுக்காகத் தோற்றுவித்தாரா?

3. தெய்வத்திற்குச் சமமான பச்சிளங் குழந்தைகளிடையே சாதி வேற்றுமை உணர்வை வளர்க்கும் ஓர் ஆசிரமம், பொது மக்களின் உதவியைப் பெறத் தக்கதல்ல.

டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் போன்ற பிராமணர்கள் கூட, 'உணவுப் பந்தியில் சிலர் மட்டும் தனித்து உண்ணுவது சரியல்ல' என்று ஐயரிடம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் ஐயர் இந்தக் கோரிக்கைகளுக்கெல்லாம் உடன்படவில்லை. கட்டாயப் படுத்திச் சமபந்தியில் பிள்ளைகளை உட்கார வைக்க முடியாது எனக் கூறிவிட்டார். கடைசியில் இந்தச் சிக்கல் மகாத்மா காந்தியிடம் வந்தது. 1925-இல் மகாத்மா வைக்கத்திற்கு வந்தபோது, வ. வெ. சு. ஐயர் அங்குச் சென்று அவரைச் சந்தித்துப் பேசினார்.

காந்தியிடம்

காந்திஜி தென்னப்பிரிக்காவிலிருந்து இலண்டனுக்குச் சென்றிருந்தபோது அதாவது 1909 ஆம் ஆண்டிலேயே வ. வே. சு. ஐயர் காந்திஜியை அறிவார். அப்போது டாக்டர் ராஜனும் வ.வெ.சு. ஐயரும் சாவர்க்காரும் மற்றும் அவர்களது சகாக்களும் காந்திஜிக்கு ஒரு விருந்து நடத்தியதும், அந்த விருந்திற்குத் தலைமை விருந்தினராக வந்திருந்த காந்திஜி, தாம் யாரென்று தெரிவிக்காமல் தண்ணீர் எடுப்பது, பாத்திரம் தேய்ப்பது, கறிகாய் நறுக்குவது போன்ற எடுபிடி வேலைகளையெல்லாம் செய்து உதவியதும், பின்னர் அவர் தாம் காந்திஜி என்று தெரிந்து எல்லோரும் வியப்படைந்ததும் உலகம் அறிந்த வரலாறு ஆகும். அப்போது காந்திஜியை, அவர் இருப்பிடத்திற்கு வ.வெ.சு. ஐயரும் சாவர்க்காரும் தொடர்ந்து மூன்று நாட்கள் சென்று, பல கேள்விகள் கேட்டதாகவும் அவைகளுக்கு காந்திஜி தகுந்த முறையில் பதில் அளித்ததாகவும் இவர்கள் கேட்ட கேள்விகளும் அண்ணல் அளித்த பதிலுமே ''ஹிந்த் சுயராஜ்'' என்ற தலைப்பில் அண்ணல் எழுதிய வரலாற்று முக்கியத்துவம் உள்ள நூலுக்கு மூல வித்து என்றும் டாக்டர் ராஜன் கூறுகிறார்.

நீண்டகாலம் தெரியும்

உடன் உண்ணல் பற்றிய சிக்கலை வைக்கத்திற்குச் சென்று மகாத்மாவிடம் ஐயர் கிளப்பியதே பிராமணரல்லாதார் தரப்பினருக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. ''நவ சக்தி''யில் திரு. வி. க. இதை வெளிப்படையாகத் தெரிவித்தார். ''சேர்மா தேவி தமிழ்க் குருகுலத்தில் உடன் உண்ணலைப்பற்றி எழுந்த விவகாரத்தை மகாத்மாவின் முன்

பிடிக்கவில்லை

கிளத்தி ஒரு முடிவு காண ஸ்ரீமான் வ.வே.சு. ஐயர் வைக்கத்திற்குச் சென்றதே எமக்குப் பிடிக்கவில்லை. உடன் உண்ணலைப் பற்றி மகாத்மாவின் விருப்பம் யாருக்குத் தெரியாது? தமிழ்க்குருகுலம் பல கொள்கை உடையார் உதவி கொண்டு நடைபெறுவது. பொருள் திரட்டு முன்னர் ஸ்ரீமான் ஐயர் உடன் உண்ணலைப் பற்றி ஒன்றுங் கூறவேயில்லை. பின்னர் உடன் உண்ணல் பெற்றோர் விருப்பப்படி என்னும் விதி முனைத்தது. அதற்குப் பின் எல்லோர்க்கும் பூணூல் தரித்து சமபந்தி போஜனம் அனுஷ்டிப்பதாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது மகாத்மாவின் விருப்பப்படி என்று சொல்லப்படுகிறது. எல்லாவற்றிலும் மகாத்மாவின் விருப்பப்படி என்று கூறலாமன்றே? மகாத்மா சட்டசபை பகிஷ்காரத்துக்கு மாறுபட்ட கருத்தை ஸ்ரீமான் ஐயர் தெரிவிக்கவில்லையோ?'' என்று ''நவசக்தி''யில் திரு. வி. க. கேட்டிருந்தார். சைபுல் இஸ்லாம், திராவிடன், தமிழ்நாடு ஆகிய இதழ்களும் பிராமணரல்லாதார் தரப்பை ஆதரித்து எழுதின.

ஐயரும் காந்தியும்

வைக்கம் சென்ற ஐயரிடம் காந்திஜி ஒன்றும் விவரமாகப் பேசவில்லை. அவருடைய கடிதத்திற்கு மறு மொழியாக மூன்று வரி சுருக்கமாக எழுதியிருந்தார். டாக்டர் வரதராஜுலு நாயுடு வந்தபின் இரண்டு தரப்பினரையும் வைத்து விவரமாகப் பேசினால்தான் நியாயம் தெரியும் என்று காந்திஜி எண்ணினார். ஆனாலும் ஐயரிடம் காந்திஜி என்னென்னவோ சொன்னதாக நாளிதழ்களில் செய்திகள் வெளி வந்துவிட்டன. இதன் பின்னர் டாக்டர் வரதராஜுலு நாயுடு வைக்கத்திற்குச் சென்று, அண்ணலைச் சந்தித்தபோது, இச்சிக்கலில் தமது கருத்துக்கள் என்னவென்பதை அண்ணல் வரதராஜுலு நாயுடுவிற்கு (அன்று மௌன தினமாகையால் ஒரு சீட்டில் எழுதி)த் தெரிவித்தார். அவர் கூறிய கருத்துக்களாவன: (1) தற்போது (குருகுலத்தில்) உள்ள பிரம்மச்சாரிகளைப் பொறுத்தவரை, அவர்களுடைய பெற்றோர்கள் அவர்கள் தனியாக உண்ண வேண்டும் என்று வலியுறுத்தினால் அவர்களுடைய மனை உணர்ச்சியை மதிக்க வேண்டும். (2) எதிர்காலத்தைப் பொருத்தவரை யாருடைய பெற்றோர்கள் மற்றவர்களுடன் சேர்ந்து ஒரே பந்தியில் உண்ண அனுமதிக்க மாட்டார்களோ அந்தப் பிரம்மச்சாரிகளை அனுமதிக்கக் கூடாது. (3) உங்களிடம் பேசியதிலிருந்து குரு

குலத்தில் உள்ள சமையல்காரர் எப்போதுமே பிராமணராக இருக்கவேண்டும் என்பதை நீங்கள் ஒப்புக்கொண்டதாகவே தோன்றுகிறது. (4) பிரமாணரல்லாதாரிலிருந்து பிராமணர்களைத் தனியாகப் பிரித்து வைப்பதைத் தான் நீங்கள் எதிர்க்கிறீர்கள். இது சரியே.

இரகசியக் கூட்டம்

சென்னைக்கு வந்தபின் இச் சிக்கலுக்கு ஒரு தீர்வு காண (பங்குனி மாதம் 11-ஆம் தேதி) அண்ணல் முக்கிய பெரிய மனிதர்களின் கூட்டம் ஒன்றைக் கூட்டினர். அந்தக் கூட்டம் இரகசியமாக நடைபெற்றது. என்றாலும், பின்னால் பத்திரிக்கைகளில் வெளி வந்த செய்திகளைப் பார்க்கும்போதும் வ.வெ.சு. ஐயர் கூறியபடியும் காந்திஜி, '1. குருகுலவாசம் செய்யும் பிரம்மச்சாரிகள் ஒரே பந்தியில் உட்காரவேண்டும், 2. குருகுலத்தில் பிராமணரே சமைக்க வேண்டும், 3. விசேட சந்தர்ப்பங்களில் வெளியில் வசித்துவரும் மாணவர்களைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்துக் கொள்ளலாம்' என்ற முடிவுகளைச் சொன்னர் என்று தெரிகிறது. இந்த யோசனைகளுக்கு ஐயர் இணங்கினர். ஆனால் நாயுடுவும் அவரை ஆதரித்தவர்களும் பிராமணரே சமையல் செய்ய வேண்டும் என்ற பிரிவை எதிர்த்தார்கள். இதனால் இம்முறை குருகுலத்தைப் பற்றிய சமரச முயற்சி வெற்றிபெறவில்லை.

நகரத்தார் முடிவு

இதற்கிடையில் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவில் இருந்த பிராமணரல்லாதார், தமிழ்நாடு காங்கிரஸ் குழு வ. வெ. சு. ஐயரின் செயலைக் கண்டிக்க வேண்டும் என்றும் ஐயர் அதனிடம் பெற்ற தொகையைத் திருப்பிப் பெறவேண்டும் என்றும் கோரினர்கள். மலேயாவில் ஈப்போ என்னுமிடத்தில் நகரத்தார்கள் கூடி சமபந்தி முறை செயலாகாவிட்டால் அங்கு வசூலான தொகையைக் குருகுலத்திற்கு அனுப்புவதில்லை என்று முடிவு செய்துவிட்டார்கள். ஐயரும் தமது பிடியைத் தளர்த்துவதாய் இல்லை. இவ்வாறு இரு தரப்பினரும் பிடிவாதமாய் இருந்ததால் சிக்கல் தீராமலேயே இருந்தது. இந்நிலையில் ஐயர் காலமாகிவிட்டார். குருகுலம் தோன்றிய 1922-ல்; இந்தச் சிக்கல் 1924-இல் தோன்றியது; நீர்வீழ்ச்சியில் ஐயர் உயிர்துறந்தது 1925-இல். ஐயரின் காலத்திற்குப் பின் குருகுலத்தின் பொறுப்பை மகாதேவ ஐயர் ஏற்று நடத்தினர். அவரால் அது இயலவில்லை; ஆசிரமம்

நடைபெறவில்லை. ஆனாலும் அதன் பொறுப்பை யாரிடமும் அளிக்க அவர் தயாராய் இல்லை.

ஐயருக்குப் பாராட்டு

1925-இல் வ. வெ. சு. ஐயர் காலமானபோது காந்திஜி ''யங் இந்தியா''வில் இரங்கல் தெரிவித்து எழுதினார்: ''திரு. வ. வெ. சு. ஐயர் நீரில் மூழ்கி இறந்ததை அறிய என்னைப்போன்றே 'யங் இந்தியா' வாசகர்களும் வருந்துவார்கள். பல ஆண்டுகளுக்குமுன் இலண்டனில் அவரை நான் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவர் ஒரு பெரிய புரட்சிவாதியாக இருந்தார். ஆனாலும் படிப்படியாக அவருடைய தீவிர வாதம் குறைந்தது. ஆனாலும் தேசபக்தியின் ஜ்வாலை எப்போதும் கொழுந்துவிட்டெரிந்து கொண்டுதான் இருந்தது. அவர் ஓர் உறுதியான, ஒத்துழையாமை இயக்கவாதி. கடைசியாக அவர் சேர்மாதேவி குருகுலத்திற்கே தம்மை முழுதும் அர்ப்பணித்து விட்டார். எப்போதுமே அவரை ஒரு சிறந்த, உண்மையான, முயற்சியுள்ள தேச சேவகராகவே கருதி மதித்திருக்கிறேன். அவருடைய ஆன்மா சாந்தியடையுமாக.''

நிர்வாகக் குழு

வ. வெ. சு. ஐயர் காலமானபின், குருகுலத்தின் பொறுப்பை ஏற்க அதற்கு நிதி உதவி செய்த நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் ஒரு குழுவை அமைத்தனர். நிதி உதவி அளித்த தங்களுக்குத் தான் அதை நிருவகிக்கும் உரிமை இருக்கிறது என்று அவர்கள் கருதினார்கள். ஆனால் வ. வெ. சு ஐயரின் உதவியாளராக இருந்த டி. ஆர். மகாதேவ ஐயரோ தமக்கே அந்த உரிமை இருப்பதாகச் சொன்னார். இத்தகராறு சம்பந்தமாக காந்திஜியைச் சந்திக்க 1927-ஜூலையில் இவர் பெங்களூர் சென்று தமது தரப்பையும் எடுத்துக்கூறினார். ஆனால் காந்திஜி இவருக்கு அனுப்பிய மறுமொழியில் நிருவாகக் குழு என்று தம்மை அறிவித்துக் கொண்டிருப்பவர்களிடம் குருகுலத்தின் சொத்துக்களை ஒப்படைத்துவிடவேண்டும் என்று கூறிவிட்டார். பின்னர் டாக்டர் வரதராஜுலு நாயுடு பெங்களூருக்கு வந்து காந்திஜியைச் சந்தித்தார். இதன் பேரில் மத்தியஸ்தம் எதைப் பற்றியும் யோசியாது, குருகுலத்தின் சொத்துக்களை நிருவாகக் குழுவிடம் உடனடியாக ஐயர் ஒப்படைத்து விடுவதே சிறந்தது என்று காந்திஜி அவருக்கு எழுதிவிட்டார். ஆனால் மகாதேவ ஐயர் அவ்வாறு செய்யவில்லை. அந்தச் சமயத்தில் கதர்ச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு தமிழகத்திற்கு காந்திஜி வந்தார்.

புண்ணியர்கள் மனமாரப் போற்றுகின்ற கதரே
பொன்னுலகத் தேவர்களும் புகழ்கின்ற கதரே
மன்னவர்கள் மாண்பாக மதிக்கின்ற கதரே
மாதவத்தோர் வாயார வாழ்த்துகின்ற கதரே
கன்னியர்கள் காதலித்துக் கைகுவிக்குங் கதரே
கற்றவர்கள் கவலைகளைக் கடிகின்ற கதரே
எண்ணியவெண் ணங்களெல்லா மீடேற்றுங் கதரே
இந்தியரே யின்பமுட னணிந்து கொள்ளு வீரே.

—பாரத் வாஜி
முகவைக் கண்ண முருகனர்.

அந்தக் காலம்

உலகெலாம் தமிழகத் துணிகள் ஏற்றுமதியாகி, பெருமையோடு அணியப் பெற்று வந்த காலம் ஒன்று இருந்தது. இயந்திரங்கள் இல்லாது கையால் நூல் நூற்றுத் துணி நெய்யப்பெற்று வந்த காலம் அது. தமிழகத்தில் கையால் நூற்பது, நெய்வது ஆகிய தொழில்கள் நசித்ததற்கு பிரிட்டனுடைய ஆட்சியைக் காட்டிலும் அங்கு ஏற்பட்ட தொழிற் புரட்சி தான் முக்கிய காரணம். பதினாறு, பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளிலெல்லாம் தமிழகத் துணிகள் கப்பல் கப்பலாக இங்கிலாந்திற்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் பெற்று வந்தன. கிழக்கு இந்தியக் கம்பெனி தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் நெசவாளர் குடியிருப்புக்கள் (காலனிகள்) அமைத்து, இங்குத் துணிகளை உற்பத்தி செய்து, பிரிட்டனுக்கு அனுப்பி வந்தது. உயர்ந்த வகைத் துணிகளை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்து கொடுக்குமாறு சென்னை, கடலூர், மசூலிப்பட்டினம், காஞ்சிபுரம், மதுரை, சேலம் முதலிய நகரங்களைச் சேர்ந்த வணிகர்களுக்கு முன் பணம் அளித்தும் உதவியது. இவ்வாறு தமிழகத் துணிகளுக்கும் இந்தியாவின் பிற பகுதிகளிலிருந்து வந்த துணிகளுக்கும் பிரிட்டனில் வரவேற்பு அதிகமாகி அவைகளையே மக்கள் அணியத் தொடங்கி விடவே, பதி

னெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரிட்டன் நெசவுத் தொழில் நசிக்காமல் இருப்பதற்காகச் சிலவகை இந்தியத் துணிகளை மக்கள் பயன்படுத்தக் கூடாது என்று அப்போதிருந்த பிரிட்டன் அரசு சட்டம் இயற்றியது. இவ்வாறு இந்தியத் துணிகளுக்கு மக்களிடையே நிறைய கிராக்கியும் வரவேற்பும் இருந்த பிரிட்டனில் சில ஆண்டுகள் கழித்து நிலைமை திடீரெனத் தலைகீழாக மாறியது. இதற்குக் காரணம் பிரிட்டனில் தொழிற் புரட்சியின் காரணமாகத் துணி ஆலைகள் நிறையத் தோன்றியதே. ஆலைகள் உற்பத்தி செய்த துணிகளுக்குச் சந்தை காணவும் அவைகளுக்குத் தேவையான அளவு மூலப் பொருளாகிய பருத்தியைப் பெறவும் இந்தியாவில் நூற்புத் தொழிலும், நெசவுத் தொழிலும் பல்வேறு கொடுமையான நடவடிக்கைகளின் மூலம் சாகடிக்கப் பெற்றன. இந்தியாவின் ஒரு பகுதியான தமிழக நூற்பு, நெசவுத் தொழிலுக்கு மட்டும் இதில் விதிவிலக்கு இருக்க முடியுமா?

பேரரசன்

இவ்வாறு இந்தியா முழுவதிலும் கையால் நூற்று கையால் நெய்து வந்த தொழில் மடிந்ததால் மக்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை மகாத்மா நன்கு உணர்ந்தார். ஆகவே மக்களுடைய வறுமை நீங்க வேண்டுமானால் மறுபடியும் இத்தொழிலுக்குப் புத்துயிரூட்ட வேண்டும் என்பதன் அவசியத்தை அவர் கண்டார். காந்திஜி வகுத்த நிர்மாணத் திட்டங்கள் என்னும் பேரரசில் கதர் தான் பேரரசன். அவைகளை ஒரு குடும்பமாகக் கற்பனை செய்தாலோ அதுதான் மூத்த அண்ணன்.

விரும்பிய பதவி

கதரின் மீது அவருக்கு இருந்த தனிப்பற்று உலகமே அறிந்ததுதான். தம்முடைய பிறந்த நாளைச் சர்க்கா நாளாகக் கொண்டாடுமாறு அவர் மக்களை வேண்டிக் கொண்டார். இந்திய தேசியக் காங்கிரசின் தலைவர் பதவியை அவர் ஏற்க வேண்டுமெனத் தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கு அவர் முதலில் மறுத்து விட்டார். ஆனால் மீண்டும் மீண்டும் அவர்கள் வலியுறுத்தவே, ''ஒரு முறை வேண்டுமானால் நான் இப்பதவியை ஏற்கிறேன். ஆனால் அதற்கு அடுத்த ஆண்டிலும் அப்பதவியில் நீடிக்குமாறு யாரும் வலியுறுத்தக் கூடாது'' என்ற நிபந்தனையின் பேரில் அவர் அப்பதவியை

ஏற்றார். ஆனால் அதே மகாத்மா, தமது ஆயுள் இறுதிக் காலம் வரை சர்க்கா சங்கத்தின் தலைவராக இருந்தாரென்பதும் அவர் இறுதிக் காலத்தில் வகித்த ஒரே பதவி அதுதான் என்பதும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய உண்மைகளாகும்.

காந்தி பட்டபாடு

ஆனால் இந்தச் ''சக்கரவர்த்தியை''க் கண்டுபிடிக்க காந்திஜி பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. நோபிள் பரிசு வாங்கிய விஞ்ஞானி கூட அவ்வளவு சிரமம் எடுத்து அதற்காக ஓய்வு ஒழிவின்றி உழைத்திருக்க மாட்டார். அவர் இராட்டையைக் கண்டுபிடித்தது பெரிய கதை. அதை இலாபகரமான தொழிலாக்கப் பட்டபாடு இன்னும் பெரிய கதை. அது இலாபகரமான தொழிலாக முடியும் என்ற நிலை உருவாகிய பின் கூட நாடெங்கும் மக்கள் மத்தியில் அதைப் பரப்புவதற்கு நீண்ட காலமாகிவிட்டது. காங்கிரஸ் இராட்டையை ஏற்றுக் கொள்ளுமாறு செய்த பின்புதான் அது முடிந்தது.

கதர்த் தத்துவம்

பொதுவாக, விடுதலைப் போராட்டத்தில் ஒரு அங்கமாகவே கதரைப் பொதுமக்களும் தேசிய வாதிகளும் கதர்ப் பணியில் ஈடுபட்டவர்களும் அந்தக் காலத்தில் கருதினர்கள். இதைவிட உயர்ந்த நிலையான முக்கியத்துவத்துடன் கதரை காந்திஜி தோற்றுவித்துப் பரப்பி வந்தார் என்பதை அந்தக் காலத்தில் புரிந்து கொண்டவர்கள் மிக மிகக் குறைவு. ஆனாலும் அதைப் புரிந்து கொண்ட ஒரு சிலரும் இல்லாமற்போகவில்லை. கதர்ப் பணியில் தீவிரமாக ஈடுபட்டவர்களெல்லாம் அநேகமாக விதேசித்துணி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். இப்போது இருப்பதைப் போன்ற ''நைஸ்'' ரகங்களும் வண்ண வண்ண டிசைன்களும் தொடக்க காலத்தில் கதரில் இல்லை. கிட்டத்தட்ட சாக்குப் போன்று முரடாகவும் காவி நிறம் கொண்டதாகவும் இருந்த கதரை நாம் மனதில் தான் கற்பனை செய்து பார்க்கவேண்டும். ஆனால் அந்தக் கதரும் கிராக்கியோடு விற்பனையானது என்றால் அதற்குத் தலைவர்களும் ஊழியர்களும் அல்லும் பகலும் அரும்பாடுபட்டு உழைத்ததுதான் காரணம்; ஊதியங் கருதாத, பயன் கருதாத, தியாகத் தொண்டும் மக்களின் நாட்டுப்பற்றும்தான் காரணம்.

கதரை ஏழைகளின் சின்னமாக காந்திஜி கொண்டார். ஆகையால் கதர்ப் பணியில் ஈடுபட்டவர்கள், சொந்தச் செலவில்கூட கார் போன்ற 'ஆடம்பரமான' வாகனங்களை வைத்துக்கொள்வதை அவர் அனுமதிப்பதில்லை. அவ்வாறு காரில் சென்றால் அது நூற்பவர்கள், நெய்பவர்கள் ஆகியோர் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி விடும் என அவர் கருதினார். மேலும் சர்க்கா சங்கங்களுக்காக ஆயிரக்கணக்கான ரூபாய் செலவிட்டுப் பெரிய கட்டிடங்கள் கட்டுவதையும் அவர் ஆதரிக்கவில்லை. மிகவும் எளிமையான முறையில் கதர் சேவை செய்ய வேண்டும் என்று அவர் கூறினார். அய்யா முத்து செயலாளராக இருந்தபோது இப்படி ஒரு சிக்கல் வந்தது. தமது சொந்தப் பணத்திலும் சொந்தச் செலவிலும் கார் வைத்துக்கொள்ள அவர் காந்திஜியிடம் அனுமதி கேட்டார். ஆனால் அண்ணல் அதை அனுமதிக்க மறுத்துவிட்டார். இவர் தாம் பதவி ஏற்றிருந்த காலத்தில் நல்ல நிகர இலாபம் காட்டியும், பதின்மூன்றாயிரம் ரூபாயில் சர்க்கா சங்கத்திற்கு ஒரு கிடங்கு கட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது காந்திஜி அதை அனுமதிக்கவில்லை. கதரில் இலாபம் கிடைத்தால் அந்த இலாபமனைத்தும் நூற்போர், நெய்வோர், பொதுமக்கள் நலனுக்காகவும் பஞ்சு விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கத்தைச் சமம் செய்வதற்காகவும் செலவிடப்பட வேண்டும் என்பது காந்திஜியின் சித்தாந்தம்.

ஆடம்பரம் கூடாது

காந்திஜி கதர் இயக்கத்தைத் தொடங்கியபோது, தமிழ் நாட்டின் சில பகுதிகளில் கையால் நூற்கும் தொழில் அழியாமல் இருந்ததென்பது குறிப்பிடத் தக்கது. இவைகளில் தலைமையாக விளங்கிய பகுதிகள் கோவை, சேலம் மாவட்டங்களில் உள்ள வரட்சிப் பகுதிகளாகும். அங்குக் கவுண்டர் பெண்மணிகள் பழங்கால இராட்டைகளில் நூற்றுக்கொண்டு வந்தனர். மற்றபடி, தஞ்சை நெல்லை, கன்னியாகுமரி மாவட்டங்களில் நாடார் வகுப்பைச் சேர்ந்த பெண்களும் முஸ்லிம் பெண்களும் இராட்டையில் நூல் நூற்று மீன்பிடிக்கும் வலைகள் நெய்வதற்கு அளித்து வந்தார்கள். இராஜபாளையம் ராஜு வகுப்புப் பெண்களும் நூற்று வந்தார்கள். செட்டி நாட்டில் நடைபெற்ற திருமணங்களில் மணமகளுக்குச் சீதனமாக இராட்டையை அளிப்பது வழக்கமாயிருந்தது.

உயிருடன் இருந்தது

கதர்ப்பணியில் ஆர்வத்துடன் தொடக்க காலத்திலேயே ஈடுபட்ட ஒன்றிரண்டு மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். இவைகளெல்லாம் காரணமாகும். 1921-ஆம் ஆண்டில் திலகர் சுயராஜ்ய நிதியிலிருந்து தமிழ் நாட்டிற்கு ஒதுக்கப்பெற்ற தொகை கதர் வளர்ச்சிக்காகவே செலவிடப் பெற்றது. தொடக்க காலத்தில் காங்கிரஸ் அளித்து வந்த நிதி உதவியைக் கொண்டு காங்கிரசின் மேற்பார்வையிலேயே கதர்ப் பணி நடைபெற்று வந்தது. கதர் உற்பத்தியைப் பொருத்த வரை, 1937 வரை, கேரளம் தமிழகத்தின் ஒருபகுதியாகக் கருதப்பெற்று வந்தது. தமிழ் நாட்டில் கதர் போர்டின் முதல் செயலாளராக நியமிக்கப் பெற்றவர் கே. சந்தானம். அப்போது அவருக்கு ஒரே ஒரு உதவியாளர்தான் இருந்தார். அவரும் பதினேழு வயதே ஆன இளைஞர். அவர் தாம் இப்போது தஞ்சை சர்வோதயப் பிரசுராலயத்தின் ஆசிரியராக இருக்கும் என். ராமஸ்வாமி. கதர் இயக்கம் தொடங்கிய உடன் அதாவது 1921 முதல் கோவை மாவட்டத்தில் திருப்பூரில் கருப்பண்ணச் செட்டியார், பி. ஏ. ஆஷர் போன்ற சிலர் சொந்த முதலுடனும் தமிழ்நாடு காங்கிரஸ் குழுவின் கடன் உதவியுடனும் கதர் உற்பத்தி செய்து வந்தார்கள். திருப்பூரில் தமிழ்நாடு காங்கிரஸ் குழு கடன் உதவியுடன் பெரியாரின் உறவினரான ந. இராமசாமியின் நிர்வாகத்தில் ஒரு கதர் உற்பத்தி வஸ்திராலயம் நடந்து வந்தது. ஈரோட்டில் பெரியாரின் மேற் பார்வையில் தமிழ் நாடு காங்கிரஸ் குழுவின் வஸ்திராலயம் இருந்தது.

தமிழக ஈடுபாடு

மற்ற முன்னோடிகள்

தொடக்க காலத்தில் பெரியாருக்குக் கதர்மீது அளவு கடந்த பக்தி இருந்தது. அவர் தலையில் மூட்டை சுமந்து கதர்விற்றதாகவும் கூறுகிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில் கந்தசாமி குப்தாவும் இராஜபாளையத்தில் ரெங்கசாமி ராஜாவும் தங்கள் சொந்தச் செலவில் சர்க்காக்களை உற்பத்தி செய்து கிராமவாசிகளுக்கு வழங்கி நூற்கச் செய்ததுடன் அவர்கள் உற்பத்தி செய்த நூலையும் தாங்களே வாங்கிக் கொண்டார்கள். கந்தசாமிகுப்தா நிறைய முதலீடு செய்து நிறுவிய 4000 நூற்பாளர்களைக் கொண்ட நூற்புநிலையம் பின்னர் அனைத்திந்திய சர்க்கா சங்கத்துடன் இணைக்கப்பெற்றது. இவ்வாறு, அந்தக் காலத்திலேயே

கதர்ப்பணி செய்தவர்களில் கொங்கு கிருஷ்ணசாமியும் மற்றும் பலரும் இருந்தார்கள்.

சந்தானம் சேவை

1923-ல் க. சந்தானம் மாகாணக் கதர் வேலையின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு திருப்பூரில் கதர் போர்டின் அலுவலகத்தை அமைத்து, திருப்பூர், இராசபாளையம், திசையன் விளை, திருமங்கலம் போன்ற பல இடங்களில் தனியார் உற்பத்தி செய்து வந்த கதரின் தரம், விலை முதலியவற்றை ஒழுங்குபடுத்தினர். கதர் அன்பர்களுக்கு விநியோகிக்க உதவும் முறையில் சுத்தமான கதருக்கு அத்தாட்சிப்பத்திரம் கொடுக்கும் முறையையும் தொடங்கினர். இதனால் போலிக் கதர் விற்பனையும் அதில் மக்கள் ஏமாறுவதும் குறைந்தது. கதர் உற்பத்தி செய்பவர்களுக்கு முதலீட்டுக்கும் விற்பனைக்கும் தமிழ்நாடு கதர் போர்டு உதவியது. 1925 செப்டம்பர் முதல் அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ் நாட்டுக் கிளையும் கதர் வேலையை உச்ச நிலைக்கு வளரச் செய்தது. திருப்பூரை அந்நாளில் கதரின் லங்காஷயர் என்று சொல்லுவதுண்டு. 1925 வரை தமிழ் நாட்டுக் கதர் போர்டு செயலாளராக சந்தானம் இருந்தார். மாறுதலே விரும்பாதார்களாகிய சந்தானம், வரதாச்சாரி, கே. ஏ. சுப்ரமணியம், இராமனுதன், இக்னேஷியஸ், எம். ஜி. வாசுதேவய்யா, ஆகிய எல்லோரும் கதர் வேலையில் தீவிரமாக ஈடுபட்டார்கள். இராஜாஜியைக் கலந்துதான் மகாத்மா தமிழ் நாட்டுச் செயலாளரை நியமிப்பது வழக்கமாய் இருந்தது. 1923 இலெல்லாம் காந்திஜி சிறையில் இருந்தார். அப்போது அவர், ராஜாஜியைக் கலந்து கதர்ப் பணிகளுக்கு ஏற்பாடு செய்யுமாறு சங்கர்லால் பாங்கரை அனுப்பியிருந்தார். ராஜாஜியும் சங்கர்லால் பாங்கரும் சந்தானமும் தமிழ்நாட்டில் கதர் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார்கள். இதனால்தான் காந்திஜி 1925-இல் தமிழ் நாட்டிற்கு வந்தபோது அவரிடம் தமிழகக் கதர்ப்பணி ஓரளவுநல்ல பெயர் வாங்க முடிந்தது.

கதர் போர்டு, தமிழ்நாட்டுக் கிளைக்கு சந்தானத்திற்குப் பின் தங்கப் பெருமாள் பிள்ளை (இந்தத் தங்கப் பெருமாள் பிள்ளைக்கு, உதவியாளராக இருந்தவர் தான் பின்னால் பெயர் பெற்ற எழுத்தாளரான "கல்கி" கிருஷ்ண மூர்த்தி) எஸ். இராமநாதன், என். எஸ். வரதாச்சாரி, என். நாராயணன், கோவை அ. அய்யாமுத்து, மீண்டும்

எஸ். இராமநாதன், கே. எம். சங்கரராஜா, நா. ராமஸ்வாமி, என். என். சுப்ரமணியன் ஆகியோர் பதவி ஏற்றார்கள்.

மற்றும் பலர்

இதற்குப் பின்பு தலைமை அலுவலகமே தமிழ் நாட்டு வேலையை ஏற்று நடத்தியது. சென்ற பன்னிரெண்டு ஆண்டுகளாகத் தமிழ்நாடு சர்வோதய சங்கத்தாரால் கதர் வேலை நடை பெறுகிறது. திறம்படப் பணியாற்றித் தமிழக முழுவதிலும் கதர் பரவுவதற்கு மேற்கண்டவர்களுடைய அயராச் சேவை முக்கிய காரணமாக இருந்தது. இவர்களைத் தவிரப் பொதுவாக மாநில முழுவதிலும் கதர் பரவுவதற்காகச் சேவை செய்தவர்களில் முத்துரங்க முதலியார், கல்கி கிருஷ்ணமூர்த்தி, "கல்கி" உரிமையாளர் டி. சதாசிவம், ஆர். பார்த்தசாரதி ஆகியோர் பெயர்களைக் குறிப்பிடலாம். தேசியகவி சுப்ரமணிய பாரதி, நாமக்கல் கவிஞர் இராம லிங்கம் பிள்ளை ஆகியோரின் பாடல்களும் நடிகர்களான விஸ்வநாததாஸ், கே. பி. சுந்தராம்பாள் ஆகியோர் மேடை யில் பாடிய பாட்டுக்களும் மக்கள் உள்ளத்தில் கதர்பக்தியை வேரூன்றச் செய்வதில் உறுதுணையாக இருந்தன. திருப்பூர் மத்திய வஸ்திராலயத்தை விரிவுபடுத்திய பெருமை டபிள்யூ. பி. இக்னேஷியசிற்கு உண்டு.

இப்போது, ஒவ்வொரு மாவட்டமாக எடுத்துக் கொண்டு பார்ப்போம் :

1. சேலம் மாவட்டம்: புதுப்பாளையத்தில் ராஜாஜி காந்தி ஆசிரமத்தை நிறுவியது கதர்ப் பணிக்குத் தமிழகத் தில் பொதுவாகவும் சேலம் மாவட்டத்தில் குறிப்பாகவும் ஒரு புதுவேகங் கொடுத்தது. காந்தி ஆசிரமத்தின் முக்கிய பணியே கதர் உற்பத்தியாகத்தான் இருந்தது. திருப்பூர், தாராபுரம், திருச்செங்கோடு ஆகிய சிறு நகரங்களைச் சுற்றி யுள்ள கிராமங்கள் அடிக்கடி வரட்சியாலும் பஞ்சத்தாலும் பீடிக்கப்படக் கூடியவை. இங்கு ஏழை மக்களுக்குக் கதர் உற்பத்தி மூலம் ஒரு சிறிதளவு வருமானம் கிடைத்தது; இப் போதுங் கிடைத்து வருகிறது.

2. கோவை மாவட்டம் ; கோவை மாவட்டத்தில் கானூர் என்ற இடத்தில் தன்னிறைவுள்ள ஒரு கதர் நிலை யத்தை 1920—21-இலேயே நிறுவிய பெருமை சி. பாலாஜி ராவ் எம். ஏ., பி. எல்., என்ற வழக்கறிஞருக்கு உண்டு. கோவை நகரில் வழக்கறிஞர் தொழில் நடத்திக் கொண் டிருந்த பாலாஜி ராவ் அத்தொழிலை விட்டு நிர்மாணப் பணி

யில் ஈடுப்பட்டார். கோவை மாவட்டத்தில் அரசியலிலும் ஈடுபட்டுக் கொண்டு கதர் வளர்ச்சிக்காக உழைத்த மற்றும் இருவர் சி.பி. சுப்பய்யா, சுப்ரி ஆகியோர். அரசியலைப் பற்றி எண்ணுமல் நிர்மாணத் திட்டமாக அதைச் செய்து வந்த வர் வி. ஏ. கிருஷ்ணமூர்த்தி என்ற வழக்கறிஞர். இவர் சென்னை காதி வஸ்திராலயத்தின் முதல் நிர்வாகியாவார்.

3. தென்னார்க்காடு மாவட்டம்: தென்னர்க்காடு மாவட்டத்தில் முன்னேடியாக இருந்து கதரைப் பரப்பிய வர்கள் கந்தசாமி படையாச்சி, திட்டக்குடி ரெங்கசாமி பிள்ளை, பாலகிருஷ்ண பிள்ளை, (வைத்தியநாத ஐயரின் சம் பந்தியான) நாராயண ஐயர் ஆகியோராவர்.

4. தஞ்சாவூர் மாவட்டம்: ஆலங்காடு விசுவநாத ஐயர், அதிராமபட்டினம் ஜனுப் மீரான் சாயபு, மன்னர்குடி டாக்டர் முத்துக்கிருஷ்ண ஐயர் ஆகியோர் 1920-இலிருந்தே கதர் உற்பத்திப் பணியில் ஈடுபட்டவர்கள்.

5. திருச்சி மாவட்டம்: திருச்சி மாவட்டத்தில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனும், டாக்டர் டி. வி. சுவாமி நாத சாஸ்திரியும் 1920-22ல் கதர் வேலையில் முக்கிய பங்கு கொண்டார்கள்.

6. மதுரை மாவட்டம்: மதுரை மாவட்டத்தில் ந. நாராயண ஐயர் தன் வக்கீல் தொழிலை விட்டுத் தொடக்க காலத்திலேயே திருமங்கலம், குண்டத்தூர், முதலிய இடங் களில் கதர் உற்பத்தி வேலையில் தீவிரமாக ஈடுபட்டார். அந்தக் காலத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் சிலர் கதரை உயிர்நாடியாக வளர்த்து வந்தார்கள். அவர்களில் முக்கியமானவர் மதுரை ஏ. வைத்தியநாத ஐயர். மதுரை மாவட்டத்தில் நீண்ட காலமாக கதர்ப் பணியில் ஈடுபட்ட மற்ற முக்கியமானவர்கள் சுப்பய்யர், ஏ. சுப்ப ராயலு, என். எம். ஆர். சுப்பராமன், க. அருணாசலம், ஏ. என். ராஜன், பி. கே. இராமாச்சாரி, மதுரகவி ரெட்டியார், வேதராமையர், டி. ஆர். பத்மனாபையர், வழக்கறிஞர் சிவராம கிருஷ்ண ஐயர், சீனிவாச வரதன், அவரது மனைவி யார் பத்மாசினி அம்மாள் (மதுரை), கோ. வேங்கடா சலபதி, ஆர். குருசாமி (கல்லுப்பட்டி), ஜி. இராமச்சந்திரன், திருமதி சௌந்தரம் இராமச்சந்திரன் (காந்தி கிராமம்);

டி. ஆர். மகாதேவ ஐயர், குப்புசாமி ஐயர், அமிர்தலிங்க ஐயர் (திண்டுக்கல்) ஆகிய பலர்.

7. இராமநாதபுரம் மாவட்டம்: இராமநாதபுரம் மாவட்டத்தில் இராச பாளையத்தைச் சேர்ந்த ஐ. பி. ரெங்க சாமி ராஜாவும் ஜி.ஏ. பெத்தராஜாவும், தொடக்கம் முதல் கதருக்காக நல்ல சேவை செய்தார்கள். மற்றும் எஸ். பி. சீனிவாச ஐயங்கார் (இராமநாதபுரம்), பி.எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் (மாணமதுரை), இராம ஐயர் (பரமக்குடி), இரத்தின பிள்ளை ஆகியோர் இராமநாதபுரம் மாவட்டத்தில் முக்கியமானவர்களாவர். விருதுநகரில் பிரகாச நாடார், அருணாசல நாடார், சங்கரலிங்க நாடார் முதலியவர்கள் கதர் வளர்ச்சியில் பெரும் ஆர்வம் காட்டியவர்கள்.

8. திருநெல்வேலி மாவட்டம்: திருநெல்வேலி டாக்டர் சங்கர ஐயர், யக்ஞேசுவர சர்மா, ஏ. என். சிவராமன் ('தினமணி' ஆசிரியர்) கோமதி சங்கர தீட்சதர், அவருடைய குடும்பத்தினர், கே. ஆர். கிருஷ்ண ஐயர், ஹரிஹர சர்மா, சோம ஐயர், வழக்கறிஞர் வி. சுப்ரமணியம், பொன்னையா பிள்ளை, வி. சிவராமன், இராமச்சந்திர ஐயர், ஏ.பி.சி. வீரபாகு, நம்மாள்வார், எஸ். என். சுப்ரமணிய ஐயர், எஸ்.பி. சிவசுப்ரமணிய நாடார், திருகூட சுந்தரம் பிள்ளை, சுப்ரமணிய ஐயர், எஸ்.என். சோமயாஜலு, வி.எஸ். பதி, ஏ.கே. முத்தையா ஆசாரி ஆகிய பலர்.

9. கன்னியாகுமரி மாவட்டம்: கன்னியாகுமரி மாவட்டத்தில் முதன் முதலாகக் கதர்ப் பணியில் ஈடுபட்டவர்கள் டாக்டர் எம்பெருமாள் நாயுடுவும் அவருடைய சகாக்களும். எம்பெருமாள் நாயுடுவுக்குக் கதர் உற்பத்தி நிலையங்கள் நிறுவுவதிலும் சர்க்காக்கள் வழங்குவதிலும் உறுதுணையாக இருந்தவர்கள் காசி பண்டாரமும் நடராஜனும் ஆவர். அது மட்டுமல்லாமல் தமது வீட்டில் தமது மேற்பார்வையிலேயே பத்துத் தறிகள் நிறுவி அதில் அவர் கதர் உற்பத்தி செய்து வந்தார். டாக்டர் எம்பெருமாள் நாயுடுவுக்கு காந்திஜியுடன் நெருங்கிய தொடர்பு இருந்தது. சாந்தி நிகேதனிலிருந்து திரும்பிய ஜி. இராமச்சந்திரன் நாகர்கோவில் காதி வஸ்திராலயத்தின் நிர்வாகியாகக் கதர் உற்பத்தி, விற்பனையை அபிவிருத்தி செய்தார்.

1923-ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் உற்பத்தியான கதர் ஐந்து இலட்சம் ரூபாய்க்கும் குறைவான மதிப்புடைய தாகவே இருந்தது. ஆனல் இது 1944-1945-இல் 32 இலட்சமாக உயர்ந்தது. யுத்த காலப் பண வீக்கத்தை அகற்றிவிட்டுப் பார்த்தாலும் இந்த இருபத்தி இரண்டு ஆண்டுகளில் கதர் உற்பத்தி மூன்று மடங்கிற்குக் குறையாமல் கூடியிருந்தது தெரிய வரும். ஆனல் அதே சமயம், விடுதலே பெற்ற சுதந்திர அரசாங்கம் இருபதாண்டுகளுக்கு மேல் ஆட்சி நடத்தியபின் இப்போது ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கும் 1923-இல் இருந்த நிலேக்கும் ஒப்புவமையே இல்லே.

கதர்ப் பெருக்கம்

1944-45-இலெல்லாம் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் மற்ற எந்த மாநிலத்தையும்விட அதிகப்படியாகக் கதர் உற்பத்தி செய்த மாநிலமாகும். அப்போது இங்கு முப்பது இலட்சம் சதுர கெசம் துணி உற்பத்தி செய்யப்பெற்றது. இதற்கு அடுத்த படியாகக் கதர் உற்பத்தி செய்த மாநிலம் பீகார்தான். அதற்கு அடுத்தவை முறையே மகாராட்டிரமும் உத்தரப்பிரதேசமுமாகும்.

தமிழ்நாடு "நம்பர்-1"

போருக்குப் பிந்திய ஆலே வளர்ச்சித் திட்டத்தின் கீழ், இந்திய அரசாங்கம் சென்னே மாநிலத்திற்கு 3,52,000 (ஆலே நூற்புக்) கதிர்களே ஒதுக்கியது. இவைகளில் 2,00,000 கதிர்கள் முரட்டுரக நூல் உற்பத்திக்கானவை. 1,52,000 கதிர்கள் நைஸ் ரக உற்பத்திக்கானவை. சென்னே மாநிலத்தில் ஏற்கனவே உள்ள 9 ஆலேகளுக்கும் புதிதாகத் தொடங்க இருந்த 25 ஆலேகளுக்கும் இந்தக் கதிர்களே அளிக்கவேண்டும் என்று சென்னே மாநில அரசு இந்திய அரசை முதலில் கேட்டுக்கொண்டிருந்தபடியே இக்கதிர்கள் வழங்கப்பெற்றன. இதற்கான முதலீடு வழங்குவதற்கும் இந்திய அரசு அனுமதி அளித்தது; இறக்குமதி லேசென்சுகளேயும் அளித்தது. புது ஆலேகள் தொடங்க இருந்தவர்கள் கட்டிட வேலேகளேயும் தொடங்கி நடத்திக் கொண்டிருந்தார்கள். பங்குகளேயும் சேர்த்தார்கள். இயந்திரங்கள் கொள் முதலுக்கான ஏற்பாடுகளேயும் செய்து விட்டார்கள். இவ்வாறு புது ஆலேகள் அமைக்கும் வேலே பல்வேறு கட்டங்களில் இருந்தது.

கதிர்கள்

பிரகாசம்

1946-இல் மகாத்மா காந்தி யோசனைப்படி சென்னை அரசாங்கத்தின் கீழ் ஐந்து இடங்களில் தீவிரக் கதர்த் திட்டத்தை நடத்தப் பிரகாசம் ஒப்புக் கொண்டார். அத்திட்டத்தை அந்த ஆண்டு அக்டோபர் மாதம் 2ம் தேதி யன்று தாம் தொடங்க எண்ணியிருப்பதாகவும் அதற்கு மகாத்மாவின் ஆசீர்வாதம் வேண்டுமென்றும் பிரகாசம் கேட்டுக் கொண்டார். தமது ஆசீர்வாதத்தை அளிப்பதற்கு மகாத்மா சில கடுமையான நிபந்தனைகளை விதித்தார்: 1. புதிய துணி, நூல் ஆலைகளைத் தொடங்கக் கூடாது. 2. ஏற்கனவே உள்ள ஆலைகளுக்குக் கதிர்களை அதிகப்படுத்தக் கூடாது. 3. முன்னரே அதிகக் கதிர்களுக்குக் கொடுத்த அனுமதிகளையும் ரத்துச் செய்துவிட வேண்டும். இந்த மூன்று நிபந்தனைகளையும் பிரகாசம் ஒப்புக் கொண்டார். இந்திய அரசு வழங்கிய கதிர்களைத் திருப்பி அளித்து விட்டார்.

டில்லி மறுப்பு

சென்னை அரசாங்கம் இவ்வாறு ஏற்கனவே ஒதுக்கிய கதிர்களைத் திருப்பி அளித்ததை இந்திய அரசாங்கம் ஒப்புக் கொள்ளவில்லை. சென்னை அரசாங்கம் நம்பிக் கைத் துரோகம் செய்ததாகச் சம்பந்தப் பட்டவர்கள் வழக்குத் தொடர நேரும் என்று கூறியது. ஆனால் அதே சமயம் இந்திய அரசாங்கத்தின் இந்த யோசனையைப் பிரகாசம் அமைச்சரவையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்திய அரசாங்கம் தனது கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுமென்று எழுதியது. இவ்வாறு ஒரு இணக்கமான முடிவுக்கு வர முடியாது இரு அரசாங்கங்களும் தங்கள் தங்கள் கருத்தையே எழுதிக்கொண்டிருந்தன.

அமைச்சரவை மாற்றம்

இந்தக் கட்டத்தில் சென்னை மாநிலத்தில் அமைச்சரவை மாறியது. ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் தலைமையின் கீழ்ப் புது அமைச்சரவை பதவி ஏற்றபோது, சரண் செய்த கதிர்களைத் திருப்பிப் பெறுவது என்று முடிவு செய்தது. ஆகவே காந்திஜி கூறிய அந்த மூன்று நிபந்தனைகளையும் ஏற்காமலே தீவிர கதர்த் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்புப் புது அரசாங்கத்திற்கு வந்தது. குறிப்பாக, அப்போது பிர்க்கா வளர்ச்சி அதிகாரியாக இருந்த கோ. வேங்கடாசலபதியின் பொறுப்பில் வந்தது. சர்க்கா சங்கத்தின் ஒத்துழைப்போடு அவர் அதைத் திறம்பட

நடத்தி வைத்தார். கதருக்காக காந்திஜி வகுத்த திட்டங் களிலேயே நீவிர கதர் உற்பத்தித் திட்டம்தான் உச்சாணி என்று கூறப்படுகிறது. அப்போது கதர்போர்டு செயலாள ராகப் பணியாற்றிய என். இராமஸ்வாமிக்கு இத்திட்டத் தைச் சுமார் மூன்றரை ஆண்டுகள் செயல்படுத்தும் வாய்ப்புக் கிடைத்தது.

இவ்வாறு, கிட்டத்தட்ட இறந்து போனதாகக் கருதப் பெற்ற கதருக்கு மீண்டும் புத்துயிரூட்டியவர் காந்திஜி.

ஜே. சி. குமரப்பா

அந்த வகையில் அவரை இந்தியா முழுவதற்கும் கதரின் பிதா என்று சொல்லலாம். ஒரு வகையில் ராஜாஜியைத் தமிழகத்தில் கதரின் பிதா எனக் கூறலாம். ஆனலும் கதர், கிராமக் கைத்தொழில்களைப் பொருத்தவரை தமிழகம் ஒரு தனிப் பெருமை கொண்டாட உரிமை உண்டு. எவ்வாறு, ஜவாகர்லால் நேரு ஆரசியலில் காந்திஜியின் வாரிசோ, ஆன்மிகத்தில் வினோபாஜி காந்திஜியின் வாரிசோ, அதே போன்று பொருளாதாரத்தில் அண்ணலின் வாரிசாக விளங்கி யவர் டாக்டர் ஜே. சி. குமரப்பா ஆவார். அவர் ஒரு தமிழர். காந்திஜியின் பொருளாதாரத்திற்குச் சாத்திர ரீதியாக ஒரு அடிப்படை அமைத்து உருக்கொடுத்தவர் அவரே. காந்திஜியுடன் சேர்ந்ததிலிருந்து தம் ஆயுள் காலம் வரை இடைவிடாது காந்தியப் பொருளாதாரத்திற்காகவே வாழ்ந்து உயிர் நீத்தவர் குமரப்பா. அவரும் அவருடைய சகோதரரான பரதன் குமரப்பாவும் காந்தியத் தத்துவத்தை உலகில் பரப்புவதற்காகச் செய்துள்ள சேவை உலகம் மறக்க முடியாத ஒன்றாகும். பரதன் குமரப்பா நல்ல ஆங்கில அறிஞர். பல்வேறு தலைப்புக்களில் காந்திஜி எழுதிய கட்டுரைகளை அவர் நூல்களாகத் தொகுத்திருக்கிறார். அவைகளுக்கு அவர் எழுதிய முன்னுரைகள், முன்னுரைகளுக் கெல்லாம் ஓர் இலக்கணம் போன்று அமைந்திருக்கின்றன.

இதேபோன்று காந்திஜியின் ஆதாரக் கல்விக்கு வாரி சாக நின்று விளங்கிய தமிழர் காலஞ்சென்ற அரியநாயகம்.

அரியநாயகம்

அவர் அவரது மனைவியாராகிய ஆஷாதேவி யுடன் உலகிற்குப் புதுமையான இக்கல்வி முறையைச் செயல் முறையில் நிலைநாட்டிக் காட்டுவதற்காகத் தம் வாழ்நாளையே செல விட்டார். இப்போதும் ஆஷா தேவி அதற்காகவே பாடு

பட்டு வருகிறார். இவர்கள் வார்தாவிலேயே தங்கி ஆதாரக் கல்வியை பாபுவின் மேற்பார்வையில் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்து, அதில் எற்படும் சிக்கல்களை பாபுவுடன் விவாதித்து அக்கல்வி முறையில் அவ்வப்போது திருத்தங்கள் செய்து அதை நல்லமுறையில் உருவாக்கிக் கொடுத்திருக் கின்றனர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் அரிய நாயகம் விரிவாக வெளிநாடுகளில் சுற்றும் பயணம் செய்த வர் மட்டுமல்லாது, குழந்தைகள் கல்வி முறையைப் பற்றி நீண்ட ஆராய்ச்சி செய்தவரும் பல உயர் பட்டங்கள் வாங்கியவரும் ஆவார்.

ராஜாஜி

இதைப்போன்று மதுவிலக்கில் ராஜாஜியைச் சொல்ல வேண்டும். மதுவிலக்கிற்காக ராஜாஜி அளவு இந்தியாவி லேயே வேறு யாரும் தொண்டாற்றியதில்லை. பதினாயிரக் கணக்கில் வருமானம் வந்த தொழிலை விட்டு விட்டு ஒரு கதர்ப்பையில் வேட்டி, சட்டை, துண்டு, 'விமோசனம்' பத்திரிகை, சில சுவரொட்டிகள் ஆகியவற்றினை வைத்துக் கொண்டு கிராமங் கிராமமாகச் சுற்றி மதுவிலக்கைப் பரப்பிய ராஜாஜியை அக்காலத்தில் பாராட்டாதார் இல்லை. மதுவிலக்கிற்காக அவர் உடல், பொருள், ஆவி அனைத்தையும் பணயம் வைத்தார் என்றே சொல்லிவிடலாம். இப்போது நாம் 1927-ஆம் ஆண்டுக் கதர்ச் சுற்றுப்பயணத் திற்கு வருவோம்.

நிர்மாணத் திட்டங்களை-குறிப்பாகக் கதர்த் திட்டத்தை விளக்குவதற்காக மகாத்மா குசராத்திலும் வங்கத்திலும் 1925-இல் சுற்றுப்பயணம் செய்தார். அவர் வங்கத்தில் மேற்கொண்ட பயணம், ஒருவகையில் பிற்காலத்தில் அவர் மேற்கொண்ட நவகாளி யாத்திரையைப்போன்று இருந்தது. முள், புதர், சேறு, சகதி, ஆறு, ஓடை ஆகியவைகளையெல்லாம் நடந்தும், படகின் மூலமாகக் கடந்தும் உட்பகுதிகளிலுள்ள குக்கிராமங்களுக்கெல்லாம் அவர் சென்றார். இங்கு ஓரிடத்தில் ஓர் இளைஞர் வந்து காந்திஜியிடம் மிகவும் காரசாரமாக, "உங்களை உள்ளே செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று கன்னியாகுமரி அம்மன் ஆலயத்தில் கூறியபோது, நீங்கள் ஏன் அதை மீறி உள்ளே செல்லவில்லை? நீங்கள் இந்த உலக சூரியன் அல்லவா? உங்களைத் தடுக்க அவர்கள் யார்?" என்று கேட்டார். இக்கேள்விக்குச் சிரித்துக்கொண்டே காந்திஜி பதில் சொன்னார்: "ஆம், ஒன்று நான் உலக சூரியனாக இல்லாது இருக்கவேண்டும். அப்போது என்னை வெளியே அவர்கள் நிறுத்தி வைத்ததில் நியாயம் உண்டு. அல்லது, நான் உலக சூரியனாய் இருக்கவேண்டும். அப்போது அவர்கள் தடையை நான் வலிந்து மீற வேண்டிய அவசியம் இல்லை!"

கதர்ப்பயணம்

காந்திஜி அசாமில் குல்னா என்ற இடத்திற்குப் போய்ச் சேர்ந்தபோது டார்ஜீலிங்கில் தார்ஸ் காலமாகி விட்டதாக அவருக்குச் செய்தி கிடைத்தது. அசாம் சுற்றுப்பயணத்தைக் கைவிட்டு விட்டுக் கல்கத்தாவிற்கு வந்து தார்ஸ் ஈமச்சடங்கில் பங்கு கொண்டார். பாடையைச் சுமந்து சென்றவர்களில் அவரும் ஒருவர். வங்கத்தில் நீண்ட நாட்கள் தங்கியிருந்து தார்ஸ் என்னும் தங்கத்தை இழந்து தவித்த வங்க மக்களுக்கு ஆறுதலையும் தெம்பையும் அளித்துத் திரும்பினார்.

தார்ஸ் காலமானார்

செப்டம்பர் 22-ஆம் தேதியன்று பாட்னாவில் அனைத்து இந்தியக் காங்கிரஸ் குழு கூடியபோது, பெல்காமில் ஏற்பட்ட உடன்படிக்கையின் காரணமாக சுய ராஜ்யக் கட்சிக்கு இருந்த பொறுப்புக்களெல் லாம் அகற்றப்பெற்றன. ஆண்டுக்கு நான்கணா செலுத்துபவர்களோ அல்லது தானே நூற்ற 2000 கெசம் நூலை அளிப்பவர்களோ காங்கிரஸ் உறுப்பினர் களாகலாம் என்ற விதி மாற்றி அமைக்கப்பெற்றது. சுய ராஜ்யக் கட்சியானது காங்கிரசின் ஒரு கிளையாக இருப்பது போய், காங்கிரசாகவே ஆய்விட்டது. பாட்னாவில் மேற் கொள்ளப்பட்ட மற்றொரு முக்கியமான முடிவு அனைத்து இந்திய சர்க்கா சங்கம் தோற்றுவிக்கப் பெற்றதாகும்.

சர்க்கா சங்கம்

இந்தச் சமயத்தில் காங்கிரசுக்கு எதிரான கட்சிகள் அரசாங்கத்தினரால் நன்கு ஊக்குவிக்கப்பெற்றன. அவ்வாறு பலன் அடைந்த கட்சிகளில் ஒன்று சென்னை நீதிக்கட்சியாகும். அரசாங்கத்துடன் பொறுப் பான முறையில் ஒத்துழைத்துப் பதவிகளை ஏற்பதா, அல்லது ஒத்துழையாமைக் கொள் கையை மேற்கொள்வதா என்பது குறித்து, சுயராஜ்யக் கட்சித் தலைவர்கட்குள் கடும் வாக்குவாதங்கள் நடை பெற்றுக்கொண்டிருந்த போதெல்லாம், காந்திஜி அந்தத் தகராறு குறித்து எவ்விதக் கருத்தும் கூறாது, பீகார், உத்தரப் பிரதேசம், கட்ச் ஆகிய பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார். பின்னர் ஓய்வு எடுத்துக்கொள்வதற் காக சபர்மதிக்குப் போனார்.

பதவியா? பணியா?

சர்க்காவைப்பற்றி மகாத்மா வானளாவப் புகழ்ந்து கொண்டுபோனது பல சிந்தனையாளர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்களில் இரவீந்திரநாத் தாகூர் ஒருவர். தாகூருக்கும் காந்திஜிக்கும் இந்தக் கட்டத்தில் சர்க்காவைக் குறித்துக் காரசாரமாக நடை பெற்ற வாதம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அத்தனை வேலைகளுக்கும் வாக்குவாதங் களுக்கும் மத்தியில் வாரம் ஒரு கட்டுரை வீதம் ''சத்திய சோதனை'' என்ற தலைப்பின் கீழ்த் தமது வாழ்க்கை வரலாற் றையும் காந்திஜி எழுதிக்கொண்டு வந்தார்.

தாகூர் எதிர்ப்பு

சரோஜினி நாயுடு தலைமை தாங்கிய கான்பூர் காங்கிர சிற்கு மகாத்மா சென்றார். இங்குக் காங்கிரஸ் பந்தலி

லேயே இந்து மகாசபையின் கூட்டம் நடைபெற்றது. இதே சமயம் கான்பூரில் அனைத் திந்திய கிலாபத் மாநாடும் மௌலானா ஆசாத் தலைமையில் நடை பெற்றது. 1926-ஆம் ஆண்டில் அவர் வெளிச் சுற்றுப்பயணம் எதுவும் வைத்துக் கொள்ளாமல், சபர்பதி ஆசிரமத்தின் வளர்ச் சியிலும் சர்க்கா சங்க அலுவல்களிலும் ஒருமனதான கவனம் செலுத்தினர்.

கான்பூர் காங்கிரஸ்

நவம்பர் மாதம் பொதுத்தேர்தல் நடந்தபோது சென்னை தவிர மற்ற மாநிலங்களிலெல்லாம் சுயராஜ்யக் கட்சியினர் படுதோல்வி அடைந்தனர். அவர் களுடன் கருத்து வேறுபட்டு வெளியே வந்த வர்கள் வெற்றியடைந்தார்கள். தேர்தல் பிரச் சாரத்தில் இந்து, முஸ்லிம் என்ற வகுப்பு வேற்றுமைப் பிரச்சாரம் தலைதூக்கி நின்றது.

தேர்தல் முடிவு

1926-ஆம் ஆண்டைப் பொறுத்து அண்ணல் மேற் கொண்ட மௌனம் டிசம்பர் 20-ஆம் தேதியுடன் முடிந்து அவர் கௌகத்திக்குச் சென்றார். அவர் சோர் போக் என்ற இரயில்வே நிலையத்திற்குப் போய்ச் சேர்ந்தபோது தான் சுவாமி சிரத்தா னந்தனர் குத்திக் கொல்லப் பெற்றார் என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. சீனிவாச ஐயங்கார் தலைமை தாங்கிய கௌகத்தி காங்கிரசில் அண்ணலே தாஸ் மறைவுக்கு வருத்தம் தெரிவித்து இரங்கல் தீர்மானம் கொண்டு வந்தார். காங்கிரஸ்காரராக வாக்களிக்க விரும்பும் ஒவ்வொருவரும் வழக்கமாகக் கதர் அணிபவராக இருக்கவேண்டும் என்ற தீர்மானம் இந்தக் காங்கிரசில் தான் நிறைவேறியது. மீண்டும் காங்கிரசில் சேர பெசண்ட் முடிவு செய்தார். இதை எல்லோரும் வர வேற்றார்கள்.

சிரத்தா னந்தனர்

1927-இல் கோமில்லா, காசியில் கிருபளானியின் காந்தி ஆசிரமம், காசி இந்துப் பல்கலைக் கழகம்-ஆக எங்குச் சென்ற லும் அவர் ஊதிய ஒரே சங்கு கதர், கதர், கதர் என்பதுதான். ஜனவரி 9-ஆம் தேதி யன்று சிரத்தானந்தரின் நினைவு நாள் அன்று காந்தி ஆஷ்ரமத்திலிருந்து தாஷாஷ்வமேத கட்டம் வரை காந்திஜியும் பண்டித மாளவியாவும் நடந்து

நந்தி குன்று

சென்று கிரியைகளை நடத்திவிட்டு, விஸ்வனாதர் ஆலயத்தில் பிரார்த்தனை செய்தார்கள். இதன்பின், பீகார், மத்திய மாநிலம், பீராரில் சுற்றுப்பயணம்; பிப்ரவரி மாதம் மகாராஷ்டிர சுற்றுப்பயணம் தொடங்கிற்று. மார்ச் மத்தியில் இதை முடித்துக்கொண்டு சுவாமி சிரத்தானந்தர் வாழ்ந்த கங்ரி குருகுலத்திற்குச் சென்றார். பிறகு பம்பாய் வழியாகக் கர்னாடகத்தில் நுழைந்தபோது அவருடைய உடல் நலம் மிகவும் பாதிக்கப்பெற்று விட்டது; ஆகையால் அவர் நன்கு ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மருத்துவர்கள் ஆலோசனை கூறினார்கள். நந்தி குன்றில் தங்கி அவர் ஓய்வு எடுத்துக்கொண்டார்.

குசராத் வெள்ளம்

முக்கியமான சில பணிகளை மகாத்மா மேனந்து சிரமேற் கொண்டு செய்யும்போது, பக்கவாட்டில் எவ்வளவு பெரிய அதிர்ச்சிகள் ஏற்பட்டாலும் அவர் தம்பாதை யிலிருந்து விலகிவிடுவதில்லை. கர்னாடகச் சுற்றுப் பயணம் முடியுங் கட்டம். அவர் தமிழகத்திற்கு வருவதாக இருந்தார். ஆனால் அந்தச் சமயத்தில், குசராத்தில் பெருமழையும் வெள்ளமும் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானவர் வீடிழந்தனர். பல மனிதர்கள் வாரக் கணக்கில் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக மரக்கிளைகளில் ஆறு, ஏழு நாட்கள் தொங்கிக்கொண்டிருக்க வேண்டியிருந்தது! ஆனாலும் காந்திஜி அங்குச் செல்லவில்லை. குசராத் தமது தாய் மாநிலமாக இருந்தும் அவர் செல்லலில்லை. ''இங்கே நான் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கவில்லை. என்னுடைய ஞானத்திற்கு எட்டிய முறையில், குசராத்தை மட்டுமல்லாது இந்தியா முழுவதையுமே பீடித்துள்ள ஒரு நோயைத்தான் எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கிறேன்'' என்று அவர் கூறிவிட்டார். இதற்கு ஏழு ஆண்டுகள் கழித்து இதே போன்று மற்றொரு நிகழ்ச்சி நடைபெற்றது. அரிஜன சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு அவர் கன்னியாகுமரி வழியாகத் தமிழகத்தில் நுழைந்தபோது பீகாரில் ஒரு பெரிய பூகம்பம் ஏற்பட்டது. ஆயிரக்கணக்கானோர் மடிந்து, அங்கிருந்து அழைப்பிற்கு மேல் அழைப்பு (உடனே புறப்பட்டு வருமாறு) வந்துகொண்டிருந்தது. அப்போதும் அண்ணல் அங்குச் செல்லாமல் கருமமே கண்ணாக, தமது தமிழக அரிஜனச் சுற்றுப்பயணத்தை முடித்து விட்டுத்தான் அங்குச் சென்றார்.

24-8-27

கிருஷ்ணகிரி

மைசூரில் நான்கு மாதங்கள் தங்கிவிட்டு ஆகஸ்ட் 24-ஆம் தேதியன்று அண்ணல் தமிழ் நாட்டிற்குள் நுழைந்தார். பெங்களூரிலிருந்து ஹோசூர், கிருஷ்ணகிரி ஆகிய நகரங்களுக்கு மகாத்மா வந்த நாளிலிருந்து அவரது தமிழகச் சுற்றுப்பயணம் தொடங்கிவிட்டது என்று கொள்ளவேண்டும். ஆகஸ்ட் மாதம் 24-ஆம் தேதியன்று இந்த இரு நகரங்களுக்கும் சென்றுவிட்டு, பெங்களூருக்கு அவர் திரும்பி விட்டார். முதலில் 30-ஆம் தேதியன்று வேலூரிலிருந்து தமிழகப் பயணத்தைத் தொடங்குவதாக இருந்தது. ஆனாலும் பெங்களூரில் தங்கியிருந்தபோது ஒரு நாள் ஓய்வு கிடைத்ததால் அவர் ஹோசூருக்கும் கிருஷ்ணகிரிக்கும் வந்து திரும்பினார்.

ஹோசூர்

ஹோசூரில் நகருக்குள் நுழையும் பெரிய சாலையிலேயே வரவேற்பு சிறப்பாக நடைபெற்றது. நகரப் பொதுமக்களின் சார்பாகப் பி. சித்தாராமையாவும் விவசாயிகள் சார்பாக நஞ்சாரெட்டியும் வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளித்தார்கள். "இந்தியாவில் ஏழ்மையைப் போக்கவேண்டுமானால் அதற்குள்ள ஒரே வழி சர்க்காவைப் பரப்புவதுதான். சுயராஜ்யம் என்ற சொல்லுக்கு மத்திய தர வர்க்கத்தினர் கூறும் பொருள் வேறாக இருக்கலாம். ஆனால் பரம ஏழைகளுக்கு வயிற்றுப் பசி இல்லாமலும் சற்றுச் சுகமாகவும் வாழ்வது தான் சுயராஜ்யம் என்பதன் பொருளாக இருக்க முடியும்" என்று காந்திஜி கூறினார்.

கிருஷ்ணகிரி

கிருஷ்ணகிரிக்குச் சென்ற வழியில் சூலகிரியில் எஸ். என். வெங்கட்ராம செட்டி தலைமையில் மக்கள் அவருக்கு வரவேற்பும் பண முடிப்பும் அளித்தார்கள். கிருஷ்ணகிரியில் காரனேஷன் மண்டபத்திற்குப் பக்கத்தில் புதுப்பேட்டைக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். மாலையில் நடைபெற்ற வரவேற்பில் யூனியன் போர்டு, கிருஷ்ணகிரி பொதுமக்கள் கிருஷ்ணகிரி கூட்டுறவு சங்கம் சார்பாக அண்ணலுக்கு வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன. பொது மக்கள் சார்பாக ஓ. வேங்கடராவும் கூட்டுறவு சங்கத்தின் சார்பாக என். எஸ். சுந்தரேச ஐயரும் வரவேற்புரைகளை அளித்தார்கள்.

இங்கே காந்திஜி சித்தரஞ்சன் தாஸ் படத்தைத் திறந்து வைத்தார். கூட்டத்தில் இரைச்சல் அதிகமாக இருந்ததால் காந்திஜி சுருக்கமாகவே தம் பேச்சை முடித்துக்கொண்டார். ''இங்கே கூட்டுறவு சங்கத்தின் சார்பாக எனக்கு ஒரு வரவேற்புரை அளித்திருக்கிறீர்கள். அவர்களுடைய பணி நல்ல பணிதான். ஆனாலும் இராட்டையையும் கதரையும் அதில் சேர்க்காவிட்டால் கூட்டுறவு முழுமையடையாது,'' என்று காந்திஜி கூறினார். கூட்டத்தினரிடையே பணம் வசூல் செய்யத் தொண்டர்களை அனுப்பி வைத்தபோது, ''இராட்டையில் நம்பிக்கையுள்ளவர்கள் மட்டும் பணம் கொடுத்தால் போதும்'' என்று எச்சரித்தார்.

கூட்டுறவு கதர்

இந்தப் பொதுக்கூட்டத்தின் இறுதியில் பாலக்கோடைச் சேர்ந்த பி. வி. பட்டாலம் செட்டி என்ற இளைஞர் தாம் நூற்ற நூலைக்கொண்டு வந்து காந்திஜியிடம் பெருமையோடு அளித்தார். அவரது வலதுகை மணிக்கட்டில் ஓர் அழகான தங்கச் சங்கிலி இருந்ததை காந்திஜி கண்டுவிட்டார். ''சாதாரணமாகப் பெண்கள்தான் கைகளில் தங்க வளையல்கள் அணிவார்கள். ஆனால் நீங்கள் கையில் சங்கிலி அணிந்திருக்கிறீர்களே, என்?'' என்று கேட்டார். அந்த இளைஞர் தாம் அதைக் கழற்றி விடுவதாகச் சொன்னார். ''அப்படியானால் நீங்கள் முழுமனதோடு அதைக் கதர் இயக்கத்திற்காக அளிக்க முடியுமா?'' என்று அண்ணல் கேட்டார். உடனே அந்த இளைஞர் அதைக் கழற்றி காந்திஜியிடம் அளித்துவிட்டார்!

கைச்சங்கிலி

காந்திஜி கிருஷ்ணகிரிக்கு வந்தது குறித்து, சென்னை அரசாங்கம் டில்லிக்கு அனுப்பிய அறிக்கையில் பல சுவையான தகவல்கள் இருந்தன. அதில் அவர்கள் கூறியிருந்ததாவது: ''கிருஷ்ணகிரியை விட ஹோசூர் சிறிய நகரம்; செல்வ வளத்திலும் குறைந்தது. அப்படியிருக்க ஹோசூரைவிடக் கிருஷ்ணகிரியில் கதர் விற்பனை குறைந்திருந்தது விந்தையாக இருந்தது. இந்து முஸ்லிம் ஒற்றுமை அவசியம் என்றும் அது சாத்தியமே என்றும் அவர் வலியுறுத்தினார். ஆனால், நகரில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் அதற்கு முரணாக இருந்தன. சுவாமி சிரத்தானந்தர்

அரசு கருத்து

கொலை செய்யப்பட்டது குறித்தும், இஸ்லாம் போதனைகளைப் பற்றி காந்திஜி கூறிவரும் வியாக்கியானங்களைக் குறித்தும் ரங்கிலா ரசூல் வழக்குத் தீர்ப்புக் குறித்தும் கிருஷ்ணகிரியில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே இருந்த குரோத உணர்ச்சி குறித்தும் முகமதியத் தலைவர்கள் சில கேள்விகளை ஒரு சிறு துண்டுப் பிரசுரத்தில் அச்சடித்து வழங்கியிருந்தனர். காந்திஜிக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பில் முஸ்லிம்கள் கலந்து கொள்ளவில்லை; அவர்கள் ஒதுங்கியே யிருந்தார்கள். மறுநாள் காந்திஜி சென்ற வழியில் முக்கிய சாலையில் - இரண்டு மரங்களுக்கிடையே பழைய தோலையும் மரச் செருப்புகளையும் குரோத உணர்ச்சி கொண்ட சிலர் வைத்திருந்தனர். இதற்கு மத்தியில் ஒரு போர்டை வைத்து அதில் சர்க்காவை வரைந்து காந்திஜி மீது அவதூறான வாசகங்களையும் எழுதியிருந்தனர். (இதை யாரோ பொறுப்பற்றவர்கள் செய்திருந்தார்கள் என்று தோன்றுகிறது.) இச் செயலுக்காக காந்திஜிக்கு ஒரு மன்னிப்புக் கடிதம் அனுப்புவதென்று முஸ்லிம் தலைவர்கள் முடிவு செய்தனர். ஆனால் இதற்குள் இந்துக்கள் இந்தத் துண்டுப் பிரசுரத்திற்கு எதிர்ப்பிரசுரத்தை அச்சடித்து வெளியிட்டுவிட்டனர். முதல் பிரசுரத்தை வெளியிட்டவர்களைப் பற்றிக் கடுமையான பதங்கள் - வேசி மக்கள், பன்றிகள் போன்ற பதங்கள் - பயன்படுத்தப்பட்டன. மோட்டாரில் வாத்தியம் வைத்து இந்தத் தமிழ்ப் பிரசுரத்தை வழங்கிக் கொண்டு சென்றனர்.''

சென்னை அரசு

இதற்கிடையில் டாக்டர் பி. சுப்பராயன், ஏ. ரெங்கநாத முதலியார், திவான் பகதூர் ஆர். என். ஆரோக்ய சாமி முதலியார் ஆகியோரைக் கொண்ட அமைச்சரவை சென்னை மாநிலத்தில் பதவி ஏற்றது. இவர்கள் மூவரும் சுயேச்சையாகத் தேர்தலில் போட்டியிட்டவர்கள்.

30-8-27

வேலூர்

கஸ்தூரிபா காந்தியுடனும் கங்காதர் ராவ் தேஷ் பாண்டே, ராஜாஜி ஆகியோருடனும் நடு மதியத்தில் பெங்களூர் எக்ஸ்பிரசில் காட்பாடி இரயில் நிலையத்தில் வந்திறங்கிய மகாத்மாவை வேலூர் பெரியமனிதர்கள் வரவேற்றுத் தங்கள் ஊருக்கு அழைத்துச் சென்றார்கள். வட ஆர்க்காடு மாவட்டக் கழக உறுப்பினர்கள் அதன் தலைவர் ராவ்பகதூர்

கே. கிருஷ்ணசாமி நாயுடு தலைமையில், அவர் தங்கியிருந்த இல்லத்திற்கு வந்து மாவட்டக் கழகத்தின் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார்கள். அன்று மாலை காஃப்நிஜவுச்சின்ன மண்டபத்தில் நடைபெற்ற மாணவர் கூட்டத்திற்குச் சீட்டு மூலமே அனுமதி இருந்த போதிலும் கூட்டத்திற்குக் குறைச்சல் இல்லை. ஊரீஸ் கல்லூரி முதல்வர் தலைமை தாங்கிய இக் கூட்டத்திற்குக் கல்லூரி மாணவர்கள் திரளாகவும் அரசாங்க அலுவலர் கணிசமாகவும் வந்திருந்தனர். (கல்லூரி மாணவர் நடேசன் வழிபாட்டுப் பாடலைப் பாட சுவாமிநாதன் என்ற மாணவர் ஆங்கில வரவேற்புரையையும் தமிழ்ப் பண்டிதரான கே. வேணுகோபால நாயகர் தமிழில் ஒரு வரவேற்புப் பாடலையும் படித்தனர்.) அன்று தமது இல்லத்தில் ஓர் துக்கம் நடந்திருந்தும் கூட்டத்திற்கு வந்து தலைமை தாங்கிய முதல்வரின் கடமை உணர்ச்சியைப் பாராட்டாதார் இல்லை. ''இந்தக் கூட்டம் இங்கு நடைபெற அனுமதித்தது மட்டுமின்றித் தங்களுக்கு நேர்ந்த துக்கத்தையும் பாராமல் வந்திருந்து என்னிடம் கொண்ட அன்பைக் காட்டியதற்காகத் தங்களைப் பெரிதும் பாராட்டுகிறேன்'' என்று அண்ணல் முதல்வரை நோக்கிக் கூறினார். மாணவர்களை நோக்கி அவர் சொன்னார்: ''பள்ளிக்கூடங்களை விட்டு விட்டுப் பொது வாழ்க்கையில் இறங்கும்பொழுது இந்நாட்டு எளியவர்களுக்கு உதவ வேண்டியவர்களாயிருப்பீர்கள். நம் தாய் பாஷைகளில் 'மானவன்' என்ற பதம் 'பிரம்மச்சாரி' என்ற அழகிய பதத்தால் குறிக்கப்படுகின்றது. 'உண்மையை நாடுகின்றவன்', 'கடவுளை அணுகுவதற்குரிய வழியில் நடக்கின்றவன்' என்பதுதான் அதன் பொருளாகும். ரிஷிகள், உலகப் பெரியார்கள் ஆகியோருடைய அனுபவத்தை ஆராய்ந்து பாராமல், எடுத்தெறிந்து தள்ளி விடாதீர்கள்.'' வேலூரில் மாணவர்களுக்கு நிகழ்த்திய இந்த அறிவுரையை அண்ணல் மிகவும் முக்கியமானதாகக் கருதியுள்ளார். ஏனெனில் சில நாட்கள் கழித்துச் சென்னையில் மாணவர் கூட்டத்தில் அவர் பேசியபோது ''நான் ஆலோசனை செய்து வேலூர் மாணவர்களுக்குச் சில உபதேசங்களைக் கூறினேன். அது அப்படியே ''ஹிந்து'' பத்திரிக்கையில் வெளியிடப்பெற்றிருக்கிறது. அதைப் படிக்காதவர்கள் படிக்கும்படியும் படித்தவர்கள் மீண்டும் படிக்கும் படியும் கேட்டுக்கொள்கிறேன்'' என்று கூறியிருக்கிறார்.

31-8-27

மறுநாள் பெண்கள் வைத்தியப் பள்ளியில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவிகளுக்கு அவர் கூறிய அறிவுரை அன்று போல் இன்றும் பொருத்தமே. ''வைத்தியத் தொழிலில் அதிக வரும்படி கிடைக்கிறதென்று அநேகர் அத்தொழிலில் இறங்கி வருகிறார்கள். பெண்கள் பண ஆசையில் சிக்கக்கூடாது'' என்பதுதான் அதன் சாரம். ஆனல் அதேசமயம் பெண் வைத்தியர்களும் தாதிகளும் இந்தியாவிற்கு மிகவும் தேவை என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

பெண் வைத்தியர்

மாலையில் காந்தி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு வந்திருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கூட்டத்தில் ஏழு அல்லது எட்டுப்பேருக்கு ஒருவர் பெண்களாக இருந்தது, கதரில் தாய்க் குலம் காட்டிய அக்கறையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்திற்று. (நரசிம்மலு நாயுடு குழுவினரின் இசை அரங்கு நடைபெற்ற பிறகு தாலுகா காங்கிரஸ் குழுவின் சார்பாக அதன் செயலாளர் டாக்டர் ரங்கண்ணு வரவேற்புப் பத்திரத்தையும் பண முடிப்பையும் அளித்தார். நகரக்கதர்க் கடையும் தனியாக ஒரு வரவேற்புரையை அளித்து மகிழ்ந்தது.) இங்கு வந்த வுடன் மௌலானு சௌகத் அலியுடன் தாம் முன்பு இந்நகருக்கு வந்ததும் அதன் தொடர்பான நிகழ்ச்சிகளும் காந்திஜியின் நினைவிற்கு வந்துவிட்டன. வடநாட்டில் எழுந்துள்ள இந்து - முஸ்லிம் வேற்றுமை உணர்வு தென்னுட்டில் இல்லாதது அவருக்கு மன மகிழ்வு அளிப்பதாக அவர் சொன்னர். பொதுக்கூட்டத்திற்கு வருவதற்கு முன், தேச பந்து சித்தரஞ்சனதாஸ் பூங்காவை அண்ணல் திறந்து வைத்து அதன் அடையாளமாக ஒரு செடியையும் நட்டார். (வேலூர் நகராட்சி மன்றமும் தாலுகா போர்டும் தங்கள் வரவேற்புரைகளை வெள்ளித் தட்டுகளில் வைத்தளித்து நன்றியைத் தெரிவித்துக் கொண்டன.) இதற்கும் முன்னர் ஊரீஸ் கல்லூரியில் இந்தியக் கிறித்தவர்கள் சிலர் அவரைச் சந்தித்து உரையாடினர்.

பொதுக் கூட்டம்

வேலூர் அருகே இருந்த மௌன சுவாமி காந்திஜியுடன் தொடர்பு கொண்டது குறித்து, (14-4-67) ''தினமணி''

சிறப்பு இதழில் டாக்டர் வரதராசனார் ஒரு சுவையான தகவலை அளித்துள்ளார் : ''காந்தியடிகள் வேலூருக்கு வந்திருந்தபோது மௌன சாமியைப் பற்றி அவரிடம் ஒருவர் தெரிவித்தார். காந்தியடிகள் அவரைப் பார்க்க அழைத்து வருமாறு சொன்னார். அப்போது காந்தியடிகளுடன் இருந்த தேவதாஸ் காந்தி மௌன சாமியை அணுகிச் சில கேள்விகள் கேட்டார். சாமி விடைகளை எழுதிக் காட்டித் தெரிவித்தார். எந்த ஊர், என்ன வயது முதலான கேள்விகளுக்கு மட்டும் விடை கூறவில்லை. வேலூரை விட்டு காந்தியடிகள் புறப்பட்டபோது, தம்முடன் காரில் வருமாறு மௌன சாமிக்குச் சைகை காட்டினார். அவர் விருப்பம் போலவே, மௌனசாமி காந்தியடிகளுடன் காரில் ஏறிக் கொண்டார். ஐந்து நாட்கள் அவரோடு சுற்றுப்பயணத்தில் கலந்து கொண்ட பிறகு, வேலூருக்குத் திரும்பினார். தமிழ் நாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துத் தம் ஆசிரமத்துக்குத் திரும்பிய பிறகும், காந்தியடிகளின் நெஞ்சில் சாமியின் தொண்டு நினைவில் நின்றது. அப்போது அவர் நடத்தி வந்த ''யங் இந்தியா'' என்னும் இதழில் மௌனசாமியின் தொண்டின் பெருமையைக் குறிப்பிட்டு, நாட்டில் உள்ள மற்றத் துறவிகளும் அவரைப் பின்பற்றினால் பெரு நன்மை யாகும் என்று எழுதினார்.''

மௌன சுவாமிகள்

1-9-27

மறு நாள் காலை மோட்டாரில் குடியாத்தத்திற்குச் சென்றார். குடியாத்தத்தில் படித்துக் கொடுத்த வரவேற்புரையில் ஓர் உண்மையை அந்நகர மக்கள் வெளிப்படையாகக் கூறியிருந்தனர். இங்கு காந்திஜி வருவதற்குச் சில நாட்களுக்கு முன் இந்து-முஸ்லிம் சண்டை நடைபெற்றிருக்கிறது. ஆகையால் அவர்கள் தங்களுடைய வரவேற்புரையில், ''உங்களுடைய உடல் நலக்குறைவு ஒரு வகையில் ஆண்டவன் அளித்த வரப்பிரசாதமாக முடிந்தது. நீங்கள் முதலில் திட்டமிட்டபடி வந்திருந்தீர்களானால் எங்களுடைய பிணக்கைக் கண்டு மிகவும் மனம் வருந்தியிருப்பீர்கள். இப்போது தான் நாங்கள் அதிலிருந்து விடுபட்டு ஒற்றுமை அடைந்து வருகிறோம்'' என்று கூறியிருந்தனர். அங்கு மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கு கொண்டு அன்று இரவே

மக்கள் படையெடுப்பு

வேலூருக்குத் திரும்பிவிட்டார். குடியாத்தத்தில் காந்திஜியைக் காண வேண்டுமென்ற கட்டுக்கடங்கா ஆவலில், ஒரு பெரிய கூட்டம் அவர் இருப்பிடத்தைச் சூழ்ந்து கொண்டது. (மூசாபரி பங்களாவில் அவர் தங்கியிருந்தார்.) அது தவிர, அங்கிருந்து ஆற்றுப்படுகையில் கூட்டம் நடைபெறவிருந்த இடம்வரை மக்கள் திரள் ஈபுக இடம் இல்லாதவாறு முண்டியடித்து நின்றது. யாராலும் அமைதியை ஏற்படுத்த முடியவில்லை. பொது மக்களை ராஜாஜி எவ்வளவோ கேட்டுக் கொண்டும் பலன் தரவில்லை. ஆகவே, காந்திஜி தாமாக முன்வந்து இந்த அன்பு நெருக்கடியைச் சமாளித்தார். காரில் ஏறிக்கொண்டு, நகருக்கு வெளியே சென்று சாலை மரங்களின் அடி நிழலில் போய் அமர்ந்து கொண்டார். கூட்டத்தினருக்கு இச்செய்தி தெரிந்தபோது, அவர்கள் பெரும் ஏமாற்ற மடைந்தனர். தாங்கள் அமைதியாக நடந்து கொள்ளாததால் அண்ணல் பொதுக் கூட்டத்திற்கே வராமல் போய்விடுவாரோ என்று கவலை அடைந்தார்கள். ஆனல், சரியாக ஐந்தரை மணிக்கு - கூட்டம் தொடங்க நிர்ணயிக்கப் பெற்றிருந்த நேரம் - காந்திஜி மேடையில் தோன்றினர்! (பொதுக்கூட்டத்தில் பொதுமக்களின் சார்பாகவும், தாலுகா காங்கிரஸ் குழுவின் சார்பாகவும் இதை சண்முகாநந்த சுவாமிகள் கொடுத்தார் வரவேற்புரைகள் அளிக்கப்பெற்றன. வழியில் பள்ளி கொண்டா வாசிகள் சாலையில் கூடி நின்று அவரிடம் பண முடிப்பையும் இரண்டு வெள்ளிக் கோப்பைகளையும் தங்கள் காணிக்கையாக வழங்கினர்.)

2-9-27

ஆரணி

மறுநாளும் இதே போன்று ஆரணிக்குச் சென்று அன்றிரவே பல கிராமங்களின் வழியாக வேலூருக்குத் திரும்பிவிட்டார். (வழியில் ஆர்க்காட்டில் பாலாற்றங் கரையில் கூடியிருந்தமாபெரும் பொதுக் கூட்டத்தில் வாலாஜா தாலுகா காங்கிரஸ் குழுவினரும், காந்திஜி வரவேற்புக் குழுவினரும், யூனியன் போர்டாரும் தனித்தனியே வரவேற்புப் பத்திரங்களை அளித்தார்கள். இங்கு ஆர்க்காடு, அதன் சுற்றுப்புறங்களின் சார்பாக ஒரு தனிப் பண முடிப்பும் அம்மூர் கிராமத்தின் சார்பாக வரவேற்பும் அளிக்கப் பெற்றன. யூனியன் போர்டு தலைவர் ஏ. என். அண்ணுமலை

முதலியார் இரண்டு பண முடிப்புகளை அண்ணலிடம் அளித் தார்.) ஆரணியில் அவர் தங்கியிருந்த வி. ஜி. சேஷாசலம் செட்டியார் இல்லத்திற்குக் காலையிலேயே அவர் வந்து சேர்ந்து விட்டாராஞலும், பிற்பகல் இரண்டு மணி வரை அங்கு மக்கள் கூட்டம் குறையவில்லை. ஆரணிக்கு அவர் வருகை புரிந்தது இதுவே முதன் முறையாகும். திருவண்ணுமலை, போளூர், களம்பூர், திமிரி, சேத்துப்பட்டு, வந்தவாசி, தேசூர், வீராணுமூர், திருவத்தீபுரம் முதலிய ஊர்களிலிருந்தெல்லாம் அண்ணலைக் காண மக்கள் திரள் திரளாக வந்திருந்ததும் இதற்குக் காரணம். ஆரணியில் அண்ணலைக் காண அனைவருக்கும் வசதி அளிப்பதற்காகக் கடைகள் அனைத்தும் மூடப் பெற்றிருந்தன. கட்டணம் செலுத்தியவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பெற்ற கூட்டத்தி லும் (பரசுராம நாய்க்கரின் அரிசி மில் கட்டிடத்தில் இக் கூட்டம் நடைபெற்றது) இரண்டாயிரத்திற்கும் மேற்பட் டவர்கள் வந்திருந்தார்கள். இக்கூட்டத்தில் காந்திஜி தமது பேச்சைச் சுருக்கமாக முடித்துக்கொண்டு தமது விரிவான உரையைக் கேட்கப் பொதுக் கூட்டத்திற்கு வருமாறு கூறி விட்டார். ஆனல் அவர் பொதுக்கூட்டத்திற்குப் போவ தற்கு முன் மாதர்கள் கூட்டத்தில் பங்குகொள்ள வேண்டி யிருந்தது. வழக்கம்போன்று இப்பெண்கள் கூட்டத்திற்கும் ஏராளமான குழந்தைகளும் வந்திருந்தார்கள். வெள்ளித் தட்டு ஒன்றில் வைத்து மகாத்மாவிடம் பரசுராம நாய்க்க ரின் மனைவியார் அளித்த வரவேற்புரையை அழகாகப் படித்தது ஒரு சிறு பெண் குழந்தையாகும். குழந்தையை காந்திஜி தூக்கி முத்தமிட்டு, ''பாப்பா, நீ போட்டிருக்கும் நகைகள் எதற்கு? உன் தகப்பனுரைக் கதர்ப் பாவாடை வாங்கிக் கொடுக்குமாறு நீ ஏன் கேட்கவில்லை? இனிமேல் நீ நகைகள் போட்டுக்கொள்ள வேண்டாம். கதர் உடுத்து'' என்று அறிவுரை கூறத் தொடங்கிவிட்டார்! அதுமட்டு மல்ல. ஒருகதர் நூல் மாலையை அதன் கழுத்திலும் அணி வித்தார். ஆரணி கோட்டை மைதானத்தில் பொதுக் கூட்டம்; பதினுயிரக்கணக்கில் மக்கள் திரள்; ஆரணி யூனியன் போர்டு மற்றும் பல அமைப்புகளின் சார்பாக வரவேற்புரைகள் அளிக்கப்பெற்றன. காந்திஜி சென்னைக்குத் திரும்பினர்.

காந்திஜி சென்னை வந்து சேர்ந்த அன்று இரண்டு அம்சங்களை மக்களுக்கு ''இந்து'' நினைவுபடுத்தியிருந்தது.

''அண்மையில்தான் அண்ணல் கடுமையான உடல் நோயிலிருந்து குணமடைந்திருக்கிறார். ஆகையால் அவருக்குச் சிரமம் தரும் முறையில் மக்கள் நடந்து கொள்ளக்கூடாது'' என்று அது எச்சரித்திருந்தது.

இரு அம்சங்கள்

''கதர் நிதிக்குப் பணம் வசூல் செய்வதற்காகவே அவர் இங்கு வந்துள்ளார்; ஆகையால் தாராளமாக அந்த நிதிக்குப் பண உதவி அளியுங்கள்'' என்று வேண்டுகோள் விடுத்திருந்தது.

3-9-27 (சனிக்கிழமை)

கஸ்தூரிபா காந்தியுடனும் ராஜாஜியுடனும் மோட்டாரில், எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்திற்கு வந்து சேர்ந்த காந்திஜியை, ஐயங்காரின் பேரனான கிருஷ்ணசாமி மாலை சூட்ட, அவருடைய மனைவியாரும் மற்ற குடும்பத்தவரும் வரவேற்றனர். இன்று சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் திவான் பகதூர் ஆர். இராமச்சந்திரராவ், சி. எப். ஆண்ட்ரூஸ் ஆகியோர் அண்ணலைச் சந்தித்துப் பேசினர்கள். கிழக்கு ஆப்பிரிக்காவுக்குச் சென்று திரும்பியிருந்த ஆண்ட்ரூஸ் அங்கிருந்த நிலையை அண்ணலுக்கு விவரமாக எடுத்துக் கூறினர். இந்த வீட்டில் அவ்வப்போது காந்திஜியை ஊழியர்கள் சந்தித்துப் பேசினர்கள். காந்திஜி பங்கு கொண்ட ஊழியர் கூட்டங்களும் நடைபெற்றன. பிற்காலத்தில், சென்னை முதலமைச்சரான எம். பக்தவத்சலம் இங்குத்தான் காந்திஜியை முதன் முதலில் சந்தித்துப் பேசினர். 1920ஆம் ஆண்டு சென்னை பிராட்வேயில் நடைபெற்ற சட்டக் கல்லூரி மாணவர் கூட்டத்தில் இருந்த மாணவர்களில் இவரும் ஒருவர். அன்று அண்ணலின் பேச்சு இவர் உள்ளத்தை மிகவுங் கவர்ந்தது. தாம் போக வேண்டிய டிராமை விட்டு விட்டுத் தம்மை மறந்த நிலையில் வேறொரு டிரர்மில் ஏறிவிட்டார். பொது வாழ்வில் ஈடுபட்ட பின், இப்போதுதான் அவர் காந்திஜியைக் கண்டு பேச வாய்ப்புக் கிடைத்தது. பின்னர் செங்கற்பட்டு மாவட்டத்தில் காந்திஜி சுற்றுப்பயணம் செய்யச் சென்றபோது இவர் கூடப் போயிருக்கிறார்.

காந்திஜி சென்னைக்கு வந்த அன்று மாலை பெரம்பூர் பெருஞ்சாலையில் எம். எஸ். எம். அலுவலர்கள் சங்கக் கட்டிட

அடித்தளக் கல்லை நாட்டியதுடன் பக்கத்துக் கிராமமாகிய பேராவள்ளூரில் தொழிலாளர்கள் கூட்டம் ஒன்றிலும் உரையாற்றினார். சென்னை நகர் வந்து சேர்ந்தபின்

பல கூட்டங்கள்

அவர் பங்கு கொண்ட முதல் நிகழ்ச்சி இந்த அடித்தளக்கல் நாட்டு விழாவே. ஏழை மக்களுக்கான கதரை நிலைநாட்ட வந்த அண்ணல் ஏழைத் தொழிலாளர்கள் சங்கத்தின் கட்டிடத்திற்கு அடித்தளக்கல் நாட்டியது பொருத்தமாக இருந்தது. ''உங்களைக் காட்டிலும் ஏழைகளான தொழிலாளர்களுக்காகத் தான் கதர்'' என்று காந்திஜி இத்தொழிலாளர்கள் கூட்டத்தில் கூறினார். சங்கத் தலைவரான பஞ்சாட்சர ஆச்சாரி நன்றி கூறினார். பாரதத்தாயின் படம் ஒன்றை கஸ்தூரிபா காந்தி திறந்து வைத்தார். (பேராவள்ளூர் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எம். எஸ். எம். இரயில்வே அலுவலர்கள் சங்கமும் பெரம்பூர் காங்கிரஸ் குழுவும் பேராவள்ளூர் காந்தி சங்கமும் கதர் நிதிக்குப் பண முடிப்புக்கள் அளித்தன.) கதர் உடுத்தும் பழக்கத்தைப் பரப்புவதற்காகச் சீட்டுப் போடும் முறை ஒன்றை காந்தி சங்கத்தார் தொடங்கியிருந்தார்கள். இக்கூட்டத்தில் அண்ணல் பேசியபோது, அம்முறையைத் தாம் ஆதரிப்பதாகச் சொன்னார். காந்தி சங்கம் சார்பாக பி. பக்தவத்சலு நாயுடு எம். எல். சி. வரவேற்புரையை அளித்தார். இதை முடித்துக்கொண்டு மவுண்ட் ரோடில் உள்ள மெட்ராஸ் ஸ்டேபிள் கம்பெனி கட்டிடத்தில் நடைபெற்ற மாணவர்கள் கூட்டத்திற்கு காந்திஜி வந்தார். மாணவர்களின் சார்பாக வி. சி. ரெங்கசாமி பணமுடிப்பு ஒன்றை அளித்தபோது, ஆனந்தபாய் என்ற மாணவிதான் எல்லோரினும் அதிகத் தொகை வசூலித்தவர் என அறிவித்தார்; அந்த மாணவியை காந்திஜியும் பாராட்டினார்.

இரண்டு அமெரிக்கர்கள் வந்து இன்று அண்ணலிடம் கையொப்பம் கேட்டபோது, காந்திஜி முதலில் மறுத்தார். ஆனால் அவர்கள் மீண்டும் மீண்டும் வேண்டிக் கொள்ளவே, இவர்கள் கதர் உடுப்பதாக வாக்களிப்பதாலும் தாம் கையெழுத்துப் போட்டுக் கொடுப்பதாகக் கூறினார். அவர்கள் சிறிது நேரம் யோசித்து, பின்னர் ஒப்புக் கொண்டார்கள். காந்திஜியும் கையொப்பம் போட்டுக் கொடுத்தார்.

இரு அமெரிக்கர்

4–9–27

மறுநாள் இரவு அண்ணல் படுக்கப்போனபோது அளவுக்கு மீறிக் களைத்திருந்தார். மேற் கொண்ட அலுவல்கள் அந்த அளவிற்கு மிக அதிகமாக இருந்தன. அவர் நிகழ்த்திய சொற்பொழிவுகளும் நீளமாக இருந்தன. காலையில் ஒய். எம். சி. ஏ-யில் நடைபெற்ற கூட்டத்திலிருந்து மாலையில் கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டம் வரை தொடர்ந்து கூட்டங்கள் இருந்து கொண்டிருந்தன. முற்பகலில் கொஞ்சம் இடைவெளி இருந்தது. ஆனால் அந்தச் சமயத்தில் கூட அவரைச் சந்திக்க வந்த ஊழியர்களுக்கும் தலைவர்களுக்கும் அவர் பேட்டி அளிக்க வேண்டியதாயிற்று. அவர் ஒய். எம். சி. ஏ. யில் முகர்ஜி தலைமையில் நிகழ்த்திய சொற்பொழிவை ஓர் ஆன்மிகப் பேருரை என்றுதான் சொல்ல வேண்டும்.

ஏராளமான அலுவல்கள்

பாதிரியார் கேள்வி

வேலூரில் கிறித்தவப் பாதிரியார் ஒருவர் காந்திஜியைச் சந்தித்து ஒரு கேள்வி கேட்டார். ''நீங்கள் ஆன்மிகத்தைப் பற்றிப் பேசும்போது அதைக் கேட்க மிகவும் ஆனந்தமாக இருக்கிறது. ஆனால் திடீரென்று கதரை உள்ளே நுழைத்து வீடுகிறீர்களே? கதருக்கும் ஆன்மிகத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?'' என்று கேட்டார். அதற்கு காந்திஜி. ''நற்குணம் அல்லது மத வாழ்வு என்றால் அதை வார்க்கிலும் செயலிலும் காட்டவேண்டும். கடவுள் சொல்லியுள்ளபடி செய்கையில் காட்டாதவன் முக்திபெற அருகதையில்லாதவன் என்று இயேசுநாதரும் கூறியிருக்கிறார்'' என்று பதில் அளித்தார். அதற்குப் பாதிரியார்; ''தற்கால முன்னேற்ற அலையைத் தடுத்து உங்கள் கதரை ஆதரிக்குமாறு மக்களைத் திருப்ப முடியுமா? அற்ப சம்பாத்தியத்திற்கு உழைக்க அவர்களுக்கு எவ்விதம் விருப்பம் ஏற்படும்?'' என்று கேட்டார். காந்திஜி, ''நீங்கள் இந்தியாவை அறிந்து கொள்ளவில்லை,'' என்று பதிலிறுத்தார். இந்த உரையாடலை காந்திஜி இக்கூட்டத்தில் குறிப்பிட்டதுடன் இந்த அடிப்படையிலேயே கதரின் இன்றியமையாமையையும் விளக்கிக் கொண்டு போனார்.

ஆர்க்காட்டிற்கும் ஆரணிக்கும் சென்ற வழியில் காந்திஜி கிராமங்களில் கண்ட வறுமைக் காட்சி அவர் உள்ளத்தை

உருக்கியது. ''என்னைக் காட்டிலும் குறைந்த துணியைக் கட்டிக் கொண்டு அங்குள்ளவர்கள் வாழ்கிறார்களே? அத்த

கண்ணீர் விட்டார்

கைய ஏழை மக்களுக்காக நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? உங்களுடைய அழ கான சகோதரிகள் பட்டுப் புடவை கட்டுகின் றனர். நன்னெக்கத்துடன் அதை அவர்கள் கைவிட்டு, கைசளிக்க ஏழைகள் நூற்று நெய்த கதரை உடுத் துமாறு செய்வது உங்களுக்குச் சிரமமாயிருக்கிறதா? ஏன், கதர் கனக்கிறது, பட்டு இலேசாயிருக்கிறதா? 18 முழப் பட் டுப் புடவை கனமில்லையாம், கதர் தான் அதிகக் கனமாயிருக் கிறதாம்! கிராமங்களிலிருக்கும் அந்த நம் ஏழைச் சகோதரி கள் புடவை உடுக்கவில்லையா?'' இவ்வாறு மகாத்மர் கூறிக் கொண்டு வந்தபோது, அவருடைய குரல் கம்மி கண்களில் கண்ணீர் துளிர்த்து விட்டது. பிறகு நாத்தழுதழுக்க அவர் கூறினார்: ''அந்த ஏழைகள் நிர்வாணமாக இருக்கவில்லை. அதிகத் துணிகளைப் போட்டுக் கொண்டிருக்கும் நாம் தான் நிர்வாணமாக இருக்கிறோம். இராட்டையின் செய்தி முக்கியமாக ஓர் ஆன்மிகச் செய்தி தான்; அதன் காரண மாகவே அது இந்நாட்டில் மகத்தான அரசியல், பொருளா தார விளைவுகளை ஏற்படுத்தும் சக்தி படைத்ததாக இருக் கிறது. ''ஏழைகளிலும் ஏழைகளானவர்களுக்கான இச் செய்தியை ஆண்டவனிடம் முழு நம்பிக்கை வைத்து நான் கொண்டு செல்கிறேன். நீங்கள் என்னைப் பார்த்துச் சிரிக்க லாம். இவருக்குத் தெரிந்த அரசியல் ஜாலம் இவ்வளவுதானு என்று ஏளனம் செய்யலாம். ஆனாலும் நான் உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையை இழக்கவில்லை. ஏனென்றால், ஆண்டவன் மீது நான் நம்பிக்கை இழக்க முடியாதல்லவா? ஆகவே இராட்டையிலும் நான் வைத்துள்ள நம்பிக்கையை இழக்க முடியாது,'' என்று கூறினார்.

இந்துவும் கீதையும்

திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் சிங்கராச்சாரி மண்டபத்தில் அவருக்குப் பண முடிப்புக் கொடுத்தபோது, ''நீங்கள் இந்துக்கள் என்று சொல்லிக் கொள்கிறீர்களே, உங்களில் எத்தனை பேர் கீதை படித்திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். ஆயிரத்திற்கு மேல் கூடி யிருந்தவர்களில் ஆறு பேர் தாம் கையை உயர்த்தினார்கள். அப்புறம் கேட்கவா வேண்டும்? ஒரு இந்து சமஸ்கிருதத் தையும் கீதையையும் படிக்க வேண்டியதன் அவசியத்தைப்

பற்றித் தான் அங்கு அவருடைய உரை இருந்தது. இந்தக் கூட்டத்தில் என். எஸ். வரதாச்சாரியார் கூறிய ஒரு செய்தி யாவது அண்ணலுக்கு மன நிறைவை அளித்திருக்க வேண்டும். சங்கத்தின் நோக்கங்களை அவர் விளக்கிப் பேசிய போது, பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் உபகாரச் சம்பளத்திற்காக நிதி வழங்கியிருப்பதாகவும் இதில் முதல் தொகை, நூற்பு, நெசவு அல்லது ஏதாவது ஒரு கைத் தொழிலில் திறமை உள்ளவனுகத் தோன்றும் பையனுக்கு அளிக்கப் பெறுகிறது என்றும் அவர் சொன்னர். சங்கத் தலைவரான டி. வி. முத்துகிருஷ்ண ஐயர் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். காந்திஜிக்கு மகிழ்ச்சி அளித்த மற்றொரு செய்தி, இது சாஸ்திரி தலைமை ஆசிரியராக இருந்த உயர்நிலைப்பள்ளி என்பதாகும்.

அண்ணலின் வருகையை முன்னிட்டு மாநில சார்ரணர் சங்கத் தலைமை அலுவலகமான வென்லாக் பூங்காவை அன்று நன்கு அலங்காரம் செய்திருந்தார்கள். அவர்

உற்பத்தி இடம்

முன்னலேயே குத்துச் சண்டை, மல்யுத்தம், மற்றும் சார்ரணர் விளையாட்டுக்கள் முதலியவை வகை வகையாக நடைபெற்றன. சென்னை மாவட்டக் கவுன்சில் துணைத் தலைவரான டி.எஸ். இராமசாமி ஐயர் வரவேற்புரையைப் படித்தார். இவ்வளவு கோலாகல மான வரவேற்பிற் கிடையிலும் அண்ணல் தமது தூண்டி யில்தான் கண்ணுயிருந்தார். ''எனது அன்புள்ள சாரணர் களே, உங்கள் விளையாட்டுக்களையெல்லாம் காண மிகவும் மகிழ்ச்சிதான். ஆனல் எதிலிருந்து உங்களுடைய சேவை தொடங்க வேண்டுமோ அதிலிருந்து தொடங்கினலொழிய நான் முழு மகிழ்ச்சி அடையப் போவதில்லை. நீங்கள் கதர் அணிய வேண்டும். அதிலிருந்து தான் உங்கள் சேவை தொ டங்க வேண்டும்'' என்று அவர்களுக்கு அறிவுரை கூறினர். காந்திஜியின் சொற்பொழிவை டி. எஸ். இராமசாமி ஐயர் மொழி பெயர்த்தார். இங்கிருந்து காந்திஜி கதர் வஸ்திரா லயத்திற்குச் சென்றுவிட்டுக் கடற்கரைப் பொதுக்கூட்டத் திற்குப் போனர்.

பொதுக்கூட்டத்திற்கு அடையாறு பிரம்மஞ்ஞான சங்கத்தார் ஒலிபெருக்கி கொடுத்து உதவியிருந்ததால் தூரத்தில் இருந்தவர்களெல்லாம் காந்திஜியின் பேச்சை நன்கு கேட்க முடிந்தது. இந்தச் சுற்றுப்பயணத்தின்

முடிவில் டில்லிக்குச் சென்னை அனுப்பியிருந்த அறிக்கையில், இதைக் கிண்டல் செய்திருந்தது, ''செப்டம்பர் 4-ஆம் தேதி யன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் மேற்கு நாட்டார் கண்டுபிடித்த ஒரு சாதனம்-ஒலிபெருக்கி என்ற சாதனம் - பயன்படுத்தப் பட்டது. அதை யாரும் எதிர்க்கவில்லை என் பது வெளிப்படை. சென்னையில் நடைபெற்ற வசூல் காந்திஜி எதிர்பார்த்த அளவு இல்லை. ஆகை யால் அதிகமான பணம் அளிக்குமாறு அவர் சிரத்தையோடு ஒரு வேண்டுகோள் விடுத்தார். செங்கற்பட்டில் வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்தவர்கள் அவருடைய வரவேற்பில் முக்கிய பங்கு எடுத்துக்கொண் டார்கள். ஒரு மாது அவருக்கு வரவேற்புரை அளித்தார்'' என்று அதில் கூறப்பட்டிருந்தது. காந்திஜி ஆங்கிலத்தில் பேசியதை அவ்வப்போது இராஜாஜியும் சத்தியமூர்த்தியும் மொழி பெயர்த்துச் சொன்னார்கள். சில மாதங்களில் காங்கிரஸ் சென்னை மாநகரில் கூடுவதாய் இருந்ததால், அதைப்பற்றி அண்ணல் குறிப்பிட்டார். பிராமணர் - பிராமணரல்லாதார் என்ற வேறுபாடுகள் அடுத்த காங்கிரஸ் ஏற்பாடுகளில் குறுக்கிடாமலிருக்குமாறு பார்த் துக்கொள்ளும்படியும் அவர் கேட்டுக்கொண்டார். பிராம ணர் - பிராமணரல்லாதார் போன்ற வேறுபாட்டுணர்ச்சி வேண்டாம் என்றும் கேட்டுக்கொண்டார். கதரைப் பற்றி அண்ணல் மிகவும் உருக்கத்தோடு குறிப்பிட்டார். ''உங்கள் கண்முன்னுலிருக்கும் இந்த எளிய காரியத்தைக் காண மறுத்துவிட்டுக் கோழைத்தனமான விரக்திக்கு இடமளித்து விடுகிறீர்கள். நாட்டின் பெயரால், கோடிக்கணக்கான எழை மக்களின் பெயரால் கேட்கிறேன். தயவு செய்து இந்தத் தூக்க மயக்கத்திலிருந்து எழுங்கள்.'' என்றார். பொதுக்கூட்டத்தில் மீன்காட்சி சாலையிலிருந்து தலைமைப் பொறி இயல் அதிகாரி அலுவலகம் வரை மக்கள் திரளாகக் கூடி நின்றனர். குசராத்தி தொண்டர்கள் வழி நெடுக எராளமாக நின்று அமைதியையும் ஒழுங்கையும் நிலை நாட்டிக் கொண்டிருந்தார்கள். முத்துரங்க முதலியார் தலைமை தாங்கினர். (சென்னை நகர மக்களின் சார்பாகவும், புரசவாக்கம் தொழிலாளர்கள், இந்தியன் இண்டஸ்டிரியல் கம்பெனி அலுவலர்கள், ஜாம்பஜார் மக்கள், மாணவர்கள் ஆகியோர் சார்பாகவும் முத்துரங்க முதலியார் காந்திஜி யிடம் பண முடிப்புகளை வழங்கினர். புரசவாக்கம் தொழி

ஒலி பெருக்கி

லாளர்கள், ஆதி திராவிடர்கள் சார்பாகவும் மற்றும் ஏராளமான அமைப்புகளின் சார்பாகவும் வரவேற்புரைகள் கொடுக்கப்பெற்றன.) இந்நிலையில் இச்சுற்றுப் பயணத்தின் பொதுவான சில அம்சங்களைப் பார்ப்போம்.

பண முடிப்புகள்

இந்தச் சுற்றுப்பயணத்தின்போது ஒவ்வொரு ஊரிலும் அநேகமாக ஒவ்வொரு கூட்டத்திலும் (குறிப்பாகப் பொதுக் கூட்டங்களில்) கதர் நிதிக்காக அவரிடம் பண முடிப்புகள் வழங்கப்பெற்றன. ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் அண்ணலிடம் அன்பளிப்பாக வழங்கப்பெற்ற பொருள்களை ஏலத்திற்கு விடுவதும் பெரும்பாலும் ஏலத்தில் நிறைய நிதி கிடைப்பதும் வழக்கமாயிருந்தது. ஓரிரு இடங்களில் டிக்கெட் வைத்துக் கூட்டங்கள் நடத்தி, வசூலான பணத்தைக் கதர் நிதிக்கு அளித்திருக்கிறார்கள். காந்திஜி இந்தச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு வந்தபோது எஸ். இராமனுதன் சர்க்கா சங்கச் செயலாளராக இருந்தார். காந்திஜியுடன் வந்தவர்கள் கஸ்தூரிபா காந்தி, குமாரி இலட்சுமி, ராஜாஜி, மகாதேவ தேசாய், காகா கலேல்கார் ஆகியோராவர். எதிர்கால மருமகளாகப் போகும் குமாரி இலட்சுமியை (தாம் அதை அறியாமலேயே) கஸ்தூரிபா நன்கு அறிந்து கொள்வதற்கு இப்பயணம் ஒரு நல்ல வாய்ப்பாக இருந்திருக்கலாம்!

உடல்நிலை

காந்திஜி மிகவும் மெலிந்திருந்தார். அவரால் உரக்கப் பேசக்கூட முடியவில்லை. சில சமயம் அவர் பேசியது பக்கத்தில் இருந்தவர்களுக்குக் கூடக் கேட்கவில்லை. அடிக்கடி அவருடைய உடல் நிலையை டாக்டர்கள் சோதித்துப் பார்க்கவேண்டியிருந்தது. காந்திஜி குழுவினருக்காக இரயில்வே நிருவாகத்தினர் ஒரு தனிப்பெட்டியை அளித்தது கொஞ்சம் வசதியாக இருந்தது. உடல் நிலையின் காரணமாக, சுற்றுப்பயண நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பெற்ற சில இடங்களுக்குச் செல்ல முடியவில்லை. ஆகையால் கஸ்தூரிபா காந்தியாவது மகாதேவ் தேசாயாவது அவருக்குப் பதிலாக அந்த இடங்களுக்குச் சென்று வரவேற்புரைகளையும் நிதிகளையும் பெற்று வந்தார்கள். இம்முறை காந்திஜிக்கு அளிக்கப்பெற்ற வரவேற்புரைகளில் மிகப் பெரும்பாலானவை படிக்காமலேயே அவரிடம் அளிக்கப் பெற்றன.

காந்திஜி சென்ற ஒவ்வொரு ஊரிலும் கதர் வளர்ச்சியைப் பற்றி மட்டுமல்லாமல், பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலையும் விவாதிக்க வேண்டியிருந்தது.

பிராமணர்-அல்லாதார்

அந்த அளவுக்கு இச் சிக்கல் 1927-இல் தமிழகத்தில் விசுவரூபம் எடுத்திருந்தது; தேசிய இயக்கத்தின் வளர்ச்சிக்கும் ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இருந்தது. ஆகையால் எப்படியாகிலும் இச் சிக்கலைத் தீர்த்து வைக்க அவர் உதவ வேண்டுமென்று பலர் கேட்டுக்கொண்டனர். காந்திஜியும் தாம் சந்திக்க நேர்ந்த பிராமணர், பிராமணரல்லாதார் தலைவர்களையெல்லாம் இச்சிக்கலை அவர்களே தீர்த்துக் கொள்ளும்படி அறிவுரை கூறிக்கொண்டு வந்தார். ''காந்திஜியை பிராமணர்கள் தங்கள் கைக்குள்ளேயே வைத்திருக்கிறார்கள், பிராமணரல்லாதார் அண்டவிடுவதில்லை'' என்பது பிராமணரல்லாதாரின் ஓயாத குற்றச்சாட்டாக இருந்தது. ஆகையால் முக்கியமான நீதிக்கட்சித் தலைவர்களெல்லாம் இம்முறை காந்திஜியைச் சந்திக்க ஏற்பாடு செய்யப்பெற்றது. கதரின் முக்கியத்துவத்தை அண்ணல் எவ்வளவு அக்கறையோடு எடுத்துச் சொன்னாரோ அவ்வளவு அக்கறையோடு பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலைத் தமிழர்கள் அவரிடம் எடுத்துச் சொன்னார்கள். காந்திஜி இதை அக்கறையுடன் கேட்டு, சிக்கலைத் தீர்ப்பதற்குத் தமது வழியையும் கூறினார். அவருடன் பேச வந்த பிராமணரல்லாதார் தலைவர்களிடம், ''பிராமணர்களின் பண்பாட்டை அழித்து விடாது பாதுகாருங்கள்'' என்று கூறியிருக்கிறார்.

நீண்ட பயணம்

கதர் என்னும் காந்திஜிக்கு உயிர் அல்லவா? ஆகவே, இந்தக் கதர்ச் சுற்றுப்பயணம் மிகவும் நீண்ட சுற்றுப்பயணமாக அமைந்துவிட்டதில் வியப்பில்லை. மாயவரத்தில் 2 நாட்கள், திருச்சியில் நான்கு நாட்கள், செட்டி நாட்டில் ஆறு நாட்கள் என்று சுற்றுப்பயணம் போய்க்கொண்டிருந்தது. மேலும் இதற்கு மற்றுமொரு காரணம் இருந்தது. காந்திஜி பலவீனமாக இருந்ததால் அவரால் ஒவ்வொரு நாளும் ஒன்று அல்லது இரண்டு நிகழ்ச்சிகளுக்கு மேல் பங்கு கொள்ள முடியவில்லை. ஆகையால் ஒவ்வொரு ஊரிலும் அதிக நாள் தங்க வேண்டியிருந்தது. மொத்தத்தில், தமிழகத்தில் காந்திஜி மேற்கொண்ட சுற்றுப் பயணங்களிலெல்லாம் இதுவே மிக நீண்ட சுற்றுப்பயணம்.

நாம் ஒரு மகாத்மாவாக மக்களிடம் வரவில்லை என்றும் தரித்திர நாராயணர்களின் சேவகனாகவே வந்திருப்பதாகவும் அடிக்கடி அண்ணல் நினைவூட்டினர். பொது மக்கள் கதர் நிதிக்கு (அதுவரை) கொடுத்த பணமும் நகைகளும் போதாவென்றும் தரித்திர நாராயணர்களின் வறுமை என்னும் பெரிய சிக்கலைத் தீர்க்க இன்னும் தாராளமாகப் பண உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். ஆனால் என்ன தான் பணமோ நகைகளோ அளித்தாலும் அவர்கள் கதர் அணியாவிட்டால் முடிவில் ஒரு பயனும் இல்லை என்பதையும் எச்சரித்தார். பல நகர்களில் கதர் உற்பத்தி நிலையங்களைத் தொடங்க வேண்டும் என்று அவரிடம் கேட்டுக்கொண்டார்கள். போதுமான நூற்பாளர்களும் நெசவாளர்களும் அந்நகர்களில் கிடைப்பதாக இருந்தால், உற்பத்தி நிலையத்தைத் தொடங்கத் தமக்கு எவ்விதமான மறுப்பும் இல்லை என்று அண்ணல் ஒரே மாதிரியான பதிலையே கூறிக்கொண்டு வந்தார்.

வறுமை பெரிது

5, 6-9-27

கதரைத் தமிழக தேசிய நாளிதழ்களும் சஞ்சிகைகளும் மனமார வரவேற்றிருக்கின்றன. ''மெயிலை''ப் போன்று ஒரு சில இதழ்கள் மட்டும் அதை ஆதரிக்க வில்லை. ஆனால் அவையும் அவ்வளவு கடுமையாக எதிர்க்கவில்லை. ''மெயில்'', கதரைப் பரப்புவதில் காந்திஜிக்கு மறைமுகமான ஒரு நோக்கம் இருப்பதாகச் சுட்டியிருந்தது. பொருளாதாரக் காரணங்களை உத்தேசித்துக் கதரை மகாத்மாஜி வற்புறுத்தவில்லை என்றும் அதை அவர் ஒரு புரட்சிக் குறியாகவே கருதுகிறார் என்றும் கதரைக் கொண்டு தேச மக்களை ஒன்றுகத் திரட்டவே அவர் முக்கியமாகக் கருதுகிறார் என்றும் எழுதியிருந்தது. ''போதுமான வருமானந் தரமுடியாத ஒரு வேலையில் எத்தனை பேர்களை அமர்த்திவிடலாம்?'' என்றும் அது கேட்டிருந்தது. இதை எடுத்துக்கொண்டு ''சுதேசமித்திரன்'' ஆணித்தரமாக 'மெயிலு'க்கு மறுமொழி கூறிற்று. ''நமது மெட்ராஸ் மெயிலின்'' ஆசிரியர் பொருளாதாரத் துறையில் கதர் உண்டு பண்ணக்கூடிய நிலைமையை உத்தேசித்தே பயப்படுகிறார் என்று நினைக்கிறோம். இந்தியாவுக்குத் தேவையான வஸ்திரம் முழுமையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யக்கூடிய காலம் வந்து

நாளிதழ்கள்

விடின், லங்காஷயரின் கதி என்னுகுமென்ற கவலே அவருக்கு இருப்பதாகவே நினைக்கிறேம்'' என்று தாக்கியது.

மதுவிலக்கு ஆதரவாளர்

திருவல்லிக்கேணி மணி ஐயர் மண்டபத்தில் மதுவிலக்கில் அக்கறை கொண்டவர்களின் கூட்டத்தில் பேசுவதற்காக வந்த காந்திஜியை சர் டி. சதாசிவ ஐயர் வரவேற்றார். மதுவிலக்கிற்கு இன்று என்னென்ன மறுப்புக்கள் கூறப்படுகின்றனவோ அவைகளெல்லாம் அன்றும் கூறப்பட்டன. அவைகளே ஒவ்வொன்றாக எடுத்துக் கொண்டு, ஒவ்வொன்றிற்கும் விவரமாக காந்திஜி பதில் அளித்தார். அப்போது சென்னே கலால் துறை அமைச்சராயிருந்தவர், இரண்டு மாவட்டங்களில் மட்டும் மது விலக்கைச் செயலுக்குக் கொண்டு வந்து ஒரு சோதனே பார்க்கலாம் என்று கூறியிருந்தார். அதை காந்திஜி ஒப்புக் கொள்ளவில்லே. ''இது தவருன முறை. அங்கு அது தோல்வியடைந்து விட்டால் பின்பு மதுவிலக்குத் திட்டத்திற்கே களங்கம் கற்பிக்கப்படும்'' என்று கூறினர். ''வேண்டுமென்று சிலர் பணஞ் செலவழித்துக் கிளர்ச்சி உண்டு பண்ணினுலல்லாது, இந்தியாவில் மக்களிடையே மதுவிலக்கிற்கு எதிர்ப்பு எதுவும் இல்லே. மேலும், இந்தியாவில் மதுவிலக்கைச் செயல்படுத்திக் காட்டுவது, மற்ற நாடுகளுக்கு ஒரு முன்னுதாரணமாய் இருக்கும்'' என்றும் அவர் சொன்னர்.

பொறுமை யாரிடம்?

மதுவிலக்கு ஆதரவாளர்களின் கூட்டத்தில் அவர் மேலும் உணர்ச்சியோடு கூறினர்: ''ஒரு குடிகாரனின் மனைவியைப் பொறுமையாக இருக்கச் சொல்லுங்கள். அப்போது அவள் உங்களேப் பற்றி என்ன நினைப்பாள்? ஆயிரக்கணக்கான குடிகாரர்களின் மனேவியாக என்னே நான் கருதிக் கொண்டிருக்கிறேன். ஆகையால் நான் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது. ஆயிரக்கணக்கான குடிகாரர்கள் நம்மத்தியில் வாழ்வதைக் காட்டிலும் நம்முடைய நாடு பரம ஏழைகளின் நாடாகப் போய் விடுவது நல்லது. இந்தியாவில் மது விலக்கைச் செயல்படுத்துவதன் மூலம் கல்வி பாதிக்கப்படும் என்றால், கல்வியே இல்லாமல் இந்தியா இருப்பதற்கும் நான் தயாராய் இருக்கிறேன்.''

அப்போது இந்திப் பிரச்சார அலுவலகம் திருவல்லிக் கேணியில் இருந்தது. இங்கிருந்து நேரே இந்திப் பிரச்சார கர்கள் கூட்டத்திற்குச் சென்றார். இந்தி பிரேமி மண்டல் சார்பாகவும் இந்திப் பிரச்சார அச்சக அலுவலர்கள், தொழிலாளர்கள் சார் பாகவும் தனித்தனியாக வரவேற்புரைகள் அளித்தனர். ''என்னுடைய சொந்தத் தாபனமாக இதை நான் கருதுகிறேன். இதில் எனக்கு வரவேற்புரை வாசித் தளிப்பது எனக்கு நானே மரியாதை செய்து கொள்வது போன்றதாகும்''என்று காந்திஜி கூறினார். தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நற்சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கினார். இந்த இடத்தில் யோகி சுத்தானந்த பாரதி யார் காந்திஜியைச் சந்தித்தார். அவர் கூறுகிறார்: ''அப்போது என்னிடம் இருந்த பாங்குப் பணம் முழுதும் காந்திஜியிடம் தந்து நான் தவம் புரிய இமயமலை செல்வதாக காந்திஜி யிடம் கூறினேன். 'பணத்தை நீயே வைத்திரு, ஆனால் நீ இமாலயம் செல்லக்கூடாது. உன் தவத்தை இங்கேயே நடத்து. தேச சேவையே தவம்' என்றார் காந்திஜி. அதன் படியே செய்தேன்.''

இந்தி சபை

இன்று சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் காந்திஜியை எஸ். சத்தியமூர்த்தி தனியாகச் சந்தித்து, அடுத்துச் சென்னையில் கூட இருக்கும் காங்கிரஸ், சென்னை சட்ட மன்றம், நீல் சத்தியாக்ரகம் முதலிய சிக்கல்களைப் பற்றிக் கலந்தாலோசித்தார். இந்த இடத்தில் சத்தியமூர்த்திக்கும் காந்திஜிக் கும் இருந்த உறவையும் நீல் சிலை அறப்போர் தொடங்கப் பெற்ற வரலாற்றையும் நாம் சிறிது தெரிந்து கொள்வது அவசியம். ''காந்தியடிகளின் தலைமையை சத்தியமூர்த்தி மனமார ஏற்றுக் கொண்டார். அண்ணல் தலைமையில் காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானங்களுக்கு முழுமனதுடன் உடன்பட்டு அவைகளை நாடெங்கிலும் செயலுக்குக்கொண்டு வர, சொல்லாலும் செயலாலும் முயன்றிருக்கிறார்; என்று லும், சாதாரணமாக காந்தியவாதி என்று நாம் குறிப்பிடும் பொருளில் பார்த்தால் சத்தியமூர்த்தி ஒரு காந்தியவாதி அல்ல. அரசியல் விவகாரங்களில் ஆன்மிக தத்துவங்களைக் கலப்பது சரியல்ல என்பதே அவருடைய நம்பிக்கை. காந்தி யடிகளின் கருத்துக்கும் தம்முடைய கருத்துக்கும் உள்ள வேறுபாட்டை காந்தியடிகளுடனும் பிறருடனும் அவர்

சத்திய மூர்த்தி

தைரியமாக வாதித்திருக்கிறார். சில சமயம் அந்த முரண் பாட்டை பகிரங்கமாகப் பிரச்சாரம் செய்தும் இருக்கிறார். ஆனாலும் காங்கிரசில் காந்தியடிகளின் தீர்மானம் நிறை வேறிவிட்டால் அதை அப்படியே நிறைவேற்றுவதில் அவர் விசுவாசமாக இருந்தார். இந்த அடிப்படையில் பார்த்தால் காந்தியத்தின் பரம பக்தர்களாக பாவனை செய்த பலபேரைக் காட்டிலும் சத்தியமூர்த்தி சிறந்த காந்தியவாதியாகவே விளங்கினார். கடைசிக் காலத்தில் காந்தியடிகளின் சிறப்பை அவர் மிக அதிகமாகவே உணர்ந்தார். மகாத்மா காந்தி அவர்களின் அபூர்வ முயற்சிகளை நேரில் கண்ட பிறகு தான் இந்த நாட்டில் மகரிஷிகள் வாழ்ந்ததும் உபதேசித்ததும் உண்மைதான் என்று நம்பலானேன் என்று அவர் வெளிப் படையாகவே கூறியிருக்கிறார்.'' *

நீல் சிலை

சிப்பாய்ப் புரட்சிக் காலத்தில் (1857) அக்கிரமங்கள் புரிந்த நீல் துரைக்கு சென்னை மவுண்ட் ரோடில் முக்கியமான ஓர் இடத்தில் போலீஸ் நிலையத்தின் எதிரில் நீல் சிலை வைக்கப்பட்டிருந்தது. இம்முறை காந்திஜி வருவதற்குச் சற்று முன்னுலிருந்தே நீல் சிலையை அகற்றுவதற்காக அறப்போர் நடைபெற்றுக் கொண்டு வந்தது. சில இளைஞர்கள் இந்த அறப்போரில் தீவிர அக்கறை காட்டினர். சிலையை உடைக்க முயன்ற மதுரையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை அரசு கைது செய்து அவர்கள் மீது வழக்குத் தொடர்ந்திருந்தது. அரசின் இச்செயல் பொதுமக்களிடையே ஆத்திரத்தையும் உணர்ச்சிப் பெருக்கையும் ஏற்படுத்தியது. இதைக் குறித்து ''யங் இந்தியா''வில் காந்திஜி குறிப்பிட்டு மேற்கண்ட இரண்டு இளைஞர்களின் வீரத்தைப் பாராட்டியிருந்தார். ''இந்தச் சிலைகளைச் சென்னை நகராண்மைக் கழகம் அப்புறப் படுத்திவிட வேண்டும்'' என்றும் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால் நகராண்மைக் கழகம் அச்சிலையை அப்புறப்படுத்த வில்லை. போராட்டமும் தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருந்தது. காந்திஜி வந்தபோது, ஆரும் தேதியன்றும் ஏழாம் தேதியன்றும் அவரைச் சந்தித்துப் போராட்டத்தை நீடிப்பதா அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைப்பதா என்பது குறித்து ஊழியர்கள் விவாதித்தார்கள். டி. குழந்தை, எம். எஸ். சுப்ரமணிய ஐயர், கிருஷ்ணசாமி

* நாமக்கல் கவிஞரின் ''தேச பக்தர் மூவர்''

பாவலர், நித்தியானந்தம் ஆகியோர் இந்த விவாதத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்டனர். தலைவர் சத்தியமூர்த்தியும் இதில் தலையிலா அக்கறை எடுத்துக் கொண்டார். ஒவ்வொரு சிக்கலையும் எவ்வளவு நுணுக்கமாக காந்திஜி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவாரென்பதற்கு நீல் சிலை அறப்போர் ஒரு சான்றாகும். இந்தச் சிலையின் அடியில் எழுதப்பெற்றிருந்த வாசகத்தை அவர் படித்துப் பார்த்து, அது பொய்யான வரலாறு என்றும், அது அங்கே இருக்க அனுமதிப்பது நாட்டிற்கே அவதூறு செய்வதாகும் என்றும் கூறினார். ''சென்னை ஃப்யூசிலியர்ஸ் (துப்பாக்கி) படை லெப்டினென்ட் கர்னலும் பிரிட்டிஷ் பேரரசியின் ஏ.டி.சியுமான ஜேம்ஸ் ஜார்ஜ் ஸ்மித் நீல் உறுதியும் தன்னம்பிக்கையும் படைத்த ஒரு போர் வீரர். வங்காளத்தில் கிளர்ச்சியை எதிர்த்துத் தடுத்தவர்களில் முதன்மையானவர் என்று எல்லோராலும் ஏற்கப் பெற்றவர். இலட்சுமணபுரி நிவாரண நடவடிக்கையில் 1857 செப்டம்பர் 25-ஆம் தேதியன்று இவர் புகழ்மிக்க மரணம் அடைந்தார்'' என்று அச்சிலையின் அடியில் எழுதப்பெற்றிருந்தது. (நீல் சிலை இப்போது சென்னை பொருட்காட்சியில் இருக்கிறது). கவர்னராய் இருந்த சர் தாமஸ் மன்ரோவின் உறவினன் நீல் என்பதும் வட இந்தியாவில் ஜான்ஸி ராணியின் தலைமையில் 1857-இல் நடந்த முதல் சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்க அனுப்பப்பட்டபோது, அவன் செய்த அட்டூழியங்களுக்கு அளவே இருக்கவில்லை என்பதும், அங்கு ஒரு நாள் வீட்டு உப்பரிகையிலிருந்து யாரோ குறி வைத்துச் சுட அவன் உயிர் இழந்தான் என்பதும், காந்திஜிக்கு ஏற்கனவே தெரியும். ''சிலை உயிரற்ற பொருள்: அதை உடைப்பதில் தவறில்லை; இம்சையுமல்ல; என்றாலும் அருகில் இருக்கக் கூடிய போலீஸ் சேவகர்கள் மீது காயம் ஏற்படும் முறையில் நடந்து கொள்ளக்கூடாது. சத்தியாக்ரகத்துக்கு அது உகந்தது அல்ல. களிமண் உருண்டைகளைச் சிலை மீது குறி வைத்து வீசி எறியுங்கள். உங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்க அதுவே போதுமானது'' என்றார் காந்திஜி. நீல் சிலையை உடைத்தெறிய வேண்டும் என்ற யோசனையைக் கூறியவர்கள் சோமயாஜுலுவும் சீனிவாச வரதனும் ஆவர் என்று காந்திஜியிடம் எடுத்துக் கூறப் பெற்றது. ''மதுரையில் பட்டாக்கத்தி சத்தியாக்ரகம் தோல்வியடைந்த பிறகா?'' என்று காந்திஜி கேட்டார். மதுரையில் ஆயுதச் சட்டத்தை மீறி, அதனைச் செல்லாமற்

போகும்படி செய்ததற்காக, தெருவில் ஊழியர்கள் பட்டாக் கத்திகளைத் தாங்கிக்கொண்டு ஊர்வலம் வந்தார்கள். இதன் பின்பே நீல் சிலை சத்தியாக்ரகம் நடைபெற்றது. இதைத்தான் காந்திஜி குறிப்பிட்டார். உடனே ஓர் ஊழியர் குறுக்கிட்டுச் சொன்னார்: ''அது ஒரு தோல்வியே அல்ல. நாங்கள் தெருக்களில் பட்டாக்கத்திகளுடன் தாராள்மாகச் சென்றோம். யாரும் எங்களைக் கைது செய்ய வில்லை''. மகாத்மாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவர் சொன்னார்: ''அது ஒரு வெற்றி என்று நினைத்து உங்களையே நீங்கள் ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். நீங்கள் கொண்டு சென்றவையெல்லாம் வெறும் தகரத்தகடுகள் என்பதையும் மக்களின் ஆதரவு உங்களுக்கு இல்லை என்பதையும் அறிந்து அரசாங்கம் உங்களை விட்டுவிட்டது. கைது செய்யப்பட வில்லை என்பதற்காக நீங்கள் வெற்றியடைந்து விட்டதாகக் கூறுவதில் பொருள் இல்லை. ஆயுதச் சட்டத்தை அகற்றி விட்டு, ஒவ்வொருவரும் தாம் விரும்பிய ஆயுதத்தை எடுத்துச் செல்ல அரசாங்கம் அனுமதித்துவிட்டது என்றால் அப்போதுதான் உங்களுடைய குறிக்கோள் வெற்றி பெற்று விட்டது என்பது பொருளாகும். ஆனால் அது முடியாது என்பது ஞாபகமிருக்கட்டும். சுதந்திர அரசாங்கம் கூட இராணுவச் சட்டம் ஒன்று இல்லாமல் இருக்க முடியாது''. இதன்பின் நீல்சிலை சத்தியாக்ரகத்தில் காங்கிரஸ் அதிகார பூர்வமாகப் பங்கேற்றுக் கொள்ள முடியாது என்றும் இளைஞர் களே அதை மேற்கொள்ள வேண்டுமென்றும் காந்திஜி கூறி விட்டார். ஆனால் அவர்கள் இச் சத்தியாக்ரகத்திற்குத் தகுதி யானவர்கள் தாம் என்பதை மெய்ப்பித்துக் காட்டினால், காங்கிரஸ் அவர்கள் பின்னால் உதவிக்கு வரும் என்று சொன்னார்.

பாவலர்: இந்த இயக்கத்தை நீங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கலாம் என்று கூறுகிறீர்களா?

மகாத்மா: ஆம், உங்களுக்கு உண்மையான பலம்இல்லா விட்டால். நன்றாக யோசித்து நாளை வந்து நீங்கள் பதில் கூறலாம்.

இவ்வாறு காந்திஜி சொல்லி அனுப்பினார். மறுநாள், தங்களுடைய முடிவு என்னவென்பதை ஊழியர்கள் எழுதிக் கொண்டு வந்தே படித்து விட்டனர். போராட்டத்தை நிறுத்தக்கூடாது என்பது அவர்களுடைய முடிவு. அதற்கு

அவர்கள் கூறிய மிக முக்கியமான காரணம், மக்களுடைய தேசிய உணர்ச்சி இதன் காரணமாகச் செத்துவிடும் என்பது தான். ஆனல் போராட்டத்தை நிறுத்திவிடுமாறு வெளிப் படையாக காந்திஜி அறிவிப்பதானல், அப்படி ஒன்றும் நேராது என்றும் தாங்களும் போராட்டத்தை நிறுத்திவிடத் தயார் என்றும் கூறினர்கள். இதன் பின் சத்தியமூர்த்தி யைப் பார்த்து, ''நீங்கள் இதற்கு என்ன கூறுகிறீர்கள்'' என்று காந்திஜி கேட்டார். ''காங்கிரஸ்காரர்கள் இச்சிக்கலை எடுத்துக் கொள்வதற்கு மறுப்பு எதுவும் இல்லை'' என்று சத்தியமூர்த்தி கூறினர். மாவட்ட காங்கிரஸ் குழுச் செயலாளரான குழந்தை இதை மூன்று மாதம் தள்ளிப் போடுவதானது நிரந்தரமாகத் தள்ளிப் போடுவது போன் றதுதான் என்று கூறினர்.

ஒரு தொண்டர் ; இந்தப் போராட்டத்தைத் தள்ளிப் போடு வதா வேண்டாமா என்பதை உங்கள் விருப்பத்திற்கே விட்டுவிடுகிறோம்.

காந்திஜி : நான் உங்கள் நிலையில் இருந்தால் இதைத் தற்காலிகமாக நிறுத்தி விடுவேன். 'நாங்கள் போதிய அளவு தயாராகவும் பலம் உள்ளவர்களாகவும் இல்லை. அதனல் தள்ளி வைக்கிறோம்' என்று கூறிவிடுவேன்.

ஒரு தொண்டர் : நாங்கள் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த உங்கள் அனுமதியுண்டா ?

காந்திஜி : நான் உங்களைத் தடை செய்யவில்லை. அதற்கும் என்னுடைய அனுமதி உங்களுக்கு உண்டு. நீங்கள் நிறுத்தி வைப்பதாக இருந்தால் உங்களுடைய அந்த ராத்மா கூறி அதை நிறுத்தி வைக்க வேண்டும்.

தொண்டர் : எங்களுடைய அந்தராத்மா நிறுத்திவைக்கச் சொல்லவில்லை.

காந்திஜி : அப்படியானல் தொடர்ந்து நடத்துங்கள்.

திருவள்ளூருக்குச் சென்ற வழியில் காந்தி தம்பதிகள், ஈக்காட்டில் உள்ள வெஸ்லியன் மிஷன் தொழிற் பள்ளிக்கு தார்கள். (குமாரி டுவெடில் வரவேற்புரை கூறினர். பல்வேறு வகுப்புகளையும் ரெவ. ஷிரிம்ப்ஸன் சுட்டிக் காட்டினர்.) பள்ளி அடைந்திருந்த முன்னேற்றத்தையும் எல்லாச் சாதியினரும் அங்கு வேறுபாடின்றிச் சேர்த்துக் கொள்ளப்படு வதையும் காந்திஜி பாராட்டினர். காந்தி தம்பதிகளை வர

வறுமைப் பங்கீடு

வேற்கத் திருவள்ளூர் நகரத் தெருக்களில் கட்டப்பெற்றிருந்த ஏராளமான தோரணங்களும் கொடிகளும் அதை அடையாளந் தெரியாத ஒரு புது ஊராக ஆக்கிவிட்டன. காக்களூர் ஏரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவ்வூரைச் சேர்ந்த வழக்கறிஞரான கே. இராமச்சந்திர ஐயர் தலைமை வகித்தார். (யூனியன் போர்டு சார்பாக அதன் தலைவர் கே. இராகவாச்சாரியும் தாலுகா காங்கிரஸ் குழுவின் சார்பாக சொக்கலிங்க முதலியாரும் சர்க்கா சங்கத்தின் சார்பாக எம். ஓ. கிருஷ்ணசாமியும், பொதுமக்கள் சார்பாக வரவேற்புக்குழுத் தலைவர் சி. வி. நாயுடுவும் வரவேற்புரைகளைக் கொடுத்தார்கள்.) இந்தக் கூட்டத்தில் கதர் இயக்கத்தின் குறிக்கோள் என்ன வென்பதைச் சுருங்கச் சொல்லி அழகாக விளங்க வைத்தார் அண்ணல். நம்முடைய நாட்டின் செல்வ வளத்தை வறுமையால் வாடும் கோடிக்கணக்கான மக்கள் பகிர்ந்துகொள்ளுமாறு செய்வதே கதர் இயக்கத்தின் நோக்கம் என்று அவர் கூறினார். ''நாம் தற்சமயம், வாயில்லாமல் கஷ்டப்பட்டு உழைக்கும் ஏழைகளுடைய சம்பாத்தியத்தை உறிஞ்சி நகரங்களில் சுகித்து வாழ்கிறோம். நமக்கு வயிறார உணவும் உடுக்க உடையும் கிராமவாசிகளின் வேலையினால்தான் கிடைக்கின்றன,'' என்பதை அவர் நினைவூட்டினார். சென்னை நகருக்குத் திரும்பி வந்த வழியில் பூந்தமல்லி ரெவ. சுப்பிரமணியம் அனுதை விடுதிக்குச் சென்று பார்வையிட்டு தன்னலமற்ற சேவையின் உயர்வைக் குறித்துச் சில நிமிடங்கள் உரையாற்றினார்.

7-9-27

பச்சையப்பன் கல்லூரி

கதரில் அழகாக அச்சிடப் பெற்றிருந்த ஓர் வரவேற்புரையை மறுநாள் காலை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் காந்திஜிக்கு அளித்து மகிழ்ந்தார்கள். பச்சையப்பன் வி. சி. கோபாலன் என்ற மாணவர் இதைக் கொடுத்தார். முதல்வராகப் பணியாற்றிய சின்னத்தம்பி காந்திஜியிடம் பண முடிப்பை அளித்துவிட்டு, 'இந்துக்களின் நன்கொடையைக் கொண்டு நடத்தப்பெறும் இந்து நிறுவனம் இது' என்று விளக்கினார். இந்தக் கூட்டத்தில் காந்திஜி மிகவும் விரிவாக ஒரு மணி நேரத்திற்கு மேல் பேசினார். சர்க்கா, விதவைகள் திருமணம், சிகரெட் பிடித்தல் போன்ற பல பொருள்களைப் பற்றிய தமது கருத்துக்களை அவர் விளக்கிக் கொண்டு போனார். (''சென்னையில் இக்கூட்டத்தில் தான் மகாத்மா வெகு நேரம்

பேசியிருக்கிறார்'' என்று சுதேச மித்திரன் எழுதியிருந்தது.) ஆனால், எல்லாவற்றிற்கும் மேலாக, அவருடைய உள்ளத்திற்குள் உவகை ஊறுமாறு செய்தது இந்த மண்டபத்தைப் பற்றிய பழைய நினைவுதான். 1896-ஆம் ஆண்டில் முதன் முதலாகச் சென்னை மாநகருக்கு அவர் வந்தபோது இந்த மண்டபத்தில் தானே உரையாற்றினார்? அந்த ஞாபகம் அவருக்கு வந்துவிட்டது. தமது உரையிலும் இதை அவர் குறிப்பிட்டார். அன்றுதான் தமக்கு முதன் முதலாக இந்திய மாணவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது என்பதைப் பெருமையோடு கூறினார். ''கதர் தவிர வேறு ஆடையே அணிவதில்லை என்று நீங்கள் விரதம் பூண வேண்டும். ஏற்கனவே பூண்டிராவிட்டால் இனியாவது பூணவேண்டும். அவ்வாறு பூணுவிடில் நீங்கள் கொடுத்த நிதி ஒரு தொல்லையே தவிர உதவியாகாது'' என்று கூறிவிட்டு மேலும் சொன்னார். ''தமிழ் நாட்டைச் சேர்ந்த பெருமகனார் ஒருவர், நான் சாகும்போது சிதையில் வைப்பதற்கு மரக் கட்டைகள் தேவைப்படாது என்றும் நான் இப்போது வழங்கும் இரட்டினங்களில் உள்ள மரமே போதுமான தாயிருக்கும் என்றும் தீர்க்கதரிசனங் கூறியிருக்கிறார். அந்தத் தீர்க்க தரிசனத்தை மெய்ப்பித்துவிடாதீர்கள்!''

முக்கிய கூட்டம்

இந்தக் கூட்டம் பலவகைகளில் முக்கியத்துவம் உள்ள கூட்டமாக ஆகிவிட்டது. பச்சையப்பன் கல்லூரியில் முகமதியர்களும் பஞ்சமர்களும் அந்தக் காலத்தில் சேர்க்கப்படுவதில்லை. கூட்டத்தில் இருந்தவர்கள் இதை காந்திஜியிடம் கூறிவிட்டார்கள். காந்திஜியின் மனம் மிகவும் புண்பட்டது. ''பச்சையப்பன் கல்லூரி தன்னை ஒரு இந்து நிறுவனம் என்று கூறிக் கொள்கிறது. ஆனால், பஞ்சமர்கள் இங்கு அனுமதிக்கப் பெறுவதில்லை என்ற ஒன்றே அதை அப்பெயருக்கு அருகதையற்றதாகச் செய்து விடுகிறது. மேலும் முகமதியர்கள் இங்கு அனுமதிக்கப் பெறுததைக் கேட்பதும் காதில் நாராசத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல இருக்கிறது. என்னுடைய வேண்டுகோளை இக்கல்வி நிறுவனத்தின் தர்மகர்த்தாக்களுக்கு முதல்வர் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். தர்மகர்த்தாக்கள் அதை அனுதாபமாகக் கவனிப்பார்கள் என்றும் நம்புகிறேன்,'' என்று அண்ணல் கூறினார். தலைவர் தமது முடிவுரையில், எல்லா வகுப்புகளையும் சேர்ந்த மாணவர்களைச் சேர்ப்பது உயர்நீதி மன்றத்தின் ஆலோசனையில் இருந்து வரு

வதாகக் கூறினர். (அந்தச் சமயத்தில்தான் ஆதி திராவிட மாணவர்களைப் பச்சையப்பன் கல்லூரியில் சேர்க்க வேண்டு மென்ற கோரிக்கை எழுந்திருந்தது. கல்லூரி தர்மகர்த் தாக்கள் ஆதிதிராவிடர்கள் இந்துக்களா அல்லரா என்ற சிக்கலை உயர்நீதி மன்றத்தின் முடிவிற்கு அனுப்பியிருந் தார்கள்.)

இந்தக் கூட்டத்தில் மாணவர்களுக்கு காந்திஜி கூறிய ஓர் அறிவுரை மிகவும் புரட்சிகரமாய் இருந்தது. அது பின்னல் கடுமையான எதிர்ப்புக்களுக்கும் காரணமாயிற்று. திருமணம் ஆகாத ஒவ் வொரு இளைஞனும் விதவைச் சிறுமி ஒருத்தி யைத்தான் திருமணம் செய்துகொள்வதென்று பிரதிக்ஞை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று அவர் கூறினர். பத்து அல்லது பதினைந்து வயதில் உள்ள ஓர் இளம் சிறுமி திருமணம் என்ற ஒன்றிற்குச் சம்மதித்ததாக எப்படிக் கூறமுடியும்? கணவனுடன் ஒருபோதும் வாழ்ந்திராத ஆவை விதவை என்று எவ்வாறு கூறமுடியும்? அதனால் தான் இப்பெண்ணை விதவை என்று அழைக்கப்பெறும் சிறுமி என நான் கூறுகிறேன். இத்தகைய சிறுமிகள் விதவை களாக இல்லையேல் என் கோரிக்கையில் பொருள் இல்லை. அவ்வாறு இருந்தாலோ அவர்களையே திருமணம் செய்து கொள்வதென்று உறுதிகொள்ள வேண்டியது உங்கள் கடமை'', என்று காந்திஜி கூறினர். ''கைம் பெண்கள் கிடைக்காவிட்டால் கல்யாணமே செய்து கொள்ளாதீர்கள்'' என்றும் அவர் சொன்னார். ''பிராமணர்கள் பிராமண சமூகத்தில் பால்ய விதவைகள் கிடைக்காவிட்டால், அவர் கள் விரும்பும் மற்றெந்தப் பெண்ணை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளலாம். கடவுள் அவர்களை மன்னிப்பார்,'' என்றும் சொன்னார். பெண்களின் திருமண வயதைப் பற்றியும் காந்திஜி இங்குக் குறிப்பிட்டார். ''குறைந்தது 16 வயதான பின்பு தான் ஒரு பெண்ணிற்குத் திருமணம் செய்ய வேண்டும். இருபது வயதான பின்பும் திருமணம் செய்யலாம். இருபது வயதாகியும் சீதை போன்று பரிசுத்தமாகவும் கற்புள்ளவர்களாகவும் இருக்கும் பெண்களை நான் சந்தித்திருக்கிறேன்,'' என்று அவர் சொன்னார்.

விதவைத் திருமணம்

மக்கள் பூங்காவிலுள்ள எஸ். ஐ. ஏ. மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், சென்னை டிராம்வே

யூனியன் தொழிலாளர்கள் சார்பில் காந்திஜியிடம் யூனியன் தலைவர் எஸ். ஏ. ஷாபி முகமது பணமுடிப்பை அளித்தார்.

பொதுக் கூட்டம்

இதற்குப்பின், இராயபுரம் கல்மண்டப மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒரே பண முடிப்பு மயமாக இருந்தது. (மக்கள் சார்பாக ஒரு பண முடிப்பு, தொண்டையார்பேட்டை ஜானகிராம் நாயுடு பணமும் வைரக்கற்களும் சேர்த்து அளித்த பண முடிப்பு மற்றொன்று, உண்டியல் வசூல் வேறு.) இராயபுரம் பகுதிக்கு காந்திஜி வருகை புரிந்தது இதுவே முதல் தடவையாகும். நீல் அறப்போரை அவர் குறிப்பிட்டு இங்குப் பேசியபோது அவர் கூறிய அறிவுரை என்றென்றும் எல்லோரும் நினைவிற்கொள்ள வேண்டியதாகும். ''சத்தியாக்ரகம் பரம சக்தி வாய்ந்தது. அதனால் நன்மை ஏற்படும். கொஞ்சம் தவறுகப் போனால் அது அபாயமானதாக முடியும். ஒரு துளி விஷம் ஒரு குடம் நீரையும் கெடுத்துவிடவல்லது. சத்தியாக்ரகத்தில் இரகசியம் கூடாது, பயம்கூடாது, சுயநலம் கூடாது. கொஞ்சம் சுய நல ஆசை இருந்தாலும் இயக்கம் கெட்டுவிடும். சத்தியாக்ரக இயக்கத்திற்குப் பண உதவியே அவசியமில்லை. கஷ்டப்படுவதுதான் சத்தியாக்ரகத்தின் மகிமை. கஷ்டம் கூடக்கூட வெற்றி விரைவில் கிட்டும்.'' காந்திஜி இங்குப் பேசி முடித்ததும் பலர் நகைகளைக் கழற்றிக் கொடுத்தார்கள். ஜானகிராம் நாயுடுவின் குமாரன் அண்ணாலுக்கு மாலை சூட்டி அவரிடம் சில இரத்தின, வைரக்கற்களைக் கொடுத்தபோது, காந்திஜி அவனை ஆசிர்வதித்தார்.

8-9-27

காஞ்சி

பழம் பெரும் தெய்வத்திருத்தலமான காஞ்சிக்கு மறுநாள் (8-9-27) காலையில் மோட்டாரில் மகாத்மா வந்து சேர்ந்தார். ஆரணி, வந்தவாசி முதலிய ஊர்களிலிருந்தெல்லாம் வண்டி கட்டிக் கொண்டும் கால் நடையாகவும் ஏராளமான மக்கள் முதல் நாள் இரவே வந்து கூடிவிட்டார்கள். அரசாங்கக் காடுகள் காண்டிராக்டரான வி. இராஜகோபால ஐயங்கார் இல்லத்தில் காந்திஜி தங்கினார். மார்க்கெட் அருகே உள்ள மைதானத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் மாலையில் நடந்தது. நகராட்சியின் சார்பாகவும் பொது மக்கள் சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் செங்கற்

பட்டு மாவட்டக் காங்கிரஸ் குழு சார்பாகவும் பணமுடிப்பு களும் வரவேற்புரைகளும் அளிக்கப்பெற்றன. இந்த வர வேற்புரைகள் உண்மையில் கேள்வித் தாள்களாகவே இருந் தன. காந்திஜியும் சலிக்கவில்லை, ஆத்திரப்படவில்லை. அவர்கள் எழுப்பியிருந்த ஒவ்வொரு கேள்விக்கும் விவர மாகவும் விளக்கமாகவும் பதிலிறுத்தார். முதலாவதாக, இராட்டையைப் பரப்புவதற்காகக் காஞ்சிபுரம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டினர். ''சில நகராட்சிகளில் இவ்வாறு முதலில் இராட்டையில் அக்கறை காட்டினர்கள். ஆனல் தொடர்ந்து அக்கறை எடுத்துக் கொள்ளாததால் அது படுத்துப்போயிற்று. இங்கு ஒன்றிரண்டு நகராட்சி மன்ற உறுப்பினர்கள் இதில் தனிக் கவனம் எடுத்துக்கொண்டு இராட்டையைப் பரப்பவேண்டும். மேலும், மற்ற நகராட்சிகளின் அனுபவத்தைப் பார்த்தால் இராட்டைகளைக் காட்டிலும் தக்ளியே சிறந்தது,'' என்று அண்ணல் கூறினர்.

முதற் கேள்வி: ''மிகவும் ஏழைகளாயுள்ளவர்களுக்கு இதற்கு மேல் நாங்கள் என்ன செய்யவேண்டும்?''

காந்திஜி: உங்களுடைய குழந்தைகள் எல்லோரும் கதர் அணியுமாறு செய்யவேண்டும். நகராட்சி மன்றச் சிப்பந்திகள் அனைவரும் கதர் அணியுமாறு செய்ய வேண்டும். முழு மதுவிலக்கைச் செயல்படுத்தவேண்டும்.

அடுத்தது வேண்டுகோள்: பிராமணர் - பிராமணரல்லாதார் வேறுபாட்டுணர்ச்சியைக் குறைத்து ஒற்றுமைப்படுத்த நீங்கள் ஏதாவது செய்யவேண்டும்.

காந்திஜி: இந்தச் சிக்கலைத் தீர்க்க என்னலான உதவியைச் செய்ய நான் எப்போதும் தயாராய் இருக்கிறேன். அதற்குமேல் திட்டவட்டமாக எதையும் கூறக்கூடிய நிலையில் இப்போது நான் இல்லை.

காஞ்சியின் பெருமை

வரவேற்புரையில் காஞ்சியின் பெருமையைப்பற்றி நிறைய எடுத்துக் கூறப்பட்டிருந்தது. அதைக் குறித்து காந்திஜி கூறினர்: ''உங்களுடைய ஊர் இந்தியா முழுவதிலும் பெயர் பெற்ற தெய்வத் திருத்தலம் தான். ஆனலும் தீவினைப் பயனுக, மற்ற இடங்களைப் போலவே இதுவும் பெயரள வில்தான் இருக்கிறது. புனித திருத்தலம் என்றல் அங்கு

வாழ்வோரில் பெரும்பாலானோர் தூய இதயம் படைத்தவர்களாய் இருக்கவேண்டும். தீண்டாமையும் புனிதத்தன்மையும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாகும்.'' சிறு குழந்தைகளில் விதவைகளாவோரைப் பற்றிப் பேசுமாறு ஒரு சீட்டு வந்தது. ஏற்கனவே தாம் கூட்டங்களில் கூறிய கருத்தை இங்கும் காந்திஜி கூறினர். ''எனக்கு மட்டும் அதிகாரம் இருந்தால் ஒவ்வொரு விதவைச் சிறுமியையும் திருமணம் செய்து கொடுக்குமாறு அதன் பெற்றோர்களை வற்புறுத்துவேன்'' என்றார் அவர்.

உடல் சோதனை

காஞ்சிபுரத்திற்கு அண்ணல் வருவதற்கு முன் அவருடைய உடல் நிலையைச் சோதித்துப் பார்த்த டாக்டர் ரங்காச்சாரியார், அவருக்கு இரத்த அழுத்தம் சற்று அதிகமாய் இருப்பதாகக் கூறினர். சென்னை நகரில் ஏராளமான அலுவல்களில் பங்கு கொண்டதால் காந்திஜி மிகவும் களைப் படைந்திருந்தார். ஆகையால் அவர் உடல் நிலையை எல்லோரும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டு வந்தார்கள். இதனால் காஞ்சிபுரம் சென்ற வழியில் பூந்தமல்லி யூனியன் போர்டு சார்பாக அளிக்கப்பெற்ற வரவேற்பிற்கு அவர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை.

பவுன் ஏலம்

காஞ்சி ஏலத்தில் ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது. பச்சையப்பன் கலாசாலை மாணாக்கர்கள் கொடுத்த பண முடிப்பில் ஒரு பவுன் இருந்தது. அந்தப் பவுனை ஏலம் விட்டபோது அதை ரூ. 16-9-0க்குக் கல்யாணசுந்தரம் ஐயர் ஏலத்தில் எடுத்தார். ஆனால் அவர் அந்தப் பவுனைத் திருப்பிக்கொடுத்தது மட்டுமல்லாது மூன்று ரூபாயும் சேர்த்துக் கொடுத்தார். அதற்குப் பின்பு மறுமுறையும் ஏலத்தில் விடப்பெற்றது. மற்றொருவர் அதை ரூ. 14-9-0க்கு ஏலத்தில் எடுத்தார். ஆனால் அவரும் அந்தப் பவுனைத் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

அருந்ததியர்

வியாழக்கிழமையன்று காலை பெரம்பூர் அருந்ததியர் மிகுந்த நன்றியதலுடன் ஒரு அழகான வரவேற்புரை அளித்ததோடு மகாத்மாவுக்கும் கஸ்தூரிபாவுக்கும் இரண்டு சதை செருப்புகளையும் அளித்தார்கள். இந்தச் செருப்புகள் மிக அழகாக இருந்தன என்று காந்திஜியே பாராட்டினர். 'நானே செருப்புகள் தைத்திருக்கிறேன். இன்றுகூட ஓரளவு

நல்ல செருப்புகளே என்னால் தைக்க முடியும். ஆனாலும் இவ்வளவு அழகான செருப்புகள் தைக்க முடியாது'' என்று அவர் கூறினார். கொல்லப்பட்ட கால் நடைகளின் தோலிலிருந்து செருப்புத் தைக்காமல் இயற்கையாக இறந்த கால் நடைகளின் தோலிலிருந்து தைக்குமாறு அறிவுரை கூறினார். செருப்புத் தைப்பது மிகவும் கண்ணியமான தொழிலென்றும் அந்தத் தொழிலைச் செய்வதற்காக யாரும் வெட்கப்பட வேண்டியதில்லை என்றும் அவர் கூறினார். சென்னையில் அவர் பங்கு கொண்ட கூட்டங்களில் செருப்புத் தைப்பவர்கள் கூட்டம் முக்கியமானதாகும். காந்திஜி அணிந்திருந்த செருப்பு மிகவும் பழைய செருப்பு; அது பல இடங்களில் அறுந்து போயிருந்தது - என்பதை இவர்களில் சிலர் அறிந்து கொண்டனர். அதன் பின்னர்தான் இரண்டு பேர் புதுச் செருப்புத் தைத்துக் கொண்டுவந்து கொடுத்தார்கள். இறந்த கால் நடைகளின் தோலையே அவர்கள் இனி செருப்புத் தைப்பதற்குப் பயன்படுத்த வேண்டும் என்று உறுதிமொழி ஏற்குமாறு அவர் கூறியதற்கும் அவர்கள் இணங்கினார்கள். ஆனால், அவர் அவர்களுடைய இருப்பிடத்தைப் போய்ப் பார்த்த பின் அவர்கள் வாழும் சூழ்நிலையில் இறந்த கால்நடைகளின் தோலை மட்டும் பயன்படுத்துவது கடினம் என்பதை உணர்ந்தார். ஆகையால் இதை ஒரு பிரதிக்ஞையாக எடுத்துக்கொள்ள வேண்டாமென்றும் ஒரு குறிக்கோளாக வைத்துக்கொண்டு கூடியவரை செயலாற்றுமாறும் சொன்னார்.

9-9-27

பரேஸ்வரர் வட இந்தியர்

காஞ்சியிலிருந்து சென்னைக்குத் திரும்பியபின், ஏகாம்பரேஸ்வரர் அக்கிரகாரத்தில், மறுநாள் அதிகாலையில் குசராத்திகள், மார்வாரிகள், சிந்திகள், கத்தியவாரிகள் ஆகிய வடஇந்தியர்களின் வரவேற்பு. (ஜவாரி கோவிந்தபாய் புருஷோத்தமதாஸ் இந்தியில் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்ததுடன் பண முடிப்பையும் அளித்தார். தேசிய ஊழியர் சங்கத்தின் சார்பாக எஸ். எஸ். தவே கதர் வேலைக்காக ஒரு சிறு பண முடிப்பைக் கொடுத்தார்.) வரவேற்பு இந்தியில் அமைந்திருந்தது; காந்திஜி தம் தாய் மொழியான குசராத்தியில் பதில் அளித்தார்: ''அந்நியத் துணி வர்ணிகத்தில் பெரும் பகுதி உங்களாலேயே நடத்தப்

பெறுகிறது. எளியவர்களிடமிருந்து அதன் மூலம் பணத்தைப் பறித்து வருகிறீர்கள். இது பாவம். இந்தப் பாவத்திற்காகப் பிராயச் சித்தம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். ஆகையால் நீங்கள் கதர் வாணிகத்தைத் தொடங்க வேண்டுமென்று உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். உண்மையில் இது உங்கள் வேலை. என் வேலை அல்ல,'' என்று அண்ணல் கூறினார்.

மாதர் கூட்டம்

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி, திருமதிகள் இலட்சுமிபதி, எம். இ. கசின்ஸ், லேடி சதாசிவ ஐயர் ஆகியோர் ஏற்பாடு செய்த மாதர்கள் கூட்டம் திருவல்லிக்கேணி சிங்கராச்சாரி மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. (மாதர்களின் சார்பாக இலட்சுமிபதி பணமுடிப்பை அளித்தார்; முத்துலெட்சுமி அம்மாள் வரவேற்புரையைப் படித்தார்.) இக்கூட்டத்தில்தான் மாதர்களை அல்லல்களுக்குள்ளாக்கும் பல முக்கியமான சிக்கல்களை, அண்ணலின் கவனத்திற்கு முத்துலெட்சுமி கொண்டு வந்தார். சம்மதம் தெரிவிக்கும் வயதைத் திருமணமானவர்களுக்குப் பதினேழாகவும் திருமணமாகாதவர்களுக்குப் பதினெட்டாகவும் உயர்த்த நாங்கள் எங்களாலான முயற்சிகளையெல்லாம் செய்து வருகிறோம்,'' என்று கூறிவிட்டுக் கோவில்களில் உள்ள தேவதாசி முறையின் கொடுமைகளை அண்ணலுக்கு விளக்கினார். மதுவை விலக்க வேண்டுமென்று கூறுங் காந்திஜி அதைக் காட்டிலுங் கொடுமையான இப்பழக்கத்தை நிறுத்த ஆவன செய்ய வேண்டுமென்பது அவருடைய வேண்டுகோள். காந்திஜி தமது சுற்றுப் பயணத்தில் தீண்டாமை ஒழிப்பு, மதுவிக்கு ஆகியவைகளைப் போன்று இதையும் சேர்த்துப் பேச வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். இந்த வேண்டுகோள் உடனடியாகப் பலித்தது. ஏனெனில், காந்திஜி இச் சுற்றுப் பயணத்தில் பெரும்பாலான இடங்களில் தேவதாசி முறையை வன்மையாகக் கண்டித்துப் பேசினார். நகைகளைப் பற்றி அண்ணல் இக் கூட்டத்தில் கூறிய அறிவுரை பொன்னெழுத்துக்களால் பொறிக்கவேண்டிய ஒன்றாகும். அவர் சொன்னார்: ''என்னைச் சுற்றி அமர்ந்திருக்கும் பெண்களை நான் பார்க்கிறேன். அவர்களில் பலர் விலை உயர்ந்த நகைகளை அணிந்திருக்கிறார்கள். இந்த நகையில் ஒன்று இருந்தால் கூடப் பட்டினி கிடக்கும் மக்களுக்கு அது ஒரு பெரிய கருவூல

மாகும். உழைத்து ஓடாய்ப்போகும் கோடிக்கணக்கான மக்கள் தங்கம், வைரம், வெள்ளி என்பதெல்லாம் என்ன வென்று அறியமாட்டார்கள். இவைகளையெல்லாம் மாதர் சங்கங்கள்தான் செய்யவேண்டும். ஆண் ஊழியர்கள் எவ்வளவுதான் திறமை உள்ளவர்களாய் இருந்தாலும் செய்ய முடியாது.''

அதேசமயம் திருமதி முத்துலெட்சுமி அம்மாளுக்கும் இச்சொற்பொழிவினூடே ஒரு நீண்ட அறிவுரையைக் கூறி விட்டார். ''சட்டமன்றத்தின் துணைத் தலைவ ராக டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி இருக் கிறார் என்பதை அறிய நான் மகிழ்ச்சி அடை கிறேன். நான் ஓர் ஒத்துழையாமை இயக்க வாதி. ஆனாலும், இந்திய மாதர்களின் சார்பாகச் சட்ட மன்றத்தில் முத்து லெட்சுமி நிறையக் காரியங்கள் செய்ய முடியும் என்று நம்புகிறேன். முற்றிலும் மேல் நாட்டு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டாமென்று அவரை நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்றத்தில் அவர் இந்தியச் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். மாதர்களின் நலன்களை ஒருபோதும் மறந்துவிடக் கூடாது.''

பதில் அறிவுரை

இவ்வாறு அண்ணல் அறிவுரை கூற நேர்ந்ததற்குத் திருமதி முத்துலெட்சுமி தமது வரவேற்புரையில் கூறியிருந்த கீழ்க்கண்ட வாசகங்கள் காரணமாயிருந் திருக்கலாம். ''இந்து சமுதாயத்தில் பெண் களுக்குச் சட்டபூர்வமான பாதுகாப்போ உதவியோ இல்லை; உரிமையுமில்லை. பெண்கள் தங்கள் புருஷர்களை அண்டியே வாழ வேண்டியிருக்கிறது. அவர்களது இன்பமும் துன்பமும் ஆண்கள் கையிலிருக் கின்றன. ஆண்களுக்கு அடிமைப்பட்டு வாழும் அவல நிலையே நீடித்து வருகிறது. சிறந்த நீதியாளரான மனு கூறுகின்றார், 'எங்கே பெண்கள் பெருமைப் படுத்தப்படு கிறார்களோ அங்கே தெய்வம் வாழும்; பெண்களை வருத்தும் குடும்பம் அழிந்தொழியும்' என்று; ஆனால், மற்றோர் இடத்தில் மனு, 'மனைவிக்கும், அடிமைக்கும், சொத் துரிமை கிடையாது' என்றும் குறிப்பிடுகிறார். இத்தகைய வாழ்க்கையைப் பிரத்தியட்சமாகக் கண்டு வருகிறோம். கணவனின் சொத்துக்கு மனைவி எந்த விதத்திலும் உரிமை கொண்டாடக்கூடாது. கணவன் சொத்தில் அவளுக்குக்

காரணம்

கொஞ்சமும் பாத்தியதை இல்லை. மனைவி கணவனிடம் வாழ்க்கைப் பணம் வேண்டுமானால் கேட்கலாம். ஆனால் கணவனுடன் தானும் சேர்ந்து சம்பாதித்த சொத்தில் அவளுக்குப் பங்கில்லை, உரிமையில்லை. மேலும் தந்தையின் சொத்திலும் மகளுக்குப் பங்கோ உரிமையோ இல்லை. திருமண உரிமையை எடுத்துக் கொண்டாலோ அதிலும் அநீதி; ஓர் இந்து ஆண் பிள்ளை தன் மனைவி அல்லது மனைவி கள் உயிரோடு இருந்தாலும்கூட எத்தனை பெண்களை வேண்டு மானாலும் மணந்து கொள்ளலாம்; ஆனால் ஒரு மனைவி தன் கணவனால் வெறுத்து, ஒதுக்கி உதறித் தள்ளப்பட்டாலும் மற்றொருவனை மணம் செய்துகொள்ளக்கூடாது. மேலே குறிப்பிட்ட நீதி முறைகளிலிருந்தும், நடைமுறைகளி லிருந்தும், அனுபவங்களிலிருந்தும் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வகுக்கப்பட்டிருக்கிறதென்பது தெரி கிறதல்லவா? தன்மானம் கொண்ட யார்தான் இந்த அநீதி யைப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? எனவே எங்க ளுக்கு நீதி வேண்டும். சமத்துவம் வேண்டும். சம உரிமை வேண்டும் என்று கேட்கிறோம்.'' இவ்வாறு சற்றுக் காரசார மாக முத்துலெட்சுமி கூறியிருந்தது காரணமாயிருந்திருக்க லாம்.

மறுமொழி

காந்திஜி தமது மறுமொழியில் மிகவும் நிதானமாகக் கூறினார்: ''உங்கள் வரவேற்புரை மிகப் பெரியதாக இருந்தது. அதில் கேட்டிருக்கும் சில கேள்வி களைப் பற்றி இங்கு இருக்கும் பெண் களில் சிலர் புரிந்து கொண்டிருப்பார்களா என்பதுகூடச் சந்தேகந்தான். உங்கள் வரவேற் புரையில் நீங்கள் குறிப்பிட்டவற்றைப் பற்றியெல்லாம் விரிவாகப் பேச எனக்கு அவகாசமில்லை, ஆனால் அவற்றை நிச்சயம் பிறகு கவனிப்பேன். ஆண்களுக்குள்ள உரிமை களில் பெண்களுக்கும் பங்குண்டு என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இந்து சாத்திரங்களை ஆழ்ந்து படித்தால் அவை உறுதிப்படுகின்றன. இந்தியாவில் 'அர்த்தநாரி' என்ற சிறப்பான சொல் வழக்கில் உள்ளது. அது ஒன்றே போதும், ஆண் பெண் சம உரிமையைத் தெளிவாக விளக்கு வதற்கு. ஆங்கிலத்தில் அதுவே 'சிறந்த மறுபாதியினர்' (better half) என்று வழங்கப்படுகிறது. அது மிகப் பொருத்தமான சொல் என்று கருதுகிறேன். நம் நாட்டில் புகழுடனும் பெருமையுடனும் பெண்கள் போற்றப்பட்

டார்கள் என்றூலும் இப்போது பெண்களூக்குப் பல கொடுமைகளும். குறைகளும் இழைக்கப்பட்டு வருகின்றன. நம் மதத்தில் புகுத்தப்பட்டுள்ள பெண் மக்களின் குறை களையும் மூட பழக்க வழக்கங்களையும் நீக்க முயலவேண்டும். இத்தகைய குறைகளை ஒழிக்க நீங்கள் முன் வருவது உண்மை யானூல் 16 வயது நிரம்புவதற்கு முன் உங்கள் பெண்களூக் குத் திருமண ஏற்பாடு செய்வதை முதலில் நிறுத்திவிட வேண்டும். (சிரிப்பு) உங்களூக்கு இளமையிலேயே விதவை யான பெண்கள் இருந்தால் அவர்களூக்கு மறுமணம் செய்யவும் நீங்கள் முற்படவேண்டும்.''

திருமதி ரெட்டி

பெண்களுடைய முன்னேற்றத்திற்காக டாக்டர் முத்து லெட்சுமிரெட்டி ஆற்றிய பெருந்தொண்டுகளை யாரும் மறுக்க முடியாது. தேவதாசிகள் ஒழிப்பை அண்ணலின் கவனத்திற்குக் கொண்டு வந்தவர் அம்மையாரைத் தவிர மற்றும் சிலர் இருந் தார்கள். இதற்கு முந்திய சுற்றுப் பயணத்தி லேயே தேவதாசிகள் அவரைச் சந்தித்திருக்கிறார்கள். ஆனூலும் அதற்கு ஓர் உருப்படியான திட்டம் அளித்து, சட்டசபையில் மசோதாக் கொண்டு வந்து, அதனூல் ஏற்படும் தீய விளைவுகளையெல்லாம் காந்திஜிக்கு எடுத்துக் கூறி, இதை அண்ணல் தாம் சென்ற இடங்களிலெல்லாம் ஞாபகத்தோடு எடுத்துக் கூறுமாறு செய்தவர் அவரே. காந்திஜிக்கும் டாகடர் முத்துலெட்சுமி ரெட்டிக்கும் பெண்கள் உரிமையைப் பற்றிக் கடிதப் போக்குவரத்து நடந் திருக்கிறது. அப்போதெல்லாம் பெண்களின் இழிநிலையை முத்துலெட்சுமி அண்ணலின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார். இக்கடிதங்களைப் பற்றி ''யங் இந்தியா''வி லும் காந்திஜி குறிப்பிட்டுக் கருத்துத் தெரிவித்திருக்கிறார். இருவர் கருத்துக்களுமே மேற்கண்ட பொதுக் கூட்டத்தில் கூறியவற்றை அனுசரித்தே இருந்தன. முதன் முதலாக காந்திஜியைச் சந்தித்தது குறித்து டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி கூறுவதாவது: ''தேசத் தந்தையாகிய காந்தி யடிகள் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோது மேற்கொண்ட சத்தியாக்ரக இயக்கத்தைப் பற்றிப் பத்திரிகைகள் வாயி லாகக் கேள்விப்பட்டிருந்த போதிலும், நான் நேரில் சந்தித்ததில்லை. நான் அவரை, 1927-ஆம் ஆண்டு சென்னையில் எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் நேரில் பார்க்கச் சென்றேன். என்னைக் கண்டவுடனே

எழுந்திருந்து வந்து ஒரு குழந்தையைத் தாய் காண் பதுபோல், நீங்கள் இப்போது சட்டசபையில் உறுப் பினராய் இருக்கிறீர்கள்; பெண்களுக்காகச் சட்டசபையில் என்ன சேவை செய்யப்போகிறீர்கள்?' என்று வினவினர். நான் அப்பொழுது தான் சட்டசபைக்குச் சமர்ப்பிக்க இருந்த மசோதாவை அவரிடம் காட்டி அதற்கு அவருடைய ஆசீர்வாதத்தை வேண்டினேன். உடனே அவர் தயங்காமல், 'இந்த மசோதாவிற்கு என்னுடைய மனமார்ந்த ஆசிகள். இதற்குப் பொது மக்கள் ஆதரவு தரவேண்டும் என்று என்னுடைய பத்திரிகையாகிய ''யங் இந்தியா''வில் வெளி யிடுகிறேன்,' என்று சொன்னர். அவர் சொன்னவாறு செய்தது மட்டும் அல்லாமல் அது முதற்கொண்டே அவருக் கும் எனக்கும் பெண்கள் சீர்திருத்தத் துறையில் தொடர்பு உண்டாகிறது. அவரது குழந்தை சுபாவம் அப்பொழுதே என் மனதைக் கவர்ந்தது,'' என்று கூறியிருக்கிறார். இதற்குப் பின்தான் இந்திய மாதர் சங்கத்தின் ஆதரவில் பெண்கள் வரவேற்பு அளித்ததாகும்.

சாதனை

டாக்டர் முத்துலெட்சுமி 1961-இல் இச்சிக்கலைப் பற்றி எழுதிய கீழ்க்கண்ட கருத்துக்கள் அண்ணலின் சேவை எந்த அளவிற்கு மாதர் உரிமைகளைத் தமிழகத்தில் அவர்கள் அடைவதற்கு உதவியிருக்கிறது என் பதைப் பளிங்குபோல் காட்டுகிறது: ''1927-ஆம் ஆண்டு மகாத்மா தென்னாட்டில் சுற்றுப்பயணம் செய்தபோது இந்திய மாதர் சங்கத்தார் அளித்த வரவேற்பில் பால்ய திருமணம், தேவதாசி முறை ஒழிப்பு, வரதட்சணை, பெண்களுக்குத் தகப்பன், கணவன், ஆகியவர்களுடைய சொத்தில் பங்கு, மற்றும் கல்வித் துறையில் சமத்துவம், சம உரிமை போன்றவைகளைக் குறிப் பிட்டார்கள். மகாத்மா காந்திஜியின் எழுத்து வன்மையா லும் தேசாபிமானிகளான ஆண்கள், பெண்களின் விடா முயற்சியாலும் சுதந்திர இந்தியாவில் இன்று பெண்கள் சட்டசபையிலும், பாராளுமன்றத்திலும், கல்வித் துறையி லும் சம உரிமை அடைந்திருக்கின்றார்கள். பெண்களுக்குச் சட்ட மூலமாகப் பழைய வழக்கங்களின் குறைகள் எல்லாம் நிவர்த்திக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகப் பால்ய திரு மணம் அநேகமாக ஒழிக்கப்பட்டுவிட்டது. தென்னாட்டுக் கோயில்களில் இருந்து வந்த தேவதாசி முறையும் மறைந்து விட்டது. இவையாவும் மகாத்மா காந்தி அடிகளின் வாழ்

நாளிலேயே ஒழிந்து விட்டன என்று கூறலாம். நம் நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பெண்கள் ஆண்களுக்குச் சமமாகச் சொத்துரிமை பெற்றுள்ளார்கள். சமூகத்தில் பெண்களுக்கு மிகக் கொடிய, வரதட்சணைக் கொடுமையை ஒழிப்பதற்கு இவ்வாண்டு மசோதாவும் நிறைவேற்றி விட்டார்கள். கிராமத்துப் பெண்களும் கல்வியிலும், பொருளாதாரத் துறையிலும் முன்னேறி வருகிறார்கள். சட்டங்கள் மூலமாக ஏற்பட்டுள்ள சீர்திருத்தங்களைப் பெண்களும் ஆண்களும் சேர்ந்து ஒத்துழைத்து அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது மிக மிக அவசியம்.''

தாஸ் படம்

தமது அரசியல் குருவான தேச பந்து தாசின் படத்தை சத்திய மூர்த்தி மகாஜன சபைக்கு வழங்க, அதை மகாத்மா திறந்து வைத்தார் என்றால் அதற்குத் தனி முக்கியத்துவம் உண்டல்லவா? மகாஜன சபையின் சார்பாகப் படத்தைப் பெற்றுக் கொண்ட டி. வி. வெங்கட்ராம ஐயரும் காந்திஜி இன்னும் அதிக நேடிரயாக அரசியலுக்கு வந்து பாடுபட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். தாசின் படத்தைத் திறந்து வைத்த காந்திஜி அவருடைய அரசியலைக் காட்டிலும் ஆன்மிகத்தைப் பெரிதும் பாராட்டிப் பேசினார். ''இந்தியாவின் விடுதலைக்காகப் பாடுபடுவதே நமது அரசியல் குறிக்கோளாக இருக்கட்டும். இன்று இந்தியர் என்று சொல்லப்படும் யாரும் அரசியல் குறிக்கோள் இல்லாமல் இருக்க முடியாது. ஆன்மிக அடிப்படை இல்லாத எந்த அரசியல் செய்தியையும் இந்த நாடு ஏற்றுக்கொள்ளாது. பிறர் என்னைத் தவறுகப் புரிந்து கொள்வதாக இருந்தாலும் நான் என் நிலையைத் தெளிவாகக் கூறிவிட வேண்டும். சத்தியத்திற்காக இந்தியாவின் விடுதலையைப் பலி கொடுக்கவும் நான் தயங்கமாட்டேன். ஏனெனில் சத்தியத்திற்கு விரோதமான சுதந்திரம் எதுவும் சுதந்திரமே அல்ல,'' என்று அண்ணல் கூறினார். இங்கிருந்து காந்திஜி புறப்படு முன், பிரஸ் போட்டோ பீரோவைச் சேர்ந்த சரபோஜி ராவ், சென்னை நகரிலும் சுற்றுப்புறங்களிலும் காந்திஜி சென்றிருந்த போது எடுத்த படங்களின் தொகுப்பு ஒன்றை அண்ணலிடம் அளித்தார்.

பரங்கிமலை ஆதம்பாக்கத்தில் ''பொது ஜன ஊழியர் சங்கம்'' என்ற பெயரில் இயங்கிய ஒரு சங்கம், மக்களுக்கு

நல்ல தொண்டாற்றிக் கொண்டு வந்தது. இது ஐந்து இராப் பள்ளிகளையும் ஓர் இலவச மருத்துவ மனையையும் ஒரு படிப்பக த்தையும் நடத்தி வந்தது மட்டுமல்லாமல் இதனுடைய செலவிலேயே பதினைந்து தெரு விளக்குகளும் போட்டுக் கொண்டு வந்தது.

ஆதம்பாக்கம்

இந்தச் சங்கத்தினரும் ஜைனர்களும் பொது மக்களும் சேர்ந்து அன்று மாலை அண்ணலுக்குப் பரங்கிமலை ஆதம்பாக்கத்தில் வரவேற்பு அளித்தார்கள். சென்னையிலிருந்து வெளியூருக்குப் புறப்படுவதற்கு முன் அண்ணல் பங்கு கொண்ட கடைசி நிகழ்ச்சி இதுதான். பொது ஜன ஊழிய சங்கத்தை அண்ணல் பாராட்டிவிட்டு, ''சுகாதாரப் பணியைச் செய்யும்போது அரைகுறையாகச் செய்தால் அபாயம் தான் அதிகமாகும்,'' என்று எச்சரித்தார்.

சென்னை மாநகரில் தாம் தங்கியிருந்த காலத்தில் மக்கள் கதருக்குக் காட்டிய ஆதரவு மகாத்மாவிற்கு மிகுந்த மன நிறைவை அளித்தது. நகரை விட்டு அவர் கடலூருக்குப் புறப்பட்ட போது அவர் இதை வெளிப்படையாகச் சொல்லவும் செய்தார்.

மனநிறைவு

''நான் எங்குச் சென்றாலும் கதரைப் பற்றித் தான் பேசினேன். ஆனால் மக்கள் அதைத் திருப்பித் திருப்பிக் கேட்கச் சலிப்படையவே இல்லை. கதர் அணியாதவர்கள் பலர் என்னிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக் கொண்டார்கள். பண முடிப்புகளும் கணிசமாக இருந்தன. கதர் விற்பனையும் உற்சாகம் அளித்தது'' என்று அவர் சொன்னார். காதி மனப்பான்மை நிலைத்து விட்டது என்றும் பெருமையோடு கூறிக் கொண்டார்.

இன்று (9-9-27) இரவு திருவனந்தபுரம் எக்ஸ்பிரசில் காந்திஜி கடலூருக்குப் புறப்பட்டார். தமிழகச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு காந்திஜி இலங்கைக்குச் சென்று அங்கிருந்து திரும்பிச் சென்னைக்கு வராது ஒரிசாவிற்குச் சென்று விடுவார் என மக்கள் எதிர்பார்த்ததால் இரயில் நிலையத்தில் ஒரே கூட்டமாக இருந்தது; மாணவர்கள் கூட்டந்தான் மிக அதிகம். மாதர்களும் ஏராளமாக வந்திருந்தனர். எழும்பூர் மாவட்ட இரயில் போக்குவரத்து சூபரின் டெண்டான வீல்ட், பெண்கள் வசதியாக காந்திஜியைக்

இரயில் நிலையத்தில்

காண்பதற்கு ஏற்பாடு செய்தார். காந்திஜி சென்ற பெட்டியைக் கடலூரில் கழற்றிவிட்டு விட்டு, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் தனது வழக்கமான பயணத்தைக் கட்டியது.

10-9-27

அதிகாலை 3-30 மணிக்கு இரயில் கடலூர் (மஞ்சக்குப்பம்) வந்து சேர்ந்துவிட்டது. அது அகால வேளையாக இருந்ததால் வந்த பெட்டியிலேயே அவர் தூங்குவதற்கு இரயில்வே நிலையத்தினர் வசதி செய்து கொடுத்தார்கள். காலை ஆறுமணிக்கு நகராட்சி மன்றத் தலைவர் வேணுகோபால் நாயுடுவும் நகராட்சி மன்ற உறுப்பினர்களும் பொது மக்களும் அண்ணலை வரவேற்றுத் திருப்பாப்புலியூரில் உள்ள நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் பங்களாவிற்கு அழைத்துச் சென்றார்கள். அன்று அங்குத்தான் அண்ணல் தங்கியிருந்தார். காலையில் நகராட்சி மன்றத்தினர் அளித்த வரவேற்புரையில் காந்திஜி தம்முடைய செல்வாக்கையெல்லாம் பயன்படுத்தி, பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருந்தனர். ஆனால் இந்த வேண்டுகோளுக்கு மாலையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில் தாம் மறுமொழி கூறுவதாக அண்ணல் சொல்லிவிட்டார். திருப்பாப்புலியூரில் ராவ்பகதூர் டி. என். முத்தையா செட்டியார் எம். எல். சி. (இராமச்சந்திரபுரம்) விருந்தினராக அண்ணல் தங்கியிருந்தார்.

அகால வேளை

நகராட்சி அலுவலகத்திலிருந்து நேரே மாணவர்களின் வரவேற்பைப் பெறுவதற்காக ஒய். எம். சி. ஏ. கட்டிடத்திற்கு வந்த காந்திஜியிடம் (அங்கு வேணுகோபால் நாயுடு தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாணவர் சார்பாக, பி. சுவாமிநாத ஐயர் பணமுடிப்பை அளித்தார்.) அக்கூட்டத்தில் காந்திஜியை வரவேற்ற ரெவ. லாங்கு, ''இங்கே கூடியிருப்பது சந்நியாசிகள் கூட்டம் அல்லவென்றும் அதை நினைத்துக் கொண்டு பேசும்படியும்'' கேட்டுக்கொண்டார்! அதற்கு காந்திஜி வேடிக்கையாகப் பதில் அளித்தார்: ''நீங்கள் எல்லோரும் சந்நியாசிகளாக இருந்தால், எனக்கு மிகவும் தர்ம சங்கடமாகப் போயிருக்கும், நான் முழுப்

மாணவர் கூட்டம்

பக்குவமடையாத மனிதன். ஆனால் பக்குவமடைவதற்காக ஒவ்வொரு முயற்சியும் செய்துகொண்டிருப்பவன், அதே போன்று முயற்சி செய்து வருபவர்களின் கூட்டத்தில் பேசுவதுதான் எனக்கு மன நிறைவு அளிக்கும். இவ்வாறு நான் முயற்சி செய்யும்போது சில உண்மைகளைக் கண்டுபிடித்தேன். (1) சமுதாயத்தின் வளர்ச்சி தனிப்பட்டவர் வளர்ச்சியைப் பொருத்ததாகவே இருக்கிறது. (2) தனியார் வளர்ச்சிக்கு முதலில் அவசியமானது அடக்கம். (3) தொண்டு செய்ய முன் வருமுன் ஒருவன் தனது இதயத்தைத் தூய்மையான தாக்சிக்கொள்ள வேண்டும். (4) தூய இதயம் ஆன்மிக மான பிரார்த்தனை மூலம்தான் கிட்டும். (5) தொண்டு செய்ய விரும்புபவர்கள் விழிப்புணர்ச்சியுடன் இருக்க வேண்டும். (6) சுய முயற்சி முற்றிலும் அவசியமே; ஆனால் ஆண்டவனுடைய அருள் இல்லாவிட்டால் அந்த முயற்சி யெல்லாம் தூள்தூளாகிவிடும். (7) கடவுள்மீது நீங்கள் உறுதியான நம்பிக்கை வைத்தால் அது உங்களைக் காக்கும் கவசமாக இருக்கும். இவ்வாறு மிக உயர்ந்த ஆன்மிகத் தத்துவங்களையெல்லாம் காந்திஜி சொல்லிக்கொண்டு போனார். உண்மையில் துறவிகள் கூட்டத்தில் பேசுவது போன்றே ஆழ்ந்த தத்துவார்த்தம் நிறைந்த பேச்சாக அது ஆகிவிட்டது.

பொதுக் கூட்டம்

கலெக்டர் அலுவலக மைதானத்தில் பொதுக் கூட்டம் மிகவும் அமைதியாக நடைபெற்றது. (மாவட்டக் காங்கிரஸ் குழுவின் சார்பாகக் கிருஷ்ணசாமி செட்டியாரும், கடலூர் வழக்கறிஞர்கள் சங்கத்தின் சார்பாகவும் சுயராஜ்யா கட்சி சார்பாகவும் சீனிவாச ஐயங்கார் எம். எல். சி - யும் திண்டிவனம் பொது மக்கள் சார்பாக வெங்கட்ராம ரெட்டியாரும் பொது மக்கள் சார்பாக ஏ. வி. பாஷ்யம் ரெட்டியாரும் வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளித்தார்கள். கடலூர் மாதர்கள் சார்பாக அசலாம்பிகை அம்மாள் பண முடிப்பும் வரவேற்புரையும் அளித்தார்.) காலையில் அளிக்கப் பெற்ற நகராட்சி வரவேற்பு உள்பட எல்லா வரவேற்புரைகளுக்கும் சேர்த்து இங்குத்தான் காந்திஜி மறுமொழி அளித்தார். வரும் வழியில் காந்திஜியைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தோடு இரயில் நிலையங்களில் திரண்ட கூட்டம், அவருக்கும் அவருடைய சகாக்களுக்கும் அளித்த அளவிலாத் தொந்தரவை அவர் மகளில் சுட்டிக் காட்டி அன்பின்

காரணமாக மக்கள் எவ்வளவு தொல்லை கொடுக்கிறார்கள் என்பதை விளக்கினார்: ''வழியில் மூன்று இரயில் நிலையங்களில் இரயில் சிறிது நேரம் நின்றது. அங்கு மக்கள் பெரிய முற்றுகையிட்டு விட்டனர். சன்னல் ஓரத்தில் வந்து நான் காட்சி கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினர். நானே வரமுடியாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன். அவர்கள் மிகவும் ஆத்திரம் அடைந்தார்கள். அந்த ஆத்திரமெல்லாம் எனக்குத் துணையாக இருந்தவர்கள் மீது திரும்பியது. நான் கூப்பின் காரணமாகக் காலை நீட்டிப் படுத்துக் கொண்டேன். ஆனால் மக்கள் போட்ட பெரிய சத்தத்தின் காரணமாக எனக்குத் தூக்கம் வரவில்லை. 'இந்தச் சத்தம் அன்பின் காரணமாகப் போடப்பெற்ற சத்தமா அல்லது காலித்தனமா என்று வேறுபடுத்திப் பார்ப்பதே எனக்குக் கடினமாக இருந்தது. நான் சன்னலுக்கு வந்து வெளியே தலையைக் காட்டியிருந்தால் எனக்குத் துணையாக இருந்தவர்கள் மகிழ்ச்சி அடைந்திருப்பார்கள் என்பது உண்மையே. ஆனால் என்னால் அந்தக் கோரிக்கைக்கு இணங்க முடியவில்லை.'' இவ்வாறு கூறிவிட்டு, தம்மை உண்மையாக நேசிப்பவர்கள் இரவில் வந்து தொந்தரவு கொடுக்க வேண்டாமென்று அவர் கேட்டுக் கொண்டார். ''நான் வரும் வழியில் ஒரு வாசகத்தைப் பார்த்தேன். அந்த வாசகத்தைப் பின்பற்றினீர்களானால் போதுமானது. 'ஏழைகளை நேசியுங்கள்; நீங்கள் காந்தியை நேசித்தவர்களாவீர்கள்' என்பதுதான் அந்த வாசகம்.''

சர்க்காவைப் பற்றிக் கூறிவிட்டு, நகராட்சி மன்ற வரவேற்புரையில் கேட்டுக் கொள்ளப்பெற்ற பிராமணர்-பிராமணரல்லாதார் சிக்கலுக்கு மகாத்மா வந்தார். ''இந்தக் கடினமான சிக்கலுக்கு என்னிடம் திட்டவட்டமான தீர்வு எதுவும் இல்லை. இப்போதுகூட, பிராமணர்களுக்கும் பிராமணரல்லாதாருக்கும் இடையே உள்ள கருத்து வேறுபாடுகள் என்ன என்பது எனக்குப் புரியவில்லை. பிராமணரல்லாதார் சிலர் நந்திக்குன்றிற்கு வந்து என்னைச் சந்தித்தார்கள். பின்னால் எனது சுற்றுப் பயணத்தின் போது தங்கள் தரப்பை விளக்கிக் கூறுவதாகவும் சொன்னார்கள். பிராமணர்களோ என்னிடம் எதுவுமே சொல்லவில்லை. என்னுடைய வாழ்க்கையில் நான் பிராமணரல்லாதவனாக இருந்

பரிகாரம் இல்லை

தாலும் பிராமணர்கள் மத்தியிலேயே அதிகம் வாழ்ந்திருக் கிறேன். ஆகையால், பிராமணர்களுடைய கருத்தின் சாயல் என் கருத்தில் இடம்பெற்று விட்டதாகச் சிலர் கருதுகிறார் கள். அதனால், என்னிடம் நியாயமான தீர்வு கிடைக்காது என்று பிராமணரல்லாதார் நினைக்கிறார்களோ என்றுகூட எனக்கு ஓர் ஐயப்பாடு இருக்கிறது. ஆனால் நான் இரண்டு பேர்களுடைய கருத்தையும் - என் உடல்நிலை இடங் கொடுக்காவிட்டால் கூட - கவனித்துக் கேட்கத் தயாராய் இருக்கிறேன். பிராமணர்களுக்கு நான் கூறும் அறிவுரை இதுவே; ''நீங்கள் அறிவுக் களஞ்சியமாகவும் தியாகத்தின் சின்னமாகவும் இருப்பவர்கள். ஆண்டி வாழ்க்கையையும் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஆகையால் பிராமணரல்லா தார் என்னென்ன வேண்டுமென்று கேட்கிறார்களோ அவை களையெல்லாம் அவர்களுக்குக் கொடுத்துவிடுங்கள். உங்க ளுக்கு அவர்கள் எதை மிச்சம் வைக்கிறார்களோ அதை மட்டும் எடுத்துக் கொள்ளுங்கள்.'' பிராமணரல்லாதாருக்கு நான் கூறுவேன்: ''எண்ணிக்கையில் நீங்கள்தான் அதிகமாக இருக்கிறீர்கள். சொத்தும் உங்களிடம் தான் அதிகமாக இருக்கிறது. ஆகவே உங்களுக்கு என்னதான் வேண்டும்? ஒரு புதுத் தீண்டாமையை நீங்கள் ஏற்படுத்தும் குற்றத் திற்கு ஆளாகாதீர்கள். பிராமணர்கள் மீது கொண்ட ஆத்திரத்தில் பரம்பரையாக வந்துள்ள பண்பாட்டைக் காலில் போட்டு மிதித்து விடாதீர்கள். பிராமணர்களை வேண்டுமானால் கண்டியுங்கள். ஆனால் பிராமணீயத்தைச் சபிக்காதீர்கள். இந்து தர்மம் தழைக்க வெளி விளம்பரம் இல்லாது பாடுபடும் பிரர்மணர்கள் பலரை நான் அறிவேன். அவர்களை நீங்கள் அறியக்கூட மாட்டீர்கள். இவ்வாறு நான் சொல்வதற்காக, நான் பிராமண ஆதரவாளன் என்று எண்ணிவிடாதீர்கள். வழக்கறிஞர்கள், அமைச்சர்கள், நீதி பதிகள் ஆக இருக்கும் பிராமணர்களுக்கு ஆதரவாகப் பேசு கிறேன் என்றும் கருதி விடாதீர்கள். அவர்களைப் பற்றிய நினைப்பே எனக்கு இல்லை. நான் சொல்ல வந்ததெல்லாம் பிராமணர்களும் பிராமணர் அல்லாதாரும் முதலில் தங்களைத் தாங்களே குற்றமற்றவர்களாக்கச் செய்துகொள்ள வேண்டும் என்பதுதான். முதலில் தங்களுடைய குறைகள் என்னவென்பதை பிராமணரல்லாதார் முடிவு செய்து கொள்ளவேண்டும். அதன் பின்பு அவைகளை நீக்கத் தங்க ளால் இயன்ற முயற்சியையெல்லாம் எடுத்துக்கொள்ள வேண்டும்.'' இவ்வாறு அண்ணல் கூறினார்.

11-9-27

மகாத்மாவிற்கு உடல்களைப்பு அதிகமாக இருந்ததால் நெல்லிக்குப்பத்திற்குச் செல்ல முடியவில்லை. ஆகையால் அவருக்குப் பதிலாகக் கஸ்தூரிபா காந்தி சென்றார். நெல்லிக்குப்பத்தை அடுத்த கொத்துவப்பள்ளியில் கூட்டம் நடைபெற்றது. சிதம்பரத்தில் இரயில்வே நிலையத்திலிருந்து நந்தனர் பள்ளிவரை காந்திஜியை ஊர்வலமாக அழைத்துச் செல்வதென்று முதலில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. ஆனல், காந்திஜி அதை விரும்பவில்லை. ஆகையால், அவரைக் காரில் நேரடியாகப் பள்ளிக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு நந்தனர் ஆலயத்திற்கு அடித்தளக்கல் நாட்டியபின் சுவாமி சகஜானந்தா அவருக்கு ஒரு வரவேற்புரையைப் படித்தளித்தார். நந்தனர் மடத்தில் தென்னார்க்காடு மாவட்ட ஆதித்திராவிட மகாஜன சபையார் வரவேற்புரை படித்துக் கொடுத்தார்கள். ''எங்கள் சமூக முன்னேற்றமானது கல்வியறிவொழுக்கம், கைத்தொழில், கடவுள் வழிபாடு முதலியவையின்றி முடிவு போகாதெனக்கண்டு எங்கள் சுய முயற்சியாலேயே நந்தனர் பேரால் ஆலயம், மடம், கலாசாலை, கைத்தொழிற்சாலை முதலியன காண அரிதின் முயன்று ஈண்டுள்ள நந்தனர் கலாசாலையை 1926-ஆம் ஆண்டு தோற்றுவித்தோம்,'' என்று ஆலயம், பள்ளியின் வரலாறு அதில் கூறப்பெற்றிருந்தது.

சிதம்பரம்

சிதம்பரத்தில் முதன் முதலாக ஒரு ஆலயத்திற்கு அதுவும் நந்தனர் ஆலயத்திற்கு அடித்தளக்கல் நாட்டும் வாய்ப்புக் கிடைத்ததற்காக காந்திஜி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். நந்தனர் கண்டது போல் ஆண்டவனை நேருக்கு நேராகக் காண்பதற்கு உதவக்கூடிய ஒரு கோவிலாக இது இருக்கும் - யாரும் சுதந்திரமாக வரக்கூடிய கோவிலாக இருக்கும் - என்று தாம் நம்புவதாகவும் சொன்னார். ''வெறும் கல்லாலும் மண்ணாலும் ஆன கோவிலில் நுழைவதைப் பற்றி மட்டும் நந்தன் எண்ணவில்லை. தன் ஆன்மாவின் முக்தியையே விரும்பினன். அவனைப்போன்று நீங்களும் உள்ளத் தூய்மை அடைய முயல வேண்டும்'' என்று அண்ணல் கேட்டுக்கொண்டார்.

நந்தன் ஆலயம்

இந்த வரவேற்புரையில் ஒரு கோரிக்கை மிகவும் துணிச்சலோடு கூறப்பெற்றிருந்தது. ''எத்துணை கதரியக்கத்தாலும் தீண்டாமையும் தீண்டாமையாலேற்படும் தீங்குகளும் ஒழியாவெனயாங்கள் துணிந்து கூறுவோம். சுயராஜ்ய நிதிக்கும் கதர் நிதிக்கும் தாங்கள் சுற்றுப்பயணம் செய்வதுபோல் தீண்டாமைக்காகவே மற்றுமோர் சுற்றுப் பயணம் செய்யவும், அதன் மூலம் வரும் பொருளைத் தீண்டாமை ஒழிப்பிற்காகவே செலவிடவும் வேண்டுகிறேம்'' என்று வரவேற்புரை கேட்டுக் கொண்டது. நந்தன் வழிபட்ட திருத்தலமாகிய சிதம்பரத்தில் கூறப் பெற்ற இந்த வேண்டுகோள் பலிக்கவும் செய்தது. அடுத்த முறை, அதாவது, 1934-இல் அண்ணல் வந்தபோது தீண்டாமைச் சுற்றுப்பயணத்தின் பேரிலேயே வந்தார்.

அரிஜன யாத்திரை

இரயில்வே நிலையத்திற்கு எதிரில் உள்ள கொற்றவங்குடி (கொத்தங்குடி) தோப்பில் அன்று நடைபெற்ற கூட்டத்தில் காந்திஜி நந்தனாரின் ஆன்மிகத் தத்துவத்தை விண்டு விளக்கிக் கொண்டிருந்தார். (சிதம்பரம் நகராட்சி மன்றம், ஆறுமுக நாவலர் பள்ளி, ஸ்ரீ மீனாட்சி கல்லூரி மாணவர்கள் - மகாத்மா காந்தி ஆங்கில நூல் தொகுப்புத் தலைமை ஆசிரியர் ஆகிய பேராசிரியர் சுவாமிநாதன் அப்போது ஸ்ரீமீனாட்சி கல்லூரியின் துணை முதல்வர் ஆக இருந்தார். மாணவர்கள் காந்திஜியை வரவேற்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்தவர் அவர்தான் - ஸ்ரீமீனாட்சி பயிற்சிப் பள்ளி மாணவர்கள், வழக்கறிஞர் சங்கத்தினர், வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் சங்கத்தினர், பரஞ்சோதி சுவாமிகள், சிதம்பரம் பொது மக்கள் ஆகியோர் சார்பாகப் பணமுடிப்புகளும் வரவேற்புரைகளும் வழங்கப்பெற்றன.) காந்திஜிக்கு ஒரே அவசரம். ஏழு மணிக்குச் சிதம்பரத்திலிருந்து இரயிலில் அவர் புறப்பட்டாக வேண்டும். அந்த அவசரத்திலும் நந்தனாரைப் பற்றிப் பேசத் தொடங்கி மிகவும் ஆழமாக அத்தத்துவத்தை விளக்கிக்கொண்டு போனார். ''யங் இந்தியா''வில் சிதம்பரத்தையும் நந்தனாரையும் பற்றி ராஜாஜி எழுதிய ஒரு கட்டுரை தம்மை எவ்வாறு கவர்ந்தது என்பதிலிருந்து தொடங்கினார். ''இந்தக் கட்டுரையைப் படித்ததிலிருந்து நான் செல்லவேண்டிய யாத்திரைத் தலங்களில் சிதம்பரம் ஒன்று என்று முடிவு செய்துவிட்டேன். நான்தான் முதல்

நந்தன் ஆன்மிகம்

சத்தியாக்ரகி என்று நான் உரிமை கொண்டாடவில்லை. எல்லோரும் சத்தியாக்ரகத்தைக் கடைப்பிடிக்க முடியும் என்றுதான் உரிமை கொண்டாடுகிறேன். நந்தனின் புனித பாதங்கள் பட்ட புண்ணிய பூமிக்கு வந்ததால் உயர்ந்து விட்டோம் என்ற எண்ணம் இன்று முழுதும் என் உள்ளத்தைக் கவர்ந்துள்ளது. இன்னும் சில நிமிடங்களில் இவ்விடத்தை விட்டுப் புறப்படும்போது என் மனம் மிகவும் வேதனை அடையும். சிதம்பரத்திலுள்ள மக்களாவது பிராமணர்களுக்கும் பஞ்சமர்களுக்கும் வேறுபாடு பாராட்டாதவர்களாய் இருக்கவேண்டுமென்று நான் எவ்வளவு விரும்புகிறேன் தெரியுமா? அகந்தை நிறைந்த பிராமணர்களின் அகங்காரத்தை நந்தன் தாங்கிக்கொண்டான். அதன் மூலம், அவனை இழிவாகக் கருதியவர்களைக் காட்டிலும் அவன் எண்ணற்ற மடங்கு உயர்ந்தவன் என்பதை மெய்ப்பித்துவிட்டான். ஆதிதிராவிடர்கள், பஞ்சமர்கள், நந்தனின் உணர்வை மேற்கொண்டு வாழவேண்டும். (1) நந்தன் தூய்மையான முறையில் சுய பரித்யாகம் செய்து தன் முன்னுல் வந்த முட்டுக்கட்டைகளை உடைத்தெறிந்தான். (2) தன்னுடைய உரிமைகளைக் கேட்கும் அளவிற்குக் கூட அவன் தாழவில்லை. (3) தன்னுடைய உயர்ந்த பிரார்த்தனையாலும் தூய்மையான நடத்தையாலும் அவர்கள் வெட்கம் அடையுமாறு செய்துவிட்டான். உண்மையைச் சொல்லப்போனுல் கடவுளே இறங்கி வந்து அவனைத் தண்டித்தவர்களுடைய கண்களைத் திறக்க வைத்தான். அன்று நந்தன் ஒருவன் செய்ததை நாம் ஒவ்வொருவரும் ஏன் செய்யக்கூடாது? அதைச் செய்ய முடியுமானுல் நம் நாட்டைப் புனிதமான மக்கள் நிறைந்த நாடாகச் செய்து விடலாம்.

கதர் உணர்வு

''அதே போன்று கதரை அணிவதால் மட்டும் நாம் நந்தனைப் பின்பற்றி விடமுடியாது. கதர் உணர்வு நமக்கு வேண்டும். கதர் உணர்வு என்றுல் என்ன? (1) காலையில் நாம் கதரை உடுத்தத் தொடங்கும் போது தரித்திர நாராயணர்களின் பெயராலல் அதை உடுத்துகிறோம் என்பதை நினைவிற் கொள்ளவேண்டும். (2) வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் எளிமையாக வாழ்ந்து தொண்டாற்ற வேண்டும். (3) எல்லையற்ற பொறுமை உள்ளவர்களாய் இருக்கவேண்டும் - கையால் நூற்பவர்களுக்கும் அந்த நூலை நெய்பவர்

களுக்கும் இது நன்கு தெரியும். (4) சத்தியத்திலும் அஹிம்சையிலும் உறுதியான நம்பிக்கை உடையவர்களாய் இருக்க வேண்டும். (5) உலகில் உள்ள ஒவ்வொரு உயிர்ப்பிராணியிடமும் சகோதரத்துவ உணர்வு கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.'' தத்துவத்தின் இருப்பிடமான ஆலயத் தலம் அல்லவா சிதரம்பரம்? ஆகையால் காந்திஜியும் தமது தத்துவங்களைக் கொட்டிக் கொண்டிருந்தார்.

மாயவரம்

இரவு சுமார் ஒன்பது மணிக்கு அந்த இரயில் மாயவரம் வந்து சேரவேண்டும். அந்த நேரத்தில் இரயில் நிலையத்தில் பெருங்கூட்டம் வந்து கூடிவிட்டால், அண்ணலை அழைத்துச் செல்வது மட்டுமல்லாது, அவருக்கும் கஷ்டமாக இருக்குமே என்று கருதி அவர் வரும் நேரத்தை மிகவும் இரகசியமாக வைத்திருந்தார்கள். ஆனாலும் மக்களுக்கு அது எப்படியோ தெரிந்து விட்டது; இரயில் நிலையத்தில் வந்து கூடி விட்டார்கள். ஆகவே, வேறு வழி தோன்றாது மாயவரத்திற்கு வடக்கே உள்ள நீடூர் இரயில் நிலையத்திலேயே காந்திஜியை இறக்கிக் காவேரி வடகரையில் திருவழந்தூரில் உள்ள மாயவரம் தாலுகா போர்டு துணைத் தலைவர் எஸ். தில்லைநாயகம் பிள்ளை (ரங்க விலாஸ்) இல்லத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இரயில் நிலையத்தில் காத்திருந்த மக்கள் ஏமாற்றமடைந்து திரும்பினர்கள்.

12–9–27

மௌன தினம்

திங்கட்கிழமை மௌன தினம்; ஆகையால் அண்ணல் பங்கு கொள்ளும் பொது நிகழ்ச்சிகள் எதுவும் ஏற்பாடு செய்யப்பெறவில்லை. மக்கள் மட்டும் ஆயிரக் கணக்கில் அவர் தங்கியிருந்த இல்லத்திற்கு வந்து அவரைக் கண்டு சென்றார்கள். காந்திஜியின் வருகையை முன்னிட்டு இன்று நகராட்சி மன்றப் பள்ளிகளுக்கெல்லாம் விடுமுறை விடப்பெற்றதுடன், மறுநாள் பொதுக்கூட்டத்தில் அமைதியாக நடந்துகொள்வது எவ்வாறு என்று பயிற்சியும் தரப் பெற்றது!

13-9-27

மறுநாள் இராஜாந் தோட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டப் பள்ளிச்

சாரணர்களும், காங்கிரஸ் தொண்டர்களும், போலீசாரும், கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்களும் மேற்கொண்ட முயற்சி பாராட்டத் தக்கதாக இருந்தது.

பொதுக் கூட்டம்

(முதலில் சம்பிரதாய முறையில் மாயவரம் நகராட்சி மன்றம், தாலுகாபோர்டு, நகராட்சி மன்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள்-மாணவர்கள், மாயவரம் உயர்நிலைப் பள்ளிகளின் மாணவர்கள், திருச்சம்பள்ளி செம்பன்னூர் கோவில் காங்கிரஸ் சபை, நன்னிலம் தாலுகாவைச் சேர்ந்த குவளைக்கல் கிராமவாசிகள், தரங்கம்பாடி தென்னிந்திய தாழ்த்தப்பட்டோர் சங்கம் ஆகியவைகளின் சார்பாக வரவேற்புரைகள் கொடுக்கப் பெற்றன. மாயவரம் நகர, தாலுகா மக்களின் சார்பாகக் கார்குடி ஆர். சின்னையா பிள்ளையும் குவளைக்கல் கிராம மக்களின் சார்பாக நடேச ஐயரும் கோடை விளாகம் மக்கள் சார்பாக எஸ். சம்பந்தம் பிள்ளையும் மற்றும் சிலரும் பண முடிப்புகளை அளித்தார்கள்.) காந்திஜி இங்கு வருவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புதான் கதர் நிதிக்காக ஸ்ரீ ரங்க விஜயதசபாவின் ஆதரவில் வேலுநாயர் அனந்த நாராயண ஐயர் நடித்த உதவி நாடகம் ஒன்று நடை பெற்றது.

துப்புரவுச் சிக்கல்

துப்புரவுச் சிக்கலை இங்கு காந்திஜி கிளப்பியதற்கு ஒரு காரணமும் இருந்தது. காந்திஜி தங்கியிருந்த வீட்டிற்குப் பக்கத்தில் ஓர் அழகான குளமும் தோப்பும் இருந்தன. மூங்கில் பாலம் ஒன்றைத் தாண்டி அந்தக் குளத்திற்குச் செல்ல வேண்டும். முதல் நாள் காலையில் இந்த அழகான இடத்திற்கு உலாவச் செல்லலாம் என்று அவர் போனார். ஆனால் ஆசை யோடு அங்குச் சென்ற போது பலர் மலங்கழித்துக் கொண் டிருந்ததைத் தான் கண்டார். அங்குச் சகிக்க வொண் ணாத் துர்நாற்றம் வீசியது. மலம் கழித்தோர் கால் கழுவி யது அந்தக் குளத்தில் தான். அதே சமயம் அந்தக் குளத் தண்ணீரை ஒரு பெண் பானையில் மொண்டு கொண்டிருந்த தையும் அவர் கண்டார். இவைகளெல்லாம் சேர்ந்து அவ ருக்கு மிகுந்த மன வேதனையை ஏற்படுத்தி விட்டன. இதை இக்கூட்டத்தில் அண்ணல் குறிப்பிட்டுச் சொன்னார். ''இதில் பயங்கரமான தவறு ஏதோ இருப்பது உறுதி. ஒரு நகராட்சி மன்றம் முதன் முதலில் அளிக்க வேண்டியவை துப்புரவும் நல்ல குடி தண்ணீரும் தான்.'' என்றார். நகராட்சி மன்றங்

களில் பதவி வகிக்கச் செல்பவர்களுக்கு, ஓரிரு அறிவுரை களும் கூறினர். ''நகராட்சி மன்றத்தில் பதவி வகிப்பதை ஒரு பெருமையாகக் கருதக் கூடாது. ஒரு தோட்டியின் மனப்பான்மையுடன் தான் யாரும் அங்குச் செல்ல வேண்டும்,'' என்றார். நகரங்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு ஒரு நல்ல யோசனையையும் சொன் னார்: ''உங்களிடம் எத்தனையோ பள்ளிகள் இருக் கின்றன. அந்தப் பள்ளி மாணவர்களுக்கு ஒரு நாள் விடுமுறை விட்டு, தெருக்களைச் சுத்தம் செய்யச் சொல்லுங்கள். தெருக்களையும் தண்ணீரையும் சுத்தமாக வைத்திருக்கும்படி மக்கள் மத்தியில் பிரசாரம் செய்யுமாறு சொல்லுங்கள். பள்ளிகளில் கற்கும் துப்புரவை நடைமுறை யில் கொண்டு வராவிட்டால் பயன் என்ன?'' இந்த மாய வரம் பேச்சை காந்திஜி மிக முக்கியமானதாகக் கருதியிருக் கிறார் என்று தெரிகிறது. ஏனெனில், திருச்சியில் பேச முடியாத கூட்டத்தில் ''எனது மாயவரம் பேச்சை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்'' என்று கூறியுள்ளார்.

தரங்கம்பாடி பஞ்சமர்

நிலச்சுவான்தார் - அரிஜனத் தொழிலாளர் முரண்பாடு அந்தக் காலத்திலும் ஏதோ ஓர் உருவத்தில் இருந்து வந்திருக் கிறது. தரங்கம்பாடி தென்னிந்திய தாழ்த்தப் பட்டோர் சங்கத்தின் வரவேற்புரை, தங்கள் வகுப்பை அடிமைகளின் நிலைக்குச் சாதி இந்துக்கள் கொண்டு வந்து விட்டார்கள் என்றும் அரசாங்கமோ தங்களுக்குக் கடைநிலை அலுவல் களும் கொடுப்பதில்லை என்றும் தங்களுடைய சராசரி வருமானம் ஆண்டிற்கு நாற்பது ரூபாய்தானென்றும் செலவோ நூற்றி இருபது ரூபாய் ஆகிறது என்றும் ஆண்டில் பெரும் பகுதியான காலம் தாங்கள் வேலை இல்லாமல் இருக்க நேருகிறது என்றும் புலம்பியது. ஆகை யால் தமது மறுமொழியில், இதைப் பற்றித் தெளிவாகவும் அதே சமயம் மிகவும் நிதானமாகவும் அண்ணல் குறிப்பிட் டார்: ''இந்தக் குற்றச் சாட்டுகளில் எந்த அளவு உண்மை இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது. அதை நான் பின்னல் மற்றவர்களிடமிருந்து விசாரித்துத் தெரிந்து கொள்கிறேன். ஆனலும் பொதுவாகத் தாழ்த்தப்பட்டவர் களுக்கு என்னுடைய முழு அனுதாபமும் உண்டு. அவர்கள் தான் உண்மையில் நிலத்தின் சொந்தக்காரர்கள் என்று அவர்கள் கூறியிருப்பதையும் ஒப்புக் கொள்கிறேன். ஆனலும்

அவர்கள் தங்களுடைய வரவேற்புரையில் தெரிவித்திருக்கும் அளவு விரக்தி அடையவேண்டியதில்லை. அவர்கள் தங்களுடைய சொந்த பலத்தில் தங்கள் எண்ணிக்கையில், உழைப்பில் - நம்பிக்கை வைக்க வேண்டும். அப்போது யாரும் அவர்கள் மீது ஆக்கிரமிக்க முடியாது. அவர்கள் யாருக்கும் அடிமையாக இருக்க மாட்டார்கள். அவர்களுடைய உழைப்பில்லாவிட்டால் நிலம் புதர் மண்டித்தான் கிடக்கும்.'' இவ்வாறு அரிஜனத் தொழிலாளர்களுக்குத் தன்னம்பிக்கை ஊட்டிவிட்டு, நிலச்சொந்தக்காரர்கள் பக்கம் நோக்கி அவர் கூறினார்: ''இந்த வரவேற்புரையில் உள்ள குற்றச் சாட்டுக்கள் ஓரளவு உண்மையாக இருந்தாலுங்கூட, அது நிலச்சொந்தக்காரர்களுடைய நற்பெயருக்கு மிகப் பெரிய இழுக்காகும். யார் தோள் மீது அவர்கள் அமர்ந்திருக்கிறார்களோ அவர்களுடைய காதையே அவர்கள் கடிக்க வேண்டாம். இந்தத் தொழிலாளர்கள் தான் அவர்களுடைய நிலங்களைக் கதிர்கள் பூத்துக் குலுங்குமாறு செய்கிறார்கள். ஆகையால் இத்தொழிலாளர்களைத் தங்களுடைய குடும்பத்தில் ஒருவராக நிலச் சொந்தக்காரர்கள் கருதுவார்களாக! பெரிதும் இவர்களுடைய உழைப்பால் கிடைக்கும் பலனை இவர்களுடன் சேர்ந்து பகிர்ந்துகொள்வார்களாக. நம்முடைய சொந்தத் தொழிலாளர்களையே தீண்டத் தகாதவர்கள் எனக் கருதுவது தவறும் பாவமுமாகும்.'' 1915-இல் தரங்கம்பாடிக்கு அண்ணல் சென்ற போது பஞ்சமர் தெரிவித்திருந்த கோரிக்கைகளைப் பற்றி இதே மாயவரத்தில் தான் அண்ணல் ஆணித்தரமாகப் பேசினார் என்பதையும் இப்போது நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

இசை வேளாளர்

இன்று மதியம் இசை வேளாளர்கள் வகுப்பைச் சேர்ந்தவர்கள் காந்திஜியைச் சந்தித்துப் பேசினார்கள். அவர்களுடைய வாழ்க்கை முறையைப்பற்றி, ஆலயங்களுக்குத் தேவதாசிப் பட்டம் கட்டி விடுவதையும் அவர்கள் வாழ நேரும் கேவலமான வாழ்க்கையையும் பற்றி அவர்களிடம் காந்திஜி விவரமாக விசாரித்தறிந்தார். ''நீங்கள் வேறு தொழில் செய்து பிழைக்க முடியாதா?'' என்று கேட்டார். ''எங்களுக்குப் பழக்கப்பட்டுப் போன வாழ்க்கை முறைக்கு வேறு எந்தத் தொழில் செய்தாலும் கட்டுபடியாகாதே?'' என்று அவர்களுக்குத் தலைமையாக வந்திருந்த பெண் கூறினார்.

''உங்களில் எத்தனை பேர் உழைத்து வாழத் தயாராயிருக்கிறீர்கள் என்பதை நன்றாக யோசித்து எனக்கு எழுதுங்கள். உங்களுக்கு நாளொன்றுக்கு எட்டு மணி நேரம் வேலை அளித்து நாணயமான, கண்ணியமான, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்வதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்.'' என்று அண்ணல் அபயம் அளித்தார்.

பொதுக்கூட்டம் நடைபெறுவதற்குச் சுமார் இரண்டு மணி நேரத்திற்கு முன்பு இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

கடவுளுக்கு அவதூறு

ஆகவே இதைப் பற்றி அண்ணல் மிகுந்த மன வருத்தத்தோடு பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டார். அவர் கூறினார்: ''அவர்களைத் தேவதாசிகள் என்று அழைப்பதன் மூலம் கடவுளையே நாம் அவதூறு செய்கிறோம். நம்முடைய காம இச்சையைத் தீர்த்துக் கொள்வதற்காகக் கடவுள் பெயரையே இழுக்கிறோம். இவ்வாறு ஒழுக்கமில்லாத வாழ்க்கை வாழ்வதற்காக ஒரு வகுப்பாரும், இம்முறை நீடிப்பதற்காக ஒரு சாராரும் இருக்க வேண்டுமென்று சிலர் எண்ணுவதைப் பார்க்கும்போது வாழ்க்கையே கசந்துபோகிறது. நான் அந்தப் பெண்களைச் சந்தித்தபோது அவர்கள் கண்களில் களங்கம் எதுவும் தென்படவில்லை. உலகில் உள்ள மற்ற பெண்களைப் போல அவர்களும் ஒழுக்கமான வாழ்க்கை வாழ முடியும் என்று நான் உறுதியாகக் கூறுகிறேன். அவர்களுக்கும் நம்முடன் பிறந்த சகோதரிகளுக்கும் என்ன வேறுபாடு இருக்க முடியும்? இந்தச் சகோதரிகளில் பெரும் பாலோர் சொல்லப் போனால் எல்லோருமே தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக் கொள்வதாக என்னிடம் தெரிவித்தனர். நான் சொன்ன நிபந்தனைகளை நிறைவு செய்து அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முடியாவிட்டால், நான் அவர்களைக் குறை கூறமாட்டேன். அவர்கள் கதி எந்தச் சமூகத்தில் பின்னிப் பிணைந்து கிடக்கிறதோ அந்தச் சமூகத்தையே குறை கூறுவேன்,'' என்றார்.

14-9-27

மறுநாள் காலை மதுரை பாசஞ்சர் ரெயிலில் காந்திஜி கும்பகோணத்திற்குப் புறப்பட்டார். வழக்கமாகக் காலையிலும் மாலையிலும் சிறிது நேரம் காந்திஜி உலாவப் போவது வழக்கம். இன்று காலையில் தாம் தங்கியிருந்த இடத்திலிருந்து இரயில்வே நிலையத்திற்குக் காரில் சென்ற

போது நடு வழியில் கூரைநாட்டில் இறங்கி நடந்து இரயில் நிலையத்திற்கு வந்தார். கும்பகோணத்திலும் கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக, திருவிடமருதூர் இரயில் நிலையத்திலேயே காந்திஜியும் அவர் குழுவினரில் சிலரும் இறங்கிவிட்டார்கள். கஸ்தூரி பாவும் மற்றும் சிலரும் மட்டும் கும்பகோணம் இரயில் நிலையத்தில் வந்திறங்கி எல்லா மரியாதைகளையும் பெற்றுக் கொண்டார்கள். கும்பகோணத்தில் பந்துலு ஐயர் இல்லத்தில் காந்திஜி தங்கினர். அங்கு அவர் வந்து சேர்ந்தபோது ஐயர் அவரைப் பூர்ண கும்ப மரியாதையுடன் வரவேற்றார். திருவிடமருதூரில் இறங்கியது அண்ணலுக்கு இலாபமில்லாமற் போகவில்லை. திருவாவடுதுறை ஆதினம் உயர் நிலைப் பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும் தங்களால் இயன்ற பண முடிப்பு ஒன்றை அளித்து வழி அனுப்பி வைத்தார்கள்.

குடந்தை

கும்பகோணத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்ற இடம் நகர உயர்நிலைப்பள்ளி மைதானம்.(மகாத்மா வந்து அமர்ந்தவுடன் நகராட்சி மன்றத் தலைவரான எம். சி. என். முத்துக்குமார செட்டி, தாலுகா போர்டு தலைவரான சி. என். இலட்சுமி வரத ஐயங்கார், ஆகியோர் முறையே நகராட்சி மன்றத்தின் சார்பாகவும் தாலுகா போர்டு சார்பாகவும், இந்திப் பிரச்சார காரியாலயத்தின் சார்பாக இராமச்சந்திர சாஸ்திரியும் தமிழ்ச் சங்கத்தின் சார்பாக சிவகுருநாத செட்டியாரும் கல்லூரி மாணவர்களின் சார்பாக முத்துராமனும் வரவேற்புரைகளைக் கொடுத்தார்கள். இதன் பின்னர் பொது மக்கள் சார்பாகவும் ஜைனர்கள் சார்பாகவும் வி. பந்துலு ஐயர், சௌராஷ்டிரப் பெருமக்கள் சார்பாக பத்ரசாமி ஐயர் மற்றும் கல்லூரி மாணவர்கள், திருவிடமருதூர் பள்ளி மாணவர்கள் - ஆசிரியர்கள், ஏ. எஸ். கல்யாணசுந்தரம் சாஸ்திரிகள், பேட்டைத் தெரு மக்கள், கிருஷ்ணமூர்த்தி ஐயர், திருப்பெருந்திரு திருவாவடுதுறை பண்டார சந்நிதி ஆகியோர் சார்பாகப் பண முடிப்புகள் வழங்கப் பெற்றன. சரஸ்வதி பாடசாலை மாணவிகளும் கோபால கிருஷ்ணபிள்ளையும் நூல் சிட்டங்களை அளித்தார்கள். நூற்புப் போட்டியில் வெற்றி பெற்ற டி. கிருஷ்ணசாமி ஐயங்காருக்குப் பெரியசாமிப் பத்தர் அன்பளிப்பாக வழங்கிய தங்கப் பதக்கத்தை அண்ணல் அளித்தார்.) இங்கு அண்ணல் வந்து சேர்ந்தவுடன் அவரை

பொதுக் கூட்டம்

மாணவர்களின் பிரதிநிதிகள் சந்தித்து, தனியாக மாணவர்கள் கூட்டத்தில் பேச வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். ஆனல் தமது உடல்நிலை தனித்தனியாக இரண்டு கூட்டங்களில் பேச இடங்கொடுக்காதென அண்ணல் கூறவே, அவர்களும் ஒப்புக்கொண்டனர். ஆகவே, பொதுக்கூட்டத்திலேயே அண்ணல் மாணவர்களுக்கு வேண்டிய அறிவுரைகளைச் சொன்னர்.

வைதிகர் சந்திப்பு

சென்னை பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் கூட்டத்தில் அண்ணல் கூறிய சில கருத்துக்கள் - குறிப்பாக, விதவை இளம் பெண்களை மாணவர்கள் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்று கூறியது - கும்பகோணத்தில் வாழ்ந்த வைதிக பிராமணர்கள், வேதம் படித்தவர்களின் மனத்தை வருத்தியது. இங்கு அண்ணல் வந்தபோது அவரைச் சந்தித்து இப்பொருள் பற்றி விவாதிக்க நேரங்கொடுக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டிருந்தனர். அன்று இரவு எட்டு மணிக்கு அவர்களைச் சந்தித்துப் பேச அண்ணலும் ஒப்புக் கொண்டிருந்தார். அதைப்பற்றி இந்தக் கூட்டத்தில் குறிப்பிட்டு, ''நான் மாணவர்கள் கூட்டத்தில் கூறிய கருத்துக்கள் நன்கு ஆலோசனை செய்தபின் கூறப்பெற்றவைகளே. அவைகளில் ஒரு சொல்லை மாற்றுவதற்குக் கூட அவசியம் இருப்பதாக நான் கருதவில்லை. தீண்டாமை மட்டுமல்ல குழந்தைத் திருமணத்திற்கும் இந்து சமயத்தில் இடம் இல்லை!'' என்று சொன்னர்.

பிற மதத்தினர்

''இத்தகைய சிக்கல்களில் இந்து மதத்தினரை மட்டுமே குறை கூறும் காந்திஜி முசல்மான்கள், கிறித்தவர்கள் குறைகளை மட்டும் சொல்லாது வாயை மூடிக் கொண்டிருப்பதேன்?'' என்று சனாதனிகள் ஆத்திரத்தோடு கேட்டார்கள். அந்தக் கேள்விக்கும் அவர் இங்கு மறுமொழி சொன்னர். ''நான் இந்து மதத்தவனாதலின் இந்து மதத்தையே நன்முய் அறிவேன். இந்து மதத்தை அறிந்த அளவிற்குக் கிறித்தவ, முஸ்லிம் சமயங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஒரு நல்ல வைத்தியன் நோயாளியின் நிலைமையை அறிந்து விட்டால் எப்படிக் கூசாமல் கிகிச்சை செய்வானே அதைப் போன்று நான் இந்து சமூகத்திற்கு என்னால் செய்யக்கூடிய நன்மைகளையெல்லாம் செய்ய விரும்புகிறேன்'' என்று அவர் கூறினர்.

உரலுக்கு ஒரு புறம் இடி, மத்தளத்திற்கு இருபக்கமும் இடி என்று கூறுவார்கள். அதேபோன்று காந்திஜியின் கருத்துக்களுக்கு இரு புறமும் தாக்குதல் இருந்து வந்தது. விதவைச் சிறுமிகளின் மறு மணத்தை ஆதரித்ததற்காக வைதிகர்கள் ஆத்திரங் கொண்டு, காந்திஜி சென்ற பின் கும்பகோணத்தில் கூட்டம் போட்டுக் கண்டனத் தீர்மானம் போட்டார்கள். அதே சமயம் சென்னையில் பிராமணரல்லாதார் இளைஞர்கள் சங்கம் வர்ணாஷ்ரம தர்மத்தைப் பற்றி காந்திஜி கூறிய கருத்திற்குத் தனது வன்மையான எதிர்ப்பைத் தெரிவிப்பதாகவும், வர்ணாஷ்ரம தர்மந்தான் முன்னேற்றத்திற்கெல்லாம் முட்டுக்கட்டையாக இருப்பதாகவும் ஒரு தீர்மானத்தில் கூறியது.

தாக்குதல் இருபுறம்

அன்று இரவு முதலிலேயே திட்டமிட்டபடி அரசாங்கக் கல்லூரி சமஸ்கிருத பண்டிதரான ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியாரும் மற்றும் ஏழு பண்டிதர்களும் வைதிகர்களின் சார்பாக மகாத்மாவைச் சந்தித்துப் பேசினர்கள். காந்திஜியுடன் கருத்து வேறுபட்டிருந்தாலும், வைதிகப் பண்டிதர்களில் பலர் தனிப்பட்ட முறையில் காந்திஜியைப் பற்றிப் பெருமையான கருத்தே கொண்டிருந்தார்கள் என்று தெரிகிறது. பண்டிதர் குழுவிற்குத் தலைமை தாங்கிச் சென்ற ஆர். வி. கிருஷ்ணமாச்சாரியார் சுவாமிகள் கூறியவைகளே இதற்குச் சான்று. ''மகாத்மாவின் தூய இதயத்தையும் அவருடைய சத்திய வாழ்க்கையையும் ஒரு நாளும் குறைத்துப் பேச முடியாது. மகிழ்வு நிறைந்த அவர் முகமும் பொறுமையான பார்வையும் எதிரிகள் மனத்தையும் கவரக்கூடியவையாகும். அவரைப் பார்த்த மாத்திரத்தில் பண்டிதர்கள் கொண்டிருந்த கோபமெல்லாம் பறந்து போய்விட்டது. காந்திஜியின் தேஜஸைக் கவனிக்கும்போது, அவர் மனிதருக்கும் மேம்பட்டவராகவே காணப்படுகிறார்,'' என்று அவர் கூறினார். ஆனல் அதே சமயம் இவர்களுடைய பத்திரிகையான ''ஆர்ய தர்மம்'' இந்திய சமூக அமைப்பில் மேற்கு நாட்டுக் கருத்துக்களைப் புகுத்த வந்த ஒரு வேஷதாரி என்று காந்திஜியைத் திட்டியது. இவர்கள் நடத்திய பேச்சில் இறுதியான உடன்பாடு எதுவும் ஏற்படவில்லை. ஸ்ருதி, ஸ்மிருதி ஆகியவைகளின் அடிப்படையில்தான் சாத்திரங்களை வியாக்கியானம் செய்யவேண்டுமென்று பண்டிதர்கள்

காந்தி மீது மதிப்பு

கூறினர்கள். தாம் அறிந்தவரை சாத்திரங்களில் தீண்டாமைக்கு இடம் இல்லையென்றும் மனச்சாட்சிக்கும் மக்கள் நலனுக்கும் புறம்பான ஒன்றைச் சாத்திரம் என்று தாம் ஏற்பதற்கில்லை என்றும் மகாத்மா கூறினர். பின்னல் இதைப் பற்றி மன்னார்குடியில் காந்திஜி குறிப்பிட்டபோது, ''நாம் தீண்டாதாரின் சார்பாக உண்மையை எடுத்துச் சொல்வதாக இருந்தால் சனாதனிகள் தங்களுடைய மனதை மாற்றிக் கொள்ளத் தயாராய் இருக்கிறார்கள். என்னுடைய வாதங்கள் எல்லாவற்றையும் அவர்கள் மறுத்துவிடவில்லை. மக்களின் நலனை அடிப்படையாக வைத்துப் பார்த்தால், வாதம் எனக்குச் சாதகமாகத்தான் இருக்கிறது என்பதையும் ஒப்புக் கொண்டார்கள். இந்த அளவு எல்லாப் பண்டிதர்களுமே ஒப்புக்கொள்வதாய் இருந்தால் சாத்திரங்களுக்கு அவர்கள் என்ன வியாக்கியானம் கொடுக்கிறார்கள் என்பதை நான் பொருட்படுத்த மாட்டேன்'' என்று சொன்னார்.

15-9-27

மன்னார்குடி

மறுநாள் காலை மோட்டாரில் அண்ணல் மன்னார்குடி போய்ச் சேர்ந்தார். அங்கு அவர் சடகோப முதலியார் பங்களாவில் தங்கியிருந்தார். குமாரி மேயோ என்ற அமெரிக்க அம்மையார் இந்திய மக்களின் பழக்க வழக்கங்களைப் பற்றி அவதூறாக ஒரு நூல் எழுதியதும் அதற்கு மகாத்மா மறுமொழி அளித்ததும் அம்மறுமொழியில் அந்த நூலை ஒரு சாக்கடை இன்ஸ்பெக்டரின் அறிக்கை என்று அவர் குறிப்பிட்டிருந்ததும் வரலாற்றுப் புகழ் பெற்றவையாகும். காந்திஜியின் மறுமொழி அவர் மன்னார்குடி போய்ச் சேர்ந்த சமயத்தில்தான் ''யங் இந்தியா''விலும் மற்ற செய்தித் தாள்களிலும் வெளி வந்தது. இந்த மறுமொழியை காந்திஜி சென்னையில்தான் எழுதினர். வைஷ்ணவர்களின் நாமத்திற்கு ஓர் ஆபாசமான பொருள் இருப்பதாக மேயோ தமது நூலில் கூறியிருந்தார். அதைக் குறித்துச் சென்னையில் தம்மை வந்து சந்தித்த வைஷ்ணவர்களை அண்ணல் கேட்டார். அதற்கு அவ்வாறு ஆபாசமான பொருள் எதுவும் இல்லை என்று அவர்கள் கூறவே அதையும் தமது மறுமொழியில் குறிப்பிட்டார்.

மன்னார்குடிக்கு வந்த வழியில் சீனிவாச சாஸ்திரி பிறந்த ஊரான வலங்கைமானில் சாஸ்திரி பெயரால் அமைக்கப்

சாஸ்திரி ஊர்

பெற இருந்த இலவச நூல் நிலையத்தை மகாத்மா திறந்து வைத்தார். சீனிவாச சாஸ்திரி பிறந்த ஊருக்கு வந்ததில் காந்திஜிக்குப் பெரு மகிழ்ச்சி. காந்திஜி இங்குப் பேசியபோது, ''இந்தியாவின் மிகப் பெரிய மனிதர்களில் ஒருவர் சாஸ்திரி'' என்று பாராட்டினார். (இங்கு சுயராஜ்ய சபையின் சார்பாகவும் ஊர்ப் பொது மக்களின் சார்பாகவும் வரவேற்புரைகளும் பண முடிப்பும் கொடுக்கப் பெற்றன. மன்னார்குடிக்கு வந்த வழியில் நீடாமங்கலம், இராசப்பன் சாவடி ஆகிய ஊர்களிலும இதே போன்று பண முடிப்புகளை அளித்தார்கள். இராசப்பன் சாவடியில் அளித்தவர் இராகவையர். நீடாமங்கலத்திற்கு காந்திஜி வந்தபோது யூனியன் போர்டு அலுவலகத்தின் வாயிலில் அதன் தலைவர் கே. நடராஜபிள்ளை அளித்த பண முடிப்பைக் காரிலிருந்த படியே அண்ணல் பெற்றுக் கொண்டு ஆசி தெரிவித்துவிட்டுச் சென்றார்.)

மன்னார்குடியில் காந்திஜி வருகையை முன்னிட்டுக் கல்லூரிகளுக்கும் உயர்நிலைப்பள்ளிகளுக்கும் விடுமுறை விட்

விபூதி, குங்குமம்

டிருந்தார்கள். தேசிய உயர்நிலைப் பள்ளிக்கு அண்ணல் சென்றபோது அங்கு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் எஸ். வைத்திய நாத ஐயர் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்துப் பண முடிப்பும் அளித்தார். வரவேற்புரையில் இந்துமத சாத்திரங்களைத் தங்கள் பள்ளியில் கற்றுக் கொடுப்பதாகக் கூறியிருந்தார்கள். உடனே காந்திஜி, வழக்கம் போல் ''பகவத்கீதை எத்தனை பேருக்குத் தெரியும்?'' என்று கேட்டார். ஒரே ஒரு மாணவன் மட்டும் கையைத் தூக்கினான். இவ்வாறு மாணவர்கள் உண்மையை ஒப்புக் கொண்டதை காந்திஜி பாராட்டினார். ஆனாலும் இந்து சமயத்தைக் கற்றுக் கொடுப்பதாகக் கூறிக் கொள்ளும் ஒரு பள்ளியில், ஒரே ஒரு மாணவனுக்குத் தானே கீதை தெரிந்திருக்கிறது என்பதைக் கண்டு அவர் வருந்தினார். இதன் பின்பு ஆசார ஆனுஷ்டானங்களைப் பற்றிய பேச்சைத் தொடங்கினார். ''விபூதியையும் சந்தனத்தையும் அதிக மாகப் பயன்படுத்துவோர் தென்னிந்தியர் தான் என்று ஒரு பெயருண்டு. நீங்கள் எல்லோரும் விபூதி பூசிக் கொண்டிருக்

கிறீர்கள் அல்லது சந்தனத் திலகமிட்டுக் கொண்டிருக் கிறீர்கள். இவ்வாறு செய்வது நல்லதுதான். ஆனால் இவை களுக்குப் பின்னணியாக உள்ள பொருளைப் புரிந்து கடைப் பிடிக்காது, இவைகளை இட்டுக் கொள்வதால் பயன் இல்லை. அதேபோன்று பகவத்கீதையை மனனம் செய்து ஒப்புவித்து விட்டால் மட்டும் நான் மகிழ்ச்சி அடைந்து விடமாட்டேன். அதை நீங்கள் உங்களுடைய சொந்த வாழ்க்கையில் வாழ்ந்து காட்டவேண்டும். பக்தி உணர்வோடு நீங்கள் பகவத்கீதையைக் கற்றால், முஸ்லிம்-இந்து என்ற பிணக் கிற்கோ, பிராமணர்-பிராமணரல்லாதார் என்ற வேறு பாட்டிற்கோ அதில் இடமில்லை என்பதைக் காண்பீர்கள்,'' என்று கீதையின் பெருமையையும் விளக்கிச் சொன்னார்.

தர்மசங்கடம்

இந்த உயர்நிலைப் பள்ளிக்கு வந்தபோது, தலைமை ஆசிரியரைப் பார்த்து காந்திஜி ஒரு தர்ம சங்கடமான கேள்வியைக் கேட்டார். ''உங்கள் பள்ளிகளில் எத்தனை முகமதிய, கிறித்தவப் பையன்கள் இருக்கிறார்கள்? தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பிள்ளைகள் யாராயினும் உண்டா?''

தலைமை ஆசிரியர் : 6 அல்லது 7 முஸ்லிம் பையன்கள் இருப் பார்கள். 4 அல்லது 5 கிறித்தவப் பையன்கள் இருப் பார்கள். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த எந்த மாணவனும் பள்ளியில் சேர விண்ணப்பிக்கவில்லை.

காந்திஜி : அப்படி விண்ணப்பித்தால் சேர்த்துக் கொள்வீர் களா?

தலைமை ஆசிரியர் : கஷ்டம் இருக்காது என்று எண்ணு கிறேன்.

முதல்வருக்கு பாராட்டு

இதற்கு அடுத்தாற் போன்று பிண்ட்லே கல்லூரியில் மாணவர்களும் ஆசிரியர்களும் அளித்த உற்சாகமான வர வேற்பில் கல்லூரி முதல்வரான ரெவ. ஸ்மைல்ஸ், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த பல மாணவர்கள் அந்தக் கல்லூரியில் படிப்ப தாகக் கூறியது அண்ணலுக்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்தது. அதற்காகக் கல்லூரி முதல்வரை அவர் பாராட்டினார். ''நீங்கள் முயன்று இந்த மாணவர் களைக் கல்லூரிகளில் சேர்த்திருக்கிறீர்கள் என்பதை அறியும்

போது எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. மற்ற கல்வி அமைப் புக்களும் உங்களுடைய முன்னுதாரணத்தைப் பின்பற்ற வேண்டுமென விரும்புகிறேன்'' என்று அவர் கூறினார். இது கிறித்தவர்களின் கல்லூரி என்ற முறையில் அவர் மற்றொரு அறிவுரையையும் சொன்னார். ''மாணவர்களுடைய தவறான போக்குகளுக்கெல்லாம் அவர்கள் தங்களுடைய பரம்பரை மரபுகளை மறந்ததே காரணம். அதே சமயம், பகுத்தறி வுக்கு விரோதமான மரபுகளை அவை பரம்பரை மரபுகளாக இருந்தாலும் ஏற்க வேண்டுமெண்டுமென்றும், கடவுள் கொடுத்த பகுத்தறிவை இழந்து விடவேண்டும் என்றும் நான் கூற வரவில்லை.'' (பாலையூர் சக்தி ஆசிரமம் பி. இராச கோபால ஐயர் அண்ணலைச் சந்தித்து கிராமங்களில் இராட் டைக்கு நல்ல வரவேற்பு இருப்பதாகக் கூறினார். பஜாஜ் நூல் நிலையத்தில் பஜாஜின் படத்தைக் கஸ்தூரிபா காந்தி திறந்து வைத்தார்.)

பொதுக் கூட்டம்

மகாத்மா தங்கியிருந்த சடகோப முதலியார் பங்களா வுக்கு எதிரில் உள்ள கல்லூரி மைதானத்திலேயே மாலைப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. காந்திஜி இங்கு நீண்ட நேரம் பேசினார். சென்னை தவிர வேறு எந்த ஊரிலும் இதுவரை மன்னார்குடி யில் வசூலான பெருந்தொகை அளவு நிதி வசூ லாகவில்லை என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். ஒருவேளை அவர் நீண்டநேரம் பேசியதற்கு இந்த மகிழ்ச்சி ஒரு காரண மாய் இருந்திருக்கலாம். இந்தி மொழியின் அவசியம், சர்க் காவின் முக்கியத்துவம், தீண்டாமை ஒழிப்பு, குழந்தைத் திருமணம், மதுவிலக்கு ஆகிய வழக்கமான பொருள்களைப் பற்றியே அவருடைய பேச்சு இருந்தது. மன்னார்குடி நல்ல நெசவுத்தலம் என்பது பல ஆண்டுகளுக்கு முன்பே அவருக்குத் தெரியுமல்லவா? மன்னார்குடியில் உள்ள நெசவாளர்கள் அனைவரும் இனிக் கையால் நூற்ற நூலைக் கொண்டே நெய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். (மன்னார்குடி நகராட்சி மன்றம், மன்னார்குடி தாலூகா போர்டு, ராஜாஜி படிப்பகம், நாகூர் திலகர் படிப்பகம், மற்றும் சில ஸ்தாப னங்கள் ஆகியவைகளின் சார்பாக வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன. இவைகளில் பெரும்பாலான வரவேற்புரைகள் கதர்த்துணியில் அச்சிடப் பெற்றிருந்தது மகாத்மாவிற்கு மனநிறைவு அளித்தது. மன்னார்குடித் தாலுகாப் பொது மக்களின் சார்பாக கே. எஸ். சிவசுப்ர

மணிய ஐயர் எம். எல். சி. பண முடிப்பை அளித்தார். திருத்துறைப்பூண்டித் தாலுகாப் பொது மக்களின் சார்பாக வும் பண முடிப்புக் கொடுக்கப் பெற்றது.)

மன்னார்குடியில் மகாத்மா தங்கியிருந்த இல்லத்தில் கோட்டூர் எஸ்டேட் சமஸ்கிருதப் பள்ளி முதல்வர் உ. வே. நில்லியம்பூர் சக்கிரவர்த்தியாச்சாரியார் மீண்டும் ஸ்வாமி மகாத்மாவைச் சந்தித்துத் தீண்டா வாதம் மைக்குச் சாத்திரங்களில் ஆதாரம் இருப்ப தாகவும் காந்திஜியின் கருத்துக்களுக்கு இந்து சாத்திரங்களில் ஆதாரமில்லை என்றும் கூறினர். இருவரும் நீண்ட நேரம் காரசாரமாக விவாதித்தனர். ''அரிஜனங் களுக்கு வீடு கட்டிக் கொடுக்கலாம், அன்னதானம் செய்ய லாம், கைராட்டினம் வாங்கிக் கொடுத்து உதவலாம். ஆனால் அவர்கள் கோத் தீண்டுதல் கூடாது. சுவாமி வெளியே இரதத்தில் வரும் போது அவர்கள் பார்த்து வணங்கிக் கொள்ளலாம். ஆனால் ஆலயப் பிரவேசம் கூடாது'' என்பது சக்கரவர்த்தி ஆச்சாரியார் வாதம். அதற்கு மகாத்மா, ''சாத்திரங்களில் ஒரு சில பகுதிகளை மட்டும் தனியாக எடுத்து அவைகளின் அடிப்படையில் வாதிப்பது சரியல்ல,'' என்று கூறிவிட்டார். இந்தப் பண்டிதர் காந்திஜியை முதலில் வானளாவப் புகழ்ந்து விட்டுப் பின்னர் சாத்திரங்களில் தமக்குள்ள தேர்ச்சியைக் காண்பிக்கும் முறையில் பேசிக்கொண்டு போனர். ஆகையால் காந்திஜி கொஞ்சம் கண்டிப்பாகவே, இருவருக்குமிடையே இருந்த மொழி பெயர்ப்பாளரிடம் ''சம்பந்தா சம்பந்த மில்லாத ஸ்லோகங்களையெல்லாம் அவர் கூறிக்கொண்டிருக் கிறார். இவரைப் போன்ற ஒரு பண்டிதருக்கு இது அழகல்ல. ஒரு நீதிமன்றத்தில் இவரைப் போன்று வழக்கறிஞர்கள் வாதாடினால் அதை அனுமதிக்கமாட்டார்கள்,'' என்று கூறினர். இதன் பின்பு அந்தப் பண்டிதர் நேரடியாகப் பொருளுக்கு வந்தார்.

பண்டிதர்: கலியுகத்தில் பரஷார ஸ்மிருதியை அப்படியே ஒப்புக்கொள்ளக் கூடிய வழிகாட்டியாக நாம் எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

காந்திஜி: இல்லை, எந்தச் சாத்திரத்தையும் நூற்றுக்கு நூறு அப்படியே ஏற்றுக்கொள்ளக் கூடிய வழிகாட்டி யாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

பண்டிதர் : ஒரு ஸ்மிருதியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொண்டு மற்றொரு பகுதியை விட்டு விடுவீர்களா?

காந்திஜி : ஒரு பகுதியை நாம் ஏற்கிறோம் என்பதற்காக முழுவதையுமே நாம் ஏற்க வேண்டும் என்று கூறுவதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்.

பண்டிதர் : அப்படியானால் உங்களுக்கு எது வசதியாக இருக்கிறதோ அதை ஏற்றுக்கொண்டு வசதியாக இல்லாததை விட்டு விடுவீர்களா?

காந்திஜி : இது ஒரு நல்ல கேள்வி. இந்து சமயத்திற்குத் திட்டவட்டமாக வரையறையிட்ட சாத்திரம் கிடையாது. இந்து மதத்தில் சாத்திரங்கள் என்று கூறப்படும் நூல்கள் நூற்றுக் கணக்கில் இருக்கின்றன. அவைகளில் பலவற்றின் பெயரைக்கூட நாம் கேள்விப் பட்டதில்லை. ஆகையால் ஒன்று நல்லதா கெட்டதா என்று பார்ப்பதற்கு நான் எந்த நூலையும் ஆதாரமாகக் கொள்வதில்லை. இந்து சமயத்தை மொத்தமாக வைத்தே பார்க்கிறேன். இந்து சமயத்தில் ஒவ்வொரு சாத்திரத்தையும் ஒவ்வொரு நடவடிக்கையையும் அளப் பதற்கு ஒரு அளவுகோல் இருக்கிறது. அதுதான் சத்தியம். சத்தியத்திலிருந்து எது பிறழ்கிறதோ அதை நாம் ஏற்க மறுத்துவிட வேண்டும். அதை யார் கூறியிருந்தாலும் சரி.

பண்டிதர் அப்படியானால் தீண்டாமை எப்படிச் சத்தியத் திற்கு விரோதமானதாகும்?

காந்திஜி : நான் உங்களைத் தீண்டத்தகாதவர் என்று கூறினால் அது சத்தியத்திற்கு உடன்பாடானதா?

பண்டிதர் : (வியப்போடு) : நான் எப்படித் தீண்டத் தகாதவனாக முடியும்? வீட்டிலிருக்கும் நெருப்பிற்கும் சுடுகாட்டிலிருக்கும் நெருப்பிற்கும் எவ்வாறு வேறு பாடு இருக்கிறதோ அதைப் போன்று மனிதருக்கு மனிதர் வேறுபாடு இருக்கிறது.

காந்திஜி : ஓஹோ, அப்படியானால் உங்களைத் தீண்டத் தக்கவர் என்றும், என்னையோ இராஜகோபாலாச்

சாரியையோ தீண்டத்தகாதவர் என்றும் எப்படிக் கூற முடியும்?

பண்டிதர்: உடல் அமைப்பு, சிந்தனை, நடவடிக்கை, குணம் ஆகியவற்றில் எனக்கும் ஒரு சண்டாளனுக்கும் வேறு பாடு இருக்கிறது.

இவ்வாறு பண்டிதர் கூறிக்கொண்டிருந்தபோது காந்திஜி அந்தப் பண்டிதருக்கு ஒதுக்கிய நேரம் முடிவடைந்துவிட்டது. ஆகையால், பண்டிதர், ''நான் உங்களுடன் விவாதிக்க வரவில்லை. உங்களுடன் பேசிச் செல்லும் பாக்கியம் கிடைக்கட்டுமே என்றுதான் வந்தேன்'' என்று உண்மையைக் கூறிவிட்டுப் போய்விட்டார்.

16-9-27

தஞ்சை

மன்னார்குடியிலிருந்து நாகப்பட்டினம் பாசஞ்சர் இரயிலில் மறுநாள் காலை தஞ்சாவூருக்கு அண்ணலும் அவரது குழுவினரும் வந்து சேர்ந்தார்கள். ஒவ்வொரு பெரிய நகருக்கு வரும்போதும், கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக அதற்கு முந்திய இரயில் நிலையத்தில் காந்திஜி இறங்கி விடுகிறார் என்பதை அறிந்த தஞ்சை மக்கள் இன்று ஒரு தந்திரம் செய்தார்கள். மன்னார்குடியிலிருந்து தஞ்சைக்குள் டாக்ரோடு வழியாக நுழையக்கூடிய இடத்தில் கூடி நின்றார்கள். ஆனால் இம்முறை காந்திஜி அவ்வாறு இறங்கவில்லை. திட்டப்படி தஞ்சாவூர் இரயில் நிலையத்திலேயே வந்து இறங்கினார். மறுபடியும் பொது மக்களுக்கு ஏமாற்றம் தான். தஞ்சையில் காந்திஜி குழுவினர் ''உக்கடை ஹவுஸ்''-இல் தங்கியிருந்தார்கள்.

நீதிக்கட்சித் தலைவர்கள்

இந்த நகரில் நடைபெற்ற ஒரு முக்கியமான காரியம் நீதிக் கட்சியைச் சேர்ந்த சில தலைவர்களும் காந்திஜியும் சந்தித்துப் பேசியதேயாகும். பன்னீர்செல்வம், உமா மகேசுவரம்பிள்ளை (நீதிக்கட்சித் தலைவர்கள்) உக்கடைத்தேவர், சையத் தஜுதின், கார்குடி சின்னையாபிள்ளை, பட்டுக்கோட்டை தண்டபாணி செட்டியார் ஆகியோருக்கு அண்ணல் பேட்டி அளித்தார். (மற்றும் பாப்பநீடு ஜமீன்தார், கே. நடராஜன் முதலிய பல பிரமுகர்களையும் காந்திஜி சந்தித்துப் பேசினார்.

கே. நடராஜன் தாயாரான வயதான அம்மையார் காந்திஜியைப் பார்க்க வந்தபோது அண்ணல் அவரை அன்போடு வரவேற்று, பெண்கள் கட்டிக்கொள்ளத்தக்க மெல்லிய புடவைகள் கதரில் இருப்பதாகச் சொன்னார்.) நீதிக்கட்சித் தலைவர்களைச் சந்தித்துப் பேசியது இருதரப்பினருக்குமே நல்லதாகப் போயிற்று. காந்திஜியின் தரப்பை அவர்களும் அவர்கள் தரப்பை காந்திஜியும் அதிகம் புரிந்துகொள்ள இந்தச் சந்திப்பு உதவியது.

விவரம்

நீதிக்கட்சித் தலைவர்களான பன்னீர்செல்வமும் உமா மகேசுவரம் பிள்ளையும் காந்திஜியைச் சந்தித்துப் பேசிய உரையாடல் ''சுதேசமித்திரன்'' இதழில் அந்தக் காலத்தில் விவரமாக வெளியாகியிருந்தது. சுருக்கத்தைப் படித்துப் பார்ப்பது கூட இப்போது சுவையாக இருக்கும்.

உமா மகேசுவரம்பிள்ளை: பிராமணர் - பிராமணரல்லாதார் விவகாரம் வரவரச் சிக்கலாகி வருகிறது. தலைவர்கள் இதில் தலையிட்டு, சமாதானத்தை உண்டு பண்ண வேண்டும்.

மகாத்மா: பிராமணரல்லாதாரே இந்த இயக்கத்தைப் பற்றிப் பலவிதமாகக் கூறுகிறார்கள். பிராமணர் - பிராமணரல்லாதாருக்கிடையே இப்போது வேறுபாடுகள் இருந்தாலும் சிறிது காலத்தில் அவை மறைந்து விடும் என்று டாக்டர் வரதராஜுலு நாயுடு கூறுகிறார். என்னைப் போன்றவர்கள் இதில் தலையிட வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார். ஆனால் ஈரோடு இராமசாமி நாயக்கர் தென்னாட்டில் பிராமணர் கொடுமை அதிகமாக இருக்கிறதென்றும் என்னைப் போன்றவர்கள் இதில் அவசியம் தலையிட்டு, மன நிறைவு தரக்கூடிய ஒரு முடிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். இப்போது பிராமணர்களிடத்து முற்போக்கான கொள்கைகள் பரவி வருவதைக் காண்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் நான் சென்னைக்கு வந்தபோது, எஸ். சீனிவாச ஐயங்கார் வீட்டில் தாழ்வாரத்தில்தான் உட்கார்ந்திருந்தேன். இப்போது, அவர் வீட்டை என் வீடாகவே நினைத்துப் பழகி வருகிறேன். என் மனைவி அவர்களுடைய அடுப்பங்கரைவரை செல்கிறாள்.

பன்னீர் செல்வம் : பிராமணர்கள் அதிகாரங்களையும் உத்தியோகங்களையும் தாங்களே வைத்துக் கொள்கிறார்கள். பிற வகுப்பார் அவைகளை அடைவதற்கு இடமில்லாமற் போய் விடுகிறது.

மகாத்மா : நீங்கள் சொல்வதிலிருந்து அதிகாரங்களையும் உத்தியோகங்களையும் பங்கு போட்டுக் கொள்வதே உங்களுடைய முக்கிய குறிக்கோளாய் இருப்பதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட ஒரு குறிக்கோளுக்கு நான் ஆதரவாயிருக்க முடியாது. பொது மக்களுடைய நன்மையைக் கருதாத எந்த இயக்கத்திலும் எனக்கு அனுதாபம் கிடையாது.

உமா : அதிகாரம் பெறுதல் என்பது பல நோக்கங்களில் ஒன்றுகும். சமூகத் தீமைகளைப் போக்குவதும் மத சம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்பதும் எங்களுடைய மற்ற குறிக்கோள்கள்.

மகாத்மா : உங்கள் இயக்கத்தின் கொள்கையில் மாறுதல் ஏற்பட்டிருப்பது நல்லது. சமய சம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்வது நோக்கம் என்று கூறுகிறீர்கள். ஆனால் பிறமதத்தினரையும் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்களே ?

உமா : இந்து சமயத் தலைவர்கள் எங்கள் இயக்கத்தைக் கவனியாதிருந்தபோது, நடந்த வரையில் நடைபெறட்டும் என்று கருதி இந்துக்களல்லாதாரும் இயக்கத்தின் தொடக்கத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். பிராமணரல்லாதார் பல வழிகளிலும் பிராமணர்களால் அவமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பொது மக்களிடையே இப்போது விழிப்பு ஏற்பட்டிருக்கிறது.

மகாத்மா : இப்போது நடைமுறையிலிருக்கும் வர்ணஷ்ரம தர்மத்தைக் களைந்தெறியலாம். ஆனாலும் அடிப்படையான தத்துவத்தை அழிக்க முற்படலாகாது. பிறப்பினால் மட்டும் ஒரு மனிதன் உயர்ந்தவனாகி விடமாட்டான்.

பன்னீர் : கதர் இயக்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பல பிராமணரல்லாதார் உங்களோடு சேர்ந்து வேலை செய்ய இடங் கொடுக்காமல் இராஜகோபாலாச்சாரி

யார் செய்கிறார் என்ற புகார் இருந்து வருகிறது. எஸ். இராமநாதன் கதர் இயக்கத்தில் இருக்கிறார் என்பது உண்மையே. ஆனால் அவரையும் வெளியே போகும்படி பிராமணர்கள் செய்து விடுவார்கள். (இவ்வாறு அவர் கூறியபோது ஜாஜியும் எஸ். இராமநாதனும் அங்கிருந்தார்கள்.)

மகாத்மா: ஆச்சாரியார் கதர் இயக்கத்திற்காக வாழ்க்கையை அர்ப்பணித்தவர். கதர் இயக்கத்திலிருந்து அவருக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. பஜாஜுக்கு நான் எழுதி அவருக்கு உதவி கொடுக்கும்படி செய்தேன். கதர் இயக்கத்தில் ஈடுபாட்டுடன் வேலை செய்யக் கூடியவர்கள் வந்தால் ஆச்சாரியாரை விலகிக் கொள்ளச் சொல்கிறேன். நானும் விலகிக் கொள்கிறேன். ஆச்சாரியார் தமது வக்கீல் தொழில், சம்பாத்தியம், பதவி இவைகளையெல்லாம் ஏன் விட்டுவிட்டு வரவேண்டும் என்பதை நாம் யோசிக்க வேண்டாமா?

பன்னீர் செல்வம்: கதர் வேலையைக் காரணமாக வைத்துக் கொண்டு தமக்கும் தம்மைச் சேர்ந்தவருக்கும் செல்வாக்குத் தேட வேண்டும் என்பதுதான் அவர் நோக்கம். உங்களுடைய பக்கத்தில் இருப்பதால் மக்கள் ஒருவித பிரமையை அடைகிறார்கள். தேர்தல் காலத்தில் அதைப் பயன்படுத்திக் கொள்ளுதல் வழக்கமாகி விட்டது.

மகாத்மா: ஆச்சாரியார் சம்பந்தப்பட்ட மட்டில் அந்த மாதிரியான நோக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. கதர் இயக்கத்தில் வேஷக்காரர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. அப்படியிருந்தாலும் அவர்கள் கதர் வேடம்தானே போடுகிறார்கள்? அந்த அளவில் நன்மைதானே?

பிராமணர் அல்லாதார் பொதுக் கூட்டம்

இந்த உரையாடல், அந்தக் காலத்தில் பிராமணர் அல்லாதார் மத்தியிலிருந்த கருத்தை எடுத்துக் காட்டுகிறது. மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் இந்த உரையாடலைப் பற்றி காந்திஜி குறிப்பிட்டார். காந்திஜி சொன்னார்: ''இங்குச் சில நண்பர்களுடன் நான்

பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலைக் குறித்து விவா

தித்தேன். இந்த வாதம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. முன்னேக்காட்டிலும் சற்று நல்ல முறையில் பிராமணரல்லாதார் இயக்கத்தைப் பற்றி இப்போது நான் புரிந்துகொண்டிருக்கிறேன். இந்த வாதத்தின்போது என்னைப் பற்றி அவர்கள் ஒரு கருத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அது அவர்கள் மனத்தைத் துன்புறுத்திக் கொண்டேயிருக்கிறது என்பதையும் கண்டேன். பிறப்பால் ஒருவர் உயர்ந்தவர் அல்லது தாழ்ந்தவர் என்று நான் கருதுவதாக அவர்கள் எண்ணுகிறார்கள். எல்லா மனிதர்களும் பிறப்பால் சமம் என்பதுதான் என் கருத்து என்பதை அவர்களுக்கு நான் விளக்கினேன். ஒரு பிராமணரோ அல்லது யாரோ தாம் உயர்ந்தவர் என்று உரிமை கொண்டாடும் போது பிராமணரல்லாதார் அதை எதிர்த்துப் போரிட்டால் அதை முழுக்க முழுக்க நான் ஆதரிக்கிறேன். நான் உயர்ந்தவன் என்று உரிமை கொண்டாடுபவன் மனிதன் என்று அழைக்கப்படுவதற்கு உரியவனல்ல. ஆனால் இந்த நம்பிக்கைகளெல்லாம் எனக்கு இருந்தாலும் வர்ணாஷ்ரம தர்மத்தில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய பெற்றோர்கள், மூதாதையர்கள் ஆகியோரை அனுசரித்த உருவம் எவ்வாறு கிடைக்கிறதோ அதேபோன்று அவர்களுடைய ஆற்றலும் கிடைக்கிறது. இதை வெளிப்படையாக ஒப்புக்கொள்வதன் மூலம் நம்முடைய லோகாயத ஆசைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்பெறுகிறது. ஆன்மிக வளர்ச்சிக்கு நம் சக்தி பயன்படுகிறது. இதை நீங்கள் ஒப்புக்கொள்வதானால் சமய அடிப்படையில் பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கல் எளிதாகத் தீர்ந்துவிடும். ஒரு பிராமணன் பணம் சம்பாதிப்பதில் இறங்கிவிட்டால் அவன் பிராமணனே அல்லன்.

சித்திர வேலை

சுமார் ஒரு மணி நேரம் காந்திஜி பேசினார். விஸ்வகர்மாக்கள் அளித்த வேலைப்பாடமைந்த தட்டை அவர் மிகவும் பாராட்டினார். அதை அவர் ஏலத்தில் விட விரும்பவில்லை. ''விஸ்வகர்மா நண்பர்களே அவர்களுடைய அழகிய வேலைப்பாட்டிற்காகப் பாராட்டுகிறேன். ஆமதாபாத்திலுள்ள குசராத் வித்யாபீடத்தின் பொருட்காட்சியில் இது வைக்கப் பெறும்'' என்று அவர் சொன்னார்.

இந்தக் கூட்டத்திலிருந்து நேரே இரயில் நிலையத்திற்குச் சென்று தமது விசேட இரயில் பெட்டியில் ஏறிக்கொண்டார்.

திருச்சி

அது இராமேசுவரம் எக்ஸ்பிரசில் இணைக்கப் பெற்று காந்திஜி இரவு நேரத்தில் திருச்சிக்கு வந்து சேர்ந்தார். அவர் எந்த இரயிலில் எப்போது அங்கு வந்து சேருவார் என்பது முன்கூட்டி அறிவிக்கப்படவில்லை. ஆகையால் இரயில் நிலையத்தில் அண்ணலை வரவேற்க வந்திருந்த பெரு மக்களைத் தவிரக் கூட்டம் ஒன்றும் இல்லை.

17-9-27

உடல் அயர்வு

காலையில் டாக்டர் ராஜன் ஒரு மருத்துவர் என்ற முறையில் காந்திஜியின் உடல் நிலையைச் சோதித்துப் பார்த்து, அது மிகவும் அயர்வு அடைந்திருப்பதைக் கண்டார். மற்றபடி அதில் கோளாறு எதுவும் இல்லை. ஆகையால் அவர் காந்திஜிக்கு ஒரு யோசனை சொன்னார். திருச்சியில் காந்திஜி பங்கு கொள்ளவேண்டிய பல நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. ஆகையால் ஒவ்வொரு கூட்டத்திலும் காந்திஜி பேசிக்கொண்டிருக்க வேண்டாமென்றும், தாம் பேச விரும்புவதையெல்லாம் பொதுக் கூட்டத்தில் கூறுவதாக அறிவித்து விடலாம் என்றும் சொன்னார். காந்திஜியும் இந்த யோசனையை ஏற்றார்.

அடித்தளக் கல்

இன்று அடித்தளக்கல் நாட்டும் பணி அண்ணலுக்கு அதிகமாக இருந்தது. காலையில் கோட்டை மார்க்கெட்டில் அடித்தளக்கல் நாட்டினார். பிற்பகலில் பொன்மலை தென்னிந்திய ரெயில்வே ஊழியர் சங்கக் கட்டிடத்திற்கு அடித்தளக் கல் நாட்டினார்.

கோட்டை மார்க்கெட் எதிரே உள்ள மைதானத்தில் நகராட்சி மன்றத்தின் வரவேற்பை அளித்தார்கள். அப்போது நகராட்சி மன்றத் தலைவராக இருந்த பி. இரத்தினவேலுத் தேவர் பணி ஓலையில் எழுதப் பெற்றிருந்த வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். காந்திஜி டாக்டர் ராஜனுடைய ஆலோசனைப்படி தம் பதிலை எழுதிக் கொடுத்திருந்தார். அதை இராஜாஜி படித்தார். அண்ணல் பொன்மலைக்கு வந்தபோது அங்கு ஆயிரக் கணக்கான இரயில்வே ஊழியர்கள் குழுமியிருந்தனர். இவர்களில் பலர் போத்தனூரிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்

தும் கூட வந்திருந்தார்கள். தொழிற்சங்கத் தலைவரான டி. கிருஷ்ணசாமி பிள்ளை அளித்த வரவேற்புரைக்கு காந்திஜி எழுத்து மூலம் ''தன்னம்பிக்கையும் சுயமுயற்சியுமே தொழிலாளர்களின் கோட்பாடுகளாக இருக்க வேண்டும்'' என்று பதில் கூறியிருந்தார்.

சுமார் ஆறு மணி வாக்கில் லால்குடிக்கு அண்ணல் புறப்பட்டார். அவருடனும் அவர் குழுவினருடனும், சேதுரத்தினம் ஐயரும் சென்றார். ஸ்ரீரங்கத்திற்கு வடக்கே உள்ள கொள்ளிடத்தை நொச்சியம் ஆதிமூல வாண்டையார் அனுப்பிய இரட்டை மாட்டு வண்டிகளில் மற்றவர்கள் ஏறிக் கடந்து சென்றார்கள். ஆனாலும் காந்திஜி மாட்டு வண்டியில் ஏற மறுத்து நடந்தே ஆற்றைக் கடந்தார்.* ஆதிமூல வாண்டையாரின் இல்லத்தில் அவரும் மணச்சநல்லூர் கிராம மக்களும் சேர்ந்து பண முடிப்பு அளித்தார்கள். அதன் பின்னர் காந்திஜி காரில் லால்குடிக்குப் புறப்பட்டுச்சென்றார்.

லால்குடி

லால்குடி ஓய். எம். ஐ. ஏ. கட்டிடத்தில் பொதுக் கூட்டம். காந்திஜியுடன் வந்திருந்த தேசபக்தர் என். ஹாலாஸ்யம், இங்குள்ள பெருங்கூட்டம் மன நிறைவடைவதற்காகவாகிலும் சில சொற்கள் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்ளவே, காந்திஜி சுருக்கமாகத் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். (லால்குடி காங்கிரஸ் குழுவின் சார்பாக எல். என். பரமசிவம்பிள்ளை, தாலுகா போர்டு சார்பாக அதன் தலைவர் பி. பி. கிருஷ்ணசாமி ரெட்டியார் லால்குடி யூனியன் சார்பாக அதன் தலைவர் எல். டி. இராமச்சந்திர ஐயர், இளைஞர் இந்தியர் சங்கத்தின் சார்பாக எல். எஸ். சுவாமிநாத ஐயர் ஆகியோர் வரவேற்புரைகளை அளித்தார்கள்.)

பொதுக் கூட்டம்

18–9–27

அந்தக் காலத்தில் பொதுக் கூட்டத்தில் வைக்கப் பெறும் ஒலி பெருக்கிகளே அபூர்வம். ஆகவே மருத்துவத்திற்காக எக்ஸ்ரே படப்பிடிப்பு எடுப்பதைப் பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. டாக்டர் ராஜன் மிகுந்த முயற்சியின் பேரிலும் பெரும் பொருட் செலவிலும் ஓர் எக்ஸ்ரே நிலையத்தை நிறுவினார். அதைத் திறந்து வைக்கும்படி மகாத்மாவைக்

எக்ஸ்ரே நிலையம்

* சுதேசமித்திரன்

கேட்டுக் கொண்டார். அவருடைய சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரலில் இதையும் ஒன்றுகச் சேர்ந்திருந்தார்கள். இது அண்ணலுக்கு ஒரு சோதனையாக முடிந்தது. தனிப்பட்ட மனிதர்களுக்கு இலாபந் தரக்கூடிய எந்தத் தொழிலையும் அவர் தொடங்கி வைப்பதில்லை. மேலும் நவீன வைத்திய முறைகளையும் அவர் ஆதரிப்பதில்லை. ஆகவே காந்திஜியின் அன்பர்களில் சிலர், அவர் இதைத் திறந்து வைக்கக்கூடாது என்று அவரிடம் வாதிட்டார்கள். கடைசியில் அண்ணல் அதைத் திறந்து தான் வைத்தார். அதற்கு அவர் இரு முக்கிய காரணங்களையும் கூறினார். ''ராஜாஜி தலைமையின் கீழ் உள்ள ஒரு குழு தமது சுற்றுப் பயண நிகழ்ச்சி நிரலில் இதைச் சேர்த்திருக்கிறது. ஆகையால் நான் அதைத் திறந்து வைத்தாக வேண்டும். மேலும் தர்மத்திற்குப் புறம்பான செயலாக இருந்தாலொழிய நண்பர்களுடைய வேண்டுதலுக்கு இணங்குவதுதான் என் வழக்கம்'' * என்று அண்ணல் கூறினார். இது தனிப்பட்டவர் இலாபத்திற்குரிய ஒரு தொழிலாக இருந்தாலும் ஏழை மக்கள் டாக்டர் ராஜனை அணுகி உதவி பெற முடியும் என்று அவர் நம்பியதும் மற்றொரு முக்கிய காரணம்.

20-9-27

திருச்சி நகரைச் சேர்ந்த மாணவர்களும் இவ்வாறு ஒரு தர்ம சங்கட நிலையை ஏற்படுத்தினர்கள். எல்லோரும் திருச்சி தேசியக் கல்லூரியில் கூடி ஒரு கணிச

சமஸ்கிருத வரவேற்பு

மான தொகையைப் பண முடிப்பாக அளித்து அது மட்டுமல்லாமல் சமஸ்கிருதத்திலும் வரவேற்புரையை அளித்து விட்டார்கள். காந்திஜி பேச எழுந்தார். கூட்டத்தில் சமஸ்கிருதம் தெரிந்தவர்களைக் கையைத் தூக்குமாறு கேட்டுக் கொண்டார். வெகு சொற்பப் பேரே தூக்கினர்கள். மிகப் பெரும்பாலோருக்கு சமஸ்கிருதம் தெரியாத போது அந்த மொழியில் வரவேற்புரையைப் படித்து அளித்திருக்க வேண்டியதில்லை என்று அண்ணல் கூறினார். அதேசமயம், மாணவர்கள் அனைவரும் சமஸ்கிருதத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். சமஸ்கிருதத்தில் வரவேற்புரை அளித்தால் காந்திஜி அதை மகிழ்ச்சியுடன் வரவேற்பார் என்று வரவேற்றவர்கள் எண்ணினர்கள். விழாவிற்கு

* இந்து 19—9—27

வந்திருந்த ஆச்சார்ய காகாகலேல்கார் கூட அவ்வாறு தான் எதிர்பார்த்தார். ஆனல், அதற்கு மாருக காந்திஜி அதை வரவேற்கவில்லே. வருத்தம் தெரிவித்தார். வரவேற்புரை யைத் தமிழில் எழுதிவிட்டு, அதன் சாரத்தை இந்தியிலோ சமஸ்கிருதத்திலோ தெரிவித்திருக்கலாம் என்று கூறினர். பின்னர் அக்கூட்டத்திலிருந்து திரும்பி வந்த போது, 'சமஸ்கிருதத்தின் மீது உங்களுக்குள்ள பிரியம் தெரிந்தது தானே, அப்படியிருந்தும் சமஸ்கிருத மொழியில் எழுதிய வரவேற்பை நீங்கள் ஏன் விரும்பவில்லே?'' என்று கலேல்கார் கேட்டார். அதற்கு காந்திஜி சொன்ன பதிலிலிருந்து சமய சந்தர்ப்பங்களே அவர் எவ்வளவு உன்னிப்பாகக் கவனிப்பவர் என்பது தெரிந்தது. காந்திஜி சொன்னர் : எல்லா வகுப்பு களேயும் சேர்ந்த மாணவர்களின் சார்பாக இந்த வரவேற் புரையைப் படித்துக் கொடுத்தார்கள். ஆகையால் அவர் களுக்குப் புரியக்கூடிய மொழியிலே அதைத் தயாரித்திருக்க வேண்டும். மேலும் இப்பகுதியில் பிராமணர் - பிராமணரல் லாதார் இயக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அந்த இயக் கத்தின் எதிரொலியாகத்தான் இந்த வரவேற்புரையை சமஸ்கிருதத்தில் எழுதியிருக்கிறர்களோ என்றும் நான் ஐயப் படுகிறேன். அதனல் தான் எனது வருத்தத்தைத் தெரிவித் துக் கொண்டேன்.'' *

கிறித்தவர் தேசியம்

புத்தூர் ஒய்.எம்.சி.ஏ.யில் கிறித்தவர்கள் கூட்டத் திற்குச் சென்றபோது, ''கிறித்தவர்களுக்கு நாம் கூறக் கூடிய அறிவுரை என்ன இருக்கிறது?'' என்று வழியில் யோசித்துக் கொண்டே போனர். கடைசியில் அவருக்கு ஒரு யோசனே தோன்றி யது. அதைத்தான் அங்குப் போய்க் கூறினர். ''கிறித்தவர்களாக இருப்பவர்கள் அந்தச் சமயத்தைச் சேர்ந் தவர்களாய் இருப்பதற்காகத் தங்களுடைய நாட்டை மறந்துவிட வேண்டியதில்லே. மனமார மதம் மாறியவன் தனது தேசிய உணர்வை விசாலப்படுத்திக் கொண்டுபோக வேண்டும்'' என்றர். (இங்கு ரெவ. சான்போர்டு அவரை வரவேற்றார்.)

பிற்பகலில் நகராட்சி மன்றப்பொது மண்டபத்தில் பெண்கள் கூட்டம். (திருமதி சாமிநாத சாஸ்திரியும், தேவதாசிகளின் சார்பாக குமாரி ஜீவரத்தினமும் வரவேற்

* காகாகலேல்கார் பேட்டி.

புரைகள் கொடுத்தார்கள்.) இங்கு அவர்கள் கூறியிருந்த ஒரு கருத்தை காந்திஜி மறுக்க வேண்டியது அவசியமாகப் போய்விட்டது. தாங்கள் போட்டிருக்கும் நகைகளெல் லாம் சிக்கனமாக வாழ்ந்து கொஞ்சங் கொஞ்சமாக மீத்து வைத்துச் சேர்த்தவை என்று அவர்கள் கூறியிருந்தார்கள். இதை காந்திஜி ஒப்புக்கொள்ளவில்லை. ''இவைகளெல்லாம் உங்களுக்குப் பிறரால் கொடுக்கப் பெற்றவை; நீங்கள் உழைத்துச் சம்பாதித்தவையல்ல, அது சீதனமாக வந்தது தான். ஆகையால் உங்களுடைய ஏழைச் சகோதரிகளுடன் நீங்கள் அதைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்'' என்று கண்டிப்போடு கூறினார். இந்தக் கூட்டம் முடிந்து பெண் களிடமிருந்து காந்திஜி நகைகளை நன்கொடையாகப் பெற்றுக்கொண்டிருந்தபோது, பலத்த மழை வந்துவிட்ட தால், நடு வழியில் நகை வசூல் நிறுத்த வேண்டியதாயிற்று.

ஸ்ரீரங்கம் நகராட்சி

ஸ்ரீரங்கம் நகராட்சி மன்றம், நூறு ரூபாய்க்குக் குறை யாமல் நகராட்சி மன்ற உறுப்பினர்களிடமிருந்து நன் கொடையாக வசூல் செய்து கதர் நிதிக்கு அளிப்பதென்று முதலில் முடிவு செய்திருந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ ஸ்ரீரங்கத் திற்கு காந்திஜி சென்று இந்த வரவேற்பைப் பெறும் நிகழ்ச்சி கைவிடப்பெற்றது. கடைசியில் ஸ்ரீரங்கம் நகராட்சி மன்றத் தலைவரே சில உறுப்பினர்களுடன் காந்திஜி இருந்த இடத்திற்கு வந்து வரவேற்புரையையும் பண முடிப் பையும் அளித்துவிட்டுச் சென்றார். மறுநாள், ஸ்ரீரங்கம் விவேகானந்த ஆசிரமத்தாரும் இவ்வாறு ஒரு வரவேற் புரையைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆசிரமப் பார்வையாளர் புத்தகத்தை காந்திஜியிடம் கொடுத்து ஏதாவது எழுதுமாறு கேட்டுக்கொண்டார்கள். ''தங்கள் ஆசிரமத்திற்குப் பெரியவரான விவேகானந்தரின் பெயரை வைத்துக் கொண்டவர்கள் அக்கம் பக்கத்தை முற்றிலும் சுத்தமாக வைத்துக்கொள்ள எல்லா முயற்சியும் செய்யா விட்டால் அப்பெயரை வைத்துக் கொண்டிருப்பது வீண்'' என்று அண்ணல் எழுதிக் கொடுத்தார்!

21-9-27

இந்தச் சமயத்தில், மகாத்மா காந்தியின் உடல் நிலை மிகவும் சீர்கெட்டு விட்டதாகவும் தமிழ்நாட்டுச் சுற்றுப்

பயத்தைக் கைவிட்டு விட்டு அவர் திரும்பிச் செல்லப் போவ தாகவும் ஒரு பலத்த வதந்தி கிளம்பியது. சில செய்தித்தாள் களும் அச்செய்தியை வெளியிட்டிருந்தன.

பொதுக் கூட்டம்

காந்திஜியே பின்னர் இதை மறுக்க வேண்டிய தாகப் போய்விட்டது. திருச்சிராப்பள்ளியில் காந்திஜியின் நிகழ்ச்சி நிரல் மாற்றி அமைக்கப் பெற்றது. மழையின் காரணமாக முதல் நாள் பொதுக்கூட்டம் நடைபெறவில்லை. ஆகையால் அதிகப்படி யாக ஒருநாள் தங்கி, புதன் கிழமை காலையில் புதுக்கோட் டைக்குச் செல்லலாம் என்பது புது ஏற்பாடு. மழைக்காகக் கைவிடப் பெற்ற பொதுக்கூட்டம் மறுநாள் காலை நடந்தது. ''இதற்கு முன்பு நான் வந்தபோது தமிழகத்தில் கண்ட ஒற்றுமையை இப்போது காணமுடியவில்லை. (பிராமணர் - பிராமணரல்லாதார் கருத்து வேறுபாடு கடுமையாக இருந்த தையே அண்ணல் இவ்வாறு கூறுகிறார்.) ஆனல் கதராளது பாமர மக்கள் சம்பந்தப்பட்டது. ஆதலால்தான் இதில் மட்டும் கருத்து வேறுபாடு இல்லாமல் இருக்கிறது,'' என்று வருத்தம் கலந்த மகிழ்ச்சியோடு சொன்னார். இந்தக் கூட்டத்தில் கதரைவிட, காவேரி நதியில் மலஜலம் கழித்து அசுத்தப்படுத்தும் பழக்கத்தைக் கண்டித்துத்தான் அதிக நேரம் அண்ணல் பேசினர் என்று கூறவேண்டும். (மாவட் டக் கழகத் தலைவரான எம். ஆர். சேதுரத்தினம் ஐயர் திருச்சிராப்பள்ளிப் பொது மக்களின் சார்பாக ஒரு வரவேற் புரையைப் படித்துக் கொடுத்துப் பண முடிப்பையும் அளித் தார்.)

விலை தெரியாதா ?

பொதுக் கூட்டத்தில் ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது. நகராட்சி மன்றத் தலைவரான பி. ஆர். தேவர், தம்மிட மிருந்து விலை உயர்ந்த மூன்று கற்கள் பதித்த மோதிரத்தைக் கதர் நிதிக்காக காந்திஜியிடம் வழங்கினர். அந்த மோதிரத்தின் விலை என்ன வென்று காந்திஜி கேட்டதற்குத் தமக்குத் தெரியாது என்று தேவர் சொன்னர். உடனே காந்திஜி வேடிக்கையாக, ''பணம் அதிகம் இருப்பதால் அவருக்கு அதன் விலை தெரியவில்லை'', என்று சொன்னர் !

மாலையில் காந்திஜி புதுக்கோட்டைக்கு வந்து விட்டார். எஸ். ஏ. என்று அழைக்கப் பெற்ற அண்ணுமலைச் செட்டியார் பங்களாவில் இரண்டு மணி நேரம் தங்கி ஓய்வெடுத்துக்

கொண்டு கஸ்தூரி பாவும் காந்திஜியும் பொதுக் கூட்டத் திற்கு வந்தார்கள். ''நீண்ட காலமாக எங்கள் பகுதியில் மழை இல்லை,'' என்று இங்கு அளிக்கப் பெற்ற வரவேற்புரை வருந்திக் கூறியது. ஆனால், காந்திஜி பேசத் தொடங்கிய சிறிது நேரத்தில் இலேசாகத் தூறல் தொடங்கி விட்டது. அவரும் பேச்சை நிறுத்த ஆயத்தமானார். அவர் ஏன் பேச்சை முடிக்க வேண்டும் என்று கருதியோ என்னவோ மழை நின்றது. காந்திஜியும் தாம் கூற வந்ததைக் கூறிவிட்டுச் சொற்பொழிவை முடித்தார். (கூட்டத்தில் மக்கள் சார்பாக வரவேற்புரையையும் பணமுடிப்பையும் அளித்தவர் வரவேற் புக் குழுத் தலைவரான கே. சுவாமிநாத ஐயர்.)

புதுக் கோட்டை

அண்ணல் வருகையின் போது அந்தக் காலத்துப் புதுக் கோட்டை நகராட்சி மன்றம் எவ்வாறு இருந்தது என்ப தற்கு ஒரு சான்றைக் கூறலாம். நகராட்சி மன்றத்தின் சார்பாக அண்ணலுக்கு ஒரு வரவேற்பு அளிக்க வேண்டுமென்று அதில் ஒரு தீர்மானம் வந்தது. தீர்மானம் வந்த கூட்டத் தில் தலைவரைச் சேர்த்துப் பதினேழு பேர் இருந்தார்கள். ஏழு பேர் தீர்மானத்தை எதிர்த்து வாக்களித்து விட்டதால் தீர் மானம் தோற்றுப் போயிற்று! மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற உறுப்பினர்களில் இருவர், தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தார்கள். இருவர் கூட்டத்திற்கு வரவே இல்லை. ஆகையால், இந்த நால்வரையும் கண்டித்து மக்கள் பொதுக் கூட்டம் போட்டுக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றினர் கள். புதுக்கோட்டைக்கு முதன் முதலாக காந்திஜி வருகை புரிந்தது இம்முறையே. அந்தக் காலத்தில் இங்கே வாழ்ந்த மக்கள், காந்திஜி நகருக்குள் நுழையும்வரை, ஏதாவது தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு விடுமோ என்று அஞ்சிக் கொண்டிருந்தார்கள். ஏனெனில் இதற்கு முன்பு காந்திஜி புதுக்கோட்டைக்கு வருவதாகத் திட்டம் இருந்தும் தர்பார் தடை உத்தரவு பிறப்பித்ததன் காரணமாக அவர் வர இய லாது போய், மக்கள் தங்கள் வரவேற்புரையைக் காரைக்குடி யில் கொண்டு போய்க் கொடுத்தார்களல்லவா?

நகராட்சி

22-9-27

புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இருந்த ஓர் ஊர் இராமச்சந்திரபுரம். (மறுநாள் இங்கு அண்ணல் வந்த

போது ஸ்ரீ பூமீஸ்வரசுவாமி இலவச உயர்நிலைப் பள்ளியில் அதன் நிருவாகியான எஸ். டி. நாகப்பச் செட்டியாரும், தலைமை ஆசிரியர் வி. சந்தானம் ஐயங்காரும் தனித்தனியாக வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளித்தார்கள். அடுத்தாற்போல் டி. எஸ். ஆர். எம். தர்ம வைத்திய சாலைக்குச் சென்றபோது, அதை நிறுவியவரான இராமசுவாமி செட்டியார் பண முடிப்பு அளித்தார். இதன் பின்பு நகரத்தார்களின் பொது வரவேற்பு நடைபெற்றது.) இங்கிருந்து கொத்தமங்கலம் வழியாகக் காளுடுகாத்தானுக்கு காந்திஜி சென்று சண்முகம் செட்டியார் பங்களாவில் தங்கினர். இங்கு காந்திஜி பேசியபோது செட்டி நாட்டில் நிறையக் கதர்க் கடைகளைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். காந்திஜி மேலும் சொன்னார்: நானும் ஒரு வைசியன் தான். உங்களைப் போன்று ஒரு செட்டிதான் என்று உரிமை பாராட்டிக் கொள்ள முடியும். நான் இரங்கூனில் டாக்டர் மேத்தாவுடன் தங்கியிருந்தபோது உங்களுடைய குடும்ப வாழ்க்கை முறையைப் பற்றித் தெரிந்து கொண்டேன். இரங்கூனில் கிட்டத்தட்ட நாள் முழுதும் பணத்தை எண்ணிக்கொண்டிருந்த செட்டியார்களை டாக்டர் மேத்தா எனக்குக் காண்பித்து, ''இவர்களைச் சிறிய லேவாதேவிக்காரர்கள் என்று எண்ணி விடாதீர்கள். சிலர் பெரும் புள்ளிகள்'' என்று கூறியிருக்கிறார். இரங்கூனில் உங்களைப் பற்றி அறிவதற்கு முன் தென்னப்பிரிக்காவிலேயே சில செட்டியார்களைச் சந்தித்திருக்கிறேன். நீங்கள் மட்டும் விரும்பினால் தமிழ்நாட்டில் நடைபெறும் கதர் இயக்கம் முழுவதற்கும் - ஏன் இந்தியா முழுவதிலும் நடைபெறும் கதர் இயக்கத்திற்குத் தேவையான பணத்தை அளித்து உதவ முடியும்.'' பின்னர் செட்டி நாட்டு பங்களாக்களில் நடுவே செல்வதற்குக்கூடப் போதுமான இடமின்றி ஏராளமாகப் போடப் பெற்றிருந்த வெளிநாட்டு மேசை நாற்காலிகள், சுவரில் மாட்டப் பெற்றிருந்த ஆபாசப் படங்கள், மற்ற ஆடம்பரங்கள் ஆகியவைகளை வன்மையாகக் கண்டித்தார். ''உங்களுடைய வீடுகளை அலங்காரம் செய்யும் காண்டிராக்டை எனக்கு அளித்தீர்களானால், தற்போது நீங்கள் செலவு செய்திருப்பதில் பத்தில் ஒரு பங்கு செலவிலேயே இதைக் காட்டிலும் அழகாக அவைகளை அலங்காரப்படுத்திக் காட்டுவேன்.'' என்று சொன்னார்.

காளுடு காத்தான்

(காஞ்சி காத்தானில் காந்திஜி இவ்வாறு கூறிய கருத்துக் களின் பிரதிபலன் உடனே தெரிந்தது. அதற்குப் பின் காந்திஜி செட்டி நாட்டில் சென்ற ஊர்களில் அவர் தங்கி யிருந்த இல்லங்களில் அதிக நாற்காலி மேசைகள் போடாது பார்த்துக் கொண்டார்கள்.)

இந்தக் கட்டத்தில் நகரத்தார்களுக்குக் கசப்பாகத் தோன்றக்கூடிய தம் கருத்து ஒன்றையும் சொன்னார்.

ஆலயமும் தாசி வீடும்

''ஆலயங்கள் நிர்மாணிப்பதில் நீங்கள் தாராளமாகப் பணத்தைச் செலவிடுகிறீர்கள் என்று அறிகிறேன். ஆலயம் என்று ஒரு கட்டிடத்தைக் கட்டி விட்டதால் மட்டும் கடவுள் அங்கு இருக்கிறார் என்று எண்ணுவது மூட நம்பிக்கை. தாசி வீட்டில் எந்த அளவு இறைவன் இருப் பாரோ அந்த அளவே அவர் இருக்கும் ஆலயங்கள் பல வற்றை நான் அறிவேன். தீண்டத்தகாதாருக்குக் கோவில் கட்டிக் கொடுக்குமாறு சில நண்பர்கள் என்னிடம் பணம் கொடுத்தார்கள். ஒரு புனிதமான மனிதன் கிடைத்தா லொழிய - அதை நிருவகிக்க நல்ல தர்மகர்த்தாக்கள் கிடைத்தாலொழிய அப்பணத்தை வைத்துக் கோவில் கட்ட நான் மறுத்து விட்டேன்,'' என்று அவர் கூறினார்.

பலமான எதிர்ப்பு

''விபச்சார விடுதிகளில் ஆண்டவன் எந்த அளவு இருக் கிறாரோ அந்த அளவே அவர் இருக்கக்கூடிய பல கோவில்கள் எனக்குத் தெரியும்'' என்று காந்திஜி கூறிய தற்குத் தமிழகத்தில் வைதிகர்கள் மத்தி யில் - ஏன், வைதிகர்கள் அல்லாதோர் சிலரிடமிருந்தும் - பின்னல் பலத்த எதிர்ப்புக் கிளம்பியது. உதாரணமாக, சென்னையில் அரசாங்கப் பள்ளியில் ஆசிரியராக இருந்த நாகராஜசர்மா ''இம்மாதிரி நிதானம் தவறிப் பேசுவது மகாத்மாவிற்கு அழகல்ல. மிஸ் மேயோ இந்தக் கோவில்களை விபச்சார விடுதிகள் என்று எழுதியிருப்பதாக வைத்துக் கொள்வோம். மகாத்மா காந்தி அப்பேர்து அவரைக் கண்டித்திருப்பார். நகரத் தார்கள் கோவில்களைக் கட்டிக் கொண்டு போகும் வேலையை விடாமல் நடத்திக்கொண்டு போக வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்'' என்று பத்திரிகைகளுக்கு எழுதி யிருந்தார். இதைச் சேலம் சி. விஜயராகவாச்சாரியார் போன்றவர்களும் எதிர்த்தார்கள். அவர்கள் தேவதாசி

முறை அகல வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டார்கள். ஆனாலும் மேற்கண்டவாறு கூறியதன் மூலம் இந்து சமுதாயத்தின் மனதை காந்திஜி புண்படுத்திவிட்டதாக விஜயராகவாச்சாரியார் கூறினார்.

தர்மம் யாருக்கு?

இதன்பின் தர்மம் செய்வதைப் பற்றிய தமது கருத்துக்களையும் எடுத்துரைத்தார். ''பாத்திரம் அறிந்து பிச்சையிடவேண்டும். நீங்கள் எல்லோரும் சேர்ந்து இந்தியாவிலுள்ள 50,000 கிராமவாசிகளுக்குத் தர்மச் சோறு போட ஏற்பாடு செய்கிறீர்கள் என வைத்துக் கொள்ளுங்கள். அது ஒரு பெரிய பாரம். நொண்டி, செவிடு, ஊமைக்குச் சோறு போடலாம். ஆனால் வேலை செய்யச் சக்தி உள்ளவர்களுக்கு அவ்வாறு செய்யக்கூடாது. ஆகவே கதரை வளர்ப்பதற்கு உதவுவது தான் இப்போது பெரிய தருமம்,'' என்றார்.

23-9-27

அமராவதி புதூர்

இந்திய பஞ்சாங்கப்படி செப்டம்பர் 23ஆம் தேதி காந்திஜியின் பிறந்த நாள். ஆகையால் காரைக்குடியில் ஐநூறு ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார்கள். காலையில் காந்திஜி காஞ்சுகாத்தானை விட்டுப் புறப்பட்டு, பள்ளத்தூர், கோட்டையூர் முதலிய கிராமங்களின் வழியாகக் காரைக்குடியை அடைந்து அமராவதிபுதூருக்கு வந்தார். (இங்கு காந்தி குழுவினருடன் திருமதி மீராபென் வந்து சேர்ந்து கொண்டார்.) இந்தப் பகுதியில் உள்ள தேசிய ஊழியர்களை ஈந்தது இவ்வூர்தான் என்று தாம் கேள்விப் பட்டதாக அமராவதிபுதூர்ப் பொதுக் கூட்டத்தில் அண்ணல் கூறினார். ''கதருக்குக் குறைந்த பட்சமாக எவ்வளவு கொடுக்க முடியும் என்று எண்ணுகிறீர்கள். அதிக பட்சமாகக் கொடுக்க முடிந்ததைக் கொடுக்க வேண்டும்'' என அவர் கேட்டுக் கொண்டார். ''அமராவதி என்றால் ஆண்டவன் இருக்கும் இடம் என்பது பொருள்: உள்ளும் புறமும் நீங்கள் தூயவர்களாய் இருந்தால் இதை உண்மையிலேயே ஆண்டவனுடைய இருப்பிடமாக நீங்கள் செய்ய முடியும்'' என்று சொன்னார்.

தீண்டாமை நியாயமா?

தீண்டாமை இருப்பது நியாயமா இல்லையா என்பது குறித்து அமராவதிபுதூரைச் சேர்ந்த வி.என்.ஆர்.எம்.ஏ. வேங்கடாச்சலம் செட்டியார் காந்திஜியுடன் சிறிது நேரம் விவாதித்திருக்கிறார். அவர் கேட்ட கேள்விகளும் காந்திஜி அவைகளுக்கு அளித்த மறுமொழிகளும் இன்றுகூட முக்கியத்துவம் உள்ளவை தான்.

கேள்வி : வேதங்களும் சாத்திரங்களும் தீண்டாமையை அனுமதிக்கவில்லையா?

பதில் : அனுமதிக்கவில்லை.

கேள்வி : பயபக்தியுள்ள பிராமணர் ஒருவர் ஒரு விக்கிரகத்தை வணங்கிக்கொண்டிருக்கும் போது ஒரு சண்டாளன் அவரைத் தொடலாமா? அது சரியா?

பதில் : தொடலாம். இன்னும் சற்றுச் சரியாகச் சொல்ல வேண்டுமானால், பிராமணர் அந்தச் சண்டாளனைத் தனது சகோதரனாகக் கருத வேண்டும்.

கேள்வி : நந்தனார் பறைய சாதியைச் சேர்ந்தவரென்றாலும் கூடத் தனது வகுப்பிற்குரிய தீய பழக்க வழக்கங்கள் பலவற்றைக் கைவிட்டவர். பக்தி வாழ்க்கையை மேற்கொண்டவர். தீயில் குளித்த பின்புதான் அவர் விமோச்சனம் பெற்றார். இல்லையா?

பதில் : நந்தனார் மேற்கொண்ட கடின தவங்கள் அவருடைய பெருமையை எடுத்துக் காட்டுகின்றன. அதற்காகத் தீண்டத்தகாதவர்கள் எனக் கூறப்படுகிறவர்களிடமிருந்தெல்லாம் அதே தவத்தை ஒரு பிராமணர் எதிர்பார்ப்பது நியாயமில்லை.

•

கேள்வி : பயிர்களில் உயர்ந்த வகைப் பயிர்களும் தாழ்ந்த வகைப் பயிர்களும் இல்லையா? இவைகளில் உயர்ந்த வகைப் பயிர்கள் மீது நாம் அதிகக் கவனம் செலுத்துவதில்லையா? அதைப் போன்று மனித வகுப்புக்களிலும் அவரவர் தேவைகளையும் சாதனைகளையும் அனுசரித்து அவைகளை நடத்த வேண்டாமா?

பதில்: ஒவ்வொரு வகுப்பும் அதனதன் தேவையை, சாதனையை அதுவே முடிவு செய்து கொள்ளட்டும். மற்ற வர்கள் முடிவு செய்ய வேண்டாம்.

கேள்வி: ஒரு எசமானருடைய பணியாட்கள் அவருடன் சமத்துவ உரிமை கொண்டாட முடியுமா? இவ்வாறு உரிமை கொண்டாடுவது இருவருக்குமிடையே உள்ள உறவுகளைப் பாதிக்காதா?

பதில்: நல்ல எசமானர் தனது பணியாளைச் சமத்துவ மாகவே கருதுவார்.

கேள்வி: வேதங்களிலும் ஆகமங்களிலும் கூறப்பட்டு யுக யுகமாக வந்துள்ள சாதி முறைகளையும் ஆஷ்ரம முறை களையும் மீறலாமா?

பதில்: இந்து சமயம் இருக்க வேண்டுமானால் நான்கு வர்ணங்களின் கடமையைக் கூறக்கூடிய வர்ண தர்மம் இருக்க வேண்டும். ஆனால் தற்போது அதில் உள்ள போலித் தன்மையை ஒழித்துக்கட்ட வேண்டும்.

தலைநகரம்

செட்டி நாட்டில் அவர் நான்கு நாட்கள் தங்கினார். செட்டிநாட்டுச் சுற்றுப் பயணத்தில் காரைக்குடியையே தலைநகரம் போன்று வைத்துக்கொண்டு ஒவ் வொரு நாளும் காரைக்குடிக்குத் திரும்பி வந்து விடுவது வழக்கம். திருமணங்களை நகரத்தார்கள் ஆடம்பரமாக நடத்துவதை அவர் வன்மையாகக் கண்டித்தார். குடி நீர் சுத்தமாக இருக்க வேண்டிய அவசியத்தையும் சுகாதாரத்தையும் வலியுறுத்திக் கொண்டு வந்தார். அந்தக் காலத்தில் நகரத் தார்கள் தங்களுடைய மனைவிமார்களை வீடுகளில் விட்டு விட்டு இரங்கூன், மலேயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று வாணிகம் செய்வதற்காக நீண்டகாலம் தங்கியதை அவர் கண்டித்தார்.

இரு அறிவுரைகள்

பொதுவாகச் செட்டிநாட்டில் காந்திஜி இரண்டு முக்கியமான அறிவுரைகளை நகரத்தார்களுக்குக் கூறி வந்தார். இளம் பிள்ளைகளைச் சரியாகக் கூடப் படிக்க வைக்காமல் பெட்டிக்கு அடியில் உட்கார வைத்துப் பணம் ''உற்பத்தி'' செய் யும் இயந்திரங்களாக்கக்கூடாது, என்பது ஒன்று. பணம் இருக்கிறது என்பதற்காகக் கண்டபடி

யெல்லாம் நடந்து கொள்ளாது தூய வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது மற்றொன்று.

24-9-27

மறுநாள் மகர்நோன்பு மைதானத்தின் முன்னுள்ள பங்களாவில் நடைபெற்ற மாதர்கள் கூட்டத்தில் கதர் நிதியின் நோக்கம் என்னவென்பதை காந்திஜி விளக்கினார். இக்கூட்டத்திற்குப் பெண்கள் நிறைய வந்திருந்தார்கள் - இன்பத்திலும் துன்பத்திலும் சீதையை முன்மாதிரியாகக் கொண்டு பின்பற்றி வாழுமாறு கேட்டுக்கொண்டார்.

தேவகோட்டை

காரைக்குடியில் நடேசன் செட்டியார் இல்லத்தில் தங்கிய காந்தி, மாலை தேவகோட்டைக்குச் சென்றார். சிவன் கோவிலுக்கு எதிராக உள்ள பெரிய மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வேந்தன்பட்டி சொக்கலிங்கம் செட்டியார் பஞ்சைத் தம்மால் எவ்வாறு உயர்ந்தரக நூலாக நூற்க முடிகிறது என்பதைப் பல்வேறு கட்டங்களில் காட்டும் முறையில் ஒரு சிறு பொருட்காட்சிபோல் அமைத்து காந்திஜியிடம் காண்பித்தார். அவர் நூற்பதில் விற்பன்னர். அவர் உற்பத்தி செய்திருந்த மெல்லிய, அழகான நூலைக் கொண்டு நெய்யப்பெற்ற கதர்த் துணியை காந்திஜி மிகவும் பாராட்டிப் பொதுக்கூட்டத்தில் பேசியதுடன், ஆயிரம் ரூபாய்க்கும் மேலே கேட்டால்தான் அதை ஏலத்தில் விற்க முடியுமென்றும் இல்லையேல் அதை அகில பாரத சர்க்கா சங்கத்தின் பொருட்காட்சியில் கொண்டு போய் வைக்கப் போவதாகவும் கூறிவிட்டார். ஆயிரம் ரூபாய்க்கு மேல் யாருங் கேட்காமற் போகவே, அதை இங்கிருந்து கொண்டு சென்றுவிட்டார். வங்காளத்தில் இருந்த சட்டர்ஜி ஒருவர் தான் கிட்டத்தட்ட இதைப் போன்ற மெல்லிய துணியை இந்தியாவில் உற்பத்தி செய்யக்கூடியவர் என்று காந்திஜி கூறினர். இதற்கு அடுத்தாற்போன்று இங்கு சீனிவாச ஐயங்காரால் நூற்று நெய்யப் பெற்றிருந்த ஓர் அழகான துண்டையும் காந்திஜி பாராட்டினர். (தேவகோட்டை யூனியன் போர்டு, நகரப் பொதுமக்கள், ஸ்ரீமீனாட்சி வித்தியாலயா உயர்நிலைப்பள்ளி ஆகியவைகளின் சார்பாக மூன்று வரவேற்புரைகள் அளிக்கப்பெற்றன. தேவகோட்டை இளைய ஜமீன்தாரான ஏ. ஐ. ஏ. ஆர். ஆர். எம். வி. சோமசுந்தரம் செட்டியார் பொது மக்களின் சார்பாகப் பணமுடிப்பை

அளித்தார். சுவர்ணமூர்த்தி பெண் பள்ளி மாணவிகளின் சார்பாக ஒரு பண முடிப்பும் வழங்கப்பெற்றது.)

25-9-27

மறுநாள் பொதுக்கூட்டம் காரைக்குடியில் நடைபெற்றது. அங்கும் சொக்கலிங்கம் நெய்த துணியை காந்திஜி மறக்கவில்லை. சொற்பொழிவின் தொடக்கத்திலேயே அதைப் பற்றித்தான் குறிப்பிட்டார். இதன் பின்னர் கதர் இயக்கம் எவ்வாறு நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதை விவரித்தார். ''இதன் தலைமையாக இருந்து நடத்தும் குழுவில் ஒன்பது பேர் இருக்கிறார்கள், அவர்களில் பெரும்பாலோர் பிராமணரல்லாதாரே. இக்குழுவின் தலைவர் ஒரு பிராமணரல்லாதவரே. அவரை மக்கள் தவறுக ''மகாத்மா'' என அழைக்கிறார்கள்'' என்று அவர் சொன்னபோது எல்லோரும் சிரித்துவிட்டார்கள். இவ்வாறு கதரில் பணியாற்றுபவர்களில் பெரும்பாலானவர்கள் பிராமணரல்லாதார் தாம் என்பதை இங்கு காந்திஜி எடுத்துச் சொன்னதிலிருந்து யாராவது மீண்டும் இச்சிக்கலை அவரிடம் இங்கும் கிளப்பியிருக்கலாம் என்று தோன்றுகிறது. இளம் வயதிலேயே பெண்களுக்குப் பொட்டுக் கட்டிவிடும் துன்மார்க்கமான பழக்கம் நிலை நிற்பதற்குச் செட்டி நாட்டிலுள்ள பணக்காரர்கள் ஓரளவு காரணமாய் இருப்பதாகவும் இதைப்பற்றி அவர்களுக்கு நினைவூட்ட வேண்டுமென்றும் ஒரு பெண் வைத்தியர் தமக்கு எழுதியிருப்பதாக - பெயரைக் குறிப்பிடாமல் - காந்திஜி இக்கூட்டத்தில் குறிப்பிட்டார். இது அநேகமாக, டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டியாகத் தான் இருக்கும் என யூகிக்க நியாயமுண்டு.

அமைப்பு விளக்கம்

இக்கூட்டத்தில் காந்திஜியிடம் அளிக்கப் பெற்ற பண முடிப்புகள் மட்டுமல்லாது ஏலத்தில் வந்த தொகையும் அதிகமாக இருந்தது. காந்திஜி கூறிய ஆயிரம் ரூபாயை அந்தத் துணிக்குக் கொடுத்து வாங்கிக் கொள்ளத் தாம் தயாராய் இருப்பதாகக் காலைடுகாத்தான் வை. சு. சண்முகம் செட்டியார் கூட்டத்தில் அறிவித்தார். ஏராளமானவர்கள் மோதிரங்களை காந்திஜியிடம் வழங்கினர்கள். அதைப் போன்று அம்மோதிரங்களை ஏலத்தில் எடுப்பவர்களும் விறுவிறுப்பாக இருந்தார்கள். ''என்னிடம் எடுக்க

ஏலத்தில் விறுவிறுப்பு

எடுக்கக் குறையாத அளவு மோதிரங்கள் இருக்கின்றன'' என்று காந்திஜியும் பெருமையோடு கூறிக் கொண்டார். வேகமாக ஏலம் நடந்து கொண்டிருந்ததை அவர் பார்த்து உள்ளம் பூரித்துக் கொண்டிருந்தார். ''ஏலத்தில் உங்கள் ஊர் ஆமத்நகருக்குச் சமமாக வந்துவிடும் போல் தோன்றுகிறதே'' என்று பாராட்டிச் சொன்னார்.

பிரிவுரை

ஏலம் ஒரு மணி நேரமாக நடைபெற்றது. ஏலம் முடிந்தபின்பு காந்திஜி கூட்டத்தில் பேசும் வழக்கமில்லை. ஆனால் இங்கு மட்டும் ஒரு விதிவிலக்குப் போன்று அவர் தமது பிரிவுரை என்னவென் பதைக் கூறினார். ''இந்தக் காட்சியை (ஏலம் விறுவிறுப்பாக நடைபெற்ற காட்சியை) என்னால் மறக்க முடியாது. என்னுடைய வாழ்க்கையின் இனிய நினைவுகளில் இது ஒன்றாக என்றும் நிலைத்திருக்கும்'' என்று சொல்லிவிட்டு அவர் அதற்கான காரணத்தையும் விளக்கினார். ''செட்டி நாட்டுப் பகுதிக்கு வந்தபின் உங்களுக்குப் பிடிக்காத எத்தனையோ விஷயங்களை நான் சொன்னேன். அவைகளை வைத்து நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்து கொண்டிருக்கலாம். ஆனால் நான் எவ்வளவு காரசாரமாகப் பேசினேனோ அவ்வளவு அதிகமான அன்பை நீங்கள் கொட்டி விட்டீர்கள். என்னுடைய மகிழ்ச்சிக்கு இதுதான் உண்மையான காரணம். நீங்கள் பணம் கொடுத்தது மட்டுமல்லாமல் உங்களுடைய இதயங் களையும் எனக்கு அளித்தால்தான் நான் உங்களுக்கு நன்கு தொண்டாற்ற முடியும்.'' (காரைக்குடிப் பொதுக்கூட்டத் தில் பொது மக்களின் சார்பாக வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தவர் வரவேற்புக் குழுத் தலைவரான செட்டியப்பச் செட்டியார். காரைக்குடிப் பொது மக்கள் சார்பாகவும், பெண்கள் சார்பாகத் தனியாகவும் ஆதிதிராவிட இளைஞர் கள் சார்பாகவும் பண முடிப்புகள் வழங்கப்பெற்றன.)

மெய்யப்பர்

இச் சுற்றுப்பயணத்தில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களில் சில இடங்களுக்கு காந்திஜி யுடன் காமராஜ் சென்றிருக்கிறார். செட்டி நாட்டில் சில ஊர்களுக்கு காந்தி மெய்யப்பச் செட்டியார் காந்திஜியுடன் சென்றுள்ளார். மெய்யப்பச் செட்டியார் தம்முடைய டயரியில் இதை எழுதி வைத்துள்ளார். இரண்டு நாட்கள் அவர்

எழுதி வைத்திருந்த குறிப்புகள் காந்திஜியின் வருகையைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

ஜெயங்கொண்டபுரம்
23-9-27

ஜெயங் கொண்டபுரம்

''காலை 8 மணிக்கு இங்கு மகாத்மா, அவரது மனைவியார், மகன், தேசாய், இராஜகோபாலாச்சாரியார், ராஜன் எல்லோரும் காரில் வந்து மூன்று நிமிசம் நின்றார்கள். நாச்சம்மை கதர் மாலை போட்டு ரூ. 100 கதர்க்காக கொடுத்தாள். உடனே நாமும்கூட காரைக்குடி போய் இங்கு வந்தோம். ஷியார்களுக்கு காரைக்குடி சா. நா. சா. தே. பங்களாவில் சாகை, பகல் நாமும் நாச்சம்மையும் பிள்ளைகளும் காந்தி நகர் போய் பெண் பள்ளிக்கூட வருச கொண்டாட்டத்தில் கலந்து, பகல், இரவு சாப்பிட்டு, இரவு இங்கு வந்தோம். மகாத்மா இரவு காந்தி நகர் வந்து பிரசங்கம் செய்தார்கள். மறுநாள் பகல் மகாத்மா தேவகோட்டை போய் இரவு பிரசங்கம் செய்ய வந்தார்கள். நாமும் தேவகோட்டை போய் வந்தேன்.

27-9-27

பாகனேரி வழி

காலையில் நாமும் தி.வும் காரைக்குடி போய் தி. காரில் மகாத்மா பிரயாணத்துக்காக கூடப்போய் நாச்சியாபுரம், சிறுவயல், திருப்பத்தூர் பொதுசனக் கூட்டம். மேற்படியூரில் மிசின் ஆஸ்பத்திரி கூட்டம் முடிந்தது, 9½ மணிக்கு பாகனேரி போய்ச் சேர்ந்தோம். அங்கு மாலை 6 மணி முதல் 7½ மணி வரை பொதுக்கூட்டம், அதில் மகாத்மா படம் ஒன்று ரூ. 81-க்கு நாம் ஏலத்தில் எடுத்தோம்.

சா. கணேசன் தாம் நேரில் கண்ட இரு சுவையான நிகழ்ச்சிகளைக் கூறுகிறார்: ''1927-ஆம் ஆண்டில் காரைக்குடிக்கு காந்திஜி வந்திருந்தபோது, காலையில் அவருடைய சவரத்திற்கு வேண்டிய கத்தி, தண்ணீர் முதலியவைகளை முறைப்படி காலா காலத்தில் எடுத்து ஆயத்தமாக வைக்க தேவதாஸ் காந்தி தவறிவிட்டார். இது காந்திஜிக்கு மிகுந்த வருத்தத்தை உண்டாக்கியது. தேவதாஸ் அவரது கடமையை உரிய காலத்தில் செய்யாதிருந்ததற்குப் பிராயச்

உண்ணு நோன்பு

சித்தமாக அன்று தாம் உணவு கொள்ளப் போவதில்லை என்று கூறிவிட்டார். மற்றவர்கள் எவ்வளவோ வேண்டியும் அவர் தம் முடிவை மாற்றிக் கொள்ளவில்லை. காந்திஜி உண்ணுநோன்பு மேற்கொண்டதால், கஸ்தூரிபாவும் உண்ணுமலே இருந்து விட்டார். அன்று கஸ்தூரிபாவால் காந்திஜிக்காகத் தயாரிக்கப்பட்டிருந்த ரொட்டியும், கீரையும் அவர்கள் அருகில் இருந்து பணியாற்றிக் கொண்டிருந்த எங்களுக்குக் கிடைத்தது.

ஆசிரியர் யார்?

தனவணிகர் கல்விக்கழகம் (இக்கல்விக் கழகத்தின் ஆதரவில் பல ஊர்களில் பதினேந்து, பதினாறு ஆரம்பப் பள்ளிகள் நிறுவப்பெற்று நடைபெற்று வந்தன. இது அரசாங்க அங்கீகாரம் பெற்ற ஒரு நிறுவனம்.) நடத்தி வந்த பள்ளிகளின் ஆசிரியர்கள், மாணுக்கர்கள் சிலர் ப. ஜீவானந்தம், (பிற்காலத்தில் பொதுவுடமைக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவர்) கும்பலிங்கம் ஆகியோர் தலைமையில் காந்திஜியைக் காணவந்தார்கள். காந்திஜி இவர்களுக்குச் சுமார் அரை மணி நேரத்திற்குமேல் பேட்டி கொடுத்தார். வந்த மாணுக்கர்கள் சிலருடைய குடுமி வளர்ந்து தொங்கிக்கொண்டிருந்தது. காந்தி அடிகள் ஆசிரியர்களைப் பார்த்து, ''மாணுக்கர்கள் ஏன் இவ்வளவு நீளம் மயிர் வளர்க்கவேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு ஜீவானந்தம் ''இவர்களெல்லாம் மிகவும் ஏழைகள்; அன்றுடம் உணவு கிடைப்பதே கடினம். ஆகையால், மயிர் வெட்டிக் கொள்வதற்குப் பணம் செலவழிக்க முடிவதில்லை'' என்று பதிலளித்தார். உடனே, காந்திஜி ஆசிரியர்களை நோக்கி, ''ஆசிரியன் என்றுல் பொருள் என்ன?'' என்று கேட்டார். ''கல்வி கற்றுக் கொடுப்பவன்'' என்றார் ஓர் ஆசிரியர். ''கல்வி மட்டும்தானு ஆசிரியர் கற்றுக் கொடுப்பது? எல்லா வகையிலும் அவர்கள் வாழ்வு செம்மையாக நடைபெற வழிகாட்டுவது அல்லவா ஆசிரியனின் பணி?'' என்று திருப்பினர் மகாத்மா. ஆசிரியர்கள், ''ஆம், ஆம்'' என்றனர். ''அப்படியானுல், இந்த மாணுக்கர்களின் தலைமயிரைக் களைவதையும் ஆசிரியர்களே மேற்கொள்ளக் கூடாதா?'' என்று காந்திஜி கேட்டதும், ஆசிரியர்கள் வியப்பு மேலிட்டவர்களாய், ''ஆம், செய்யலாம்'' என்று அரைமனதுடன் பதிலளித்தார்கள். ''ஓகோ, உங்களுக்கெல்லாம் மயிர் களைவது என்பது கௌரவக் குறைவான செயல் என்ற உணர்விருக்கிறது

போலும். பரவாயில்லை. நானே அந்த வேலையைச் செய்கிறேன் என்று அவர்களிடம் கூறிவிட்டு, தேவதாஸ் பக்கம் திரும்பி, ''தேவதாஸ், கத்திரி முதலியவற்றை எடுத்துவா'' என்று உத்தரவிட்டார். உடனே ஆசிரியர்கள், ''வேண்டாம் பாபு, நாங்களே அந்தப் பணியை மாணவர்களுக்கு மனப்பூர்வமாகச் செய்கிறோம்'' என்றார்கள். காந்திஜியும் மகிழ்ச்சியோடு அதை ஏற்றுக்கொண்டார். ''சொல்லிக் கொடுப்பவன் மட்டுமல்லன், செயலிலும் தாம் சொல்வதைச் செய்து காட்டுபவனே நல்லாசிரியன்'' என்று கூறி ஆசிரியர்களை வாழ்த்தி விடை அனுப்பினார்.

26-9-27

பெசண்டுக்கு வாழ்த்து

அன்னிபெசண்டின் பிறந்தநாள் அன்று காரைக்குடியிலிருந்து ''நியூ இந்தியா''விற்கு காந்திஜி ஒரு பிறந்த நாள் விழாச் செய்தி அனுப்பினார். ''பெசண்டிற்கு முதன்முதலாக நான் கடன்பட்டது 1889-90-ஆம் ஆண்டிலாகும். இப்போது அது பன்மடங்கு பெருகிவிட்டது. அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்தக் கொடுமைக்கார ஆண்டவன் எனக்குச் சக்தி கொடுக்கவில்லை'' என்று அந்த வாழ்த்துச் செய்தி கூறியது.

27-9-27

பாகனேரி

நாச்சியார்புரம், சிறுவயல், திருப்பத்தூர் ஆகிய ஊர்களின் வழியாக காந்திஜி மதுரை வந்து சேர்ந்தார். பாகனேரியில் சொக்கலிங்கம் செட்டியார் இல்லத்தில் காந்திஜி தங்கியிருந்தார். சிறுவயலில் ஆசிரமத்தின் சார்பாக காந்திஜிக்கு வரவேற்பு அளிக்கப்பெற்றது. இந்த ஆசிரமம் குருகுலம் நடத்தியதையும் அரிஜனப் பையன்களுக்காகப் பள்ளி நடத்தியதையும் சுகாதாரத் தொண்டாற்றியதையும் காந்திஜி பாராட்டினார். இங்குப் பெண்கள் பெரிய தொங்கட்டான்கள் அணிந்திருந்ததை காந்திஜி பார்த்துவிட்டார். ''இவை பார்ப்பதற்கு ஆபாசமாய் இருப்பதுடன் முகத்தின் அழகையும் கெடுத்துவிடுகின்றன'' என்று அவர் கருத்துத் தெரிவித்தார்.

திருப்பத்தூரில் கலாமண்டபத்தில் வரவேற்பு. (பொது மக்கள் சார்பாகவும் மோட்டார் யூனியனைச் சேர்ந்தவர்கள் சார்பாகவும் பணமுடிப்புகள் வழங்கப் பெற்றன.) செட்டி நாட்டிலேயே இங்குத்தான் பணமுடிப்புக் குறைச்சலாய் இருந்ததாக அண்ணல் வருத்தப்பட்டுக் கொண்டார்.

திருப்பத்தூர்

இங்குப் பொது மக்கள் சார்பாகவும் நாட்டார்கள் சார்பாகவும் ஆசாரியார்கள் சார்பாகவும் தனித் தனியாகப் பண முடிப்புகள் வழங்கப்பெற்றன. பொதுக் கூட்டத்தில் ஆண்களுக்குச் சமமான எண்ணிக்கையில் பெண்களும் வந்திருந்தது அண்ணலுக்கு மகிழ்ச்சி அளித்தது. ''நூற்பு, மாதர்கள் தங்கள் சொந்த பலத்தில் வாழ்வதற்கு வேண்டிய ஆதரவை அளிப்பதாகும். மேலும் அது, இளம் வயதில் சிறு பெண்களைத் திருமணம் செய்து கொடுக்கும் தீய பழக்கத்தை நிறுத்தும் சக்தி வாய்ந்தது'' என்று அவர் கூறினார்.

இங்குள்ள சுவீடிஷ் மிஷன் கண் மருத்துவமனைக்கு அவர் சென்ற போது டாக்டர் கூகல்பர்க், அவரை உற்சாகத்தோடு வரவேற்று அங்கிருந்த டாக்டர்கள், தாதியர்கள், அலுவலர்கள் ஆகியோரை அண்ணலுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

வந்த கதை

இந்த மருத்துவமனைக்கு டாக்டர் குருபாதம் வேண்டுகோளின் பேரிலேயே காந்திஜி வந்தார். 1921-இல் காரைக்குடியில் தான் முதன் முதலாக டாக்டர் குருபாதம் காந்திஜியைச் சந்தித்தார். காந்திஜியைச் சந்திக்க முதலில் அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. எப்படியாவது அண்ணலைப் பார்த்துப் பேச வேண்டுமென்று காத்துக் கொண்டிருந்தார். அப்போது மாடியிலிருந்து கீழே வந்த கஸ்தூரிபாவிடம் அவர் குறிப்பு ஒன்றை எழுதிக் கொடுத்து அனுப்பினார். காந்திஜி அவரை அழைத்துச் சுமார் அரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார். திருப்பத்தூர் கண் மருத்துவமனைக்கு வரவேண்டுமென அண்ணலை அவர் அழைத்தார். காந்திஜியும் ஒப்புக்கொண்டு 1927-இல் அங்கு வந்தார். இதன் பிறகு அண்ணலுடன் டாக்டர் குருபாதம் தொடர்பு நீடித்தது. 1936-ஆம் ஆண்டில் நமக்கேற்ற உணவு என்ன என்பது குறித்து இவர் ''கார்டியன்'' என்ற ஆங்கில சஞ்சிகையில் தொடர்ச்சியாக எழுதி வந்த பத்துக் கட்டுரைகளை யாரோ காந்திஜியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அண்ணல் டாக்டர் குருபா

தத்தைச் சந்திக்க வேண்டும் என்ற விருப்பத்தைத் தெரி விக்கவே இவர் அண்ணலைப் போய்ப் பார்த்தார். காந்திஜி யின் தொடர்பால் இவருடைய வாழ்க்கை முறையே மாறியது. சித்தூர் மாவட்டத்தில் - நிறைய வருமானம் வரக்கூடிய தமது மருத்துவத் தொழிலை விட்டுவிட்டு - வேளாண்மை வளர்ச்சிக்கு முன்னேடியாக ஓர் ஆசிரமம் நிறுவினர். குருபாதம் 1945-இல் காந்திஜியைச் சந்தித்து கதருக்கு எவ்வாறு முக்கியம் கொடுத்து அண்ணல் பரப்பி வந்தாரோ அதே அளவு முக்கியத்துவம் வேளாண்மைக்கும் அளிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அண்ணல் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டதாகவும் டாக்டர் குருபாதம் கூறுகிறார். (''தற்சமயம் விவசாயம் நடந்து வருவதாலும், கதர் புறக்கணிக்கப்பட்டதாலும் தான் கதருக்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது என்று காந்திஜி அவரிடம் கூறியிருக்கிறார்.) பின்னர் கஸ்தூரிபா காந்தி நிதி அமைக்கப் பெற்றபோது, அதற்கு மகாத்மா காந்தி நியமித்த வைத்தியக்குழுவில் தமிழகத்தில் இருந்த மூவரில் இவரும் ஒருவர். மற்ற இருவர் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், சௌந்தரம் இராமச்சந்திரன் ஆவார்கள். உயர் ஆதாரக் கல்விக் குழுவிலும் இவரும் டாக்டர் சவரிராயன் ஏசுதாசனும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டார்கள். இரமணமகரிஷியைப் பற்றி காந்திஜி இரு வேறு விதமாகக் கேள்விப்பட்டிருக்கிறார். ஆகையால் அவரைப்பற்றிய உண்மையை அறிந்து கொள்ள விரும் பினர். சென்னையில் கோகுலம் காலனியை நிறுவி நடத்தி வந்த பி. என். சங்கரநாராயணனுக்கு ஒரு கடிதம் எழுதி, இரமண ஆசிரமத்திற்குச் சென்று அவருடைய கருத்துக்களை எழுதச் சொல்லியிருந்தார். சங்கரநாராயணன் டாக்டர் குருபாதத்தையும் அழைத்துச் சென்றார். இருவரும் இரமண ஆசிரமத்தில் மூன்று நாட்கள் தங்கி காந்திஜிக்கு ஓர் அறிக்கையை எழுதி அனுப்பினர்கள்.

இவர்களுடைய அறிக்கை இரகசியமானது என்றாலும் அது இரமணரின் பெருமையை எடுத்துக்கூறியது என்பதில் ஐயமில்லை. ஏனெனில் பின்னால் காந்திஜியின் பக்தர்கள் சிலர் அவருடைய அனுமதியுடன் பகவான் இரமணரைப் பார்க்கவும் தரிசிக்கவும் வந்திருக்கிறார்கள். 1938-இல் இராசேந்திரப் பிரசாத் வந்தார். இரமணர் ஆஷ்ரமத்திலிருந்து இவர்

இரமணர் காந்தி

புறப்பட்டபோது, ''மகாத்மா காந்தியின் அனுமதியுடன் நான் இங்கு வந்தேன். விரைவில் நான் அவரிடம் செல்ல வேண்டும். அவருக்கு ஸ்ரீபகவானுடைய செய்தி ஏதாவது உண்டா?'' என்று கேட்டார். அதற்கு இரமணர், ''அத்யாத்ம சக்தி அவருக்குள் (காந்திஜிக்குள்) இருந்து செயலாற்றுகிறது; அவரை வழி நடத்திச் செல்கிறது. அதற்கு மேல் வேறு என்ன வேண்டும்?'' என்று கூறினர். காந்திஜியின் பல்வேறு கருத்துக்களைப் பற்றி அவ்வப்போது, பகவானிடம் பக்தர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கு மெஞ்ஞானியான அவர் தெரிவித்த விடைகள் மிகுந்த முக்கியத்துவம் உள்ளவை. தம்முடைய ஆசிரம வாசிகள் அடிக்கடி தவறுகள் செய்வது குறித்து காந்திஜி மனச்சஞ்சல மடைவதும் தம்முடைய குறைபாடுகளே ஆசிரம வாசிகள் இவ்வாறு தவறு செய்வதற்கெல்லாம் காரணம் என்று கூறுவதும் உண்டு இதைக் குறிப்பிட்டு இரமணரிடம் ஒரு சீடர் கேட்டபோது அவர் சொன்னார்: ''காந்திஜி தம்மைப் பரிசுத்தப்படுத்திக் கொள்வதற்கு இவ்வளவு காலம் கடுமையாகப் பாடுபட வேண்டியிருந்தது. மற்றவர்களும் காலா காலத்தில் சரியாகி விடுவார்கள்.'' ஒரு சமயம் சில காங்கிரஸ் ஊழியர்கள் பகவான் ஸ்ரீ இரமணரிடம் வந்து, ''காந்திஜியின் வாழ்நாளில் விடுதலை வந்துவிடுமா?'' என்று கேட்டார்கள். இக்கேள்விக்கு நேரடியாக அவர் மறுமொழி அளிக்கவில்லை. ஆனாலும் காந்திஜி கடைப்பிடித்த அடிப்படையான தத்துவத்தை அவர் விண்டு சொன்னார்: ''காந்திஜி ஆண்டவனிடம் சரணடைந்து கொண்டு பணியாற்றுகிறார். அவரிடம் தன்னலம் என்பதில்லை. பலனைப் பற்றி அவர் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதுங் கிடையாது. அவ்வப்போது ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை அவர் ஏற்றுக்கொள்கிறார். தேசிய ஊழியர்களின் மனப்பாங்கு இவ்வாறுதான் இருக்க வேண்டும்.'' உடனே பகவானிடம் ஊழியர்களில் ஒருவர் கேட்டார்: ''நம்முடைய முயற்சி பயனுள்ளதுதானா என்பதை நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?'' மகரிஷி: ''தேச நலனுக்காகப் பணியாற்றுவதில் காந்திஜியின் முன்னுதாரணத்தைப் பின்பற்றுங்கள். 'சரணாகதி'தான் சரியானது''. காந்திஜி எரவாடா சிறையில் இருபத்தியோரு நாட்கள் உண்ணா நோன்பு இருக்கப் போவதாகச் செய்தித் தாள்களின் மூலமாக அறிந்த இரண்டு இளைஞர்கள் ஸ்ரீபகவானிடம் வந்து உணர்ச்சிப் பெருக்கோடு, ''மகாத்மா இருபத்தியோரு நாட்கள் உண்ணாவிரதத்தைத் தொடங்கி

விட்டார். எரவாடாவுக்கு ஓடோடிச் சென்று நாங்களும் இருபத்தியோரு நாட்கள் உண்ணு நோன்பிருக்க விரும்பு கிறோம். எங்களுக்கு அவசரம். பகவான் அனுமதிவேண்டும்'' என்று கேட்டனர். பகவான் சொன்னவுடன் அவர்கள் ஒரே தாவாகத் தாவி ஓடிவிடுவார்கள் போல் இருந்தது. அப்போது ஸ்ரீ பகவான் புன்னகை புரிந்துகொண்டே சொன் னார்: ''உங்களுக்கு இத்தகைய உணர்ச்சி இருப்பது ஒரு நல்ல அடையாளமே. ஆனலும் நீங்கள் இப்போது என்ன செய்ய முடியும்? காந்திஜி நம்முடைய தவத்தின் மூலம் ஏற்கனவே அடைந்துள்ள பலத்தை நீங்களும் பெறுங்கள். அதன்பின் நீங்கள் வெற்றியடைவீர்கள்.'' இதுதான் அந்த இளைஞர் களுக்கு அவர் கூறிய அறிவுரை. ஆண்டவனின் லீலா விநோதங்களைப் பற்றி காந்திஜி அவ்வப்போது எழுதி வந்தவை இரமணருக்குப் பிடித்திருந்தன. அரிஜன் (11-3-1939) இதழில காந்திஜி, ''ஆண்டவனின் லீலா விநோதங்கள் தாம் என்ன! ராஜ்கோட்டிற்குச் செல்லும் பயணம் எனக்கே வியப்பாக இருக்கிறது. ஏன் நான் செல்கி றேன்? எங்கு நான் செல்கிறேன்? எதற்காக? இவைகளைப் பற்றியெல்லாம் நான் எதுவும் நினைத்துப் பார்த்ததில்லை. ஆண்டவன் எனக்கு வழிகாட்டுவதாலல் நான் எதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்? ஏன் சிந்திக்க வேண்டும்? நான் எண்ணத் தொடங்கி விடுவதே - என் எண்ணமே - கடவு ளின் வழிகாட்டுதலுக்கு ஒரு முட்டுக்கட்டையாகி விடலாம். உண்மை என்னவென்றல் சிந்தனையை நிறுத்த முடிவதில்லை. சிந்தனைகள் புதிதாக வருவதில்லை. (சிந்தனையில்லாத) இடை வெளியே கிடையாது. ஆனல் நான் சொல்ல வந்தது என்னவென்றல் என்னுடைய குறிக்கோளைப் பற்றிய சிந்தனை இல்லையே என்பதுதான்.'' ''எவ்வளவு உண்மை யான வாசகங்கள்!'' என்று பகவான் கூறிக்கொண்டே, அதில் உள்ள ஒவ்வொரு கருத்தையும் மீண்டும் வலியுறுத்திச் சொன்னர். இதற்கு ஆதாரமாக, ''சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற திறமரிது காண்'' என்ற தாயுமானவர் வாசகத்தையும் நினைவூட்டினர். ஒரு சமயம் ஒரு சீடர், ''காந்திஜி சத்தியத்தைக் கடைப்பிடித்து ஆன்ம விமோச் சனம் அடைந்தார்'' என மகரிஷியிடம் கூறினர். அந்தச் சீடரை மகரிஷி கேட்டார்: ஆன்மாவைத் தவிர சத்தியம் என்பதுதான் வேறு என்ன? எது இருக்கிறதோ அதைக் கொண்டதுதான் சத்தியம். இருப்பது ஆன்மாவைத் தவிர

வேறு ஒன்றும் இல்லை. ஆகவே காந்திஜியின் சத்தியம் என்பதும் ஆன்மாவைத் தவிர வேறு ஒன்றுமல்ல. *

28-9-27

மதுரை

காந்திஜி மதுரைக்கு வந்தார்; மழையும் வந்துவிட்டது. ஆனால் நல்ல வேளையாக, சிறிது நேரம் பெய்து நின்றுவிட்டது. ஜார்ஜ் ஜோசப் இல்லத்திற்கு அவர் வந்தபோது (இங்குத்தான் அவர் தங்கினார்) ஜோசப் தம்பதிகள் இருவரும் அவரை வாசலில் நின்று வரவேற்றார்கள். இம்முறை அவர் ஜார்ஜ் ஜோசப் வீட்டில் தங்குவார் என்று யாரும் எதிர் பார்க்கவில்லை. ஏன், ஜார்ஜ் ஜோசப் கூட முதலில் எதிர் பார்க்கவில்லை. ஏனெனில் ஜார்ஜ் ஒத்துழையாமை இயக்கத்தில் கருத்து வேறுபட்டு ஒதுங்கியிருந்தவர்.

பொதுக் கூட்டம்

மாலை வரை ஓய்வெடுத்துக் கொண்டு அண்ணல் நகராட்சி மன்ற மண்டபத்திற்குச் சென்று அங்கு நகராட்சி மன்றத் தலைவரான ஆர். எஸ். நாயுடு அளித்த வரவேற்புரையைப் பெற்றுக்கொண்டு பொதுக் கூட்டத்திற்குப் போய்விட்டார். தழுக்கம் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் (மதுரைப் பொது மக்களின் சார்பாகவும் மாணவர்கள் சங்கத்தின் சார்பாகவும் நாடார்கள் சங்கத்தின் சார்பாகவும் இந்திப் பிரசாரக்குகளின் சார்பாகவும் வரவேற்புரைகள் படித்துக் கொடுத்தார்கள். சர்க்கா சங்கம் தனது அறிக்கையைப் படித்தது. மதுரை கதர் நிதியின் பொருள் காப்பாளராக இருந்த ஏ. வேதராம ஐயர் அந்நிதியை அளித்தார். மாணவர்கள், புத்தக பைண்டர்கள், கூடலூர் பொது மக்கள் சார்பில் பணமுடிப்புகளும் வெள்ளிக் கோப்பையும் அண்ணலிடம் வழங்கப்பெற்றன.) நகராட்சி மன்ற வரவேற்பு உள்பட எல்லா வரவேற்புகளுக்கும் சேர்த்து காந்திஜி மறுமொழி அளித்தார். அரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் நகராட்சி மன்றத்தில் ஆசிரியர்களாகவும் அலுவலர்களாகவும் நியமிக்கப் பெற்று இருப்பதாகவும், அரிஜன வகுப்பைச் சேர்ந்த பையன்களும் பெண்களும் ஏராளமாக நகராட்சி மன்றப் பள்ளிகளில் படிப்பதாகவும் இவர்களிடம் யாரும் சாதி வேறுபாடு பாராட்டுவதில்லை என்றும் நகராட்சி மன்ற வரவேற்புரையில் கூறப்பெற்றிருந்தது தமக்கு மகிழ்ச்சி அளித்ததாக இக்கூட்டத்தில் தெரிவித்தார். இங்குக் கூட்

* ஆதாரம் : Talks with Ramana Maharishi

டத்தில் பேசிக்கொண்டிருந்த போதே இதற்கு முந்திய முறை இங்குத் தாம் வந்து உடையில் மாற்றம் செய்தது அண்ணலுடைய நினைவிற்கு வந்துவிட்டது. உடனே அந்தக் கதையை எடுத்துக் கூறத் தொடங்கினர். கிராமங்களில் சுற்றுப்பயணங்கள் செய்யச் செய்ய இந்த உடைமாற்றம் மேலும் மேலும் அவசியமாகத் தமக்குத் தோன்றுவதாகவுங் கூறினர்.

நாடார்கள் வரவேற்பு

நாடார்கள் சங்கம் அளித்த வரவேற்புரை ஒருவகையில் அண்ணலுக்கு வியப்பளித்திருக்கும். அவர்கள் தங்களுடைய வரவேற்புரையில், ''இராட்டையில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால், நீங்கள் திரட்டும் பணத்தை விநியோகிப்பதிலும் அது செலவாகும் முறையிலும் எங்களுக்கு நம்பிக்கையில்லை. நிருவாகக் கோளாறின் காரணமாகக் கதர் நிதியில் ஒரு இலட்சம் ரூபாய் நட்டமடைந்து விட்டதாகத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று (''தமிழ் நாடு'' பத்திரிகையின் 16-1-27 இதழிலும் 23-1-27 இதழிலும் வெளியாகியிருந்த கட்டுரைகளில் தமிழ் நாடு கதர் போர்டிலிருந்து கதர் வளர்ச்சியை முன்னிட்டுத் தனி மனிதர்களான 34 பேர்களுக்கும் கிளைத் தாபனங்களுக்கும் கொடுக்கப்பட்ட பணத்தில் ரூ. 1,10,100-7-2 வரை வசூலிக்க முடியாமல் இருக்கிறது என்று கூறப்பட்டிருந்ததை இவர்கள் இவ்வாறு சுட்டிக் காட்டியிருந்தார்கள்.) ஒரு செய்தி வெளியிட்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் நாங்கள் இந்த நிதிக்குப் பணம் அளிக்கவில்லை'' என்று கூறியிருந்தார்கள். நிருவாகக் கோளாறின் காரணமாக இவ்வாறு ஒரு இலட்சம் ரூபாய் நட்டம் ஏற்பட்டிருந்தால், அவர்கள் நிதி உதவி அளிக்கக் கூடாதுதான் என்று அண்ணலும் ஒப்புக் கொண்டார். அதே சமயம், உண்மையில் அப்படி நிதியைச் செலவிடுவதில் ஒழுங்கீனம் நிகழவில்லை என்றும் ஒரு இலட்சம் ரூபாய் நட்டம் எதுவும் ஏற்படவில்லை என்றும் அவர் மறுத்தார். ஆனால் அதற்காக நட்டமே ஏற்படாது அல்லது ஏற்படவில்லை என்று கூற முடியாதென்றும் நட்டம் ஏற்படாத வாணிகமே இராது என்றும் ஒரு வகையில் பார்த்தால் உலகில் எந்த வாணிகத்தையும் விடக் கதர் வாணிகம் சிறந்த முறையில் நடைபெறுகிறது என்றும் அவர் விளக்கினர்.

இதே போன்று மாணவர்களும் தாங்கள் இந்தி படிக் காததற்குத் தங்களுடைய வரவேற்புரையில் கூறியிருந்த இரண்டு காரணங்களும் அவருக்கு விந்தை யாகப்பட்டிருக்க வேண்டும். தங்களுக்கு நேரம் இல்லாததாலும் இந்தியைக் கட்டாய பாடமாக்காததாலும் தாங்கள் இந்தியைப் படிக்கவில்லை என்று அவர்கள் கூறி இருந்தார்கள். பொதுவாக, எந்தக் காரியத்திற்கும் நேரம் இல்லை என்று கூறுவதை காந்திஜி ஒப்புக் கொள்வதில்லை. இந்தி கட்டாய பாடமாக்கப்படும் வரை அவர்கள் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டியதில்லை என்று கூறினர். மதுரையில் உள்ள இந்திப் பிரச்சார நிலையத்தைப் பயன் படுத்தி அவர்கள் இந்தி கற்றுக் கொள்ளலாம் என்றும் அவர் களுக்கு மறுமொழி அளித்தார்.

மாணவர் இந்தி

இந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு பரிதாபமான நிலை மகாத்மா எதிர்பார்த்ததுபோல் விறுவிறுப்பாக ஏலம் நடை பெறுவதாகும். இங்குக் காலையில் காந்திஜி யைச் சந்தித்து டி. சி. செல்லம் ஐயர் மூன்று அழகான கதர்த்துணிகளை அவருக்கு அன்பளிப் பாக அளித்திருந்தார். இவைகள் மிகவும் நேர்த்தியானவையாக இருப்பதாக காந்திஜி கூறி, ஒவ் வொரு துணிக்கும் மூந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் ஏலத்தில் கேட்பவர்களுக்குத்தான் அவை அளிக்கப்படும் என்றும் அறிவித்தார். ஆனல் யாரும் அந்த விலைக்குக் கேட்கவில்லை. புத்தக பைண்டர்கள் அளித்த வெள்ளிக்கோப் பையை (சுமார் இருபது ரூபாய் பெறக்கூடியது) ஏ. வைத் தியநாதையர் மூந்நூறு ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார். மகாத்மாவிடமிருந்து மற்ற நகைகளை ஏலம் கேட்க ஆள் இல்லாததால் நடுவழியில் ஏலம் நிறுத்தப்பெற்றது. காந்திஜி இங்குத் தங்கிய நாட்களில் அதிகாலையில் ராஜாஜி யுடன் பந்தய மைதானத்திற்கு உலாவப்போவது வழக்கம். அப்போது என். எம். ஆர். சுப்பராமனும் என். எஸ். இராம சாமியும் அவர்களுடன் செல்வதுண்டு. காந்திஜி தங்கி யிருந்த இடத்திற்கு வந்து டாக்டர் சௌந்தரம் இராமச் சந்திரன் வீணை வாசித்துச் சென்றார்.

ஏலம் மந்தம்

29-9-27

மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்திற்கு எதிர்த்தாற் போல் உள்ள சௌராஷ்டிர கிளப்பில் நடைபெற்ற சௌராஷ்டிர சமூகத்தினர் கூட்டத்திற்கு உள் ளூரிலிருந்து மட்டுமல்லாது செட்டிநாடு உள் பட வெளியூர்களிலிருந்தும் ஏராளமான பேர் வந்திருந்தனர். (சௌராஷ்டிர சமூகத்தின் சார்பாக எல். கே. துளசிராம் வரவேற்புரையைக் கொடுத் தார். இக்கூட்டத்திற்கு அண்ணல் வந்த வழியில் அம்மன் சன்னதி முன் ஸ்ரீ மீனாட்சி ஆலயத்தில் கடை வைத்திருந்தவர் கள் அவருக்குப் பணமுடிப்பு அளித்தார்கள்.) இந்தச் சுற்றுப் பயணத்தில் இதுவரை எந்த வரவேற்புரையையும் காந்திஜி அழகான வரவேற்புரை என்று கூறியதாகத் தெரியவில்லை. ஆனால் சௌராஷ்ட்ர சமூகத்தினர் அளித்த வரவேற் புரையை மட்டும் அழகான வரவேற்புரை என்று கூறினர். அவ்வாறு அவர் பாராட்டியதற்கு அவரே காரணத்தையும் கூறினர். இந்த வரவேற்புரை தேவநாகிரி எழுத்தில் சௌராஷ்டிர மொழியில் எழுதப் பெற்றிருந்தது. மதுரை யில் உள்ள சௌராஷ்டிர உயர்நிலைப்பள்ளியில் இந்தி விருப்ப பாடமாக வைக்கப்பெற்றிருப்பதாக இந்த வரவேற்புரை கூறியது. இன்னும் ஒருபடி மேலே போய், இந்தியை அந்த உயர்நிலைப்பள்ளியில் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார்.

சௌராஷ்டிரர்

சௌராஷ்டிரர்கள், சில நூற்றாண்டுகளுக்கு முன் சௌராஷ்டிரப் பகுதியிலிருந்து வந்தவர்கள் என்றும், குறிப்பாக காந்திஜி வளர்ந்த ராஜ்கோட்டிற்கும் அவர் களுக்கும் அதிகத் தொடர்பு உண்டு என்றும் இந்த வரவேற்புரை கூறியது. ''இதைக் கேள் விப்பட நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனாலும் இவ்வாறு என்னையும் உங்களையும் ஒரே இனத்தவர் என்று கூறுவதில் அபாயம் இருக்கிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்; ஏனெனில், என்னுடைய ஒவ்வொரு வேலையி லும் உங்களுக்கு அதிகப் பொறுப்பு ஏற்படுகிறது. அபாயத் தில் உதவாத உறவினர்கள் இருந்து என்ன பயன்?'' என்று அவர் கேட்டார்.

பொறுப்பு அதிகம்

இவ்வாறு கருத்து உடன்பாடுகளை மகிழ்ச்சியுடன் கூறிக் கொண்டு வந்த காந்திஜி அவர்களுடன் ஒன்றில் கருத்து

வேறுபடுவதாகவும் கூறினர். நூல் என்ன நூலாக இருந்தாலும் கையால் நெய்யும் தொழிலை அண்ணல் ஆதரிக்க வேண்டுமென்று செளராஷ்டிர சமூகத்தினர்

கருத்து வேறுபாடு

இந்த வரவேற்புரையில் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இதற்கு அண்ணல் பதில் கூறியதாவது :— 'நூல் நூற்றுப் பலர் பிழைத்துக் கொண்டிருந்தார்கள். நூற்பு ஆலைகள் அந்தப் பிழைப்பைக் கெடுத்து விட்டன. நெய்யும் தொழிலையும் ஆலைகளே மேற்கொண்டு விட்டால் அப்புறம் உங்களுடைய கதி என்னாகும்? நூற்புத் தொழிலுக்கு என்ன கதி ஏற்பட்டதோ அந்தக் கதிதானே நெசவுத் தொழிலுக்கும் ஏற்படும்? நான் கூட முதலில் ஆலை நூலை வைத்துத்தான் நெய்து கொண்டிருந்தேன். ஒரு நாள் என் மனத்தில் ஒரு சிந்தனை தோன்றியது. இந்த நெசவுத் தொழிலையும் ஆலைகள் எடுத்துக் கொண்டால் ஆயிரக்கணக்கான நெசவாளிகளின் கதி என்ன ஆவது என்று எனக்குள்ளேயே கேட்டுக் கொண்டேன். ஆகையால் நான் கையால் நூற்கும் நூலைப் பெறுவதற்காக முயன்று வெகு சிரமத்தின் பேரில் ஒரு அம்மையாருடைய உதவியுடன் அதைக் கண்டுபிடித்தேன். செளராஷ்டிரத்தில் நெசவாளர்களாய் இருந்தவர்கள் இப்போது பம்பாயில் தோட்டிகளாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். பஞ்சாபில் நெசவாளர்களாய் இருந்தவர்கள் படைகளில் சேர்ந்து விட்டார்கள்; சிலர் கசாப்புக் கடைகளும் வைத்திருக்கிறார்கள். ஆகையால் கதர் இயக்கத்தை ஆதரிப்பது உங்களுடைய சொந்த நலனுக்கே நன்மைதான்.''

காந்திஜி பேசிக் கொண்டிருந்தபோது மழை வந்து விட்டது. ஆகையால் தமது பேச்சைச் சுருக்கமாக முடித்துக் கொண்டார். இந்தக் கூட்டத்தில் மகாத்

அபூர்வப் பொருள்கள்

மாவின் உருவப்படத்தை வெள்ளித் தகட்டில் செய்து கண்ணுடி போட்டு முத்துராமலிங்க ஆசாரி அவரிடம் அளித்தார். ஐரோப்பிய மாது ஒருவர் உயர்ந்த கற்கள் பதித்த தங்கச்சங்கிலி ஒன்றை - தாம் இருபத்தைந்து ஆண்டுகளாக அணிந்து கொண்டிருந்ததை - மகாத்மாவிடம் கொடுத்தார். மற்றும் ஏராளமான பேர் நகைகளும் பணமும் அளித்தார்கள். வழக்கம் போல ஏலமும் நடைபெற்றது.

30-9-27

விக்டோரியா எட்வர்டு ஹால் என்னும் நகர மண்டபத்தில் நடைபெற்ற மாதர்கள் கூட்டத்தில் சுமார் இரண்டாயிரம் மாதர்கள் பங்கு கொண்டனர். (சுப்புலெட்சுமி அம்மாள் - திருமதி எம். கே. சங்கர ராம ஐயர் - பெண்களின் சார்பாகப் பண முடிப்பை வழங்கினர்.) மதுரைக்கு காந்திஜி வருவதற்குச் சில நாட்களுக்கு முன்பு ஒரு செல்வந்தரின் வீட்டுக் குழந்தை அணிந்திருந்த நகைகளைச் சில திருடர்கள் திருடிக்கொண்டு சென்றுவிட்டனர். காந்திஜியிடம் இச் செய்தியை யாரோ தெரிவித்திருந்தார்கள். அதை இக்கூட்டத்தில் காந்திஜி குறிப்பிட்டு ''பெண்களும் அளவுக்கு மீறி நகைகள் அணியக்கூடாது; குழந்தைகளுக்கும் அணிவித்து அவைகளை இத்தகைய அபாயத்திற்குள்ளாக்கக் கூடாது'' என்று கேட்டுக் கொண்டார்.

மாதர்கள் கூட்டம்

இந்தக் கூட்டம் முடிந்தவுடன் நேரே காரில் திருமங்கலத்திற்கு காந்திஜி சென்றார். மாவட்ட மாஜிஸ்திரேட் நீதி மன்றத்திற்கு முன்னுல் இருந்த விசாலமான மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. (யூனியன் போர்டு சார்பாகவும், பொது மக்கள் சார்பாகவும் வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் காந்திஜியிடம் அளிக்கப்பெற்றன.) ஒரு முக்கியமான வேண்டுகோளாக, திருமங்கலம் திருப்பூரைப் போன்றே பருத்தி விளையும் பகுதியாதலால் அதை மற்றொரு திருப்பூராக - கதரின் மற்றொரு தலைநகரமாக - ஆக்க வேண்டும் என்று ஒரு வரவேற்புரை கேட்டுக் கொண்டிருந்தது. அதற்கு காந்திஜி சொன்னார்: ''இன்று திருப்பூர் அடைந்திருக்கும் நிலைக்கு நானே அல்லது அனேகத்து இந்திய சர்க்கா சங்கமோ காரணம் அல்ல. ஏற்கனவே பல ஊழியர்கள் அங்குக் கதர்ப்பணி செய்து கொண்டிருந்தார்கள். அதைச் சர்க்கா சங்கம் பயன்படுத்திக் கொண்டது, அவ்வளவுதான். இந்த முக்கியமான வேலையைத் திருமங்கலம் யூனியன் போர்டு செய்யலாம், செய்யவும் வேண்டும்,'' என்றார். திருமங்கலம் பொதுக்கூட்டம் முடிவடைந்து திரும்பிய வழியில் காரிலிருந்து இறங்கிச் சிறிது தூரம் மகாத்மா நடந்து வந்தார்.

திருமங்கலம்

மதுரையிலும் நீதிக்கட்சித் தலைவர்களுடன் காந்திஜி பேச்சு நடத்தினர். அவர்களுடைய கொள்கை, கோட்பாடுகள் பற்றியும் செயல் முறைகள் பற்றியும் அவர்களுடன் வாதித்தார். இந்தப் பேச்சு நடைபெற்றபோது பத்திரிகையாளர்கள் அனுமதிக்கப் பெறவில்லை. ஆனாலும் அப்போது இது குறித்துப் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைப் பார்க்கும்போது, பிராமணரல்லாதார் தலைவர்கள் கையாண்ட முறை தமக்கு மன நிறைவு அளிக்கவில்லை என்றும் ''இத்தகைய முறைகள் இந்து சமயத்தைச் சீர்திருத்துவதற்கு மாறுகச் சமய உணர்ச்சியையே அழிக்கக் கூடிய அபாயம் உள்ளவை,'' என்றும் அண்ணல் அவர்களை எச்சரித்ததாகத் தெரிகிறது.

நீதிக்கட்சித் தலைவர்கள்

1-10-27

இரயிலில் மகாத்மா குழுவினர் பரமக்குடிக்குச் சென்ற போது அங்கு இராமசாமி ஐயங்காரும் இராஜாராம் பாண்டியனும் அவரை வரவேற்றார்கள். மேலச் சத்திரத்தின் அருகே பொதுக் கூட்டம். தொண்டர்களுடைய சக்திக்கும் மீறிக் கூட்டம் அதிகமாக இருந்ததால், கூட்டத்தில் அமைதி இல்லை. இத்துடன் மழையும் சேர்ந்து கொண்டது. என்றாலும் கூட்டம் நடந்தது. (பரமக்குடிப் பொதுமக்கள், கூட்டுறவு வங்கி, காங்கிரஸ் குழு, சர்க்கா சங்கம் சார்பாக வரவேற்புரைகளும் பொதுமக்கள், பெண்கள், கூட்டுறவு வங்கி சார்பாகப் பண முடிப்புகளும் கொடுக்கப் பெற்றன.) மகாத்மாவும் பேசத் தொடங்கினார்; வழக்கம் போன்று கதர்க்கட்ட வேண்டியதன் அவசியம், தீண்டாமை ஒழிப்பு ஆகியவைகளைப் பற்றிப் பேசிக்கொண்டு போனார். ஆனால் மழை நிற்கவில்லை; இரைச்சலும் ஓயவில்லை. ஆகையால், தம் பேச்சை நடுவழியிலேயே நிறுத்தி, ஏலத்தை முடித்துக் கொண்டு இரவில் இராமேசுவரம் எக்ஸ்பிரசில் மதுரை திரும்பினர். இராமேசுவரத்திற்குச் சென்றிருந்த கஸ்தூர்பா காந்தியும் இந்த இரயிலில் வந்து காந்திஜியுடன் சேர்ந்து கொண்டார்.

பரமக்குடி

2-10-27

மறுநாள் காலையில் காந்திஜி குழுவினர் விருதுநகருக்கு இரயிலில் சென்றார்கள். இம்முறைதான் அவர் முதன்

முதலாகவிருதுநகருக்கு வந்ததாகும். பகளம் கே. பழனி சாமி நாடார் தம் மகளின் பெயரில் கட்டியிருந்த சத்திரத்தை காந்திஜி திறந்து வைத்தார். இந்தச் சத்திரத்திலேயே அவர் தங்கினார். ஏழைகளின் பிரதிநிதியான தாம் புதிதாகத் திறந்து வைக்கப் பெற்ற ஒரு சத்திரத்தில் தங்குவது பொருத்தமானது தான் என்று அவரே கூறிக்கொண்டார். இங்கு மகாத்மாவை உசிலம்பட்டி சுவீடன் மிஷன் ஆலயத்தைச் சேர்ந்த ரெவ. ஐ. ஹிம்மல் ஸ்ட்ராண்ட் சந்தித்து, தம்முடைய முக்கியமான சில ஐயப்பாடுகளைக் கேட்டார். விருதுநகரில் அண்ணல் இரண்டு நாட்கள் தங்கினார். அதில் ஒரு நாள் அவருடைய பிறந்தநாள்; மற்றொருநாள் அவருடைய மௌனதினம்.

விருதுநகர்

மாலையில் இந்நகரைச் சேர்ந்த பிராமணரல்லாத இளைஞர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் காந்திஜியைச் சந்தித்துத் தங்களுடைய கேள்விகள் சிலவற்றிற்கு அவர் மறுமொழி கூறவேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். காந்திஜியும் பொறுமையோடு கூறினர்.

இளைஞர் கேள்வி

கேள்வி: வர்ணாஷ்ரம தர்மம் என்று நீங்கள் கூறுகிறீர்களே அதற்கு நீங்கள் கொள்ளும் பொருள் என்ன?

காந்திஜி: இந்து சமயத்தில் பிராமணர், சத்திரியர் வைசியர், சூத்திரர் என்ற நான்கு வர்ணங்களும் பிரம்மச்சர்யம், கிருகஸ்தாஷ்ரமம், சந்நியாசம் வானப்பிரஸ்தம் என்ற நான்கு ஆசிரமங்களும் இருக்கின்றன. அதுதான் வர்ணாஷ்ரம தர்மம் என அழைக்கப் படுகிறது. (இதன் பின் வர்ணாஷ்ரம தர்மத்தைப் பற்றிய தமது கருத்துக்களை விளக்கமாகக் கூறிவிட்டு அவர் சொன்னார்.) கிரேக்க, எகிப்திய, ரோம நாகரிகங்களெல்லாம் வீழ்ச்சியடைந்திருக்க இந்திய நாகரிகம் மட்டும் வீழ்ச்சியடையாதிருப்பதற்குக் காரணம் வர்ணாஷ்ரம தர்மத்தின் சிறப்புத்தான்.

கேள்வி: கிறித்தவ, முகமதிய சமயங்களில் வர்ணாஷ்ரம தர்மம் இல்லையே?

மகாத்மா: ஆகர்ஷண சக்தியைப் போன்ற ஒரு தவிர்க்க முடியாத நியதி வர்ணாஷ்ரம தர்மம். நியூடன் கண்டு

பிடிக்காததற்கு முன் ஆகர்ஷ்ண சக்தி இல்லை என்று கூற முடியுமா? அது போன்று இந்த நியதியை உலகிற்குக் கண்டு பிடித்துக் கொடுத்த பெருமை இந்து சமயத்திற்குக் கிடைத்திருக்கிறது.

பொதுக் கூட்டம்

மாலைப் பொதுக்கூட்டம் இராமமூர்த்தி சாலையில் உள்ள விசாலமான மைதானத்தில் நடைபெற்றது. (விருது நகர் நகராட்சி மன்றம், பொது மக்கள், மதுரை இரயில்வே பயணிகள் சங்கம், சத்திரிய வித்தியாசாலை மாணவர்கள், ராவ் பகதூர் இரத்தினசாமி நாடார் படிப்பக உறுப்பினர் ஆகியோர் சார்பில் வரவேற்புரைகளும் விருதுநகர் பொது மக்கள், மாணவர்கள், பம்பாய் நாடார் வணிகர் குமாஸ்தாக்கள், மேலப்பத்தி கிராம மக்கள் ஆகியோர் சார்பாகப் பண முடிப்புகளும் வழங்கப் பெற்றன.) இங்கு இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நல்லுறவு நிலவியதை அண்ணல் பாராட்டினார். (பி. என். ஏ. முகமது இப்ரகிம் அப்போது நகராட்சி மன்றத் தலைவராக இருந்தார்.) முஸ்லிம்கள் விருதுநகரில் சிறுபான்மையினராக இருந்தும் அவ்வகுப்பைச் சேர்ந்த ஒருவர் நகராட்சி மன்றத்தின் தலைவராய் இருந்தது காந்திஜிக்கு மகிழ்ச்சி அளித்தது. நாட்டிலுள்ள முக்கியமான பணிகளில் நாடார் சமூகத்தினர் மேலும் மேலும் அதிகமாகப் பங்கெடுக்க முன் வருகிறார்கள் என்று தாம் அறிந்து மகிழ்ச்சி அடைவதாகவும் சொன்னார். ஒரு நகராட்சி மன்றத்தின் பணியில் தொடக்கக் கல்வியைக் காட்டிலும் துப்புரவே அதிக முக்கியமானது என்று குறிப்பிட்டார். கதர் என்பது வாணிகத்தை ஆன்மிக மயமாக்குவது தான் என்ற அற்புத விளக்கத்தையும் அளித்தார்.

4-10-27

இராஜபாளையம்

விருதுநகரிலிருந்து இராஜபாளையம் சென்ற வழியில் இடையிலுள்ள இரயில்வே நிலையங்களிலெல்லாம் பொது மக்களும் பெருமக்களும் கூடி அண்ணலுக்கு வரவேற்பு அளித்தனர். (ஸ்ரீவில்லிபுத்தூர் இரயில் நிலையத்தில் நகராட்சி சார்பாக வரவேற்பு அளிக்கப்பெற்றது.) இராஜபாளையத்தில் பி. எஸ். குமாரசாமி ராஜா (பின்னால் சென்னை மாநில முதலமைச்சரானவர்) இல்லத்தில் மகாத்மா குழுவி

னர் தங்கினார்கள். அவர் அப்போது மாவட்டக் கழக உறுப்பினராய் இருந்தார். மாலையில் நாயக்கன் பேட்டைக்குச் சென்று அங்கு மாதர்கள் நூல் நூற்றுக் கொண்டிருந்ததை மகாத்மா கவனமாகப் பார்வையிட்டார். இங்குச் சுமார் ஐம்பது பெண்கள் நூற்றுக் கொண்டிருந்தார்கள். இதை காந்திஜி சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தபோது, நூற்ற வர்களை நோக்கி நூற்பிலும் பட்டை போடுவதிலும் என்ன வருமானம் கிடைக்கிறது என்று கேட்டார். மாதத்திற்குச் சுமார் நான்கு ரூபாய் சம்பாதிக்க முடிவதாக அவர்கள் கூறினார்கள்.

காந்திஜி : நீங்கள் ஏன் கதர் கட்டவில்லை ?

பெண்கள் : எங்களுடைய ஏழ்மைதான் காரணம். மேலும் ஆலைத் துணியை விடக் கதர் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

காந்திஜி : நீங்களே உங்களுடைய துணிக்கு வேண்டிய நூலை நூற்று, அதை நாங்கள் வாங்கி நெய்து குறைந்த விலைக்கு அளித்தால் உடுத்துவீர்களா ?

பெண்கள் : உடுத்துவோம்.

பெண்கள் கூட்டத்திற்கு மாதர் கூட்டம்

இதன் பின்பு பெத்தராஜாவின் இல்லத்தில் நடைபெற்ற பெண்கள் கூட்டத்திற்கு காந்திஜி சென்றார். இங்குச் செல்வந்தர் குடும்பத்தைச் சேர்ந்த பர்தா அணிந்த மாதர்கள் ஏராளமாக வந்திருந்தனர். இவர்கள் நிறைய நகைகளும் அணிந்திருந்தார்கள். அப்போதுதான் ஏழைப் பெண்கள் நூல்நூற்றுக் கொண்டிருந்ததைப் பார்த்துவிட்டு வந்த அண்ணலுக்கு இக்கூட்டம் நேர் முரணுகத் தோன்றியதில் வியப்பில்லை. (ஆந்திர க்ஷத்திரிய ராஜாக்கள் வகுப்பைச் சேர்ந்த பெண்கள் சார்பாக வரவேற்புரையும் பண முடிப்பும் அளிக்கப்பெற்றன. பெத்தராஜாவும் தமது சொந்தமாக ஒரு பண முடிப்பை அளித்தார்.) மகாத்மா காந்தி இங்கு இந்தியில் பேசிய சொற்பொழிவு தெலுங்கில் மொழி பெயர்த்துக் கூறப்பெற்றது. கதரின் அவசியத்தைப் பற்றிக் கொஞ்ச நேரம் பேசிவிட்டு பர்தா அணிவதைப்பற்றி காந்திஜி கூறினார்: ''ஆந்திர க்ஷத்திரிய பெண்கள் ஏன் பர்தா அணியவேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை. நீங்கள் வெளியே வராமல் வீட்டிற்குள்ளேயே இருந்தால்

உலகில் நடப்பன உங்களுக்குத் தெரியாதே?'' இராஜபாளையத்தில் தயாரிக்கப்பெற்ற கதர் மிகவும் நேர்த்தியாக இருப்பதாகவும் அவர் பாராட்டினர். இங்கு நூறு இராட்டைகள் இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வரவேற்புரையைப் படித்துக் கொடுத்த அம்மையாருக்கு அவர் ஓர் இராட்டையை வழங்கினர். மீதமிருந்த 99 இராட்டைகள் மற்ற பெண்களுக்கு அளிக்கப்பெற்றன.

காந்தி கதர்

கதர் உற்பத்தி, விற்பனையில் ஈடுபடுவதற்காக ''காந்தி கதர் வஸ்திராலயம்'' என்ற கூட்டு அமைப்பு ஒன்றை இங்கே அமைத்திருந்தார்கள். பெண்கள் கூட்டம் முடிவடைந்தபின், குமாரசாமி ராஜா இல்லத்திற்குச் சென்று இந்த அமைப்பின் சார்பாக நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் காந்திஜி பங்கு கொண்டார். தொடக்கத்திலேயே இலாப மடைவதில் அவர்கள் கண்ணோட்டம் இருக்கக்கூடாதென அறிவுரை கூறினர். சந்தாதார் புத்தகத்தில் தமிழில் கையொப்பமிட்டார்.

பொதுக் கூட்டம்

மாலையில் கண்மாய் மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசி முதலிய இடங்களிலிருந்தெல்லாம் ஏராளமான பொது மக்கள் வந்திருந்தார்கள். (இராஜபாளையம் பொது மக்கள், இராஜபாளையம் யூனியன் போர்டு, கதர் வஸ்திராலயம், வர்த்தக சங்கம், சிவகாசி தாலுகா போர்டு, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மன்றம் ஆகியவைகளின் சார்பாக வரவேற்புரைகளும் பொது மக்கள், சேத்தூர் ஜமீன்தார் சேவுகபாண்டியத் தேவர், சிவகாசி தாலுகா போர்டு, சிவகிரி பொது மக்கள், ஏலக்காய் தோட்டச் சொந்தக்காரர்கள், கூட்டுறவு மேற் பார்வையாளர் சங்கம் சார்பாகப் பண முடிப்புகளும் வழங்கப்பெற்றன.) காந்திஜி தம் உரையில், ''இந்நகரில் நூற்கும் மாதர்கள் மாதம் நான்கு ரூபாய் வரை சம்பாதிப்பதாக என்னிடம் கூறினர்கள். மற்ற பகுதிகளில் நூற்பவர்கள் பெறும் தொகையைவிட இது அதிகம். இங்குள்ளவர்கள் அதிகத் திறமையுடனும் சுறுசுறுப்பாகவும் நூற்பதும் அதிக நேரம் நூற்பதும் தான் இதற்குக் காரணம்,'' என்று பாராட்டினர். அதே சமயம் உயர் வகுப்புப் பெண்கள் மிகவும் ஆடம்பரமாக நகைகள் அணிந்திருந்ததை அவர்

வன்மையாகக் கண்டித்தார். ''பர்தா அணிந்த பெண் இயந்திரங்கள் ஏராளமான நகைகளும் அணிந்திருக்கின்றன. நம்மிடம் செல்வம் இருப்பதை இவ்வளவு ஆடம்பரமாகக் காட்டிக்கொள்ளக் கூடாது.* மாதர்கள் எளிமையாக வாழவேண்டும் என்பதை ஆண்கள் அவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். ஆண்களுடைய உதவியில்லாமல் அவர்கள் இந்தச் சீர்திருத்தத்தை மேற்கொள்ள முடியாது. கதரைப் போன்று வாழ்க்கையை எளிதாக்கக் கூடியது எதுவுமே இல்லை. இதனால்தான் கதர் ஏழைகளையும் பணக்காரர்களையும் இணைக்கும் பாலம் என்று நான் கூறி வருகிறேன்'' என்று சொன்னார். கதர் வணிகத்திற்கும் மற்ற வணிகத்திற்கும் இடையே உள்ள ஒரு வேறுபாட்டை காந்திஜி இங்கு எடுத்துக் கூறினார். ஒரு வணிகர், ''நான் என் நலனைப் பார்த்துக்கொள்ளக் கடமைப்பட்டவன். என்னிடம் சரக்கு வாங்குபவர் நலனைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டியது அவருடைய பொறுப்பு'' என்ற அடிப்படையில் வாணிகத்தை நடத்துகிறார். ஆனால் கதர் வாணிகம் அந்த அடிப்படையில் நடக்கவில்லை. கதர் நிதி வசூல் செய்பவனாகிய நான், கதர்த் துணி விற்பவர்கள், கிராமங்களுக்குப் போய்க் கதர்த் தொழில் நடக்க ஏற்பாடு செய்பவர்கள் ஆகிய எல்லோருமே தங்களை நூற்பவர்களுடைய தர்மகர்த்தாக்களாக எண்ணிக் கொள்ளவேண்டியிருக்கிறது. நூற்பவர்களுக்காகவே நாம் எல்லோரும் இருக்கிறோம்.''

நாடார்களும் ஆலயமும்

நாடார்கள் ஆலயத்திற்குள் நுழைவதை அனுமதிக்க மறுப்பதைப் பற்றி அவர் சொன்னார்: ''விருதுநகரில் நாடார் நண்பர்கள் சிலருடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். துணிச்சலாக வாணிகத்தில் ஈடுபடும் சாதியினர் அவர்கள். அவர்கள் செல்வம் படைத்தவர்களாய் இருக்கிறார்கள். அதே அளவு தர்ம எண்ணம் படைத்தவர்களாகவும் இருக்கிறார்கள். மிகவும் நல்ல முறையில் ஓர் உயர்நிலைப்பள்ளியை நடத்தி வருகிறார்கள். அங்கு எல்லாப் பையன்களும்- அவர்கள் எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களானாலும் - இலவசமாகக் கல்வி பெறுகிறார்கள். அவர்களுடைய பள்ளியைப் போன்றே அவர்களுடைய ஆலயமும் எல்லோருக்கும் திறந்துவிடப் பெற்றிருக்கிறது. ஆனால் இவர்களை, சுத்தமாக வாழும் இவர்களை, திருநெல்வேலியிலிருந்து மதுரை

* *இக்கு 6—10—27*

வரை உள்ள ஆலயங்களில் நுழைய அனுமதிப்பதில்லை என் பதைக் கேள்விப்பட்டு நான் வியப்பும் வருத்தமும் அடைந் தேன். என்னுடைய இந்து மதத்தில் இப்படி நடக்கிறதே என்ற வெட்கமும் எனக்கு ஏற்பட்டது. மதுரைக்கு நான் இது வரை மூன்று முறை வந்திருக்கிறேன். ஆனாலும் அங்குள்ள பெரிய ஆலயத்திற்குள் நான் நுழைந்ததில்லை. நாடார்களின் துன்ப வரலாற்றைக் கேள்விப்பட்டபின், இவ்வாறு நான் செல்லாமல் இருந்தது ஒரு வரப்பிரசாதமே என்று கருது கிறேன். ஆகையால் நீங்கள் எல்லோரும் வரிந்து கட்டிக் கொண்டு, தீண்டாமையைப் போக்கவும் எல்லா ஆலயங் களிலும் எல்லோரையும் அனுமதிக்கவும் போராட வேண்டும்,'' என்றார். விருதுநகருக்கு வந்ததிலிருந்து ஒவ்வொரு பெரிய கூட்டத்திலும் நாடார்களை ஆலயங் களுக்குள் அனுமதிக்காததைப் பற்றி அவர் குறிப்பிடத் தவறவில்லை. மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் மட்டும் இத்தடை இருந்ததும் தமிழகத்தின் மற்றப் பகுதிகளில் இல்லாதிருந்ததும் அவருக்கு வியப்பாய்ப் போயிற்று. ''இவ்வளவு நாகரிகமான, முற்போக்கு எண்ணமுள்ள, வணிகர்கள் நிறைந்துள்ள ஒரு சமூகம் ஆலயங்களில் நுழைவதற்கு எவ்வாறு அனுமதி மறுக் கிறீர்கள்?'' என்று ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் கேட்டுக் கொண்டு வந்தார்.

5-10-27

பழைய சிக்கல்

கோவில் பட்டிக்கு வந்தபோது மகாத்மா காந்தி மீண்டும் பிராமணர் - அல்லாதார் சிக்கலைப் பற்றிப் பேச வேண்டியதாயிற்று. (வரவேற்புக் குழுத் தலை வரும் குருவிகுளம் ஜமீன்தாருமான பி. என். கோதண்டராயசாமி நாயுடுவும் மற்றவர்களும் நல்லாட்டின் புத்தூரில் வரவேற்று அழைத்து வந்தார்கள். சீனிவாசபுரத்தில், யூனியன் போர்டுத் தலைவரான எம். ஜே. இராமசாமி ஐயர் அவருக்கு வரவேற்புரையைக் கொடுத்தார். இங்கு காந்திஜி குழுவினர் கருங்குளம் ஜமீன்தார் இல்லத்தில் அவருடைய விருந்தினர் களாகத் தங்கியிருந்தார்கள். மாலையில் செண்பகவல்லி கோவிலின் அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கோவில்பட்டி காங்கிரஸ் குழு, கம்மா மகாஜன சங்கம், கோவில்பட்டி பொது மக்கள், சங்கரன் கோவில் தாலுகாப்

பொது மக்கள், வர்த்தக குமாஸ்தாக்கள், கோவில்பட்டி தக்ஷிண நாடார் மகிமைப் பேட்டை சார்பாக வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப்பெற்றன. இங்குத் தேசிய கீதம் பாடிய அலமேலு என்ற பத்து வயதுப் பெண்ணை, கூட்டத்தின் முடிவில் காந்திஜி பாராட்டி, ரோஜா மாலை ஒன்றை அளித்தார்.) வரவேற்புரைகளில் ஒன்று பிராமணர் பிராமணரல்லாதார் சிக்கலைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது. ஆகையால் அவர் இச்சிக்கல் குறித்து என்ன முடிவிற்கு வந்திருக்கிறார் என்பதை காந்திஜி கூறினார். ''இந்தச் சிக்கலைப் புரிந்து கொள்ள நான் ஒவ்வொரு முயற்சியும் செய்திருக்கிறேன். எவ்வளவு நேரம் ஒதுக்க முடியுமோ அவ்வளவு நேரம் ஒதுக்கி, பிராமணரல்லாதார் தலைவர்களுடன் விவாதித்திருக்கிறேன். இப்போது இச்சிக்கலை நான் புரிந்துகொண்டு விட்டேன் என்று எண்ணுகிறேன். இதைப்பற்றி ''யங் இந்தியா''வில் எழுதி, இரண்டு வகுப்பினருக்கிடையேயும் உள்ள வேறுபாட்டைப் போக்கி நல்லுறவை ஏற்படுத்த முயலுவேன். அதற்குமேல் நான் எதுவும் செய்வதற்கில்லை. ஏனென்றால் இரண்டு வகுப்பினருமே என்னுடைய ஆலோசனைப்படி நடப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கில்லை. இரண்டு வகுப்பைச் சேர்ந்த தலைவர்களும் சந்தித்துப் பேசித் தங்களுக்கிடையே ஓர் உடன்பாட்டிற்கு வர முயலவேண்டும். பிராமணர்கள் மீது பிராமணரல்லாதார் கூறும் சில குறைகள் நியாயமானவையாகவே இருக்கின்றன. ஆனால் சில சமயம் அளவுக்கு மீறி அவைகளை அவர்கள் மிகைப்படுத்திவிடுகிறார்கள். அவர்களுடைய நியாயமான குறைகளையெல்லாம் நான் ஏற்றுக் கொள்வேன். ஆனால் அதற்காக, பிராமணர்கள் மீது பிராமணரல்லாதார் வெறுப்புக் கொள்வதை நான் ஏற்க முடியாது. பிராமணர்கள் தங்களுக்குரிய கடமைகளைச் சரிவரச் செய்வதில்லையென்று பிராமணரல்லாதார் கூறுவதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அதற்காக எல்லாத்தீமைகளையுமே பிராமணர்கள்தான் ஏற்படுத்தி விட்டதாக அவர்கள் கூறுவதை நான் ஏற்கமுடியாது. நான் ஆலோசனை கூறினாலும் பரம்பரை பரம்பரையாகத் தங்களுக்குக் கிடைத்துள்ள உரிமைகளை பிராமணர்கள் விட்டுக் கொடுக்க முன் வருவார்களா என்பதும் ஐயத்திற்கிடமானதே.'' இங்கு நடைபெற்ற ஏலத்தில் ஒரு சிறிய அழகான பணை ஓலைப்பெட்டி ஐம்பது ரூபாய்க்குப் போனது காந்திஜிக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது. மற்ற பொருள்கள்

எல்லாம் சேர்ந்தும் ஐம்பது ரூபாய்க்குத்தான் போயின. அதைப் பார்த்து அவருக்குச் சிரிப்பு வந்து விட்டது.

6-10-27

தூத்துக்குடி

தூத்துக்குடியில் இலங்கை சட்டமன்ற உறுப்பினரான ஐ. எக்ஸ். பெரைராவின் இல்லத்தில் காந்திஜி தங்கினார். (அன்று பிற்பகலில் நகராட்சி மன்றத் தலைவர் ரோச் விக்டோரியா, ஐ. எக்ஸ். பெரைரா, தூத்துக்குடி பிஷப் டாக்டர் திபுர்தின் ரோச் சின்அன்னை ஆகியோருக்கு அவர் பேட்டி அளித்தார். மாலையில் வட்டக்கிணறு மைதானத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. திலகர் தேசியப்பள்ளி மாணவிகள் கடவுள் வணக்கம் பாடினர். தூத்துக்குடிப் பொது மக்கள், பெண்கள், வழக்கறிஞர்கள், விஸ்வகர்ம மகாஜன சபை, வக்கீல் குமாஸ்தாக்கள், பாரத மகாஜன சங்கம், இந்து மாணவர்கள் சார்பாகப் பண முடிப்புகளும் வரவேற்புரைகளும் கொடுக்கப்பெற்றன. நகராட்சி மன்றத்தின் வரவேற்புரையை அதன் தலைவரான ரோச் விக்டோரியா கொடுத்தார்.) இங்கு காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவை முதலில் ராஜாஜியும் பின்னர் ஏ. மாசிலாமணிப்பிள்ளையும் தமிழில் மொழி பெயர்த்தார்கள். கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய ஐ. எக்ஸ். பெரைரா இலங்கை மக்கள் அண்ணலுடைய வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகக் கூறினர்.

இந்தி

இங்கு சிறு பையன்களும் பெண்களும் மட்டுமல்லாது பெரியவர்களும் இந்தி கற்று வருவதாகத் தாம் கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைவதாக காந்திஜி கூறினர். திலகரின் பெயரில் ஒரு தேசியப்பள்ளியைத் தொடங்கி நடத்தி வருவதை அறிந்து தாம் மகிழ்ச்சி அடைவதாகவும் சொன்னர். இந்தப் பள்ளிக்குக் கதர் நிதியில் ஒரு தொகை அளித்து உதவ வேண்டுமென வரவேற்புரையில் கேட்டிருந்தார்கள். வேறொரு காரியத்திற்கென வசூல் செய்யப்பெற்ற தொகையை இதற்கு அளிக்க முடியாதென காந்திஜி கண்டிப்பாகக் கூறிவிட்டார். தூத்துக்குடியில் உள்ள வசதி படைத்த செல்வந்தர்களே இதற்குப் பண உதவி அளித்து இது சுதந்திரமாக நடைபெற உதவவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தியைக் கற்க வேண்டும் என்று அண்ணல் அடிக்கடி கூறி வந்ததும் கதரை மட்டுமே ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கூட்டத்திலும் அவர் வலியுறுத்திக் கொண்டு வந்ததும் ஒரு தவறான கருத்திற்கு இடமளித்தது. தமிழ்மொழியைப் பற்றி காந்திஜிக்கு எந்தவிதமான அக்கறையும் கிடையாது என்று பலர் அவரைப் பற்றி அவதூறு சொல்லத் தொடங்கிவிட்டார்கள். இது அவர் காதிலும் வீழ்ந்தது. இந்தக் குற்றச்சாட்டிற்கு அவர் தூத்துக்குடியில் பதில் அளித்தார். ஒரு வேளை, இங்குப் படித்துக் கொடுத்த வரவேற்புரையில் இதைப்பற்றி ஏதாவது கூறப்பட்டிருந்திருக்கலாம். இது உறுதியாகத் தெரியவில்லை. ஆனாலும் ஒன்று உறுதியாகத் தெரிகிறது. இந்த வரவேற்புரை ஒன்றில் தமிழின் பெருமையையும் திருக்குறளின் சிறப்பையும் காந்திஜியின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது அவருடைய மறுமொழியிலிருந்து உறுதியாகத் தெரிகிறது. அவர் சொன்னார்: ''இந்த மாநிலத்தில் நான் சுற்றுப்பயணம் செய்யும்போது தமிழ் மொழியைப்பற்றி - அதைக் கற்கவேண்டிய அவசியத்தைப் பற்றி எதுவுமே கூறவில்லை என்று மக்கள் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். என்னை இதற்காகக் குற்றம் சாட்டியும் இருக்கிறார்கள். இந்தக் குற்றச்சட்டை நான் ஏற்க முடியாது. என்னை நெருங்கி அறிந்தவர்கள் இந்தக் குற்றச் சாட்டிற்கு நியாயமே கிடையாது என்பதை அறிவார்கள். ஆங்கிலம் கற்பதற்கு முன் தமிழைக் கற்க வேண்டும் என்று பல முறை நான் வலியுறுத்தி வந்திருக்கிறேன். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பே - 1915-இலிருந்தே, ஆங்கிலத்தைக் காட்டிலும் தமிழையே மக்கள் விரும்பவேண்டும் என்று மக்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். 1917-க்கு முன்பிருந்தே தாய் மொழியில்தான் மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமென்றும் ஒவ்வொருவரும் தங்களுடைய தாய் மொழியிலேயே உரையாடியும் தாய்மொழி இலக்கியங்களைக் கற்றும் அவைகளை வளர்க்கவேண்டும் என்றும் கூறி வந்திருக்கிறேன்.

தமிழும் காந்தியும்

''திருக்குறளில் காணப்படும் அபூர்வ கருவூலங்களை என் கவனத்திற்கு நீங்கள் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது முற்றிலும் நியாயமானதே. திருக்குறளை மூலத்திலேயே படிக்க வேண்டும் என்ற விருப்பத்துடனும் குறிக்கோளுட

னும் நான் இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழைக் கற்கத் தொடங்கினேன் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ் மொழியை நன்கு முழுமையாகக் கற்க ஆண்டவன் நேரம் அளிக்கவில்லையே என்பது எனக்கு ஆழ்ந்த வருத்தத்தைத் தருகிறது. தாய் மொழியைப் பாட மொழியாக்கும் கிளர்ச்சியை நான் நூற்றுக்கு நூறு ஆதரிக்கிறேன். நாம் தமிழ் மொழியைக் கற்க வேண்டும். ஆங்கிலத்தைக் காட்டிலும் அதற்கு முதன்மை அளிக்கவேண்டும். எல்லா மொழிகளையும் விட மேலிடம் அளிக்க வேண்டும். ஒரு இடத்தில் எனக்குத் தமிழில் வரவேற்புரை அளிப்பதற்குப் பதிலாக ஆங்கிலத்தில் வரவேற்புரை அளித்தார்கள். அப்போது அவர்களை இலேசாகக் கடிந்து கொண்டேன். எல்லாப் பள்ளிகளிலும் ஆங்கிலத்திற்குப் பதில் தமிழ் இடம் பெற வேண்டுமென்றே நான் விரும்புகிறேன். ஆகையால் நீங்கள் இனிமேலும் என்னை இதில் குற்றம் சாட்டமாட்டீர்கள் என்று நம்புகிறேன்.'' தமிழைப் பற்றி இவ்வாறு காந்திஜி பேசியது தமிழகத்தில் தமிழ்ப்பற்றுக் கொண்டிருந்த எல்லோருக்குமே மனநிறைவு அளித்தது. திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், தமிழின் பெருமையையும் திருக்குறளின் சிறப்பையும் செப்புங்கால் இதை அடிக்கடி மேற்கோளாகக் காட்டுவதுண்டு.

திருக்குறள்

7-10-27

பாளையங்கோட்டையில் தனியாகக் கதர் உற்பத்தி செய்து வந்தவர்களான டி. எஸ். அறம் வளர்த்தநாத பிள்ளை, சி. இராமநாதன், மற்றும் ஓரிருவர் பிற்பகலில் அவரைச் சந்தித்துத் தங்களுக்குள்ள சிக்கல்களை எடுத்துச் சொன்னார்கள். கதர் இயக்கத்தைப் பரப்பத் தாங்கள் தனியாக முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருவதாகவும் அதற்கு வேண்டிய தொழில் நுணுக்க உதவிகளை அனைத்து இந்திய சர்க்கா சங்கம் அளிக்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதே சமயம் தமிழ்நாடு சர்க்கா சங்கத்துடன் தாங்கள் எந்த விதமான தொடர்பும் வைத்துக் கொள்ள விரும்பவில்லை என்பதையும் சொல்லிவிட்டார்கள். இவர்கள் வந்து சந்திப்பதற்கு முன் மாவட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் பி. ஈஸ்வரையா வந்து காந்திஜியின் இரத்த அழுத்தத்தைச் சோதனை செய்து பார்த்து, பெரிய

பாளையங் கோட்டை

ஏற்றத்தாழ்வு இல்லை என்றும் அவருடைய வயதிற்குரிய அளவை ஒட்டியே இருக்கிறது என்றும் கூறினர். (இவர்கள் வந்து சந்தித்துச் சென்றபின் காந்திஜி ராஜாஜியுடன் நகருக்குள் சென்று நகர வணிகர்களும் குமாஸ்தாக்களும் அளித்த வரவேற்பைப் பெற்றார். வணிகர்களும் அவர்களுடைய குமாஸ்தாக்களும் தனித்தனியாகப் பண முடிப்புகளை அளித்தனர்.)

பொதுக் கூட்டம்

இவைகளெல்லாம் முடிந்த பின் பாளையங்கோட்டை கர்சான் மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு அண்ணல் சென்றார். (இங்கு அநேக வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப்பெற்றன. ஒருசொல் வீரபத்திர பிள்ளை ஒரு வெள்ளிப் பெட்டியை அளித்தார். நகர மக்களின் சார்பாகத் திருகூட சுந்தரம் பிள்ளை பண முடிப்பை அளித்தார். திருநெல்வேலி மாவட்டக் கழகம், திருநெல்வேலி தாலுகா போர்டு, திருநெல்வேலி, பாளையங்கோட்டை நகராட்சி மன்றங்கள் ஆகியவைகளின் சார்பாக திவான் பகதூர் எஸ். குமாரசாமி ரெட்டியார், ஐ. சி. ஈஸ்வரன் பிள்ளை, சி. அழகர்சாமி நாயுடு, கே. எஸ். பொன்னுசாமி பிள்ளை ஆகியோரும் பாளையங்கோட்டை நூற்போர் சங்கத்தாரும் இளைஞர் தேசிய சங்கத்தாரும் கல்லிடைக் குறிச்சி தென் திருப்பேரை மக்கள், திருநெல்வேலி மாவட்ட இந்திய கிறித்தவர் சங்கத்தின் சார்பாக டேனியல் தாமஸ் எம். எல். சி. ஆகியோரும் வரவேற்புரைகள் அளித்தனர். சேர்மா தேவியைச் சேர்ந்த ஐயா ஐயர் தாம் நூற்ற 150-ஆம் நீர் நூல் சிட்டத்தையும் குலசேகரப் பட்டினம் பள்ளிப் பையன்கள் தாங்கள் நெய்த கதர்த் துணிகளையும் அளித்தார்கள்.) ''இதற்கு முன்பெல்லாம் கிறித்தவர்களாகிய நாங்கள் எங்களைத் தேசிய இயக்கங்களுடன் ஒன்றுபடுத்திக் கொண்டதில்லை. ஆனால் இப்போது அதில் ஈடுபட்டுக் கொண்டு வருகிறோம்'' என்று கிறித்தவர்கள் வரவேற்புரை கூறியது. ''தென்னிந்தியா முழுவதிலுமே கிறித்தவர்களிடையே இந்த உணர்வு ஏற்பட்டு வருவதைக் கண்டு நான் மன மகிழ்கிறேன். இதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டும் வருகிறேன்'' என்று அண்ணல் கூறினர். இந்த இடத்தில் பிற மதத்தினருக்கும் காந்திஜிக்கும் இருந்த உறவை நாம் அறிந்து கொள்வது நல்லது.

பொதுவாக, மதமாற்றத்தில் மகாத்மாவுக்கு ஒரு போதும் நம்பிக்கை இருந்ததில்லை. ஒன்றும் அறியாத அப்பாவி ஏழை அரிஜனங்களையும் பாமர மக்களையும் பிற மதத்தினர் ஆசை காட்டி மதம் மாற்றுவதை அவர் மனதார வெறுத்தார். கிறித்தவர்களோ முகமதியர்களோ புத்த மதத்தவர்களோ மதமாற்றம் செய்வதெல்லாம் அவர்களுடைய மதத்தைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கையை உயர்த்திக் காட்டுவதற்காகத்தான் என்று அவர் கருதினார். இந்த விஷயத்தில் சி. எப். ஆண்ட்ரூஸ் போன்று அவருடன் நெருங்கிப் பழகிய நண்பர்களுடன்கூட அவருக்குக் கருத்து வேறுபாடு இருந்து வந்திருக்கிறது. ஒருமுறை காந்திஜியை ஆண்ட்ரூஸ் (1936-இல்) ''திருவாங்கூரில் உள்ள ஈழவர்கள் (இவர்களில் பலர் அப்போது படித்தவர்களாய் இருந்தார்கள்.) தாங்கள் மதம் மாறுவதாகக் கூறினால் அது நியாயந்தானே, அவர்கள் விவரம் அறிந்தவர்கள் அல்லவா?'' என்று கேட்டார். காந்திஜி அதை ஏற்கவில்லை. ''ஒரு சில ஈழவர்கள் டாக்டர்களாகவோ வழக்கறிஞர்களாகவோ இருக்கலாம். ஆனால் பெரும்பாலான ஈழவர்கள் இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள அரிஜனங்களைப் போன்றே பின் தங்கிய நிலையில்தான் இருக்கிறார்கள்'' என்று கூறிவிட்டார்.

மத மாற்றம்

சி. எப். ஆண்ட்ரூஸ் இதே சந்திப்பில் நேரடியாகவே வேறொரு கேள்வியைப் போட்டார். ''நன்றாகச் சிந்தித்து, பிரார்த்தனையெல்லாம் செய்தபின் ஒருவன் ஒரு முடிவுக்கு வருகிறான். தான் கிறித்தவனாக மதம் மாறாமல், தனக்குக் கதிமோட்சம் கிடையாது என்று உணர்கிறான். அப்படிப் பட்டவனுக்கு நீங்கள் என்ன கூறுவீர்கள்?'' என்று கேட்டார். இந்த நேரடியான கேள்விக்கு காந்திஜியும் நேரடியான பதில் அளித்தார். ''ஒரு கிறித்தவனல்லாதான் (இந்து என்றே வைத்துக் கொள்ளுங்கள்) ஒரு கிறித்தவனிடம் வந்து இவ்வாறு சொன்னால் அந்தக் கிறித்தவன்' ''மதம்மாறி நன்மை பெற எண்ணுவதைவிட நீ ஒரு நல்ல இந்துவாகு'' என்று கேட்டுக்கொள்ள வேண்டும் என்று கூறிவிட்டார். 'ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்கள் மற்ற சமயத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றங்களை உண்டாக்கலாம்; ஆனால் சமயத்தை மாற்றக்

சர்வமத சமானத்துவம்

கூடாது'' என்பதுதான் காந்திஜியின் கொள்கை. 'நம்பிக் கையில்லாத ஒரு முஸ்லிம் - எவ்வளவுதான் கெட்டவனாக இருந்தாலும் - ஒரு நல்ல இந்துவைவிட உயர்ந்தவனே' என்று முகமதலி கூறிய கருத்திலெல்லாம் காந்திஜிக்கு உடன் பாடு இல்லை. காந்திஜி விரும்பியது ஒரு சமயத்தினர் மற்றொரு சமயத்தினரைச் சகித்துக்கொண்டு போக வேண்டும் என்பதல்ல. அதைக் காட்டிலும் உயர்ந்த ஒன்று; அது சர்வமத சமாதானத்துவம் ஆகும். அதாவது ஒரு சமயத்தைச் சேர்ந்தவர்கள் மற்றொரு சமயத்திடம் சம மரியாதை கர்ண்பிப்பதாகும். உலகில் உள்ள பெரிய மதங்க ளெல்லாம் அடிப்படையில் சமத்துவமானவை என்று அவர் கூறினர். ''ஒரே ஆண்டவன்தான் என்றால் இத்தனை சமயங்களும் உண்மையாக இருக்க முடியுமா?'' என்று சிலர் அவரிடம் கேட்டார்கள். அதற்கு அவர், ''ஆன்மா ஒன்று தான், ஆனாலும் அது எத்தனையோ உடல்களில் தங்குகிறது. ஒரு மரத்தின் அடித்தூர் ஒன்றுதான், ஆனால் அதில் பல கிளைகளும் ஏராளமான இலைகளும் இருக்கின்றன. அதே போன்று உண்மையான பரிசுத்தமான சமயம் ஒன்றுதான். ஆனால் பரிசுத்தமற்ற மனிதன் வழியாக அது வெளிவரும் போது அது பல சமயங்களாகிறது. அந்த ஒரு பரிசுத்த மான சமயமோ எல்லாப் பேச்சிற்கும் அப்பாற்பட்டது'' என்று கூறினர். பொதுவாக காந்திஜியின் வாழ்க்கையே சர்வமத சமானத்துவத்திற்கு ஒரு சிறந்த சான்றாக இருந்தது. தென்னப்பிரிக்காவில் காந்திஜி அமைத்த ஆசிரமத் தில் இருந்து இந்தியாவில் அவர் எல்லாச் சமயங்களையும் சார்ந்த இலக்கியங்களின் பகுதிகளைப் படித்துக் கூட்டுப் பிரார்த்தனை நடத்தியது வரை அவர் வாழ்க்கையே ஒரு சர்வமத சமானத்துவ சோதனைதான். நவகாளி யாத்திரை யும், இறுதியில் இதற்காகவே அவர் இன்னுயிர் ஈந்ததும் இச்சோதனையில் ஈடு இணையில்லா உச்சக்கட்டங்கள்.

சர்வமத ஐக்கியம்

(Federation of International Fellowship) சர்வ மத ஐக்கி யம் என்ற அமைப்பைச் சேர்ந்த தலைவர்களுடன் காந்திஜிக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. எல்லா மதத்தவரும் ஐக்கியமாய் இருக்கவேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்ட அமைப்பாகும் இது. இதற்குச் சென்னையில் கிளையும் இருந்தது. சென்னை அமைப்பிலும் சரி, இந்திய அமைப்பி லும் சரி, தமிழகத்தைச் சேர்ந்த கிறித்தவப் பெருமக்களான

ஏ. ஏ. பால், டாக்டர் கெய்த்தான் (இவர் அமெரிக்கர், ஆனாலும் தமிழகத்தைச் சேர்ந்தவர் என்று கூறலாம்), டாக்டர் ஜேசுதாசன், டாக்டர் குருபாதம் போன்றவர் களுக்கு நல்ல செல்வாக்கு உண்டு. கிறித்தவ சமயம் ஒன்று தான் மனிதனுக்கு உய்வு அளிக்கக் கூடியது என்ற தீவிரப் போக்கு இல்லாதவர்கள் இவர்கள். ஆனாலும் எந்தச் சமயத்தைச் சார்ந்தவராக இருந்தாலும், தான் ஆழ்ந்து சிந்தித்தபின், கிறித்துவின் வழியே தனக்கு உய்வு அளிக்கக் கூடியது என்று மனமாரக் கருதுவானாயின், அவனைக் கிறித்தவ சமயத்துக்கு மதமாற்றுவது நியாயமே என்பது இவர்கள் வாதம். இவர்களுடன் காந்திஜிக்கு நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது என்றாலும், இவர்களில் பலர் காந்தியத்தை ஏற்பவர்களானாலும், இவர்களுடைய இந்தக் கோட்பாட்டை காந்திஜி ஏற்கவில்லை. ''சமயம் என்பது மனிதனின் சொந்த நம்பிக்கை பற்றிய விஷயம். அது அவனுக்கும் ஆண்டவனுக்கும் மட்டும் தொடர்புடையது. ஆகையால் நாம் சாதாரணமாகக் கருதுவது போன்ற மதமாற்றத்திற்கு அதில் இடமில்லை'' என்பது காந்திஜியின் வாதம். 1928-ஆம் ஆண்டில் சர்வமத ஐக்கிய மாநாடு சபர்மதியில் நடைபெற்ற போது இதன் குறிக்கோள் என்னவாக இருக்க வேண்டுமென்று இரண்டு நாட்கள் கடுமையாக விவாதம் செய்தும் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. மாநாட்டினரால் அழைக்கப் பெற்று அங்கு வந்திருந்த காந்திஜி, தமது கருத்துப்படி மாநாட்டினுடைய குறிக்கோள் என்னவாக இருக்க முடியும் என்பதை விளக்கிப் பேசினார். ஒரே ஒரு சமயம் தான் உலகில் உண்மையாக இருக்க முடியும் என்று நம்புவோருக்கு இந்த அமைப்பில் இடம் இருக்க முடியாது என்று அவர் தெளிவு படுத்தினார்.

கிறித்தவர் அறிக்கை

திருவாங்கூரில் ஆலயப்பிரவேசம் நடைபெற்றதன் பின் இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பதினான்கு கிறித்தவப் பெருமக்கள் - இவர்களில் தமிழகத்தைச் சேர்ந்தோரே அதிகம் - அந்த மகத்தான நிகழ்ச்சியை வரவேற்றும் பொதுவாக மதமாற்றம் செய்யும் பணியில் கிறித்தவர்களின் போக்கு எவ்வாறு இருக்க வேண்டுமென்றும் ஓர் அறிக்கை விடுத்தனர். சொற்களையும் கருத்துக்களையும் மிகவும் எச்சரிக்கையாகத் தொகுத்து அவர்கள் விடுத்திருந்த

இந்த அறிக்கையும் காந்திஜி மனதிற்குப் பிடிக்கவில்லை. அதற்குக் காரணம் இருந்தது. தாழ்த்தப்பட்ட, பின்பட்ட வகுப்பினர்களின் மத்தியில் ஏற்பட்ட இந்த எழுச்சியைக் கிறித்தவர்கள் மதம் மாற்றம் செய்வதில் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்று இவர்கள் ஒரு புறம் எச்சரித்திருந்தனர். (இவ்வாறு இவர்கள் அறிக்கை விடுத்ததற்காக இவர்கள் மீது கிறித்தவ தேவாலயம் தனது பாணத்தை எய்தது. தாம்பரத்தில் நடைபெற்ற உலகக் கிறித்தவர்கள் மாநாட்டிற்கு இவர்களில் யாரும் அழைக்கப்படவில்லை.) என்றாலும், மற்றொரு புறம், ''ஆண்களும் பெண்களும் தனிப்பட்ட முறையிலும் குடும்பமாகவும் அல்லது மொத்தமாகவும் கிராமம் கிராமமாகவும் கிறித்தவ சமயத்தில் சேர முன் வருவார்கள். அதுதான் பரிசுத்த கர்த்தரின் (Spirit of God) உண்மையான இயக்கம். உலகில் எந்தச் சக்தியும் இந்தப் போக்கைத் தடுத்து நிறுத்த முடியாது. ஏசு கிறிஸ்துவிடம் உள்ள இந்தச் சத்தியத்தை நாடி வருபவரை வரவேற்று அவர்களுக்குப் போதனையும் ஆன்மிக உணர்வும் அளிக்க வேண்டியது தான் கிறித்தவ தேவாலயத்தின் கடமையாகும். இவர்கள் எந்தச் சமயத்தைச் சேர்ந்தவர்களாயினும் அவர்களே வரவேற்கத் தனக்குள்ள உரிமையைக் கிறித்தவ சமயம் நிலை நிறுத்தும். மேலும், சமயத்துக்கு விரோதமான செயல்களும் லோகாயதமும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் எல்லோருடைய மத்தியிலும் ஆன்மிகப் பசியைத் தூண்டுவதற்குள்ள அடுத்த உரிமையையும் தேவாலயம் விட்டு விடாது,'' என்றும் இவர்கள் தங்களுடைய அறிக்கையில் கூறியிருந்தனர். இந்தப் பகுதிதான் காந்திஜியின் கடுங் கண்டனத்திற்கு உள்ளானதாகும். காந்திஜி 3-4-1937 ஆம் தேதி வெளியான ''அரிஜன்'' இதழில் இவர்களுடைய கூட்டு விஞ்ஞாபனத்தை வெளியிட்டுவிட்டு, எழுதினார்: இந்த விஞ்ஞாபனத்தின் நோக்கம் படியாத, அப்பாவி மக்களை மதம் மாற்றுவதைத் தங்கு தயக்கமின்றிக் கண்டிப்பதல்ல. மாறுகக் கோடிக்கணக்கான அரிஜனங்களின் மத்தியில் பைபிளின் செய்தியைப் பரப்புவதற்குள்ள உரிமையை நிலை நிறுத்துவது தான்...கிறித்தவ தேவாலயத்தில் சேருவதற்காக ஆண்களும் பெண்களும் ஓடிவரவில்லை. இதில் ஏழை அரிஜனங்கள் மற்றவர்களைவிட எந்த வகையிலும் சிறந்தவர்களல்ல. அவர்களுக்கு உண்மையான ஆன்மிகப் பசி இருந்தால் நல்லதுதான். ஆனால் தற்போது அவர்களுக்குள்ள

பசியைக் கோவில்களுக்குச் செல்வதன் மூலம் - இந்தக் கோவில்கள் அவ்வளவு நாகரிகமுள்ளவையாய் இல்லாவிட்டாலும்- அவர்கள் தணித்துக் கொள்கின்றனர். மற்றொரு சமயத்தைச் சேர்ந்த சமயப் பிரசாரகர் போகும் போது ஏதோ சரக்கு விற்பவரைப் போலத்தான் போகிறார். அவர் யாரிடம் செல்கிறாரோ அவர்களிலிருந்து அவரைத் தனித்துக் காட்டக்கூடிய உயர்ந்த ஆன்மிக உணர்வு எதுவும் அவரிடம் இல்லை. ஆனால் அவரிடம் லோகாயதப் பொருள் இருக்கிறது. தமது சமயத்திற்கு மதம்மாறி வருவோருக்கு அதைத் தருவதாக அவர் ஆசை காட்டுகிறார். மேலும் கவனியுங்கள். இந்தியாவில் கிறித்தவ சமயத்திற்குள்ள கடமை அதன் உரிமையாக மாறிவிட்டது. ஒரு கடமை உரிமையாகும்போது அது கடமையாக இருப்பதில்லை...இவ்வாறு, இந்துக்களுடைய ஐயப்பாட்டைப் போக்கி அவர்களுடைய மனச் சஞ்சலத்தைச் சாந்திப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பெற்ற இந்த அறிக்கை அதன் நோக்கத்தில் வெற்றி பெறவில்லை,'' என்று காந்திஜி சாடினார். காந்திஜியின் இந்த அறிக்கை கிறித்தவர் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. இதன்பின் சில பிஷப்புகளும் கிறித்தவப் பிரமுகர்களும் நாகபுரியில் காந்திஜியைச் சந்தித்துத் தங்கள் தரப்பை விளக்கினார்கள். ''ஆந்திராவில் நடைபெற்றிருப்பது உண்மையான மத மாற்றந்தான்'' என்று இவர்கள் கூறினார்கள். ''இல்லை, அங்கு நடைபெற்றிருப்பது உண்மையான மதமாற்றம் அல்ல. என்னை அங்கு அழைத்துச் சென்று அது உண்மையான மத மாற்றந்தான் என்பதை மெய்ப்பித்து விட்டீர்களானால், என்னுடைய கருத்தை நான் மாற்றிக் கொள்கிறேன்'' என்று காந்திஜி அறைகூவல் விடுத்தார். இந்தச் சந்திப்பின்போது டாக்டர் குருபாதமும் உடன் இருந்தார்.

கெய்த்தான்

காந்திஜியின் சர்வமத சமானத்துவக் கொள்கை தமிழ் நாட்டில் இருந்த பல கிறித்தவர்களின் வெறுப்பையும், எதிர்ப்பையும் தேடிக் கொடுத்தது. கிறித்தவ மதக் கூட்டங்களில் அவருடைய பெயரைச் சொன்னாலே பல கிறித்தவர்களுக்குக் கோபம் வந்துவிடும். ஆனாலும் சில கிறித்தவர்கள் மதுரை ஜார்ஜ் ஜோசப், டாக்டர் பிச்சைமுத்து, கெய்த்தான், திருப்பத்தூர் டாக்டர் ஜேசுதாசன், டாக்டர் பேட்டன், சேலம் டாக்டர் குருபாதம் முதலியோர் அவருக்கு மிகவும் விசுவாசமாக இருந்தார்கள். அவருடைய சர்வமத

சமானத்துவம்தான் இவர்களைக் கவர்ந்தது என்றும் கூறலாம். குறிப்பாகக் கெய்த்தான் காந்திஜியை நெருங்கி வந்ததற்கு இதுவே காரணம். அன்றும் இன்றும் அவர் காந்திஜியின் ஆக்கப் பணிகளையே புரிந்து கொண்டிருக்கிறார். தாழ்த்தப்பட்டவர்களின் நல்வாழ்வுக்காக கெய்த்தான் செய்த சேவையை காந்திஜி பாராட்டியிருக்கிறார். டாக்டர் ஜேசுதாசனும், டாக்டர் பேட்டனும் கள்ளுக்கடை மறியலில் பங்கு கொண்டார்கள். சென்னை நகருக்கு டாக்டர் பேட்டன் சென்றபோது அவர் மறியல் செய்யாமலேயே போலீசாரின் தடியடிக்குள்ளானார். இது ஒரு பெரிய அனைத்திந்தியச் சிக்கல் ஆகியது. டாக்டர் குருபாதம் இந்திய தேசிய அரசியலில் பங்கு கொண்டு நிர்மாணப் பணிகளும் புரிந்து பின்னல் சென்னை மாநில அமைச்சரானது எல்லோரும் அறிந்ததே.

அடைந்த பலன்

காந்திஜிக்கு இருபது வயதிலிருந்தே, கிறித்தவர்களுடன் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது. இத்தொடர்பினால் ஆன்மிக ரீதியாக அவர் அடைந்த பல நற்பலன்களும் உண்டு. உதாரணமாக, தென் ஞப்பிரிக்காவில் அவர் தங்கியிருந்தபோது அங்குள்ள டிராப்பிஸ்ட் சந்நியாசி மடத்திற்கு (Trappist monastery) சென்ற போது, மௌனத்தின் சிறப்பை அவர் நன்கு தெரிந்து கொண்டார். நமக்குள்ளே மெதுவாகப் பேசும் அந்தக் சிறு குரலை நாம் கேட்க வேண்டுமானால், நாம் பேசக்கூடாது: நாம் தொடர்ந்து பேசிக் கொண்டே போனால் அந்தக் குரல் கேட்காது'' என்று அவர்கள் கூறியது அவர் மனதில் ஆழமாக வேரூன்றிப் பதிந்து விட்டது. இப்போது நாம் காந்திஜியைவிட்ட இடத்திற்கு - நெல்லைக்கு - வருவோம்!

நூற்புக் கல்வி

இந்தக் கூட்டம் நடைபெறுவதற்குச் சில நாட்களுக்கு முன்புதான், இந்தியக் கிராமங்களில் கோடிக்கணக்கான மக்கள் வேலையில்லாமல் இருக்கும்போது அவர்களுக்கு வேலை வாய்ப்பை அதிகரிப்பதற்காக இங்குள்ள மூலப்பொருள்களைப் பயன்படுத்தாமல், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதை சர். எம். விஸ்வேஸ்வரய்யா கண்டித்திருந்தார். இதை இக்கூட்டத்தில் காந்திஜி குறிப்பிட்டார். ''இங்கு நீங்கள் பருத்தி விளைவிக்கிறீர்கள். அதை நல்ல துணியாக்குவதற்கு

ஒரு வாய்ப்பு இருக்கிறது'' என்று அண்ணல் கூறினார். இங்கு அறம் வளர்த்த நாதபிள்ளையும் விஸ்வநாத பிள்ளையும் (விஸ்வநாத பிள்ளையின் இல்லத்திலேயே காந்திஜி தங்கியிருந்தார்) இரண்டு பள்ளிகளில் மாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் நூல் நூற்பதற்குக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்ததை அவர் பாராட்டினார். ''இந்தியாவில் உள்ள பள்ளிகளிலெல்லாம் ஒருசிறிது நேரம் நூல் நூற்பதைக் கற்றுக் கொடுக்கிறார்கள் என்றால் அது இந்த நாட்டின் உற்பத்திச் சக்தியை எந்த அளவிற்குக் கூடுதலாக்கும் என்பதைக் கற்பனை செய்து பாருங்கள். என்னிடம் ஒவ்வொரு ஊரிலும் யாராவது ஒருவர் வந்து வேட்டியை அளித்து நான் அதை ஏலத்தில் விடக் கூடாது என்றும் நானே அணிந்து கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறார். இங்குக்கூட ஒருவர் அவ்வாறு கேட்டுக் கொண்டார். இவ்வாறு நான் அணிந்துள்ள ஆடை ஒவ்வொன்றிற்கும் ஒரு வரலாறு இருக்கிறது. இந்தத் தொழிலின் மூலம் இந்தியாவில் உள்ள அத்தனை சாதியினரையும் மதத்தினரையும் நீங்கள் ஒன்றுபடுத்தலாம்,'' என்று அண்ணல் கூறினார்.

இவ்வாறு பேசிவிட்டு மேற்கண்ட இருவரும் பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலைப் பற்றிக் கூறியதை காந்திஜி கூட்டத்தில் குறிப்பிட்டார்.

நம்பிக்கை இல்லை

''இந்த நண்பர்களுக்குக் கதர் மீதும் அதன் எதிர்காலத்தின் மீதும் நல்ல நம்பிக்கை இருக்கிறது. ஆனால் பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை இல்லை. தமிழ் நாட்டில் நடைபெறும் கதர்ப்பணியில் பிராமணர்களின் ஆதிக்கம் இருப்பதாக இவர்கள் கருதுகிறார்கள். இருவரும் என்னிடம் ஒரு வாக்குறுதி வாங்கியிருக்கிறார்கள். அவர்கள் என்னிடம் அன்பளிப்பாக வழங்கியுள்ள கதரை நான் இங்கு ஏலத்தில் விற்கலாம். ஆனால் 'அந்தத் தொகையைத் தமிழ் நாட்டில் நடைபெறும் கதர்ப்பணிக்கு அளிக்கக் கூடாது' என்று அவர்கள் என்னிடம் வாக்குறுதி வாங்கியிருக்கிறார்கள். நானும் அவர்களுக்கு அந்த வாக்குறுதியை அளித்திருக்கிறேன். இதற்குக் காரணம் இருக்கிறது. இந்தியாவின் பிறபகுதிகளிலும் கதர்ப்பணிக்குப் பணம் தேவையாக இருக்கிறது. அதே சமயம் ஒரு விஷயத்தை நான் இங்கு உங்களுக்குக் கூறிக்கொள்ளத்தான் வேண்டும். தமிழ் நாட்டில் உள்ள கதர் நிறுவன அமைப்பில் இந்த 'பிராமண

வாடை' இருக்கிறது என்பதில் ஐயமில்லை என்றாலும் * இந்த இயக்கத்தின் மூலமாகப் பலன் பெறும் நூற்பாளர்கள் நெசவாளர்கள் ஆகியோரில் பெரும்பாலானவர்கள் பிராமணரல்லாதாரே. அனைத்து இந்திய சர்க்கா சங்கத்தின் தலைவன் என்ற முறையில் நான் உங்களுக்கு ஓர் உறுதியும் கூறிக் கொள்கிறேன். என்னுடைய நிபந்தனைகளை ஏற்றுப் பணி புரியக் கூடிய தொழில் நுணுக்கந் தெரிந்த ஊழியர்கள் பிராமணரல்லாதாரிடையே கிடைப்பதாக இருந்தால் இன்றே சர்க்கா சங்கத்திலுள்ள பிராமணர்கள் அனைவரையும் வேலையை விட்டு அனுப்ப நான் தயாராய் இருக்கிறேன். மேலும், இப்போது சர்க்கா சங்கத்தில் பணியாற்றும் ஒரு சில பிராமணர்கள் வெளியே சென்றார்களானால், அவர்களில் ஒவ்வொரு வரும் இங்குப் பெறுவதைக் காட்டிலும் அதிக மாகவே சம்பாதிப்பார்கள் என்பதையும் உங்களுக்குக் கூறிக் கொள்கிறேன். அவ்வளவு திறமை வாய்ந்தவர்கள் அவர்கள். அவர்கள் வெளியில் சம்பாதிக்கக்கூடிய அளவு ஊதியத்தை ஒருபோதும் சர்க்கா சங்கம் அவர்களுக்கு அளிக்க முடியாது. மாதந்தோறும் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு என்றெல்லாம் சம்பாதித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது சங்கத்தி லிருந்து மாதந்தோறும் நூறு ரூபாய்தான் ஊதியமாகப் பெறுகிறார்கள். ஆகவே அவர்களுக்குத் தகுந்த உயர்ந்த ஊதியத்தை நான் கொடுப்பதாக இருந்தால், நான் 'பாப்பர் மனு'க் கொடுக்க வேண்டியிருக்கும். ஆகையால் நான் சொல்வதை நம்புங்கள். சர்க்கா சங்கத்தில் யாராவது பிராமணர்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் உண்மையான பிராமண தர்ம உணர்வோடுதான் வந்து சேர்ந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதர்கள் ஏராள மாக எனக்குக் கிடைப்பதாக இருந்தால் இந்தியாவிலுள்ள எல்லாச் சிக்கல்களையுமே நான் தீர்த்து வைத்து விடுவேன். கல்வி ஞானமும், தன்னல மறுப்பும், தொண்டுள்ளமும் உள்ளவர்களே பிராமணர்கள். பிராமணர்கள் என்ற சொல்லின் மூலப்பொருள் இதுதான். இந்தியாவில் உள்ள பிராமணர்களெல்லாம் இத்தகையவர்களாய் இல்லை. ஆனாலும் ஒரு சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர் களைக் கண்டுபிடித்துப் பயன்படுத்தும் முயற்சியிலேயே நான் ஈடுபட்டிருக்கிறேன்.'' இவ்வாறு அன்று மிகவும் விரிவாக பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலைப்பற்றி காந்திஜி

---

* இந்து 10-10-27.

பேசினார். அறம் வளர்த்த நாதபிள்ளை மிகவும் ஆழமான பிராமண எதிர்ப்பாளர், பிராமணரல்லாதார் ஆதரவாளர். அவரும் விஸ்வநாதபிள்ளையும் கூறியவை காந்திஜியின் உள்ளத்தில் எவ்வளவு ஆழமாகப் பதிந்திருந்தன என்பதற்கு இக்கூட்டத்தில் அண்ணல் நிகழ்த்திய இவ்வுரையே சான்றாக அமைந்தது. தமக்கு நேரமில்லை என்றும் நேரமிருந்தால் இன்னும் இதைப்பற்றி விரிவாகப் பேசியிருக்க முடியும் என்றும் காந்திஜி கூறினார். அதன் பின்னர் பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கலின் மூலகாரணத்தை ஆராய்ந்தால் அதுவும் ஒருவகைத் தீண்டாமை உணர்வுதான் என்று சொன்னார். தீண்டாமை என்னும் பாம்பை அடித்துவிட்டால் பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கல் ஆணி வேறுடன் அகற்றப்படும் என்றும் கூறினார். தாம்பிரபரணியாற்றில் மலஜலம் கழித்து அசுத்தப்படுத்துவதைக் கண்டிக்கவும் அவர் தவறவில்லை. ''காலரா வருவதைத் தடுப்பதற்காக நகராட்சி மன்ற அலுவலர்கள் ஒரு புறம் மருந்தை உடம்பில் ஏற்றுகிறார்கள். நீங்களோ காலரா பரவுவதற்காகத் தாம்பிரபரணியில் மருந்தை (மலத்தை இவ்வாறு இங்கு வேடிக்கையாக காந்திஜி குறிப்பிடுகிறார்) இறக்குகிறீர்கள்'' என்றார்!

ஏலம்

இந்தக் கூட்டத்தில் ஏலம் போட்டபோது ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டக் கழகத்தின் வரவேற்புரையை ஏலம் விட்டுக் கொண்டே காந்திஜி, 'மாவட்டக் கழகத்தைச் சேர்ந்தவர்களே இதை ஏலத்தில் எடுப்பார்கள் என்று நம்புகிறேன்', என்று கூறினார். ஆனாலும் அங்கு வந்திருந்த மாவட்டக் கழகத் தலைவரோ உறுப்பினர்களோ அதை ஏலத்தில் எடுக்கவில்லை. பொது மக்களில் ஒருவர் அதை ஐந்து ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்து மகாத்மாவிடம் திருப்பி அளித்தார். மகாத்மா அதை மறுபடியும் ஏலத்தில் விட்டார். அப்போதும் மாவட்டக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், யாரும் எடுக்க முன்வரவில்லை. மறுபடியும் பொது மக்களில் ஒருவர் ஏலத்தில் எடுத்து மீண்டும் மகாத்மாவிடம் அளித்து ஏலம் விடச் சொன்னார். மீண்டும் மகாத்மா ஏலம் விட்டார். இப்போதும் மாவட்டக் கழகத்தைச் சேர்ந்த யாரும் எடுக்கவில்லை. இவ்வாறு இந்த ஏலம் நீடித்துக் கொண்டே போயிற்று. கடைசியாகக் குலசேகரப்பட்டினத்தைச் சேர்ந்த சி. இராமனுதன் எட்டு ரூபாய்க்கு

அதை எலத்தில் எடுத்து மாவட்டக் கழகத் தலைவருக்கு அன்பளிப்பாக வழங்கி ஒருவகையாக இதை முடித்து வைத் தார்.

8-10-27

மறுநாள் நெல்லையிலிருந்து காந்திஜியும் அவரது குழு வினரும் புறப்பட்டு நாகர்கோவில் வந்து சேர்ந்தார்கள்.

நாகர் கோவில்

(அங்கு நகர மக்களின் சார்பாகவும் நகராட்சி மன்றம், ஸ்காட் கிறித்தவர்கள் கல்லூரி ஆகியவைகளின் சார்பாகவும் வரவேற்புரை கள் கொடுக்கப்பெற்றன. பண முடிப்பும் வழங்கப் பெற்றது. இதன்பின்) காந்திஜி அங்கிருந்து திரு வனந்தபுரத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். நாகர் கோவிலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர், அரிஜனங்கள் சாதி இந்துக்களைப் பார்க்கக்கூடாதென்றும் கிட்ட நெருங்கி வரக் கூடாதென்றும் கொடிய முறையில் இருந்த தீண்டாமையை வன்மையாகக் கண்டித்தார். ''எந்த அர்ச்சகர்கள் சமயத் தின் உண்மையான பாதுகாவலர்களாக இருந்தார்களோ அவர்களே அச்சமயத்தைத் தகர்ப்பவர்களாகியிருக்கிறார்கள் என்பது வருந்தத்தக்க, வரலாற்றுப் பூர்வமான உண்மை'' என்று அவர் வருத்தத்தோடு கூறினார்.

15, 16-10-27

எட்டாம் தேதியன்று தமிழகத்தை விட்டுத் திருவாங்கூர் சமஸ்தானத்திற்குள் நுழைந்த மகாத்மா காந்தி, 16-ஆம் தேதியன்று பாலக்காட்டில் இருந்து காரில்

சங்கராச் சாரியார்

கோயமுத்தூர் வந்துசேர்ந்தார். அவர் பாலக் காட்டில் சங்கராச்சாரிய சுவாமிகளைச் சந்தித் தார். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமிகளை காந்திஜி சந்தித்துப் பேசியது, வரலாற்று முக்கியம்வாய்ந்த நிகழ்ச்சியாகும். பாலக்காட்டைச் சேர்ந்த நல்விச் சேரியில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது என்றாலும் தமிழகத்திற்கு இது நெருங்கிய தொடர்புடைய நிகழ்ச்சி என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். ''ஸ்ரீ ஜகத்குரு திவ்விய சரித்திரம்'' என்ற நூலில் அதைத் தொகுத்தவரான இராமச் சந்திரபுரம் எஸ். சாம்பமூர்த்தி சாஸ்திரி இச்சந்திப் பைக்குறித்துக் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார் :-

சந்திப்பு

மதத் தலைவராக விளங்கும் ஸ்வாமிகளின் தெள்ளிய அறிவையும், பரந்த நோக்கத்தையும் எவரையும் ஏற்றுக் கொண்டு அருள் புரியும் தன்மையையும் பற்றி 'ஹிந்து' பத்திராதிபர் ஏ. ரெங்கசாமி ஐயங்கார், எஸ். ஸத்தியமூர்த்தி ஆகியோர் மூலம் காந்தியடிகள் முன்பே கேள்வியுற்றிருந்ததால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு ஸ்வாமிகளைச் சந்தித்து அவர்களுடன் பேச வேண்டுமென்ற தீர்மானத்தைச் செய்து கொண்டார். அதையொட்டியே சரித்திரத்தில் முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சந்திப்பு 15-10-1927-இல் நிகழ்ந்தது. பாலக்காட்டைச் சேர்ந்த நல்லிச் சேரியில் ஸ்வாமிகள் தங்கியிருந்த ஜாகையின் பின் புறம் அமைந்திருந்த மாட்டுக் கொட்டிலில் காந்தியடிகளுக்கும் ஸ்வாமிகளுக்கும் சந்திப்பு ஏற்பட்டது. குறிப்பாக இரண்டொருவரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகை நிருபர்கள் யாரும் அனுமதிக்கப்படவில்லை. காந்தியடிகளும் ஸ்வாமிகளை நெருங்கியதும் இந்து முறைப்படி அவர்களை வணங்கினர். காஷாயக் கதராடை ஒன்றை அணிந்து தரையில் அமர்ந்திருந்த ஸ்வாமிகளின் ஒளி நிறைந்த திருமேனியில் காந்தியடிகளின் மனம் ஈடுபட்டு விட்டது. அப்பொழுது சற்று நேரம் மௌனம் நிலவியது. பின்னர் ஸ்வாமிகள் சமஸ்கிருதத்தில் இரண்டொரு வார்த்தைகள் கூறி, காந்தியடிகளை வரவேற்று உட்காரும் படி தெரிவித்தார். காந்தியடிகளும் கீழே அமர்ந்து, தமக்கு சமஸ்கிருதம் பேசுவதற்குப் பழக்கமில்லையென்றும், இந்தியிலேயே பேச அனுமதிக்க வேண்டுமென்றும், ஆனால் கூடியவரையில் சமஸ்கிருத சொற்களைப் புரிந்து கொள்ள முடியுமென்றும் தெரிவித்துக் கொண்டார். இந்தியில் பேசுவதை ஸ்வாமிகளும் புரிந்து கொள்ளக் கூடியவராதலால், இந்த ஏற்பாட்டின்படி ஸ்வாமிகள் சமஸ்கிருதத்திலும் காந்தியடிகள் இந்தியிலும் பேசத் தொடங்கினர்கள். கடவுள் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே ராஜ்யங்கள் அமைய வேண்டுமென்றும், ஆத்ம சிந்தனையைப் புறக்கணித்து மனித சக்தியை மாத்திரம் பயன்படுத்தி அமையும் எந்த இராஜ்யமும் சீக்கிரத்தில் அழிவுதான் அடையுமென்றும், இதன் உண்மையைக் காந்தியடிகள் உலகிற்கு எடுத்துக் கூறுவதைத் தாம் மிகவும் பாராட்டுவதாகவும், ஹரிஜன ஆலயப் பிரவேச விஷயத்தில் சாஸ்திரங்களையும் பழைய வழக்கங்களையும் நம்பி இருப்பவர்கள் நம் நாட்டில் பெரும்

பாலோர் இருக்கிறார்களென்றும் அவர்களுடைய மனம் நோகும்படி செய்யும் எந்த மாறுதலும் இம்சைக்கு ஒப்பாகு மென்றே தாம் முடிவுக்கு வரவேண்டியிருக்கிறதென்றும் ஸ்வாமிகள் காந்தியடிகளிடம் தெரிவித்தார். மேலும் பர மார்த்த விஷயங்களிலும் சம்பாஷணை தொடர்ந்து நடை பெற்றது. பேச்சுக்களெல்லாம் ஒருவருக்கொருவரது உள் ளன்பை வெளிக்காட்டும் வகையில் அமைந்திருந்தன. வாதப் பிரதிவாதங்கள் எதுவும் அப்போது நடைபெறவில்லை. தம் மனதில் தோன்றியதை ஒன்றையும் ஒளிக்காமல் வெளியிடுவ தில் காந்திஜிக்கு நிகராக வேறு எவரையுமே காணமுடியாது. மக்கள் தம்மை ஏற்றுக் கொள்வார்களோ ஏற்றுக்கொள்ள மாட்டார்களோ என்பதைப் பற்றி அவர் கவலைப்படுவதே யில்லை. அவரது ஒவ்வொரு சொல்லிலும் உள்ளப்பற்று நிறைந்திருக்கும். காந்தியடிகளின் அந்தக் குணத்தை ஸ்வாமிகள் அடிக்கடி பாராட்டுவதுண்டு. சுமார் ஒரு மணி நேரம் காந்தி அடிகள் ஸ்வாமிகளுடன் பேசிக்கொண்டிருந்தார். ஸ்வாமிகளது மேதையைக் கண்டு அவர் வியந்தார். முடிவில் ஸ்வாமிகளிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது, ஸ்வாமிகளுடைய தரிசனத்தினால் தாம் மிகவும் பெரியதொரு பயனை அடைந்ததாகவும், ஸ்வாமிகள் விருப்பங்களை எல்லாம் மனதில் வைத்துத் தம்மால் முடிந்தவரை அவைகளை நிறை வேற்றுவதாகவும் தெரிவித்துக்கொண்டு வணங்கி அவர் விடைபெற்றுக் கொண்டார்.

சண்முகம் செட்டியார்

கோவையில், பிற்காலத்தில் இந்திய நிதி அமைச்சரான ஆர். கே. சண்முகம் செட்டியார் இல்லத்தில் அண்ணல் தங்கியிருந்தார். விக்டோரியா நகர மண்ட பத்தில் காந்தி தம்பதிகளுக்கு மாதர்கள் ஒரு சிறப்பான வரவேற்பு அளித்தனர். (அங்கு காந்தி தம்பதிகள் போய்ச் சேர்ந்தபோது திருமதிகள் இராமசாமி சிவன், கே. செரியன் ஜாகப், கே. மீனாட்சி அம்மாள் ஆகியோர் அவரை வரவேற்றார்கள். இந்திய தேசிய சங்கத்தின் சார்பாக ஒரு பண முடிப்பும் சகோதரிகள் சங்கத்தின் சார்பாக ஒரு வெள்ளித்தட்டும் அளிக்கப்பெற்றன.) இங்கும் வழக்கமாகப் பெண்கள் கூட்டத்தில் இருப்பது போன்ற சத்தம் இருக்கத்தான் செய்தது. ஆகையால், காந்திஜி முதலிலேயே ஓர் எச்ச ரிக்கை செய்தார். இவ்வாறெல்லாம் சத்தம் போடுவதாய் இருந்தால், தாம் கூட்டத்தில் பேச இயலாது என்று கூறி

விட்டார். இதன் பின்னர் கூட்டத்தில் சத்தம் குறைந்தது; காந்திஜியும் பேசத் தொடங்கினர். ''இந்தியாவில் இராம ராஜ்யம் வேண்டுமென்று நாம் எல்லோரும் விரும்புகிறோம். மாதர்களாகிய நீங்கள் எல்லோரும் சீதைகளாக வாழ்ந்தாலொழிய நாம் இராமராஜ்யம் பெறமுடியாது. ஆனால் உங்களில் பெரும்பாலோர் அந்நிய ஆடைகளே அணிந்து உங்களைத் தீட்டாக்கிக் கொள்கிறீர்கள்,'' என்றார்.

பயணத் திட்டம்

இந்தச் சுற்றுப்பயணத்தில் கோபிச் செட்டிப் பாளையம், ஈரோடு, புதுப்பாளையம் ஆகிய இடங்களுக்கெல்லாம் முதலில் காந்திஜி வருவதாக இருந்தது. ஆனால் காந்திஜியின் உடல் நிலையை முன்னிட்டு இவை களையெல்லாம் கைவிட முடிவு செய்தனர். கேரளத்தில் அவர் கடுமையான சுற்றுப் பயணத்தை மேற்கொண்டதால் அவர் உடல் மிகவும் பலவீனமடைந்திருந்தது. ஆகையால் 21-ஆம் தேதிவரை அவர் கோவையிலேயிருந்து ஓய்வு எடுத்துக் கொள்வ தென்றும் அதற்குப்பின் திருப்பூர் செல்வதென்றும் அங்கு மூன்று நாட்கள் தங்குவதென்றும் அதற்குப்பின் கள்ளிக் கோட்டைக்குச் செல்வதென்றும் பயணத்திட்டம் மாற்றி அமைக்கப் பெற்றது.

பொதுக் கூட்டம்

கோவையில் ஏற்கனவே அவருக்காகக் குறிப்பிடப் பெற்றிருந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்காக அந்தந்த நேரத்தில் நடைபெற்றன. காரொனேஷன் பூங்காவில் (தற்போது இது வ. உ. சி. பூங்கா என அழைக்கப்படுகிறது) நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் (கோவை நகராட்சி மன்றம், மாவட்ட காங்கிரஸ் குழு, தாலுகா காங்கிரஸ் குழு, ஆதிதிராவிடர்கள், கோவைப் பொது மக்கள் சார் பாக வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் வழங்கப் பெற்றன. மகாத்மாவின் சொற்பொழிவை வி. மகாலிங்க ஐயர் தமிழில் மொழி பெயர்த்தார்.) கோவை நகராட்சி மன்றத்தினர் அளித்த வரவேற்புரையில் முன்னைப் போன்றே கருத்து வேறுபாட்டைத் தெரிவித்திருந்தார்கள். ஒத்துழையாமை இயக்கம் பயனற்றது என்றும் இந்து சமூகத்தில் ஏற்றத்தாழ்வு இருப்பதற்கு வர்ணாஸ்ரம தர்மமே காரணம் என்றும் அண்மைக்காலத்தில் வர்ணாஸ்ரம தர்மத்தைக் குறித்து காந்திஜி கூறிவரும் கருத்துக்கள்

சிக்கலே மேலும் அதிகமாக்கி, சமூகச் சீர்த்திருத்தத்தின் முன்னேற்றத்தையே தடைப்படுத்திவிடும் என்றும் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆகவே, அன்று காந்திஜியின் சொற்பொழிவு எதை மையமாகக் கொண்டிருந்திருக்கும் என்பதை நாம் இலகுவாக யூகிக்கலாம். நகராட்சி வரவேற்புரையையே முதலில் அவர் எடுத்துக் கொண்டார். மேற்கண்ட மறுப்புக்களுக்கு இதுவரை அவர் கூறி வந்துள்ள மறுமொழிகளையே கூறினர். அவர்களுடைய கருத்தை வெளிப்படையாகவும் உறுதியாகவும் அதேசமயம் மரியாதையுடனும் அவர்கள் கூறியதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். '1921-இலிருந்து ஒத்துழையாமை இயக்கத்திற்கு எதிராகக் கூறப்பெற்று வந்துள்ள மறுப்புக்களையெல்லாம் நான் கவனமாக ஆராய்ந்து கொண்டு வந்திருக்கிறேன். ஆனாலும் என் கருத்தை மாற்றுவதற்கு அவசியம் ஏற்படவில்லை. அஹிம்சா பூர்வமான ஒத்துழையாமையால், இரண்டு சந்ததிகளாக அடையாத இலாபத்தை நம்நாடு அடைந்திருக்கிறது. மேலும், இப்போது வர்ணாஷ்ரம தர்மம் என்று கூறப்பட்டு வருவதை எண்ணிக்கொண்டு இவர்கள் அதை எதிர்ப்பதாகவே நான் கருதுகிறேன். உண்மையான வர்ணாஷ்ரம தர்மம் இயற்கையின் ஒரு நியதி. வர்ணாஷ்ரம தர்மத்தை மீறியதால்தான் இந்தியாவும் உலகின் பிறபகுதிகளும் இன்னல் அடைந்து வருகின்றன என்ற நம்பிக்கை என் மனதில் மேலும் மேலும் உறுதியடைந்து வருகிறது. இந்து மதம் வீழ்ச்சியடைந்திருப்பதும் அதனாலேயே'' என்றார்.

ஆதிதிராவிடர்கள் அளித்திருந்த வரவேற்புரையில் இருந்த ஒரு குறிப்பு அண்ணலின் உள்ளத்தைக் கவர்ந்தது.

சேரியும் மதுவும்

''அரசாங்கமானது எங்களுடைய சேரிகளின் அருகிலேயே கள்ளுக் கடைகளைத் திறந்து எங்களுக்குக் குடியின் மீது ஆசை காட்டுகிறது. இந்தக் கள்ளுக் கடைகளுக்குப் பதிலாகத் தொழிற்சாலைகள் இருந்தால், ஆப்காரி காண்டிராக்டர்களுக்குப் பதிலாகச் சமூக ஊழியர்கள் எங்களுக்கு நண்பர்களானால் விரைவில் நாங்கள் முன்னேறி விடுவோம் என்பதில் ஐயமில்லை. ஆகையால் எங்களுடைய சேரிகளுக்கு அருகில் தொழிற்பள்ளிகளைத் திறந்து உதவுமாறு உங்களை வேண்டிக்கொள்கிறோம்,'' என்று இது கூறியது. இதைக் கூட்டத்தில் காந்திஜி திருப்பிப் படித்துக் காண்பித்தார்.

சாதாரணமாகக் கூட்டங்களில் வரவேற்புரைகளைப் படிப்பதே காந்திஜிக்குப் பிடிக்காது. ஆனால் இந்த வரவேற்புரையின் பகுதியை அவரே கூட்டத்தில் படித்துக் காண்பித்தார். ''நான் இதை முழு மனதாக ஆதரிக்கிறேன். கோவை நகர மக்களாகிய நீங்கள் இதற்கு ஆதரவாகப் போராட வேண்டும். ஆதிதிராவிடர்களுக்காகச் சில இளைஞர்களும் பெண்களும் முன்வந்து தொழிற்பள்ளிகளைத் தொடங்க வேண்டும்'' என்று அவர் கேட்டுக் கொண்டார்.

கதரும் தேசியமும்

இதேபோன்று இங்குப் படித்துக் கொடுக்கப்பெற்ற காங்கிரசின் வரவேற்புரையும் ஒரு சிக்கலைக் கிளப்பிற்று. மறுபடியும் மகாத்மா தலைமை தாங்கி நாட்டை நடத்திச் செல்ல வேண்டுமென்று இது கேட்டுக் கொண்டிருந்தது. ''அஹிம்சையைக் கடைப் பிடிக்கும் ஒரு மனிதன் தலைமை தாங்குவது என்பது நிர்மாணத் திட்டத்தை நிறைவேற்றுவதுதான். நிர்மாணத் திட்டத்தின் முக்கியமான அங்கம் கதர். ஆகையால் கதர் இயக்கத்தை மேற்கொண்டு அனைத்து இந்திய சர்க்கா சங்கத்தின் தலைவனாக இருந்து நான் வழி காட்டிக் கொண்டுதான் இருக்கிறேன்,'' என்று அண்ணல் சொன்னார். இவ்வாறு ஒவ்வொரு வரவேற்புரைக்கும் அவர் விரிவாகப் பதில் கூறினார். ''உங்களுடைய வரவேற்புரைகள் எல்லாம் முக்கியமான சிக்கல்களைக் கிளப்பின. ஆகையால் என்னால் முடிந்த அளவு அவைகளுக்கு விரிவான மறுமொழி அளிப்பதுதான் மரியாதை'' என்று இறுதியில் அவரே சொன்னார். (இங்கு நடைபெற்ற ஏலத்தில் டி. எஸ். இராமச்சந்திரராவ் என்ற சித்திரக்காரர் தீட்டிய தேசபந்து தாசின் படத்தை பி. எஸ். ஜி. அண்டு சன்ஸ் உரிமையாளரான கங்கா நாயுடு 256 ரூபாய்க்கு ஏலத்தில் எடுத்தார். கோவையில் காந்திஜி தங்கியிருந்தபோது கிணத்துக் கடவு மக்களின் சார்பாகக் கொண்டாம்பட்டி இராகவேந்திரராவ் ஒரு பண முடிப்பைக் கொண்டுவந்து கொடுத்தார். கோவையில் உள்ள கதர் வஸ்திராலயத்தையும் காந்திஜி பார்வையிட்டார்.)

18-10-27

கோயமுத்தூரிலிருந்து மோட்டாரில் செவ்வாய்க் கிழமையன்று மாலை பொள்ளாச்சிக்கு வந்த காந்திஜி பொன்னுசாமி கானிங்கராய கவுண்டரின் விருந்தினராகத்

தங்கியிருந்தார். அன்று பொதுக்கூட்டத்தைச் சீக்கிரத்திலேயே அதாவது நாலரை அல்லது ஐந்து மணிக்கெல்லாம் தொடங்கிவிடலாம் என்பது தான் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவர்களின் நோக்கம். ஆனாலும், மழை விட்டு விட்டுப் பெய்து கொண்டிருந்ததால், ஐந்தரை மணிக்கு, நகராட்சி வாரச்சந்தை நடைபெறும் இடத்தில் கூடியிருந்த பொதுக்கூட்டத்திற்கு உரையாற்ற வந்தார். (பொள்ளாச்சி நகராட்சி மன்றம், தாலுகா போர்டு, பொது மக்கள், நகராட்சி உயர்நிலைப்பள்ளி சார்பாக வரவேற்புரைகள் அளிக்கப் பெற்றன. பொள்ளாச்சிப் பொது மக்கள், தாலுகா போர்டு, எரிசனம்பட்டி பொது மக்கள், நகராட்சி உயர்நிலைப்பள்ளி, பெரிய பொது ஊர்ப் பொது மக்கள் பணமுடிப்பு அளித்தார்கள். இங்கு காந்திஜியின் சொற்பொழிவை ஆர். கே. சண்முகம் செட்டியார் மொழி பெயர்த்தார்.) ஏற்கனவே பொதுமக்கள் நீண்ட நேரம் மழையில் நனைந்து கொண்டிருந்து விட்டதால் மக்களைக் காக்க வைக்க காந்திஜி விரும்பவில்லை. மேலும் அவருக்கே உடல்நலம் சரியில்லை. ஆகையால் விரைவில் பேச்சை முடித்துக்கொண்டார்.

பொள்ளாச்சி

22-10-67

கோபிச்செட்டிபாளையத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் வற்புறுத்தலுக்காக, காந்திஜியின் பயணத்திட்டத்தை மறுபடியும் மாற்றி அமைக்க வேண்டியதாயிற்று. அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் காந்திஜியைச் சந்தித்துக் கேட்டுக் கொண்டதன் பேரில் இரயிலில் திருப்பூர் செல்லும் திட்டத்தைக் கைவிட்டு, காரில் கோபிச்செட்டி பாளையத்திற்குச் சென்று அப்படியே திருப்பூருக்குக் செல்லச் சம்மதித்தார். கோவையிலிருந்து கே. சுப்ரமணியத்துடன் கோபிக்குச் சென்றார். வேளாளர் விடுதிக் கட்டிடத்திற்கு எதிரே உள்ள மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. (பொது மக்களின் சார்பான வரவேற்புரையை கே. பி. சுப்பண்ண கௌண்டரும், தாலுகா போர்டு வரவேற்புரையை அதன் தலைவரான கே. என். நஞ்சப்ப கௌண்டரும் அளித்தார்கள். யூனியன் போர்டு சார்பாகவும் ஒரு வரவேற்புரை அளிக்கப் பெற்றது. இங்கு காந்திஜியின் சொற்பொழிவை கோபிச்செட்டிபாளையத்தைச் சேர்ந்த வழக்கறிஞரான ஜி. ஆர்.

கோபி

நாகேஸ்வர ஐயர் மொழி பெயர்த்தார். கூட்டத்தின் இறுதியில் பொதுமக்கள் சார்பாகவும் தாலுகா போர்டு சார் பாகவும் - அளித்தவர் பி.எஸ். முத்துவேலப்ப கௌண்டர் - கோபிச் செட்டியாலையம் பள்ளி மாணவர்கள் சார்பாகவும், யூனியன் போர்டு சார்பாகவும் பண முடிப்புகள் அளிக்கப் பெற்றன.) இதன் பின்னர் ஊத்துக்குளி வழியாக காந்திஜி திருப்பூர் சென்றார். ஊத்துக்குளியில் சுப்ரி என்ற கே. சுப்ர மணியம் மேற்பார்வையில் நடைபெற்ற கதர் உற்பத்தி நிலையத்தை அவர் பார்வையிட்டார்.

சொல் தவறுமை

''சொல் தவறுமை என்பது மிக உயர்ந்த குணம். இவ்வரிய குணம் மகாத்மாவிடம் நிறைந்திருந்தது என்பதை எடுத்துக் காட்டும் ஒரு சான்று கோபிச் செட்டி பாளையத்திற்கும் கரூருக்கும் அவர் சென்ற தாகும். காந்திஜி கரூர் வர இருந்த ஒரு வாரத் திற்கு முன்பு நாமக்கல் கவிஞர் வெ. இராம லிங்கம் பிள்ளைக்கு ஒரு தந்தி வந்தது. 'திட்டத்தில் கரூர் கைவிடப்பட்டது' என்று அத்தந்தி கூறியது. இரண்டு மூன்று மாதங்களாக வெகு சிரமப்பட்டுப் பல மக்களிடமிருந்து பண முடிப்புக்குப் பணம் வசூலித்தவர்களுக்கு இச்செய்தி பெருத்த ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் உண்டாக் கியது. கோபிச்செட்டிப்பாளையம் கதியும் இதேதான். கரூர், கோபிச்செட்டிப் பாளையம் இரண்டையும் ரத்துச் செய்துவிட்டு காந்திஜி கள்ளிக்கோட்டை செல்வதாகத் தகவல் கிடைத்தது. கோவையில் செட்டியார் இல்லத்தில் காந்திஜி இளைப்பாறிக் கொண்டிருந்த சமயம். அவரைக் கோபிச்செட்டிப்பாளையம் தொண்டர் ஒருவர் நேரில் சந்தித் தார். அவர் மிக்க ஆவேசங் கொண்டவராய், 'இந்தமாதிரி அக்கிரமம் தங்கள் பெயராலேயே தங்கள் கண் முன்னாலேயே நடக்கலாமா?' என்று உரக்கக் கத்தினார். மகாத்மாஜி உண்மையை அறிய விரும்பினார். உடனே ராஜாஜி வர வழைக்கப்பட்டார். 'என் பேரில் பெரிய குற்றச்சாட்டு ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இதற்கு நான் பரிகாரம் தேடித் தான் ஆகவேண்டும். விஷயம் எதுவாயினும் வாக்குறுதி வாக்குறுதியே. அதைக் காத்தே தீரவேண்டும்' என்று மகாத்மா மனம் புழுங்கி உரைத்தார்.'' * ராஜாஜியும் அதன்படி பயணத்திட்டத்தை மாற்றி அமைத்தார்.

---

* காந்திஜி காட்டிய வழி

இவ்வாறு காந்திஜி காரில் திருப்பூருக்கு வந்துகொண் டிருக்க, அவருடைய பயணத்தில் ஏற்பட்ட மாற்றத்தை அறியாத பொதுமக்கள் அவருடைய வருகைக் காகத் திருப்பூர் இரயில் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தார்கள். கோவையிலிருந்து வந்த ஷட்டில் இரயிலில் காந்திஜியைக் கண்ணுது ஏமாற்றத்தோடு திரும்பினர்கள். பின்னர்த்தான் காரில் காந்திஜி திருப்பூருக்கு வருவது அவர்களுக்குத் தெரிந்தது. மாலையில் அண்ணல் திருப்பூர் கதர் வஸ்திராலயத்தைப் பார்வையிட்டார். (இங்கு வஸ்திராலய நிருவாகியாக இருந்த நாராயண ஐயங்கார் அண்ணலை வரவேற்று வஸ்திராலயத்தையும், சர்மா தலைமையில் நடைபெற்ற சாயத் தொழிற்சாலையையும் சுற்றிக் காண்பித்தார்.)

மக்கள் ஏமாற்றம்

இம்முறை திருப்பூரில் மங்களவிலாஸ் என்ற கட்டிடத்தில் காந்திஜி தங்கினர். டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் இங்கு காந்திஜியின் உடலை நன்கு சோதித்துப் பார்த்துவிட்டு ஒரு கோளாறுமில்லை யென்று கூறினர். ஆனாலும் மகாத்மா காந்தி இன்று வேறு பணி எதிலும் பங்குகொள்ளாமல் மீத நேரத்தில் ஓய்வு எடுத்துக்கொண்டார். இந்தச் சமயத்தில் வைசிராய் இர்வின் பிரபுவிடமிருந்து காந்திஜிக்கு ஓர் அழைப்பு வந்தது. அவரைச் சந்திக்குமாறு இர்வின் விடுத்திருந்த அழைப்பை மகாத்மாஜி ஏற்றுக்கொண்டார்.

உடல் நிலை சோதனை

23-10-27

அன்று குருக்ஷேத்திரத்தில் பார்த்தசாரதி பார்த்திபனுக்கு கீதையைப் போதித்தார். இன்று அதிகாலை 3-45 மணிக்கு அண்ணல் மங்கள விலாசத்தில் திருப்பூர் நகராட்சி மன்ற உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கீதை வகுப்பைத் தொடங்கி வைத்தார். அதிகாலையில் இச்சீரிய பணி நடைபெற்றது. கீதை வகுப்பைத் தொடங்கி வைத்து அண்ணல் கூறினர்: ''காலையில் நான்கு மணிக்கு எழுந்து நாள்தோறும் கீதையைப் பாராயணம் செய்யுங்கள். உங்களுக்குச் சமஸ்கிருதம் தெரியாது என்றால் தமிழ் மொழி பெயர்ப்பை வாங்கிப்

கீதை வகுப்பு

படியுங்கள். ஆங்கில மொழி பெயர்ப்பு வேண்டாம். ஏனென்றால் ஆங்கில மொழி பெயர்ப்பில் கீதையின் ஜீவன் இராது. கீதையில் மூன்றும் அத்தியாயம் மிகவும் முக்கிய மானது. அது தொண்டைக் கற்பிக்கிறது. நீங்கள் வாழ்க் கையில் சில அடிப்படையான கொள்கைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். அப்போது தான் கீதையின் உட்பொருளைப் புரிந்து கொள்ள முடியும். என்னுடைய அறிவுரையை நீங்கள் கடைப்பிடித்து வாழ்ந்தீர்களானால், உங்களுக்குள் உள்ள ஆன்மாவை நீங்கள் அறிந்து கொள்ள முடியும்.''

கரூர்

இன்று கரூருக்கும் காந்திஜி சென்றார். நீண்ட கால மாகக் கரூர் மக்கள் அவரைத் தங்கள் ஊருக்கு வரவேண்டு மென அழைத்துக் கொண்டிருந்தார்கள். இன்று எஸ். இராமநாதனுடன் மோட்டாரில் அங்குச் சென்று அவர்கள் அளித்த வரவேற் புரைகளையும் பண முடிப்புக்களையும் பெற்றுக் கொண்டு திரும்பினர். (இங்குத் தனியாக ஐநூறு ரூபாய் பண முடிப்பு அளித்த ஒருவர் தம் பெயரை வெளியிடக் கூடாதெனக் கேட்டுக் கொண்டார். திருப்பூருக்குத் திரும்பி வந்த வழியில் வெள்ளக்கோவில் என்ற இடத்தில் - இது ஒரு முக்கியமான கதர் உற்பத்தி கேந்திரம் - நெசவாளர்கள் சார்பாகவும் நூற்பவர்கள் சார்பாகவும் என். ரெங்கசாமி நாயக்கர் பண முடிப்பு அளித்தார்.)

வர்ணாஷ்ரம தர்மம்

இன்று திருப்பூரில் காந்திஜியை ராவ் சாகிப் விட்டல் தாஸ் ஆனந்த்சேட், எம்.என். சிக்கண செட்டியார், டி. எஸ். சந்தசாமி செட்டியார், டி.எஸ்.அவிஞ்சிலிங்கம் செட்டியார், கே.எஸ். இராமசாமி கௌண்டர் பி. டி. ஆஷர், கே. வி. வேங்கடாசலம் பிள்ளை முதலிய பலர் பேட்டி கண்டனர். இவர்களும் பெரும்பாலும், வர்ணாஷ்ரம தர்மத்தைப் பற்றித்தான் விளக்கங் கேட்டார்கள். இதைப் பற்றி காந்திஜி கூறி வந்த கருத்துக்கள் பலருக்குப் பெரும் மனக்குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தன. ஆகையால் அந்தக் காலத்தில் யார் காந்திஜியைச் சந்தித்தாலும் வர்ணாஷ்ரம தர்மத்தைப் பற்றி அவருடன் விவாதிப்பது வழக்கமாக இருந்தது. அவர்கள் திருப்பூரில் கேட்ட கேள்விகளையும் காந்திஜி அளித்த மறுமொழியையும் சுருக்கமாகக் கீழ்க்கண்டவாறு கூறலாம்.

கேள்வி: தற்காலத்தில் வாழும் பிராணமர்கள் உண்மையான பிராமணர்களா? இல்லையேல், அவர்களைப் பிராமணர் அல்லாதார் என்று ஏன் கூறக் கூடாது?

மகாத்மா: தற்காலத்தில் வாழும் பிராமணர்களில் பெரும் பாலானவர்கள் உண்மையான பிராமணர்களல்ல. ஆனலும் அவர்கள் பிறவியில் பிராமணர்களாதலால் அவர்களை பிராமணரல்லாதார் என்று நான் கூறமாட்டேன்.

கேள்வி: சொல்லிலும் செயலிலும் பிராமண தர்மத்தைக் கடைப் பிடிக்கக் கூடியவர்களை ஏன் பிராமணர்கள் என்று அழைக்கக் கூடாது?

மகாத்மா: இவர்களை பிராமணர்கள் என்று நான் கூறமாட்டேன். பிராமணர்களாக முயற்சி செய்பவர்கள் என்று கூறுவேன். அவர்கள் அடுத்த பிறவியில் பிராமணர்களாகப் பிறப்பார்கள் என்பது என் நம்பிக்கை.

பொதுக் கூட்டம்

முசாபரி பங்களாவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் (நகராட்சி மன்ற உயர்நிலைப்பள்ளி ஆசிரியர், மாணவர்கள், கதரில் அச்சுக் குத்துவோர் ஆகியோர் சார்பாக வரவேற்புரைகள் அளிக்கப்பெற்றன.) காந்திஜி, தாம் முன்பு இங்கு வந்திருந்தபோது இவ்வூரைக் கதரின் தலைநகரம் என்றும் காந்திஜியைக் கதர் மன்னர் என்றும் அழைத்திருந்ததை நினைவூட்டிச் சொன்னார்: உண்மையிலேயே திருப்பூர் கதர்த் தலைநகரம் தான். உற்பத்தியைப் பொருத்தவரை இது அனைத்து இந்தியாவிலும் இன்று கூட முதன்மை வகிக்கிறது. நீங்கள் உற்பத்தி செய்யும் கதரின் தரமும் உயர்ந்திருக்கிறது. ஆனல் என்னுடைய ஆசையை மனதில் வைத்துக் கொண்டு பார்த்தால் இந்த முன்னேற்றம் போதாது. பக்கத்தில் உள்ள ஊர்களில் விளையும் பருத்தியையெல்லாம் நீங்கள் வாங்கி நூற்பதாக இருக்கவேண்டும். நீங்கள் செய்யும் சேவையைக் கண்டு பருத்தி விளைவிக்கும் விவசாயிகள் எல்லோரும் உங்களுக்கே தங்கள் பருத்தியை விற்பதாய் இருக்க வேண்டும். சர்க்கா ஓடாத வீடு ஒரு வீடு கூட இருக்கக் கூடாது. உங்களுடைய ஊர் கதரின் தலைநகரம் என்று நீங்கள் உரிமை பாராட்ட வேண்டுமானல் இவைகளையெல்லாம் நீங்கள் செய்து தானக வேண்டும். ஏனென்றல், தொண்டு செய்ய வேண்டும் என்ப

தற்காக இவைகளையெல்லாம் நீங்கள்செய்கிறீர்களே தவிரச் சுரண்டுவதற்காக அல்லவே? கதர் வளர்ச்சியில் அக்கறை கொண்டுள்ள நாம் எல்லோரும் நம்மைப் பட்டினி கிடக்கும் கிராமவாசிகளின் தர்மகர்த்தாக்களாகக் கருதிக்கொள்ள வேண்டும். ஆகையால் ஒரு கண்ணியமான அளவிற்கு மேல் இலாபம் கிடைத்தால் அது இந்தக் கிராம வாசிகளுக்குத் திருப்பி அளிக்கப்பட வேண்டும்,'' என்று கூறினர். (இதற்கு முன்னர் காந்திஜியும் கஸ்தூரிபாவும் ராஜாஜியுடன் பி. டி. ஆஷர் அண்டு கம்பெனிக்குச் சென்று, அவர்கள் அளித்த வரவேற்புரையையும் பணமுடிப்பையும் பெற்றுத் திரும்பினர்கள். பின்னர் மாதர்கள் சார்பாகப் பணமுடிப்பும் வரவேற்புரையும் அளித்தார்கள்.) இங்குள்ள நெசவாளர்கள் சிலர் குடிப்பழக்கம் உள்ளவர்களென்பது காந்திஜியிடம் தெரிவிக்கப்பெற்றிருந்தது. ஆகையால் அவர் அவர்களுக்குத் தகுந்த ஆலோசனை கூறினர். ''கதர் என்பது தரித்திர நாராயணர்களின் கம்பெனி. அதில் குடிகாரர்களுக்கும் சூதாட்டக்காரர்களுக்கும் இடம் கிடையாது. கதர் நெய்பவர்களாவது குடித்துத் தங்கள் உடலை அசுத்தமாக்காமல் வைத்துக் கொள்ள வேண்டும். இப்பகுதியில் அடிக்கடி கொலைகள் நடக்கின்றன என்று கேள்விப்படுகிறேன். எங்கே குடியும் சூதாட்டமும் இருக்கிறதோ அங்கே கொலைகள் நடைபெறத் தான் செய்யும். இங்கே உள்ள தாராள மனது படைத்தவர்கள் இந்த மாவட்டத்தில் அடிக்கடி கொலைகள் நடைபெறுவதற்கு அடிப்படையான காரணங்களை என்னவென்று ஆராய்ந்து அவைகளைத் தவிர்க்கத் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

யக்ஞம் நூற்றல்

இந்தச் சகாப்தத்தில் உண்மையான யக்ஞம் பகவத்கீதையில் கூறிய தியாகம் என்பது - பட்டினி கிடக்கும் கோடிக் கணக்கான மக்களுக்காகநூற்பதுதான் என்பது எனது நம்பிக்கை. இந்தக் கோடிக்கணக்கான மக்களுக்கும் தங்களுக்குமிடையே உண்மையான பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்று மாணவர்கள் விரும்பினால், நூற்பது ஒன்றே வழி என்றார். (இங்குப் பொது மக்களின் சார்பாகப் பி. டி. ஆஷர் சேட்டும், நகராட்சி உயர்நிலைப்பள்ளியின் சார்பாக அதன் தலைமை ஆசிரியர் கே. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஐயரும் திருப்பூரில் கதர்த் துணியில் அச்சுக்குத்துதோரும் விஜயபுரம் கதர் வணிகர் ஒருவரும் பணமுடிப்புகளை அளித்தார்கள்.

காந்திஜியின் வருகையை முன்னிட்டு 26-ஆம் தேதியன்று நகராட்சி மன்றப் பள்ளிகளுக்கெல்லாம் விடுமுறை விடப் பெற்றது.) அதிகாலையில் காந்திஜி திருப்பூரிலிருந்து கள்ளிக் கோட்டைக்குப் புறப்பட்டார்.

மனநிறைவு

இவ்வாறு காந்திஜி வந்து சென்றதன் பின்னர், இந்தச் சுற்றுப்பயணத்தின் வெற்றி தோல்வியைப் பற்றி அவரே ஓர் அறிக்கை விடுத்திருந்தார். இதில் பொதுவாகத் தென்னிந்தியா என்று அவர் குறிப்பிட்டிருந்தாலும் முக்கியமாக அது தமிழகச் சுற்றுப் பயணத்தைக் குறிக்கும். மங்களூரிலிருந்து புறப்பட்டபோது அவர் இந்தச் செய்தியை விடுத்திருந்தார். ''நான் தென்னிந்தியாவிலிருந்து ஓரளவு மன நிறை வுடனேயே செல்கிறேன். நான் சென்ற இடங்களிலெல்லாம் என்னை மக்கள் மிகுந்த அபிமானத்துடன் வரவேற்றார்கள். என்னுடைய அரசியல் கொள்கையை ஏற்காதவர்கள் கூட என்னிடம் மிகுந்த அபிமானங் காட்டினார்கள். நான் சென்ற இடங்களிலெல்லாம் சர்க்காவின் மீது உண்மையான நம்பிக்கை இருப்பதைக் கண்டேன். ஆகையால் முழு நம்பிக் கையுடனேயே நான் செல்கிறேன்.'' இவ்வாறு கதர் உற்பத்தி யில் 1921-இல் காந்திஜியின் மனக்குறையை அறிந்த தமிழகம் 1925-இல் ஓரளவு முன்னேறி 1927-இல் அவருடைய பாராட்டையே பெற்றுவிட்டது. இந்தச் சுற்றுப் பயண இறுதியில் சுற்றுப் பயணத்தைப் பற்றி காந்திஜியின் கருத்து என்னவென்று ''மெயில்'' செய்தியாளர் கேட்டார். அப்போது காந்திஜி தமது கருத்துக்களைக் கூறினார்: ''கதரைப் பொருத்த வரை மக்கள் மத்தியில் நல்ல பலன் தெரிந்தது. ஆனால் இன்னும் அதிக ஆதரவு இருந்திருக்க முடியும். கதர் நிலைத்துவிட்டது என்ற கருத்துத்தான் இச்சுற்றுப் பயணத் தின் இறுதியில் எனக்கு ஏற்பட்டது.''

ஆலயமும் ஆண்டவனும்

''தாகிகள் இல்லத்தில் எந்த அளவு கடவுள் இருக் கிறாரோ அந்த அளவுதான் சில ஆலயங்களிலும் இருக்கிறார்'' என்று நீங்கள் சொல்வதைப் பற்றிப் பலர் குறைப்பட்டுக் கொள்கிறார்களே?'' என்று கேட்டதற்கு காந்திஜி, ''அதில் ஒரு சொல்லை மாற்றுவதற்குக்கூட நான் விரும்பவில்லை. ஒரு வகையில் அது நூற்றுக்கு நூறு உண்மைதான். கடவுள்

எங்கும் இருக்கிறார். திருடர்கள் வாழும் குகைகளில் கூட இருக்கிறார். ஆனால் அதற்காக நாம் வழிபடுவதற்கு அந்த இடங்களுக்குப் போவதில்லையே? அதற்குப் பதிலாக ஆலயங்களுக்குத்தானே செல்கிறோம்? ஆலயங்களில் தூய்மையான சூழ்நிலை நிலவும் என்பதற்காகத் தானே செல்கிறோம்? அந்தப் பொருளில்தான் ஆண்டவன் சில ஆலயங்களில் இல்லை என்று நான் சொல்கிறேன். நேரடியாக அறிந்த சில ஆலயங்களைப் பற்றித்தான் இவ்வாறு கூறினேன். அதனால் தான் அப்படியே அந்த ஆலயங்களில் ஆண்டவன் இருந்தாலும் ஒரு தாசியின் இல்லத்தில் எவ்வாறு ஆண்டவன் இருப்பாரோ அப்படித்தான் இருப்பார் என்று நான் சொன்னேன். இவ்வாறு நான் கூறியது சில இந்துக்களின் மன உணர்ச்சியைப் புண்படுத்துவதாக இருந்தால், அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். ஆனால் இந்து சமயத்தின் நலனுக்காகவாகிலும், என்னுடைய அறிக்கையைத் திருப்பிப் பெறவோ மாற்றவோ முடியாது'' என்றார்.

நிதி வசூல்

தமிழகத்தில் வசூலான கதர் நிதியின் விவரமாவது:— செட்டி நாடு: ரூ. 21,772-9-4. மதுரை மாவட்டம்: ரூ. 14,498-5-9. கோயம்புத்தூர் மாவட்டம்: ரூ. 11,802-5-5. திருச்சி மாவட்டம்: ரூ. 11,251-13-7. தஞ்சாவூர் மாவட்டம்: ரூ. 11,004-12-10. திருநெல்வேலி மாவட்டம்: ரூ. 10,467-7-9. இராமநாதபுரம் மாவட்டம்: ரூ. 7,669-7-5. வட ஆர்க்காடு மாவட்டம்: ரூ. 6,870-12-3. தென்னார்க்காடு மாவட்டம்: ரூ. 5,313-4-1. செங்கற்பட்டு மாவட்டம்: ரூ. 3,831-15-3. சேலம் மாவட்டம்: ரூ. 3112-1-7. புதுக்கோட்டை ரூ. 1156-11-0.

டில்லி சென்றார்

மங்களூரிலிருந்து சென்ற காந்திஜி, நேரே டில்லிக்குச் சென்று வைசிராயைச் சந்தித்தார். இந்தியாவில் உள்ள அரசாங்க முறையை ஆராயச் சட்டபூர்வமான ஒரு குழுவை (சைமன் கமிஷனை) நியமித்திருப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பியிருந்த ஓர் அறிக்கையை காந்திஜியிடம் வைசிராய் அளித்தார். அதற்காகத்தான் அவர் காந்திஜியை அழைத்திருக்கிறார். 1919-ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அளித்த வாக்குறுதிப்படி இந்தக் கமிஷன் நியமிக்கப்பெற்றது. பின்னர் காந்திஜி

டில்லியிலிருந்து புறப்பட்டு பம்பாய், தூத்துக்குடி வழியாகக் கப்பலில் நவம்பர் 12-ஆம் தேதி இரவு இலங்கைக்குப் போய்ச் சேர்ந்தார். இலங்கைக்கு அவர் குறிப்பிட்ட தேதியில் போய்ச் சேர முடியவில்லை. பம்பாயிலிருந்து அவர் ஏறி வந்த கப்பல், தூத்துக்குடியில் சரக்குகளை இறக்குவதில் காலதாமதமானது. ஆகையால் அவர் வேறொரு கப்பலில் ஏறி இலங்கைக்குச் சென்றார். 11-ஆம் தேதி அங்குச் செல்ல வேண்டியவர் 12-ஆம் தேதி இரவுதான் போய்ச் சேர்ந்தார். 13-ஆம் தேதியிலிருந்து அவருடைய சுற்றுப்பயணம் தொடங்கியது. இந்தியாவிலுள்ள கதர் இயக்கத்திற்கு நிதி திரட்டுவதே அவர் இலங்கைக்குச் சென்றதன் முக்கிய நோக்கம்.

இலங்கையில்

இலங்கையில் அவர் பங்கு கொண்ட முதல் கூட்டமே தமிழர்கள் கூட்டம்தான் - நகரத்தார்கள் கூட்டம். கதருக்குத் தாராளமாகப் பண உதவி அளிக்க வேண்டிய அவசியத்தைக் கூறிவிட்டு அவர் சொன்னார்: ''இலங்கை மக்களிடம் நீங்கள் நாணயமாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்ளவேண்டும். உங்களுடைய நடத்தையைக் கொண்டுதான் இங்குள்ள மக்கள் உங்களை மதிப்பிடுவார்கள். செல்வம் இருப்பது நம்மை மதிமயங்கச் செய்யக்கூடாது. அது நமக்கு அதிகப் பொறுப்புணர்ச்சியை அளிக்க வேண்டும்.'' நகரத்தார் அளித்த வரவேற்பில் அவர், தாம் அண்மையில் செட்டிநாட்டிற்குச் சென்றிருந்தது குறித்தும் அங்கு நகரத்தார்கள் தாராளமாகக் கதர் நிதிக்குப் பணம் அளித்தது குறித்தும் குறிப்பிட்டார். இலங்கையில் உள்ள இந்திய வணிகர்கள் இலங்கை மக்கள் எவ்விதக் குறையும் கூற முடியாமல் நடந்து கொள்ள வேண்டும். செல்வம் உங்களை மேலும் பேராசை கொள்ளாமல் செய்யவேண்டும். யார் செல்வத்தை வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கும் யார் உழைப்பால் அது அவர்களுக்குக் கிடைத்ததோ அந்த உழைப்பாளிகளுக்கும் செல்வம் ஒரு வரப்பிரசாதமாக இருக்கவேண்டும்.'' இச்சுற்றுப்பயணத்தில் கொழும்புத் தமிழர் சங்கம் ஒரு பண முடிப்பை அளித்தது. அக்கூட்டத்தில் காந்திஜிக்கு வரவேற்புரை கூறிய சர். பி. இராமநாதன் கேட்டுக்கொண்டபடி, சர்க்கா சங்கத்தின் அமைப்பு முறைகளை காந்திஜி விளக்கினார். அப்போது அவர், ''சர்க்கர் சங்க நிதியில் மிக அதிகமான பகுதி தமிழகத்தில்

தான் செலவிடப்படுகிறது. ஏனென்றால் தமிழகத்தில்தான் நூற்போர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அங்கு ஓயாது பஞ்சமும் ஏற்பட்டு வருகிறது,'' என்று கூறினார்.

30-11-27

மீண்டும் இந்தியா

இரண்டு வாரங்களுக்கு மேல் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விட்டு ''ஹார்டிஞ்ச்'' என்ற கப்பலில் நவம்பர் 30-ஆம் தேதியன்று காந்திஜி தனுஷ்கோடி வந்து சேர்ந்தார். டில்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்பே சைமன் கமிஷன் அமைக்கப்படப்போவது அவருக்குத் தெரியும். ஆனாலும் அச்செய்தி கிடைத்த ஓரிரு நாட்களில் அவர் இலங்கைக்குப் புறப்பட்டு வந்து விட்டார். ஆகையால் சைமன் கமிஷன் அமைக்கப் பெறுவது குறித்து இந்தியத் தலைவர்கள் என்ன கருதினார்கள் என்பதைப் பற்றியோ, மக்களுடைய கருத்து என்னவென்பதைப் பற்றியோ அறிந்து கொள்ளும் வாய்ப்பு அவருக்கு இல்லாமற் போய் விட்டது. அதனால் இலங்கையில் இருந்து அவர் புறப்பட்டு வந்தபோதும், இந்தியா வந்து சேர்ந்த பின்னும் இக் கமிஷனைப்பற்றி அவருடைய கருத்து என்னவென்று கேட்ட செய்தியாளர்களுக்கு இவ் விவரங்களையே தம் மறுமொழியாகச் சொன்னார். அத்தோடு, ''தற்போதைக்கு என் மனச்சாட்சி காங்கிரஸ் தலைவர் (அப்போது சீனிவாச ஐயங்கார்) கையில் இருக்கிறது. அவருக்குப்பின் டாக்டர் அன்சாரி பதவி ஏற்கும்போது, அவரிடம் இருக்கும்!'' என்றும் கூறினார்.

இராமநாத புரம்

தனுஷ்கோடியிலிருந்து சென்னைக்கு வந்த வழியில் இராமநாதபுரத்தில் இராஜாராம் பாண்டியன் (இராமநாத புரம் மன்னரின் தம்பி; டாக்டர் அன்சாரி தலைமையின் கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் சென்னையில் கூடியபோது இவர் தாம் தொண்டர்படைத் தலைவராக இருந்தார்.) தலைமையில் வரவேற்பளிக்கப்பெற்றது. கஸ்தூரிபா காந்தி இங்கு இறங்கவில்லை. அவரும் காந்திஜி குழுவினரில் சிலரும் அவர்கள் வந்த போட்மெயிலில் நேரே சென்னைக்குச் சென்று விட்டனர். இங்கு காந்திஜி இறங்கிய அன்று மழை விட்டு விட்டுப் பெய்து கொண்டிருந்தது. காந்திஜியின் பொதுக் கூட்டம் நடைபெற முடியாமற் போய்விடுமோ என்று

பொதுமக்கள் அஞ்சிக்கொண்டிருந்தனர். காந்திஜி கூட ஐயப்பட்டார். ஆனாலும் மழை சிறிது நேரத்தில் நின்று விட்டதால் கூட்டம் நடைபெற்றது. (இங்கு காந்திஜி குழுவினர் இராஜாராம் பாண்டியன் இல்லத்தில் தங்கினார்கள்.)

மகர் நோன்புப் பொட்டலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. (இராமநாதபுரம் பொதுமக்களின் சார்பாக இராஜாராம் பாண்டியன் பண முடிப்பும் வரவேற்புரையும் அளித்தார். ராஜா உயர் நிலைப்பள்ளி, எஸ். பி. ஜி. மிஷன் உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்கள் வரவேற்புரையும் பண முடிப்புகளும் அளித்தார்கள்.)

பொதுக் கூட்டம்

இந்தக் கூட்டத்திற்கு வருமுன் மாதர்கள் கூட்டம் ஒன்றுக்கு காந்திஜி சென்றார். அக்கூட்டத்திற்கு வந்திருந்த மாதர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைகள். அவர்கள் தங்களிடமிருந்த சில்லரைக் காசுகளை, முந்தானைகளில் பத்திரமாக முடிந்து வைத்திருந்து காந்திஜியிடம் மன மகிழ்ச்சியுடன் அளித்தபோது, அதனைக் கண்டு அவர் உள்ளமெல்லாங் குளிர்ந்தது. மகர் நோன்புப் பொதுக் கூட்டத்திலும் இதைச் சொன்னார்.

1-12-27

இராமநாதபுரத்திலிருந்து இரயில் ஏறி வியாழக்கிழமை மாலை காந்திஜி சென்னை வந்து சேர்ந்தார். அன்றே கல்கத்தா மெயிலில் ஓரிசாவிற்குப் புறப்பட்டு விட்டார். (கஸ்தூரிபா காந்தி பம்பாய் மெயிலில் ஆமதாபாத்திற்குச் சென்றார்.)

ஓரிசா புறப்பாடு

சென்னை நகரில் அண்ணல் தங்கியதெல்லாம் சுமார் இரண்டு மணி நேரம்தான்.

—ஃ—

ஓரிசாவிற்குச் சென்று சுற்றுப்பயணத்தை முடித்து விட்டு 1927-ஆம் ஆண்டிலேயே மீண்டும் ஒருமுறை காந்திஜி சென்னைக்கு வந்தார். டாக்டர் அன்சாரி தலைமையில் காங்கிரசின் ஆண்டு மாநாடு இங்குக் கூடியதே அவர் இவ்வளவு குறுகிய காலத்தில் மீண்டுமொருமுறை சென்னைக்கு வந்ததற்குக் காரணமாகும். ''முடிந்தால் பேரரசிற்குள்ளேயே விடுதலை; முடியாவிட்டால் பேரரசிற்கு வெளியே சென்றுவது விடுதலை'' என்பது அப்போது அண்ணலின் கோட்பாடாக இருந்தது. பண்டித மோதிலால் நேரு ஒருவரைத் தவிர, எம். ஏ. ஜின்னு, மதன் மோகன் மாளவியா, சென்குப்தா, பண்டித ஜவாகர்லால் நேரு முதலிய பெரிய தலைவர்களெல்லாம் பங்கு கொண்ட வரலாற்று முக்கியத்துவம் படைத்த காங்கிரஸ். இந்தச் சென்னைக் காங்கிரஸ் விடுதலை அடைவதற்கு முன் 1887, 1894, 1898, 1903, 1908, 1914, 1927 ஆகிய ஆண்டுகளில் காங்கிரஸ் மாநாடுகள் சென்னையில் நடைபெற்றுள்ளன. விடுதலை கிடைத்தபின் 1955-ஆம் ஆண்டில் (சென்னை அருகே) ஆவடியில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாடு எல்லோரும் அறிந்ததே. இதில் ஒவ்வொரு காங்கிரசிற்கும் ஒவ்வொரு வகை முக்கியத்துவம் உள்ளது. ஆனாலும், விடுதலை பெறுவதற்கு முன் 1927-இல் சென்னையில் நடைபெற்ற காங்கிரசில்தான் முதன் முதலாக ''இந்தியாவின் குறிக்கோள் முழு விடுதலையே'' என்று அறிவிக்கப்பெற்றது. ஆகையால் அதற்கு ஒரு தனி முக்கியத்துவம் உண்டு. 1927-க்கு முன்பெல்லாம் காங்கிரசின் குறிக்கோள் 'டொமினியன் அந்தஸ்து'ப் பெறுவதுதான்.

இந்த மாநாட்டிற்கு வந்தபோதும் காந்திஜியின் உடல் நிலை சீரடைந்து விடவில்லை. அவருடைய இரத்த அழுத்தம் இன்னும் அதிகமாகவே இருந்தது. வேலைகளை எந்த அளவு குறைத்துக்கொள்ள வேண்டுமோ அந்த அளவு குறைத்துக் கொள்ள வேண்டுமென்றும், முழு ஓய்வு அவசியம் என்றும்

டாக்டர்கள் அவருக்கு யோசனை கூறினர். ஆகையால் காங்கிரஸ் கூட்ட விவாதங்களில் காந்திஜி அதிக நேரம் பேச முடியவில்லை. பொருள் ஆய்வுக்குழுவின் முக்கியமான கூட்டங்கள் முடிவடைந்த பின் காந்திஜி போய்விடுவார் என்றும் அவர் வேறு எங்கும் செல்லாமல் நேரே ஆமதாபாத்திற்குச் சென்று ஓய்வு எடுத்துக்கொள்வாரென்றும் முதலில் கூறப்பெற்றது. பொருள் ஆய்வுக்குழுக் கூட்டத்திலும் அவர் வாதங்களில் பங்குகொள்ளக் கூடாது என்று முடிவு செய்யப்பெற்றது.

உடல்நிலை

23-12-27

கல்கத்தா மெயிலில் வந்த காந்திஜி, கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்தில் இறங்கி, தாம் தங்கிய இடத்திற்கு மோட்டாரில் சென்றார். இம்முறை அவர் சேத்துப்பட்டில் உள்ள ரெங்க விலாஸ் கட்டிடத்தில் தங்கினர். காங்கிரஸ் மாநாடு நடைபெறுவதற்காக நிர்மாணிக்கப் பெற்றிருந்த காங்கிரஸ் நகரில் அனைத்து இந்தியக் கதர் பொருட்காட்சியை அவர் திறந்து வைத்தார். இராஜாராம் பாண்டியன் தலைமையில் ஆண் தொண்டர்களும் கமலாதேவி சட்டோபாத்யாயா தலைமையில் பெண் தொண்டர்களும் கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார்கள். இராஜேந்திரப் பிரசாத், சங்கர்லால் பாங்கர், ஆசாத், ராஜாஜி, போன்ற பெரிய தலைவர்களெல்லாம் கூட்டத்திற்கு வந்திருந்தனர். சரோஜினி நாயுடு. எஸ். சீனிவாச ஐயங்கார், வல்லபாய் பட்டேல், டாக்டர் அன்சாரி ஆகியோருடன் காந்திஜி வந்தார். காந்திஜிக்கு உடல் நலம் இல்லாததால் அவர் தம் பேச்சைச் சுருக்கிக்கொண்டார். தாம் உத்கல் பகுதியிலிருந்து நேரே சென்னைக்கு வந்திருப்பதாகவும் அங்கே தாம் கண்ட பாமர ஏழை மக்களை யார் கண்டாலும் கதரின் முக்கியத்துவத்தை உணரத் தவற மாட்டார்களென்றும் அவர் கூறினார். இங்குக் கதர்ப் பொருட்காட்சியுடன் இந்தி கண்காட்சி ஒன்றையும் அவர் திறந்து வைத்தார். இதை மதன் மோகன்மாளவியா திறந்து வைப்பதாக இருந்தது. அவர் வராததன் காரணமாக மகாத்மா காந்தியே அதைத் திறந்து வைக்குமாறு ஆயிற்று.

பொருட் காட்சி

இங்கு காந்திஜி நிகழ்த்திய உரையை ராஜாஜி மொழி பெயர்த்துக் கொண்டிருந்தார். நடுவே ஓர் ஆந்திரர் எழுந்து, கூட்டத்தில் தெலுங்கு மொழி தெரிந்தவர்கள் அதிகம் இருப்பதால் தெலுங்கிலும் மகாத்மாவின் சொற்பொழிவை மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டும் என்றார்.

மொழி பெயர்ப்பு

பொதுவாகச் சென்னையில் காந்திஜியின் பேச்சைத் தெலுங்கிலும் மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டும் என்ற கோரிக்கை பலமுறை அவரிடம் தெரிவிக்கப் பெற்றிருக்கிறது. (பின்னால் 1946-இல் இதை ஆந்திரர்கள் அதிகம் வலியுறுத்தினார்கள்.) மொழிவாரி மாநிலப் பிரிவினைக்கு முன்னர், சென்னை மாநகரில் தங்களுக்கும் உரிமை இருக்கிறது என்று ஆந்திரர்கள் கோரி வந்தனர். ஆகவே, தெலுங்கிலும் மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டுமென்று கூட்டத்தில் எழும் கோரிக்கைக்கு அரசியல் நோக்கம் பின்னணியாக இருக்கலாம் என்று காந்திஜி கருதியிருக்கக் கூடும் என்று தோன்றுகிறது. ஏனெனில் இந்தக் கோரிக்கை எழுந்த ஒவ்வொரு முறையும் அதற்கு காந்திஜி இணங்கியதேயில்லை. இம்முறை இவ்வாறு ஒருவர் எழுந்து காந்திஜியின் பேச்சைத் தெலுங்கிலும் மொழி பெயர்க்க வேண்டுமென்று கூறியபோது, காந்திஜி சொன்னார்: ''நான் மிகவும் சுருக்கமாகவே பேசப்போகிறேன். தெலுங்கில் இதை மொழி பெயர்த்துச் சொன்னால், இந்துஸ்தானியிலும் மொழி பெயர்த்துக் கூறுமாறு கேட்கக்கூடியவர்கள் இங்கு இருக்கிறார்கள். தேசத்திற்குப் பொதுவான காரியங்களில் மாநில அபிமானத்தைக் காண்பிக்காமல் இருப்பது நல்லது. நான் விரைவில் ஆந்திரப் பிரதேசத்தில் சுற்றுப் பயணம் செய்யப்போகிறேன். அப்போது என் சொற்பொழிவுகளைத் தெலுங்கு மொழியிலேயே மொழி பெயர்த்துச் சொல்ல ஏற்பாடு செய்கிறேன். சென்னையில் ஆந்திரர்கள் பலர் இருப்பதை நான் அறிவேன். பொறுமையுடன் என்னுடைய சொற்பொழிவைத் தமிழில் மட்டும் மொழி பெயர்த்துச் சொல்ல அனுமதிக்குமாறு வேண்டுகிறேன். ஆந்திரர்களும் தமிழர்களும் அதிக சகோதரபாவத்துடன் வாழ வேண்டுமானால் ஆந்திரர்கள் தமிழையும் தமிழர்கள் தெலுங்கு மொழியையும் கற்றுக்கொள்ள வேண்டும். இன்னொரு வேண்டுகோளையும் நான் கூறவேண்டியிருக்கிறது. நாம் எல்லோரும் விரைவில் இந்தி மொழியைக் கற்றுக்

கொண்டு நம் நடவடிக்கைகளை இந்தி மொழியிலேயே நடத்தக் கூடிய நிலையை அடைய வேண்டும். அவ்வாறு செய்துவிடின் அந்நிய மொழியைப் பயன்படுத்த வேண்டிய அவமானம் இல்லாமற் போகும்.''

25-12-27

மாநாடு

ஸ்பர் டாங்க் மைதானத்தில் காங்கிரஸ் மாநாடு தொடங்கியது. முதலில் தொண்டர்கள் அணிவகுப்பாக வர, பின்னால் தலைவர்கள் வந்தார்கள். கடைசியாக டாக்டர் அன்சாரியும் மகாத்மா காந்தியும் வந்தார்கள். அவர்கள் வந்தபோது மக்கள் எல்லோரும் எழுந்து நின்று ''மகாத்மா காந்திக்கு ஜே'' என்று விண்ணதிர முழக்கமிட்டனர்.

இந்து முஸ்லிம்

இந்தக் காங்கிரஸ் நடைபெற்ற சமயத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மனக் கசப்பு அதிகமாயிருந்தது. முஸ்லிம் மசூதிகள் முன்பு இந்துக்கள் வாத்தியம் வாசித்துக் கொண்டு செல்வதை முஸ்லிம்களும் முஸ்லிம்கள் பசுவதை செய்வதை இந்துக்களும் கடுமையாக எதிர்த்தனர். இதன் காரணமாக வட இந்தியாவில் சில இடங்களில் மோதல்களும் நடைபெற்றன. ஆகவே இந்தக் காங்கிரசில் இச்சிக்கலைத் தீர்க்க ஒரு தீர்மானம் கொண்டுவரப் பெற்றது. இந்தத் தீர்மானத்தை காந்திஜியே தயாரித்துக் கொடுத்தார். கூடியவரை ஒரு வகுப்பினர் மற்ற வகுப்பினரின் மன உணர்ச்சிகள் பாதிக்கப்படாது நடந்து கொள்ள வேண்டுமென்று இந்தத் தீர்மானம் கேட்டுக்கொண்டது. இந்துக்கள் தரப்பில் பண்டித மாளவியாவும் முஸ்லிம்கள் தரப்பில் மௌலானா முகமதலியும் மகாத்மாவின் இந்தச் சமரசத் தீர்மானத்தை முழு மனதுடன் ஆதரித்தார்கள். மனமாற்றத்தின் பேரில் மத மாற்றம் செய்வதல்லாது வன்முறையின் மூலமோ அல்லது பண ஆசைகாட்டியோ அல்லது வேறு நியாயமற்ற வழிதுறைகளின் மூலமோ மதமாற்றம் செய்யக்கூடாது என்றும் பெற்றோர்கள் சம்மதமில்லாது பதினெட்டு வயதிற்குக் குறைந்தவர்களை மதமாற்றம் செய்யக்கூடாது என்றும் இந்தத் தீர்மானம்கூறிற்று. இதில் காங்கிரஸ் செயற்குழுவினர் ஓர் உடன்பாட்டிற்கு வருவதற்கு காந்திஜி மிகவும் உதவியாக இருந்தார். ''இந்தச் சிக்கலிலும் மற்றும் இதைப்போன்ற சிக்கல்களிலும் நீண்ட

காலமாக இருந்து வந்த தகராறுகள் தீருமாறு செய்ததன் பெருமை காந்திஜியையே சாரும். வாதங்களில் பங்கு கொள்வதற்கு அவருடைய உடல்நிலை அவருக்கு இடமளிக்க வில்லை. ஆனாலும் இந்து, முஸ்லிம் தலைவர்கள் மிகுந்த விவேகத்துடனும் கட்டுப்பாட்டுடனும் இச்சிக்கலை அணுகக் காரணமாயிருந்தவர் அவரே'' என்று ''இந்து'' (29-12-27) கூறியிருந்தது.

28-12-27

உடல் சோதனை

கூயரோக வல்லுநரான டாக்டர் முத்து இன்று காந்தி ஜியைச் சோதித்துப் பார்த்தார். ''காந்திஜியின் உடலில் கோளாறு எதுவும் இல்லை. அவருடைய இரத்த அழுத்தம் சற்று அதிகமாய் இருக்கிறது என்றாலும் அவருடைய இரத்த அழுத்தத்தைக் காட்டிலும் அவருடைய மனத்தைப் பற்றியே அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் தொடர்ந்து அவர் பல மணி நேரம் மூளைக்கு வேலை கொடுக்கிறார். அவர் உணவு உண்ணும் போது கூடப் பார்வையாளர்கள் வந்து பேசிக் கொண்டிருக் கின்றனர். இதனால் அவருக்குப் போதிய ஓய்வோ தூக்கமோ இல்லாமற் போய்விடுகிறது. ஆகையால் அவர் ஏழு மணி நேரம் தூங்கவேண்டும். நண்பகலில் இரண்டு மணி நேரம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறியிருக்கிறேன். பொதுமக்கள் இதில் ஒத்துழைத்து அவர் நீண்டநாள் வாழ உதவ முடியும்'' என்று டாக்டர் தமது அறிக்கையில் கூறியிருந்தார்.

புறப்பாடு

இன்று இரவு காந்திஜி தமது குழுவினருடன் சென்னை யிலிருந்து பம்பாய்க்குப் புறப்பட்டார். பம்பாயிலிருந்து அவர் ஆமதாபாத்திற்குச் சென்று தமது ஆசிரமத்தில் சில மாதங்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற திட்டத்துடன் சென்றார். கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக அவர் பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்தில் இரயில் ஏறினார். பொதுவாக, சென்னை காங்கிரசைப் பற்றி காந்திஜிக்கு மனநிறைவுதான். பம்பாய்க்குத் திரும்பிச் சென்றபின், ''சென்னை காங்கிரஸ் ஈடு இணையற்றது. இந்து முஸ்லிம் ஒற்றுமைக்கு அது அடித்தளம் போட்டிருக்கிறது.'' என்று அவர் கூறினார்.

1928இல் சைமன் கமிஷன் பகிஷ்காரமும் பார்தோலி சத்தியாக்ரகமும் நடந்தன. நவம்பர் மாதம் லாலா லஜபதி ராய் தடியடிபட்டு மாண்டார். மோதிலால் நேரு தலைமையில் கூடிய கல்கத்தா காங்கிரசில், ''டொமினியன் அந்தஸ்து வேண்டும் என்ற குறிக்கோளுக்குக் காங்கிரஸ் அளித்த கால வாயிதா 1929 டிசம்பர் 31ஆம் தேதியுடன் முடிவடைவதால் அடுத்த நாளிலிருந்து காங்கிரசின் குறிக்கோள் முழு விடுதலையாகும்''என்று காந்திஜி அறிவித்தார்.

கால வாயிதா முடிவு

காந்திஜி 1929இல் ஐரோப்பாவிற்குச் செல்வதாக இருந்தது. ஆனால் உள்நாட்டில் இருந்த நெருக்கடியான நிலைமையை முன்னிட்டு, அவர் ஐரோப்பாவிற்குச் செல்லவில்லை. பின்னர் அவர் சிந்து மாநிலத்தில் சுற்றுப்பயணம் செய்து விட்டு டில்லிக்கு வந்து வைசிராயைச் சந்தித்தார். பர்மாவுக்குச் சென்ற வழியில் கல்கத்தாவில் பொது இடத்தில் வெளிநாட்டுத் துணிகளைச் சொக்கப்பனை கொளுத்தியதற்காகக் கைது செய்யப்பட்டார். ஆனாலும் பர்மாவிற்குச் சென்று திரும்பும் வரை அவரை விடுதலை செய்து விட்டு விட்டார்கள். மார்ச் 5ஆம் தேதியன்று காந்திஜி பர்மாவிற்குப் புறப்பட்டார். பர்மாவிற்குச் சென்று கதர் நிதிக்காகப் பணம் வசூல் செய்தசெய்தபோது, தாராளமாகப் பண உதவி செய்யுமாறு ஓர் அறிக்கை விடுத்தார். அறிக்கையில் நகரத்தார்களை நோக்கி ''கோடிக்கணக்கிலும், இலட்சக்கணக்கிலும் புரட்டுபவர்களான செட்டிகள் என்னுடைய வேண்டுகோளை நிராகரிக்காதிருப்பார்களாக! நானும் அவர்கள் வகுப்பைச் சேர்ந்தவன் தான் என்பதை மறக்காமல் இருக்கட்டும். நான் ஒரு குஜராத்திச் செட்டி.'' என்று அவர் கூறியிருந்தார். திலகர், லாலா லஜபதிராய், சுபாஸ் சந்திரபோஸ் முதலியோரைச் சிறைவைத்திருந்த

பர்மா பயணம்

மாண்டலே இந்தியர்களுக்கு ஒரு புனித யாத்திரைத்தலம் என்று அங்குப் போயிருந்தபோது அவர் கூறினார். இரண்டு வாரங்கள் பர்மாவில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு மார்ச் 24ஆம் தேதி அவர் திரும்பிவிட்டார். இதற்குச் சில நாட்கள் கழித்துத்தான் டில்லி மத்திய சட்டமன்றத்தில் பகவத் சிங்கும் ராஜகுருவும் குண்டுகளை வீசியதாகும். சிறையில் அறுபத்தியோரு நாட்கள் உண்ணு நோன்பு இருந்து யதீந்திர நாத்தாஸ் காலமானார்.

15-5-29

திருத்தணி

1929 ஏப்ரல் 6ஆம் தேதியன்று ஆந்திராவில் காந்திஜி சுற்றுப் பயணத்தைத் தொடங்கினார். அந்தச் சுற்றுப் பயணத்தின் மத்தியில் அவர் திருத்தணிக்கு வந்தார். 1929-இல் தமிழகத்திற்கு வந்தார் என்று நாம் குறிப்பிடுவது, இந்தத் திருத்தணி வருகையைத்தான். அப்போது திருத்தணி சென்னை மாநிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. மொழிவாரி மாநிலப் பிரிவினைக்குப் பின்னர்-ஒரு போராட்டம் நடத்தி-அது தமிழகத்திற்கு வந்தது. என்று அவர் திருப்பதிக்குச் சென்றாரோ அன்று (அதாவது 15-5-29 ஆம் தேதி) அவர் திருத்தணிக்கு வந்திருக்கிறார். திருத்தணியில் அவருக்குக் கிடைத்த நிதிவகுல் ரூ. 115-12-0

— × —

விறுவிறுப்பாகவும் உக்கிரமாகவும் விடுதலைப் போராட்டம் நடைபெற்ற ஆண்டு 1930 ஆகும். அந்த ஆண்டில் தான் உப்புச் சத்தியாக்ரகம்-தண்டியாத்திரை-நடைபெற்றது; வரிகொடா இயக்கம் தொடங்கப் பெற்றது; வெளிநாட்டுத் துணிமணிகள் வெளியே தலைகாட்ட முடியாது மறியல்கள் நடைபெற்றன. இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்தியாக்ரகிகள் சிறைச்சாலைக்குள் அடைபட்டனர். வைசிராய் கூட்டிய வட்டமேசை மாநாட்டில் காங்கிரஸ் அமரவேண்டிய ஆசனங்கள் காலியாக இருந்தன. தலைவர்கள் யாருமே வெளியில் இல்லாததால் ஆண்டுதோறும் நடைபெறும் காங்கிரஸ் மாநாடு கூட நடைபெறவில்லை.

எல்லோரும் கைது

1930-இல் காந்திஜி தொடங்கிய சட்ட மறுப்புப் போராட்டத்தில் தமிழகம் நல்ல பங்கு பெற்றது. சட்ட மறுப்புக்கு முந்தியும் பிந்தியும் சட்ட மறுப்பின் போதும் தமிழகத்தில் ஏராளமான பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடந்தன. சி. இராஜகோபாலாச்சாரி முன் நின்று சட்ட மறுப்பு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொண்டிருந்தார். 1930 ஏப்ரல், மே மாதங்களில் வேதாரண்யம் உப்புச் சத்தியாக்ரகம் நடைபெற்றது.

சட்ட மறுப்பு

உப்பிற்காக அறப்போர் நடத்தியது உலகத்திற்கு ஒரு புதுமை. ஆனாலும் அது இந்திய விடுதலைப் போராட்டங்களில் தனிச் சிறப்பு வாய்ந்தது. "பிரிட்டிஷ் அரசாங்கம் போட்ட வரிகளிலெல்லாம் உப்பு வரியே மிகவும் அநீதியானது. ஏழைகளின் கண்ணோட்டத்துடன் நான் இதைக் கூறுகிறேன். இந்தியாவில் ஏழைகளிலும் ஏழைகளாக இருக்கிறார்களே அவர்களுக்காகத்தான் முக்கியமாக விடுதலை இயக்கம் நடைபெறுகிறது. ஆகையால் இந்தத் தீங்கை

உப்புச் சத்தியாக்ரகம்

(உப்பு வரியை) எதிர்ப்பதுடனேயே விடுதலை இயக்கம் தொடங்கும். இதில் வியப்பொன்றும் இல்லை. இந்தக் கொடுமையான ஏகபோக உரிமைக்கு இவ்வளவு காலமாக நாங்கள் பணிந்து கொண்டிருந்துவிட்டோமே அதுதான் வியப்பளிக்கக்கூடியது,'' என்று வைசிராய்க்கு எழுதிய கடிதத்தில் காந்திஜி கூறிப் போராட்டத்தைத் தொடங்கினார். ''காந்தியடிகள் நடத்திய சுதந்திரப் போரில் உப்பு சத்தியாக்கிரகமே மிகவும் முக்கிய கட்டம். அதோடு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் உண்மையில் முடிந்து விட்டது. 1934-35 தேர்தல்களின் வெற்றி, முதல் காங்கிரஸ் மந்திரி சபைகள், 1940-45 இயக்கங்கள், 1947-இல் பூரண சுதந்திரம் இவையனைத்தும் உப்பு சத்தியாக்ரகத்தின் பலன்களேயாகும்'' என்று க. சந்தானம் ''வேதாரண்யம்'' என்ற நூலுக்கு எழுதிய முன்னுரையில் கூறியிருப்பதில் நிறைய உண்மை இருக்கிறது. சர்தார் வேதரத்தினம் ''மதிப்பற்ற உப்பினுள் பிரம்மாண்டமான நம் தேசத்தின் சுதந்திரத்தைப் புகுத்தி உலகம் கண்டு கேட்டறியாத ஓர் பேரியக்கமாக்கி, இந்நாட்டின் குழந்தை முதல் வயோதிகர் ஈறாக, பாமரர் முதல் பண்டிதர் வரை, பரம ஏழை முதல் பெரிய தனவந்தர் உள்பட, சாதி, மத, வகுப்பு வர்க்க வித்தியாசமின்றி இருபாலரும் ஈடுபடச் செய்த முதல் பொது ஜனப் பேரியக்கமாகும், அண்ணல் காந்தி அடிகள் வகுத்த சுதந்திரப் போர்களுள் முதன்மையான இந்த உப்புப் போர். இதைத் தான் நமது ஆஸ்தான கவிஞரும் 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' எனச் சிறப்பித்துப் பாடினர்,'' என்று அழகாக வர்ணித்துள்ளார். பண்டித மோதிலால் நேருவோ, ''இலங்கைக்கு இராமர் படையுடன் சென்றதைப் போன்றது காந்திஜியின் உப்பு யாத்திரை'' என்று கூறிப் புகழ்ந்தார். சட்டத்தை மீறி உப்புக் காய்ச்சுவதற்காக, காந்திஜி சபர்மதியிலிருந்து ஒரு சிறிய ''படை''யுடன், தண்டிக்குப் புறப்பட்டார். காந்திஜியுடன் தண்டிக்குச் சென்ற படையில் தமிழர்கள் - சபர்மதியில் இருந்த தொண்டர்கள் - இருந்தார்கள். ஆனாலும் உப்புச் சத்தியாக்ரகத்தில் தமிழர்களின் தளர் விலாப் பங்கு அத்துடன் முடியவில்லை.

ராஜாஜி தலைமையின் கீழ்த் தனியாக ஓர் உப்புச் சத்தியாக்ரகமும் தமிழகத்தில் நடைபெற்றது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற உப்புச் சத்தியாக்ரகங்களில் காந்திஜி மேற்கொண்ட தண்டி யாத்திரைக்கு அடுத்த

பெருமை உடையது வேதாரண்யத்தில் ராஜாஜி தலைமையின் கீழ் நடைபெற்ற உப்புச் சத்தியாக்ரகம். காந்திஜி தண்டி யாத்திரையை மேற்கொண்ட ஒரு மாதத்திற்குப்பின் தொடங்கப் பெற்றது இந்த யாத்திரை. இது, காந்திய விடுதலை இயக்கத்தில் தமிழகத்திற்குத் தன்னிகரில்லா இடத்தை அளித்தது. காந்திஜியின் ''மனச்சாட்சி'' போன்றவர் என்று கருதப்பெற்ற ராஜாஜி தலைமை தாங்கியது இதற்கு ஒரு காரணம். இந்தப் போராட்டத்தை முறியடிப்பதற்காக அப்போது தஞ்சை மாவட்டக் கலெக்டராக இருந்த தாரன் ஐ. சி. எஸ். தலைமையின் கீழ் அதிகார வர்க்கம் கையாண்ட அடக்கு முறைகள் அறப்போர்ப் படையிடம் பலிக்காமற்போனது மற்றொரு காரணம். ''1930-இல் இந்தியா எங்கிலும் காங்கிரசை அடக்கப் பிரிட்டிஷ் சர்க்கார் கைக்கொண்ட ஆயுதமான கனத் தடியைக் கண்டுபிடித்தது தாரன் துரையே. சிலர் இந்தக் கௌரவம் தாரன் துரையிடம் வேலை பார்த்த இந்திய அதிகாரி ஒருவருக்கே சேருமென்பர். அதனை நம்ப என் மனம் இடந்தரவில்லை. அது எப்படி இருந்தாலும், அதன் பூராக் கௌரவத்தையும் தாரன் துரைக்கே தர நான் ஆசைப்படுகிறேன்'' என்று ராஜாஜி கூறியிருக்கிறார். இவ்வாறு தடியடியை மேற்கொண்டதன் மூலம் தென்னைப்பிரிக்காவில் ஸ்மட்ஸ் துரை கூடச் செய்ய விரும்பாத ஒரு அடாத காரியத்தை தாரன் செய்துவிட்டார் என்றார் ராஜாஜி.

வேதாரண்யம் யாத்திரை பெருமை

1930 ஏப்ரல் 6-ஆம் தேதியன்று, காலை 8-30 மணிக்கு, காந்திஜி தண்டி என்ற இடத்தில் உப்பு எடுத்தார். அதன் பின், ''சம்பிரதாயமான முறையில் உப்புச் சட்டம் மீறப்பட்டுவிட்டது. ஆகையால், உப்புக் காய்ச்ச விரும்புவோரெல்லாம் அவ்வாறு செய்யலாம்'' என்று இந்திய மக்களுக்கு அவர் அறிவித்தார். இதற்கு அடுத்த வாரம் ஏப்ரல் மாதம் 13-ஆம் தேதியன்று அதாவது தமிழ் ஆண்டான பிரமதூதா ஆண்டுப் பிறப்பன்று தமிழர் உப்புச் சத்தியாக்ரகப் பட்டாளம் திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் இல்லத்திலிருந்து வேதாரண்யத்திற்குக் கிளம்பியது. உப்பளம் நோக்கிப் புறப்பட்ட இத்தொண்டர் படையை, பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்த ஏராளமான மக்கள் வழியனுப்பி வைத்தனர். டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்

மகள் திருமதி ராஜம்மாள் சௌமியநாராயணன் ராஜாஜிக்குத் திலகமிட்டு வழியனுப்பி வைத்தார்.

98 படை புறப்பட்டது

இந்தப் படையில் தலைவரைத் தவிர மொத்தம் தொண்டர்கள் இருந்தார்கள். இந்த யாத்திரையில் பங்குகொள்ள, பல நூற்றுக்கணக்கான பேர் முன் வந்தும், அவர் ஒரு நூறுபேரை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொண்டார். இவ்வாறு முன் வந்தவர்கள் சாதாரணமானவர்களல்லர். இவர்களில் மிகப் பெரும்பாலோர் சுக வாழ்க்கையை விடுத்து இந்திய விடுதலைப் போராட்ட வேள்வித் தீயில் குதித்தவர்கள். சத்தியத்தை அடிப்படையாகக் கொண்ட ஓர் அறப் போரில் தாயுமானவர் ஞானம் பெற்ற திருச்சி ராப்பள்ளியிலிருந்து அவர் பிறந்த திருமறைக்காடு என்ற வேதாரண்யத்திற்கு இவர்கள் சென்றார்கள். இவர்களில் கீழ்க் கண்ட அலுவல்கள் அவைகளுக்கு நேரே குறிப்பிடப் பெற்றவர்களின் பொறுப்புக்களில் ஒப்படைக்கப் பெற்றிருந்தன.

தொண்டர்களும் குழுக்களும்

1.	முன்னோடி (பயனியர்) குழு :	ஆ. துரைசாமி ஐயர், என். எஸ். நாராயணன்.
2.	சுகாதாரக் குழு :	டி. சுப்பராவ் வகையரு.
3.	சமையல் குழு :	ரெங்கசாமி ஐயங்கார்.
4.	தபால் போக்குவரத்து :	தாணு ஐயர்.
5.	தொண்டர்கள், பொதுத் தலைமை.	சுப்பிரமணியம்
6.	விளம்பரத்துறை :	ஓ. பி. இராமசாமி, கே. வி. இராமன், டி. ஆர். பத்மநாபன்.
7.	ஸ்டோர் :	சீனிவாசன்.
8.	சங்கு ஊதுதல் :	சிவகுருநாதன்.
9.	டங்கா அறைதல் :	கணபதி
10.	தேசியக் கொடி பிடித்தல் :	ஆனந்த்
11.	பிரார்த்தனை :	சுப்பையா

12.	ஆஜர்பட்டி, தக்ளி செய்தல் :	கிருஷ்ணமூர்த்தி
13.	மணியடிப்பவர் :	மணி.
14.	பொக்கிஷம் :	பி. கே. இராமாச்சாரி.
15.	இந்திப் பயிற்சி :	கிருஷ்ணசாமிக் கோனூர்.

இந்த அறப்போர் யாத்திரையில் சென்றவர்களுக்கு யாருமே உணவு அளிக்காமற் செய்து அவர்களைப் பட்டினி போட்டு விட்டால் அவர்கள் உப்பளத்திற்குச் செல்ல முடியாது; போராட்டமும் தோல்வி அடைந்துவிடும் என்று அப்போது மாவட்ட மாஜிஸ்திரேட்டாக இருந்த தாரன் அரை கருதினர். ஆகையால், ''காங்கிரஸ் சத்தியாக்ரகிகளுக்கு இடமோ உணவோ கொடுப்போர் யாவரும் அபராதமும் சிறைத்தண்டனையும் பெறக்கூடிய குற்றம் செய்பவர் ஆவர்'' என்று மாவட்டமெங்கும் அவர் பறையறைவித்தார். ஆனால் மக்களின் கருத்து வேறுவிதமாக உருவாயிற்று. அறப் போரை நேரடியாக ஆதரிக்க முன் வராதவர்கள் கூட, ''அரசாங்கத்தின் சட்டத்தை எதிர்ப்பவர்களைக் கைது செய்யவோ தண்டிக்கவோ அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. ஆனாலும் பரம்பரை பரம்பரையாக இந்தியர்களிடையே வளர்ந்து வந்துள்ள விருந்தோம்பலுக்கு முற்றுப் புள்ளி வைக்க இந்த அதிகாரி யார்?'' என்று கேட்டார்கள். சத்தி யாக்ரகிகளின் யாத்திரை வெற்றிகரமாக நடைபெறுவ தற்கு உறுதுணையாக இருந்த கொடியாலம் ரெங்கசாமி ஐயங் காரை இப்போராட்டத்திற்கு உதவி அளிக்கத் தூண்டியது இந்த எண்ணந்தான். ''அந்நிய நாட்டிலிருந்து உத்தியோகத் திற்காக வந்த ஒருவர் இந்த நாட்டு மக்களுக்கு உணவு அளிக்கக் கூடாதென்று உத்தரவு போட, நாம் அதைப் பார்த்துக் கொண்டு சும்மா யிருப்பதா?'' என்று ஆத்திர மடைந்து தொடக்கத்திலிருந்து இறுதிவரை இப்போராட் டத்திற்கு உறுதுணையாக இருந்தார் அவர். இவரைப் போன்றே, போராட்டக்குழு சென்ற வழியில் இருந்த பெரும் பாலான கிராம மக்களும் எண்ணினர்கள். ஆகையால் யாத்திரைக்குழு சென்ற வழியெல்லாம் சத்தியாக்ரகி களுக்கு விருந்தும் வரவேற்புமாக இருந்தது.

பலிக்கவில்லை

யாத்திரை வழி

ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், திருவளர்ச்சோலை, கல்லணை, கோவிலடி, திருக்காட்டுப்பள்ளி, அக்னீஸ்வரன் கோவில், சாத்தனூர், திருவையாறு, திருக் கண்டியூர், தஞ்சாவூர், நடார், ஐயம்பேட்டை வழுத்தூர், நல்லூர், கும்பகோணம், வலங்கி மான், செம்மங்குடி. ஆலங்குடி, நார்த்தங்குடி, நீடாமங்கலம், பூவாலூர், இராஜப்பையன்சாவடி, மன்னூர் குடி, தட்டாங்கோவில், ஆதிச்சபுரம், விளக்குடி, திருத் துரைப்பூண்டி, மேலமருதூர், தகட்டூர், ஆயக்காரன்புலம் ஆகிய ஊர்களின் வழியாக இக்குழு வேதாரண்யம் போய்ச் சேர்ந்து அங்கு "சத்தியாக்ரக ஆசிரமம்" அமைத்துக் கொண்டு அறப்போர் நடத்தியது. இந்த யாத்திரையின் போது இரண்டே இரண்டு இடங்களில் மட்டும் விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த இரண்டு நிகழ்ச்சி களையும் தவிரப் பொதுவாக அமைதியாகவே சத்தியாக் ரகிகள் ஏப்ரல் 29-ஆம் தேதியன்று வேதாரண்யம் போய்ச் சேர்ந்தனர். வேதங்கள் வணங்கி, மதாச்சாரியார்கள் பாடி, மறைக் கதவு திறந்து, நசிகேதன் போன்ற மா முனிவர்கள் தவம் புரிந்து, பரஞ்சோதி, தாயுமானார் போன்ற பெரி யோர்கள் பிறந்து புனிதமாக்கிய புண்ணியத்தலம் வேதா ரண்யம். அதில் மற்றொரு வேள்வியை ராஜாஜி நடத்தி வைத்தார். இந்தப் படை வேதாரண்யத்தில் தங்கியிருந்து அறப்போர் நடத்த வேண்டும். ஆனால் அங்குப் பலர் அவர் களுக்கு இடம் அளிக்கத் தயாராயில்லை. இந்நிலையில் சுமார் முப்பது வயதான ஓர் இளைஞர் அவர்களுக்கு இடம் அளித்தது மட்டுமல்லாமல், வரவேற்புக் கூட்டத்திற்கும் தலைமை தாங்கினார். இவர் தான் சர்தார் வேதரத்தினம்.

ராஜாஜி கைது

இவர்களில் பொறுக்கி எடுத்த பத்துத்தொண்டர் களுடன் மே முதல் தேதியன்று அதிகாலையில் உப்பு எடுப் பதற்காக ராஜாஜி, (உள்ளூர் வாசியான இராஜகோபாலய்யர் என்பவர் வழிகாட்டிச் செல்ல) அகஸ்தியம் பள்ளியை நோக்கி நடந் தார். அங்கு உப்பு எடுத்த பின் அவர் கைதானார். தொண்டர்களைப் போலீசார் கைது செய்யாத தால் அவர்கள் திரும்பி வந்து சேர்ந்தனர். ராஜாஜிக்கு ஆறுமாத வெறுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றது.

பயங்கரமான அடக்கு முறையை ஏவிய தாரணைக்கூட அஹிம்சை ஓரளவு வெற்றி கண்டது. வேதாரண்யத்தில் ராஜாஜியைக் கைது செய்து அவரை இரயில்

அஹிம்சை வென்றது

வண்டியில் திருச்சிச் சிறைக்கு அனுப்பியபோது அதே இரயிலில் தாரனும் ஏறி, ராஜாஜி இருந்த பெட்டிக்குள் நுழைந்து அவருடன் கை குலுக்கி உரையாடிக் கொண்டே சென்றார். அது மட்டுமல்ல, ராஜாஜிக்குக் காப்பியும் சிற்றுண்டியும் கொண்டு வந்து கொடுக்குமாறு, அவருடைய சிப்பந்திகளுக்கு அவர் உத்திரவிட்டபோது அங்கிருந்தவர்களுக்கெல்லாம் அது பெரும் வியப்பாய் இருந்தது.

இதற்கு அடுத்தாற்போல் இந்தப் போராட்டத்திற்குக் க. சந்தானமும் அவர் கைதானபின் மட்டப்பாறை வெங்கட்

அனைவரும் கைது

ராமையரும் அவருக்குப் பின் கே. எஸ். சுப்ர மணியமும் அவருக்குப் பின் ஜி. இராமச் சந்திரனும் சர்வாதிகாரிகளாக நியமிக்கப் பெற்றார்கள். மே 29-ஆம் தேதியன்று கடைசி யாக ஜி. இராமச்சந்திரன் சர்வாதிகாரியாக இருந்தபோது, தொண்டர்கள் அனைவரும் கைதாகிவிட்டதால், அப்புறம் சர்வாதிகாரியை நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட வில்லை. அன்று வேதாரண்யத்திற்கு வந்திருந்த டாக்டர் ராஜனும் கைது செய்யப்பெற்றார்.

ஒரு கட்டத்தில் வேதாரண்யம் ''சத்தியாக்ரக ஆசிரமத் தில்'' தொண்டர்களுடைய எண்ணிக்கை அங்கு வைத்துச் சமாளிக்கக் கூடிய அளவுக்கும் அதிகமாகக்

மதுரையின் பங்கு

கூடிவிட்டதால், அவர்களைப் பிரித்து வேறு இடங்களுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆகவே வண்டல் கிளை ஆசிரமத் திற்குச் சிதம்பரையர் தலைமையில் ஒரு குழுவும் ஆயக்காரன் புலம் கிளை ஆசிரமத்திற்கு பாலகிருஷ்ணன் தலைமையில் ஒரு குழுவும் அகஸ்தியம் பள்ளிக் கிளை ஆசிரமத்திற்கு தாணுவை யர் தலைமையில் ஒரு குழுவும் அனுப்பப்பெற்றன. இவர் கள் ஆங்காங்கே இருந்து அறப்போர் நடத்திக்கொண்டு வந்தார்கள். மதுரை அ. வைத்தியநாதையர், திருச்சி டாக்டர் ராஜன் ஆகியோர் யாத்திரையின்போது இடை யிடையே வந்து போய்க்கொண்டிருந்தனர். மே 3-ஆம் தேதியன்று சத்தியாக்ரக ஆசிரமத்திற்குள் போலீசார்

நுழைந்து அங்குச் சேகரித்து வைக்கப்பெற்றிருந்த உப்பை அள்ள முயன்றபோது தொண்டர்கள் அதைச் சூழ்ந்து ஒருவர் கையை ஒருவர் இறுகப் பிடித்து உட்கார்ந்து கொண்டு உப்பை அள்ள விடாமல் செய்தனர். அவ்வாறு மறியல் செய்தவர்களில் அ. வைத்தியநாதையரும் ஒருவராவார். மதுரைத் தொண்டர்களான கே. ஏ. கிருஷ்ணமாச்சாரியும் வீராசாமியும் கோவைத் தொண்டரான ராஜுவும் இம்மறியல் போராட்டத்தில் கடைசி வரை உப்புக் குவியலின் அருகே படுத்துக் கிடந்து, மூர்ச்சையடைந்து விட்டார்கள். இதற்கு மறுநாள் (மே 4) நள்ளிரவில் தான் மகாத்மா காந்தி தண்டி உப்பு சத்தியாக்ரகத்தின் காரணமாகக் கைது செய்யப் பெற்றார். காந்திஜி கைதாகிய நாளன்று தான் இங்குக் க. சந்தானமும் சர்தார் வேதரத்தினமும் கைதானார்கள். இதன் பின்னர் வேதாரண்யத்தில் பிறப்பிக்கப்பெற்ற தடை உத்தரவை மீறி ஏ. வைத்திய நாதையர், என். எஸ். வரதாச்சாரி, மதுரை பஞ்சரத்தினம் ஆகியோர் கைதானார்கள். முதன் முதலாகப் புளியம் மிளாறு அடி வாங்கியவர்கள் வைத்தியநாதையரும் என். எஸ். வரதாச்சாரியும் ஆவர். இந்தியாவிலேயே உப்புச் சத்தியாக்ரகத்தில் முதன் முதலாகக் கைதான பெண்மணி தமிழகத்தைச் சேர்ந்த ருக்மணி இலட்சுமிபதி என்பது தமிழர்கள் பெருமையுறத் தக்கதாகும். இவர் கைதான அன்று (மே 14) திருவண்ணுமலை ந. அண்ணுமலைப் பிள்ளையும் கைதானார். இந்திப் பிரச்சார இயக்கத்தில் தீவிரப் பங்கு கொண்டவரான ஹரிஹர சர்மாவும் அரிஜன இயக்கத்தில் பின்னர் பங்கு கொண்ட ஆனந்த தீர்த்தாவும் இப் போராட்டத்தில் பங்கு கொண்டு கைதானார்கள்.

போலீசார் கெடுபிடி

இந்த அறப்போருக்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பும் பாராட்டத் தக்கதாய் இருந்தது. வழி நெடுக, ஒவ்வொரு ஊரிலும் மக்கள் தொண்டர்களுக்கு நல்ல விருந்துகளும் வரவேற்பும் அளித்து மகிழ்வித்தார்கள். சில இடங்களில் தொண்டர்கள் எங்குத் தங்கக் கூடும் என்று முன்கூட்டியே போலீசார் யூகித்து அந்த இடங்களையெல்லாம் பூட்டிவைத்துப் பார்த்தார்கள். உதாரணமாகத் தொண்டர் படை அக்னீஸ்வரன் கோவிலுக்கு வந்தபோது, அங்குள்ள சத்திரஞ் சாவடிகளையெல்லாம் பூட்டி, சாவிகளைப் போலீசார் வைத்துக் கொண்டனர். நடார் என்ற ஊருக்குள் தொண்

டர்கள் நுழைந்தபோது, போலீசார் கெடுபிடியால், அங்கிருந்த நிலச் சொந்தக்காரர்களெல்லோரும் வீட்டைப் பூட்டி வெளியேறிச் சென்றுவிட்டனர் என்பது தெரிந்தது. ஆனாலும் தொண்டர் படை பட்டினி கிடக்குமாறு மக்கள் விட்டு விடவில்லை. அந்த ஊரைத் தாண்டிச் சிறிது தூரம் சென்றபின் சாலையில் ஒரு இடத்தில் பெரிய கொப்பரைகளில் நீர்மோர் வைத்துத் தொண்டர்களுக்காக மக்கள் காத்துக்கொண்டிருந்தனர். நடார்வாசிகளும் வேறு எங்கும் போய் விடவில்லை. சற்றுத் தொலைவில் உள்ள தண்டாங்கோரை என்ற இடத்திற்குத் தொண்டர்கள் சென்றபோது, அங்கு அளிக்கப்பெற்ற வரவேற்புக் கூட்டத்தில் அவர்கள் வந்திருந்து மகிழ்ச்சியுடன் பங்கு கொண்டனர். மன்னார்குடியிலோ ஒரே அரசவிருந்துதான்! லட்டு, மிட்டாய், பலாப்பழம், வாழைப்பழம், பேரீச்சம்பழம், உருளைக்கிழங்கு பஜ்ஜி, வடை, அப்பளம் ஆகியவற்றுடன் விருந்து. ஆயக்காரன் புலத்திற்கும் வேதாரண்யத்திற்கும் சற்றுச் சமதூரத்திற்குத் தொண்டர் படை வந்தபோது, தொண்டர்களுக்காக ஒருவர் இளநீர்க்காய் களை வெட்டி வைத்துக் காத்துக்கொண்டிருந்தார். ஆனால் அதேசமயம் (தொண்டர் அணிக்கு முன்னால் சென்றுகொண்டிருந்த) சி. ஐ. டி. அதிகாரிகள் தாகமாயிருக்கிறது என்று அவரிடம் இளநீர் கேட்டபோது அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று மறுத்து விட்டார். வேதாரண்யத்திலும் சுற்றுப்புறத்துக் கிராமங்களிலும் சத்தியாக்ரகத் தொண்டர்களைப் புறக்கணிக்கச் சொன்ன அதிகார வர்க்கத்தையே பொதுமக்கள் அடியோடு புறக்கணித்து விட்டனர். நாவிதர் முதல் வர்த்தகர்கள், தனவந்தர்கள் ஈறாக எல்லோரும் எல்லா உதவிகளையும் அவர்களுக்கு மறுத்து விட்டனர். இதனால் அதிகார வர்க்கம் அடைந்த சங்கடங்கள் வர்ணனையில் அடங்கா.

அறப்போர் வீரர்களுக்கு அன்புடன் உதவவேண்டுமென்று, மக்கள் எத்தகைய ஆர்வத்தோடு இருந்தனர் என்பதைக் குறித்து சர்தார் வேதரத்தினம் சித்தரித்துள்ள ஒரு காட்சியை இங்கே குறிப்பிட்டு இந்தப் போராட்ட வரலாற்றை முடிப்போம்: ''சத்தியாக்ரகிகள் முகாம்களைக் கலைத்து விட்டு ஊர் திரும்புகையில் அரசாங்கத்தார் அவர்கள் உணவு முதலிய வசதிகள் பெறுவதை விரும்ப

ஆலமர விருந்து

வில்லை. ஊருக்கு ஊர் சென்று சாப்பாடு போடுவதைத் தடை செய்தார்கள். ஆனால் சத்தியாக்ரகத் தத்துவமே ஜனங்களின் அன்பை அஸ்திவாரமாகக் கொண்டது. ஆணி வேரும் சல்லிவேருமாகப் பூமியில் பதிந்து பெரிய மரமாக ஓங்கி வளரும் தன்மை உடையது. மேலே மரம் எவ்வளவு பெரிதாக இருக்கிறதோ அதேபோலக் கீழே அன்புவேர் பரந்து பாய்ந்திருக்கிறது. எனவே அரசாங்கத்தின் முயற்சியை வீணாகச் செய்ய அவர்கள் வேறு உபாயத்தைக் கைக்கொண்டார்கள். சாலையில் லோகல் பண்டு மரங்களுக்கு நம்பர் போடப்பட்டிருப்பதை நாம் அறிவோம். '42-ஆம் நெம்பர்' என்று தொண்டர்களுக்குத் தெருவோடு போகிற ஒருவர் சொல்லிவிட்டுப் போவார். 42-ஆம் நம்பர் ஆலமரத்தில் சாப்பாடு மூட்டை மூட்டையாகத் தொங்கும். கிராமங்களில், தெருவில் சாப்பாடு போடாமல் தொண்டர்களுக்குச் சாப்பாடு எங்கிருந்து கிடைக்கிறது என்று, போலீசாருக்கு ஆச்சர்யமாய் இருந்தது.'' ஆனாலும் இங்கு ஓர் உண்மையை நாம் கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பது போல் மக்களின் உற்சாகம் கடைசியில் சற்றுக் குறையத்தான் செய்தது. அரசின் கெடுபிடி அதிகமாக அதிகமாகத் தொண்டர்களுக்கு மக்கள் அளித்து வந்த உதவியும் ஒத்துழைப்பும் குறைந்தது. இது இயற்கையே. ஆனாலும் மொத்தத்தில் பார்க்கும்போது வேதாரண்யப் போர் ஒரு மகத்தான வெற்றிதான்.

காந்திஜியின் கடைசிக் குமாரரான தேவதாசுக்குச் சக்கர வர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் கடைசிச் செல்வ மகளான இலட்சுமியைக் கன்யாதானம் செய்து கொடுத்ததன் மூலம் தமிழகமும் குசராத்தும் சம்பந்திகளாகி விட்டன; காந்திஜியின் மற்ற மூன்று குமாரர்களின் மனைவிமார்களும் அவருடைய சொந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

தமிழகம் குசராத்

காதலித்து மனம் ஒப்பி மணம் செய்து கொள்ள முன் வந்த தேவதாசும் இலட்சுமியும் அவர்களுடைய பெற்றோர்களால் சில ஆண்டுகள் பிரித்து வைத்துச் சோதனைக்குள்ளாக்கப் பெற்று அச்சோதனையில் தேறித் திருமணம் செய்து கொள்ள இருந்த தருவாயில் இயற்கை அவர்களைச் சோதித்து விட்டது. முதலில் இத்திருமணத்திற்குச் சம மதம் தெரிவிக்க காந்திஜியும் ராஜாஜியும் தயங்கினர். ''சில ஆண்டுகள் இருவரும் கடிதப் போக்குவரத்து கூட வைத்துக் கொள்ளக் கூடாது; அதன் பின் இருவரும் இதே உறுதியுடனிருந்தால் திருமணத்திற்குச் சம்மதம் தருகிறேன்'' என்று காந்திஜி கூறிவிட்டார். குறிப்பிட்ட காலம் கழித்த பின்னரும் ''நான் மணந்தால் தேவதாசையே மணப்பேன்'' என்று இலட்சுமி கூறி விட்டார்; ''நான் திருமணம் செய்வதாயிருந்தால் அந்த இலட்சுமியைத்தான்'' என்று தேவதாசும் உறுதி தெரிவித்து விட்டார். ஆகவே இனி இவ்விருவருக்கும் திருமணம் செய்து விடவேண்டியதுதான் என்று இருவரின் பெற்றோர்களும் இனிய முடிவுக்கு வந்த தருணத்தில் அவர்கள் மட்டுமல்ல மாப்பின்னை, அவர் அன்னை கஸ்தூரிபா ஆகியோரும் சிறைக் கம்பிகளை எண்ண வேண்டியதாயிற்று. கடைசி தெய்வப் பயனுக அவர்கள் விடுதலையாகி வெளியே வர காந்திஜி பர்ணகுடியில், இருபத்தியோரு நாட்கள் உண்

மன உறுதி

நோன்பையும் முடித்து நலிந்து மெலிந்திருந்த சமயம், இத் திருமணம் நடைபெற்றது. ''இனி மறுபடியும் எந்த நேரத் திலும் பாபு கைதாகலாம். ஆகையால் இந்தச் சமயத்தி லேயே தேவதாஸ் - இலட்சுமி திருமணத்தை நடத்தி விட லாம் என்று நானும் பாபுவும் கருதுகிறோம். நீங்கள் ''சரி'' என்று சொல்வதனால் இலட்சுமியை நான் அழைத்து வரு கிறேன்'' என்று ராஜாஜி கஸ்தூரிபா காந்திக்குக் கடிதம் எழுதினர். பா சம்மதித்தவுடன் பெண்ணை அழைத்துக் கொண்டுபோனர்.

மாமியார்

லேடி தாக்கர்ஸேயின் அரண்மனையான பர்ணகுடியில் இத்திருமணம் நடைபெற்றது. (இது எதிர்பாராத ஒரு நல்வினைப் பயனே என்று காந்திஜியே பின்னர்க் குறிப்பிட்டார்.) அந்த அம்மையார் மன முவந்து பரிசாக அளித்த ஒரு சிறிய தங்கச் சங்கிலியையும் தமது மாமியார் கஸ்தூரிபா காந்தி வாங்கிக் கொடுத்த இரண்டு தந்த வளையல்களையும் மணமகள் அணிந்திருந்தார். இத்திருமண விழாவில், கஸ்தூரிபா காந்தி எப்போதும் போல், கடமை உணர்ச்சி யுள்ள ஒரு மாமியாராக நடந்து கொண்டார். தமது மருமகளுக்குப் பரிசாக அளிப்பதற்காக நான்கு கதர்ப் புடவைகளை முதலிலேயே தேர்ந்தெடுத்து அதற்கு காந்திஜி யின் ஒப்புதலையும் வாங்கி வைத்திருந்தார்.

சாத்திர முறைப்படி

சாஸ்திரீய முறைப்படி இந்தத் திருமணம் நடை பெற்றது. சாஸ்திரீய முறைப்படியான திருமணங்களில் இருவகை உண்டு, ஒன்று அனுலோமம், மற் றொன்று பிரதி லோமம். இவைகளில் அனு லோமத் திருமணம் என்பது இயல்பானது. ஆனால் பிராமணரல்லாத தேவதாஸ் பிராமணப் பெண்ணாகிய இலட்சுமியை மணந்து கொண்டது பிரதி லோமத் திருமணம் ஆகும். வழக்கத்திற்கு விரோத மானது இது. சாதாரணமாக இத்தகைய திருமணங்களை நடத்தி வைக்க சாஸ்திரிகள் வரமாட்டார்கள். ஆனாலும் காந்திஜியின் சீடர்களில் ஒருவரும் பெரிய சாஸ்திர விற் பன்னருமாகிய ஆச்சார்ய காகா கலேல்கார் முன்னின்று இதற்காகவென்றே வை என்ற இடத்திலிருந்து சமஸ்கிருதக் கல்லூரி முதல்வரும் மகாராட்டிரத்திலேயே பெயர் பெற்ற வருமான இலட்சுமண சாஸ்திரி என்னும் தூய வாழ்க்கை நடத்திய பெரியாரை அழைத்திருந்தார்.

காந்திஜியின் கடைசிக் குமாரரான தேவதாசுக்குச் சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியாரின் கடைசிச் செல்வ மகளான இலட்சுமியைக் கன்யாதானம் செய்து கொடுத்ததன் மூலம் தமிழகமும் குசராத்தும் சம்பந்திகளாகி விட்டன ; காந்திஜியின் மற்ற மூன்று குமாரர்களின் மனைவிமார்களும் அவருடைய சொந்தச் சாதியைச் சேர்ந்தவர்கள் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

தமிழகம் குசராத்

காதலித்து மனம் ஒப்பி மணம் செய்து கொள்ள முன் வந்த தேவதாசும் இலட்சுமியும் அவர்களுடைய பெற்றோர்களால் சில ஆண்டுகள் பிரித்து வைத்துச் சோதனைக்குள்ளாக்கப் பெற்று அச்சோதனையில் தேறித் திருமணம் செய்து கொள்ள இருந்த தருவாயில் இயற்கை அவர்களைச் சோதித்து விட்டது. முதலில் இத்திருமணத்திற்குச் சம்மதம் தெரிவிக்க காந்திஜியும் ராஜாஜியும் தயங்கினர். ''சில ஆண்டுகள் இருவரும் கடிதப் போக்குவரத்துக் கூட வைத்துக் கொள்ளக் கூடாது; அதன் பின்பு இருவரும் இதே உறுதியுடனிருந்தால் திருமணத்திற்குச் சம்மதம் தருகிறேன்'' என்று காந்திஜி கூறிவிட்டார். குறிப்பிட்ட காலம் கழித்த பின்னரும் ''நான் மணந்தால் தேவதாசையே மணப்பேன்'' என்று இலட்சுமி கூறி விட்டார்; ''நான் திருமணம் செய்வதாயிருந்தால் அது இலட்சுமியைத்தான்'' என்று தேவதாசும் உறுதி தெரிவித்து விட்டார். ஆகவே இனி இவ்விருவருக்கும் திருமணம் செய்து விடவேண்டியதுதான் என்று இருவரின் பெற்றோர்களும் ஓர் இனிய முடிவுக்கு வந்த தருணத்தில் அவர்கள் மட்டுமல்லாது மாப்பிள்ளை, அவர் அன்னை கஸ்தூரிபா ஆகியோரும் சிறைக் கம்பிகளை எண்ண வேண்டியதாயிற்று. கடைசியில் தெய்வப் பயனாக அவர்கள் விடுதலையாகி வெளியே வந்து, காந்திஜி பர்ணகுடியில், இருபத்தியோரு நாட்கள் உண்ணா

மன உறுதி

நோன்பையும் முடித்து நலிந்து மெலிந்திருந்த சமயம், இத் திருமணம் நடைபெற்றது. ''இனி மறுபடியும் எந்த நேரத் திலும் பாபு கைதாகலாம். ஆகையால் இந்தச் சமயத்தி லேயே தேவதாஸ் - இலட்சுமி திருமணத்தை நடத்தி விட லாம் என்று நானும் பாபுவும் கருதுகிறோம். நீங்கள் ''சரி'' என்று சொல்வதானால் இலட்சுமியை நான் அழைத்து வரு கிறேன்'' என்று ராஜாஜி கஸ்தூரிபா காந்திக்குக் கடிதம் எழுதினார். பா சம்மதித்தவுடன் பெண்ணை அழைத்துக் கொண்டுபோனார்.

மாமியார்

லேடி தாக்கர்ஸேயின் அரண்மனையான பர்ணகுடியில் இத்திருமணம் நடைபெற்றது. (இது எதிர்பாராத ஒரு நல்விளைப் பயனே என்று காந்திஜியே பின்னர்க் குறிப்பிட்டார்.) அந்த அம்மையார் மன முவந்து பரிசாக அளித்த ஒரு சிறிய தங்கச் சங்கிலியையும் தமது மாமியார் கஸ்தூரிபா காந்தி வாங்கிக் கொடுத்த இரண்டு தந்த வளையல்களையும் மணமகள் அணிந்திருந்தார். இத்திருமண விழாவில், கஸ்தூரிபா காந்தி எப்போதும் போல், கடமை உணர்ச்சி யுள்ள ஒரு மாமியாராக நடந்து கொண்டார். தமது மருமகளுக்குப் பரிசாக அளிப்பதற்காக நான்கு கதர்ப் புடவைகளை முதலிலேயே தேர்ந்தெடுத்து அதற்கு காந்திஜி யின் ஒப்புதலையும் வாங்கி வைத்திருந்தார்.

சாத்திர முறைப்படி

சாஸ்திரீய முறைப்படி இந்தத் திருமணம் நடை பெற்றது. சாஸ்திரீய முறைப்படியான திருமணங்களில் இருவகை உண்டு, ஒன்று அனுலோமம், மற் றொன்று பிரதி லோமம். இவைகளில் அனு லோமத் திருமணம் என்பது இயல்பானது. ஆனால் பிராமணரல்லாத தேவதாஸ் பிராமணப் பெண்ணாகிய இலட்சுமியை மணந்து கொண்டது பிரதி லோமத் திருமணம் ஆகும். வழக்கத்திற்கு விரோத மானது இது. சாதாரணமாக இத்தகைய திருமணங்களை நடத்தி வைக்க சாஸ்திரிகள் வரமாட்டார்கள். ஆனாலும் காந்திஜியின் சீடர்களில் ஒருவரும் பெரிய சாஸ்திர விற் பன்னருமாகிய ஆச்சார்ய காகா கலேல்கார் முன்னின்று இதற்காகவென்றே வை என்ற இடத்திலிருந்து சமஸ்கிருதக் கல்லூரி முதல்வரும் மகாராட்டிரத்திலேயே பெயர் பெற்ற வருமான இலட்சுமண சாஸ்திரி என்னும் தூய வாழ்க்கை நடத்திய பெரியாரை அழைத்திருந்தார்.

இத்திருமணத்தை நடத்தி வைப்பதற்கு இலட்சுமண சாஸ்திரிக்கு மறுப்பு எதுவும் இல்லை. ''மகாத்மா காந்தியும் ராஜாஜியும் ஒரே மாதிரியான வாழ்க்கை நடத்துவதால் ஒரே சாதியைச் சேர்ந்த வர்கள் தான்'', என்று அவர் கூறிவிட்டார்.

பூணூல் இல்லை!

ஆனாலும் அவர் வந்து மாப்பிள்ளையைப் பார்த்தவுடன், மாப்பிள்ளை பூணூல் அணிந்திருக்க வேண்டும், அது அவசியம் என்று சொன்னார். இதன் பின்னர் அவரும் காகா கலேல்காரும் சேர்ந்து முடிவு செய்து தேவதாசுக்குப் பூணூல் கல்யாணம் நடத்தி வைத்தனர். இதன் பின்னர் திருமணம் நடைபெற்றது.

மகாத்மா உபவாசத்தின் போது நாள்தோறும் பஜனை செய்த குழுவினர் மங்கள கீதமும் ''ரகுபதி ராகவ'' நாமாவளியும் பாடிய பின்னர் மணச்சடங்கு தொடங்கிற்று. திருமணத்தை நேரில் கண்ட ''கல்கி'' தாம் அப்போது பணி யாற்றிய ''ஆனந்தவிகடன்'' சஞ்சிகையில் இத்திருமணத்தை வர்ணித்திருந்தார். அவரைக் காட்டிலும் இதைச் சிறந்த முறையில் வர்ணிக்கத் தக்கவர்கள் யார்? ஆகையால் அவர் அன்று எழுதியதை அப்படியே கீழே அளிக்கிறோம்.

மணச் சடங்கு

''1933 ஜூன் 16-ஆம் தேதி காலை 5-30 மணிக்குப் பர்ணகுடியின் கிழண்டைத் தாழ்வாரத்திற்கு எல்லோரும் போய்ச் சேர்ந்தோம். தாழ்வாரத்தை யடுத்த திறந்த வெளியில் ஒரு சிறிய பந்தல் போட்டு அதனடியில் கலியாண மேடை அமைக்கப்பட்டிருந்தது. பந்தலின் நாலு புறங்களில் கட்டியிருந்த வாழைமரங்களையும் மேடையின் நாலு புறத்திலும் ஒன்றின்மேலொன்றாய் வைத்திருந்த கோலம் போட்ட பானைகளையும் தவிர வேறு அலங்காரம் ஒன்றும் இல்லை. மணமக்கள் கதராடை புனைந்து வந்து மேடையில் அமர்ந்தனர். மகாத்மா சாய்ந்து கொண்டிருந்த கட்டில் தாழ்வாரத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

மகாத்மா கட்டில்

''மணமகனும் மணமகளும் கலியாணத்திற்குச் சம்மதந தருவதற்கு அறிகுறியாக மாலை மாற்றல் முதலில் நடந்தது. இதற்கு நூல் மாலைகள் தான் உபயோகிக்கப்

பட்டனவென்று சொல்லவேண்டியதில்லை. பின்னர், புண்யா வாசனமும் அதன் பிறகு கன்யாதானமும் நடைபெற்றன.

மாலை மாற்றல்

குழந்தைப் பிராயத்திலேயே தாயை இழந்த மையால் தாமே எடுத்து வளர்த்து வந்த புதல்வியை, இத்தனை காலமும் தமது வாழ்க் கையின் ஒளியாக விளங்கி வந்த இலட்சுமியை - ஸ்ரீ ஆச்சாரியார் தேவதாஸின் கரத்தில் அளித்தார். திருமங்கலியதாரணம், ஸப்தபதி ஹோமம் முதலியவைகள் முறைப்படி நடந்த பின்னர், பஜனை கோஷ்டியார் 'வைஷ்ணவ ஜனதோ' பாடினார்கள்.''

பரிசு

பின்னர், சதிபதிகளான இலட்சுமியும் தேவதாஸும் மகாத்மாவிடம் ஆசீர்வாதம் பெறுவதற்காகச் சென்றார்கள். அவர்கள் முதுகில் தட்டிக் கொடுத்து, ஒவ்வொருவருக்கும் தம் கையால் நூற்ற நூல் மாலை ஒன்றும், பகவத்கீதை, பஜனாவளி புஸ்தகங்களும் ஒரு தேங்காயும் பரிசாக அளித்தார் காந்திஜி.

தம்பதிக்கு அறிவுரை

மணமக்களுக்கு அறிவுரை கூறுவதற்கு மகாத்மா பேச முயன்றார். களைப்பு மிக அதிகமாக இருந்ததாலும் மகனுக்குத் திருமணமானதால் ஏற்பட்ட உணர்ச்சி வயத்தினாலும் அவரால் பேச இயலவில்லை. ஒரு நிமிடம், இரண்டு நிமிடம், மூன்று நிமிடம், நான்கு...ஐந்து நிமிடமாயிற்று. அவர் வாயிலிருந்து ஒரு சொல்லும் வரவில்லை. சுற்றியிருந்தவர்கள் எல்லோருக்கும் கவலை உண்டாயிற்று. அவர் பக்கத்தில் நின்று கொண்டிருந்த ராஜாஜி அவருக்கு விசிறி விட்டார். ''இவ்வளவு களைப்புடன் தாங்கள் பேச வேண்டாமே?'' என்று அவர் சொல்லப்போன சமயம் காந்திஜி பேசத் தொடங்கிவிட்டார். தேவதாசை நோக்கி அவர் கூறினார்: ''இந்த விவாகத்தை நடத்தியதில் தர்மத் திற்கு விரோதமான ஒரு காரியமும் செய்யப்படவில்லை. அவ்விதம் ஏதாவது செய்யப்பெற்றிருந்தால் இந்த வைப வத்தில் நான் கலந்து கொள்வதற்கே சந்தர்ப்பம் ஏற்பட்டி ருக்காது...இன்று இராஜகோபாலாச்சாரியாரிடமிருந்து அரியதொரு பொக்கிஷத்தை நீ கவர்ந்து கொண்டாய். அதற்கு ஏற்றவனாக நீ இருக்கவேண்டும். அதை வைத்து நீ காப்பாற்று. அவள் உண்மையில் இலட்சுமிதான். நன்மை

கள் பலவற்றை நல்கக்கூடியவளும் அழகுக்கு ஆதி தேவதையு மான இலட்சுமியைப் போல நீ அவளைப் பாதுகாக்க வேண்டும்.'' இலட்சுமியை நோக்கி அவர் சொன்னார்: ''உன் திருமணத்தில் எனக்கும் இராஜகோபாலாச்சாரியாருக்கும் இருக்கும் அன்பும் அந்நியோன்யமும் அதிகரிக்க வேண்டு மென்று விரும்புகிறேன். நீங்கள் இருவரும் செய்த தவத்தின் பயனுகவே இன்று எங்கள் அனுமதியையும் ஆசீர் வாதத்தையும் பெற்றீர்கள்.....கடவுளுக்குப் பயந்து எப்போதும் பணிவுடன் நடந்து கொள்ளுங்கள்.'' இருவ ரையும் நோக்கி அவர் சொன்னார்:

விரோதம் இல்லை

''நரசின்ஹ மேத்தா கூறிய விளக்கப்படி நீங்கள் உண்மையான வைஷ்ணவர்களாக வாழ முயற்சி செய்வீர் களானால், இந்தத் திருமணத்திற்கு ஏற்பட்ட எதிர்ப்பெல்லாம் தானுகவே மறைந்துவிடும். எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து தர்மம் என்றால் என்னவென்பதைப் புரிந்து கொள்ள நான் முயன்று வந்திருக்கிறேன். அதன்படி என்னால் இயன்ற வரை வாழவும் முயன்றிருக்கிறேன். இந்தத் திருமணத்தை முடித்ததன் மூலம் தர்மத்திற்கு விரோதமாக நாம் எதையும் செய்ததாக நான் எண்ண வில்லை. அவ்வாறு எண்ணியிருந்தால் இந்தத் திருமணத் திற்கு வந்திருக்கவும் மாட்டேன்; உங்களுக்கு ஆசீர்வாதம் வழங்கியிருக்கவும் மாட்டேன்.''

செலவு இல்லை

இந்தத் திருமணத்தில், பெண்ணையும் அதன் சகோதர ரையும் சகோதரியையும் அழைத்துக்கொண்டு போனதற் கான இரயில் பயணச் செலவைத் தவிர மண மகளின் தந்தைக்கு வேறு ஒரு செலவும் இல்லை: காந்திஜியினுடைய ஆலோசனையின் படி திருமணம் மிக மிகச் சிக்கனமான முறை யில் நடத்தப்பெற்றது. கூட்டம் இருக்கக் கூடாது என்பதற் காக, தம்முடன் இருந்த ஆசிரம வாசிகளைக்கூட ஆசிரமத் திற்குத் திருப்பி அனுப்பிவிட்டார் காந்திஜி. மகாகனம் சீனிவாச சாஸ்திரி, ஆனே, ஜி. டி. பிர்லா, சரோஜினிதேவி, பஜாஜ் முதலிய பல பிரமுகர்கள் எப்படியோ வந்து விட்டார்கள். அதேபோன்று பரிசுகள் வேண்டாமென்பதை அவர் திட்டமாகத் தெரிவித்திருந்தும் பலர் பரிசுகள் அனுப்பி வைத்திருந்தனர்; அப்பரிசுகளில் ஒன்றுன ஒரு

எளிய கருகுமணி அனுப்பியவருக்குக் கடைசியில் காந்திஜியே நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கடிதம் அனுப்ப வேண்டியதாயிற்று!

பிர்லா அன்பளிப்பு

பிர்லா ஒரு பட்டுப் புடவையும் ஒரு சாதாரணப் புடவையும் கொண்டுவந்து திருமணப் பரிசாக அளித்தார். அந்த இரண்டையுமே திருப்பிக் கொடுத்துவிடு மாறு காந்திஜி கண்டிப்பாகக் கூறிவிட்டார். அவர் நீண்ட நேரம் வேண்டிக் கொண்டதன் பின்னர்ச் சாதாரணப் புடவையை காந்திஜி ஏற்றுக்கொண்டார். பண்டித ஜவர்கர்லால் நேருவும் சர்தார் வல்லபாய்படேலும் சிறையிலிருந்து வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர். இவ்வாறு தமிழகத்தில் காந்திஜி தமது மகனுக்குப் பெண் எடுத்த திருமணம் தமிழகத்திற்கும் காந்திஜிக்கும் இருந்த உறவில் மேலும் ஒரு வலுவான பிணைப்பு ஏற்பட உதவியது.

—oo—

நந்தனார் பிறந்த இந்தத் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பில் இந்தியாவிலேயே முந்தி நின்றது ஒரு விந்தையல்ல. காந்திஜி சகாப்தத்தின் தொடக்கக் கட்டத்திலேயே தீண்டாமை ஒழிப்புப் பணி ஒரு மாநிலத்தில் வேகமாக முன்னேற்றமடைந்து வந்தது என்றால் அது தமிழகத்திலேயேயாகும். தீண்டாமை உணர்வு இந்தியாவில் உள்ள பிறபகுதிகளை விடத் தமிழகத்தில் அதிகம் இருந்துங்கூட இத்தொண்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து தமிழகத்திற்குள் நிர்மாணத் திட்டங்களிலெல்லாம் தனிச் சிறப்பு வாய்ந்த முக்கிய இடத்தை வகித்தது. வேறு ஏதாவது ஒரு நிர்மாணத்திட்டம் அதையும் முந்தி இங்கு வளர்ச்சியடைந்தது என்றால் அது கதர் தான்.

முந்தி நின்றது

இவ்வாறு தொடக்கத்தில் தீண்டாமை ஒழிப்புப்பணி வேகமாகவும் விறுவிறுப்பாகவும் நடைபெற்றதற்குப் பல பிராமணர்கள் அத்தொண்டைச் செய்ய முன் வந்தது ஒரு காரணம். பரம்பரை பரம்பரையாக அரிஜனங்களைத் தங்களது முன்னோர்கள் ஒதுக்கி வைத்த பாவத்தை இந்தப் பிறவியிலேயே போக்கி விடுவதெனக் கச்சை கட்டிக் கொண்டவர்களைப் போன்று இவர்கள் அப்பணியில் உறுதியோடு இறங்கி வேலை செய்தார்கள். ''உத்தமர்களிலெல்லாம் உத்தமரான மாகாத்மாவே தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்தியதற்குமேல் வேறு நீதி, நியாயம், வாக்குவாதம் என்ன இருக்க முடியும்?'' என்ற நம்பிக்கை இவர்களுக்கு இருந்தது. இதற்குப் பல உதாரணங்களைச் சொல்லலாம். ஒரு உதாரணம் திண்டுக்கல்லைச் சேர்ந்த பெயர் பெற்ற வழக்கறிஞரான டி. ஆர். மகாதேவ ஐயர் தமது தொழிலையே விட்டு விட்டு அரிஜன சேவையிலும் கதர்ப் பணியிலும் ஈடுபட்டதாகும். அவரும், அவருடைய சகாக்களான குப்புசாமி ஐயர், அமிர்தலிங்க ஐயர் ஆகியோரும் 'தீண்டாமை ஒழிப்பின்றேல் இந்து மதம் அழிந்து விடும்'

காரணம்

என்று கூறினர்கள். இவ்வாறு, தீண்டாமை ஒழிப்புப் போரில் பிராமண வகுப்பைச் சேர்ந்த பலர் கச்சைக் கட்டிக் கொண்டு இறங்கினர்கள் என்று நாம் கூறும்போது, பிராமணர் அல்லாதார் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருந்தார்கள் என்பதல்ல. பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்களைப் போலவே பிராமணர் அல்லாதாரில் பலர் தீண்டாமை ஒழிப்பிற்கு அரும்பாடு பட்டனர். சர்தார் வேதரத்தினம்பிள்ளை, சுப்பண்ணக் கவுண்டர், என்.எம்.ஆர். சுப்பராமன், டி.எஸ். அவினாசிலிங்கம், சோமசுந்தரபாரதி, டாக்டர் எம்பெருமாள் நாயுடு ஆகியோருடைய சேவையை யார்தாம் மறுக்கவோ, மறைக்கவோ முடியும்? தீண்டாதார்களும் தங்களுடைய உரிமைகளுக்காகப் பாடுபட முன்வந்தார்கள். ஆனாலும் அது சிறிதளவுதான். அதிகமாகப் பாடுபட்டவர்கள் அரிஜனங்கள் அல்லாத பிறவகுப்பினரே. இதனால் தீண்டாமை ஒழிப்புச் சிக்கலில் இனப் போராட்ட உணர்ச்சி தவிர்க்கப்பட்டது. இவ்வாறெல்லாம் சிந்தனைப் போக்கில் மாற்றமும், விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டுத் தமிழகத்தில் அரிஜனங்கள் ஏறுநடைபோட்டு முன்னேறிச் சென்றபோது, இந்த மாற்றத்திற்குக் காரணமான மேற்கண்ட பிராமணர்களும் பிராமணர்களல்லாதாரும் தங்களுடைய சாதிக் கட்டுப்பாட்டால் பட்ட துயரை இந்த ஏட்டில் அவ்வளவு எளிதாக எழுதிவிட முடியாது.

ராஜாஜி

தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் இராஜாஜி, பாஷ்யம் ஐயங்கார், ஏ. வைத்தியநாத ஐயர், டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் ஆகியோருடைய சேவைகள் தனித்துக் குறிப்பிட வேண்டியவையாகும். இவர்களுடைய தொண்டு தமிழகம் முழுவதிலும் வியாபித்து இருந்தது. சேலத்தில் நகராட்சி மன்றத் தலைவராக இருந்தபோதே, நகர குழாய்களுக்குத் தண்ணீர் திறந்து விடும் பணிக்கு ஒரு அரிஜன ராஜாஜி நியமித்ததும் அதையொட்டிச் சேலத்தில் வைதிகர் வட்டாரங்களில் பெரிய கூக்குரல் எழுந்ததும் அக்காலத் தமிழகம் அறிந்த வரலாறு ஆகும். அவர் புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமத்தைத் தொடங்கிய உடனே அங்கு அரிஜனங்களைக் குடியேற்றினர். புனவில் மகாத்மா உண்ணா நோன்பு மேற்கொண்டபோது அச்சிக்கலில் ஒரு சமரசம் கண்டு, அண்ணலின் உயிரைக் காப்பாற்ற அரும் முயற்சி எடுத்துக்கொண்டவர்களில் ராஜாஜியும் ஒருவர். காந்திஜிக்கும் அம்பேத்

காருக்கும் உடன்படிக்கை ஏற்பட்டபின், அந்த உடன்படிக்கையைச் செயலுக்குக் கொண்டுவருவதற்காகச் சென்னை அரிஜனங்களையும் சாதி இந்துக்களையும் சேர்ந்த தலைவர்கள் கூட்டத்தை அடிக்கடி கூட்டி அவர்கள் எல்லோரும் இந்த உடன்படிக்கையை மனமார ஏற்கும்படி செய்வதற்கு அவர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டார்.

முன்னோடிகள்

மொத்தமாகக் கூறினால் தமிழக அரிஜன முன்னேற்ற இயக்கத்தில் முன்னோடியாக இருந்தவர்கள் (இவர்களையும் சேர்த்து) வி. பாஷ்யம் ஐயங்கார் (சென்னை) ராஜாஜி (சேலம்) டி. எஸ். அவினாசிலிங்கம் (கோவை) சுப்பண்ணக் கவுண்டர் (கோபிச் செட்டிப் பாளையம்) கோவிந்தராவ் குர்சாலே, சகஜானந்தர் (தென்னார்க்காடு) டாக்டர் டி. எஸ். என். ராஜன், எல். என். கோபால்சாமி (திருச்சி) ஏ. வைத்திய நாத ஐயர், என். எம். ஆர். சுப்பராமன், பி.கே. இராமாச்சாரி, கே. அருணாசலம் (மதுரை) பி. ஆர். மகாதேவ ஐயர் (திண்டுக்கல்) முனகால பட்டாபிராமய்யா (சோழவந்தான்) நாராயணசாமி செட்டியார் (தேவாரம்), அரிஜன் ரெங்க சாமி ஐயங்கார், சிவசுப்பிரமணியம், அவரது மனைவி கமலா (தேவகோட்டை) பி. எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார், பி. கோபாலசாமி (மானமதுரை) எஸ். பி. சீனிவாச ஐயங்கார் (அபிராமம், இராமநாதபுரம் மாவட்டம்), யக்ஞேஸ்வர சர்மா, கோமதி சங்கரதீட்சதர், கே. ஆர். கிருஷ்ண ஐயர் (திருநெல்வேலி) சர்தார் ஏ. வேதரத்தினம் பிள்ளை (தஞ்சாவூர்) டாக்டர் எம்பெருமாள் நாயுடு (நாகர்கோவில்) ஆவார்கள்.

அரிஜன சங்கம்

புனா உண்ணா நோன்பு முடிந்து டாக்டர் அம்பேத்காருடன் உடன்பாடு ஏற்பட்ட பின் இந்து மதத்தில் சாதி இந்துக்களின் முயற்சியையும் பிரதானமாகக் கொண்டு அரிஜனங்களின் முன்னேற்றத்துக்கு வழி காணுவதிலும் தீண்டாமையை ஒழிப்பதிலும் ஆலயப் பிரவேசம் செய்வதிலும் காந்திஜி முக்கிய கவனம் செலுத்தினார். இதன் விளைவாக, அனைத்து இந்திய அரிஜன சேவா சங்கத்தை அவர் நிறுவினார். இதற்கு ஒவ்வொரு (காங்கிரஸ்) மாநிலத்திலும் ஒரு கிளை தொடங்கப்பெற்றது. தமிழகத்திலும் 20-11-1932-இல் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனைத் தலைவராகக் கொண்டு

'தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்புச் சங்கம்' தொடங்கப் பட்டது. இதன் பெயர் தான் அடுத்த ஆண்டில் 'அரிஜன சேவா சங்கம்' என மாறியது. காந்திஜி உண்ணா நோன்பு இருந்தபோது தமிழ் மக்கள் மனம் பதறிப் போய் விட்டார்கள். அநேக இடங்களில் அரிஜனங்கள் சாதி இந்துக்களின் கிணறுகளில் தண்ணீர் எடுக்க அனுமதித் தார்கள். சில சிறு கோவில்களும் அரிஜனங்களுக்காகத் திறந்துவிடப் பெற்றன.

தமிழ்நாடு சேவை

தமிழ்நாடு அரிஜன சேவா சங்கத்தின் சார்பாக ஒரு புறம் கல்வி அளிக்கப் பெற்றதன் மூலம் (குறிப்பாக தொழிற் கல்வி - கோடம்பாக்கம், காஞ்சிபுரம், தேவ கோட்டை ஆகிய இடங்களில் தொழிற் பள்ளிகள் நிறுவப் பெற்றன) சமூகத் துறை களில் அரிஜனங்களுக்குள்ள குறைகளைப் போக்குவதற்கான முயற்சி நடைபெற்றது. மற்றொரு புறம் தீண்டாமையைச் சாதி இந்துக்கள் கைவிடுவதற்கும் அரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்திற்கும், வைதிகர்களை யும் சனாதனிகளையும் தயார்செய்வதற்கான முயற்சி நடந்தது. அரிஜனங்களுக்கென்றே சிறு சிறு ஆலயங்களை ஆங்காங்கு அரிஜன சேவா சங்கம் கட்டி உதவியது. சில இடங்களில் அரிஜனங்களுக்கு வட்டியில்லாக் கடன்கள் கொடுக்கப் பெற்றன.

அபாயம் தவிர்த்தது

அரிஜன சேவா சங்கம் தோன்றிப் பணி புரிந்திராவிடின், இந்து சமயத்தில் உள்ள மக்களின் எண்ணிக்கை எந்த அளவுக்குக் குறைந்திருக்கும் என்பதை இப் போது கற்பனை செய்து பார்க்க முடியாது. பிற்போக்கான பகுதிகளில் மிகவும் பிற்போக் கான நிலைமையில் இருந்த அரிஜனங்கள் கிராமங்கிராமமாக கிறிஸ்தவ சமயத்திலும் முஸ்லிம் சமயத்திலும் சேர்ந்து கொண்டிருந்தார்கள். இந்து சமயத் தில் இருந்த தீண்டாமையே இதற்கு முக்கிய காரணம். ஒரு சமயம் கம்பம் பள்ளத்தாக்கில் 40,000 அரிஜனங்கள் முஸ்லிம் சமயத்தில் சேரப் போகிறார்கள் என்பதை அறிந்து அரிஜன சேவா சங்கத் தலைவர்கள் அப்பகுதியில் சுற்றுப் பயணம் செய்து அந்த அபாயத்தைத் தவிர்த்தனர். பின்னர், என். எம். ஆர். சுப்பராமன், பி. கே. இராமச்சாரி, க. அ. அன்னகாமு ஆகியோருடைய முயற்சியின் பேரில் உத்தமபாளையம் அருகே உள்ள கோகிலாபுரம் என்ற

கிராமத்தில் ஒரு அரிஜன சேவா நிலையத்தைத் தோற்று வித்தனர்.

தமிழ்நாடு அரிஜன சேவா சங்கம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கிளையை நிறுவியிருந்தது. இதில் எல்லா மாவட்டங்களும் தங்களால் இயன்ற அளவு நல்ல முறையில் சேவை செய்திருந்தாலுங்கூட, மதுரை மாவட்டம் மதுரை மாவட்டத்தின் சேவை தனியாகக் குறிப்பிட வேண்டியதொன்றாகும். மதுரை மாவட்டத்தின் சாதனைகள் பல அனைத்திந்திய அடிப்படையில் பலமுறை பாராட்டப் பெற்றிருக்கின்றன. ஏ. வைத்தி நாதையரும் என். எம். ஆர். சுப்பராமனும் இரு கண்கள் போலிருந்து மதுரை மாவட்டத்தில் செய்து வந்த அரிஜனப் பணி தான் அம்மாவட்டம் இவ்வளவு சிறந்த பெயரெடுக்கக் காரணமாயிற்று. இவர்களைத் தவிர எஸ். சோமசுந்தரபாரதி, பி. கே. இராமாச்சாரி, வி. கிருஷ்ணசாமி ஐயர் ஆகியோருடைய சேவையும் குறிப்பிடத் தக்கதாகும். அரிஜன மாணவர்களுக்காகத் தமிழகத்திலேயே முதன் முதலாக மதுரை மாவட்டத்தில் தான் 1934-இல் ''சேவாலயம்'' என்ற விடுதி தொடங்கப் பெற்றது. இந்த விடுதியின் முதல் வார்டன் பிற்காலத்தில் அனைத்திந்திய கதர் கமிஷன் துணைத் தலைவரான க. அருணாசலம் ஆவார்.

மதுரை மாவட்டம்

க. அருணாசலம் சேவாலயம் விடுதி காப்பாளரானது ஒரு சிறு கதை. மகாத்மா காந்தி ஒருசமயம், பெங்களூருக்கு வந்திருந்த போது இராமச்சந்திரராவ் நடத்திய பிரம்மச்சாரிகள் ஆசிரமத்திற்கு வந்தார். அவர் அந்த ஆசிரமத்தின் முன்னால் தடியை ஊன்றி நின்று கொண்டே ''இந்த ஆசிரமத்தில் உள்ள முப்பது பேரும் பிரம்மச்சாரிகள் தானா?'' என்று கேட்டார். இராமச்சந்திரராவ் ''ஆம்'' என்று பதிலுறுத்தார். இவர்களில் பலர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதை அறிந்து கொண்ட காந்திஜி, ''தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கேயே போய்ச் சேவை செய்யலாமே?'' என்று யோசனை கூறினார். இந்த யோசனையை ஏற்றுத் தமிழகத்திற்கு வந்து வைத்தியநாதையர், சுப்பராமன் ஆகியோரைச் சந்தித்த பட்டதாரியான அருணாசலம், அவர்கள் இருவரின் யோசனையை ஏற்று முதலில் சிறிது காலம் அரிஜன சேவா சங்க அலுவலகப் பணியைக் கவனித்தபின், சேவா

அந்த வரலாறு

லயம் விடுதி காப்பாளராஞர். இவர்களைத் தவிர மதுரை மாவட்டத்தில் எஸ். ஜெகந்நாதன், கோ. வேங்கடாசலபதி ஜி. இராமச்சந்திரன், முனகால பட்டாபிராமையா, இலட்சுமிரதன் பாரதி, அன்னகாமு, மகாதேவ ஐயர், கணேச ஐயர், குப்புசாமி ஐயர் ஆகியோரும் மற்றும் நூற்றுக் கணக்கான ஊழியர்களும் தீவிரமாகத் தீண்டாமை ஒழிப்பில் ஈடுபட்டார்கள்.

மாவட்ட வாரியாக அரிஜன சேவையில் ஈடுபட்ட மற்ற வர்களைக் கீழ்கண்டவாறு கூறலாம்.

முக்கியமானவர்கள் :

1. திருநெல்வேலி : எஸ். கூத்தநயினர் பிள்ளை, சண்முக சுந்தரம் பிள்ளை, சி. வீரபாகு, வி. சுப்பையா, கோமதி சங்கர தீட்சதர், எம். எஸ். நாராயணன்.

2. இராமநாதபுரம் : இராஜாராம் பாண்டியன், சாத் தையா, ரா. குருசாமி, எ. ரெங்கசாமி ஐயங்கார், இலட்சுமிரதன் பாரதி.

3. மதுரை : சுந்தரேச ஐயர், இராமசாமி செட்டியார் (பெரிய குளம்), எஸ். சி. பாலகிருஷ்ணன், பி. கக்கன், பி. ஏ. இராமசாமி செட்டியார், எஸ். ஏ. ரெங்க சாமி செட்டியார்.

4. திருச்சிராப்பள்ளி : டாக்டர் டி. வி. சாமிநாத சாஸ்திரி, பி. சங்கிலியா பிள்ளை, பி. இரத்தின வேலுத் தேவர், டி. எம். நாராயணசாமி பிள்ளை, ஆர். கணபதி ரெட்டியார், பி. பொன்னம்பல கவுண்டர்.

5. தஞ்சாவூர் : இராமலிங்கசாமி, டி. ஆர். வெங்கட் ராம ஐயர்.

6. கோயமுத்தூர் : டி. எஸ். இராமலிங்கம் செட்டியார், ஆர். கே. சண்முகம் செட்டியார், ஸ்ரீகண்ட ஐயர் (கோபி), சீனிவாச ஐயர், வி. இராம ஐயங்கார், கோவிந்தசாமி நாயுடு, பி. எஸ். ஜி. கங்கா நாயுடு, வி. அப்பாவு, சுவாமி குருபிரமானந்தா.

7. சேலம் : ஜி. இராமச்சந்திர நாயுடு, கந்தசாமி பிள்ளை, எஸ். பி. ஆதிகேசவலு செட்டியார், ஏ. ரெங்காச்சாரி ஐயர்.

8. தென்னார்க்காடு: இராஜரத்தின முதலியார், பி. தணி காச்சலம், எம். தேவராஜன், எம். அருணாசலம்.

9. வட ஆர்க்காடு: ஏ. வி. கங்காதர சாஸ்திரி, என். சோமசுந்தர ஐயர்.

10. செங்கற்பட்டு: எம். பக்தவத்சலம், எம். கே. ரெட்டி, டாக்டர் பி. எஸ். சீனிவாசன், டாக்டர் பி. ஆர். இரகுராமன்.

11. சென்னை: கே. ஜி. சிவசாமி ஐயர், ஆர். டி. கேசவலு, டாக்டர் சுப்பராயன், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, எம். சி. ராஜா, ஆர். சீனிவாசன்.

12. நீலகிரி மாவட்டம்: ஏ. கோவிந்தசாமி செட்டியார், ஜி. மகாதேவன், எம். கோவிந்தராஜுலு, வி. ஐ. முனுசாமி பிள்ளை.

மற்றும் சிலர்: மகன்மால் ஜெயின், ஜே. நடராஜன், சந்திர சேகர ஐயர். மாரிமுத்து, மருதாச்சலம், ஆர். வைத்திலிங்கம்.

நிறுவனங்கள்

திருச்செங்கோடு காந்தி ஆசிரமம், திருவெண்ணய் நல்லூர் கிருபா ஆசிரமம், கள்ளக்குறிச்சி காதி ஆசிரமம், சிதம்பரம் நந்தனர் கல்விக் கழகம், சென்னை தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம், இந்திய ஊழியர்சங்கம், மாயனூர் கிராமச் சீரமைப்பு நிலையம், கோவை இராமகிருஷ்ண வித்யாலயம், திருச்சிராப்பள்ளி பொது ஜன ஊழியர் சங்கம், தேவேந்திர வேளாளர் சங்கம், வேலூர் சர்வதேச நல்லுறவு சங்கம், வேலூர் ஔவையார் கல்விக் கழகம், சென்னை ஆதி திராவிட மகாஜன சங்கம், வட ஆர்க்காடு மாவட்டம் சமரச சன்மார்க்க சங்கம் ஆகியவை அரிஜன சேவா சங்கத்துடன் இணைந்து பணியாற்றின. அரிஜன முன்னேற்ற இயக்கத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் பேருதவி புரிந்தது. கள்ளக் குரிச்சியில் எம். எஸ். நாராயணன் என்ற் ஓய்வு பெற்ற உதவி என்ஜினியர் தலைமையில் செயலாற்றிய அரிஜன நல சங்கம் அந்தத் தாலுகாவில் அரிஜனங்களிடையே ஒற்றுமை ஏற்படப் பாடுபட்டது. மேலூர் தாலுகா அரிஜன இளைஞர் சங்கம் அரிஜனங்களின் மத்தியில் குடிப்பழக்கத்தை அகற்ற நல்ல தொண்டாற்றியிருக்கிறது.

எதிர்த்தோர்

தமிழகத்தில் சில அரிஜனத் தலைவர்கள் காந்திய இயக்கத்தை ஆதரிக்கவில்லை. அவர்களுக்குத் தீண்டாமை ஒழிய வேண்டுமென்பதிலும் அரிஜனங்கள் மற்றவர்களுக்குச் சமமான உரிமைகளைப் பெறவேண்டுமென்பதிலும் அக்கறை இருந்தது. ஆயினும் காந்திய இயக்கத்தால் இதைச் சாதிக்க முடியும் என்று அவர்கள் நம்பவில்லை. ராவ்பகதூர் சீனிவாசன், எம். சி. ராஜா போன்ற அரிஜனத் தலைவர்களை இந்தப் பட்டியலில் சேர்க்கலாம். ஆனால் இந்த இருவரும் அரிஜன சேவா சங்க நிருவாகக் குழுவில் இருந்து அதன் பணிகளில் ஒத்துழைத்தார்கள். (ஆதி திராவிட மகாஜன சபையைச் சேர்ந்த தலைவர்களில் ஒருவரான டி. சின்னையா மட்டும் புனு உடன்படிக்கையையே எதிர்த்தார்.) எல்லோரிடையேயும் முடிவில் ஒருவகை உடன்பாடு இருந்தது. ஒரு வகையில் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் பாக்கியம் செய்தது என்று கூறலாம். காந்திஜியின் அரசியல் எதிரிகளாகக் கருதப் பெற்றவர்கள் கூட, இதை ஆதரித்தார்கள். இந்து மதத்தைத் தூய்மைப்படுத்தும் இந்த இயக்கத்தில் ''ஜஸ்டிஸ்'' பத்திரிகை (ஜஸ்டிஸ் கட்சியின் பத்திரிகை) உற்சாகமாகவும் உறுதியாகவும் ஆதரவளிக்கும் என்று அதன் ஆசிரியர் டி. ஏ. வி. நாதன் காந்திஜிக்கு எழுதியிருந்தார்.

தொடக்க சேவை

தொடக்கத்தில் சேரிகளைச் சுத்தம் செய்தல், அரிஜனக் குழந்தைகளைக் குளிப்பாட்டுதல், அரிஜனங்களுக்கும் சாதி இந்துக்களும் பொது விருந்துகள் (சமபந்தி போசனங்கள்) வைத்தல் போன்ற பணிகள் தான் நடைபெற்று வந்தன. இவற்றிற்கு அடுத்தபடியாக ஒரே ஒரு முக்கியமான உரிமை இருந்தது. இந்து சமுதாய அமைப்பில் அந்த உரிமை அரிஜனங்களுக்குக் கிட்டிவிட்டது என்றால் அவர்கள் பிற சாதியினருக்குச் சமம் என்பது உறுதிப்பட்டது போல்தான். அதுதான் ஆலயப் பிரவேசம்.

ஸ்ரீ மீனுட்சி ஆலயம்

மதுரை ஸ்ரீ மீனுட்சியம்மன் ஆலயம் மேதினியெங்கும் புகழ்பெற்ற ஒரு பெரிய, புனிதத் திருக்கோவிலாகும். ஆகையால் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் ஈடுபட்டவர்களுக்கு, ஏன் காந்திஜிக்கே, அதன்மீது ஒரு தனிக் கவனம் உண்டு. மதுரை ஸ்ரீமீனுட்சி அம்மன் ஆலயத்தில் மட்டும்

அரிஜனங்கள் நுழைய முடிந்துவிட்டால் தமிழகத்தில் உள்ள ஆலயங்களிலெல்லாம் ஏன் இந்தியாவில் கூட அநேக முக்கிய ஆலயங்களில் எளிதாக ஆலயப் பிரவேசத்தை நடத்தி விடலாம் என்று அவர்கள் எண்ணினார்கள். மதுரைப் பெருமக்களும் ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவாக இருந்தார்கள். ஏ. வைத்தியநாத ஐயர் தலைமையின் கீழ் அரிஜன சேவா சங்கத்தின் மதுரைக் கிளை முன்னெடியாகச் செய்த முயற்சிகள் இதற்கு ஒரு முக்கிய காரணம். ஏ. வைத்தியநாத ஐயர், பி. கே. இராமச்சாரி, ஹாலஸ்யம் ஐயர், பி. வரதராஜுலு நாயுடு, ஈ. வே. இராமசாமிப் பெரியார் எஸ். சோமசுந்தர பாரதி, எஸ். கிருஷ்ணசாமி பாரதி ஆகியோர் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்துத் தீவிரமாக மேடை போட்டுப் பேசினார்கள். பொதுவாக, 1932-இல் மதுரை, கும்பகோணம், காஞ்சிபுரம், ஸ்ரீரங்கம் ஆகிய நான்கு திருத்தலங்களில் நகராட்சி மன்ற வாக்காளர் களிடையே ஒரு வாக்கெடுப்பு நடைபெற்றது. இந்த நான்கு இடங்களிலுமே மக்கள் அரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவாயிருக்கின்றனர் என்பதை வாக் கெடுப்பு எடுத்துணர்த்தியது. மதுரையில் வாக்களித்த 5732 சாதி இந்துக்களில் 4746 பேர் ஆலயப் பிரவேசத் திற்கு ஆதரவாக வாக்களித்தார்கள். அதுமட்டுமல்லாது, 1933 ஜனவரியில் மதுரை தேவஸ்தானக் குழுவிற்கு நடை பெற்ற தேர்தலில் ஒரு பெரிய போட்டி இருந்தது. பெயர் பெற்ற வழக்கறிஞரான என். நடேச ஐயர் குழு ஒன்று ஆலயப் பிரவேசத்தை எதிர்க்கும் அபேட்சகர்களை நிறுத்தி யது. தேசிய வாதிகள் குழு ஆலயப் பிரவேசத்தை ஆதரிக் கும் அபேட்சகர்களை நிறுத்தியது. அந்தத் தேர்தலில் பதிவான மொத்த வாக்குகள் 1887-இல் 1498 வாக்குகள் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்த அபேட்சகர்களுக்கே கிடைத் தன. தேவஸ்தான குழுவில் ஏழு பேர்களுக்காக நடை பெற்ற தேர்தலில் ஆலயப் பிரவேசத்தை ஆதரிப்பவர்கள் ஆறு பேர் வெற்றி பெற்றனர். இத் தேர்தலின் மூலம் தாங்கள் ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவர்யிருப்பதை மதுரைப் பெருமக்கள் உலகறிய உணர்த்தி விட்டனர். இவ்வாறு படிப்படியாக மதுரையை ஆலயப் பிரவேசத்திற் குத் தயாராக்கிக் கொண்டு வந்தனர் தேசியவாதிகள். ஆனாலும் மதுரையில் ஆலயப் பிரவேசத்தை நடத்துமுன் பல ஆண்டுகள் பறந்தோடி விட்டன. மக்களுடைய கருத்தை மேலும் மேலும் ஆதரவாக உருவாக்கவும்

வைதிகர்களின் எதிர்ப்பு என்னும் எஃகுக் கோட்டையைத் தகர்க்கவும் கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. தெருத் தெருவாகப் பொதுக் கூட்டங்கள் போட்டும் வீடு வீடாக மக்களை அணுகியும் மக்கள் கருத்தை உருவாக்க வேண்டியிருந்தது. வழக்கறிஞர் நடேச ஐயர் இறுதிவரை ஆலயப் பிரவேசத்தை முழு மூச்சுடன் எதிர்த்தார். இவர் இந்தியா முழுவதிலும் சனாதன வட்டாரங்களில் பெயர் பெற்ற ஒரு தலைவர்; வெளி மாநிலங்களில் நடைபெற்ற சனாதனிகள் மாநாட்டில்கூட இவர் பங்கு கொண்டு அவர்களை ஒன்று திரட்டத் தம்மால் இயன்ற மட்டும் முயன்ற துண்டு. இவரை எதிர்த்து, ஆலயப் பிரவேசத்திற்கு மதுரையில் ஆதரவாக இருந்த தலைவர் வழக்கறிஞர் தொழிலில் இவருடைய சீடரான ஏ. வைத்தியநாத ஐயர் தான்.

கண்ணிறைந்த காட்சி

ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவிலில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றதற்கு ஒரு சில வாரங்களுக்கு முன்னர்த்தான் திருமதி இராமேஸ்வரி நேரு தலைமையின் கீழ் மதுரையில் ஒரு மாநில (அரிசன சேவா சங்க) மாநாடு கூடியது. (அப்போது சென்னை மாநில முதலமைச்சராக இருந்த) சி. இராஜகோபாலாச்சாரி, (சுகாதார அமைச்சராக இருந்த) டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன் ஆகியோரும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த 800 பிரதிநிதிகளும் பங்கு கொண்ட இந்த மாநாடு, ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவாக மக்களுடைய கருத்தைத் திரட்டப் பெரிதும் உதவியது. அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், ''ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவானவர்களெல்லாம் கையைத் தூக்குங்கள்'' என்று தலைவர்கள் கேட்டபோது, கூடியிருந்த மக்கள் அனைவரும் ஒருமனதாகக் கையைத் தூக்கியது கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது.

ஆலயப் பிரவேசம்

கடைசியில் 1939 ஜூலை 8-ஆம் தேதியன்று காலை 8-45 மணிக்கு ஏ. வைத்தியநாத ஐயர் தலைமையின் கீழ் ஐந்து அரிஜனங்களும் நாடார் வகுப்பைச் சேர்ந்த ஒருவரும் ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்திற்குள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். ஆலம் பட்டியைச் சேர்ந்த சுவாமி முருகானந்தம், மதுரை மாவட்டக் கழக உறுப்பினர் பி. கக்கன் (பின்பு தமிழக அமைச்சரானவர்), அரிசன சேவாலய ஊழியரான

முத்து, மதுரையம் வி. எஸ். சின்னையா. விராட்டிபத்தைச் சேர்ந்த பி. ஆர். பூவலிங்கம் ஆகிய அரிஜனங்களும் விருதுநகர் நகராட்சி மன்ற உறுப்பினராகிய எஸ். எஸ். சண்முக நாடாரும் அன்று காலை சட்டையை எல்லாங் கழற்றிவிட்டு, உடம்பில் விபூதியைக் கட்டங் கட்டமாகப் பூசிக்கொண்டு, தமிழ்நாடு அரிஜன சேவா சங்கத் தலைவர் ஏ. வைத்தியநாத ஐயர், செயலாளர் எல். என். கோபாலசாமி ஆகியோருடன் ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலய வாசலுக்கு வந்தனர். இவர்கள் வருவதை முன்கூட்டியே அறிந்திருந்த கோவில் நிர்வாக அதிகாரி ஆர். எஸ். நாயுடு வாசலில் இருந்து இவர்களை வரவேற்று ஆலயத்திற்குள் அழைத்துச் சென்றார். வழக்கமாக பிராமணர்கள் மட்டுமே சென்று தரிசனம் செய்யக் கூடிய ஸ்ரீ மீனாட்சி, ஸ்ரீ சுந்தரேசுவரர் ஆலய அர்த்தமண்டபங்களுக்குச் சென்று இவர்கள் அம்மனையும் சுவாமியையும் தரிசனம் செய்தனர். இவ்வாறு காந்திஜியும் மற்ற சமூக சீர் திருத்த வாதிகளும் கண்ட ஒரு கனவு அன்று நிறை வேறியது. இதனால் ஆலயத்திற்கு வருவோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து விடும் என்று சனாதனிகள் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்ப்பார்த்தது போன்று ஆலயத்திற்கு வருவோரின் எண்ணிக்கை குறையவில்லை. மறுநாள் மதுரையில் உள்ள மற்றொரு பெயர் பெற்ற ஆலயமான கூடலழகர் கோவிலும், அழகர் கோவிலில் உள்ள ஸ்ரீ கள்ளழகர் கோவிலும் அதிகாரிகள், தர்மகர்த்தாக்கள் சம்மதத்துடன் திறந்து விடப்பெற்றன. இதற்குப் பின்னர்ப் படிப்படியாகப் பிற ஆலயங்களின் கதவுகளும் திறந்தன. 1940-ஆம் ஆண்டில் நடைபெற்ற அனைத்திந்திய அரிஜன சேவா சங்க ஆண்டுக் கூட்டம் பற்றிய அறிக்கையில், ''சங்கத்தில் மிக முக்கியமான வேலை, தமிழ்நாட்டில் ஆலயப் பிரவேசத்திற்காக ஏற்பாடு செய்ததாகும். அதன் காரணமாகப் பெயர் பெற்ற மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயமும் பழனி கோவிலும், அதையொட்டி ஏராளமான கோவில்களும் அரிஜனங்களுக்குத் திறந்து விடப்பெற்றன'' என்று குறிப்பிடப் பெற்றிருக்கிறது.

மதுரை ஆலயப் பிரவேசம் அமைதியாக நடைபெற்று விட்டாலும், சனாதனிகள் வாளா இருக்கவில்லை. அரிஜனங்கள் ஆலயத்தினுள் நுழைந்ததால் ஆலயம் தீட்டுப்பட்டு விட்டதென்றும் ஆலயத்தைவிட்டு ஸ்ரீ மீனாட்சி போய் விட்டதாகவும் பிரச்சாரம் செய்தார்கள். இவர்களுக்குத்

தலைமைதாங்கிய வழக்கறிஞரான நடேச ஐயர் இல்லத்தில் ஸ்ரீ மீனாட்சியின் சிறு விக்கிரகம் ஒன்றை வைத்து வழிபடத் தொடங்கினர். ஆலயப் பிரவேசம் நடை

சனாதனிகள் எதிர்ப்பு

பெற்ற முப்பத்தி ஆறு மணி நேரத்திற்குப் பின் சில சனாதனிகள் அர்ச்சகர்களைக் கடத்திச் சென்று விட்டதுடன் ஆலயத்தைப் பூட்டிச் சாவிகளையும் கொண்டு போய்விட்டார்கள். இந்தச் சமயத்திலும், பொதுவாக, இந்த ஆலயப் பிரவேச முயற்சி முழுவதிலும் அப்போது மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் நிர்வாக அதிகாரியாக இருந்த ஆர். எஸ். நாயுடு பார்-அட்-லா, மிகவும் உதவியாக இருந்தார். அவர் தம் அதிகாரத்தில் பூட்டுக்களை உடைத்து வழக்கம்போல் பூசைகள் நடைபெற ஏற்பாடு செய்தார். வழக்கமாக அர்ச்சனை செய்பவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாததனால், மிகுந்த சிரமத்தின் பேரில் வெளியூர்களிலிருந்து அர்ச்சகர்களை அழைத்து வர வைத்தியநாத ஐயர் ஏற்பாடு செய்தார். இதன் பின்னும் ஆலயத்தில் நடைபெற்ற அர்ச்சனைகளை நிறுத்தி மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தச் சனாதனிகள் செய்த முயற்சி வெற்றி பெறவில்லை.

வழக்கில் வெற்றி

ஆகவே வழக்கறிஞரான நடேச ஐயரும் அவரது ஆதர வாளர்களும் கடைசியாக அவர்களுக்கு இருந்த சாதனத்தைக் கையாண்டார்கள். இந்த ஆலயப் பிரவேசத்திற்கு ஏற்பாடு செய்த வைத்திய நாத ஐயர், எல். என். கோபால்சாமி, நிர்வாக அதிகாரி ஆர். எஸ். நாயுடு, ஆலயப் பிரவேசத்தின் போது உள்ளே சென்ற அரிஜனங்கள் ஆகியோர்மீது வழக்குத் தொடர்ந்தார்கள். இந்தச் சமயத்தில் தான் காங்கிரஸ் அமைச்சரவை உதவிக்கு வந்தது. சென்னை அரசாங்கம் ஆலயப் பிரவேச அவசரச் சட்டத்தையும் ஆலயப் பிரவேசப் பாதுகாப்புச் சட்டத்தையும் இயற்றியது. இந்தியாவின் தலைமை நீதி மன்றம் வரை இந்த வழக்குச் சென்றும் ஆலயப் பிரவேச ஆதரவாளர்களே வெற்றி பெற்றனர்.

ஆலயப் பிரவேசம் நடைபெற்று முடிந்ததன் பின், சனாதனிகள் மத்தியில் வைத்தியநாத ஐயர் பட்டபாடு கொஞ்சநஞ்சம் அல்ல. ஒரு அன்பர் அவர்பட்ட அல்லல்

களை அண்ணலுக்கும் தெரிவித்து விட்டார். ''சனாதனிகள் அவரைக் கிறுகிறுக்க வைத்து விட்டார்கள்,'' என்று அவர் எழுதியிருந்தார். இதன் பின்பு வைத்தியநாத ஐயர் ஐயருக்கு ஆறுதல் கூறி காந்திஜி ஒரு நீண்ட பட்ட பாடு தந்தி அனுப்பினர். ''உங்களைத் தண்டிக்க விரும்புவோர் சொல்பவைகளையோ செய்பவை களையோ மனதிற் போட்டுக் கொள்ளாதீர்கள். ஒரு சமய சீர்திருத்தவாதி என்ற முறையில் எதிர்ப்பாளர்களால் பாதிக்கப்படாமல் முற்றிலும் பற்றற்ற முறையில் நீங்கள் செயல்பட வேண்டும்'' என்று காந்திஜியின் தந்தி கூறியது. அதற்கு ஐயர், ''ஸ்ரீ மீனாட்சியின் அனுக்ரகத்தாலும் தங்க ளுடைய ஆசீர்வாதங்களாலும் நான் வழக்கம்போல் அமைதி யாகவே இருந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறேன். மற்ற பெரிய ஆலயங்களும் விரைவில் இதைப் பின்பற்றும் என எண்ணுகிறேன். தங்களுடைய அன்பும் ஆசீர்வாதமும் தான் எனக்குப் பெரும்பலம்'' என்று பதில் தந்தி கொடுத்திருந்தார். இதன் பின்னர் இதைப்பற்றி யெல்லாம் காந்திஜி 'அரிஜனில்' எழுதினர். அப்போது ''தீண்டாமை ஒழிப்பில் ஈடுபட்டுள்ள ஊழியர்களிடையே மிகவும் அடக்கத்தோடும் ஆரவாரம் இல்லாமலும் பணியாற்றுபவர்களில் அவர் (வைத்தியநாத ஐயர்) ஒருவர்; அவர் உண்மையான சமய வாதி'' என்று ஐயரைப் பாராட்டி எழுதினர். ஐயருடைய தந்தையார் இறந்தபோது, கிரியைகள் நடத்துவதற்கு எந்த பிராம்மணரும் வர மறுத்து விட்டார்கள். கடைசியில் மிகுந்த சிரமத்துடன் வெளியூரிலிருந்து புரோகிதர்களை அழைத்து வர வேண்டியதாயிற்று.

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயப் பிரவேசத்தை அனுசரித்து தஞ்சாவூர்ப் பெரிய கோவில், இந்தச் சமயத்தில் தான் அரிஜனங்களுக்குத் திறந்துவிடப் **முக்கிய கோவில்கள்** பெற்றது. மற்றும் மேலூர்த் தாலுகா வலையபட்டி சுந்தரராஜப் பெருமாள் கோவில், குற்றுலம் திருக்கட்டளை நாத சுவாமி கோவில், தென்காசி காசி விசுவநாத சுவாமி கோவில், உதகமண்டலம் மாரியம்மன் கோவில், கோவை ஸ்ரீ விநாயகர் கோவில், ஸ்ரீ காமாட்சியம்மன் கோவில், ஹோசூர் சென்ன கேஸ்வரப் பெருமாள் கோவில், காரைக்குடி சித்தி விநாயகர் கோவில் ஆகிய ஆலயங்களில் அரிஜனப் பிரவேசம் நடை பெற்றது.

அரிஜனங்களுக்கிருந்த குறைகளைப் போக்க அவ்வப் போது நாராயணன் நம்பியார், டாக்டர் சுப்பராயன், எம். கி. ராஜா போன்ற சிலர் சென்னைச் சட்ட சபையில் மசோதாக்கள் கொண்டு வந்தார்கள். ஆனாலும் அவை ஏதாவதொரு தடங்கலால் (அல்லது ஆட்சி பீடத்தினரின் குறுக்கீட்டால்) நிறைவேறிச் சட்டமாக முடியவில்லை. 1937-இல் ராஜாஜி தலைமையின் கீழ்ச் சென்னையில் காங்கிரஸ் அமைச்சரவை பதவியேற்ற பின்தான் அரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேச உரிமையை அளித்து அவர்களுடைய குறைகள் பலவற்றைப் போக்க உதவிய மசோதாக்கள் நிறைவேறின. ஆலயப் பிரவேசத்தைச் சட்டத்தின் மூலமாக அங்கீகரித்த முதல் மாநிலம் இந்தியாவிலேயே சென்னை தான்.

மக்கள் அரசு

இரண்டாவது உலகப் போர் தொடங்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப் பெற்ற அமைச்சரவைகள் பதவியை விட்டு இறங்கியபின், அரிஜன முன்னேற்றப் பணிகள் மற்ற அரசியல் பணிகளையும் சமூகத் தொண்டுப் பணிகளையும் போலத் தேங்கி நின்றன. மக்களுடைய ஆர்வம் கூட அந்தச் சமயத்தில் குறைந்து காணப்பட்டது. ஆயினும், 1946-இல் தேர்தல் நடைபெற்று சென்னை மாநிலத்தில் காங்கிரஸ் அமைச்சரவை மீண்டும் அமைக்கப் பெற்றபோது இது மேலும் விறுவிறுப்படைந்தது. 1947 ஜனவரி முதல் தேதியன்று இடைக்கால (இந்திய) அரசாங்கத்தில் தொழிலாளர் அமைச்சராக இருந்த ஜகஜீவன்ராம் தலைமையின் கீழ், திருவாரூர் தியாகேசர் ஆலயத்தில் அரிஜனங்கள் சென்று வழிபட்டார்கள். அந்த ஆண்டு மத்தியில் இராமேஸ்வர ஆலயம் அரிஜனங்களுக்குத் திறந்து விடப் பெற்றதுடன், தமிழகத்தில் எல்லா ஆலயங்களிலும் ஆலயப் பிரவேசம் நடந்து முடிந்து விட்டது என்று கூறலாம்.

மீண்டும் விறு விறுப்பு

இவ்வாறு படிப்படியாகவும், ஒரு வகையில் மெதுவாகவும் நடைபெற்று வந்த ஆலயப் பிரவேசத்தையும் தீண்டாமை ஒழிப்பையும், படித்த சீர்திருத்தவாதிகள் ஏளனம் செய்யலாம் என்பதை காந்திஜி அறிந்திருந்தார். ஆகையால் அவர் ''உயர்ந்த படிப்புப் படித்த அரிஜனங்களும்

இரத்தம் சிந்தாப் புரட்சி

மற்றவர்களும் காலந்தாழ்த்தி நடைபெறும் இந்தச் சீர்திருத்தத்தைக் குறைத்து மதிப்பிடலாம். ஆனால் இதன் ஒரு முக்கியத்துவத்தை நாம் மறந்து விடக்கூடாது. இந்தச் சீர்திருத்தம் இரத்தம் சிந்தாமல் நடைபெற்றிருக்கிறது'' என்று எச்சரித்தார். இரத்தம் சிந்தாமல் இவ்வளவு பெரிய சீர்திருத்தம் உலகின் எப்பகுதியிலாவது நடைபெற்றிருப்பதாக நாம் அறிந்ததில்லை.

—ஃ—

முப்பதைப் போன்றே முப்பத்தி ஒன்றும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க ஆண்டாகவே இருந்தது. அந்த ஆண்டு ஜனவரி 25-ஆம் தேதியன்று காந்திஜியும் மற்ற தலைவர்களும் விடுதலை செய்யப்பட்டார்கள். மார்ச் 4-ஆம் தேதியன்று காந்தி-இர்வின் உடன்படிக்கை கையொப்பமாயிற்று. பகவத்சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோர் தூக்கிலிடப் பட்டார்கள். வரலாற்றுப் புகழ்மிக்க கராச்சி காங்கிரஸ் கூடியது. தற்போது பட்டொளி வீசிப் பறக்கும் மூவர்ணக் கொடி அந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் காங்கிரஸ் செயற் குழுவால் அங்கீகரிக்கப் பெற்றது தான். காந்திஜி இலண்ட னுக்குச் சென்று வட்டமேசை மாநாட்டில் பங்கு கொண் டார். திரும்பி வந்த வழியில் முசோலினியைச் சந்தித்தார். அவர் இந்தியாவில் காலடி வைத்து இறங்குவதற்குள் ஜவர்கர்லால் நேருவும் கபார்கானும் கைதாகி விட்டார்கள். அவர் இறங்கிய பின்னரோ மேலும் ஏராளமானவர் கைதா னார்கள். சத்தியாக்ரகத்தை மீண்டும் தொடங்க காந்தி ஜிக்குக் காங்கிரஸ் செயற்குழு அங்கீகாரம் அளித்தது.

முப்பத்தி ஒன்று

1928-இற்கும் முப்பத்திரண்டிற்கும் இடையே நான்கு மாபெருந்தலைவர்கள் - மௌலானா முகமது அலி, பண்டித மோதிலால் நேரு, அன்னிபெசண்ட், வித்தல் பாய் படேல் ஆகியோர் - காலமானது இந்திய அரசியலுக்குப் பேரிழப்பாக இருந்தது. காந்திஜியின் உயிரையே ஊசலாட வைத்த வரலாற்றுப் புகழ் மிக்க புனு உண்ணு நோன்பு மேற் கொள்ளப்பட்டது 1932-இல் ஆகும். தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தனித் தொகுதி அளிப்பது என்ற பிரிட்டன் அரசின் பிரிவினைச் சூழ்ச்சியை எதிர்த்துத் தொடங்கப் பெற்ற இந்த வேள்வி வெற்றிகரமாக முடிந்தபோது தாழ்த்தப்பட்டோர்களின் சார்பாக டாக்டர் அம்பேத் காருடன் கையொப்பமிட்ட மற்றொரு தலைவர் தமிழ

பெரிய இழப்பு

கத்தைச் சேர்ந்த எம். சி. ராஜா ஆவார். பிரிட்டன் தலைமை அமைச்சர் தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதி அளிக்கப்போவதாக அறிவித்ததைக் கண்டித்தும் காந்திஜியின் உயிரைக் காப்பாற்ற வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் முதன் முதலாக அறிக்கை வெளியிட்டவர் களில் எம். சி. ராஜா ஒருவராவார். இந்த உண்ணு நோன் பைத் தொடங்கப் போவதாக காந்திஜி அறிவித்தபோது, பம்பாயில் நூற்றுக்கு மேற்பட்ட இந்துத் தலைவர்கள் கூடி எம்முயற்சி செய்தேனும் அண்ணல் உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்ற முடிவை மேற்கொண்டனர்; அந்த மாநாட் டிலும் எம். சி. ராஜா தீவிரப் பங்கு கொண்டார். காந்திஜி உடன்படிக்கைக்குச் சம்மதிக்கு முன் இரண்டு அரிஜனத் தலைவர்களோத் தாம் சந்திக்க விரும்புவதாகச் சொன்னர். அவர்களில் ஒருவர் டாக்டர் அம்பேத்கார் என்பதும் மற் றொருவர் எம். சி. ராஜா என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்க தாகும். இந்த உடன்படிக்கையின் மூலம், தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பல சலுகைகள் வழங்கப்பெற்றன; ஆனல் தனித் தொகுதி அளிக்கும் யோசனை கைவிடப்பெற்றது.

பல போராட்டம்

அரிஜன சுற்றுப்பயணத்தை மேற்கொண்டு மகாத்மா 1933-இலும் 34-இலும் தமிழகத்திற்கு வந்தபோது, தம்மை ஒரு சிறைக் கைதியாகவே பாவித்துக் கொண் டார். ஆகையால் அவர் அந்தச் சமயத்தில் அரசியல் விவகாரங்களோப் பற்றிய பேச்சில் ஈடுபடவில்லை; தனித் தொகுதி ஏற்படும் அபாயத்தைத் தவிர்த்ததன் பின் 1933 பிப்ரவரியில் காந்திஜி அரிஜன சேவா சங்கத்தைத் தொடங்கியிருந்தார். இதன் பின்னர் தம்மைத் தாமே தூய்மைப்படுத்திக் கொள்வதற் காக அவர் 21 நாட்கள் உண்ணு நோன்பை மேற்கொண் டார். அவருடைய ஆலோசனையின் பேரில் அப்போது நடைபெற்றுக் கொண்டிருந்த சட்ட மறுப்புப் போராட்டம் நிறுத்தி வைக்கப்பெற்று தனிப்பட்டோர் சட்டமறுப்புப் போராட்டம் தொடங்கப் பெற்றது. தண்டி (உப்பு) யாத் திரையை மேற்கொண்டபோது, நாட்டின் விடுதலையைப் பெறுமல் சபர்மதி ஆசிரமத்திற்குத் திரும்பி வருவதில்லை என்று உறுதி கொண்ட உத்தமர் மீண்டும் அங்குத் திரும்பிச் சென்று தங்காதது மட்டுமல்ல, அந்த ஆசிரமத்தை அரிஜன இயக்கத்திற்கு அளித்துவிட்டார். ஆகஸ்ட் 4-ஆம் தேதி யன்று கைதாகி சிறையில் வைக்கப் பெற்றவர் 16-ஆம் தேதி

யன்று உண்ணு நோன்பு தொடங்கியதால் உடல்நிலை மோச மாகி விடுதலை செய்யப்பெற்றார். நிபந்தனையின்றியே அவர் விடுதலையானார் என்றாலும், நீதிமன்றத் தீர்ப்புப்படி தம்மு டைய தண்டனைக் காலம் முடிவடைய வேண்டிய ஆகஸ்ட்-3, 1934-ஆம் தேதி முடிய சட்டமறுப்புப் போராட்டத்தில் பங்கு கொள்வதில்லை என்று விரதம் பூண்டார்.

சுதேசிப் பிரச்சாரம்

இவைகளெல்லாம் இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்கள். இப்போது நாம் தமிழகத்தைப் பார்ப்போம். உப்புச் சத்தியாக்ரகம் ஒரு வகையாக முடிந்த பின், தமிழகம் அயர்ந்து தூங்கிவிடாது, காந்திஜி ஆணைப்படி கள்ளுக்கடை மறியலை விறு விறுப்பாக நடத்தத் தொடங்கியது. உப்புச் சத்தியாக்ரகத்தின் காரணமாகச் சிறைத் தண்டனை விதிக்கப்பெற்ற ராஜாஜி அக்டோபர் மாதம் விடுதலையாகி வெளியே வந்தாரோ இல்லையோ சுதேசிப் பிரச்சார இயக்கம் தீவிரமாயிற்று. தீபாவளியைக் கொண்டாட வேண்டாம் என்று மக்களைக் காங்கிரஸ் ஊழியர்கள் கேட்டுக்கொண் டனர். ஊழியர்கள் மத்தியிலும் மக்களிடையேயும் ராஜாஜி யின் செல்வாக்கு வேகமாகப் பரவுவதைக் கண்டு, கி. பு. கோ. 107-ஆவது பிரிவுப்படி அவர்மீது வழக்குத் தொடர்ந்து அவரிடம் சாமீன் கேட்டனர்; அவர் சாமீன் கொடுக்க மறுக்கவே ஓராண்டுச் சிறைவாசத் தண்டனை அளித்து மீண்டும் சிறைக்குள் தள்ளிவிட்டார்கள். அவருடைய வேண்டுகோளின்படி, சத்தியமூர்த்தி தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராகி, சுதேசி இயக்கப் பிரச்சாரத்தை வேகமாக நடத்தி னார்.

அடக்குமுறை

1931 மார்ச்சில் வைசிராயும் காந்திஜியும் ஒரு உடன் படிக்கைக்கு வந்தது தமிழகத்திற்கு மனநிம்மதியை அளித்தது. ஆனாலும் பின்னர், காந்திஜி வட்ட மேசை மாநாட்டிலிருந்து திரும்பிவந்து, சட்ட மறுப்பு விறு விறுப்படையவே, அரசாங்கத்தின் அட்க்குமுறையும் வேகமடைந்தது. காந்திஜி கைதானபின் - அதாவது 1932 தொடக்கத்தில் - கூட்டங்கள் நடத்துவதற்குக் கூடத் தடை வந்துவிட்டது. மறியலைத் தடை செய்வதற்கான அவசரச் சட்டம், சட்ட விரோதமான கூட்டங்களைத் தடை செய்யும் அவசரச்சட்டம் என்று அவசரச் சட்டங்கள் பிறப்பித்த வண்ணமாக இருந்தது

அரசு. காங்கிரசே சட்டவிரோதமான நிறுவனம் என்றும் அறிவித்தது. ஆகவே, காங்கிரஸ் குழுக்களைக் கலைத்து அவைகளின் இடத்தில் சர்வாதிகாரிகளைக் குழுவினர் நியமித்தார்கள். ஆனால் அந்தச் சர்வாதிகாரிகளையும் அரசு விட்டபாடில்லை. தமிழ் நாட்டின் முதல் சர்வாதிகாரியான ராஜாஜியையும் சென்னை நகரின் முதல் சர்வாதிகாரியான சத்தியமூர்த்தியையும் கைது செய்தது; காங்கிரஸ் மாளிகையையும் கைப்பற்றியது. ஆயினும், இத்தனை அவசரச் சட்டங்களுக்கும் மத்தியில் சட்ட மறுப்பு இயக்கத்தின் வேகம் கூடியதே தவிரக் குறையவில்லை. சில இடங்களில் தமிழகத்தில் போலீசாருக்கும் அறப்போர் வாதிகளுக்கும் மோதல் ஏற்பட்டு விரும்பத் தகாத நிகழ்ச்சிகள் நடந்து விட்டன. இம்சையில் நம்பிக்கை கொண்ட சிலர் வெடிகுண்டு வைப்பது போன்ற செயல்களிலும் ஈடுபட்டார்கள். தபால் பெட்டிகளை அவைகளில் போடப்பட்டிருந்த கடிதங்களுடன் சில இடங்களில் எரித்துவிட்டார்கள். இந்துஸ்தான் சோஷலிஸ்ட் குடியரசு இராணுவம் என்ற பெயரில் ஒரு பலாத்காரப் புரட்சி அமைப்புச் செயலாற்றி வந்தது. பொதுவாக 1932-33-இல் பயங்கரவாதிகளின் இயக்கம் தீவிரமாக இருந்தது என்று கூறலாம். 1933 ஜனவரி 26-ஆம் தேதியன்று விடுதலை நாள் கொண்டாடப்பெற்றபோது, நான்கு தொண்டர்கள் சட்டசபைக் கட்டிடத்திற்குள் பார்வையாளர்கள் காலரிக்குச் சென்று துண்டுப் பிரசுரங்களைச் சிதறியதுடன் ஒரு சிறு யூனியன் ஜாக் கொடியையும் எரித்தனர். மதுரையில் வரிகொடா இயக்கத்தைத் தூண்டுவதற்கான முயற்சியும் நடைபெற்றது. ''பயங்கரவாதி''களுக்கு மதுரை ஒரு கேந்திரமாய் விளங்கியது.

கஸ்தூரிபா வருகை

புனாவில் காந்திஜி வரலாற்றுப் புகழ்பெற்ற உண்ணாநோன்பைத் தொடங்கியபின் சட்டமறுப்பு நடவடிக்கைகள் குறைந்து ஆங்காங்கு ஒரு சில இடங்களில் மட்டும் அவ்வப்போது நடந்து கொண்டிருந்தன. 1932 நவம்பரில் குருவாயூருக்குச் செல்லும் வழியில் கஸ்தூரிபா சென்னைக்கு வந்தார். இந்தச் சமயத்தில் தமிழகம் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் தீவிர கவனம் செலுத்திக் கொண்டிருந்தது. அனைத்து இந்திய தீண்டாமை ஒழிப்பு தினம் வெற்றிகரமாகவும் சிறப்பாகவும் கொண்டாடப்பெற்றது. தீண்டாமை

ஒழிப்புக்கு ஆதரவு திரட்டும் கூட்டங்களும் ஏராளமாய் நடைபெற்றன.

சுயராஜ்யக் கட்சி

1933-இல் காந்திஜி உண்ணு நோன்பு மேற்கொண்ட போது, தமிழகமெங்கும் பொது வேலை நிறுத்தம் நடை பெற்றது. திருச்சி சிறையிலிருந்த சட்ட மறுப்புக் கைதிகள் ஒருவேளை உண்ணு நோன் பிருந்தனர். அந்த ஆண்டில் காங்கிரசில் சற்று மிதவாதமான போக்குடையவர்களாயிருந்த வர்கள் எஸ். சத்தியமூர்த்தி தலைமையின் கீழ்க் கூடி, காங் கிரசில் தேர்தல் வேலைகளைக் கவனிக்கவும் ஆக்க வேலைகள் செய்யவும் காங்கிரசுக்குள்ளேயே சுயராஜ்யக் கட்சியை நிறுவுவதென்று முடிவு செய்தனர். இத்தகைய ஒரு சந்தர்ப் பத்தில் காந்திஜி தமிழகம் வந்தார்; இந்தச் சமயம் பெரும் புயலால் தஞ்சாவூர், தென்னார்க்காடு பகுதிகள் பாதிக்கப் பெற்று 168 பேர் உயிரிழந்தனர்; 7,000 கால் நடைகள் மடிந்தன.

மகத்தான வெற்றி

ஆந்திரச் சுற்றுப் பயணத்தை நிறுத்தி, சென்னை மாநக ருக்கு வந்து அவர் மூன்று நாட்கள் தங்கியது தான் அவர் 1933-இல் தமிழகத்தில் மேற்கொண்ட சுற்றுப் பயணம்; உண்மையில், இந்தச் சுற்றுப் பயணம் சென்னை மாநகருக்குள்ளேயே நிகழ்ந்த சுற்றுப் பயணமாகும். காந்திஜியோ மற்றவர்களோ எதிர்பார்க்காத அளவிற்கு இது மகத்தான வெற்றியாக முடிந்தது. இம்முறை தீண்டாமை ஒழிப்பு என்னும் ஒரே பணியை மேற்கொண்டு அண்ணல் வந்திருந்தாராதலால், சனா தனிகள் தங்களுடைய முழு மூச்சையும் கொண்டு அவரைக் கடுமையாக எதிர்த்தார்கள். ஒத்துழையாமை, சட்ட மறுப்பு, உப்புச் சத்தியாக்ரகம் ஆகிய போராட்டங்களில் தமிழகம் புடம் போட்டு எடுக்கப் பெற்ற காலம் அது. ஆகை யால் சனாதனிகள் தலைகீழாக நின்று செய்த முயற்சியெல் லாம் தவிடு பொடியாயிற்று. எங்குச் சென்றாலும் காந்திஜி யைக் கர்ணவும் அவரை வரவேற்கவும் கட்டுக் கடங்காது மக்கள் கூட்டம் திரண்டது. அண்ணல் இம்முறை மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். ஒரு சீர்த்திருத்தத்தைத் தமிழகம் ஏற்றுவிட்டது என்றால் இந்தியாவே ஏற்று விடும் என்பதில் அவருக்குத் தளர்விலா நம்பிக்கை இருந்தது. மேலும் அடுத்த மாதம் தமிழகத்தில் அவர் மேற்கொள்ளப் போகும் சுற்றுப்

இரயில் நிலையத்தில் நல்ல அமைதி நிலவியது; போக்கு வரத்து ஏற்பாடுகளை ஜி. எம். எம். போர்பஸ் என்ற கமிஷனர் சிறப்பான முறையில் செய்திருந்தார். ஈவினிங் பஜார் ரோட்டிலிருந்து மூர்மார்க்கெட் வரை எள்ளுப் போட்டாலும் கீழே விழாதபடி மக்கள் குழுமியிருந்தார்கள். அரைமணி நேரத்திற்கும் மேலாக சென்ட்ரல் இரயில் நிலையத்திற்கு அருகில் பஸ்களோ டிராம்களோ போக முடிய வில்லை. நேஷனல் மூவிடோன் கம்பெனியார் (மகாத்மா வருகையை) திரைப்படம் பிடித்தனர். சென்னை மாநகரில் காந்திஜி பங்கு கொள்ள வேண்டிய நிகழ்ச்சிகளின் நிரலை முன்கூட்டியே அவருக்கு அரிஜன சேவா சங்கத்தார் அனுப்பியபோது, ஒரு மாத காலமாக ஆந்திராவில் சுற்றுப் பயணம் செய்ததன் காரணமாக அலுப்பு அதிகமாக இருக் கிறது என்றும், ஆகையால் சில நிகழ்ச்சிகளைக் குறைத்துவிடு மாறும் அவர் எழுதியிருந்தார். ஆனாலும் மக்களுடைய ஒத்துழைப்பின் பேரில் நிறைவேற்றிவிட முடியுமென அரிஜன சேவாசங்கத்தார் நம்பி அந்த நிகழ்ச்சி நிரலையே அறிவித் தார்கள்.

நகராண்மைக் கழகம்

ரிப்பன் கட்டிடத்தில் நடைபெற்ற வரவேற்பில் நகராண் மைக் கழக மண்டபம், தாழ்வாரம், சுவர், புல் வெளி ஆகிய எல்லா இடங்களிலும் போலீசாரும் தொண்டர் களும் சமாளிக்க முடியாதவாறு மக்கள் கூட்டம் மிகுந்திருந்தது. (அப்போது மேயராக இருந்த டபிள்யூ. டபிள்யூ. லேடன், ஆணையராக இருந்த டி. டி. வாரன் ஐ. சி. எஸ். ஆகியோர் காந்திஜியை வரவேற்றனர்.) நகரார்ண்மைக் கழகம் அளித்த வரவேற்பிற்குப் பதில் அளித்துப் பேசியபோது, இதற்கு முன் இதே நகராண்மைக் கழகம் தமக்கு அளித்த வரவேற்பில் சொன்னதை அண்ணல் நினைவூட்டினர். ''முந்தைய வரவேற் பில் இந்நகரில் சுத்திகரிப்பு வேலை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தினேன். இப்போது மற்றொரு சுத்திகரிப்பு வேலையை மேற்கொண்டே இங்கு வந்திருக்கி றேன். இது மத சம்பந்தமான சுத்திகரிப்பு வேலை'' என்று அவர் நயமாகக் குறிப்பிட்டார். காந்திஜியின் வருகையை முன்னிட்டு நகராண்மைக் கழகப் பள்ளிகளும் அலுவலகங் களும் மூடப்பெற்றிருந்தன.

ஜெனரல் பேட்டர்ஸ் சாலையில் உள்ள காங்கிரஸ் மாளிகையில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த அனைத்து இந்திய சுதேசிப் பொருட்காட்சியை அண்ணல் திறந்து வைத்தார். காங்கிரஸ் மாளிகையில் பொருட்காட்சி ஏற்பாடாகியிருந்ததால், பக்கத்தில் உள்ள மிட்லண்ட் தியேட்டரில் திறப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்ந்தது. இங்குத் தென்னிந்திய வணிக சபையினர் அளித்த வரவேற்புரையில், இந்திய தேசியத் தலைவர்கள் பொருளாதார முன்னேற்றத்திற்கான வழிவகைகளை வகுப்பதை ஒரு முக்கியத் திட்டமாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். அண்ணல் உரையாற்றியபோது, அரிஜன முன்னேற்றத்திற்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட தாம் இந்தப் பொருட்காட்சியைத் திறந்து வைத்ததில் இருந்த தொடர்பை விளக்கினார். ''அரிஜன வேலைக்கும் இப் பொருட்காட்சிக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்கக் கூடும். அரிஜனங்களைப் பொருத்தவரை கதருக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. கையால் நூற்றுக் கையால் நெசவாகும் கதரால் பல்லாயிரக் கணக்கான அரிஜன மக்களுக்கு நல்வாழ்வு கிட்டும். அவர்களுக்குக் கதரால் ஏற்படக் கூடிய நன்மையை நானே நேரில் கண்டிருக்கிறேன். ஆகையால் இத்தகைய பொருட்காட்சிகளில் அரிஜனங்களால் செய்யப் பெற்ற பொருள்கள் பெரும்பாலாக வைக்கப்பெறுவதை நான் விரும்புவேன். உதாரணமாக, தோல் தொழில் இருக்கிறது. ஆரம்ப நிலையிலாவது அரிஜனங்கள் வேலை செய்யாவிடில் இந்தியாவில் தோல் தொழில் இருக்குமிடமே தெரியாது'' என்று அவர் கூறினார். ஸ்ரீபாத சங்கர் தலைமையில் அமைந்த ஒரு குழு ஏற்பாடு செய்திருந்த இந்தப் பொருட்காட்சியில் மணிக்கு ஆயிரங்கெசம் நூற்கக் கூடிய தும் பெங்களூரைச் சேர்ந்த இராஜகோபாலன் என்ற இளைஞர் கண்டு பிடித்ததுமான ஒரு புது வகை இராட்டை இடம் பெற்றிருந்தது. இந்தப் பொருட்காட்சிக்கு அண்ணல் வருகை புரிந்ததையும் நேஷனல் மூவிடோன் கம்பெனியார் திரைப்படமாகப் பிடித்தார்கள். சென்ட்ரல் இரயில்வே நிலையத்தில் பிடித்த படத்தையும் இதையும் சேர்த்து - வழக்கமான முறையில் தணிக்கை நடைபெற்றபின் - திரைப் படக் கொட்டகைகளில் காண்பித்தனர்.

சுதேசிப் பொருட்காட்சி

இவ்வாறு அன்று நடைபெற்ற பொதுக்கூட்டம் உள்பட ஆறு கூட்டங்களில் காந்திஜி பேசினார். இவைகளில், எழும்பூர் பாந்தியன் சாலையில் மாதர் இந்திய சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற மாதர்கள் கூட்டத்தில் அவர் விடுத்த ஓர் எச்சரிக்க ஒரு சில வாரங்களில் பலித்துவிடும் என்று அவரே எதிர்பார்த்திருக்க மாட்டார். ''தீண்டாமை இருந்தால் இந்து சமயமே அழிந்துவிடும் என்று எச்சரிக்கை நான் ஒரு போதும் பின் தங்கியதில்லை. கடவுள் நம்மிடம் மிகப் பொறுமையாக நடந்து கொள்கிறார். ஆனால் இந்தியாவில், மனிதர்களுக்கு மனிதர் வேறுபாடு காண்பித்து இந்துக்கள் நடந்து கொள்வதைப் பார்த்தால், கடவுளும் பொறுமை இழந்து விடுவார் என்று சொல்லும் துணிவு எனக்கு ஏற்படு கிறது'' என்று அவர் கூறினார். அவர் இவ்வாறு கூறிய ஒரு சில வாரங்களில் பீகாரில் மாபெரும் பூகம்பம் ஒன்று ஏற்பட்டது.

எச்சரிக்கை பலித்தது

இந்தக் கூட்டத்தில் காந்திஜியின் சொற்பொழிவை மொழி பெயர்த்த டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி காந்திஜியிடம் ரூ. 430 கொண்ட ஒரு பணப்பையைக் கொடுத்தார். அந்தப் பையைப் பெற்றுக் கொண்டு காந்திஜி சொன்னார்: ''பணப்பை கனமாக இல்லையே? சரி...கனமோ கனமில்லையோ, அது அரிஜனங்களின் நலனுக்காகச் செலவாகும்.''

முத்துலட்சுமி ரெட்டி

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி: திலகர் கட்டத்தில் அளிக்க இருக்கும் பண முடிப்பிற்காக மாதர்கள் அதிகம் கொடுத்திருக்கிறார்கள்.

காந்திஜி (வேடிக்கையாக): இது கூட ஒரு சமாதானமா? ஆண்களுடன் நீங்களும் சமத்துவம் கொண்டாடு கிறீர்கள் போலும்.

இதன் பின்னர், தாய்மார்கள் சங்கமும் அரிஜனப் பெண்களும் சேர்ந்து கூட்டியிருந்த ஒரு கூட்டத்தில் காந்திஜி பங்கு கொண்டார். (இராயப் பேட்டையில் உள்ள இந்திய ஊழியர் சங்கக் கட்டிடத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மகாத்மாவை சுபத்திரம்மா வரவேற்றார்.) தாய்மார்

பெண்கள் கூட்டம்

கள் சங்கம் என்பது சாதி இந்துக்களையும் அரிஜனங்களையும் சார்ந்த பெண்களின் அமைப்பு. இதில் வைதிக பிராம்மணப் பெண்களும் உறுப்பினர்களாய் இருந்தார்கள். இந்தக் கூட்டத்தில் அரிஜனங்கள் தங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ள மூன்று வழி முறைகளை அவர் விளக்கினார். ''முதலாவதாக, அரிஜனங்கள் உடம்பைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். இரண்டாவது, செத்த மிருகங்களின் மாமிசத்தையும் மாட்டு மாமிசத்தையும் உண்ணக் கூடாது. மூன்றாவது, குடிப் பழக்கத்தை விட்டு விடவேண்டும்,'' என்று கூறி, இவைகளை ஆண்களும் கடைப் பிடிக்குமாறு பெண்கள் கவனித்துக்கொள்ள வேண்டும் என்று யோசனை சொன்னார்.

மாணவர்கள் வரவேற்பு

மிட்லண்ட் தியேட்டரில் மாணவர்கள் மாபெருந் திரளாகக் கூடியிருந்து காந்திஜியை வரவேற்று ஆயிரம் ரூபாய் கொண்ட பண முடிப்பை அளித்தார்கள். பாபினீடு, எம்.வி. சர்மா ஆகியோரைச் செயலாளர்களாகக் கொண்டு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த இந்தக் கூட்டத்தில், 1896-ஆம் ஆண்டில் சென்னை மாணவர்கள் தமக்கு அளித்த வரவேற்பை மகிழ்ச்சியோடும் பெருமிதத்தோடும் குறிப்பிட அவர் தவறவில்லை ''வெறும் பேச்சில் மூழ்கிவிடாது செயலில் ஈடுபடுங்கள். தீண்டாமை ஒழிப்பை எதிர்க்கும் வைதிகர்கள் சாத்திரங்களின் உண்மைக் கருத்தை உணர்ந்தவர்கள் அல்லர். பொது மக்களின் சார்பாகப் பேசவும் அவர்களுக்கு உரிமை கிடையாது. ஆகையால் கையில் விளக்குமாற்றையும் வாளியையும் எடுத்துக் கொண்டு சேரிகளுக்குச் சென்று அரிஜன மக்களுக்குத் துப்புரவைக் கற்றுக் கொடுங்கள். ஓய்வு நேரத்தில் ஒரு பகுதியையாவது இப்பணியில் நீங்கள் செலவிட வேண்டும்'' என்று சமூகத் தொண்டை வலியுறுத்திப் பேசினார் காந்திஜி. மாணவர்களிடமிருந்து - ஏன், பொதுவாக எல்லோரிடமிருந்துமே தாம் என்ன எதிர் பார்ப்பார் என்பதை மகாத்மா இந்தச் சொற்பொழிவில் எடுத்துக் கூறினார். ''எது நல்லது என்பதை நீங்கள் உணர்ந்து விட்டீர்களானால் அதற்காகத் தொண்டாற்றுவதையே நான் எதிர் பார்ப்பேன். தீண்டாமை தீயது என்பதையும் அதை அகற்றி விடவேண்டுமென்பதையும் நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள். ஆகவே, அந்தக் குறிக்கோளுக்காக நீங்கள் சேவை செய்ய வேண்டும்.

ஏற்கனவே இவ்வாறு தொண்டாற்றி, இப்போது எனக்கு அளித்த வரவேற்புரையில், என்னென்ன வகைகளில் உங்கள் தொண்டு இருந்தது என்பதைத் தெரிவித்திருந்தால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன்'' என்றார் காந்திஜி. (தமக்கு அளிக்கப்பெற்ற வரவேற்புரையை அண்ணல் ஏலம் விட்ட போது, திருமதி இலட்சுமி சுவாமிநாதன் தம் கையிலிருந்த இரண்டு வஜ்ரங்களைக் கழற்றி அதன் விலையாகக் கொடுத்து வரவேற்புரையை வாங்கிக் கொண்டார்.)

சுமார் ஆயிரம் மாணவர்களைக் கொண்ட இக்கூட்டத்தைக் கண்டபின்னும் இந்தியைப் பற்றி மகாத்மா பேசாமல் இருப்பாரா? ''நான் முன்னமேயே சென்னை (மாநில) மாணவர்களைப் பற்றி ஒரு குறைப்பட்டுக் கொண்டிருக்கிறேன்'', என்று தொடங்கி மேலும் சொன்னார்: ''அவர்கள் சென்னை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும் அல்லர்; இந்தியக் குடிமக்களும் ஆவர். ஆகவே இந்தியாவில் இருபத்திரெண்டு கோடி மக்கள் (அப்போது பாகிஸ்தானும் அடங்கிய இந்தியாவில், மொத்த மக்கள் தொகை முப்பத்தி ஐந்து கோடியாக இருந்தபோது) பேசும் இந்தி மொழியை அவர்கள் எவ்வாறு புறக்கணிக்க முடியும்? சில மாணவர்கள் இந்தி படிக்கிறார்கள் என்பது உண்மையேயானாலும் அது போதாது...இந்தி தெரியாமலிருப்பது எவ்வளவு பெருங்குறை என்பதை இந்த நாட்டின் பொறுப்பு உங்கள் தோள்களில் ஏற்றப்படும்போது நீங்கள் நன்கு உணர வேண்டியிருக்கும்,'' என்று அவர் எச்சரித்தார். (அன்று ஏ. ரெங்கசாமி ஐயங்கார், கே. பாஷ்யம், ''அரிஜன்'' பத்திரிகை ஆசிரியர் ஆர்.வி. சாஸ்திரி ஆகியோர் காந்திஜியைப் பேட்டி கண்டார்கள்.)

இந்தி

அன்று திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்தைப் போன்று அதுவரை யாருக்கும் எப்போதும் சென்னையில் பெருங்கூட்டம் கூடியதில்லை. சுமார் இரண்டு இலட்சம் பேர் கூடியிருப்பார்கள் என்று ''இந்து'' மதிப்பிட்டது. காந்தியடிகளின் வருகையைப் புறக்கணிக்க வேண்டுமென்று தெருச் சுவர்களிலெல்லாம் சிலர் போஸ்டர்களை ஒட்டியிருந்தது இம்மியும் பயன் தரவில்லை என்பதை மக்கள் அன்று மாலை கண்ணுரக் கண்டார்கள்.

பொதுக் கூட்டம்

அண்ணலைக் காணவும் அவர் பேச்சைக் கேட்கவும் மக்கள் கடற்கரையில் மற்றொரு கடலாகத் திரண்டிருந்தது, கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. கிழக்கே கடல், வடக்கே மரீனு, தெற்கே மீன் காட்சி சாலை இது தான் கூட்டத்தின் எல்லை என்றால் கூட்டத்தை ஒருவாறு யூகிக்கலாம். மாலை நான்கு மணியிலிருந்தே தெற்கே மைலாப்பூரிலிருந்தும் மேற்கே ரவுண்ட்டானாவிலிருந்தும் வடக்கே ஜார்ஜ் டவுனிலிருந்தும் சாரை சாரையாக மக்கள் திருவல்லிக்கேணி கடற்கரையை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். நல்ல ஒலி பெருக்கி வசதியுடனும் போக்குவரத்துக்கான பாதைகளுடனும் கூட்டத்திற்குச் சிறந்த முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனாலும் கூட்டத்தில் பெரிய குழப்பமும் கூச்சலும் ஏற்பட்டுவிட்டது. இந்தக் கூட்டம் ஆறு மணிக்குத் தொடங்குவதாக இருந்தது. காந்திஜியும் சரியான நேரத்திற்கு ஐந்து நிமிடங்களுக்கு முன்பே கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தார். கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்கள் மேடையும் மூங்கிற் கம்பு வளைவுகளும் சரியாகத் தான் போட்டிருந்தார்கள். காந்திஜி வருவதற்கு முன்பும் மக்கள் அமைதியாகத் தான் உட்கார்ந்திருந்தனர். ஆனால், அவர் வந்தாரோ இல்லையோ அவரை அருகில் சென்று காண வேண்டுமென்ற ஆவலில் எல்லோரும் நான்கு புறங்களிலிருந்தும் காரை நோக்கிப் பாய்ந்தனர். முன்னால் யார் இருக்கிறார்கள், குழந்தைகளா, பெண்களா என்பதையெல்லாம் அவர்கள் கவனிக்கவில்லை. இதனால் தான் அவ்வளவு பெரிய கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. மிகவும் கெட்டிக்காரத்தனமாக காந்திஜியை மேடைக்குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். காந்திஜியும் வியர்த்து விறுவிறுத்து மேடைக்கு வந்து சேர்ந்தார். மேடையில் ஏறியவுடன், ஒரு கையால் வியர்வையைத் துடைத்துக் கொண்டு மற்றொரு கையை ஆட்டி அமைதியாக இருக்குமாறு சமிக்ஞை காண்பித்தார். உடனே சற்று நேரம் அமைதி ஏற்பட்டது; ''மகாத்மா காந்திக்கு ஜே'' என்று மக்கள் முழங்கினர். ஆனால் அதற்குப்பின் மறுபடியும் கூச்சலும் குழப்பமும் தொடங்கியது. அமைதியாயிருக்குமாறு மீண்டும் மீண்டும் காந்திஜி கேட்டுக் கொண்டது பலனளிக்கவில்லை. அதற்கு மாறாக, அவருடைய பேச்சை நன்றாகக் கேட்க வேண்டுமென்ற ஆர்வத்தில், கூட்டத்தினர் மேடையை நோக்கி நகர்ந்தனர். மேடையே அசையத் தொடங்கியது; ஆனாலும்

எப்படியோ அது கீழே விழாமல் தப்பியது. முன்னால் நின்று கொண்டிருந்தவர்களைக் கீழே உட்கார வைப்பதற்காகப் பின்னால் இருந்த சிலர் அவர்கள் மீது மணலை அள்ளி வீசினர். ஆனால் அவர்கள் நினைத்ததற்கு மாறாக இது குழப்பத்தை அதிகரிக்கத் தான் உதவியது.

குழந்தைகள் கதறல்

பெண்கள் கூட்டத்திற்கு ஏற்பட்ட அச்சத்தைப் பற்றிக் கூற வேண்டியதில்லை. அவர்களில் சிலர் தங்களுடைய குழந்தைகளுடைய உயிர்களையாவது பாது காக்க வேண்டுமென்பதற்காக, மேடையில் இருந்தவர்களிடம் தங்கள் குழந்தைகளைக் கொடுத்தார்கள். இவைகளில் சில கைக்குழந் தைகளும் இருந்தன. மேடையில் விடப்பட்ட குழந்தைகள், மிகுந்த அச்சத்துடன் காந்திஜியின் கைகளைப் பிடித்துக் கொண்டு ''தாத்தா, தாத்தா'' என்று கதறியது பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. பெண்களும் தேம்பித் தேம்பி அழத் தொடங்கி விட்டனர். குழந்தைகளை காந்திஜி தமது மடியில் வைத்து அவைகளுக்குத் தைரியங் கூறி அச்சத்தைப் போக்க முயன்று கொண்டிருந்தார். மேடையிலிருந்தவர்களில் ஒருவர், நான்கு வயதுக் குழந்தை ஒன்றைப் பார்த்து, ''அவர் யாரென்று உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டார். அதற்கு அந்தக் குழந்தை, ''தெரியுமே, அவர் தான் காந்தி,'' என்று பதில் அளித்தது. சுமார் அரை மணி நேரங் கழித்துத் தற்காலிகமாக அமைதி ஏற்பட்டவுடன் காந்திஜி பேசத் தொடங்கினர். சுமார் ஏழு நிமிடங்கள் தான் அவர் பேசினர். இதற்குள் காந்திஜியை மேடையிலிருந்து பாது காப்பாக அழைத்துச் செல்ல நான்கு போலீசுக்காரர்களை யும் ஏராளமான தொண்டர்களையும் பி. ஜகன்னாத தாஸ் அழைத்து வந்தார். இவர்கள் அரண் போலச் சுற்றி வளைந்து கொள்ள காந்திஜி சென்று காரில் ஏறித் தங்குமிடம் சென்றார். காந்திஜி மேடையை விட்டு இறங்கிச் சென்றது பல பேருக்குத் தெரியாது. ஆகையால் கூட்டங் கலையச் சுமார் ஒரு மணி நேரமாகிவிட்டது. கூட்ட நெருக்கடியில் ஓர் ஓய்வு பெற்ற நீதிபதியின் குமாரத்தியான கோபாலம் மாள் என்பவருடைய நாற்பது பவுன் ஒட்டியானத்தை யாரோ களவாடி விட்டார்கள். கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்களில் ஒருவரான கே. பாஷ்யம் மகாத்மாவுக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்ட வசதிக் குறைவுக்கு வருத்தம்

தெரிவித்துக் கொள்வதாகப் பின்னர் விடுத்த ஓர் அறிக்கையில் தெரிவித்தார்.

'இந்து மதமே அழியும்'

''ஆண்டவன் மனிதருக்குள் மனிதர் வேறுபாடு பாராட்டுவதில்லை. அவ்வாறு அவர் வேறுபாடு காண்பிப்பதாயிருந்தால் அதற்கான அடையாளச் சின்னங்களுடன் மனிதர்களைப் படைத்திருப்பார். அடியோடு தீண்டாமையை நாம் ஒழித்துக் கட்டாவிட்டால், நாம் மட்டுமல்ல, இந்து மதமே அழிந்து போகும். நாம் அதற்குக் காரணமாகவும் இருப்போம். ஆண்டவன் அருளால் இந்தச் செய்தி உங்கள் உள்ளத்தில் பதிந்தால், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற வேறுபாட்டை நீங்கள் மறந்து விடுவீர்கள்'' என்று இந்தக் கூட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவில் காந்திஜி குறிப்பிட்டார். ஆம், இந்தச் செய்தி தமிழர்கள் உள்ளத்தில் நன்கு பதியத்தான் செய்தது. தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் தமிழகம் முதன்மை தாங்கியது இதை உணர்ந்ததனால் தான். (இந்தக் கூட்டத்தில் சென்னை மகாஜன சபை, சென்னை நகரப் பொது மக்கள், அரிஜன திவ்யப் பிரபந்த சபை, திருவல்லிக்கேணி வணிகர்கள் ஆகியோரின் சார்பாக வரவேற்புரைகள் (படிக்காமல்) கொடுக்கப் பெற்றன. இங்கு மாலை சூட்டியவர்களில் ம. பொ. சிவஞான கிராமணியார் ஒருவர். வடசென்னை காந்திஜி வரவேற்புக் குழுச் செயலாளர் என்ற முறையில் அவர் மாலை சூட்டினார்.) திருவல்லிக்கேணியில் உள்ள காதி பந்தருக்கு காந்திஜி வந்தபோது ஏ. ருக்மணி இலட்சுமிபதியும் ஆர். பார்த்தசாரதியும் அவரை வரவேற்றார்கள். காதி பந்தர் இயக்குநர்கள் சார்பாக ஒரு பணமுடிப்பும் அளிக்கப் பெற்றது.

21–12–33

சேரிகளுக்கு வருகை

மேடைகளில் அழகாகச் சொற்பொழிவு நிகழ்த்திவிட்டுப் போவதுடன் தமது வேலை முடிந்து விட்டதாக எப்போதும் மகாத்மா எண்ணியதில்லை. கடையர்களுக்கும் கடையர்களாக, புழுக்களிலும் புழுக்களாகப் புரண்டு கொண்டிருந்த அரிஜன மக்களின் துயர்கள் வெறும் மேடைப் பேச்சுக்களால் அகன்று விடமாட்டா என்பது அண்ணல் அறிந்ததுதான். ஆகையால் இரண்டாம் நாளன்று அவர் சேரிகளை நேரிற் பார்க்கும் பணியை மேற் கொண்டார்.

சுமார் பத்துச் சேரிகளுக்குச் சென்று, ஒவ்வொன்றிலும் பத்து நிமிடங்களுக்குக் குறையாமல் செலவிட்டார். காலை 7-30 மணிக்கு அவர் தங்கியிருந்த வீட்டிலிருந்து (மைலாப்பூரில் கே. நாகேஸ்வர ராவ் பந்துலுவின் ''ஸ்ரீபாக்'' என்ற மாளிகை) அவர் புறப்பட்டார். அவர் பின்னல் ஒரு பஸ்ஸில் ஏராளமான தொண்டர்கள் ஏறிப்போனார்கள். அவர் பார்வையிட்ட சேரிகளில் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த ருத்திரானந்த சுவாமிகள் அரிஜன முன்னேற்றப் பணியை மேற்கொண்ட பல்லக்கு மணியம் சேரி ஒன்றுகும். மடத்தினர் அங்கு ஆற்றியுள்ள பணியை அண்ணல் கண்டு அருமையுடனும் பெருமையுடனும் பாராட்டினர். இராம கிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி ருத்திரானந்தா, தொண்டர் சங்கத்தின் உதவியுடன் சமூகத்தொண்டு செய்து வந்த இடமிது. சுவாமி ருத்திரானந்தாவை முத்து மகா ராஜ் என்றும் அன்போடு அழைப்பார்கள். அவர் தற்போது ஃபிஜி தீவில் தொண்டாற்றி வருகிறார். தொண்டர் சங்க மானது மைலாப்பூரில் லஸ் சர்ச்ரோடு அருகே உள்ள பல்லக்கு மணியம், பூந்தோட்டம் ஆகிய இரண்டு சேரி களிலும் தொண்டாற்றியது. சென்னை அரிஜன சேவா சங்கத் தலைவரான வி. பாஷ்யம் ஐயங்கார், செயலாளரான வேங்கடசுப்பையா ஆகியோருடன் பல்லக்கு மணியம் சேரிக்கு காந்திஜி வருகை புரிந்தார். சுவாமி ருத்திரானந்தா வரவேற்புரை வாசித்தளித்தார். அது மிகவும் சுருக்கமாக, மிகக் குறுகிய நேரத்தில் முடிந்துவிட்டதைக் கண்டு காந்திஜி வியப்புடன் ''இவ்வளவு சீக்கிரத்தில் முடிந்துவிட்டதா?'' என்று சுவாமிஜியைக் கேட்டார். ''இன்னும் சில வார்த் தைகள் சொல்லிக்கொள்கிறேன்'' என்று சுவாமிஜி காந்திஜி யிடம் வேண்டினர். ''சில வார்த்தைகள் தானே?'' என்று சொல்லிக்கொண்டே காந்திஜி மகிழ்ச்சியோடு சிரித்தார். பின்னர் வரவேற்புரைக்கு மறுமொழி அளிக்கையில், ''ஸ்ரீராம கிருஷ்ணமடம் செய்யும் அற்புதமான சேவைகளை நான் அறிவேன்; இது ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் இயக்கம். இந்துக்கள் எல்லோரும் - வயதானவர்களோ, இளைஞர் களோ ஆண்களோ பெண்களோ எல்லோரும் - இதில் பங்கு கொள்ளவேண்டும்'' என்று கூறினர். காந்திஜி வருகையை முன்னிட்டு இங்கு 300 குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தாடைகள் வழங்கப் பெற்றன. தொண்டர் சங்கம் ஆற்றிய பணிகளை காந்திஜி பாராட்டினர். இதன் பின்னர், திருமதி ஹீல்டாவுட் என்பவரும் பிரம்மஞ்ஞான சபையைச்

சேர்ந்த மற்றும் பலரும் கிராமப் புனருத்தாரணப் பணியை மேற்கொண்டுள்ள தாமோதர்புரம் (அடையாறு அருகே உள்ளது) என்ற இடத்திற்குச் சென்று அவர்கள் மேற் கொண்டிருந்த வளர்ச்சிப் பணி முறைகளை அவர்களே விளக்கிக் கூறக் கேட்டார். இதற்குச் செல்லும் வழியில் இருபுறங்களிலும் குழந்தைகள் நின்று கொண்டு ''பகி முகம் தேஹி கிருஷ்ண கிருஷ்ண'' என்ற பஜனைப் பாடலைப் பாடிய போது அவர் பக்தி உணர்ச்சியோடு அதைக் கேட்டார். தாமோதர்புரத்தில் திருவாதி அம்மன் கோவிலை, இரண்டு கரங்களையுங் கூப்பி வணங்கிக் கொண்டே காந்திஜி சுற்றி வந்தார். அம்மனுக்கு ஏற்றிய சூடத்தை அவரிடம் கொண்டு வந்தபோது கைகளால் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டார். காந்திஜி வருவதற்குச் சிறிது காலத்திற்கு முன்புதான் இந்த ஆலயம் அரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பெற்றது. மாண்டிசோரிப் பள்ளிக்கு அவர் சென்றபோது மூக்கை வடித்துக்கொண்டிருந்த ஒரு அரிஜனக் குழந்தை யைப் பார்த்துவிட்டார். அதனருகில் சென்று அதன் முகவாய்க் கட்டையைத் தூக்கி ''நீ சுத்தமாக மூக்கைச் சிந்திவிட வேண்டும்'' என்றார். தேனும்பேட்டை நாராயண சாமி செட்டியார் பூங்காவில் (நடைபெற்ற சேரிவாழ் மக்கள் கூட்டத்தில் பரத சபையின் சார்பாகவும் அப்பகுதி மக்களின் ஆதரவிலும் இரண்டு வரவேற்புரைகள் வாசித் தளிக்கப் பெற்றன. பரத சபையின் வரவேற்பை டி. எஸ். சுவாமிநாதன் படித்தார். அரிஜனச் சிறுர்கள் வசூலித்துக் கொடுத்த ஒரு ரூபாய் பதினேறு அணு உள்படப் பணமுடிப்பு ஒன்று இங்கு அவரிடம் வழங்கப்பெற்றது. இங்குக்) கூட்டம் அதிகமாயிருந்ததால் காரையே மேடையாக வைத்து அதன் மேலிருந்து பேசத் தொடங்கினர். காந்திஜி, கூட்டத்தில் ஒருபுறம் இருந்த சில பெண்குழந்தைகளை அழைத்துப் பாடச் சொன்னர். அவர்கள் சிறிது நேரம் பாடியபின் தமிழில் ''போதும், போதும்'' என்று சொல்லி நிறுத்தினர். பரதசபை வரவேற்புரையின் நகல் மூன்று ரூபாய்க்கு ஏலம் போயிற்று. சேரிவாழ் மக்கள் அளித்த வரவேற்புரை (கையெழுத்துப் பிரதி) இரண்டு ரூபாய்க்குப் போயிற்று. இங்குக் கூடியிருந்த குழந்தைகளுக்கு காந்திஜி சொன்ன அறிவுரை என்றும் பொருந்துவதாகும்: ''குழந்தைகளே, பையன்களே, பெண்களே! ஒரு சொல் கேளீர். தூய்மைப் படுத்தும் இந்த இயக்கத்தில் உங்கள் கடமையும் உண்டு. ஆகையால் நீங்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும். உங்க

களுடைய துன்பங்களிலெல்லாம் ஆண்டவனே நினைத்துக் கொள்ள வேண்டும்.''

கண்ணப்பர் வாசகசாலை

காந்திஜி அன்று சென்ற சேரிகளிலெல்லாம், இந்து சமயத்தைத் தூய்மைப்படுத்தும் இந்த இணையில்லா இயக்கத்தில், அரிஜனங்கள் தங்கள் கடமையைச் சிறப்புற ஆற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். அன்று சேரிகட்குச் சென்றது மட்டுமல்லாது, தொழிலாளர் கூட்டங்கள் பலவற்றிலும் உரையாற்றினர். மாலையில் பெரம்பூருக்குச் சென்று அங்கு ''யூனிட்டி ஹவுஸில்'' (ஒற்றுமை இல்லத்தில்) எம். எஸ். எம். இரயில்வே ஊழியர்கள் சங்கம் அளித்த வரவேற்பைப் பெற்றுக்கொண்டார். பெரம்பூர், செம்பியம் (செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தது) வாழ் மக்கள் பெரம்பூர் ஏரி மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவருக்கு வரவேற்புரை அளித்தனர். (காந்திஜி உண்ணு நோன்பு இருந்த சமயம்) அரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பெற்ற சுந்தர விநாயகர் ஆலயத்திற்கும், இலவசமாக வைத்திய உதவி செய்து வந்த பாலகுருசாமி என்ற துறவி நடத்திய மடத்திற்கும் காந்திஜி அழைத்துச் செல்லப்பெற்றார். இராயவரம் ராபின்சன் பூங்காவில் பெருங்கூட்டம் கூடி நின்று அண்ணலை உற்சாகமாக வரவேற்றனர். (அண்ணலின் சொற்பொழிவை டி. ஆதிகேசவலு நாயக்கர் தமிழில் மொழி பெயர்த்தார்.) ''இந்த மாபெரும் ஆன்ம பரிசுத்த இயக்கத்தில் முழுப் பங்குகொள்ள ஆண்களும் பெண்களும் தேவை. சரியில்லாத பழக்கவழக்கங்களை விட்டு விட்டு, உங்களுடைய குழந்தைகளைப் படிக்க வையுங்கள்,'' என்று இங்கு அண்ணல் அறிவுரை பகர்ந்தார். இராயவரம் இராம நாயக்கன் தெருவில் உள்ள கண்ணப்பர் வாசகசாலைக்கும் காந்திஜிக்கும் ஏற்கனவே கடிதப் போக்குவரத்து நடந்திருக்கிறது. இந்த வாசகசாலையின் ஆதரவில் நடைபெறும் பள்ளிக்கு ஒரு கட்டிடம் கட்ட வேண்டும் என்றும் அதற்கு நிதி உதவி வேண்டுமென்றும் அதை நிறுவியவரும் செயலாளருமான எம். கே. ஆறுமுகம் எழுதிய கடிதத்தை காந்திஜி ''சுயராஜ்யா'' பத்திரிகையின் ஆசிரியராக இருந்த டி. பிரகாசத்திற்கு (சென்னை மாநில முன்னாள் முதலமைச்சர்) அனுப்பி வைத்து ''ஏதாவது உதவி செய்ய முடியுமா?'' என்று கேட்டிருந்தார். இதே வாசகசாலைக்கு இக்கடிதத்தை எழுதிய சில நாட்களில், அதாவது, 1933

டிசெம்பர் 21-ஆம் தேதியன்று அண்ணல் அந்த நூல் நிலையத்திலேயே எழுந்தருளினார்! எழுந்தருளினார் என்றால் உண்மையிலேயே அப்படித்தான்!

நாற்காலியில் தூக்கினர்

காந்திஜி வந்தபோது வாசகசாலைக்குள் நுழைய முடியாதபடி பெருங்கூட்டம் வாசலில் நின்றது. வாசகசாலை நிருவாகிகளுக்கோ காந்திஜியின் புனித பாதங்கள் தங்கள்கட்டிடத்தில் படவேண்டுமென்று ஒரே ஆவல். ஆகவே, துணிச்சலாக ஒரு முயற்சி செய்தார்கள். காந்திஜியை ஒரு நாற்காலியில் உட்காரவைத்து அதில் கயிற்றைக் கட்டி மாடிக்குத் தூக்கிவிட்டார்கள். இதனால் கீழேயிருந்த மக்கள் காந்திஜியை நன்கு காணவும் ஒரு வாய்ப்புக் கிடைத்தது. மாடியில் வாசகசாலை நிருவாகிகள் வரவேற்பிற்கு அண்ணல் பதில் அளிக்கையில், ''இந்தப் பள்ளிக்கூடம் ஓங்கி வளரும். ஆண்டவன் ஆசீர்வதிப்பார்'' என்று கூறினார். அரிஜன நிதியிலிருந்து பண உதவி கிடைக்க ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார்.*

வரதராஜபுரம்

வரதராஜபுரம் அல்லது நரியங்காடு என்ற சேரி எழும்பூரைச் சேர்ந்த புதுப்பேட்டையில் இருக்கிறது. இதற்கு முதன் முதலாக அன்று மகாத்மா வந்தபோது, அந்தச் சேரி மக்களில் முக்கியமானவரான ஜெகதீசன் அவரை வரவேற்றார். இங்கு வாழ்ந்த சிறுவர்கள் சிலர் தம்பிடி தம்பிடியாகச் சேகரித்து, ஒவ்வொருவரும் காந்தியடிகளிடம் ஒரு ரூபாய் நன்கொடை அளித்தனர். ஏழு வயதுப் பையன் ஒருவன் இரண்டணாவிற்கு ஒரு பூமாலை வாங்கி காந்தியடிகளின் கழுத்தில் சூட்டினான். இதன் பின்னர், குமார பக்த ஜனசபை அச்சேரியில் ஆற்றிவரும் சேவையை அறிந்து மகாத்மா பாராட்டினார்.

பெரியமேட்

இதற்கு அடுத்தாற் போன்று பெரிய மேட்டில் உள்ள சேரிக்கு - ஆங்கிலோ இந்தியர்கள், உயர்ந்த சாதியார்கள் கூட் வாழக் கூடிய பெரிய சேரிக்கு - காந்தியடிகள் சென்றார். அங்கு எல்லம்மன் கோவில் தர்ம கர்த்தாக்கள் அவரை வரவேற்றார்கள். எல்லம்மன் கோவிலைப் பற்றி சி. வெங்கடரங்கம் நாயுடுவிடம் காந்திஜி விசாரித்தார்.

---

* எம். கே. ஆறுமுகம் பேட்டி.

மகாத்மா : ஆதி திராவிடர்கள் இந்தக் கோவிலுக்குள் செல்ல அனுமதி உண்டா ?

வெங்கடரங்கம் நாயுடு : நீண்டகாலமாகவே உண்டு. ஒரு விசேடம் என்னவென்றால், இதன் தர்மகர்த்தாக்களில் கூடச் சிலர் ஆதி திராவிடர்கள் தான்.

மகாத்மா : சாதி இந்துக்களும் இந்தக் கோவிலுக்கு வருகின்றனரா ?

நாயுடு : ஆம்.

மகாத்மா மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

மகாத்மா : யார் இதன் பூசாரி ?

நாயுடு : ஒரு பண்டாரம்.

பண்டாரம் என்பவர் சாதி இந்து என, பக்கத்தில் இருந்த வி. பாஷ்யம் விளக்கினார். இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தப் பண்டாரமே பூமாலை கொண்டு வந்து மகாத்மாவுக்கு அணிவித்ததுடன் மற்ற கோவில் மரியாதைகளும் செய்தார். இதன் பின்னர் சி. வெங்கடரங்கம் நாயுடு, ஜனாப் ஹாபி முகமது ஆகிய இருவரும் அவரைக் கடப்பை ரங்கையச் செட்டி தெருவிற்கு அழைத்துச் சென்று அங்கு இராம கிருஷ்ண பக்த ஜன சபை சார்பில் ஓர் உபசாரப் பத்திரம் அளித்தனர். சாரங்கபாணி இதைப் படித்துக் கொடுத்தார். இந்த வரவேற்புரைக்கு காந்திஜி மறுமொழி அறிக்கையில் சங்கத்திற்குத் தமது ஆசியைக் கூறிவிட்டு, ''ஒற்றுமையாயிருங்கள்'' என்று மட்டும் சொன்னார். இங்கிருந்து பெரம்பூரை அடுத்த அருந்ததியபுரம் சென்று அங்கிருந்த மாணவர் விடுதியைப் பார்வையிட்டார். பி. ஆர். இராமச்சந்திரய்யா அவரை வரவேற்று ஊழியர்களுடைய உதவியுடன் 22 மாணவர்களைக் கொண்ட ஒரு விடுதி அங்கு நடைபெறுவதை விளக்கினார். (காந்திஜி வருகையை முன்னிட்டு 400 மாணவ, மாணவிகளுக்கு இலவசமாகக் கதர் உடைகள் வழங்கப் பெற்றன.) இங்குப் பையன்களும் பெண்களும் அவருக்குப் பிரியமான ''வைஷ்ணவ ஜனதோ'' என்ற பாடலைப் பாடிய போது அவர் காரிலிருந்து கொண்டே அதை மெய்மறந்து கேட்டார்.

அருந்ததியபுரம்

அன்று நடைபெற்ற கடைசிக் கூட்டம் சென்னைத் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் பெரம்பூரில் வாடியா பூங்காவில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்ட மேடைக்குப் மாகும். இக்கூட்டத்தில் காலஞ் சென்ற போகவில்லை டாக்டர் அன்னிபெசன்ட் அம்மையாரின் உருவப் படத்தை அவர் திறந்து வைப்பதாய் இருந்தது. மாலை சுமார் ஆறரை மணிக்கு வருவதாய் இருந்தவர், மற்ற நிகழ்ச்சிகளில் கால தாமதமாகி எட்டு மணி வரை இக்கூட்டத்திற்கு வர இயலாததால் கூட்டம் மேலும் மேலும் பெருகி வெடித்து விடுவது போன்ற ஒரு கட்டத்திற்கு வந்துவிட்டது. கூட்டத்தில் நின்று கொண்டிருந்த பலர் நெருக்கடி தாளாது தங்கள் வீடுகளுக்குத் திரும்பிச் சென்று விட்டனர். கடைசியில் அண்ணலும் வந்தார். அவரால் கூட்டத்தை விலக்கி மேடைக்குச் செல்ல இயலாததால், காரிலேயே அமர்ந்து கொண்டு, படத்தை அங்கு எடுத்து வரச் செய்து அதை அங்கேயே திறந்து வைத்தார். இதற்கிடையில் காந்திஜியைச் சரியாகக் காண முடியவில்லையே என்று ஒரு கூட்டம் அவருக்காகப் போடப்பட்டிருந்த மேடை மீது ஏறியதன் காரணமாக அதன் ஒரு புறம் பாரந்தாங்காமல் சரிந்தது. இதே போன்று சூளை காந்தி வனத்தில் கூடியிருந்த கூட்டத்திற்கும் அவர் தரிசனம் மட்டும் அளிக்க முடிந்தது. ஆனால் ஒரே ஒரு வேறுபாடு; அந்த இடத்தில் மேடையில் ஏறிநின்று அவர் தரிசனம் அளிப்பதை அனுமதிக்கும் அளவுக்குக் கூட்டம் ''பொறுமையாய்'' இருந்தது. அக்கூட்டம் முடியும்போது இரவு ஒன்பதரை மணி. (மகாகனம் சீனிவாச சாஸ்திரி, டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, திவான்பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார், டாக்டர் திருமதி ஏ. இலட்சுமிபதி, டாக்டர் குமரப்பா, திருமதி கிருஷ்ணபாய் ஆகியோருக்கு இன்று காந்திஜி பேட்டி அளித்தார்.)

22-12-33

மூன்றும் நாள் அதிகாலையில் டாக்டர் எஸ். ரெங்காச்சாரி அவர் உடல் நிலையைச் சோதித்துப் பார்த்தார். ஏற்கனவே, முதல் நாள் மதியம் டாக்டர் உடல் முத்து அவர் உடல் நிலையைச் சோதித்நலம் திருந்தார். இரு டாக்டர்களுமே காந்திஜி உடல் நலத்துடன் இருப்பதாகக் கருத்துத் தெரிவித்தனர். இவர்களில் டாக்டர் முத்து ''நான் வட்ட

மேசை மாநாட்டில் சோதனை செய்த போது இருந்ததைக் காட்டிலும் இப்போது காந்திஜியின் உடல் நிலை நன்றாக இருக்கிறது'' என்று தம் அறிக்கையில் கூறியிருந்தார்.

ஓடினார் பறந்தார்

மூன்றாவது நாள் அவர் ஓட்டமும் நடையுமாக இருந்தார் என்று சொல்ல முடியாது; கடைசி நாளாதலால் ஓடுவதும் பறப்பதுமாக இருந்தார். காலையில் நான்கு சங்கங்களின் கூட்டங்களுக்குச் சென்று அவைகளின் வரவேற்பையும் பணமுடிப்பையும் பெற்றுக் கொண்டார். அவர் சென்ற இடங்களிலெல்லாம் கணக்கற்ற கூட்டந்தான்.

அரிஜன சேவா சங்கம்

அவர் முதன் முதலாக ஹார்ஜ்டவுன் செயிண்ட் சேவியர் தெருவில் உள்ள அரிஜன சேவா சங்கக் கிளைக்கு வந்து அங்குச் சங்கமும் மற்றும் பல ஸ்தாபனத்தினரும் அளித்த பணமுடிப்புகளையும் வரவேற்பையும் பெற்றுக்கொண்டார். இங்குச் சுமார் ஒரு மணிநேரம் அவர் காலதாமதமாகி வந்ததால், உள்ளேயும் வெளியேயும் பெருங்கூட்டம் கூடிவிட்டது. (கே. நாகேஸ்வரராவ் பந்துலு, டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, வீ. சர்க்கரைச் செட்டியார், ஜி. ரெங்கய்யா நாயுடு - இக்கிளையின் தலைவர் - எம். எஸ். கோடீஸ்வரன் ஆகிய பிரமுகர்கள் அவரைப் பூரண கும்பத்துடன் வரவேற்றனர்.) காந்திஜி அவருக்காகப் போடப்பெற்ற ஒரு உயரமான மேடையில் ஏறி நின்று எல்லோருக்கும் வணக்கம் செலுத்தினார். அப்போது ஒரு வேடிக்கையான நிகழ்ச்சி நடைபெற்றது. சரஸ்வதியம்மா அவருக்கு மாலையிட விரும்பினார். ஆனால் அவரோ உயரமான இடத்தில் நின்று கொண்டிருக்கிறாரே? அவருக்கு எப்படி மாலையிடுவது? ஆகவே அங்குக் கிடந்த ஒரு மேசையை இரண்டு கையாலும் பிடித்துத் தூக்கிக்கொண்டு வேகமாகச் சென்றார். காந்திஜி நின்றிருந்த இடத்திற்கு அருகில் போட்டு அவருக்கு மாலையிட்டு விட்டார். பின்னர்ப் பக்கத்தில் இருந்தவர்கள் அந்த அம்மையாரை காந்திஜிக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். ''அம்மையார் ஒரு சத்தியாக்ரகி; தமது கணவருடன் சட்ட மறுப்புப் போராட்டத்தில் இருமுறை சிறைக்குச் சென்றவர்'' என்று கூறினார்கள்.

இக்கிளையின் சார்பாக ஜி. ரெங்கைய நாயுடு படித்துக் கொடுத்த வரவேற்புரையில் ''நீங்கள் பெருமனதுடன் அரிஜன் என்று பெயர் சூட்டியதை இந்த நகரில் உள்ள தாழ்த்தப்பட்டவர்களில் பெரும் பாலானவர்கள் விரும்பவில்லை'' என்று தெரிவிக்கப் பெற்றிருந்தது. ஆங்கிலத்தில் இருந்த இந்த வரவேற்புரையைத் தமிழிலும் இந்தியிலும் வேறு மொழி பெயர்த்து அளித்தார்கள். இதில் தமிழ் வரவேற்புரையை மட்டும் எம். எஸ். கோடீஸ்வரன் படித்தார். (அரிஜன சேவா சங்கம், கினிமா சென்ட்ரல், பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், ஜார்ஜ் டவுன் இந்தி வித்தியாலயம் சார்பாகப் பண முடிப்புகளும் அன்பளிப்புகளும் வழங்கப்பெற்றன. ஒருவர் ஒரு வெள்ளிக் கோப்பை நிறைய நிலக்கடலையைப் போட்டுக்கொடுத்தார்!)

அரிஜன் என்ற பெயர்

கடைசியில் காந்திஜியும் பேச எழுந்தார். ''அன்பர்களே, இதுவரை நாம் ஒரு பேரமும் செய்யவில்லை. ஆகையால் நான் பேசுவதற்கு முன் கொஞ்சம் பேரம் செய்தாக வேண்டும்'' என்று அவர் தொடங்கியபோது எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தனர். இதன்பின் அவர் தம்மிடம் அளிக்கப்பட்ட பொருள்களை எல்லாம் ஏலம் விட்டார். ஒரு சர்க்காவை எடுத்து ''இது ஒரு அழகான சர்க்கா - கலைப் பள்ளியில் படிக்கும் ஒரு மாணவனின் கைவண்ணம். பெண்கள் தங்களுடைய வளையல்களைக் கொடுத்து இதை வாங்கிக் கொள்ளலாமே?'' என்றார் அவர். ஒவ்வொருவராக விலை கூறி முப்பது ரூபாய்க்கு வந்ததும், ''சீக்கிரம், சீக்கிரம்'' என்று தமிழில் சொல்லி அவர் விரைவுபடுத்தியபோது மறுபடியும் எல்லோரும் சிரித்தார்கள். ''இது ஒரு அழகான சர்க்கா. இதை வாங்குபவருக்கும் அளிப்பவருக்கும் அதிர்ஷ்டம் உண்டு'', என்றும் தூண்டினார். இறுதியில் கினிமா சென்ட்ரல் அதிபரான எம். பி. ராஜன் நாற்பது ரூபாய் கொடுத்து இதை வாங்கியபோது ''இந்தச் சர்க்கா உங்களுக்கு நிறைய அதிர்ஷ்டத்தைக் கொடுக்கட்டும்'' என்று ஆசீர்வதித்தார்.

''யோகம் வரும்!''

ஆனல் இங்கு அடுத்த ஏலத்தில் காந்தியின் தூண்டுதல் பலிக்கவில்லை! ரெங்கையா நாயுடு அளித்த வைர மோதிரத்தை ரூ. 75-இல் தொடங்கி ஏலத்தை ஆரம்பித்தார்.

பெண்கள் வளையல்களைக் கொடுத்து இதை வாங்கிக் கொள்ளலாம்'' என்றார். ஆனால் யாரும் அதற்குமேல் கேட்கவில்லையாதலால் அவர் அதைக் கீழே வைத்துவிட்டு மற்ற பொருள்களை ஏலம் போடத் தொடங்கினர். நிலக்கடலை நிரப்பியிருந்த வெள்ளிக் கோப்பையை வி. சர்க்கரைச் செட்டியார் ஏலத்தில் எடுத்தார். இதற்குப்பின் பெண்கள் வெகு வேகமாகத் தங்களுடைய நகைகளைக் கழற்றிக் கொடுத்தார்கள். காந்திஜியின் செயலாளருக்கு அவைகளைக் குறித்துக்கொள்வதே கடினமாக இருந்ததென்றால் எவ்வளவு வேகமாக நகைகளை அளித்திருப்பார்கள் என்பதை ஒருவாறு யூகிக்கலாம்.

நகைகள் அன்பளிப்பு

ரெங்கையா நாயுடுவின் மகள் (சிறு பெண்) காந்தியிடம் வந்து தனது வளையல்களைக் கழற்றிக் கொடுத்தாள். ''உன்னுடைய தங்கச் சங்கிலியையும் தருவாயா?'' என்று காந்திஜி கேட்டார். அந்தப் பெண் முன்வரவில்லை. தந்தையின் முகத்தைப் பார்த்து அவர் சம்மதத்திற்கு அடையாளமாகத் தலையை ஆட்டியதைக் கண்டு ''சரி'' என்றாள். காந்திஜி அதையும் வாங்கிக்கொண்டு ''இதையாவது ஏலத்தில் எடுக்க விரும்புகிறீர்களா?'' என்று கூட்டத்தினரை நோக்கிக் கேட்டார். ஆனால் இப்போதும் இந்நகைகளை ஏலத்தில் எடுக்க யாரும் முன்வரவில்லையாதலால், மறுபடியும் பையில் போட்டுக் கொண்டார். இதன் பின் காந்திஜி, தாழ்த்தப்பட்டவர்களைத் தாம் ''அரிஜன்'' என்று அழைத்ததேன் என்பதை விளக்கினார்.

மறுபடியும் முன்வரவில்லை

தங்கச் சாலையில் ஜெயின் மந்திரில் குசராத்திகள் சிந்திகள், மார்வாரிகள் நடத்திய வரவேற்பை இராம் நாத் கோயங்கா முன் நின்று நடத்தி வைத்தார். இங்கு ''நீங்கள் நீண்டதூரம் வந்து மக்களைச் சுரண்டிப் பெரும் பணம் திரட்டுகிறீர்கள்; இப்போது நான் உங்களைச் சுரண்டப் போகிறேன்.'' (சிரிப்பு) என்று சொல்லிக் கொண்டே ஏலத்தைத் தொடங்கினர். இங்குப் பொருள்களெல்லாம் உயர்ந்த விலைக்கு ஏலம் போயின! ''நான் இப்போது மேற்கொண்டிருப்பது ஆண்டவன் பணி - சத்திய வழி என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு,'' என்று

"சுரண்ட வருகிறேன்"

இக்கூட்டத்தில் அவர் கூறினர். இதன்பின் இதே கட்டிடத்தின் மாடியில் நடைபெற்ற குசராத்தி, சிந்தி, மார்வாரிப் பெண்கள் கூட்டத்திற்குச் சென்று அங்குப் பங்கு கொண்டார்; பல மாதர்கள் அவரிடம் தங்களுடைய நகைகளைக் கழற்றிக் கொடுத்தார்கள். கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் சென்னை வைசிய சங்கக் கூட்டத்திற்குச் சென்றபோதோ, போக்குவரத்தையே நிறுத்தி வைக்க வேண்டியதாகப் போனதுடன் அதிகப் போலீசாரும் வரவேண்டியிருந்தது கூட்டத்தைச் சமாளிக்க. இங்கும் தீண்டாமை ஒழிப்பிற்கு இயன்ற உதவி யெல்லாம் நல்குமாறு வைசிய சங்கத்தினரை 'வைசிய' மகாத்மா கேட்டுக்கொண்டார். (இங்கு சுவாமி வேங்கடாசலம் செட்டி வரவேற்புரை வாசித்தளித்தார்.) ''உயர்வு தாழ்வு என்ற வேறுபாட்டை அகற்றுங்கள் - எம். கே. காந்தி'' என்று எழுதப்பெற்ற ஒரு பேனுவை இங்கு ஒருவர் காந்திஜியிடம் வழங்கினர். இந்தப் பேனுவை ஏலம் விட்டபோது ஒருவர் அதை 250 ரூபாய்க்கு வாங்கினர். பின்னர் காந்திஜி பேசியபோது, ''நான் எந்தக் குறிக்கோளுக்காக வந்திருக்கிறேனே அந்தக் குறிக்கோள் இந்தப் பவுண்டன் பேனுவில் எழுதப் பெற்றிருக்கிறது. உயர்ந்த சாதியார்தான் சாத்திரங்களைப் படிக்கலாம், தாழ்ந்த சாதியார் படிக்கக்கூடாது என்பது தவறு. உயர்வு தாழ்வு என்ற வேற்றுமை உணர்ச்சிதான் நம்முடைய கஷ்டங்களில் பலவற்றிற்குக் காரணம்'' என்று கூறினர்.

காந்திஜி முன் சத்தியாக்ரகம்

காந்திஜி முன்னுலேயே ஒருவர் சத்தியாக்ரகம் செய்த வேடிக்கையான நிகழ்ச்சி கோவிந்தப்ப நாயக்கன் தெருவில் நடைபெற்றது. இத்தெருவில் சௌந்தர்ய மகால் என்ற கட்டிடத்தில் காந்திஜிக்கு ஜார்ஜ் டவுன் தர்ம இந்தி சர்க்கா பாடசாலையினர் ஒரு தங்கச் சர்க்காவைப் பரிசளிக்க ஏற்பாடு செய்திருந்தனர். காந்திஜியின் பயணத் திட்டத்தில் இடம் பெறுத நிகழ்ச்சி இது. வைசிய சங்கத்திலிருந்து வெளியே வந்து, தமது காரில் ஏறியபோது, மேற்கண்ட 'பாடசாலை'யைச் சேர்ந்த ஒருவர் வந்து காரின் முன்னுல் நின்று கொண்டு சத்தியாக்ரகம் செய்யத் தொடங்கிவிட்டார். தாங்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு காந்திஜி வந்தாக வேண்டுமென்பது அவருடைய கோரிக்கை. நல்ல வேளையாக, ஒரு போலீஸ் அதிகாரி வந்து அந்த மனிதரை அப்புறப்படுத்தவே காந்திஜி தமது காரில்

சென்றார். (இந்த வருகையின் முடிவில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் போலீசாரின் முன்னேற்பாடுகளுக்கும் உதவிக்கும் காந்திஜி நன்றியும் பாராட்டும் தெரிவித்துக் கொண்டார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.) இதில் இன்னொரு வேடிக்கை என்னவென்றால் அந்த நபர் முன் அனுமதியின்றி ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு டிக்கெட் மூலம் ஆட்களை உள்ளே விட்டிருந்தார்கள். வந்தவர்களெல் லாம் தங்களுடைய கட்டணத்தைத் திருப்பித் தந்துவிட வேண்டுமென்று கேட்கவே கூட்டத்தில் பெருங் குழப்பம் உண்டாயிற்று. கோடவுன் தெருவில் ஆந்திர மகாஜன சபைக் கூட்டத்திற்குச் சென்று கே. நாகேஸ்வர ராவ் பந்துலு படத்தைத் திறந்து வைத்தார். ''பந்துலுவின் ஒரு தனிக் குணம் எனக்குத் தெரியும், தம்முடைய உதவியை நாடுபவ ரிடம் அவர் வலிந்து சென்று உதவுவார்,'' என்று காந்திஜி அவரைப் பாராட்டினார்.

கல்யாண மண்டபம்

திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் நெல்சன் அண்டு கம்பெனி அதிபரான மாணிக்க முதலியாருக்குச் சொந்த மான கல்யாண மண்டபத்திற்குச் சென்று அங்குத் திருவல்லிக்கேணி மார்வாரிகளும் மாணிக்க முதலியாரும் அளித்த பணமுடிப்பு களைப் பெற்றுக் கொண்டார். கிருஷ்ணம் பேட்டையில் உள்ள சக்கிலி பாளையத்தில் ஆதி ஆந்திர இளைஞர் சங்கத்தினர் அவருக்கு வரவேற்பு அளித்தனர். பி. சங்கர நாராயண ஐயரும் (இந்த சங்கர நாராயணன் தான் காந்திஜி வேண்டுகோளின் பேரில் இரமண ஆசிரமம் சென்றவர்.) விசாலாட்சி அம்மாளும் பணிபுரிந்த கோகுலம் வந்தபோது அங்கு வாழும் மக்கள் தயார் செய்த தேன்புட்டி ஒன்று அளிக்கப்பெற்றதுடன், காந்திஜி வருகையின் நினைவாக ஒரு தென்னங்கன்றும் நடப்பெற்றது. மேலும் பல சேரிகளுக்கும் அவர் சென்றார்.

பட்டமளிப்பு விழா

தாழ்த்தப்பட்டோர் தலைவர்கட்குப் பேட்டி அளித்து அவர்களுடன் உரையாடியதும் தட்சிண பாரத இந்திப் பிரசார சபையின் மூன்றாவது பட்டமளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்கியதும் தான் மூன்றாவது நாள் அவர் பங்கு கொண்ட முக்கிய நிகழ்ச்சிகள். அலகாபாத்தைச் சேர்ந்த பண்டித ராம் நரேஷ் திரிபாதி பட்டமளிப்பு விழாச் சொற்பொழிவு நிகழ்த்தினார். பட்டமளிப்பு விழா

ஆடைகளாகக் கதர் சால்வைகள் பட்டதாரிகளுக்குப் போர்த்தப்பட்டன. காந்திஜிக்கு இதைப் போர்த்தியபோது "ஓ, என்னை அலங்கரிக்கவா பார்க்கிறீர்கள்? இதையும் நான் கடைசியில் ஏலத்தில் விடுவேன், நினைவிருக்கட்டும்" என்று எச்சரித்தார். தேசிய மொழியும் தாழ்த்தப்பட்டோர் உயர்வும் எவ்வாறு ஒன்றை ஒன்று சார்ந்திருக்கின்றன என்பதைத்தான் கோகலே மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அவர் எடுத்தியம்பினார். "இந்தியா என்னும் நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்கள். அப்படியானால் தேசிய மொழியை எவ்வாறு அலட்சியம் செய்ய முடியும்? இப்போது நான் தீண்டாமை ஒழிப்பு என்னும் ஒரே ஒரு காரியத்தில் தான் ஈடுபட்டிருக்கிறேன். இந்தியா முழுவதிலும் நீங்கள் தீண்டாமை ஒழிப்புப் பணி செய்ய விரும்பினால், இந்துஸ்தானியின் அவசியத்தை நன்கு உணர்ந்து தானாக வேண்டும். இந்துஸ்தானி மட்டுந் தெரியாவிட்டால் உங்கள் பணி மிகவுங் கடினமாக இருக்கும்." என்று மாணவர்களுக்கு அவர் அறிவுரை கூறினார். இந்தி கற்பது தென்னிந்தியர்களுக்குக் கடினமானது என்பதை அவர் ஒப்புக் கொண்டார். ஆயினும் முழுமுயற்சியுடன் ஈடுபட்டால், இதைச் சமாளித்துவிடலாம் என்றும் கூறினார். வடநாட்டை எதிர்பாராது, தென்னாட்டிலேயே தனக்குத் தேவையான நிதியைத் தட்சிணப் பிரசார சபை வசூல் செய்து கொள்ள வேண்டும் என்றும் ஆலோசனை பகர்ந்தார். கடைசியில் அவர் அணிந்திருந்த "கவுனை"யும் ரூ. 150க்கு ஏலம் விட்டு அதை அரிஜன நிதிக்குக் கொடுத்து விட்டார். (இதை ஏலத்தில் வாங்கியவர் தனது பெயரை வெளியிட விரும்பவில்லை.)

அரிஜனத் தலைவர்கள்

மாலையில் சென்னை மாநகரைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் சம்மேளன நிருவாகக் குழு உறுப்பினர்களுக்கு காந்திஜி பேட்டியளித்தார். காந்தியடிகளைச் சந்தித்தவர்களில் ராவ் பகதூர் சீனிவாசன் ஒருவர்; இவர் தென்னாப்பிரிக்காவில் காந்திஜி இருந்த காலத்திலேயே அவருடன் தொடர்பு கொண்டவர்; பின்னர் இலண்டன் வட்டமேசை மாநாட்டில் தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாகச் சென்று காந்தியடிகளுக்கு எதிராக வாதாடியவர்; 1932-இல் எரவாடா சிறையில் அண்ணல் உண்ணு நோன்பு மேற்கொண்டபோது

ஏற்பட்ட உடன்படிக்கையைத் தயாரித்த முக்கிய தலைவர் களில் ஒருவர். இவரும் ராவ் சாகிப் வி. தர்மலிங்கம் பிள்ளை, சுவாமி சகஜானந்தம், திருவாளர்கள் பி. வி. இராஜ கோபால் பிள்ளை, வி. கே. புஷ்பராஜ், எச். எம். ஜகன்னதன் ஆகியோரும் மற்றும் சிலரும் தான் காந்தியடிகளைச் சந்தித்து உரையாடியவர்கள். அப்போது இவர்களுடைய சார்பாக, ராவ்பகதூர் சீனிவாசன் காந்தியடிகளிடம் கொடுத்த அறிக் கையில், ''புனு உடன்படிக்கை நேர்மையாக அமுல் நடத்தப் படவேண்டும். தேர்தலில் நிறுத்தப்படும் தாழ்த்தப்பட்ட அபேட்சகர்கள் உண்மையிலேயே தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். அரிஜனங்கள் முன்னேற் றத்திற்காக, அரசாங்கம் இயற்றும் சட்டங்களைச் சரிவர அமுல் நடத்துவதில் அரிஜன சேவா சங்கம் ஒத்துழைக்க வேண்டும்'' என்று இவர்கள் கேட்டுக் கொண்டனர்.

இவர்கள் காந்திஜியின் கருத்துடன் மாறுபடக் கூடியவர் களாயினும் அவரிடம் தனிப்பட்ட முறையில் எவ்வளவு பெரு மதிப்பு வைத்திருந்தனர் என்பதை இவர்கள் **காந்திஜியிடம் பெருமதிப்பு** காந்திஜியைச் சந்தித்த நிகழ்ச்சியே உள்ளங்கை நெல்லிக் கனிபோல் எடுத்துக் காட்டிற்று.

மகாத்மாஜி தமது மாலை உணவை அருந்தி முடித்தார், இவர்களும் வந்து விட்டார்கள். ''வாருங்கள் ராவ் பகதூர்'' என்று காந்திஜி புன் முறுவலோடு ராவ் பகதூர் சீனிவாசனை அழைத்து ''உங்களுக்கு நாற்காலி போடச் சொல்லட்டுமா?'' என்று கேட்டார். ஆனால் சீனிவாசனோ எல்லோருடனும் சேர்ந்து சமக்காளத்தில் உட் காருவதையே விரும்புவதாகக் கூறிவிட்டார். சுவாமி சகஜானந்தாவும் புஷ்பராஜும் கீழே சாஷ்டாங்கமாக விழுந்து தெண்டனிட்டார்கள்; மற்றும் சிலர் காந்திஜியின் காலைத் தொட்டு வணங்கினர்கள். இவர்களுடைய விண்ணப் பத்தில், ''தாழ்த்தப்பட்டோரை அரிஜனங்கள் என்று நீங்கள் அழைக்கத் தொடங்கியபோது அவர்களைக் கலந்தாலோசிக்க வில்லை. அரிஜனங்கள் என்று அழைக்கப் பெறுவதற்காகச் சில அரிஜனங்கள் வருந்துகின்றனர்'', என்று குறிப்பிடப் பெற்றிருந்தது.

இதற்கு காந்திஜி பதில் அளித்தபோது, ''திக்கற்றவ ருக்குத் தெய்வமே துணை'' என்ற தமிழ்ப் பழமொழி அவ ருடைய உள்ளத்தை எவ்வளவு ஆழமாகத் தொட்டி

ருந்தது என்பது தெளிவாகத் தெரிந்தது. ''தாழ்த்தப் பட்டவர்களை நான் கலந்து ஆலோசிக்கவில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் அவர்கள் என்னைக் கலந்து ஆலோசித்தார்கள். அதுதான் முக்கியம்'' என்று அவர் சொன்னபோது எல்லோரும் சிரித்து விட்டார்கள். அவர் மேலும் சொன்னார்: உண்மையில் இந்தப் பெயர் நான் சூட்டியதல்ல. ''என்றென்றுமே எங்களைக் கீழானவர் களாக வைத்திருக்கும் எந்தச் சொல்லினாலும் எங்களை அழைக்காதீர்கள். தாழ்த்தப்பட்டவர்கள் என்ற சொல் எங்களை அடிமைகளாக்குகிறது'' என்று தீண்டாதார் ஒருவர் என்னிடம் கூறினார். அவர் கூறியது சரியே. ''வேறு ஒரு பெயரும் என் யோசனைக்கு வரவில்லை: நீங்கள் ஏதாவது ஒரு பெயரைச் சொல்வீர்களா?'' என்று நான் அவரைக் கேட்டேன். அப்போது தான் அவர் அரிஜன் என்ற பெயரைக் கூறினார். நரசிம்ம மேத்தா - ஒரு குஜராத்திக் கவி - தீண்டாதாரை இந்தப் பெயர் கொண்டழைத்ததாகவும் சொன்னார். உடனே இது எனக்குச் சரியாகத் தோன்றிற்று. திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்ற தமிழ்ப் பழமொழியையும் நான் அறிவேன். அரிஜன் என்ற சொல்லே அந்தப் பழமொழியின் கருப்பொருள் தானே? யார் ஒதுக்கப் பட்டவர்களோ, புறக்கணிக்கப்பட்டவர்களோ அவர்கள் தான் ஆண்டவனின் செல்லப் பிள்ளைகள். தாழ்த்தப்பட்டவர் களுக்கு அரிஜன் என்ற பெயரை நாம் சூட்டும்போது அது இந்தப் பொருளைத்தான் கொடுக்கிறது.''

அரிஜன் என்ற பெயர் ஏன்?

ஆலயப்பிரவேசத்தைப் பற்றி அவர்களுடைய மனுவில் கீழ்க்கண்டவாறு கூறப்பெற்றிருந்தது, ''ஆலயப் பிரவேசத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் நாசிக்கிலும் மற்றும் சில இடங்களிலும் நாங்கள் அடைந்துள்ள அனுபவத்தை பார்க்கும்போது, இந்த இயக்கத்தில் தீவிரமான பங்கு கொள்வது விரும்பத்தக்கதல்லவென்று தோன்றுகிறது. எங்களுக்கு ஆலயங்கள் திறந்து விடப்பெற்றால் நாங்கள் விரும்பும் போது, எங்களுக்கு வசதிப்படும்போது, ஆலயப் பிரவேசம் செய்வோம்.'' இந்த யோசனையை காந்திஜி ஏற்றுக் கொண்டார். ''ஆலயத்திற்கு வாருங்கள். அங்குச் செல்ல எங்களுக்கு எவ்வளவு உரிமை உண்டோ அவ்வளவு உரிமை உங்களுக்கும் உண்டு. ஆலயத்திற்குள் வருவதும் வராததும்

ஆலயப் பிரவேசம்

உங்கள் விருப்பத்தைப் பொருத்தது என்றுதான் சாதி இந்துக்கள் கூறவேண்டும்'' என்று அவர் சொன்னார். ''ஆலயப்பிரவேச இயக்கத்தில் அரிஜனங்கள் பங்கு கொள்ள வேண்டுமென்று நான் அழைக்கவில்லை. சாதி இந்துக்களுக்கு ஆலயத்தில் எந்த அளவு உரிமை உண்டோ அந்த அளவு உரிமை உங்களுக்கும் உண்டு. அந்த உரிமை அங்கீகரிக்கப்படவேண்டும் என்பது தான் முக்கியம். நீங்கள் அதை ஏற்கலாம் அல்லது ஏற்காமலிருக்கலாம்,'' என்றார் அவர்.

குடிகாரர் யார் யார்?

''எத்தனையோ சாதிக்காரர்கள் குடிக்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்டோர் மட்டும் குடிக்கிறார்கள் என்று கூறுவது நியாயமில்லை'', இவர்கள் தங்கள் மனுவில் கூறியிருந்த மற்றொரு புகார் இது. அதற்குக் காந்திஜி சொன்னார்: மற்ற சாதியினரிடமும் குடிப்பழக்கம் இருக்கிறதென்பது எனக்குத் தெரியும். ஆனால் எவ்வளவோ சிரமப்பட்டு முன்னேற வேண்டிய பிற்போக்கான நிலையில் உள்ள அரிஜனங்களுக்கு இது கட்டுபடியாகாது. ஆகையால் குடிப்பழக்கத்திலிருந்து விலகி ஒதுங்க வேண்டிய பொறுப்பு இவர்களுக்கே அதிகம். நான் அவர்களுடைய குடிப்பழக்கத்தை அகற்ற எத்தனையோ ஆண்டுகள் எவ்வளவோ பாடுபட்டிருக்கிறேன். ஆகையால் தயவு செய்து என்னுடைய சுதந்திரத்திற்கு வேலி கட்டி விடாதீர்கள். யாருடைய மனதையும் புண்படுத்தக்கூடிய எந்தச் சொல்லையும் நான் சொல்ல மாட்டேன்.'' இந்தத் தூதுக் குழுவிடம் காந்திஜி மறுமொழி அளித்தபோது ''தீண்டாமை சாகுந்தருவாயில் இருக்கிறது. அது ஒரு அரக்கனாக இருப்பதால் இன்றும் உயிர் துடித்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அது இப்போது விடும் மூச்சு கடைசி மூச்சுத்தான்'' என்று கூறினார்.

அவர் பயணம் பற்றி

சென்னை மாநகரத்தில் தங்கியிருந்த மூன்று நாட்களும் அவர் கண்டவையும் கேட்டவையும், 'தீண்டாமை அரக்கன் செத்துக் கொண்டிருக்கிறான்' என்ற உறுதியான நம்பிக்கையை அவருக்கு ஊட்டின. சென்னையை விட்டுச் செல்லுமுன் செய்தியாளர்களிடம் அவர் செப்பினார்: ''நான் சென்ற இடங்களிலெல்லாம் மக்கள் என்னிடம் ஆழ்ந்த அன்பும் அபிமானமும் காட்டினர். ஆனால் சென்னைக் கடற்கரையிலும் தொழிலாளர் பகுதிகளிலும் இதுவரை

ஒருபோதும் மக்கள் இந்த அளவு கூடியதில்லை என்று கூறுமாறு மக்கள் அவ்வளவு பெருந்திரளாகக் கூடுவார்களென நான் எதிர்பார்க்கவில்லை. என்னை ஆதரிக்கும் இப்பெரிய மக்கள் கூட்டம் என்னுடைய குறிக்கோளையும் நான் எதற்காக இங்கு வந்திருக்கிறேன் என்பதையும் முற்றிலும் உணர்ந்து ஆதரிக்கிறது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அவர்களுடைய சமய உணர்வு தீண்டாமை ஒழிப்பிற்கு எதிராகக் கிளர்ந்தெழுமாலும் இந்த அளவில் உற்சாகமாக அவர்கள் எனக்கு வரவேற்பு அளித்திருப்பார்களா? என்னிடம் அவர்கள் கொண்டிருக்கும் அபிமானம் முற்றிலும் இல்லாமற் போயிராது. எனினும், வரவேற்பு மந்தமாக இருந்திருக்கும், தெளிவாகத் தெரிந்திருக்கும். தற்போதுள்ளதைவிடக் குறைவான அளவிலாவது நிதானமான அளவிலாவது வரவேற்பை அளித்திருப்பார்கள். மக்களுடைய கண் பார்வையிலிருந்தே, முகத்தோற்றத்திலிருந்தே அவர்களுடைய மனம் எப்படி வேலை செய்கிறது என்பதை அறியும் பழக்கம் எனக்குண்டு. தீண்டாமை ஒழிப்பிற்காக நான் மேற்கொண்டுள்ள பணிகளில் எதையுமே மக்கள் எள்ளளவும் எதிர்ப்பதாக நான் காணவில்லை. அவர்களுடைய கணிசமான நன்கொடையும் என்னுடைய நம்பிக்கையை மேலும் வலுப்படுத்திற்று. ஆகவே எதிர்காலத்தைப் பற்றி எனக்கு முழு நம்பிக்கை ஏற்படுகிறது. தென்னாட்டில் கூடத் தீண்டாமை வேரோடு ஆட்டங்கண்டுவிட்டது என்பதைத்தான் நான் காண்கிறேன். என்னுடைய சனாதன நண்பர்களின் மனை உணர்ச்சிகளை நான் புண்படுத்த விரும்பவில்லை என்பதை அவர்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். எனக்கும் அவர்களுக்குமிடையே உள்ள உடன்பாடான அம்சங்களைக் கண்டுபிடிக்கவே நான் விரும்புகிறேன். அத்தகைய அம்சங்கள் நிறைய இருக்கின்றன. எங்களுக்கிடையே கருத்து வேறுபாடான அம்சங்கள் சொற்பமே. இந்த அம்சங்களில் உடனடியாக உடன்பாடு ஏற்படாவிட்டாலுங்கூட, நான் பொறுமையாக இருந்தால் - என்னிடம் பொறுமை இருக்கிறது என்றே நான் நம்புகிறேன் - காலப்போக்கில் உடன்பாடு ஏற்பட்டுவிடும்.''

சென்னைக்கு மகாத்மா வந்திருந்தபோது இங்குத் தமது மனைவியுடன் வந்திருந்த கே. எம். முன்ஷி, காந்தியடிகளுக்குச் சென்னை மாநகர மக்கள் அளித்த வரவேற்பைக் கண்டு அயர்ந்து போய்விட்டார். ஏனெனில், சென்னை,

வைதிகர்களின் கோட்டை என்பது அவர் கருத்து. அவர் கருத்திற்கு ஆதாரம் இல்லாமலும் இல்லை. சென்னையில் சனாதனிகளுடைய எதிர்ப்பு மட்டும் வழக்கம் போன்று கடுமையாகத்தான் இருந்தது, காந்திஜி வந்தபோதே (பாஷ்ய பாவக்ஞ வி. வெங்கட்ராம சாஸ்திரியார் பிரசங்க பாஞ எஸ். வைத்தியனாத சாஸ்திரியார் (சேங்காலிபுரம்), ஆகியோர் உள்படச் சில சனாதனிகள் கையொப்பமிட்டு ஓர் அறிக்கை வெளியிட்டனர். தீண்டாமை ஒழிப்பிற்கு காந்திஜி மேல்நாட்டு அறிஞர்கள் யாரையாவது மேற் கோள் காட்டியிருந்தால் கூட நலமாய் இருந்திருக்கும் என்றும் அதற்குப் பதிலாக சனாதன தர்மத்தையே அவர் ஆதாரங்காட்டுவது அதிர்ச்சியளிக்கக் கூடியதாய் இருக் கிறது என்றும் இந்த அறிக்கையில் அவர்கள் கூறி யிருந்தனர். இதற்காகவே பூரி கோவர்த்தன மடத் தைச் சேர்ந்த ஜகத்குரு ஸ்ரீசங்கராச்சார்ய சுவாமி பாரதி கிருஷ்ண தீர்த்தாஜி அவர்களை அழைத்திருப்ப தாகவும் (அவர் காந்திஜி வந்த அன்றே சென்னை வந்து சேர்ந்தார்) அவரை காந்திஜி சந்தித்துப் பேச வேண்டு மென்றும் கேட்டுக் கொண்டிருந்தனர். ''காந்தியக் கோட் பாட்டைத் தாழ்த்தப் பட்டவர்களில் கூட நூற்றுக்குத் தொண்ணூற்று ஐந்து பேர் ஏற்கமாட்டார்கள்'', என்று எம். கே. ஆச்சார்யா என்பவர் எழுதினர். ''காந்தியக் கோட்பாடு என்றால் என்ன? எனக்கே தெரியாதே? ஆச்சாரி யாவிற்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?'' என்று திருப்பிக் கேட்டார் காந்திஜி. இதற்கு ஆச்சார்யா ''மெயில்'' பத்திரிகையில் எழுதிய பதில், உண்மையிலேயே அவருக்கு காந்தியக் கோட்பாடு தெரியாது என்பதை எடுத்துக் காட்டியது. ''சாதி இந்துக்களெல்லாம் பாவிகள்: தாழ்த்தப்பட்டவர்களெல்லாம் அரிஜனங்கள் என்று காந்திஜி கூறுவதைத்தான் நான் காந்தியக் கோட்பாடு என்று கூறுகிறேன்,'' என்று அவர் (தாம் புரிந்துகொண்ட காந்தியக் கோட்பாட்டை) விளக்கினர். ஆனால் அவர் கூட, சனாதன தர்மத்திற்கு ஏற்ற முறையில் தீண்டாமை ஒழிப்பை மேற்கொள்வதானால் அதைத் தாமும் ஏற்றுக்கொள்ளத் தயார் என்றுதான் சொன்னார். அதேசமயம், அவர் காந்தி ஜிக்கு விடுத்த மற்றொரு எச்சரிக்கைதான் விபரீதமாக இருந்தது. ''வால்மீகி இராமாயணத்தில் வரும் இராவணன், பிறருடைய மனைவியைத் தூக்கிச் செல்வது தனது சுதர்மம்

சனாதனிகள் எதிர்ப்பு

என்றுதான் கூறினேன். நல்ல எண்ணங்கள் கூட நரகத்தில் அமிழ்த்தி விடலாம் என்ற உண்மையை காந்திஜி உணர்ந்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.'' காந்திஜியை அவர் எந்தத் தராசில் வைத்து நிறுத்தார் என்பதை அவருடைய கடைசி மூன்று வரிகள் தெளிவாகக் காட்டின: ''மா முனிவர் தான் இந்து சமயத்தையோ அல்லது வேறு எந்த மதத்தையுமோ புனிதப் படுத்த முடியும். தாம் ஒரு மாமுனிவர் என்று காந்திஜி உரிமை கொண்டாடுகிறாரா?'' என்றும் அவர் கேட்டிருந்தார். எம். கே. ஆச்சார்யாவும் மற்றும் ஒரு சில சனாதனிகளும் என்ன சொல்வதாயிருந்தாலும், மக்கள் தங்கள் தலைவரை ஒரு மா முனிவராகவே சொல்லப்போனால், அதற்கும் மேம்பட்டவராகவே கருதினார்கள். அவர்களில் பலருடைய மனதின் அடித்தளத்தில் தீண்டாமை ஒழிப்பு என்பது தொடக்கத்தில் கொஞ்சம் கசப்பாகவே இருந்தாலும், அவர் கூறிவிட்டபின் அதற்கு ''அப்பீல்'' கிடையாது என்று அவர்கள் முடிவு கட்டிவிட்டார்கள்.

அரசியல் நோக்கம்?

மற்றும் ஒரு சாரார், காந்திஜியின் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் அரசியல் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது என்று ஐயப்பட்டனர். 'முற்றிலும் இது தார்மிக இயக்கந்தான், இதை அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்திக்கொள்ளும் எண்ணம் எள்ளளவும் கிடையாது' என்று அண்ணல் எவ்வளவோ வலியுறுத்திக் கூறியும் அதை இவர்கள் சீர்தூக்கிப் பார்க்கவில்லை. 'இந்து மகாசபை கூறுவது போன்று இந்திய தேசியமும் இந்து மதமும் ஒன்றுதான் என நான் கூறவில்லை. இந்து மதத்தினர், கிறித்தவர்கள், முஸ்லிம்கள், மற்ற சிறுபான்மையினர் சேர்ந்ததுதான் இந்திய தேசியம்'', என்று அண்ணல் கூறினார். ஆனால் மேற்கண்டவாறு ஐயப்பட்டவர்கள் கூடத் தனிப்பட்ட காந்திஜி என்ற மனிதரை நம்பத்தான் செய்தார்கள். ''மெயில்'', ''தீவினைப் பயனுக இந்த இயக்கத்தில் ஒரே ஒரு காந்தி தான் இருக்கிறார். அவரைப் பின்பற்றுபவர்கள் இந்த வேறுபாடுகளையெல்லாம் அவ்வளவு நுணுக்கமாகச் சீர்தூக்கிப் பார்க்க மாட்டார்கள். தங்களுடைய கருத்தை ஏற்காதவர்கள் மீது (பகிஷ்காரம் போன்ற) நிர்ப்பந்தத்தைக் கொண்டுவர இவர்கள் தயங்க மாட்டார்கள்.'' என்று (22-12-33 ஆம் தேதி) எழுதியிருந்தது.

நகைகள் : எதிர்ப்பு

மகாத்மா பெண்களின் நகைகளை அரிஜன நிதிக்காகப் பெறுவதையும் பொதுவாகத் தாம் பெற்ற நன்கொடைப் பொருள்களை அவைகளின் விலை மதிப்பிற்கும் அதிகமாக ஏலமிடுவதையும் கண்டித்து ஒரு பத்திரிகை கட்டுரையொன்று எழுதியிருந்தது. இதற்கு மறுப்பு அளிக்கும் முறையில் டிசெம்பர் 22ஆம் தேதியன்று வெளியான ''அரிஜன்'' சஞ்சிகையில் காந்திஜி கூறியிருந்தார். ''உண்மையில் எனது கூட்டங்களுக்கு வரும் சகோதரிகள் தங்களிடமுள்ள நகைகள் எல்லாவற்றையும் கழற்றிக் கொடுப்பதையே நான் விரும்புவேன். எண்பது சதவீத மக்கள் பட்டினியால் வாடும் இந்த நாட்டில் சிலர் நகைகள் அணிந்து செல்வது கண்ணை உறுத்துகிறது. அது இந்த நாட்டிற்கு ஒரு நட்டமும் ஆகும்: நகைகளின் பெருமான அளவிற்கு மூலதனம் முடங்கிக் கிடக்கிறது என்பது தான் பொருள். ஆகையால் பெண்கள் தங்களுடைய நகைகளைக் கழற்றிக் கொடுத்துவிடுவது சமுதாயத்திற்கு நிச்சயமாக நன்மையே தரும். அவ்வாறு என்னிடம் கழற்றிக் கொடுப்பவர்களும் மகிழ்ச்சியுடனேயே கொடுக்கிறார்கள். அவைகளுக்குப் பதிலாக வேறு நகைகள் போட்டுக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே நானும் இந்த நகைகளை வாங்குகிறேன். மேலும் நான் பொருள்களை ஏலமிடும்போது அவைகளை வாங்குபவர்கள் என்னை மனநிறைவடையச் செய்வதற்காக மட்டும் அவைகளுக்கு மிக அதிகமான விலை கொடுத்து விடுவதில்லை. ஒரு மனிதன் மனமுவந்து ஒரு பொருளுக்குக் கொடுப்பது தானே அதன் விலை?'' என்று காந்திஜி பதில் அளித்தார்.

புறப்பாடு

இவ்வாறு, சுற்றுப்பயணத்தை வெற்றியுடன் முடித்துக் கொண்டு காந்திஜி 22ஆம் தேதி இரவு சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றார். அவருடன் வந்த திருமதி மீராபென் முதலியவர்களெல்லாம் சென்டிரல் இரயில் நிலையத்தில் கல்கத்தா மெயிலில் ஏறி தெலுலிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். பெருங் கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக அண்ணல் மட்டும் காரில் எண்ணூர் வரை சென்று அங்கு அவர்களுடன் சேர்ந்து கொண்டார். இந்த இரயில் வழக்கமாக எண்ணூரில் நிற்காதாயினும் காந்திஜியை ஏற்றிக் கொள்வதற்காக, அங்கு அதை நிறுத்த ஏற்பாடு செய்தார்கள். இது மிகவும் இரகசியமாகவும் வைக்கப்பெற்றிருந்தது. கே. நாகேஸ்வர

ராவ் இல்லத்தில் இருந்து இரவு 7-40 மணிக்கு வி. பாஷ்யம் ஐயங்கார், கே. நாகேஸ்வரராவ் பந்துலு ஆகியோருடன் காந்திஜி காரில் சென்றார். இரயில் வருவதற்குப் பத்து நிமிடங்களுக்கு முன்னரே எண்ணூரில் இரயில் நிற்பதற் காகக் குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று விட்டாராதலால், சுமார் ஐந்து நிமிடங்கள் அங்கு உலாவினார். கூட்டத்தைத் தவிர்க்க எவ்வளவோ முயற்சி செய்தும் எப்படியோ சில மக் கள் அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள். அங்கும் காந்திஜி அரிஜன நிதிக்காகச் சிறிது தொகை வசூல் செய்தார். ''சிரமமில்லாமல் நான் இரயில் ஏறுவது இதுதான் முதல் தடவை!'' என்று மகிழ்ச்சியோடு கூறிக்கொண்டே அவர் இரயிலில் ஏறினார்.

—❀—

சென்னையை விட்டுப் புறப்பட்டுச் சென்ற அண்ணல், சரியாக ஒரு மாதங் கழித்து, மீண்டும் தமிழகத்திற்குள் நுழைந்தார். (சென்னையிலிருந்து) ஆந்திரா விற்குச் சென்று, மைசூருக்குப் போய், மலபார் வழியாகத் திருவாங்கூர் சமஸ்தானத்தைச் சேர்ந்து, அண்ணல் நாகர்கோவில் வர ஒரு மாதம் பிடித்து விட்டது. அந்தக் காலத்தில், நாகர் கோவில் திருவாங்கூர் அரசர் ஆட்சியின் கீழ் இருந்தது.

ஒரு மாதங் கழித்து

இந்த ஒரு மாத காலத்திற்கிடையில் வடநாட்டில் எண்ணிப் பார்க்க முடியாத ஒரு பேரிடி நிகழ்ந்து விட்டது. உலகம் அழியப் போகிற பிரளய காலம் வந்து விட்டதோ என்று எண்ணி பீகார் மக்கள் பயந்து நடுங்கும் அளவுக்கு ஜனவரி 15-ஆம் தேதி யன்று அங்குக் கடுமையான நில நடுக்கம் ஏற்பட்டது. அன்று மூன்றே மூன்று நிமிடங்கள் நிலம் நடுங்கியதில் வட பீகாரே அழிந்து போய்விட்டது என்று கூறலாம். ஆயிரம் மைல்களுக்கு அப்பால் கூட இந்த அதிர்ச்சி கேட்டது. பட்டணங்கள் அப்படியே கீழே உட்கார்ந்து விட்டன; இலட்சக்கணக்கான கிராம மக்கள் வீடற்ற, நிலமற்ற, பிழைப்பற்ற அபலைகளானார்கள். முப்பதாயிரம் சதுர மைல் பரப்பையும் ஒன்றரைக் கோடி மக்களையும் பாதித்த இந்த நில நடுக்கத்தில் தொள்ளாயிரம் மைல் நீளத்திற்கு இரயில் பாதைகள் பயனற்றுப் போயின. அப்போது அண்ணல் திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தார்.

பீகார் பூகம்பம்

இந்தப் பேரழிவினால் ஏற்பட்ட பெரும் நெருக்கடியை மக்கள் அபிமானத்தைப் பெற்ற தலைவர்கள்தான் சமாளிக்க முடியும் என்ற உண்மையை ஏற்றது போல், நில நடுக்கம் நிகழ்ந்த இரண்டு நாட்கள் கழித்து, சிறைவாசம் செய்த இராசேந்திரப் பிரசாத்தை அரசாங்கம் விடுதலை செய்தது. அவர் நேரில் போய் நிலவரத்தைப் பார்த்துவிட்டு, காந்திஜிக்

காந்திஜி துயர்

குத் தந்தி அடித்தார். காந்திஜி தமது மறுமொழியில் ஆரொ ணூத் துக்கத்தைத் தெரிவித்து விட்டு, ''என்னைச் சுக்கு நூறுக ஆக்கியது போல் இருக்கிறது. அதைப் பற்றியே இருபத்து நான்கு மணி நேரமும் நான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் இப்போது மேற்கொண்டிருக்கும் பணியை விட்டு விடுவது அதர்மம் போல் தோன்றுகிறது. அவ்வாறு விட்டு விட்டே வந்தாலும், நான் என்ன செய்ய முடியும்?'' என்று திருப்பிக் கேட்டிருந்தார்.

பயணம் தொடங்கியது

தீண்டாமை ஒழிப்பில் அவருக்கு இருந்த மன உறுதியை பீகார் பூகம்பம் கூட அசைச்க முடியவில்லை! பீகார் பூகம் பத்தைக் குறித்து அவருக்கு எவ்வளவோ கழிவிரக்கம் இருந்தும், மனஉறுதியுடன் தமிழ கத்திற்குள் நுழைந்தார். பீகாரில் இன்னல் அடைந்துள்ள மக்களுடைய உதவி நிதிக்குத் தாராளமாகப் பணங்கொடுத்து உதவ வேண்டுமென்று அவர் முதன் முதலாகக் கேட்டுக்கொண்டது நெல்லையில் ஆகும். அதன் பின் அநேகமாக எந்தக் கூட்டத்திலுமே பீகார் பூகம்பத்தைப் பற்றி அவர் குறிப்பிடாமல் இருந்த தில்லை. அக்காலத்தில், திருவாங்கூர் சிற்றரசின் எல்லைக்குள் இருந்த நாகர்கோவிலுக்கு காந்திஜி வந்ததிலிருந்து அவரு டைய தமிழகச் சுற்றுப்பயணம் தொடங்கிவிட்டதாக இன்று நாம் கொள்ள வேண்டும். ஜனவரி 22-ஆம் தேதியன்று நாகர்கோவில் வந்து சேர்ந்தார் காந்திஜி.

முக்கிய பயணம்

தமிழகத்திற்கு காந்திஜி வருகை புரிந்த அத்துணை சுற்றுப்பயணங்களிலும் இதுவே மிக முக்கியமானதாக மக்க ளாலும் தலைவர்களாலும் கருதப் பெற்றிருக் கிறது. இந்தச் சுற்றுப்பயணத்தைப் பற்றியே அதிக நூல்களும் வெளிவந்திருக்கின்றன. கிட்டத்தட்டத் தமிழ்நாடு முழுதிற்குமே காந்திஜி வந்துவிட்டார் என்று கூறும் அளவிற்கு அவருடைய பயணம் விரிவாக இருந்தது.

காந்திஜியின் இந்தச் சுற்றுப்பயணம், உண்மையிலேயே ஒரு மகத்தான வெற்றியாகும். இந்திய வரலாற்றில் ஒரு போதும் தீண்டாமை ஒழியாது என்ற நிலைமை மாறி அவர் வருகையின்போது தீண்டாமை தவிடு பொடியானதை எல்லோரும் கண்ணாரக் கண்டார்கள். சுற்றுப்பயணத்தின்

இறுதியில் மகாத்மா காந்தி கூறியபடி இரண்டு ''சாதனை கள்'' தெளிவாகத் தெரிந்தன. எல்லாவற்றையும் இருந்தும் மக்கள் அரிஜன நிதிக்குத் தாராளமாகப் பணம் அளித்தார்கள் என்பது ஒன்று. சனாதனிகள் எவ்வளவோ எச்சரிக்கை செய்தும் ஆண்களும் பெண்களும் பதினாயிரக்கணக்கில் பொதுக்கூட்டங்களுக்கு வந்தனர் என்பது மற்றொன்று. கிராமப் பகுதிகளில் வாழ்ந்த எளிய கிராம வாசிகள் கூட ஆசுகளையும் தங்களால் முடிந்த சிறு அன்பளிப்புகளையும் காணிக்கையாக அளித்தார்கள். அப்போதெல்லாம், உண்மையிலேயே அவர்கள் தம்முடைய சுற்றுப்பயணத்தின் நோக்கத்தைத் தெரிந்து கொண்டிருக்கிறார்களா என்பதை அறிந்து கொள்வதற்காக, காந்திஜி அவர்களிடம், ''நீங்கள் இவைகளை எதற்காக அளிக்கிறீர்கள்?'' என்று விசாரிப்பது உண்டு. ''அரிஜனங்களுக்காகத்தான்'' என்று அவர்கள் சொன்னபோது அவர் உள்ளமெல்லாம் குளிர்ந்தது.

வெற்றி

சனாதனிகள் கடுமையாக எதிர்த்தும் இந்தச் சுற்றுப் பயணம் மகத்தான வெற்றியடைந்தது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். காந்திஜி சுற்றுப் பயணம் நடந்து கொண்டிருந்த காலத்தில், சென்னையிலிருந்து வெளிவந்த ''மெயில்'' பத்திரிகையில், சனாதனிகள், ஓயாது ஒழியாது காந்திஜி பணம் வசூல் செய்வதையும் சமய உரிமைகளில் குறுக்கிடுவதையும் கண்டித்துக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தனர்.

சனாதனிகள் எதிர்ப்பு

இந்தச் சுற்றுப் பயணத்தில் மீராபென் செய்த சேவையைக் கூறாமல் இருக்க முடியாது. இந்த அம்மையாருக்கு காந்திஜி மீதிருந்த பக்திதான் என்ன! திருவாரூரில் விஜயபுரம் என்னுமிடத்தில் உள்ள வடபாதிமங்கலம் பங்களாவிற்கு காந்திஜி வந்தபோது அவருடைய வரவேற்பு ஏற்பாடுகளை கவனித்தவர்களில் ஒருவரான டி. கோவிந்த சாமி படையாச்சி இதைப்பற்றி பெருமையோடு கீழ்க்கண்டவாறு கூறினார்: ''மகாத்மா வருவதற்கு முன்பே மீராபென் முன்னேடியாக வந்து எல்லா ஏற்பாடுகளையும் பார்வையிட்டார். மகாத்மா காந்தி உணவு அருந்தும்போது பயன்படுத்த இருந்த சாமான்களை சோப், சீயக்காய் போட்டுச் சுத்தம் செய்வதில் அவர் செலுத்திய கவனம் போற்றற்

மீராபென் சேவை

குரியது. அவர் வழக்கமாக என்ன என்ன உணவு அருந்து வார், அங்கு என்ன உணவுகள் வைக்கப் பெற்றிருந்தன என்பதையெல்லாம் அவர் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டார்.''

காந்திஜிக்கு வயது 64

இந்தச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டபோது வயது அறுபத்தி நான்கு என்பது நமக்கு நினைவிருக்கவேண்டும். இவ்வளவு கடினமான ஒரு சுற்றுப்பயணத்தை அவரால் எவ்வாறு மேற்கொள்ள முடிந்ததென்பது இன்று நினைத்துப் பார்த்தாலுங்கூட நமக்கு வியப்பாகத்தான் இருக்கிறது. ஒரு நீண்ட அணைத்திந்திய சுற்றுப்பயணத்தின் இடையில், அவர் தமிழகம் வந்திருந்தார். இதைப் பற்றித் திருமதி மூரியல் லெஸ்டர் சொன்னார்: ''மாதக்கணக்காக நாங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று கொண்டிருந்தோம். ஒரே நாளில் ஏழு இடங்களில் கூடப் பொதுக் கூட்டங்கள் நடப்பதுண்டு. நீண்ட சொற்பொழிவு களுக்குப் பின் பண வசூல் நடைபெறும். இதன் பின் பலர் வரிசையாக வந்து அன்பளிப்புகளை - பெரும்பாலும் நகை களை - வழங்குவார்கள். இதன் பின் அவர் ஏலம் போடத் தொடங்கிவிடுவார். எந்தச் சிறு பொருளுக்கும் அதன் உரிய விலை கிடைக்காமல் அவர் விடமாட்டார். அது ஒரு கடினமான வேலை, நீண்டவேலை, களைப்பூட்டும் வேலை. இதன் பின் இரவு முழுதும் பயணம் செய்துகொண்டே கழிக்க வேண்டியதிருக்கும். ஒவ்வொரு இரயில் நிலையத் திலும் மேடைகளில் அவரைக் காண்பதற்குக் கடல் போல் மக்கள் திரண்டிருப்பார்கள். பலர் இரயிலிலேயே சன்னல் களில் தொற்றிக் கொண்டு பல மைல் தூரம் வருவார்கள். எங்களில் பெரும்பாலோர் களைப்படைந்து விட்டோம். ஆனால் காந்திஜியோ ஒருபோதும் களைப்படையவில்லை!''

மோட்டார் பயணம்

அண்ணல் கோவை மாவட்டத்திற்கு வந்தபோது அந்த மாவட்டம் முழுவதிலும் அவருடன் சுற்றுப் பயணம் செய்த டி.எஸ். அவினாசிலிங்கம் காந்திஜியின் மோட்டார் பயணம் பற்றிக் கீழ்க்கண்டவாறு சுவையாக எழுதியுள்ளார்: ''நிறையக் கூட்டம் கூடியிருக்கும் இடங்களில் நிதானமாகக் காரை விடச் சொல்லுவார். ஆட்கள் இல்லாத இடங்களில் எவ்வளவு வேகமாகக் காரை விட்டாலும்

அவருக்கு அதைப் பற்றிக் கவலையே இராது. சீக்கிரமாகப் போகவேண்டுமென்று தோன்றினால், வண்டியை வேகமாக விடவும் சொல்வார்.

''எத்தனை மைல் வேகத்தில் போகிறீர்கள்?'' என்று மகாத்மாஜி கேட்பார்.

டிரைவர் பயந்து கொண்டு, ''50 மைல் வேகத்தில் போகிறேன்'' என்று சொல்வான்.

''இவ்வளவு தானா? இதற்கு மேல் வேகமாகப் போக முடியாதா?'' என்று கேட்பார்.

வண்டி ஓட்டுபவனுக்கு உற்சாகம் ஏற்பட்டு ''55'' என்பான்.

''இவ்வளவு தானா?'' என்பார்.

அதற்குமேல், ''60, 65'' என்பான்.

அப்பொழுதும், ''இவ்வளவுதானா?'' என்று புன்சிரிப்புடன் கேட்பார்.

அதற்குமேல் விடமுடியாதென்று அவன் தன் தோல்வியை ஒப்புக் கொள்வான்.

22-1-34

நாகர்கோவில்

காந்திஜி ஆந்திரத்தை விட்டுப் புறப்பட்டபின் அவரைக் காண வந்த கூட்டங்களிலேயே மிகவும் பெரியது நாகர் கோவிலில் கூடிய கூட்டந்தான். இந்தக் கூட்டத்தைக் கண்டதுமே அண்ணல், 'நாம் தமிழ் நாட்டை அணுகிவிட்டோம். இக் கூட்டம்தான் அதற்கு அறிகுறி' என்று கூறினார். ஜவாஹர்லால் மைதானத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில், மக்கள் கூட்டம் இருபதாயிருத்திற்கும் குறைச்சலாக இராது. பெண்களின் எண்ணிக்கையும் கணிசமாக இருந்தது.

காந்தியடிகளுக்கு வரவேற்புரைகள் வாசித்துக் கொடுக்கக் கூடாதென்று திருவாங்கூர் சிற்றரசு ஆணைபிறப்பித்திருந்துங்கூட, நாகர்கோவில் நகரசபைத் தலைவரோ உறுப்பினர்களோ அதைப் பொருட்படுத்தவில்லை. அரசு

அதோடு நிற்காமல், காந்திஜியின் கூட்டங்களுக்குச் செல்ல வேண்டாமென்றும் அவர் திரட்டும் நிதிக்குப் பணம் அளித்து உதவக்கூடாதென்றும் தனது ஊழியர்களுக்குத் தனியாக ஒரு சுற்றறிக்கை விடுத்திருந்தது. (நாகர்கோவில் மக்களின் சார்பாகவும் அரிஜனங்களின் சார்பாகவும் இந்திப் பிரசார சபை சார்பாகவும் தனித்தனியாக வரவேற் புரைகள் வாசித்தளிக்கப்பெற்றன; பணமுடிப்பும் வழங்கப் பெற்றது.)

ஆணையும் மக்களும்

23-1-34

அன்று இரவு அவர் கன்னியாகுமரி போய்ச் சேர்ந்து அங்குள்ள அருணாசல பண்டாரம் தர்மசத்திரத்தில் தங்கினார். மறுநாள் அவருடைய மௌன தினம்; அன்று அவர் கடலில் குளித்தார்; மாலையில் கடற் கரை ஓரமாக உலவினார். அவர் பின்னாலேயே கிராம வாசிகளின் கூட்டம் ஒன்று சென்றது. தமிழகத்திற்குள் அண்ணலை அழைத்துச் செல்வதற்காக, அப்போது தமிழ்நாடு அரிஜன சேவா சங்கத்தின் தலைவராக இருந்த டாக்டர் ராஜன் கன்னியாகுமரிக்கு வந்து சேர்ந்தார். இம்முறை காந்தியடிகள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்யும்போது, அவர் வசதியாகப் படுத்துக் கொள்ளவும், எழுந்து நின்று காட்சி அளிக்கவும், அமர்ந்திருக்கவும், மோட்டார் ஓடும்போதே இளைப்பாறவும் கூடிய முறையில் தனி வசதிகள் அடங்கிய ஒரு காரைத் தயார் செய்வதென்று அவர் சென்னை வந்திருந்தபோதே அரிஜன சேவா சங்கத்தார்முடிவு செய்தார்கள். அதன்படி, நல்ல பழைய கார் ஒன்றை வாங்கி, அதில் மேற்கூறிய வசதிகளுக் கெல்லாம் ஏற்பாடு செய்தார்கள். அந்தக் காரை ஹரிஹர சர்மா கன்னியாகுமரிக்குக் கொண்டுபோனார்.

கன்னியா குமரி

தாம் கன்னியாகுமரி வந்து சேர்ந்துவிட்டதைத் தெரி வித்துக் கொள்வதற்காக, டாக்டர் ராஜன் சத்திரத்திற்குப் போய் காந்திஜியைப் பார்த்தபோது, மகாத்மா வழக்கமாகத் தமக்கே உரிய புன் சிரிப்புடன், ''வந்து விட்டாயா? செல்லாத காசு மாதிரி'' என்று கூறி வரவேற்றார். அடிக் கடி தம்மை வந்து சந்தித்து, தமது கண்ணில் பட்டுக்கொண்

ராஜனுக்கு வரவேற்பு

டிருப்பவர்களே பாபு, ''செல்லாக் காசுகள்'' என்று கூறுவது வழக்கம். ஒரு பெட்டியில் ஆயிரம் ரூபாய்கள் - செல்லும் ரூபாய்கள் - இருந்தாலும் ஒரே ஒரு செல்லாத ரூபாய் மட்டும் இருந்துவிட்டால் அதுதானே நம் கண்ணில் அடிக்கடி பட்டுக்கொண்டிருக்கும்?

புறப்பாடு

கருகருவென்று இருட்டும் நேரத்தில் காந்திஜி கன்னியாகுமரியிலிருந்து திருநெல்வேலிக்குப் புறப்பட்டார். காந்திஜியின் குழுவில் பூட்டோ என்ற ஒரு ஜெர்மன் பத்திரிகையாளர் உள்பட மொத்தம் இருபது பேர் இருந்தார்கள். அண்ணல் வசதியாகப் போய்ச் சேரவேண்டுமென்பதற்காக, இந்தக் குழுவைச் சேர்ந்த மற்ற எல்லோரையும் ஒவ்வொரு ஊருக்கும் முன் கூட்டியே அனுப்பி விடுவது வழக்கம். குறிப்பாக மீராபென் முன் கூட்டிச்சென்று அங்கு காந்திஜிக்காக வரவேற்பு ஏற்பாடுகள் சரியாக இருக்கின்றனவா என்று பார்த்துக் கொள்வார். இவ்வாறு ஒரு மணி நேரத்திற்கு முன்பே மீராபென்னை அனுப்பிவிட்டு டாக்டர் ராஜனுடன், காந்திஜி கிளம்பினார். காந்திஜி, தாம் ஏறிச்செல்ல வேண்டிய காரில் பல தனி வசதிகள் செய்யப்பட்டிருப்பதைக் கவனித்து, ''நீங்கள் சாதாரணக் கார் கொண்டு வந்திருப்பீர்கள் என்றல்லவோ நினைத்தேன். பக்கா 'மகாத்மா' காரையே கொண்டு வந்திருக்கிறீர்களே?'' என்று சொல்லிக் கொண்டே காரில் ஏறினார்.

வள்ளியூர்

கன்னியாகுமரியிலிருந்து நாங்குநேரிக்குச் செல்லும் வழியில் ஒரு சிறு கிராமம், வள்ளியூர். இந்த ஊரில்தான் ஸ்ரீ வள்ளி பிறந்தாள் என்று ஒரு ஐதிகம். அதில் வாழ்ந்த மக்களுக்கு காந்திஜி தங்கள் ஊர்வழியாக வரும்போது வரவேற்பு அளிக்க வேண்டுமென்று தணியாத ஆசை. அந்த ஊரில் பலசரக்குக் கடை வைத்திருந்த ஒருவர் தலைமையின் கீழ் இதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். இரண்டு புறங்களிலும் பெட்ரோமாக்ஸ் லைட் தொங்கவிட்டு, ஒரு தோரணமும் கட்டி ஒரு பெஞ்சியின் மீது மாலையும் பண முடிப்பும் வைத்துக் கொண்டு அந்த வணிகர் காத்துக் கொண்டிருந்தார். சாலையின் இரு புறங்களிலும் சுமார் இரண்டாயிரம் மக்கள் கூடி நின்றனர். காந்திஜி வந்த காரும் அங்கு நின்றது. அவ்வளவு தான். மக்கள் ஒரே கூட்டமாக காந்திஜி காரை மொய்த்துக் கொண்டனர்.

வணிகர் எங்கு போனார், அவருடைய பண முடிப்பும் மாலையும் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. நல்ல வேளை யாக, பெரும் முயற்சி செய்து மாலையையும் பண முடிப்பை யும் டாக்டர் ராஜனிடமாவது அவரால் கொடுக்க முடிந்தது அவர் செய்த புண்ணியந்தான்!

நாங்குநேரி

நாங்குநேரிக்கு வந்து பார்த்தாலோ, மேடை போட் டிருந்த இடத்திற்கு காந்திஜியின் கார் செல்ல வழியே இல்லாமல் கூட்டங்கூடி நின்றது. மழையும் பெய்து கொண்டிருந்தது. கோவிலுக்குப் பின் புறத்தில் பொதுக் கூட்டம் நடைபெற விருந்த இடத்தில் நிற்கக்கூட இடமில்லாது போன தால், மக்கள் கடைத் தெருவையும் அடைத்துக் கொண் டார்கள். வரவேற்புக் குழுவினரோ அழகான வரவேற்புப் பத்திரங்களுடன் மண்டபத்தில் நின்று கொண்டிருந்தார்கள். கால்மணிநேரம் முயன்றும் அண்ணல் மேடைக்குச் செல்ல முடியாமற் போகவே, வரவேற்புப் பத்திரங்களும் பண முடிப்புகளும் காந்திஜி அமர்ந்திருந்த காருக்கே வந்து சேர்ந்து விட்டன. (யூனியன் போர்டு சார்பாக ஒரு வரவேற் புரையும் பொது மக்களின் சார்பாக ஒரு வரவேற்புரையும் காந்தியடிகளிடம் அளிக்கப்பெற்றன. காந்தியடிகளும் அவைகளுக்கு இரண்டே நிமிடங்களில் மறுமொழி கூறி விட்டார்.) பின்னர் காரின் மீது ஏறி, ஒரு குடையைப் பிடித்துக் கொண்டு மக்களுக்குக் காட்சி கொடுத்தார். போலீசாரின் அருமுயற்சியின் பேரில் கூட்டத்திலிருந்து பிதுங்கிக் கார் வெளியே வந்து, 'தப்பித்தோம் பிழைத் தோம்' என்று சுமார் ஒன்பது மணிக்கு நெல்லையில் சாவடி கூத்தநயினார் பிள்ளை வீட்டிற்கு வந்து சேர்ந்தது; அந்த வீட்டில் தான் அன்று காந்திஜி தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது.

24-1-34

நெல்லை மன்றத்தின்

நெல்லையில் காந்தியடிகள் நிகழ்த்திய சொற்பொழிவு ஒரு பெரிய வரிக்குவாதத்திற்கு வழிகோலி அதற்கு என ஒரு தனி வரலாற்றை ஏற்படுத்திவிட்டது. நக ராட்சி மன்ற மார்க்கெட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அவர் இந்தச் சொற் பொழிவை நிகழ்த்தினார். (நெல்லை நகராட்சி சார்பாக அதன் துணைத் தலைவர் ஜனப்

வி.எம்.எஸ். முகமது முஸ்தாபா ராவுத்தரும் பாளையங் கோட்டை நகராட்சி மன்றத்தின் சார்பாக அதன் தலைவர் ராவ்பகதூர் கே.எஸ். பொன்னுசாமியும் நெல்லை மாவட்டக் கழகத்தின் சார்பாக அதன் தலைவர் ஐ. சி. ஈஸ்வரம் பிள்ளையும் வரவேற்புரைகளைப் படிக்காமலேயே கொடுத்தார்கள். பொதுமக்கள் சார்பாகவும் முக்கூடல் மக்கள் சார்பாகவும் பாளையங்கோட்டை சௌராஷ்டிர மக்கள் சார்பாகவும் நெல்லை நகராட்சி உறுப்பினர்கள் சார்பாகவும் பணமுடிப்புகள் வழங்கப்பெற்றன.) சுமார் இருபதாயிரம் மக்கள் கூடியிருந்த இம்மாபெருங் கூட்டத்தில், பீகார் மக்களுடைய துன்ப நிவாரண நிதிக்கு மக்கள் உதவி அளிக்க வேண்டிய அவசியத்தை அண்ணல் வலியுறுத்தினர். காந்திஜியின் சுற்றுப்பயணம் தொடங்குவதற்கு முன்னமேயே, அவர் திரட்டும் அரிஜன நிதிக்கு அரசாங்க ஊழியர் பணம் அளிக்கக்கூடாது என்று சென்னை மாநில அரசும் ஒரு சுற்றறிக்கை அனுப்பிவிட்டது. ''எந்தக் காரணத்தினாலோ அரசாங்க ஊழியர்கள் அரிஜன நிதிக்கு நன்கொடை அளிப்பதனின்றும் தடை செய்யப் பெற்றிருக்கிறார்கள். தங்களுக்கு மட்டுமல்லாது எல்லா வல்லமையும் படைத்த இறைவனுக்கும் நான் தீங்கு செய்து விட்டதாகக் கருதி வைதிகர்களும் அரிஜன நிதிக்கு உதவியளிக்க முன்வருவதில்லை. இந்துக்களல்லாதாரும் அரிஜன நிதிக்கு உதவியளிப்பார்களென்று நான் எதிர் பார்க்கவில்லை. இவ்வாறு அரிஜன நிதிக்குப் பல தடங்கல்கள் இருப்பது உண்மையேயானாலும் பீகார் துன்ப நிவாரண நிதிக்கு இவ்வித மறுப்பு எதுவும் இருக்கமுடியாது. ஆகையால் பீகார் வாசிகளுக்கு உதவியளிக்குமாறு நான் எல்லா வகுப்பினரையும் கட்சியினரையும் மதத்தினரையும் அதிகாரிகளையும் அதிகாரப் பற்றற்றவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்,'' என்று அண்ணல் கூறினர். இவைகளில் எதுவுமே மறுப்புக்குரிய கருத்துக்களாக இருக்கவில்லை.

வேறுபாடு எதில்?

ஆனல், பீகார் பூகம்பத்திற்கும் தீண்டாமைக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக அவர் சொன்னதைத் தான் தமிழகத்திலும் சரி, இந்தியாவின் வேறு பகுதிகளிலும் சரி பலர் எதிர்த்தார்கள். ''பீகார் பூகம்பத்திற்கும் தீண்டாமைப் பிரசாரத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவே நான் கருதுகிறேன். இத்தகைய பெரிய ஆபத்து

கடவுள் செயலென்பதையும் அதற்கு ஏதாவதொரு காரண மிருந்தே தீரவேண்டுமென்பதையும் நீங்கள் உணரவேண்டும். பீகார் பூகம்பம் திடீரென்று விளைந்த ஒரு நிகழ்ச்சி. அது நமது நிலை என்ன, ஆண்டவன் நிலை என்ன என்பதைத் தற் செயலாக நமக்கு நினைவுபடுத்துகிறது.''

இவ்வாறு காந்திஜி கூறியதை, ''ஒரு பயங்கரமான கூற்று'' என்ற மகுடமிட்டுப் பலர் தாக்கி எழுதினர்கள். ''மெட்ராஸ் மெயில்'' நாளிதழும் காந்திஜி யின் கருத்தைக் கண்டித்து ஒரு துணைத் தலையங் கம் தீட்டியது. ஆனல் காந்திஜியை ஆதரிக்க ஆள் இல்லாமல் இல்லை. இதே ''மெயில்'' நாளி தழிலேயே ஓர் அன்பர் ''அண்மையில் நடைபெற்ற பூகம்ப மானது மனிதனின் பாவங்களுக்காக ஆண்டவன் அளித்த தண்டனை என்று காந்திஜி கூறினரென்றல், பண்டைக் காலத்தில் பெரியவர்கள் சொன்னதைத் தான் திருப்பிக் கூறியிருக்கிறார் என்று கூறி இதற்கு பைபிளிலிருந்து பல ஆதாரங்களைக் காட்டியிருந்தார். இவ்வாறு இந்தச் சொற் பொழிவின் மீது தமிழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த வாதப் பிரதிவாதம் மேலிடத்திற்கும் பரவிவிட்டது.

எதிர்க் கணைகள்

தெளிவான முடிவு

எந்தக் கருத்தையும் மகாத்மா மேற்போக்காகக் கூறி விடுவதில்லை. ஆழ்ந்து ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவிற்கு வந்த பின்பே கூறுவார். ஆகவே தீண்டாமை இயக்கத்திற்கும் பீகார் பூகம்பத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக, அவர் கூறிய போது, அது அவருடைய ஆழ்ந்து தெளிந்த முடிவாகவே இருந்தது. ஆகையால் அந்தக் கருத்தை மீண்டும் நிலைநாட்டி, ''அரிஜன்'' இதழில் (1934 பிப்ரவரி 2-ஆம் தேதி வெளியிடு) அவர் ஒரு கட்டுரையும் எழுதினர். அதில் அவர் கூறியிருந்தார்: மக்கள் செய்த பாவங்களுக்கு ஒரு தண்டனையாகவே பீகார் பூகம்பத்தைப் போன்ற விபத்துக்கள் நேருகின்றன வென்று - நாகரிகம் அடைந்த, அடையாத - உலகம் முழுதுமே நம்புகிறது. இந்தக் கருத்தை நானும் ஏற்றுக் கொள்கிறேன். இதய பூர்வமாக இந்தத் திடமான நம்பிக்கை ஏற்படும் போது, மக்கள் ஆண்டவனை வழிபடுகிறார்கள், பிராயச்சித்தம் செய் கிறார்கள், தங்களைத் தாங்களே தூய்மைப்படுத்திக் கொள் கிறார்கள். தீண்டாமையானது தெய்வத்தின் தண்டனை

கிடைக்கக் கூடிய பெரிய பாவம் என்று நான் கருதுகிறேன். ''பரம்பரை பரம்பரையாக வந்துள்ள பாவத்திற்கு இப்போது மட்டும் தண்டனை ஏன்?'' ''ஏன் தென்னுட்டிற் கெல்லாம் இல்லாமல் பீகாருக்கு மட்டும் இந்தத் தண்டனை?'' ''மற்ற தண்டனை எதுவும் இல்லாமல் பூகம்பம் மட்டும் ஏன் ஏற்பட வேண்டும்?'' என்ற கேள்விகளாலெல்லாம் என் முடிவு பாதிக்கப் பெறவில்லை. இக்கேள்விகளுக்கு என்னுடைய மறுமொழி இதுதான்: ''நான் கடவுள் அல்ல. ஆண்டவனுடைய சித்தம் என்னவென்பதை ஒரு குறுகிய எல்லையளவிலேயே நான் அறிவேன். ஆண்டவனே அல்லது இயற்கையோ மனம்போன போக்கில் இத்தகைய விபத்துக்களை விளைவிப்பதில்லை. எப்படி இத்தனை கிரகங்களும் சில நியதிகளுக்குக் கட்டுப்பட்டு இயங்குகின்றனவோ அதைப் போன்று ஆண்டவனும் இயற்கையும் சில விதிகளுக்குக் கட்டுப் பட்டே இயங்குகிறார்கள். இவ்வித நிகழ்ச்சிகளைப் பற்றிய விதிகள் நமக்குத் தெரியா; அதனால் தான் இவைகளைப் பெரிய விபத்துக்களாகவும் தொல்லைகளாகவும் நாம் கருதுகிறோம். நாம் அவைகளைப் பற்றிச் சொல்லக் கூடியதெல்லாம் வெறும் யூகமாகத்தான் இருக்க முடியும். ஆனால் அதே சமயம் மனித வாழ்க்கையில் யூகங்களுக்கும் ஓரளவு அவசியம் உண்டு. தீண்டாமை என்னும் பாவத்திற்காக மட்டும் கிடைத்த தண்டனை என்று இதை நான் கருத மாட்டேன். எத்தனையோ பாவங்களுக்காகத் தெய்வம் அளித்த தண்டனை இது என்று மற்றவர்கள் கருதினால் அதற்கு மறுப்பும் இல்லை.'' இவ்வாறு காந்திஜி எழுதினார்.

தாகூரின் எதிர்ப்பு

காந்தியடிகள் மீது கவிஞர் தாகூருக்கு இருந்த மதிப்பும் மரியாதையும் உலகெலாம் அறிந்தது தான். ஆனாலும் காந்திஜி கூறுகிறார் என்பதற்காக எந்தக் கருத்தையும் ஆராய்ந்து பார்க்காது ஏற்றுக் கொள்ளும் வழக்கம் அவருக்கில்லை. அண்ணலின் இந்தக் கருத்துச் சரியானதல்ல என்று அவர் மனமார எண்ணினார். ஆகையால், உடனே அதற்கு எதிர்க் கணையையும் தொடுத்தார். அதற்கு மகாத்மாவும் பதில் அளித்தார். பத்திரிகைகளில் அவர்களுடைய வாதப் பிரதிவாதங்கள் சுவையாக வெளிவந்து கொண்டிருந்தன.

பூணூல்

எங்குச் சென்றாலும் அண்ணல் கவனிக்க வேண்டிய வேலைகளுக்குக் குறைச்சல் இராது. பம்பரம் போன்று சுழன்று சுழன்று வேலை செய்தாலும் பாபுவால் முடிக்க இயலாத அளவுக்கு வேலை பெருகிக் கொண்டேயிருக்கும். அன்று நெல்லையிலும் அவ்வாறு தான் இருந்தது. அவர் அதிகாலையில் நிறைவேற்ற வேண்டிய வேலைகள் பல இருந்தன. முதன் முதலாக நெல்லை வரவேற்புக் குழு உறுப்பினரான அறம் வளர்த்த நாத பிள்ளைக்கு அண்ணல் பேட்டி அளித்தார். குலசேகரப் பட்டணத்தைச் சேர்ந்த அறம் வளர்த்த நாத பிள்ளை கூத்த நயினார் பிள்ளையின் ஒன்றுவிட்ட சகோதரர் ஆவார். மேல்மாடியில் தங்கியிருந்த காந்தியடிகளைக் காணச் செல்வோரை அனுமதிச் சீட்டைப் பார்த்து அனுப்ப சர்மா என்பவர் நிறுத்தப்பட்டிருந்தார். அறம் வளர்த்த நாத பிள்ளை வந்தபோது, அவரையும் சர்மா தடுத்து நிறுத்திவிட்டார். பின்னர் கூத்த நயினார் பிள்ளை அனுமதியின் பேரிலேயே அவர் உள்ளே அனுப்பப்பெற்றார். ஏற்கனவே அறம் வளர்த்த நாத பிள்ளை காந்திஜியைச் சந்தித்துப் பேசியிருக்கிறார் அல்லவா? காந்திஜி அவரை அடையாளங் கண்டு கொண்டு, ''முன்னர் என்னைப் பார்த்த போது, சில குற்றச்சாட்டுக்களைக் கூறினீர்கள். இம்முறையும் ஏதாவது குற்றச்சாட்டுகள் இருக்கின்றனவா?'' என்று கேட்டார். அதற்கு அறம் வளர்த்த நாத பிள்ளை, ''ஆம், இருக்கிறது. நீங்கள் என் சகோதரரின் விருந்தினராக இருக்கிறீர்கள். அவர் வீட்டு வாசலிலேயே ஒரு பிராமணரால் நான் தடுத்து நிறுத்தப் பெற்றேன். இதுபோல் இந்த மாநிலத்தில் உள்ள 3 சதவீத பிராமணர்கள் 97 சதவீத பிராமணர் அல்லாதாரை ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அதனால் நீங்கள் பொதுமேடையில் பேசும்போது, பிராமணரை அவர்களுடைய பூணூல்களை அறுத்து எறியும்படி புத்திமதி கூறுங்கள்,'' என்று கேட்டுக் கொண்டார். அதற்கு காந்திஜி, ''பிராமணர்களிடம் இவ்வாறு செய்யுமாறு கூறுவதைக் காட்டிலும் பிராமணர் அல்லாதாரைப் பூணூல் அணிந்து கொள்ளுமாறு செய்யச் சொல்லலாம்,'' என்று வேடிக்கையாகப் பதில் கூறினார்.*

* சாவடி கூத்த நயினார் பிள்ளை (நெல்லை) பேட்டி.

இதன் பின்னர், சேர்மாதேவி குருகுலப் பொறுப்பாள ரான டி.ஆர். மகாதேவையர், சேர்மாதேவியின் ஆஸ்தியை காந்திஜியிடம் ஒப்படைத்தார். ஆசிரமத் தைச் சேர்ந்த நிலம், கட்டிடங்கள், நூல் நிலையம் ஆகிய எல்லாவற்றையுமே காந்திஜி யின் பொறுப்பில் ஒப்படைப்பதாகவும் அவர் தாம் விரும்பியவாறு அவைகளை எந்தப் பொதுக் காரியத் திற்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறி அவை சம்பந்தமான பத்திரங்களையும் அளித்துவிட்டார். இவ்வாறு சேர்மாதேவி குருகுலத்தைப் பற்றிய நீண்ட வரலாறு ஒரு வாறுக முடிந்தது.

குருகுலப் பொறுப்பு

முதல் நாள் தான் நெல்லையில் நல்ல மழை பெய்திருந்த தால், சாலைகளெல்லாம் சேரும் சகதியுமாய் இருந்தன. கதர்ப் பொருட்காட்சியைப் பார்வையிட்டு குரண்டி வாய்க்கால் அருகே நகராட்சி மன்றத் தோட்டிகளின் குடியிருப்புக்களுக்குச் சென்று அங்குள்ளவர்களின் நலன்களைப் பற்றி விசா ரித்து விட்டு, பின்பு பேட்டையில் அளிக்கப்பட்ட நிதியைப் பெற்றுக் கொண்டார். இதன் பின்னர்த் தான் குற்றாலம் சாலையில் உள்ள விஸ்வநாத நகரசபை மார்க்கெட்டில் நடை பெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பங்கு கொண்டு வர லாற்றுச் சிறப்பு மிக்க அந்த உரையை அவர் நிகழ்த்திய தாகும். இந்தப் பொதுக்கூட்டத்தில் காந்திஜி பேசிய போது, மழை பெய்து கொண்டிருந்தது.

பேட்டையில் காந்திஜி

கூட்டம் முடிந்தவுடனே காந்திஜி தென்காசிக்குப் புறப் பட்டு விட்டார். தென்காசியில் (தாலுகா போர்டு உயர் நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பஞ்சாயத்து போர்டு, திருவள்ளுவர் கழகம், அரிஜன சேவா சங்கங்கள், மாணவர் சங்கம் ஆகியவைகளின் சார்பாக வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப்பெற்றுப் பணமுடிப்பும் அளிக்கப்பெற்றது.) ''ஆண்களைக் காட்டிலும் பெண்கள் அதிகமாகக் கூடியிருப்பார்களோ?'' என ஐயுறும் அளவுக்குப் பெண்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. ''தீண்டாமை என்பது பெரும் பாவம். அப்பாவத்தை அகற்ற வேண்டியது சாதி இந்துக்களின் கடமை''; இதுதான் அண்ணல் அங்கு நிகழ்த்திய சொற்பொழிவின் சாரம்.

தென்காசி

நெல்லையில் தம்மிடம் அளிக்கப்பெற்ற பொருள்களை இங்கு ஏலம் விட்டு விட்டு அவர் குற்றாலத்திற்குப் புறப்பட்டார்; ஒரு பெரிய சிக்கல் அண்ணலின் வருகைக்காக அங்குக் காத்துக் கொண்டிருந்தது.

நீர்வீழ்ச்சி

குற்றாலம் நீர்வீழ்ச்சிக்குச் செல்வதற்குக் குற்றாலநாதர் காலடி அருகே செல்லவேண்டும்; அதாவது, அந்த நீர் வீழ்ச்சியின் அண்மையில் உள்ள குற்றால நாதர் ஆலயத்தின் வாசல் பக்கத்தில் உள்ள முன் மண்டபத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும். இப்பாதையில் அரிஜனங்கள் செல்ல (அந்தக் காலத்து)ச் சனாதனிகள் அனுமதிக்க மறுத்து விட்டார்கள். நீண்டகாலமாக இந்தத் தகராறு இருந்து வந்தது. குற்றாலம் நீர்வீழ்ச்சியில் அரிஜனங்கள் குளிக்க முடியாமல் தடுக்கச் சாதி இந்துக்கள் இந்தத் தந்திரமான வழியைக் கடைப்பிடித்தனர். நீர்வீழ்ச்சியில் அரிஜனங்கள் குளிப்பதைப் பற்றித் தங்களுக்கு மறுப்பு எதுவும் இல்லை யென்றும் அவர்கள் ஆலயத்தின் முன் வருவதைப் பற்றித் தான் மறுப்பு என்றும் கூறினர். பொது மக்களைவிடக் கோவில் அதிகாரிகள்தான் இந்தச் சிக்கலைத் தீவிரமாகக் கிளப்பியவர்கள். அரிஜனங்கள் நீர்வீழ்ச்சிக்குச் செல்வதைக் கோவில் அதிகாரிகள் தடை செய்வதாக, தாலுகா போர்டு உறுப்பினர் குமாரவேலு குடும்பர் தலைமையின் கீழ் வந்த ஒரு தூதுக்குழு குற்றாலத்திற்கு காந்திஜி வருவதற்கு முன்பே அவரிடம் எடுத்துக் கூறியது. அக்குழுவினரிடம் கோவில் சம்பந்தமான எழுத்துச் சான்றுகளைப் பார்வையிட்டு விட்டுத் தக்கது செய்வதாக அண்ணல் வாக்களித்தார்.

நீராட மறுப்பு

குற்றாலத்தில் காந்திஜி தங்கியிருந்த சுமார் மூன்று மணி நேரத்தில் (ஓய்வு எடுத்தது ஐயாசாமி பிள்ளை பங்களாவில்) பெரும்பகுதி அரிஜனங்கள் நீர்வீழ்ச்சிக்குச் செல்வதற்கு யார் உண்மையில் தடையாக இருந்தார்கள் என்பதைக் கண்டறிவதில் தான் செலவாயிற்று. நீர்வீழ்ச்சிக் குழு அமைப்பு, அதிலுள்ள விவகாரங்கள் ஆகிய எல்லாவற்றைப் பற்றியும் அவர் விசாரித்ததில், அரிஜனங்களுக்குள்ள தடை குழுவினரால் உண்டானதல்ல வென்றும் அங்கிருக்கும் ஆலய அதிகாரிகளே அதற்குக் காரணமென்றும் தெரிய வந்தது. அன்று பிற்பகல் மூன்று மணிக்குக் குற்றாலம் நீர்வீழ்ச்சியைப்

பார்வையிட மகாத்மா சென்றார்; ஆனால் அதில் நீராட மறுத்துவிட்டார். ''என்று என்னுடைய அரிஜன சகோதரர்கள் மற்றவர்களைப் போன்று இந்த நீர்வீழ்ச்சியில் நீராட அனுமதிக்கப் பெறுகிறார்களோ, அன்றுதான் நானும் நீராட முடியும்'' என்று அவர் கண்டிப்பாகக் கூறிவிட்டார். அன்று அவர் குற்றாலத்தில் பேசுகையில், ''தீண்டாமை என்னும் தொற்றுநோய் ஒழிந்தால் இந்து மதம் பிழைக்கும்; இல்லையேல் அது ஒழிந்து போய்விடும் என்பது உறுதி'' என்று ஆழ்ந்த துயருடன் கூறினார். மாலை ஸ்ரீவைகுண்டம் வழியாகத் தூத்துக்குடிக்குப் புறப்பட்டார். (வழியில் நெல்லையில் இந்துக் கல்லூரி மாணவர்கள் தங்களுடைய பண முடிப்பை அளித்தார்கள்.)

ஸ்ரீவைகுண்டத்திற்குக் கார் போய்ச் சேர்ந்த போது, சுமார் ஆறு மணியிருக்கும். ஆனால் காந்திஜி குழுவினருக்காக வகுத்த திட்டப்படி மாலை ஐந்து மணிக்கே அவர்கள் தூத்துக்குடியில் இருக்க வேண்டும். ஆகையால் குற்றாலத்திலிருந்து புறப்பட்டதிலிருந்தே வேகமாக முடிக்கிவிடப்பட்ட காரின் வேகம் மேலும் மேலும் கூடிக்கொண்டு போனதே யொழியக் குறையவில்லை. காந்திஜி குழுவினர் வசம் அளிக்கப்பட்டிருந்த திட்டத்தின் படி, அவர் ஸ்ரீவைகுண்டத்தில் நிற்பதாக இல்லை. ஆனால் அவ்வூர் வாசிகள், தங்கள் ஊர்வழியாகச் செல்லும் காந்திஜியை வரவேற்கும் பேற்றை இழக்க விரும்புவார்களா? ஸ்ரீவைகுண்டம் சன்னதி வீதியில் மாவிலைத் தோரணங்கள் கட்டிய வரிசையின் மத்தியில் ஒரு கூட்டம் நின்று கொண்டிருந்தது. அன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு காந்திஜி அங்கு வருவாரென, ஏற்கனவே நன்கு விளம்பரமும் செய்யப் பெற்றிருந்தது. அதனால் திருச்செந்தூர் உள்படச் சுற்றுப் புறக் கிராமங்களிலிருந்தெல்லாம் ஏராளமான மக்கள் வந்து கூடிக் காத்துக் கொண்டிருந்தார்கள். காந்திஜி இவ்வழியாக மாலை நாலரை மணிவரை வராததாலும் அவ்வழியாகக் காரில் வந்த சாவடி கூத்தநயினார் பிள்ளை, காந்திஜி ஏற்கனவே தூத்துக்குடிக்குச் சென்று விட்டதாகக் கூறியதாலும் தலைவர்களும் மக்களில் பெரும்பாலோரும் கலைந்து சென்று விட்டனர்.

இங்கு நிலை இவ்வாறிருக்க, காந்திஜி குழுவினர் சென்ற கார் வழி தவறி முறப்பநாடு சாலை வழியாகத் தாம்பிர

வருணியாறு வரை சென்று அங்கு ஆற்றில் பாலமில்லாத தால், (அப்போது வல்ல நாட்டுப் பாலம் கட்டப்படவில்லை)

பெஞ்சு மீது கார்

திரும்பவும் விசாரித்துக் கொண்டு ஸ்ரீவைகுண் டம் வழியாக வந்தது. வழியை மறித்துக் கொண்டு கூட்டம் நின்றுகொண்டிருக்கவே, காரைக் கூட்டத்தினர் நிறுத்திக் கால தாமதம் செய்து விடுவார்களோ என்று டாக்டர் ராஜன் அஞ்சி, எழுந்து நின்று, வழிவிடுமாறு கையை அலைத்து சமிக்ஞை காண்பித்தார். வெகு அண்மையில் கார் வந்து விட்ட பின்பும் அதன் வேகம் குறையாததால் கூட்டத்தினர் விலகிக் கொண்டனர். ஆனால் அவர்கள் குறுக்கே போட்டி ருந்த பெஞ்சு, உருண்டைக் கற்கள் ஆகியவற்றின் மீது கார் மோதி மேலே தூக்கி எறியப்பட்டு பத்துப் பன்னிரண்டு அடி தள்ளி விழுந்தது. ஆனாலும் அப்புறமும் கார் நிற்கவில்லை; காரோட்டி நிதானத்தைக் கைவிடாமல் தொடர்ந்து ஓட்டிக் கொண்டு சென்று விட்டார்!

தலைக்கு வந்தது

அன்று கார் தலை குப்புறக் கவிழ்ந்திருந்தால் காந்திஜி உள்பட எல்லோருடைய உயிருக்கும் அபாயம் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால், நல்வினைப் பயனாக யாருக்கும் எவ்விதச் சிறுகாயமும் ஏற்படவில்லை. அது வரை தூங்கிக் கொண்டு வந்த காந்திஜி, கார் 'படார்' என்று மோதிய அதிர்ச்சியில் தான் விழித்தார். அவர் வியப்புடன், ''என்ன?'' என்று கேட்ட போது, காரில் இருந்தவர்கள் நடந்ததைச் சொன்னார்கள். காந்திஜி தங்கள் ஊரில் காரை நிறுத்தித் தங்கள் வரவேற்புரை யைப் பெற்றுக் கொள்ளவில்லை என்பது ஸ்ரீ வைகுண்ட மக்களுக்கு மிகுந்த மனவருத்தம் தான். அக்குறையைத் தீர்த்துக் கொள்ள, தாலுகா போர்டு, யூனியன் போர்டுத் தலைவர்கள் இருவரும் (முறையே குமரகுருபரன் பிள்ளை, பாக்ஷா சாகிப்) அவர்களுடைய வரவேற்புரையையும், சிறு பணமுடிப்பையும் எடுத்துக் கொண்டு தூத்துக்குடிக்குச் சென்று அன்று இரவு காந்திஜியிடம் அளித்தார்கள்.

•

ஆனால், இவ்வாறு பல ஊர்வாசிகள் கூடியிருந்து அடைய முடியாத ஒரு பேற்றை ஒரே ஒரு மனிதர் சாதித்துப் பெற்று விட்டார். அது ஒரு சுவையான கதை. ஸ்ரீ வைகுண்டத்தைத் தாண்டினால் சிறிது தூரத்தில் ஒரு முஸ்லிம் கிராமம் இருக்கிறது. இந்தக் கிராமத்து மக்கள்

காந்திஜி காரை நிறுத்தி ஒரு வரவேற்புரையைப் படித்து அளிக்க விரும்பினர்கள். காந்திஜி வந்தகாரையும் எப்படியோ நிறுத்தி விட்டார்கள். கார் நின்றவுடன் பண முடிப்பைக் கொடுத்துவிட்டு, ஒருவர் கார்ப் படியின்மீது ஏறி நின்று கொண்டு வரவேற் புரையைப் படிக்கத் தொடங்கினர். காரில் இருந்தவர்களுக்கோ ஒரே அவசரம். ''தயவு செய்து படிக்க வேண்டாம்; வரவேற்புரையைக் கையில் கொடுத்து விடுங் கள்; எங்களுக்கு நேரமாகிறது,'' என்று எவ்வளவோ கூறி னர்கள். ஆனலும் அவர் கேட்பதாயில்லை. காரில் இருந்தவர் கள் காரை விடச் சொல்லவே, கார் புறப்பட்டுவிட்டது. அப்போதும் அந்த அன்பர் இறங்கவில்லை. ஒரு கையில் காரைப் பிடித்துக் கொண்டார்; மற்றொரு கையில் வரவேற் புரையை வைத்துத் தொடர்ந்து படித்துக்கொண்டே சென்றார். ஒரு மைலுக்கு அப்பால் கார் சென்றபோது தான் வரவேற்புரையைப் படித்து முடிக்க முடிந்தது. அதன் பின் அதை காந்திஜியிடம் கொடுத்துவிட்டு, காரை விட்டு இறங்கி, ஊருக்குத் திரும்பி வந்து சேர்ந்தார்!

ஒரு மனிதர் சாதனை

கரு கருவென்று இருட்டின சமயம் காந்திஜி தூத்துக் குடிக்கு வந்து சேர்ந்தார். நகரிலிருந்து சுமார் ஒரு மைல் தூரம் வரை, அவரைக் காண்பதற்காகக் கூட்டம் கூடியிருந்தது. தெருவில் கார் போவ தற்குக் கூட இடமில்லை. 1933-ஆம் ஆண்டில் காந்தியடிகள் இருபத்தியோரு நாள் உண்ணு நோன்பு மேற்கொண்ட காலத்தில், தமிழ் நாட்டில் சில ஆலயங்கள் அரிஜனங்களுக்காகத் திறந்து விடப்பெற்றன. அவ்வாறு திறந்து விடப்பெற்ற ஆலயங்களுள் ஒன்று தூத்துக்குடி ஸ்ரீ பிரசன்ன விநாயகர் கோவில் ஆகும். அங்கு முதலில் காந்திஜியை அழைத்துச் சென்று, விநாயகருக்குத் தீபாராதனை செய்து காந்தியடிகளுக்குப் பூரண கும்ப மரியாதை செய்தார்கள். காந்திஜி சென்ற கார் அங்குச் சிறிது நேரம் நிற்கவேண்டியதாயிற்று. உடனே அவ்வளவு கூட்டமும் காரின் மேல் வந்து விழுந்து விட்டது. பூரண கும்பம் போன இடம் தெரியவில்லை. இத்துணைக்கும் இந்த நகரில் மாசிலாமணிப் பிள்ளை என்பவர் தலைமையின் கீழ் ஒரு சிறு தொண்டர்படை அமைக்கப்பட்டு, கூட்டத்தின் போக்கு வரத்துக்களெல்லாம் ஒழுங்குபடுத்தப் பெற்றிருந்தன.

தூத்துக்குடி

சற்று நேரம் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகத் தூத்துக்குடி தேசபக்தர் வீரபாகுப் பிள்ளை புதிதாகக் கட்டியிருந்த மாளிகைக்கு காந்திஜி அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அண்ணல் சற்று நேரம் இளைப்பாறிவிட்டுப் பொதுக் கூட்டத்திற்குப் புறப்பட்டார். பொதுக் கூட்டத்தைப் பற்றி வர்ணிப்பதற்கு முன், காந்திஜியின் வருகைக்காகத் தூத்துக்குடி எவ்வாறு தன்னைத் தயார் செய்து கொண்டது என்பதைக் கூறுவது முக்கியமாக இருக்கிறது. 1934-ஜனவரி 24-ஆம் தேதியன்று தூத்துக்குடிக்கு வர இருந்த காந்திஜிக்கு, நல்ல முறையில் வரவேற்பு அளிப்பது குறித்து ஆலோசிக்கச் சுமார் ஒன்றரை மாதத்திற்கு முன்னரே அதாவது 1933-டிசம்பர் 10-ஆம் தேதியன்றே, நகர் சிவன் கோவில் தெரு முன்பாக ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தலைமையின் கீழ் நடைபெற்றது. ''இந்நகரவாசிகள் செய்த மாபெருந் தவத்தினால் மகாத்மா காந்தி இந்நகருக்கு வர இருக்கிறார். அன்னவரைக் கண்டபின், மக்கள் யாவரும் தங்களுடைய மூட நம்பிக்கைகளை விட்டுவிட வேண்டும்; தீண்டாமை என்னும் பேயைத் துரத்த வேண்டும்'' என்று கப்பலோட்டிய தமிழர் அன்று முழங்கினார்.

வ. உ. சி. ஏற்பாடு

ஆகவே தூத்துக்குடிப் பொதுக்கூட்ட ஏற்பாடுகளும் மேடை அலங்காரமும் மிகவும் சிறப்புற அமைந்ததைச் சொல்லவா வேண்டும்? மக்கள் அமர்ந்திருந்த இடத்திற்கு ஊடே மேடையை நோக்கி ஒரே சமயத்தில் இரண்டு கார்கள் சோடியாகச் செல்லக்கூடிய அளவிற்கு இடம் ஒதுக்கி இரண்டு பக்கங்களிலும் மூங்கிற் கழிகள் கட்டப்பட்டிருந்தன. காந்திஜியின் கார் எவ்விதச் சிரமமும் இன்றி மேடை அருகே வந்து நின்றது. அவர் வருவதற்கு முன் ஐயாப்பிள்ளை என்பவரும் சில அரிஜனச் சிறுவர்களும் பாடல்கள் பாடிக் கொண்டிருந்ததால் கூட்டம் அமைதியாக இருந்தது. காந்திஜி மேடைமீது ஏறியவுடன், வழக்கம் போன்று, அவரை நன்முகப் பார்க்கவேண்டும் என்ற ஆவலில் ஒரு பெரிய மோதுதல் ஏற்பட்டது. ஆனாலும், அமைதியாக இருக்குமாறு காந்திஜி கேட்டுக் கொண்ட உடனே எல்லோரும் அமர்ந்துவிட்டார்கள். கூட்டமும் அமைதியாகத் தொடங்கியது.

காந்திஜி மேடையில்

கடற்கரையில் தருவை மைதானத்தில் இந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. சுமார் மூப்பதாயிரம் மக்கள் கூடியிருந்திருப்பார்கள். இந்தப் பொதுக்கூட்டத்தில் விளக்கு ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தன. இரவைப் பகலாக மாற்றி விட்டார்களோ என்று வியப்புறத் தக்கவாறு ஏராளமான மின்சாரக் குமிழ்களைப் போட்டு ஒளியைக் கொட்டியிருந்தார்கள். இதைக் கண்டு காந்திஜி வருத்தம் அடைந்தார்; டாக்டர் ராஜனை அருகில் அழைத்து, ''இவ்வளவு விளக்கு அலங்காரமெல்லாம் யாருடைய செலவில் போடப்பட்டது? ஏழை மக்களிடம் வசூல் செய்த பணத்தைக் கொண்டா? இதைப் பற்றிய விவரம் தெரியும் வரை நான் கூட்டத்தைத் தொடங்கப்போவதில்லை'' என்று கூறினார்! ''அரிஜனங்களுக்காக வசூல் செய்யப் பெற்ற பணத்தில் ஒரு சல்லி கூட இந்த விளக்கு ஏற்பாடுகளுக்காகச் செலவிடப் பெறவில்லை. இந்நகரைச் சேர்ந்த ஒரு காண்டிராக்டர் தாமாக முன்வந்து இந்த உபயத்தைச் செய்திருக்கிறார்,'' என்று டாக்டர் ராஜன் கூறினார். ஆனால் அப்போதும் காந்திஜிக்கு மன நிறைவு ஏற்படவில்லை. ''நீங்கள் சொல்வது உண்மை என்பதில் எனக்கு மனநிறைவு ஏற்பட்டாலொழிய நான் கூட்டத்தைத் தொடங்க முடியாது'' என்று கூறிவிட்டார். ஆகவே, வரவேற்புக் குழுவினரை டாக்டர் ராஜன் அழைத்து, காந்திஜியிடம் விவரத்தை எடுத்துரைக்குமாறு சொன்னார். டாக்டர் ராஜன் சொன்னது உண்மைதான் என்பதற்கு அவர்களும் சாட்சியம் கூறினர். ஆனால் அப்புறமும் காந்திஜிக்கு மன நிறைவு ஏற்படவில்லை. ''அந்தக் காண்டிராக்டர் இங்கே இருக்கிறாரா? இருந்தால் அழையுங்கள்'' என்று கூறிவிட்டார். காண்டிராக்டரும், அங்கே வந்து விளக்கு அலங்கார ஏற்பாடுகளுக்காக வரவேற்புக் குழுவினரிடமிருந்து தாம் ஒரு சல்லிகூட எதிர்பார்க்கவில்லை என்று சொன்னார். இதன் பின்னர்தான் காந்திஜி கூட்டத்தைத் தொடங்கினார் - இது டாக்டர் ராஜனுக்குப் பெரிய அதிர்ச்சியாகப் போயிற்று. ஆகவே இனிமேல் காந்திஜி செல்லவிருக்கும் இடங்களைச் சேர்ந்த வரவேற்புக் குழுக்களுக்கு, அரிஜன நிதிக்காகத் திரட்டப்பெற்ற பணத்திலிருந்து ஒரு சல்லியைக் கூட, காந்திஜிக்கு வரவேற்பு அளிப்பதற்காகச் செலவிட வேண்டாம் என்றும், வசூலித்த பணத்திற்குத் துல்லியமாகக் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்றும் காந்திஜி

பொதுக் கூட்டம்

ஓர் ஊருக்கு வந்து அங்கிருந்து புறப்படுவதற்கு முன் இந்தக் கணக்கை அவருக்குக் காட்டிவிட வேண்டுமென்றும் டாக்டர் ராஜன் ஒரு சுற்றறிக்கை அனுப்பினர். ''இந்தச் சுற்றுப் பயணத்தைப் போல் இதற்கு முன்பு எந்தச் சுற்றுப் பயணத்திலும் காந்திஜி பண விஷயத்தில் இவ்வளவு கண்டிப்பாக இருந்ததில்லை,'' என்று டாக்டர் ராஜன் இறுதியில் கூறினர் - இக்கூட்டத்தில் (நகராட்சி மன்றத்தின் சார்பாக எல். வி. ரோச் விக்டோரியா வரவேற்புரை வாசித்தளித்தார். பின்னர், இந்திய வணிகர் சங்கத்தின் சார்பாகவும், இருப்பு வணிகர் சங்கத்தின் சார்பாகவும், மாதர் விசிராம சங்கத்தார் சார்பாகவும் காசுக்கடை வணிகர்கள் சங்கச் சார்பாகவும் அரிஜன சேவா சங்கத்தார் சார்பாகவும் வரவேற்புரைகள் வாசித்தளிக்கப் பெற்றன. காசுக்கடை வணிகர்கள் ஒரு தங்க எலுமிச்சம் பழமும் கோதண்டபாணி நாயுடு என்பவர் ஒரு கமண்டலமும் ஆழ்வார் திருநகரி ராகவேந்திர நாராயணராவ் வாழ்த்துப் பாட்டுக்கள் கொண்ட பத்திரமும் அளித்தனர்.) ''அரிஜனங்களும் கடவுளால் படைக்கப் பெற்ற மக்களே. அவர்களைக் கேவலமாக நடத்தக் கூடாது.'' என்று காந்திஜி அறிவுரை கூறினர். கூட்டம் முடிந்த பின்பு வீரபாகு இல்லத்திற்குச் சென்று தங்கினர்.

இவ்வாறு மிகச் சிறப்பாக, தூத்துக்குடி வரவேற்பு முடிந்த பின்புங்கூட அங்குச் செய்யப் பெற்றிருந்த அலங்காரமான மின்சார ஏற்பாடுகள் காந்திஜி எவ்வளவு மனத்தை விட்டு அகலவில்லை. அன்றிரவு செலவிடலாம் படுக்கப்போனபோது டாக்டர் ராஜனை அழைத்து, ''செயலாளரிடம் இருந்து வரவு செலவு அறிக்கை ஒன்றை வாங்கி என்னிடம் காண்பிக்க வேண்டும். அதைப் பார்க்கும் வரையில் எனக்குத் தூக்கம் பிடிக்காது'' என்று கூறினர். உடனே ஒரு கணக்கை சுமாராகத் தயார் செய்து, காந்திஜியிடம் அளித்தார்கள். மொத்தம் வசூலான தொகை ரூ. 2,600-என்றும் அதில் செலவு 500 ரூபாயென்றும் மீதத் தொகை காந்திஜியிடம் பண முடிப்பாகக் கொடுக்கப்பட்டது என்றும் அதில் காணப்பட்டிருந்தது. காந்திஜி அதைப் படித்துப் பார்த்த பின், ''ஐந்தில் ஒரு பாகம் செலவிடுவது நியாயமில்லை; இருபதில் ஒரு பங்குக்கு மேல் செலவுகள் ஏற்படக் கூடாது'' என்று கூறியதுடன் பொதுப்பணம் வசூலிப்பதும் அதைப் பொறுப்

புடன் செலவழிப்பதும் எப்படி என்பதைப் பற்றிச் சுமார் ஒரு மணி நேரம் டாக்டர் ராஜனுக்கு உபதேசம் செய்தார்!

25-1-34

சூரு வளிப் பயணம்

தூத்துக்குடியிலிருந்து இராஜபாளையம், விருதுநகர், திருமங்கலம் வழியாக காந்திஜி ஒரே நாளில் மதுரைக்குச் சென்ற சுற்றுப் பயணம் உண்மையிலேயே மின்னல் வேகச் சுற்றுப்பயணம் தான். அண்ணல் வந்த மகிழ்ச்சியினாலோ என்னவோ, இந்தப் பயணத்தில் மழை கொட்டிக் கொண்டேயிருந்தது. தூத்துக்குடியில் தங்கியிருந்த இரவு ஓயாத மழை; காலையில் தூத்துக்குடியிலிருந்து அவர் புறப் பட்டபோது மழை விட்டது போன்று தோன்றியது. காந்தி யடிகள் தூத்துக்குடியைச் சேர்ந்த செவந்தாகுளம் சேரிகளைப் பார்வையிட்டார். இங்கு வடிவேல் நாடார் வரவேற் புரையைப் படித்தார். இந்த வரவேற்பு கலை அழகுடன் அமைந்தது. பின்னர் காந்திஜியும் அவரது குழுவினரும் ஸ்ரீ பிரசன்ன விநாயகர் கோவிலில் சுவாமி தரிசனம் செய்து விட்டு, எட்டயபுரம், கோவில்பட்டி வழியாக இராஜ பாளையம் செல்லப் புறப்பட்டார்கள். பாரதி பிறந்த ஊரில் பாரதத்தின் தவப்புதல்வருக்கு அளிக்கப்பட்ட உளம் நிறைந்த வரவேற்பிற்குக் கேட்கவா வேண்டும்? அங்கு வர வேற்புரையையும் பண முடிப்பையும் பெற்றுக்கொண்டு அண்ணல் கோவில்பட்டிக்குச் சென்றார். அங்கு சுயராஜ்ய ஆசிரம மைதானத்தில் கூடியிருந்த பெருங் கூட்டம் அவரைச் சிறப்பாக வரவேற்றுப் பண முடிப்பும் அளித்தது. (மந்தித் தோப்புக் கிராம வாசிகள் சார்பாகவும் ஒரு வரவேற்புரை வாசித்தளிக்கப்பெற்றது.) காந்திஜி தமது நன்றியைத் தெரிவித்து விட்டு அடுத்த ஊருக்குப் புறப்பட்டு விட்டார். கோயில்பட்டி, கழுகுமலை, சங்கரன்கோவில் ஆகிய இடங் களிலெல்லாம் காரில் இருந்தபடியே காந்திஜி வரவேற் புரைகளைப் பெற்றுக் கொண்டதுடன், மறுமொழியும் அளித்தார். சங்கரன் கோவிலில் காந்திஜியின் வெள்ளிப் பதுமையொன்று அவரிடம் அளிக்கப்பட்டது.

இவ்வளவு வேகப்படுத்தியும் குறிப்பிட்ட நேரத்திற்கு அரை மணி நேரம் பிந்தியே காந்திஜி இராஜபாளையம் சேர்ந் தார். அங்கு, குமாரசாமி ராஜாவின் இல்லத்தில் காந்திஜி

தங்குவதற்கு ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. பொதுக் கூட்டத்தில் (காந்தி வரவேற்புக்குழு, ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகா போர்டு, கதர் நெசவாளர்கள், ஷராப் இராஜபாளையம் வணிகர் சங்கம், பஞ்சாயத்துக் குழு சார் சேர்ந்தார் பாக) வரவேற்புரைகள் படிக்கப் பெற்றபின் காந்திஜி மறுமொழி அளித்தார்: ''உங்களுடைய இதயங்களிலிருந்து தீண்டாமை அறவே அகல வேண்டும், இல்லாவிடில் உங்களுடைய வரவேற்புரைகளோ அல்லது பண முடிப்புகளோ எனக்கு எந்தவிதமான மன நிறைவும் அளிக்கமாட்டா. நாம் தற்போது கடைப்பிடித்து வரும் தீண்டாமைக்குச் சாத்திர பூர்வமான அங்கீகாரம் எதுவுங் கிடையாது.'' இதன் பின்னர் காந்திஜி பூபதி கூட்டுறவு சங்கக் கட்டிடத்திற்குச் சென்று அங்கு மாதர்கள் அளித்த வரவேற்பைப் பெற்றுக்கொண்டார். இராஜபாளையம் ராஜா வகுப்பைச் சேர்ந்த பெண்கள் கோஷாவாக இருந்தபோதிலும் காந்தியடிகளை வரவேற்க வேண்டுமென்ற ஆவலில் அவரை மட்டுமல்லாது அவருடன் வந்தவர்களையும் பெண்கள் கூட்டத்தில் அனுமதித்தனர். வரவேற்புக் கூட்டம் முடிந்து குமாரசாமி ராஜாவின் வீட்டிற்கு அவர் வந்தபோது பகல் பன்னிரண்டு மணி அடித்தது. எல்லோரும் அவரது இல்லத்தில் குளித்துச் சாப்பாட்டையும் முடித்துக் கொண்டு வெளியே வந்து பார்த்தால் பெரும் மழை பெய்து கொண்டிருந்தது. விருதுநகருக்கு வரும் காந்திஜியை எதிர் கொண்டழைப்பதற்காகக் காமராஜும் (விருதுநகரைச் சேர்ந்த மற்றொரு பெயர் பெற்ற தேசத் தொண்டரான) முத்துசாமியும் அங்கே வந்து காந்திஜியைப் பேட்டி கண்டார்கள். ஏற்கனவே வகுக்கப்பெற்றிருந்த திட்டத்தின்படி, பிற்பகல் மூன்று மணிக்கு இராஜபாளையத்திலிருந்து புறப்பட வேண்டும். இத்தகைய சந்தர்ப்பங்களில் காந்திஜியின் நிதானமே ஒரு தனிதான். கடும் மழையுங் காற்றுமாக இருந்ததால், கார் அதிக வேகமாகப் போக முடியாதாகையால், ஓய்வு நேரத்தைக் குறைத்துக்கொண்டு, முன்கூட்டிப் புறப்பட்டுவிட்டார். மதுரையிலிருந்து வந்த வாடகைக் காரின் பின் ஆசனத்தில் காந்திஜி மட்டும் அமர்ந்துகொள்ள முன் ஆசனத்தில் டாக்டர் ராஜனும் குமாரசாமி ராஜாவும் வண்டியோட்டியும் அமர்ந்து கொண்டு காரை எடுத்தார்கள். எதிரே சண்டமாருதமாக மழை பெய்து கொண்டிருந்தது; மழையின் வேகத்தைக் காட்டிலும் காற்றின் வேகம் இன்னும் அதிக

மாக இருந்தது; மோட்டார் ஓட்டிக்குப் பாதை சரியாகப் புலப்படவில்லை. காந்திஜி உட்கார்ந்திருந்த ஆசனத்தில் மழைச்சாரல் விழாமல் தடுப்பதற்குப் பக்கப்படுதா இருந்தது. முன் ஆசனங்களில் இருந்தவர்களுக்கு அவ்விதப் படுதா இல்லாததால் டாக்டர் ராஜனும் குமாரசாமி ராஜாவும் அணிந்திருந்த மேல் துண்டுகளைக் கட்டிச் சாரல் விழாது தடுத்தனர். இவ்வாறு கடுங்காற்றுடனும் மழையுடனும் போராடிக்கொண்டு கண் தெரியாது பத்து மைல் வேகத்தில் தள்ளாடித் தள்ளாடிக் கார் போய்க்கொண்டிருந்த போது, (இக்காருடன் கோ. வேங்கடாசலபதியும் மற்றும் சிலரும் ஒரு காரிலும், காமராஜும் முத்துச்சாமியும் மற்றொரு காரிலும் சென்றார்கள்.) காந்திஜி அயர்ந்து தூங்கி விட்டார் என்றால் அவருடைய மன ஒருமைப் பாட்டை என்னவென்று இயம்புவது? ஒரு வழியாகத் ''தப்பித்தோம் பிழைத்தோம்'' என்று இரண்டு மணி நேரங் கழித்துச் சிவகாசிக்குப் போய்ச் சேர்ந்தால் அங்கே மற்றொரு கண்டம் காத்துக் கொண்டிருந்தது.

கார் மீது மோதல்

சிவகாசியில் ஒரு பள்ளிக்கூட மைதானத்தில் கூட்டம் நடப்பதற்கான ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது; காந்திஜி காரில் வந்து இறங்குவதற்கு ஓர் அலங்கார மான பந்தலை நிர்மாணித்திருந்தார்கள். அவர் அங்கு வந்து சேர்ந்தபோது மழை நிற்கவில்லை; பந்தலின் கீழே முழங்கால் அளவிற்குத் தண்ணீர் நின்றது. அத்தண்ணீரில் நடந்து சென்றாலோ ஓர் அடி ஆழத்திற்கு மண் புதைந்தது. ஓர் அதிசயம் என்ன வென்றால், இந்த மழையிலும், குளிரிலும், தண்ணீர் தலையிலிருந்து சொட்டச் சொட்டச் சுமார் நாலாயிரம் மக்கள் அங்கே கூடியிருந்தனர். காந்திஜியின் கார், பந்தலுக்கு இருபது அடி தூரத்திலேயே மண்ணில் சிக்கி நின்று விட்டது. அவருடைய கார் வந்து விட்டது என்று தெரிந்தவுடனே மைதானத்தில் கூடியிருந்த அத்தனை ஆயிரம் பேரும் சொல்லி வைத்தது போல் காரைச் சூழ்ந்து கொள்ளத் தொடங்கி விட்டனர். இவர்கள் மோதலில் காரின் மேல் மூடி வானத்தில் பறந்தது! ஒரு புறம் கரை புரண்டோடிய மகிழ்ச்சியோடு, ''காந்திஜிக்கு ஜே'' என்று மக்கள் முழக்கமிட்டுக் கொண்டிருந்தனர்; மற்றொரு புறம், காரோட்டி, கன்னத்தின் ஓரங்களில் கண்ணீர் சொட்டுச் சொட்டாக உதிர,

''ஐயோ, என் கார் போய் விட்டதே!'' என்று அழுது கொண்டிருந்தான்!

இந்தக் கூட்டத்தின் நெருக்கடியிலிருந்து காரை மட்டு மல்ல, காந்திஜியையும் காப்பாற்றியாக வேண்டிய அவசிய மான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. அளவு கடந்த ஆர்வத்தில், நாம் என்ன செய்கிறோம் என்பதையே அறியாது, மக்கள் காரை நெறித் துக் கொண்டிருந்தார்கள். நல்ல வேளையாக இந்த இடிபாட்டிலும் பணமுடிப்பை அளிக்க வேண்டியவர் எப்படியோ முண்டியடித்துக் கொண்டு முன்னுல் வந்து டாக்டர் ராஜன் கையில் அதைக் கொடுத்து, தொகை இவ்வளவு என்றும் கூறிவிட்டுப் போய் விட்டார். சில நிமிடங்களில் அலங்காரப் பந்தல், கூட்டத்தால் தள்ளப்பட்டு கார் முன்பாக வீழ்ந்தது. கார் சற்றுத் தூரத்திலேயே சிக்கி நின்றது நல்லதாகப் போயிற்று; அதனுல் தான் காரில் இருந்தவர்கள் பிழைத்தார்கள். காந்திஜியுடன் வந்தவர் களும் மற்றும் சிலரும் எவ்வளவோ சொல்லியும் கூட்டம் வழி விடுவதாயில்லை. மணி ஐந்தாகிவிட்டது. இவ்வளவு பெரிய அமளிக்கு மத்தியிலும் காந்திஜி மிகவும் அமைதியாகக் காரில் அமர்ந்திருந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் குமாரசாமி ராஜாவிற்கு ஒரு யோசனை தோன்றியது. திடீரென்று காரி லிருந்து கீழே குதித்தார்; சாய்ந்த பந்தலிலிருந்து சுமார் ஐந்தடி நீளமுள்ள ஒரு கம்பை உருவினர்; கம்பு விளையாட்டுக் காரர்கள் சுழற்றுவது போல அழகாகச் சுழற்றத் தொடங்கி விட்டார். மற்றும் சிலரும் அவரைப் பின்பற்றி இவ்வாறு செய்யத் தொடங்கி விட்டார்கள். இதனுல் கூடியிருந்த பொது மக்களுக்குக் காயம் ஏற்பட்டதோ இல்லையோ, கம்பை வீசியவர்களில் ஒருவர் கம்பு மற்றொருவர் மீது அடி பட்டதில் சிலருக்குக் காயம் ஏற்பட்டது. குமாரசாமி ராஜா கையில் போட்டிருந்த வைர மோதிரம் கழன்று வீழ்ந்து விட்டது; அந்தச் சேரிலும் சகதியிலும் எங்கே வீழ்ந்தது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. காருக்கும் நாலா புறத்திலும் சேதம் தான். ஆனலும் குமாரசாமி ராஜா எதற்காக இந்த யோசனையைக் கையாண்டாரோ அந்த நோக்கம் வெற்றிகரமாக நிறைவேறியது. கூட்டம் ஒரு புறம் வழிவிடவே காரோட்டி உடனே காரை எடுத்து விட்டான். இதற்கு முன்பே காமராஜ் விருதுநகரில் நிலைமை

கம்பு விளையாட்டு

ஏவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்ப்பதற்காகப் போய் விட்டார்.

காமராஜின் சமயோசிதம்

காந்திஜி கார் கிளம்பி, சிவகாசிக்கு இரண்டு மைல் தூரத்திற்கு அப்பால் நின்றது. எல்லோரும் தங்களுடைய உடைகளைப் பிழிந்து கட்டிக் கொண்டு புறப் பட்டனர். அதிக மழையின் காரணமாகச் சுமார் பதினைந்து மைல் தூரம் சுற்றிப்போக வேண்டியதாயிற்று. இந்தச் சமயத்தில் காந்திஜி காருக்குப் பின் தனிக்காரில் வந்து கொண்டிருந்த போலீஸ் அதிகாரி காந்திஜியும் அவரது குழுவினரும் பட்டுக் கொண் டிருந்த அவதிகளைப் பார்த்து மிகுந்த அன்புடன், காந்தி ஜிக்குத் தமது காரில் இடங்கொடுப்பதாகக் கூறினர். ஆனாலும் அதை காந்திஜி ஏற்க மறுத்து விட்டார். கடைசி யாகச் சுமார் ஆறரை மணி வாக்கில் விருதுநகருக்கு இரண்டு மைல் தூரத்தில் கார் வந்து கொண்டிருந்தபோது, எதிரே காமராஜ் ஒரு காரில் வந்தார். பிற்காலத்தில் சென்னை முதலமைச்சராகி, அனைத்திந்திய காங்கிரஸ் தலைவராகி, இந்திய அரசியலில் பல முக்கிய திருப்பங்களுக்குக் காரண மாக இருந்த காமராஜ் ஒரு சிவகாசி மீண்டும் விருதுநகரில் நிகழ்ந்து விடக்கூடாது என்பதற்காக மிகவும் முன் யோசனை யுடன் முன் கூட்டியே வந்து இரண்டு மைல் தூரத்தில் காந்திஜி குழுவினரின் காரை நிறுத்தி, ''விருதுநகரில் ஊர் கொள்ளாமல் ஐம்பது கிராமங்களினின்றும் பதினாயிரக்கணக் கான கூட்டம் பகல் ஒரு மணி முதல் காத்துக் கொண்டிருக் கிறது. தெருவில் வண்டி போவதற்குக் கூட வழி இல்லை. நீங்கள் இங்குள்ள இந்தச் சிறிய பங்களாவில் தங்கி நானைந்து நாளாயிருக்கும் உடைகளைக் காய வைத்துக் கொண்டி ருங்கள். நாங்கள் போய்க் கூட்டத்தைக் கலைத்துவிட்டுப் பண முடிப்பை இவ்விடம் கொண்டு வந்து கொடுத்து விடு கிறோம். நீங்கள் விருதுநகரில் தங்காமல் தெரு வழியாகப் போய் விடலாம்'' என்று சொன்னார். அதன்படி சூலக்கரை யில் ஒரு சிறு பங்களாவில் அண்ணலும் அவருடன் வந்தவர் களும் தங்கினார்கள்; காந்திஜியும் தம்முடைய இரவு உணவை இங்கேயே முடித்துக் கொண்டார்; மாலைப் பிரார்த்தனையும் இனிது முடிந்தது. அத்துடன், சுமார் அரைமணி நேரம் வெளியே உலாவப் போய் விட்டும் வந்தார்.

காந்திஜி குழுவினரைச் சூலக்கரையில் தங்க வைத்து விட்டு, விருதுநகருக்குச் சென்ற காமராஜ் திரும்பி வருவதற்கு நீண்ட நேரமாகி விட்டது. அங்கு நடந்த சுவையான நிகழ்ச்சியைக் கோ. வேங்கடாசலபதியிடமிருந்து கேளுங்கள்:

விருதுநகர்

''சூலக்கரையில் நாங்கள் ஒரு சிலர் மட்டும் காந்திஜியுடன் சிறிது நேரம் அமைதியாகத் தங்கக் கூடிய ஒரு பாக்கியம் எனக்குக் கிடைத்தது. குமாரசாமி ராஜா என்னை 'ஒரு நிர்மாண ஊழியன்' என்று காந்திஜிக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அந்தச் சமயத்தில் நான் கோபிநாயக்கன் பட்டிப் பள்ளியில் தலைமை ஆசிரியனாக இருந்தேன். அந்தப் பள்ளியின் சார்பாக விருதுநகர் பொதுக் கூட்டத்தில் படித்துக் கொடுப்பதற்காக ஒரு வரவேற்புரையை என்னுடன் கொண்டு வந்திருந்தேன்; அந்த வரவேற்புரையை நிறுத்திச் சாவதானமாகப் படித்து காந்திஜியிடம் கொடுத்தேன். டாக்டர் ராஜன் காந்திஜியை நோக்கி வேடிக்கையாக, ''பாபுஜி, இவ்வளவு நிறுத்தி மெதுவாக எந்த வரவேற்புரையாவது படிக்கப்படுவதை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டார்.

இந்தச் சமயத்தில் காந்திஜியின் மாலை உணவுக்கென மீராபென் அளித்த ஆட்டுப்பால் திரட்டு, கிச்சிலி, ஆரஞ்சுப் பழம் முதலியவைகளை அவர் எடுத்துக் கொடுத்தார். காந்திஜி ஆரஞ்சுப் பழத்தை எடுத்து உரித்து ஒவ்வொரு சுளையாகச் சுவைத்துச் சாப்பிட்டுச் சக்கையைக் கவனமாக ஒரு காகிதத்தில் துப்பினார். பின்னல் அவைகளையெல்லாம் எடுத்து அப்புறப்படுத்துமாறு என்னிடம் சொன்னார். நான் என் கைக்குட்டையை எடுத்து அதைக் கட்டப் போனேன். ''காந்திஜி மென்று துப்பியவைகளாயிற்றே, அவைகளைப் பத்திரமாக வீட்டிற்கு எடுத்துச் செல்லலாம்'' என்பது என் எண்ணம். ஆனால் காந்திஜி இதை எப்படியோ கண்டு பிடித்துவிட்டார். அவர் கோபமாக என்னை நோக்கி, ''இந்தா பார், உன்னைக் குமாரசாமிராஜா அறிமுகப்படுத்திய போது ஒரு நிர்மாண ஊழியன் என்று சொன்னார். ஆனால் நான் தின்று துப்பியவைகளை நீ கைக்குட்டையில் கட்டுகிறாயே? இதுதான் நீ கற்றுக்கொண்ட துப்புரவு வேலையா?'' என்று கேட்டார். உடனே நான் அவைகளை எடுத்து அப்புறப்படுத்திவிட்டேன்.'' இதன் பின்னர் அங்கே

வேங்கடாசலபதி

பிரார்த்தனை நடைபெற்றது. பிரார்த்தனைக்குப் பின்னர் உலாவி விட்டு வருவதற்காக காந்திஜி புறப்பட்டார். காந்திஜியின் உடைகளும் அவருடன் வந்த பெரிய மனிதர்களின் துணி மணிகளும் நனைந்து போய்விட்டதால், அவர்கள் மாற்றிக் கட்டிக்கொள்வதற்காகப் புதுக் கதராடைகள் வாங்கக் காமராஜ் முயன்றிருக்கிறார். கதர் வஸ்திராலய நிருவாகியோ கடையை அடைத்து விட்டுப் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்திற்குப் போய்விட்டார். பொதுக் கூட்டம் நடைபெறும் இடத்திலோ கரைகாணுக் கூட்டம். அவரை எப்படிக் கண்டுபிடிப்பது? ஆனாலும் எப்படியோ கண்டுபிடித்துப் புதுத் துணிமணிகளை வாங்கிக்கொண்டு காமராஜ் சூலக்கரைக்கு வந்து சேர்ந்தார். இதற்கிடையில் ஆர். டி. பி. சுப்பிரமணிய நாடாரும் மற்றும் ஓரிரு விருது நகர்ப் பிரமுகர்களும் (வரவேற்புக்குழு உறுப்பினர்கள்) காந்திஜி தங்கியிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தனர். போலீஸ் அதிகாரிகளும் வந்து விட்டார்கள். ''கூட்டம் அநேகமாய்க் கலைந்துவிட்டது. இனி வந்தால் அதிக இடையூறு இல்லாமல் கூட்டம் நடத்தலாம். பண முடிப்பை அவ்விடமே கொடுக்கிறோம்'' என்று அவர்கள் சொன்னதற்கு முதலில் டாக்டர் ராஜன் இணங்குவதாயில்லை. இவர்கள் இதைப் பற்றித் தர்க்கித்துக் கொண்டிருந்ததைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த காந்திஜி ''விஷயமென்ன?'' என்று கேட்டார். டாக்டர் ராஜன் விஷயத்தை விளக்கி, ''நேரத்திற்காக இவர் பேரம் செய்து கொண்டிருக்கிறார்'' என்றார். காந்திஜி நிலவரத்தைப் புரிந்துகொண்டு. ''ஐந்து நிமிடங்கள்தான் நாம் கொடுப்போமே?'' என்றார். பின்னர், இரவு சுமார் எட்டு மணிக்கு எல்லோரும் விருது நகர் போய்ச் சேர்ந்தார்கள். அந்த நேரத்திலும் கூட அங்கே பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காத்துக் கொண்டிருந்தனர். விருதுநகரில் பெண்களின் கூட்டம் ஒன்று தனியாக ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தும் அது நடைபெற இயலவில்லை. அவர்கள் அளிக்க விருந்த பண முடிப்பை மறுநாள் மதுரைக்குக் கொண்டு வந்து அளித்தார்கள்.

•

இவ்வாறு காந்திஜி விருதுநகரில் இருந்தபோது, மதுரை யிலும் விருதை-மதுரை சாலையில் உள்ள பெரிய ஊர்களிலும் பதினாயிரக்கணக்கான மக்கள் அவருடைய வருகைக்காக ஆவலோடு எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களில் இரண்டு ஆண்மாக்களுடைய வேதனை சொல்லொணாததாக

இருந்தது. ஜார்ஜ் ஜோசப்பின் மனைவியாரும் குமாரத்தியுந் தான் இவ்விருவரும். முதலில் வகுத்த திட்டத்தின்படி,

திருமங்கலம்

காந்திஜி மாலை 5-30 மணிக்குத் திருமங்கலம் வந்து இரவு உணவை அங்கு முடித்துக் கொண்டு சுமார் 6-00 மணிக்கு மதுரை போய்ச் சேர்ந்திருக்க வேண்டும். இதற்காக மேற்கண்ட இருவரும் திருமங்கலத்திற்கு வந்து உணவைத் தயாரித்தனர். ஆனால் இரவு நேரமாகிவிடவே, இனி காந்திஜி இந்த உணவை உண்ணப் போவதில்லை என்பதை நினைத்துப் பார்க்கவே அவர்களுக்குச் சொல்லொணாத் துயரமாக இருந்தது. திருமங்கலம் பொதுக்கூட்டத்தில் அவர்கள் வந்திருப்பதை அறிந்த காந்திஜி, அவர்களைத் தம்மருகே அழைத்து உட்கார வைத்து அன்புடன் பேசிக் கொண்டிருந்தார். ஜார்ஜ் ஜோசப்பின் குமார்த்தியை அண்ணல் ஆசீர்வதித்தார். இந்த ஊருக்கு காந்திஜி வந்தபோது தாழை முத்து ஆசாரியார் என்பவர் செய்த ஓர் அழகான புதுவகை 'சூட்கேஸ்' இராட்டை காந்திஜியிடம் அளிக்கப் பெற்றது. திருமங்கலத்தைச் சேர்ந்த பெயர் பெற்ற தேசபக்தரான நித்தியானந்தம் அடிகள், வீரம்காம், சென்னை, தண்டி, சோழிங்க நல்லூர் முதலிய ஊர்களில் எடுத்த வரலாற்றுப் புகழ் கொண்ட உப்புப் பொட்டலத்தை காந்திஜியிடம் அளித்தார். கூட்டத்தில் சொற்பொழிவாற்றுகையில் ஆண், பெண் யாவரும் சாதி வேறுபாட்டை விட்டுவிட வேண்டுமென்று காந்திஜி அறிவுரை கூறினர்.

கள்ளிக்குடி

திருமங்கலம் வந்த வழியில் கள்ளிக்குடி சேர ஒன்பது மணிக்கு மேலாகி விட்டதால், ஏற்கனவே காத்துக் கொண்டிருந்த மக்களில் ஆயிரக்கணக்கானவர் மன வருத்தத்துடன் வீட்டிற்குத் திரும்பிவிட்டனர். ஆயினும் அந்த நேரத்திலும் பலர் கலையாதிருந்து காந்திஜி வந்தபோது அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளித்தனர். (திருமங்கலம் தாலுகா போர்டுத் தலைவரும், மதுரை மாவட்டக் கழக உறுப்பினருமான ஏ. கே. ஏ. இராமச்சந்திர ரெட்டியார் வரவேற்புரை வாசித்தளித்ததுடன் பண முடிப்பையுங் கொடுத்தார். குமாரி மது ராமச்சந்திரன், குமாரி ராஜம் ராமச்சந்திரன் ஆகியோரும் மற்றும் சிலரும் பெண்கள் சார்பாக ஒரு தனி வரவேற்புரையும் பண முடிப்புங் கொடுத்தனர்.)

காந்திஜி குழுவினர், திருமங்கலம் தாண்டிய உடனே, எதிரில் வெண்கலத் தொனியுடன் வைத்தியநாத ஐயர் வந்து விட்டார். மதுரையில் வெகு நேரமாகி யும் காந்திஜி வராததைக் கண்ட ஐயர், கடும் மழையில் காந்திஜி குழுவினர் எங்கேயோ தடங்கல்பட்டு விட்டார்கள் என் ப தை உணர்ந்து, மதுரைப் பொதுக் கூட்டத்தைக் கலைத்துவிட்டு, அவர்களைத் தேடிவந்து கொண்டிருந்தார். மதுரையிலிருந்து சுமார் பத்து மைல் தூரத்தில் காந்திஜியைக் கண்டு காரை நிறுத்தி, ''மதுரைப் பொதுக் கூட்டத்தைக் கலைத்துவிட் டேன். சுமார் இருபத்தையாயிரம் மக்களுக்கு மேலாக மாலை நாலுமணி முதல் சுமார் பத்து மணி வரை காத்திருந் தார்கள். தாங்கள் எப்பொழுது வரப் போகிறீர்கள், எங்கே வந்து கொண்டிருக்கிறீர்கள் என்று உறுதியாகத் தெரியவில்லை. ஆகையால் நானேதான் கூட்டம் என்று கூறிக் கலைத்து விட்டேன்'' என்று சொன்னார். பின்னர் காரை மெதுவாக ஓட்டிக்கொண்டு இரவு 11-15 மணிக்கு மதுரையில் மற்றொரு பெரும் தேசபக்தரான என்.எம்.ஆர். சுப்பராமன் பங்களாவிற்கு வந்து சேர்ந்தார்கள். ஆயிரத் தணக்கான மக்கள் அங்கு காந்திஜியைக் காண்பதற்காகச் சுற்றிக் கூடியிருந்தனர். மேல் மாடியில் உறங்கச் சென்ற காந்தியடிகள் தாழ்வாரத்தில் வந்து தரிசனம் கொடுத்த பின்புதான் கூட்டம் கலைந்து சென்றது.

வைத்தியநாத ஐயர்

26-1-34

மதுரைக்கு காந்திஜி வர மிகவும் கால தாமதமாகியதா லும் மழையின் காரணமாகக் கார்ப் போக்குவரத்துக் கடின மாகி விட்டதாலும் காந்திஜியின் சுற்றுப் பயணத் திட்டத்தில் பெரிய மாறுதல்கள் செய்யவேண்டிய அவசியம் உண்டாயிற்று. மதுரை மாவட்டத்தில் உள்ள போடி, கம்பம், ஆகிய ஊர்களுக்குச் செல்வதை மகாத்மா கூனூர் சென்று ஓய்வு எடுத்த பின் வைத்துக்கொள்ளலாம் என்று முடிவு செய்யப்பெற்றது. அத்துடன், திண்டுக்கல், கோவை மாவட்டச் சுற்றுப்பயணம் தற்காலிகமாகத் தள்ளி வைக்கப் பட்டிருப்பதாக டாக்டர் ராஜன் அறிவித்தார்.

திட்டத்தில் மாற்றம்

மேலவாசல், தெற்குவாசல், மதிச்சியம் சேரிகளை காந்திஜி பார்வையிட்டார். மதுரையிலேயே மிகவும் சுத்த

மானது என்று பெயர் பெற்ற சேரி கூட காந்திஜிக்கு மனநிறைவு அளிக்கவில்லை. மழை பெய்ததன் காரணமாக, தண்ணீர் வெளியில் போக வழியின்றி, தேங்கி முழங்கால் அளவு நின்றது இதற்கு ஒரு காரணம். வீடுகள் என்ற பெயரில் அங்கிருந்த கூடுகளைப் பார்வையிட்டபின், அங்கே கூடியிருந்த வயது முதிர்ந்த சில கிழவிகளுடன் இந்தக் கிழவர் சிறிது நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

சேரிகள்

காலையில் ஊழியர்கள் தெருத் தெருவாக 'டாம் - டாம்' அடித்து காந்திஜி வந்து விட்டார் என்ற செய்தியை நகரெங்கும் பரப்பிவிட்டனர். ஆகையால் வணிகர்களின் வரவேற்பைப் பெற, மகாத்மா விக்டோரியா எட்வர்ட் மண்டபத்திற்கு வந்த போது, ஒரு பெருங்கூட்டம் அவரைக் காண்பதற்காக வாயிலில் கூடியிருந்தது. இங்கு மதுரை இராம நாதபுரம் வணிக சபையினரும் மதுரையில் உள்ள பம்பாய் இந்து வணிகர்களும் சேர்ந்து ஒரு வரவேற்பு அளித்தனர். மேற்கண்ட இரு வணிகர் அமைப்புகளைத் தவிரப் பித்தளை வணிகர்களும் ஒரு பண முடிப்பை இக்கூட்டத்தில் அளித்தார்கள். மிகவும் பிரியமாக, ''உடன் பிறந்த பனியாக்களே'' என்று பேச்சை மகாத்மா தொடங்கினர். ஆயினும் அவருடைய பேச்சில் கண்டிப்பும் அதிகமாக இருந்தது. ''தேசிய மொழியையும் சர்க்காவையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நீங்கள் சொல்வது மனப்பூர்வமாக இருக்குமானால், உங்களுக்கு இந்தி பேசத் தெரிந்திருக்க வேண்டும், நீங்கள் கதராடை கட்டியிருக்க வேண்டும் என்று நான் எதிர் பார்ப்பேன்'' என்றார்.

வணிகர்கள் வரவேற்பு

இதன் பின்னர்தான் சேரிகள் வழியாக காந்திஜி, நகராட்சி மன்ற வரவேற்பை ஏற்கச் சென்றதாகும். நகராட்சி வரவேற்பிற்கு மறுமொழி அளிக்கையில் சேரிகளின் நிலைமையைப்பற்றி காந்திஜி குறிப்பிட்டத் தவறவில்லை. (அப்போது நகராட்சி மன்றத் தலைவராக இருந்த வி. எஸ். கே. முத்து ராம ஐயர் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். தாயம்மாள் ஒரு வெள்ளித் தட்டையும் கோப்பையையும் அளித்தார்.) இந்த நகராட்சி மன்றம் கையால் நூற்பதிலும் இந்தியிலும் நம்பிக்கை தெரிவித்ததை காந்திஜி

நகராட்சி

வரவேற்றார். காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவை வைத்தியநாதையர் தமிழில் மொழி பெயர்த்தார். ''இங்கு இந்து முஸ்லிம் பிரச்னை இல்லாதது குறித்து என்னுடைய உண்மையான பாராட்டுதல்களைக் கூறிக்கொள்கிறேன். உங்களுடைய முன் மாதிரி இந்தியா முழுவதிலும் வேகமாகப் பரவி இந்தியாவிலேயே இந்து முஸ்லிம் வேறுபாடுகள் இல்லாமல் அகன்றுவிட வேண்டுமென விரும்புகிறேன்!'' என்று காந்திஜி சொன்னபோது எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சிதான். ஆனால், சேரிகளின் நிலையைப்பற்றி அவர் சொன்னவை அவ்வளவு இனிப்பாக இல்லை. தாம் அன்று காலை மூன்று சேரிகளிலும் பார்த்த வருந்தத்தக்க நிலையை எடுத்தியம்பி ''இந்த நகராட்சியின் மிகவும் பயனுள்ள ஊழியர்களுக்கு அது ஒன்றும் செய்யவில்லை. இதைக் கூறுவதற்காக என்னை மன்னியுங்கள்'' என்றார்.

மாணவர் வரவேற்பு

சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் காந்திஜிக்கு மாணவர்கள் சிறப்புமிக்க வரவேற்பு ஒன்றை அளித்தனர். (இதில் நகர மாணவர்கள் எல்லோரும் பொதுவாக ஒரு வரவேற்புரையும் சேதுபதி உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மட்டும் தனியாக ஒரு வரவேற்புரையும் படித்துக்கொடுத்தார்கள்.) இந்தக் கூட்டத்தில், ''பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியை விடச் சிறந்த கல்வி ஒன்றிருக்கிறது'' என்று காந்திஜி கூறி அதை விளக்கினார். ''நீங்கள் முடிந்த அளவு அதிகமாகச் சேரிகளுக்குச் செல்ல வேண்டும். குறைந்தது வாரத்திற்கு ஒரு முறை ஞாயிற்றுக்கிழமையன்றுவது சேரிகளுக்குச் செல்லுங்கள். அரிஜனங்களுடைய ஆடைகள் அழுக்காக இருந்தால் நீங்கள் சோப்புடனும் வாளியுடனும் சென்று அவர்களுடைய ஆடைகளைத் துவைத்துத் தரவேண்டும். இந்தக் கல்வி இருக்கிறதே, இது பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியைவிட உயர்ந்தது'' என்று அவர் சொன்னார்.

குங்குமம் இட்டார்

இங்குத் தம்மிடம் அளிக்கப்பட்ட பொருள்களை காந்திஜி ஏலமிடத் தொடங்கியபோது, ஒரு மாணவி (ஜார்ஜ் ஜோசப் குமாரத்தி) அவரிடம் வந்து கையெழுத்துக் கேட்டாள். ''இந்தப் பெண் என்னுடைய கையெழுத்தைப் பெறுவதற்காக ஒரு வளையலையே தருகிறாள். இவ்வாறு பெண்களிடமிருந்து வளையல்களையும், பையன்கள், பெண்கள்

ஆகிய இருசாராரிடமிருந்தும் மோதிரங்களையும் வேண்டு கிறேன்'' என்று காந்திஜி அறிவித்தார். பல மாணவிகளும் மாணவர்களும் மேடைமீது ஏறி, தங்களுடைய அன்பளிப்பு களைக் கொடுத்தனர். ஒரு மாணவர் ஒரு வட்டமான வெள்ளி டப்பாவைக் கொடுத்தார். அதைத் திறந்து பார்த்த போது அதில் குங்குமம் இருந்தது. மேடையில் அமர்ந்திருந்த அரிஜனக் குழந்தைகள் அனைவருக்கும் காந்திஜி குங்குமமிடத் தொடங்கிவிட்டார். அரிஜனக் குழந்தைகள் எல்லாம் வரிசையாக வந்து குங்குமம் வைத்துக் கொண்டு போனார்கள்.

ஊழியர்கள் சந்திப்பு

அரிஜன சேவையில் ஈடுபட்டிருந்த காங்கிரஸ் ஊழியர் கள், அண்ணலைப் பிற்பகலில் அவர் தங்கியிருந்த இடத்தில் சந்தித்து அவருடைய அருமருந்தன்ன ஆலோ சனைகளைப் பெற்றுக்கொண்டனர். டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜன், ஜி. இராமச்சந்திரன் போன்ற பெயர் பெற்ற தலைவர்களும் ஊழியர் களும் ஆலய நுழைவுப் பணியில் இருந்த சில சிக்கல்களைக் கேட்டபோது அண்ணல் அவர்களுக்குத் தகுந்த ஆலோசனை கூறினர். இந்தக் கூட்டத்தில் ஊழியர்கள் காந்திஜிக்கு அறிமுகம் செய்யப் பெற்றார்கள். இவ்வாறு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றவர்களில் பிற்காலத்தில் தமிழக அமைச்சரான பி. கக்கன் ஒருவராவார். அவர் அப்போது மாணவராக இருந்தார். ஏ. வைத்தியநாத ஐயரும் டாக்டர் பி. என். இராமசுப்பிரமணியமும் ஒரு முக்கிய காரியமாக காந்திஜியுடன் அந்தரங்கமாய்ப் பேசினர்கள். காந்திஜி எழுதிய கடிதத்தின் பேரில் மதுரையில் பெயர் பெற்ற சௌராஷ்டிர கவியும் தேசிய வாதியுமான டி. ஆர். பத்மநாப ஐயரும் அவரைச் சந்தித்தார்.

பெண்கள் கூட்டம்

பெண்கள் கூட்டம் என்றால் அதற்கு என்று தனி முத்திரை இருக்கும். மேலமாசி வீதியில் சந்திரா டாக்கீஸ் இருக்கும் இடத்தில் அப்போது இருந்த சின்னத் தகரக் கொட்டகை நாடக அரங்கில் தான் பெண்கள் கூட்டம் நடைபெற்றது. சுமார் மூவாயிரம் பேர் கொள்ளக்கூடிய இக்கொட்ட கையில் ஐயாயிரத்துக்கும் அதிகமான பெண்களும் குழந்தை களும் கூடி விட்டனர். ஆகவே சத்தத்திற்குக் கேட்கவா வேண்டும்? காந்திஜி மேடைக்குச் செல்வதே பெரும்

பாடாகப் போய்விட்டது. குழந்தைகளும் பெண்களும் போட்ட சத்தத்தில் காந்திஜியின் மெல்லிய குரல் அமுங்கிப் போய்விட்டதால் அவர் என்ன சொன்னார் என்பதே யாருக்குங் கேட்கவில்லை. நல்ல வேளையாக இந்தச் சொற் பொழிவைக் கணீரென்ற வெண்கலக் குரல் உள்ள ஏ. வைத்தியநாத ஐயர் தமிழில் மொழி பெயர்த்தார். ஆனால் அவருடைய உரத்த குரலைக்கூட அன்று யாரும் ''சட்டை செய்''ததாகத் தெரியவில்லை. எப்படியோ எல்லாவிதமான வரவேற்புச் சடங்குகளும் நிறைவேறின; (பாரத சேவிகா சமிதி, சகோதரிகள் சங்கம், ஸ்ரீமதிகள் சங்கம் ஆகியவற்றின் சார்பாக மகாத்மாவிற்கு வரவேற் புரைகள் படித்துக் கொடுக்கப்பெற்றன.) ''என்மீது தனிப் பட்ட முறையில் வைத்துள்ள அபிமானத்திற்காக இவ்வளவு பெரிய கூட்டமாக நீங்கள் வந்திருந்தால், நான் மகிழ்ச்சி அடையமாட்டேன். நான் என்ன குறிக்கோளுக்காக இங்கே வந்திருக்கிறேனே அதை நீங்கள் ஆதரிப்பதாய் இருந்தால்தான் மகிழ்ச்சி அடைவேன். தீண்டாமையை அகற்றுவதன் மூலம் என்மீது உங்களுக்குள்ள அபிமானத்தை நீங்கள் மெய்ப்பிக்க வேண்டும்,'' என்று கண்டிப்பாகக் கூறினார் அண்ணல்.

மீரா வசூல்

இந்தக் கூட்டத்திலிருந்து தாம் உடனே செல்ல வேண்டி யிருப்பதால் அரிஜன நிதிக்கு நகைகளோ பணமோ அளிக்க வேண்டுமென்று விரும்புவோர் திருமதி மீரா பென்னிடம் அளிக்கலாம் என்று கூறி காந்திஜி சென்று விட்டார். இவ்வாறு பெண்கள் கூட்டத்தில் வசூல் செய்வதற்காக மீரா பென்னை விட்டு விட்டு காந்திஜி வருவதும் பின்னல் அந்த அம்மையார் கிட்டத்தட்ட வெறுங்கையுடன் திரும்புவதும் சாதாரண நிகழ்ச்சிகள். ஆனாலும் அன்று என்னவோ அவரிடம் ஏராளமான நகைகள் வசூலாகின. திருமதி சி. எம். வி. கிருஷ்ணமாச்சாரி ஒரு தங்க 'நெக்லஸ்' அளித் தார். விலை உயர்ந்த இந்த நெக்லஸ்ஸில் தங்கம் மட்டும் சுமார் இருபது பவுனுக்கு மேலிருக்கும்.

காந்திஜியின் மனதிற்கு மிகவும் பிடித்தமான இந்திப் பிரச்சார சபையின் வரவேற்பு விக்டோரியா எட்வர்டு ஹால் மண்டபத்தில் நடைபெற்றது. தகுதி படைத்த மாணவர்களுக்கான பரிசுகளையும் நற்சான்றிதழ்களையும்

காந்திஜி வழங்கினார். இந்தியில் எழுதப் பெற்றிருந்த வரவேற்புரையை இராஜாத்தி என்ற மாணவி படித்தார்.

இந்தி சபை

பரிசு பெற்ற ஓர் இளம் பெண்ணை, அந்தப் பெண் பரிசு வாங்கிய புத்தகத்தைப் பிரித்து ''எங்கே, இந்தப் புத்தகத்தில் உள்ள இந்தியைப் படி, பார்ப்போம்'' என்று காந்திஜி கேட்ட போது அந்தப் பெண் தெரியாது விழித்தாள். அதைக் கண்டு அவர் மட்டுமல்லாது கூட்டத்தில் இருந்த அனைவருமே சிரித்து விட்டனர்.

பொதுக் கூட்டம்

அன்று மதுரை மணல் மேட்டில் நடைபெற்ற பொதுக் கூட்டம் உண்மையிலேயே மாபெரும் கூட்டம் தான். சொற்பொழிவு மேடையானது மிகவும் உயர மாக, எல்லோரும் காந்திஜியை எளிதில் காணும் முறையில் அமைக்கப் பெற்றிருந்தது. மொத்தம் சுமார் ஐம்பதாயிரம் பேர் கூடி யிருந்திருப்பார்கள் என்று மதிப்பிடப் பெறுவதில், மூன்றில் ஒரு பாகத்தினர் பெண்கள் என்று சொல்லலாம். இத்தனை பெரிய கூட்டமும் இறுதிவரை அமைதியாக இருந்தது இன்னுங் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு மொழி பெயர்க்கும் பொறுப்பையும் டாக்டர் ராஜன் வைத்தியநாத ஐயருக்கு விட்டுக் கொடுத்து விட்டார்! ஆகவே, அன்று சொற் பொழிவு கேட்கவில்லை என்ற புகார் மைதானத்தின் ஓரங் களில் இருந்தவர்களிடமிருந்து கூட வரவில்லை! இந்தக் கூட்டம் வெகு வேகமாக நடைபெற்று முடிந்துவிட்டது; மாலை சுமார் ஐந்தே முக்கால் மணிக்குத் தொடங்கியது ஏழு மணிக்கெல்லாம் முடிவடைந்து விட்டது. (மதுரை மக்களின் சார்பாகவும் ஸ்ரீமீனுட்சி ஆலைத் தொழிலாளர்கள், லஜபதி நிலையம், பாபுகானு வாசகசாலை, வைசியவாலிப சங்கம், இராமநாதபுரம் சாலை வாலிபர் சங்கம், பாரதசேவிகா சமிதி, சொக்கம்பட்டி அரிஜனங்கள் ஆகிய பல்வேறு தரப்பினர் சார்பாகவும் தனித்தனியாக வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப்பெற்றன. திருமதி என். எம். ஆர். சுப்பராமன் நான்கு தங்க வளையல்களும் ஒரு தங்கச் சங்கிலி யும் அளித்தார். ஜோதி கிருஷ்ணு நிறுவனத்தார் அனைத்து இந்தியப் பயணச் சீட்டு ஒன்றை நன்கொடையாக அளித் தார்கள்.)

மக்கள் எல்லோரும் வசதியாகப் பார்க்க வேண்டும் என்பதற்காக காந்திஜி முழுநேரமும் நின்று கொண்டே பேசினார். மதுரை மாநகர் அரிஜனங்களுக்கு உரிய தனிப்பட்ட சிக்கல் ஒன்றைக் குறிப்பிட்

காந்திஜி சொற்பொழிவு

டார். இராட்டையிலோ தக்ளியிலோ நூல் நூற்று மதுரையில் உள்ள அரிஜனங்கள் நாள் தோறும் இரண்டொரு செப்புக் காசுகள் சம்பாதிக்கிறார்கள். ஆனால், இது பொறுக்காது, மோட்டா வகை மில் நூலை வாங்கி நெய்து சிலர் கதர் என்று விற்று வருகிறார்களாம். இவ்வாறு செய்வதன் மூலம் அரிஜனங்களுக்குக் கிடைக்கும் அந்த இரண்டொரு செப்புக் காசுகளிலும் இவர்கள் மண்ணை வாரிப் போட்டு விடுகின்றனர். ஆலை நூலைப் பயன்படுத்தி இவர்கள் நெய்வதில் எனக்கு மறுப்பு எதுவும் இல்லை. ஆனால் அதைக் கதர் என்று கூறக்கூடாது என்று தான் சொல் கிறேன். தாங்கள் வாங்கும் துணி உண்மையான கதர்த் துணியா என்பதைப் பார்த்து வாங்குமாறு பொது மக்களை யும் கேட்டுக் கொள்கிறேன்.''

அமைதியையும் ஒழுங்கையும் பாதுகாத்ததில், ''ஏ-1'' என்று காந்திஜியால் பாராட்டப் பெற்ற பொதுக் கூட்டம், பொன்னகரம் நகராட்சி விளையாட்டு மைதா

தொழிலாளர் கூட்டம்

னத்தில் நடைபெற்ற தொழிலாளர் பொதுக் கூட்டம் தான். இக்கூட்டத்திற்கு வந்திருந்த ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் கள் அனைவரும் மகாத்மாவைக் கண் குளிரப் பார்க்கும் முறையில் ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருந்தன. கூட்டம் தொடங்கி முடிவடையும் வரை முழு அமைதி நிலவியிருந் தது. மதுரை லேபர் யூனியன் செயலாளரான எஸ். ஆர். வரதராஜுலு நாயுடு தொழிலாளர்களின் சார்பாக மகாத் மாவுக்கு வரவேற்புரையை வாசித்தளித்தார். (எரவாடா சிறையில் தீண்டாமை ஒழிப்பிற்காக காந்திஜி உண்ணா நோன்பு மேற்கொண்டபோது முதன் முதலாகத் தங்கள் அனுதாபத்தைத் தந்தி மூலம் தெரிவித்துக் கொண்டவர் கள் மதுரை ஆலைத் தொழிலாளர்கள் தாம் என்று தெரி கிறது.) தென்னைப்பிரிக்காவில் தமக்கும் பாலசுந்தரத்திற் கும் ஏற்பட்ட புனிதமான தொடர்பை இக்கூட்டத்தில் மகாத்மா நினைவு படுத்கினர். ''அதற்குப் பின்பு தொழி லாளர்களுக்கு ஒரு சக தொழிலாளியாகவே நான் வாழ்ந்து வந்திருக்கிறேன். தொழிலாளர்களின் இன்னல்களும் அவதி

களும் எனக்குத் தெரியும். ஆனால் அதே சமயம் தொழிலாளர்களும் தாங்கள் எங்கு வேலை செய்கிறார்களோ அந்த நிறுவனங்கள் தங்களுக்கும் சொந்தம் தான் என்ற உணர்வுடன் பணியாற்ற வேண்டும்'' என்று அவர் அறிவுரை கூறினார். இரவு நேரமாக இருந்ததால் எல்லாத் தொழிலாளர்களையும் தாம் நெருங்கிப் பார்க்க விரும்புவதாகக்கூறி, சொற்பொழிவு முடிந்தவுடன், கூட்டத்தின் மத்தியில் காந்திஜி சுற்றி நடந்து வந்தார்.

இவ்வாறு இத்தனை கூட்டங்களையும் முடித்துக் கொண்டு இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தபோதுகூட அவருக்கு ஓய்வு இல்லை. அங்குக் கூடியிருந்த தொண்டர்களுக்குச் சில பொன்னான அறிவுரைகளைப் பகர்ந்தார். ''நீங்கள் ஒவ்வொருவரிடமும் உண்மையாகவும் அன்பாகவும் பிரியமாகவும் நடந்து கொள்ள வேண்டும். மற்றவர்களுக்கு நீங்கள் சேவை செய்யும்போது உங்களை எசமானர்களாகக் கருதக் கூடாது. நானும் பொது மக்களுக்குச் சேவைதான் செய்து கொண்டிருக்கிறேன். பொது மக்களுக்குச் சேவை செய்வ தென்பது எளிதான காரியமல்ல. அதிகச் சாதுரியமும் கவனமும் இதற்கு அவசியம். உங்களுடைய சேவை பலன் தர வேண்டுமானால் நீங்கள் தூய வாழ்க்கை நடத்த வேண்டும்,'' என்று அண்ணல் கூறித் தொண்டர்களை ஆசீர்வதித்தார்.

ஊழியர் கூட்டம்

மதுரையில் ஒரு நாடார் அம்மையார் சுமார் ஐநூறு ரூபாய் பெறுமான தங்க ''நெக்லஸ்'' ஒன்றை காந்திஜியிடம் அளித்தது குறிப்பிடத் தக்கதாகும். மதுரையில் காந்திஜியின் வருகை சம்பந்தமாக உதவிப் போலீஸ் சூபரின்டெண்ட் ராவ்பகதூர் எம். அனந்தாச்சாரியார் தலைமையில் போலீசார் செய்த போக்குவரத்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகவும் பாராட்டப்பெற்றன. இங்குத் தங்கியிருந்தபோது காந்திஜி என். எம். ஆர். சுப்பராமனுக்கு நீண்ட பேட்டி அளித்தார். இருவரும் சுமார் இரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். ''என்னுடைய வாழ்க்கை எவ்வாறு அமைய வேண்டுமென்பதை காந்திஜி எனக்கு விளக்கிக் கூறினார். கீதையிலிருந்து பல சுலோகங்களை மேற்கோளாக எடுத்துக்காட்டி எனக்கு அறிவுரை சொன்னார். நான்

பேட்டி

அப்போது கையில் திருக்குறள் புத்தகம் வைத்திருந்தேன். அதை அவரிடம் ஆசிர்வதித்துத் தருமாறு கொடுத்தேன். அதை அவர் வாங்கி ஆங்கிலத்தில் May god give you light (ஆண்டவன் உனக்கு வழிகாட்டுவானாக) என்று எழுதிக் கொடுத்தார்,'' என்று சுப்பராமன் கூறுகிறார். நகராட்சி மன்றத் தலைவரான வி. எஸ். கே. முத்துராமையர் காந்திஜியைப் பேட்டி கண்டு, பல கதிர் இராட்டைகள் வைத்து நூற்பதன் மூலம் நூற்பை ஒரு இலாபகரமான தொழிலாக்கலாம் என்று ஒரு யோசனை கூறினார். ஆனால் காந்திஜி இந்த யோசனையை ஏற்கவில்லை. ''இவ்வாறு செய்வது சிறு மில்களை அமைப்பது போன்றதே. ஒவ்வொரு வீட்டிலும் சர்க்கா சுழன்று அந்த வீட்டில் உள்ளவர்களுக்கு வருமானம் அளிக்க வேண்டும் என்பதே எனது நோக்கம். உங்களுடைய யோசனையை ஏற்பதானால் 5 சதவீத மக்களிடம் வருமானம் குவிந்துவிடும்; 95 சதவீதம் பேர் பட்டினி கிடந்து போவார்கள்'' என்று அண்ணல் கூறினார். வி. எஸ். கே. முத்துராம ஐயர் மேலும், ''எந்திரங்கள் மிகவும் வளர்ச்சியடைந்துள்ள காலம் இது. ஆகவே அவைகளின் போட்டி முன் கதர் இருக்க வேண்டுமென்று நீங்கள் விரும்பினால் அதற்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. மில் நூலுடன் ஊடுபாவாகக் கதரைப் போட்டுக் கொள்ளலாம்'' என்று கூறினார். இதையும் காந்திஜி ஏற்கவில்லை. கதர் முற்றிலும் சாத்தியம் தான் என்று அவர் கூறிவிட்டார். மதுரை மாவட்டத்திற்கு காந்திஜி வந்ததை முன்னிட்டு மதிச்சியம் மாம்தா கோனார் தம் கோவிலை அரிஜனங்களுக்குத் திறந்து விட்டார். மதுரைக்குப் 15 மைல் தூரத்தில் உள்ள மாவுட மருதூரில் (அம்பட்டயன்பட்டி என்றும் இதைச் சொல்வார்கள்) உள்ள கோவிலை அவ்வூர் மக்கள் அரிஜனங்களுக்குத் திறந்துவிட்டார்கள்.

27–1–34

அமராவதி புதூர்

மதியம் வரை காந்திஜி மதுரையில் ஓய்வு எடுத்துக் கொண்டார். மதிய உணவை முடித்துக்கொண்டு அவர் மதுரையிலிருந்து செட்டி நாட்டிற்குப் புறப்பட்டபோது மணி இரண்டரை. முதல் நாளே சென்றிருக்க வேண்டிய பயணம் இது. வழியில் தெற்குத் தெருவிலும் மேலூரிலும் அவருக்கு வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப்பெற்றன.

மாலை சுமார் ஐந்து மணிக்கு அமராவதி புதூர் சேர்ந்த போது அங்கு ராய. சொக்கலிங்கம் காந்திஜிக்கும் அவருடன் வந்தவர்களுக்கும் இராச்சாப்பாடு விருந்து அளித்தார். காந்திஜி விருந்துணவை உட்கொண்டபோது, ஒரு சுவை யான நிகழ்ச்சி நடைபெற்றது. டாக்டர் ராஜன் கூறு கிறார்: ''மகாத்மா ஆகாரத்திற்கு உட்கார்ந்ததும், அவரைக்காண வேண்டுமென்று மன்றாடிக்கொண்டு கை ரேகை பார்க்கும் நிபுணர் ஒருவர் தம் நற்சாட்சிப் பத்திரங் களை மூட்டை கட்டிக்கொண்டு தலைவாசலில் நின்றார். 'நான் ரேகை சாஸ்திர நிபுணன். அநேகமாயிரம் கை ரேகைகளைப் பார்த்துப் பயிற்சி பெற்றவன். காந்திஜியின் கை ரேகையைப் பார்க்க வேண்டும்' என்றார். அவரை அவ்விடமே இருக்கச் செய்து உள்ளே சென்று மகாத்மா விடம் சங்கதியைச் சொன்னேன். 'ரூபாய் ஆயிரம் கொடுத்தால் என் கைரேகையைப் பார்க்கலாம்' என்று சொல்லும்படி உத்தரவளித்தார். ரேகை சாஸ்திரியிடம் காந்திஜியின் அபிப்பிராயத்தைத் தெரிவித்தவுடன், 'ஐயா, நானே பிச்சைச்காரன். என்னிடத்தில் ஒரு பைசாக்கூட இல்லை. ஆனலும் மகாத்மாவின் கைரேகைகளைப் பார்த்தே தீரவேண்டும் என்கிற பைத்தியம் எனக்குத் தலைக்கேறி விட்டது. நான் இந்த இடத்தைவிட்டுப் போக மாட்டே னென்று மகாத்மாவிடம் சொல்லுங்கள்,' என்று சொல்லி அங்கேயே உட்கார்ந்து விட்டார். திரும்பவும் உள்ளே சென்றேன். சமாச்சாரத்தைச் சொன்னேன். ''ஆயிரம் ரூபாய் கொடுத்தே தீரவேண்டுமென்கிற பைத்தியம் என் தலைக்கேறி விட்டதென்று சொல்லிவிடு!' என்று பதிலளித்து விட்டார். இப்பதிலைக் கேட்ட சாஸ்திரி, காந்திஜியின் பைத்தியத்திற்கு முன் தமது பைத்தியம் பெயர் சொல்லாது என்பதைக் கண்டு மூட்டையைக் கட்டிக்கொண்டு வெளிக் கிளம்பினர்.''

''தமிழ்க் கடல்'' ராய. சொக்கலிங்கம் காந்தியடி களின் வாழ்க்கையானது எவ்வாறு குறளுக்கு ஒப்ப அமைந் திருக்கிறது என்பதை 125 குறள்களை வைத்துப் பாடியிருக்கிறார். இவர் பாடிய காந்தி பிள்ளைத் தமிழ் ''காந்தி பிள்ளைத் தமிழ்'' என்ற பாடலை அச்சிட்டு பெல்காம் காங்கிரசில் காந்திஜி தலைமை வகித்தபோது நேரில் கொண்டுபோய் ராஜாஜி மூலம் காந்திஜி கையில் கொடுத்தார். காந்திஜிக்குத் தமது

இல்லத்தில் விருந்தளிக்கும்பேறு கிடைத்தது ராய. சொக்க லிங்கத்திற்குச் சொல்லொணு மகிழ்ச்சியாகும்.

ஏந்தல் இருந்தவப் புத்திரிபாயின் எழில் வயிறும்
தோய்ந்த துணைவி என் கஸ்தூரி அன்னைநல் தோளிணையும்
வாய்ந்த சபர்மதி நீரும் ஏர்வாடா மணிச் சிறையும்
பாய்ந்த எனதுளமும் குளிர்வித்த பனி வடிவே

என்று அது கவிதாஞ்சலியாக வெளிவந்திருக்கிறது!

காரைக்குடி

இவ்வாறு அமராவதி புதூரில் விருந்துண்டு மாலை சுமார் ஆறு மணிக்கு காந்திஜி காரைக்குடிக்கு வந்து அங்கு நகராட்சியின் வரவேற்பைப் பெற்றுக் கொண்டார். (நகராட்சியின் சார்பாக வரவேற்புரையையும் பண முடிப்பையும் அண்ணலிடம் அளித்தவர் திவான் பகதூர் சிதம்பரம் செட்டியார் ஆவார். நகராட்சியைச் சேர்ந்த அரிஜன சிப்பந்திகளும் அண்ணலிடம் தங்களுடைய சிறு பண முடிப்பை அளித்தார்கள்.) இந்தக் கூட்டத்தில், அரிஜன இயக்கத்திற்காகப் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கிய கனவானுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார் காந்திஜி. (இவர் தமது பெயரை வெளியில் கூற விரும்பவில்லை. ஆனால் ''இன்ப நிலையம்'' வை. சு. சண்முகம் செட்டியார் தாம் இவ்வாறு ரூ. 10,000 அளித்தவர் என்று விசாரித்ததில் தெரிகிறது.)

பொதுக் கூட்டம்

இதன் பின்னர் மகர் நோன்புப் பொட்டலில் சுமார் பதினைந்தாயிரம் மக்கள் கூடியிருந்த பொதுக்கூட்டத்திற்கு காந்திஜி வந்து காரைக்குடி மக்களின் வரவேற்பையும் பண முடிப்பையும் பெற்றுக் கொண்டார். தூத்துக்குடிக்கு அடுத்தபடியாக இந்த ஊரிலும் மின்சார விளக்குகள் ஏராளமாக இருந்தன. (காரைக்குடிப் பொது நலச் சங்கத்தார் சார்பாக அரு. அள. ராம சொக்கலிங்கம் செட்டியார் ஒரு வரவேற்புப் பத்திரத்தைப் படித்து வெள்ளிப் பேழையில் வைத்துக் கொடுத்தார். காரைக்குடி தாகூர் வாசகசாலையின் சார்பாகப் பண முடிப்பும் வரவேற்புரையும் அளித்தார் டாக்டர் கோவிந்தராஜுலு. இங்கு காந்திஜிக்கு அளிக்கப்

பெற்ற வெள்ளிச் சர்க்காவை இப்பகுதியின் பெயர் பெற்ற அரிஜன ஊழியரும் தேச பக்தரும் ஆன தேவகோட்டை வழக்கறிஞர் முகுந்தராஜ ஐயங்கார் ஏலத்தில் எடுத்தார்.)

''செட்டி நாட்டில் உள்ள உங்களுக்கு ஆண்டவன் நல்ல செல்வ வளத்தைக் கொடுத்திருக்கிறான். அரிஜனங்களுக்கு இன்றுள்ள தாழ்வான நிலையைப் புரிந்து கொள்ளும் அளவிற்கு உங்களுக்கு அறிவையும் கொடுத்திருக்கிறான். ஆகையால் அவர்களுடைய நிலையை உயர்த்துவதற்காக உங்களுடைய செல்வத்தையும் அறிவையும் பயன்படுத்துமாறு வேண்டுகிறேன்'' என்று அண்ணல் வேண்டிக் கொண்டார். (இங்கு தாகூர் வாசகசாலை, யுவபாரத் சங்கம் ஆகியவைகளும் வரவேற்பளித்தன. காந்திஜிக்கு அளிக்கப் பெற்ற பொருள்களை ஏலம்விட்ட போது மிகவும் விறு விறுப்பாக அவை விலைப் போயின.)

தேவகோட்டை.

காரைக் குடியிலிருந்து தேவகோட்டைக்கு வந்து அங்கு அளிக்கப் பெற்ற வரவேற்புரையையும் பண முடிப்பையும் அண்ணல் பெற்றுக் கொண்டார். தேவகோட்டைப் பொதுக் கூட்டத்தில் வழங்கப் பெற்றவைகளுள் ஒரு அற்புதமான மாதுளம் பழத்தைப் போன்ற சிறு வெள்ளிப் பேழை - நடராஜ ஆசாரி அளித்தது - குறிப்பிடத் தக்கதாகும். ''உங்களுடைய பழைய நண்பனுகிய நான் இதைக் காட்டிலும் பெரிய தொகையை (தேவகோட்டையில் காந்தி வரவேற்புக் குழுத் தலைவரான நாராயணன் செட்டியார் அவரிடம் 2,600 ரூபாய் கொண்ட பண முடிப்பை வழங்கியிருந்தார்) எதிர்பார்த்திருந்தேன். ஆனாலும் இன்றிரவு இங்கேயே நான் தங்கப் போவதால், இந்தக் குறையை நீங்கள் நிறைவு செய்து விடுவீர்கள் என்று நம்புகிறேன். இது உங்கள் கடமையுமாகும்,'' என்று காந்திஜி விநயமாகக் கேட்டுக் கொண்டார். தேவகோட்டை முனியய்யா கோவில் பொட்டலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் ஒரு பெண்ணுக்கு சாவித்திரி என்று பெயர் சூட்டி அப்பெண்ணின் போட்டாவில் சாவித்திரி என்று தமிழில் எழுதி, தமது கையொப்பத்தையும் போட்டுக் கொடுத்தார். அந்தக் குழந்தையின் தாயார் சிவகாமி மேடை மீது ஏறி வந்து, தன் குழந்தைக்குப் பெயர் வைத்த காந்திஜிக்கு ஒரு வெள்ளித் தட்டையும் ஒரு பவுனையும் அளித்து மரியாதை தெரிவித்துக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் ஒரு கைக்குட்டையை ஏலம்போட்ட போது ஏலம் போடுவதில் தமக்குள்ள திறமையை யெல்லாங் காண்பித்து விட்டார் காந்திஜி. ''இதோ இந்தத் துணி மிக மெல்லிய நூலால் நெய்யப் பெற்றது'', என்று கூறிக் கொண்டே அந்தத் துணியைத் தமது பட்டுப் போன்ற கைகளால் தடவிப் பார்த்துக் கொண்டார். ''எனது நண்பர் சொக்க லிங்கம் நூற்பதில் மிகவும் திறமைசாலி. (1927-இல் வந்தி ருந்த போது, அவர் நூற்ற நூலைப் பார்த்து காந்திஜியே வியப்படைந்து அவரை ''இராட்டைப் புலவர்'' எனப் பாராட்டியுள்ளார்.) போன தடவை நான் இங்கு வந்த போது ஒரு நீளமான கதர்த் துணியை அளித்தார்; அது ஆயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் போயிற்று. இப்போது அவர் ஒரு கைக் குட்டையை அளித்திருக்கிறார். இதன் நேர்த்தியை நீங்களே பார்க்கலாம். ஆகையால் கேளுங்கள்; உயர்ந்த தொகைக்குக் கேளுங்கள்,'' என்று கூறிக் கொண்டே காந்திஜி அத்துணியை ஏலத்தில் விட்டார். கடைசியில் அவர் தோல்வியடைந்து விடவில்லை; கைக்குட்டை 25 ரூபாய்க்கு ஏலத்தில் போயிற்று!

கைக்குட்டை ஏலம்

28-1-34

தேவகோட்டை கூட்டத்தை முடித்துக் கொண்டு அன்று இரவு காந்திஜி குழுவினர் ரெங்கசாமி ஐயங்கார் இல்லத்தில் தங்கினார்கள். மறுநாள் காலை முதன் முதலாக இராம்நகரில் ஒரு அரிசனப் பள்ளிக்கு காந்திஜி அடிக்கல் நாட்டுவித்தார். நாட்டார்களுக்கும் அரிஜனங்களுக்கும் தகராறு இருந்த ஊர்களில் முக்கியமானதான சித்தனூர் சேரிக்கு அவர் சென்றபோது அந்தச் சேரியிலும் அவர் நிதி வசூல் செய்யாமல் விடவில்லை. அங்கு ஏழேகாலணு வசூலாயிற்று!

இராம் நகர்

ரெங்கசாமி ஐயங்கார் ஒரு வழக்கறிஞர். நல்ல சனுதனி களாக இருந்த சக வழக்கறிஞர்கள் சிலருக்கு அவர் ஒரு கடிதம் எழுதியிருந்தார். ஆலயப் பிரவேசம் குறித்து காந்திஜியுடன் பேச வேண்டுமானால் காலை பத்தரை மணிக்கு மேல் பதினேரு மணிக்குள் சந்திக்கலாம் என்று இந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்திருந்தார். ஆனால் அந்த நேரத்தில் சனுதன நண்பர்கள் யாரும் வரவில்லை. மணி பன்னிரண்டு

சனுதனிகள்

ஆகிவிட்டது. அன்று பன்னிரெண்டரை மணிக்குமேல் நாட்டார்களைச் சந்திப்பது என்றும் பிறகு ஒன்றரை மணிக்கு மேல் செட்டி நாட்டில் உள்ள மற்ற ஊர்களுக்குச் சென்று விட்டு, இரவு ஏழரை மணிக்கு மானமதுரையில் இரயில் ஏறி, குன்னூர் செல்வதென்றும் திட்டமிடப்பட்டிருந்தது. பன்னிரெண்டு மணிக்குமேல் ஒரு சனாதன வழக்கறிஞர் காந்திஜியைச் சந்திக்க வந்து தேவகோட்டை மத்திய இந்து சங்கத்தின் செயலாளரிடமிருந்து தாம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தார். அதோடு காந்திஜியிடம், ''இந்த ஊரில் பூரி சங்கராச்சாரியார் சுவாமிகள் வந்திருக்கிறார். அவர் சாஸ்திர ஆராய்ச்சி உடையவர். தங்கள் சார்பாக நண்பர் ரெங்கசாமி ஐயங்கார் விடுத்த அழைப்புக் கடிதம் நேரங்கழித்து எங்கள் கையில் கிடைத்தது. அந்தச் சமயத்தில் சுவாமிகளும் பூஜையில் அமர்ந்திருந்தார். பூஜை முடிந்த பிறகு நாங்கள் அவரைச் சந்தித்துத் தீண்டாமைக்குச் சாஸ்திர சம்மதம் இருக்கிறதா என்கிற விஷயத்தைப் பற்றி உங்களோடு விவாதிக்க அவருக்கு விருப்பம் உண்டா என்று கேட்டோம். அதற்கு அவரும் இசைந்தார். அரை மணி நேரம் சம்வாதம் ஏற்படுத்திக்கொள்ளத் தாங்கள் அனுமதி கொடுக்க முடியுமா என்று கேட்பதற்காக நான் வந்தேன்'' என்று கூறினர். காந்திஜியோ, ஒரு நிகழ்ச்சி நிரல் வகுத்து விட்டால் அதை அப்படியே நிறைவேற்றுவதில் அக்கறை உள்ளவர். வந்த வழக்கறிஞரிடம் அவர் கூறினர்: ''எனக்கும் அப்படிப் பேசச் சம்மதம்தான். ஆனால் இதோ நாட்டார்களுடன் பேச வேண்டிய நேரம் வந்துவிட்டது. அதன் பிறகு பிரயாணம். ஆகையால் இன்று இந்த இடத்தில் பேச முடியாது. நான் நேராகக் குன்னூர் போகிறேன். அங்கே எட்டு நாட்கள் தங்கியிருப்பேன். தாங்களும் ஆசாரிய சுவாமிகளும் விரும்பினால் முன்னதாகவே ஒரு நாளும் நேரமும் குறிப்பிட்டுக் கொண்டு அங்கே சந்திக்கலாம்.'' இதையே எழுத்துமூலம் தேவகோட்டை மத்திய இந்து சங்கச் செயலாளருக்குத் தெரிவிக்கும்படியும் ரெங்கசாமி ஐயங்காரிடம் கூறிவிட்டுப் பயணத்தை மேற்கொண்டார். ஆனால் இந்தச் சாதாரண விஷயத்தை சனாதனிகள் எளிதில் விடவில்லை. பத்திரிகைகளில் நீண்ட அறிக்கைகள் விட்டு, காந்திஜி சங்கராச்சாரியாரைச் சந்திக்கப் பின் வாங்கிவிட்டது போன்ற ஒரு கருத்தை ஏற்படுத்தினர்.

அன்று காந்திஜி தீர்த்து வைப்பதற்காகச் சென்ற நாட்டார்-அரிஜனச் சிக்கல் அப்பகுதியிலேயே ஒரு மாபெரும் சிக்கலாக இருந்தது. அங்கு நாட்டார்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் கிராமங்கள் நாடு என்று வழங்கப்பெற்றன. நாட்டார்கள் எனப் பெறுவோர் முக்குலத்தோர் வகுப்பில் ஒரு பிரிவினராவர். நாட்டார்கள் நாட்டில் அரிஜனங்களுக்குக் கண்டிப்பான சில வரையறைகள் இருந்தன. அரிஜனங்கள் சில குறிப்பிட்ட ஆடைகள் அணியக் கூடாது என்ற அளவிற்கு அங்குத் தீண்டாமை இருந்தது. அரிஜன ஆண்மக்கள் இடுப்பில் முழத் துண்டுக்கு மேல் கட்டக்கூடாது; மேலே துண்டோ சட்டையோ போடக்கூடாது; குடை பிடிக்கக் கூடாது; செருப்பு அணியக் கூடாது; பெண் மக்கள் ரவிக்கை அணியக் கூடாது. திருவிழாக்களுக்கு அரிஜனங்கள் வரும் போது இவைகளைக் கண்டிப்பாக அனுசரிக்கிறார்களா என்று நாட்டார்கள் பார்ப்பதுண்டு. இதனால் இரண்டு ஆண்டுகளாகவே அரிஜனங்களுக்கும் நாட்டார்களுக்கும் ஆங்காங்கு சிறு மோதல்களும் கருத்து வேறுபாடுகளும் இருந்தன. ஆகவே, நாட்டார்களுடைய நாட்டாண்மைக்காரர்களைச் சந்தித்து, இந்தத் தீண்டாமைப் பழக்க வழக்கங்களையெல்லாம் கைவிட்டு விடுமாறு கேட்டுக் கொள்ளவே அன்று காந்திஜி சென்றார். சித்தனூரில் சமரசப் பேச்சு நடைபெற்றது. தேவகோட்டை வட்டாரத்தில் தீண்டாமை ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வழக்கறிஞரான முகுந்த ராஜ ஐயங்கார் என்பவரும் அரிஜன் ரெங்கண்ணு என்று அபிமானத்துடன் அழைக்கப்பெற்றவரான ரெ. அரங்க சாமி ஐயங்காரும் தான் இந்தச் சமரசத்திற்கு ஏற்பாடு செய்தவர்களில் முக்கியமானவர்களாவர். இந்தப் பேச்சிற்குச் சுமார் நூற்றிலிருந்து நூற்றி ஐம்பது நாட்டார் பிரதிநிதிகள் வந்திருந்தனர். காந்திஜி பந்தலுக்குள் நுழைந்தவுடன், எல்லோரும் எழுந்து நின்றனர். அவர் கீழே சம்மணங் கூட்டி அமர்ந்தவுடன் எல்லோரும் அவ்வாறே அமர்ந்தனர். நாட்டார் பிரதிநிதிகள் ஏதாவது கேள்விகள் கேட்பதாக இருந்தால், அவைகளுக்கு காந்திஜி பதில் அளிக்கத் தயாராய் இருப்பதாக நாட்டார் பிரதிநிதிகளிடம் மொழி பெயர்ப்பாளர் கூறினர். நாட்டாண்மைக்காரர்களின் சார்பாகப் பேசியவரோ, ''முதலில் காந்திஜி தம் கருத்து என்னவென்பதைச் சொல்லட்டும், அதைக் கேட்ட பின் எங்கள் ஐயப்பாடுகளைக் கேட்கிறோம்''

சமரசப் பேச்சு

என்று சொல்லிவிட்டார். அவர் மிகவும் வயதானவர்; மகாத்மாவுக்கு எதிரில் ஒரு தடிக்கம்பை ஊன்றி அதன் ஆதரவில் நின்று கொண்டு, அவர் இவ்வாறு கூறினார். காந்திஜியும் தமது உருக்கமான பேச்சைத் தொடங்கினார். 'தமிழ்நாட்டில் (அதுவரை) செய்த சொற்பொழிவுகளிலேயே அன்று தேவகோட்டை வட்டம் நாட்டார்களுக்குச் செய்த அறிவுரைதான் முதன்மையானது என்று காந்திஜியுடன் சென்ற குழுவினர் கருதினர்கள். சொல்வன்மை மட்டு மல்ல; ஆத்ம உணர்ச்சி, ஜீவகாருண்யம், தயை, தர்ம நியாயம் இவைகளையெல்லாம் ஒருங்கே திரட்டி, சிறு குழந்தைகளுக்குக் கூடப் புலப்படும்படியான முறையில் அன்று முக்கால் மணிநேரம் அரிஜனங்களின் சார்பாக காந்திஜி பேசினார். ஆனால் இவ்வளவு உருக்கமாகப் பேசியும் நாட்டார்களின் மனம் கரையவில்லை. வழக்கத்தை விட முடியாது என்பதில் அவர்கள் கண்டிப்பாக இருந்தார்கள். சமரசப் பேச்சு வெற்றிபெறவில்லை.

இந்தக் கூட்டம் முடிவதற்கு முன் தாம் சொல்ல விரும்பியதை மறுபடியும் காந்திஜி சுருக்கிச் சொன்னார்: ''அரிஜனங்களைக் காட்டிலும் நீங்கள் உயர்ந்தவர்கள் என்றும் அவர்கள் எந்தத் துணிமணிகளை அணியலாம் அல்லது அணியக்கூடாது என்பதை நீங்கள் நிர்ணயித்துக் கூறமுடியுமென்றும் நீங்கள் எண்ணினால் அது தவறாகும். இதனால் கோபதாபங்கள்தான் வளரும். பழக்க வழக்கங்கள் என்று கூறி, அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதைச் செய்வதை நீங்கள் தடுக்க முடியாது. நல்ல காரியங்களைச் செய்ய வாய்ப்புக் கிடைக்கும்போது நாம் அவற்றைச் செய்வோமாக!'' இந்தக் கூட்டத்தில்கூட பீகார் பூகம்ப நிவாரண நிதிக்கு நன்கொடை திரட்டுவதை காந்திஜி விடவில்லை. அங்கே வந்திருந்தவர்கள் சில நாணயங்களை அளித்தார்கள். நாட்டார் வகுப்பினரிடமிருந்து பணம் வசூல் செய்து அனுப்புவதாக நாட்டார் பிரதிநிதி கூறினார்.

மீண்டும் விளக்கம்

•

காந்திஜி நேரடியாகப் பேசுவதற்கு முன்பே நாட்டார்களுக்கும் அரிஜனங்களுக்கும் சமரசங் காண்பதற்கென்று இராஜாராம் பாண்டியன் தலைமையின் கீழ் 25-6-33. ஆம் தேதியன்று ஒரு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் காரணமாக நாட்டார்களின் மனோபாவத்தில் பெரிய மாறு

அன்று காந்திஜி தீர்த்து வைப்பதற்காகச் சென்ற நாட்டார்-அரிஜனச் சிக்கல் அப்பகுதியிலேயே ஒரு மாபெரும் சிக்கலாக இருந்தது. அங்கு நாட்டார்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் கிராமங்கள் நாடு என்று வழங்கப்பெற்றன. நாட்டார்கள் எனப் பெறுவோர் முக்குலத்தோர் வகுப்பில் ஒரு பிரிவினராவர். நாட்டார்கள் நாட்டில் அரிஜனங்களுக்குக் கண்டிப்பான சில வரையறைகள் இருந்தன. அரிஜனங்கள் சில குறிப்பிட்ட ஆடைகள் அணியக் கூடாது என்ற அளவிற்கு அங்குத் தீண்டாமை இருந்தது. அரிஜன ஆண்மக்கள் இடுப்பில் முழத் துண்டுக்கு மேல் கட்டக்கூடாது; மேலே துண்டோ சட்டையோ போடக்கூடாது; குடை பிடிக்கக் கூடாது; செருப்பு அணியக் கூடாது; பெண் மக்கள் ரவிக்கை அணியக் கூடாது. திருவிழாக்களுக்கு அரிஜனங்கள் வரும் போது இவைகளைக் கண்டிப்பாக அனுசரிக்கிறார்களா என்று நாட்டார்கள் பார்ப்பதுண்டு. இதனால் இரண்டு ஆண்டுகளாகவே அரிஜனங்களுக்கும் நாட்டார்களுக்கும் ஆங்காங்கு சிறு மோதல்களும் கருத்து வேறுபாடுகளும் இருந்தன. ஆகவே, நாட்டார்களுடைய நாட்டாண்மைக்காரர்களைச் சந்தித்து, இந்தத் தீண்டாமைப் பழக்க வழக்கங்களையெல்லாம் கைவிட்டு விடுமாறு கேட்டுக் கொள்ளவே அன்று காந்திஜி சென்றார். சித்தனூரில் சமரசப் பேச்சு நடைபெற்றது. தேவகோட்டை வட்டாரத்தில் தீண்டாமை ஒழிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த வழக்கறிஞரான முகுந்த ராஜ ஐயங்கார் என்பவரும் அரிஜன் ரெங்கண்ணு என்று அபிமானத்துடன் அழைக்கப்பெற்றவரான ரெ. அரங்க சாமி ஐயங்காரும் தான் இந்தச் சமரசத்திற்கு ஏற்பாடு செய்தவர்களில் முக்கியமானவர்களாவர். இந்தப் பேச்சிற்குச் சுமார் நூற்றிலிருந்து நூற்றி ஐம்பது நாட்டார் பிரதிநிதிகள் வந்திருந்தனர். காந்திஜி பந்தலுக்குள் நுழைந்தவுடன், எல்லோரும் எழுந்து நின்றனர். அவர் கீழே சம்மணங் கூட்டி அமர்ந்தவுடன் எல்லோரும் அவ்வாறே அமர்ந்தனர். நாட்டார் பிரதிநிதிகள் ஏதாவது கேள்விகள் கேட்பதாக இருந்தால், அவைகளுக்கு காந்திஜி பதில் அளிக்கத் தயாராய் இருப்பதாக நாட்டார் பிரதிநிதிகளிடம் மொழி பெயர்ப்பாளர் கூறினார். நாட்டாண்மைக்காரர்களின் சார்பாகப் பேசியவரோ, ''முதலில் காந்திஜி தம் கருத்து என்னவென்பதைச் சொல்லட்டும், அதைக் கேட்ட பின் எங்கள் ஐயப்பாடுகளைக் கேட்கிறோம்''

சமரசப் பேச்சு

என்று சொல்லிவிட்டார். அவர் மிகவும் வயதானவர்; மகாத்மாவுக்கு எதிரில் ஒரு தடிக்கம்பை ஊன்றி அதன் ஆதரவில் நின்று கொண்டு, அவர் இவ்வாறு கூறினார். காந்திஜியும் தமது உருக்கமான பேச்சைத் தொடங்கினார். 'தமிழ்நாட்டில் (அதுவரை) செய்த சொற்பொழிவுகளிலேயே அன்று தேவகோட்டை வட்டம் நாட்டார்களுக்குச் செய்த அறிவுரைதான் முதன்மையானது என்று காந்திஜியுடன் சென்ற குழுவினர் கருதினார்கள். சொல்வன்மை மட்டு மல்ல; ஆத்ம உணர்ச்சி, ஜீவகாருண்யம், தயை, தர்ம நியாயம் இவைகளையெல்லாம் ஒருங்கே திரட்டி, சிறு குழந்தைகளுக்குக் கூடப் புலப்படும்படியான முறையில் அன்று முக்கால் மணிநேரம் அரிஜனங்களின் சார்பாக காந்திஜி பேசினார். ஆனால் இவ்வளவு உருக்கமாகப் பேசியும் நாட்டார்களின் மனம் கரையவில்லை. வழக்கத்தை விட முடியாது என்பதில் அவர்கள் கண்டிப்பாக இருந்தார்கள். சமரசப் பேச்சு வெற்றிபெறவில்லை.

இந்தக் கூட்டம் முடிவதற்கு முன் தாம் சொல்ல விரும்பியதை மறுபடியும் காந்திஜி சுருக்கிச் சொன்னார்: ''அரிஜனங்களைக் காட்டிலும் நீங்கள் உயர்ந்தவர்கள் என்றும் அவர்கள் எந்தத் துணிமணிகளை அணியலாம் அல்லது அணியக்கூடாது என்பதை நீங்கள் நிர்ணயித்துக் கூறமுடியுமென்றும் நீங்கள் எண்ணினால் அது தவறாகும். இதனால் கோபதாபங்கள்தான் வளரும். பழக்க வழக்கங்கள் என்று கூறி, அவர்கள் எதை விரும்புகிறார்களோ அதைச் செய்வதை நீங்கள் தடுக்க முடியாது. நல்ல காரியங்களைச் செய்ய வாய்ப்புக் கிடைக்கும்போது நாம் அவற்றைச் செய்வோமாக!'' இந்தக் கூட்டத்தில்கூட பீகார் பூகம்ப நிவாரண நிதிக்கு நன்கொடை திரட்டுவதை காந்திஜி விடவில்லை. அங்கே வந்திருந்தவர்கள் சில நாணயங்களை அளித்தார்கள். நாட்டார் வகுப்பினரிடமிருந்து பணம் வசூல் செய்து அனுப்புவதாக நாட்டார் பிரதிநிதி கூறினார்.

மீண்டும் விளக்கம்

காந்திஜி நேரடியாகப் பேசுவதற்கு முன்பே நாட்டார்களுக்கும் அரிஜனங்களுக்கும் சமரசங் காண்பதற்கென்று இராஜாராம் பாண்டியன் தலைமையின் கீழ் 25-6-33. ஆம் தேதியன்று ஒரு மாநாடு நடைபெற்றது. இந்த மாநாட்டின் காரணமாக நாட்டார்களின் மனோபாவத்தில் பெரிய மாறு

தல் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. காந்திஜி சந்தித்துப் பேசிய பின்னும் பெரிய மாறுதல் நிகழவில்லை. ஆனாலும் முகுந்த ராஜ ஐயங்கார், ரெங்கசாமி ஐயங்கார், இலட்சுமிரதன் பாரதி போன்ற ஊழியர்கள் மனந்தளர்ந்து தங்களுடைய முயற்சியைக் கைவிட்டு விடவில்லை. 1936 தொடக்கத்தில் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், திவான் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார், ராவ்பகதூர் எம். சி. ராஜா ஆகியோர் இப்பகுதியில் சுற்றுப்பயணம் செய்து நாட்டார் தலைவர்களைச் சந்தித்ததுடன், அரிஜனங்களுக்கும் ஆறுதல் கூறினார்கள். இதன்பின் தேவகோட்டையில் ரெவின்யூ டிவிஷனல் அதிகாரியாக 1937 நவம்பர் முதல் 1938 ஆகஸ்ட் வரை பணியாற்றியவரும் இப்போது கலெக்டராக ஓய்வு பெற்றிருப்பவருமான ஆர். எஸ். மலையப்பன் நாட்டார்களுக்கும் அரிஜனங்களுக்கும் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அந்தச் சமயத்தில் காங்கிரஸ் அமைச்சரவை சென்னை மாநிலத்தில் பதவி வகித்திருந்தது. இவ்வாறு இந்த அதிகாரியும் அரிஜன சேவா சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களும் தொடர்ந்து முயன்றதில் 1938-ஆம் ஆண்டில் சமரச முடிவு ஏற்பட்டுச் சிக்கல் தீர்ந்தது.

முயற்சி வெற்றி

தேவகோட்டையில் தமது வேலைகளையெல்லாம் முடித்துக்கொண்டு திருப்பத்தூர், பாகனேரி வழியாக காந்திஜி மானமதுரைக்குப் புறப்பட்டார். திருப்பத்தூர்ப் பொதுக்கூட்டத்தில் மேடை மீது சில வெள்ளையர்கள் வந்து அவருக்கு வணக்கம் தெரிவித்தார்கள். வெள்ளித் தகட்டில்காந்திஜியின் உருவம் பொறித்து மரக்கட்டையில் பதிக்கப் பெற்ற ஓர் அழகான ஷீல்ட் இங்கு காந்திஜியிடம் அளிக்கப் பெற்றது. உயர்ந்த தொகைக்குப் போவதாக இருந்தால் தான் இதைத் தாம் ஏலத்தில் விற்க முடியுமென்றும் இல்லையேல் விற்க விரும்பவில்லை என்றும் காந்திஜி கூறிவிட்டார். அங்கு யாரும் அவ்வளவு உயர்ந்த விலைக்கு அதைக் கேட்காததால், காந்திஜி அதை விற்கவில்லை. ஆனாலும் பாகனேரியில் மேடைமீது அமர்ந்திருந்த ஓர் இளைஞன் இதை ரூ. 100-க்கு ஏலத்தில் எடுத்தான்.

திருப்பத்தூர்

இப்பகுதியில் கூச்சலும் குழப்பமுமாகக் கூட்டம் நடைபெற்ற ஒரே இடம் சிவகங்கைதான் என்று சொல்லலாம்.

சிவகங்கைக் கூட்டத்தில் மகாத்மா பேசவே முடியாதவாறு கூச்சல் அதிகமாக இருந்தது. கூட்டம் எதிர்பார்த்த தற்கும் எவ்வளவோ அதிகமாகப் போய்விட்ட தால், அதை அமைதிப்படுத்த முடியவில்லை. இதற்கு அடுத்து நடைபெற்ற மாணமதுரைக் கூட்டமோ இதற்கு நேர்மாறானதாக இருந்தது. பால்வழியும் நிலவொளியில் இரவு சுமார் ஏழு மணிக்கு நடைபெற்ற அந்தக் கூட்டத்தில் கண்ட ஒழுங்கு பாராட்டத்தக்கதாய் இருந்தது. இத்துணைக்கும் அந்தக் கூட்டத்தில் உயர்ந்த மேடைகூட இல்லை. நடுவில் காந்திஜியின் கார் வந்து நிற்பதற்கான இடைவெளி மட்டும் விடப்பட்டிருந்தது. உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவராவது இடத்தை விட்டு எழுந்திருக்க வேண்டுமே? யாராவது ஒருவர் கூச்சல் போடவேண்டுமே? இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்த வழக்கறிஞர் கிருஷ்ணசாமி ஐயங்காரைப் பாராட்டாதார் இல்லை. வானத்திலிருந்து கொட்டிக்கொண்டிருந்த நிலவொளியைப் போன்றே அடிகள் மனமும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்தது. மாண மதுரை இரயில் நிலையத்தில் அண்ணலை எதிர்பார்த்துக் கூட்டம் வந்துவிடும் என்று கருதி அருகிலுள்ள இரயில்வே 'கேட்'டில் இரயிலை நிறுத்தி அடிகள் ஏறிக் கொண்டார். ஏற்கனவே திட்டமிட்டபடி குன்னூருக்குச் சென்ற காந்திஜியை வழியில் மதுரையில் செய்தியாளர்கள் பேட்டி கண்டபோது நாட்டார்களுடன் நடத்திய பேச்சைப் பற்றி அண்ணல் கூறினார். ''நாட்டார் தலைவர்கள் பலரைக் கண்டு நான் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தேன். இந்த உரையாடலின் காரணமாக நல்ல பலன் ஏற்படும் என்று நம்புகிறேன். நான் சொன்னவற்றைக் கவனமாகவும் இடையில் எதிர்க்காமலும் நாட்டார்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். நிலைமையில் சீர்திருத்தம் அவசியம் என்பதைச் சில நாட்டார்கள் உணர்ந்திருப்பது எனக்குக் கொஞ்சம் நம்பிக்கை அளிக்கிறது. அரிஜனங்கள், தங்கள் உரிமைகளைப் பெற விழிப்போடு இருப்பதாயும் நான் எண்ணுகிறேன். தீண்டாமைப் பிரச்னை சம்பந்தமாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் புதிய உணர்ச்சி இது வரையில் பின்னணியிலேயே இருந்தாலும் இப்போது கிராமங்களையும் தட்டி எழுப்பியிருக்கிறது என்பதில் ஐயமில்லை,'' என்று காந்திஜி கூறினார்.

மாணமதுரை

திண்டுக்கல் வழியாக காந்திஜி செல்கிறார் என்பதை அறிந்து இரயில் நிலையத்தில் அவரைக்காண ஏராளமாக மக்கள் கூடியிருந்தனர். ஆனாலும் அவர்களுக்கு அவரைக் காணும் வாய்ப்புக் கிட்டவில்லை. திண்டுக்கல் வந்தபோது காந்திஜி தூங்கிக் கொண்டிருந்தார். வந்திருந்தவர்கள், அவருடைய தூக்கத்தைக் கலைக்காது சத்தமின்றிச் சென்று விட்டது பாராட்டுதலுக்குரிய செயல் தான்.

திண்டுக்கல்

29-1-34

பழனிக்கும் உடுமலைப்பேட்டைக்கும் பொள்ளாச்சிக்கும் இரயில் வந்தபோது அதிகாலை. காந்திஜி வழக்கமாக நடத்தும் பிராத்தனையை சோமவாரதின மாகிய அன்று காலை பழனியிலேயே நடத்தினார். மௌனதினமாகையால் அவர் வாய் திறந்து எதுவும் பேசவில்லை. (செட்டி பாளையத்தில் பஞ்சாயத்துக் குழுத் தலைவர் ம. கா. மாணிக்கம் செட்டியார் முதலிய ஏராளமான பேர் நின்று காந்திஜியை வரவேற்றனர். செட்டி பாளையம் வணிகரான ந. ப. ரா. வெங்கிடுசாமி செட்டியார் ஒரு பணமுடிப்பை அளித்தார்.)

பழனி
உடுமலை

போத்தனூரில் கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக இரயில் நிலையத்தில் இறங்காமல் 'கேட்'டில் இறங்குவதென்பது ஏற்பாடு. ஆனால் இந்த முயற்சி அங்குப் பலிக்கவில்லை. காந்திஜியும் அவரது குழுவினரும் இதில் ஏமாற்றமடைந்தார்கள். நீலகிரிக்கு காந்திஜி குழுவினர் ஏறிப் போவதற்காகப் போத்தனூர் இரயில் நிலையத்தில் வந்து காத்திருந்த கார் களைப் போத்தனூர் (இரயில்வே) கேட்டிற்கு அனுப்பி வைக்கும்படி செய்தி அனுப்பி வைத்திருந்த தகவல் தொண்டர்களுக்கும் போலீஸ்காரர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. அது எப்படியோ பொது மக்களுக்கும் எட்டி மக்கள் அங்கு கூடி விட்டனர். அங்கிருந்து காரில் பெரியநாயக்கன் பாளையம், காரமடை, மேட்டுப்பாளையம் முதலிய இடங்களில் சிறிது நேரம் தங்கி வரவேற்புகளைப் பெற்றுக் கொண்டு காந்திஜி குன்னூர் போய்ச் சேர்ந்தார். மேட்டுப் பாளையத்தில் செய்யப்பட்டிருந்த அலங்கார ஏற்பாடுகள் அற்புதமாய் இருந்தன. தமிழ் நாட்டிற்குள்ளேயே மேட்டுப் பாளையத்தைப் போல் அழகாக அலங்கரிக்கப் பெற்றிருந்த இடம் வேறு இல்லை என்று கூறலாம். அன்று காந்திஜிக்கு மௌன

குன்னூர் சேர்ந்தார்

தினமாகையால் அவர் சார்பாக டாக்டர் ராஜன் மட்டும் ஆங்காங்கு சிறிது நேரம் பேசினர். குன்னூர் சாலையில் அவரைக் காண இருமருங்கிலும் கூடி நின்ற மக்களுக்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டே ஆனந்தக் குன்றின் மீதுள்ள தேச பக்தர் நாகேசுவரராவின் இராமாசிரமம் பங்களா போய்ச் சேர்ந்தார். நாகேஸ்வரராவ் தம்பதிகளே அங்கு வந்திருந்து அண்ணலை வரவேற்றார்கள். இந்த பங்களா வானது குன்றின் உச்சியில் இருப்பதால் அங்கிருந்து நீலகிரி மலையின் இயற்கை வனப்புகளை காந்திஜி தமது ஓய்வு நேரத்தில் கண்டு இன்புறுவது எளிதாக இருந்தது.

ஓய்வின் நன்மை

குன்னூரில் காந்திஜி எட்டு நாட்கள் ஓய்வு எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்திருந்தது எத்தனையோ வகைகளில் நல்லதாகப் போயிற்று. இதற்காக, காந்திஜியின் தமிழ் நாட்டுச் சுற்றுப் பயணம் முதலில் திட்டமிட்டிருந்ததைவிட எட்டு நாட்கள் அதிகமாக நீடித்தது. இது தெரிந்தவுடன் அநேக ஊர்களைச் சேர்ந்தவர்கள், தங்கள் தங்கள் ஊர்களில் காந்திஜியின் புனிதபாதங்கள் படவேண்டும் என்று அழைப்பு அனுப்பத் தொடங்கி விட்டனர். இந்தக் கடிதங்களையும் தந்திகளையும் கவனித்துக் கூடியவரை எல்லோருக்கும் மனக் குறை இல்லாமல் ஒரு திருந்திய திட்டம் வகுக்கப் பெற்றது.

'ட்யூடி' மாறுதல்

போத்தனூரில் இறங்கியது முதல் ஒரு ''டியூட்டி'' மாறுதல் நடைபெற்றது. இதுவரை கன்னியாகுமரி, நெல்லை, மதுரை ஆகிய மாவட்டங்களில் காந்திஜியின் சுற்றுப் பயணப் பொறுப்பு முழுதையும் தமிழ்நாடு அரிஜன சேவா சங்கத் தலைவர் என்ற முறையில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனே ஏற்றிருந்தார். ஆனால் போத்தனூரில் இறங்கியது முதல் கோவை மாவட்டம் முழுவதிலும் காந்திஜியின் சுற்றுப் பயணப் பொறுப்பு முழுவதையும் அவினாசிலிங்கமே ஏற்று நடத்தினார். பிற்காலத்தில் சென்னை மாநிலக் கல்வி அமைச்சராகப் புகழுடன் பணியாற்றிய அவினாசிலிங்கம் 1934-இல் துடிப்பான இளைஞராயிருந்தார். அப்போதே இராமகிருஷ்ண வித்யாலத்தைத் தோற்றுவித்து விட்டார். அவர் எவ்வளவு திறம்பட காந்திஜியின் வரவேற்புப் பணியை மேற்கொண்டார் என்பதைக் குறித்து டாக்டர் ராஜன் பாராட்டி, ''கோயம்புத்தூர் மற்ற எந்த ஜில்லாவைக் காட்

டிலும் பண வசூலிலும் அடிகளின் வரவேற்பிலும் எவ்விதத்திலும் குறைவாகக் கூடாதென்கிற சங்கல்பம் டி. எஸ். அவினாசிலிங்கம் செய்து கொண்டார். முடிவில் அவர் எண்ணம் நிறைவேறிற்று. தமிழ் நாட்டில் வசூலான தொகையில் கால் பங்கு கோயம்புத்தூர் ஒரு ஜில்லா மட்டுமே அளித்தது. கட்டுக் கடங்காத ஊக்கம், எல்லையற்ற உணர்ச்சி, அளவிடக் கூடாத காந்தி பக்தி, கோயம்புத்தூரில் காணப்பட்டது'', என்று எழுதியிருக்கிறார்.

பக்தியும் வரையறையும்

குன்னூரிலிருந்து மகாத்மா காந்தி மேற்கொள்ள விருந்த சுற்றுப் பயண ஏற்பாடுகளைத் திருத்தி அமைத்தபின் டாக்டர் ராஜன் ஓர் அறிக்கை வெளியிட்டார். இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் சுற்றுப் பயணத்தால் ஏற்பட்ட அனுபவத்தைக் காணும் போது சில கட்டுப்பாடுகளை மக்கள் கவனித்தால், சுற்றுப்பயணம் இன்னும் வெற்றிகரமாகவும் எளிதாகவும் நடைபெற உதவியாக இருக்கும் என்று அவர் கூறியிருந்தார். அவர் கூறிய சில வரையறைகளாவன: மகாத்மா நடந்து செல்கையில் அவர் காலில் விழுந்து வணங்கவோ, அவர் காலைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொள்ளவோ கூடாது. 'காந்திஜிக்கு ஜே' என்று அவருக்கு எதிரிலும் அருகாமையிலும் முழக்கமிடுவது அவர் மனத்தைப் புண்படுத்துகிறது...மகாத்மா கோஷ்டியினருக்கு எளிய உணவே தயாரிக்கப்படவேண்டும். மகாத்மாவுக்கு நாளொன்றுக்கு 3 இரர்த்தல் ஆட்டுப்பால், புதிய காய்கறி, சில ஆரஞ்சுப் பழங்கள், தக்காளிக் காய் இவையே வேண்டும். பொதுப் பணத்திலிருந்து மாலைகளுக்காகவும் பிரசங்க மேடைகள் அமைப்பதற்காகவும் பணம் செலவழிக்கப்படவேண்டியதில்லை. பஸ் மேல் ஏறி நின்று கொண்டாயினும், வீட்டு மாடிகளிலிருந்தாயினும் மகாத்மா காந்தி பேசத்தயாராக இருக்கிறார்.''

ஓய்வா அது?

நம்மைப் போன்றவர்களுக்கு எது முழுநேர வேலையோ அதுதான் மகாத்மாவிற்கு ஓய்வாகும். குன்னூரில் ஒரு வாரம் மகாத்மா ஓய்வு எடுத்துக் கொண்டார் என்று நாம் கூறினால் அவர் அங்கு நன்றாக உண்டுவிட்டு, ஒரு வேலையும் இல்லாமல் காலை நீட்டிப் படுத்துக் கொண்டிருந்தார் என்று பொருளல்ல. குன்னூரில் தங்கியிருந்ததற்கு முன் அல்லது

பின் மேற்கொண்ட சூருவளிச் சுற்றுப்பயணத்தைப் போலல் லாமல், அங்குத் தங்கியிருந்தார்; அவ்வளவு தான். அவர் தங்கியிருந்த இடம் அற்புதமான இயற்கை எழில் வாய்ந்தது தான். பொதுவாகக் குன்னூர் மலைச்சாரலே பிப்ரவரி மாதத்தில் அழகு கனிந்து குலுங்கும். சூரிய கிரணங்களோ வெப்பமே இல்லாமல் நிலவு போன்று மங்கலாக ஒளிவிடும். அவர் தங்கியிருந்த பங்களாவும் அழகான, ரதம் போன்ற வேலைப்பாடுகள் அமைந்த அழகான கட்டிடம். ஆனாலும் இவைகளையெல்லாம் கண்டு ரசித்துக் கொண்டிருக்க அண்ண லுக்கு யார் அவகாசம் அளிப்பார்கள்? அவருக்குச் சொந்த வாழ்க்கை என்பது எப்போது, எங்கே இருந்தது? தென்னப் பிரிக்காவிற்குப் போனதிலிருந்தே அவர் வாழ்க்கை முழுவதுமே பொது வாழ்க்கை தானே? பல தாபனங்களைச் சேர்ந்தவர்களும் சங்கங்களைச் சேர்ந்தவர்களும காங்கிரஸ் ஊழியர்களும் வந்து குன்னூரில் அவரைச் சந்தித்த வண்ண மாக இருந்தார்கள். இவர்களில் பெரும்பாலோர் அவர் தங்கள் தங்கள் ஊருக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள வந்தவர்கள். இவர்களைத் தவிர மைசூரிலிருந்தும் புதுச்சேரியிலிருந்தும் ஆமதாபாத் முதலிய இடங்களி லிருந்தும் கும்பல் கும்பலாக அநேகர் பலகாரணங்களை முன்னிட்டு காந்திஜியைக் காண வந்த வண்ணமாக இருந் தார்கள். மலைபோல் குவிந்து கிடந்த கடிதங்களுக்கும் அவர் இங்கு தான் மறுமொழி எழுதத் தொடங்கினார். மேலும், அவர் உதகை, கோத்தகிரி முதலிய இடங்களுக்குச் சென்று அங்கு ஆதிவாசிகளையும் மற்றவர்களையும் சந்தித்து வந்தார். இந்த வேலைகளுடன் ''அரிஜன்'' இதழுக்குக் கட்டுரைகளும் தீட்டிக் கொண்டிருந்தார். பீகார் பூகம்ப நிவாரணத்திற்கு உதவுமாறு எத்துணையோ நண்பர்களுக்குக் கடிதங்களும் எழுதிக் கொண்டிந்தார். ஆனாலும் குன்னூரில் ஒரு வாரம் தங்கியிருந்தது அடிகளுக்கு நல்ல உடல் நலத்தை அளித்தது. வழக்கமாக அவர் செய்யக்கூடிய வேலைகளுக்குக் குறைவாக வேலைகள் இருந்ததும் குன்னூரின் பருவநிலையும் அவர் மன நிறைவு பெறக்கூடிய அளவு உலவுவதற்கு ஒய்வு கிடைத் தமையும் தான் இதற்குக் காரணங்களாகும்.

குன்னூருக்கு அவர் வந்து சேர்ந்த முதல் நாள் மாலை எல்லோரும் வருந்தி அவரிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய ஒரு வருந்தத்தக்க நிகழ்ச்சி நடைபெற்று விட்டது. எல்லோரும் உணவு அருந்திய பின்னர், வேலைக்காரர்கள்

எச்சில் இலைகளை எடுத்துக் கவனம் இல்லாமல் பங்களா கட்டிடத்திற்கு அருகிலேயே சிதறலாகப் போட்டு விட்டார்கள்.

வருந்தத்தக்க நிகழ்ச்சி

மாலையில் மகாத்மா பங்களாவைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகையில் அதைக் கண்டுவிட்டார். உடனே அவர் தமக்கு உரிய பெருந்தன்மை வாய்ந்த இயல்புப்படி, பிறர் எவரையும் கடிந்து கொள்ளாமல், தாமே அவைகளை எடுத்துச் சுத்தம் செய்ய ஆரம்பித்தார். அதைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமும் வருத்தமும் வந்துவிட்டது. எல்லோரும் போய் அவரிடம் மன்னிப்புக் கேட்டார்கள். பின்னர் சில நிமிடங்களில் அனைவரும் சேர்ந்து அந்த இடத்தைச் சுத்தம் செய்துவிட்டார்கள்.

1-2-34

ஆதி திராவிட தூதுக்குழு

பிப்ரவரி முதல் தேதியன்று, குன்னூர் ஆதி திராவிட ஜனசபையைச் சேர்ந்த ஒரு தூதுக்குழு மகாத்மாவைச் சந்தித்து, அப்பகுதியில் உள்ள அரிஜனங்களை முக்கியமாகப் பாதிக்கும் சிக்கல்களைப் பற்றி விவாதித்தது. இந்த சபையின் தமிழ் நாடு மாநில போர்டு உறுப்பினரான ஆர். டி. கேசவலு, நகரசபை உறுப்பினர் ஆர். டி. மாணிக்கம் ஆகியோர் தலைமையின் கீழ் சபையின் 12 பிரதிநிதிகள் காந்திஜியைச் சந்தித்தார்கள். அவர்கள் விவாதித்த சிக்கல்கள் குறிப்பாக அப்பகுதிக்கும் பொதுவாக எல்லாப் பகுதிகளுக்கும் பொருந்துபவை ஆதலால் அவற்றை இங்கே சுருக்கமாக அளிக்கலாம்:

தூதுக்குழுவினர் : இப்பகுதியில் வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கடுமையாக இருக்கிறது. ஆகையால் அரிஜனங்களுக்கு வேலை கொடுக்கத் தோல் பொருள்கள் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கலாம்.

மகாத்மா : இப்படிப்பட்ட தொழிற்சாலையைத் தொடங்குவதால் ஏராளமான அரிஜனங்களுக்கு வேலை கிடைத்து விடப் போவதில்லை. ஒரு சிலருக்குத்தான் வேலை கிடைக்கும். அதிலும் பரம்பரையாகத் தோல் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத்தான் கிடைக்கும். இப்பகுதியில் பல்வேறு தொழில்களிலும் வேலை இல்லா

மல் இருப்பவர்களைப் பற்றிய புள்ளி விவரத்தை நான் பார்க்க விரும்புகிறேன்.

தூதுக்குழு : அரிஜனங்களுடைய குறைகளை விவரமாக எடுத்துச் சொல்ல ஒரு தனிப் பத்திரிகை வேண்டும். மத்திய போர்டு இதற்கான நிதி வசதி செய்து கொடுக்க வேண்டும்.

மகாத்மா : இந்தக் கட்டத்தில் அத்தகைய பத்திரிகை ஒன்று அவசியமில்லையென்று கருதுகிறேன். இதைக் காட்டிலும் முக்கியமான வேலைகளுக்குப் பணம் தேவையாக இருக்கிறது. மேலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் பல பெரிய பத்திரிகைகள் வந்து கொண்டிருக்கின்றன. அவை அரிஜனங்களின் சிக்கல்களைப் பற்றிய செய்திகளை வெளியிடாமல் இருக்க முடியாது. அந்தப் பத்திரிகைகளை நீங்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மாணிக்கம் : இந்தச் சுற்றுப்பயணத்தைப் பொருத்தவரை, சாதி இந்துக்களிடையே போதுமான மனமாற்றம் இருக்கிறது எனக் கருதுகிறீர்களா?

காந்திஜி : உள்ளப் பூர்வமான மாற்றம் ஏற்பட்டு வருகிறது என்றே நான் கருதுகிறேன். நான் எதிர்பார்த்ததைக் காட்டிலும் அதிக மன மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

மாணிக்கம் : ஆனால், மகாத்மாஜி, நீங்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பழைய மரபையே கடைப்பிடிக்க முடியும் என்று நாட்டார்கள் பிடிவாதமாய் இருப்பதாக நாங்கள் பத்திரிகைகளில் படித்தோமே?

மகாத்மா : பத்திரிகைகளில் என்ன வெளிவந்திருந்தது என்று எனக்குத் தெரியாது. ஆனால் நாட்டார்களின் பிரதிநிதியான அந்த வயதான கிழவருக்கு, என்ன சொல்லவேண்டும் என்பதை மற்றவர்கள் நன்றாகப் போதித்திருந்தார்கள் என்றே தோன்றியது. நூற்றுக்கு மேற்பட்ட நாட்டார் பிரதிநிதிகள் நான் பேசியதை அமைதியாகக் கேட்டார்களே அதுதான் மிகவும் முக்கியமானது. நாட்டார்களிலேயே என்னுடைய ஆலோசனையை ஏற்கக் கூடியவர்களும் நமது ஊழியர்களுக்கு உதவக்கூடியவர்களுமான பெருமக்கள் இருக்

கிறார்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்லமுடியும். பயப்படாதீர்கள். நிச்சயமாக, நாம் விரும்பக்கூடிய மாற்றம் ஏற்பட்டுத்தான் தீரும்.

2-2-34

மறுநாள் மாலையில் மகாத்மா கோத்தகிரிக்குச் சென்ற வழியில் மௌண்ட் ரோடில் கிரௌன்பேகரிக்கு அருகாமையில் முஸ்லிம்கள் சார்பாக ஷம்சுதீன் என்பவர் - இப்பகுதியிலேயே வயதானவர் - மகாத்மாவின் கார் நிறுத்தி அவருக்கு மாலை அணிவித்து உபசாரம் செய்தார். வழியில் பண்டிசோலை, எட்டப்பள்ளி, கட்டப்பொட்டு முதலிய இடங்களில் மகாத்மா சிறிது நேரம் தங்கி அங்கு மக்களின் வரவேற்பைப் பெற்றார். கோத்தகிரியில் கோட்டை மைதானத்தில் சுமார் ஆறுயிரம் மக்கள் - இவர்களில் பெரும்பான்மையானவர்கள் படகர்கள் - கூடியிருந்தனர். அங்கு வரவேற்பையும் பண முடிப்பையும் பெற்றுக்கொண்டு காந்திஜி கூறினார்: ''சமவெளியில் உள்ளது போன்று அவ்வளவு கடுமையான தீண்டாமை இங்கு மலைமீது கிடையாது. ஆயினும் உயர்ந்தவர்களென்றும் தாழ்ந்தவர்களென்றும் உங்களுக்குள்ளே கூட வேறுபாடு பாராட்டுகிற வரையில், தீண்டாமை நம்முடைய நாட்டை விட்டுப் போய்விட்டதாக நாம் கூறுவதற்கில்லை. நேற்றுக் குடிவெறியில் இருவர் சண்டை பிடித்துக்கொண்டதாகவும் ஒருவன் இறந்துவிட்டதாகவும் மற்றவன் மருத்துவமனையில் இருப்பதாகவும் கேள்விப்பட்டேன். நான் தொடங்கிய இயக்கம் ஆத்ம பரிசுத்த இயக்கமாதலால் நீங்கள் குடியை விட்டுவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மது அருந்தியவன் தாய்க்கும் தாரத்திற்கும் வேறுபாடு பாராட்டுவதில்லை.'' இங்கு ஏ. கிருஷ்ணசாமி நாயுடு என்ற தமிழ்ப் பண்டிதரும் அவரது மனைவியாரும் வேண்டிக் கொண்டபடி, அவர்களது ஆறு மாதக் குழந்தைக்கு மகாத்மா காந்தி, ''காந்தியப்பன்'' என்ற பெயரைச் சூட்டினர்.

3-2-34

இதற்கு மறுநாள், மகாத்மா காந்தி நிறைவேற்றி வைக்க வேண்டிய அலுவல்கள் எத்துணையோ இருந்தன.

படகர்கள் கூட்டம்

ஒட்டுப் பரையில் உள்ள சக்கிலியர் குடியிருப்பிற்கு அவர் சென்றார். அங்குக் காளி கோவிலுக்கு முன் நடைபெற்ற கூட்டத்தில் ''அரிஜனங்களுடன் நெருங்கிப் பழகி, சாதி இந்துக்கள் தங்களைத் தூய்மைப் படுத்திக் கொள்ள வேண்டும்; எருமை மாடு களைப் பலி கொடுத்துக் காளியின் அருளைப் பெற்றுவிடலாம் என்று அரிஜனங்கள் எண்ணிவிடக் கூடாது,'' என்று அண்ணல் அறிவுரை பகர்ந்தார். இதற்கு அடுத்து நகராட்சி மன்றத் தோட்டிகள் வாழும் தண்டக் காரன் சேரிக்கு அவர் போன போது, கூட்டம் முண்டி யடித்துக் கொண்டு அவரை நெருக்கியதால் நாற்காலியில் கூட உட்கார முடியாமல் மேசையின் அருகே அவர் நின்று கொண்டிருந்தார். இங்கு காந்திஜி, சுத்தமாய் இருக்க வேண்டிய அவசியத்தை அரிஜனங்களுக்கு எடுத்துக் கூறினார்.

சேரிகள்

இதன் பிறகு ஆள்வார்ப்பேட்டை மைதானத்தில் எண்ணூயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்த ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் தீண்டாமை என்னும் பாவம் அரிஜனங்கள் அல்லது ஆதி திராவிடர்கள் விஷயத்தில் மட்டுமல்லாமல் இந்தியாவில் உள்ள வகுப்பினர் எல்லோரிடை யிலும் எவ்வாறு வியாபித்து இருக்கிறது என்பதை எடுத் துரைத்தார். ''கிறித்தவர்கள், முசல்மான்கள், பார்சிகள், யூதர்கள், இந்துக்கள் ஆகிய அத்தனை சமயத்தவரும் ஒரு வருக்கொருவர் தீண்டத் தகாதவர்களாகவே கருதிக் கொள் கிறார்கள்,'' என்று அவர் சொன்னார்.

பொதுக் கூட்டம்

4-2-34

காந்திஜியாலேயே ''திறமையாகத் தீட்டப் பெற்றிருக் கிறது'' என்று புகழப் பெற்ற விஞ்ஞாபனத்தைக் கோவை யைச் சேர்ந்த ஆர். வீரையன் என்பவர் தலை மையின் கீழ் வந்த தூதுக் குழு மறுநாள் மதியம் அளித்தது. தமிழ் நாட்டிலுள்ள பல் வேறு மாவட்டங்களையும் சேர்ந்த ஆதி இந்துக் களின் பிரதிநிதிகள் என்று இவர்கள் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டார்கள். இந்தத் தூதுக் குழுவில் ஒரு அரிஜனக் கிழவி வந்திருந்தார். அந்தக் கிழவி காந்திஜிக்கு மாலையிட்டு ஆரஞ்சுப் பழங்களும் கொடுத்தார். அந்த அம்மையாரை அண்ணல் தம் பக்கத்தில் அழைத்து, கன்னத்

ஆதி இந்துக்கள்

தைத் தட்டிக் கொடுத்து ''நம் இருவருக்கும் வயதாகி விட்டது, உங்களுடைய ஆசீர்வாதத்தை நான் போற்று கிறேன், நீங்கள் அளித்த ஆரஞ்சுகளை என் மாலை உண வாகக் கொள்வேன்'' என்றார்.

உதக மண்டலம்

குன்னூரில் சூரியன் நிலாப்போல் குளிர்ந்த கிரணங்களை வீசிக் கொண்டிருந்த ஒரு நேரத்தில், வரவேற்புக் குழுவினரில் ஒருவரான அப்துல்மஜித் முன்னேடியாக ஒரு காரில் செல்ல, பின்னல் தமது ''பரிவாரங்களான'' தக்கர் பாபா, இராமச்சந்திரன், ஆர். டி. கேசவலு, ஆர். டி. மாணிக்கம், எஸ். ஆர். நாராயண ஐயர், ஏ. கோவிந்தசாமி, டாக்டர் சி. என். நாராயணன், பஜாஜ் குமாரத்தி, ஹங்கேரியைச் சேர்ந்த இரண்டு பெண்மணிகள் (திருமதி சான்பிரன்னரும் அவரது குமாரத்தியும் ஆகிய இந்த இருவரும் காந்திஜியின் படத்தைத் தீட்டுவதற்காக வந்தவர்கள்) ஆகியோருடன் உதகமண்டலம் போய்ச் சேர்ந்தார். வழியில் வெல்லிங்டன், அரவங்காடு, கெடி ஆகிய இடங்களில் மக்கள் காந்திஜியைக் காணக் கூடியிருந்தனர். நகராட்சி மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் (நகரமக்கள் சார்பாகவும் ஆதி திராவிடர்கள் சார்பாகவும் மார்வாரிகள் சார்பாகவும் மூன்று வரவேற்புரைகள் வாசித்தளிக்கப்பெற்றன.) காந்திஜி சொன்னார்: ''மேற் போக்கான ஒரு மாற்றத்தை - வெளிவேடத்தை - நான் விரும்பவில்லை. தீண்டாமை எந்த உருவத்தில் இருந்தாலும் அதைக் களைந்தெறிய வேண்டு மானால் கோடிக்கணக்கான சாதி இந்துக்களிடம் மனப்பூர்வ மான மாறுதலை ஏற்படுத்த வேண்டும்.''

இராம கிருஷ்ண மடம்

இதன் பின்னர் சுவாமி சித்பவானந்த காந்திஜியை அழைத்துச் சென்று ஸ்ரீ இராமகிருஷ்ணமடத்தைச் சுற்றிக் காண்பித்தார். சுவாமி சித்பாவனந்த குன்னூரில் காந்திஜியைச் சந்தித்ததையும் அவர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்திற்கு காந்திஜியை அழைத்துச் சென்றதையும் அவர் கூறக் கேட்போம்: ''ஸ்ரீமத் பகவத் கீதையில் இரண்டொரு கருத்துக்களை மகாத்மாவோடு கலந்து பேசுதற்குப் பேட்டி தரவேண்டுமென்று நான் கடிதம் எழுதினேன். அப்பொழுது நான் உதகமண்டலம் ஸ்ரீஇராமகிருஷ்ண ஆசிரமத்தில் வசித்து வந்தேன். ஒருநாள் மாலை நான்கு மணிக்குப் பத்து

நிமிடம் பேட்டி காண்பதற்கு (அனுமதி அளித்து)ப் பதில் கடிதம் வந்தது. நான்கு மணிக்குக் குறிப்பிட்ட அறைக் குள்ளே நான் நுழைந்தபொழுது மற்றொரு வாயிலில் மகாத் மாவும் அவ்வறைக்குள் நுழைந்தார். சர்க்காவைச் சுழற்றுதற்கிடையில் ''சுவாமிஜி, நீங்கள் பேச விரும்பும் விஷயம் யாது?'' என்றார் காந்தி மகான்.

நான் கேட்டது: ''மகாத்மாஜி! ஒரு குடும்பத்தில் பிறந்துள்ள நான்கு சகோதரர்களுள் ஒருவன் பிராமண னாகவும், இன்னொருவன் க்ஷத்திரியனாகவும், வேறொருவன் வைசியனாகவும், மற்றொருவன் சூத்திரனாகவும் இருப்பது சாத்தியம் என்பது என் கருத்து. நீங்கள் அதை ஆமோதிக் கின்றீர்களா?''

மகாத்மாஜி: ''இல்லை, நான் அதை ஆமோதிப்பதில்லை.''

கேள்வி: குணத்தையும், கர்மத்தையும் முன்னிட்டுத்தானே வருண பேதத்தை கீதா சாஸ்திரம் வகுத்து வைக் கிறது?''

மகாத்மாஜி: ''அது வாஸ்தவம். வருணத்தில் நான் வைசியன். அது சமுதாய அமைப்பு. அதை நான் மாற்றிக் கொள்ள முடியாது. என் மக்களும் வைசியர் களே. நானும் என் மக்களும் வைசிய கர்மங்களையே முறையாகச் செய்ய வேண்டும்.''

கேள்வி: ''அருள் நாட்டம் கொள்ள வேண்டிய அந்தணர் இக்காலத்தில் வெறும் பொருள் நாட்டம் ஒன்றிலேயே உழல்கின்றனர். அவர்களை நீங்கள் பிராமணர் என்று அங்கீகரிக்கின்றீர்களா?''

மகாத்மாஜி: ''சமுதாய அமைப்புப்படி அவர்கள் பிராம ணர்கள். ஸ்வதர்மத்திலிருந்து பிசகினால் அவர்கள் பதிதர்கள் ஆகிறார்கள். வேறு வர்ணத்தைச் சேர்ந்த வர்களாக மாட்டார்கள்.''

கேள்வி: ''அப்படியானால், வருணம் பிறப்பை ஒட்டியது என்பதுதானே உங்கள் கருத்து?''

மகாத்மாஜி: ''பிறப்பை யாரும் புறக்கணிக்கலாகாது. பதிதராயிருந்தும் பின்பு பழைய பெரிய நிலைக்கு வர மேல் வருணத்தார் முயலவேண்டும்.''

இக்கொள்கையைப்பற்றி மேலும் விவாதிக்க நான் விரும்பவில்லை.

கேள்வி : ''இக்காலத்திய இளைஞர்களுக்குப் பிராமண தர்மம், க்ஷத்திரிய தர்மம், வைசிய தர்மம், சூத்திர தர்மம் ஆகியவைகளை ஒன்றுகத் தொகுத்தே வழங்க வேண்டும். புதிய கல்வித் திட்டம் அதற்கு ஒத்ததாக இருக்க வேண்டும் - என்பது என் கருத்து. அதைப் பற்றித் தாங்கள் பகர்வது யாது?''

மகாத்மாஜி இரண்டொரு வினுடி சிந்தனையில் மூழ்கி யிருந்துவிட்டு இக்கொள்கையை ஆமோதித்தார்.

மடத்திற்கு அழைப்பு

''மகாத்மாஜி, உதகமண்டலம் ஸ்ரீ இராமகிருஷ்ண ஆஸ்ரமத்தில் ஹரிஜனச் சிறுவர் சிறுமிகளுக்கு நாங்கள் பஜனை புகட்டி வருகின்றோம். நீங்கள் உதக மண்டலத்துக்கு வரும் பொழுது எங்கள் ஆசிரமத்துக்கு விஜயம் செய்து அச்சிறுவர் களின் பண்பைப் பார்வையிட்டால் நாங்கள் திருப்தி அடைவோம்'' என்னும் கருத்து அவரிடம் தெரி விக்கப்பட்டது. மகாத்மாஜி அதற்குச் சம்மதம் கொடுத்தார்.

''மகாத்மாஜி, இன்னும் இரண்டு விண்ணப்பங்கள்.''

அகன்ற முகமலர்ச்சியுடன் ''அவை யாவை?'' என்றார் அவர்.

முதல் வேண்டுகோள்

''உதகமண்டலத்தில் காந்தல் என்னும் பகுதியில் கொஞ்ச காலத்துக்கு முன்பு ஹரிஜனப் பெரியார் ஒருவர் மடமொன்று ஸ்தாபித்திருக்கிறார். அதில் அக் கூட்டத்தார் எத்தகைய பண்பைப் பெற்று வருகிறார்கள் என்பதை உங்களுக்குக் காட்ட விரும்புகிறேன்.'' இது முதல் வேண்டுகோள். மகிழ்ச்சியுடன் அதற்குச் சம்மதம் வந்தது.

''உதகமண்டலத்தில் கோடப்பமந்து என்னும் பகுதியில் உள்ள கணேசர் கோயில் ஒன்றில் ஹரிஜனங்கள் பிரவேசிப் பதற்குத் தாங்கள் துவக்கம் செய்து வைத்தால் அதைத் திருவருள் செயல் என்று ஏற்கவும், தொடர்ந்து ஹரி ஜனங்களுக்கு அக்கோயிலில் வழிபாடு செய்ய உரிமை தருவ

தற்கும் கோயில் அதிகாரிகள் சம்மதம் கொடுத்திருக்கிறார்கள். அப்புனித கைங்கர்யத்தை நீங்கள் துவக்கி வைப்பீர்களா?'' மகிழ்வுடன் மகாத்மா இரண்டாவது இந்த இரண்டாவது விண்ணப்பத்துக்கும் வேண்டுகோள் இசைந்தார். உதகமண்டலம் குதிரைப் பந்தய மைதானத்தில் பொதுக் கூட்டம் ஐந்தே முக்கால் மணிக்கு முடிவு பெறும் என்றும், அது முடிந்ததும் மகாத்மாவை இந்த மூன்று இடங்களுக்கும் அழைத்துச் சென்று ஏழரை மணிக்குள் நிகழ்ச்சிகள் முடிவுக்குக் கொண்டு வருவதாக ஏற்பாடு செய்யப்பட்டது.

''சொல்லியபடி மகாத்மாஜி உதகமண்டலம் பொதுக் கூட்டத்தினின்று வெளியே வந்தார். ஆசிரம மண்டபத்துக்குள் நாங்கள் நுழைந்தபொழுது தாய்மார்கள் சொன்னபடி அதில் நிறைந்து உட்கார்ந்திருந்தனர். வந்தார் மகாத்மாவுக்கென்று அமைக்கப்பெற்றிருந்த ஒரு பீடத்தின்மீது மகிழ்வுடன் அவர் அமர்ந்தார். நைவேத்தியம் செய்யப்பட்டிருந்த பழத்துண்டுகள் அடங்கிய தட்டு ஒன்று அவர் முன் வைக்கப்பட்டது. இடையிடையே வலக்கையில் பழத்துண்டு ஒன்றை எடுத்து வாயில் போட்டுக்கொண்டார். அது அசாதாரணமான செயல். ஏனென்றால் குறிப்பிட்ட வேளையில் அல்லாது இடைவேளையில் அவர் எதையும் அருந்த மாட்டார்.

''ஸ்ரீ இராமகிருஷ்ண ஆசிரமத்திலிருந்து காந்தல் மடத்துக்குப் போகும்பொழுது மகாத்மாவுக்கு அருகில் நான் அமர்ந்துகொண்டு சென்றேன். செல்லும் காந்தல் மடம் பொழுது அந்த மடத்தை ஸ்தாபித்த ஆதிமூல சுவாமிகளின் வரலாற்றை அவருக்கு விளக்கிக் கொண்டுபோனேன். முழுமனதைச் செலுத்தி அவ்வரலாற்றை அவர் கேட்டுக் கொண்டிருந்தார். காந்தல் மடத்தினுள் நுழைந்ததும் நேராக ஆதிமூல சுவாமிகளின் சமாதிக்கு மகாத்மா அழைத்துச் செல்லப்பட்டார். பக்கம் பக்கம் இரண்டு சமாதிகள் இருக்கின்றன. அதைப் பற்றி மகாத்மா விசாரித்தார். ஆதிமூல சுவாமிகள் சமாதியடைந்த பிறகு அவருடைய தர்மபத்தினியார் தாம் இனி உடல் வாழ்க்கை வைத்திருக்க விரும்பவில்லை என்று ஆழ்ந்து சங்கல்பித்து ஐந்தாம் நாள் அவ்வம்மையாரும் உடலை உகுத்துவிட்டார். ஆக, அவ்விருவர் சமாதிகள் பக்கம்

பக்கம் வைக்கப்பட்டிருக்கின்றன என்று தெரிவித்தபொழுது ''அது வியப்புக்குரிய விஷயம்'' என்று இயம்பி மகாத்மா சிறிது நேரம் சிந்தனையில் மூழ்கியிருந்தார். காந்தல் மட விஜயம் மகாத்மாவுக்குப் பேரானந்தத்தை ஊட்டியது.

கணேசர் கோவில்

''கடையாகக் கோடப்பமந்துக் கணேசர் கோவிலுக்கு நாங்கள் போய்ச் சேர்ந்தோம். பூட்டி வைத்திருந்த கோயிலின் சாவி மகாத்மாவின் கையில் தரப் பட்டது. கோயிலைத் திறந்து ஹரிஜனங்களைத் தம்முடன் அழைத்துக்கொண்டு கோயிலுக்குள் நுழைந்தார். தீபாராதனை நிகழ்ந்தது. சுண்டல் பிரசாதம் ஜாதி வேற்றுமையில்லாது எல்லாருக்கும் வழங்கப் பட்டது. மக்கள் எல்லாரிடத்தும் காட்டிய சம அன்பு கணேசருக்கு முற்றிலும் உகந்தது என்றும், அக்கணம் முதற் கொண்டு அக்கோயிலுக்குப் புதிய அருள் நிலை வந்துள்ளது என்றும் மகாத்மாஜி பகர்ந்தருளினர். இரவு எட்டு மணிக்கு அங்கிருந்து விடைபெற்றுக்கொண்டு அவர் நேரே குன்னூருக்குத் திரும்பிப் புறப்பட்டார்.''

மொழி பெயர்ப்பு

நீலகிரியில் காந்திஜி தங்கியிருந்த காலத்தில் அவருடைய சொற்பொழிவுகளையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்தவர் ஸுப்ரி என்று சுருக்கமாக அழைக்கப்பெறும் கே. சுப்பிரமணியம் ஆவர். நல்ல வெண்கலத் தொண்டையில் கூடியிருக்கும் மக்களுக்கு எல்லாம் கணீரென்று கேட்கக் கூடிய முறையில் அவர் தமிழில் காந்திஜியின் சொற்பொழிவுகளை மொழி பெயர்த்தார். அவருடைய குரலைக் கேட்டு காந்திஜியே வியப்படைந்தார். ஒரு நாள் அவர் குன்னூரில் ஸுப்ரியிடம் கேட்டார்: ''எப்படி இவ்வளவு நல்ல குரலைப் பெற்றீர்கள்?''

ஸுப்ரி: ஆண்டவன் அனுக்ரகத்தாலும் உங்கள் ஆசீர்வாதத்தாலும்.

காந்திஜி: நிச்சயமாக ஆண்டவன் அனுக்ரகத்தால்தான்.*

6-2-34

ஓய்வு முடிந்து காந்திஜி மலையிலிருந்து இறங்கியபோது, மேட்டுப்பாளையம் மக்கள் விடவில்லை. அவர் மலைக்குப்

* ஸுப்ரி பேட்டி.

போனபோது, அற்புதமான ஏற்பாடுகள் செய்திருந்தும் மௌன நாளாகையால் அவரால் பேச முடியவில்லை யல்லவா? ஆகையால் மகாத்மா மலையி

மேட்டுப் பாளையம்

லிருந்து இறங்கியபோது மீண்டும் அவர்கள் திரண்டிருந்து அவரை வரவேற்று அவருடைய சொற்பொழிவைக் கேட்டு அனுப்பி வைத்தார்கள்.

சொக்கம்பாளையம் என்பது சிறு கிராமந்தான். ஆனாலும் இங்கு ஆயிரத்தி ஒரு ரூபாய்க்கும் அதிகமாக நிதி அளித் தார்கள். திறந்த மைதான வெளியில் நடை

சொக்கம் பாளையம்

பெற்ற கூட்டத்தில் நாலாயிரத்திற்கும் அதிக மாகப் பெண்கள் மட்டும் கூடியிருந்தனர் என்றால் ஆண்களுடைய எண்ணிக்கையைப் பற்றிக் கேட்க வேண்டுமா? (புஞ்சைப் புளியம்பட்டியைச் சேர்ந்த ஏ. ஏ. சுப்பையா நாயுடு என்பவர் பென்சிலால் காந்திஜியின் படம் ஒன்றை வரைந்து அதை அண்ணலிடம் அளித்தார். கிராம மக்களின் சார்பாக ரெங்க செட்டி யாரும் தாலுகா போர்டின் சார்பாக மடத்துப்பாளையம் பழனி கவுண்டரும் வரவேற்புரைகளைப் படித்துக் கொடுத் தனர்.) ''கதருக்காகவும் தீண்டாமை ஒழிப்பிற்காகவும் மது விலக்கிற்காகவும் நீங்கள் செய்துள்ள சேவைகளைப் பாராட்டுகிறேன்'' என்ற உற்சாகமான செய்தியுடன் காந்திஜி தம் மறுமொழியைத் தொடங்கி தீண்டாமை ஒழிப்பின் அவசியத்தை எடுத்துரைத்தார். வரவேற்பு, காந்திஜியின் மறுமொழி-எல்லாமே அரைமணி நேரத் திற்குள் முடிந்துவிட்டது.

திருப்பூரை நோக்கி காந்திஜி சென்றபோது, (சொக்கம் பாளையத்திற்குச் சுமார் ஐந்து மைல் தூரத்தில் உள்ள) கருவலூர் என்ற கிராமத்திலும் அவினாசியில் தேர்முட்டிக்கு அருகேயும் திருமுருகன் பூண்டி

திருப்பூர்

யிலும் அனுப்ப பாளையத்திலும் அண்ணலுக்கு வரவேற்பு அளிக்கப்பெற்றது. மொத்தமாகச் சொல்வதானால் மேட்டுப்பாளையத்திலிருந்து திருப்பூர் செல்லும் வரை வழி நெடுக இருமருங்கிலும் ஒரே மக்கள் திரளாக இருந்தது என்று கூறிவிடலாம். திருப்பூரில் மகாத் மாவை வரவேற்கப் பி. டி. ஆஷர், அப்போது தமிழ்நாடு சர்வோதய சங்கச் செயலாளராக இருந்த அ. அய்யாமுத்து

ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தார்கள். திருப்பூரில் துரை சாமி புரத்தைச் சேர்ந்த பொன்னுசாமி கௌண்டரின் புது இல்லத்திற்கு அவரை அழைத்துச் சென்றார்கள்; அங்கு கௌண்டர் அரிஜன நிதிக்காக 750 ரூபாய் காந்திஜியிடம் அளித்தார். இந்நிதியைப் பெற்றுக்கொண்டு, மக்கள் வரவேற்பைப் பெறுவதற்காக, காந்திஜி, நகராட்சி முசாபரி பங்களாவை அடுத்துள்ள திறந்த வெளிக்குச் சென்றார்.

ராஜாஜி

திருச்செங்கோட்டில் சத்தியாக்ரகம் செய்ததற்காக, ஆறுமாதச் சிறைத் தண்டனை பெற்றுக் கோவைச் சிறையில் அதை அனுபவித்த சக்கரவர்த்தி இராஜ கோபாலாச்சாரியார் அத்தண்டனை முடிந்து இன்று காலையில்தான் விடுதலையானார். காந்திஜி திருப்பூரில் இருக்கும்போது, அவர் வேறு எங்கே செல்வார்? அவரது நண்பரான பெரியார் ஈ. வே. இராமசாமியின் காரில்* நேரே திருப்பூர்ப் பொதுக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தார். காந்திஜி மேடையி லிருந்து இறங்கி வந்தபோது இருவரும் சிறிது நேரம் உரை யாடினார்கள். வட்ட மேசை மாநாட்டிற்குச் சென்றிருந்த போது, இலண்டனில் மூரியல் லெஸ்டர் என்ற பெண்மணி யின் இல்லத்தில் காந்திஜி தங்கியிருந்தது உலகம் அறிந்ததே. அந்த அம்மையாரும் அவருடைய அண்ணன் மகளாகிய குமாரி ஹாக் என்பவரும் காந்திஜியைக் காணத் திருப்பூ ருக்கு அன்று வந்து சேர்ந்தார்கள். (பொதுக்கூட்டத்தில் நகராட்சி மன்றத்தின் வரவேற்பை அதன் தலைவரான கே. ஆர். இராயப்ப கவுண்டர் படித்தார்; கதர் ஊழி யர்கள், காதி சங்கம் சார்பாக ஒரு வரவேற்புரை அளிக்கப் பெற்றது; நகரப் பெர்துமக்களின் பண முடிப்பை பி. டி. ஆஷர் அளித்தார். கதர் ஊழியர்களும் இராமகிருஷ்ண லஞ்சுஹோம் சின்னுசாமி ஐயரும் மாணவர்களும் தனித்தனி யாகப் பண முடிப்புக்கள் அளித்தனர்; அரிஜன முன்னேற்றத் திற்காகத் திருப்பூர் நகராட்சி செய்து வந்த சேவைகளை அண்ணல் பாராட்டினார்.) திருப்பூர் என்றாலே கதர்தான் நினைவிற்கு வரும். ஆகவே, இங்குக் கதரைப்பற்றி காந்திஜி கூறியதற்குத் தனி முக்கியத்துவம் உண்டு. ''கதர் வணி கர்கள் அளித்த வரவேற்புரையை நான் படித்துப் பார்த்தேன். அரிஜனங்களின் வாழ்வில் கதருக்கு எவ்வளவு முக்கி யத்துவம் உண்டு என்பதை நான் அறிவேன். அனைத்

*டி. எஸ். எஸ். ராஜன் ''தமிழ் நாட்டில் காந்தி''

திந்திய நூற்போர் சங்கத்தின் அத்தாட்சி பெறுத கதரை வாங்கக் கூடாதென்று மக்களை நாம் எச்சரிக்க வேண்டும். கதரின் முக்கியத்துவத்தைக் குறித்து நான் கொண்டிருந்த கருத்தை மாற்றிக்கொண்டு விட்டேன் என்று ஒரு வதந்தி இங்கு உலவி வருவதாக அறிகிறேன். இது சரியல்ல. என் கருத்து எள்ளளவும் மாறவில்லை என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சொல்லப்போனால், அனுபவத்தின் காரணமாக, கதரில் நான் வைத்திருந்த நம்பிக்கை மேலும் வலுப்பட்டுக் கொண்டுதான் வருகிறது. தீண்டாதாரின் துயரைத் தீர்க்கக்கூடியது கதரே என்ற முழு நம்பிக்கை எனக்குண்டு'' என்று காந்திஜி கூறினார்.

கதர் பற்றி பேட்டி

காந்திஜி அன்று பி. டி. ஆஷர் இல்லத்திற்குச் சென்று உணவு அருந்தி ஓய்வு எடுத்துக் கொண்ட பின், அங்கு திருப்பூரைச் சேர்ந்த கதர் வணிகர்கள் காந்திஜியைப் பேட்டி கண்டு பேசிய போது, போலிக் கதர் பற்றிய சிக்கல் வந்தது. சில ஆண்டுகளாகவே கதர் செலவாகாமல் தங்கி விடுகிறதென்றும் இதனால் மூலதனம் முடங்கிப் போய், நெசவுக்காரர்களுக்கும் ஆண்டு முழுதும் வேலை கொடுக்க முடியாமல் போய்விடுகிறது என்றும் அவர்கள் கூறினார்கள். தங்களிடம் உபரியாகத் தங்கிப் போன சரக்குகளையெல்லாம் அதுவரை அனைத்து இந்திய சர்க்கா சங்கத்தார் வாங்கி வந்ததாகவும் ஆனால் அந்த உதவியை நிறுத்தி விட்டதாகவும் இது குறித்து காந்திஜி ஏதாகிலும் ஒரு வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றும் இல்லையேல் கதர் உற்பத்திக்குப் பெரிய ஆபத்து ஏற்படும் என்றும் அவர்கள் முறையிட்டார்கள். இதற்கு மகாத்மா அளித்த மறுமொழி இன்றுகூட நாம் அனைவரும் மனதிற் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய ஒரு அருமறையாகும். அவர் சொன்னார் : ''இந்தியாவில் முதன் முதலாகக் கதர் இயக்கத்தில் ஈடுபட்டது தமிழ் நாடு. அதிலும் திருப்பூர் தலைமை வகித்து இந்தியாவின் மற்றப் பாகங்களுக்கெல்லாம் கதர் அளிக்கும் நிலையை அடைந்தது. கதருக்குக் கிராக்கி அதிகமாகவே பல வணிகர்கள் விரைவில் பணம் திரட்டி விடவேண்டும் என்கிற ஆசையால் தொழில் முறையில் ஒழுங்கினமாக நடக்கத் தொடங்கி விட்டார்கள். கேவலமான சரக்குகளை விற்றுத் திருப்பூர்த் தொழிலுக்குக் கெட்ட பெயரைக் கொண்டு வந்து விட்டார்கள். பிற்பாடு அனைத்து இந்திய சர்க்கா சங்கத்தாரை எதிர்த்துப் பல மதுறைகளி

கஷ்டங்கள் உண்டாக்கினார்கள். கடைசியாகத் தான் சர்க்கா சங்கத்தாரின் விலைத் திட்டத்திற்கு உள்ளடங்கி வேலை செய்ய உடன்பட்டார்கள். இதற்குள்ளாக ஆங்காங்கு மாநிலங்களில் சர்க்கா சங்கம் நிறுவப்பட்டு அங்கெல்லாம் கதர் உற்பத்தியாகத் தொடங்கியதும் திருப்பூர்க் கதரைத் தேடுபவர் இல்லாமல் போயினர். சர்க்கா சங்கத்தாரும் தங்களால் இயன்ற அளவு கட்டுக் கிடையாக இருந்த கதரை வாங்கி விற்பனை செய்தார்கள். மேலும் திருப்பூர்க் கதரில் ரகங்கள் இல்லை. மற்ற இடங்களிலே தேவைக்குத் தகுந்த சரக்குகள் தயாரித்து, மார்க்கெட்டின் கிராக்கிக்குத் தகுந்தபடி விற்பனை முறைகளைக் கையாண்டு வருகிறபடியால் திருப்பூர் வியாபாரிகளுக்கு வாணிகம் குறைந்து விட்டது. மற்ற மாகாணங்களில் எப்படி வேலை நடக்கிற தென்பதை நீங்கள் போய்ப் பார்க்க வேண்டும். சர்க்கா சங்கம் எவ்வளவு காலம் உங்களுக்கு உதவி புரிய முடியும்? பத்து ஆண்டுகள் உதவி செய்த பின்புகூட நீங்கள் உங்கள் தொழிலை இலாபகரமாகச் செய்யத் தெரிந்து கொள்ளாவிடில் நீங்கள் வாணிகத்திற்கு உதவ மாட்டீர்கள் என்றுதான் நான் நினைப்பேன். கால நிலையைக் கவனித்துச் சமயத்திற்கு ஏற்றாற் போல துணிகளைத் தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். உடை உடுக்கும் முறையில் மக்களின் மனத்தை உருப்படுத்துவதே உங்கள் கடமையாகும். அந்தக் கடமையை உண்மையுடனும் கருணையுடனும் அதிக இலாபத்தைக் கருதாமலும் கதர் இயக்கத்தின் குறிக்கோளுக்கு ஏற்ற முறையிலும் செய்து வாணிகம் செய்தால் உங்கள் தொழிலுக்கு ஒரு காலும் இடையூறு ஏற்படாது.'' (வெள்ளி பிரேம் போடப் பெற்ற காந்திஜி படம் ஒன்றை பி. டி. ஆஷர் அண்டு கம்பெனியார் காந்திஜிக்கு அன்பளிப்பாக வழங்க, அதைப் பஞ்சு வணிகர்களின் சார்பாக எம். கே. கே. குமாரசாமி செட்டியார் ஏலத்தில் எடுத்து ''இந்தப் போட்டோவை நாங்கள் திருமதி பத்மாவதி ஆஷருக்கு அன்பளிப்பாக வழங்கப் போகிறோம்'' என்று கூறினார். காந்திஜி வந்தபோது திருமதி ஆஷர் திருப்பூரில் இல்லை. கே. எஸ். குமாரசாமி கவுண்டரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் அரிஜன நிதிக்காகத் தங்களுடைய நகைகளை இங்கு காந்திஜியிடம் வழங்கினார்கள். ஏ. ஆர். குருமூர்த்தி நாயுடுவின் குமாரத்தியாகிய குமாரி சாரதா ஒரு வீணை உயர்ந்த கம்பளி காந்திஜியிடம் அளித்தார்.)

திருப்பூர் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. நக ராட்சிப்பள்ளிகள், அலுவலகங்கள் எல்லாவற்றிற்கும் அன்று விடுமுறைவிட்டு விட்டார்கள். ஆனாலும் காந்தி

அம்துஸ்சலாம்

ஜியின் மனத்திற்கு வருத்தந் தரத்தக்க ஒரு சிறு நிகழ்ச்சி இங்கு நடந்துவிட்டது. காந்திஜி குழுவினரில் ஒருவராக வந்தவரும் சபர்மதி ஆசிரமத்தைச் சேர்ந்தவருமான குமாரி அம்துஸ் இங்கு வருவதற்கு முன்பே காய்ச்சலால் பீடிக்கப் பெற்றிருந்தார். இங்கு வந்தபோது அவருடைய காய்ச்சல் அதிகமாகி விட்டது. ஆகையால் அவரைத் திருப்பூரிலேயே, பி. டி. ஆஷரின் இல்லத்தில் குமாரி கே. கே. பத்மாவதி அம்மாள், ஒட்டப்பாளையத்தைச் சேர்ந்த குமாரி கே. கே. நாராயிணி அம்மாள் ஆகியோருடைய பொறுப்பில் காந்திஜி விட்டு விட்டுச் சென்றார். பல்லடம் வழியாகக் கோவைக்கு வந்த போது பல்லடத்திலும் சூலூரிலும் வெயிலையும் பொருட் படுத்தாது மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். வழக்கம் போல் வரவேற்புரைகளும் பண முடிப்பும் அளிக்கப்பெற்றன.

கோவைக்குச் செல்லும் முன், ஒய். எம். சி. ஏ. கிராமப் புனருத்தாரண நிலையத்தைப் பார்வையிடுவதற்காக, இராம நாதபுரத்தில் (கோவை சுற்றுப்புறப் பகுதியில்

கோவை

உள்ள ஓர் ஊர்) அவர் இறங்கினார். இதன் செயலாளரான ஜெயகரன் காந்திஜியை வர வேற்று, அதன் பகுதிகளைச் சுற்றிக் காண்பித் தார். அங்குத் தேனீ வளர்ப்பது எப்படி நடைபெறுகிறது என்பதை காந்தியடிகள் நீண்ட நேரம் ஊன்றிக் கவனித் தார். ஜெயகரனுடைய குழந்தை ஒரு வெள்ளிக் கூஜா நிறையத் தேனும் (இந்த நிலையத்திலேயே எடுக்கப்பெற்றது) ஒரு வெள்ளித்தட்டில் நாணயங்களாக ஐம்பது ரூபாயும் வைத்து அளித்தது.

மிகவும் அமைதியாக நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்குப் பின், நேரே கோவை மாதர் கூட்டத்திற்கு வந்து அவர் பங்கு கொண்டபோது முற்றிலும் நேர்மாறான

பெண்கள் கூட்டம்

நிலைமை இருந்தது. வழக்கம் போன்று பெண் கள் கூட்டம் அதிகம்; வழக்கம்போலவே கூச்சலும் குழப்பமும் அதைவிட அதிகமாக இருந்தது. ஒய். எம். சி. ஏ. கட்டிடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தை அமைதியாக இருக்குமாறு பன்முறை

காந்திஜி கேட்டுக்கொண்டது பயன் அளிக்க வில்லியாகை யால் கால் மணி நேரத்தில் அவர் புறப்பட்டுவிட்டார். அரிஜன மாணவர் விடுதிக்கு காந்திஜி வந்து, அங்குத் தங்கி யிருந்த மாணவர்களிடம் அவர்களுக்கு நல்ல உணவு அளிக்கப் பெறுகிறதா, அவர்கள்மீது போதிய கவனம் செலுத்தப் பெறுகிறதா என்பதையெல்லாம் நுணுக்கமாக விசாரித்தார். பின்னர் குஜராத்திகள் கூட்டத்திற்குச் சென்று வரவேற்பையும் பண முடிப்பையும் பெற்றுக் கொண்டு தாம் தங்கியிருந்த இல்லத்திற்குச் சென்று, அரிஜன தலைவர்களுக்குப் பேட்டி அளித்தார்.

பொதுக் கூட்டம்

இந்தச் சுற்றுப்பயணத்திலேயே மதுரைக்குச் சமமான ஒருகூட்டம் கோவையில்தான் நடைபெற்றது. மற்ற இடங்களில் இல்லாத ஒரு புது வகை ஏற்பாடு இந்தக் கூட்டத்தில் செய்யப்பெற்றிருந்தது. காந்திஜியின் சொற்பொழிவு தொடங்குவதற்கு முன்னால், மக்களுக்குக் காட்சி கொடுப்பதற்காகக் கூட்டத்தின் மத்தியில் தனியாக ஒரு மண்டபம் போன்று நிர்மாணிக்கப் பெற்றிருந்தது. முதலில் இந்த மண்டபத்தில் வரவேற்புப் பத்திரங்கள், பண முடிப்புக்கள், நகைகள், நன்கொடைகள் அளிக்கப்பெற்றன. இதன் பின்னர், மகாத்மா சொற்பொழிவு மேடைக்கு அழைத்துச் செல்லப் பெற்றார். கூட்டம் அமைதியாக இருந்தது. (இந்தக் கூட்டத்தில் நகராட்சி மன்றத்தின் சார்பாக ஒரு வரவேற்புப் பத்திரத்தை அதன் துணைத் தலைவரான ஆர். கே. வெங்கடாசலம் ஒரு வெள்ளிப் பேழையில் வைத்து அளித்தார்; கோவை மாவட்டக் கழகத்தின் சார்பாக வி. சி. வெள்ளிங்கிரி கவுண்டர் ஓர் வரவேற்புப் பத்திரமும் கோவை தாலுகா போர்டும் அரிஜன சேவா சங்கத்தாரும் தனித்தனி வரவேற்புப் பத்திரங்களும் படித்து அளித்தனர்.) தீண்டாமை ஒழிக்கப் பெறுவதில், தலைவர்களுடைய பங்கே மிக முக்கியமானது என்பதை இந்தக் கூட்டத்தில் காந்திஜி வலியுறுத்தினார். ''தீண்டாமை அடியோடு ஒழிக்கப் பெறுவிட்டால் அது பொதுமக்களின் குற்றமாகாது; தீண்டாமை ஒழிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள், தலைவர்கள் ஆகியோரின் குற்றமே அது'' என்று எச்சரித்தார். ''கோவைக்கு மூன்று அல்லது நான்கு மைல்களுக்குள் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த அரிஜனங்கள் சாதி இந்துக்களால் தொல்லைப்படுத்தப்படுகிறார்கள்; அவர்

களுடைய ஊழியத்தைப் பெறக்கூட சாதி இந்துக்கள் மறுத்து விடுகிறார்கள் என்று அறிகிறேன்!'' என காந்திஜி இக்கூட்டத்தில் வருத்தத்துடன் வெளியிட்டார். இந்நகரில் உள்ள தலைவர்கள் சிலர் அந்தக் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள சாதி இந்துக்களுக்கும் அரிசனங்களுக்குமிடையே சமரசம் செய்து வைக்கலாம் என்றும் அவர் யோசனை கூறினார். தம் பேச்சை முடிப்பதற்குள் ''இந்து'' பத்திரிகையின் அதிபரான ஏ. ரெங்கசாமி ஐயங்கார் காலமான தற்கு இரங்கல் தெரிவித்து, ''பத்திராதிபராலுலும் சரி தேசியத் தொண்டராலுலும் சரி அவர் இடத்தை நிறைவு செய்ய வேறொருவர் கிடைக்க மாட்டார். அவருடைய உழைப்பும் அறிவும் முக்கியமான சமயங்களில் காங்கிரசுக்கு உதவின'' என்று புகழ்ந்து கூறினார்.

இக்கூட்டம் முடிந்தவுடன் பீளமேடு சென்று பி. எஸ். ஜி. இண்டஸ்டிரியல் இன்ஸ்டிடியூட் நிறுவனத்தில் ராவ் பகதூர் பி. எஸ். ஜி. ரங்கசாமி நாயுடு அளித்த பண முடிப்பைப் பெற்றுக் கொண்டார். இந்த நிதியைக் கொடுத்தபின், காந்திஜியிடம் ஒரு நோட்டை நீட்டி அதில் கையொப்பங் கேட்டார்கள். ஆனல் காந்திஜியா ஏமாறுபவர்? ''ஐந்து ரூபாய் எங்கே? நீங்கள் கொடுத்த ஐநூறு ரூபாய் கையொப்பத்திற்காக அல்லவே?'' என்று சிரித்துக் கொண்டே கூறி விட்டார். இத்தனை காரியங்களையும் காரில் உட்கார்ந்த படியே காந்திஜி நடத்திக் கொண்டிருந்தார். ''தயவு செய்து காரில் இருந்து இறங்கி எங்களுடைய தொழிற்சாலையைச் சுற்றிப் பாருங்கள்'' என்றார் ரெங்கசாமி நாயுடு. ''நான் இறங்க வேண்டுமா? அப்படியானல் பணம் கொடுக்க வேண்டுமே?'' என்றார் காந்திஜி.

பீளமேடு

ரெங்கசாமி நாயுடு: ரூ. 25 தருகிறேன்.

காந்திஜி: ''நீங்கள் ஒரு கஞ்சர்!'' காந்திஜி எழுந்திருக்கவில்லை.

கடைசியில் ஐம்பது ரூபாய் கொடுப்பதாகச் ''சமரசம்'' பேசி காந்திஜியைத் தொழிற் சாலைக்குள் அழைத்துச் சென்றார்கள்.

அந்த இன்ஸ்டிடியூட்டின் சொந்தக்காரரான ஒரு வயதான அம்மாள் வந்தபோது அந்த அம்மையாரை முதுகில் தட்டி, ''நீங்கள் என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?'' என்று காந்திஜி கேட்டார். அந்த அம்மையார் குனிந்து காந்திஜியின் கால்களைத் தொட்டு வணங்கினார். மறுபடியும் நிமிர்ந்த போது, அந்த அம்மையாரின் முகவாயைத் தம் விரல்களால் தாங்கி ''கல, கல'' வென்று காந்திஜி சிரித்தார். இதன் பின்னர் மதுரை தேவி பாலவிஜய சங்கீத நாடக சபையா ரால் நடத்தப் பெற்ற நந்தனார் நாடகத்தைப் பார்க்கச் சென்றார்.

வயதான அம்மை

ஒரு (அரிச்சந்திர) நாடகம் பார்த்ததால் சத்தியத்தின் மீது அழுத்தமான நாட்டம் வரப்பெற்ற சத்திய கீர்த்தியான மகாத்மா காந்தி பிற்காலத்தில் நாடகமோ, திரைப்படமோ பார்த்தது மிகவும் அபூர்வம். வேண்டிக் கேட்டுக்கொள்ளும் ஒரு சில இடங் களில் அவர் பக்தி நாடகங்கள் பார்ப்பதுண்டு. 1934-ஆம் ஆண்டு கோவையில் மதுரை தேவிபால விஜய சங்கீத சபையார் நடத்திய நந்தனார் நாடகத்திற்குச் சில நிபந்தனைகளுடன் வர ஒப்புக்கொண்டார். இந்த நாடகத் திற்கு அண்ணல் வரவேண்டும் என்று குன்னூரில் அவர் ஓய்வு எடுத்துக்கொண்டிருந்த போதே கேட்டுக் கொண் டனர். முதலில் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. ஆனாலும் நவாப் இராஜமாணிக்கம் பிள்ளையைப் பற்றியும் இந்தக் கம்பெனியின் நாடக ஆசிரியரும் காந்திபாகவதர் என அழைக்கப்பெற்றவருமான ராஜாராம் பாகவதரின் காந்தி பக்தியையும் - இவர் அந்தக் காலத்திலேயே காந்தி சரித் திரத்தை ஹரிகதையாக நடத்தி வந்தவர் - அடிகளுக்கு விவரமாக எடுத்துக் கூறியதன் பேரில் கோயம்புத் தூருக்கு வரும்போது ஐந்தே ஐந்து நிமிடங்கள் நாட கத்திற்கு வந்து போவதாக காந்திஜி ஒப்புக்கொண் டிருந்தார். நாடகம் நடத்துபவர்கள், அன்றைய வசூலை - தங்கள் செலவிற்காக ஒரு பைசாக்கூட எடுக்காமல்- அரிஜன நிதிக்குக் கொடுத்து விடவேண்டும் என்பது அண்ணலின் நிபந்தனை. இவ்வாறு கூறிவிட்டு, ''அன்று என்ன வசூலாகு மென எதிர் பார்க்கிறீர்கள்?'' என்று வந்திருந்தவர்களை காந்திஜி கேட்டார். சுமார் இரண்டாயிரம் ரூபாய் எதிர் பார்ப்பதாக அவர்கள் சொன்னார்கள். ஆகவே காந்திஜி

நாடகம் வர ஒப்புதல்

உடனடியாக, அன்று நாடகத்தை விளம்பரப்படுத்துவதற்கு முன்பு ஆயிரத்து ஐநூறு ரூபாய் ரொக்கமாக்கக் கட்டிவிட வேண்டும் என்றும் அது அரிஜன நிதிக்குச் சேரவேண்டும் என்றும் அதற்கு மேல் வந்தால் அத்தொகையை பீகார் பூகம்ப நிவாரண நிதிக்குக் கொடுத்து விடவேண்டும் என்றும் கூறினர்.

நாடக வசூல் அன்று அமோகமாக இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். ஆனால் அதற்கு நேர் மாறாக வசூல் அன்று மிகவும் குறைந்து விட்டது. நாடகத்திற்கு முன்னர்ப் பொதுக் கூட்டம் நடைபெற்று விட்டதால் ''பொதுக் கூட்டத்தில்தான் காந்திஜியைப் பார்த்து விட்டோமே, இனி எதற்கு நாடகத்திற்குப் போக வேண்டும்?'' என்று பலர் வீட்டிற்குப் போயிருக்க லாம். மேலும், நாடகம் நடைபெற்ற இடத்திற்கு வரும் சாலையில், காந்திஜி வருவது சாத்தியமில்லாத அளவு கூட்டம் நிரம்பி வழிந்து கொண்டிருந்ததைக் கண்டு போலீசார் மிரட்டலுக்காகத் தடியைச் சுழற்றி மக்களைக் கலைத்து காந்திஜிக்கு வழிவிட ஏற்பாடு செய்தனர். இதனாலும் மக்கள் கலைந்து சென்று விட்டனர். ஆகவே அன்று வசூல் ரூ. 150 தான்! மகாத்மா வந்த பிறகுதான் நாடகம் தொடங்கிற்று. முதலில் ஐந்து நிமிடங்கள் என்று சொன்னவர் சுமார் இருபது அல்லது இருபத்தைந்து நிமிடங்கள் இருந்தார். காந்திஜியை மேடைமீது ஆசனம் போட்டு அமர வைத்தார்கள்.

நாடகம் பார்த்தார்

இந்த நாடகத்தில் நாடகத்திற்குச் சம்பந்தமில்லாத ஒரு பபூன் வேஷம் உண்டு. ஒரு சிறு பையன் இந்த வேஷம் போட்டிருந்தான். இவன் நாடகத்திற்கு இடையிடையே வந்து கேளிக்கையாக ஏதாவது நடித்து விட்டுப் போவான். இவன் கண்ணில் கண்ணுடியில்லாத ஒரு பிரேம் மாட்டியிருந்தான். கீழேயிருந்து பார்ப்பவர்களுக்குக் கண்ணுடியிருப்பது போல் தோன்றும். காந்திஜி அவனை சமிக்ஞை காட்டித் தன்பக்கம் வரச் செய்தார். அவன் கண்ணுடி பிரேமுக்குள் இரண்டு விரல்களை விட்டுக் கண்ணுடியை இழுத்து, அது உண்மைக் கண்ணுடியா என்று பார்த்தார்! கைதட்டி எல்லோரும் சிரித்தார்கள். யாருக்கும் தெரியாமல் இவன்

பபூனிடம் கேளிக்கை

நெஞ்சில் ஒரு காந்தி படம் ஒட்டப்பட்டிருந்தது. அதற்கு மேலே கொடிச் சின்னமாக மூவர்ணக் கதராடை அணிவிக்கப் பட்டிருந்தது. மார்பைப் பிளப்பது போல் அந்த ஆடையை விலக்கினதும் ''எப்போதும் எங்கள் நெஞ்சத்தில், மகாத்மா, நீங்கள் இருக்கிறீர்கள்'' என்று அவன் காண்பித்தான். அப்போது காந்திஜி பலமாகச் சிரித்தார். கொட்டகையில் பெரிய கைதட்டல் ஏற்பட்டது. மகாத்மாஜிக்கு நாடகத் தலைவர் வரவேற்புப் பத்திரம் அளித்தார். இந்நாடக விழாவின்போது வரவேற்பையும் மேற்கண்ட பணமுடிப்பை யும் தவிர இக் கம்பெனியின் ஓவியரும் ரஸிவர்மாவின் சீடரு மான தேவராஜ ஐயர் ஒரு காந்தி படமும் நவாப் ராஜ மாணிக்கம் ஒரு (நவரத்தின) மோதிரமும் அளித்தனர். கடைசியில் நாடகக் கம்பெனிக்கு நற்சான்றிதழ் ஒன்று எழுதிக் கொடுத்துவிட்டு காந்திஜி சென்றார்.

> I hope that this Sabha's activities will prove beneficial to the Nation.
>
> இந்தச் சபையின் நாடகங்கள் நாட்டிற்கு நன்மை பயக் கும் என்று நம்புகிறேன்.

என்று ஆங்கிலத்தில் எழுதித் தமிழிலும், குசராத்தியிலும் கையொப்பமிட்டிருக்கிறார்.*

கார் விபத்து

இவைகள் எல்லாம் முடிந்து, கோவையிலிருந்து, போத்தனூர் இராமகிருஷ்ண வித்தியாலயத்திற்கு வந்த போது, இரயில்வே 'கேட்'டில் ஓர் விபத்து ஏற் பட்டு விட்டது. போத்தனூர் இரயில் நிலையத்திலிருந்து வித்தியாலயம் சுமார் ஒரு மைல் தூரம் இருக்கும். இதில் சுமார் அரை மைல் தூரத்திற்கு இரயில் பாதையை ஒட்டிச் செல்லும் சாலை பின்னர் இரயில் பாதையைச் சதுரமாகக் குறுக்கிட்டுச் செல்கிறது. கோவையிலிருந்து போத்தனூர் வந்ததும் இடது கைப்பக்கம் திரும்பிச் செல்லும் சாலை வளைந்து செல்வதால் காரை ஓட்டிச் செல்பவர்களுக்கு, திருப்பத்தில் உள்ள அந்த 'கேட்' சாதாரணமாகத் தெரியாது. காந்திஜி வந்த காரை ஓட்டி வந்தவர் கெட்டிக்காரர், காந்திஜியின் காரை ஓட்டுவதற்கென்றே சென்னையிலிருந்து சிபார்சு

*நவாப் ராஜமாணிக்கம் பேட்டி.

செய்யப்பெற்று வந்த இவருடைய பெயர் கைமால் என்ப தாகும். காரோட்டிக்கு வழி காண்பிப்பதற்காக, டி. எஸ். அவினாசிலிங்கம் காரோட்டியின் பக்கத்தில் அமர்ந்திருந்தார். உட்புறத்தில் தக்கர், மூரியல் லெஸ்டர், திருமதி ஹாக், மகாத்மா காந்தி ஆகியோர் அமர்ந்திருந்தார்கள். அந்தப் பாதைக்கு மோட்டார் ஓட்டி கைமால் புதியவர். காரோ சுமார் நாற்பது மைல் வேகத்தில் சென்று கொண் டிருந்தது. முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த அவினாசிலிங்கம், பின் ஆசனத்திலிருந்த காந்திஜியுடன் பேசிக்கொண்டு வந்த தால் இரும்புக் கதவின் பக்கத்தில் வந்து விட்டதைக் கவனிக்கவில்லை. சாலையில் திடீரென்று கார் திரும்பியபோது, இரயில்வே கதவு மூடப்பெற்றிருந்தது கைமாலுக்குத் தெரி யாததாலும் வந்த வேகத்தில் காரை நிறுத்த முடியாமற் போனதாலும் இரும்புக் கதவில் கார் மோதியது. வேகத்தில் மோதியதால் கதவின் பேரில் நாட்டப்பட்டிருந்த எச்ச ரிக்கை ராந்தல் தூக்கி எறியப்பட்டு, மோட்டாரின் முன் புறம் காரோட்டியும் அவினாசிலிங்கமும் அமர்ந்திருந்த இடத் திற்கு மத்தியில் விழுந்தது. இரும்புக் கதவும் முனையி லிருந்து பிடுங்கிக்கொண்டு இரயில்வே தண்டவாளத்தில் சாய்ந்துவிட்டது.

காந்திஜி சிரித்தார்

காந்திஜி என்ன சொல்லி விடுவாரோ என்று அவினாசிலிங்கத்திற்குப் பயம். ஆனால் மகாத்மாஜியோ சிரித்துக்கொண்டே "அவினாசி, என்ன நேர்ந் தது?" என்று அன்புடன் கேட்டார். இத னால் அவர் பாதிக்கப்படவும் இல்லை; யார்மீதும் வசை மொழி கூறவுமில்லை. உடனே இறங்கி. வித்தியாலத்தை நோக்கி நடந்து செல்லத் தொடங்கிவிட்டார். காந்திஜி வந்த காரிலிருந்து நிறையத் தூசி எழுந்ததால், டாக்டர் ராஜன் வந்த கார் சற்றுத் தொலைவிலேயே வந்து கொண்டிருந்தது. அவர் இந்த இடத் திற்கு வந்து சேர்ந்தபோது காந்திஜியும் மற்ற சகாக்களும் இரயில்வே கேட்டைத் தாண்டி நடந்து செல்வதைக் கண்டார். விபத்தில் அகப்பட்ட காரில் உட்கார்ந்திருந்த கைமால், டாக்டர் ராஜனைக் கண்டவுடன் மூர்ச்சையாகி விட்டான். அவன் முகத்தில் தண்ணீர் தெளித்துத் தட்டிக் கொடுத்து அவனுக்கு நினைவு வருமாறு செய்தார்கள். மகாத்மா காந்தி பயணம் செய்த கார் அவருக்காகவென்றே சென்னையிலிருந்து தயார் செய்து கன்னியாகுமரிக்குக்

கொண்டு செல்லப் பெற்ற அதே கார்தான். அன்று காந்திஜி உயிர் பிழைத்ததற்கு ஆண்டவன் அருளும் அந்தக் கார் உறுதியாக இருந்ததும்தான் காரணங்கள் என்று சொன்னால் தவறு எதுவும் இல்லை. எல்லோருமாகச் சேர்ந்து 'கேட்' டைத் தூக்கி அப்புறப்புடுத்தி விட்டு, நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு வித்தியாலயம் சேர்ந்தார்கள். ஆனால் அங்கோ விபத்து நடந்ததைப் பற்றிய எண்ணமே கிஞ்சிற்றும் இல்லாமல் அண்ணல் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்!

உடனே தூங்கவில்லை

அன்று பல ஊர்களுக்கு அலைந்து பல கூட்ட நிகழ்ச்சி களில் பங்குகொண்டு ஒரு கார் விபத்திற்குப் பின் வித்தியா லயம் போய்ச் சேர்ந்த காந்திஜி, அங்குச் சென்றவுடன், ''அப்பாடா, இன்றைய வேலை முடிந்தது'' என்று எண்ணிக் கட்டிலின் மேல் படுத்துத் தூங்கிவிடவில்லை. அண்ணல் தங்கள் விடுதிக்கு வந்ததைப் பெரும்பேறுகக் கருதிய மாணவர்கள் அவர் வரும் வரை விழித்திருந்து அவருக்கு வணக்கம் தெரி வித்தனர். மாணவர்களுடன் அண்ணலும் சிறிது நேரம் அள வளாவிவிட்டு, தமக்கு வந்திருந்த தபால்களைப் பார்த்தார்; அன்று வசூலான தொகைகளின் கணக்கைப் பார்த்தார். பின்னர் தான் அவர் தூங்கப்போனார்.

7-2-34

அடிக்கல் நாட்டுதல்

மறுநாள் காலையில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலய புதுக் கட்டிடத்திற்கு அடிப்படைக் கல் நாட்டு விழா நடை பெற்றது. வித்தியாலயத்திலிருந்து அவர் புறப்படுவதற்கு முன்பு, ஆசிரியர் ஒருவர், தாம் வரைந்த காந்திஜியின் படம் ஒன்றில் அவர் வந்த நினைவாக கையொப்பமிடுமாறு கேட் டுக் கொண்டபோது ''I hope that the boys of the Vidyalaya will be strong in truth and faithful to God'' [இந்த வித்தி யாலய மாணவர்கள் உண்மையில் உறுதியுள்ளவர் களாகவும் கடவுளுக்கு விசுவாசமுள்ளவர்களாகவும் இருப்பார்கள் என நம்புகிறேன்.] என்று எழுதி அதன் அடியில் குசராத்தியிலும் தமிழிலும் கையொப்பங்களைப் போட்டுக் கொடுத்து விட்டு அடிக்கல் நாட்டு விழா விற்குப் புறப்பட்டார். இன்று ஆல்போல் தழைத்துப் பல கல்லூரிகளைத் தன்னுள்ளடக்கிக் கோவைக்குச் சற்றுத்

தூரத்திலுள்ள பெரியநாயக்கன் பாளையத்தில் கம்பீர மாக விளங்கும் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம் முதலில் ஒரே ஒரு அரிஜனப் பையனுடன், ஓர் அணுதை ஆசிரமமாகத் தொடங்கப்பட்டதேயாகும். மகாத்மா காந்தி போத்தானூருக்கு வந்தபோது, அதில் அறுபது மாணவர்கள் இருந்தார்கள். அப்போது அது ஒரு வாடகைக் கட்டிடத் தில் இருந்துவந்தது. வித்தியாலயத்தை நிறுவியவரான டி. எஸ். அவினாசிலிங்கத்தின் அயராத உழைப்பால் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த வித்தியாலயத்தை நிலையாக எங்கு நிறுவுவது என்பதில் ஒரு திட்டமான முடிவுக்கு வரமுடியாமல் இருந்தததால் போத்தனூரில் வித்தியாலயத்திற்குப் பக்கத் திலேயே அவருடைய சகோதரர் டி. எஸ். கல்யாணசுந்தரத்திற்குச் சொந்தமாக இருந்த நான்கு ஏக்கரா நிலத்தில் காந்திஜி யைக் கொண்டு அடிப்படைக்கல் நாட்டுவதென்று முடிவு செய்து அவ்வாறே குறிச்சி சாலையில் உள்ள அந்த நிலத்தில் விழாவையும் நடத்தி வைத்தனர். அன்று ஸ்ரீ இராம கிருஷ்ண வித்தியாலயத்திலிருந்து புறப்பட்டு இங்கு வந்து அடித்தளக்கல் நாட்டி விட்டு, அப்படியே காந்திஜி தம் சுற்றுப்பயணத்தைத் தொடங்கினார். ''இந்த வித்யாலயம் தேசிய ஊழியர்களுக்கு ஒரு கேந்திரமாக இருக்கும் என்றும் இதில் படித்து வெளிவரும் மாணவர்கள் உண்மையைக் கடைப்பிடிப்பவர்களாகவும் வலுவுள்ளவர்களாகவும் தைரிய சாலிகளாகவும் கடவுளுக்குப் பயந்தவர்களாகவும் இருந்து மனித குலத்திற்குச் சேவை செய்வார்கள் என்றும் நம்புவோ மாக,'' என்று அடித்தளக்கல் நாட்டி வைத்து காந்திஜி நம்பிக்கை தெரிவித்தார். பிற்காலத்தில் காந்திஜி வித்தி யாலயத்திற்கு ஒரு முறை கூட வர இயலவில்லை. என்றாலும் அவினாசிலிங்கம் அவரைச் சந்தித்தபோதெல்லாம் ஞாபக மாக வித்தியாலயத்தைப் பற்றி அவர் விசாரிக்கத் தவறிய தில்லை.

பொள்ளாச்சி

போத்தனூரிலிருந்து சரியான நேரத்திற்குப் புறப்பட்ட இரயில் வண்டி.கிணத்துக் கடவு, நல்லட்டிப்பாளையம் ஆகிய இரயில் நிலையங்களில் மக்கள் காந்தியடிகளுக்கு அளித்த வரவேற்புரையையும் பண முடிப் பையும் பெற்றுக் கொண்டு பொள்ளாச்சி வந்து சேர முக்கால் மணி நேரம் பிந்திவிட்டது. அங்கு இருபதாயிரம் மக்களுக்கு மேல் கூடியிருந்த பொதுக்

கூட்டத்தில் நகராட்சி சார்பாகவும் தாலுகா போர்டின் சார்பாகவும் பொது மக்களின் சார்பாகவும் பணமுடிப்பு களும் வரவேற்புரைகளும் அளிக்கப்பெற்றன. விஸ்வகர்ம சங்கத்தினர் வெள்ளியாலேயே செய்யப் பெற்ற ஒரு இராட்டையையும் அளித்தனர்.) ''உங்களுடைய கூட்டத் தைப் பார்த்தால் நீங்கள் தீண்டாமையை வேருடன் ஒழிக்கத் தயாராய் இருப்பதாய்த் தோன்றுகிறது'' என்று அண்ணல் பாராட்டினர். இங்குத் திட்டமிட்டதற்கும் அதிக நேரமாகி விட்டதால், ஏலம் விடுவதைக் கூட நிறுத்திக் கொண்டு உடுமலைப் பேட்டைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

உடுமலைப் பேட்டை

உடுமலைக்குச் சென்ற வழியில் கோமங்கலம் புதூரில் சுமார் ஆறுயிரம் மக்கள் கூடி நின்று மாவட்ட, தாலுகா போர்டு உறுப்புனரான இராமசாமி நாயுடு தலைமையின் கீழ் ஒரு பணமுடிப்பும் வரவேற் புரையும் அளித்தனர். உடுமலைப் பேட்டை யில் நல்ல மதிய நேரத்தில் காந்தியடிகள் போய்ச் சேர்ந்தாரென்றாலும் மக்களின் கூட்டத்திற்கோ உற்சாகத்திற்கோ குறைவில்லாமல் இருந்தது. பழனியாண் டவர் ஆலை காம்பௌண்டுக்குள் உள்ள திறந்த வெளியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் (நகராட்சி மன்றத்தின் சார்பாக கே. செல்லமுத்தும் தாலுகா போர்டு சார்பாக ஆர். வி. குருசாமி நாயுடும் மக்கள் சார்பாக அப்பாவு பிள்ளையும் மாதர்கள் சார்பாக சாவித்திரி அம்மாளும் மாணவர்கள் சார்பாகக் கிருஷ்ணனும் வரவேற்புரை களும் பண முடிப்புகளும் வழங்கினர். இங்கு இராஜாராம் பிள்ளையின் விருந்தினராக காந்திஜி தங்கியிருந்து அவரு டைய இல்லத்தில் மதியம் ஓய்வு எடுத்துக்கொண்டார். உடுமலைப் பேட்டைப் பொதுக்கூட்டத்தில் ஒரு வெள்ளி ஜாடியை காந்திஜி ஏலம் விட்டுக் கொண்டிருந்தபோது ஒரு பன்னிரண்டு வயதுப் பெண் வந்து இரண்டு வளையல் களைக் கொடுத்தாள். அந்தப் பெண் மனமுவந்து தான் அவ்வளையல்களைக் கொடுப்பதாகவும், ஆனால் அவள் தந்தையார் அதை விரும்பவில்லை என்றும் யாரோ காந்திஜியிடம் சொன்னார்கள். ''அப்படியானால் உனக்கும் உன் அப்பாவுக்கும் சண்டைவர நான் காரணமாவேனே?'' என்றார் காந்திஜி. ''இல்லை, மகாத்மா, நான் மனமார அளிக்கிறேன். நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று அப்பெண் மன்றாடினாள். ''நீ வயது வந்த பெண்ணா?''

என்று கேட்டார், அண்ணல். ''எனக்குப் பன்னிரெண்டு வயதாகிறது'' என்றது குழந்தை. இவ்வளவு நீண்ட நேரம் வாக்குவாதம் நடப்பதைக் கண்ட அதன் தகப்பனார் மேடைமீது ஏறி வந்து அவ்வளையல்களை அளிப்பதைத் தாம் அனுமதிப்பதாகக் கூறினார். உடனே காந்திஜி விடுவாரா? ''உங்களுடைய தகுதி என்ன வென்பதை இப்போது நான் தெரிந்து கொண்டேனுதலால் நீங்கள் இன்னும் அதிகம் கொடுக்க வேண்டும்'' என்றார்! இங்கு ஒரு பையனுக்கு ராமன் எனப் பெயர் சூட்டினார்.

வன்னீர் வலசு

உடுமலைப் பேட்டையிலிருந்து பழனிக்குச் சென்ற வழியில், சாலையிலிருந்து விலகி வடக்கே இரண்டு மைல் தூரத்தில் இருந்த வன்னீர் வலசுக்கு காந்திஜி சென்று அங்கிருந்த அரிஜனங்களின் குடியிருப்பைப் பார்வையிட்டது ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த கதையாகும். இந்தக் கதையை டாக்டர் ராஜன் சுவை படக் கூறுகிறார்:

அப்பாவு

''வன்னீர் வலசு என்ற கிராமத்தில் ஸ்ரீமான் அப்பாவு அரிஜனசேவை செய்வதெனத் தீர்மானித்துத் தம் நண்பர் மற்றொருவருடன் குடியேறி வசித்து வந்தார். இவர்கள் அந்த ஊரார் ஆதரவைக் கொண்டு ஹரிஜனங்களின் நன்மதிப்பைத் தம் தொண்டினுலே சம்பாதித்தனர். காந்தியடிகளைத் தங்கள் கிராமத்திற்கு எவ்விதத்திலாவது வரும்படி செய்ய வேண்டுமென்ற ஆசை அப்பாவு அவர்களுக்குத் தோன்றினமையால், தாம் எடுத்த காரியம் சித்திக்க வேண்டிய முயற்சியை இடைவிடாது செய்துவந்தார். திருச்சிக்கு ஒரு முறை, குன்னூருக்கு ஒரு முறை, இவ்விதமாக அலைந்து கடைசியில் தமது விடா முயற்சியால் அடிகள் தம் கிராமத்திற்கு வருவதை நிச்சயம் செய்துகொண்டு போனார்.

காந்தி ரோடு

அந்த ஊருக்குச் சரியான வண்டிப் பாதை இல்லை. அடிகள் வரவேண்டுமானால் கார் போகும்படியான வசதிகள் தேவை. 'வருவதாயிருந்தால் இந்த இடையூறை ஒரு பொருட்டாக நினைக்க வேண்டிய திலலை' என்றார் அப்பாவு. தம் தோழர்களுடனும் கிராம ஜனங்கள் அனைவருடனும் ரஸ்தா போடும் வேலையில் புகுந்தார். பத்துத் தினங்களுக்குள் ளாக இரண்டு மைல் தூரம் கார் போவதற்கான பாதை

உண்டாக்கி அதற்கு 'காந்தி ரோடு' என்று நாமகரணம் செய்து சாலையின் வடபுறத்திலுள்ள மரத்தில் அப்பெயரை ஒரு பலகையில் எழுதிக் கைகாட்டியைப் போல் மாட்டி விட்டார். போக முடியாத ஊருக்குப் பத்து நிமிஷத்தில் போய்ச் சேர்ந்தோம். இந்தச் சேரியைக் கண்டு தாம் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகவும் சேரியின் வளர்ச்சிக்குத் தம்மால் இயன்ற மட்டும் உதவுவதாகவும் அண்ணல் கூறினர். 'இங்கு வாழும் அரிஜனங்கள் குடிபோன்ற கெட்ட பழக்க வழக்கங்களைக் கொண்டிருந்ததாகவும் அரிஜன இயக்க ஊழி யர்களின் பிரசாரத்தின் காரணமாய் அத்தீய பழக்கங்களை அவர்களில் பெரும்பாலோர் விட்டு விட்டதாகவும் தாம் அறிந்து மகிழ்ச்சியடைவதாக' அண்ணல் கூறி விடை பெற்றுக்கொண்டார்.''

பழனி

மாலையில் அவர் பழனிக்கு வந்து பழனிமலை அடிவாரத் தில் நடைபெற்ற பெரிய பொதுக்கூட்டத்தில் பேசினர். அப்போது அவர் மிகவும் உருக்கமாகக் கேட் டார்: ''புனிதமான பழனிமலையின் அடி வாரத்தில் நாம் இப்போது கூடியிருக்கிறோம். ஆயினும் பழனி ஆண்டவர் ஆலயத்தில் அரி ஜனங்களுக்கு அனுமதியில்லை என்பது நாமனைவரும் வெட்கப் படவேண்டிய ஒன்றாகும். ஏன் இவ்வாறு அனுமதி மறுக்கப் படவேண்டும்?'' 'என்னுடைய ஆலயத்தில் இவர்களெல்லாம் நுழையக்கூடாது. இவர்கள் அரிஜனங்கள்' என்று அந்தப் பழனி ஆண்டவர் கூறினாரா? தாழ்ந்தவரினும் தாழ்ந்தவர் நுழையமுடியாத ஓர் ஆலயத்தில் ஆண்டவன் இருக்க மாட் டான் என்பது என் நம்பிக்கை. ஆண்டவன் 'ஆபத் பாந்தவன்', 'அனுதரட்சகன்' என்று தான் நாமெல்லோரும் அறிந்திருக்கிறோம். அவன் இத்தகைய கொடுமைக்காரனாக எவ்வாறு இருக்க முடியும்?'' பகவானுடைய பிரசாதம் காந்திஜியிடம் அளிக்கப்பெற்றது.

திண்டுக்கல்

திண்டுக்கல் மற்றொரு தூத்துக்குடியாகக் காட்சி அளித்தது; கோட்டை மைதானத்தில் திறந்த வெளியில் உயர்ந்த மேடையுடன் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்த அப்பெரும் பொதுக்கூட்டத்தில் மின்சார விளக்குகள் ஒளியைப் பீறிட்டுக் கொட்டின. தூத்துக்குடிக்குச் சென்றபோது எவ்வாறு வழிதவறி தாம்பிரவரணி ஆற்றைக் கண்டு

விட்டுத் திரும்பிப் பழைய பாதைக்கே வந்து தூத்துக் குடிக்குச் சென்றோமோ அது போன்று பழனியிலிருந்து திண்டுக்கல் வந்தபோதும் வழியைத் தவறவிட்டதால் இந்தப் பயணத்திற்கு மூன்று மணி நேர மாகிவிட்டது. (திண்டுக்கல் கூட்டத்தில் நகராட்சி மன்றத்தின் சார்பாக எம். எஸ். பி. சோலை நாடார் வரவேற்புரை வாசித்தளித்தார். தேசிய வாலிப சங்கத்தாரும் மனிதாபிமான சங்கத்தாரும் தனித் தனியாக வரவேற்புரைகள் வாசித்தளித்தனர். இரவு நேரத்திலும் மன்னர்கள் குடைப்பிடிப்பார்கள் என்று கூறுவதுண்டு; அதே போல இங்கு இரவு நேரத்திலேயே காந்திஜி பேசினரென்றாலும் தேசிய வாலிபர் சங்கத்தினர் "The National Youth league" என்று ஆங்கிலத்தில் தங்கள் சங்கத்தின் பெயர் எழுதப்பெற்ற குடையைப் பிடித்தனர். பல ஐரோப்பியர்கள் கூட்டத்திற்கு வந்து மேடையில் அமர்ந்திருந்தனர்.) "பிறப்பை வைத்துக் கொண்டு சிலரை நாம் ஏன் ஆயுள் முழுதும் துன்புறுத்த வேண்டும்? எவ்வளவு விரைவில் தீண்டாமை என்னும் களங்கத்தை நாம் அகற்று கிறோமோ அவ்வளவு நமக்கு நல்லதாகும்," என்று காந்திஜி இங்குத் தம் சொற்பொழிவில் கூறினர்.

பிரார்த்தனை

இந்தக் கூட்டத்தை வேகமாக முடித்துக் கொண்டு பாலுசாமி ஐயர் சத்திரத்திற்கு வந்து காந்திஜியும் அவர் குழுவினரும் தங்கினர்கள். அன்று இரவு அங்குப் பிரார்த்தனைக் கூட்டம் நடத்தி முடித்த வுடன் குப்புசாமி ஐயரின் மனைவியார் காந்திஜியிடம் வந்து இரண்டு வளையல்கள், ஒரு வைர மோதிரம், ஒரு கடிகாரச் சங்கிலி, ரூ. 101 ஆகிய வற்றை அளித்தார். மறுநாள் காலையில் கம்பம் பெரிய குளம் பகுதிகளுக்கு காந்திஜி புறப்பட்டார்.

8–2–34

இருவர் முயற்சி

அந்தக் காலத்தில் திண்டுக்கல் ஒரு தனி காங்கிரஸ் மாவட்டமாக இருந்தது. உத்தமபாளையம், கம்பம் பகுதி களெல்லாம் அம்மாவட்டத்தைச் சேர்ந்த வையே. கிழக்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும் இடையே உள்ள கம்பம் பகுதி இயற்கை எழில் நிறைந்தது; சுற்றுப் பயணம் செய்வோருக்கு உடல் நலத்தையும் மன மகிழ்ச்சியையும் அளிக்கக் கூடியது. என்றாலும், ஒரு

''ஒதுக்குப்புறத்தில்'' இருப்பதால் காந்திஜியின் சுற்றுப் பயணத் திட்டத்தில் அப்பகுதியைச் சேர்க்க முதலில் தயங்கினர். ஆனாலும், இருவர் பகீரத முயற்சி எடுத்துக் கொண்டதனால் இப்பகுதி மக்களுக்கு காந்திஜியைக் காணும் பாக்கியம் கிட்டிற்று. அவர்களில், போடிநாயக்கனூர் நித்தியானந்தம் ஒருவர். 'பாரதி' பத்திராதிபரும், உப்பு சத்தியாக்கிரக காலத்தில் சிறை சென்ற தேச பக்தருமாகிய நாராயணசாமி செட்டியார் மற்றொருவர். ''எங்கள் பக்கம் வந்தால் எங்கள் தாலுகாவில் மட்டும் ரூபாய் ஐயாயிரம் வசூல் செய்து கொடுப்பேன்'' என்று இவர் சொல்லி மலையாள நாட்டிற்குச் சென்று, பிரயாணத்தை ஒருநாள் அதிகப் படுத்தித் தாம் குறிப்பிட்ட ஊர்களுக்கு அடிகள் வருவதற் காகப் பயணத் திட்டம் ஏற்படுத்திக் கொண்டு வந்து விட்டார். தெய்வாதீனமாக மதுரையில் மழை வந்த காரணத்தால் தமிழ்நாட்டுப் பயணம் பத்து நாள் அதிகரித்த வுடன் தேவாரப் பகுதியின் பணமும் ஒரு நாளிலிருந்து இரண்டு நாளாக்குக் கூடிற்று. அவருடைய வெற்றியின் பலனாக நித்தியானந்த சுவாமியின் போடிநாயக்கனூரும் சுற்றுப்பயணத்தில் சேர்க்கப்பட்டது. ஆனால், மகாத்மா அங்கு செல்வதற்குப் பத்து நாட்களுக்கு முன்பாகப் பிளேக் நோய் போடிநாயக்கனூரில் பரவிற்று. ஆகையால் பக்கத்தில் உள்ள போடி விலக்குடன் அண்ணல் நின்றுவிட்டார்.

வத்தலக் குண்டு

திண்டுக்கல்லிலிருந்து புறப்பட்ட காந்திஜி (வத்தலக் குண்டு அருகே உள்ள ஓட்டுப்பட்டி என்ற கிராம அரிஜனங்கள் சங்கர ஐயர் தலைமையின் கீழ் அளித்த வரவேற்பையும் வத்தலக்குண்டு பஞ்சாயத்து அலுவலகத்தின் முன் அதன் தலைவர் ஆரோக்கியசாமி படித்து அளித்த வரவேற்பையும் வடுக பட்டியில் பொதுமக்களும் அரிஜனங்களும் தனித்தனியாக அளித்த வரவேற்புக்களையும் பணமுடிப்புக்களையும் பெற்றுக்கொண்டு) பெரியகுளம் வந்து சேர்ந்தார். வத்தலக் குண்டில் முஸ்லிம்கள் தாராளமாக அளித்த நிதி உதவியை - குறிப்பாக கே. எஸ். அப்துல்காதர் ராவுத்தரின் தாராளத்தை - காந்திஜி பாராட்டினார். ''தீண்டாமைக்கு அடிப்படையானது உயர்வு - தாழ்வு என்ற வேற்றுமை உணர்ச்சி தான். அதை நீங்கள் அகற்றுங்கள். இந்து மதத்தினரிடையே ஐக்கியம் வளரும் என்பது மட்டும் அல்ல. இந்து முஸ்லிம் ஐக்கியமும் வளரும்'' என்றார் காந்திஜி.

வடுகபட்டியில் அரிஜனங்கள் தங்களுடைய வரவேற் புரையை அச்சடிக்காமல் கையால் எழுதிக் கொடுத்தது காந்திஜியின் கருத்தைக் கவர்ந்தது. அதைப் பாராட்டி, ''வரவேற்புரைகளை அச்சடிப்பது வீண் செலவே. பிரேம் போடாமலே வரவேற்புரைகளை அளித்தால் இன்னும் நான் பாராட்டுவேன்,'' என்று சொன்னார்.

பெரியகுளம் தேனி

பெரியகுளத்தில் சந்தை கூடும் இடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஒரு மகிழ்ச்சி அவருக்குக் காத்திருந்தது. (பெரியகுளம் அரிஜன சேவா சங்கம், இந்திப் பிரச்சார சபை ஆகியவைகளின் சார்பாக வர வேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப் பெற்றன.) ''பெரியகுளம் மக்களில் இத்தனை பேருக்கு இந்தி தெரிந்திருப்பதை அறிய நான் மகிழ்ச்சி அடைகிறேன்,'' என்று காந்திஜி பாராட்டினார். இங்கு அரிஜனப் பிரசாரம் தீவிரமாக நடைபெறுவதைக் கண்டு மகிழ்ச்சி அடைவதாகவும் ஆனாலும் அரிஜனங்களை முன்னேற் றும் பணியில் இன்னும் நாம் அதிக அக்கறை காண்பிக்க வேண்டும் என்றும் பிற மதத்தினரும் இதில் அக்கறை காட்டு வார்கள் என நம்புவதாகவும் அவர் சொன்னார். (கூட்டம் முடிந்தவுடன் ஏ. இராமசாமி செட்டியார் இல்லத்திற்குச் சென்று அங்கு சுமார் இரண்டு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு, தம் பயணத்தைத் தொடர்ந்தார். வழியில் புதுப்பட்டி வரவேற்பைப் பெற்றுக்கொண்டு தேனி வந்த போது, சாலையில் அவர் காரை நிறுத்தி, தேனி பொதுமக்க ளின் சார்பான வரவேற்பையும் கண்டமநாய்க்கனூர் ஜமீன் வரவேற்பையும் அளித்தார்கள். இதன் பின்னர் பழனிச் செட்டிபட்டி, வீரபாண்டி வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு காந்திஜி சின்னமனூர் சேர்ந்தார். சின்னமனூர், கருங் கட்டாங்குளம் மக்களின் சார்பான வரவேற்புரையை இங்கு பஞ்சாயத்துத் தலைவரான சொக்கலிங்கம் பிள்ளை படித்துக் கொடுத்தார்.)

உத்தமபாளையம்

உத்தமபாளையத்தில் பெரிய சையத் ராவுத்தர் புளியந் தோப்பில் சில நிமிடங்கள் நடைபெற்ற வர வேற்பில் காந்திஜியின் மனதிற்கு மிகவும் வருத்தந் தந்த ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. இங்கு இந்து அரிஜனங்களும் கிறித்தவ அரி ஜனங்களும் சேர்ந்து காந்திஜிக்கு ஒரு வரவேற்புரை அளித்

தார்கள். கிறித்தவர்களிலும் அரிஜனங்கள் இருக்கிறார்கள் என்பதை அறிந்து காந்திஜி மிகுந்த மனத்துயரடைந்தா ரென்றாலும், உத்தமபாளையம் கூட்டத்தை விரைவில் முடித் துக்கொண்டு, கம்பத்தில் போய்த்தான் இதைப்பற்றிய தம் கருத்தைக் கூறினார்.

கம்பம் பேச்சுக் கடுமையாகவே இருந்தது. ''இந்து அரிஜனங்கள் என்றிருப்பதற்கே வெட்கப்பட வேண்டும். அதையாவது என்னால் புரிந்து கொள்ள முடி கிறது. ஆனால் கிறித்தவர்களிலும் அரிஜனங் களா? இதைப் புரிந்து கொள்வது எனக்குக் கடினமாக இருக்கிறது'' என்று தொடங்கினார் காந்திஜி. அவர் தொடர்ந்து சொன்னார்: ''கிறித்தவர் களில் - பண்டிதரோ அல்லது படியாதவரோ - யாரும் தீண் டாமைக்கு இடமிருப்பதாய்ச் சொல்ல நான் கேட்டதில்லை. இந்து மதத்திலிருந்துதான் இந்த நச்சு கிறித்தவ சமயத்திற் குப் பரவியிருக்கிறது என்று யூகிக்கிறேன். ஆனால் அதே சமயம் கிறித்தவர்களிடையே தீண்டாமை அகல வேண்டு மென நான் பாடுபட்டால் என் வரம்பை மீறியவனாவேன். ஆகையால் கிறித்தவ சமயத்தினர் தற்போது இந்தி யாவில் நடைபெறும் இயக்கத்தைப் புரிந்து அவர்கள் மதத் தினரிடையேயுள்ள தீண்டாமையை அகற்ற வேண்டும். அதற்கு இந்துக்களும் உதவலாம். இந்துக்களிடையே உள்ள தீண்டாமையை நாம் அகற்றிவிட்டால், அது இந்துக் களிடையே மட்டுமல்லாது, உலக மக்கள் குலத்திலேயே ஐக்கியத்தை ஏற்படுத்தும்.'' (கூட்டம் யூனியன் போர்டு கட்டிடத்தில் நடைபெற்றது. பஞ்சாயத்து சார்பான வர வேற்புரையை எம்.எஸ். ஷாகுல் ஹமீதும், ஐக்கிய மந்திரம் நூல் நிலையத்தின் சார்பான வரவேற்புரையை இராஜமாணிக் கம் பிள்ளையும் படித்தார்கள்.) பாரதி நாராயணசாமி செட்டியார் சொன்னது சரியாகப் போய் விட்டது; இன்று ஒரே நாளில் மட்டும் காந்திஜி வசூலித்த அரிஜன நிதி சுமார் ரூ. 3,500 ஆகும். இங்கு இந்துக்கள், முஸ்லிம்கள், கிறித்த வர்கள் ஆகிய அனைத்து மதங்களைச் சேர்ந்தவர்களுமே உற் சாகமாகத் திரண்டிருந்து காந்திஜியை வரவேற்றனர். காந்திஜி இங்குத் தங்கியிருந்ததும் ஒரு முஸ்லிம் வீட்டில் தான். (மறுநாள் காலையில் காமயக் கவுண்டன்பட்டி மக்க ளின் பண முடிப்பு அளிக்கப்பெற்றது.)

கம்பம்

9-2-34

கோம்பை

கம்பத்திலிருந்து காலையில் புறப்பட்டு கோம்பை வந்த (காந்திஜியிடம் ஏலக்காய் வனத்தில் அவர் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருக்கிறார் என்பதை நினைவு படுத்துவதற்காகவோ என்னவோ வி.எஸ்.ஆர். அண்ட் பிரதர்ஸ் என்னும் நிறுவனத்தார் ஒரு மூட்டை ஏலக்காயை அளித்தார்கள். வைசியர் களும் பணமுடிப்பு அளித்தார்கள். ஆனால் இதைவிட) காந்திஜியின் உள்ளத்தைக் கவர்ந்தது அங்கு வாழும் முஸ்லிம் கள் கையால் எழுதி அவரிடம் அளித்த வரவேற்பில் கேட்டுக் கொள்ளப் பெற்றிருந்த ஒரு வேண்டுகோள்தான். ''தங்க ளுடைய தற்போதைய பணிக்கு எங்களுடைய உதவி தேவை இல்லை என்றாலும் எல்லோரும் சமம் என்ற பரந்த மனித குலத் தத்துவத்தைத் தாங்கள் பரப்பி வருவது எங்கள் மன தைக் கவர்கிறது. ஆகையால் நாங்கள் - 30 குடும்பத்தார் - கொடுக்கும் இச்சிறு நிதியை - ரூ. 20 - அரிஜன நிதிக்காக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறோம்'' என்று இவர்கள் கேட்டுக் கொண்டிருந்தார்கள். காந்திஜி இவர்களைப் பாராட்டினார். ''உங்களுடைய உதவி மிகவும் பெரியது. நான் இப்போது மேற்கொண்டுள்ள பணியில் எப்போதும் பிற மதத்தினருடைய உதவியை ஏற்கத் தயாராய் இருக்கிறேன்'' என்று அவர் பதிலளித்தார்.

தேவாரம்

காந்திஜி தேவாரத்திற்குச் சென்ற வழிநெடுகிலும் கதர்க்குல்லாய் அணிந்த தொண்டர்கள் ஏராளமாக நின்று கூட்டத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டி ருந்தனர். இவ்வளவு அதிகமாகத் தொண்டர் கள் நின்று சேவை செய்ததும் இப்பகுதியின் இயற்கை வளமும் காந்திஜியின் உள்ளத்தைக் கவர்ந்ததால் தேவாரத்தில் அவருடைய சொற்பொழிவில் பெரும்பகுதி இத்தொண்டர்களைப் பற்றியும் இயற்கை எழிலைக் குறித்துமே இருந்தது. (காந்திஜி மேடையில் அமர்ந்ததுமே பாரதி நாராயணசாமி செட்டியார் அவருக்கு ஓர் ஏலக்காய் மாலையிட்டார். தேவாரம் பஞ்சாயத்து போர்டு சார்பாகவும் தேவாரம் பொதுமக்கள் சார்பாகவும் விவேகானந்தர் பள்ளி மாணவர்கள் சார்பாகவும் அரிஜ னங்கள் சார்பாகவும் வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன.) காந்திஜி இங்கு நீண்ட சொற்பொழிவு நிகழ்த்

திஞர்; இப்பகுதியில் தாம் சுற்றுப்பயணம் செய்யவந்த கதை யிலிருந்தே பேச்சைத் தொடங்கிவிட்டார்.

''மிகுந்த முயற்சியின் பேரில்தான் என் சுற்றுப் பயணத்திட்டத்தில் தேவாரம் சேர்க்கப்பெற்றது. ஆனல் இப்போதோ இந்த அழகான பகுதிக்கு வந்த தற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன். கோம்பையிலிருந்து தேவாரம் வரை இடை விடாது தொண்டர்கள் நின்று போக்கு வரத்தை ஒழுங்குபடுத்திக்கொண்டிருந்தனர். இந்தப் பள்ளத்தாக்கின் அழகை மேம்படுத்தாவிட்டாலும் இருக்கும் அழகைச் சீர் கெடுக்காமல் இருப்பதற்காகவாகிலும் இத் தொண்டர்களின் சக்தி பயன்பட வேண்டும். வன்னிவலசு என்ற கிராமத்திற்குக் கார் போகும் சாலை போடுவதற்காக அங்குள்ள அரிஜனங்கள் இரண்டு மாத காலம் பாடுபட்டிருக் கிறார்கள். அவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இங்குள்ள தொண்டர்களின் எண்ணிக்கை மிக அதிகம். ஆகையால் கோம்பைக்கும் தேவாரத்திற்கும் இடையே நல்ல சாலை போடுவதற்கு இவர்களுடைய உழைப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம். தாலுகா போர்டுகளும் மாவட்ட போர்டுகளும் நமக்கு இலவசமாகவா சாலைகள் போட்டுக் கொடுக்கின்றன? நீங்கள் நல்ல முறையில் முயற்சி செய்தால் மலேரியாவிற்கே இடம் இல்லாமற் செய்துவிடலாம். ஆனல் தீண்டாமை நம் மத்தியில் இருக்கும்வரை இந்தச் சுதாதாரப் பணிகளை யெல்லாம் நாம் சுலபமாகச் செய்ய முடியாது.''

தொண்டர் படை

இவ்வாறெல்லாம் காந்திஜி உள்ளூர் நிலவரத்தை எடுத்துக்கொண்டு தீண்டாமை ஒழிப்பின் அவசியத்தை விளக்கினர். இதன் பின்னர் (Zamorin) மாளி திற்கு காந்திஜி சென்று அவர்கள் அளித்த வரவேற்பு, நகைகள் ஆகியவைகளைப் பெற்றுக் கொண்டு மாதர்களாவது தீண்டாமை ஒழிப்பின் அவசி யத்தை உணர்ந்து அத்தீமையைத் தங்கள் உள்ளத்திலிருந்து அகற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (தேவா ரத்தில் தங்கியிருந்த ஒரு சில மணி நேரத்தில் அவர் சி. குருசாமி பிள்ளையின் விருந்தினராக இருந்தார்.)

பெண்கள் கூட்டம்

ஏற்கனவே குறிப்பிட்டது போல, போடியில் பிளேக் பீடித்திருந்ததால் அங்குச் செல்ல முடியாமற் போய் விட்டது. ஆகவே, அதற்குச் சுமார் எட்டு மைல் தூரத்தில் உள்ள 'போடி விலக்கு' என்னும் இடத்தில் காந்திஜிக்கு வரவேற்பு அளிக்கப் பெற்றது. போடி மக்களின் சார்பாக வரவேற்பும் பணமுடிப்பும் அளிக்கப்பெற்றன. கூட்டம் முடிந்தவுடன் தேனியில் உள்ள ஆர்ய வைசிய வங்கிக் கட்டிடத்திற்குச் சென்று இரயில் வரும்வரை சிறிது நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு இரயிலில் செக்கானூரணிக்குப் புறப்பட்டார் காந்திஜி.

போடி வரவேற்பு

ஆண்டிபட்டி இரயில் நிலையத்தில் ஏராளமான மக்கள் கூட்டம். மக்கள் சார்பாக வரவேற்பு, பணமுடிப்பு எல்லாம் அளிக்கப்பெற்றன. காந்திஜி ஒரு மேசையின் மேல் நின்று தீண்டாமை ஒழிப்பின் அவசியத்தைப் பற்றி இந்தியில் பேசினார். தொட்டப்ப நாயக்கனூர் இரயில் நிலையத்திலும் இதே போன்று மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். உசிலம்பட்டி இரயில் நிலையத்தில் அந்நிலையம் கொள்ளாத அளவிற்கு மக்கள் கூட்டம்தான்; தாம் உட்கார்ந்திருந்த இரயில் பெட்டியின் சன்னல் வழியாகப் பணமுடிப்பை காந்திஜி பெற்றுக்கொண்டார்.

உசிலம்பட்டி

செக்கானூரணி இரயில் நிலையத்தில் இறங்கி காந்திஜியும் அவருடன் வந்த குழுவினரும் மோட்டாரில் சோழவந்தானுக்குச் சென்றார்கள். முனகால பட்டாபிராமய்யா, (சிறைவாசத்திலிருந்து சில நாட்களுக்கு முன்புதான் விடுதலையாகி வந்திருந்தார்.) மட்டப்பாறை வெங்கட்ராமய்யர், டாக்டர் கோபால்சாமி, சண்முகவேலு முதலியார் ஆகியோர் காந்திஜியை அழைத்துச் செல்லச் செக்கானூரணிக்கு வந்திருந்தனர். சோழவந்தானுக்கு வரும் வழியில் கோச் சடையில் இருந்து மேலக்கால் வரை இருமருங்கிலும் தென்னை மரங்கள் வானேங்கி நின்று சாலை அழகாக இருந்ததைக் கண்ட காந்திஜி "ஓரே அவென்யூ (இருமருங்கிலும் மரங்கள் உள்ள பெரிய சாலை) மாதிரி இருக்கிறதே?" என்று வியப்புடன் கூறினார். சந்தை கூடுமிடத்தில் நடைபெற்ற பெரிய பொதுக்கூட்டத்தில் (சோழவந்தான் பொது

சோழவந்தான்

மக்கள், யூனியன் பஞ்சாயத்துக் குழுவினர், சோழவந்தான் முதலியார்கள், அரசன் சண்முகனூர் நூல் நிலையத்தினர், தெற்குத் தெரு மக்கள் ஆகியோர் சார்பாக வரவேற் புரைகள் தனித் தனியாகப் படித்து அளிக்கப்பெற்றுப் பண முடிப்பும் அளிக்கப்பட்டது. முதலியார்களின் வரவேற் புரையை சண்முகவேலு படித்துக் கொடுத்தார். மக்களின் சார்பான வரவேற்புரையையும் பண முடிப்பையும் முனகால பட்டாபிராமய்யா அளித்தார். சோழவந்தான் மாண வர்கள் சார்பாக ஒரு வெள்ளிக்கோப்பையும் கொடுக்கப் பெற்றது.) கூட்டம் மிகவும் ஒழுங்காகவும் கட்டுப்பாடா கவும் இருந்ததை காந்திஜி பாராட்டினர்.

மாணவர்கள்

தேவாரத்தில் காந்திஜி நிகழ்த்திய சொற்பொழிவுக்குத் தொண்டர்களே கதாநாயகர்களாக இருந்தார்களென்றால் சோழவந்தானில் அந்த இடத்தை அலங்கரித்த வர்கள் மாணவர்கள் தாம். அவர் சோழவந் தானில் நிகழ்த்திய சொற்பொழிவு முக்கிய மாக மாணவர்களுக்குக் கூறிய அறிவுரை யாகவே இருந்தது. இங்கு மாணவர்கள் ஒரு வெள்ளிக் கோப்பையைப் பணம் எதுவும் போடாமல் வெறும் கோப்பை யாக அளித்து விட்டார்கள். அப்புறமும் காந்திஜி பேசாமல் இருப்பாரா? ''நீங்கள் காலியாக வெள்ளிக் கோப்பையை மட்டும் அளித்திருக்கிறீர்களே? எத்தனையோ இடங்களில் எனக்கு மாணவர்கள் நல்ல பணமுடிப்பு அளித்திருக் கிறார்கள். இன்னும் கொஞ்சம் முயற்சி எடுத்திருந்தால், இதில் கொஞ்சம் பணத்தையும் போட்டுக் கொடுத்திருக்க லாமே?'' என்றார். வெளிக்குத் தெரியாமல் இங்கு ஒரு பூதானம் நடைபெற்றது; அரிஜன இயக்கத்திற்காக இரண்டு குழி புன்செய் நிலம் வழங்குவதாக மகாத்மாவிடம் விளாம் பட்டி துரைசாமி வாக்களித்தார். இதன் பின்னர் காந்திஜி கோபால்சாமி ஐயரின் மருத்துவமனைக்குச் சென்று (அங்குச் சென்றதும் செல்லாததுமாக ஒன்றும் விரிக்காமல் தரையில் படுத்துக்கொண்டதைக் கண்டவர்கள் எல்லோரும் மிகவும் வியப்படைந்தனர்.)* சிறிது நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டபின் இரவு செங்கோட்டா பாசஞ்சர் இரயிலில் திருச்சிராப்பள்ளிக்குப் புறப்பட்டுச் சென்றார்.

* முனகால பட்டாபிராமய்யா பேட்டி.

10-2-34

திருச்சி

திருச்சிக்கு மகாத்மா வந்து சேர்ந்தபோது அதிகாலை 3-50 மணி என்றாலும் பிளாட்பாரத்தில் விளக்க இடமில்லாமல் மக்கள் கூடியிருந்து அவரை வரவேற்றனர். பெரிய சனாதனியும் வழக்கறிஞருமான சீனிவாச ஐயர் காந்திஜி வரவேற்புக் குழுத் தலைவராக இருந்து எல்லா ஏற்பாடுகளும் செய்திருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. இந்த ஊரில் காந்திஜி சென்ற வழிகளில், ''காந்திஜியே, திரும்பிப் போ'' என்ற விளம்பரத் தாள்களைச் சிலர் சுவர்களில் ஒட்டியிருந்தார்கள். காந்திஜியின் கார் செல்வதற்கு முன்னே ஒரு காரில் கதர் தரித்து வீபூதி பூசிய இரண்டு சனாதனிகள் ஏறிக் கொண்டு (இந்து மத்தியக் குழு ஸ்ரீரங்கம் கிளை செய்த ஏற்பாடு இது!) காந்திஜியைப் பற்றி ''கேவலமாக'' (இது டாக்டர் ராஜன் பயன்படுத்திய சொல்) எழுதிய துண்டுப் பிரசுரங்களை வாரி இறைத்துக் கொண்டு போய்க்கொண்டிருந்தார்கள். சில இடங்களில் சில சிறுவர்கள் கறுப்புக் கொடியும் பிடித்தார்கள்.

வன்முறை இல்லை

திருச்சியில் ஏராளமான அலுவல்கள் இருந்ததால் குறிப்பிட்ட நேரத்திற்கும், ஐந்து நிமிடம் முன்னதாகவே கன்டோன்மென்டில் தங்கியிருந்த இருப்பிடத்திலிருந்து காந்தி குழுவினர் புறப்பட்டுவிட்டார்கள். சென்னையிலிருந்து வந்த ராஜாஜியும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். தென்னாரிலுள்ள பீர்தன் ஜூஹூர்மல் வங்கிக்கு முதலில் சென்று, அந்த வங்கியின் நிர்வாக இயக்குநரான லூம் சந்த் சேட் (தம் சார்பாகவும் திருச்சியில் உள்ள குசராத்தி, முல்தானி, மார்வாரி, ஜைன், சிந்தி வணிகர்கள் சார்பாகவும்) அளித்த பணமுடிப்பைப் பெற்றுக் கொண்டார். இதன் பின்னர் ஸ்ரீரங்கத்திற்குச் சென்றார். சர்தி வேற்றுமை தெய்வ சந்நிதானத்தில் கிடையாது என்ற உண்மையைச் சுமார் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னரே பறைசாற்றிய இராமானுஜர் வாழ்ந்த புனித திருத்தலமான ஸ்ரீரங்கத்தில் சில சனாதனிகள் அண்ணலின் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை எதிர்த்தது வருந்தத்தக்கதாய் இருந்தது. அவர் ஸ்ரீரங்கம் வந்தபோது இராய

கோபுரத்தில் கறுப்புக்கொடி கட்டப்பெற்றிருந்தது.* ஆனாலும் கொடியாலம் ரங்கசாமி ஐயங்காரின் தம்பி சீனிவாச ஐயங்கார் இங்கு அண்ணல் வந்தபோது படித்து அளித்த வரவேற்புரையில், ''தங்களை உண்மைச் சனாதனி என்று கருதுகிறோம்'' என்று குறிப்பிட்டிருந்தது அண்ணலுக்கு மகிழ்ச்சி தந்தது. இவ்வாறு கூறியுள்ளதைத் தாம் பணிவோடு ஏற்பதாகவும் தம்முடைய வாலிப வயதிலிருந்தே சாத்திரங்களின்படி நடக்கத் தாம் முயன்று வந்திருப்பதாகவும் காந்திஜி கூறி நன்றி தெரிவித்துக்கொண்டார். ''அரிஜனங்களின் ஆலயப் பிரவேசத்தை எதிர்க்கும் அன்பர்களுக்கு ஒரு வாக்குறுதி மட்டும் நான் கூறிக்கொள்ள முடியும். மக்கள் ஆதரியாவிட்டால் அவர்கள் கருத்திற்கு எதிராக வன்முறையாய் ஆலயத்தில் அரிஜனப் பிரவேசம் நடைபெற மாட்டாது. நான் ஒருவன் கூறுகிறேன் என்பதற்காக மட்டும் அது நடைபெறக் கூடாது. அதே போன்று யாரோ ஒரு தனிப்பட்ட மனிதர் கூறுகிறார் என்பதற்காக அதை நிறுத்தி விடவுங்கூடாது.'' இவ்வாறு காந்திஜி கூறிக் காலப்போக்கை உணர்ந்து ஆலயத்தில் அரிஜனங்கள் நுழைவதை ஏற்குமாறு சனாதனிகளைக் கேட்டுக்கொண்டார். ''தீண்டாமை ஒழிப்பை யார் மிகக் கடுமையாக எதிர்க்கிறார்களோ அந்த சனாதனிகள் என்னை வந்து சந்திக்குமாறு அழைக்கிறேன். இது நல்லுறவுடன் நடத்தப்படும் விவாதந்தானே?'' என்றும் அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் ஒருங்கே வரவேற்புக் குழுவினரையும் கறுப்புக்கொடி காட்டியவர்களையும் காந்திஜி பாராட்டினார். அரிஜன நிதிக்காக வசூலான பணத்தை வீண் அலங்காரத்திற்குச் செலவிடாமல் இருந்ததற்காக வரவேற்புக் குழுவினருக்குப் பாராட்டு; அருவருக்கத் தக்கவாறு முழக்கங்கள் எதுவும் போடாது, வெறும் சுவரொட்டிகளையும் கறுப்புக் கொடிகளையும் ஆங்காங்கு ஒட்டியும் கட்டியும் வைத்திருந்ததற்காகச் சனாதனிகளுக்குப் பாராட்டு! சில இடங்களில் கறுப்புக் கொடி பிடித்துக்கொண்டிருந்த சிறுவர்கள் மகிழ்ச்சியோடு ''காந்திஜிக்கு ஜே'' என்ற முழக்கத்தில் பங்குகொண்டது வேடிக்கையாக இருந்ததென்றும் காந்திஜி கூறினார்.

பாராட்டு

* சங்கிலியா பிள்ளை தகவல்

அண்ணல் தம் சொற்பொழிவைத் தொடங்கியபோது தேசபக்தர் கொடியாலம் ரங்கசாமி ஐயங்கார் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துக் கொண்டார். கொடி யாலம் என்ற சொல்லைச் சேர்க்காமல், எந்த ரெங்கசாமி? ''இப்போது ரெங்கசாமி என் பக்கத்தில் இல்லாதது தனிப்பட்ட முறையில் எனக்குப் பெரிய நட்டம்'' என்று அவர் குறிப்பிட்டதனால் சிலருக்கு அவர் ''இந்து''ப் பத்திரிகை அதிபர் ரெங்கசாமி ஐயங் காரைக் குறிப்பிடுகிறாரா அல்லது கொடியாலம் ரெங்கசாமி ஐயங்காரைக் குறிப்பிடுகிறாரா என்ற ஐயம் ஏற்பட்டுவிட்டது. கூட்டத்திலிருந்த ஒருவர் இதைக் கேட்டும் விட்டார். (சில நாட்களுக்கு முன்புதான் ''இந்து'' ரங்கசாமி ஐயங்கார் காலமாகியதைப் பற்றி கோவையில் அண்ணல் குறிப்பிட்டார்.) உடனே காந்திஜி, ''இந்து ரெங்கசாமி ஐயங்காரைப் பற்றி நான் அவர் மறைந்தவுடனேயே ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறேன். இப்போது நான் குறிப் பிடுவது கே. வி. ரங்கசாமியைத்தான். அதனால்தான் ஐயங்கார் என்ற சொல்லை நான் பயன்படுத்தவில்லை!'' என்று பதில் சொன்னாரே பார்க்கலாம். எவ்வளவு விழிப் போடு காந்திஜி சொற்களைப் பயன்படுத்தினார் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று!

''சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.''

ஸ்ரீரங்கத்திலிருந்து மணச்சநல்லூருக்கு அண்ணல் சென்ற போதும் முன்னால் சனாதனிகளுடைய கார் துண்டுப் பிரசுரங்களை வீசிக்கொண்டு சென்றது.

மணச்சநல்லூர்

பிச்சாண்டார் கோவில் வழியாகக் கார் சென்ற போது பள்ளி மாணவர்கள் சிலர் கறுப்புக் கொடியும் காட்டினார்கள். (நல்ல வணிகத் தலமான மணச்சநல்லூர்ப் பொதுக் கூட்டத்தில் பஞ்சா யத்துத் தலைவரான எஸ். என். நம்பியப்ப செட்டியார் பஞ்சாயத்து சார்பான வரவேற்புரையைப் படித்தளித்தார்.) இந்த ஊரில் தொடக்கப்பள்ளி மாணவர்கள் சுறுசுறுப்பாகச் சில காசுகளை வசூல் செய்து காந்திஜியிடம் அன்போடு கொடுத்தது குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பின் குறுக்கு வழியில் காந்திஜி குழுவினர் சமயபுரம் சென்றனர். சமயபுரம், பெயர் பெற்ற மாரியம்மன் ஆலயம் உள்ள திருத்தலம். இங்கு வழக்கம் போல் வரவேற்புரையும் பணமுடிப்பும் அளிக்கப்பெற்ற பின், ''தீண்டாமை ஒழிப்பில் நீங்கள் மனப்பூர்வமாய் உறுதியாக இருந்தாலொழிய இந்த வரவேற்புரையாலெல்லாம் பயனில்லை'' என்று காந்திஜி அறிவுறுத்தினர்.

சமயபுரம்

திரும்பி வந்த வழியில் காவேரிக் கரையில் உள்ள சிந்தாமணிக்குச் சென்று (டி. வி. நரசுப்பிள்ளை அளித்த வரவேற்புரையையும் பணமுடிப்பையும் பெற்றுக்கொண்டு, அதன் பக்கத்திலுள்ள சேரியையப் பார்வையிட்டார். இதற்கு அடுத்துப் பங்கு கொண்டது, அரிஜன சேவா சங்கத்தின் மாநில அலுவலகத்தில் நடைபெற்ற ஊழியர்கள் கூட்டமாகும். உணவுச் சாலைகளிலும் சாப்பாட்டு விடுதிகளிலும் அரிஜனங்களை அனுமதிப்பதைப் பற்றி இக்கூட்டத்தில் விவாதிக்கப்பெற்றது. பிற்பகலில் சனாதனிகளின் பிரதிநிதிகளுக்கும் அரிஜனங்களின் பிரதிநிதிகளுக்கும் டாக்டர் ராஜன் பங்களாவில் காந்திஜி பேட்டி அளித்தார். பின்னர் தேவாங்க சபை வரவேற்பை ஏற்க உறையூர் வழியாகச் சென்றார். அங்கிருந்து திருச்சிராப்பள்ளி தாலுகாபோர்டு அலுவலகத்திற்குச் சென்று (அங்கு அதன் தலைவரும் எம் எல். சி. யு. மான கே. சிங்கம் ஐயங்கார் படித்துக் கொடுத்த வரவேற்புரையைப் பெற்றுக் கொண்டு) அந்தத் தாலுகா போர்டில் இரண்டு அரிஜன உறுப்பினர்கள் இடம் பெற்றிருந்ததை காந்திஜி பாராட்டினார். வழக்கம்போல், திருச்சியில் நடைபெற்ற மாதர்கள் கூட்டமும் கூச்சலிலும் குழப்பத்திலும் தான் முடிந்தது. டாக்டர் சாஸ்திரியின் மனைவி கல்யாணி அம்மாள் வரவேற்புரையைப் படித்துப் பண முடிப்புடன் அளித்தார். மேற்கண்ட கல்யாணி அம்மாளும் பத்மாவதி அம்மாளும் மிகவும் முயன்று இந்தப் பணத்தைத் திரட்டியிருந்தனர். காந்திஜி வந்தபோது அவரால் பேசவே முடியாதவாறு கூச்சல் பெரியதாக இருந்தது. ஆகையால் கிடைத்த நகைகளையும் பணத்தையும் வசூல் செய்து கொண்டு மகாத்மா தேசிய கல்லூரிக்குச் சென்றார்.

ஊழியர் கூட்டம்

கல்லூரியில் கூடியிருந்த மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்த்தபோது அவர்கள் கொடுத்த தொகை காந்தி

ஜிக்குக் குறைச்சலாகத் தென்பட்டது. (பேராசிரியர் சாரஞ தன் பணமுடிப்பையும் வரவேற்புரையையும் அளித்தார்.)

மாணவர் சேவை

''நீங்கள் குறைச்சலாகப் பணம் கொடுத்திருந்தாலும் இதயப்பூர்வமாக வழங்கியிருந்தால் அதுவே போதுமானது'' ,என்றார் காந்திஜி. மாணவர்கள் எவ்வாறு அரிஜனங்களுக்குச் சேவை செய்யலாம் என்பதை இக்கூட்டத்தில் விளக்கினார். ''நீங்கள் உங்களுக்குள் சிறு சிறு குழுக்களை அமைத்துக்கொள்ளலாம். இந்தக் குழுக்களில் ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நாளோ அல்லது வாரமோ அரிஜனங்களுக்குச் சேவை செய்வதில் ஈடுபடலாம்,'' என்று காந்திஜி யோசனை கூறினார்.

பொதுக் கூட்டம்

அன்று மாலை புத்தூர் மைதானத்தில் நடைபெற்றதைப் போன்ற பொதுக்கூட்டம் அதுவரை திருச்சியின் வரலாற்றிலே நடைபெற்றதில்லை. (காந்திஜியின் வரவேற்பு ஏற்பாடுகளைச் செய்தவர்களில் ஒருவரான திருச்சியைச் சேர்ந்த பெயர்பெற்ற சர்வோதயவாதி சங்கிலியா பிள்ளையை இங்குக் குறிப்பிடவேண்டும்.) மக்கள் கூட்டத்திற்காக மட்டும் அவ்வாறு கூறவில்லை. காந்திஜியின் சொற்பொழிவும் அவ்வளவு அழகாக, ஆன்மிகக் கருத்துக்கள் நிறைந்ததாக அமைந்தது. (கூட்டத் தொடக்கத்தில் திருச்சி நகராட்சி மன்ற வரவேற்புப் பத்திரத்தை யு. இராமசாமி ஐயரும் திருச்சி மாவட்ட போர்டு பத்திரத்தை எல். என். பரமசிவம் பிள்ளையும் திருச்சி பொது மக்களின் சார்பான வரவேற்பை சீனிவாச ஐயரும் படித்து அளித்தார்கள். கள்ளர் தெருவைச் சேர்ந்த சமூக சேவைக்கழகம் ஒரு வரவேற்பு அளித்தது.) முஸ்லிம்களின் சார்பாக அளிக்கப்பட்ட ஒரு வரவேற்புப் பத்திரம் ஒரு சிக்கலைக் கிளப்பியது. ''தாங்கள் பொது மக்களுடைய ஊழியத்தை விட்டு விட்டு ஒரு பகுதியினரின் முன்னேற்றத்தை மட்டும் தனியாகக் கவனிக்கும் காலம் விரைவில் மாறி முன்போலவே எல்லா இந்தியச் சமூகத்தினருக்கும் தொண்டு செய்யும் காலம் வருமென்று நம்புகிறோம்'' என்று அந்தப் பத்திரத்தில் குறிப்பிடப் பெற்றிருந்தது. இவ்வளவு பெரிய சிக்கலை அவர்கள் எழுப்பிய பின்னர் அடிகள் பதிலிறுக்காமல் விடுவாரா? ''இந்த இயக்கம் ஒரு வகுப்பினரைக் குறித்ததாக வெளிக்குத் தோன்றுகிறது. ஆனாலும் இதன் நோக்கமோ, உட்கருத்தோ அது அல்ல.

மனித சமூகத்தில் ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத் தாரை மனித இயல்புக்கு விரோதமாக நடத்தும் முறை மனித சமூகத்திற்கே கேவலத்தை உண்டாக்குகிறது. இந்தி யாவில் - இந்துக்களுடன் வாழும் காரணத்தால் - மற்ற மதத்தினரிடையேயும் இந்தச் சாதி வேற்றுமை ஒவ்வொரு வகையில் பரவியிருக்கிறது. இந்த நோய் இந்து சமூகத்தின ரிடமிருந்து ஒழியுமேயானால், எல்லாச் சமூகத்திற்கும் நன்மை ஏற்பட்டுச் சமத்துவமும் சகோதரத்துவமும் பரவும். இதில் என் எண்ணம் கை கூடுவதற்கு மற்ற சமயத்தினரின் உள்ளன்பையும் ஆர்வத்தோடு கூடிய ஒத்துழைப்பையும் வேண்டுகிறேன்'' என்று அண்ணல் மிகவும் உருக்கமாகவும் தர்க்க வாத நியாயத்துடனும் எடுத்துக் கூறினர். தேவ கோட்டைப் பகுதியில் எவ்வாறு நாட்டார் - அரிஜனங்கள் சிக்கல் இருந்ததோ அதே போன்று திருச்சி அருகே மேல அரசூர் என்ற ஊரிலும் சாதி இந்துக்களுக்கும், அரிஜனங் களுக்கும் ஒரு பெரிய தகராறு இருந்தது, இந்த ஊரில், சாதி இந்துக்கள் தண்ணீர் எடுக்கும் குளத்திலிருந்து அரி ஜனங்கள் தண்ணீர் எடுக்கக் கூடாது என்று தடுத்ததுடன் அவ்வாறு தண்ணீர் எடுத்த அரிஜனங்களையும் பல துன்பங் களுக்குள்ளாக்கியிருந்தார்கள். இது காந்திஜி இங்கு வந்தி ருந்தபோது அவர் கவனத்திற்குக் கொண்டு வரப்பெற்ற தால் அதைப் பொதுக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

11-2-34

வரகனேரி

அதிகாலையில் வரகனேரி சேரிக்கு அண்ணல் சென்ற போது வழி நெடுகிலும் பெருங்கூட்டமாக இருந்தது. சேரி யில் இறங்கி ஒவ்வொரு தெருவாக காந்திஜி பார்த்துக்கொண்டு சென்றார். ஐந்து அல்லது ஆறு வீடுகளில் உள்ளே நுழைந்தும் பார்த் தார். பின்னர் காந்திஜியும் அவரது குழு வினரும் இரயிலில் கரூருக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

பிரியா விடை

திருச்சிராப்பள்ளி இரயில் நிலையத்தில் இன்று அவர் பிரியா விடை பெற்றுச் சென்றது மிகவும் உருக்கமான காட்சியாக இருந்தது. ''டாக்டரின் பையன் உங்களுக்குப் பிரியாவிடை சொல்லிக் கொள்ள விரும்புகிறான்'' என்றார் ஒருவர். ''கட்டணம் இல்லாமலா? அது நலல பழக்கமில்லையே!'' என்று காந்திஜி வேடிக்கை செய்தார். இதற்கிடையில்

இரயில் புறப்பட்டு விட்டது ; அவரை வழியனுப்ப வந்தவர் களிடையே அவருக்குப் பழக்கமான பலமுகங்கள் இருந்தன. ''இன்னும் சில ஆண்டுகள் உங்களைப் பார்க்க முடியாதென நினைக்கிறேன்'' என்று வருத்தத்தோடு சொல்லிக்கொண்டே காந்திஜி இரயிலில் சென்று விட்டார்.

குளித்தலை

வந்த வழியில் ஒவ்வொரு இரயில் நிலையத்திலும் வழக் கம்போல் பெரிய கூட்டமே. முத்தரச நல்லூரில் இரயில் மேடையில் ஒரு மேடை போட்டு அதில் அவரை அமரவைத்துப் பணமுடிப்பு அளித் தார்கள். குளித்தலை இரயில் நிலையத்தில் கூட்டம் மிகவும் அதிகம். (குளித்தலையில் யூனியன் பஞ்சாயத்து போர்டு சார்பிலும் தாலுகா போர்டு சார்பிலும் வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன. பண முடிப்புகள் வழங்கப் பெற்றன. வந்திருந்த பிரமுகர்களை கோவிந்தசாமி முதலியார் அறிமுகம் செய்து வைத்தார்.) அண்ணலின் பயணத்திற்கு ஏற்பாடு செய்ப வர்கள் எவ்வளவு அல்லலுக்கும் பிறருடைய குற்றச்சாட் டுக்கும் இலக்காக நேரும் என்பது இந்த ஊரில் நன்கு எதிரொலித்தது. குளித்தலையில் அண்ணல் இறங்காததற்கு வருத்தந் தெரிவிக்கும் முறையில் அவ்வூரைச் சேர்ந்த தேச பக்தர் கோவிந்தசாமி முதலியார் உண்ணு நோன்பிருந்தார். மகாத்மா திருச்சி மாவட்ட எல்லையைத் தாண்டும் வரை யில் உணவு அருந்துவதில்லை என்று அவர் இருப்பதாகவும் பட்டினி கிடக்கும் தேசபக்தருடையநிலையை எண்ணிப்பொது மக்கள் அடிகளைச் சீக்கிரமாக மாவட்ட எல்லையைத் தாண் டிச் செல்லும்படி வேண்டுவதாகவும் ஒரு துண்டுப் பிரசுர மும் வெளியிட்டு விட்டனர். (மாயனூர் இரயில் நிலையத் தில் இந்திய ஊழியர் சங்கக் கிராமச் சீரமைப்பு நிலையத்தின் சார்பாகப் பண முடிப்பு வழங்கப்பெற்றது.)

கரூர்

கரூர் சென்ற போது நேரம் மதியம். கரூரில் அன்று காந்திஜியை உற்சாகமாக வரவேற்க வேண்டும் என்பதற் காகக் கடைகளும் மூடப்பட்டன. இங்குப் பிற்பகலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், (கரூர் நகராட்சி மன்றத்தின் சார்பாகவும் பொது மக்கள் சார்பாகவும் சமரச சங்கத்தின் சார்பாகவும் பாஸ்கர் படித்து அளித்த வரவேற்புரைகளை அண்ணல் பெற்றுக்கொண்டார்.) காந்திஜி பேசினார் : ''சில

சனுதனிகள், ஆலயத்தில் நுழைய அரிஜனங்கள் சார்பில் உரிமை கோருவதைக் கைவிட வேண்டுமென்று செய்தி அனுப்பியுள்ளனர். இதை நான் பாராட்டுகிறேன். இவர்களில் சிலர், அரிஜன நிதிக்கு ஓரளவு பண உதவியும் அளித்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். ஆனால், அரிஜனங்கள் சார்பான கோரிக்கையைக் கைவிட வேண்டுமென்று அவர்கள் கூறுவதை நான் ஏற்க முடியாது. நானும் அவர்களைப் போன்றே ஒரு சனுதனி தான். சாதி இந்துக்கள் எவ்வளவு உரிமையோடு ஆலயத்திற்குள் நுழைகிறார்களோ அதே உரிமையோடு அங்குச் செல்ல அரிஜனங்களுக்கும் உரிமை உண்டு.'' இங்குப் பெயர் பெற்ற நாடக நடிகையும் பாடகியுமான கே. பி. சுந்தரம்பாள் அளித்த தங்க முலாம் பூசிய தம்ளரை காந்திஜி ஏலம் விட்டார்.

கொடுமுடி

காந்திஜி கரூரை விட்டுப் புறப்பட்டு ஈரோட்டை நோக்கிச் சென்றபோது, அவருடைய காருக்கு ஒரு சிறு விபத்து ஏற்பட்டது. கரூரிலிருந்து சுமார் பத்து மைல் சென்றவுடன், காந்திஜியின் கார் டயரில் லாடம் ஏறிக் காற்றுப் போய் விட்டதால் டாக்டர் ராஜன் காரில் அவர் ஏறிக் கொண்டு போய்விட்டார். இதனால் மற்றவர்கள் சிறிது நேரம் பிந்திச் செல்ல நேர்ந்தது. கொடுமுடி சேர்ந்தவுடன், கூட்டத்தின் மத்தியில் காரை நிறுத்தி அதன் மேல் ஏறி நின்று கொண்டு மக்களுக்கு அண்ணல் காட்சி தந்தார். அங்கு அவர் நிகழ்த்திய சொற்பொழிவை மொழி பெயர்க்க யாரும் இல்லாததால், டாக்டர் ராஜனின் காரோட்டியே மொழி பெயர்த்தார். காரோட்டியின் பாக்கியந்தான் என்ன! (இங்குப் பொதுமக்களின் சார்பான வரவேற்புரையை மகுடபதி படித்தளித்தார். சக்கிலியர் வகுப்பைச் சேர்ந்த எட்டு வயதுப் பையனான சுப்ரமணியம் மற்றொரு வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தான். அரிஜனப்பள்ளி மாணவர்களின் சார்பாக ஒரு வரவேற்புரையும் அளிக்கப்பெற்றது. இந்த வரவேற்புரைகள் கையால் எழுதப் பெற்றிருந்ததை காந்திஜி பாராட்டினார்.) ''ஒரே வாக்கியந்தான் என் செய்தி. தீண்டாமை எண்ணத்தையே அகற்றி விடுங்கள்'' என்று அவர் முடித்துக் கொண்டார்.

ஈரோட்டில் ஈஸ்வரன் கோவில் தெருவில் உள்ள விருந்தினர் இல்லத்தில் அவர் சிறிது நேரம் தங்கினார். மக்கள்

பூங்காவில் நடைபெற்ற வரவேற்பில் (நகரசபை வரவேற்பை அதன் தலைவர் கான் பகதூர் ஜனப் கே. ஏ. ஷேக் தாவுதும், தாலுகா போர்டு வரவேற்பை அதன் தலைவர் வி. எஸ். ராஜா கவுண்டரும் அளித்தார்கள். வணிகர்கள் சங்கம், சுதேசி ஜவுளி வார்த்தக சங்கம், அரிஜன சேவா சங்கம், ஷராப் வர்த்தக சங்கம் ஆகியவற்றின் சார்பாகவும் வரவேற் புரைகள் அளிக்கப்பட்டன. இங்குள்ள இலண்டன் மிஷன் பொதுப் பயிற்சிப் பள்ளியைச் சேர்ந்தவர்கள் ஒரு சிறு பாயையும் அளித்தார்கள்.) ''இந்தச் சுற்றுப் பயணத்தில் முடிந்த இடங்களிலெல்லாம் சனதனிகளைச் சந்தித்து அவர் களிடம் மனமாறுதலை ஏற்படுத்த முயற்சி செய்யப் போகி றேன்'' என்று காந்திஜி கூறினார். அடக்க முடியாத கூச்ச லின் காரணமாக இக்கூட்டத்தில் காந்திஜி அதிகம் பேச முடிய வில்லை. காந்திஜியின் வருகையை எதிர்த்து அன்று மாலை இங்குள்ள சுயமரியாதை இளைஞர் சங்க உறுப்பினர்கள் ஓர் ஊர்வலம் நடத்தினார்கள். முக்கிய தெருக்கள் வழியாகச் சென்று விட்டு ஈ. வே. இராமசாமி நாயக்கர் இல்லத்திலும் மக்கள் பூங்காவிலும் கறுப்புக்கொடி கட்டியிருந்தார்கள்.

ஈரோடு

பவானி பொதுக்கூட்டத்தில் அழகான பூ வேலைப்பாட்டு டன் இருந்த ஒரு துணியை காந்திஜி ஏலம் விட்டார். (பவானி தாலுகா போர்டு, ஆதி இந்து சேவா சங்கம் சார்பாகவும் ஆதி இந்துக்கள், பொது மக்கள் சார்பாகவும் தனித் தனியாக வரவேற் புரைகள் அளிக்கப் பெற்றன.) அவருக்கு மாலை யிடுவதற்காக அரிஜன வகுப்பைச் சேர்ந்த ஒரு சிறு பெண்ணைத் தூக்கிவிட்டார்கள். மாலையை வாங்குவதற்காக அவர் கையை நீட்டினார். ஆனால் அந்தப் பெண்ணை அவர் கழுத்தில் தான் போடுவேன் என்று பிடிவாதம் பிடித்தது. ''நீ பிடிவாதம் பிடிக்கிறாய்; ஆகையால் நானும் பிடிவாதம் பிடிக்கத்தான் வேண்டும்'' என்றார் காந்திஜி. அந்தப் பெண் இறங்கும்போது ஒரு சிவந்திப் பூமாலையை எடுத்து அதன் கழுத்தில் விழுமாறு சரியாகத் தூக்கிப் போட்டார்! இந்த ஊரில் காந்திஜிக்கு ஒருவர் போலிக் கதரை அளித்து விட் டார். மற்றொருவர் சிகரெட் 'பாக்கெட்டை'க் கொண்டு வந்து கொடுக்க வந்தார். ''அது என்ன?'' என்று கேட் டார்கள். ''சிகரெட்'' என்று நிதானமாக அவர் பதில் கூறினார். ''சிகரெட், விஸ்கியெல்லாம் தயவு செய்து வேண்

பவானி

டாம்'' என்றார் ராஜாஜி. கொடுக்க வந்தவர் பேசாமல் உட்கார்ந்து விட்டார். பவானியிலிருந்து திருச்செங்கோடு சென்ற வழியில் குமாரபாளையத்தில் அளிக்கப் பெற்ற பண முடிப்பையும் பெற்றுக் கொண்டார்.

திருச்செங்கோட்டிற்கு காந்திஜி வந்தபோது மிகவுங் களைத்துப் போய் விட்டார். வெயில் கடுமையாக இருந்த தால் பயணம் சிரமமானதாகவே இருந்தது.

திருச்செங் கோடு

திருச்சியிலிருந்து கரூருக்கு இரயிலில் வந்து, கரூரிலிருந்து 79 மைல் காரில் பயணம் செய்து, காந்தி ஆசிரமத்திற்கு வருவது என்றால் அது சாதாரணமானதல்ல. வழியில் பல கூட்டங்களில் அவர் பேச வேண்டியிருந்ததால் திருச்செங்கோடு வந்து சேர்ந்த போது இரவு சுமார் பத்துமணி ஆகிவிட்டது. ''நான் மிகவுங் களைத்துப் போய் விட்டேன்'' என்று கூறிக் கொண்டே போர்டு உயர் நிலைப் பள்ளியில் பேச்சைத் தொடங்கினர். (தாலுகா போர்டு, யூனியன் போர்டு, தாலுகா கூட்டுறவாளர்கள், சமரச சன்மார்க்க சங்கம், ஆதி திராவிட மகாஜன சங்கம் ஆகியவைகளின் சார்பில் காந்தி ஜிக்கு வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன.) ''தீண்டாமை என்பது மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒன்று தான். இந்துக்களும் இந்துமதமும் வாழ வேண்டுமானால், இது இல்லாமற் செய்ய வேண்டும்,'' என்று கேட்டுக் கொண் டார் காந்திஜி. இவ்வாறு நிறைய அலுவல்கள் நிறைந்த ஒரு கடுமையான பயணத்தை முடித்துக்கொண்டு புதுப்பாளையம் சென்றவுடன் காந்திஜி தம் வழக்கமான 24 மணி நேர மௌனத்தைத் தொடங்கி விட்டார்.

12-2-34

ராஜாஜியால் தோற்றுவிக்கப் பெற்று திருச்செங்கோடு ஆஷ்ரமம் என்று சாதாரணமாகப் பெயர் வழங்கும் ஆசிரமம் உண்மையில் திருச்செங்கோட்டில் இல்லை;

திருவிழா

அதற்கு ஏழு மைல் தூரத்தில் உள்ள புதுக் பாளையம் என்ற சிறு கிராமத்தில் தான் இருப் கிறது. ''காந்திஜி வந்த மறுநாள் புதுப்பாளை யத்தில் திருநாள்; காந்திஜி வந்ததால் ஆசிரமத்திலும் அன்று திருநாளாகவே இருந்தது. காந்திஜியைப்பின் தொடர்ந் தும் தனித்தனியாகவும் சுமார் நூறு விருந்தினர்கள் ஆசிர

மத்திற்கு வந்திருந்தனர். இங்கு ஓய்வு பெறுவதற்காக வந்த இரண்டு நாட்களில் முதல் நாளன்று காந்திஜி பேசா நோன்பு மேற்கொண்டதால் இவர்களில் பலர் அன்று பகலி லேயே புறப்பட்டுச் சென்று விட்டனர். காந்திஜி ஆசிரமத் திற்கு வருவதற்கு முன்னமேயே ராஜாஜி விடுத்த ஓர் அறிக் கையில் அவர் ஓய்வெடுக்கவே அங்கு வருவதாகவும் அலுவல் உள்ளவர்கள் தயவு செய்து அங்கு வரவேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார். முதல் நாளன்று மாலை சில ஊழியர் களை அழைத்துக் கொண்டு, ஆசிரமத்தின் சுற்றுப் புறங் களையும் பக்கத்தில் உள்ள சேரிகளையும் காந்திஜி பார்வை யிட்டார்.

13-2-34

மறுநாள் காலையில், ஆசிரமத்தில் பாவடி மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அண்ணல் சில அறிவுரைகள் கூறினர். (காந்திஜி ஆசிரமத்தைச் சேர்ந்த கதர் ஊழியர்கள் சார்பிலும், புதுப்பாளையம் கிராம வாசிகள் சார்பிலும் பணமுடிப்புகள் அளிக்கப்பெற்றன.) தீண்டாமை என்ற மாசு உள்ளத்தில் இல்லாத சில ஊழியர்கள் இங்கிருந்து தொண் டாற்றுவதால் புதுப்பாளையம் போன்ற கிராமங்கள் எந்த அளவுக்கு சாதி இந்துக்களின் மனம் மாறியிருக்கிறது என்ப தற்குச் சோதனை நிலையங்களாகத் திகழ வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

தீண்டாமை மாசு

''ஆசிரமத்தில் அவர் தங்கியிருந்தபோது ஒவ்வொரு நாளும் தவறாது இரண்டுமுறை சமையலறைக்கு வந்து பார்த்துச் செல்வது வழக்கம்; ஒரு நாளாவது தவறியதில்லை,'' என்று அப்போது அங்கு சமையலறைப் பொறுப்பில் இருந்த ஏ. கிருஷ் ணன் (தற்போது சேலம் காந்தி ஆசிரம வஸ்தி ராலயத்தில் பணியாற்றுபவர்) கூறுகிறார். சமையலறை சுத்தமாக வைக்கப்பட்டிருந்ததா என்பதில் அண்ணலுக்கு அவ்வளவு கவனம் இருந்திருக்கிறது. இம்முறை காந்திஜி இந்த ஆசிரமத்திற்கு வந்திருந்தபோது ஆசிரமத்தில் சி. இராஜகோபாலாச்சாரியார் தங்கியிருந்த வீட்டிலேயே தங்கினர். இது ஒரு சிறு வீடு, ஓட்டடி. காந்திஜியின் கூட்டங்கள் ஆசிரமத்தின் முன்பகுதியின் சுற்றுச் சுவர் ஓரத்

''இந்தி தெரியாது''

தில் நடைபெற்றன. காந்திஜி அமர்வதற்கென்று மேடை போடப்பட்டது. ஆசிரமப் பார்வையாளர் புத்தகத்தில் காந்திஜி கீழ்க் கண்டவாறு எழுதியுள்ளார் :—I miss love and use of Hindi and knowledge of Sanskrit enough say to understand drift of the Gita the more so because everything else is so good. (''இங்கு இந்தி பயன்படுத்தப்படுவதையோ அதன் மீது பாசத்தையோ நான் காணவில்லை. கீதா பாராயணத்தைத் தொடர்ந்து சொல்லும் அளவுக்குக் கூட சமஸ்கிருத ஞான மும் இல்லை. மற்ற அம்சங்கள் எல்லாம் மிகவும் நன்றாயிருப்ப தால் இந்த இரண்டும் பெருங்குறைகளாகத் தோன்றுகின் றன.'') ''பாபு'' என்று தமிழிலும் இந்தியிலும் கையொப்ப மிட்டிருக்கிறார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. தேதி: 13—2—1934. ஆசிரமத்தில் தங்கியிருந்தபோது வழக்கம் போல் பிரார்த்தனைக் கூட்டத்தில் கீதா பாராயணம் செய் தார்கள். அப்போது ஒருவர் கீதை ஸ்லோகங்களைச் சொல்ல, பிரார்த்தனைக் கூட்டத்திலிருப்பவர்கள் அனைவரும் அதைத் திருப்பிச் சொல்வது வழக்கம். ஆனால் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு சமஸ்கிருத ஞானமில்லாததால் அவர் கள் எல்லோரும் ஒரே மாதிரியாகச் சொல்லவில்லை. மேலும் இங்கு தங்கியிருந்த 2 நாட்களில் ஆசிரமவாசிகளுக்கு இந்தி தெரியாதென்பதையும் காந்திஜி கண்டு கொண்டார். அதனால்தான் மேற்கண்டவாறு எழுதியிருக்கிறார்.

அம்துஸ்சலாம்

அவருடைய குழுவைச் சேர்ந்த திருமதி அம்துஸ் சலா மிற்கு உடல்நலம் சரி இல்லாமல் இருந்ததல்லவா? திருப்பூரி லிருந்து வந்த அந்த அம்மையாரை ஆசிரமத்தி லேயே விட்டு விட்டு காந்திஜி தம் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார். அவர் புறப் படுவதற்கு முன் அந்த அம்மையாருக்கு உதவி செய்யும் பொறுப்பை எம்.கே. வெங்கட்ராமன் வாழ்க்கைத் துணைவியாரான லக்ஷ்மி அம்மாளிடம் ஒப்படைத்தார். தமக்கே உரித்தான முறையில் அம்துஸ் சலாமிற்குச் செய்ய வேண்டிய ஒவ்வொரு சிகிச்சையையும் அவருக்கு அளிக்க வேண்டிய உணவையும் மகாத்மா லக்ஷ்மி அம்மாளுக்கு விளக்கிச் சொன்னார். கடைசியாக அவர் கேட்ட கேள்வி மிகவும் உருக்கமாக இருந்தது. ''நீ அவரை உன் தாய் மாதிரி பாவித்துக் கொள்வாயா?'' என்று கேட்டார். அதற்கு அந்த அம்மையார் ''அப்படியே செய்கிறேன், மகாத்மாஜி'' என்று சம்மதம் தெரிவித்த பின்புதான்

காந்திஜி அங்கிருந்து புறப்பட்டார். இதே போன்று அம்துஸ்சலாமின் வைத்தியப் பொறுப்பை ஏற்ற டாக்டர் கே ரங்கநாதனிடம் அவர் கூறியதும் அவர் கொள்கை உறுதியைத் தெளிவாகக் காட்டியது. ''டாக்டர், நீங்கள் அம்துஸ்சலாமிற்கு என்ன மருந்து வேண்டுமானாலும் கொடுங்கள். அல்லது கொன்றே போடுங்கள், பரவாயில்லை. உங்களுடைய சிகிச்சை முறையில் நான் குறுக்கிட வரவில்லை. ஆனால் உணவு விஷயத்தில் நான் கூறும் ஆலோசனையை நீங்கள் பின்பற்றித்தான் ஆகவேண்டும். அம்துஸ் காய்ச்சல் தீரும்வரை நீங்கள் ஆரஞ்சுச்சாறு, தண்ணீர், தேன் ஆகியவைகளைத்தான் கொடுத்து வரவேண்டும்,'' என்றார். ஒரு கத்திரிக்கோல் எடுத்து சலாமின் முடியையெல்லாம் தாமே வெட்டிவிட்டார். (பின்னர், அந்த டாக்டருக்கும் மகிழ்ச்சி தெரிவித்து ஒரு கடிதம் எழுதியுள்ளார்.) இவ்வாறு இரண்டு நாட்கள் ஓய்வு எடுத்துக்கொண்டு, காந்திஜி தம் பயணத்தைத் தொடங்கினர்.

14-2-34

நாமக்கல்

புதுப்பாளையத்திலிருந்து சேலத்திற்குச் சென்ற வழியில், கவி இராமலிங்கம் பிள்ளை பிறந்த நாமக்கல்லுக்கு முதன் முதலாக காந்திஜி வந்தார். இங்கு ஆலயத்தின் அருகே கமலாலயம் மலையில் உள்ள நேரு சதுக்கத்தில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மிட்டாதார் வேங்டாசல செட்டியாரும் வழக்கறிஞர் நாகராஜ ஐயரும் சேர்ந்து செய்த ஏற்பாடுகள் சிறப்பான முறையில் அமைந்திருந்தன. அன்று கூட்டம் நடைபெற்ற ஒழுங்கு, கூட்டம் நடைபெற்ற இடம், காலம் போன்று எல்லாம் சேர்ந்து அவ்வளவு அழகுறத் தமிழ் நாட்டில் வேறு எந்தக் கூட்டமும் அமையவில்லை என்று தைரியமாகக் கூறிவிடலாம். அண்ணலே இதைப் பற்றி மனமாரப் பாராட்டினர். ''இந்தியாவிலேயே இயற்கை அழகு நிறைந்த இடங்களில் ஒன்றிற்கு என்னை அழைத்து வந்திருக்கிறீர்கள். இத்தகைய கூட்டங்கள் நடத்துவதற்கு மிகவும் ஏற்ற இடம் இது'' என்று அவர் மனமகிழ்ந்து கூறினர். சுமார் பதினைந்தாயிரம் மக்கள் - இவர்களில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் பெண்கள் - அங்குக் கூடியிருந்தார்கள். காங்கிரஸ் தொண்டர்களும் போலீசாரும் கூட்டத்தின் ஒழுங்கைப் பாதுகாப்பதற்காக நல்ல ஏற்பாடு செய்திருந்தார்கள். (தாலுகா போர்டுத் தலைவ

ரான பொன்னுசாமி ரெட்டியார் போர்டின் வரவேற்புரை யைப் படித்தளித்தார். யூனியன் போர்டு, அரிஜனங்கள் சார்பாகவும் வரவேற்புரைகள் படித்தளிக்கப் பெற்றன. கூடுதுறை ஜாமீன்தாரான கே. வேங்கடாச்சல ரெட்டியார் பணமுடிப்பை அளித்தார். ஒரு செம்பு விக்ரகம் இங்கு காந்திஜியிடம் அளிக்கப்பெற்றது.) தாராள மனது படைத்த சிலர் கொடுத்த பண உதவியைக் கொண்டு தாங்கள் ஒரு கோவில் கட்டியிருப்பதாகவும் அது இன்னும் முடிவு பெறாது இருப்பதாகவும் அதை முடிப்பதற்கு நிதி உதவி வேண்டுமென்றும் அரிஜனங்கள் தங்கள் வரவேற்புரை யில் கூறியிருந்தனர். இதை அண்ணல் குறிப்பிட்டு, நாமக் கல்லில் உள்ள தலைவர்கள் அதற்கு வேண்டிய உதவியை நல்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். (சேந்தமங்கலத் தில் பெரியவர்கள் அளித்த வரவேற்பு, பணமுடிப்பு ஆகி யவைகளை விடச் சிறுவர்களே வசூல் செய்து அவரிடம் அளித்த ரூ. 4-ஐப் பெறுவதில் அண்ணல் அதிக மகிழ்ச்சி அடைந்தார். காளப்ப நாயக்கன்பட்டி, பேலுகுறிச்சி ஆகிய ஊர்களில் அளிக்கப்பெற்ற வரவேற்புக்களைப் பெற்றுக் கொண்டு இராசிபுரத்திற்குச் சென்றபோது அங்குப் பஞ்சா யத்து போர்டு, ஆதி திராவிடர்கள் சார்பாக வரவேற்புரை கள் படித்து அளிக்கப்பெற்றன. மாவட்ட அர்பன் வங்கி அலுவலர்கள் தொப்பம்பட்டியில் வசூல் செய்த சிறு பண முடிப்பும் இங்கு காந்திஜியிடம் வழங்கப்பெற்றது.)

சேலம்

சேலத்தில் காந்திஜியின் வருகையை முன்னிட்டு நகராட்சிமன்ற நிறுவனங்களுக்கு எல்லாம் விடுமுறை விடப் பெற்றிருந்தது. காந்திஜி சிற்றுண்டிச்சாலை, வைசிய இலக்கியச் சங்கம் ஆகியவற்றின் முன் னலும் மற்றும் சில இடங்களிலும் நன்கு அலங் காரம் செய்திருந்தார்கள். (வந்தவுடன் குமார சாமிப் பேட்டையில் உள்ள நடேச பண்டாரத்தின் இல்லத் திற்குச் சென்று மதியம் மூன்று மணிவரை காந்திஜி ஓய்வு எடுத்துக் கொண்டார். சேலத்தில் காந்திஜி தங்கியிருந்த இடம், சேலம் கல்லூரிக்கு எதிரே தற்போது தபால் அலுவ லகம் உள்ள கட்டிடமாகும். இங்கு அவர் தங்கியிருக் கையில் ஜி. இராமச்சந்திர நாயுடு, பி. கந்தசாமி பிள்ளை, சி. அனந்தாச்சாரியார், எஸ். சி. வெங்கடப்ப செட்டியார் ஆகியோருக்கும் அரிஜனத் தொண்டில் ஈடுபட்டிருந்த மற்றும் சிலருக்கும் பேட்டி அளித்தார். பல அரிஜனங்களும்

அவரைப் பார்த்துச் சென்றார்கள். கந்தசாமி வாத்தியார் என்ற அரிஜனின் பெண்ணுக்கு ''இராதா'' என்றும் சேவா பேட்டையைச் சேர்ந்த சித்தலிங்கத்தின் குமாரனுக்கு ''யோகி தர்ஸ்'' என்றும் பெயர் சூட்டினார்.) சி. விஜயராகவாச்சாரியார் காந்திஜியைப் பார்த்துப் பேசிச் சென்றார். காந்திஜியும் மாதர்கள் கூட்டம் முடிந்ததன் பின் சுமார் நான்கு மணி வாக்கில் விஜயராகவாச்சாரியார் இல்லத்திற்குச் சென்று சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து திரும்பினர். இங்கு காந்திஜி வந்து அமர்ந்து பேசிக் கொண்டிருந்த திண்ணையை -அந்த வீட்டில் பல மாறுதல்கள் செய்து கட்டியபோது கூட- இடித்துவிடாமல் அப்படியே வைத்திருக்கிறார்கள். அந்தத் திண்ணையை 'காந்தி திண்ணை' என்றும் அழைக்கின்றனர். ''இங்கு வந்தபோது நிலக் கடலையும் திராட்சையும் சாப்பிட்டார். எங்கள் வீட்டுக் குழந்தை ஒன்றை மடியில் வைத்துக் கொஞ்சிக் கொண்டே பேசிக் கொண்டிருந்தார்'' என்று திருமதி விஜயராகவாச்சாரியார் இந்நூல் ஆசிரியரிடம் மன மகிழ்ச்சியோடு கூறினர்.

மதியம் ஓய்வு எடுத்துக் கொண்டபின் முதன் முதலாக அவர் கல்லூரி மாடியில் உள்ள மண்டபத்தில் நடைபெற்ற மாதர்கள் கூட்டத்தில் பங்கு கொண்டார்.

மாதர் கூட்டம்

(மாதவியம்மாள் அவருக்கு மாலை சூட்டி வரவேற்று ''மிகப்பெரிய ஹரிஜன் எம். கே. காந்தியை ஆண்டவன் ஆசீர்வதிப்பாராக!'' என்று சித்தரிக்கப் பெற்றிருந்த ஒரு சங்கிலியையும் அவர் கழுத்தில் அணிவித்தார். காமாட்சியம்மாள் பணமுடிப்பை அளித்தார்; லலிதாம்பாள் இந்தியில் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். ஆனால்) எல்லாப் பெண்கள் கூட்டங்களையும் போல் தான் இதுவும் முடிந்தது. முல்லுவாடியில் உள்ள அரிஜன மாணவர் விடுதிக்கும் சில சேரிகளுக்கும் அவர் சென்றார். கிச்சிபாளையத்தில் அரிஜனத் தொழிலாளர் சங்கம் காந்திஜிக்கு ஒரு வரவேற்புரை வாசித்தளித்தது. அந்தச் சங்கம் நடத்தும் பள்ளியையும் காந்திஜி பார்வையிட்டார்; அங்கிருந்து திரும்பி வந்த வழியில் சுப்பையர் சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றார். பெரிய பெரிய வாணிக நிலையங்கள், மாபெரும் தனவந்தர்களின் இல்லங்கள் ஆகிய வைகளுக்கெல்லாம் போகாத காந்திஜி ஒரு சிற்றுண்டிச் சாலைக்குச் சென்றார் என்றால் அதில் விசேடம் இருக்க வேண்டுமல்லவா?

சுப்பையர் தம் உணவு விடுதியில் அரிஜனங்கள் நுழையவும் மற்ற சாதி இந்துக்களுடன் உணவு உண்ணவும் அனுமதி கொடுத்தார். இதன் பலனாக அவர் சிற்றுண்டிச்சாலைக்கு முதலில் யாரும் சாப்பிட வராமல் இருந்தார்கள். அவருக்குப் பெரும் நட்டம் ஏற்பட்டது. இருப்பினும் மகாத்மாவின் மீது முழுநம்பிக்கை வைத்து உறுதியாக இருந்தார். கடைசியில் அவர் விரதம் வெற்றியடைந்தது. சிறிது சிறிதாக அவருடைய ஓட்டலுக்கு சாதி இந்துக்கள் வரத் தொடங்கினர். சில காலங்கழித்தோ இதன் காரணமாக அவருடைய ஓட்டல் பெயர் பெற்று அதிகப்படியான பேர் வரத் தொடங்கி விட்டனர். அவரை உள்ளூரார் காந்தி ஐயர் என்றும் அழைத்தார்கள். அடிகள் காந்தி ஐயர் சிற்றுண்டிச் சாலைக்கு வரப்போகிறார் என்ற வதந்தி ஊரில் பரவவே, சேலம் நகரம் முழுவதும் அதன் முன்பாகக் கூடி விட்டது. பிற்பகல் மூன்றரை மணிக்கு அடிகள் அவ்விடம் வந்த பொழுது கார் போக முடியவில்லை; இறங்கிச் செல்லவும் முடியவில்லை. கடைசியில் பணப்பை, மாலை, வரவேற்புப் பத்திரம் ஆகியவைகளை எடுத்துக்கொண்டு காரை அடைந்து படிக்கட்டில் இருந்தபடியே அளித்தார். (பின்னர் வைசிய இலக்கியச் சங்கக் கூட்டத்திற்குச் சென்று அவர்கள் அளித்த பணமுடிப்பை அண்ணல் பெற்றுக்கொண்டார். இங்கு ஏ. வி. இராமச்சந்திர செட்டியார் அழகான வேலைப்பாடுகள் அமைந்த வெள்ளிப் பேழை ஒன்றை அளித்தார். இந்தப் பேழையில் காந்திஜியைப் போன்றும் மற்ற தேசியத் தலைவர்களைப் போன்றும் உருவங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. சேலத்தில் மளிகை வர்த்தகச் சங்கத்தாரும் ஷராப்பு வர்த்தகச் சங்கத்தாரும் பணமுடிப்பு அளித்தார்கள். செவ்வாய்ப் பேட்டை ஆஞ்சநேய தேகாப்பியாச அபிவிருத்தி சங்கத்தார் ஒரு வரவேற்புரையும் பண முடிப்பும் கொடுத்தார்கள்.) கல்லூரியில் சொற்பொழிவாற்றிவிட்டு காந்திஜி வந்த போது, குமுதவள்ளி என்ற ஐந்து வயதுக் குழந்தை ஒரு வெள்ளித்தட்டை அளித்ததை காந்திஜி மகிழ்ச்சியுடன் பெற்றுக்கொண்டு குழந்தை கையில் ஓர் ஆரஞ்சுப் பழத்தைக் கொடுத்தார்.

காந்தி ஐயர்

கல்லூரிக்குப் பின்னால் உள்ள பெரிய மைதானத்தில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் வந்திருந்தனர். மைதானத்

தில் இடம் இல்லாததால் அங்கு இருந்த அதே அளவு மக்கள் சாலைகளிலும் நின்று கொண்டிருந்தனர். (நகராட்சி, சேலம் பொதுமக்கள், மாவட்ட போர்டு, தாலுகா போர்டு, தாலுகா போர்டுத் தலைவர்களின் சங்கம், செளராஷ்டிர வாலிபர் சங்கம், ஆஞ்சநேய உடற்பயிற்சி நிலையம், பகத்சிங் வாலிபர்சங்கம், வைசிய இலக்கிய சங்கம், கேரள சமாஜம், ஆதிதிராவிட மகாஜன சங்கம், நகரசபை கல்லூரி மாணவர்கள் ஆகிய பல்வேறு தரப்பினரின் சார்பில் வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப்பெற்றன. மாவட்ட போர்டு தலைவர் திவான்பகதூர் எஸ். எல்லப்பச் செட்டியார், நகராட்சித் தலைவர் டி. எம். சின்னையா பிள்ளை, தாலூகா போர்டுத் தலைவர் எஸ். பி. இராஜமாணிக்க பண்டாரம் ஆகியோர் இந்த அமைப்புகளின் சார்பான வரவேற் புரைகளைப் படித்து அளித்தார்கள்.) இரயிலுக்குப் புறப்பட வேண்டியிருந்ததால், காந்திஜி தம் பேச்சை விரைவில் முடித்துக்கொள்ள வேண்டியிருந்தது. ''ஒரே வாக்கியத்தில் நான் கூறிவிடுகிறேன். எல்லாச் சாதியினருக்கும் சம உரிமை வேண்டும். நாம் எல்லோரும் ஆண்டவனுல் படைக்கப் பட்டவர்களே என்பதை உணர்ந்துவிட்டால் நம் மத்தியில் தீண்டாமை உணர்வும் இருக்குமா? நாம் எல்லோரும் அரிஜனங்களே, சாதி இந்துக்கள்தான் ஆண்டவனை நெருங்கிப் போக முடியாதவர்கள். ஏனென்றுல் அவர்கள்தான் அரிஜனங்களுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யவில்லை. ஆண்டவனுடைய ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமானுல் நாம் அரிஜனங்களுடைய நிலையை உயர்த்த வேண்டும்.....'' என்று அவர் பேச்சைத் தொடங்கினர். காந்திஜி பேசிக் கொண்டிருந்தபோது கூட்டத்தில் கூச்சல் அதிகமாகி விட்டது. பின்பு தாம் தங்கியிருந்த இடத்திற்குச் சென்று உணவருந்தி விட்டு இரயிலுக்குப் புறப்பட்டார்.

பொதுக் கூட்டம்

15-2-34

சேலத்தில் இரயில் ஏறிய காந்திஜி திருச்சி வழியாக செங்கோட்டா பாசஞ்சர் இரயிலில் அதிகாலை தஞ்சாவூர் வந்து சேர்ந்தார். இரயில்வே அதிகாரிகளுடன் தனியாக ஏற்பாடு செய்து நிலையத்திற்கு ஒரு பர்லாங் தூரத்திலேயே இரயிலை நிறுத்தி காந்திஜியை இறக்கிப் பொதுக்கூட்டம் நடைபெற்ற இடமான ரோமன் கத்தோலிக்க உயர்நிலைப்பள்ளி வளா

தஞ்சாவூர்

யாட்டு மைதானத்திற்கு அழைத்து வந்தனர். இந்தக் கூட்டத்திற்கு காந்திஜி வந்து கொண்டிருந்தபோது குளிர்ந்த கிரணங்களுடன் சூரியன் உதயமாகிக் கொண்டிருந்தான். ஆகையால் காந்திஜி அதையே தம் சொற்பொழிவின் பொருளாகக் கொண்டார்.

ஆலயப் பிரவேசம்

''தீண்டாமை ஒழிப்பின் தொடர்பான எல்லாச் சீர்திருத்தங்களையும் தாங்கள் ஏற்றுக்கொள்வதாகவும் ஆனால் ஆலய நுழைவை மட்டும் நான் கைவிட்டுவிட வேண்டுமென்றும் சாதி இந்துக்கள் கூறுகிறார்கள். என்னுடைய இயக்கத்தின் அடிப்படையையே கைவிட வேண்டும் என்பது தான் இதன் பொருள் என்பதை அவர்கள் அறியவில்லை. இப்போது நான் தஞ்சைப் பெரிய கோவிலின் பக்கத்தில் தான் வந்தேன். கோவிலை ஒருமுறை பார்த்தேன். சில விநாடிகளில் சூரியனும் உதயமாகி விட்டது; அதையும் பார்த்தேன். சாதி இந்துக்களுக்கு மட்டும் சூரியன் உதயமாகிறதா அல்லது அரிஜனங்களுக்கும் கூடவா என்ற கேள்வியை நானே கேட்டுக்கொண்டேன். சூரியன் யாருக்கும் பாரபட்சமாயில்லை; ஆண்டவனால் படைக்கப்பெற்ற அந்த ஆலயமே அரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பெற்றிருக்கிறது என்றால் மனிதனால் படைக்கப்பெற்ற இந்த ஆலயங்கள் திறந்துவிடப்பட வேண்டுமா, இல்லையா? ஆனால் எத்தனையோ சீர்திருத்தங்களில் உடன்பாடு இருப்பதாகக் கூறும் சனாதனிகள், - இந்த ஆலயப் பிரவேசச் சிக்கலை ஒரு சாக்காகக் காட்டிக் கொண்டு - தீண்டாமை ஒழிப்பில் விரலைக்கூட அசையாது இருக்கின்றனர். அவர்கள் கூறும் மற்ற அம்சங்களிலாவது அரிஜனங்களை அவர்கள் சமமாகக் கருதட்டுமே?'' இவ்வாறு காந்திஜி மிகவுங் கண்டிப்பாகப் பேசினார். (நகராட்சி, மாவட்டக்கழகம், தாலூகா போர்டு சார்பாக வரவேற்புரைகள் படித்து அளிக்கப் பெற்றன. தல அரிஜன சேவா சங்கத்தின் மூலமாகத் தஞ்சாவூர்ப் பொதுமக்களின் பணமுடிப்புக் கொடுக்கப் பெற்றது. தஞ்சாவூரிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணகம்பெனியார் மெழுகினால் செய்யப்பெற்ற காந்திஜியின் உருவம் ஒன்றையும் விஸ்வகர்ம சமூகத்தார் அலங்கார வேலைப்பாடுகளமைந்த வெள்ளி முலாம் பூசிய பித்தளைத் தட்டையும் அளித்தார்கள்.)

தஞ்சாவூர் விஸ்வகர்மாக்கள் அளித்த கலை வேலைப் பாடமைந்த தட்டு காந்திஜியின் உள்ளத்தைக் கவர்ந்தது. வெள்ளி முலாமில் தேவதைகளின் சித்திரங்கள் பொறிக்கப்பட்டிருந்த இத்தட்டின் பின்னுல், ''கடவுளே சத்தியம் - மகாத்மா காந்திக்குத் தஞ்சாவூர் விஸ்வகர்மாக்கள் அன்பளிப்பாக வழங்கியது'' என்று எழுதப்பெற்றிருந்தது. இந்த அற்புதமான சித்திரத் தட்டால் கவரப்பெற்ற காந்திஜி அதை நல்ல விலைக்கு விற்கவேண்டும் என்று விரும்பினர். ஆகையால் வேறு இடங்களிலெல்லாம் இதை விலை கூறுமல் (கன்னடத்தில்) பெல்காமிற்குக் கொண்டுபோய் ஏலம் விட்டார். ஆனல் அங்கும் இதன் விலை ஐந்தில் தொடங்கி அறுபது வரைதான் ஏறிற்று. அந்தத் தட்டை அறுபது ரூபாய்க்கு விற்க காந்திஜிக்கு மனம் வரவில்லையாதலால் தம்மிடமே வைத்துக்கொண்டார். பின்னர், அதே கன்னடத்தில் புகையிலை வாணிக கேந்திரமான நிபானியில் மீண்டும் அதை ஏலம் விட்டார். ''இது தஞ்சாவூர் விஸ்வகர்மாக்கள் அளித்தது. அழகான வேலைப்பாடுகள் உள்ளது. பெல்காமிலோ அல்லது இந்நகரிலோதான் இதை விற்க வேண்டும் என்று நான் எண்ணினேன். ஆனல் பெல்காமில் நல்ல விலை கிடைக்கவில்லை. குறைந்தது 'வாங்கிய விலை' யாவது எனக்குக் கிடைக்க வேண்டும். நிபானி மக்கள் என்னை ஏமாற்ற மாட்டார்கள் என்று நம்புகிறேன். இப்போது ரூ. 75-க்குமேல் எனக்குக் கொடுக்கக் கூடியவர்கள் யார்?'' என்று பெரிய பீடிகை போட்டு ஏலத்தைத் தொடங்கினர். உடனே ஒரு சங்கத்தின் சார்பில் அந்தத் தட்டை ரூ. 76-க்குக் கேட்டு விட்டார்கள். தஞ்சையில் அண்ணலிடம் அத்தர், ஊதுவத்திகள், வாசனைச் சரக்குகள், தஞ்சை நகர் எந்தக் கைவேலைப்பாட்டுப் பொருள்களுக்குப் பெயர் பெற்றதோ அவை எல்லாம் அளிக்கப்பெற்றன. (இதன் பின்னர் ஐயம்பேட்டையில், யூனியன் போர்டு ஒரு வரவேற்பு அளித்தது. மாங்குடி மக்கள் சாலையில் நின்று தங்கள் பணமுடிப்பை அளித்தார்கள். பாபநாசத்தில், பஞ்சாயத்து போர்டு அலுவலகத்தில் போடப்பெற்றிருந்த பந்தலில் காந்திஜிக்கு அளிக்கப்பெற்ற வரவேற்பில் பல ஓலைகளில் எழுதப்பெற்றிருந்த வரவேற்பை தாலுகா கதர் அபிவிருத்தி சங்கத்தின் துணைத் தலைவர் படித்தார்; தாலுகா போர்டும் பஞ்சாயத்து போர்டும் ஆங்கிலத்தில் அளித்த வரவேற்புரைகள் படித்ததாக ஏற்றுக்கொள்ளப்பெற்றன.)

சித்திரத் தட்டு

கும்பகோணம்

கும்பகோணத்தில் முதன் முதலாக வரவேற்கும் பாக்கியத்தைப்பெற்றவர்கள் விஸ்வகர்ம பித்தளைத் தொழிலாளர்கள் தான். கும்பேஸ்வரன் தெற்கு, மேற்கு வீதிகள் சந்திக்கும் இதே இடத்தில் விஸ்வகர்மாக்கள் அல்லாத பித்தளைத் தொழிலாளர்களின் வரவேற்பொன்றும் அளிக்கப்பெற்றது. அண்ணலே வரவேற்பதில் கும்பகோணத்தில் பல சிக்கல்களும் போட்டிக் கட்சிகளும் முகிழ்த்திருந்தன. காந்திஜி வருவதற்கு முன் அவர் வருகை குறித்த நிகழ்ச்சி நிரலே வெளியிடுவதிலிருந்தே இந்தப் போட்டி தொடங்கி விட்டது. வேறு எந்த ஊரிலும் இல்லாதவாறு, இந்த ஊரில்தான், நகராட்சி மன்றத்தினர் பொதுக் கூட்டத்தில் தங்கள் வரவேற்பை அளிக்க முடியாதென்றும் நகராட்சி மண்டபத்தில் தான் அளிக்க முடியுமென்றும் மகாத்மாவுக்குத் தெரிவித்து விட்டனர். அங்கு வந்து வரவேற்பைப் பெற்றுக்கொள்ளத் தயார் என்று அவரும் சம்மதித்தார். படேல் நகர மண்டபத்திற்குச் சென்று அங்கு ராவ்பகதூர் என். திருவேங்கடத்தையங்கார் வாசித்தளித்த வரவேற்புரையைப் பெற்றுக்கொண்டார். இந்த வரவேற்புரையைப் பெற்றுக்கொள்வதற்காகச் சென்ற வழியில் உள்ள நாகேஸ்வரம் திருமஞ்சன வீதியிலும் மடத்துத் தெருவிலும் சனாதனிகள் ஊர்வலமாக வந்து கறுப்புக் கொடிகள் காட்டினர். காந்திஜி வருவதற்கு முதல் நாளிலிருந்தே, அவருடைய நிகழ்ச்சிகளுக்கு யாரும் செல்லக்கூடாதென்று இவர்கள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்திருந்தார்கள். மடத்துத் தெரு முழுவதிலும் ''காந்தி திரும்பிப்போ'' என்று அச்சடிக்கப்பெற்ற காகிதங்கள் சுவர்களில் ஒட்டப் பெற்றிருந்தன. காந்திஜி புன்சிரிப்புடன் இவைகளைத் தாண்டி நகராட்சி மண்டபத்திற்குச் சென்றாலோ அவர்களுடைய வரவேற்புரையும் அவர் கொள்கையைக் கண்டிப்பது போல் எழுதப்பெற்றிருந்தது. ''ஆலயங்களில் நடைபெறும் வழிபாட்டு முறைகள், சமூக, சமய விவகாரங்கள் ஆகியவைகளில் குறுக்கிட்டு இந்த நாட்டை மேலும் பிரிவினைகளுக்குள்ளாக்கக் கூடாது. சமூக, பொருளாதார நிலை வளர்ச்சியடைவதன் மூலமும் மக்களுடைய கருத்து உருவாவதன் மூலமும் படிப்படியாக மாறுதல் அடையுமாறு இவைகளை விட்டுவிட வேண்டும். ஆகையால், மேலும் பிரிவினைகளுக்கும் சண்டைகளுக்கும்இடங்கொடாமல் நாடு முழுவதுமே உங்களைப் பின்பற்றுவதற்கான வழி வகைகளைக் காண்பீர்கள் என நம்புகிறோம்'' என்று கூறியது வர

வேற்புரை. அடிகளை நன்கு வரவேற்றும் அதே சமயம் அவருடைய ஆலய நுழைவு இயக்கத்தை எதிர்த்தும் வரவேற்புரை எழுதப் பெற்றிருந்தது. இந்த வரவேற்புரைக்கு நிதானமாக, ஆனால் ஆணித்தரமாக, அண்ணல் மறுமொழி கூறினர். ''உங்களுடைய கருத்தை அழுத்தமாக வலியுறுத்தி எனக்கு அளித்துள்ள இந்த வரவேற்புரையை மிகவும் மதிக்கிறேன். உங்களுடைய யோசனையைக் கேட்டபின்னும் நான் என்னுடைய இயக்கத்தைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென்றே தீர்மானிக்கிறேன். அரிஜனங்களுக்கு முழு நியாயம் வழங்குவதற்கு ஆதரவாகப் பொது மக்களுடைய கருத்தை உருவாக்குவதற்காகத்தான் நான் இப்போது இச்சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருக்கிறேன். நான் எங்கெங்கு சென்று அரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்து வைக்கிறேனோ, அங்கெல்லாம் ஆயிரக்கணக்கில் சாதி இந்துக்கள் ஆலயங்களை அரிஜனங்களுக்குத் திறந்துவிட வேண்டுமென்றுதான் விரும்புகிறார்கள். அவர்களுடைய கருத்து ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவாகவே இருக்கிறது,'' என்று காந்திஜி விளக்கினர். இதற்குப் பின்பு பொதுக் கூட்டத்திற்கு காந்திஜி புறப்பட்டார். ஆனால் அங்கும் ஒரு கருத்து வேறுபாடு இருக்கத்தான் செய்தது - ஆலயப் பிரவேசத்தை எதிர்த்தல்ல; யாருக்கு காந்திஜியை வரவேற்க உரிமை உண்டு என்பதைப்பற்றி!

மற்றொரு தகராறு

இந்நகரில் காந்திஜியை வரவேற்கும் பொறுப்பு டாக்டர் சாம்பசிவம் என்பவரிடம் அளிக்கப்பெற்றிருந்தது. அவர் சிறை சென்ற தேசபக்தரல்ல என்பது அப்போது ஒரு பெருங்குறையாகக் கருதப்பெற்றது. அது மட்டுமல்லாது, அவர் செய்து வந்த ஏற்பாடுகளில் சிறை சென்ற சில தியாகிகளைச் சேர்த்துக்கொள்ளவில்லை. ஆகையால் அவருடைய வரவேற்புக் குழுவிற்குப்போட்டி வரவேற்புக்குழு ஒன்று உருவாயிற்று; அந்தப் போட்டிக் குழுவுக்கும் ஒரு டாக்டரே தலைவர். இதனால் பெருங்குழப்பம் ஏற்பட்டது. நகர உயர்நிலைப் பள்ளி மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு (மைதானத்திற்கு எதிரில் சனாதனிகள் கறுப்புக் கொடிகளை வைத்துக்கொண்டு அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.) காந்திஜி சென்ற உடனே யார் முதலில் வரவேற்புரை வாசித்துக் கொடுப்பது என்ற கேள்வி எழுந்தது. டாக்டர் சாம்பசிவ ஐயர் கண்ணியமாக வீட்டுக்கொடுத்தார்.

அவர் அன்று அளித்த பண முடிப்பைவிட டாக்டர் வேங்க டாச்சாரி-போட்டிக் குழுவின் தலைவர்-அளித்த பண முடிப்பு குறைச்சல்தான் என்றாலும் டாக்டர் வேங்கடாச்சாரியே முதலில் மக்கள் சார்பான வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். டாக்டர் எம். கே. சாம்பசிவம், அரிஜன சேவா சங்கத்தின் சார்பான வரவேற்புரையை அடுத்தாற் போல் படித்தளித்தார். டாக்டர் சாம்பசிவம் குழுவினர் அளிக்கும் வரவேற்பை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று 'அனுமதேயத் தந்தி' ஒன்று தமக்கு வந்ததாகக் குறிப்பிட்டு, ''அரிஜனப் பணியில் ஈடுபட்டுள்ள எனக்கு, காங்கிரஸ்காரர்-அல்லாதார் என்ற வேறுபாடு கிடையாது. காங்கிரஸ் காரர் அல்லாத ஒருவர் அரிஜனங்களின் நண்பராக இருந்தால், சமய நம்பிக்கை உள்ளவராக இருந்தால், தொண்டாற்றுவதற்கு அவருக்கு ஆற்றல் இருந்தால், அவருடைய ஆணையின்படி நடந்து தொண்டாற்றுவது காங்கிரஸ்காரர் களின் கடமையாகும். அரிஜனத் தொண்டு தங்களுக்கு மட்டுமே கிடைக்க வேண்டிய உரிமை என்று காங்கிரஸ் காரர்கள் கூறத் தொடங்கிவிட்டால், காங்கிரஸ்காரர்கள் அல்லாத ஆயிரக்கணக்கான மக்கள் விலகி நிற்க நேரும், இந்து சமயத்திலிருந்தும் தீண்டாமை ஒழியாது. இந்த இயக்கத்தில் அரசியல் நோக்கம் எதுவுங் கிடையாது,'' என்று காந்திஜி விளக்கினார்.

பேட்டிகள்

இங்கிருந்து புறப்பட்டுப் பெரிய தெரு கோபால்தாஸ் வீட்டிற்குச் சென்று பெண்கள் அளித்த பண முடிப்பைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து ஆரோக்கிய ஆசிரமத்திற்கு வந்து தங்கி ஓய்வு எடுத்துக் கொண்டார். அவர் ஓய்வு எடுத்துக்கொள் வதற்கு முன் இந்திப் பட்டமளிப்பு விழா நடைபெற்றது. தேர்வுகளில் வெற்றி பெற்ற மாணவர் களுக்குப் பதக்கங்களையும் எழுத்துச் சான்றுகளையும் காந்திஜி அளித்தார். (இந்திப் பிரச்சார சபையினரும் அவருக்கு வர வேற்புரையுடன் பணமுடிப்பும் அளித்தார்கள். இந்நகரைச் சேர்ந்த சுயமரியாதைக்காரர்களுக்கு காந்திஜி பேட்டி அளித் தார். நகரில் உள்ள குசராத்திகளும் அவருக்குப் பண முடிப்பு அளித்தார்கள். டாக்டர் எம். கே. சாம்பசிவத்தின் மனைவியார் தங்கம் அம்மாள் ஒரு தங்க நெக்லசை அளித் தார்; ராகவ சாஸ்திரியின் குமாரத்தியான சீத்தாம்மாள் நான்கு வளையல்களைக் கழற்றிக் கொடுக்கையில் ஒரு வளையல்

காந்திஜியே கழற்றினார்.) சில அரிஜனங்கள் அவரைப் பேட்டி கண்டு பக்கத்தில் உள்ள கொரனூட்டுக் கருப்பூர் என்ற கிராமத்தில் நடத்தி வந்த பள்ளியைத் தாலுகா போர்டு நிறுத்தி விட்டதாகவும் அதை மீண்டும் தொடங்கிக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். இருந்த இடத்திலிருந்தே அந்தப் பள்ளியைத் திறந்து வைப்பதாக காந்திஜி அறிவித்தார்! அரிஜன சேவா சங்கம் அந்தப் பள்ளியை மேற்பார்வை செய்து வரும் என்றும் கூறினார். கும்பகோணத்தைச் சேர்ந்த சனாதனிகள் தம்மைச் சந்தித்துத் தீண்டாமை ஒழிப்பையும் சனாதன தருமத்தையும் பற்றி விவாதிக்க அரை மணி நேரம் ஒதுக்கிக் கொடுப்பதாக முன் வந்தார். ஆனால் இதை பிராமண மகாசபை ஏற்க மறுத்துவிட்டது. சாத்திரங்கள் தான் இறுதி முடிவானவை என்பதை மகாத்மா ஏற்றுக்கொண்டு அந்த அடிப்படையில் விவாதிக்க ஒப்புக்கொள்ள வேண்டும் என்பது அவர்களுடைய நிபந்தனை. அது மட்டுமல்லாமல் அரை மணி நேர விவாதம் கிஞ்சித்தும் போதாது என்று அவர்கள் கூறிவிட்டனர்.

மற்றொரு சிவகாசி

கும்பகோணத்தில் நல்ல வெயிலில் புறப்பட்டார் என் மூலும் மக்கள் அவரை இலகுவாகப் பார்க்கட்டும் என்பதற் காகத் திறந்த காரிலேயே அவர் செல்ல வேண்டியதாயிற்று. பிற்பகல் 2-30 மணிக்குப் புறப்பட்டுத் திருவாரூர் போய்ச் சேர ஐந்து மணியாகிவிட்டது. வழியில் மற்றொரு ''சிவ காசி'' நடந்துவிட்டதுதான் இதற்குக் காரணம். நாச்சி யார் கோவில், திருசிரை, கொடவாசல் ஆகிய இடங் களிலெல்லாம் அவருக்கு அதிக நேரம் ஆகவில்லை. அம்மையப்பன் கிராமத்தின் சார்பாகவும் ஒரு பணமுடிப்பு அளிக்கப்பெற்றது. கொரடாச்சேரிதான் மற்றொரு சிவகாசியாக முடிந்தது. அங்குக் கார்போகும் ரஸ்தாவிற்குக் கீழ் புறம் ஒரு மணல் வெளி. அங்குத்தான் கூட்டம் நடை பெற்றது. சாலைக்கும் அதற்கும் கால் மைல் தூரம். இந்தக் கால் மைல் தூரத்தில் பாதிக்குக் கூடக் கார் போக முடி யாது. அப்புறமுள்ள மணலில் அந்த வெயிலில் மகாத்மா நடக்க வேண்டியதாயிற்று. கூட்டத்தை ஒழுங்குபடுத்தவோ, அடிகளைக் காப்பாற்றி மேடைக்குக் கொண்டுபோகவோ ஒரு விதமான ஏற்பாடும் இல்லை. கூட்டத்தின் நடுவில் எல்லோ ரும் அகப்பட்டுக் கொண்டார்கள். முன்பின் போக முடிய

வில்லை. காலடியில் காய்ந்து சுட்டுக்கொண்டிருக்கும் மணல்; தலையில் அறைந்து கொண்டிருக்கும் வெயில். சுற்றிலும் மூச்சுவிட முடியாத மணல் தூசி. இதன் மத்தியில் ஒரு பர்லாங்கு தூரமுள்ள மேடைக்குப் போய்ச் சேரவேண்டும். எப்படியோ அண்ணலும் போய்விட்டார். அண்ணல் மூன் ஒரு பெரியவர், அவரைப் பற்றித் தாம் இயற்றியிருந்த வெண்பாக்களைப் பாடி அரங்கேற்ற முயன்றார். ஆனால் அதற்கு இடங்கொடுக்காமல், பணமுடிப்பு, வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு சுருக்கமாகப் பதிலளித்து விட்டுக் கீழே இறங்க அண்ணல் முயன்றார். போகும்பொழுது இருந்த அமளியைக் காட்டிலும் இறங்கும்போது அமளி பன்மடங்கு அதிகரித்து விட்டது. கூட்டத்தின் நெருக்கடியில் தள்ளப் பட்டு முக்கியமான தலைவர்களெல்லாம் எங்கெங்கோ ஒதுக்கப்பெற்றனர். அதற்குள்ளாக இராஜகோபாலாச்சாரியார், ஒரு சிறிய மோட்டார் வண்டியைச் சில ஆட்களைக் கொண்டு அந்த மணலில் தள்ளி வந்து நிறுத்தவும் அண்ணல் அதில் ஏறிக்கொண்டு சாலை வந்து சேர்ந்தார். ''சிவகாசியில் மழையில் பட்ட அனுபவத்திற்கு இன்று மணலில் பட்ட அனுபவம் சற்றேனும் குறையில்லை. இந்த நிகழ்ச்சிக்கு ஐந்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஆனால் ஒன்றரை மணி நேரமாக நீண்டு விட்டது,'' என்று டாக்டர் ராஜன் கூறுகிறார். (இங்கு நன்னிலம் தாலுகா போர்டு, கொரடாச்சேரி கூத்தா நல்லூர் - சுற்றுப்புறப் பொதுமக்கள், நன்னிலம் தாலுகா அரிஜன சேவா சங்கம், இலுப்பூர் பொதுஜன சேவா சங்கம் ஆகியவைகளின் சார்பில் நான்கு வரவேற் புரைகள் அளிக்கப்பெற்றன.) இத்தனை குழப்பத்திற்கும் இடையே இங்கு இவ்வூரைச் சேர்ந்த துரைசாமி பிள்ளை என்பவர் காந்திஜியின் பெயரையும் அவர் செய்துள்ள சேவைகளையும் குறித்த 108 பெயர்களைக் கொண்ட ஒரு அஷ்டோத்ரத்துடன் காந்திஜியின் வாழ்க்கை வரலாற்றை அவரிடம் அளித்தது ஒரு சாதனையாக இருந்தது.

திருவாரூர்

திருவாரூர் வரவேற்பில் (இராமானுஜ முதலியார் தம் சார்பாகவும் பொதுமக்கள் சார்பாகவும் இரண்டு பண முடிப்புகளை அளித்தார். நகர்ச்சி வரவேற்பை அதன் துணைத் தலைவரான டி. என். சபாபதி முதலியார் படித்துக் கொடுத்தார்.) ''இந்து சமூகத்தில் தீண்டாமை இருந்து அரித்துக் கொண்டிருக்கும் வரை, உலக நாடுகளில் இந்தியா முதன்மை

யான இடத்தை அடைய முடியாது'' என்று காந்திஜி எச்சரித்தார். இங்கு வடபாதிமங்கலம் எஸ்டேட் பெரிய முதலியார் இல்லத்தில் மாலை உணவை அருந்திவிட்டு காந்திஜியும் அவர் குழுவினரும் நாகப்பட்டினம் சென்றார்கள்.

நாகை

வழியில் மணக்கொல்லை மஞ்சக் கொல்லையில் பண முடிப்பைப் பெற்றுக் கொண்டு நாகைக்கு அவர் வந்து சேர்ந்தார். அரசாங்க அலுவலகக் கட்டித்திற்கு முன்னுள்ள பெரிய மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் (நகராட்சி மன்றம், நாகப்பட்டினம் தாலுகா போர்டு, சர்க்கா சங்கம், அரிஜன சேவா சங்கம், இந்தி மாணவர்கள், வடுவூர் கிராம வாசிகள் என்று பல்வேறு தரப்பினர் சார்பாக வரவேற்புப் பத்திரங்கள் இங்கு வழங்கப்பெற்றன. நகராட்சி மன்ற வரவேற்பை இராமலிங்க முதலியாரும் தாலுகா போர்டு வரவேற்பை மனத்துணைநாத தேசிகரும் படித்துக் கொடுத்தார்கள். ஒரு கிழவி இந்தக் கூட்டத்திற்கு வந்து ஒரு வெள்ளித் தம்ளரை மகாத்மாவிடம் கொடுத்துவிட்டு, கண்ணீர் பெருக, அவர் காலைத் தொட்டு வணங்கியது உருக்கமான காட்சியாக இருந்தது.) காந்திஜி நிகழ்த்திய உரை ஒரு பெரிய தீர்க்க தரிசனமாக அமைந்தது. ''சாதி இந்துக்களுக்கு மட்டும் நான் வேண்டுகோள் விடுத்துக்கொண்டிருப்பது போல் வெளிக்குத் தோன்றும். ஆனால் இது மனித வர்க்கம் முழுவதற்குமே நான் விடுக்கும் வேண்டுகோளாகும். தீண்டாமை என்னும் சாபக்கேட்டைச் சாதி இந்துக்கள் கைவிடுமாறு நான் செய்துவிட்டால், சகோதரத்துவ உணர்ச்சியை அடைவதில் இந்துக்கள் எவ்வளவோ முன்னேறி விட்டதாகப் பொருள்படும். உலகம் இன்று சகோதரத்துவ உணர்வுக்காகத்தானே ஏங்கிக் கிடக்கிறது?'' என்று அவர் கேட்டார். எவ்வளவு பெரிய தீர்க்க தரிசனம்! அன்று மட்டுமென்ன, இன்று கூட அந்தச் சகோதரத்துவ உணர்வுக்காகத் தான் உலகம் ஏங்கிக் கிடக்கிறது. இங்கு சுயமரியாதை இயக்கத்தினர் காந்திஜிக்கு எதிராகக் கறுப்புக் கொடி தாங்கி ஊர்வலம் நடத்தினார்கள். காந்திஜி வருகையை யொட்டி காந்தி சமாஜத்தார் ''சமபந்தி போஜனம்'' ஒன்றையும் நடத்தினார்கள். அன்று இரவு கடம்பாடியில் (உள்ள ''ஆமத்வில்லா''வில் சி. ராஜத்தின் விருந்தினராக) மகாத்மா காந்தியும் அவர் குழுவினரும் தங்கிவிட்டுக்

காலையில் நாகூருக்குப் புறப்பட்டார்கள். முதல் நாள் ஏராளமான அலுவல்கள் இருந்ததாலும் குறிப்பாகக் கொரடாச்சேரி நிகழ்ச்சியாலும் காந்திஜிக்கு ஏற்பட்ட அலுப்பால் மறுநாள் காலை ஆறுமணிக்குப் புறப்படவேண்டியவர்கள் ஏழுமணிக்கே புறப்பட்டார்கள்.

16-2-34

காரைக்கால்

அதிகாலையிலிருந்தே காரைக்கால் அரசலாறு ஆற்றங் கரையில் மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்தனர். காந்திஜி நாகூரில் பண முடிப்பைப் பெற்றுக் கொண்டு (நாகூர் ஸ்ரீ திலகர் வாசகசாலையின் தலைவரான மு. தி. முத்துவேலு செட்டியார் நாகூர் மக்களின் சார்பான பணமுடிப்பையும் வாசக சாலையின் சார்பான வரவேற்புரையையும் கொடுத்தார்.) காரைக்காலுக்கு வந்தார். காரைக்காலில் (அரிஜன சேவா சங்கத்தின் சார்பாக இளையாங்குடி அரங்கசாமி நாயுடு-திருநனியார் கம்யூன் மேயர்—வரவேற்புப் பத்திரம் படித்தளித்தார்; கன்சல் - ஜெனரல் துணைத் தலைவரான தியாகராஜ பிள்ளை பணமுடிப்பு அளித்தார். காந்திஜி இந்தச் சுற்றுப் பயணத்தில் இரண்டாவது முறையாகப் பிரெஞ்சுப் பகுதிக்கு அன்று வந்தார். முதலில் கேரளத்தில் அவர் சுற்றுப்பயணம் செய்தபோது அவர் மாஹேக்குச் சென்றார்.) பிரெஞ்சிந்தியப் பகுதி என்ற முறையில் பிரான்சின் அடிப்படையான தத்துவத்தை எடுத்து அதற்கும் தீண்டாமை ஒழிப்பிற்கும் உள்ள ஒற்றுமையை எடுத்துக் கூறி அண்ணல் வலியுறுத்தினார். ''உலகிற்கு சுதந்திரம், சமத்துவம், சகோதரத்வம் என்ற மூன்று சொற்களை ஈந்த நாடு பிரான்சு தான். ஆனால் இந்த மூன்றையும் செயலுக்குக் கொண்டு வரும் பேறு பெற்றவர்கள் மிகவும் சொற்பமானவர்களே. இதைச் செயல்படுத்தாத மிகப் பெரிய குற்றவாளிகள் இந்துக்கள் தாம். இவர்கள் தீண்டாமைக்கு ஆதரவாக ஆண்டவனுடைய நாமத்தையே இழுக்கிறார்கள்,'' என்று கூறினார். (கூட்டத்தின் முடிவில் மாணவர்கள் சார்பாக ஒரு பண முடிப்பு அளிக்கப் பெற்றது.)

தரங்கம்பாடி, பொரையாறு அதன் சுற்றுப்புறங்களிலெல்லாம், பொது விடுமுறை அளிக்கப்பெற்றது போன்று, அன்று முழுதும் எல்லாக் கடைகளும் அடைக்கப்

பெற்றன. அந்தப் பகுதியில் மக்கள் இருந்தால் தானே கடைகளை நடத்திக் கொண்டிருக்க முடியும்? எல்லா மக்களுந்தான், காந்திஜியைக் காணுவதற்காக, பொதுக்கூட்டம் நடைபெற்ற தரங்கம்பாடி கோட்டை வாசலுக்கு வந்து விட்டார்களே?

தரங்கம்பாடி

தரங்கம்பாடி, பொரையாறு, அதன் சுற்றுப் புறம், பக்கத்தில் உள்ள தில்லையாடி மக்களின் சார்பாக வரவேற்புப் பத்திரங்களும் பணமுடிப்பும் அளிக்கப்பெற்றன.

மாயவரத்தின் தென்கோடியில் உள்ள மகாதானத் தெருவில் அவர் கார் நுழைந்தபோதே, அங்கு சின்னக் கடைத் தெருவைச் சேர்ந்த சிறு வணிகர்கள் அவருக்கு ஒரு பணமுடிப்பை அளித்தார்கள். இராஜன் தோட்டம் மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. (நகராட்சி மன்றம், தாலுகா போர்டு சார்பாக வரவேற்புரைகள் படித்துக் கொடுக்கப் பெற்றன. தாலுகா போர்டு வரவேற்பை என். சோம சுந்தரம் பிள்ளை படித்தார். ஒரு வெள்ளிப் பேழையில் பண முடிப்பை வைத்து, பொதுமக்களின் சார்பாக நகராட்சி மன்றத் தலைவர் பி. நாகலிங்கம் பிள்ளை அளித்தார்.)

மாயவரம்

"உங்களுடைய பண முடிப்பிற்காக (இங்கு அவர்கள் அளித்த தொகை ரூ. 101 தான்.) நான் உங்களுக்கு நன்றி செலுத்த முடியாது. ஏனென்றால் மாயவரத்தை நான் ஏற்கனவே நன்கு அறிவேன். உங்களிடமிருந்து இன்னும் எவ்வளவோ பெருந் தொகையை நான் எதிர்பார்த்தேன்," என்று அண்ணல் வருத்தத்தோடு தெரிவித்தார். "சென்ற முறை நான் இந்நகருக்கு வந்திருந்தபோது என் கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் பலர் இப்போது வரவில்லை. அரிஜனங்களுடைய முன்னேற்றத்தில் அவர்களுக்கு மனப்பூர்வமான விருப்பம் இல்லை என்று தான் கருதவேண்டியிருக்கிறது," என்றும் கூறி அண்ணல் வருத்தப்பட்டார். இங்கும் காந்திஜி வருகையை முன்னிட்டு, நகராட்சி மன்றப் பள்ளிகளுக்கு விடுமுறை விட்டிருந்தார்கள்.

சீர்காழி போய்ச் சேருவதற்கு முன்னமேயே காந்திஜி ஓர் ஏற்பாடு செய்தார். சிறிது காலத்திற்கு முன்பு தான் அப் பகுதியில் கடும் புயல் அடித்து, மக்கள் பெரும் சேதத்திற் குள்ளாகியிருந்தனர். அதில் அரிஜனங்களுக்கு ஏற்பட்ட அவதிதான் - வழக்கம்போல் - அதிகம். ஆகையால் அன்று

காலையில் நாகையில் இருந்து அதிகாலையில் புறப்பட்டபோதே தக்கர் பாபாவையும் தமிழ்நாடு அரிஜன சேவாசங்கத்தின் செயலாளரான ஜி. இராமச்சந்திரனையும் சீர்காழிப் பகுதியில் உள்ள கிராமங்களில் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பார்த்துத் தம்மிடம்வந்து கூறுமாறு அண்ணல் அனுப்பியிருந்தார். இவர்களும் புயல் துன்ப நிவாரணக் குழுத்தலைவர் ஏ. சுப்பராய முதலியாருடன் அங்குச் சென்று பார்த்துவிட்டுச் சீர்காழியில் பொதுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது அங்கு வந்து சேர்ந்து விட்டார்கள்.

புயல் சேதம்

சீர்காழியில் காந்திஜி வந்த வழியெல்லாம் தோரணங்கள் கட்டி அழகுபடுத்தியிருந்தார்கள்; ஊர் தேடி வரும் தெய்வத்திருமகனைப் பார்க்கத் தெருவெல்லாம் திரளான கூட்டந்தான். (ஊழியக்காரன் தோப்பில் போடப் பெற்றிருந்த அலங்காரப் பந்தலில் வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். வேதகிரி முதலியாரும் செயலாளர் சி. எஸ். சாமிநாத செட்டியாரும் வரவேற்றார்கள். சீர்காழிப் பொது மக்கள் சார்பாகவும், தாலுகா போர்டு சார்பாகவும் வரவேற்புப் பத்திரங்களும் பண முடிப்புகளும் கொடுக்கப்பெற்றன. இங்கு இடமணல் பாலகிருஷ்ண நாயுடு ஒரு வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தது மட்டுமல்லாமல், வேடிக்கையான முறையில், ஒரு கூடை திராட்சைப் பழத்தை அளித்து காந்திஜியின் சிற்றுண்டிக்கும் ஐந்து ரூபாய் அளித்தார். இராமகிருஷ்ணரின் படம் ஒன்றும் காந்திஜியிடம் அளிக்கப்பெற்றது.) மகாத்மாவின் சொற்பொழிவு மிகவும் உருக்கமாக இருந்தது. சீர்காழிப் பகுதியில் புயலால் ஏற்பட்ட பெருஞ்சேதங்களைப் பற்றித் தாம் ஏற்கனவே அறிந்திருப்பதாகவும் அதன் காரணமாக, சீர்காழியிலிருந்து பண முடிப்பையே தாம் எதிர் பார்க்கவில்லை என்றும் ஆயினும் சீர்காழி அரிஜன நிதிக்கும் பீகார் பூகம்ப நிவாரண நிதிக்கும் தனித்தனியாகப் பண முடிப்புகளை அளித்திருப்பதைத் தாம் பாராட்டுவதாகவும் கூறி அண்ணல் தம் பேச்சைத் தொடங்கினார். ''நான் வசூலிக்கும் அரிஜன நிதியில் 100-க்கு 75 பாகம் அந்தந்தப் பகுதியிலேயே அரிஜனங்களின் நலனுக்குச் செலவிடப்பெறும். இங்குப் புயலால் பாதிக்கப்பட்டுள்ள அரிஜனங்களுக்கும் அரிஜன ஊழியர்களுக்கும் இதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்,'' என்று சொல்லி அண்ணல் அபயமளித்தார்.

சீர்காழி

காந்திஜி கூட்டத்திற்கு வந்தபோது எதிரில் சிலர் கறுப்புக் கொடி பிடித்துக் கொண்டிருந்தார்கள். அவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோதுகூட இவர்கள் ஓர் ஓரத்தில் நின்று அமைதியாகக் கறுப்புக் கொடி காட்டிக்கொண்டுதான் இருந்தார்கள். பேசும்போது இதைப்பார்த்து விட்ட அண்ணல் ''கறுப்புக் கொடியை ஆட்டிக்கொண்டிருந்தாலுங்கூட அவர்கள் மரியாதையோடும் ஒழுக்கத்தோடும் நடந்து கொள்வதை நான் பாராட்டுகிறேன். இப்போது செய்வது போல் தங்களுடைய உணர்ச்சியை வெளிக்காட்ட அவர்களுக்கு முழு உரிமை உண்டு,'' என்று கூறிவிட்டு மேலும் சொன்னார்: ''என்ன சொல்லி இந்தப் பணம் வசூல் செய்யப் பெற்றதோ அந்தக் காரியங்களுக்காகச் செலவிடப் பெறமாட்டாது என்று இவர்கள் உள்ளூர எண்ணுகிறார்கள். கறுப்புக் கொடி காட்டுபவர்களுக்குப் பின்னணியில் இருப்பவர்கள், நான் முதலாளிகளுக்கும் செல்வந்தர்களுக்கும் ஒரு கைக்கருவி என்று கருதுகிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரே ஒரு உறுதியைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆண்டவனைத் தவிர வேறு யாருக்கும் நான் கைக் கருவியல்ல.'' சுயமரியாதை இயக்கத்தினரைத் தாம் சந்தித்துப் பேசியது குறித்தும் இங்கு காந்திஜி விளக்கினார்: ''சுயமரியாதை இயக்கத்தினர் என்று கூறிக்கொள்பவர்களுக்கும் எனக்கும் எத்துணையோ அம்சங்களில் உடன்பாடு இருக்கிறது என்று நேற்று நான் கூறினேன். 'ஆண்டவன் என்று ஒருவர் இல்லை; அப்படியே இருப்பதாலுலும் எங்களைப் பொறுத்தவரை அது மனித வர்க்கந்தான்' என்று சுயமரியாதை இயக்கத்தினர் கூறுகிறார்கள். ஆண்டவன் என்று ஒருவர் இருப்பதாக நம்பும் அளவுக்கு நான் மூடநம்பிக்கை உள்ளவன்தான் என்பதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் சொற்களை வைத்துக்கொண்டு அவர்களுடன் சண்டையிட நான் விரும்பவில்லை. மனித சமுதாயம் என்ற சொல் அவர்களுக்குப் பிடிப்பதாயிருந்தால் ஆண்டவனை மனித சமுதாயம் என்ற பெயரால் அழைக்க நான் தயாராய் இருக்கிறேன். அன்பும் ஜீவகாருண்யமும் தான் தங்களுடைய குறிக்கோள் என்று அவர்கள் கூறுகிறார்கள். அவர்களுடன் நேற்றுப் பேசிக் கொண்டிருந்தபோது, அவர்களுடைய குறிக்கோளைப் பாராட்டுவதாகச் சொன்னேன். அவர்களுடைய குறிக்கோளுடன் நூற்றுக்கு நூறு உடன்படுவதாகவும் சொன்னேன். செல்வத்தைச் சமமாகப் பிரிக்க வேண்டுமென்று

சமத்துவம்

அவர்கள் சொன்னார்கள். ஒரு குறிக்கோள் என்ற முறையில் இது சரிதான். ஆனல் அவர்களெல்லாம் பேச்சில் மட்டும் இந்தக் குறிக்கோளைக் கூறிக் கொண்டிருக்கும்போது, நான் அன்போடு செல்வந்தர்களை அணுகி அரிஜன இயக்கத் திற்கோ, பீகார் பூகம்ப நிவாரணத்துக்கோ, அல்லது ஏழை களின் உதவிக்கான வேறு ஏதாவது ஒரு காரியத்திற்கோ அவர்களுடைய பணத்தைப் பெற்று, அதன் மூலம் அவர்க ளுடைய செல்வத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறேன் என்று அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். இவ்வாறு ஆயிரக் கணக்கானவர் ஏழைகளுக்காகத் தங்களுடைய உடமை களைப் பகிர்ந்து கொடுத்திருக்கிறார்கள். மேலும் ஏழை, பணக்காரர் என்ற வேறுபாட்டை ஒழிப்பது எளிதாக நிறை வேறும் என்று எனக்குத் தோன்றவில்லை. என் ஐம்பது ஆண்டு காலப் பொது வாழ்வின் அனுபவத்திலிருந்து நான் இதைக் கூறுகிறேன். அந்த வேறுபாடு ஒழிய நாளாகும்.'' பேச்சின் முடிவில் தம் இயக்கத்திற்கு உதவி அளிக்குமாறு சுயமரியாதை இயக்கத்தினரை காந்திஜிகேட்டுக்கொண்டார்.

பையனுக்கு மூர்ச்சை

காந்திஜி சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தபோது, கூட்டத்திற்குள்ளிருந்து ''சோடா, சோடா'' என்று ஒரு சத்தம் கேட்டது. காந்திஜி உடனே விவரத் தைப் புரிந்து கொண்டார். நல்ல வெயிலாத லாலும், கூட்டமும் அதிகமாக இருத்ததாலும் வெக்கை தாளாது ஒரு சிறுவன் மூர்ச்சையாகி விட்டான். காந்திஜி பெரிய காரியங்களில் மட்டுமல்லாது சிறிய காரியங்களிலும் எவ்வளவு முன்யோசனையுள்ளவர் என்பதை இங்குக் கண்டு கொள்ள முடிந்தது. அவர் உடனே டாக்டர் ராஜனை அழைத்து, ''ராஜன், என்னுடைய பையில் அந்தப் பையனுக்கு முதல் சிகிச்சை செய்வதற்கு வேண்டிய சாதனங்களெல்லாம் இருக்கின்றன. தயவு செய்து அங்கே போய் அந்தப் பையனைக் கவனியுங்கள்,'' என்று சொன்னர். காந்திஜியின் பேச்சு முடிவதற்குள் பையனும் மூர்ச்சை தெளிந்து விட்டான். இதன் பின்னர் சீர்காழிப் பஞ்சாயத்து போர்டு கட்டிடத்திற்குச் சென்று உணவு அருந்தி, சுமார் இரண்டு மணி நேரம் ஓய்வு எடுத்துக்கொண்டு அங்கிருந்து கே. சிதம்பரநாத முதலியார் இல்லத்திற்குச் சென்று பீகார் பூகம்ப நிவாரண நிதிக்கு அவர் அளித்த பண உதவியைப் பெற்றார். இதற்கு முன், காந்திஜி உணவு அருந்திக்கொண் டிருந்தபோது, பரங்கிப்பேட்டை தேசிய கிறித்தவ பெண்கள்

பள்ளி முதல்வரான திருமதி அன்னிமேரி பீட்டர்சன் தம் மாணவிகளுடன் வந்து காந்திஜியைச் சந்தித்தார்.

ஒரு தடங்கல்

ஏற்கனவே திட்டமிட்டபடி சிதம்பரத்திற்குக் காலை 11-00 மணிக்கே வந்திருக்க வேண்டும். ஆனாலும் தவிர்க்க முடியாத காரணங்களால் காந்திஜியும் அவர் குழுவினரும் பிற்பகல் 3-35 மணிக்குத்தான் வந்து சேர்ந்தனர். ஆகவே அன்று அங்கு மிகக் குறுகிய நேரத்தில் நிறைய அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. வேகமாகக் காரை ஓட்டிச் சென்று அவசர அவசரமாக அவைகளை முடித்தால்தான் அவைகள் எல்லாவற்றையும் முடித்து அன்று அங்கிருந்து புறப்பட முடியும். ஆனால் காந்திஜியைக் காணவேண்டும் என்ற ஆவலில் வழி நெடுகத் திரண்டிருந்த கூட்டத்திற்கு மத்தியில் காரை நாற்பது - ஐம்பது மைல் வேகத்தில் ஓட்டிச் செல்ல முடியவில்லை. இது போதாது என்று அவர் வேகமாகச் செல்வதற்கு மற்றுமொரு தடங்கலும் வந்து சேர்ந்தது. நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப் பெறுத ஒரு நிகழ்ச்சிக்கு வந்து பங்கு கொள்ளுமாறு ஒருவர் - குஞ்சிதபாதம் - அழைத்தார். இரயில்வே நிலையத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற வழியில், பாதையை வளைத்து ஒரு பெரிய பந்தல் போட்டு அதை நன்கு அலங்கரித்து வைத்திருந்தார் அவர். காந்திஜியின் கார் அங்குச் சென்றதும் அவர் அங்கு இறங்கி கட்டிடத்தினுள் வந்து வரவேற்பு, உபசாரப் பத்திரம் முதலியவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று குஞ்சித பாதம் வற்புறுத்தினார். அந்த நிகழ்ச்சி அறிக்கையில் குறிப்பிடப் பெறவில்லை என்றும் காந்திஜி மோட்டாரில் இருந்த படியே வரவேற்பு அளித்தால் தாமதத்தைத் தவிர்க்கலாம் என்றும் அவருக்கு எடுத்துக்கூறப் பெற்றும், அவர் ஒப்புக் கொள்வதாயில்லை. காந்திஜி இறங்கி வந்து தம் வரவேற்பைப் பெற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்று ஒரே பிடிவாதமாக அவர் கூறிவிட்டார். மகாத்மாவுக்கு இது பிடிக்கவில்லை. காரோட்டியிடம் காரை எடுக்குமாறு சொன்னார். அதற்குள்ளாகக் குஞ்சிதபாதம் மோட்டாருக்குக் குறுக்கே படுத்து சத்தியாக்ரகம் செய்யத்தொடங்கி விட்டார். ''ஓ, என்னிடத்திலேயே சத்தியாக்ரகத்தைக் காண்பிக்கத் தொடங்கி விட்டீர்களா? சரி, வண்டியை விட்டுக் கீழே இறங்கி நடக்கலாம்'' என்று காந்திஜி கீழே இறங்கப் போனார். அதற்குள் பக்கத்தில் இருந்தவர்கள்

குஞ்சிதபாதத்தை விலக்கிக் கார் போவதற்கு வழிவிட்டார்கள். (தாலுகா அலுவலகத்திற்குச் சென்ற வழியில், தில்லை சமரச சன்மார்க்கத்தார் அளித்த வரவேற்பையும் பண முடிப்பையும் பெற்றுக்கொண்டார். தாலுகா போர்டு அலுவலகத்திற்குச் சென்றார்கள். சிதம்பரம் தாலுகா போர்டில் அளிக்கப்பெற்ற வரவேற்பில் டி. எஸ். கனக சபாபதி பிள்ளை ஆங்கிலத்திலும் தமிழிலும் வரவேற்புரை களைப் படித்ததுடன் ஒரு பண முடிப்பும் அளித்தார். சிதம்பரத்தில் வசூலிக்கப்படும் தொகையை அங்குள்ள நந்தனர் கல்விக் கழகத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த வரவேற்புரையில் அவர் கேட்டுக்கொண்டார்.)

சுவாமி சகஜானந்தம்

அரிஜனங்களின் முன்னேற்றத்திற்காக பிரம்மச்சாரியான சுவாமி சகஜானந்தம் நிறுவியவையாகும் நந்தனர் மடம், கோயில், பள்ளிக்கூடம், மாணவர் விடுதி ஆகியவை. ஆங்கிலம் அறியாத தமிழராகிய சுவாமி சகஜானந்தம் தீண்டப்படாதவர்களில் ஒருவராகப் பிறந்து இளம் வயதிலேயே தமிழ், சமஸ்கிருதம் முதலிய மொழிகளைப் பயின்று, வைதிக ஞானம் பெற்று, தீண்டாதாரின் ஊழியத்திற்கே தம்மை அர்ப்பணித்தவராவார். அவருடைய இந்த பக்தியின் உருவமாக அமைந்தவைதான் நந்தனர் கல்விக்கழகமும் அது நடத்திய மேற்கண்ட நிறுவனங்களும். இத்தொண்டில் ஈடுபட்டதற்காக அந்நாளில் அவர் அடைந்த துயரங்களுக்கு அளவேயில்லை. தமிழகத்திற்கு காந்திஜி வரப்போகிறார் என்பதை அறிந்தபோது சிதம்பரத்திற்கு அண்ணல் அவசியம் வரவேண்டுமென்றும் அப்படி வருங்காலையில் நந்தனர் மடத்திலேயே தங்க வேண்டுமென்றும் வேண்டிக்கொண்டு சகஜானந்தம் ஒரு கடிதம் எழுதியிருந்தார். அண்ணலும் அக்கடிதத்தை டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனுக்கு அனுப்பி. ''நான் இந்தச் சுற்றுப் பயணத்தில் சிதம்பரம் செல்வதாயிருந்தால் அங்குத் தங்குவதற்கு நந்தனர் மடத்தைத் தவிர வேறு இடத்தைக் குறிப்பிட வேண்டாம்'' என்று குறிப்பும் எழுதியிருந்தார். டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், நந்தனர் மடத்திற்காகவே சுற்றுப்பயணத்தில் சிதம்பரம் சேர்க்கப்பட்டது என்றும் அச்சுற்றுப்பயணத் திட்டத்தில் எத்தனையோ மாறுதல்கள் செய்யப்பெற்றும் சிதம்பரம் மாத்திரம் விடப்படவில்லை என்றும் தம் நூலில் எழுதியிருக்கிறார்.

எவ்வளவுதான் அன்புக்குரியவராய் இருப்பினும், காந்திஜி சட்டவரம்பைத் தாண்டி எதுவும் செய்யமாட்டார் என்பது கனகசபாபதி பிள்ளையின் யோசனைக்கு அவர் கூறிய மறுமொழியிலிருந்து தெரிந்தது. ''நீங்கள் அளித்த தொகையை நந்தனர் கல்விக் கழகத்திற்கு அளிக்கச் சொல்வது குறித்து மகிழ்ச்சியே. பணம் கொடுப்பவர்களுடைய கருத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. அரிஜனங்களுக்கு உதவும் பொருட்டுத்தான் இப்போது பணம் வசூல் செய்யப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப்படும் தொகை, அதற்கென நியமிக்கப்பெற்றிருக்கும் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டு அரிஜனங்களுக்கு நன்மை தரக் கூடிய காரியங்களுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும். நந்தனர் கல்விக் கழகத்தைப் பற்றியும் அவர் கவனிப்பார்,'' என்று அண்ணல் கூறினர்.

பண உதவி

இதன் பின்னர் காந்திஜி அகில பாரத சர்க்கா சங்கத்தின் கதர்க் கடைக்குச் சென்றார். அதிக விற்பனை செய்த தன் பொருட்டு மேற்கண்ட கடைக்கு ஏற்கனவே அளிக்கப்பட்டிருந்த 'ஷீல்டை' காந்திஜியிடம் அளித்து, அவருடைய புனிதமான திருக்கரங்களிலிருந்து கடை நிருவாகி ஏ. பாலகிருஷ்ணபிள்ளை பெற்றுக்கொண்டார். கடையிலிருந்து அண்ணலிடம் பண முடிப்பும் கொடுக்கப்பெற்றது. பின்னர் நந்தனர் பள்ளிக்குச் சென்று அதைப் பார்வையிட்டபோது, சேலத்திலிருந்து அங்கே படிக்க வந்திருந்த மாணவர்களைப் பாராட்டினர். அங்கிருந்து தம் குழுவினருடன் நந்தனர் மடத்திற்குச் சென்று உணவு உண்டு ஓய்வு எடுத்துக்கொண்டு கூட்டங்களுக்குப் புறப்பட்டார். முதலில் அண்ணுமலை நகருக்கும் பின்னர்ப் பொதுக்கூட்டத்திற்கும் செல்வது என்பது திட்டம். ஆனால் இம்முறையும் குஞ்சிதபாதம் விடவில்லை. அவருடைய திறமையையெல்லாங் காண்பித்துப் பழைய பந்தலில் (செங்கழுவராய தெருவில்) கொண்டு வந்து காந்திஜியை நிறுத்திவிட்டார். எப்படி நிறுத்தினர், அதன்பின் நடந்ததென்ன என்பதையெல்லாம் டாக்டர் டி. எஸ். எஸ். ராஜனே கூறுகிறார், கேளுங்கள் :

சர்க்கா சங்கம்

''நந்தனர் மடத்தை விட்டுப் புறப்பட்டதும் எங்கள் வண்டிக்கு (சிதம்பரம் கமிட்டி ஏற்பாடு செய்த கார்) முன்

பாக ஒரு மோட்டார் வண்டி வழிகாட்டி போல ஓடத் தலைப் பட்டது. அதில் நான்கு நண்பர்கள் உட்கார்ந்து கொண்டு மெதுவாக ஓட்டிக்கொண்டு சென்றனர்.

காந்தி நடந்தார்

எங்களுடைய வண்டி முந்துவதற்கும் இடம் கொடுக்கவில்லை; தாங்களும் விரைவாகப் போகவில்லை. எங்கள் மோட்டார் ஓட்டியை வேகமாக ஓட்டும்படி வற்புறுத்தியும் அவர் ஓட்டுவதற்கு உடன்படவில்லை. முன்போகும் வண்டியைப் பின்பற்றுது வேறுவழியாகப் போவதற்கும் இணங்கவில்லை. அப்படி ஒரு முறை இணங்கியபோதும், முன் சென்ற வண்டி திரும்பவும் மற்றொரு வழியாக வந்து எங்களைத் தடைப்படுத்திக் கொண்டு சென்றது. கடைசியாக ரெயில்வே ஸ்டேஷனி லிருந்து வரும்பொழுது வந்த ரஸ்தாவில் எந்தப் பந்தலில் குஞ்சிதபாதம் சத்தியாக்கிரகம் செய்தாரோ அதே பந்தலில் எங்கள் வண்டி நிறுத்தப்பட்டது; நண்பர் குஞ்சிதபாதம் தம் கையில் ஒரு பண முடிப்பை ஏந்திக்கொண்டு, வண்டிக்கு முன்பாக வந்து நின்று, இறங்கி அந்த மடத்திற்குள் வரவேண்டுமென மகாத்மாவை வற் புறுத்தலானார். முடியாது என்று அடிகள் எவ்வளவோ வற்புறுத்தியும் குஞ்சிதபாதம் பிள்ளை கேட்கவில்லை. அங்கே கூடியிருந்த ஜனத்திரளுக்கு அளவில்லை. 'வண்டியை ஓட்டு' என்று சொன்னால் மோட்டார் ஓட்டி அதற்கு இணங்க வில்லை. இதை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மகாத்மா திடீரென்று மோட்டார் வண்டியை விட்டுக் கீழே குதித்துக் கால் நடையாக அந்தப் பந்தலை விட்டு வெளியே நடக்கத் தலைப்பட்டார். உடனே வண்டியில் இருந்த நாங்களும் அவரைப் பின்பற்றி அவர் பேரில் கூட்டம் வந்து விழாமலும் அவர் போகும் வழியில் எவ்வித இடையூறும் ஏற்படாமலும் இருக்குமாறு அடிகளைச் சுற்றிக் கைகோர்த்துக்கொண்டு, எவ்விடம் போகிறோம் என்பது தெரியாமல் சென்றோம்.''

ராஜன் வழக்கு

இதில் இன்னுமொரு முக்கிய கட்டம் ஏற்பட்டது. குஞ்சிதபாதம் காந்திஜி சென்ற பின்பும் டாக்டர் ராஜனை விடவில்லை. தாம் காந்திஜி காரின் குறுக்கே படுத்து மறியல் செய்தபோது, டாக்டர் ராஜன் தம்மைக் காலால் உதைத்ததாக நீதி மன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இதற்கு காந்திஜியைச் சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்று கோரினார்! ஆயினும் கடைசியில் பல பெரிய மனிதர்கள்

குறுக்கிட்டதால், வழக்கைத் தாமே திருப்பிப் பெற்றுக் கொண்டார்.

ஒரு பர்லாங்கு தூரம் நடந்து இவர்கள் பொதுக்கூட்டம் கூட இருந்த மைதானத்திற்கு ஒரு மணி நேரம் முன்பாகவே வந்து சேர்ந்தார்கள். பொதுக்கூட்டம் நடக்கும் இடத்தில் மக்கள் ஏராளமாகக் கூடி இருந்ததால் பொதுக்கூட்டத்தை அப்பொழுதே நடத்திவிட்டுப் பின்பு அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திற்குச் சென்றார்கள். அன்று கூட்டத்தில் ''அன்பின் மிகுதியால் நண்பர்கள் சிலர் எனக்கு உண்டாக்கிய துயரத்தை நான் சொல்ல வேண்டியிருக்கிறது. நான் செய்யவேண்டிய சுற்றுப் பயணத்தில் கால அளவு முக்கியமானது. அதன்படி நடக்காவிட்டால் நிகழ்ச்சிகளை நிறைவேற்றுவது முடியாது. இதை நண்பர்கள் அறிந்துகொள்ள வேண்டும். இதை அறியாமல், அன்பின் மிகுதியால் என்னைத் தடை செய்யலாகாது,'' என்று மகாத்மா கூறினார். குஞ்சிதபாதம் தம் வரவேற்பிற்கு வந்து விட்டுத்தான் போக வேண்டும் என்று பிடிவாதம் செய்கையில் அங்கு இருந்த அளவுக்கு மீறிய கூட்டத்தில் தமக்கும் தம்முடன் வந்தவர்களுக்கும் ஒவ்வொரு நிமிடமும் உயிருக்கு ஆபத்தான நிலைமை இருந்ததாகவும் அவர் சொன்னார். (தென்னார்க்காடு அரிஜன சேவா சங்கத்தின் சார்பாக ராஜா அண்ணுமலை நகர மண்டப மைதானத்தில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில் ஒரு வரவேற்புரை படித்துக் கொடுக்கப்பெற்று சிதம்பரம் பொதுமக்கள், இந்தி பிரேமி மண்டல் ஆகிய நிறுவனங்கள் சார்பாகப் பண முடிப்புகள் வழங்கப் பெற்றன.)

பொதுக் கூட்டம்

அண்ணுமலை நகருக்குச் சென்றபோது, இதற்கு நேர்முரணாக அங்கு முழு அமைதி நிலவியது. துணைவேந்தர் எஸ். ஈ. ரெங்கநாதன், பேராசிரியர் எஸ். சோமசுந்தரபாரதி ஆகியோர் தலைமையில் கல்லூரிப் பேராசிரியர்களும் மாணவர்களும் அண்ணலை வரவேற்றார்கள். (ஸ்ரீமுஷ்ணம் மிராசுதார் சங்கத்தின் ஆதரவில் சுந்தரராமையர் ஒரு பண முடிப்பை அளித்தார். அண்ணுமலைப் பல்கலைக் கழகச் சீர்திருத்த சங்கத்தாரால் அண்ணலுக்கு வரவேற்புரை அளிக்கப்பெற்றது.) மாணவர்கள் இராப்பள்ளி நடத்துவ

அமைதி

தாகவும் அரிஜனங்களுக்குக் கல்வி புகட்டுவதில் அக்கறை காட்டி வருவதாகவும் வரவேற்புரையில் கூறப்பெற்றி ருந்தது. இதை அண்ணல் குறிப்பிட்டு, ''வயதானவர் களைக் காட்டிலும் இளைஞர்கள்தாம் பயனுள்ள பணிகளைச் செய்ய முடியும்'' என்று கூறினார். வி. எஸ். சீனிவாச சாஸ்திரி தம் நண்பராகையால் அவர் இந்தப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரானது முதல் இதன் வளர்ச்சியை உன்னிப்பாய்க் கவனித்து வந்திருப்பதாகவும் சொன்னார். இக்கூட்டம் முடிந்தபின் நேரே இரயில் நிலையம் சென்று இரயில் ஏறிக் கடலூருக்குப் புறப்பட்டார். வழியில் கிள்ளை, பரங்கிப்பேட்டை ஆகிய ஊர்களில் இரயில்வே நிலைய மேடை யிலேயே அண்ணலிடம் பணமுடிப்புகள் அளிக்கப்பெற்றன. (பரங்கிப் பேட்டையில் பணமுடிப்பு அளித்தவர்கள் தியாகு ஞாபகார்த்த சங்கத்தார்.)

சிதம்பரத்திற்கு அண்ணல் வந்தபோது அங்கு நடை பெற்ற ஒரு கேலிக்கூத்தான நிகழ்ச்சியை இங்குக் குறிப் பிட்டுத்தான் ஆகவேண்டும். காந்திஜியின் வருகையை யொட்டி அரிஜனங்கள் கூட்ட மாகத் திடீரென ஆலயத்தில் நுழைந்து விடு வார்களென அஞ்சியோ என்னவோ, ஆலயத் தின் நான்கு கோபுரவாசல் கதவுகளையும் சாத்திவிட்டனர். உள்ளேயிருந்தவர்கள் வெளியே வருவதற்குக்கூட அவகாசம் அளிக்கவில்லை. இவ்வாறு கோவிலுக்குள்ளே மாட்டிக் கொண்டவர்கள் அன்று காந்திஜியைப் பார்க்கவும் முடிய வில்லை! இது மட்டுமல்லாது அவ்வூர் சனாதனிகள் ''காந்தியே நீர்போம், ஊர் ஊராய்ப் பணம் பறிக்கும் காந்தியே நீர் போம்'' என்ற வாக்கியங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங் களை மக்களுக்கிடையே வழங்கினர்.

ஆலயத்தை மூடினர்

இந்தக் காலத்தைப்போல் அந்தக் காலத்தில் இரயில் நிலையங்களில் ஒளிபொருந்திய விளக்குகள் இல்லை. ஆகை யால் இரவு நேரங்களில் காந்திஜி வந்து இறங்கிய இரயில் நிலையங்களில் நிலைமையைச் சமாளிப்பது கடினமாக இருந்தது. எல்லோரும் காந்திஜியைச் சுற்றி மொய்த்துக் கொள் வார்கள்; பாதை கண்டு அவரை அழைத்துச் செல்வதும், அவரை வரவேற்க வந்துள்ள உள்ளூர் வாசிகளை அடை யாளங் கண்டு கொள்வதும் மிகவும் கடினமாக இருந்தது.

இருட்டில் சங்கடம்

அன்று இரவு ஒன்பது மணிக்கு காந்திஜி கடலூர் இரயில் நிலையத்தில் வந்திறங்கிய போதும் இதே சிக்கல் தான் ஏற்பட்டது. ஆனால் காந்திஜி மிகுந்த திறமையுடன் தாமே நிலைமையைச் சமாளித்தார். எப்படியோ கூட்டத்திலிருந்து விலகித் தாம் செல்ல வேண்டிய காரைக் கண்டுபிடித்து ஏறிக் கொண்டார். ஆனால் மக்களும் ஏமாறவில்லை. நேராகக் காருக்கு வந்து (நெல்லிக்குப்பம் பொதுமக்கள், கடலூர் ஓ. டி. இளைஞர் சங்கம், கடலூர் என். டி. சங்கம், தன சங்கம், தொண்டர்கள் சங்கம், பெண்கள் ஆகியோர் சார் பாகப்) பண முடிப்புகளும் வரவேற்புரைகளும் அளித்தனர். இரயிலிலிருந்து அவர் இறங்கியபோதே சம்பிரதாயமான முறையில் நகராட்சி மன்றத் தலைவரான பி. கோவிந்தசாமி செட்டியாரும் காந்தி வரவேற்புக் குழுத்தலைவரான ஆர். ஏ. சிவானந்த முதலியாரும் அவரை மாலையிட்டு வரவேற்றார்கள். நகராட்சி, மாவட்டக் கழகம் சார்பாகத் தேவனம்பட்டினம் சாலையில் உள்ள மாவட்டக் கழகக் கட்டிடத்தில் வரவேற்பு நடைபெற்றது. (நகராட்சி மன்றத் தலைவர் தமிழிலும் மாவட்டக் கழகத் தலைவரான டி. எம். ஜம்புலிங்கம் முதலி யார் ஆங்கிலத்திலும் வரவேற்புரை வாசித்தளித்தார்கள்.)

மாவட்டக் கழகம்

மாவட்டக் கழகம் அளித்த வரவேற்புரையில் சிதம்ப ரத்தில் நந்தனர் பள்ளியில் உள்ள அரிஜன மாணவர் விடுதி யைக் கழகம் பண உதவி அளித்து நடத்தி வருவதாகவும் ஆதி திராவிடர்களுக்கென்று அம்மாவட்டக் கழகத்தில் ஒதுக்கப்படாத தொகுதியில் கூட ஓர் ஆதிதிராவிடர் தேர்ந் தெடுக்கப் பெற்றுள்ளதாகவும் கூறப்பெற்றிருந்ததை அண்ணல் பாராட்டினர். ''ஆனால் இத்துடன் மன நிறைவு அடைந்து விடக் கூடாது. தீண்டாமையை வேரோடு அகற்றியாக வேண்டும்'', என்று எச்சரித்தார். அப்போது எம். எல். சி. யாக இருந்த கே. எம். துரைசாமி முதலியார் ஒரு வைர மோதிரத்தை காந்திஜியிடம் அளித்தார். பின்னர் ஓமந்தூர் பி. இராமசாமி ரெட்டியாருடன் - சிறந்த காந்திய வாதியான ரெட்டியார் பின்னால் சென்னை மாநில முதலமைச்சரானவர் - மஞ்சக்குப்பம் பொதுக் கூட்டத்திற்கு காந்திஜி புறப்பட்டார். (வழியில் கடலூர் தாலுகா போர்டு அலுவலகத்தில் போர்டின் சார்பாக ஏ. இலட்சுமி நாராயண ரெட்டியார் தமிழில் வரவேற்புரையைப் படித்து அளித்து அரிஜன நிதிக்கும் பீகார் பூகம்ப நிவாரண

நிதிக்கும் - இதைத் தம் நான்கு வயதுப் பெண்குழந்தை மூலம் அளித்தார் - பண முடிப்புகள் அளித்தார். கடலூர் உடற்பயிற்சியாளர் சங்கத்தின் சார்பாகவும் பண முடிப்பு அளிக்கப் பெற்றது.)

பொதுக்கூட்டத்தில் பி. தணிகாசலம் பிள்ளை இந்தியில் ஒரு வரவேற்புரையை அளித்தார். பொதுமக்களின் சார்பாக ஒரு பண முடிப்பும் வழங்கப்பெற்றது.

பொதுக் கூட்டம்

அவ்வளவு காலந்தாழ்த்தி, கிட்டத்தட்ட நள்ளிரவில் பொதுக் கூட்டத்திற்கு வரநேர்ந்ததற்காக காந்திஜி வருத்தம் தெரிவித்துக் கொண்டார். கடைசி நேரத்தில் புதுச்சேரி நண்பர்களுடைய அழைப்பை ஏற்க வேண்டியிருந்ததால் இங்கு இவ்வளவு நிகழ்ச்சிகளை இரவில் வைத்துக் கொள்ள நேரிட்டது என்றும் அவர் விளக்கினார். புதுச்சேரியில் காந்திஜியை வரவேற்பதற்காக அமைக்கப் பெற்ற குழு - வழக்கறிஞர் சவரிநாதன் முதலியோரைக் கொண்டது. - சரியானதல்ல என்று செல்லண்ண நாயக்கர், பாரதிதாசன் முதலியோர் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். ஒரு முக்கிய காரணத்தால் முதலில் காந்திஜியின் புதுச்சேரி வருகை கைவிடப் பெற்றதென்றும் பின்னர் புதுச்சேரியைச் சேர்ந்த வ. சுப்பையாவும் மற்றும் சிலரும் சென்று காந்திஜியை மிகவும் கேட்டுக் கொண்டு அழைத்து வந்தனர் என்றும் தெரிகிறது. ''இன்னும் அதிகமான தொகையை நீங்கள் அளித்திருக்கலாம். மக்கள் அரிஜன நிதிக்கு அளிக்கும் பணம் தீண்டாமை ஒழிய அவர்களுக்குள்ள உறுதியையும் ஆர்வத்தையும் காட்டுவதாகவே நான் கருதுகிறேன். உங்களுடைய வாழ்க்கையில் எந்த வகையிலும், அரிஜனங்களைத் தாழ்ந்தவர்களாகக் கருதாதீர்கள்'' என்று காந்திஜி இங்குச் சொன்னார். (காந்திஜி அன்று தேவனம் பட்டினம் சாலையில் உள்ள திவான்பகதூர் பி. சுப்பராயலு ரெட்டியார் பங்களாவில் தங்கியிருந்தார்.)

17-2-34

காலையில் புதுச்சேரி ஓதியஞ்சாலைத் திடலில் மேசை மீது அமர்ந்து கொண்டு ''கல் மனது படைத்தோரைக் கரைக்க வேண்டுமென்பது தான் இப்போது நான் மேற்கொண்டிருக்கும் முயற்சி. பிறரை அடக்கி வைப்பதன் மூலமல்லாது அவர்களுக்குச் சமத்துவமான உரிமை வழங்குவதன் மூலந்தான் தெய்வீக நிலையை நாம் அடைய முடியும் என்பதை இங்குள்ள

புதுச்சேரி

வர்கள் புரிந்து கொள்ள வேண்டும். புதுச்சேரியில் தீண்டாமை இல்லை என்று நம்புகிறேன். அப்படி இருந்தால் அந்த மாசை அகற்றிவிடுங்கள்,'' என்று பாபு கேட்டுக் கொண்டார். (புதுச்சேரி அரிஜன சேவா சங்கத் தலைவரான ஜே. சவுரிநாதன் வரவேற்புரையைப் படித்தார். புதுச்சேரி அரிஜனங்கள் சார்பாகவும் குருகபதி ஸ்ரீ சத்தியானந்த சன்மார்க்க கல்விக் கழகத்தார் சார்பாகவும் வரவேற்புரைகள் வாசித்தளிக்கப் பெற்றன.) இந்தியா விடுதலை பெற்ற பின்பு புதுச்சேரியை இந்தியாவுடன் இணைக்கும் சிக்கல் வந்து எஸ். ஆர். சுப்ரமணியம், ஆர். புருஷோத்தம ரெட்டியார், கு. சிவப்பிரகாசம் முதலியோர் டில்லி சென்று அண்ணலைக் கண்டு புதுச்சேரியை இணைக்க வேண்டும் என்று எடுத்துக் கூறியபோது அச்சிக்கலில் அண்ணல் ஆழ்ந்த அக்கறை காட்டினார் என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது. இந்தக் குழுவினர் தலைமை அமைச்சர் ஜவாகர்லால் நேருவைச் சந்தித்துப் பேச ஏற்பாடு செய்தவர் அவரே. புதுச்சேரி இணைப்பு இயக்கத்தை அண்ணல் ஆசீர்வதிக்க வேண்டும் என்று எஸ். ஆர். சுப்ரமணியம் கேட்டுக் கொண்டபோது, ''நிச்சயமாக,'' என்று அண்ணல் அமோதித்தார்.

சனாதனிகள் மாநாடு

இவ்வாறு தமிழ் நாட்டின் வடபகுதியில் காந்திஜி சுற்றுப் பயணம் செய்து கொண்டிருந்தபோது, தெற்கே மதுரையில் 'தமிழ் மாவட்டங்களைச் சேர்ந்த சனாதனிகள் மாநாடு' நடைபெற்றது. இந்த மாநாட்டிற்குப் பூரிசங்கராச்சார்ய சுவாமிகள் தலைவராகவும் மதுரை ராவ்சாகிப் என். நடேச ஐயர் வரவேற்புக் குழுத் தலைவராகவும் இருந்தார்களெனில் மகாத்மாவின் மீது கண்டனக் கணைகளுக்குக் கேட்கவா வேண்டும்? நடேச ஐயர் இம்மாநாட்டின் நோக்கங்களை விளக்குகையில் கிண்டலாக ''ஒன்றுமறியாப் பெண்களிடமிருந்தும் பையன்களிடமிருந்தும் விருப்பமில்லா வணிகர்களிடமிருந்தும் மோதிரங்களையும் வளையல்களையும் தங்கச் சங்கிலிகளையும் நொக்கத்தையும் பெற்று ஒரு கோடி ரூபாய் திரட்டுவது நம் நோக்கம் அல்ல!'' என்று சொன்னார். பூரி சங்கராச்சாரிய சுவாமிகளோ, ''நம்முடைய முன்னோர்களின் அடிப்படையான கோட்பாடுகள் பற்றிய சிக்கலில் மக்கள் வாக்கெடுப்பு மூலம் ஒரு முடிவுக்கு வருவது கூடாது,'' என்றார். ''காந்தி சனாதனியுமல்ல, வர்ணாஷ்ரம தர்மத்தைக்

கடைப் பிடிப்பவருமல்ல. அவர் போதிக்கும் அஹிம்சைத் தத்துவத்தையே அவர் கடைப்பிடிப்பதில்லை. வேதங்களிலோ ஆலயங்களிலோ அவருக்கு நம்பிக்கையும் இல்லை'' என்றும் சாடினர். மாநாட்டில் ஆலயப் பிரவேசம், தீண்டாமை எதிர்ப்பு மசோதாக்களை எதிர்த்துத் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது. இவைகளையெல்லாம் காந்திஜி கவனித்துக் கொண்டே வந்தார். ஆனாலும் அவர் தம் வேள்வியில் சற்றும் சலிக்கவேயில்லை.

பூதானம்

புதுச்சேரியிலிருந்து பண்ருட்டிக்குச் சென்ற மகாத்மா (அங்கு யூனியன் போர்டு - எஸ். கே. தேவநாத செட்டியார் படித்தார்-ஜீவ காருண்ய சங்கம் ஆகியவைகளின் சார்பான வரவேற்புக்களையும் பொது மக்கள் சார்பாகவும் வர்த்தகக் கும்ஸ்தாக்கள் சார்பாகவும் அளிக்கப்பெற்ற வரவேற்புரைகளையும் பணமுடிப்புக்களையும் பெற்றுக்கொண்டு) அங்கிருந்து திருவெண்ணெய் நல்லூரில் உள்ள காந்தி குப்பம் என்னும் சேரிக்குச் சென்றார். இந்த காந்தி குப்பத்தில் அண்ணலிடம் ஒருவர் பூதானம் வழங்கினர். (ஏற்கனவே சோழவந்தானில் ஒருவர் பூதானம் அளித்தது இந்நூலில் குறிப்பிடப் பெற்றுள்ளது.) அண்ணலின் ஆன்மீக வாரிசான வினோபாஜி பூதானத்தை ஒரு தத்துவமாக உருவாக்கி அதற்குப் பல இலக்கண வரம்புகளையும் விதித்திருக்கிறார். இந்த வரம்புகளையெல்லாம் தக்கை கிராமத்தைச் சேர்ந்த சடையக் கவுண்டர் அன்று அளித்த பூதானம் நிறைவு செய்கிறதா என்பதை உறுதியாகக் கூற முடியாதாயினும் அதுவும் ஒரு வகை பூதானந்தானே? காந்திக்குப்பத்தில் கிருபாசிரமம் என்ற பெயரில் ஓர் அமைப்பை நிறுவி அரிஜனத் தொண்டு புரிந்த ஆசிரியர் கோவிந்தராவ் குர்ஜாலி, காந்தி குப்பத்தில் மகாத்மாவை வரவேற்று சடையக் கவுண்டரையும் அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதன் பின்னர், தமக்குச் சொந்தமான ஒரு ஏக்கர் 78 செண்ட் நிலத்தைக் கிருபாசிரமத்திற்குக் கட்டிடம் கட்டுவதற்குத் தாம் இலவசமாய்க் கொடுப்பதாக காந்திஜியிடம் கவுண்டர் தெரிவித்தார். இந்த தானம் காந்திஜியின் உள்ளத்தைத் தொட்டுவிட்டது; அவர் பேருவகை அடைந்தார்; கவுண்டரைப் பாராட்டி ஆசீர்வதித்தார். பின்னர், காந்திஜியும் அவரது குழுவினரும் கிருபாசிரமத்திற்குச் சென்று அங்கு உணவு உண்டு இளைப்பாறினர்கள். (ஆசிரமத்திற்குள்ளே விழுப்புரம்

மாதர் சங்கம், ஜைனர் சங்கம், தத்துவ ஞானசபை, திருவெண்ணெய் நல்லூர் பொதுமக்கள், திண்டிவனம் தாலுகா வாசிகள், விழுப்புரம் தாலுகா வாசிகள் ஆகியோரின் சார்பாக வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப் பெற்றன.)

திருவண்ணமலைக்குச் சென்ற வழியில் திருக்கோவலூரில் இராமகிருஷ்ணையர், வெங்கடேச முதலியார், இராமசுவாமி நாயக்கர் ஆகியோர் மாலை சூட்டி வரவேற்றனர்.

திருவண்ணமலை

சுமார் இருபதாயிரம் பேர் கூடியிருந்த இக் கூட்டத்தில் அரிஜன சேவா நிதிக்குழு, கோவில் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றின் சார்பாகப் பண முடிப்புகள் வழங்கப் பெற்றன. திருவண்ணமலையில் ஸ்ரீரமண ஆஷ்ரமத்திற்கு எதிரே உள்ள வண்டிமோடு என்ற இடத்தில் முப்பதாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்தார்கள். (வரவேற்புக் குழுவின் சார்பாக பி. எஸ். எம். தீர்த்தகிரி செட்டியாரும் செங்கம் தாலுகா போர்டின் சார்பாக எம்.பி. ரெங்கசாமி செட்டியாரும் வரவேற்புரைகள் கொடுத்தார்கள். நகராட்சி சார்பாக ஒரு வரவேற்புரையும் ஒரு பண முடிப்பும் வழங்கப் பெற்றன. ஒருவர் இரமணாசிரமத்தின் ''ரமண சந்நிதி முறை'' என்ற நூலை காந்திஜியிடம் வழங்கினார்.) ''இப்போது எப்படிச் சாதி வேற்றுமையின்றி சமமாகக் கூடி அமர்ந்திருக்கிறீர்களோ அதே போன்று எப்போதும் சாதி வேற்றுமையின்றி வாழவேண்டும்'' என்று அண்ணல் அறிவுரை கூறினார். பேசிக் கொண்டிருக்கையில் கூச்சலுங் குழப்பமும் அதிகமாகி விடவே மேடையிலிருந்து இறங்கி இரயில் நிலையத்திற்குச்சென்று விட்டார். ஆனால் காந்திஜி ஒன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று நினைத்தது. இரயில் அன்று அரைமணி நேரம் தாமதமாக வந்தது. அந்த நேரத்தை எவ்வாறுவது பயனுள்ள முறையில் கழிக்க வேண்டுமென்று எண்ணி அவர் இரயில் நிலையத்திற்கு முன்னால் காரில் இருந்து கொண்டே சாமான்களை ஏலம் விடத் தொடங்கினார். பூகம்ப நிவாரண நிதிக்கும் சிறிது பணம் வசூல் செய்தார். இவ்வாறு காந்திஜி தம் காரியத்தில் கண்ணுயிருந்தபோது, வேறொருவர் தம் காரியத்தையும் சாதித்துக் கொண்டார். திருவண்ணமலை ஆதிதிராவிட ஐக்கிய சங்கத்தின் வரவேற்புரையை ஆர். ஆறுமுக பிள்ளை அங்கு வந்து படித்துக் கொடுத்து விட்டார்.

திருவண்ணமலையிலிருந்து காந்திஜியை ஏற்றி வந்த இரயில் இரவு 9-30மணிக்குத்தான் வேலூர் வந்து சேர்ந்தது.

ஜெர்மன் இளைஞர்

அங்கு, வேறு எந்த ஊரிலும் இல்லாத அளவுக்கு, இரயில் நிலையத்திலேயே காந்திஜியைக் காணப் பத்தாயிரம் பேர் கொண்ட கூட்டம் நின்று கொண்டிருந்தது. இந்தக் கூட்டத்தை விலக்கி காந்திஜியை அழைத்துக்கொண்டு முன்னுல் சென்ருர் பூட்டோ. அப்போது அவர் கூட்டம் மோதியோ அல்லது படிக்கட்டுத் தட்டியோ கீழே விழுந்து விட்டார். அந்தப் பெரிய கூட்டத்தில் நிதானம் தெரியாது மக்கள் அவரை நன்கு மிதித்து விட்டார்கள். அவரும் நினைவிழந்தார். காரில் ஏறிய காந்திஜி, ''ராஜன், மோட்டாரை நிறுத்திக் கீழே போய்ப் பாருங்கள். பூட்டோ கீழே மிதிபட்டுக் கிடப்பது போல் தோன்றுகிறது,'' என்று சொன்னர். அந்தச் சமயம் கூட்டத்தின் மோதுதலால் விளக்குக் கம்பங்கள் சாய்ந்து விளக்குகளெல்லாம் அணைந்து இருள் சூழ்ந்திருந்தது. டாக்டர் ராஜன் போய்ப் பார்க்கையில் உண்மையிலேயே பூட்டோ நினைவிழந்து கிடந்தார். ஆகையால் அவரைக் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு, அன்று காந்திஜி தங்கிய இராமசாமி முதலியார் எம். எல். சி. இல்லத்தில் இறக்கி அங்கு சிகிச்சை அளித்தார்கள். காந்திஜி பூட்டோ பக்கத்திலேயே ஒரு மணி நேரம் உட்கார்ந்து அவருக்கு நினைவு வந்த பின்னர்த் தான் பிரார்த்தனைக்குச் சென்ருர். மறுநாள் காலையில் தான் பூட்டோவுக்கு முழு நினைவு வந்தது.

18-2-34

மறுநாள் அதிகாலையில் நடைபெற்ற பிராத்தனைக் கூட்டத்தில் நிறையப் பேர் வந்து கலந்து கொண்டார்கள்.

அரிஜனப் பள்ளி

காலையில் காகிதப் பட்டரையில் உள்ள அரிஜனப் பள்ளிக்குச் சென்று பார்வையிட்டுவிட்டு அங்கிருந்து நகருக்குள் சென்று நகர மக்கள் அளித்த வரவேற்பையும் அங்குக் கூடியிருந்த கிராம மக்கள் அளித்த பணமுடிப்பையும் மகாத்மா பெற்றுக் கொண்டார். சேரிக்கு வந்து அங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலவரத்தைப் பற்றி அன்போடு விசாரித்தார். (இங்கு ஆதி திராவிட அபிவிருத்தி சங்கம் அவருக்கு ஒரு வரவேற்புரை வாசித்தளித்தது.)

சத்தியாக்ரகம்

சத்தியாக்ரகத்தை உருவாக்கிக் கொடுத்த அண்ணல் வேலூரில் ஒரு சத்தியாக்ரகம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. நகராட்சி அலுவலகத்தில் அவர் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார். பணம் வைத்துக் கொடுத்த வெள்ளித்தட்டைக் காண்பித்து, ''இந்தத் தட்டு உங்களுக்கா, அரிஜனங்களுக்கா?'' என்று நகராட்சி மன்றத் தலைவரிடம் கேட்டார். ''உங்களுக்குத்தான்'' என்றார் நகராட்சி மன்றத் தலைவர். வி. டி. ரெங்கசாமி ஐயங்கார், இங்குப் படித்துக் கொடுத்த வரவேற்புரையையும் பண முடிப்பையும் பெற்றுக்கொண்டு சொற்பொழிவு எதுவும் நிகழ்த்தாமல் மாவட்டக் கழகத்தின் வரவேற்புரையைப் பெற்றுக்கொள்வதற்காக மாவட்டக் கழக அலுவலகத்திற்குச் சென்றார். அங்கு வட ஆர்க்காடு மாவட்டக் கழகத் தலைவரான ஜனப் சி. அப்துல் ஹகீம் அவரை வரவேற்றார். துணைத் தலைவரான வி. எம். இராமசாமி முதலியார் வரவேற்புரையைப் படித்துக் கொடுத்தார். ஆனால் மாவட்டக் கழகத்தின் சார்பாகப் பணமுடிப்பு எதுவும் கொடுக்கப் பெறுதது காந்திஜிக்கு மிகுந்த வியப்பை அளித்தது. உடனே காந்திஜி கண்டிப்பாக, ''அரிஜன நிதி எங்கே? பீகார் பூகம்ப நிவாரண நிதி எங்கே? இல்லாமல் நான் போகமாட்டேன். இங்கேயே தங்கி விடுவேன்,'' என்று சொல்லி நாற்காலியில் சாய்ந்து விட்டார். ''ஒரு சின்ன நகராட்சி இருநூறு ரூபாய் கொடுத்தது. நீங்கள், ஒன்றுமே கொடுக்க விரும்பவில்லையா?'' என்றார் மகாத்மா. மாவட்டக் கழகத் தலைவரான சி. அப்துல் ஹகீம், தாம் இருநூறு ரூபாய் கொடுப்பதாகச் சொன்னார். அவர் மட்டும் பணம் கொடுப்பதை காந்திஜி ஏற்றுக் கொள்வதாக இல்லை. ''உங்களிடம் மட்டும் பணம் வாங்குவதாக இருந்தால் நான் சென்னைக்குச் சென்றே வாங்கிக்கொள்ளலாமே? உங்களுடைய கழக உறுப்பினர் விஷயம்என்ன ஆயிற்று?'' என்று அவர் கேட்டார். அப்புறம் மாவட்டக் கழகத் தலைவர் இருநூறு ரூபாயும் மற்ற உறுப்பினர்கள் 51 ரூபாயும் போட்டு இருநூற்றி ஐம்பத்தோரு ரூபாய் கொடுத்தார்கள். ஒரு ரூபாய் கொடுத்தவர் ஓர் அரிஜன உறுப்பினர். பணத்தை வாங்கிக் கொண்டு காந்திஜியும் பொதுக் கூட்டத்திற்குப் புறப்பட்டார். (பொதுக் கூட்டத்தில் பொது மக்கள் சார்பாகவும், வேலூர் ஸ்ரீ மஹந்த் உயர் நிலைப்பள்ளி, கூட்டுறவு நிலையம், ஊரிஸ் கல்லூரி, சாலமனத்தம் கிராமம், கலம்பூர் ஆகியவைகளின் சார்பாகவும் பண

முடிப்புகள் வழங்கப் பெற்றன.) காந்திஜி பேசத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே கூட்டத்தில் கூச்சல் அதிகமாயிற்று.

அரிஜனச் சிறுவன்

''இக் கூட்டத்திற்கு ஓர் அரிஜனச் சிறுவன் வந்திருந்தான். தானே பெரிய மாலையொன்றைத் தயார் செய்து கொண்டு வந்து அவன் காந்திஜிக்கு அணிவித்தான். அவன் யாரென்பதை காந்திஜி விசாரித்து அறிந்து கொண்டு அந்த மாலையைத் தன் கையாலேயே அவனுக்குத் திருப்பிப் போட்டார். அதுமட்டுமல்ல. அவனைத் தன் பக்கத்திலேயே மேடையில் உட்கார வைத்துக்கொண்டார். ஆர். சுப்ரமணியன் என்கிற அந்த அரிஜனச் சிறுவன் கடைசி மூச்சு வரை ஹரிஜன முன்னேற்றத்திற்காக உண்மையாக உழைத்து இவ்வுலகை நீத்தான்.''*

புரோகிராம் கார்

காட்பாடியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கண்ணப்ப முதலியார் பொதுமக்களின் சார்பாகப் பண முடிப்பை அளித்தார். குடியாத்தம் ஆற்றுப் படுகையில் மணல் கொதித்தது. ஆனாலும் சுமார் ஏழாயிரம் மக்கள் அங்குக் கூடியிருந்து காந்திஜியை வரவேற்றார்கள். (நகராட்சி மன்றம், தாலுகா போர்டு, அரிஜன சேவா சங்கம், யுவர் சங்கம் ஆகியவைகளின் சார்பாக வரவேற்புரைகளும் பண முடிப்புகளும் அளிக்கப்பட்டன. இதன் பின்னர் ஆம்பூருக்குச் சென்ற வழியில் பள்ளிகொண்டான் என்ற இடத்தில் பொதுமக்களின் சார்பாக அளிக்கப் பெற்ற ஒரு வரவேற்புரையை வாங்கிக்கொண்டார். ஆம்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பெர்து மக்களின் சார்பாக தங்கவேலு, காசி ஆகிய இருவரும் ஒரு பணமுடிப்பை அளித்தார்கள். காந்திஜியை வரவேற்க வந்திருந்தவர்களில் அர்ச் கெளல்ட் உள்படச் சில கிறித்தவப் பாதிரிமார்கள் இருந்தார்கள். பெரியங்குப்பத்திலும் வழக்கமான பணமுடிப்பும் வரவேற்புரையும் அளிக்கப்பெற்றன. இதன் பின்பு வாணியம்பாடிக்குச் சென்று அங்கிருந்து நட்டராம்பள்ளி கிராமத்திற்கு காந்திஜி போய்ச்சேர்ந்தார். இக் கிராமத்தில் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் சார்பாக, சுவாமி சர்வ ஞானந்தா தலைமையில் கிராமச் சீரமைப்பு

* ஆக்கூர் அனந்தாச்சாரி எழுதிய ''காந்தி காட்டிய வழி''

வேலைகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. காந்திஜி சிறிது நேரம் மடத்தைச் சுற்றிப் பார்த்துப் பொதுமக்களின் சார்பாக அளிக்கப்பெற்ற பணமுடிப்பையும் பெற்றுக்கொண்டார்.) இவ்வூர் வருகையைப் பற்றி ஆக்கூர் அனந்தாச்சாரி ''காந்திஜி காட்டிய வழி'' என்ற நூலில் எழுதியுள்ளதாவது: ''காந்தியடிகள் வடஆர்க்காடு ஜில்லாவில் ஹரிஜன யாத்திரை செய்த சமயம், நாட்டரம்பள்ளிக்கு அவர் எழுந்தருள வேண்டுமென்று ஒரு விண்ணப்பம் வந்தது. அதை அனுப்பியவர் அங்கு நடக்கும் ராமகிருஷ்ண மடத்தின் தலைவரான சர்வஞானந்தர் அவர்கள், சுற்றுப்பிரயாணத் திட்டம் அமைத்த பிறகு அழைப்பு வரவே நிகழ்ச்சி நிரலில் அவ்வூர் சேர்த்துக்கொள்ளப் படவில்லை. ஆனால் கடைசி நேரத்தில் அந்த ஊருக்கும் போவதெனத் தீர்மானித்து விட்டார், காந்திஜி. அதற்காகப் பாதையை மாற்றி ஐந்து மைல் அதிகமாகவும் பிரயாணம் செய்ய வேண்டியிருந்தது. இம் மாறுதல் காந்திஜியுடன் சென்ற டாக்டர் ராஜனுக்கும் ராணிப்பேட்டை கலியாண ராமய்யருக்கும் பிடிக்கவில்லை. காந்திஜியின் தேகநிலை பாதிக்கப்படுமே என்கிற கவலைதான் அவர்களுக்கு. எனினும் டாக்டர் ராஜன் காந்திஜியின் விருப்பத்திற்கு விரோதமாக இருக்காமல் அந்த ஊரை 'கார் ப்ரோகிராம்' என்று குறித்துக் கொண்டார். அதாவது நாட்டரம்பள்ளியில் காந்திஜி காரை விட்டு இறங்காமலேயே பேசவேண்டும் என்பதே அதன் பொருள். காந்தியடிகளின் கார் ராமகிருஷ்ண மடத்தின் வாயிலை அடைந்ததும் டாக்டர் ராஜன் சாமியாருக்குச் சொல்லியனுப்பினர். காந்திஜி வரப்போகிறார் என்று ஊர் ஜனங்களுக்குத் தெரியாது. ஆகவே கூட்டம் இல்லை. சாமியார் காரின் அருகில் வந்து காந்திஜியைக் கண்டு புளகாங்கித மடைந்தார். ஆசிரமத்திற்குள் எழுந்தருளும்படி பிரார்த்தித்தார். காந்தியடிகளும் சாமியாரின் மனோபீஷ்டப்படியே காரை விட்டு இறங்கி உள்ளே சென்றார். தெய்வ வழிபாடு நடந்தது. காந்திஜி கடைசி வரை இருந்து விபூதி பிரசாதம் பெற்றுக் கொண்டு காருக்குத் திரும்பினர். அப்போது சாமியாரை நோக்கி, 'உங்களுக்குத் திருப்திதானே?' என்று கேட்டார் காந்திஜி. மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த சாமியார் பதிலுரைக்க மாட்டாமல் திணறினர். அதைக் கண்டு காந்தியடிகளின் முகம் மலர்ந்தது. இந்தச் சம்பவத்திலிருந்து ராமகிருஷ்ண பரமஹம்சரிடமும், அவர் பெயரால்

நடைபெறும் ஸ்தாபனங்களிடமும், காந்திஜிக்கு எவ்வளவு பற்றுதல் இருந்தது என்பது நன்கு விளங்குகின்றது.''

திருப்பத்தூரில் மகாத்மாவை வரவேற்கப் பதினாயிரத்திற்கும் மேல் மக்கள் ஈத்கா மைதானத்தில் கூடி இருந்தார்கள். (திருப்பத்தூர் நகராட்சி மன்ற வரவேற்புரையை அதன் தலைவரான எம். விசுவநாத முதலியாரும் தாலுகா போர்டு வரவேற்புரையை கா. சண்முகமுதலியாரும் கொடுத்தார்கள். பொதுமக்கள், இராமகிருஷ்ணமடம், இந்திப் பிரச்சார சபை ஆகியவைகளின் சார்பாக வரவேற்புரைகள் படிக்காமலேயே அளிக்கப் பெற்றன; பணமுடிப்பும் வழங்கப் பெற்றது.) எல்லா வரவேற்புரைகளுக்கும் மொத்தமாகச் சேர்த்து காந்திஜி மறுமொழி கூறினர். காந்திஜியும் அவரது குழுவினரும் பயணத்தின் காரணமாக மிகவும் அலுத்துப் போயிருந்தார்கள். கூட்டத்திலும் கூச்சல் குறைவதாகத் தென்படவில்லை. ஆகையால், காந்திஜி தம் பேச்சை மிகவும் சுருக்கிக் கொண்டார். ''தனி ஒரு மனிதனைக்கூடத் தீண்டத்தகாதவன் எனக் கருதுவது பாவமாகும்,'' என்று அவர் கூறிவிட்டு, கிறித்துகுல ஆசிரமத்திற்குப் புறப்பட்டார்.

பதில்

கிறித்தவ மதத்தை இந்துக்கள்மீது புகுத்தும் எண்ணமில்லாது அதன் சாரத்தை மையமாக வைத்துத் தொண்டாற்றுவதை நோக்கமாகக் கொண்ட தேசிய மனப்பான்மை மிக்க கிறித்தவ குல ஆசிரமத்திற்கு காந்திஜி வருகை புரிந்ததே ஒரு கதை. பேட்டன் என்ற ஐரோப்பியரும் ஜேசுதாசன் என்ற தமிழரும் ஆக இரண்டு பட்டம் பெற்ற, புகழ்பெற்ற டாக்டர்கள் - பிரம்மச்சாரிகள் - நிறுவிய இந்த ஆசிரமத்தில் கிறித்தவ ஆலயங்கள் கூட இந்து ஆலயங்களைப் போன்றே தோற்றமளிக்கும். 1928-இல் டாக்டர் ஜேசுதாசன் சர்வதேச நல்லுறவு மாநாட்டிற்காக சபர்மதி ஆசிரமத்திற்குச் சென்றிருந்தபோது கிறித்துவ குல ஆசிரமத்திற்குத் தாம் வர விரும்புவதாக அண்ணல் தெரிவித்திருந்தார். அதன்படி தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்யும் யோசனை வந்தபோது டாக்டர் ராஜனிடம் 'எவ்விதத்திலும் இந்த ஆசிரமத்தைச் சுற்றுப்பயணத்தில் சேர்க்க வேண்டும்' என்று கூறியிருந்தார்.

கிறித்துவ ஆசிரமம்

பொதுக்கூட்டத்திற்காக மேடைக்கு வந்துபோது, காந்திஜியின் பேச்சை மொழிபெயர்ப்பதற்காக டாக்டர் ஜேசுதாசன் பக்கத்தில் இருந்தார். ஆனால் மகாத்மா பேசாமலேயே உட்கார்ந்திருந்தார். சிறிது நேரங்கழித்து டாக்டர் ஜேசுதாசன், ''பாபு, நீங்கள் பேசப் போவதில்லையா?''என்று கேட்டு விட்டார். மகாத்மா, ''என்ன பேச்சு இது! என்னைக் கூட்டத்திற்கு அறிமுகப்படுத்த நீங்கள் ஏதாவது சொல்ல வேண்டாமா?'' என்று கேட்டார்.

கேளிக்கை கலைப்பு

ஜேசுதாசன்: உங்களைக்கூட அறிமுகப்படுத்த வேண்டுமா?

மகாத்மா: (சிரித்துக் கொண்டே): நான் உங்களை ஏமாற்றப் பார்க்கிறேன்!

உண்மையென்னவெனில் ஒரு கடுமையான சுற்றுப் பயணத்தின் பின் காந்திஜி களைத்துப் போயிருந்தார்.

காந்தியத் தொண்டர்கள் எத்தனையோ பேர் உண்டு. கிறித்து குல ஆசிரமத்தில் பயிற்சி பெற்றுப்போன ஆயினும் 1934-இல் காந்திஜி இந்த ஆசிரமத்திற்குச் செல்லப்போகிறார் என்பதை அறிந்த சிலர், வேலூரில் அவரைச் சந்தித்து இந்த ஆசிரமத்திற்குச் செல்ல வேண்டாமென்றும் ஆசிரமம் மறைமுகமாகக் கிறித்துவ மதத்தைப் பரப்புவதாகவும் கூறினர். ஆனால் இவ்வாறு கூறியவர்களுடைய வேண்டுகோளை காந்திஜி ஏற்கவில்லை. ''நானே நேரில் போய்ப் பார்த்துவிடுகிறேனே?'' என்று கூறிவிட்டு வந்து விட்டார்.

எதிர்ப்பு

ஆசிரமத்திற்குள்ளேயே நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசியபோது, ''இந்த ஆசிரமத்திற்கு வந்தது எங்கள் வீட்டிற்கே வந்தது போன்று இருக்கிறது. பல ஆண்டுகளாகவே இங்கே வரவேண்டுமென்று நான் ஆசைப்பட்டேன்'' என்று அண்ணல் கூறினார். ''அரிஜனங்களைச் சாதி இந்துக்கள் உடம்பால் தொடுவது மட்டும் போதாது. அவர்களுடைய உள்ளத்தாலும் தொடவேண்டும். எந்தச் சாதி இந்துவும் வேறொருவரைத் தம்மைவிடத் தாழ்ந்தவராகக் கருதினால் அது அவருக்குத் தான் இழுக்காகும். அந்தப் பொருளில்

இதயத்தால் தொடுங்கள்

நீங்கள் பார்த்தீர்களானால் இந்துக்களாக உள்ள மனிதர் களிடையே மட்டுமல்லாது உலகிலுள்ள மனிதர்கள் - அவர் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி - அனைவ ரிடையேயும் சகோதரத்துவத்தை ஏற்படுத்துவது தான் இந்த இயக்கத்தின் நோக்கம். போதை தரும் பானங்களை அருந்துவதால் மனிதன் ''பைத்தியம் பிடித்தவனாகி'' தனது ஆன்மாவையும் உடம்பையும் சாகடித்துக் கொள் கிறான். அந்த வகையில் குடிப்பவன் தற்கொலை செய்து கொள்கிறவனுக்கு ஒப்பானவனே. ஆகையால் குடிப்பழக்க முள்ள அரிஜனங்கள் அதை விட்டுவிட வேண்டும். சாதி இந்துக்கள் குடிப்பழக்கத்தை விடும் வரை தங்களையும் விடச் சொல்லக்கூடாது என்று சில அரிஜனங்கள் கூறுகிறார்கள். ஒருவன் பொய் சொன்னால் நாமும் சொல்ல வேண்டுமா?''

சியாமள வண்ணன்

பொதுக்கூட்டம் முடிந்து காந்திஜி திரும்பி வருகையில், ஒரு பையன் காந்திஜியிடம் ஓடோடி வந்து, ''ஐயா, எனக்கு ஒரு பெயர் வையுங்கள்,'' என்று கேட்டான். காந்திஜி அவனைச் சிறிது நேரம் உற்றுப் பார்த்து அவன் நல்ல கறுப்பாய் இருப் பதைக் கண்டு, ''கிருஷ்ணன்'' என்றார். கிருஷ்ணன் நீலமேக சியாமள வண்ணனல்லவா? மேலும் சிலர் வந்து அவர் காலடியில் விழுந்து வணங்கினார்கள். அவர்களைப் பார்த்து, ''இது வணக்கம் செலுத்துவதல்ல; வழியைத் தடை செய்வது'' என்றார் மகாத்மா. பொதுக் கூட்டத்தை முடித்த பின், ஆசிரமத்தொண்டர்களுக் கெனத் தனியாக நடத்தப்பெற்ற கூட்டத்திற்கு காந்திஜி சென்றார். அங்குத் தொண்டர்கள் நடக்க வேண்டிய வழி முறைகள் பற்றிச் சிறிது நேரம் அறிவுரை கூறினார். அதன் பின்னர் கோவில் ஜபாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனை யில் தம் குழுவினருடன் கலந்து கொண்டார். ஆசிரமத் தின் அமைதியான தெய்வீக சூழ்நிலையில் காந்திஜிக்குப் பிரியமான இயேசு பெருமானின் துதிப்பாடலைப் பாடிய போது மகாத்மாவின் மனம் நெகிழ்ந்தது. ஜோலார் பேட்டையிலிருந்து சென்னைக்கு வந்த வழியில் கோதண்டப் பட்டி என்னும் ஊரில் தா. ஆ. அழுது ஐயங்கார் மனைவி யிடம் தமிழ் - இந்தி பால போதினி ஒன்றைக் கொடுத்து இந்தி கற்றுக் கொள்ளுமாறு அறிவுரை கூறினார்.

19–2–34

சென்னையில் காந்திஜி இரண்டு நாட்கள் தங்கியதற்கு முக்கிய காரணம் தேசபக்தர் எஸ். கணேசன் மேற்கொண்டிருந்த அரிஜன சேவையைப் பார்வையிட்டு அவருக்கு வேண்டிய உதவியைச் செய்ய வேண்டும் என்பது தான். மேலும் அங்கு தமிழ்நாடு அரிஜன சேவா சங்க போர்டுக் கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. பெரம்பூரில் அதி காலையில் இரயிலில் வந்திறங்கிய அண்ணலைத் திருவல்லிக் கேணியைச் சேர்ந்த வணிகரான பிரதாப்முல் ரூப் சந்த் வரவேற்றார்; கோடம்பாக்கத்தில் இருந்த அவருடைய இல்லத்தில் தான் காந்திஜி விருந்தினராகத் தங்கியிருந்தார். அவர் இம்முறை சென்னை வந்தபோது தங்கியிருந்த இரண்டு நாட்களில் ஒரு நாள் மௌனதினம்; மற்றொரு நாளிலும் இரண்டு மாதங்களுக்கு முன்பு வந்தபோது இருந்ததைப் போன்று அத்தனை நிகழ்ச்சிகள் இருக்கவில்லை. (மௌன தினத்தன்று விஜயநகரம் மகாராணியும் அம்புஜம்மாளும் வந்து அவரைப் பார்த்து விட்டுப் போனார்கள்.)

மீண்டும் வந்த காரணம்

20-2-34

இரண்டாம் நாள் அரிஜன சேவா சங்கத்தின் போர்டுக் கூட்டம் நடைபெற்றபோது, காந்திஜி அக்கூட்டத்தில் பங்கு கொண்டு, அரை மணி நேரம் பேச ஒப்புக் கொண்டார். ''ஆலயப் பிரவேசம் முக்கியமானது தான். ஆனாலும் அதில் நாம் இப்போது நேரடியாகச் செய்யக் கூடியது ஒன்றும் இல்லை. ஆலயங்களை அரிஜனங்களுக்குத் திறந்து விடவேண்டும் என்று சாதி இந்துக்களே கூறுமாறு நாம் செய்யவேண்டும். அது தான் இப்போது உடனடியாக நாம் செய்யவேண்டியது,'' என்றார் காந்திஜி.

அரிஜன சங்கம்

பாஷ்யம் ஐயங்கார் : அரிஜனங்களுக்குச் சம்ஸ்காரம் செய்து விட்டு, அவர்களை ஆலயத்தினுள் அனுமதிக்கலாம் என்று சிலர் கூறுகிறார்களே, அதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன ?

காந்திஜி : அது அவசியம் என்று நான் கருதவில்லை. அவர் கள் சுத்தமாக இருக்க வேண்டும். இறந்தவைகளின்

மாமிசத்தையோ மாட்டு மாமிசத்தையோ சாப்பிடக் கூடாது என்று நான் கூறிக்கொண்டு வருகிறேன்.

பாஷ்யம்: சம்ஸ்காரம் செய்வதற்கான இயக்கம் தோன்றினால் ஆதரிப்பீர்களா?

காந்திஜி: அரிஜனங்கள் எதிர்த்தால் அவர்களை ஆதரிப்பேன்.

செலவிடும் விதம்

தம் சுற்றுப் பயணத்தின் போது வசூலான நிதியில் எழுபத்தி ஐந்து சதவீதம் சென்னை மாநில அரிஜன சேவா சங்கத்திடம் வழங்கப்பட வேண்டும் என்றும் அது அத்தொகையை உருப்படியான திட்டங்களில் செலவிட வேண்டுமென்றும் அவர் கூறினார். அரைமணி நேரம் முடிந்தவுடன் இடுப்பில் தொங்கிய கடிகாரத்தைப் பார்த்து காந்திஜி எழுந்து விட்டார்.

பொதுக் கூட்டம்

புலியூர் ஏரியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், மக்கள் குழுமியிருந்த இடத்திற்கு நடுமத்தியில் காந்திஜியின் கார் கொண்டு வந்து நிறுத்தப் பெற்றது. காந்திஜி நின்று கொண்டு பேசுவதற்கு வேறு சரியான மேடை இல்லாததால், காரில் நின்று கொண்டே அவர் பேசினார். அவருடைய இந்திப் பேச்சை ஹரிஹர சர்மா தமிழில் மொழி பெயர்த்தார். ''அரிஜன இயக்கத்தின் குறிக்கோள் நிறைவேறிவிட்டால், மனித சமுதாயத்தின் சகோதரத்துவத்தை அடைவதற்கு அது அடித்தளமாக அமையும். மாணவர்கள் இந்த இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு அரிஜனங்களுக்குத் தங்களால் இயன்ற சிறு உதவி புரிய வேண்டும்,'' என்று காந்திஜி கேட்டுக் கொண்டிருந்தபோது ஓர் ஏழை, வேறு ஒன்றும் கொடுக்க இயலாது, தம் சட்டையில் இருந்த மூன்று சாதாரண (ஷெல்) பொத்தான்களைக் கொடுத்தார். ஏலத்தில் இவை ஒரு ரூபாய்க்குப் போனதைக் கண்டு காந்திஜி வியப்படைந்தார்.

மாலையில் ''இந்து'' நாளிதழ் அதிபரான காலஞ்சென்ற ஏ. ரெங்கசாமி ஐயங்காரின் இல்லத்திற்கு வந்து அவர் மனைவியாரிடமும் மக்களிடமும் துக்கம் விசாரித்தார். ''பத்திரிகைத் தொழிலில் ஏ. ரெங்கசாமி ஐயங்காரின்

திறமை மக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால் அவரிடம் நான் போற்றக்கூடிய மற்ற பல நல்ல குணம்சங்களும் இருந்தன,''

''இந்து'' அதிபர்

என்று அண்ணல் கூறினார். அவர் ஐயங்காரின் இல்லத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கையில் எஸ். சீனிவாச ஐயங்காரின் பேரன் அவரிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அவர் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்து விட்டு, நேரே சீனிவாச ஐயங்கார் இல்லத்திற்குச் சென்று அங்கு அவருடன் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்.

21-2-34

காஞ்சிபுரம்

காலையில் தாம்பரத்தில் இரயில் ஏறி காஞ்சிபுரம் போய்ச் சேர்ந்தார். அங்கு சனாதனிகளின் எதிர்ப்பால் ஆபத்து விளையக்கூடும் என்று கருதியோ என்னவோ இரயில்வே நிலையத்தில் காந்திஜி கார் இருந்த இடம் வரை வரவேற்பாளர்கள் தவிர ஈ, காக்கை கூட அனுமதிக்கப்படவில்லை. காந்திஜி சென்ற வழி நெடுகப் பத்து அடிக்கு ஒரு போலீசார் வீதம் நின்றிருந்தார்கள். ஆனால் எதிர்பார்த்ததற்கு முரணாக இங்கு சனாதன தர்ம சங்கம் எதிர்ப்புப் பிரசாரம் ஒன்றும் செய்யவில்லை. சுயமரியாதைக்காரர்கள் சிலர் ''காந்தி திரும்பிப்போ'' என்று எழுதப் பெற்ற அட்டைகளுடனும் கறுப்புக் கொடிகளுடனும் பொதுக் கூட்டத்தில் ஓர் ஓரத்தில் நின்று கொண்டிருந்தனர். காந்திஜியை முன்னிட்டு அரிஜனங்கள் நுழைந்து விடலாம் என்பதைத் தவிர்க்க சிதம்பரம் போன்று இங்கும் ஸ்ரீயதோக்தகாரி சன்னதி வெள்ளிக் கதவும் ஸ்ரீ வரதராஜ சுவாமிகோவிலின் இரண்டு கோபுர வாசல் கதவுகளும் சாத்திப் பூட்டப் பெற்றிருந்தன. கிட்டத்தட்ட மதிய நேரம்; வெயில் 'சுள்'ளென்று அடித்துக்கொண்டிருந்தது. என்றாலும், இருபதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் சங்கூசப்பேட்டை மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கூடியிருந்தனர். (காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்தின் சார்பாக அதன் தலைவர் எம். சுவாமிநாத முதலியார், செங்கற்பட்டு அரிஜன சேவா சங்கம் சார்பாக அதன் தலைவர் திவான் பகதூர் எம்.கே. ரெட்டியார், சின்னக் காஞ்சிவரம் இந்தி வித்யாலயம் சார்பாக பண்டித அரிவல்லப சர்மா, காஞ்சிபுரம் தொழிலாளர் சங்கம் சார்பாக எம். டி. வேதாந்தம், சமரச சன்மார்க்க சபை சார்பாக

வா. பே. ஏகாம்பரம் செட்டியார், காஞ்சிநகர அரிஜன சேவா சங்கத்தின் சார்பாக நெ.சா. இராஜரத்தின முதலியார் ஆகியோர் வரவேற்புரைகளைக் கொடுத்தனர். அரிஜன நிதிக்காக ரூ. 2,000 பண முடிப்பும் வழங்கப்பெற்றது. மார்வாரி வணிகர்கள், சின்னக் காஞ்சிபுரம் அஸ்தி கிரி தெரு விஸ்வ பிராம்மணர்கள் சார்பாக முறையே பணமுடிப்பும் வெள்ளி இராட்டினமும் அளிக்கப்பெற்றன.)

சாத்திரம்

இக்கூட்டத்தில் காஞ்சி நகரத்தின் பழம் பெருமையை காந்திஜி நினைப்பூட்டினார். ''சமஸ்கிருத சாத்திரங்களின் கல்விக்குப் புகழ்பெற்ற இடம் காஞ்சிபுரம். ஆனால் இப்போதோ இந்தச் சாத்திரங்களைப் படித்த சிலர் அதை அரிஜனங்களுக்கு எதிராகப் பயன்படுத்துகிறார்கள். உங்களுடைய ஆலயத்தின் கதவுகள் இன்னும் அரிஜனங்களுக்குச் சாத்தப் பெற்றுத்தான் இருக்கின்றன. ஆனால் சத்தியம், நீதி ஆகிய வைகளின் உருவாக இருக்கும் இறைவன் அரிஜனங்கள் நுழைய அனுமதி இல்லாத ஓர் ஆலயத்தில் இருக்கமாட்டான். இந்தப் பாவம் சமஸ்கிருத வல்லுநர்களுக்கு மட்டுமல்ல, சாதி இந்துக்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கிற உங்களுக்கும் எனக்கும் எல்லோருக்கும் தான். ஆலயங்களை அரிஜனங்களுக்குத் திறந்து விடுவதற்கு ஆதரவான கருத்தை உருவாக்க சாதி இந்துக்கள் பாடுபட வேண்டும்'' என்று அண்ணல் கேட்டுக்கொண்டார். (இந்நகர் சின்னக் காஞ்சிபுரத்தில் வி. இராஜகோபாலாச்சாரி இல்லத்தில் காந்திஜி தங்கியிருந்தார்.) இங்கு அவர் நூற்றுக் கொண்டிருந்தபோது காஞ்சிபுரம் இந்துப் பெண்கள் பள்ளி நிருவாகியான எம். கே. இராமநாத சர்மா அவரைப் பேட்டி கண்டார். ''உங்கள் பள்ளியில் அரிஜனங்களை அனுமதியுங்கள்; அல்லது அதை மூடிவிடுங்கள்'' என்று அண்ணல் அவருக்கு அறிவுரை கூறினார். ''ஜயபாரதி'' இதழின் துணை ஆசிரியரான பி. எஸ். வெங்கட ஆர்யா அவரைப் பேட்டி கண்டபோது, ''தீண்டாமை அறவே அகற்றப்பட்டு இங்குள்ள ஆலயங்களெல்லாம் அரிஜனங்களுக்குத் திறந்துவிடப் பெறுமாறு தமிழ் நாட்டில் உள்ள வைதிகர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்,'' என்ற செய்தியை அளித்தார். அவரைச் செய்யூர் கிராமத்தைச் சேர்ந்த அரிஜனங்கள் பேட்டிகண்டு, ''எங்கள் ஊர்ச் சேரியில் உள்ள ஆலயத்தைக் கட்டத் தொடங்கினேம். அது

இப்போது அறைகுறையாக இருக்கிறது. அதை முடிப்ப தற்கு நீங்கள் பண உதவி புரியவேண்டும்,'' எனக்கேட்டனர். அதற்கு மகாத்மா, ''சேரிகளில் கோவில் கட்டுவதை நான் ஊக்குவிப்பதில்லை'' என்று கூறிவிட்டார். (ஆர்க்காடு, இராணிப்பேட்டை வழியாக ஆரணி சென்ற வழியில் காவேரிப்பாக்கத்தில் மக்கள் சார்பாகவும் வாலாஜாப் பேட்டையில் அரிஜனங்கள், மாணவர்கள் சார்பாகவும் வேலம், அம்மூர் என்ற இரு சிறிய கிராமங்களின் சார்பா கவும் இராணிப்பேட்டையில் மக்கள் சார்பாகவும் ஆர்க் காட்டில் பொதுமக்கள், வணிகர்கள் சங்கம் சார் பாகவும் அண்ணலிடம் பணமுடிப்புகள் அளிக்கப்பெற்றன. வாலாஜா நகரசபை மைதானத்தில் சுமார் பத்தாயிரம் மக்கள் குழுமியிருந்த கூட்டத்தில் சுந்தரவரதனும் சுப்பு செட்டியாரும் வெள்ளியிலும் பனை ஓலையிலும் தயார் செய்த வரவேற்புரைகளையும் பணமுடிப்பையும் அளித்தனர். இராணிப்பேட்டையில் ரங்கசாமியும் மாணிக்கமும் வரவேற் புரையும் பணமுடிப்பும் கொடுத்தார்கள்.) ஆர்க்காட்டில் ஈ. ஜானிராம முதலியார் காந்திஜியை வரவேற்றுப் பண முடிப்பை அளித்தார். இங்கு கூட்டத்தின் ஒரு பகுதியில் இருந்த மக்கள் காந்திஜியை நன்கு பார்க்க முடியாததால் ஆத்திரமடைந்து காந்திஜியின் மோட்டாரை வழிமறித்துக் காரோட்டியை அடித்துவிட்டார்கள் என்று அந்தச் சமயத்தில் ஒரு செய்தி வெளி வந்திருந்தது.

ஆரணி பொதுக்கூட்டத்தில் (பொதுமக்கள் சார்பாகவும் மோதிலால் நேரு வாசகசாலை, அரிஜன சேவா சங்கம் சார்பாகவும் வரவேற்புரைகள் அளிக்கப் பெற்றன. மகாத்மாவின் சொற்பொழிவை திருச்சி ஹாலாஸ்யம் தமிழில் மொழி பெயர்த் தார். இங்கு) காந்திஜி பேசிய போது ''தமிழ் நாட்டை விட்டுப் புறப்படும் இச்சமயத்தில் ஒவ்வொருவரும் தீண்டாமை என்னும் மாசைத் தங்கள் தங்கள் உள்ளத்தி லிருந்து அகற்றிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பிற சாதியினருக்குக் கிடைக்கும் எல்லா வசதிகளும் உரிமை களும் அரிஜனங்களுக்கும் கிடைக்க வேண்டும்,'' என்று கூறினர். இங்கு சேஷாச்சலம் செட்டியார் இல்லத்தில் காந்திஜி தங்கியிருந்தார். செட்டியாரின் தாயார் அண்ணலி டம் தம் காணிக்கையாகப் பத்து ரூபாயை அளித்தபோது, ''என் வயிறு பெரியதாயிற்றே, அம்மா'' என்று வேடிக்கை


மாசை அகற்றுங்கள்

யாகச் சொன்னார் அண்ணல். செட்டியாரை அழைத்து, ''தேசியப் பள்ளிக்கூடம் நடக்கிறதா?'' என்று கேட்டார். அதற்கு சேஷாசலம் ''இன்னும் ஆறு மாதத்திற்குள் தொடங்கி விடுகிறேன், இல்லா விட்டால் பத்தர்யிரம் ரூபாயைத் தங்களிடம் அளித்து விடுகிறேன்'' என்று கூறினார். இங்கு ஆரணி யூனியன் போர்டாரும் தாலுகா போர்டாரும் அவருக்கு வரவேற்புக் கொடுக்கவில்லை. (சோளிங்கபுரத்தில் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கூடி நின்று மகாத்மாவிற்கு வரவேற்புரையும் பணமுடிப்பும் அளித்தார்கள். வழியில் பரஞ்சலி, குருராஜபேட்டை ஆகிய கிராமங்களிலும் அவரிடம் பணமுடிப்புகள் அளிக்கப் பெற்றன.)

அண்ணல் தமிழகத்தில் மேற்கொண்ட இந்த நீண்ட சுற்றுப் பயணத்தில் அவர் கடைசியாக வந்த நகரம் அரக்கோணமாகும். (இங்குப் பொதுமக்கள் சார்பாகவும் மார்வாரிகள் சார்பாகவும் யூனியன்போர்டு சார்பாகவும் அவரிடம் பணமுடிப்புகள் அளிக்கப்பெற்றன.) அண்ணல் மகிழ்ச்சியோடு, ''இன்றிரவு இந்தக் கூட்டத்துடன் என் தமிழகச் சுற்றுப்பயணம் மிகவும் வெற்றிகரமாக முடிவடைகிறது'' என்று குறிப்பிட்டார். தமிழகச் சுற்றுப்பயணத்தின் போது போலீசாரும் இரயில்வே நிருவாகத்தினரும் அளித்த ஒத்துழைப்பிற்கும் தொண்டர்கள் செய்த அருஞ் சேவைக்கும் அவர் நன்றி தெரிவித்துக் கொண்டார். ''போலீசார் மக்களுடைய சேவகர்களாகவே நடந்துகொண்டனர். இலண்டன் போலீசாரைப் போன்று அவர்களுடைய சேவை இருந்தது,'' என்று பாராட்டினார். ''தீண்டாமை ஒழிப்பின் மூலம் நாம் அடைய விரும்பும் உயர்ந்த குறிக்கோளை ஊழியர்கள் நினைவிற்கொள்ள வேண்டும். உலக முழுவதிலும் வியாபித்து எல்லோரையும் சகோதரர்களாக இணைக்கக்கூடிய ஒரு மாபெருஞ் சக்தியை உருவாக்காது, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக நாம் அடிமைப்படுத்தி வைத்திருந்த கோடிக்கணக்கான அரிஜனங்களுக்கு நாம் தகுந்த பிராயச்சித்தம் செய்துவிட முடியாது. நம் மனதை மட்டும் மாற்றிக்கொண்டோமானால் இந்த உயர்ந்த குறிக்கோளைக்கூட நாம் எளிதாக அடைந்து விடலாம். ஆண்டவன் உங்களுக்கு அருள் புரிவானாக!'' என்று கூறி விட்டு அண்ணல் விடைபெற்றுக்கொண்டார். கூட்டத்திலிருந்து நேராக அவர் இரயில் நிலையம் சென்று இரயில்

கடைசி ஊர்

அந்தக் காலத்தில்!



படம் உதவியது : புது டில்லி காந்தி இல்லம்.

ஜி. ஏ. நடேசன் யாகூப் ஹாசனுடன் காந்தி தம்பதிகள் - 1915 இல்

முப்பெருந் தலைவர்கள்



படம் உதவியவர் : ஆ. கே. பிரபு.

1921இல் ஒரு கூட்டத்தில் பெசண்ட், சீனிவாச சாஸ்திரி ஆகியோருடன் காந்திஜி.

பெசண்டும் காந்திஜியும்



படம் உதவியது : சுமதி மொரார்ஜி

1921-இல் பெசண்டும் காந்திஜியும்
சென்னையில் ஒரு கூட்டத்திற்கு வந்துகொண்டிருக்கின்றனர்.

மாதர் மத்தியில் மகாத்மா




படம் உதவியது : ஆர். கே. பிரபு

1921இல் மாதர் கூட்டம் ஒன்றில் மகாத்மா.


வரலாற்றுப் புகழ்மிக்க கட்டிடங்கள்

இடது புற கட்டிடம் : காந்திஜி மதுரையில் அரை ஆடை புனைந்த இல்லம்.

கீழே உள்ள கட்டிடம் : திருச்சியில் காந்திஜி தங்கிய ராஜன் இல்லம். வேதாரண்ய யாத்திரையை ராஜாஜி தொடங்கிய இடம்.




படம் உதவியது : மதுரை காந்தி இல்லம்




படம் உதவியது : திருச்சி பி. சங்கிலியாபிள்ளை

மக்களின் மருத்துவர்




படம் உதவியது : சுமதி மொரார்ஜி

1927-இல் சென்னையில் கிறித்தவர் மருத்துவமனை ஒன்றில் காந்திஜி



படம் உதவியவர் : சுமதி மொரார்ஜி

1927இல் சென்னையில் கூடிய காங்கிரசில் காந்திஜி. முத்துரங்க முதலியார் முன்னுல் வருகிறார்.




படம் உதவியது : சுமதி மொரார்ஜி

1927இல் சென்னை சாரணர் கூட்டம் ஒன்றில் காந்திஜி பேசுகிறார்

தேனீ வளர்ப்பிலும் தேசத் தலைவர்

கோவை இராமநாதபுரத்தில்





படம் உதவியவர் : டாக்டர் குருபாதம்

வை. எம். சி. ஏ. இராமப் பணருக்காண நிலைய தேனீ வளர்ப்புப் பண்ணையில் 1934

குமரிக கடலில் நீராடல்



படம் உதவியது : சுமதி மொரார்ஜி

1934இல் கன்னியா குமரிக் கடலில் காந்திஜி நீராடுகிறார்


மகாத்மா முன் "நவாப்"



படம் உதவியவர் : நவாப் ராஜமாணிக்கம்

தம் நாடகத்திற்கு வந்திருந்த மகாத்மாவிற்கு நவாப் ராஜமாணிக்கம் வரவேற்புரையைப் படித்துக்கொண்டிருக்கிறார்.

மகாத்மாவைத் தாங்கிய மேஜை



படம் உதவியவர் : கி. இராமச்சந்திரன், பழனி.

காந்திஜி பழனி மலை மீது ஏறிச் சென்ற மேஜை — 1946.

அமபததூால இறஙகய அணணல



படம் உதவியது : டில்லி காந்தி இல்லம்

1946இல் அம்பத்தூரில் அண்ணலை இராஜாஜி, கோபால்சாமி ஐயங்கார், காமராஜ் வரவேற்று அழைத்து வருகின்றனர்.


மக்கள் முன் மகாத்மா



படம் உதவியது : டில்லி காந்தி இல்லம்

1946 சுற்றுப்பயணத்தில் சென்னையிலிருந்து மதுரைக்குச் செல்லும் வழியில் ஓர் இரயில் நிலையத்தில் காந்திஜி கூட்டத்தின் முன் பேசப் போகிறார்.

கூட்டம் பாரீர் !



படம் உதவியது : டில்லி காந்தி இல்லம்


சென்னையில் 1946இல் வி.ஐ.பி. சாலையில் காந்திஜி நடத்திய பிரார்த்தனைக் கூட்டத்தில் மக்கள் திரளாகக் கலந்துகொண்ட காட்சி.

குடையின் கீழ் "கொற்றவர்"



படம் உதவியது : டில்லி காந்தி இல்லம்

ஆண்டவன் வழிபாட்டுக் கூட்டத்தில் குடையின் கீழ் மக்களின் மாமன்னர் நின்று அமைதிப்படுத்துகிறார். — 1946



இந்தக் கூட்டம்தான் காந்திஜி பேச முடியாது செய்துவிட்டது திருச்சி இரயில் நிலையத்தில் பேரார்வத்தின் காரணமாக ! — 1946 வரை.

ஏறிக் குடகிற்குப் புறப்பட்டார். இவ்வாறு ஜனவரி 22-ஆம் தேதி பிற்பகல் 4-30 மணிக்குத் தொடங்கிய பயணம் 21—2—34-ஆம் தேதி இரவு 10-30 மணிக்குச் சுபமாக - ''கல்கி'' எழுதியது போல - எல்லாம் மங்களமாக முடிந்தது.

காந்திஜி சுற்றுப்பயணத்தின்போது தமிழ் நாட்டில் வசூலான அரிஜன நிதி, மாவட்டம் வாரியாகக் கீழே அளிக்கப்பெறுகிறது.

கோவை மாவட்டம் : 23, 658-4-8
நகைகள் இல்லாமல்

மதுரை (காங்.) மாவட்டம் : 13, 809-0-6
நகைகள் உள்பட

திண்டுக்கல் (காங்.) மாவட்டம் : 10, 972-1-2
நகைகள் இல்லாமல்

காரைக்குடி மாவட்டம் : 11, 152-3-9
நகைகளுடன்

திருச்சிராப்பள்ளி மாவட்டம் : 7, 438-11-5
நகைகள் இல்லாமல்

திருநெல்வேலி மாவட்டம் 7, 052-4-10
நகைகள் உள்பட

நீலகிரி மாவட்டம் : 4,023-13-5
நகைகள் உள்பட

இராமநாதபுரம் மாவட்டம் : 3, 103-1-6
நகைகள் உள்பட

9-5-1936

மைசூர் சமஸ்தானத்தில் உள்ள நந்தி குன்றுகளில் உடல் நலத்தை முன்னிட்டு 1936-ஆம் ஆண்டில் ஓய்வு எடுக்கப் போன மகாத்மா காந்தி, போன வழியிலும் வந்த வழியிலும் ஆக இரு முறை சென்னை மாநகருக்கு வந்துள்ளார். நந்தி குன்றுக்குப் போன வழியில் மே 9ஆம் தேதியன்று காந்திஜியும் கஸ்தூரிபா காந்தியும் கிராண்ட்டிரங்க் எக்ஸ்பிரசில் வந்து பேசின்பிரிட்ஜ் இரயில் நிலையத்தில் இறங்கிச் சென்னை நகருக்கு வந்தார்கள். மைலாப்பூரில் உள்ள கே. பாஷ்யம் இல்லத்தில் அன்று பகல் தங்கிவிட்டு மீண்டும் பேசின்பிரிட்ஜ் இரயில் நிலையத்திற்கே சென்று பெங்களூர் மெயிலில் ஏறிச் சென்று விட்டனர். இவர்கள் சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வந்திறங்குவார்கள் என எதிர்பார்த்து நின்ற பெருங்கூட்டமும் அன்று ஏமாற்றமடையவில்லை. ஏனென்றால் காந்திஜி மைலாப்பூருக்குச் சென்ற கார் அந்தப் பாதையில் தான் போயிற்று. கூட்டத்தினரும் காரை ஒரு நிமிடம் நிறுத்தி காந்திஜியைக் கண்ணுரத் தரிசித்து விட்டுத்தான் அனுப்பி வைத்தனர்.

நந்தி சென்ற வழியில்

எஸ். சீனிவாச ஐயங்கார், அவரது மனைவியார், சர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், திருமதி ருக்மணி இலட்சுமிபதி, ஜி.ஏ. நடேசன், என். எஸ். வரதாச்சாரி, பண்டிட் ஹரிஹர சர்மா ஆகியோர் பாஷ்யம் இல்லத்திற்கு வந்து காந்திஜியைச் சந்தித்துப் பேசினர். செய்தியாளர்களிடம் அன்று அவர் அரசியலைப் பற்றி எதுவும் கூறவில்லை. ஏனெனில் இந்தச் சமயத்தில் அவர் அரசியலிலிருந்து விலகியிருந்தார். அவர்கள் அவரை அணுகிய போது, ''நான் இப்போது பால்வற்றிப் போன பசுமாடு போல் இருக்கிறேன்.'' என்று கூறிவிட்டார். செய்தியாளர் ஒருவரிடம் அவர் சொன்னார்: ''என்னிடம்

பால்வற்றிய மாடு

பூக்களைப் பற்றிப் பேசுங்கள்; காலநிலையைப் பற்றிப் பேசுங்கள். ஆனால் அரசியலைப் பற்றி மட்டும் பேச வேண்டாம். அரசியலிலிருந்து வெளியேறி வந்ததன் பின் அரசியலைப் பற்றியோ அரசியல் வாதிகளைப் பற்றியோ நான் பேசுவது அழகாகாது.''

இந்திப் பிரசார சபை

தற்போது தியாகராய நகரில் இந்திப் பிரச்சார சபைக் கட்டிடம் எழிலுற இருக்கும் இடத்தில் அப்போது தான் கட்டிடம் கட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆகையால் அந்த வேலைகளைப் பார்வையிடுவதற்காக பாஷ்யத்துடன் காந்திஜி சென்றார். அவர் அங்கு வரப்போகிறார் என்பதை எப்படியோ முன்கூட்டி அறிந்து கொண்ட பொதுமக்கள் அவரைக் காண்பதற்காக ஆயிரக் கணக்கில் கூடிவிட்டனர். காந்திஜியால் காரை விட்டுக் கீழே இறங்கக்கூட முடியவில்லை. இதன் பின் அவர் கோடம் பாக்கத்தில் இருந்த அரிஜன தொழிற்பள்ளி, அரிஜன நல நிலையம் ஆகியவைகளைப் பார்வையிடச் சென்றார். அங்கு நடைபெற்ற வழிபாட்டுக் கூட்டத்தில் காந்திஜியும் கஸ்தூர் பாவும் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில் பிரார்த்தனைப் பாடல்கள் பாடியவர்களில் பெயர் பெற்ற தமிழ் நாவலாசிரியையான வி. எம். கோதைநாயகி அம்மாள் ஒருவர்.

13-6-36

வந்த வழியில்

மைசூர் சமஸ்தானத்தில் ஒரு மாதத்திற்கு மேல் தங்கியதில் அவருடைய உடல் நிலையில் நல்ல முன்னேற்றம் தெரிந்தது. இதன் பின்னர் அவர் சென்னை வழியாக வர்தாவிற்குச் சென்றார். ஜூன் 13-ஆம் தேதியன்று பெங்களூர் மெயிலில் வந்து பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்தில் இறங்கி நேரே மாம்பலத்திற்குச் சென்று இந்திப் பிரச்சார சபைக் கட்டிட வேலைகளைப் பார்வையிட்டார். இன்று தான் கட்டிடம் கட்டும் வேலை தொடங்கப் பெற்றது. இந்தக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் பொறுப்பை ஏற்றிருந்த பொறியியல் வல்லுநரிடமும் இந்திப் பிரசார சபை அலுவலர்களிடமும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து விட்டு காலைச் சிற்றுண்டி அருந்துவதற்காக திருவல்லிக்கேணிக்குத் தம் குழுவினருடன் சென்றார்.

புறப்பாடு

இன்று காந்தி குழுவினரின் காலை உணவிற்குத் திருவல்லிக்கேணி நெடுஞ்சாலையில் உள்ள நெல்சன் மாணிக்க முதலியார் கல்யாண மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. கோடம் பாக்கம் அரிஜன தொழிற்பள்ளியின் பொருள் காப்பாளரான ரூப்சந்த் பிரதாப்மால் இந்த ஏற்பாட்டைச் செய்திருந்தார், இங்கு வந்து குளித்து, காலை உணவு உண்டு, சிலருக்குப் பேட்டி அளித்தபின் காந்திஜி எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்திற்குச் சென்று அவருடன் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு, இரயில் ஏறுவதற் காக நேரே பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையத்திற்குச் சென்றார். கஸ்தூரிபா காந்தியும் திருமதி பிரிஜ்லால் நேருவும் இன்று ஹேம்சந்த்ஷாவின் விருந்தினர்களாகத் தங்கியிருந்தார்கள். இரயில் வருவதற்குச் சுமார் கால் மணி நேரத்திற்கு முன் கூட்டியே காந்திஜி குழுவினர் சென்று விட்டதால், பிளாட் பாரத்தின் மத்தியில் நாற்காலிகள் போட்டு, அவர்களை இரயில் அதிகாரிகள் அமர வைத்தனர். ஆகவே, அங்கு வந்திருந்த சிலருக்கு காந்திஜியுடனும் கஸ்தூரிபாவுடனும் சிறிது நேரம் உரையாட வாய்ப்புக் கிடைத்தது.

—oo—

வர்தா சத்தியாக்கிரக ஆசிரமத்தில் 1934-இல் காந்திஜி குடியேறினர். அதற்குப்பின் 1937-க்குள்ளான இடைக் காலம் காந்திஜியின் கிராம பக்தி முதிர்ச்சி பெற்ற காலம். இந்தக் காலத்தில் கிராமச் சீரமைப்பு, கிராமக் கைத்தொழில் ஆகிய வற்றில் அவர் முழு நேரத்தையும் செலவிட்டா ராகையால் கிராம இயக்கத்தின் 'காசி' ஆக வர்தா விளங்கியது.

கிராம இயக்க காசி

காங்கிரசில் நான்கணு உறுப்பினர் கூட இல்லாமல் காந்திஜி விலகிக் கொண்டது அதன் வரலாற்றிலேயே ஒரு மாபெரும் நிகழ்ச்சியாகும். ''அரிஜன்'' சஞ்சிகையில் அவர் இதைப்பற்றி ஒரு சொற்கூட எழுதவில்லை என்றால் எந்த அளவு அவர் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்திருக்கிறார் என்பது நமக்குப் புலனாகிறது. அரசியலில் ஈடுபடாது கிராம நிர்மாணப் பணியிலேயே முழு மனத்தையும் நேரத்தையும் அண்ணல் ஈடுபடுத்திக் கொண்டிருந்த போதும் வெளியி லிருந்து அவருக்கு வந்த கடிதங்களும் அவர் ஆற்றவேண்டிய பணிகளும் அளவுக்கு மீறி அதிகமாகி விட்டன. 1935 டிசெம்பரில் அவருடைய உடல் நலம் சீர்கெட்டு, கடுமை யான இரத்தக் கொதிப்பு வந்து விட்டது. அவர் தங்கி யிருந்த இடத்தில், புகழ்பெற்ற கோடீசுவரரான ஜம்னலால் பஜாஜ் காவல் இருந்து, பார்வையாளர்கள் அவரைத் தொந்தரவு செய்யாது தவிர்த்தார்,

உடல் சீர்கெட்டது

ஆயினும், 1936 மத்தியில் கர்ப்பத்தடை இயக்கத்தில் உலகிலேயே தலைமை வகித்த மார்கரெட் சாங்கர் அவரைப் பேட்டிகாண அனுமதிக்கப் பெற்றார். மருத்துவர்கள் ஆலோசனையை மீறிப் பேசியதாலும் சிந்தித்ததாலும்

அண்ணலின் உடல் நலம் மேலும் சீர்கெட்டது. பம்பாய்க்கு அழைத்துச்சென்று அவருடைய பற்களையெல்லாம் பிடுங்கி அவரை ஓய்வுக்காக ஆமதாபாத் குசராத் வித்யா பீடத்திற்குக் கொண்டு வந்து வைக்க வேண்டியதாயிற்று. இரண்டு மாத காலத்திற்கு அவரால் ''அரிஜன்'' பத்திரிகைக்குக் கூட எழுத முடியவில்லை.

சாங்கர் பேட்டி

பின்னர் அதாவது 1936 ஏப்ரல் 30 ஆம் தேதியன்று - எல்லோரும் கிராமங்களுக்குச் செல்லுங்கள் என்று அறிவுரை கூறும் தாமே அதை முன் மாதிரியாகச் செய்து காட்ட வேண்டுமென்று கருதி - வர்தாவுக்கு ஐந்து மைல் தூரத்தில் உள்ள சேவா கிராமத்திற்குச் சென்று குடியேறினர். இந்தக் கிராமத்தின் பெயர் செகோன் என்று இருந்தது. ஆனால் அதை காந்திஜியின் விருப்பப்படி பின்னர் சேவாகிராமம் என்று மாற்றினர்கள். முதன் முதலாகக் குடியேறுவதற்காகச் சென்ற நாளன்று நான்கு மைல் நடந்தும் ஒரு மைல் காளை மாட்டு வண்டியிலும் அண்ணல் சென்றார். தம்மைப் பார்க்க சேவா கிராமத்திற்கு வருபவர்களும் வர்தாவிலிருந்து நடந்தே வரவேண்டுமென்றும் வண்டி வாகனங்களை எதிர் பார்க்கக் கூடாது என்றும் அவர் அறிவுரை கூறினர்.

சேவா கிராமத்தில்

முதல் முதல் காங்கிரஸ் அதிகாரப்பூர்வமாகப் பங்கு கொண்ட பொதுத் தேர்தல் 1937 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இதற்கு முன்னோடி நடவடிக்கையாக 1936 ஆகஸ்டில் பம்பாயில் காங்கிரஸ் செயற்குழு கூடியபோது, தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப் பெற்றது. இதன் பின்னர் காசி, இராஜ்கோட், நாடியாட், ஆமதாபாத், சபர்மதி ஆகிய இடங்களுக்குச் சென்று விட்டு 1936 நவம்பரில் சேவா கிராமத்திற்கு காந்திஜி திரும்பினர். தேர்தல் பிரசாரத்தில் காந்திஜி பங்கு கொள்ளவில்லை; நிர்மாண வேலைகளிலேயே முனைந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தார். ''அரிஜன்'' பத்திரிகையிலும் அவர் நிர்மாணத் திட்டங்களைத் தவிர வேறு எதையும் எழுதவில்லை.

தேர்தலும் காந்திஜியும்

இவைகளெல்லாம் அனைத்திந்திய நிலவரங்கள்; தமிழகத்தில், காந்திஜி காங்கிரசிலிருந்து விலகியது தேசிய விரோத

சக்திகளுக்கும் அதிகார வர்க்கத்தினருக்கும் பெரிய ஆறுதலாக இருந்தது. சென்னை அரசாங்கம் இந்திய அரசுக்கு எழுதியது; ''நிதானமாகச் சிந்திக்கக் கூடிய அரசியல்வாதிகள் - காங்கிரஸ்காரர்களில் ஒரு சிலர் உட்பட - காங்கிரசிலிருந்து காந்திஜி விலகியது ஒரு வகையில் மறைமுகமாக நன்மை பயக்கக்கூடியது என்று கருதுகின்றனர். அவருடைய பெருஞ் செல்வாக்கு அகன்று விட்டால் காங்கிரஸ் நடைமுறைக்கு ஏற்ற திட்டங்களை வகுக்கும் என்று அவர்கள் எண்ணுகின்றனர்.''

தமிழகத்தில் எதிரொலி

1935 பிறந்தபோது தமிழகத்தில் ஓர் அனைத்திந்திய கட்சியும் பிறந்தது. திருமதி பெசண்டின் ஆதரவாளர்கள் டாக்டர் ஜி. எஸ். அருண்டேல் தலைமையில் கூடி ''இந்திய தேசிய லீக்'' என்ற புதுக் கட்சி ஒன்றைத் தொடங்கினர்கள். இதனுடைய குறிக்கோள் சுயராஜ்யம் பெறுவதே என்றாலும், பின்னர் பிரிட்டிஷ் காமன் வெல்த்தில் சம மதிப்புள்ள ஓர் உறுப்பு நாடாக இந்தியா ஆகவேண்டும் என்பதாகும்.

புதுக் கட்சி

1935-ஆம் ஆண்டில் எல்லாம் தமிழகத்தில் தேசியம் பொங்கி வழிந்து கொண்டிருந்தது என்று தயக்கமில்லாமல் கூறலாம். ஆங்காங்கு ஏராளமான பொதுக் கூட்டங்கள் காங்கிரசின் ஆதரவில் நடைபெற்றன. காங்கிரசுக்கு எதிராகக் கூட்டங்கள் நடத்துவதோ முடியாத செயலாகத் தோன்றியது. 1936-இல் சென்னையில் பி. எஸ். சிவசாமி ஐயர் தலைமையின் கீழ் மிதவாதிகள் கட்சிக் கூட்டம் நடைபெற்றபோது வரப்போகும் பொதுத் தேர்தல்களில் காங்கிரஸ் வெற்றிபெறும் என்ற நம்பிக்கையை வி. எஸ். சீனிவாச சாஸ்திரி தெரிவித்தார். 1936 மே மாதம் ஆனைமலையில் நடைபெற்ற ஐரோப்பிய சங்கக் கூட்டம் ஒன்றில் சத்திய மூர்த்தி நிகழ்த்திய பொற்பொழிவு இங்குக் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது: ''காங்கிரஸ் சோசலிசத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. சோசலிசம் என்றால் அதில் இம்சை இருக்கத்தான் செய்யும். அஹிம்சையிலும் தனியார் சொத்துரிமையிலும் காங்கிரசுக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் முக்கியமான, பெரிய தொழில்கள் தேசியமயமாக்கப்பெறும்; ஏழை மக்களின் நலனுக்காகப் பணக்காரர்களுக்கு வரி விதிக்கப்படும்.''

தேசிய உணர்ச்சி

நேரு வருகை

1936 அக்டோபர் 5ஆம் தேதியன்று பண்டித ஜவாகர் லால் நேரு தேர்தல் பிரசாரத்தை யொட்டி, தமிழகத்தில் சூறாவளிச் சுற்றுப் பயணம் செய்தார். டிசெம்பர் இறுதியில் சர்தார் வல்லபாய் படேல் தமிழகத்தில் இரண்டு வாரங்கள் சுற்றுப் பயணம் செய்தார்.

தாழ்த்தப்பட்ட அபேட்சகர்கள்

காங்கிரஸ் சார்பாகப் பொதுத் தேர்தலில் தாழ்த்தப் பட்ட அபேட்சகர் நிறுத்தப்பட இருப்பதைக் கண்டு திவான் பகதூர் ஆர். சீனிவாசன் போன்ற சில தாழ்த் தப்பட்டோர் தலைவர்கள் மிகவும் மனம் வருந் தினர். ''சென்னை மாகாண தாழ்த்தப் பட்டோர் கட்சி'' என்ற பெயரில் ஒரு புது அரசியல் கட்சியைத் தோற்றுவித்திருந்த இவர்கள், சத்திய மூர்த்தி இவ்வாறு அபேட்சகர்களை நிறுத்துவதைத் தடுத்து நிறுத்துமாறு காந்திஜிக்குத் தந்தியடித்தனர். ஆனால் காந்திஜி, ''அரிஜனங்கள் தாங்களாகவே முன்வந்து சில அரசியல் கட்சிகளை, தங்களுக்கு வழி காட்டுமாறு கேட் கிறார்கள். அதில் நான் எவ்வாறு குறுக்கிடமுடியும்?'' என்று பதில் அனுப்பிவிட்டார்.

தேர்தல் சூடு

இவ்வாறு சென்னை நகரிலும் தமிழகத்தின் உட்பகுதி களிலும் தேர்தல் வேலைகள் சூடு பிடித்துக் கொண்டிருந்தன. போதாததற்கு, பொது வாழ்விலிருந்து ஒதுங்கியிருந்த ராஜாஜி, மீண்டும் அதில் நுழைந்து காங்கிரஸ் தேர்தல் கூட்டங்களில் முக்கிய பங்கு கொண்டார். இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில் தான் காந்திஜி சென்னை வழியாகத் திரு வனந்தபுரத்திற்குப் போனார்.

திருவாங்கூர் வருகை

திருவாங்கூர் சமஸ்தானத்தில் அதன் மன்னர்-திவானுக இருந்த சர் சி. பி. இராமசாமி ஐயர் ஆலோசனையின் பேரில்-ஆலயங்களையெல்லாம் அரிஜனங்களுக்குத் திறந்து விட்டார். ஆகவே அங்குள்ள ஆலயங் களுக்குச் சென்று தெய்வ வழிபாடு செய்வதற் காக 1937 ஜனவரி மாத மத்தியில் அண்ணல் சேவாகிராமத்திலிருந்து திருவாங்கூர் சமஸ்தானத்திற்குப் புறப்பட்டார். புறப்படுமுன், ''நான் இப்போது திருவாங்கூர் செல்லும் பயணம் ஒரு தீர்த்த யாத்திரை'' என்று அறிவித் தார். தமிழகத்தின் வழியாகவே அவர் செல்ல வேண்டியி

ருந்ததாலும், திருவாங்கூர் சமஸ்தானத்தில் இருந்த நாகர் கோவில், கன்னியாகுமரி, சுசீந்திரம் போன்ற ஊர்கள் பின்னர்த் தமிழகத்தில் சேர்க்கப்பெற்று விட்டதாலும் இம் முறை அவர் வருகையைத் திருவாங்கூர் வருகையாக மட்டுமல்லாமல் தமிழக வருகையாகவுங் கொள்ளலாம்.

சனாதனிகள் ஆத்திரம்

தமிழகத்தைச் சேர்ந்த சனாதனிகளுக்குத் திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஆலயப்பிரவேசம் நடைபெற்றது கூடத் தாளவில்லை. சனாதன தர்மம் மீறப்பட்ட தாகவும் சாதி இந்துக்களுடைய உரிமை பறி போய் விட்டதாகவும் கவலை அடைந்தனர். திருவாங்கூர் சமஸ்தானத்தில் பிறப்பிக்கப் பெற்ற ஆலயப் பிரவேசப் பிரகடனத்திற்குத் தங்க ளுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கவும் சனாதனிகள் மேலும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோ சிக்கவும் சென்னை வர்ணஷ்ரம சுயராஜ்ய சங்கத்தின் சார் பாகச் சென்னையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

11-1-37

சென்னை சேர்ந்தார்

பம்பாய் எக்ஸ்பிரசில் புனாவிலிருந்து வந்த காந்தியைக் காணத் திருத்தணி இரயில்வே நிலையத்தில் வி. கே. சடகோபாச்சாரியார், ஓ. துரைசாமி செட்டி யார் ஆகிய இருவரும் செய்த ஏற்பாட்டின்படி இரண்டாயிரம் பேர்கொண்ட பெருங்கூட்டம் கூடியிருந்தது. மகாத்மாவும் சன்னல் வழி யாக எட்டிப்பார்த்து, அரிஜன நிதிக்காகப் பணம் வசூல் செய்தார். சென்னைக்கு ஜனவரி 11-ஆம் தேதியன்று மாலை பம்பாய் எக்ஸ்பிரஸ் அரைமணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தது. ஆகையால், முதலில் டில்லியிலிருந்து வந்த ''கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசை'' அதுதான் ''பம்பாய் எக்ஸ்பிரஸ்'' என்று எண்ணிக்கொண்டு, மக்கள் ''மகாத்மா காந்திக்கு ஜே!'' என்று முழங்கத் தொடங்கி விட்டனர். அதில் காந்திஜி இல்லாதது தெரிந்த போதுதான் அவர் களுக்குத் தாங்கள் ஏமாந்தது புலனுயிற்று. காந்திஜி வந்திறங்கிய போதோ கூட்டத்தினர் ஆவலோடு முண்டி யடித்துக் கொண்டு அவரை நெருக்கியதில் போலீசு, இரயில்வே அதிகாரிகளும் தலைவர்களும் அவரை மீட்டு வெளியே கொண்டு வந்துகாரில் ஏற்றுவது பெரும்பாடாகப் போயிற்று.

இரயில் நிலையத்திலிருந்து காரில் நேராக இந்திப் பிரச்சார சபை அலுவலகத்திற்கு காந்திஜி போய்ச் சேர்ந்தார். காந்திஜியுடன் அவருடைய செயலாளர்களான மகாதேவ் தேசாயும் பியாரிலாலும் வந்திருந்தார்கள். சென்னையிலுள்ள தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபைக்குப் புதுக் கட்டிடம் எழுப்பியபின் காந்திஜி வருவது இதுதான் முதல் தடவை. காந்திஜி, ராஜாஜியுடன் (அதே சுற்றுக்குள் இருந்த) ஹரிஹர சர்மா இல்லத்திற்குச் சென்றார். அந்த வீட்டில் திவான் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார், மதுரை ஏ. வைத்தியநாத ஐயர், கே. சீனிவாசன், எச். எஸ். எல். போலக், கே. சந்தானம், பி. ஜகந்நாததாஸ், திருமதி எஸ். சீனிவாச ஐயங்கார், திருமதி சாமிநாதன் ஆகியோருடன் காந்திஜி பேசிக் கொண்டிருந்தார். சர்மாவின் வீட்டில் குளித்துவிட்டு, சில ஆரஞ்சுப் பழங்களையும் பேரீச்சம் பழங்களையும் அவர் உண்டார். ஆட்டுப் பால் கொண்டு வந்து கொடுக்கப் பெற்றபோது, ''பயணத்தில் குறைத்துச் சாப்பிடுவது நல்லது'' என்று கூறி மறுத்து விட்டார். ''மற்ற சமயங்களில் குறைத்துச் சாப்பிட வேண்டாமா?'' - ஒருவர் கேட்டார். ''மற்ற சமயங்களிலும் இது பொருந்தும். ஆனால் இரயில் பயணத்தின்போது அதிகம் பொருந்தும்'' - என்றார் காந்திஜி.

இந்த இடைவேளையில் எப்படியோ கையெழுத்து வேட்டைக்காரர்கள் - பெரும்பாலும் பெண்கள் - கூடிவிட்டார்கள். அவர்கள் காந்திஜியை வந்து சூழ்ந்து கையெழுத்து கொண்டார்கள். ஒரு பெண் கையெழுத்து வேட்டை வாங்கும் புத்தகத்தை நீட்டி, ''தயவு செய்து இதில் உங்கள் பெயரை எழுதுங்கள்'' என்று கேட்டாள். காந்திஜி (சிரித்துக் கொண்டே): ஒரு காசும் இல்லாமலா?

பெண்: நான் ஒரு ரூபாய் கொண்டு வந்திருக்கிறேன்.

காந்திஜி: போதாது. என் கையெழுத்துக்கு விலை ஐந்து ரூபாய்.

பெண்: நான் அவ்வளவு பணக்காரியல்ல. இந்தப் பணத்தை வாங்கிக்கொண்டு கையெழுத்திடுங்கள்.

காந்திஜி விட்டுக் கொடுப்பதாயில்லை. அவர் சொன்னார்: ''நான் ஒரு பெரிய பனியா என்று உனக்குத் தெரியாதா? நான் கூறும் விலை எனக்குக் கிடைத்தாக வேண்டும்.''

அந்தப் பெண் பக்கத்திலிருந்த பெண்ணிடம் நான்கு ரூபாய் கடன் வாங்கி, காந்திஜியின் காலடியில் வைத்து, கையெழுத்துப் போடுமாறு கேட்டுக்கொண்டாள். காந்திஜியும் தமிழில் தம் கையெழுத்தைப் போட்டார்.

''தயவு செய்து ஆங்கிலத்தில் போடுங்கள்'' அந்தப் பெண் மன்றாடினாள்.

''நான் தமிழில் சரியாக எழுதவில்லையா?'' காந்திஜி மடக்கிக் கேட்டார்.

''பெயரைச் சரியாகத்தான் எழுதியிருக்கிறீர்கள்..... அது சரி. நீங்கள் ஏன் தமிழில் பேசுவதில்லை?'' அந்தப் பெண் கேட்டாள்.

''நான் விரும்பித்தான் செய்கிறேன். ஆனால் எனக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கும் திறமை படைத்தவர்களைத் தான் காணவில்லை. நீ என்னுடைய அபிமான மகளாக வந்து எனக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கிறாயா? நாள்தோறும் அரைமணி நேரம் கற்றுக் கொள்கிறேன்.''

காந்திஜி இவ்வாறு சொன்னதும் எல்லோரும் சிரித்து விட்டார்கள். அந்தப் பெண்ணும் அமைதியடைந்தாள். ரூபாய் கொண்டு வந்திருந்தவர்களெல்லாம் கையெழுத்துக்கு ஐந்து ரூபாய் வீதம் செலுத்திக் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

இதன் பின்னர் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காந்திஜி வந்து சேர்ந்தார். தட்சிண பாரத இந்திப் பிரச்சார சபை ஊழியர்கள், அதன் தலைவரான மகாத்மா பிரார்த்தனைக் காந்திக்கு இந்தியில் ஒரு வரவேற்புரை வாசித் கூட்டம் தளித்தார்கள். ''சுமார் பதினெட்டு ஆண்டு களுக்கு முன் நீங்கள் நட்ட சிறு கன்று இப்போது பெரிய மரமாகி ஓங்கி வளர்ந்திருக்கிறது. எல்லாம் உங்கள் ஆசீர்வாதம்,'' என்று இந்திப் பிரச்சார வளர்ச்சியைப் பற்றி அதில் குறிப்பிடப் பெற்றிருந்தது. வரவேற்புரைக்கு மறுமொழி கூற காந்திஜிக்கு நேரம் இல்லாததால், அவர் நன்றி தெரிவித்துக்கொண்டு கையை

உயர்த்தி ஆசீர்வாதம் செய்தார். உடனே ராஜாஜி, மகாதேவ் தேசாய் ஆகியோருடன் தாம்பரம் இரயில் நிலையத்திற்குப் புறப்பட்டு விட்டார். இரயில் நிலையத் திற்குச் சுமார் இரண்டு மைல் தூரத்தில் காரிலிருந்து இறங்கி, காந்திஜியும் ராஜாஜியும் மகாதேவ் தேசாயும் நிலையம் வரை நடந்து சென்றார்கள். ஜமால் முகமது சாகிபும் சிறிது தூரம் அவர்களுடன் நடந்து போனார்.

இரயில் ஏறினர்

தாம்பரம் இரயில் நிலையத்தில் தம்மைக் காணவந்த கூட்டத்தில் சில குழந்தைகளும் இருப்பதைக் கண்ணுற்ற காந்திஜிக்கு ஒரு யோசனை தோன்றிற்று. தமக்காகத் திருமதி ஆர். வி. சாஸ்திரி ஒரு கூடை நிறையக் கொண்டு வந்திருந்த பழங் களை எடுத்து அவர்களுக்கு வழங்கினர். திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வந்தவுடன் அவருக்காக ஒதுக் கப்பெற்றிருந்த மூன்றாவது வகுப்புப் பெட்டியில் அவரும் அவர் குழுவினரும் ஏறிச் சென்றனர். இரயில்வே போக்கு வரத்து சூபரிண்டெண்டான பூர்ணையா இரயில் நிலையத் திற்கு வந்திருந்து மகாத்மா காந்தியை வசதியாக இரயில் ஏற்றி அனுப்பி வைத்தார்.

12-1-37

மதுரையில் கூட்டம்

1937 ஜனவரி 12-ஆம் தேதியன்று மதுரை இரயில் நிலையத்தில் விற்ற அளவு 'பிளாட்பாரம் டிக்கெட்டு'கள் அதற்கு முன்பு ஒருபோதும் விற்கப்படவில்லை. என். எம். ஆர். சுப்பராமன், ஜார்ஜ் ஜோசப், கிருஷ்ணசாமி பாரதி, பி. கே. இராமாச்சாரி, அகிலாண்டம்மாள் வைத்தியநாத ஐயர், பர்வதவர்த்தினி சுப்பராமன் முதலியோர் இரயில் நிலையத் திற்கு வந்து காந்திஜிக்கு மாலையிட்டனர். தம்மை வரவேற்க வந்தோரிடம் காந்திஜி அரிஜன நிதிக்குப் பணம் வசூல் செய்யத் தொடங்கிவிட்டார். அவருடைய பெட்டியின் வாசலில் நின்று அவர் அன்று இந்தியில் நிகழ்த்திய உரையை, அப்போது மதுரை நகராட்சித் தலைவராக இருந்த என். எம். ஆர். சுப்பராமன் தமிழில் மொழிபெயர்த்தார். ''நான் திருவனந்தபுரத்திற்கு யாத்திரை செல்கிறேன். அங்கு இந்து ஆலயங்களையெல்லாம் அரிஜனங்கள் உள்பட எல்லோ ருக்கும் மன்னர் திறந்து விட்டுவிட்டார். மதுரையிலும்

ஸ்ரீமீனாட்சியம்மன் ஆலயத்தில் அரிஜனங்கள் நுழைந்து வழி படட மக்கள் கருத்து உருவாக வேண்டும். நல்லெண்ணம் படைத்தவர்களெல்லாம் இதற்கு ஆவன செய்யவேண்டும்'' என்று காந்திஜி கூறினார். என். எம். ஆர். சுப்பராமனும் எல். கிருஷ்ணசாமி பாரதியும் விருதுநகர் வரை சென்று காந்திஜியை வழியனுப்பிவிட்டு வந்தார்கள்.

திண்டுக்கல், சோழவந்தான், திருமங்கலம் ஆகிய ஊர் களிலும் பெருங்கூட்டந்தான். (கோடைக்கானல் ரோடு இரயில் நிலையத்தில் கோம்பை மனிதாபிமானி சங்கச் செயலாளர் ஷர்குல் ஹமீதும் சி. பி. இராமச்சந்திரன், ஜி. கிருஷ்ணமூர்த்தி ஐயர் ஆகியோரும் மாலையிட்டு வரவேற்றனர்.

பிற இரயில் நிலையங்கள்

தென்காசி இரயில் நிலையத்திற்கு இரயில் வந்தபோது மக்கள் உரிமைக் கழகம், இந்தி வாலிபர் சங்கம் சார்பாக காந்தி ஜிக்கு வரவேற்புரைகள் அளிக்கப்பெற்றன. செங்கோட்டை நகராட்சித் தலைவரான என். கே. எஸ். கிருஷ்ணசாமி கரை யாளர் காந்திஜிக்கு மாலை அணிவித்தார். கிட்டப்பா விளை யாட்டு அரங்கின் சார்பாக ஆக்கூர் அனந்தாச்சாரியார் மாலை யிட்டார். சுப்பையா தலைமையின் கீழ் ஏராளமான அரிஜ னங்கள் வந்திருந்து காந்திஜிக்குப் பழங்களும் பூக்களும் அளித்தனர்.) திருவனந்தபுரம் சென்ற காந்திஜி அங்கு மேற்கொண்ட சுற்றுப்பயணத்தில் நாகர்கோவில், கன்னியா குமரிக்கு வந்து திரும்பி திருவாங்கூர் சமஸ்தான உள்பகுதி களுக்குச் சென்றார்.

14-1-37

காந்திஜி நாகர்கோவிலுக்கு வந்து சேர்ந்தபோது மாலை நேரம். முசாபரி பங்களாவுக்குச் சென்று அங்கு சுமார் ஒரு மணி நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டார்.

நாகர்கோவில் ஆலயம்

நாகர்கோவில் அரிஜன சேவா சங்கத் தலைவ ரான டாக்டர் நாயுடு, நகராட்சித் தலைவர் ஏ. சங்கரன் பிள்ளை ஆகியோரும் மற்றும் சில பிரமுகர்களும் அண்ணலுக்கு மாலையிட்டு வரவேற்றனர். அரிஜனத் தலைவர்களுடன் அண்ணல் சிறிது நேரம் உரை யாடிக் கொண்டிருந்தார். அதன் பின்னர் டாக்டர் நாயுடு, ஜி. இராமச்சந்திரன் ஆகியோருடன் நாகராஜசாமி ஆலயத் திற்குச் சென்று வழிபட்டார். சுசீந்திரம் உதவி தேவஸ்

தான ஆணையரான மகாதேவ ஐயரும் மற்றும் சில அதிகாரிகளும் காந்திஜியை வரவேற்றனர்.

நாகர்கோவிலில் அன்று எஸ். எல். பி. அரசாங்க ஆங்கில உயர்நிலைப் பள்ளியிலுள்ள பரந்த மைதானத்தில் பொதுக்கூட்டம் நடந்தது. மாவட்ட அதிகாரிகளும் சில ஐரோப்பியர்களுடன் கூட்டத்திற்கு வந்திருந்தனர். ஒரு பெரிய அதிசயம், காந்திஜியின் சொற்பொழிவு முடியும் வரை ஊசி விழுந்தால்கூட அதன் சத்தம் கேட்கும் அளவிற்குக் கூட்டத்தில் அமைதி நிலவியதாகும். ஒலிபெருக்கி சரியாக வேலை செய்யவில்லை. மொழிபெயர்ப்பும் மிகவும் சுருக்கமாயிருந்தது. ஆனாலும் கூட்டத்தில் இருந்தவர்கள் மிகவும் அமைதியாக இருந்தார்கள். (நகராட்சியின் சார்பாக அதன் உறுப்பினர் டாக்டர் வைத்தியநாத ஐயர் வரவேற்புரை வாசித்தளித்தார். மற்றொரு உறுப்பினரான கிருஷ்ணசாமி கதர்மாலை அணிவித்தார்.) இங்கு ஒரு வெள்ளித் தட்டில் பழங்கள் அளிக்கப்பெற்ற போது அவைகளை அரிஜனங்களுடன் பகிர்ந்துண்ணத் தாம் விரும்புவதாக அண்ணல் கூறினார். இந்திப் பிரசார சபையும் இந்திப் பிரேமி சபையும் தனித் தனியாக வரவேற்புரைகள் படித்துக் கொடுத்தது காந்திஜியின் மனதில் வியப்பை ஏற்படுத்தியது. அதை அவர் பொதுக்கூட்டத்திலும் கூறினார். பின்னர் விசாரித்ததில் இதில் தமிழ்ப் பிரிவு ஒன்று என்றும் மலையாளிகள் பிரிவு ஒன்று என்றும் தெரிந்ததாக ''மெயில்'' குறிப்பிட்டிருந்தது. (எம். சிவதாணுப் பிள்ளை தலைமையில் இந்திப் பிரேமி சபைத் தூதுக்குழு காந்திஜியைப் பேட்டிகான வந்தபோது இந்திப் பிரேமி சபை வேறு எந்த இந்தி சங்கத்திற்கும் போட்டியானதல்ல என்று கூறியது.) ''நாஞ்சில் நாடு சாம்பார்கள் சங்கம் நாங்கள் என்ன மட்டமா?'' என்று கேட்பதுபோல் ஒரு வரவேற்புரையை அளித்தது.

நாகர்கோவில் கூட்டம்

மன்னரின் பிரகடனத்தைப் பிரதானமாக வைத்தே அன்று அண்ணல் பேசினார். இந்தப் பிரகடனத்தின் மூலம் தீண்டாமை என்னும் நச்சு மரத்தின் ஆணிவேரையே மன்னர் அசைத்து விட்டதாகப் போற்றிப் புகழ்ந்தார். ''அரிஜனங்களை அனுமதியாததால் ஆலயங்களுக்கு நான் போவதில்லை. ஆனால் இப்போதோ திருவாங்கூருக்கு வந்ததிலிருந்து

இந்து சமயம்

ஆலயங்களுக்குச் செல்வதைத் தவிர வேறு வேலையே நான் செய்யவில்லை. இந்தப் பிரகடனம் இந்து மதத்தைத் தூய்மைப் படுத்தும் ஓர் இயக்கமாகும்.'' இவ்வாறு காந்திஜி கூறினார். கோவிலில் எவ்வாறு வழிபட வேண்டும் என்பதைச் சாதி இந்துக்கள் அரிஜனங்களுக்கு எடுத்துரைக்க வேண்டுமென்று அவர் ஒவ்வொரு கூட்டத்திலும் அறிவுரை கூறிக்கொண்டு வந்தார். நாகர்கோவிலிலிருந்து கன்யாகுமரிக்குச் சென்று காந்திஜி அங்கு ஓய்வு எடுத்துக்கொண்டார். இந்தச் சுற்றுப்பயணத்தில் அவருடன் வந்தவர்களில் அவருடைய செயலாளர்களைத் தவிர ராஜகுமாரி அமிர்தகௌரி, கேரள அரிஜன சேவக சங்கத் தலைவரான சங்கனாச்சேரி கே. பரமேசுவரன் பிள்ளை, செயலாளரான ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் முக்கியமானவர்களாவர்.

15–1–37

அம்மன் வழிபாடு

கன்னியாகுமரியில் அன்று நல்ல குளிர்ச்சியான காற்று வீசியது. காந்திஜி அமைதியாகத் தூங்கினார். அதிகாலையில் எழுந்து மற்ற வழக்கமான வேலைகளை எல்லாம் முடித்துக்கொண்டு, கடற்கரை ஓரமாக உலாவப்போனார். பயணத்தின் களைப்பெல்லாம் பறந்தோடி விட்டது போன்று உற்சாகமாகக் காணப்பட்டார். நாகர்கோவில் அரிஜன சேவக சங்கத்தின் பஜனை கோஷ்டி ஒன்று முன்னால் பாடிக் கொண்டு செல்ல, பின்னால் ஒரு பெரிய கூட்டம் வர காந்திஜி காலையில் ஆலய வழிபாட்டிற்குச் சென்றார். பஜனை பாடிக் கொண்டே காந்திஜி உள்பட எல்லோரும் கோவில் வெளிப் பிரகாரத்தைச் சுற்றிவிட்டுப் பிரதான வாசல் வழியாக ஆலயத்தினுள் நுழைந்தார்கள். இதற்கு முன்பு அவர் வந்தபோது காந்திஜியை ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் இக்கோவிலில் அனுமதிக்கவில்லை என்பதும் அதற்காக காந்திஜி வருந்தினார் என்பதும் தெரிந்ததே. இப்போதோ அறநிலைய உதவி ஆணையர் மகா தேவ ஐயர் தலைமையின் கீழ் அதிகாரிகளும் அர்ச்சகர்களும் வந்திருந்து அண்ணலைக் கோவில் மரியாதையுடன் அழைத்துச் சென்றார்கள். ஆலயத்தில் அம்மனுக்கு நன்கு அலங்காரம் செய்யப் பெற்றிருந்தது; ஆலயம் முழுதும் விளக்கொளி சுடர்விட்டுப் பிரகாசித்தது. கோவிலுக்குள் பிராமணர்

கள் எதுவரை செல்லலாமோ அதுவரை காந்திஜி சென்றார். இந்தச் சமயத்தில் காந்திஜிக்கு ஓர் ஐயம் தோன்றிவிட்டது. தம்முடன் வந்திருப்பவர்களில் யாரெல்லாம் அரிஜனங்கள் என்பது அவருக்குத் தெரியாது. ''இங்கே யாராவது அரிஜனங்கள் இருக்கிறார்களா?'' என்று அவர் கூட்டத்தினரைப் பார்த்துக் கேட்டார். அப்போது பஜனை கோஷ்டியைச் சேர்ந்தவர்கள், ''நாங்களெல்லாம் அரிஜனங்கள்தான்'' என்று சொன்னார்கள். காந்திஜி மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். இதன் பின்னர் மற்ற சன்னதிகளுக்கும் சென்று விட்டு அவர் வந்தபோது அங்குப் போடப் பெற்றிருந்த அற்புதமான கோலங்களை அவரிடம் காண்பித்தார்கள். பின்னர் விவேகானந்தா நூல் நிலையத்திற்குச் சென்று, அங்கிருந்த புத்தகங்கள் சிலவற்றைப் புரட்டிப் பார்த்து விட்டு, நூல் நிலையத்தார் சமய சம்பந்தமாக நல்ல இலக்கியங்கள் வைத்திருப்பதையும் நிலையத்தை நல்ல முறையில் பாதுகாத்து வருவதையும் பாராட்டி விட்டு வந்தார். இதற்குள் எட்டுமணியாகி விட்டது; காந்திஜியின் மௌனமும் தொடங்கியது. அன்று மாலை ஐந்து மணிக்குத்தான் மௌனம் கலைந்தது. பிறகு கன்னியாகுமரியிலிருந்து காந்திஜியும் அவர் குழுவினரும் சுசீந்திரம் வழியாகக் கொட்டாரத்திற்குப் புறப்பட்டு விட்டார்கள். இதுதான் நிலத்திரைக் கடல் ஓரத்திலே நித்தம் தவஞ்செய் குமரி எல்லைக்கு காந்திஜி கடைசி முறையாக வந்ததாகும். வழியில் தாமரைக்காடு என்ற கிராமத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் சேர்ந்த கிராம வாசிகள் ஈதன் காடு என்ற இடத்தில் காந்திஜிக்கு மாலை அணிவித்து வரவேற்றார்கள்.

சுசீந்திரம்

காந்திஜி சுசீந்திரம் வந்தபோது அங்குள்ள ஆங்கிலப் பள்ளியின் முன்னுள் உற்சாக மிகுந்த கூட்டத்தினர் அவருடைய காரை வழிமறித்து விட்டார்கள். பள்ளி நிருவாகி சுப்ரமணிய பிள்ளை காந்திஜிக்கு மாலை சூட்டினார்; பள்ளி நாட்குறிப்பில் காந்திஜி தம் பாராட்டுதலை எழுதினார். இந்தச் சுசீந்திரத்தில் தான் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஆலயங்களில் நுழைவதற்காகவும், ஏன், சில தெருக்கள் வழியாகச் செல்வதற்காகவும் கூட அறப்போர் நடத்த வேண்டியிருந்தது. ஆனால் இன்றோ அரிஜன பஜனைக்குழுவுடன் ஆலயத்திற்கு காந்திஜி சென்றார். தேவஸ்தான

அதிகாரிகள் அவரை வரவேற்று ஆலயத்தில் உள்ள அற்புத மான சிற்பங்களைக் காண்பித்தனர்; அண்ணலும் அவைகளை வியப்புடன் பார்த்து மகிழ்ந்தார். இதை முடித்துவிட்டு அவர் திருவனந்தபுரத்தை நோக்கி நாகர்கோவில் வழியாகச் சென்று கொண்டிருந்தபோது நேரம் இரவு 7-30 மணி.

21-1-37

இதற்குப்பின் திருவாங்கூரில் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு 20-ஆம் தேதி இரவு தான் காந்திஜி கொட்டாரக்கரைக்குத் திரும்பினர். மறுநாள் காலையில் அங்குள்ள கடல் மனைக்கால் மூர்த்தி நாராயண நம்பூதிரிபாட்டிற்குச் சொந்தமான திருக்கண்ண மனைக்கால் விஷ்ணு ஆலயத்தை அரிஜனங்களுக்கு அண்ணல் திறந்து வைத்தார். இங்கு, தம்மை அழைத்து விருந்தோம்பல் புரிந்ததற்காக திருவாங்கூர் மன்னருக்கும் மகாராணியாருக்கும் திவானுக்கும் காந்திஜி நன்றி தெரிவித்துக்கொண்டு இரயில் ஏறிச் சென்னைக்குப் புறப்பட்டார்.

பயணம் முடிந்தது

சென்னைக்கு காந்திஜி இரயிலில் வந்த வழியில் வழக்கம் போல இரயில் நிலையங்களிலெல்லாம் கூட்டம்தான். விருதுநகர், மதுரை, திண்டுக்கல் ஆகிய நகரங்களில் மற்ற இடங்களைக் காட்டிலும் அதிகக் கூட்டம் இருந்தது. திருமங்கலத்தில் இருந்த கூட்டத்தைப் பற்றி மகாதேவ தேசாயே கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார் ''அரிஜன்'' 13-2-1937) இதழில்.

வழியெல்லாம் கூட்டம்

''கட்டுப்பாடு இல்லாமல் சத்தம் போடுவதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த கூட்டத்தினருக்கு இணை இந்தியாவிலேயே கிடையாது. 'ஏன் இங்கே இவ்வளவு ஒழுங்கினம் இருக்கிறது?' என்று ஓர் இரயில் நிலையத்தில் அவர்களைப் பார்த்து நான் கேட்டேன். என்னுடைய கேள்வியைப் புரிந்துகொள்ளாமலே அவர்கள் சத்தம் போட்டார்கள். 'நாங்கள் ராஜாஜியின் ஆதரவாளர்கள். மகாத்மா எங்களுக்குத் தரிசனம் கொடுத்தாக வேண்டும்' என்றனர். மற்றொரு இரயில் நிலையத்தில் கூடியிருந்த கூட்டம், 'அவர் எழுந்துதான் ஆக வேண்டும். நாங்கள் நூறு முறை வந்தாலும் அவர் தரி

தமிழருக்கு இணை இல்லை

சனம் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.' என்று சத்த மிட்டது.

நல்ல நோக்கம்

''ஆனாலும் அவர்களுடைய நோக்கம் நல்ல நோக்கம் தான் என்பதைச் சந்தேகப்படுவதற்கில்லை. ஒரு சிறு இரயில் நிலையத்தில் (திருமங்கலத்தைத் தான் இங்கு தேசாய் குறிப்பிடுகிறார்) கூடியிருந்தவர்களில் ஒருவர் காந்திஜியின் நிதி வசூலுக்கு ஒரு தம்பிடி கொடுத்தார். 'இந்தத் தம்பிடியை யார் கொடுத்தது?' என்று காந்திஜி கேட்டார். அத்துடன் விட்டாரா? 'இதை நான் வரவேற்கிறேன். இந்தத் தம்பிடிக்குப் பெரும் முக்கியத்துவம் உண்டு. நான் இதை ஏலம் விடவேண்டும். வாருங்கள், இதை யார் ஏலம் கேட்பது?' என்றார். உடனே பலர் ஏலம் கேட்கத் தொடங்கி விட்டனர். ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், மூன்று, நான்கு, ஐந்து-கடைசியில் அந்தத் தம்பிடி ஐந்து ரூபாய்க்கு ஏலத்தில் போயிற்று. இதே போன்று ஏலம் விடவேண்டிய மற்றொரு தம்பிடி இருந்தது. அது ஒரு ரூபாய்க்கு ஏலத்தில் போயிற்று.

திருமதி கெய்த்தான்

''திருமங்கலத்தில் கூட்டம் கத்திக் கொண்டும் சத்தம் போட்டுக் கொண்டும் இருந்தபோது ஓர் ஐரோப்பிய மாது தம் இரண்டு தோள்களிலும் இரண்டு குழந்தைகளைச் சுமந்துகொண்டு கூட்டத்தின் இடையே முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்தார். அவர் இரயிலில் ஏறவரும் பிரயாணி என்று நான் கருதி அவருக்கு வழிவிடுமாறு கூட்டத்தினரைக் கேட்டுக் கொண்டேன். ஆனால் அவர்கள் வழிவிட விரும்ப வில்லை. விரும்பினாலும் ஒதுங்குவதற்கு ஓர் அங்குலம் இடம் கூடக் கிடையாது. அந்த அம்மையார் இவ்வாறு முண்டி யடித்துக் கொண்டு வந்தபோது அவருடைய குழந்தைகள் கதறிக் கொண்டிருந்தன. 'நான் உள்ளே வரவேண்டும்; தயவு செய்து குழந்தைகளை வாங்கிக் கொள்ளுங்கள்' என்று அந்த அம்மையார் எங்கள் பெட்டியின் அருகே வந்து கூறினார். காந்திஜி அந்த இரண்டு குழந்தைகளையும் வாங்கிக் கொண்டார். இந்த அம்மையாரை உள்ளே அனுமதிப்பதற் காக நாங்கள் பெட்டியைத் திறந்தோம். இரயில் புறப்படும் வரை அந்த அம்மையார் காந்திஜியைப் பார்க்க வந்த ஒரு நண்பர் என்பது எங்களுக்குத் தெரியாது. இரயில் புறப்பட்டு நாங்கள் ஒருவருக்கொருவர் பேசத் தொடங்கிய போது

அந்த அம்மையார் 'நான் தான் கெய்த்தானின் மனைவி' என்று சொன்னார். திரு. கெய்த்தான் சிறிது காலத்திற்கு முன்பு அமெரிக்க மிஷனில் இருந்தவர். தம்முடைய சுதந்திரமான கருத்துக்களுக்காக அவர் கஷ்டத்திற்குள்ளாக நேர்ந்தது. இன்றும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருடைய மனைவியார் இந்த அம்மையார்.

காசும் குழந்தைகளும்

''காந்திஜி அவரை அன்போடு வரவேற்றார். இதற்குள் நான்கே வயதான மூத்தபெண் காந்திஜியுடன் நட்போடு பழக ஆரம்பித்து விட்டது. ஆனால் அந்த இரு குழந்தைகளின் கவனமும் அவர்கள் முன்னால் குவிக்கப்பட்டிருந்த காசுகள் மீதே சென்றது. சின்னப் பையன் அக்காசுகளை எடுத்து விளையாடத் தொடங்கினான். உடனே அம்மையார் தம் பணப் பையிலிருந்து இரண்டு ரூபாய்களை எடுத்து அந்த இரண்டு குழந்தைகளிடமும் அளித்து குவியலில் போடுமாறு கூறியதும் அவர்கள் மகிழ்ச்சியுடன் அவ்வாறு செய்தார்கள்.

குழந்தையுடன் உரையாடல்

''இப்போது அந்தப் பெண் குழந்தை கேள்விக் கணைகளை ஏவத் தொடங்கிவிட்டது.'' அவர்களெல்லாம் 'இரயில் நிலையத்திற்கு ஏன் வந்தார்கள்? அவ்வளவு பெரிய கூட்டம் எதற்காக?' இந்தக் கேள்விக்கு அவர்களுடைய தாயார் எதிர்க் கேள்வி ஒன்று போட்டார்கள். 'நீ எதற்காக வந்தாய்?'

'காந்திஜியைப் பார்ப்பதற்காக' — குழந்தை பதில் கூறியது.

'அவர்களும் காந்திஜியைப் பார்க்கவே வந்தார்கள். அவர்கள் எல்லாம் காந்திஜியின் நண்பர்கள்.'

'ஆனால் அவர்கள் ஏன் அவருக்குப் பணம் கொடுத்தார்கள்?'

'நீ ஏன் எனக்குப் பணம் கொடுத்தாய்?' என்று காந்திஜி சிரித்துக் கொண்டே இடைமறித்துக் கேட்டார். 'நாங்கள் ஏழைகளுக்காகப் பணம் கொடுத்தோம்.' 'அவ்வாறு தான் மற்றவர்களும் செய்தார்கள்.'

மதுரையிலோ இரயில் நிலையத்தில் தாராளமாகப் பார்க்க முடிகிறதோ இல்லையோ என்று ஐயமுற்ற சிலர், திருப்பரங் குன்றத்திற்கே வந்து விட்டனர். மதுரை இரயில் நிலையத்தில் அந்நகரைச் சேர்ந்த தலைவர்கள் உள்பட ஆயிரக்கணக்கான பேர் கூடியிருந்தனர். ஒரு சிறிய காரியத்தையும் விவேகத்துடன் செய்தால் அது பலபேருக்கு எவ்வளவு பயனுள்ளதாய் இருக்கும் என்பதற்கு அன்று மதுரை இரயில் நிலையத்தில் தலைமை அதிகாரியாக இருந்த வீலர் செய்த காரியம் ஒரு சான்று. அந்தக் காலத்தில் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் முதல் பிளாட்பாரத்தில் நிற்பது வழக்கமில்லை. ஆனால் அன்று வந்திருந்த ஆயிரக் கணக்கான மக்கள் இரயில் நிலையப் பாலத்தில் மேலே ஏறி இறங்கும் வசதிக் குறைவைத் தவிர்க்கவும் அவர்கள் நன்கு காந்திஜியைக் காணவும் முதல் பிளாட்பாரத்தில் வடகோடியில் உள்ள திறந்து வெளிக்கு நேரே காந்திஜியின் பெட்டி இருக்குமாறு இரயில் நிற்க ஏற்பாடு செய்தார், அவர். இங்கு காந்திஜிக்கு அறிமுகப்படுத்தப் பெற்ற மாணவர்கள் சிலர், அவருக்குப் பழங்கள் வழங்கினர்.

அதிகாரி சமயோசிதம்

22–1–37

மதுராந்தகம் இரயில் நிலையத்தில் மகாத்மாவைக் காண நேரு இளைஞர் சங்கத்தைச் சேர்ந்த தொண்டர்கள் ஊர்வல மாக அணிவகுத்து வந்தார்கள். மதுராந்தகம் பொதுமக்களின் சார்பாக பிஸிரிலால் சர்க்கார் அரிஜன நிதிக்குப் பணமுடிப்பு அளித்தார். மாவட்டக் கழக உறுப்பினரான வி. ஏ. முனுசாமி ரெட்டியார் கதர்மாலை அணிவித்தார்.

மதுராந்தகம்

சென்னை வந்து சேர்ந்தவுடன் திருவாங்கூருக்கும் தமிழகத்திற்கும் உள்ள ஒரு முக்கியமான வேறுபாடு காந்திஜிக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிந்தது. ''திருவாங்கூரில் நான் மாபெரும் கூட்டங்களிலெல்லாம் பேசினேன். ஒரு தெய்வீக அமைதி அங்கு நிலவியது. ஆனால் இங்கு இந்தச் சிறு கூட்டத்தில் கூட அமைதியைக் காணோமே?'' என்று கோடம்பாக்கத்தில் மாலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் இருந்தவர்களைப் பார்த்து அவர் கேட்டார். கோடம்

ஒரு வேறுபாடு

பாக்கம் அரிஜன தொழிற்பயிற்சிப் பள்ளியில் அவர் தங்கினர். அந்தப் பள்ளியின் முன் நடைபெற்ற இந்தப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பிரார்த்தனையின் அவசியத்தை வலியுறுத்தி அவர் பேசினர். ''நீங்கள் சிறிது காலத்திற்கு மனப்பூர்வமாகப் பிரார்த்தனை செய்து கொண்டு வந்தால் என்னைப் போன்றே ஓர் உண்மையைக் காணுவீர்கள். நாளாக ஆக, 'உடலுக்கான உணவு இன்றியாவது சிறிது காலம் இருக்கமுடியும், ஆனால் உயிருக்கான உணவு இன்றி இருக்க முடியாது' என்பதைக் காணுவீர்கள்.''

சத்தியமூர்த்தி மகள்

இந்தக் கூட்டத்தின் இறுதியில், அரிஜன் தொழிற் பள்ளி நல்ல பயனுள்ள வேலைகள் செய்து கொண்டிருப்பதாகவும் அதற்குத் தாராளமாக நன்கொடை அளித்து உதவ வேண்டுமென்றும் மக்களை காந்திஜி கேட்டுக்கொள்ளவே, கூட்டத்திற்கு வந்திருந்தவர்கள் ரொக்கம், நகை, கடிகாரம், பவுண்டன் பேனா ஆகிய பொருள்களை அளித்து உதவினர்கள். பக்கத்தில் சத்தியமூர்த்தியின் மகளான திருமதி இலட்சுமி அமர்ந்திருந்தார். அவரை நோக்கி காந்திஜி வேடிக்கையாக, ''நீ என்ன கொடுக்கப் போகிறாய்?'' என்று கேட்டார். உடனே அந்த அம்மையார் தாம் அணிந்திருந்த இரண்டு வளையல்களைக் கழற்றி காந்திஜியிடம் கொடுத்து விட்டார்.

கோடம் பாக்கத்தில்

காந்திஜியைக் கோடம்பாக்கம் அரிஜன் கைத்தொழிற் பள்ளியில் முதன் முதலாக ராஜாஜியும் சத்தியமூர்த்தியும் சந்தித்துப் பேசினர்கள். கிறித்தவர்கள் மத மாற்றம் செய்வது குறித்தும், திருவாங்கூரில் மன்னர் பிரகடனத்திற்குப் பின்னர் இந்திய கிறித்தவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கை குறித்தும் ஏ.ஏ. பால், சுதர்சனம் ஆகிய கிறித்தவ பிரமுகர்கள் அவருடன் பேசினர்கள். மதமாற்றம் குறித்து காந்திஜி தம் கருத்து என்ன வென்பதை விளக்கியபோது, உலகிலுள்ள முக்கிய சமயங்களிடத்திலெல்லாம் ஒவ்வொரு வருக்கும் மதிப்பும் மரியாதையும் இருக்க வேண்டுமென்று காந்திஜி கூறியதுடன் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கோட்பாடு இந்து சமயத்தில் பொதிந்து கிடக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டினர். மலேயாவில் அப்போது தான் சுற்றுப் பயணம் செய்து திரும்பியிருந்த மகாகனம்

சீனிவாச சாஸ்திரி, பிற்பகலில் சந்தித்துத் தம் மலேய சுற்றுப்பயண அனுபவங்களை எடுத்துரைத்தார். மற்றும் சீதாதேவதாஸ், கே. சீனிவாசன், ஜமால் முகமது, சி. ஆர். சீனிவாசன், டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, ஜி. ஏ. நடேசன் ஆகியோரும் காந்திஜியைச் சந்தித்தார்கள்.

பந்துலு

தாம்பரத்திலிருந்து கோடம்பாக்கத்திற்கு வந்துகொண்டிருந்த வழியில், பல்லாவரத்தில் நாகேஸ்வரராவ் பந்துலுவின் இல்லத்திற்கு காந்திஜி சென்றார். பந்துலுவுடன் சிறிது நேரம் காந்திஜி உரையாடிக் கொண்டிருந்தார். அவர் தமக்கு அளித்த பழங்களைப் புன்னகையுடன் பெற்றுக்கொண்டு, ''பழங்கள் இருக்கட்டும், நோட்டு எங்கே?'' என்று வேடிக்கையாகவும் நயமாகவும் கேட்டார்.

மாணவர் கூட்டம்

அன்று கோடம்பாக்கம் அரிஜன தொழிற் பயிற்சிப் பள்ளியை அவர்சுற்றிப் பார்த்தபோது பள்ளியின் கூரையிலிருந்த ஓட்டடை அவருடைய கூர்மையான கண்களிலிருந்து தப்பிவிடவில்லை. இது மட்டுமல்லாமல் தரையிலும் குண்டு குழிகள் இருப்பதை அவர் கண்டுபிடித்துவிட்டார். அப்புறம் அவர் மாணவர்களை விடுவாரா? அன்று மாலை மாணவர்கள் மத்தியில் உரையாற்றியபோது, இதைப் பற்றிக் குறிப்பிட்டார். சொல்லப் போனால் அந்தப் பேச்சே இதைத்தான் சுற்றிச் சுற்றி வளைந்து கொண்டிருந்தது. ''உங்களுடைய கல்வி நிலையத்தை நீங்கள் எவ்வளவு தூய்மையாக வைத்துக் கொள்கிறீர்களோ அதிலிருந்து உங்களுடைய விவேகம் தெரியவரும்,'' என்றார் அவர். அப்பள்ளியில் நூற்போ நெசவோ நடைபெறுமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி இவ் விரண்டையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார். ஜயந்திபாய் என்ற பெண் அவரிடம் ஐந்து ரூபாய் கொடுத்துத் தம் குறிப்புப் புத்தகத்தில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்குமாறு கேட்டாள். அந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்த காந்திஜி அதில் தம் மனைவியின் (கஸ்தூரிபாவின்) கையொப்பம் இருப்பதைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தார். ''என் மனைவி கையெழுத்துக்குப் பிறகு என் கையெழுத்தா? இது எனக்குப் பெருமையே. ஆனாலும் அதற்கு நீ கொடுத்த ஐந்து ரூபாய் போதாது. பத்து ரூபாய் கொடுக்க வேண்டும்'' என்றார் அண்ணல். உடனே அந்தப் பெண் இன்னொரு ஐந்து ரூபா

யைக் கொடுத்துக் கையெழுத்தைப் பெற்றுக்கொண்டாள். தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபை மாணவர்கள் அவருக்கு ஒரு வரவேற்புரை வாசித்தளித்தார்கள். அதற்கு மறுமொழி கூற அவருக்கு நேரமில்லை. ஆகையால் ஆசியை மட்டும் தெரிவித்துக் கொண்டு பிராத்தனைக் கூட்டத்திற்குப் புறப்பட்டு விட்டார். பிரார்த்தனைக் கூட்டம் முடிந்தபின் இரயில் நிலையத்திற்கு விரைந்தார்.

புறப்பாடு

புனிதமான அந்த யாத்திரையை முடித்துக்கொண்டு, வழக்கமான தம் பணியை மேற்கொள்ளப் புறப்பட்டார் காந்தி மகான். இன்னலுறுவோர் கண்ணீரைத் துடைக்கும் கர்மயோகம் அன்றே அவருடைய தலையாய பணி. ஆந்திராவில் குண்டூர்ப் பகுதி அப்போது புயலினால் கடுஞ் சேதமடைந்திருந்தது. ஆகவே புயலால் பாதிக்கப்பெற்ற பகுதிகளைப் பார்வையிடுவதற்காக அவர் செண்டிரல் இரயில் நிலையத்தில் மூன்றும் வகுப்புப் பெட்டியில் ஏறினார். வழக்கம் போல், தலைவர்களும் ஆயிரக்கணக்கான பொது மக்களும் இரயில்வே நிலையத்திற்கு வந்திருந்து ''காந்திஜிக்கு ஜே'' என்று முழக்கமிட்டு அண்ணலைப் பிரிய மனமில்லாது பிரியா விடை கொடுத்து அனுப்பினர். குண்டூரிலிருந்து அவர் சேவாகிராமம் சென்றார்.

—oo—

பொதுத் தேர்தல்களின் முடிவுகள் 1937 பிப்ரவரி மாதம் வெளியாயின. (பிரிவினை செய்யப் பெறுத): இந்தியாவில் அப்போதிருந்த பதினேழு மாநிலங்களில் ஆறில் காங்கிரஸ் முழுப் பெரும்பான்மை அடைந்தது, பெரும்பான்மை பெற்ற ஆறுமாநிலங்களிலுமே சென்னையின் வெற்றி தனிப்படக் குறிப்பிட வேண்டியதொன்றுகும். 1922-இலிருந்து சட்டசபை தொடர்ந்து எந்தக் கட்சியின் கையில் இருந்து வந்ததோ அந்த ஜஸ்டிஸ் கட்சி இந்தத் தேர்தலில் 21 இடங்களைத்தான் பெறமுடிந்தது; காங்கிரசுக்குக் கிடைத்ததோ 159 இடங்கள்.

தேர்தல் முடிவுகள்

சட்டசபை	
காங்கிரஸ்	159
ஜஸ்டிஸ்	21
சுயேச்சை	15
முஸ்லிம் லீக்	9
ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர்	9
முஸ்லிம் முன்னேற்ற வாதிகள் கட்சி	1
மக்கள் கட்சி	1
ஆக மொத்தம்	215

தேர்தல்களின் முடிவைப்பற்றி, வர்தாவில் கூடி ஆராய்ந்து, சட்டசபைகளில் காங்கிரசின் கொள்கை என்ன வாக இருக்கவேண்டும் என்பதை முடிவு செய்த காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் காந்திஜியும் பங்கு கொண்டார். ஆனலும் ''அரிஜன்'' பத்திரிகையில் அப்போதும் அவர் அரசியலைப் பற்றி எதுவும் எழுதவில்லை. மார்ச் மாதம் மூன்றுவது வாரத்தில் டில்லியில் கூடிய அனைத்து இந்தியக்

சமரசத் திட்டம்

காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கவர்னர் தம் விசேட குறுக்கீட்டு அதிகாரங்களைப் பயன்படுத்தமாட்டார் என்பதில் சட்டசபைக் காங்கிரஸ் கட்சித் தலைவருக்கு மனநிறைவு ஏற்பட்டால், காங்கிரஸ் பெரும்பான்மையாக இருக்கும் மாநிலங்களில் அது பதவி ஏற்கலாம் என்று அண்ணல் கொண்டு வந்த சமரச உடன்பாட்டுத் திட்டம் நிறை வேறியது. இதற்கு அடுத்தவாரம்தான், சென்னையில் நடை பெற்ற இந்தி சாகித்திய சம்மேளனக் கூட்டத்திற்காக அவர் சென்னைக்கு வந்தார். இதுதான் சென்னையில் நடைபெற்ற முதல் இந்தி சாகித்திய சம்மேளனம்.

26-3-37

அண்ணல் வருவார், வருவாரென்று அன்று வழிமேல் விழி வைத்து சென்னை சென்டிரல் இரயில் நிலையத்தில் காத்துக்கொண்டிருந்த பொது மக்களுக்குப் பெரிய ஏமாற்றமாகப் போயிற்று. சென்டிரல் இரயில் நிலையத்தின் வெளிச்சுற்றில் கார்கள் வெளியே போகும் இடத்தில் அலங்காரமான பந்தல் போட்டு, வரவேற்பு வாசகங்களை ஒட்டி, சி. வி. இராமன் மனைவியாராகிய லேடி இராமன், அம்புஜம்மாள், சென்னை மேயர் கே. ஸ்ரீராமுலு நாயுடு முதலியோரும் தொண்டர்களும் கதர், மற்றும் மலர் மாலைகளை வைத்துக் காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அவர் வந்த கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ் சென்டிரல் இரயில் நிலையத்தை வந்தடைவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்னர் காந்திஜி பொன்னேரியில் இறங்கிவிட்டதாக, இரயில் நிலைய அதிகாரி அறிவித்தார். சென்டிரல் இரயில் நிலையத்தில் வந்து இறங்கினால் அளவுக்கு மீறிய கூட்டத்தில் அவர் இடிபட நேரிடுமென்று கருதிய ராஜாஜி, பொன்னேரிக்குச் சென்று அவரை அழைத்துக்கொண்டு போய்விட்டார். ஆனால் அந்தப் பொன்னேரி இரயில் நிலையத்திலும் காந்திஜி இருந்த பெட்டியை ராஜாஜி நெருங்க முடியாத அளவுக்குக் கூட்டங் கூடி விட்டது. அங்கு ஒரே ஒரு போலீஸ்காரர் மட்டுந்தான் நின்று கொண்டிருந்தார். அவரால் எதுவுமே செய்யமுடிய வில்லை. கடைசியில் மிகவும் சிரமப்பட்டுக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு ராஜாஜி பெட்டியில் ஏறி காந்திஜியின் சாமான்களை எடுத்துக்கொண்டு இறங்குவதற்காகக் கதவோ ரம் வந்தபோது, இரயில் புறப்பட்டுவிட்டது. ராஜாஜி

மக்களுக்கு ஏமாற்றம்

அவசர அவசரமாகக் கையைக் காண்பித்து இரயிலை நிறுத்தச் சொன்னார். இரயில் நின்றபின் காந்திஜி ஒரு கதர்ப்பையை எடுத்துக்கொண்டு ராஜாஜியுடன் இறங்கி வெளியில் நின்ற காரில் ஏறி மாம்பலத்திற்கு விரைந்தார். மாம்பலத்தில் வி. பாஷ்யம் ஐயங்கார், பண்டித ஹரிஹர சர்மா, டி. பிரகாசம், கே. பாஷ்யம் முதலியோர் இருந்து காந்தி ஜியை வரவேற்றார்கள்.

வரவேற்பு பாவுக்கு

சென்டிரல் இரயில் நிலையத்தில் இறங்கிய கஸ்தூரிபாய் காந்திக்கும் ஜம்னலால் பஜாஜுக்கும் காந்திஜிக்குக் கிடைக்க வேண்டிய வரவேற்பெல்லாம் சேர்த்துக் கிடைத்தது. அலங்கரிக்கப் பெற்ற ஒரு காரில் அவர்கள் சிறிது தூரம் அழைத்துச் செல்லப் பெற்று அங்கிருந்து மாம்பலம் சென்றனர்.

ஒரே 'கூட்ட'மயம்

காந்திஜி சென்னைக்கு வந்தது, அன்று மாலை மாம்பலத்தில் நடைபெற்ற தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபையின் பட்டமளிப்பு விழாவிற்காகவும் இந்தி சாகித்திய சம்மேளனத்திற்காகவும் தான். இந்தி பேசாத மக்கள் வாழும் பகுதியாகிய சென்னையில் முதல் முதலாக அப்போது தான் இந்தி சாகித்திய சம்மேளனம் கூடியது. சம்மேளன வரவேற்புக் குழுவின் தலைவியாக, லேடி ராமன் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தாராதலால் அவர் பெங்களூரிலிருந்து இதற்காகச் சென்னைக்கு வந்திருந்தார். இது தவிர பாரதீய சாகித்திய பரிஷத் கூட்டமும் அப்போது நடைபெற்றது. இவைகள் எல்லாவற்றையும் தவிர, திருமதி கஸ்தூரிபா காந்தி தலைமையின் கீழ் மாதர்கள் மாநாடு ஒன்றும் மற்றும் பொதுவான சில மாநாடுகளும் நடைபெற்றன. முக்கியமான சஞ்சிகைகள், நாளிதழ்கள், நூல்கள், கையேட்டுப் பிரதிகள் ஆகியவை சூழக் கொண்ட ஒரு கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப் பெற்றிருந்தது. ஆகவே காந்திஜி இங்குத் தங்கியிருந்த நான்கு, ஐந்து நாட்களிலும் நகரில் இருந்த கலகலப்பிற்குக் கேட்கவா வேண்டும்?

பட்டமளிப்பு விழாப் பேருரையே கிண்டலுங்கேலியுமாகத் தான் தொடங்கியது. இத்தனைக்கும் அவர் உரையின் தொடக்கத்தில் போட்டோ எடுத்தவர்கள் அளித்த தொந்

தரவு தாளாது காந்திஜிக்குக் கோபமே வந்துவிட்டது. மகாத்மாஜியின் கோபத்தைப் பார்த்தவர்களுக்குச் ''சாது மிரண்டால் காடு கொள்ளாது'' என்ற பழ மொழி தான் நினைவிற்கு வந்திருக்கும்.

பட்டமளிப்பு விழா

''நீங்கள் எல்லோரும் என்னுடைய அஹிம்சையைத் தவறுகப் பயன்படுத்துகிறீர்கள்; இங்கேயிருந்து ஒருவர் தவறுமல் எல்லாப் போட்டோ கிராபர்களும் போய்விட வேண்டும்'' என்று அவர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார். அனைத்திந்திய இந்தி சாகித்திய சம்மேளனத் திற்காக இந்திப் பிரச்சார சபை முன்னுல் போடப்பெற் றிருந்த பெரிய பந்தலில் பட்டமளிப்பு விழா நடைபெற்றது.

கிண்டலுக்குப் பலி

காந்திஜியின் கிண்டலுக்கு முதலில் பலியானவர் ஜி. ஏ. நடேசன் ஆவார். காந்திஜி அன்று இந்தியில் பேசினர். அவர் தம் சொற்பொழிவைத் தொடங்குவதற்கு முன் ''இங்கு நான் பேசும் இந்தியைப் புரிந்து கொள்ளக் கூடியவர்கள் தயவு செய்து கையைத் தூக்குங்கள்'' என்று சொன்னர். பலர் கையைத் தூக்கினர்கள். புரிந்து கொள்ள முடியாதவர்களைக் கையைத் தூக்குமாறு சொன் னர். ஒரு சிலர் கையைத் தூக்கினர்கள். இவர்களை ஒவ்வொருவராக காந்திஜி கவனித்துப் பார்த்துக்கொண்டு வந்தார். அவர்களில் ஜி. ஏ. நடேசனும் இருந்தார். காந்திஜி பார்க்கும் வரை அவர் உயர்த்திய கையைக் கீழே போடவில்லை. காந்திஜி உடனே ''வெட்கம் வெட்கம்,'' என்று கூவினரே பார்க்கலாம். உடனே ஜி. ஏ. நடேசன் எழுந்து நின்று, ''ஆம், வெட்கந்தான்'' என்று ஒப்புக் கொண்டார். பின்னுல் தம் உரையிலும் காந்திஜி இதைப் பற்றிக் குறிப்பிட்டார். ''நான் யாரைப் பார்த்து 'வெட்கம்' 'வெட்கம்' என்று கூவினேன் தெரியுமோ? என்னுடைய நண்பர் ஜி. ஏ. நடேசனைப் பார்த்துத்தான்'' என்றார். அடித்தபடியாக காந்திஜியின் கேலிக்கைக்கு இலக்கான வர்கள் (இந்திப்) பட்டதாரிகள்.

இந்தி கற்பதன் அவசியம் என்னவென்பதையே முதலில் காந்திஜி எடுத்துக்கொண்டார். இந்திக்கு எதிராகக் கூறப் பட்ட மறுப்புக்களுக்கும் அவர் மறுமொழி கூறினர். 1. இந்தியைக் கற்பது வட்டார மொழிகளுக்குக் கேடாக முடியும் என்று சிலர் கருதுவது தவறு; ஏனென்றால் ஒரு

தேசிய மொழியின் வளர்ச்சிக்கு வட்டார மொழிகள் அடித்தளம் போன்றவை; வட்டார மொழிகளை அழித்து விட்டுத் தேசிய மொழி வளர முடியாது.

இந்தியின் அவசியம்

2. இந்தி தவிர வேறு எந்த மொழியாவது தேசிய மொழியாகத் தகுதி வாய்ந்ததாக இருக்கிறதா என்று நான் ஆராய்ந்தேன். இறுதியில் இந்தி தவிர வேறு எந்த மொழிக்கும் தேசிய மொழியாகும் உரிமை இல்லை என்ற முடிவுக்கு வந்தேன் என்றார்.

பின்னர், தாம் தமிழ் கற்றுக்கொள்ள முயன்று தோற்ற கதையைச் சொன்னார். ''என்னுடைய முயற்சிக்கு நான் பாதி காரணம்; என் தமிழன்பர்கள் பாதி காரணம். நான் தெரிந்து வைத்திருந்த தமிழாவது மறக்காதிருக்கும்படி செய்ய யாரும் முயன்று முன்வரவில்லை. என்னுடைய மருமகளே முன்வரவில்லை. இலட்சுமி தன்னுடைய கணவனுக்குக் கூடத் தமிழ் கற்பிக்கவில்லை என்பதைச் சில நாட்களுக்கு முன்னர்தான் நான் தெரிந்து கொண்டேன். இம்மாதிரி தமிழ்ப் பெண்கள் கூடத் தங்களுடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டபடியால் தான் பிறமாநிலங்களில் தமிழ் பரவவில்லை'''' என்றார் அவர்.

தமிழ் பரவாததேன்?

27–3–37

பாரதீய சாகித்திய பரிஷத் நாகபுரியில் தொடங்கியதன் பின் அதன் இரண்டாவது கூட்டம் சென்னையில் நடைபெற்றது. காந்திஜியே கூறியதுபோன்று இந்தியாவில் ஒவ்வொரு மொழியிலும் உள்ள சிறந்த கருவூலங்களைப் பொறுக்கி இந்தியின் மூலம் நாட்டில் பரப்ப வேண்டுமென்பதுதான் பரிஷத்தின் நோக்கமாகும். சென்னையில் பரிஷத் கூட்டத்திற்கு மிகவும் பொருத்தமாக, மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் வரவேற்புக் குழுத் தலைவராய் இருந்தார்; மறுநாள் பரிஷத்தின் கூட்டம் காலையில் நடைபெற்ற போது. ''உலகத்துப் பேரறிஞர்களால் புகழப்பெற்றவரும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரும் ஆகிய மகாத்மா காந்தியடிகளின் அன்பினால் உண்டான இந்த மகா சபையில் நானும் கலந்துகொள்ளும்படி நேர்ந்த இந்த நாளை என் வாழ்க்கையின் சிறந்த நாளாக எண்ணுகிறேன் என்று

உ. வே. சாமி நாத ஐயர்

தமிழ்த் தாத்தா காந்தித்தாத்தாவைப் போற்றிக் கூறினர். அவருடைய வரவேற்புரை முழுவதும் தமிழிலேயே இருந்தது. இந்தியைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் ''நம் முடைய பொதுப் பாஷையாக இந்தியை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இந்தியாவிலுள்ள பல பாஷைகளிலும் இது பொதுவாக இந்தியாவிற்கே உரியதென்பதை இதன் பெயரமைதியே குறிக்கின்றது'', என்று சொன்னர்.

மகாத்மாவின் தலைமை உரை இந்தியில் இருந்தது. ஒரு புரட்சிகரமான கருத்தை காந்திஜி இங்கு வலியுறுத்திப் பேசினர். எல்லா மொழிகளுக்கும் பொது வான ஓர் எழுத்து வடிவம் இருக்கவேண்டும் என்றும் இதற்கு மிகவும் தகுதியானது நாகரி எழுத்து வடிவமே என்றும் அவர் சொன்னர். மக்களின் அப்போதைய எழுத்தறிவின்மை இதற்கு ஒரு சாதகம் என்பதை எடுத்துக் கூறி விளக்கினர். உதாரணத் திற்குத் தமிழகத்தை எடுத்துக் கொண்டார். ''தமிழகத் தில் 100-க்குத் 93 பேர் படியாதவர்கள். ஏழே பேர் படித் தவர்கள். ஆகையால் மீதி 93 பேருக்கும் எழுத்தறிவு அளிக்கும்போது அதை நாகரி எழுத்தாகவே அளித்து விட்டால் ஒருவிதச் சிரமமும் இருக்காதே?'' என்று அவர் கேட்டார். இவ்வாறு தாம் யோசனை கூறும்போது தமக் குத் தமிழிடம் ஓரவஞ்சகமோ இந்தியிடம் ஒரு சார்பான தனிப் பாசமோ இருப்பதாகக் கருதிவிட வேண்டாம் என்றும் அவர் எச்சரித்தார். தமிழ் எழுத்துடனேயே நாகரி எழுத்திற்கும் ஒரு வாய்ப்பு அளிக்கலாம் என்று அவர் யோசனை சொன்னர்.

இந்தக் கருத்திற்கு அன்று பிற்பகலில் லேடி இரர்மன் பதில் அளித்துவிட்டார். இந்தி சாகித்திய சம்மேளனத் தின் தொடக்கக் கூட்டத்தில் அவர் நிகழ்த்திய வரவேற்புரையில், ''இந்தோ - ஆரிய மொழி களுக்கு ஒரே எழுத்து இருக்கலாம். ஆனால் அதைத் திராவிட மொழிகளுக்கும் விரிவு படுத்த வேண்டாம். அநேக தமிழ் எழுத்துக்களை நாகரி எழுத்தில் எழுத முடியாது. தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் இது ஓரளவு வெற்றி பெற்றாலும் பெறலாம், ஆனால் தமிழில் வெற்றிபெற முடியாது. மேலும் என்னைப் பொருத்தவரை, இது பயனுள்ளது தானா என்ற ஐயப்பாடும்

லேடி இராமன் மறுப்பு

எனக்குண்டு. நம்முடைய எழுத்து வடிவங்களை ஒருபோதும் விட்டு விடக் கூடாது என்பதுதான் என் சொந்தக் கருத்து'' என்று அவர் சொன்னார்.

சாகித்திய சம்மேளனம்

இதை அவர் சொன்னபோது காந்திஜியும் அன்று மேடையில் அமர்ந்திருந்தார். இந்தக் கூட்டத்திற்கு ஜம்னுலால் பஜாஜ் தலைமை வகித்தார். இந்தியைப் பொருத்தவரை லேடி இராம னுடைய கருத்து மிகவுந் தெளிவாக இருந்தது. ''நம் பொது மொழித் தேவையை ஆங்கி லமே நிறைவு செய்துவிடும் என்றும் இந்தி அவசியமில்லா தது என்றும் படித்த விவேகிகள் சிலர் கூறுகிறார்கள். ஆனால் இந்தியா என்ற நாடு அதனுடைய ஒரு சில நகரங்களில் இல்லை, எண்ணற்ற கிராமங்களிலேயே இருக்கிறது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர்'' என்று லேடி இராமன் சொன்னார்.

சட்டசபை உறுப்பினர்

அன்று மாலை காங்கிரஸ் சட்டசபை, மேல் சபை உறுப் பினர்கள் சுமார் முப்பது பேர் காந்திஜியைச் சந்தித்து, சென்னை மாநிலத்தில் இந்தியைப் பரப்புவதற் குத் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என் பதைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பின் போது ராஜாஜி, பிரகாசம் ஆகிய தலைவர்களும் இருந்தார்கள்.

அலுவல் மயம்

அன்று முழுவதும் காந்திஜியின் அலுவல்களெல்லாம் இந்திப் பிரசார சபைக் கட்டிடச் சுற்றுச் சுவருக்குள்ளேயே இருந்தன. அவர் வெளியே எங்கும் போக வில்லை. காலையில் அவருடைய வழக்கமான பிரார்த்தனையும் மற்ற அலுவல்களும் முடிந்த பின் பிரதிநிதிகளும் மற்றும் பலரும் அவரை வந்து சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தனர். பத்து மணி வரை பரிஷத் கூட்டத்தில் கலந்து கொண்டார். திருப்பித் தங்கியிருந்த இடத்திற்கு வந்தபோதோ அவரைப் பார்க்கப் பலர் வந்திருந்தார்கள். அவர்களை அனுப்ப அரை மணி நேரமாயிற்று. அதன்பின் காலை உணவை உண்டு சுமார் பன்னிரண்டு மணிக்கு ஓய்வெடுக்கப் போனபோது ஒரு முக்கிய அலுவலாக ராஜாஜி வந்துவிட்டார். அவருடன் சுமார் இருபது நிமிடம் கலந்து பேசி அவரை அனுப்பிவிட்டு,

இந்தி சாகித்திய சம்மேளனக் கூட்டத்திற்குச் சென்றவர் பிற்பகல் 3 மணிக்குத் தான் இருப்பிடத்திற்குத் திரும்பி வந்தார்.

கோகுலம் அரிஜன் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் பி. என். சங்கரநாராயண ஐயர் தலைமையின் கீழ் காந்திஜியைச் சந்தித்து, தங்கள் குடியிருப்பைச் சேர்ந்த பலர் கிராமப் பகுதிகளுக்குச் சென்று வளர்ச்சிப் பணியில் ஈடுபடப் போவதாகவும் இதற்காகச் சில கிராமங்களைத் தேர்ந்தெடுத்துள்ளதாகவும் சொன்னார்கள். இதைக் கேட்டு காந்திஜி மகிழ்ச்சி அடைந்தார். அதேசமயம், அக்குழுவில் பெண்களில் சிலர் நகைகள் அணிந்திருப்பதைப் பார்த்தார். ''நீங்கள் நகைகள் அணிந்து அழகுபடுத்திக்கொள்ள வேண்டியது அவசியமில்லை. புற அழகைக் காட்டிலும் அக அழகை வளர்ப்பதில் பெருமை கொள்ளுங்கள்'' என்று அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

பெண்களுக்கு அறிவுரை

இந்தி சம்மேளனத்தை யொட்டி மாதர்கள் மாநாடு ஒன்று கஸ்தூரிபா காந்தி தலைமையில் பிற்பகலில் நடைபெற்றது. அம்புஜம்மாள், லீலாவதி முன்ஷி ஆகியோர் இம்மாநாட்டில் பேசினார்கள். தலைமை வகித்த கஸ்தூரிபா காந்தி தம் தலைமை உரையில், ''சென்னை மாநிலத்தில் எல்லோரும் ஆங்கில மோகம் உள்ளவர்களாகத்தான் இருப்பார்கள் என்று இதுவரை நான் எண்ணி வந்தேன். ஆனால் இப்போதோ என் கருத்துச் சரியல்ல வென்பதை நான் உணருகிறேன்,'' என்று கூறினார்.

கஸ்தூரிபா கருத்து

மறுநாள் அதிகாலை தியாகராயநகர் இந்திப் பிரச்சார சபையிலிருந்து புறப்பட்டுக் கோடம்பாக்கம் அரிஜன தொழிற்பள்ளிக்கு காந்திஜி நடந்து சென்றார். நாற்பதே நிமிடங்களில் அவர் பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்து விட்டார். அவருடன் திவான் பகதூர் பாஷ்யம் ஐயங்காரும், பி. ஜகன்னாத தாஸ், எம். பாபினீடு ஆகியோரும் சென்றார்கள். காந்திஜி இங்கு வருவது எவ்வளவோ இரகசியமாக வைக்கப்பெற்றிருந்தும் எப்படியோ பல பேருக்குத் தெரிந்து விட்டது. காந்திஜி இங்கு வந்தபோது, பள்ளி

நடந்து போனார்

வாயிலில் நூற்றுக் கணக்கான மக்கள் நின்று கொண் டிருந்தனர். அவர்களிடம் காந்திஜி, ''இந்தப் பள்ளியின் உதவிக்காக ஏதாவது பணம் கொடுங்கள்'' என்று கேட்டு அங்கேயே சுமார் இருபத்தைந்து ரூபாய் வசூல் செய்து கொடுத்தார்.

கைத்தொழிற் பள்ளியில் பிள்ளைகள் வேலை செய்ததை காந்திஜி பார்வையிட்டார். தச்சுவேலை, பிரம்புவேலை, தகரவேலை...எல்லா வேலைகளையும் அவர் பிள்ளைகளின் பார்வையிட்டபின், பிள்ளைகளுக்கு ஏதாவது குறைகள் குறைகள் இருந்தால் அவைகளைத் தமக்குத் தெரிவிக்கலாம் என்று சொன்னார். சில மாணவர்கள் தங்களுடைய குறைகளைத் தெரிவித்தனர்.

ஒரு பையன் : ஆண்டிற்கு ஒரு முறை விடுமுறை கொடுக்க வேண்டும்.

காந்திஜி : இது உன்னுடைய இல்லந்தான். வேலையைக் கற்பதில் தான் உன் கவனம் இருக்கவேண்டும். எல்லா வற்றையும் கற்ற பின்பு தான் வீடு செல்லவேண்டும்.

இதன் பின் கோகுலத்தைச் சேர்ந்த பையன்களும் பெண்களும் பஜனை பாடினர். காந்திஜியைப் பார்ப்பதற் காகப் பெரம்பூர் அரிஜன விடுதியிலிருந்து வந்திருந்த மாண வர்கள் அவருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர். கோடம் பாக்கத்திலிருந்து தாம் தங்கியிருந்த குடியிருப்பிற்கு வந்த வுடன் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஊழிய ரான இரர்மலிங்கத்திற்கு காந்திஜி பேட்டியளித்தார்.

அன்று இந்தி சாகித்திய சம்மேளனக் கூட்டத்தில், காங் கிரஸ் குழுக் கூட்ட நடவடிக்கைகளை இனி இந்தி - இந்துஸ் தானியிலேயே நடத்த வேண்டுமென்று காங்கி காங்கிரஸ் ரஸ் செயற் குழுவைக் கேட்டுக்கொண்ட நடவடிக்கை வரலாற்று முக்கியத்துவம் மிக்க தீர்மானத்தை காந்திஜி ஆதரவுடன் ராஜாஜி கொண்டு வந்தார். கூட்டத்தில் தீர்மானம் நிறைவேறியது.

மறுநாள் காந்திஜிக்கு மௌன நாளாகையால், அன்று காந்திஜி நள்ளிரவு வரை விழித்து, தட்சிண பாரத் இந்திப் பிரசார சபையைச் சேர்ந்தவர்களையும் தலைவர்களையும்

சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார். தட்சிண பாரத் இந்திப் பிரசார சபைக் கூட்டம் இரவு 9-30 மணிக்குத் தொடங்கி 11-30 மணிக்குத்தான் முடிந்தது. சில ஐரோப்

இந்தி ஆசிரியர்கள்

பியர்களும் காந்திஜியைச் சந்தித்துப் பேசினர்கள். இந்தி ஆசிரியர்களின் ஊதியத்தை மாதம் இருபது ரூபாயாகச் சென்னை அரசு நிர்ணயித்திருப்பது போதாதென்றும் மற்றப் பண்டிதர்களுக்குச் சமமாக அவர்களுடைய ஊதியம் இருக்க வேண்டுமென்றும் இந்திப் பிரச்சார சபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அன்று இரவு பிரார்த்தனைக் கூட்டம் முடிந்தபின், செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தபோது, ''ஒரே எழுத்து வடிவம் எல்லா மொழிகளுக்கும்

காந்திஜி விளக்கம்

இருக்க வேண்டுமென்று நான் கூறும்போது எந்த மொழியின் வளர்ச்சியாவது தடைப் பட வேண்டுமென்ற எண்ணம் எனக்குக் சிஞ்சிற்றுங் கிடையாது'' என்று அவர் சொன்னார். கதர் மீது மக்கள் கொண்டிருந்த ஆர்வம் குறைவதுபோல் தமக்குத் தோன்றுகிறதென்றும் ஆனால் மற்றொருபுறம் கதரின் விற்பனை கூடிவருவதால், இக் கருத்தை வெளியிடத் தாம் தயங்குவதாகவும் அவர் சொன்னது உண்மையிலேயே பலருக்கு வியப்பூட்டுவதாய் இருந்தது. இந்தப் பேட்டியின்போது காந்திஜி தற் செயலாகக் கூறிய ஒரு செய்தி அப்போது செய்தியாளர்களையும் வியப்பில் ஆழ்த்தியது. ''இதுவரை நான் இரண்டே இரண்டு முறைதான் மருந்து சாப்பிட்டிருக்கிறேன்'' என்று அவர் சொன்னார்!

30-3-37

நேரடியாக அரசியலில் ஈடுபடுவதில்லையென்று தமக்குத் தாமே முடிவு செய்து வைத்திருந்த காந்திஜி, கடைசியில் நேரடி அரசியலில் ஈடுபட நேர்ந்தது; அதுவும்

நேரடி அரசியல்

சென்னையில் தான் நிகழ்ந்தது. நிருவாகத்தில் கவர்னர்கள் குறுக்கிடக் கூடாது என்பது குறித்து நீண்ட வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த காலம் அது. ஆகையால் அவர் பேசாமல் இருக்க முடியவில்லை. அவருடைய கருத்து என்ன வெனக் கேட்டு இலண்டனிலிருந்தும்

கூட மூன்று தந்திகள் வந்து விட்டன. ஆகையால் இனி மேலும் காலதாமதம் செய்வது சரியல்ல எனக் கருதி அவர் தம் கருத்தை வெளியிட்டார். சென்னையிலிருந்து அவர் புறப்பட்ட நாளாகிய மார்ச் 30-ஆம் தேதியன்று தான் இந்த அறிக்கையை அவர் வெளியிட்டார். அறிக்கையில் அவர் கூறியிருந்ததாவது: ''பதவி ஏற்பதில் நம்பிக்கை தெரிவித்துக் காங்கிரஸ் நிறைவேற்றிய தீர்மானத்தின் நோக்கம், காங்கிரசின் அஹிம்சாக் கோட்பாட்டிற்கு ஏற்ப, மக்களுக்கு அதிகாரத்தை மாற்றக் கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துவதற் கிடையில், பதவி ஏற்றுக் காங்கிரசைப் பலப்படுத்த வேண்டும் என்பது தான். ஏனெனில், மக்கள் கருத்தைப் பிரதானமாகப் பிரதிபலிப்பது காங்கிரசே. அமைச்சர்கள் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டுப் பணியாற்றும் வரை, கவர்னர்கள் அவர்களுடைய தனி அதிகாரங்களைப் பயன் படுத்த மாட்டார்கள் என்ற ஒரு கௌரவமான உடன்பாடு கவர்னர்களுக்கும் காங்கிரஸ் அமைச்சர்களுக்குமிடையே ஏற்படாவிட்டால் மேற்கண்ட குறிக்கோளை நிறைவேற்ற முடியாது என்று நான் கருதினேன். இவ்வாறு ஓர் உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ளாமல் விட்டு விட்டால் பதவி ஏற்றவுடனேயே ஒரு முட்டுக் கட்டை ஏற்படுவதற்கு அது வழி கோலும். ஆகையால், இந்த உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது தான் நாணயமானது என்று நான் உணர்ந்தேன். இருபாலாருக்கும் பொது நன்மை பயக்கக் கூடியவாறு, கவர்னர்கள், தங்கள் உசிதம் போல் நடவடிக்கை எடுக்க அதிகாரம் படைத்திருக்கிறார்கள். ''அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு நடக்கும் அமைச்சர்களுக்கு எதிராக நாங்கள் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்த மாட்டோம்'' என்று அவர்கள் அறிவிப்பதில் அரசியல் சட்டத்திற்கு அப்பாற் பட்டது எதுவுமே இல்லை...மக்களுடைய பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற ஒரு பலம்பொருந்திய கட்சியானது, கவர்னர்கள் விரும்பும் போதெல்லாம் குறுக்கிடுவதற்கு இடமளிக்கக்கூடிய ஆபத்தான நிலைமைக்குத் தன்னை உட்படுத்திக் கொள்ளமுடியாது.''

இவ்வாறு காந்திஜி தம் அறிக்கையில் கூறியிருந்தார். கவர்னர்கள் கூறுவதில் நியாயம் இருக்கலாமோ என்று கொஞ்ச நஞ்சம் ஐயப்பட்டவர்கள் கூடத் தெளிவு பெற்றவர்களானார்கள். காந்திஜியின் அறிக்கையை அடிப்படையாக வைத்துச் செய்தித்தாள்களும் சஞ்சிகைகளும் காரசார

மாக எழுதத் தொடங்கின. இந்தச் சமயத்தில் இந்திய அரசாங்கத்திற்குச் சென்னை அரசாங்கம் அனுப்பிய அறிக்கையில், ''இந்த இருவாரங்களில் நிகழ்ந்த பெரிய நிகழ்ச்சி (சென்னை மாநிலத்தில்) அமைச்சரவை அமைக்க ராஜாஜி மறுத்ததுதான். காங்கிரஸ் நிலையை காங்கிரஸ் பத்திரிக்கைகள் ஒரு மனதாக ஆதரிக்கின்றன. கொஞ்ச காலமாக நிதானமான போக்கில் கருத்துக்களைத் தெரிவித்து வந்த ''இந்து'' கூடத் தீவிரமாக எழுதத் தொடங்கிவிட்டது.'' என்று குறிப்பிட்டிருந்தது. இவ்வாறு ''இந்து'' மிகவும் தீவிரமாக கருத்துத் தெரிவித்ததாக அவர்கள் குறிப்பிட்டிருந்தது ''காந்திஜியின் அறிக்கை'' என்ற தலைப்பின் கீழ் அது 30-3-37-ஆம் தேதியன்று வெளியிட்ட தலையங்கமாகும். ''காங்கிரஸ் அமைச்சரவைகள் அமைப்பது குறித்து நடைபெற்ற பேச்சுத் தோல்வியடைந்ததைப் பற்றி மகாத்மா காந்தி வெளியிட்ட அறிக்கை அதிகார வர்க்கத்தினரின் கண்களைத் திறந்து, அவர்கள் எவ்வளவு விவேகமற்ற முறையில் இச்சிக்கலை அணுகியிருக்கிறார்கள் என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும்'' என்று அது எழுதியிருந்தது. இப்பொழுது படித்துப் பார்த்தாலும் இது காரசாரமான தலையங்கமாகத் தான் தோன்றுகிறது. ஆனால் எத்தனையோ செய்தி இதழ்கள் இவ்வாறு காரசாரமாக எழுதியும் அரசாங்கத்தின் காதில் அவை ஏறவில்லை. இந்த முட்டுக்கட்டை பல மாதங்கள் நீடித்துப் பின்னர்த்தான் தீர்ந்தது.

தெளிவு

ராஜாஜிக்கு உதவி

காங்கிரஸ் பெரும்பான்மை பெற்றுவிட்டதால், சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற ராஜாஜி அமைச்சரவை அமைப்பது பற்றி கவர்னருடன் பேச்சு நடத்தினர். காந்திஜி சென்னைக்கு 1937-இல் இரண்டாவது முறையாக வந்தபோதுதான் இந்தப் பேச்சு நடந்து கொண்டிருந்தது. கவர்னர் தம் 'குறுக்கீட்டு' அதிகாரத்தை விட்டுக் கொடுக்க ஒப்பவில்லையாதலால், பேச்சில் தேக்கமும் சிக்கலும் ஏற்பட்டது. இந்தச் சமயத்தில் காந்திஜி சென்னையில் இருந்தது ராஜாஜிக்கு எவ்வளவோ உதவியாக இருந்தது. இதுபற்றி அவர் அவ்வப்போது காந்திஜியைக் கலந்து கொண்டார். ஆனாலும் கவர்னர் பிடிவாதமாய் இருந்ததன் காரணமாக, இப்போது அமைச்சரவை அமைக்க முடியாமற்போய் பின்னர் ஜூலை மாத

மத்தியில்தான் காங்கிரஸ் அமைச்சரவை பதவி ஏற்க இயன்றது. அப்போது அமைச்சர்களாகப் பதவி ஏற்றவர் களாவர் :

1.	சி. இராஜகோபாலாச் சாரியார் :	முதலமைச்சர், பொது, நிதி
2.	டி. பிரகாசம்	நிலவருமானம்
3.	யாகுப் ஹாசன்	மராமத்து
4.	டாக்டர் பி. சுப்பராயன்	கல்வி, சட்டம்
5.	டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன்	பொது சுகாதரம்
6.	வி. ஐ. முனுசாமிபிள்ளை	விவசாயம், கிராம வளர்ச்சி
7.	வி. வி. கிரி	தொழில், தொழிலாளர்
8.	எஸ். இராமநாதன்	நிருவாக அறிக்கை, செய்தித்துறை
9.	கே. இராமமேனன்	நீதிமன்றங்கள், சிறைகள்
10.	பி. கோபாலரெட்டி	தலத்தாபனம்

29-ஆம் தேதி காந்திஜிக்கு மௌனவிரதம். சென்னையில் அவருக்கிருந்த ஓயாத வேலைகளுக்கு மத்தியில் இது ஓய்வு அளிப்பதாக இருந்தது. இதற்கு மறுநாள் அவர் கிராண்ட்டிரங்க் எக்ஸ்பிரசில் வர்தாவிற்குப் புறப்பட்டார். அவருடன் கஸ்தூரிபா காந்தி யும் சென்றார். புறப்படுமுன், சம்மேளனத்தை முன்னிட்டு இந்திப் பிரசார சபை ஏற்பாடு செய்திருந்த ஒரு பொருட்காட்சியைப் பார்வையிட்டார். இந்தப் பொருட் காட்சியில் அவரை அதிகம் கவர்ந்தது மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாதஐயர் திரட்டி வைத்திருந்த தொல்காப்பி யம் முதலிய தமிழ் இலக்கியங்களின் ஏட்டுச் சுவடிகள் தாம். இதன் பின்பு அவர் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசில் சென்னையி லிருந்து வர்தாவிற்கு புறப்பட்டார். எல்லாவருகைகளின் போதும் இருந்ததைப் போலவே இம்முறையும் தமிழர்கள் இரயில் நிலையத்தில் கூடி நின்று வழி அனுப்பினர்.

தமிழ் ஏடுகள்

மொழிகளிலெல்லாம் இனியதும் தூயதும் தொன்மை யானதுமாகிய நம் செந்தமிழ், மக்களிலெல்லாம் இனியவரும் தூயவரும் பெரியவருமான மகாத்மாவைக் கவர்ந்ததில் வியப்பொன்றும் இல்லை. முப்பத்து ஆறுவது வயதில் தமிழ் மொழியைக் கற்கத் தொடங்கிய காந்தி மகான், முதிய வயதில் மறையும் வரை அத்தமிழ் மொழியைக் கற்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார் என்பதை அறியும்போது ஒவ்வொரு தமிழனும் இறும்பூதெய்தவும் பெருமைப்படவும் நியாய முண்டு. அவருக்கிருந்த இடைவிடாத வேலைகளுக்கு மத்தி யில், ஓயாத ஒழியாத தொல்லைகளுக்கிடையில், தமிழ் கற்கும் முயற்சியை அவர் கைவிடவில்லை என்ற ஓர் உண்மையே தமிழுக்கு உரிய இனிமை, அதன்மூலம் பிறரைக் கவர்ந்து ஆட்கொள்ளும் தன்மை ஆகியவற்றை உணர்த்தப் போதுமானதாகும். மாக்ஸ் முல்லர், போப், பெஸ்கி, ஹீராஸ் போன்ற அந்நிய நாட்டு அறிஞர்களைக் கவர்ந்து ஆட்கொண்ட நம் மொழி, நம் நாட்டைச் சேர்ந்த மகானை யும் கவர்ந்தது இயல்பேயன்றே? ''ஆசிரமத்தில் நாங்கள் தமிழர்கள் இல்லாது சில சமயங்களில் வழிபாடு நடத்தி யிருக்கலாம்; ஆயினும் தமிழ்ப் பாடல் பாடாது நடத்திய தில்லை,'' என்று ஆச்சார்ய காகா கலேல்கார் இன்றும் கூறு கிறரெனில் அண்ணலின் தமிழ்ப் பற்றை என்னென்று இயம்புவது?

காந்தியைக் கவர்ந்தது

முதன் முதலில் காந்திஜி தமிழ் கற்கத் தொடங்கினரே அது ஏன்? இதில் பரந்த இருவேறு கருத்துக்கள் உண்டு. தமிழருக்குப்பட்ட நன்றிக் கடனைத் திருப்பிச் செலுத்து முகத்தான், தமிழை மகாத்மா கற்றார் என்று சொல்லுவர் ஒரு சாரார். இல்லை, திருக்குறளைக் கற்க வேண்டுமென்ற பேரவாவின் காரணமாகவே அவர் தமிழைக் கற்றார் என்று செப்புவர் மற்றொரு சாரார். ஆனால் இரண்டுமே உண்மை

காரணம் என்ன?

தான். என்னே? இரண்டையும், மகாத்மாவே கூறி ஒப்புக் கொண்டதனால் என்க. ஆயினும் இதில் எது முதன்மை யானது? முதன்மையான காரணம் யாது?

நன்றி உணர்வு

தென்னப்பிரிக்காவில் தொடங்கப் பெற்ற போராட்டங் களில் தமிழர் அளவுக்கு வேறு எந்த இந்திய மொழி வகுப்பி னரும் தியாகம் செய்யவில்லை, ஆக்கம் தர வில்லை என்று அண்ணல் மனமாரக் கருதினர். ஆகவே, உயிரைத் துச்சமாக எண்ணி, பொருளை இழப்பதைப் பொருட்படுத்தாது, சிறைக்குச் செல்வதை விருந்துக்குப் போவது போல் விரும்பி பன்முறை முற்றுகையிட்டுத் தம்முடன் ஒத்துழைத்த தாழ்விலாத் தமிழர்களுக்குச் சிறந்த முறையில் நன்றிக்கடன் செலுத்த வேண்டும் என்று விழைந்தார். உலகப் பொருளில் நாட்டம் இல்லாது ஆன்மிகத்தில் உள்ளத்தை ஆழ்த்தியிருந்த அண்ண லுக்கு, தமிழர்களின் தாய்மொழியைக் கற்று அவர்கள் மொழியிலேயே அவர்களுடன் பேசுவது தான் தாம் செய்யக் கூடிய சிறந்த கைம்மாறாக இருக்கும் எனத் தோன்றியது. என்னே அவர் தம் நன்றி உள்ளம்! (5-6-1909 ''இந்தியன் ஒப்பினி''யனில் எழுதிய கட்டுரையில்) தாம் அக்கறையுடன் தமிழைக் கற்க வேண்டும் என்று விரும்பிய காரணத்தை அவரே கீழ்க் கண்டவாறு விளக்கி எழுதியிருக்கிறார்; ''இந்தப் போராட்டத்தில் தமிழர்களுக்கு இணையான அளவு இந்தியர்களில் வேறு எவருமே பங்காற்றவில்லை; ஆகையால் தமிழை நான் மிகுந்த கவனத்துடன் கற்க வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. வேறு காரணத்திற்காக அல்லா விட்டாலும், என் மனதளவிலாவது என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதற்காக நான் தமிழைக் கற்றேன். நான் அம்மொழியைப் படிக்கப் படிக்க, அத னுடைய அழகுகளை அதிகமாகக் கண்டு அனுபவிக்கிறேன். அது மிக மிக எழில் நிறைந்த இனிய மொழி. அதனுடைய அமைப்பிலிருந்தும் அதில் நான் படித்தவற்றுள் இருந்தும், தமிழர்கள் மத்தியில் புத்திக் கூர்மையும் சிந்தனை சக்தியும் உள்ள, விவேகம் நிறைந்த ஏராளமான மக்கள் இருந்திருக் கிறார்கள், மேலும் மேலும் அவர்கள் தோன்றிக் கொண் டிருக்கிறார்கள் என்பதைக் காண்கிறேன்,'' என்று விளம்பி யுள்ளார்.

பிற்காலத்தில் தூத்துக்குடிக்கு வந்து உரையாற்றிய போதும் சென்னையைச் சேர்ந்த பண்டித நடேசனார் சேவா கிராமத்தில் தங்கியிருந்தபோது அவரிடமும்

அடுத்த காரணம்

அண்ணல், திருக்குறளை நேரடியாகக் கற்று அறியுமுகத்தான் தாம் தமிழைக் கற்க முயன்ற தாகக் கூறியுள்ளார். ஆகவே அன்னார் முதலில் பகர்ந்ததையும் பின்னர்ச் செப்பியதையும் இணைத்துப் பார்க் கும்போது, தமிழர்க்கு நன்றிக்கடன் செலுத்துவான் தமிழைக் கற்பதில் ஈடுபட்ட காந்தி, அதிலுள்ள குறள் என்னுங் கருவூலத்தைக் கண்டும் அதைப் பற்றிக் கேட்டும் விருப்புற்று மயங்கி அதை நேரடியாகக் கற்று அறிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலில் தொடர்ந்து தமிழைக் கற்றுள்ளார் என்று கொள்வதே நியாயமாகத் தோன்று கிறது. இருபதாம் நூற்றாண்டு வள்ளுவர் மூல வள்ளுவரை விழைந்தது இயல்புதான்.

இவ்வாறு அவருடைய முப்பத்தி ஆறாவது வயதிலேயே அதாவது தென்னப்பிரிக்காவில் சிறைப்பேற்றை அவர்

தொடர்ந்து முயற்சி

அடைவதற்கு முன்னமேயே அவர் தமிழைக் கற்கத் தொடங்கி விட்டார். சில தமிழ் நூல்கள் அப்போது அவர் கையில் கிடைத் திருக்கின்றன; போப்பாண்டவர் தமிழ் இலக்கணத்தை மிகுந்த முயற்சியின் பேரில் தரவழைத்துப் படிக்க முயன்றிருக்கிறார். தென்னப்பிரிக்காவில், ஒரு புறம் வழக்கறிஞர் தொழிலும் மற்றொருபுறம் பொதுப்பணிகளும், நிறைந்திருந்த அந்தக் காலத்தில் - மலஜலம் கழிப்பதற்குக் கூட நேரம் கிடைக்காது அண்ணல் திண்டாடுவார் என்று சொல்லப்படும் ஒரு காலத்தில் - கிடைத்த ஒரு சிறிது நேரத் திலும் தமிழைக் கற்று வந்தார் என்பதை எண்ணிப் பார்க் கும் போது தமிழ் மீது அவர் கொண்டிருந்த பக்தியும் தமிழர்கள் மீது அவர் கொண்டிருந்த நன்றி உணர்வும் உள்ளங்கை நெல்லிக்கனி போன்று விளங்குகிறது. இவ்வாறு ஓய்வு நேரத்தைத் தமிழுக்காக ''அர்ப்பணித்ததால்'', ''இந்தியன் ஒப்பினியனுக்கு''க் கட்டுரை எழுத முடியாமற் போனதும் உண்டு. 1906-ஆம் ஆண்டில் அவர் எச். ஓ. அலி யுடன் இலண்டனுக்குச் சென்ற போது கூட அவர் தமிழ் கற்றுக் கொண்டு தான் சென்றார். 1908-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அவர் முதன் முதலாகச் சிறை வாழ்வை ஏற்ற போது கூட, சில தமிழ்ப் புத்தகங்களைத் தம்முடன்

எடுத்துச் சென்று, ஒழுங்காகத் தமிழ் கற்றுக் கொண்டு வந்தார். 1913 ஆம் ஆண்டு இறுதியில் அவர் ப்ளோம் போண்டீன் சிறையில் இருந்தபோது, சிறைச் சாலையில் அளிக்கப்பட்ட வேலைகளைச் செய்த நேரம் போக மீத நேரத் தில் பெரும்பகுதியைத் தமிழ் கற்பதிலேயே செலவிட்டிருக் கிறார். ''பிளோம் போண்டின் சிறையில் நாள்தோறும் படிப் பதற்கும் எழுதுவதற்கும் எட்டு மணி நேரம் செலவிட்டேன்; அதில் பெரும்பகுதியைத் தமிழுக்கே செலவிட்டேன்'' என்று மணிலால் காந்திக்கு எழுதிய கடிதத்தில் அவர் கூறி யுள்ளார்.

தமிழ் கற்பதற்கு அவருக்கிருந்த வேட்கையைச் சொல்லி முடியாது. தமக்குத் தமிழ் கற்றுக் கொடுக்க ஒரு நல்ல ஆசிரியரைத் தேர்ந்தெடுத்து அனுப்பி வைக்கு மாறு இந்தியாவிற்குத் திரும்பி வந்த பின் சாஸ்திரியை அவர் கேட்டுக் கொண்டிருந்தார்.

ஆசிரியர் தேவை

1915 ஜூலை 16-ஆம் தேதியன்று அவருக்கு எழுதிய கடிதத்தில் இதை காந்திஜி நினைவூட்டியிருக்கிறார். மேலும், தம் ஆசிரமத்திற்கு ஒரு தமிழ் ஆசிரியரை நியமிப் பதற்கு அவர் அரும்பாடுபட்டிருக்கிறார் என்பது 1915 அக் டோபரில் மகன்லால் காந்தி சென்னைக்கு வந்திருந்தபோது அவர் எழுதிய கடிதத்திலிருந்து தெரிகிறது. ''இங்கு ஒரு தமிழ் ஆசிரியரை அனுப்ப முடியுமா என்பதைப் பார். நாம் அவருக்குரிய சம்பளத்தைக் கொடுத்து விடுவோம். ஆசிரமத் திற்கு வெளியே அவர் தங்குவதாலும் நமக்கு மறுப்பில்லை. அவர் எளிய பழக்க வழக்கங்கள் உள்ளவராய் இருக்க வேண்டும்'', என்று அவர் தம் கடிதத்தில் குறிப்பிட்டிருக் கிறார். மகன்லால் தம் மனைவியுடன் தமிழ் படிப்பதற் காகவே சென்னைக்கு வந்திருந்தார்.

பிற்காலத்தில் இந்தியாவிற்குத் திரும்பி வந்தபின், வி. ஏ. சுந்தரம் போன்று யார் யார் பக்கத்தில் இருக்கிறார் களோ அவர்களிடமெல்லாம் அண்ணல் தமிழ் கற்றிருக்கிறார். தமிழகத்திற்கு வந்த காலை, இங்கு அவர் தமிழ் நூல்களை வாங்கிச் செல்வ தும், ஜி. ஏ. நடேசன் போன்ற கெழுதகை நண்பர்கட்குத் தமிழ் நூல்கள் அனுப்பி வைக்குமாறு கேட்டு எழுதுவதும் அவர் வழக்கமாக மேற்கொண்ட முயற்சிகள் என்பதை ஏற்கனவே இந்நூலைப் படித்தவர்கள் அறிவர்.

அஞ்சல் ஆசான்

இவைகளையெல்லாந் தவிர்த்து, அஞ்சல் மூலமாக அவர் தமிழ்க் கல்வி பெற்றதும் உண்டு. இவ்வாறு அவருக்கு அஞ்சல் மூலமாகத் தமிழ் கற்பிக்கும் ஆசானாக இருந்தவர் இராஜகோபாலாச்சாரியார். தமிழ்ச் சொற்கள் குறித்து இருவருக்குமிடையே நடந்த கடிதப் போக்குவரத்துக்கள் சுவையானவை. ஒன்று கூறுதும்.

அன்புள்ள சி. ஆர்.

உங்களுடைய அன்புக் கடிதம். நீங்கள் அனுப்பிய தமிழ்ப் பாடம் நன்றாக இருந்தது. அன்பு, அம்பு ஆகிய சொற்களை நான் மறக்க மாட்டேன் என நம்புகிறேன். அம்பு என்பதற்குத் தாமரை என்ற பொருளும் உண்டல்லவா? அன்புடன் என்றால் பொருள் என்ன? கடைசி எழுத்து(ன்னு) ம்மா?

ரோம்பு
ரொம்ப

ரோம்பு அன்புடன்

பாபு,

(கீழே ரொம்ப என்பதற்குப் பதிலாக ரோம்பு என்று எழுதியிருந்ததைப் பின்னால் ராஜாஜி திருத்தினார்.)

பொதுவாக, தமிழர்களிடம் போதிய தமிழ்ப் பற்று இல்லாதிருந்ததைக் கண்டு அவர் நாணினார். தமிழர்களின் தமிழ்ப் பற்றைக் குறித்து (1917 அக்டோபர் 20-இல் கீழ்க்கண்டவாறு காந்திஜி கூறியிருக்கிறார். (தொகுப்பு 14 பக்கம் 13) ''தாய்மொழி மூலம் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற இயக்கம் சில ஆண்டுகளுக்கு முன்புதான் சென்னையில் தொடங்கப் பெற்றது. தமிழர்களைக் காட்டிலும் தெலுங்கு பேசுவோர் இதில் தீவிரமாக இருக்கிறார்கள். தமிழர்கள் ஆங்கிலத்தின் செல்வாக்கில் அதிகம் கட்டுண்டிருப்பதால், தமிழைப் பாட மொழியாக்குவதற்கான முயற்சியில் அக்கறை கொள்வ தில்லை. தெலுங்கு பேசும் பகுதியில் ஆங்கிலக் கல்வி அந்த அளவு ஊடுருவுவதில்லை. ஆகையால், அப்பகுதியில் உள்ளோர் தமிழர்களைவிடத் தாய்மொழியை அதிகம் பயன் படுத்துகின்றனர்.

தமிழ்ப் பற்று

திருக்குறள் ஐயனுக்கு மிகவும் பிடித்ததென்பதை ஏற்கனவே அறிந்தோம். அதிலும்,

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்ற குறள் அவருக்கு மிகவும் பிடித்தமானது. திக் கற்றவருக்குத் தெய்வமே துணை என்ற தமிழ்ப் பழமொழியை எண்ணி எண்ணி அவர் இறும்பூதடைவதுண்டு.

பிறநூல்கள்

'பிறப்புண்டேல் இறப்புண்டு' என்ற பழமொழியும் அவருக்குப் பிடித்தமான ஒன்றாகும். திக் கற்றவருக்குத் தெய்வமே துணை என்ற பழமொழி அண்ணலின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அளவு, வேறு (எந்த மொழியிலும்) எந்தப் பழமொழியாவது அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதுண்டா என்பது ஐயத்திற்கு இடமானதே. அவருடைய கட்டுரைகளிலும் சொற்பொழிவுகளிலும் இப்பழமொழியை அவர் எத்தனையோ முறை எடுத்தாண்டிருக்கிறார். ''நான் படித்த தமிழ்ப்பாடங்களில் குறைந்தது ஒரு பழமொழியாவது என் உள்ளத்தில் அப்படியே பசுமையாக இன்னும் இருக்கிறது, திக்கற்றவருக்குத் தெய்வமே துணை என்பது அது. சத்தியாக்ரகத்தின் மகத்தான தத்துவமே அந்தச் சத்தியத்தின்மீது கொண்டுள்ள நம்பிக்கையில் எழுந்ததாகும்'' என்று உருக்கத்தோடு அவர் கூறுவதுண்டு. சத்தியாக்ரகிகள் நம்பிக்கை இழக்கக் கூடாது என்பதை அவர் சுட்டிக்காட்ட விரும்பியபோதெல்லாம் அவர் இதைக் கூறியுள்ளார் (காந்தி ஆங்கில நூல் தொகுப்பு 26 பக்கம் 158). திருக்குறளுக்கு அடுத்தாற்போன்று அவருடைய உள்ளத்தைக் கொள்ளை கொண்ட பக்திப் பெரு நூல்களுள் மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகம் உயர்ந்த இடம் வகித்தது. அதிலும்,

முத்தி நெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்தி நெறி யறிவித்துப்பழவினைகள் பாறும் வண்ணம்
சித்த மல மறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார் பெறுவாரச் சோவே.

என்ற பாட்டை சேவா கிராமத்திலும் சபர்மதி ஆசிரமத்திலும் நாள்தோறும் பாடச் செய்து கேட்டு அவர் பேரானந்தமடைவதுண்டு.

காந்திஜியைப் போன்று தாய் மொழிப் பற்று மிக்காரைக் காண்பது அரிது. ஒருவன், தன்னுடைய தாய் மொழியை அறிந்த யாருக்கும் அம்மொழியி லேயே எழுத வேண்டும் என்பது அவருடைய உறுதியான கொள்கை. ஆகவே ஒரு தந்தை, அதுவும் தாய் மொழி வளர்ச்சிக்காகப் பாடு படும் தந்தை தம்முடைய மகனுக்கு அந்நிய மொழியில் கடிதம் எழுதுவதை அறிய அவர் உள்ளம் சகிக்குமோ? ராஜாஜி தம் குமாரருக்கு ஆங்கிலத்தில் கடிதம் எழுதினர் என்பதை அறிந்தபோது அவருடைய உள்ளம் நைந்து போயிற்று. அதிகாலை மூன்றரை மணிக்கு எழுந்து உட்கார்ந்து கொண்டு அவர் ராஜாஜிக்குக் கடிதம் எழுதினர்:

தாய் மொழிக் கடிதம்

''இப்போது காலை 3-30 மணிக்குச் சற்று மேலாகிறது. இரவு பன்னிரெண்டு மணிக்கு மேல் எனக்குத் தூக்கமே வர வில்லை. அதற்குக் காரணமானவர்களில் நீங்களும் ஒருவர். நேற்றிரவு உங்களுடைய மகனுடன் நான் பேசிக்கொண்டிருந்தேன். தற் செயலாக நீங்கள் இருவரும் எந்த மொழியில் ஒருவருக்கொருவர் கடிதம் எழுதிக் கொள்கிறீர்கள், ஆங்கிலத்திலா தமிழிலா என்று கேட்டேன். ஆங்கிலத்தில் என்று அவர் பதில் சொன்னபோது என் இதயமே சுக்கு நூறுகப் போய்விட்டது. தமிழால் எதெதெல்லாம் எழுத முடியும் என்பதைப் பற்றி நாங்கள் வாதித்தோம். இளைஞரான இராமசாமி, உயர்ந்த விஞ்ஞான சிந்தனைகளுக்கு அதைப் பயன்படுத்த முடியாது என்று கருதுகிறார். அதன்பின் என்னுடைய மூளை வேலை செய்யத் தொடங்கி விட்டது; இப்போதும் வேலை செய்து கொண்டிருக்கிறது. எனக்கு மிகப் பெரிய நம்பிக்கையாக இருப்பவர் நீங்கள். ஆகவே ஏன் இந்தப் பெரிய குறைபாடு?.....தங்களுடைய சிறந்த புதல்வர்களே தங்களைப் புறக்கணித்து விட்டால் தமிழ்ப் பாமர மக்கள் என்ன செய்வது? பாமர மக்களின் மத்தியில் ஊழியன் என்ற முறையில் பாவம், இராமசாமிக்கு என்ன எதிர்காலம் இருக்க முடியும்? எனக்கு இவைகளைத் தெளிவு படுத்துங்கள். அல்லது உங்களுடைய சிறந்த தமிழில் அந்த இளைஞருக்குக் கடிதம் எழுதுவதாக உறுதி அளியுங்கள்'' என்று உருக்கமாக எழுதினர்.

ஏன் எழுதக் கூடாது?

காந்திஜியின் தமிழ்ப் பற்றையும் அவர் தமிழ் மீது கொண்டிருந்த பெருமிதமான கருத்தையும் குறித்து இன்னும் எத்துணையோ சான்றுகளை எடுத்துக் கூறலாம். ஒரு சான்றாக, மதுரையில் (26-3-1919 அன்று) அன்னார் சூட்டிய புகழ் மாலை இருக்கின்றது; ''தமிழ் மொழியை ஒரு சிறிது நான் அறிவேன். அது எழில் நிறைந்தது; இசை மயமானது.'' காந்திஜி தம் ஆசிரமத்தில் நிறுவிய பள்ளியில் கற்றுக் கொடுத்த நான்கு மொழிகளில் தமிழ் ஒன்றாகும். (மற்ற மூன்று, சமஸ்கிருதம், குசராத்தி, இந்தி ஆகியவை.) தமிழ் மொழியைக் கற்றுக்கொள்வதற்காகவும் கைத்தறியில் பயிற்சி பெறுவதற்காகவும் காந்திஜி தம் குமாரர் மணிலால் காந்தியை 1915-ஆம் ஆண்டில் தமிழகத்திற்கு அனுப்பினார். இவருக்கு முன்பே தேவதாஸ் தமிழ் கற்றுக்கொண்டிருந்தார். 1936-இல் நாகபுரியில் காந்திஜி சொன்னார்: ''நம்மில் சொற்பப் பேருக்குத் திருவள்ளுவரின் பெயர் தெரியும். அந்த மாமுனிவரின் பெயரை வட இந்தியர்கள் அறியாமல் இருக்கிறார்கள். சிறு குறட்பாக்களில் ஞானத்தின் கருவூலத்தை அவரைப் போன்று வழங்கியவர்கள் மிகவும் சொற்பப்பேரே.''

பிற சான்றுகள்

யாமறிந்த புலவரிலே மிக உயர்ந்த கம்பனையும் தமிழ்ச் செல்வி ஔவை மூதாட்டியையும் குறித்து காந்தி மகான் மிக உயர்ந்த கருத்துக் கொண்டிருந்தார் என்பது பலருக்குத் தெரியாது. கம்பரைப் பற்றி காந்திஜி படித்திருக்கிறார். பர்தோலியிலிருந்து சிறையில் இருந்த ராஜாஜிக்கு 1922 பிப்ரவரி 3-ஆம் தேதியன்று எழுதிய கடிதத்தில், ''உங்களிடம் இராட்டையும் இராமாயணமும் இருக்கிறது என்பதை அறிய நான் பொறுமைப்படுகிறேன். அந்த இராமாயணம் வால்மீகி இராமாயணத்தின் மோசமான மொழி பெயர்ப்பாக இராது என்றும் கம்ப இராமாயணமாக இருக்கும் என்றும் நான் நம்புகிறேன். போப்பின் தமிழ் நூலில் நான் கம்ப இராமாயணத்தைப் பற்றி நிறையப் படித்திருக்கிறேன்.''

கம்பர்

''ஔவைப்பிராட்டி (Mother Avvai என்றுதான் காந்திஜி ஔவையைக் குறிப்பிடுவது வழக்கம்) ஆவது எளிதல்ல என்று ஒவ்வொரு கணமும் நான் உணர்ந்து

வந்திருக்கிறேன்'' என்று அவர் கூறியிருக்கிறார். ஒருமுறை ஒரு வைஷ்ணவ கனவான், ''இராமன்'' என்று ஒருமையில் காந்திஜி குறிப்பிடுவதை எதிர்த்து அவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். ''ஸ்ரீ இராமச் சந்திர பிரபு'' என்று தான் அழைக்க வேண்டும் என்பது அந்த வைஷ்ணவருடைய வாதம். அதற்கு மறுமொழி அளித்து, (5-9-24) நவஜீவனில் எழுதியபோது, ''இராமன்'' அல்லது ''நீ'' என்று ஆண்டவனை அழைக்கும்போது ஒரு நெருக்கம் ஏற்படுகிறது என்பதை அண்ணல் சுட்டிக்காட்டி, இவ்வித நெருக்கமே விரும்பத்தக்கது என்று குறிப்பிட்டிருந்தார். இதற்கு ஔவையாரின் சான்றைக் குறிப்பிட்டு அவர் எழுதியிருந்தார் :

ஔவையார்

''தமிழ் நாட்டில் ஔவைப்பிராட்டி என்ற பெண்பாற் துறவி ஒருவர் இருந்தார். மீராபாயைப் போன்று அவருக்கு ஆண்டவன்மீது அழியாத பக்தி இருந்தது. நாள் முழுதும் அவள் விஷ்ணு ஆலயத்தில் இருப்பது வழக்கம். சில சமயம் ஔவையார் விஷ்ணு விக்ரகத்திற்கு முதுகைக் காட்டியும் மற்றும் சில சந்தர்ப்பங்களில் விக்ரகத்திற்கு எதிராகக் காலை நீட்டிக்கொண்டும் அமருவது வழக்கம். ஒரு சமயம் ஒரு பக்திமானை இளைஞன் அங்கு தரிசனத்திற்குப் போக நேர்ந்தது. ஆண்டவன்மீது ஔவைக்குள்ள நெருக்கம் அவனுக்குத் தெரியாது. ஆகவே கண்கள் கோவைப்பழம் போன்று சிவக்க, அவன் மரியாதையற்ற சொற்களில் ஔவையைத் திட்டினான். ஔவைப் பிராட்டி அதைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். அவளுடைய சிரிப்பின் ஒலி ஆலயம் முழுவதிலும் எதிரொலித்தது. அவனுடைய முரட்டுத்தனத்தை அலட்சியம் செய்துவிட்டு, அவனிடம் அவள் கூறினாள் : ''அன்புள்ள மகனே, இங்கு உட்கார். செல்வா, நீ எந்த ஊரைச் சேர்ந்தவன்? நீ என்னிடம் கடுமையாகப் பேசினாய். ஆனால் ஒன்று கேட்கிறேன், சொல்வாயா? என்னுடைய நீண்ட வாழ்க்கையில், கடவுள் இல்லாத ஓர் இடத்தைக் கூட நான் கண்டதில்லை. எங்கே நான் காலை நீட்டினாலும் ஆண்டவன் என் முன்னால் இருக்கிறான். அவன் இல்லாத ஓர் இடத்தைக் காண்பித்தாயானால் நான் அந்தப்புறம் காலை நீட்டுகிறேன்.''

பழைய கதை

''அந்த இளம் பக்தன் அடங்கிப்போனான். அவனுடைய அறியாமையின் காரணமாகத்தான், அவன் ஔவைப் பிராட்டியைப் புரிந்து கொள்ளவில்லை. அவன் பயந்துவிட்டான். அவனுடைய கண்களிலிருந்து முத்துப் போன்ற கண்ணீர் ஔவையின் காலடியில் வீழ்ந்தது. அவள் தன்னுடைய கால்களை மடக்கப்போன போது, அவன் தன் இரண்டு கைகளாலும் அக்கால்களைப் பிடித்துக்கொண்டு, ''அன்னையே, நான் தவறு செய்துவிட்டேன். என்னை மன்னித்துக் காப்பாற்றுங்கள்,'' என்று முறையிட்டான். ஔவை கால்களை மடக்கிக்கொண்டு, அவனைத் தன் இரு கரங்களாலும் தழுவி, முத்தமிட்டு, சிரித்துக்கொண்டே கூறினாள்: சீச்சி, மன்னிக்க என்ன இருக்கிறது? நீ என் குமாரர்களில் ஒருவன். உனக்குத் தெரியுமா? உன்னைப் போன்று எனக்குப் பல குமாரர்கள் இருக்கிறார்கள். நீ ஒரு நல்ல மகன். ஏனென்றால், உனக்கு ஐயம் ஏற்பட்டவுடன் நீ அதை என்னிடம் கூறிவிட்டாய். போய்வா, ஸ்ரீரங்க நாதர் உன்னைக் காப்பாற்றுவார். ஆனால், மகனே, எப்போதாவது இந்தத் தாயை நினைத்துக்கொள்.'' வள்ளுவரையும் வாசகரையும் போற்றிய திருவாய் ஔவையாரையும் எந்தக் கோணத்தில் போற்றியிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கப் பார்க்க இதயமெல்லாம் தேன் படர்ந்தாற் போன்று இனிக்கிறது.

பக்தன் பணிந்தான்

தமிழ்மீது அவர் கொண்டிருந்த பெருமதிப்பு அவருடைய இளம் வயதிலேயே ஏற்பட்டதாகும். ஒரு முறை 1905 ஏப்ரலில் அவருக்கு இலங்கையிலிருந்து ஒரு முக்கியமான கடிதம் வந்திருந்தது. தென் ஞப்பிரிக்காவிலுள்ள தமிழர்களின் கூட்டத்தைக் கூட்டி, இலண்டன் பல்கலைக் கழகத்தில் மெட்ரிக்குலேஷனுக்கும் மற்ற கலைக் கல்வித் தேர்வுகளுக்கும் தமிழை விருப்பப் பாடமாக்குமாறு அப்பல்கலைக் கழக ரிஜிஸ்திராருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்ப ஏற்பாடு செய்யுமாறு அந்தக் கடிதம் கேட்டுக் கொண்டிருந்தது. இதை உடனே, படித்த தமிழர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அப்படிப்பட்ட ஒரு விண்ணப்பத்தை அனுப்ப ஏற்பாடு செய்ததுடன் நில்லாது, ''இந்தியன் ஒப்பினியனிலும்'' ஓர் அழகான கட்டுரை எழுதியிருந்தார். ''திராவிட மொழிகளிலேயே மிகப் பெரிய மொழிகளில் ஒன்றாகிய

இந்திய இத்தாலியம்

தமிழ் மாபெரும் இலக்கியத்தைக் கொண்ட ஒரு மொழி யாகும். ஐரோப்பாவுக்கு இத்தாலிய மொழி எப்படியோ அப்படி இந்தியாவிற்குத் தமிழ் மொழி என்று கருதப்பட்டு வருகிறது. எந்த வகையில் எடுத்துப் பார்த்தாலும் இலண்டன் பல்கலைக் கழகத்தின் விருப்ப பாடமாக ஏற்கத் தகுந்தது அது'' என்று அக்கட்டுரையில் அண்ணல் குறிப் பிட்டிருக்கிறார். தமிழர்களின் நியாயமான கோரிக்கையை இலண்டன் பல்கலைக் கழகம் ஏற்கவில்லை என்பதை அறிந்த போதுங்கூட, ''இந்தக் கோரிக்கையைத் தமிழர்கள் கை விட்டு விடக்கூடாது,'' என்று எழுதித் தமிழர்களைத் தூண் டினார். ''இலண்டன் பல்கலைக் கழகத்தைப் போன்ற பழங் கால அமைப்புகளின் மனோபாவத்தை மாற்றுவது மிகவும் கடினம். ஆயினும் உலகமெங்கும் உள்ள தமிழர்கள் தொடர்ந்து விடாப்பிடியாக முயன்றார்களானால், இறுதியில் தமிழ்மொழி - அற்புதமான இலக்கியம் படைத்த தமிழ் மொழி - இந்தியாவின் இத்தாலியமான தமிழ் மொழி - இலண்டன் மெட்ரிகுலேஷன் பாடத்திட்டத்தில் சேர்க்கப் பட்டே தீரும்'' என்று, விடாமுயற்சிக்கு நிலையான சான்றாக உலக வரலாற்றில் இலங்கும் அண்ணல் கூறினார்.

தெ. ஆ. பள்ளிகளில்

தென்னப்பிரிக்காவில் தமிழர்கள் நிறைய வாழ்ந்த பகுதிகளில் தமிழ் மாணவர்கள் கணிசமான அளவு சேர்ந் திருந்த பள்ளிகளில் தமிழ் மொழி கற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்று அண்ணல் வற்புறுத்தி வந்தார். ஜோகன்னஸ்பர்க் நகரில் அரசாங்கம் தொடங்கிய பள்ளி ஒன்றில் பள்ளி நேரத்தில் தமிழ் கற்றுக் கொடுக்க எவ்வித ஏற்பாடும் செய்யப்படவில்லை என்பதை அறிந்தபோது காந்திஜி அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்தார். ''ஜோகன்னஸ் பர்க் பள்ளி'' என்ற மகுடமிட்டு அவர் தீட்டிய கட்டுரையில், ''அண்மையில் தான் இந்தப் பள்ளி தொடங்கப்பெற்றதாயி னும் ஏற்கனவே தொல்லை தொடங்கி விட்டது என்று தோன்றுகிறது. பள்ளி நேரத்தில் தமிழும் குசராத்தியும் கற்றுக்கொடுக்கப் பெறுமென்று ஒவ்வொருவரும் எண்ணிக் கொண்டிருந்தனர்கள். ஆனால் இப்போதோ, பள்ளி நேரத் துக்கு அப்பால் தான் தமிழ் கற்றுக்கொடுக்கப்பட முடியும் என்று கேள்விப்படுகிறோம். அதாவது பள்ளியில் தமிழ் கற்றுக் கொடுக்கப் பெறமாட்டாது என்பது இதன் பொருள். இவ்வாறு அரசாங்கம் செய்தால் அது ஒரு பெரிய அநீதியா

கும்.....தமிழ் ஒரு முக்கியமான இந்திய மொழி. இம்மொழி தெரிந்த மாணவர்கள் கணிசமான அளவு இப்பள்ளியில் சேர்ந்திருக்கிறார்கள். இந்தப் பையன்களுக்கு அம்மொழியை ஒரு நியாயமான அளவு கற்றுக் கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்'' என்று வலியுறுத்தினர்.

வடக்கும் தமிழும்

பழம்பெரு நாடாகிய பாரதநாடு ஒரே நாடாக இருக்கப் போவதால் சென்னை மாநிலத்திற்கு வெளியே உள்ள இந்தியர்களும் தமிழைக் கற்கவேண்டும் என்று அவர் பலமுறை எழுதியிருக்கிறார். அதுவும் இன்றல்ல, நேற்றல்ல, 1909-ஆம் ஆண்டிலிருந்தே, அதாவது அறுபது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர் எழுதி வந்துள்ளார். (ராவ்ஜிபாய் படேல் போன்ற) வடஇந்தியர் சிலருக்குத் தமிழைக் கற்க வேண்டுமென்றும் தமிழர்களுடன் தமிழிலேயே பேசவேண்டுமென்றும் அவர் தீட்டியுள்ள அறிவுரை இன்றுங் கூர்ந்து நோக்கத்தக்கது. இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு என்னென்னவெல்லாம் தேவை என்பதைச் சீர்தூக்கி எண்ணிப் பார்த்து இயம்பிச் சென்றுள்ள அக்கூர்த்த மதியை எப்படித்தான், எவ்வளவுதான் பாராட்டுவதென்று தெரியவில்லை. அவருடைய உறவினர்களையும் தமிழ் கற்கச் சொன்னார் அவர்.

கவனிக்க!

இந்த இடத்தில், அவர் பயன்படுத்திய சொல்லமைப்பின் பொருளை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ''சென்னை (மாநிலத்து)க்கு வெளியே உள்ளவர்கள் தமிழைக் கற்கவேண்டும்'' என்று அவர் கூறியதிலிருந்தே ''சென்னை மாநிலம்'' என்று அவர் குறிப்பிட்டபோது (ஆந்திரம், மலபார், கன்னடத்தின் ஒரு பகுதி ஆகியவைகளை அது தன்னுள் அடக்கியது என்பதை அவர் அறிவாராயினும்) தமிழகத்தையே மனதிற் கொண்டார் என்பது வெளிப்படுகின்றது.

திரு. வி. க.

இத் தெய்வத் தமிழ் மூலம் தெய்வ மகனாகிய மகாத்மாவின் புகழைத் தமிழகத்தில் பரப்பியவர்கள் பலர். அவர்களில் திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரி, வ. உ. சிதம்பரனார், பொ. திருகூட சுந்தரம் பிள்ளை, சங்கு சுப்ரமணியம், சங்கு கணேசன், ''தினசரி'' டி.எஸ். சொக்கலிங்கம், ''தினமணி'' ஏ. என். சிவராமன்,

கல்கி கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், வே. சாமிநாத சர்மா, தி. ஜ. ரங்கநாதன், சி. ஆர். சீனிவாசன், டி. எஸ். அவினாசிலிங்கம் முதலிய பலரைக் கூறலாம். பிற்காலத்தில் எத்தனையோ பேர்களை இப்பட்டியலில் சேர்க்கலாம். ஆயினும் ரா. வேங்கட்ராஜுலு, ஜெயமணி சுப்ரமணியம், டாக்டர் மு. வரதராசனார் ஏ. கே. செட்டியார் ஆகியோரைத் தனித்துக் குறிப்பிட நியாயமுண்டு. இவர்களில் தலையாய இடம் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாருக்கே அளிக்கவேண்டும். 1919-ஆம் ஆண்டில் காந்தி அடிகள் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வந்திறங்கியபோது தான் அவர் முதன் முதலாக அண்ணலைக் கண்டார். வள்ளுவர் பொய்யாமொழிப் படியும் காந்திய நெறிப்படியும் வாழ்ந்த கல்யாண சுந்தரனார் தாம் எழுதிய தலையங்கங்கள், கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றின் மூலமாக காந்தியடிகளையும் அவர் கொள்கை கோட்பாடுகளையும் தமிழர்களில் படித்தவர்கள் முன் அமுதம் போன்று படைத்து அவர்கள் வாரி வாரி உண்டு தீளைக்குமாறு செய்தார். அவருடைய நூல்களுள், ''மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்'' என்ற நூலைப் படிக்காத தமிழரும் தமிழரோ என்று கூறும் அளவிற்கு அது பரவியது. காந்தியடிகளுக்கும் கல்யாண சுந்தரனாருக்கும் இருந்த உறவையும் தொடர்பையும் குறித்துப் பின்னவர் தமக்கே உரிய தெள்ளு தமிழ் நடையில் யாத்துள்ள தம் வாழ்க்கை வரலாற்றிலும் பிற நூல்களிலும் நன்கு காணலாம். அதை வேறு யார் தமிழில் எழுதினாலும் அதன் சுவை குறைந்து விடுமென அஞ்சுகிறேன்.

பாடியவர்கள்

காந்திஜியைப் பற்றிப் பாடியவர்கள்: பாரதியார், நாமக்கல் கவிஞர், தேசிக விநாயகம் பிள்ளை, (திருவண்ணாமலை ஆசிரமம்) முருகனார், ராய. சொக்கலிங்கம், அஞ்சலை அம்மையார், சுத்தானந்த பாரதியார், சுரபி, ர. அய்யாசாமி, கொத்தமங்கலம் சுப்பு முதலியோராவர். காந்திஜியின் பெருமையைப் பரப்பிய பத்திரிகைகள் அக்காலத்தில் தேசபக்தன், நவசக்தி, விமோசனம், சுதந்திரச் சங்கு, காந்தி ஆகியவை. இக்காலத்தில் உள்ள செய்தித் தாள்கள், சஞ்சிகைகள் ஆகியவைகளில் எவை காந்திஜியைப்

போற்றி வந்துள்ளன என்பது அனைவருக்கும் நன்கு தெரியும். ஆகையால் அவைகளைக் குறிப்பிட வேண்டியதில்லை.

அப்பரும் காந்தியும்

''தமிழ் இலக்கியத்தில் அப்பரை மகாத்மா காந்திக்கு இணையான சமயவாதியாகக் கொள்ளலாம்; இருவரும் பணி செய்து கிடப்பதையே கடனுய்க் கொண்டவர். அம்முறையிலேயே ஆண்டவனின் திருவடியைப் பெற்றவர்கள்,'' என்று பேராசிரியர் சுவாமிநாதன் கூறுகிறார். பேராசிரியரை யார் மறுக்க முடியும்?

இரு தமிழர்

காந்திஜியிடம் சேவை செய்யும் பாக்கியம் பெற்ற இரு தமிழரை இங்குக் குறிப்பிட்டு விட்டு இந்த அத்தியாயத்தை முடிக்கலாம். இவர்களில் இந்திய ஆதாரக் கல்விச் சங்கத்தில் ஓர் ஊழியராக சேவா கிராமத்தில் இருந்து பணியாற்றிய சங்கரன் ஒருவர். காந்திஜி காலமாவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன் சங்கரனுடைய பெண் காலமாகி விட்டதை விசாரித்து அவருக்கு அண்ணல் ஒரு கடிதம் எழுதியுள்ளார். காந்திஜி கடைசியாக எழுதிய கடிதங்களுள் இதுவும் ஒன்று. மற்றும் ஒருவர் நவகாளியில் காந்திஜியுடன் சுற்றுப்பயணம் செய்த சுருக்கெழுத்தாளராகிய பரசுராம் ஆவார். நவகாளியில் ஸ்ரீராம்பூருக்கு காந்திஜி சென்றபோது அவருடன் மற்றவர்கள் வருவதை காந்திஜி விரும்பவில்லை. ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கிருந்து அமைதிப் பணியாற்ற வேண்டும் என்று அவர் கூறி விட்டார். ஆனல் அவருடன் இரண்டே இரண்டு பேர்கள் வருவதற்கு மட்டும் அவர் அனுமதி தந்தார். அவர்களில் ஒருவர் பரசுராம். பரசுராமைப் பற்றி ''என்மீது பக்தி கொண்ட, சுயநலமற்ற, பகட்டு இல்லாத சுருக்கெழுத்தாளர் பரசுராம்'' என்று அண்ணல் பாராட்டிக் கூறியிருக்கிறார்.

இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு கண்ணும் விடுதலை பெற்ற இந்தியாவின் ஐக்கியத்தையும் முன்னேற்றத்தையும் பாதுகாப்பதில் மற்றொரு கண்ணும் வைத்துத்தான் காந்திஜி தேசியப் பணியாற்றிக் கொண்டு வந்தார். பல்வேறு மொழியினத்தவரைக் கொண்ட இந்த பாரத பூமி ஒற்றுமையின்மையின் காரணமாகத்தான் முன்பு அடிமைப் பட்டு அவ்வலம் அடைந்தது என்பதும் எதிர்காலத்திலும் அது ஒற்றுமையின்றிச் சிதறுண்டு போகக்கூடிய எத்தனையோ அபாயங்கள் இருக்கின்றன என்பதும் அவர் அறிந்தவையே. ஆகையால் நிகழ்கால இந்தியா மட்டுமல்லாது எதிர்கால இந்தியாவும் உறுதி வாய்ந்த ஒருமைப்பாட்டுடன் இருப்பதற்கான வழி வகைகளைக் காண்பதில் அவர் முனைந்து ஈடுபட்டார். நாட்டிற்கு ஒரே பொதுமொழி இருப்பது ஒரே இருதயம் இருப்பது போன்றது என்று அவர் கருதினார். இவ்வாறு ஆட்சி மொழியைத் தேர்ந்தெடுக்க எண்ணிய போது, நிர்வாக வசதிக்கு ஏற்றது எது என்பதில் அவர் அக்கறை செலுத்தவில்லை. எந்தக் காரியத்திலுமே அதிகாரத்தில் வீற்றிருக்கும் ஒரு சிலர் வசதியை மட்டுமல்லாது கோடிக்கணக்காக உள்ள பொதுமக்களின் வசதியையே அவர் கவனிப்பார். அதனால்தான் நாட்டில் பெரும்பாலார் பேசும் மொழியான இந்தியே இந்தியாவின் பொது மொழியாக வேண்டும் என்ற முடிவிற்கு அவர் வந்தார்.

பொதுமொழி அவசியம்

இந்தியாவில் இரண்டு மாநிலங்களில் இதற்கு வரவேற்பு இராது என்பது அவருக்குத் தெரியும். வங்க மக்கள் தங்கள் மொழிக்கு வேறு எந்த மொழியும் இணையில்லை என்று கருதுவார்களாதலால், விரும்பி இந்தியைக் கற்க மாட்டார்கள். திராவிட மொழியினத்திற்கும் இந்திக்கும் ஒட்டுறவு அதிகம் இல்லாததால், திராவிட மொழி இனத்தவர் இந்தியைக் கற்பது கடினம் என்பதை அண்ணல் உணர்ந்தார். ஆகவே

இரண்டு மாநிலங்கள்

இந்தியாவில் இந்தி பொது மொழியாக வேண்டுமாயின் முதலில் அதைச் சென்னை மாநில மக்கள் ஏற்குமாறு செய்ய வேண்டும் என்ற தீர்க்கமான முடிவிற்கு அவர் வந்தார்.

தேவதாஸ்

திராவிட மொழிப் பகுதியில் - குறிப்பாகத் தமிழகத்தில் - இந்தியை மக்கள் கற்குமாறு செய்ய அவர் மேற்கொண்ட முயற்சி பகீரத முயற்சியாகும். அந்தக் காலத்தில் புத்த நெறியைப் பரப்புவதற்காக அசோகன் தன் அருமை மக்களையும் நெருங்கிய உறவினர்களையும் வெளிநாடுகளுக்கு அனுப்பியது உண்மைதான் என்று மெய்ப்பிப்பார் போலத் தமிழர்களுக்கு இந்தியைக் கற்றுக் கொடுக்கத் தம் தனயன் தேவதாஸ் காந்தியை அண்ணல் அனுப்பினர். தேவதாஸ் காந்தி சென்னைக்கு வந்து, அங்கு ராம்ஜி கல்யாண்ஜி இல்லத்தில் தங்கி, இந்திய சர்வீஸ் லீக் ஆதரவில் சென்னை வாசிகள் சிலருக்கு இந்தி கற்றுக் கொடுத்தார். 1919-இலிருந்து 23 வரை திருச்சியில் மிகவும் சிறப்பாக இந்திப் பிரசாரம் செய்தவர் பீகாரைச் சேர்ந்த பிரதாப் நாராயண் வாஜ்பை. வட இந்தியாவிலிருந்து வந்த இந்திப் பிரசாரக்குகளுக்குள் இந்தியிலும் ஆங்கிலத்திலும் நன்கு தேர்ச்சி பெற்றவர். இந்தியை எளிதாகக் கற்றுக்கொள்வதற்காக "Quintessence of Hindi" (''இந்தியின் சாரம்'') என்ற தலைப்பில் ஒரு சிறு நூலும் சபை மூலமாக வெளியிட்டார். இவருக்கு அடுத்து இந்திப் பிரச்சாரத் தொண்டு செய்தவர் சுவாமி சத்திய தேவ் ஆவார். தேவதாசுக்கு உதவி செய்வதற்காக காந்திஜியால் அனுப்பப் பெற்றவர் இவர். முதியோர் இந்தி கற்றுக்கொள்வதற்காக இவர் இந்தி சபை மூலம் ஒரு நூல் வெளியிட்டார்.

இருவழிப் போக்கு

தமிழருக்கு இந்தி கற்றுக் கொடுப்பது ஒரே வழிப் போக்காக இருக்கவேண்டும் என்று காந்திஜி எப்போதுமே விரும்பியதில்லை. இந்தி மூலமாகத் தமிழை மற்ற மொழியினர் கற்கவும் உதவக் கூடிய ஏதாவது ஏற்பாடு செய்ய வேண்டும் என அவர் விரும்பினர். தேவதாஸ் காந்தியிடம் கூட, 'இந்தியைக் கற்றுக் கொடுத்துத் தமிழைக் கற்றுக் கொண்டு வா' என்று தான் கூறி அனுப்பினர். தேவதாஸ் காந்தியும் இங்குத் தமிழ் கற்றார்.

சென்னை மாநகரில் ஒரு சில தமிழர்களுக்கு ஒரு மனிதர் இந்தியைக் கற்றுக் கொடுப்பதனால் மட்டும் அம்மொழி தமிழகத்தில் ஊடுருவி விடும் என்று அண்ணல் இறுமாந்து இருந்து விடவில்லை. உள் பகுதிகளிலெல்லாம் நிறைந்து பரவி, இந்தி கற்றுக் கொடுக்கக் கூடிய பிரச்சாரகர்கள் நிறையத் தேவை என்பதை அவர் உணர்ந்தார். தமிழகத்திலிருந்து ஹரிஹர சர்மாவும் மற்றும் சிலரும் வட இந்தியாவிற்குச் சென்று இந்தி கற்றுக்கொண்டு வருவதற்கு வசதி செய்து கொடுத்தார். சில மாணவர்களுடன் பிரயாகிற்கிச் சென்று இந்தி கற்றுக்கொண்டு, சாஹித்ய விஷாரத் ஆக 1919-இல் திரும்பி வந்த ஹரிஹர சர்மா, தேவதாஸ் காந்தியிடமிருந்து பொறுப்பை ஏற்று இந்திப் பிரச்சார சபையின் (1926 வரை இந்தி சாகித்திய சம்மேளனப் பிரச்சார காரியாலயம் ஆக இருந்தது.) செயலாளராஞர். 1936 வரை அவர் இப் பொறுப்பை வகித்தார். இவருக்கு அடுத்து இப் பொறுப்பு வகித்துத் தொண்டாற்றியவர் சத்திய நாராயண ஆவார்.

ஹரிஹர சர்மா

இந்தி சாகித்ய சம்மேளனம் மேற்கொண்ட அரும் முயற்சியின் விளைவாக, தமிழகம், ஆந்திரம், கேரளம், கர்நாடகம் ஆகிய நான்கு பகுதிகளிலும் இந்தியைப் பரப்புவதற்கு உதவக்கூடியவாறு சென்னையில் தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபை அமைக்கப் பெற்றது. பதினாயிரக்கணக்கான இந்தி ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து இது இப்பகுதி முழுவதிலும் அனுப்பியிருக்கிறது. முதலில் சில ஆண்டுகள் வரை இந் நிறுவனத்திற்கு வடஇந்தியாவிலிருந்து பெரும் அளவில் நிதி தேவைப்பட்டது. ஆனாலும் 1927க்குப் பின்னர் இங்கிருந்து கிடைக்கும் நிதி உதவியைக் கொண்டே அது தன்னுடைய வரவு செலவைக் கிட்டத்தட்டச் சரிக் கட்டிக் கொள்கிறது.

இந்திப் பிரச்சார சபை

இவ்வாறு தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபையின் சேவை ஒரு புறம் மகத்தானதாக இருந்தாலும், தனியார் சிலர் இந்தியைப் பரப்புவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சியையும் இங்குக் குறிப்பிட்டுத் தானாக வேண்டும். சென்னை நகரில் தான் 1918-இல் இந்தி கற்பிக்கும் பணி தொடங்கப் பெற்றது என்றாலும், திருநெல்வேலி மாவட்டத்தைச்

தனியார் முயற்சி

சேர்ந்தவர்களின் தொண்டு இப்பணியில் சிறப்பாக இருந்தது. ஹரிஹர சர்மா திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வரே. இந்திப் பிரச்சாரப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்ட கே. ஆர். கிருஷ்ண ஐயர் (கல்லிடைக் குறிச்சியில் இந்தி தெரிந்துள்ளவர்களில் பெரும்பாலோர் இவரிடம் கற்ற வர்கள் தாம்.) சக்தி ஐயர் ஆகியோரும் அதே மாவட்டத் தைச் சேர்ந்தவர்கள் தான். விடுதலை இயக்கத்தில் பங்கு கொள்வதற்காக அரசாங்கப் பணியை விட்டு வந்த கொடைக்கானல் கல்யாண சுந்தரம் இந்தி இயக்கத்தைப் பரப்பிய முன்னோடிகளில் ஒருவராவார். மகாதேவ ஐயர் திண்டுக்கல்லில் இருந்த தம் இல்லத்தில் இந்திப் பள்ளிக் கூடம் நடத்தினர். திண்டுக்கல் நாராயணசாமி ஐயர் தேவதாசுக்கு இப்பணியில் மிகவும் உதவியவர். திண்டுக்கல் கே. கணேச ஐயர் பெண் இந்தி ஆசிரியர்களைப் பயிற்று விப்பதற்காகவும் அவர்களின் மூலம் பெண்கள் மத்தியில் இந்தியைப் பரப்புவதற்காகவும் ஒரு பயிற்சிப் பள்ளி யைத் தொடங்கினர். மதுரை தேசபக்தர் வைத்திய நாத ஐயர் மதுரையில் இந்தியை வளர்ப்பதில் பெரும் பங்கு கொண்டார். இவைகளெல்லாம் தனிப்பட்ட காந்தி பக்தர்கள் ஆங்காங்கு தங்களால் இயன்ற அளவில் ஆற்றிய தொண்டுகளாகும். சென்னை மாநகரில் படித் தவர்கள் பலர் அந்தக் காலத்தில் இம்முயற்சிக்கு ஆதர வாக இருந்திருக்கின்றனர். பெரிய நீதிபதிகள் உள்படப் பலரும் (வெங்கட்ராம சாஸ்திரி, கே. பாஷ்யம், ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர், என். சுந்தரம் ஐயர் ஆகியோர் தேவதாஸ் காந்தியிடம் மைலாப்பூர் கிளப்பில் வகுப்பிற்கு வந்து இந்தி கற்றுக் கொண்டு வழிகாட்டியவர்கள். ஜஸ்டிஸ் சேஷாத்ரி ஐயர், ராம்தாஸ் பந்துலு, சீனிவாச ஐயங்கார், ஏ. ரெங்க சாமி ஐயர், ஜஸ்டிஸ் சங்கரன் நாயர் ஆகியோர் தனியாக ஆசிரியர் வைத்துப் படித்தவர்கள்.) இந்தியைப் பரப்பும் முயற்சிக்கு ஆதரவாக இருந்ததுதான் தம்மை இந்த ஈடு பாட்டில் ஊக்குவித்ததாக அண்ணலே கூறியிருக்கிறார். ஆனாலும் பிற்காலத்தில் சென்னை மாநிலத்தில் ராஜாஜி தலை மையில் காங்கிரஸ் அமைச்சரவை பதவி ஏற்று இந்தியைக் கட்டாய பாடமாக்கிய போதுதான் தமிழகத்தில் இந்திக்கு - கட்டாய இந்திக்கு - எவ்வளவு கடும் எதிர்ப்பு இருக்கிறது என்பது முதன் முதலாகத் தெரிந்தது. சுயமரியாதைக் கட்சி, ஜஸ்டிஸ் கட்சி, முஸ்லிம் லீக், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் ஆகிய கட்சிகளெல்லாம் இதை எதிர்த்தன

வென்றாலும், இந்த எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தலைமைத் தளபதியாக விளங்கியவர் பெரியார் ஈ. வே. இராமசாமியே. அவரும் ஆயிரத்திற்கு மேற்பட்ட தொண்டர்களும் இப்போராட்டத்தில் கைதானார்கள். ஆனாலும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு தானிருந்தது. 1939இல் காங்கிரஸ் அமைச்சரவை பதவியிலிருந்து இறங்கிய போதுதான் இந்தப் போராட்டம் நின்றது.

இந்தி எதிர்ப்பு

இந்தி எதிர்ப்புப் போராட்டம் குறித்துத் திரு. வி. க. 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூலில் கீழ்க்கண்டவாறு எழுதியிருக்கிறார். அவரைக் காட்டிலும் இதைச் சிறந்த முறையில் கூறக் கூடியவர்கள் யார்? அவர் கூறுகிறார் : ''காங்கிரஸ் ஆட்சியிலே ஹிந்தியைப் பொது மொழியாக்கும் முயற்சி விரைந்தெழுந்தது. ஒவ்வொரு மாகாணத்தில் ஒவ்வொரு விதமுறை கொள்ளப்பட்டது. நம் மாகாணத்தில் முதன் மூன்று பாரம் வரை ஹிந்தி கட்டாய பாடமாகச் செய்யப்பட்டது. அது பற்றித் தமிழ் நாட்டில் பெருங் கிளர்ச்சி எழுந்தது. ஹிந்தி விருப்பப் பாடமாக்கப்படல் வேண்டுமென்பதும், கட்டாயப் பாடமாகக் கப்படலாகாதென்பதும் கிளர்ச்சிக்காரர் வேண்டுதல். அவ் வேண்டுகோளுக்கு அக்காலக் காங்கிரஸ் மந்திரி சபை செவி சாய்க்கவில்லை. கிளர்ச்சிக்காரருள் ஏறக்குறைய ஆயிரம் பேர் சிறைக்கு அனுப்பப்பட்டனர். ஹிந்தி பொதுமொழி என்று பேசப்பட்ட போது, அதுகுறித்து எவ்விதக் கிளர்ச்சியும் எழவே இல்லை. காங்கிரஸ் ஆட்சியில் ஹிந்தியைப் பொது மொழியாக்கும் முயற்சி அரும்பியபோதே அதற்கு மாறுபட்ட கிளர்ச்சி எழுந்தது. இனி இந்தியாவின் பொது மொழி எது ஆகும் என்று அறுதியிட்டுக் கூறுதல் இயலவில்லை. இந்திய இயற்கை எதை ஏற்கிறதோ அஃதாகும்.''

காந்திஜி ஆதரவு

அப்போது இந்தியை எதிர்த்தவர்களுக்கு இந்தியை விருப்பப் பாடமாக்குவதில் எதிர்ப்பு இல்லை. ஆனால் காங்கிரஸ் அரசாங்கம் இந்தியைப் பரப்புவதற்குக் கட்டாய பாடமாக்குவதே சிறந்த வழி என்று கருதியது. காந்திஜியும் இதை ஆசீர்வதித்தார். அப்போது சென்னை மாநில அரசாங்கம் பத்திரிகைகளுக்கு விடுத்த ஓர் அறிக்கையில், ''இந்திய

தேசீய வாழ்வில் நம் மாநிலத்திற்கு உரிய இடம் கிடைக்க வேண்டுமானால், இந்தியாவில் மிக அதிகமான பேர் எந்த மொழியைப் பேசுகிறார்களோ அந்த மொழியில் ஓரளவு நடைமுறை ஞானம் பெற்றிருக்க வேண்டியது அவசிய மாகும். அதனால்தான் நம் மாநில உயர்நிலைக் கல்விப் பாடத்திட்டத்தில், இந்துஸ்தானியைப் புகுத்துவதென்று அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது,'' என்று கூறியது. அந்தச் சமயத்தில், ''காங்கிரஸ்காரர்களே, எச்சரிக்கை!'' என்று மகுடமிட்டு (10-9-38) காந்திஜி 'ஹரிஜனில்' ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அக்கட்டுரையில், இரண்டு சிக்கல்களை அவர் தெளிவுபடுத்தியிருந்தார். ''இந்துஸ்தானியைக் கட்டாயப் பாடமாக்கலாமா?'' என்ற கேள்விக்கு, ''இந்துஸ்தானி பொது மொழி அல்லது ராஷ்டிரபாஷை ஆக வேண்டும் என்று நாம் கூறியது உண்மையாக இருந்தால், இந்துஸ்தானியில் ஓரளவு ஞானம் பெறுவதைக் கட்டாயமாக்குவதில் தவறு எதுவும் இல்லை. ஆங்கிலப் பள்ளிகளில் இலத்தீன் கட்டாய பாடமாக இருந்தது; இன்று கூட இருக்கிறது என்று எண்ணுகிறேன். அந்தப் படிப்பு ஆங்கிலப் படிப்பைப் பாதிக்கவில்லை. அதற்கு மாறாக, அந்தப் புகழ்பெற்ற மொழியின் ஞானத்தால் ஆங்கிலத்தின் அறிவு வளம் பெற்றது'' என்று கூறியிருந்தார். ''தாய்மொழிக்கு ஆபத்து'' என்று கூறியவர்களைக் குறித்து எழுதுகையில் ''இவ்வாறு கூக்குரலிடுவது ஒன்று அறியாமையினால் ஏற்பட்டதாய் இருக்க வேண்டும் அல்லது பாசாங்காக இருக்க வேண்டும்...இந்தியா ஒரே நாடா அல்லது பல நாடுகள் கொண்டதா? இந்தியா ஒரே நாடு என்று நம்புவோரெல்லோரும் ராஜாஜிக்குத் தங்களுடைய முழு ஆதரவைத் தெரிவிக்க வேண்டும்'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறியிருந்தார். ஆயினும் இந்தத் தகராறு நீண்ட காலம் நீடித்துக்கொண்டு போக வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இரண்டாவது உலகப்போர் தொடங்கியபோது இராஜகோபாலாச்சாரி அமைச்சரவை கீழே இறங்கி விட்டதால், ஆலோசகர்கள் உதவியுடன் நிருவாகத்தை ஏற்ற கவர்னர், முதல் நடவடிக்கையாகக் கட்டாய பாடமாய் இந்தி இருந்ததை அகற்றிவிட்டு அதை விருப்ப பாடமாக வைத்தார்.

எல்லாவற்றிலும் சுதேசியையே விரும்புபவர் காந்திஜி; உடையிலும் பயன்படுத்தும் பிற பொருள்களிலும் சுதேசியை வலியுறுத்திய அண்ணல் மொழியிலும் சுதேசி வேண்டுமென வலியுறுத்தினர். இந்தியாவில் ஒருகாலும் இந்துஸ்தானி இருக்கும் இடத்தை ஆங்கிலம் அலங்கரிக்க முடியாது, கோடிக் கணக்கான மக்கள் தங்கள் வீடுகளில் - குடும்பங்களில்-பேசும் மொழியாக ஆங்கிலம் ஆக முடியாது என்பது அவருடைய உறுதியான முடிவு. அத்தகைய முடிவுள்ள ஒருவர் ஆங்கிலத்தில் ஏன் ஒரு சஞ்சிகை நடத்தினர் என்று சிலர் கேட்டார்கள். ஒருவேளை ஆங்கிலேயர்கள் புரிந்துகொள்ளும் மொழியாக அது இருப்பதால் அதில் நடத்தியிருப்பாரோ என்று சிலர் ஐயப்பட்டார்கள். ஆனால் சென்னை மாநிலத்திற்காகத்தான் அதைத் தாம் ஆங்கிலத்தில் நடத்துவதாக அண்ணல் கூறினர். ''வாசகர்களுக்கும் சந்தாதாரர்களுக்கும்'' என்ற தலைப்பிட்டு அவர் 1918.இல் எழுதினர்: ''ஆங்கிலத்தில் ஒரு பத்திரிக்கையை வெளியிடுவது எனக்கு மகிழ்ச்சி அளிக்கவில்லை என்பதை நான் வெளிப்படையாக ஒப்புக் கொள்கிறேன். அந்த வேலையில் ஈடுபடுவதன் மூலம், நான் என் நேரத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்தவில்லை என்பதை அறிவேன். சென்னை மாநிலத்திற்காக மட்டும் அல்லாவிட்டால், நான் ''யங் இந்தியா''விற்கு ஆசிரியராக இருப்பதையே விட்டுவிடலாம். பொது விவகாரம் சம்பந்தப்பட்ட சிக்கல்களில் என் கருத்துக்களைச் சில சமயம் அரசாங்கத்திற்கு நான் தெரியப்படுத்த வேண்டும் என்பது உண்மையே. ஆனால் அதற்காக மட்டும் நான் ஒரு பத்திரிகையை நடத்திக் கொண்டிருக்க வேண்டியதில்லை....''

இடைக் காலத்தில் இந்தியில் முன்னேற்றம்

படிப்படியாகத் தமிழகத்தில் இந்தி பரவி வந்தது, அதிகப்படியான பேர் இந்தி கற்க முன் வந்தது, பல தமிழர்கள் நல்ல உச்சரிப்புடன் இந்தி பேசியது மகாத்மாவின் மனதிற்கு ஆறுதல் அளித்தது. 1946-இல் கடைசி முறையாக அவர் தமிழகத்திற்கு வந்தபோதெல்லாம் அவருக்கு ஓரளவு இதில் மன நிறைவு ஏற்பட்டிருந்தது. வெள்ளி விழாவிற்கு வந்து (25-1-46-இல்) உரையாற்றியபோது, ''சபை நல்ல வேலை செய்திருக்கிறது'' என்று அவர் பாராட்டினர். ''இருபத்தி ஏழு ஆண்டுகள் நாம் கடினமாக வேலை செய்த பின்புதான் என் முன் கூடியுள்ளவர்களைப் போன்ற தென்

னிந்திய மக்கள் நான் இந்துஸ்தானியில் பேசுவதை ஓரளவாவது புரிந்து கொள்ளக்கூடிய ஒரு கட்டத்தை நாம் அடைந்துள்ளோம்,'' என்று அவர் சொன்னார். இந்திப் பிரச்சார வேலைகள் எந்தக் கட்டத்திற்கு வரும்போது காந்திஜி முழு மன நிறைவு அடைவார்? இதை அவரே தென்னிந்திய மக்களுக்கு 17-6-33-ஆம் தேதியன்று (பண்டித ஹரிஹர சர்மா மூலம்) விடுத்த செய்தி ஒன்றில் கூறினார்: ''ஒவ்வொரு கிராமத்திலும் இந்தி பரவிய பின் தான் எனக்கு உண்மையில் மகிழ்ச்சி ஏற்படும்.''

காங்கிரஸ்

காங்கிரஸ் நடவடிக்கைகள், அதன் மாநாடுகளிலெல்லாம் ஆங்கிலத்தில் தான் நடைபெற்று வந்தன. அவைகளை இந்தியில் நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்ட முக்கியமான தீர்மானம் சென்னையில் கூடிய இந்தி சாகித்திய சம்மேளனத்தில் தான் மேற்கொள்ளப்பட்டதென்பதை இந்த நூல் வாசகர் அறிவர். இந்தத் தீர்மானம் சம்மேளனத்தின் ஆலோசனைக்கு வந்தபோது அதற்குக் கடுமையான எதிர்ப்பு இருந்தது; பலர் அதை எதிர்த்தார்கள். ஆனாலும் அவர்களுடைய கேள்விகளுக்கெல்லாம் ராஜாஜி மறுமொழி கூறி அவர்கள் மனநிறைவடையுமாறு செய்ததால் தீர்மானம் நிறைவேறியது.

தாய் மொழி

''இந்தி மொழி பரவுவதால் மக்களின் தாய் மொழி பாதிக்கப்படமாட்டாதா?'' என்ற கேள்விக்கு எத்தனையோ முறை விளக்கமாகத் தம் மறுமொழியை அவர் அளித்துள்ளார். வட்டார மொழி அழிந்து இந்தி வளர்ச்சி பெறுவதை அவர் விரும்பவில்லை; அவ்வாறு இந்தி வளர்ச்சி பெறுது என்று அவர் உறுதியாக நம்பினார். இந்தி வளர்ச்சியடைய வேண்டுமானால் வட்டார மொழிகளும் வளர்ச்சியடைய வேண்டும். தாய் மொழிக்குத் தான் அவர் கருத்துப்படி முதலிடம். அதற்கு அடுத்த இடம் தான் பொதுமொழிக்கு. தாய் மொழியும் பொது மொழியும் மக்களின் இரண்டு கண்கள். இவை இரண்டிலும் ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றின் வளர்ச்சிக்கு உதவும் என்று அவர் கூறினார்.

'அரிஜனில்' அரசியலேயே எழுதுவதில்லை என்று தமக்குத் தாமே ஒரு சிறிது காலம் கட்டுப்பாடு விதித்துக் கொண்ட காந்திஜி அதை 1937 ஜூலை 17-ஆம் தேதியுடன் முடித்துக் கொண்டார்.

இடைக்கால வரலாறு

பதவி ஏற்ற காங்கிரஸ் அமைச்சர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் வேண்டிய அறிவுரைகளையெல்லாம் 'அரிஜனில்' அவர் எழுதிக் கொண்டு வந்தார். 1937-அக்டோபர் 22-ஆம் தேதியன்று வர்தாவில் காந்திஜி தலைமை வகித்த கல்வி மாநாட்டில், டாக்டர் ஜாகிர் ஹுசேன், அரியநாயகம், பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்கள், மற்றும் பல பெரிய மனிதர்கள் பங்கு கொண்டு ஆதாரக்கல்வியை உலகின் முன் வைத்தனர். சுபாஷ்சந்திரபோஸ் தலைமையில் 1938 பிப்ரவரியில் நடைபெற்ற ஹரிபுரா காங்கிரசில் அனைத்திந்திய கிராமக் கைத்தொழில், கதர் பொருட்காட்சியில் காந்திஜி பேசினார். இந்தக் காங்கிரசில் ஆற்றிய தலைமை உரையில், தொழிற் கொள்கையில் காந்திஜிக்கும் தமக்கும் உள்ள கருத்து வேறுபாட்டை மிகவும் நாசூக்கான முறையில் சுபாஷ் தெரிவித்துக் கொண்டார். காங்கிரஸ் தலைவர் தேர்தலிலேயே 1939 தான் மிகவும் குறிப்பிடத்தக்க ஆண்டாக இருந்தது. அந்த ஆண்டில் சுபாஷ்சந்திரபோசும் டாக்டர் பட்டாபி சீத்தாராமையாவும் போட்டியிட்டு அதில் முன்னவர் வெற்றியடைந்தார். மௌலானா அபுல்கலாம் ஆசாத், ஜவாகர்லால் நேரு, இராஜேந்திரப்பிரசாத், புலாபாய் தேசாய், கிருபளானி, சர்தார் வல்லபாய் படேல். மகாத்மா காந்தி ஆகிய பழம்பெரும் தலைவர்களெல்லாம் டாக்டர் சீத்தாராமையாவுக்கு ஆதரவாயிருந்தும் அவர் வெற்றி பெற முடியவில்லை. "இது டாக்டர் பட்டாபியின் தோல்வியைவிட என்னுடைய தோல்வியேயாகும். நான் எந்தக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஆதரிக்கிறேனோ அவைகளை (காங்கிரஸ்) பிரதிநிதிகள் ஆதரிக்க

வில்லை என்பது தெளிவு,'' என்று காந்திஜி கூறினார். காங்கிரஸ் தலைவர் தேர்தல் முடிவைத் தம்முடைய சொந்தத் தோல்வியாக காந்திஜி கருதியதைக் கண்டு சுபாஷ் போஸ் வருந்தினர். ''காந்திஜியின் நம்பிக்கையைப் பெறுவதற்கு நான் என்றென்றும் முயன்று வருவேன். மற்றவர்களுடைய நம்பிக்கையையெல்லாம் பெறுவதில் நான் வெற்றியடைந்தாலும், இந்தியாவின் மிகப் பெரிய மனிதரின் நம்பிக்கையைப் பெறுவிட்டால் அது எனக்குத் தோல்விதான்'' என்று அவர் எழுதினர். திரிபுராவில் காந்திஜியின் மீதும் அவருடைய கொள்கைகளின் மீதும் நம்பிக்கை தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடைசியில் போஸ் பதவியிலிருந்து இறங்க வேண்டியதாகப் போய்விட்டது. 1939 மே முதல் தேதியன்று கல்கத்தாவில் நடைபெற்ற அனைத்திந்தியக் காங்கிரஸ் குழுக் கூட்டத்தில் போஸ் பதவியிலிருந்து விலக, அந்த ஆண்டில் எஞ்சிய காலத்திற்கு டாக்டர் இராஜேந்திரப் பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றார்

தனிப்பட்டோர் அறப்போர்

போலந்தின் மீது ஹிட்லர் படையெடுத்த பின்னர், 1939 செப்டம்பர் 3-ஆம் தேதியன்று ஜெர்மனி மீது போர் தொடுப்பதாக இங்கிலாந்து அறிவித்தது. அதே நாளன்று, இந்தியத் தலைவர்களைக் கலந்து கொள்ளாமலேயே, இந்தியாவும் போரில் பங்கு கொள்கிறதென வைசிராய் அறிவித்தார். 1940 மார்ச் மாத இறுதியில் லாகூரில் நடைபெற்ற முஸ்லிம் லீக் கூட்டத்தில், லீகின் குறிக்கோள் பாகிஸ்தான் பெறுவதே என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. காந்திஜியின் திட்டப்படி முதல் சத்தியாக்ரகியான வினோபா, தனிப்பட்டோர் சத்தியாக்ரகத்தை 1940 அக்டோபர் 17-ஆம் தேதியன்று அவருடைய ஆசிரமம் இருந்த பவுனர் என்ற கிராமத்தில் தொடங்கினர். இரண்டாவது சத்தியாக்ரகியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஜவாகர்லால் நேருவோ, அவருடைய சத்தியாக்ரகத்தைத் தொடங்குவதற்கு முன்பே கைதாகி நான்கு ஆண்டுச் சிறைவாசத் தண்டனை பெற்றார். இதன்பின் வரிசையாகப் பெரிய தலைவர்களெல்லாம் கைதாகிக் கொண்டு வந்தார்கள். 1940 ஏப்ரல் மாத வாக்கில் எல்லாம் தலைவர்களும் ஊழியர்களுமாக மொத்தம் 20,000 சத்தியாக்ரகிகள் தண்டனை பெற்று விட்டார்கள்.

கிரிப்ஸ்

1940-ஜூன் மத்தியில் ஜெர்மனி ருசியாவைத் தாக்கிய தால் உலக அரசியல் நிலவரத்தில் ஒரு புது மாற்றம் ஏற் பட்டு, இந்திய மத்திய அரசாங்க நிருவாக அமைப்பில் பிரிட்டன் சில சீர்திருத்தங்களை அறிவித்தது. ஆனால் இவை காந்திஜிக்கு மன நிறைவை அளிக்கக்கூடியவையாக இல்லை. 1942 பிப்ரவரி 11-ஆம் தேதி பஜாஜ் காலமானார். மார்ச் 22-ஆம் தேதியன்று சர் ஸ்டாப் போர்டு கிரிப்ஸ் இந்தியா விற்குத் தூது வந்தார். அவருடைய திட்டத்தை காந்திஜி கவனமாகக் கேட்ட பின்னர், ''இதுதான் உங்கள் திட்டம் என்றால் நீங்கள் ஏன் இவ்வளவு தூரம் வந்தீர்கள்? முதலில் கிடைக்கும் விமானத்தில் ஏறி உடனே வீடுபோய்ச் சேருங் கள்,'' என்று தயவு தாட்சண்யம் இன்றிச் சொல்லிவிட்டார். அவர் திட்டத்தைப் ''பின் தேதி போட்ட செக்'' என்று காந்திஜி அழைத்தார்.

ராஜாஜியும் காந்திஜியும்

தம்முடன் சேர்ந்து சேவை செய்த தமிழர்களில் யாரை மிகப் பெரியவராக காந்திஜி கருதியிருக்கிறார்? உறுதியாக, ராஜாஜியைத் தான். இதை அவர் ''அரிஜனி''லேயே எழுதினார். ஆனாலும் அதே ராஜாஜியுடன் கருத்து வேறுபட்ட போது அதைக் கூற அவர் தயங்கவில்லை.

வெண்ணெயும் சுண்ணாம்பும்

பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கைக்கு இடங்கொடுக்கக் கூடாது என்ற இயக்கம் வலுவாக இருந்த காலம் 1942. பாகிஸ்தான் பிரிவினைக் கோரிக்கையை பொது வாக ராஜாஜி ஆதரித்தார். காந்திஜி ஆதரிக்கவில்லை. ஆனாலும், முஸ்லிம்கள் ஒன்றை விரும்பினால், அதை எதிர்ப்பவர்கள் போராடத் தயாராய் இருந்தாலொழிய, முஸ்லிம்கள் தங்க ளுடைய கோரிக்கையை அடைவதை யாரும் தடுக்க முடியாது என்று காந்திஜி கூறினார். இவ்வாறு காந்திஜி கூறியது தம் கருத்திற்கு ஆதரவாய் இருப்பதாக ராஜாஜி கூறினார். இதைப் பலர் காந்திஜியின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இது குறித்து ''யங் இந்தியா''வில் எழுதிய போதுதான், தாம் கூறுவதற்கும் ராஜாஜி கூறுவ தற்கும் வெண்ணெய்க்கும் சுண்ணாம்பிற்கும் இடையில் உள்ள வேறுபாடு இருப்பதாக காந்திஜி விளக்கினார்.

ஆனாலும் தமக்கும் ராஜாஜிக்குமிடையே இந்தச் சிக்கலில் இருந்த கருத்து வேறுபாடுகளைப் பெரிது படுத்தக் கூடாது என்று அவர் மக்களைக் கேட்டுக் கொண்டார். இவ்வாறு வெளிப்படையாகவும் தைரியமாகவும் கருத்து வேறுபாடுகளைக் கூறுவது நல்லது தான் என்றும் பொது மக்களுடைய கருத்தைச் சரியான வழியில் உருவாக்க அது உதவும் என்றும் காந்திஜி கருதினர். எவ்வளவோ எதிர்ப்பு இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் இக் கருத்தை உறுதியாக ராஜாஜி கூறி வந்ததை அவர் பாராட்டினர். இக் கருத்தை வெளிப்படையாகக் கூறியதற்காக, ராஜாஜியின் கூட்டங்களில் குழப்பங்களும் வன்முறை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இதை காந்திஜி கண்டிக்கத் தவறவில்லை. ஆனால் ராஜாஜியின் கருத்து இச்சிக்கலில் தவறானது என்பதை அழுத்தந் திருத்தமாகக் கூறவும் அவர் தயங்கவில்லை. மூன்றாவது தரப்பினரான ஆங்கிலேயர் வெளியேறும் வரை பாகிஸ்தான், இந்துஸ்தான் என்ற பேச்செல்லாம் ஆதாரமற்றது என அவர் கூறிவிட்டார். பின்னால் அவர், ''இனி மேல் நான் வெளிப்படையாகப் பொது மக்கள் மத்தியில் ராஜாஜியுடன் உள்ள கருத்து வேறுபாட்டைப் பற்றிப் பேசப் போவதில்லை. அதை நான் வெறுக்கிறேன்'' என்று அறிவித்து இந்தக் கருத்து வேறுபாடுகளைப் பற்றிப் பேசுவதையெல்லாம் நிறுத்தி விட்டார்.

பாராட்டு

1942-ஆகஸ்ட் 8-ஆம் தேதியன்று பம்பாயில் கூடிய அனைத்து இந்தியக் காங்கிரஸ் குழு ''இந்தியாவைவிட்டு வெளியேறு'' என்று பிரிட்டிஷ் அரசைக் கேட்டுக்கொண்டது. இத்தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் காந்திஜியே; அவரிடமே போராட்டத்தைத் தொடங்கி நடத்தும் பொறுப்பு முழுவதும் அளிக்கப் பெற்றது. இப்பொறுப்பை ஏற்றுக் கொண்ட காந்திஜி இந்திய மக்களுக்குச் ''செய் அல்லது செத்து விடு'' என்ற மந்திரத்தை அளித்தார். மறுநாள் காந்திஜியும் மகாதேவ் தேசாயும் பின்னர் கஸ்தூரிபாவும் மற்ற தலைவர்களும் கைது செய்யப்பட்டதையொட்டி இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் கலவரங்கள் நடைபெற்றன; போராட்டம் முடியும் வரை ''அரிஜன்'' சஞ்சிகையை நிறுத்துவதென்று முடிவு செய்யப் பெற்றது. இதற்கு ஒரு வாரம் கழித்து ஆகஸ்ட் 15-ஆம் தேதியன்று காலையில் மகாதேவ் தேசாய் சிறையில் காலமானார்.

ஆகஸ்ட் தீர்மானம்

1943-பிப்ரவரி மாதம் வைசிராயுடனும் இந்தியா அமைச்சருடனும் நீண்ட கடிதப் போக்குவரத்து நடத்திய பின், காந்திஜி மூன்று வார உண்ணு நோன்பை மேற்கொண்டார். இதன் எதிரொலியாக வைசிராய் நிருவாக சபையில் இருந்த சர் எச். பி. மோடி, என். ஆர். சர்க்கார், எம். எஸ். ஆனே ஆகிய மூன்று உறுப்பினர்களும் பதவியைவிட்டு விலகினர்கள். 1943.இல் வங்கத்தில் கொடிய பஞ்சம் ஏற்பட்டுப் பதினைந்து இலட்சம் மக்கள் மாண்டார்கள். 1944-பிப்ரவரி 22-ஆம் தேதி அன்னை கஸ்தூரிபாவும் சிறையில் காலமானார். அந்த ஆண்டு ஏப்ரல் மாதம் காந்திஜிக்கு மலேரியா நோய் கண்டது. மே 5-ஆம் தேதியன்று அவரும் அவருடைய குழுவினரும் விடுதலை செய்யப் பெற்றார்கள்.

கஸ்தூரிபா காலமானார்

கஸ்தூரிபா இறந்த பின்னர் அவருடைய பெயரால் ஒரு நிதி வசூலிக்கப்பட்டது. இது குறிக்கோள் அளவைக் காட்டிலும் அதிகமாகவே வசூலாகியது. இந்தியாவில் பெண்களின் முன்னேற்றத்திற்காக இந்த நிதியைப் பயன்படுத்த காந்திஜி விரும்பினார். ஆகவே கிராமங்களில் வேலை செய்யும் பெண்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக இந்த நிதி செலவிடப் பெற்றது. தமிழகத்தில் மதுரை அருகே உள்ள காந்தி கிராமத்தில் இப்பயிற்சி அளிக்கப்பட்டது. காந்திஜியுடன் மிகவும் நெருங்கிப் பழகியவர்களில் ஒருவரான ஜி. இராமச்சந்திரனும் அவர் வாழ்க்கைத் துணைவியாராகிய சௌந்தரம் ராமச்சந்திரனும் காந்தி கிராமத்தைத் தோற்றுவித்து அதன் மூலம் அரிய நிர்மாண வேலைகளைச் செய்து வருகிறார்கள். கஸ்தூரிபா நிதியின் பணிகள் நீண்டகாலம் தமிழகத்தில் சௌந்தரம் இராமச்சந்திரன் பொறுப்பிலேயே இருந்தன.

கஸ்தூரிபா நிதி

காந்தி - ஜின்னு பேச்சு 1944-செப்டம்பர் 9-ஆம் தேதியன்று தொடங்கி பதினேழு நாட்கள் நடைபெற்றதாயினும் முடிவில் தோல்வி அடைந்தது. 1945-நவம்பரில், இந்திய தேசிய ராணுவ வீரர்கள் மீது டில்லி செங்கோட்டையில் வழக்கு விசாரணை நடந்தது. புலாபாய் தேசாய் தலைமையில் இந்த வீரர்களுக்காக வாதாடியவர்களில் நேருஜியும் ஒருவர். அதன் பின் காந்திஜி அசாம், ஒரிசா, வங்காளம் ஆகிய மாநிலங்களுக்குச் சென்று விட்டுத் தமிழகத்திற்கு வந்தார்.

ஐ. என். ஏ. வழக்கு

இதற்கிடையில் தமிழகத்திற்குள்ளும் பல முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெற்று முடிந்து விட்டன. 1938 ஏப்ரலில் நடைபெற்ற நகராட்சி மன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் மிகப் பெரிய பெரும்பான்மை அடைந்து வெற்றி பெற்றது. பின்னர், மாவட்டக் கழகத் தேர்தல்களிலும் காங்கிரஸ் மாபெரும் வெற்றியடைந்தது. அரிஜனங்களுக்குள்ள குறைகளை அகற்றும் முறையில் சென்னை சட்ட மன்றத்தில் எம். சி. ராஜா கொண்டு வந்த ''குடியுரிமைத் தடை நீக்க மசோதா'' நிறைவேறியது. வடஆர்க்காடு மாவட்டத்திற்கு மது விலக்கு அமுல் விரிவு படுத்தப்பெற்றது.

தமிழகத்தில்

அரிஜன ஆலயப் பிரவேச இயக்கத்தில் தலைவர்களும் ஊழியர்களும் முக்கிய கவனம் செலுத்தி வரலாற்று முக்கியத்துவம் மிக்க சாதனைகளைப் புரிந்தார்கள். 1939-ஜூலை 8-ஆம் தேதியன்று மதுரையில் உள்ள பெயர் பெற்ற ஆலயமான ஸ்ரீ மீனுட்சியம்மன் கோவிலில் ஆலயப் பிரவேசம் நடைபெற்றது. பின்னர், தஞ்சைப் பெரிய கோவிலிலும் மற்றும் சில ஆலயங்களிலும் ஆலயப் பிரவேசம் நடைபெற்றது.

ஆலயப் பிரவேசம்

மதுரை ஸ்ரீ மீனுட்சி ஆலயப் பிரவேசத்தைப் பற்றி மகாத்மா காந்தி 'அரிஜனில்' (12-7-39) பாராட்டி, வரவேற்று எழுதியிருந்தார். ''மக்களுடைய கருத்தை உருவாக்குவதில் ஓயாது ஒழியாது முயன்ற ஸ்ரீ வைத்தியநாத ஐயருக்கும் அவருடைய சகாக்களுக்கும் நம்முடைய பாராட்டுக்களெல்லாம் உரித்தாகும்,'' என்று அவர் கூறியிருந்தார். தஞ்சாவூர் அரண்மனையைச் சேர்ந்த ஆலயங்களை ராஜா ஸ்ரீ ராஜாராம் ராஜா சாகிப் திறந்து விட்ட போதும், காந்திஜி அவரைப் பெரிதும் பாராட்டினார். குற்றாலம் ஆலயம் திறந்து விடப்பட்டபோது அதன் நிருவாகியையும் அப்பகுதி அரிஜன சேவா சங்கத் தலைவரையும் பாராட்டினார்.

ஐயருக்குப் பாராட்டு

ஆலயப் பிரவேசங்களை முழுமூச்சாக ஆதரித்த காந்திஜி, ஆலயங்களுக்கு நிதி கூடாது எனக் கூறிய போது அது சிலருக்கு வியப்பை ஏற்படுத்தியது. ஓ. பி. இராமசாமி

ரெட்டியார் முதலமைச்சராக இருந்த போது இது நிகழ்ந்தது. ரெட்டியார் கூறுகிறார் : ''1947-ஆம் ஆண்டில் நான் முதலமைச்சராக இருந்தபோது, கோவில்கள், மடங்கள் ஆகியவைகளுக்கு நிதிகூடாதென காந்திஜி 'அரிஜனில்' எழுதியிருந்தார். அந்தச் சமயம் நான் டில்லிக்குப் போயிருந்தேன். 'நான் கோவில்களையும், மடங்களையும் கலைக்கத் தயாராயில்லை' என்று சொன்னேன். நான் கொஞ்சம் வேகமாகப் பேசினேன் என்றும் சொல்லலாம். கடைசியாக காந்திஜி என்னிடம், 'கோவில் எப்படிவந்தது?' என்று கேட்டார். 'பக்தியால் வந்தது' என்று சொன்னேன்.

நிதி கூடாது

காந்திஜி 'நீங்கள் சொல்வதை ஒப்புக் கொள்கிறேன். பக்தியால் கோவில் வந்தது என்றால், கோவில்களில் பணம் இருப்பது கெடுதல். இப்போது சீக்கிய நாட்டில் நடப்பதைப் பாருங்கள். பணம் இருந்தால் பக்தி வளராது, பணம் இல்லாவிட்டால்தான் பக்தி வளரும். மக்கள் தாமாகவே முன் வந்து ஆலயங்களுக்கு விளக்குப் போடுவார்கள். கோவில்களுக்கு வேண்டிய காரியங்களை எல்லாம் செய்வார்கள். சொத்து அதிகம் இருந்தாலோ சண்டைதான் மிச்சமாகும். ஆகையால், கோவில்களுக்கும், மடங்களுக்கும் அதிகச் சொத்து இருக்கக் கூடாது' என்று சொன்னார்.''

இந்தியாவின் சம்மதம் இல்லாமலேயே அது போரில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதற்கு வருத்தம் தெரிவித்துச் சென்னை சட்டசபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது; சென்னை அமைச்சரவையும் பதவியிலிருந்து விலகியது. வேறு எந்தக் கட்சியும் ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் தகுந்த வலுவுடையதாக இல்லாததால், கவர்னரே மூன்று ஐ. சி. எஸ். அதிகாரிகளை ஆலோசகர்களாக நியமித்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

அமைச்சரவை பதவி விலகல்

1941 தொடக்கத்திலெல்லாம் சட்ட மறுப்புப் போராட்டம் தமிழகத்தில் வேகமடைந்தது. தமிழ் நாடு காங்கிரஸ் தன்னை ஒரு சத்தியாக்ரகக் குழுவாக அமைத்துக்கொண்டு தொண்டர்களைச் சேர்த்தது. தனிப்பட்ட சத்தியாக்ரகப்

போராட்டத்தில் முதல் சத்தியாக்ரகியான விஜேபாபாவே கைதானதைக் கண்டித்து மதுரை மாவட்டக் கழகம் தனது கூட்டத்தைத் தள்ளி வைத்தது. தமிழக மெங்கும் ஆயிரக் கணக்கானோர் கைதாகிச் சிறைக்குள் தள்ளப் பெற்றார்கள். இந்தியா முழுவதற்கும் பொதுவான தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டுமென்றும் முஸ்லிம்களின் பாகிஸ்தான் கோரிக்கையை ஒப்புக்கொள்ள வேண்டுமென்றும் இராஜகோபாலாச்சாரி கூறியது பலத்த வாக்குவாதத்திற்கு இடமாயிற்று. தமிழ் நாடு காங்கிரஸ் குழு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாகக் கூறியதன்பேரில், காங்கிரஸ் கட்சி உறுப்பினராக இருப்பதிலிருந்தும் சென்னை சட்டசபை உறுப்பினராக இருப்பதிலிருந்தும் ராஜாஜி விலகினார். இதைத் தொடர்ந்து அவைத் தலைவரான பி. சாம்பமூர்த்தி, டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன், இராமநாதன் ஆகியோரும் சட்டசபை உறுப்பினர் பதவியிலிருந்து விலகினார்கள். இவ்வாறு தமிழ் நாடு காங்கிரசில் கிட்டத்தட்ட ஒரு நெருக்கடியான நிலை உருவாயிற்று. என்றாலும் தமிழகக் காங்கிரஸ் பொறுப்பில் இருந்தவர்கள் மனந்தளராது தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கூட்டங்கள் நடத்தி, மக்கள் காந்திஜியின் தலைமையைப் பின் பற்ற வேண்டும் என்றும் அனைத்து இந்தியக் காங்கிரஸ் குழு என்ன முடிவு செய்தாலும் அதை ஏற்று நடக்க வேண்டுமென்றும் பிரச்சாரம் செய்து குழப்ப நிலையை அகற்றினர்.

சட்ட மறுப்பு

தனிப்பட்டோர் சத்தியாக்ரகத்தில் ஒரு சுவையான நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிட வேண்டும். சத்தியசந்தர்கள் கூறுவது பலிக்கும் என்பதற்கு அது ஒரு சான்று: மதுரை தேச பக்தர் எல். கிருஷ்ணசாமி பாரதி தனிப்பட்டோர் சத்தியாக்ரகத்தில் சேர்ந்து 1940 நவம்பரில் சிறைக்குச்சென்றார். அவரைப்போன்று அறப்போரில் பங்குகொண்டு சிறைக்குச் செல்ல வேண்டும் என அவருடைய மனைவி இலட்சுமி கிருஷ்ணசாமி பாரதி மிகுந்த ஆவலுடன் இருந்தார். ஆனாலும் அப்பொழுது அவர் இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்ததாலும் நோய் சற்றுக் கடுமையாகவே இருந்ததாலும் அவர் சிறைக்குச் செல்வது உசிதமாகாது என்று அவருடைய நெருங்கிய உறவினர்களும் நண்பர்களும் அவருக்கு ஆலோசனை கூறினார்கள். அவரைச் சோதித்த டாக்டர்கள்

இலட்சுமி பாரதி

அவர் சிறைக்குச் சென்றால் உயிருடன் திரும்பி வருவது கூட அரிது என்ற கருத்துத் தெரிவித்தனர். அம்மையாரோ எப்படியும் சிறைக்குச் சென்றே தீருவது என்று துடியாய்த் துடித்துக்கொண்டிருந்தார். இந்த நிலைமையில், அவர், சிறைக்குச் செல்லாது தடுப்பதற்கு ஜி. இராமச்சந்திரன் ஒரு யுக்தியைக் கையாண்டார். (அந்தச் சமயத்தில் இராமச் சந்திரன் மதுரையில் கிருஷ்ணசாமி பாரதி இல்லத்தில்தான் தங்கியிருந்தார்.) நிலைமையை எடுத்துக்கூறி காந்திஜிக்கு அவர் ஒரு கடிதம் எழுதினர். காந்திஜியும் உடனே இலட்சுமிக்குத் தம் கைப்பட.....

''அன்புள்ள சகோதரி,

உங்களுடைய உடல் நலத்தின் காரணமாக நீங்கள் சட்ட மறுப்புப் போரில் ஈடுபட வேண்டியதில்லை.

உங்களுடைய
பாபு''

என்று ஒரு கடிதம் எழுதினர். ஆனால் காந்திஜியின் சொல்லையும் கூட மீறி அந்த அம்மையார் அறப்போரில் பங்கு கொண்டு சிறைக்குச் சென்று விட்டார். இதை அறிந்த கிருஷ்ணசாமி பாரதி காந்திஜிக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதி அதில் அண்ணலின் சொல்லையும் மீறித் தம் மனைவி சிறைவாசம் ஏற்றதற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார். அதற்கு காந்திஜி எழுதிய பதில் மிகவும் உருக்கமானது. அவருடைய பரந்த உள்ளத்தை அது எடுத்துக் காட்டியது. காந்திஜி தம் பதிலில் கூறியிருந்தார்: ''ஒரு இந்து மாது தம் கணவனின் அடிச்சுவட்டைப் பின் பற்றுவது சரியே; அதைத்தான் உங்கள் மனைவி செய்திருக்கிறார். என்னுடைய உத்தரவை மீறியதாக நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். ஆனால் அதைக் காட்டிலும் உயர்ந்த மற்றொரு அழைப்பை, தேசத்தின் அழைப்பை ஏற்று அவர் இவ்வாறு செய்துள்ளார். விரைவில் அவருடைய உடல் நலம் சரியாகிவிடும். நீங்கள் கவலைப்பட வேண்டாம்'' என்று எழுதியிருந்தார். என்ன வியப்பு! அவ்வளவு கடும் இருதய நோயால் பீடிக்கப்பட்டிருந்த திருமதி பாரதி நோய் குணம் பெற்று வெளியே வந்தார். தொடர்ந்து நல்ல உடல் நலத்துடனே இருந்தும் வருகிறார். அண்ணலின் சத்திய வாக்குப் பலித்தது. மற்றொரு சமயத்தில் இதேபோன்ற வியப்பான நிகழ்ச்சி ஒன்று சென்னையில் நடைபெற்றது.

மற்றொரு நிகழ்ச்சி

''காந்திஜி சென்னைக்கு வந்தபொழுது இங்கிலாந்தின் தொழிலாளர் தலைவர் பென்னர் பிராக்வே உடல்நலமின்றி ஆஸ்பத்திரியில் இருப்பதாக அறிந்தார். உடனே அங்குச் சென்றார். அவரிடம் என்ன உடற்கோளாறு என்று அறிய முயன்றார். ''தூக்கமே சரியாக வருவதில்லை; தூங்கினால் எல்லாம் சரியாகி விடும்'' என்று பிராக்வே கூறினார். ''ஆம், நீங்கள் சொல்வது மிகவும் உண்மை, தூக்கத்திற்கு அபார ஆற்றல் உள்ளது, அதனால் உடம்பில் இரசாயன மாறுதல்கள் ஏற்பட்டு அற்புத விளைவுகள் உண்டாவதை நான் கண்டிருக்கிறேன்'' என்று சொல்லிக்கொண்டே காந்திஜி, தம் கையை அவர் நெற்றியில் வைத்துக் கண்ணை மூடி மௌனமாகச் சிறிது நேரம் நின்றார். அவர் தம் கையின் வழியே என்ன காந்த சக்தியைச் செலுத்தினாரோ அல்லது பிரார்த்தனை செய்தாரோ யாருக்குத் தெரியும்? சிறிது நேரம் கழித்துக் கண்ணைத் திறந்து பிராக்வேயைப் பார்த்து ''நீங்கள் இனி சுகமாகத் தூங்குவீர்கள். அதன்மூலம் பூரண குணமடைவீர்கள்'' என்று கூறி விடை பெற்றார். என்ன ஆச்சர்யம்! காந்திஜி அந்த அறையை விட்டு வெளியேறுவதற்கு முன்னரே பிராக்வே கனவற்ற தூக்கத்தில் ஆழ்ந்தார். விரைவிலேயே பூரண குணமும் அடைந்தார்.''

ஆகஸ்ட் போராட்டம்

ஆகஸ்ட் தீர்மானத்தையொட்டி முக்கிய தலைவர்களெல்லாம் கைதானார்களல்லவா? அதன் எதிரொலி தமிழகத்தில் மிகவும் பலமாக இருந்தது; எல்லாப் பகுதிகளிலுமே ஊர்வலங்களும் ஆரவாரங்களும் நடைபெற்றன; போலீசாரின் அடக்குமுறை தலைவிரித்தாடியது; ஏராளமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மதுரை ஸ்ரீ மீனாட்சி ஆலயத்தில் ஒரு போலீஸ் அதிகாரியின் மீது திராவகம் வீசப்பட்டது. சிறிது காலம் தணிந்திருந்த மக்கள் உணர்ச்சி 1943 பிப்ரவரியில் அண்ணல் சிறைக்குள் உண்ணாநோன்பிருந்தபோது மீண்டும் கொதித்தெழுந்தது. அப்போது தமிழகத்தில் நடைபெற்ற போராட்டத்தில் மாணவர்கள் அதிகம் பங்கு கொண்டனர். காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த பலர் தலைமறைவாக இருந்து இயங்கத் தொடங்கினார்கள். 1945-இல் விடுதலையானவுடன், பக்தவத்சலம், உபயதுல்லா, வேங்கடாசலபதி ஆகியோர், காந்திஜியைச் சந்தித்து, காங்கிரஸ் தடை செய்யப்பட்டிருந்ததால், தமிழகத்தில் நிருமாணத் திட்டப்

பணிபுரிவது குறித்து ஆலோசனை கேட்பதற்காக சேவா கிராமத்திற்குச் சென்றிருந்தார்கள்.

ராஜாஜி எதிர்ப்பு

1945-இல் ராஜாஜி காங்கிரசில் திரும்பிச் சேர்ந்த போது, பலர் அவருடைய வருகையை விரும்பவில்லை. காங்கிரசுக்குள் ராஜாஜி எதிர்ப்புத் தீவிரமாக இருந்த காலம் அது. கருத்து வேறுபாட்டை விசாரித்து அகற்றுவதற்காக வந்த ஆசப் அலியின் முயற்சி தற்காலிக வெற்றி அளித்தது. ஆனாலும் நிலையான சமரசம் ஏற்படவில்லை.

நீதிக்கட்சி மாநாடு

இவ்வாறு 1939க்கும் 46க்கும் இடையே காங்கிரஸ் விடுதலைக்காகப் பாடுபட்டுக் கொண்டிருந்த காலத்தில் மற்ற சில கட்சிகள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்தன; அரசாங்கத்தின் நிலையை வலுப்படுத்தும் முயற்சிகளுக்கு உதவின. பெரியார் ஈ. வெ. இராமசாமி காஞ்சிவரத்தில் நீதிக் கட்சி மாநாடு ஒன்றைக் கூட்டி, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளைப் பேசும் பகுதிகளை ஒரு தனி திராவிட நாடாகப் பிரிக்க வேண்டுமென்று கோரி, அதன் படத்தையும் திறந்து வைத்தார். இதன்பின் திராவிடக் கழகம் என்ற ஒரு கட்சி அவர் தலைமையின் கீழ் அமைந்தது. நீதிக் கட்சியில் இருந்த பலர் அதில் வந்து சேர்ந்தார்கள். பின்னர், பெரியாருடன் கருத்து வேறுபட்டு அறிஞர் சி. என். அண்ணாதுரையும் (பின்னர் தமிழக முதலமைச்சரானவர்) அவருடைய ஆதரவாளர்களும் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில் தனிக் கட்சி அமைத்தது அனைவரும் அறிந்ததே.

திராவிட நாடு

நாட்டுப் பிரிவினை என்பது காந்திஜியின் கருத்திற்குக் கடுகளவும் ஒவ்வாத ஒன்று. பாகிஸ்தான் பிரிவினையை அவர் ஆதரிக்கவில்லை. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளையும் பேசும் மக்களைக் கொண்ட திராவிட நாட்டைத் தனியாகப் பிரிக்க வேண்டும் என்று கோரி தமிழகத்தில் ஓர் இயக்கம் நடைபெற்ற போது, அதைப்பற்றி அண்ணல் பேசியும் எழுதியும் இருக்கிறார். 1947-இல் அவர் கூறினார்: ''இந்த நான்கு மொழிகளையும் பேசும் பகுதி இந்தியாவிலிருந்து ஏன் பிரிந்து செல்ல

வேண்டும்? வளம் பொருந்திய இம்மொழிகள் சமஸ்கிருதத்திலிருந்து மேலும் வளம்பெறவில்லையா? இந்த நான்கு மாநிலங்களிலும் நான் சுற்றுப் பயணம் செய்திருக்கிறேன். அம்மாநிலங்களுக்கும் பிறமாநிலங்களுக்குமிடையே வேறுபாடுகள் இருப்பதாய் நான் காணவில்லை. விந்திய மலைக்குத் தெற்கே உள்ளவர்களெல்லாம் ஆரியர் அல்லாதார் என்றும் அதற்கு வடக்கே உள்ளவர் எல்லாம் ஆரியர்கள் என்றும் கருதுவது ஒரு கற்பனை. ஒரு காலத்தில் எப்படி இருந்ததோ தெரியாது. ஆனால் இப்போது இரண்டு இனத்தவருமே கலந்து விட்டார்கள்; காஷ்மீரிலிருந்து கன்னியாகுமரி வரை வாழும் இந்தியர்கள் அனைவரும் ஒருவரே என்று கூறும் அளவிற்கு ஒன்றுகி விட்டனர்.''

அண்ணலின் திருப்பாதங்கள் கடைசியாகத் தெய்வத் தமிழக மண்ணிற்பட்டது 1946-ஆம் ஆண்டிலாகும். முதன் முதலாக 1896-ஆம் ஆண்டில் இங்கு வந்த காந்திஜி சரியாக ஐம்பது ஆண்டுகள் கழித்துக் கடைசி முறையாகக் கன்னித் தமிழகத்திற்கு வருகை புரிந்தார். முதல் வருகையின் போதும் ஒரு தலைவராகவே வந்தார்; கடைசி வருகையின் போதும் தலைவராகவே வருகை புரிந்தார். ஆனால் இந்த ஐம்பதாண்டு காலத்தில் அவர் அடைந்திருந்த மாபெரும் வளர்ச்சிதான் என்னே! ஒரு சிறு குன்றாக இருந்து மகாமேருவாக வளர்ந்திருந்தார். முதன் முதலாக அவர் சென்னைக்கு வந்தபோது அவர் வந்த பின்புதான் சென்னை மாநகர மக்கள் அவரை அறிந்தார்கள். ஆனால் கடைசி முறையாக அவர் வந்த போதோ அவரைக் காண வரும் மக்கள் கூட்டத்தைச் சமாளிக்க அதிகப்படியான இரயில்களும் பஸ்களும் விட வேண்டியதாகப் போயிற்று. இம்முறை இந்திப் பிரச்சார சபை வெள்ளி விழாவிற்காகவும், அரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்திருந்த மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவில், பழனி ஸ்ரீ பழனியாண்டவர் கோவில் ஆகிய ஆலயங்களுக்குச் சென்று வழிபடவும் வந்திருந்தார். உண்மையில் இந்திப் பிரச்சாரசபை வெள்ளிவிழா இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே நடைபெற வேண்டிய ஒன்றாகும். ஆயினும், காந்திஜி தலைமையின் கீழ் இந்த விழாவை நடத்த வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடனேயே இந்த விழா இரண்டு ஆண்டுகள் தள்ளி வைக்கப்பெற்றது. அவருடைய வருகையை முன்னிட்டு இந்துஸ்தானிப் பிரச்சாரசபை இருக்கும் மாம்பலமே ஒரு புது

கடைசி வருகை

நகராக சோபித்தது. இந்திப் பிரச்சார சபையை மையமாக வைத்து அதைச் சுற்றி மூன்று அழகான, பிரம்மாண்டமான வாயில்கள் கஸ்தூரிபா வாசல், பஜாஜ்வாசல், ஹிந்துஸ்தானி வாசல் என்ற பெயர்களில் நிருமாணிக்கப் பெற்றன. ''ஆனந்த விகடன்'' அதிபரான எஸ். எஸ். வாசன் எழில் நிறைந்த இவ்வாசல்களை அமைத்து உதவினர். கஸ்தூரிபா வாசலைத் திருமதி ஜம்னலால் பஜாஜும் ஜம்னலால் பஜாஜ் வாசலை சி. இராஜகோபாலச்சாரியும் இந்துஸ்தானி வாசலை காகாகலேல்கரும் திறந்து வைத்தார்கள். எல்லா வாசல்களிலுமே அழகான சித்திர வேலைப்பாடுகளும் புராண அடிப்படையில் காந்திஜியின் வாழ்க்கையும் சித்தரிக்கப் பெற்றிருந்தன. இந்த விழாவிற்குத் தமிழகம் மட்டுமல்லாமல் ஆந்திரம், கர்நாடகம், கேரளம் ஆகிய பகுதிகளிலிருந்தும் ஆண், பெண் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். இந்த விழா நடைபெற்ற காலத்தில் இந்திப் பிரச்சாரசபைப் பகுதி காந்தி நகர் என்றும் அதற்குக் கீழ்புறம் காட்சிசாலை அமைக்கப் பெற்ற பகுதி இந்துஸ்தானி நகர் என்றும் வழங்கப்பெற்றது. விழாசிறப்பாக நடைபெறுவதற்குப் பெரிய லுங்கி வணிகரான ஸ்ரீ ராமுலு செட்டியார் பெருந்தொகை நன்கொடை அளித்தார். திருமதிகள் ஆப்தேயும் அம்புஜம்மாளும் பெண் தொண்டர் படை வேலைகளைக் கவனித்தனர்; ஆண்கள் தொண்டர்படை ஏற்பாட்டை சி. ஆர். பட்டாபிராமன் கவனித்து வந்தார்.

21–1–46

முன்கூட்டி வந்தார்

உண்மையில் இரண்டு நாட்கள் கழித்து, அதாவது ஜனவரி 23-ஆம் தேதியன்று தான் காந்திஜி சென்னைக்கு வரவேண்டியவர். ஒவ்வொரு மாதமும் கஸ்தூரிபா இறந்த 22-ஆம் தேதியை அவர் பக்தி உணர்ச்சியுடன் அனுசரித்து வந்தார். ஆகவே, காந்திஜி முன் கூட்டியே கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு இரண்டு நாட்கள் முன்னதாகவே சென்னைக்கு வருவதாக அறிவித்தார். ஜனவரி 21-ஆம் தேதி திங்கட்கிழமையன்று மாலை அம்பத்தூர் இரயில் நிலையத்தில் வந்திறங்கினார். அவர் கூட்ட நெருக்கடியில் அகப்பட்டுச் சிரமப்படாமல் இருப்பதற்காக அவர் வந்த தனி இரயிலை கல்கத்தா மெயிலிலிருந்து பம்பாய் மெயிலுக்கு மாற்றி அம்பத்தூர் இரயில் நிலையத்தில் அவரை இறக்கினார்கள்.

ராஜாஜி, கோபால்சாமி, அப்போது தமிழகக் காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜ், எம். சத்திய நாராயணு, கமல நயன்பஜாஜ், டாக்டர் பி. சுப்பராயன் ஆகியோர் அம்பத்தூர் இரயில் நிலையத்திற்கு காந்திஜியை வரவேற்க வந்திருந்தனர். வழக்கமான 'முழத்துண்டை'க் கட்டிக் கொண்டு மேலே ஒன்றும் போடாமல், வந்திருந்தவர்களைப் பார்த்துக் கும்பிட்டுக் கொண்டு காந்திஜி இரயிலிலிருந்து இறங்கினர்; அவருடைய மௌன விரதம் அப்போது முடியவில்லையாகை யால் ஒன்றும் பேசவில்லை. அப்போது அவருடைய இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த கடிகாரப்படி மணி 4-15. காமராஜ் அவருக்கு மாலை சூட்டினர். மக்கள் கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக மகாத்மாவை அம்பத்தூர் இரயில் நிலையத் தில் இறக்கினர்கள் என்பது மட்டுமல்ல, அவ்வாறு இறக்கப் போகும் செய்தியை ராஜாஜி போன்ற பெரிய தலைவர் களுக்குங் கூடத் தெரியாமல் இரகசியமாக வைத்திருந்தனர். மக்கள் கூட்டத்தைத் தவிர்ப்பதற்காக இந்த ஏற்பாட்டை இரயில்வே மாவட்டப் போலீஸ் சூப்பரின்டெண்ட் எம். சுராஜ்தின் செய்திருந்தார். அவரே சத்யநாராயணு, ராஜாஜி, என். கோபாலசாமி ஐயங்கார் ஆகியோர் இல்லங் களுக்குச் சென்று அவர்களை மட்டும் அழைத்துக் கொண்டு அம்பத்தூர் சென்றார். மற்றவர்களெல்லாம் எப்படியோ பின்னல் அறிந்தவர்கள் தான். வழியில் பொன்னேரிப் பொதுமக்களோ 'பல வந்தமாக' காந்திஜி வந்த இரயிலை நிறுத்தி அவர் தரிசனத்தைப் பெற்றுக் கொண்டு அவரிடம் ஒரு சிறு பண முடிப்பையும் அளித்தார்கள்.

தமிழும் தெலுங்கும்

ஐந்து மணியடிக்கப் பத்து நிமிடம் இருந்தபோதெல் லாம் காந்திஜி இந்திப் பிரச்சார சபைக் கட்டிடத்திற்கு வந்து சேர்ந்துவிட்டார். அவர் வந்து இறங்கிய போது கூட்டம் மிகவும் அமைதியாக நடந்து கொண்டது. ஆரத்தி எடுப்பதற்காக வாசலில் ஏராளமான பெண்கள் கூட்டம். இந்தச் சென்னை வருகையின்போது காந்திஜி தமிழ், தெலுங்கு ஆகிய இருமொழிகளைக் குறித்தும் நடந்துகொண்ட முறை அந்தக் காலத்தில் இருந்த ''சென்னை யாருக்கு? ஆந்திரருக்கா தமிழருக்கா?'' என்ற கேள்விக்கு ஒரு வகையில் மறைமுக மாக மறுமொழி அளிப்பது போன்று தென்பட்டது. இந்தப் பெண்கள் கூட்டத்தில் ஓர் அம்மையார் காந்திஜி ஏதாவது தமிழில் பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்

காந்திஜி உரக்கச் சிரித்துக்கொண்டே, ''என்னு, தமிழா, தெரியுமே'' என்று பதில் சொன்னார். உடனே, ஆந்திரப் பெண்மணி ஒருவர் காந்திஜி தெலுங்கிலும் சில சொற்கள் சொல்ல வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். காந்திஜி இந்துஸ்தானியிலேயே ''எனக்குத் தெலுங்கு தெரியும். ஆனாலும் அனைவரும் இஸ்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டும்'' என்று மறுமொறு அழித்தார்.*

22-1-46

அன்பர்கள் சந்திப்பு

இரண்டாம் நாளன்று அதிகாலையில் காந்திஜியும் அவர் குழுவினரும் கஸ்தூர்பா நாளாகையால் கீதை முழுவதையும் பாராயணம் செய்தார்கள். வெளி அலுவலெதுவும் அவர் வைத்துக்கொள்ளவில்லையென்றாலும், அவர் இருப்பிடத்திற்கு வந்து அவரைப் பலர் பேட்டி கண்ட வண்ணமாய் இருந்தார்கள். சத்தியமூர்த்தியின் மனைவியாரும் அவர் குமாரத்தியும் காந்திஜியைச் சந்தித்தபோது, அவர்களுடைய நலத்தை அவர் அன்போடு விசாரித்து அனுப்பி வைத்தார். சட்டசபைக்கு அரிஜன அபேட்சகர்களைத் தேர்ந்தெடுப்பது குறித்து, 1936-இல் அரிஜனத் தலைவர்களுக்கும் சத்தியமூர்த்திக்கும் இடையே ஓர் உடன்பாடு (எழுத்து மூலமாக) இருந்தது. அந்த உடன்பாடு இன்னும் செல்லுபடியாக வேண்டுமென்று வலியுறுத்தவும் அரிஜனங்களைக் குறித்துக் காங்கிரசின் அதிகாரப்பூர்வமான கொள்கையில் மாற்றம் எதுவும் ஏற்பட்டுள்ளதா என்பதை அறிந்து கொள்ளவும் அரிஜனங்களின் தலைவரான ஜே. சிவசண்முகம்பிள்ளை (பின்னர் சென்னைச் சட்டசபை அவைத் தலைவரானவர்) காந்திஜியைச் சந்தித்தார். ''உடன்பாடு இன்னும் செல்லுபடியாகும்'' என்று காந்திஜி அவருக்கு உறுதி அளித்தார்.

பிரார்த்தனைக் கூட்டம்

இன்று பொதுமக்களும் பங்கு கொள்ளக்கூடிய பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவதென்று திடீரென முடிவு செய்யப்பெற்று அது மாலை ஐந்தரை மணிக்கு நடைபெற்றது. முன்கூட்டியே அறிவிக்கப்படவில்லையானாலும் இப்பிரார்த்தனைக் கூட்டத்தில் பன்னிரண்டாயிரம் மக்கள் கலந்து கொண்டார்களென்றும், காந்திஜியைக் காண வேண்டுமென்று எத்தனை

* ''சுதேசமித்திரன்'' ஜனவரி 22-23 இதழ்

ஆயிரம் பேர் அப்பகுதியில் ரோந்து சுற்றிக்கொண்டு இருந்திருப்பார்கள் என்பதை நாம் ஒருவாறு யூகிக்கலாம். எச். டி. ராஜா, ஏ. சுப்பையா, பெத்தாபுரம் இளவரசர் ஆகியோர் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு நன்கு ஏற்பாடு செய்திருந்தனர். இப்பிரார்த்தனைக் கூட்டத்தில் திருமதி அகதா ஹாரிசனும் உடன் இருந்தார். காந்திஜி இந்துஸ்தானியில் நிகழ்த்திய சொற்பொழிவை இந்திப்பிரச்சாரகர் ஜி. சுப்ரமணியம் தமிழில் மொழி பெயர்த்தார்.

சாஸ்திரியார் சந்திப்பு

இச்சமயத்தில் மகாகனம் சீனிவாச சாஸ்திரியார் உடல் நலம் மிகவும் குன்றியிருந்தது. அவர் அரசாங்கத் தலைமை மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். காந்திஜி அவரை மூன்று முறை சந்தித்து - இரு முறை மருத்துவமனையிலும், ஒரு முறை அவருடைய இல்லத்திலும் - அவருடைய உடல் நலம் பற்றி விசாரித்தார். இந்தச் சந்திப்புகள் மிகவும் உருக்கமாக இருந்தன. இந்தச் சந்திப்புகளைப் பற்றித் திருமதி சுசிலா நையார், சாஸ்திரியார் காலமானபின் 'அரிஜன்' பத்திரிகையில் விவரமாக எழுதினர்.

முதல் முறை

முதன் முதலாக சாஸ்திரியாரை காந்திஜி சந்தித்தது ஜனவரி 22-ஆம் தேதியாகும். சாஸ்திரியாருக்கு வைத்தியம் பார்த்த டாக்டர் சீனிவாசன் அவரை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல, மருத்துவமனை சூபரிண்டெண்டான எம். ஏ. ஷெப்பர்டு, ஆர். எம். ஓ. வி. கே. வேங்கடராமன் ஆகிய இருவரும் மருத்துவமனையில் அவரை வரவேற்றனர். காந்திஜி சாஸ்திரியைப் பார்க்க வந்தபோதும், பார்த்து விட்டுப் புறப்பட்டபோதும் நடைபாதையில் மருத்துவமனை அலுவலர்களும் சில பிணியாளர்களும் அவரை வரவேற்றும் வழியனுப்பியும் வைத்தனர். மருத்துவமனையைவிட்டு வெளிச் செல்லுமுன் ஒரு வார்டுக்குச் சென்று அங்கிருந்த நோயாளிகளின் நிலைமையை காந்திஜி விசாரித்தார்.

முரண் பாடுகள்

தமிழர்களில் காந்திஜியின் உள்ளத்தை மிக அதிகம் கவர்ந்த ஓரிருவரில் மகாகனம் சாஸ்திரியார் ஒருவர். தம் அரசியல் ஆசானாகிய கோகலே தென்னாப்பிரிக்கா விற்கு வந்திருந்த சமயம் சாஸ்திரியாரைப் பற்றிக் கூறியதனால் தொடக்கத்திலிருந்தே அவர் மீது காந்திஜிக்குத் தனி அன்பும் மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டுவிட்டது. வி. எஸ். சீனிவாச

சாஸ்திரி (1869-1946) இந்தியாவில் மித வாதிகள் என்று அழைக்கப் பெற்ற அரசியல் பிரிவைச் சேர்ந்தவர்; கோகலே யின் சிடர்; அவருடைய மரணத்திற்குப் பின்னல், இந்திய ஊழியர் சங்கத்தின் தலைவரானார். மகாத்மா காந்தி எழுதிய ''சத்திய சோதனை'' நூலின் ஆங்கில மொழி பெயர்ப்பு வாசகத்தைப் படித்துப் பார்த்து உரிய இடங்களில் திருத்திக் கொடுத்த இவர், ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்தி லும் பெரிய வல்லுநரும் ஆங்கிலத்தில் உலகப் புகழ் பெற்ற பேச்சாளரும் ஆவார். காந்திஜியை இவர் நேரில் முதன் முதலாகச் சந்தித்தது 1915 ஜனவரி 9-ஆம் தேதியன்றாகும். அப்போது காந்திஜியைப் பற்றித் தமக்கு ஏற்பட்ட கருத்துக் களைத் தம் சகோதரருக்கு எழுதினார். அதில் காந்திஜியின் பேச்சு முறையும் அடக்கமாக எப்போதும் தலை வணங்கி யிருக்கும் பாவமும் தம் நெருங்கிய நண்பர் கிருஷ்ணசாமி ஐயரைப் போன்று இருந்தது என்று கூறியுள்ளார். சாஸ் திரிக்கும் காந்திஜிக்கும் எத்துணையோ அம்சங்களில் முரண் பாடுகள் உண்டு. அரசியலில் சாஸ்திரி ஒரு மிதவாதி; காந்திஜி தீவிரவாதி. ஆனால் இவைகளுக்கிடையே அவர் களுடைய நட்பு நாளுக்கு நாள் பசுமை பூத்து வளர்ந்தது; ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையும் கூடியதே யொழியக் குறையவில்லை. இருவரும் - காந்திஜி கூறியவாறு - ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் போல இருந்தார்கள்.

காந்திஜிக்குப் பாராட்டு

காந்திஜிக்கு சாஸ்திரியிடம் மரியாதை இருந்தது போலவே சாஸ்திரிக்கும் காந்திஜியிடம் அளவிலா மரியாதை இருந்தது. தம் சகாப்தத் தில் உலகத்தில் வாழ்ந்த மிகப் பெரிய மனிதர் காந்திஜி தான் என்பதில் சாஸ்திரிக்கு உறுதி யான நம்பிக்கை உண்டு.

மனச்சாட்சி காவலர்

சாஸ்திரியிடம் காந்திஜிக்கு மிகவும் பிடித்தது அவ ருடைய சத்தியம். ஏதாவது ஒரு சிக்கலைப் பற்றி சாஸ்திரி கருத்துத் தெரிவித்தால் அது அவர் மனச் சாட்சியிலிருந்து வந்ததாக இருக்கும் என்பதில் காந்திஜிக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. அதனால் தான் அவர் ஒரு முறை சாஸ்திரிக்கு எழுதினார்: ''நீங்கள் என்னைப்பற்றி விமரிசனம் செய்தால் என் மனம் நிம்மதி அடைகிறது. பேசாமல் இருந்து விட்

டாலோ எனக்குப் பதட்டம் ஏற்பட்டு விடுகிறது.'' இந்த வகையில் பார்க்கும்போது அண்ணலுக்கு ராஜாஜியைப் போன்றே இவரும் ''மனச் சாட்சியின் காவலராக'' (Conscience – keeper) இருந்து வந்திருக்கிறார்.

சாஸ்திரி காலமானார்

கடைசி முறையாகத் தமிழகத்திற்கு வந்துவிட்டு காந்திஜி சென்ற சில வாரங்களில் சாஸ்திரியார் காலமாகி விட்டார். அவர் காலமான செய்தி நள்ளிர வில் ஆசிரமம் போய்ச் சேர்ந்தது; அப்போது காந்திஜி அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். ஆகையால் மறுநாள் காலை வழிபாட்டிற்குப் பின் அதை அவரிடம் கூறினார்கள். அண்ணல் பட்ட மனத் துயருக்கு அளவேயில்லை. அந்த வார ''யங் இந்தியா''வில் அண்ணல் தம் அஞ்சலியை எழுதினார்: ''இந்தியாவின் சிறந்த புதல்வர்களில் ஒருவரைச் சாவு நம்மிடமிருந்து - ஏன் உலகிடமிருந்தே - பறித்துக் கொண்டது.....அவர் தேச பக்தியானது எந்தப் பெரிய தேச பக்தனுடைய தேச பக்திக் கும் குறைந்ததல்ல. சாஸ்திரியின் உடல் சாம்பலாகிப் போகலாம், ஆனால் சாஸ்திரி என்ற மனிதர் வாழத்தான் செய்கிறார்.''

ஆசிரியர் சாஸ்திரி

இத்தகைய சிறந்த நண்பரைக் காணத்தான் காந்திஜி வந்திருந்தார். அவரைக் கண்ட ஆவலில், நோயாளி (சாஸ் திரியார்) பேசிக்கொண்டே போனார். டாக்ட ருக்குக் கவலை உண்டாயிற்று. அவர் தமிழில் ஏதோ சொன்னார். சாஸ்திரியார் உடனே, ''ஆம். நீங்கள் சொல்வது சரி தான். உரை யாடலில் தேர்ந்தவன் பேசும் நேரத்தைக் காட்டிலும் கேட்கும் நேரமே அதிகம் இருக்கும். ஆனால் ஐந்தில் பள்ளி ஆசிரியன் என்றால் ஐம்பதிலும் பள்ளி ஆசிரியன்தான் என்று சொல்லுகிறார்களே? அதனால்தான் நான் பேசிக்கொண்டே போகிறேன்'' என்று கூறினார். மேலும் சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்து விட்டு காந்திஜி விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார். சாஸ்திரி விடவில்லை.

''உங்களிடம் நான் ஒன்று கூறவேண்டும் என்று நினைத் தேன்'' என்று அவர் பேச்சைத் தொடங்கினார். பேசிக் கொண்டிருந்தபொழுதே அவருடைய கண்களில் நீர் மல்கி விட்டது. அவர் சொன்னார்: ''அமைதி காண மற்றொரு

வாய்ப்பும் போய்விட்டது. இப்போது அமைதி மாநாடு கூட்டிப் பேச்சு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்தப் பேச்சில் மனித வர்க்கத்தின் சார்பாகப் பேசுவதற்கு உங்களைத் தவிர வேறு யார் இருக்கிறார்கள்? இந்தியா தன்னுடைய கடமையைச் செய்யத் தவறிவிட்டதோ என்று நான் அஞ்சுகிறேன்.'' சாஸ்திரி அன்று மட்டும் இதைக் கூறவில்லை. சிறைச்சாலையிலிருந்து காந்திஜி விடுதலையாகி வந்த காலத்திலிருந்தே இதை வலியுறுத்தி அவர் கடிதங்கள் எழுதிக்கொண்டு வந்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் அமைதி மாநாடு பற்றியும் இந்திய அரசியல் நிலை குறித்தும் இரு பெரியவர்களும் சுவையாகச் சிறிது நேரம் விவாதித்தனர். ''நான் வந்து உங்களைச் சந்தித்ததனால், உங்களுடைய உடல்நலத்திற்குக் கேடு ஏற்படவில்லை என்று டாக்டர் கருதுவாரானால் நான் மீண்டும் வந்து உங்களைச் சந்திக்கிறேன்'' என்று சாஸ்திரியாரிடம் காந்திஜி கூறிவிட்டுப் புறப்பட்டார்.

அமைதி மாநாடு

23-1-46

இந்தியாவிற்கு விடுதலை அளிப்பது குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்த பிரிட்டனிலிருந்து வந்த பாராளுமன்றத் தூதுக் குழு சென்னையில் காந்திஜியைச் சந்தித்து - இரண்டு நாட்கள் உரையாடியது. முதல் நாள் அதாவது ஜனவரி 23-ஆம் தேதியன்று இரவு அவர்கள் காந்திஜியைச் சந்தித்து அந்தரங்கமாக - இவர்கள் காந்திஜியிடம் பேசியபோது காந்திஜியின் செயலாளராகிய பியாரிலால் உள்பட யாரும் அங்கு இல்லை - இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். குமரப்பா சகோதரர்களை - அதாவது டாக்டர் ஜே.சி. குமரப்பாவையும், பரதன் குமரப்பாவையும் சந்திக்குமாறு அவர் கூறியதன் பேரில் அவர்கள் இருவரையும் பின்னர் தூதுக் குழுவினர் சந்தித்துப் பொருளாதார, சமுதாயச் சிக்கல்கள் குறித்து விவாதித்தனர்.

பாராளுமன்ற தூதுக்குழு

24-1-46

மறுநாள் அதாவது ஜனவரி 24-ஆம் தேதியன்று பாராளுமன்றத் தூதுக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்கள் எல்லோரும் காந்திஜியைச் சந்தித்து இந்தியாவின் விடுதலை குறித்த

எல்லாச் சிக்கல்களையும் பற்றி விவாதித்தார்கள். இந்தச் சந்திப்பின் போது எதிர்கால இந்திய அரசிலமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பது குறித்துத் தம் கருத்துக்களையெல்லாம் காந்திஜி கூறினார்.

விடுதலை பற்றி கருத்து

''நாங்கள் காந்திஜியைச் சந்தித்தது இந்தியாவின் எதிர்காலத்திற்கும் பிரிட்டனின் எதிர்காலத்திற்கும் மட்டுமல்ல; உலகின் நல்வாழ்விற்கும் ஒரு சுபசகுனமாகும்'' என்று இத்தூதுக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராகிய பாட்டம்லி கூறியது சரியாகவே இருந்தது.

மூன்றும் நாளன்று, அரிஜனங்களின் முக்கிய தலைவர்களில் ஒருவரான வி. ஐ. முனுசாமிபிள்ளை காந்திஜியைச் சந்தித்து, தமிழ்நாட்டில் அரிஜனங்களைக் குறித்து சாதி இந்துக்களின் மனோபாவத்தில் ஒரு சிறு அளவே மனமாற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றும் இது தம் அனுபவம் என்றும் கூறியதை காந்திஜி ஒப்புக்கொண்டார். சென்னை முன்னாள் நீதிபதி சர். டி. சதாசிவ ஐயரின் குமாரத்தி காந்திஜியைப் பார்க்கப் போன போது, ஆங்கிலத்தில் பேச்சைத் தொடங்கினார். காந்திஜி அதைத் தடுத்து நிறுத்தி இந்தியில் பேசுமாறு சொன்ன போது, கிதை முதல்வரியிலிருந்து கடைசி வரிவரை தமக்கு மனப்பாடமாகத் தெரியும் என்றாலும் தாம் இந்தி கற்கவில்லை என்று அந்த அம்மையார் கூறினார். காந்திஜி கடந்த கால வரலாற்றை அவருக்கு நினைவுபடுத்தினார். தம் குமாரரான தேவதாஸ் காந்தி சென்னையில் இந்தி வகுப்புகளைத் தொடங்கிய போது, முதன் முதலாக இந்தி கற்றவர்களில் டி. சதாசிவ ஐயரும் ஒருவர் என்றார். இதன் பின்னர் விரைவில் தாம் இந்தி கற்க முயலுவதாகக் கூறி அந்த அம்மையார் விடைபெற்றுக் கொண்டார். இன்று காந்திஜியை மதுரை என். எம். ஆர். சுப்பராமன், கோவை டி. எஸ். அவினாசிலிங்கம், வி. கே. பழனிசாமி கௌண்டர், வேதாரண்யம் வேதரத்தினம் பிள்ளை, இலண்டன் பாதிரியார் ஹிக்மன் ஜான்சன், வி. வி. கிரி (தற்போது குடியரசுத் தலைவராய் இருப்பவர்), பி. எஸ். மூர்த்தி ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.

அரிஜன தலைவர் பேட்டி

காந்திஜி பிரார்த்தனைக் கூட்டம் நடத்துகிறார் என்பதை அறிந்த பின்னும் மக்கள் கடல் அங்கு மடை திறந்து பாயாமல் இருக்குமோ? வெங்கடநாராயண பிரார்த்தனைக் ரோடு ஒருபுறம் போக்ரோடு மற்றொருபுறம் கூட்டம் இடையே ஒரே மக்கள் கடல்தான். குமாரி சரோஜினி மகாதேவன் கபாலீசுவரர்மீது பாபநாசம் சிவன் இயற்றிய தமிழ்க் கீர்த்தனத்தைப் பாட, பிரார்த்தனைக் கூட்டம் தொடங்கிற்று. காந்திஜி தம் சொற் பொழிவில் இந்தப் பாடலைப் பற்றிக் குறிப்பிட்டு, குருதேவ ரால் இயற்றப்பெற்று சோதிபுரியில் பாடப்பெற்ற ஒரு பாடலை இது தமக்கு நினைவூட்டியதாகச் சொன்னார். ''அந்தப் பாடலில் ஒரு பக்தன், ஆண்டவனை நோக்கி, தாம் பலவீனமாக இருக்கும்போது ருத்திரனுடைய உருவத்தில் வந்து தம் பலவீனத்தையாவது தன்னையாவது விழுங்கி விடுமாறு பிரார்த்திக்கிறான். கிட்டத்தட்ட அதே கருத்து இப்பாடலிலும் அடங்கியிருக்கிறது,'' என்று காந்திஜி சொன்னார். இந்தக் கூட்டத்தில் தொடக்கத்திலும் முடி விலும் ஒரே குழப்பமும் கூச்சலுமாக இருந்தது. ஆகையால் முழு நேரமும் மிகுந்த சிரமத்துடன் நின்று கொண்டே அவர் சொற்பொழிவாற்றினார்.

இன்று காந்திஜி தொடங்கி வைத்த நிர்மாண ஊழியர் மாநாட்டிற்கு அனைத்திந்திய சர்க்கா சங்கத்தைச் சேர்ந்த கிருஷ்ண தாஸ் ஜாஜு தலைமை தாங்கினார்.

ஊழியர் மாநாடு

கேரளம், கர்னாடகம், ஆந்திரம், தமிழகம் ஆகிய பகுதிகளிலிருந்து சுமார் இருநூறு ஊழி யர்கள் வந்திருந்தார்கள். இம்மாநாட்டின் நிகழ்ச்சி நிரலை ஆங்கிலத்தில் அச்சிட்டவர்களை காந்திஜி கடிந்து கொண்டார்; இது தமிழ் அல்லது இந்தியில் அச்சிடப் பெற்றிருக்கவேண்டும் என்று அவர் சொன்னார். இம்மாநாட் டில் பேசியபோது, இந்தி கற்றுக்கொள்ளாத ஊழியர்களை காந்திஜி வன்மையாகக் கண்டித்தார். ''உங்களிடையே - உங்களை மகிழ்விப்பதற்காகவாகிலும் நான் ஆங்கிலத்தில் பேசிய காலம் மலையேறிவிட்டது. ஆங்கிலேயர்களிடமும் வெளி நாட்டாரிடமும் மட்டுமே இனி ஆங்கிலத்தில் பேசு வேன். உங்களைப் பொறுத்தவரை, எனக்குத் தெரிந்த ஓட்டை இந்துஸ்தானியிலேயே பேசுவதென்று முடிவு செய்துவிட் டேன்'' என்று காந்திஜி கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

கேள்வி: பொருளாதார சமத்துவத்தைக் குறித்துத் தங்கள் கருத்து என்ன?

காந்திஜி: நூற்றுக்கு நூறு சமத்துவமென்பது முடியாத காரியம். சிலருக்கு அதிக உணவு தேவைப்படலாம்; ஒரே மனிதருக்குக்கூட குளிர் காலத்தில் அதிக உடை தேவைப்படலாம். ஆகவே, பரந்த பொருளில் பார்க்கும் போது, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவை நிறைவு செய்யப்படுவதே சமத்துவமென்றுகிறது. அத்தகைய சமத்துவப் பொருளாதாரத்தில் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவோ ஏழைகள் மேலும் ஏழைகளாகவோ ஆகிக் கொண்டிருக்க முடியாது.

காந்திஜி கேள்விகளுக்கு மறுமொழி அளித்துக் கொண்டிருக்கையில் நாலரை மணியாகிவிடவே, நூற்பைப் பார்வையிடுவதற்காகச் சென்று விட்டார். இந்த நூற்பில் முந்நூறு பேர் கலந்து கொண்டனர்.

இன்று பிரார்த்தனைக் கூட்டத்தில் பாடப்பெற்ற தியாகராஜ கீர்த்தனத்தைக் குறிப்பிட்டு அவர் சொன்னார்: தென்னிந்தியாவில் தியாகராஜருக்குள்ள மகாத்மியத்தை நான் அறிவேன். தமிழ்நாடு, ஆந்திர தேசம், கர்னாடகம், கேரளம் ஆக எங்குச் சென்றாலும் சரி இனிய நாதத்துடன் தியாகராஜர் கீர்த்தனங்கள் பாடப் பெறுவதை நான் கேட்டிருக்கிறேன்; பாடுபவரின் உள்ளத்திலிருந்தே அந்த இனிய நாதம் வருவதுண்டு; தற்போது நாம் காணும் மாநில வேற்றுமை உணர்ச்சிக்கும் தியாகராஜர் கீர்த்தனங்களுக்கும் நேர்முரண். சிலர் தமிழ் வேண்டுமென்கிறார்கள். சிலர் தெலுங்கு வேண்டுமென்கிறார்கள். இதைத் தவிர வட இந்தியா தென் இந்தியா என்ற பிரிவினை உணர்ச்சி வேறு இருக்கிறது. ஒரு தராசில், இராமனுடைய சிறப்புக்களை ஒரு தட்டிலும் இராம நாமத்தின் சிறப்புக்களை மற்றொரு தட்டிலும் போட்டால், பிந்திய தட்டில் கனம் எவ்வளவோ அதிகமாயிருக்கும். அது போலவே தமிழ்நாடு - ஆந்திரா போட்டி, குஜராத் - மகாராட்டிரா போட்டி என்ற எண்ணங்களையெல்லாம் விட்டு விட்டு, இந்துஸ்தானையும் அதன் பெருமையையும் மட்டும் எண்ணிப் பார்த்தால் அதன் பெருமை அளவிடற்கரியது. ராம் என்ற சொல்லில் இரண்டே எழுத்துக்கள் தான் இருக்

புகழ் மாலை

கின்றன. ஆனல் அதன் சக்திக்கு ஈடே கிடையாது. அதே போன்று ''ஹிந்த்'' என்ற சொல்லுக்கும் ஒரு தனிச் சக்தி இருக்கிறது.''

பேட்டி

இன்று கோவையைச் சேர்ந்த பெரிய தொழில் அதிபரான பி.எஸ்.ஜி. கங்கா நாயுடுவும் மற்றும் சிலரும் காந்திஜியைச் சந்தித்து, கோவைக்கு வரவேண்டுமென்று அவரை அழைத்தனர்; அரிஜன நிதிக்காக மகாத்மாவிடம் ஒரு பண முடிப்பையும் அளித்தார்கள். தமிழ் நாடு அரிஜன சேவா சங்கத்தலைவரான வி. பாஷ்யம் ஐயங்காரும், கே. பாஷ்யமும் மற்றும் சிலரும் காந்திஜியைச் சந்தித்து அரிஜனப் பிரச்னை குறித்தும் கோடம்பாக்கத்தில் உள்ள அரிஜனத் தொழிற் பள்ளியின் எதிர்காலம் பற்றியும் விவாதித்தனர்.

25-1-46

சென்னையில் தான்

இந்துஸ்தானிப் பிரச்சார சபையின் வெள்ளி விழாவை காந்திஜி தொடங்கிவைத்தபோது தம் உள்ளத்தையெல்லாம் கொட்டிப் பேசினர். ''அடிமைகளுக்காக இந்தத் தொண்டாற்றுவதை நான் தொடங்கியதே சென்னையில்தான். இந்த நகரைச் சேர்ந்த படித்த பிரமுகர்கள் பலர் அப்போது என்னை வரவேற்று உபசரித்தார்கள்'' என்று *வெளிப்படையாகத் தமிழகம் எவ்வாறு தம் அரசியல் தொண்டிற்கு உதவியிருக்கிறது என்பதை வெளியிட்டார். மக்கள் தம்மைச் சரியாகக் காணட்டும் என்பதற்காக வழக்கத்திற்கு முரணுக ஒரு நாற்காலியைக் கொண்டு வரச் சொல்லி காந்திஜி அதில் அமர்ந்தார்.

நோக்கம்

தொடக்க காலத்திலிருந்து இந்திப் பிரச்சாரப் பணி ஆற்றி வந்திருந்த பண்டித ரிஷி கே. சர்மா, பண்டித ஹரிஹர சர்மா, பண்டித ராம்பரோசி, பண்டித சீதாராம் ஆஞ்ச நேயலு, பண்டித டி. கிருஷ்ணசாமி ஆகியோருக்கு காந்திஜி பொன்னாடைகள் போர்த்தினர். காந்திஜி சொன்னர்: இந்தியாவில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் அதிகமாக இருப்பதும் தென்னிந்தியாவில் இது மிக மிக

* ''இந்து'' 26-1-46

அதிகமாக இருப்பதும் ஒரு வகை அடிமைத்தனமே யாகும். இந்தத் தங்க விலங்கை உடைத்தெறிந்து விட்டு நாம் சுதந்திர மக்களாவது கடினமான்னதல்ல; ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்துஸ்தானியை வைத்தால் இது முடிந்துவிடும். இந்தியாவில் உள்ள மக்களில் பெரும் பாலோர் புரிந்துகொள்ளக்கூடிய மொழியே இந்நாட்டில் பொதுமொழியாக இருக்க முடியும் - அது இந்துஸ்தானி தான். ஆகவே இந்துஸ்தானியை இரண்டு லிபிகளிலும் கற்றுக்கொள்ள வேண்டியதே உங்கள் தருமம் ஆகும். இது ஒருபுறமிருக்க, இந்திப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள ஊழி யர்கள் அவர்கள் எந்தப் பகுதிகளில் தொண்டாற்றுகிறார் களோ அப்பகுதி மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்போதுதான் நாட்டிற்கும் தேசிய மொழிக்கும் அவர்கள் நன்கு தொண்டாற்ற முடியும்''. காந்திஜியின் யோசனைப் படி இந்திப் பிரச்சார சபையின் பெயர் இந்துஸ்தானிப் பிரச் சாரசபை என்று மாற்றப்பெற்றது. ஆனால் பின்னர் இந்தியா விடுதலை அடைந்தபின் புதுச் சூழ்நிலைகளுக்கேற்ப அதன் பெயர் மீண்டும் இந்திப் பிரச்சார சபை ஆயிற்று.

மாணவர் ஆர்ப்பாட்டம்

இந்தச் சமயம் பம்பாயில் நடைபெற்ற போலீஸ் துப்பாக்கிப் பிரயோகத்தைக் கண்டிப்பதற்காக, அன்று சென்னை நகரில் பச்சையப்பன் கல்லூரி மாண வர்கள் ஒரு பரபரப்பான ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டார்கள். இவர்கள் அனைவரும் கல்லூரிக்குச் செல்லாமல் அணிவகுத்து ஊர் வலமாக இந்துஸ்தானி நகருக்கு வருவதற்காகப் புறப்பட்ட போது போலீசார் அதை அனுமதிக்கவில்லை. இவ்வாறு ஊர்வலமாகச் செல்ல அனுமதி வேண்டும் என்றும் மாண வர்கள் அவ்வித அனுமதி எதுவும் பெறவில்லை யென்றும் காரணங் காட்டி அவர்களைக் கலைந்து போகுமாறு ஆணையிட் டார்கள், மாணவர்கள் கலைந்து போக மறுத்து அந்த இடத்திலேயே உட்கார்ந்து அறப்போர் புரிந்தனர். ராஜாஜி வந்து எவ்வளவோ சொல்லியும் கூட அவர்கள் கலைந்து செல்லவில்லை. காந்திஜி அவர்களுக்கு அனுப்பியிருந்த செய்தியை மாணவர் காங்கிரஸ் தலைவரான என். கிருஷ்ண சாமி படித்துக் காண்பித்தார். இந்தக் கடிதம் படிக்கப் பெற்ற பின்னரும் மாணவர்கள் கலைந்து செல்லவில்லை. ஆகையால் ராஜாஜி அங்கிருந்து வந்து விட்டார். அதன்

பின்னர் சுமார் ஐந்து மணி நேரங்கழித்து, கல்லூரி முதல்வர் வி. வி. நாராயணசாமி நாயுடு யோசனைப்படி அவர்கள் நெளரோஜி சாலை வழியாகச் சேத்துப்பட்டு இரயில் நிலையத்தின் அருகே உள்ள மைதானத்தில் கூடிக் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றி விட்டுக் கலைந்தார்கள். வேறு சில கல்லூரி மாணவர்களும் இதே இடத்திற்கு வந்து கண்டனத் தீர்மானம் நிறைவேற்றிக் கலைந்தார்கள்.

கூட்டத்தில் குழப்பம்

பழைய குருடி கதவைத் திறடி என்ற படி, இன்றைய பிரார்த்தனைக் கூட்டத்திலும் குழப்பம் இல்லாமற் போகவில்லை. ஒரு நாளைக்கொருநாள் கூட்டம் கூடுகிறது. இலட்சம் பேர் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்திருப்பார்கள். இந்தக் கூட்டத்தில் காந்திஜி பேசத் தொடங்கிச் சில வார்த்தைகளைக் கூறி அவையும் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றபோது, ஒரு ஆந்திராக் காரர் குறுக்கிட்டு, சென்னை நகரில் தமிழர்கள், தெலுங்கர்கள் ஆகிய இரு மொழியினரும் வாழ்வதாகவும் காந்திஜியின் பேச்சைத் தெலுங்கிலும் மொழி பெயர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அமைதியாக அமரும்படியும் தாம் நிலைமையை விளக்கிக் கூறுவதாகவும் காந்திஜி எவ்வளவோ சொல்லியும் அவர் அமருவதாயில்லை; சத்தம் போடுவதை நிறுத்துவதாயும் இல்லை. இது காந்திஜிக்கு மிகுந்த மனவேதனை அளித்ததால் அவர் தம் பேச்சைச் சிறிது நேரத்தில் முடித்துக்கொண்டு கூட்டத்தை விட்டுப் போய்விட்டார். இவ்வாறு குறுக்கிட்டவருடைய ஆணைக்குத் தாம் பணிய முடியாது என்றும் இனித் தம்முடைய பேச்சு தெலுங்கில் மட்டுமல்ல, தமிழிலும் மொழி பெயர்க்கப்படமாட்டாது என்றும் இந்துஸ்தானி தெரியாதவர்கள் அதைச் செய்தித் தாள்களில் படித்துக்கொள்ளலாம் என்றும் காந்திஜி கூறி விட்டு, மொழி பெயர்ப்பு எதுவும் இல்லாமல் சில நிமிடங்கள் இந்துஸ்தானியிலேயே பேசிவிட்டுப் போய்விட்டார்.

அந்த ஆந்திரர்

பிரார்த்தனைக் கூட்டத்திலிருந்து புறப்பட்டு வந்த காந்திஜி அவசர அவசரமாகத் தம் இருப்பிடத்திற்குச் சென்றார். வழக்கமாகப் பிரார்த்தனைக் கூடத்தில் அவர் ஆன்மிக நிம்மதி பெற்று, மகிழ்ச்சியுடன் காணப் பெறுவதுண்டு; ஆனால் இன்றோ அந்த இரண்டும் அவருக்குக் கிட்டியதாகத் தோன்றவில்லை. இந்தச் சமயத்தில் இத்தனை குழப்

பத்திற்கும் காரணமான அந்த ஆந்திராக்காரரையே ராஜாஜி கூட்டிக்கொண்டு வந்து விட்டார். தாம் பிரார்த்தனைக் கூட்டத்தில் குறுக்கிட்டதன் காரணம் என்னவென்பதை அவரே விளக்கிச் சொன்னர்.

ஆந்திரர்: கூட்டத்திற்குத் தெலுங்கர்களும் வந்திருக்கிறார்கள். அவர்களும் உங்களுடைய சொற்பொழிவைப் புரிந்துகொள்ளத் தெலுங்கிலும் மொழி பெயர்ப்பு இருக்க வேண்டும்.

காந்திஜி: பிரார்த்தனைக் கூட்டத்தில் இவ்வாறு செய்யாமல் முதலில் என்னை நேரில் சந்தித்து உங்களுடைய கோரிக்கையைத் தெரிவிக்கலாம். அல்லது, ஒரு காகிதத்தில் எழுதி அனுப்பியிருக்கலாம். அதற்குப் பதிலாக 'இவ்வாறு தான் செய்ய வேண்டும்' என்று என் மீது அதிகாரம் செலுத்தத் தொடங்கிவிட்டீர்கள். (அவ்வாறு செய்ததன் மூலம்) மொழி பெயர்ப்பே இனி வேண்டியதில்லை என்ற முடிவுக்கு நான் வருமாறு செய்து விட்டீர்கள். நான் விரும்பும் முறையில் மக்களுடன் தொடர்பு கொள்ள முடியாமலும் செய்து விட்டீர்கள்.

ஓர் ஆறுதல்

ஆந்திரர் தம் செயலுக்காக வருத்தம் தெரிவித்துக் கொண்டார் என்றாலும் தம் கோரிக்கையை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருந்தார். இந்தச் சமயத்தில், டாக்டர் சுசீலா நய்யார் குறுக்கிட்டு, காந்திஜிக்கு அதிகத் தொல்லை கொடுக்க வேண்டாமென்று கூறி அவரைத் தடுத்து நிறுத்தி விட்டார். அவரும் வெளியே போய் விட்டார். இவ்வளவு வருந்தத்தக்க நிகழ்ச்சியிலும் அந்த ஓர் ஆந்திரருடன் மற்ற ஆந்திரர்களும் சேராது விலகியிருந்தார்களே என்பது காந்திஜிக்கு மன நிறைவு அளித்தது.

கவர்னருடன் சந்திப்பு

இன்று இரவு கிண்டியில் உள்ள அரசாங்க மாளிகைக்குச் சென்று, கவர்னரை காந்திஜி சந்தித்துப் பேசினர். கவர்னரின் அந்தரங்கச் செயலாளரான இ. சி. அல்லார்டிஸ் வந்து காந்திஜியை அழைத்துக் கொண்டு போய்த் திரும்பியும் கொண்டு வந்து விட்டார். அப்போது கவர்னராக இருந்த சர் ஆர்தர் ஹோப்பும் அவர் மனைவியாரும்

காந்திஜியை வரவேற்றார்கள். பின்னர் கவர்னரும் காந்திஜியும் சுமார் எண்பது நிமிடங்கள் அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

26-1-46

சுயராஜ்யமும் இந்தியும்

காந்திஜி சென்னைக்கு வந்த ஆறும் நாள் சுதந்திர நாளாகும்; அதாவது சுதந்திரத்திற்காக உறுதிமொழி ஏற்று வந்த நாள். இன்று அவருக்கு ஏராள மான பணிகள் இருந்ததாலும் நான்கு முக்கிய மான சொற்பொழிவுகள் நிகழ்த்த வேண்டி யிருந்ததாலும் காலையில் ஒரு சிலருக்கே அவர் பேட்டி அளித்தார். தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபை வெள்ளி விழாவை யொட்டி நடைபெற்ற இந்திப் பிரச்சாரக் குழுக்கள் மாநாட்டில் மாநிலமெங்குமிருந்து சுமார் ஆயிரம் பிரச்சாரகர்களும் ஊழியர்களும் கலந்து கொண்டனர்; கலேல்கார் தொடங்கி வைத்த இம்மாநாட்டில் ''இந்தியாவின் சுயராஜ்யத்தை ஈஸ்வர் ராஜ்யமாகவோ இராம ராஜ்யமாகவோ குதாய் ராஜ்யமாகவோ அமைப்பதற்கு இந்துஸ்தானியைப் பரப்புவது ஒரு முக்கிய தேசியப் பணியாகும். பிற மொழிச் சொற்களை இந்தியில் ஏற்றுக் கொள்ளத் தயங்கக்கூடாது; வட்டார மொழிகளின் சொற்களை நீங்கள் தாராளமாக இந்திச் சொற்களுடன் சேர்த்துக் கொள்ளலாம்,'' என்று காந்திஜி கூறி 'இந்துஸ்தானிப் பிரச்சாரகர்களுக்கு' இருக்க வேண்டிய தகுதிகளையும் சொன்னார்.

தாய்மொழி

இந்திப் பிரச்சாரக்குகள் ஆங்காங்குள்ள வட்டார மொழிகளைக் கற்றிருக்க வேண்டும் என்றும், இந்தியைப் பரப்புவதானது வட்டார மொழிகளுக்குப் போட்டியாக அல்லவென்றும் காந்திஜி கூறியதற்குத் தமிழகத்தில் நல்ல வரவேற்பு இருந்தது. 27-1-46-ஆம் தேதி வெளியான ''இந்து'' தனது தலையங்கத்தில் 'இந்த இரண்டையும் காந்திஜி வலியுறுத்தியது, எவ்வளவு பெரியதாகவோ அல்லது பயனுள்ளதாகவோ ஒரு மொழி இருந்தாலும் அதனுடைய முக்கியத்துவம் தாய் மொழியின் முக்கியத்துவத்திற்கு இணையாகாது என்ற அடிப்படையிலேயே இந்தி இயக்கத்தைச் சார்ந்தவர்கள் பணியாற்றுவார்கள் என்ற உண்மையை வலியுறுத்துவதாகக்' கூறியிருந்தது.

அரிஜனங்கள் மாநாட்டில் தமக்கு முன்னிருந்த பெருங் கூட்டத்தைப் பார்த்த காந்திஜி, அவ்வளவு பெருந்திரளாக அரிஜனங்கள் கூடியிருப்பதையும் அவர் ஐரோப்பியரும் கலிடையே பெரும் விழிப்பு உணர்ச்சி ஏற்பட்ட தீண்டாமையும் டுள்ளதையும் காணத் தமக்கு மகிழ்ச்சியாய் இருக்கிறதென்று சொன்னார். அரிஜனத் தலைவரான வி. ஐ. முனுசாமிபிள்ளை காந்திஜிக்கு மாலையிட்டு பனை ஓலையால் செய்யப் பெற்ற மூவர்ணக் கொடி ஒன்றை வழங்கினர். ''சுதந்திர இந்தியாவைப்பற்றி நான் என் மனக்கண்ணில் காணும் சித்திரத்தில், தீண்டாமை அறவே இராது. கோடிக்கணக்கான காங்கிரஸ்காரர்கள் அதற்காகவே வாழ்ந்து அதற்காகவே சாவார்கள். சத்தியத்தின் மூலமும் அஹிம்சையின் மூலமும் அரிஜனங்கள் தங்களுடைய சுதந்திரத்தைப் பெற வேண்டும்,'' என்று காந்திஜி கூறினர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையான சுதந்திரம் என்ன வென்பதற்கு அண்ணல் அளித்த விளக்கம் இன்றுகூடப் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவர் சொன்னார்:

உண்மைச் சுதந்திரம்

''உண்மைச் சுதந்திரம் என்றால் நாம் விரும்பிய படியெல்லாம் செய்வதென்று பொருளல்ல. நம்முடைய கடமையைச் செய்வதற்கான சுதந்திரம்; குடிப் பழக்கத்திலிருந்து ஒதுங்கியிருப்பதற்கான சுதந்திரம்; நம் முடைய முன்னேற்றத்திற்கு நாமே போடுபடும் சுதந்திரம் - அதுதான் உண்மையான சுதந்திரம்.''

இன்று நடைபெற்ற நிர்மாண ஊழியர்கள் மாநாட்டில் காந்திஜி அவரவர் தங்கள் தாய்மொழியில் பேசவேண்டு மென்று வலியுறுத்தியதன் காரணமாக இந்துஸ் தானியிலும், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய தென் மொழிகளிலும் சொற் பொழிவுகள் நிகழ்த்தப் பெற்றன. இந்த மாநாட்டிற்குத் தலைமை வகித்த திவான் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார், ''காந்திஜியை ஓர் அவதாரமாக நான் கருதுகிறேன்; அவருடைய இந்த 'அவதாரத்தின் காரணமாகத் தீண்டாமை வேருடன் பிடுங்கி எறியப்படு மென நம்புகிறேன்'' என்றார். ஊழியர்கள் கேட்ட கேள்வி களுக்கு மறுமொழி அளித்ததன் மூலம் காந்திஜி அவர் களுடைய பல ஐயப்பாடுகளைத் தீர்த்து வைத்தார். கேள்வி

அவதாரம்

களை நன்முகப் படித்துப் பார்த்து, தம்முடைய சிந்தனை நிறைந்த மறுமொழிகளை நகைச்சுவையோடு கூறினர்.

மறு ஆண்டு - அதாவது 1947-இல் விடுதலை கிடைத்து விடலாம் என்பதை இந்தச் சுதந்திர நாளன்று அண்ணல் குறிப்பாகத் தெரிவித்தார்.

சூசகமான அறிவிப்பு

''அடுத்த ஆண்டில் சுதந்திர நாள் உறுதி மொழியை நாம் மீண்டும் கூறவேண்டிய அவசியம் இல்லாமற் போகும் என நம்புவோமாக!'' என்று அவர் கூறினர். பிரிட்டிஷ் பாராளுமன்றத் தூதுக் குழுவைச் சந்தித்தபின், சுதந்திர தினத்தன்று விடுத்த அறிவிப்பு ஆதலின் இதற்கு அதிக முக்கியத்துவம் உண்டு என்பது சொல்லாமலே விளங்கும். அநேகமாக இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் இவ்வாறு முதன் முதலாக சுதந்திரம் வருவது உறுதி என்ற அறிகுறியைப் பலமுறை அவர் தெரிவித்தார்.

கிருஷ்ணம்பேட்டை ஆதி ஆந்திர இளைஞர் சங்கத்திற்குப் புதுக் கட்டிடம் கட்டுவதற்காக நாட்டப்பெற இருந்த அடித்தளக் கல்லை இன்று பிற்பகலில் தான் காந்திஜி தொட்டு ஆசீர்வதித்துக் கொடுத்தார். முதலில் அவர்கள் கொண்டு வந்த அடித்தளக் கல்லில் ஆங்கிலத்தில் வாசகம் இருந்ததால் அதை ஆசீர்வதித்துக் கொடுக்க மறுத்துவிட்டார். ஆகவே தெலுங்கில் வாசகம் பொறிக்கப்பெற்ற ஒரு புதுக்கல்லைக் கொண்டுவந்து காந்திஜியின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு போனார்கள். ஆனால் அந்தப் பழைய கல் வீணாகிப் போவதா? காந்திஜியின் சிக்கனம் அதை அனுமதிக்குமா? ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டு புறப்பட இருந்தவர்களை நிறுத்தி, சத்திய நாராயணுவை அழைத்து ''இத்தகைய ஒருகல் உங்களுக்குத் தேவைப்படுமா?'' என்று அண்ணல் கேட்டார். ''அந்தக் கல்லைப் பயன்படுத்திக் கொள்ளலாம்'' என்று சத்தியநாராயணு ஒப்புதல் தெரிவித்தார்.

சிக்கனம்

•

பிராத்தனைக் கூட்டத்திலிருந்து காந்திஜி திரும்பியபின், அல்லா பிச்சை (தலைவர்), அப்துல் ஹக்கீம், கே. வி. நூருதீன் சாகிப், போய்து மௌல்வி சாகிப், கே. ஏ. இப்ரகிம் சாகிப், கே. கே. அப்துர் ரஹ்மான் சாகிப், கே. மோய்து

சாகிப், பி. பி. உமர் கோயா, ஹாஜி சி. உமர் ஆகியோரைக் கொண்ட தேசிய முஸ்லிம்கள் தூதுக்குழு ஒன்று அவரைக் கண்டு பேசியது. பெயர் பெற்ற பாடகியான எம். எஸ். சுப்புலெட்சுமி அவரைச் சந்தித்தார். ராஜாஜி அந்த அம்மையாரை காந்திஜிக்கு அறிமுகம் செய்து வைத்தார். காந்திஜி கேட்டுக் கொண்டதன் பேரில் அவர் ஒரு சில பஜனைப் பாடல்களைப் பாடினார்.

முஸ்லிம்கள் குழு

காந்திஜி இங்குத் தங்கியிருந்த காலத்தில் அவர் கையெழுத்தை வாங்க ஏராளமான பேர் வந்ததால், அதற்கு சபை நிருவாகிகள் ஒரு தனி ஏற்பாடு செய்தார்கள். கையெழுத்திற்கு ஐந்து ரூபாய் வீதம் கட்டணம் வாங்கி ரசீது அளித்து விட்டு, அந்த ரசீதுகளையும் கையெழுத்துப் போடவேண்டிய புத்தகங்களையும் (அல்லது காந்திஜியின் படங்களையும்) காந்திஜிக்கு அனுப்பிக் கையெழுத்து வாங்கிக்கொடுத்து உதவினார்கள். எந்த மொழியில் கையெழுத்துப் போட வேண்டும் என்பதை அந்தந்த அன்பர்களே குறிப்பிட்டு அனுப்ப வேண்டுமென்று காந்திஜி கேட்டுக் கொண்டார். ஆங்கிலத்தில் மட்டும் கையொப்பம் போட முடியாது என்று அவர் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

கையெழுத்து கிராக்கி

27-1-46

அண்ணல் ஏராளமான அலுவல்களை முடிக்க வேண்டியிருந்ததால், மறுநாள் மிகவுங் களைப்படைந்து விட்டார். வழிபாட்டுக் கூட்டம் முடிந்து அவர் மங்கள பவனத்திற்குத் திரும்பி வந்தபோது ''காவல் காக்கும் பெரிய பொறுப்பை'' ஏற்கத் தக்கர் பாபாவே வாசலில் வந்து நிற்க வேண்டிய தாயிற்று. பொதுவாகத் தக்கர் பாபா இப்பணியை ஏற்பதில்லை. ஆனால் அவர் ஏற்றுவிட்டாலோ 'இனி ஒரு சிறு வேலைப் பளுவையும் காந்திஜியால் ஏற்கமுடியாது' என்பது தான் பொருள்.

வேலை கடினம்

இன்றையப் பிரார்த்தனைக் கூட்டத்தில் சரஸ்வதிதேவி என்ற பெண் இந்துஸ்தானியில் பாடிய ஒரு வழிபாட்டுப் பாடலையே காந்திஜி தம் பொருளாக எடுத்துக் கொண்டார்.

இந்த வழிபாட்டுக் கூட்டம் முடிந்து காந்திஜி மங்கள பவனத்திற்குத் திரும்பிச் சென்று வீட்டிற்குள் நுழைந்த போது, அங்கு ஏராளமான மக்கள் அவரைக் தங்குமிடத்தில் காண்பதற்காகக் காத்திருந்தனர். ஆகை கூட்டம் யால் வீட்டிற்குள் சென்ற காந்திஜி மீண்டும் திரும்பி அவர்கள் முன் வந்து நின்றபோது அங்கிருந்த கூட்டத்தினர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். ''என் மீது அளவிலா அன்பு கொண்டு என்னைக் காண வந்திருக்கிறீர்கள்; அதனால் தான் வழக்கம் போல் உலவப் போவதையும் விட்டு விட்டு உங்கள் முன் நான் வந்திருக் கிறேன். இப்போது மிகவும் விசாலமான, வசதியான இடத் தில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறுகிறது. ஆகையால் நாளை உங்களுடைய நண்பர்களையும் பிரார்த்தனைக் கூட்டத் திற்கு அழைத்து வாருங்கள்'' என்று அவர்களிடம் அவர் சொன்னார். இவைகளையெல்லாம் அவர் இந்துஸ்தானியி லேயே கூறி அதை மொழி பெயர்த்துச் சொல்லுமாறு பக்கத்தில் இருந்த ஏ. சுப்பையாவிடம் சொல்லி விட்டு வீட்டிற்குள் சென்று சிறிது நேரத்தில் அயர்ந்து படுத்து விட்டார்.

இன்று நான்காவது நாளாக நடைபெற்ற நிர்மாண ஊழியர்கள் மாநாட்டிற்கு டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி தலைமை தாங்கினார். இம்மாநாட்டில் காந்திஜி **ஆங்கிலத்தால்** மிகவும் சுருக்கமாகக் கால் மணி நேரம் **வந்த தவறு** பேசினார். ஆனால் இந்தக் கால் மணி நேரத்தி லும் ''குழப்பம்'' இருந்து கொண்டே இருந்தது. இந்திப் பட்டமளிப்பு விழாவில் - இது ஊழியர் மாநாட்டிற்குப்பின் நடைபெறவிருந்த நிகழ்ச்சி - பங்கு கொள்ள வேண்டியவர்கள் வெள்ளி விழாப் பந்தலுக்குள் வந்து அமர்ந்த வண்ணம் இருந்தார்கள். மகாத்மா காந்தி பேசிக் கொண்டிருப்பதால் எல்லோரும் அமைதியாக இருக்கு மாறு ஒரு தொண்டர் கேட்டுக் கொண்டார். அந்தத் தொண்டர் ஆங்கிலத்தில் தவறுதலாக, ''Please see there is no silence'' என்று ஆங்கிலத்தில் கூறி விட்டார். ''அமைதி இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்பது இதன் பொருள். ''அமைதி இருக்குமாறு பார்த்துக் கொள் ளுங்கள்'' என்று கூறுவதற்குப் பதிலாக, ''அமைதி இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லி விட்டார். இவ்வாறு அவர் கூறியவுடன் எல்லோரும் சிரித்

தார்கள். உடனே காந்திஜி, ''பாருங்கள், ஒரு அந்நிய நாட்டு மொழியைப் பயன்படுத்துவதில் உள்ள அபாயத்தை'' என்றார்.*

கேள்வி : சுதந்திர இந்தியாவில் கிறித்தவ மிஷனரிகளிட மிருந்து உதவி பெறலாமா?

காந்திஜி : மனப்பூர்வமாகவும் இந்தியாவுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற உண்மையான மனோபாவத்துட னும் யார் உதவி அளிக்க வந்தாலும் நிச்சயமாக நாம் அதை ஏற்றுக் கொள்ளலாம். காலஞ் சென்ற தீனபந்து ஆண்ட்ரூசின் முன்னுதாரணம் இருக்கிறது. அவர் இந்தியாவிற்காகத் தொண்டாற்றினார்; இந்தியாவிற் காகவே உயிரை ஈந்தார். அன்புடனும் தொண்டுள் ளத்தோடும் உதவ முன்வரக்கூடிய நல்லெண்ணம் படைத்தவர்களுடைய சேவையெல்லாம் இந்தியாவிற் குத் தேவைதான்.

இவ்வாறு, மாநாட்டில் ஊழியர்கள் கேட்ட கேள்வி களுக்கெல்லாம் மறுமொழி அளித்துவிட்டுப் பொதுவாக நிர்மாணத் திட்டத்தைப் பற்றி காந்திஜி விளக்

நிர்மாணத் திட்டம்

கினார்: ''நாம் செய்ய வேண்டிய பணிகள் ஏராளமாகையால் எல்லோரையும் நான் அப் பணிகளைச் செய்ய முன் வருமாறு அழைக்கி றேன். நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள விழிப்புணர்ச் சிக்கு நிர்மாணத் திட்டந்தான் காரணம். சுதந்திரம் கிட்டிய பின்பும் நிர்மாணத் திட்டத்தின் மூலந்தான் நாம் அதைப் பாதுகாக்க முடியும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உடலின் சுத்தத்தையும் உள்ளத்தின் தூய்மையையும் பாதுகாப்பதும் குழந்தைகளுக்கு ஆதாரக் கல்வியைக் கற்றுக் கொடுப்பதும் தான் நிர்மாணத் திட்டத்தில் உள்ள முக்கிய அம்சமாகும். இந்தக் கல்வி கற்றுக் கொடுக்கப் படும் போதுதான் நம் குழந்தைகள் தன் தேவையைத் தானே நிறைவு செய்து கொள்ளக்கூடிய குடிமக்களாக வளர்வார்கள். படித்த மாதர்கள் கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு எழுதப்படிக்கக் கற்றுக் கொடுப்ப துடன் அவர்கள் சுத்தமாக வாழும் முறைகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும். நிர்மாணத் திட்டத்திற்காகச் செல

*அமிர்தா இராம சுப்ரமணியம் பேட்டி.

விடும் தொகைக்கு அதிகமாகவே அதன்மூலம் நமக்குப் பலன் கிடைக்கும். அதில் தான் அதன் தனிப் பெருமை இருக்கிறது.''

இதற்கு அடுத்தாற்போல் இந்திப் பிரச்சார சபையின் இருபத்து மூன்றுவது பட்டமளிப்பு விழாவிற்கு சம்பிரதாயமான முறையில் இரண்டு இரண்டு பேராக

பட்டமளிப்பு உடை

இந்திப் பிரச்சார சபை உறுப்பினர்கள் அணிவகுத்து வந்தபோது காந்திஜியும் இராஜகுமாரி அம்ரித் கௌரும் முன் வரிசையில் தலைமை வகித்து வந்தார்கள். பட்டமளிப்பு விழாவில் போட்டுக்கொள்ள வேண்டிய தனி ஊதா அங்க வஸ்திரத்தை அணிந்து கொண்டு அவர் மேடையில் அமர்ந்திருந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. வாலாஜாபாத் இந்து அறநிலையப் பள்ளியைச் சேர்ந்த நூறு பிரம்மச்சாரிகள் அணிவகுத்து அவருக்கு மரியாதை செலுத்தினர்கள். விழாவை காந்திஜி தொடங்கி வைத்துப்புதுப் பட்டதாரிகள் தாங்கள் எடுத்துக் கொண்ட உறுதிமொழிக்கு ஏற்ப இந்தியாவுக்கும் அதன் ஐக்கியத்திற்கும் இந்துஸ்தானியைப் பரப்புவதன் மூலம் - தொண்டாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேடையிலிருந்து ஒருவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அண்ணலே, சன்னதுகளையும் பட்டதாரிகளுக்கு வழங்கினர். முதன்மையாக வந்த மாணவர்களுக்குப் பரிசுகளையும் வழங்கினர். இந்த விழாவில் இராஜ்குமாரி அமிர்த் கௌர்தான் பட்டமளிப்பு விழாப் பேருரையாற்றியவர். இரவில் இந்திப் பிரச்சாரகர்கள் மாநாடு நடைபெற்றபோது, காந்திஜியின் யோசனைப்படி பிரச்சாரகர்கள் தேவநாகரி, உருது ஆகிய இரண்டு லிபிகளிலும் இந்துஸ்தானியைக் கற்கவும் கற்றுக்கொடுக்கவும் வேண்டுமென்று ஒரு தீர்மானம் கடுமையான விவாதத்திற்குப் பின் மிகப் பெரும்பாலான வாக்குகளால் நிறைவேறியது.

இன்று காலையில் கஸ்தூரிபா நிதி ஊழியர்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, அவர்களுடைய பணியைத் திறம்படச் செய்வதற்கான வழிவகைகளைக்

சட்டசபையும் பணியும்

கூறினர். இந்த ஊழியர்கள் அனைவரும் கிராம மறுபோவங் கொள்ள வேண்டும் என்றும் பாராளுமன்றப் பணிகளில் ஈடுபட்டிருப்போர் இப்பணியில் தொடர்பு கொள்வது விரும்பத்

தக்கதல்லவென்றும் அண்ணல் கூறினார். இதற்கு அவர் கூறிய காரணங்கள் இரண்டு ; இரண்டு பணிகளையும் ஒருவர் செய்வது கடினமானது என்பது ஒன்று; நிர்மாணப் பணிகளில் பாராளுமன்ற வேலையும் ஒன்று என கிராம மக்கள் தவருகப் புரிந்து கொள்வார்கள் என்பது மற்றொன்று.

பேனு காணுமற் போயிற்று

இன்று காந்திஜியின் பேனு காணுமற்போனது பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. எத்தனையோ பேர் எவ்வளவோ தேடியும் அதைக் கண்டெடுக்க முடியவில்லை. பட்டமளிப்பு விழாவில் அவர் அந்தப் பேனுவைப் பயன்படுத்தியிருக்கிறார். அதற்குப் பின்பு பிரார்த்தனை முடிந்து வீட்டிற்கு வந்து சில காகிதங்களில் கையெழுத்துப் போடுவதற்காகப் பேனுவை அவர் தேடிய போது அதைக் காணவில்லை. இந்தப் பேனு கிடைக்காவிட்டால் இனி நான் பவுண்டன் பேனுவையே பயன்படுத்த மாட்டேன் என்று அவர் விரதம் பூண்டார். ஆனால், ''பவுண்டன் பேனு தொலைந்துவிட்ட மூன்றுவது நாள் காந்திஜி வழக்கம்போல அவர் அலுவல்களைக் கவனிக்க மேசை மீது அமர்ந்தபோது அவர் பேனு அங்கிருந்தது,'' என்று ஆக்கூர் அனந்தாச்சாரி எழுதியிருக்கிறார்.

28-1-46

மௌனத்தின் சிறப்பு

மறுநாள் மௌனமாக இருந்து கொண்டே காந்திஜி எத்தனையோ ''அதிசயங்களை'' நிகழ்த்திக் காண்பித்தார். பொதுமக்களும் வழிபாட்டுக் கூட்டத்தில் இது வரை என்றுமில்லா அளவில் முழு அமைதியைக் கடைப்பிடித்து மற்றொரு அதிசயத்தை நிகழ்த்தினர். இன்றையப் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு காந்திஜி எழுதிக் கொடுத்திருந்த சொற் பொழிவும் மௌனத்தின் சிறப்பைப் பற்றி இருந்ததில் வியப்பில்லை. இன்றையப் பிரார்த்தனையில் வழக்கமாகப் படிக்கப் படும் அத்தனை பாடல்களும் படிக்கப் பெற்றன ; ஒரு அம்சம் கூட விடுபடவில்லை.

இன்று காலையில் காந்திஜி உலாவப் போனபோது டாக்டர் சுசீலா நய்யார், பியாரிலால், எம். சத்தியநாராயணு, ஜகன்னததாஸ் முதலியோருடன் அவர் அடித்தளக்கல்

நாட்டவிருந்த அரிஜனப் பள்ளிக்குச் சென்று அதன் விவரங் களை ஜகன்னாத தாஸ் கூறக் கேட்டுக் கொண்டார். இதன் பின்னர், வேங்கடநாராயண ரோடும் மவுண்ட் ரோடும் சந்திக்கும் இடத்திற்கு அவர் வந்த போது, சில பஸ்களும் லாரிகளும் அங்கு நிறுத் தப்பட்டிருப்பதைக் கண்டார். ஒரு பஸ் ஓட்டியை நோக்கிக் கையால் சமிக்ஞை செய்து பஸ்ஸைத் தம் அருகே ஓட்டி வருமாறு காந்திஜி சொன்னார். ஆனால் இவ் வாறு காந்திஜி சமிக்ஞை செய்தது அந்த பஸ் ஓட்டிக்குப் பெரும் வியப்பாகப் போய்விட்டது. பஸ்ஸை ஓட்டி வரு மாறு காந்திஜி சொல்ல மாட்டார் என்று கருதி அந்த பஸ் ஓட்டி பேசாமல் இருந்துவிட்டார். ஆனால் காந்திஜி மறுபடி சமிக்ஞை காட்டவே அவர் அந்த பஸ்ஸை முன்னால் ஓட்டிக் கொண்டு வந்தார். காந்திஜி அந்த பஸ்ஸில் ஏறினார். அவரு டன் வந்தவர்களும் அவரைப் பின்பற்றினர்கள். காரை ஓட்டுமாறு காந்திஜி மீண்டும் சமிக்ஞை காட்டியபின், பஸ் ஓட்டி காரை ஓட்டினர். பஸ்ஸை மவுண்ட்ரோடு வழியாக ஓட்டி தியாகராய ரோட்டில் திருப்பினர் பஸ் ஓட்டியவர். வழியிலிருந்த கஸ்தூரிபா வாசலையும் பஜாஜ் வாசலையும் காந்திஜி பார்த்தார். பஜாஜ் வாசலில் பஸ்ஸை நிறுத்தச் சொல்லி காந்திஜியும் அவருடன் வந்தவர்களும் இறங்கிக் கொண்டார்கள். பஜாஜ் வாசலிலிருந்து அப்பகுதியில் நிறுவப் பெற்றிருந்த சேவா கிராமப் பொருட்காட்சி சாலை வரை காந்திஜி நடந்து சென்றார். அங்குப் பொருட்காட்சிக் குழுவின் தலைவரான கே. வேங்கடசாமி நாயுடு, கே. பாஷ் யம், என். வேணுகோபால், துரைக்கண்ணு முதலியார் ஆகியோர் காந்திஜியை எதிர் கொண்டழைத்துச் சுற்றிக் காண்பித்தார்கள். இதன் பின்னர் அரிஜன தொழிற் பள்ளிக்குச் சென்று அங்குள்ள புதுவகைத் தக்ளியைப் பார்வையிட்டார். பாரத் கபே கிருஷ்ண ஐயர் சிறு பண முடிப்பு ஒன்றையும் அளித்தார். இங்கிருந்து காரில் இந்துஸ்தானி நகருக்குச் சென்று அங்குச் சமையல் ஏற்பாடு களும் பிரதிநிதிகள் தங்குவதற்கான வசதிகளும் எவ்வாறு செய்யப் பெற்றிருக்கின்றன என்பதைப் பார்வையிட்டார். வைத்திய யூனிட்டின் பொறுப்பில் இருந்த டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன், அங்குச் செய்யப்பெற்று வந்த பணி களை விளக்கிக் கூறினர். சிகிச்சை பெறவந்தவர்கள் அளித்த தொகையுடன் 'யூனிட்'டில் பணியாற்றியவர்கள்

பஸ்லில் பயணம்

அளித்த தொகையும் சேர்த்துப் பணமுடிப்பாக காந்திஜியிடம் வழங்கப் பெற்றது. உலகில் பிணியாளர்களிடமிருந்து மருத்துவத்திற்கு வைத்தியர்கள் பணம் பெறுவதைப் பற்றித்தான் நாம் கேள்விப்படுகிறோம். ஆனால் காந்திஜியின் பணிக்காக வந்த டாக்டர்களோ வைத்தியம் செய்ததுடன் பணமும் அளித்தார்கள். அதுதான் காந்திஜியின் சக்தியாகும்.

அந்தகர் யாத்திரை

அவர் திரும்பியபோது, கண் பார்வையில்லா அந்தகர் ஒருவர் - காந்திஜியைக் ''காண்பதற்காக''ப் பொள்ளாச்சியிலிருந்து வந்தவர் - அந்தக் கட்டிடத்திற்கு எதிரே நின்று கொண்டிருப்பதைப் பார்த்து விட்டார். அவர் அருகில் சென்று அவருடைய கன்னத்தை அன்போடு தடவிக்கொடுத்தார். ஆனால் அந்த அந்தகருக்கோ தம் கன்னத்தைத் தடவிக் கொடுப்பவர் தாம் ''தரிசிக்க'' வந்த அண்ணலே என்பது தெரியாது. பக்கத்தில் இருப்பவர்கள் சொன்னபோது அவர் இரண்டு கைகளையும் தலைக்கு மேல் கூப்பி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

உணவுச் சிக்கல்

கவர்னரின் ஆலோசகராக அப்போது இருந்த சர். எஸ். வி. இராமமூர்த்தியும் அவர் குடும்பத்தினரும் காந்திஜியைச் சந்தித்தார்கள். சென்னை மாநிலத்தின் உணவு நிலைமையைப் பற்றி காந்திஜி அவரிடம் விசாரித்தார். எவ்வளவு கடினமான இன்னல்களையும் தாங்கிச் சமாளிக்கும் அளவிற்குத் தமிழர்கள் திறன் வாய்ந்தவர்கள் என்று காந்திஜிக்கு உறுதியான நம்பிக்கை இருந்தது. இந்தியாவில் இடைக்கால அரசாங்கம் பதவி ஏற்றிருந்த போது, தமிழகத்தில் பஞ்ச நிலைமை ஏற்பட்டு, சென்னை அரசாங்கத்தின் சார்பாக டில்லியிடம் உணவு கேட்பதற்காகச் சிலர் போயிருந்தார்கள். இது காந்திஜிக்குப் பிடிக்கவில்லை. டில்லி பிரார்த்தனைக் கூட்டத்தில் இதைப் பற்றிக் குறிப்பிட்டு அவர் கூறினார் : ''சென்னை மாநிலத்திலேயே நிலக்கடலை, தேங்காய் போன்ற ஏராளமான உணவுப் பொருள்கள் கிடைக்கின்றன. போதுமான மீன் கிடைக்கிறது. பெரும்பாலானவர்கள் அங்கு மீன் சாப்பிடுபவர்கள். ஆகையால் அவர்கள் ஏன் டில்லியிடம் பிச்சை கேட்டு வரவேண்டும்?... சென்னை மாநில வாசிகளை நான் தென்னப்பிரிக்காவிலிருந்த போதே நன்கு அறிவேன்.

அணிவகுப்பில் ஒவ்வொரு நாளும் ஒன்றரை இராத்தல் ரொட்டி தான் கொடுக்கப் பெற்றது. ஆனலும் நாங்கள் ஒவ்வொரு இரவும் எங்குத் தங்கினலும் அவர்கள் உற்சாக மாகப் பாடிக் கொண்டே, வழியில் கிடைத்த உணவுப் பொருள்களேச் சமைப்பார்கள். அவ்வாறு சமயத்திற் கேற்ற திறன் உள்ளவர்கள் இப்போது எப்படி ஆதரவற்ற வர்களாய் இருக்க முடியும்?'' மற்றும் திவான் பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியாருடன் வந்த கோவைத் தொழில் அதிபர் பி. எஸ். ஜி. கங்காநாயுடு, பழனியில் பெண்களுக்கான கன்யாகுருகுலம் ஒன்றை நிறுவலாம் என்றும் அதை நடத்துவதற்காக முதல் ஆண்டில் மூவாயிரம் ரூபாயும் இரண்டாவது ஆண்டில் ஆருயிரம் ரூபாயும் தாம் அளிக்கத் தயார் என்றும் காந்திஜி பழனிக்கு வரும் போது அங்குள்ள ஹரிஜன சத்திரத்தில் அதைத் தொடங்கி வைக்கலாம் என்றும் கூறினர். திருமதி யாகுப்ஹாசன் காந்திஜியைச் சந்தித்தபோது, கொராஜனைக் குறித்து யாகுப் ஹாசன் எழுதியுள்ள புத்தகத்தில் ஒரு பிரதி தமக்கு வேண்டும் என்று கேட்டார்.

டாக்டர் விநாயகமா?

இவ்வாறு காந்திஜியைப் பார்த்தவர்களில், டாக்டர் விநாயகமும் அவர் மனைவியாரும் இருந்தனர் என்று பத்திரிக்கையில் செய்தி வெளி வந்தது தான் ஒரு வேடிக்கை. இவர்கள் வர்தாவில் தங்கு வதற்காக விரைவில் புறப்பட்டுச் செல்ல இருக்கிறார்கள் என்றும் தங்களுடைய வணக் கத்தைத் தெரிவித்துக்கொள்வதற்காக காந்திஜியைச்சந்தித் தார்கள் என்றும் வெளிவந்த செய்தியெல்லாம் சரிதான். ஆனல் சந்தித்தவர்கள் டாக்டர் விநாயகமும் அவர் மனைவி யும் அல்ல; நிர்மாண ஊழியர்களில் ஒருவரும் டாக்டர் ஜே. சி. குமரப்பாவின் முக்கிய சீடருமான விநாயகமும் அவர் மனைவியும் ஆவர். மகன் வாடியில் பணியாற்றிய போது நெல் அரைக்கும் மரத் திருக்கையைக் கண்டுபிடித்த வர் இவரே. சாதாரணமான பொருள்களைக் கொண்டு சிறந்த முறையில் அலங்காரம் செய்வதற்கு இவருக்குள்ள ஆற்றலே காந்திஜியே பாராட்டியிருக்கிறார். விஜயகத்திற்கு அப்போதுதான் திருமணமாகியிருந்தது. அவருடைய மனைவி யின் பெயர் கோமதி. காந்திஜியைச் சந்திக்கப் பெரிய பெரிய மனிதர்கள் எல்லோரும் முயன்றும் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லே. ஆனல் இந்த அம்மையாருக்கு

அவர் ஒரு நிர்மாண ஊழியரின் மனைவி என்ற முறையிலும் சந்தர்ப்ப வசமாகவும் இலகுவாக இந்தப் பேறு கிடைத்து விட்டது. தாம் காந்திஜியைப் பார்க்க வேண்டும் என்று இவர் ஹரிஹர சர்மாவைக் கேட்டார். ஹரிஹர சர்மா டாக்டர் சுசீலா நய்யாரிடம் கையைக் கண்பித்தார். இவர் யாரோ ஒரு பெரிய பொறுப்பில் உள்ளவர் என்று டாக்டர் சுசீலா நய்யார் நினைத்தாரோ என்னவோ நேரே காந்திஜி யிடம் கொண்டுபோய் அறிமுகம் செய்து விட்டார். அப் போது காந்திஜியுடன் ஒரு சில பத்திரிகையாளர்களைத் தவிர வேறு யாருமில்லை. காந்திஜி தமக்கே உரிய பாணியில் கோமதி விநாயகத்தைப் பற்றிய விவரங்களைக் கேட்க ஆரம் பித்து விட்டார்.

காந்திஜி : உன் கணவர் எங்கு வேலை செய்கிறார் ?

கோமதி : வர்தாவில் டாக்டர் குமரப்பாவிடம்.

காந்திஜி : அப்படியானால் நீ அங்கே தான் வரப்போகிறாய் என்று சொல்.

கோமதி : ஆம். டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரன் இது விஷயமாக டாக்டர் சுசீலா நய்யாருக்கு எழுதுவதாகச் சொல்லியிருக்கிறார்கள்.

காந்திஜி : அப்படியானால் சீக்கிரம் அங்கு வந்து சேர். கஸ்தூரிபா ஆஸ்பத்திரியில் வேலை செய்யலாம்.

கோமதி : சரி.

இந்த உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த பத்திரிகை யாளர்கள் எப்படியோ தவறான கருத்தில் மேற்கண்ட செய் தியை வெளியிட்டார்கள். இன்று (லால்குடித் தாலூகா) ஓமந்தூர் கிராமத்தைச் சேர்ந்த மிராசுதாரரான எம். பி. வீரப்பபிள்ளையும் டாக்டர் சி. ஆர். கிருஷ்ணபிள்ளையும் காந் திஜியைப் பேட்டி கண்டு கஸ்தூரிபா தேசிய நினைவு நிதியின் ஆதரவில் ஒரு பிரசவ, பொது மருத்துவ நிலையமும், இந்துஸ்தானிதலிமி சங்க ஆதரவில் ஒரு ஆதாரப்பள்ளியும் ஏற்படுத்துவதற்கு, முதல் தொகையாக ஐயாயிரம் ரூபாய்க்கு ஒரு 'செக்' அளித்தார்கள்.

பேட்டி

29-1-46

மறுநாள் காலையில் நிர்மாண ஊழியர்களின் மாநாடு முடிவடைந்தது. மாநாட்டின் இறுதிநாள் விழாவில் காந்திஜி சிறிது நேரம் பேசிவிட்டு, நிர்மாண மாநாடு நிர்மாண ஊழியர்கள் கேட்ட முக்கியமான கேள்விகளுக்கு மறுமொழி அளித்தார்.

கேள்வி : அஹிம்சா முறையில் நிலத்தைத் தேசிய மயமாக்க முடியுமா?

காந்திஜி : முடியும். நிலத்தை உழுபவர்கள்தான் நிலச் சொந்தக்காரர்களாக வேண்டும். விவசாயிகளின் உரிமைகளையும் கடமைகளையும் நிர்மாண ஊழியர்கள் எடுத்துச் சொல்லி வரவேண்டும். விவசாயிகள் தங்களுடைய நியாயமான உரிமைகளை நிலை நிறுத்துவதற்குத் தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் பாடுபட வேண்டுமென்பதை எடுத்துரைக்க வேண்டும். நில உரிமையை அடைவதற்காக சத்தியாக்ரகம் செய்ய வேண்டியுமிருக்கலாம். அவர்களை இரக்கமில்லாது அடக்கி நசுக்கும் அளவிற்கு ஜமீன்தார்கள் இராட்சதர்கள் அல்ல; ஏனென்றால் அப்படி அடக்குவது பின்னவர்களுக்குக்கூட அனுகூலமாக இராது.

கிராம வாழ்வின் எல்லாத் துறைகளிலும் சேவை செய்யும் ஒரு (சமக்ர) கிராம சேவக் பற்றி இந்த மறுமொழியின் போது அவர் கூறிய விளக்கம் புகழ் பெற்றது. நிர்மாணத் திட்டங்கள் அல்லது கிராம சுயராஜ்யம் பற்றிய நூல்களில் இது அடிக்கடி கையாளப் பெறுகிறது.

சென்னை மாநகரைச் சேர்ந்த மாதர்களும் குழந்தைகளும் மகாத்மாவை நன்கு காண வேண்டுமென்பதற்காகத் தனியாக மாதர்கள் கூட்டம் ஒன்று வெள்ளி விழாப் பந்தலில் ஏற்பாடு செய்யப்பெற்றது. மாதர்கள் கூட்டம் மாதர்களின் சார்பாக ஒரு பெரிய பண முடிப்பை அளிக்க வேண்டுமென்று கருதி விஜய நகரம் மகாராணி வித்தியாவதி தலைமையின் கீழ் ''மாதர் பண முடிப்புக் குழு'' ஒன்றும் அமைக்கப்பெற்றிருந்தது. இந்தக் கூட்டத்திற்கு (கண்டிப்பாக) டிக்கெட்டுகளின் பேரிலேயே அனுமதி அளிக்கப்பெற்றும் சுமார் பதினையா

யிரம் பேர் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். மகாத்மாவிடம் மகாராணி 10,000 ரூபாய் கொண்ட பண முடிப்பை அளித்த போது மாதர்கள் சார்பாகக் கொடுக்கப்படும் பண முடிப்பு ஓர் இலட்சமாவது இருக்க வேண்டும் என்றும் பின்னுலாவது வசூலித்து அளிக்கும்படியும் அப்போதும் துண்டு விழுந்தால் துண்டு விழும் தொகையை மகாராணி அளிக்கவேண்டு மென்றும் காந்திஜி கூறினர். மகாராணியும் சம்மதம் தெரி வித்தார். மகாத்மாவிற்கு முழு மனநிறைவு ஏற்பட்டு விட்டது. திருமதி ராஜம் பாரதியும் மற்றும் ஒன்றிரண்டு பெண்களும் தனித்தனியாகப் பண முடிப்பை அளித்தார்கள்.

இன்று மாலையில் நடைபெற்ற ஆதாரக் கல்விப் பட்ட மளிப்பு விழாவில் காந்திஜி உற்சாகமாகவும் வழக்கமான கேளிக்கையுடனும் காணப்பட்டார். நரஹரி பரிக் தலைமை வகித்த இந்தப் பட்டமளிப்பு விழாவில் வர்தா ஆதாரக் கல்விப் பயிற்சி பெற்ற 26 பேருக்கு நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கப் பெற்றன. நற்சான்றுகளிலிருந்த தமிழ் வாச கத்தை முயற்சியுடன், பக்கத்தில் இருந்த ஓர் ஆசிரியரிடம் பொருள் கேட்டுக் கொண்டே, காந்திஜி படித்துப் பார்த் தார். விழாவில் ஆர். வினயகம் வரவேற்புரை கூற, கல்வி முகாம் முதல்வராகிய ஆர். வி. ருத்திரப்பசுவாமி ஆதாரக் கல்விப் பயிற்சி நிலையத்தைப் பற்றிய அறிக்கையைப் படித் தார். நற்சான்று பெறும் மாணவர்களின் பெயரைக் கோ. வேங்கடாசலபதி படித்தார். ஒவ்வொருவராக வந்து காந்திஜியிடம் நற்சான்று பெற்றுச் சென்றனர். பேபி என்ற இளம் அம்மையார் ஒருவர் நற்சான்று வாங்க வந்தபோது ''பரவாயில்லையே, பேபி பெரிய பேபியாகத்தான் இருக்கி றது'' என்றார் நகைச்சுவை அரசரான அண்ணல்! வழக்கம் போல், இன்றும் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூச்சல் ஏற்பட்டு விட்டது. ஆகையால் காந்திஜி தம் பேச்சைத் திடீரென நிறுத்தி விட்டார். இரவு காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத் தில் உரையாற்றுவதற்காக காந்திஜி வந்தபோது, ஊழி யர்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது வானைப் பிளந்து விடும்போல் இருந்தது. கூட்டத்திற்கு யாரும் தலைமை வகிக்காதிருப்பதைப் பார்த்த காந்திஜி, கீழே அமர்ந்திருந்த காமராஜை அழைத்துத் தலைமை வகிக்குமாறு சொன்னார். அதன்படி காமராஜும் தலைமை வகித்து,

மற்றொரு பட்டமளிப்பு

காந்திஜியை அறிவுரையாற்றுமாறு கேட்டுக்கொண்டார். இந்தச் சமயத்தில் பலர் அவரிடம் அன்பளிப்புகளை வழங்குவதற்காக முன் வரவே, ''இப்போது எனக்குப் பணமோ, தங்கமோ, வைரமோ தேவையில்லை'' என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அவர் இந்துஸ்தானியில் பேசத் தொடங்கி, அதைப் புரிந்து கொள்ள முடிகிறவர்களெல்லாம் கையை உயர்த்துமாறு கேட்டுக் கொண்டார். சுமார் ஐம்பது பேர் உயர்த்தினர்கள். தலைமை வகித்திருந்த காமராஜ் கையை உயர்த்தாததைக் கவனித்துவிட்ட காந்திஜி, ''உங்களுக்குக் கூடவா (இந்தி தெரியாது)?'' என்று வியப்போடு கேட்டார். இதன் பின்பு அவர் இதையே முதல் பொருளாக எடுத்துக் கொண்டு பேசத் தொடங்கினர். பின்னர் ஹரிஜனர்களின் கேள்விகளுக்கு அண்ணல் பதில் அளித்தார்.

கேள்வி : நான் ஒரு அரிஜன். ஜார்ஜ் டவுனில் உள்ள கதர் நிலையம் ஒன்றில் கூட்டுபவனாக வேலை செய்கிறேன். அந்த நிலையத்தின் பொறுப்பில் உள்ளவர்கள் என்னை நாயைக் காட்டிலும் கேவலமாக நடத்துகிறார்கள். நான் அவர்களைத் தொட விடுவதில்லை. (இதைக் கூறிக் கொண்டு வந்தவர் முதலில் சிறிது ஆங்கிலத்திலும் பின்னர் தெலுங்கிலும் கூறினர். இவர் இதைக் கூறிய போது கூட்டத்திலிருந்த ஒருவர் ''இது பொய்'' என்று சத்தம் போட்டார்.)

காந்திஜி : இது உண்மையானால் மிகவும் வருந்தத்தக்கதே. காங்கிரஸ்காரர்கள் எல்லாம் தங்கள் உள்ளத்தில் கடவுள் இருக்கிறார் என்று கருதி மனச் சாட்சியின்படி நடக்க வேண்டும். அப்போது எல்லாம் சரியாகி விடும். இந்து - முஸ்லிம், பறையர் - தீண்டாதார் என்றெல்லாம் வேறுபாடு பார்த்தால், நாட்டிற்கு அழிவுதான் விளையும்.

கேள்வி : உங்களுடைய பிரார்த்தனைக் கூட்டத்தின் குறிக்கோள் மறைமுகமாக இந்து சமயத்தைப் பரப்புவதுதான் என்று கூறுகிறார்களே, அதைப் பற்றித் தங்கள் கருத்தென்ன?

காந்திஜி; என்னுடைய வாழ்க்கையின் நியதிகளில் ஒன்று பிரார்த்தனை. கிருஷ்ணன், இராமன், அல்லா, கிறிஸ்து

ஆகிய எல்லோரும் எனக்கு ஒன்றுதான். எல்லா மதங்களும் ஒரே மரத்தின் பல்வேறு கிளைகளைப் போன்றே எனக்குத் தோன்றுகின்றன. இந்து சமயத்தையோ அல்லது வேறு சமயத்தையோ பரப்ப வேண்டும் என்ற மறைமுக நோக்கத்தோடு நான் பிரார்த்தனை செய்யவில்லை. மக்கள் தவறுகப் புரிந்து கொண்டால் அதற்கு நான் பொறுப்பல்ல. விரும்பினால் அவர்கள் என் பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வந்து கலந்துகொள்ளலாம்; இல்லையேல் விலகி நிற்கலாம்.

கேள்வி: யுத்தகாலத்தில் கள்ள மார்க்கெட் செய்தவர்களைக் குறித்துக் காங்கிரஸ் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? அவர்களுக்கு என்ன தண்டனை அளிக்கலாம்?

காந்திஜி: நான் ஒரு காங்கிரஸ்காரனாக இருந்தால், அவர்களைக் குதிரையை அடிக்கும் சாட்டையால் - அஹிம்சா முறையில் - அடிக்க வேண்டும் என்று கூறுவேன். ஆனால் நூற்றுக்கு நூறு அஹிம்சா வாதி என்ற முறையில் நான் எதுவுமே கூற விரும்பவில்லை.

பேட்டி

இன்று அதிகாலையிலிருந்து ஏராளமான பேர்களுக்கு காந்திஜி பேட்டியளித்தார். காலைப் பிரார்த்தனையின்போது சாய்பாபா பக்தர்கள் சிலர் வந்து கலந்து கொண்டதுடன், தாங்கள் ஒரு குருகுலம் நடத்த விரும்புவதாகவும் அதற்கு காந்திஜியின் ஆலோசனையைப் பெற வந்ததாகவும் சொன்னார்கள். குருகுலத்தில் சர்க்காவிற்கும் இந்துஸ்தானிக்கும் முக்கிய இடம் அளிக்குமாறு காந்திஜி அறிவுரை கூறினார். காலஞ்சென்ற சேலம் சி. விஜயராகவாச்சாரியாரின் குமாரத்தியாகிய சீதம்மாளும் அந்த அம்மையாரின் குமாரராகிய ஆர். டி. பார்த்தசாரதியும் இன்று காந்திஜியைச் சந்தித்துப் பேசினார்கள். விஜயராகவாச்சாரியாரின் சேவையைக் குறித்து காந்திஜி உணர்ச்சிப் பெருக்கோடு குறிப்பிட்டு, அவருடைய தலைமையில் தான் அஹிம்சாபூர்வமான ஒத்துழையாமை காங்கிரசின் கோட்பாடாகியது என்று அவர்களிடம் கூறினார். காந்திஜி தங்கியிருந்த மங்கள விலாசின் உரிமையாளரான எஸ். சுப்பையர் (எஸ். கணேஷ் அண்டு கம்பெனியின் சொந்தக்காரர்) இன்று காந்திஜிக்கு

அறிமுகம் செய்து வைக்கப் பெற்றார். தம்முடைய கணேஷ் அண்டு கம்பெனியில் வெளியான அரசியல் புத்தகங்கள் சில வற்றை காந்திஜியிடம் சுப்பையர் அன்பளிப்பாக வழங்கினார். இவைகளில் காந்திஜியின் ''இந்திய சுயராஜ்யம்'' (Indian Home Rule) என்ற நூல் ஒன்றாகும். எத்தனையோ பதிப்பாளர்கள் இந்த நூலை வெளியிடத் தயங்கிய ஒரு காலத்தில் - அதாவது 1919-இல்-கணேஷ் அண்டு கம்பெனியார் இதை வெளியிட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஜனம்மாள் தலைமையில் மைலாப்பூர் பெண்கள் சங்க உறுப்பினர்கள் காந்திஜியைச் சந்தித்து அவரிடம் ஒரு பணமுடிப்பை அளித்தார்கள். இது தவிர சிந்தி வணிகர்கள் சிலர் கேவல் ராம் செல்லாராம் தலைமையில் காந்திஜியைச் சந்தித்து, பத்தாயிரம் ரூபாய் கொண்ட பணமுடிப்பை அளித்தார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான காமராஜ், துணைத் தலைவர் திருமதி ருக்மணி இலட்சுமிபதி, செயலாளர் எம். பக்தவத்சலம் ஆகியோர் காந்திஜியைப் பேட்டி கண்டு விடுதலையான இந்திய தேசிய ராணுவ வீரரை எவ்வகையில் பயன்படுத்துவது என்பது குறித்துச் சுமார் பதினைந்து நிமிடங்கள் விவாதித்தனர்.

ஏ. கே. செட்டியார்

இன்று இந்துஸ்தானி நகரில் காந்திஜியின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் - மிகுந்த முயற்சியின்பேரில் பல்வேறு மொழிகளில் உலகம் சுற்றிய தமிழர் ஏ. கே. செட்டியார் பிடித்திருந்தது - போட்டுக் காட்டப் பெற்றது. காந்திஜியின் உறவினர்கள், சேவாகிராம ஆசிரமத்தைச் சேர்ந்தவர்கள் உள்பட ஏராளமானபேர் அப்படத்தைப் பார்த்தார்கள்.

30-1-46

எழுத்தாளர்கள்

வெள்ளி விழாவையொட்டி ஏற்பாடு செய்யப்பெற்ற எல்லா மாநாடுகளும் (தொழிலாளர் மாநாடு ஒன்றைத் தவிர) முடிவடைந்து விட்டதால் மாநாட்டிற்கு வந்திருந்த பிரதிநிதிகளெல்லோரும் மறுநாள் தங்கள் தங்கள் ஊருக்குப் புறப்பட்டார்கள். கன்னடம், களி தெலுங்கு, கவின் மலையாளம், கன்னித் தமிழ் ஆகிய நான்கு திராவிட மொழி எழுத்தாளர்கள், கலைஞர்கள் கூட்டத்தில் இன்று பிற்பகலில் காந்திஜி பங்கு கொண்டார். காலையில் இம்மாநாட்டில் பேசிய வ.ரா. தமிழ் இலக்கிய வரலாற்றில் பாரதி சகாப்தத்

தின் பெருமையை எடுத்துக் கூறியிருந்தார். எழுத்தாளர் கள் மாநாடும் கலைஞர்கள் மாநாடும் முதலில் ஆங்கிலத்தி லேயே நடைபெறுவதாக இருந்தது; மாநாட்டில் சொற் பொழிவாற்ற இருந்தவர்கள் ஆங்கிலத்தில் சொற்பொழிவு களைத் தயாரித்துக்கொண்டு வந்திருந்தனர். ஆனால் முன் கூட்டியே காந்திஜி இவர்களிடம், ஒவ்வொருவரும் தங்கள் தாய் மொழியில் பேச வேண்டும் அல்லது இந்துஸ்தானியில் பேச வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறிவிட்டதால், பின்னர் ஒவ்வொருவரும் தங்கள் தாய் மொழியிலேயே பேசினார்கள். காந்திஜி 'எனக்குக்கூட உங்கள் கருத்துக் களைப் புரிந்துகொள்ள முடிகிறதே!' என்று சொல்லிச் சிரித்த போது, எழுத்தாளர்கள் அதை வெறும் உபசார வார்த்தை என்றே நினைத்தனர். ஆனால், தம் முடிவுரையில் காந்திஜி, அந்தப் பேச்சுக்களைப் பற்றித் தம் கருத்துக்களை வெளியிட்ட போதுதான், அவர் எவ்வளவு தூரம் அந்தப் பேச்சுக்களைப் புரிந்து கொண்டிருந்தார் என்பது எல்லோருக்கும் விளங் கிற்று.

கலைஞர்கள்

இந்துஸ்தானிப் பிரச்சாரசபை வெள்ளி விழாவின் ஒரு அங்கமாக இன்று பிற்பகலில் கலைஞர்கள் விழா நடைபெற்ற போது காலையில் நடைபெற்ற மாநாட்டிற்கு வந்திருந்த எழுத்தாளர்களும் சேர்ந்து அமர்ந் திருந்தனர். இக்கூட்டத்தில் பேசியபோது, தாம் ஒரு இலக்கிய கர்த்தா அல்லவென்றும் ஆகவே இந்தி இலக்கியம் உள்பட எந்த இலக்கியத்தைப் பற்றியும் தமக்குப் பேச அதிகாரம் இல்லையென்றும் அதே சமயம் பரந்த பொருளில் பார்த்தால், தாம் ஒரு கலைஞரே என்றும் காந்திஜி சொன்னார். தம்மை ஏன் கலைஞர் என்று கருதுகிறார் என்பதற்கு காந்திஜி விளக்கங் கூறினார். ''சத்தியம், அஹிம்சை ஆகிய கோட்பாடுகளின்படி வாழும் கலையை நான் இத்தனை ஆண்டுகளாகப் பயின்று வருகிறேன். வாழ்க்கையைப் போன்றே கலையும் பரந்ததாகும். எழில் மிகு கலையைப் படைக்கும்போது அதைச் சத்தியம், அகிம்சை ஆகிய ஆதாரமான கோட்பாடுகளுக்கு உடன் பட்ட முறையில் படைக்க வேண்டும். விடுதலை பெறுவது கூட ஒரு கலைதான்'' என்றார்.

இம்மாநாட்டில் மகாத்மா செய்த ஓர் அற்புத சாதனை, இங்கு அவருக்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்ற அவருடைய

படத்தை, ஏலமிடுவதில் தமக்குள்ள அற்புதத் திறமைகளை யெல்லாங் காட்டி, எழுத்தாளர்கள், கலைஞர்கள் கூட்டத்திலேயே ரூ. 350-க்கு அவரால் விற்க முடிந்ததுதான். கலைஞர்களின் சார்பாக வரவேற்புரை கூறிய எஸ். என். சுப்புர் என்ற கலைஞர் காந்திஜியின் பெரிய படம் ஒன்றையும் பல படங்கள் அடங்கிய ஆல்பம் ஒன்றையும் மகாத்மாவிடம் அளித்தார். இம்மாநாட்டிற்குக் காட்டூரி வெங்கடேஸ்வர ராவ் தலைமை தாங்கினர்; கம்பதாசன் ஒரு பாடல் பாடினர். தேசியத் தொண்டுடன் கலையை இணைக்க வேண்டிய அவசியத்தைக் கே. இராஜகோபாலன் வலியுறுத்தினர். முடிவில் எழும்பூர் பெருஞ்சாலையில் குடியிருக்கும் பி. எஸ். கிருஷ்ண ஐயர்தாம் ரூ. 350-க்குக் கேட்டுப் படத்தை வாங்கியவர். இதன் பின்னர் ஆல்பத்தை எடுத்துப் பார்த்து, அதைத்தாம் ஆயிரம் ரூபாய்க்காவது விற்கவேண்டும் என்றும் இந்த இடத்தில் அதை ஏலத்தில் விட விரும்பவில்லை யென்றும் கூறி காந்திஜி தம்முடனேயே வைத்துக் கொண்டார்.

அபூர்வ ஏலம்

மாலையில் வெள்ளி விழாப் பந்தலே தாங்க முடியாத அளவு ததும்பி வழிந்து கொண்டிருந்த மாணவர், ஆசிரியர் கூட்டத்தில் பேசிய காந்திஜி அவ்வளவு மாணவர்கள் கூடியிருந்ததைக் கண்டு மனமகிழ்ந்தார். ''மௌனமாக இருந்து அதிகப் பயனுள்ள சேவை செய்ய முடியும் என்பதைச் சென்னை வாசிகளுடன் சேர்ந்து நான் தென்னப்பிரிக்காவில் தொண்டாற்றியபோது மட்டுமல்லாது இப்பொழுது இங்கு வந்து தங்கியுள்ள இந்தச் சில நாட்களிலும் உணருகிறேன். நான் பேசாமலேயே இங்குள்ள மக்கள் என்னுடைய குறிக்கோள் என்னவென்பதையும் நான் அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறேன் என்பதையும் உணர்ந்திருக்கிறார்கள்,'' என்று அண்ணல் கூறினர். இதன் பின்னர் மாணவர்கள் கேட்ட ஒரு சில கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார்.

மாணவர் கூட்டம்

பண வசூலைப் பெறுவதில் காந்திஜி எவ்வளவு கண்டிப்புள்ளவராக இருந்தார் என்பது இந்தக் கூட்டத்தில் தெளிவாகத் தெரிந்தது. மேலும், ஒரு பொதுக் காரியத்திற்காக வசூலித்த பணத்தைப் பிறர் செலவிடுவதற்கு அப்பணத்தை வசூலித்தவர்கள் நிபந்தனை போடலாமா என்பதற்கும் இங்குப் பதில் கிடைத்தது. நிதி வசூலைக் குறித்துத் தல

வசூலில் கண்டிப்பு

மாணவர்கள் காந்திஜியிடம் ஒரு காகிதத்தை அளித்திருந்தனர். அதில், பத்தாயிரம் ரூபாய் வசூல் செய்யப் பெற்றிருப்பதாகவும் அதில் ஐயாயிரம் ரூபாயையே காந்திஜியிடம் அளிக்க முடியும் என்றும் மீதமுள்ள ஐயாயிரம் வேறு காரியங்களுக்காகத் தேவைப்படுவதாகவும் கூறியிருந்தார்கள். அதே சமயம் இந்திய மாணவர் காங்கிரசின் செயலாளர் எழுதியிருந்த ஒருகடிதத்தில், ஏழாயிரம்தான் வசூலாகியிருப்பதாகவும் அதில் இரண்டாயிரம் ரூபாயைத் தாங்கள் தொண்டாற்றும் கிராமச் சீரமைப்பு நிலையத்திற்கு காந்திஜி அளிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் பெற்றிருந்தது. இந்த இரண்டு கடிதங்களையுமே காந்திஜி கூட்டத்தில் படித்தார். அதன்பின் அவர் சொன்னார்: ''இந்திப் பிரச்சார சபை நிதிக்காக என்னிடம் அளிப்பதற்காகவென்றே நீங்கள் இந்த நிதியை வசூல் செய்தீர்கள். ஆகையால் சட்டப்படி பார்த்தாலும் தர்ம நியாயப்படி பார்த்தாலும் இத் தொகையை நீங்கள் அப்படியே அளித்து விடவேண்டும். தொகை எவ்வாறு செலவிடப் பெற வேண்டும் என்று எந்த விதமான நிபந்தனையும் போடக்கூடாது. இந்த விஷயத்தில் நான் இதற்குமேல் எதுவும் கூற விரும்பவில்லை.''

கேள்வி : நிர்மாணத் திட்டம் மாணவர்களைக் கவர்ச்சி செய்யவில்லை. இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?

காந்திஜி : நான் நிர்மாணத் திட்டத்தைப் பற்றிக் கடைசியாக எழுதியுள்ள புத்தகத்தைப் படித்துப் பார்க்குமாறு மாணவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அரிஜனங்கள், மலைவாசிகள் ஆகியோரிடையே சேவை செய்வது எவ்வாறு உங்கள் உள்ளத்தைக் கவராமல் போகும்?

கேள்வி : சகிப்புத் தன்மையில்லாத மாணவர்களுக்கு உங்களுடைய அறிவுரை என்ன?

காந்திஜி : முதன் முதலாக ஒரு மாணவன் கைக்கொள்ள வேண்டிய சிறந்த குணம் சகிப்புத் தன்மையே. சுயராஜ்யம் அடைவதற்கான வழியாகக் கடந்த இருபது ஆண்டுகளாக நான் சத்தியத்தையும் அஹிம்சையையும் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறேன். அதே சமயம், பட்டாக் கத்தியின் மூலந்தான் விடுதலைபெற முடியும் என்று யாராவது ஒருவர் சொன்னால், அதையும் நான் பொறுமையுடன் கேட்பேன். அணுக்குண்டைப்

பயன்படுத்தி வெற்றி பெறுவதைப் பற்றி நான் சிந்தித்துப் பார்த்தேன். (இங்கு காந்திஜி அணுக்குண்டைப்பற்றிக் குறிப்பிடுவதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் தான் ஹிரோஷிமா, நாகசாகி மீது அணுக்குண்டுகளைப் போட்டு ஜப்பானை அமெரிக்கா வெற்றி கொண்டது.) அச் சிந்தனையின் முடிவாக, சத்தியமும் அஹிம்சையும் அணுக்குண்டைவிட எத்தனையோ மடங்கு பலம் பொருந்தியவை என்பதை நான் உணர்ந்தேன். அணுக்குண்டைக் கண்டு நான் அஞ்சவில்லை. அதனால் ஆன்மாவைக் கொன்றுவிட முடியாது. இம்சை உங்களை வெல்ல முடியாது என்ற உறுதி மட்டும் உங்களுக்கு இருக்குமானால், வெற்றி உங்களுடையதுதான். ஏனென்றால் தீயவற்றிற்குத் தார்மிகமாக எதிர்ப்புத் தெரிவிப்பதே ஒரு வெற்றிதான்.

இந்திய மாணவர் காங்கிரஸ் செயலாளரான வி. கணபதி காந்திஜிடம் ரூ. 6000 கொண்ட பண முடிப்பை அளித்து மீதி ரூ. 1000 மறுநாள் அளிக்கப்படும் எனத் தெரிவித்தார். சர்., லேடி முத்தையாச் செட்டியார் உயர்நிலைப் பள்ளிகளின் சார்பாக ஒரு பணமுடிப்பும் வழங்கப்பெற்றது.

இன்றும் பிரார்த்தனைக் கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் இருந்து கொண்டிருந்ததால், காந்திஜி சிறிது நேரத்தில் தம் பேச்சை முடித்துக் கொண்டார். பிரார்த்தனைக் கூட்டத்தில் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் நடந்துகொள்ள வேண்டுமென்று நாள்தோறும் தாம் கூறி வந்ததை மக்கள் கடைப்பிடிக்காதது காந்திஜிக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது.

மீண்டும் சத்தம்

இக்கூட்டத்தில் மதுவினால் ஏற்படும் தீங்குகளைப் பற்றி காந்திஜி குறிப்பிட்டார்: ''சென்னை நகரில் ஆயிரக்கணக்கானோர் குடிப்பழக்கம் உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். யாரும் நினைத்துப் பார்த்தால் இதயமே வெடித்து விடும் அளவிற்கு மதுவினால் தீங்குகள் விளைகின்றன. காங்கிரஸ் அமைச்சரவை இருந்தபோது இங்குப் பல பகுதிகளில் மதுவிலக்கு அமுலில் இருந்தது. மதுவினால் வரக்கூடிய வருமானம் இதன் காரணமாகக் குறைந்தது என்

மதுவின் தீமைகள்

முலும், மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள், குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வயிறு நிறைய உணவு கிடைத்துக் கொண்டிருந்தது. இந்தச் சீர்திருத்தம் மேலேயிருந்து வராமல் கீழேயிருந்து வந்திருந்தால் இன்னும் அதிகப் பலன் கிடைத்திருக்கும். ஆனல் மக்கள் மீது ஆண்டவன் நிறைந்த அருள் பாலிக்கும்போதுதான் கீழேயிருந்து இந்தச் சீர்திருத்தம் வரமுடியும்.''

இன்று பிரார்த்தனைக் கூட்டத்திற்கு வருவதற்கு முன், நோய்வாய்ப்பட்டிருந்த டாக்டர் எஸ். கே. சுந்தரத்தை அவர் இல்லத்தில் போய் காந்திஜி பார்த்தார்.

டாக்டர் சுந்தரம்

டாக்டர் சுந்தரத்தின் இல்லம் இந்துஸ்தானிப் பிரச்சாரசபைக்கு அருகிலேயே இருக்கிறது. தலைமை அரசாங்க மருத்துவமனையின் முதல் வைத்திய அதிகாரியாக இருந்த எஸ். கே. சுந்தரம் ஒரு தேசியவாதியும் இந்தி வளர்ச்சியில் அக்கறை கொண்டவரும் ஆவார். இந்திப் பிரச்சார சபைக்கு அவர் அவ்வப்போது பெரிதும் உதவி வந்தார். காந்திஜி சென்னைக்கு வந்திருந்த போது, அவர் மரணப்படுக்கையில் கிடந்தார். மகாத்மாவைக் காண வேண்டுமென்று மிகவும் ஆவலாய் இருந்தார். இதை அண்ணல் கேள்விப்பட்டபோது, டாக்டர் சுந்தரம் தமக்கு முன்பின் தெரியாதவராலுலும் அவர் இல்லத்திற்குச் சென்று அவரைக் காண மகிழ்ச்சியுடன் சம்மதித்தது, அண்ணலின் பெருந்தன்மைக்கு ஒரு சான் முகும்.

சாஸ்திரி சந்திப்பு

இன்று மகாத்மா காந்தி அரசாங்க மருத்துவமனைக்குச் சென்று இரண்டாவது முறையாக மகாகனம் சாஸ்திரியாரைப் பார்த்தார். இம்முறை குஷ்ட நிவாரண சங்கத்தைச் சேர்ந்த டி. என். ஜகதீசனை காந்திஜி தம்முடன் சுவனமாக அழைத்து கொண்டு போனர். ஏனென்றல் முதல் முறை சாஸ்திரியாரைப் போய்ப் பார்த்தபோது அவர் கேட்ட முதல் கேள்வி, ''ஜகதீசன் வந்திருக்கிறனு?'' என்பதுதான். சென்னை அரசாங்க மருத்துவமனையில் அப்போது கௌரவ டாக்டராகப் பணிபுரிந்த டாக்டர் சீனிவாசன் சாஸ்திரிக்குச் சிகிச்சை அளித்தவர். அவரே காந்திஜியின் இருப்பிடத்திற்கு வந்து காந்திஜியை மருத்துவமனைக்கு அழைத்துக்கொண்டு போனர். இம்முறை இராமாயணத்தைச் சுற்றிப் பேச்சுச் சுழன்று கொண்டிருந்தது. சாஸ்திரி

யார் தான் தொடங்கியவர். ''நூற்றுக்கணக்கான வழி களில் எனக்கு நீங்கள் வரப் பிரசாதமாக இருந்திருக்கிறீர் கள்'' என்றார் சாஸ்திரியார். சாஸ்திரி இவ்வாறு கூறிவிட்டு ஏற்கனவே தயாராக - காந்திஜி வருவார் என்பதற்காக - அழைத்து வைத்திருந்த தம் பேரப் பிள்ளைகளை அழைத்து உங்களுடைய கடாக்ஷம் இவர்களுக்குக் கிடைக் கட்டும் என்று காந்திஜியை நோக்கிக் கூறினர். இதற்கு ஆதாரமாக வால்மீகி இராமாயணத்திலிருந்து சமஸ்கிருத சுலோகம் ஒன்றையும் எடுத்துச் சொன்னர். ''யார் இராமனைப் பார்க்கவில்லையோ, யார் இராமனை பார்க்கப் படவில்லையோ அவர்கள் உலகில் ஒவ்வொருவராலும் இழித் துரைக்கப்படுவார்கள் என்று இந்த சுலோகம் கூறுகிறது. இக்காலத்தில் இச் சொற்கள் காந்திஜிக்குப் பொருந்தும்'' என்றார் சாஸ்திரியார்.

காந்திஜி : என்ன அபத்தம் சாஸ்திரி!

சாஸ்திரி : ஆ, இன்று வாழ்வோர்களில் நீங்கள் மிகப் பெரிய மனிதர் என்பது எனக்குத் தெரியாதா? நீங்கள் சத்தியத்தை நாடிச் செல்பவர். எத்தனையோ விஷயங்களில் நீங்களும் நானும் வடதுருவமும் தென் துருவமும் போல் இருக்கிறோம். உங்களிடத்திலிருந்து நான் கருத்து வேறுபட்டிருக்கிறேன். அதை நீங்களும் ஒளிவு மறைவின்றிச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் உங்களுடைய மாபெரும் அளவிற்கு இல்லாவிட்டாலும் நானும் ஒரு சத்திய உபாசகனே. இராமாயணத்தில் வால்மீகி சித்தரித்துள்ள நிரந்தர உண்மைகள் எனக்கு மிகவும் ஊக்கமூட்டி வழிகாட்டியிருக்கின்றன.

> ''யார் இராமனைக் காணவில்லையோ
> யார் இராமனை காணப்படவில்லையோ அவர்கள்
> உலகின் ஏளனத்திற்கு உரியவர்கள் ஆகிறார்கள்''

என்ற பொருள் உள்ள சமஸ்கிருத சுலோகத்தை மீண்டும் கூறி அதை ஆங்கிலத்தில் விளக்கி அந்த வரிகள் எப்படி காந்திஜிக்குப் பொருத்தமானவை என்று சாஸ்திரி கூறினர். பக்கத்தில் நின்று கொண்டிருந்த டாக்டர் வி. எச். வெங்கட் ராமன் இதில் இராமன் என்று வரும் இடங்களிலெல்லாம் காந்திஜி என்று போட்டு சுலோகத்தைத் திருப்பி ஒப்புவித்த போது காந்திஜி உள்பட எல்லோருமே விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

சுமார் பத்து நிமிடங்கள் இரு பெரியோர்களும் அந்தரங்கமாகப் பேசிய பின்னர், காந்திஜி விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார். அறையிலிருந்து அண்ணல் வெளியே வந்தபோது, குலசேகரப் பட்டினம் கலவர வழக்கில் தண்டனை அளிக்கப்பெற்று, மருத்துவமனையில் அப்போது சிகிச்சை பெற்றுவந்த இராஜகோபாலன் வைக்கப் பெற்றிருந்த பக்கத்து அறைக்கு முதலில் அண்ணலை அழைத்துச் சென்றார்கள். காந்திஜி அவரைப் பார்ப்பதற்கு வசதியாக இந்த அறைக்கு இராஜகோபாலனை அழைத்து வந்திருந்தார்கள். இந்த அறையில் மதுரையைச் சேர்ந்த மற்றொரு தேசத் தியாகியான பி. கே. இராஜகோபாலனும் இருந்தார்.

அந்தரங்கப் பேச்சு

அரசாங்க மருத்துவமனையைச் சேர்ந்த ஹவுஸ் சர்ஜன்கள், அலுவலர்கள் இந்தச் சந்தர்ப்பத்தை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு ஆர். எம். ஓ. அலுவலத்திற்கு முன் அண்ணலுக்கு ஒரு சிறு வரவேற்பு அளித்தார்கள். இந்த வரவேற்பிற்குச் சில நோயாளிகளும் பொதுமக்களுங் கூட வந்திருந்தார்கள். சென்னை அரசாங்க மருத்துவமனையில் அப்போது பணியாற்றிய 'ஹவுஸ் சர்ஜன்கள்' அலுவலர்கள் சார்பாக டாக்டர் வத்சலா காந்திஜியிடம் ஒரு பண முடிப்பை அளித்தார். காந்திஜி பேசியபோது, ''நோயாளிகளைக் குணப்படுத்த மேலும் மேலும் மருத்துவமனைகள் திறக்கப்பெற வேண்டும் என்ற எண்ணத்திற்கு இடம் அளிக்காதீர்கள். நோயைக் குணப்படுத்துவதைவிட நோய்வராமல் தடுப்பதுதான் சிறந்தது. அதில்தான் நீங்கள் அதிகமாக உங்களுடைய வைத்திய ஞானத்தைப் பயன்படுத்த வேண்டும்,'' என்று டாக்டர்களுக்கு அறிவுரை கூறினார்.

டாக்டர்கள் வரவேற்பு

தட்சிண பாரத் இந்திப் பிரச்சாரசபை அலுவலர்களும் அதன் அச்சக ஊழியர்களும் தம்மை அருகில் இருந்து பார்க்க விரும்புகிறார்கள் என்பதை காந்திஜி அறிந்து கொண்டு, அவர்களும் அவர்களுடைய குடும்பத்தினரும் தம்மை வந்து காண்பதற்கு இன்று காலையில் ஒரு நேரத்தை நிர்ணயித்திருந்தார். அவர்கள் எல்லோரும் ஒவ்வொருவராக அண்ணலுக்கு அறிமுகம் செய்து வைக்கப் பெற்றார்கள்.

சபை அலுவலர்

திருவல்லிக்கேணியைச் சேர்ந்த கிருஷ்ணதாஸ் லாலா என்ற வணிகர் இன்று காந்திஜியைச் சந்தித்து ஒரு பணமுடிப்பை அளித்தார்.

நிவாரண ஊழியர்

குஷ்ட நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த சுமார் முப்பது ஊழியர்கள் இன்று டி. என். ஜகதீசன் தலைமையில் வந்து காந்திஜியைச் சந்தித்து, இப்பணியையும் நிர்மாணத் திட்டத்தில் ஓர் அம்சமாகச் சேர்த்துக் கொண்டதற்காக காந்திஜிக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர். இக்குழுவில் ஒருவராக வந்திருந்தவரும் பிரிட்டிஷ் பேரரசு குஷ்ட நிவாரண சங்கத்தைச் சேர்ந்தவருமான டாக்டர் டி. பி. என். ஸ்லோன், காந்திஜி மதுரையிலிருந்து பிப்ரவரி 4-ஆம் தேதியன்று சென்னைக்குத் திரும்பி வரும்போது, செங்கற்பட்டு சானடோரியத்தைச் சேர்ந்த 750 குஷ்டரோகிகளுக்குக் காட்சி தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தென்னார்க்காட்டில் உள்ள வடத்தரசனூர் குஷ்டநோய் நிலையத்தைச் சேர்ந்த குமாரி விலேலண்ட் எல்லாவிதமான குஷ்ட நிவாரணப்பணிக்கும் காந்திஜி ஆதரவு தரவேண்டும் என்று வேண்டினார். விழுப்புரம் அருகே உள்ள கந்தாச்சிபுரத்தில் கஸ்தூரிபா குஷ்ட சிகிச்சை நிலையத்தில் மாதர்களும் குழந்தைகளும் தங்கிச் சிகிச்சைபெறுவதற்காக ஒரு கட்டிடத்தைக் கட்டித்தர ''மங்கள பவனத்''தின் சொந்தக்காரரான சுப்பையர் ஒப்புக்கொண்டார்.

கல்லும் தமிழும்

இன்று பிற்பகலில் காந்திஜி, எழுத்தாளர், கலைஞர் மாநாட்டிற்குப்புறப்பட்டுக்கொண்டிருந்த சமயம், அவரை சௌராஷ்டிர மக்கள் - ஆண், பெண், குழந்தைகள் ஆகச் சுமார் அறுபது பேர் - சந்தித்துக் கையால் நூற்ற நூலையும் ஒரு பணமுடிப்பையும் அளித்தார்கள். சென்னையின் முன்னாள் மேயரான ஜே. சிவசண்முகம்பிள்ளையும் வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த அரிஜன ஊழியர்கள் சிலரும் இன்று பிற்பகலில் காந்திஜியைச் சந்தித்து, வண்ணாரப்பேட்டை ஆதி திராவிட சமூகசேவகர் சங்கத்தால் நடத்தப்படும் மாணவர் விடுதிக்கு ஒரு கட்டிடம் கட்ட எண்ணியிருப்பதாகவும் அதற்கான அடிப்படைக் கல்லை ஆசீர்வதித்துக் கொடுக்குமாறும் வேண்டிக் கொண்டனர். இந்தக் கல்லில் தமிழில் தான் எழுத்துக்கள் பொறிக்கப் பெற்றிருக்கின்றனவா என்பதை

உறுதிப்படுத்திக் கொண்டு அவர்கள் வேண்டுகோளின்படி காந்திஜி ஆசீர்வதித்தார்.

31-1-46

மறுநாள் பிற்பகலில் பொது நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வதைவிட, முக்கியமானவர்களுக்குப் பேட்டி அளிப்பதே அவருக்குப் பெரிய வேலையாக இருந்தது. ஒரு நிமிட நேரம் கூட அண்ணலுக்கு ஓய்வில் லாமல் ஒருவர் மாற்றி ஒருவராக வந்து பேட்டி கண்டு கொண்டிருந்தார்கள். இதனால் பிரார்த்தனைக் கூட்டத்திற்கும் தொழிலாளர் மாநாட்டிற்கும் அவர் காலந்தாழ்த்தி வரநேரிட்டது. திருவாங்கூர் திவானாக அப்போதிருந்த சர். சி. பி. இராமசாமி ஐயர், தம் குமாரரான சி. ஆர். பட்டாபிராமனுடனும் குடும்பத்தினருடனும் வந்து காந்திஜியைச் சந்தித்து அவரிடம் சுமார் அரைமணி நேரம் உரையாடினர். திருவாங்கூர் அரசாங்கத்தின் கல்விக் கொள்கையைப் பற்றியும் அந்தச் சமஸ்தானத்தில் அப்போதுதான் செய்யப்பெற்ற அரசியல் அமைப்புச் சீர்திருத்தங்களைப் பற்றியும் அண்ணலும் சி. பி.யும் பேசினார்கள். நீடாமங்கலத்தைச் சேர்ந்த டி. கே. பி. சந்தானராம உடையாரும் அவர் மனைவியாரும் காந்திஜியைச் சந்தித்துப் பண முடிப்பு அளித்தார்கள். இந்துஸ்தானிப் பிரச்சார சபை வெள்ளி விழாவை யொட்டி நடைபெற்ற உணவுச் சாலைக்குத் தேவையான அரிசியை அனுப்பி வைத்தவர்கள் உடையாரும் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த மற்றும் சிலரும்தான். திண்டுக்கல்லைச் சேர்ந்த அப்துல் சத்தார் காந்திஜியைச் சந்தித்து ஒவ்வொரு மாநிலத்திலும் இந்து-முஸ்லிம் ஒற்றுமையை ஏற்படுத்த ஓர் அமைப்பை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். புலுசு சாம்பமூர்த்தியுடன் வந்து தம்மைச் சந்தித்த கோரா ராமச்சந்திரராவ் ஆற்றி வந்த பணிகளைக் குறித்து காந்திஜி மிகவுங் கவனமாக விசாரித்தார். அழகப்பச் செட்டியார் இன்று தம் குடும்பத்தினருடனும் ஆர். எம். கபூருடனும் வந்திருந்தார். இவர்களில் ஒவ்வொருவரும் காந்திஜியிடம் தங்கள் தங்கள் பண முடிப்புகளை அளித்தனர். சிறிது நேரங்கழித்து மற்ற எல்லோரும் சென்றுவிடச் செட்டியார் மட்டும் காந்திஜியிடம் அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருந்தார். இந்துஸ்தானிப் பிரச்சார சபை நிதிக்கு வசூலான தொகை போதாது என்று

பேட்டி பேட்டி ! பேட்டி

அண்ணல் கருதி அதிகப்படியான நிதி பெறுவதற்காக நகரிலுள்ள ஐம்பது முக்கியமான வணிகர்களை அழைத்துப் பேசினார். இலட்சம் ரூபாய் வசூல் செய்வதற்கான திட்டங் களைப்பற்றி அவர்களுடன் விவாதித்தார்.

தொழிலாளர் மாநாடு

இந்திப் பிரச்சார சபைக்குத் தெற்கேயுள்ள விசாலமான மைதானத்தில் நடைபெற்ற தொழிலாளர்கள் மாநாட்டில் சுமார் முப்பதாயிரம் தொழிலாளர்கள் பங்கு கொண்டார்கள். இந்த மாநாட்டிற்கு ஏற் பாடு செய்திருந்த பி.ஆர்.கே. சர்மாவுடைய வேண்டுகோளின்மீது சில அரசாங்கத் தொழில் நிறுவனங்கள் உள்பட்டப் பல ஆலைகளும் தொழிற்சாலைகளும் இன்று விடுமுறை அளித்திருந்தன. இராயபுரத்தில் உள்ள தட்சிணமூர்த்தி ஆலயத்திலிருந்து தொழிலாளர்கள் ஊர் வலம் தொடங்கியது. இது படிப்படியாகக் கூடிச் சுமார் ஒரு மைல் நீளத்திற்கு நீண்டு விட்டது. வேடர் குல வில்லர் களையும் பொன்னேரித் தாலுகா விவசாயிகளையும் கொண்ட மற்றொரு ஊர்வலம் செம்பியத்திலிருந்து புறப்பட்டு வந்தது. அரிஜன நிதிக்காக விம்கோ தொழிலாளர்கள் சார்பாக டி. எஸ். இராமானுஜம் ஒரு பணமுடிப்பை அளித்தார். இந்தத் தொழிலாளர் மாநாட்டிலிருந்த ஒரு தனிச் சிறப்பு இந்தப் பெரிய மாநாட்டில் அவர்கள் காண்பித்த அற்புத மான கட்டுப்பாடாகும். கொஞ்சங்கூடச் சத்தமில்லாமல் அவர்கள் அமைதியாக அமர்ந்திருந்தனர். , இவ்வற்புத அமைதியைக் கண்டு காந்திஜி அயர்ந்து போனார் என்று சொல்லலாம்; பின்னல் அவர் இதைக் கூட்டத்திலும் தெரி வித்தார்.

வைஷ்ணவ ஜனதோ

தியாகராய நகரில் உள்ள வித்யாலயா பெண்கள் உயர் நிலைப் பள்ளியில், காந்திஜியின் முக்கிய சீடர்களில் ஒரு வரான டாக்டர் பரதன் குமரப்பாவின் சகோதரி தலைமை ஆசிரியையாக இருந்தார். காந்திஜிக்குப் பிடித்தமான வைஷ்ணவ ஜனதோ என்ற பாடலை அவர் தம் மாணவி களுக்குக் கற்றுக்கொடுத்திருந்தார். காந்திஜி முன் மாணவி களைப் பாட வைக்க வேண்டுமென்று விரும்பினார். தலைமை ஆசிரியையின் விருப்பத்தை டாக்டர் பரதன் குமரப்பா தெரிவித்தபோது காந்திஜியும் அதற்குச் சம்மதித்தார். இன்றையப் பிரார்த்தனைக் கூட்டத்தில் அவர்கள் இப்பாடலைப்

பாடினர்கள்; காந்திஜியும் இப்பாடலின் கருத்தையே தம் சொற்பொழிவின் கருப்பொருளாக எடுத்துக் கொண்டார்.

உதவியவர்கள்

இன்று காலை, நிகழ்ச்சித் திட்டத்தில் இல்லாத பல அலுவல்கள் அவருக்கு வந்துவிட்டன. வெள்ளிவிழா வெற்றி கரமாக நடைபெறுவதற்கு உதவியவர்கள் காந்திஜியைக் காண்பதற்காக இந்துஸ்தானி நகரில் ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பெற்றி ருந்தது. இங்குத் தொண்டர்கள், இந்திய தேசிய ராணுவ வீரர்கள், நெருப்பணைக்கும் படைவீரர்கள், சாரணர்கள் முதலியோரின் அணிவகுப்பை காந்திஜி பார்வை யிட்டார். தொண்டர் படை அணி வகுப்பிற்கு மைதேவ் ஏற்பாடு செய்திருந்தார். துணை போஸ்ட்மாஸ்டர்-ஜெனரல் பி. கே. எஸ். சாரி தலைமையில் பல உயர் அதிகாரிகளும் அஞ்சல் துறை ஊழியர்களும் இங்கு வந்திருந்து அண்ணலுக் குத் தங்கள் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர். மக்களுக்கு இன்னும் சிறந்த முறையில் பணியாற்ற வேண்டு மானால், தபால் அலுவலர்கள் இந்தி கற்றுக் கொள்ள வேண்டும் என்று அண்ணல் அறிவுரை கூறியதை அவர்களும் ஒப்புக் கொண்டனர்.

குழுவுக்குப் பாராட்டு

இதன் பின்பு உணவுக்கு ஏற்பாடு செய்த குழுவினர் கூட்டியிருந்த கூட்டத்திற்கு அவர் சென்றார். ஆலந்தூர் நாதமுனி செட்டி, கே. எஸ். அம்பி ஐயர், வி.எம். கடிகாச்சலம் ஆகியோர் இதில் முக்கிய பங்கு கொண்டவர்களாவர். இந்துஸ்தானி நகருக்குள் நுழைந்த போதே உணவுக் குழுவின ரிடம் "எல்லோருக்கும் சாப்பாடு போட்டீர்கள். ஆனல் எனக்கு மட்டும் போடவில்லையே? இட்லி, உப்புமா எல்லாம் செய்தீர்களாமே? ஏன் அவைகளை எனக்கு அனுப்பவில்லை?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார். இதன் பின்னர் உணவுக் குழுவின் சேவையைப் பாராட்டி, காந்திஜி கூறிய தாவது: "இங்கு நான் குறிப்பாகப் பாராட்டுவது, நல்ல, சுத்தமான சூழ்நிலையில் உணவு பரிமாறப் பெற்றது என்பதே யாகும். இந்தியா முழுவதிலும் நான் சுற்றியிருக்கிறேன். இவர்கள் இந்தியா முழுவதற்குமே ஒரு முன்னுதாரணமாக இதைச் செய்திருக்கிறார்கள்." (சென்னை பஞ்சாபிகள் சங்கமானது விஜயநகரம் மகாராணி மூலமாக இன்று ரூ. 3241-25 கொண்ட பணமுடிப்பு ஒன்றை அளித்தது.

விஜயநகரம் மகாராணியும் தம் சொந்த நன்கொடையாக ரூ. 3001 அளித்தார்.)

வேங்கடா சலபதி

கோ. வேங்கடாசலபதியும் அவர் மனைவி மீனாட்சியும் மகள் (தற்போது டாக்டர்) சிவராணியும் காந்திஜியைக் கண்டு கல்லுப்பட்டி ஆசிரமத்தில் ராஜன் ஆசாரி என்பவரால் அற்புதமான முறையில் தயாரிக்கப் பெற்ற சவரக் கத்தி, கண்ணாடி, பிரேம் முதலியவைகளை அவரிடம் அன்பளிப்பாகக் கொடுத்தார்கள். ''மதுரையிலிருந்து கல்லுப்பட்டி அண்மையில்தான் இருக்கிறது. சுமார் முக்கால் மணி நேரப் பயணம்தான். தாங்கள் அங்கு வரவேண்டும்'' என்று கோ. வேங்கடாசலபதி கேட்டுக் கொண்டார். ஆனால் காந்திஜி அதற்கு, ''உன்னைப் போன்ற இளம் வயதினர்களுக்கு முக்கால் மணி நேரப் பயணம் பெரிதாகத் தோன்றாது. நான் வயதானவன். போய் வரச் சுமார் இரண்டு மணி நேரம் ஆகும். அது மிகவும் அலுப்பு உண்டாக்கி விடும். ஆசிரமத்திற்கு என் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காகத் தானே என்னை அழைக்கிறாய்? என்னுடைய ஆசீர்வாதம் எப்போதும் அதற்கு உண்டு'' என்று கூறிவிட்டார்.

1-2-46

அரிஜன தொழிற்பள்ளி

வேங்கட நாராயண ரோடும் மவுண்ட்ரோடும் சந்திக்கும் இடத்தில் சென்னை நகராண்மைக் கழகத்திடமிருந்து வாங்கப் பெற்ற இடத்தில் அரிஜனத் தொழிற்பள்ளிக்குக் காலையில் காந்திஜி அடித்தளக்கல் நாட்டிய போது ஒரே உற்சாகமயமாக இருந்தார். இன்று அவர் அடித்தளக்கல் நாட்டியது மட்டுமல்லாமல் கொத்தனர் வேலையையும் பார்த்துவிட்டார், செங்கற்களை வைத்து, சிமெண்ட் கலந்த காரையை இடுக்குகளில் ஊற்றி அந்தப் பணியை முழுதாக முடித்து அதன்மீது மஞ்சள் தடவி, குங்குமம் இட்டு, மலர்களைத் தூவி, சூடம் பொருத்தி ஆரத்தி காட்டிவிட்டுத்தான் பின்பு மேடைக்கு வந்தார். ''செய்வன திருந்தச் செய்'' என்பதற்கு முன்னுதாரணமாக வாழ்ந்தவரல்லவா அண்ணல்?

இந்த அடித்தளக்கல் நாட்டு விழாவில் அண்ணல் பங்கு கொண்டதாலும் அழகப்பச் செட்டியார் முன் நின்று அதை நடத்தியதாலும் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகளான ஹர்வில், ராஜமன்னர் உள் படப் பல பெரிய அதிகாரிகளும் சர் அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், சர் என். கோபாலசாமி ஐயங்கார் உள்படப் பல பெரிய மனிதர்களும் விழாவிற்கு வந்திருந்தனர். திவான் பகதூர் வி. பாஷ்யம் ஐயங்கார் வரவேற்புரை கூறினர். அரிஜன சேவா சங்கச் செயலாளரான ஏ. வி. தக்கர், இத்தொழிற்பள்ளியைப் பற்றிய அறிக்கையைப் படித்தார். இந்தப் பள்ளியைக் கட்டிக்கொடுக்க முன் வந்த அழகப்பச் செட்டியாரின் வள்ளல் தன்மையை அண்ணல் பாராட்டினர். இறுதியில், இப்பள்ளிக்கு, அரிஜனங்களின் தந்தையான தக்கர்பாபாவின் பெயரைச் சூட்டலாமென அண்ணல் ஆலோசனை கூறினர். இப்பள்ளியின் கட்டிடத்தைக் கட்டி முடித்துக் கொடுக்க அழகப்பச் செட்டியார் ஒப்புக்கொண்டிருக்கிறாரெனினும், இதற்கு வேண்டிய சாதனங்கள் வாங்குவது, பள்ளியை நடத்துவது போன்ற காரியங்களுக்காக நிறைய நிதி வேண்டியிருந்தது என்பதை எச். டி. ராஜா அறிவித்தார். ஏராளமான பேர் அந்த இடத்திலேயே பண உதவி அளிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். வாக்குறுதி அளித்தவர்களில் பெயர்பெற்ற பாடகியான என். சி. வசந்த கோகிலம் ஒருவர். (காந்திஜி ''கொத்து வேலை பார்த்த'' வெள்ளிக் கரண்டியை ஏலம் போட்டதில் ரூ. 2001-க்கு எஸ். இராமசாமி நாயுடு வாங்கிக் கொண்டார்.)

பெயர் சூட்டுதல்

இன்று பிற்பகலில் கோடம்பாக்கத்தில் உள்ள அரிஜனத் தொழிற் பள்ளிக்குச் சென்று அங்கு நீண்டநேரம் தங்கி, மாணவர்கள் தொழிலில் ஈடுபட்டிருந்ததை காந்திஜி சுற்றிப் பார்த்தார். சி. துரைக் கண்ணு முதலியார் காந்திஜிக்கு எல்லா இடங்களையும் சுற்றிக் காண்பித்துக் கொண்டு வந்தார். அந்தச் சமயத்தில் அண்ணலைக் காண்பதற்காகப் பள்ளியின் மேற்கு வாசலில் ஏராளமான பேர் கூடியிருந்ததைக் கண்டு விட்டு, அவர்களிடம் போய், அவர்களுக்கு மிகவும் தர்ம சங்கடமான ஒரு கேள்வியை அண்ணல் கேட்டார். ''நான் உங்களை ஒரு கேள்வி கேட்பேன். நீங்கள் அதற்கு அச்சம் இல்லாமல் கையை உயர்த்திப் பதில் சொல்ல

காந்திஜியின் கேள்வி

வேண்டும். சரிதானே ?'' என்று தொடங்கினார். கூட்டத்தில் இருந்தவர்கள், '' சரி '' என்றார்கள். அதன் பேரில், ''உங்களில் எத்தனை பேர் குடிப்பழக்கம் உள்ளவர்கள் ?'' என்று காந்திஜி கேட்டார். ஏராளமான பேர் கைகளை உயர்த்தினார்கள். இதன்பின் காந்திஜி பேசத் தொடங்கினார்: ''குடி ஒரு பாவம். அதில் என்ன அனுகூலத்தைத் தான் நீங்கள் காணுகிறீர்களோ ! - எனக்குத் தெரியவில்லை. நீங்கள் எல்லோரும் கடினமாக உழைத்துச் சம்பாதிக்கிறீர்கள். இவ்வாறு சம்பாதித்ததைக் குடியிலும் சூதாட்டத்திலும் இழந்து விடக்கூடாது. உங்களுடைய நன்மைக்கான நல்ல வழிகளில் விவேகமாகச் செலவிட வேண்டும்.''

கிராமத்திற்கு செல்லுங்கள்

காந்திஜியின் வருகையையொட்டி இங்கு ஒரு பந்தல் போடப் பெற்று அதில் அரிஜன சேவையில் ஈடுபட்டிருந்த பதினெட்டு சங்கங்கள் ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தன. இக்கூட்டத்தில் அவர் கூறினார்: ''சில ஆண்டுகளுக்கு முன்பு இந்நகருக்கு வந்த சுவாமி விவேகானந்தர் எல்லோரும் சமஸ்கிருதம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை பகர்ந்து விட்டுப் போனார். அரிஜனங்களில் சிலராவது சமஸ்கிருதப் பண்டிதர்களாக முயல்வார்கள் என நம்புகிறேன். இந்தப் பள்ளியில் அரிஜனங்களுடைய பிழைப்பிற்காக உதவும் தொழிலைக் கற்பிப்பதுடன் நின்று விடக்கூடாது. இங்குக் கற்றுச் செல்கிறவர்களுடைய நடத்தையால், அவர்கள் எந்த வகையிலும் தங்களுக்குத் தாழ்ந்தவர்களல்ல என்ற எண்ணத்தைச் சாதி இந்துக்களுக்கு ஏற்படுத்துவதாக இங்கு அளிக்கப்படும் கல்வி இருக்க வேண்டும். நல்லவற்றையே பேசி, நல்லவற்றையே செய்து, நல்ல வாழ்க்கை நடத்தி வந்தீர்களானால், யாரும் உங்களைத் தாழ்ந்தவர்கள் என்று கூறமாட்டார்கள்.'' சென்னையில் காந்திஜி தங்கியிருந்தபோது பொது நிகழ்ச்சிகள் எதிலும் பங்கு கொள்ளவில்லை. ஒரே ஒரு விதிவிலக்கு, கோடம்பாக்கம் அரிஜனத் தொழிற் பள்ளியில் நடைபெற்ற இக்கூட்டந்தான்.

தெம்பூட்டிய அமைதி

பிரார்த்தனைக்காக காந்திஜி வந்தபோது அவர் கைப்புடன் இருந்தார். ஆனால் கூட்டத்தில் நிலவிய அமைதி அவருக்கு மகிழ்ச்சியையும் தெம்பையும் அளித்தது. (நீதிபதி பதஞ்சலி சாஸ்திரியின் குமாரத்தியும் சர் அல்லாடி. கிருஷ்ணசாமி ஐயரின் குமாரத்தியும் சேர்ந்து ''ராம் மில் மேகா'' என்ற இந்திப் பாடலைப் பாடினார்கள்.) காந்திஜி சொன்னார்:

''நம் முன்புகலைக் கோவிலான கலாமந்திரம் இருக்கிறது. அதைப் போன்ற ஒன்றை உலகில் நான் வேறு எங்கும் பார்த்தது கிடையாது. * ஆலயங்களுக்குச் சென்று அர்ச்சனை செய்வதால் மட்டும் ஒருவன் தூயவனாகிவிட முடியாது. தூய்மை என்பது உள்ளத்தைப் பொருத்தது. பிரார்த்தனையின் மூலம் இத்தூய்மையை அடைவதே உங்கள் குறிக்கோளாக இருக்க வேண்டும். ஒருவன் மனமார எதற்காகப் பிரார்த்தனை செய்கிறானே அதை அடைவான்.

பிரார்த்தனை பலன்

''தென்னிந்தியாவின் மீது எனக்கு எப்போதுமே ஒரு தனி அபிமானம் உண்டு. நான் எப்போது வந்தாலும் இங்குள்ள மக்கள் தங்களுடைய அபரிமிதமான அன்பைக் காட்டுகிறார்கள். உங்களுடைய அன்புமட்டும் இல்லாவிட்டால் இவ்வளவு வேலையை ஓய்வு ஒழிவின்றி நான் செய்திருக்க முடியாது. தென்னிந்தியாவில் நான்கு மொழிகள் பேசுகிறார்கள். அவர்களுக்கிடையே ஐக்கியம் இருக்கிறது என்று கூற முடியாது. இது வருந்தத்தக்கது. தென்னிந்தியாவில் உள்ள நான்கு மாநிலங்கள் மட்டுமல்லாது வடஇந்தியாவிற்கும் தென்னிந்தியாவிற்குமிடையே கூட வேறுபாடு இல்லாத நாளைக் காண முடியும் என நம்புகிறேன்.''

தனி அபிமானம்

இன்று தென்னிந்திய விஸ்வகர்ம மாநாட்டு மத்தியக் குழுத் தலைவரான டி.எம். தெய்வசிகாமணி ஆச்சாரியார் காந்திஜியைச் சந்தித்து, அவரிடம் ஒரு விஞ்ஞாபனத்தை அளித்தார். மரம், இரும்பு, மற்ற உலோகங்கள் ஆகியவைகளைப் பயன்படுத்திக் குடிசைத் தொழில்களை வளர்க்க வேண்டிய அவசியத்தை இந்த விஞ்ஞாபனத்தில் அவர் வலியுறுத்தியிருந்தார். இந்திய கிறித்தவ சம்மேளனத்தின் தலைவராகிய டாக்டர் வி. கே. ஜானும், கிறித்தவ தலைவர்களில் ஒருவராகிய டாக்டர் டி. எஸ். இராமச்சந்திர ராவும் தனித்தனியாக மகாத்மாவைச் சந்தித்துக் கிறித்தவர்களின் சிக்கல்களைப் பற்றி விவாதித்தனர். கவி நாமக்கல் இராமலிங்கம் இன்று மாலை காந்திஜியைச் சந்தித்துத் தாம் இயற்றிய நான்கு புத்தகங்களை அவரிடம் வழங்கி, அவைகளில் அடங்கியிருப்பனவற்றையும் எடுத்துக் கூறினார். அப்புத்தகங்களைத்

பேட்டிகள்

* ''இந்து'' 2—2—46.

தாம் ஆழ்ந்து கற்க விரும்புவதாகவும் கவிஞர் அதற்காக வர்தாவிற்கு வந்து தம்முடன் தங்கியிருக்க வேண்டுமென்றும் காந்திஜி கூறியதற்குக் கவிஞர் ''சரி'' என்று சொல்லாமல் வேறு என்ன மறுமொழிதான் கூற முடியும்?

பழகியவர் குடும்பம்

சில நிகழ்ச்சிகளுக்குத் தேதிகளை வரையறையிட்டுக் கூற முடியவில்லை. தம்முடன் பழகியவர்களிடம் மகாத்மாவிற்கு, அளவு கடந்த அன்பும் சிரத்தையும் உண்டு. தென்னிந்தியாவில் தொடக்க இந்திப் பிரசாரகரான ஹரிஹர சர்மாவும், அன்னரின் மனைவி கோமதியும் சபர்மதி ஆசிரமத்தில் நீண்ட காலம் தங்கியிருந்தவர்கள். இம்முறை வந்தபோது கோமதியைப் பற்றி ஞாபகமாக ஹரிஹர சர்மாவிடம் காந்திஜி விசாரித்தார். அவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கிருஷ்ணபுரம் என்ற கிராமத்தில் இருப்பதாக ஹரிஹர சர்மா பதில் கூறினர். மதுரையில் தம்மைச் சந்திக்குமாறு உடனே அவருக்குத் தந்தி கொடுக்கும்படி மகாத்மா ஆக்ஞாபித்தார். 'கோமதியைப் பார்த்து வெகு காலமாகிவிட்டது; பார்க்க விரும்புகிறேன்' என்றார் காந்திஜி. இதுபோல் தாம் பழகிய ஒவ்வொரு குடும்பத்தின் நலன்களைப்பற்றி விசாரிக்க என்றுமே அண்ணல் மறப்பதில்லை.

முத்துரங்க முதலியார்

காந்திஜியைக் காண விரும்பி காங்கிரஸ் தலைவர் முத்துரங்க முதலியார் தம் குடும்பத்துடன் வந்திருந்தார். இதற்காக அவர் முதல் நாளே அனுமதி பெற்றிருந்தாராயினும் சந்திப்புக்கான நேரம் குறிப்பிடவில்லை. ஆகவே காந்திஜியைக் கண்டு பேச முதலியார் வந்தபோது, அவர் தாமதித்து வந்ததாகக் காரணம் சொல்லித் தடுத்துவிட்டார்கள். நேரம் குறிப்பிடாதபோது, தாமதித்து வந்ததாகக் கூறுவது எவ்வாறு பொருந்தும் என்று தமக்குள் எண்ணிக் கொண்டு முதலியார் மனம் நொந்து வீடு திரும்பினர். காந்திஜியைக் கண்ட பிறகே உணவு அருந்தப் போவதாக உறுதி கொண்டார். இத்தகவல் எப்படியோ மகாத்மாவுக்கு எட்டியது. முதலியாரைப் பாராமல் தாமும் ஆகாரம் உட்கொள்ளப் போவதில்லை என்று அண்ணலும் உறுதி பூண்டார். முதலியாரிடம் நண்பர்கள் ஓடினர். அவரைப் பார்க்க காந்திஜி விரும்புவதாகத் தெரிவித்தனர். பிறகு இருவரும் சந்தித்துப் பேசி மகிழ்ந்தனர்.

ம. பொ. சிவஞானம் காந்திஜியை முதன் முதலில் சந்தித்துப் பேசியது இவ்வருகையின் போதுதான். அப்பொழுது ம. பொ. சி. யைத் தனியாக ராஜாஜி தம்முடன் அழைத்துச் சென்று காந்திஜியிடம் அறிமுகம் செய்து வைத்தார். ''கள் இறக்குவோர் சமூகத்தைச் சேர்ந்தவர் இவர். ஆனாலும் உங்களைக் காட்டிலும் கள்ளுக்குப் பெரியவிரோதி,'' என்று காந்திஜியிடம் கூறி அறிமுகம் செய்து வைத்தார். உடனே காந்திஜி குறுக்கிட்டு, ''தப்பு, தப்பு. நீங்கள் சொல்வது சரியில்லை. நான் புளிக்கும் கள்ளுக்குத்தான் எதிரி, தித்திக்கும் கள்ளுக்கு நண்பன்'' என்று கூறினார். மா. பொ. சி. கூறுகிறார்: ஆகஸ்ட் இயக்கத்தில் சிறைக்குச் சென்று மிகவும் பலவீனமாக நான் திரும்பி வந்திருந்த காலம் அது. என்னுடைய பலவீனத்தைக் கவனித்து விட்ட காந்திஜி, ''தித்திப்புக் கள் சாப்பிட்டால் இவர் உடம்பும் சரியாகி விடும்'' என்று ராஜாஜியிடம் கூறினார். அப்போது ராஜாஜி எதிர்ப்பு உச்சக்கட்டத்தில் இருந்தது. ஆகையால் காந்திஜியிடம் ராஜாஜி ''இவர் தான் என் கட்சிக்குத் தலைவர்'' என்று கூறினார். அதற்கு காந்திஜி, ''ஆம், ஆம், தெரியுதே, அதனால்தானே தனியாகக் கூட்டிக் கொண்டு வந்திருக்கிறீர்கள்,'' என்று பதிலளித்தார்.

ம. பொ. சி.

கீழ்மூங்கிலடி ரா. வினாயகம் கூறிய சுவையான நிகழ்ச்சி: ஒரு நாள் இராஜகோபாலாச்சாரி, ரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியாரை அழைத்துக் கொண்டு போய் காந்திஜியிடம் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது காந்திஜிக்கும் ரசிகமணிக்கும் இடையே நடைபெற்ற உரையாடல் சுவையானது. ''இவர் கம்பராமாயணத்தில் ஈடு இணையற்ற விரிவுரையாளர்; தமிழில் பெரிய மேதை'' என்று டி. கே. சியைப் பற்றி ராஜாஜி கூறினார்.

டி. கே. சி.

காந்திஜி: அப்படியா? நான் கம்பராமாயணத்தைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருக்கிறேன். கம்பராமாயணத்தை நான் எவ்வாறு படித்து அனுபவிக்க முடியும் என்பதைக் கூறுவீர்களா?

இதற்கு டி. கே. சி. உடனே பதிலளித்தார். அதில்தான் அவருடைய தனித்தன்மை இருக்கிறது. டி. கே. சி. என்ன

சொல்லியிருப்பார் என்று நினைக்கிறீர்கள்? அவர் சொன்னார்: கம்பராமாயணத்தை அனுபவிக்கவேண்டும் என்றால் அடுத்த பிறவியில் தாங்கள் தமிழராகப் பிறக்க வேண்டும்!

மதுரை புறப்பாடு

எல்லா வேலைகளையும் முடித்துக் கொண்டு மதுரையிலும் பழனியிலும் ஆலய தரிசனம் செய்வதற்காக, சென்னையிலிருந்து தனி இரயிலில் இரவு 10-30 மணிக்கு காந்திஜி புறப்பட்டார். ராஜாஜி, டாக்டர் சுசீலா நய்யார், எம். சத்தியநாராயண ஆகியோருடன் காரில் கிண்டி இரயில் நிலையத்திற்குச் சென்று தனி இரயிலில் ஏறிக் கொண்டார். காந்திஜி குழுவைச் சேர்ந்த மற்றவர்கள் எழும்பூர் நிலையத்திலேயே இந்த இரயிலில் ஏறி வந்தார்கள். சி. இராஜகோபாலாச்சாரி, தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான கே. காமராஜ், எல். என். கோபாலசாமி ஆகியோரும் உடன் சென்றார்கள். திருச்செங்கோடு ஆசிரமத்தைச் சேர்ந்த பி. எஸ். இராமதுரையும் காந்திஜியுடன் பயணம் செய்தார். திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த இந்திப் பிரச்சாரக்கான ஜி. சுப்ரமணியம் மொழி பெயர்ப்பாளராகச் சென்றார். தூய வெள்ளைக் கதராடை அணிந்த இரயில் ஓட்டிகள் தேசியக் கொடியோடும் காந்திஜி உருவப் படத்தோடும் அலங்கரிக்கப் பெற்ற என்ஜின் ஓட்டிக் கொண்டுபோன காட்சி கண்ணைக் கவர்ந்தது.

மதுரை ஏற்பாடு

இம்முறை காந்திஜி மதுரைக்குச் சென்றபோது, எத்தனையோ முன்னேற்பாடுகள் செய்ய வேண்டியிருந்தது. அங்கு காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்டத்திற்கும் ஆலய தரிசனத்திற்கும் தகுந்த ஏற்பாடுகள் செய்யப் பெற்றிருக்கின்றனவா என்பதைப் பார்வையிட 30-1-46 ஆம் தேதியன்றே ராஜன் மதுரைக்குச் சென்றுவிட்டார். மதுரைக்கு நாலா பக்கங்களிலிருந்தும் ஏராளமான பேர்கள் வருவார்கள் என்று எதிர்பார்த்து இரயில் அதிகாரிகளும் விழிப்புடன் பல தனி இரயில்கள் விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

மதுரைக்கு இவ்வாறு புறப்பட்டுச் சென்ற காந்திஜி குழுவினர், சென்னைக்கு இருபத்தி ஐந்து மைல் தூரத்தில் உள்ள காட்டுப்பாக்கம் என்ற இரயில் நிலையத்தில் இரயிலை நிறுத்தி அங்கு இரயிலிலேயே தூங்கினார்கள். காட்டுப்

பாக்கம் இரயில்நிலையம் பெற்ற புண்ணியம் அது. மறுநாள் காலை ஐந்து மணிக்கு இரயில் அங்கிருந்து புறப்பட்டு அச்சரப் பாக்கம் இரயில் நிலையத்தில் சில நிமிடங்கள் நின்றது.

2—2—46

அச்சரப் பாக்கம்

காந்திஜி சென்ற இரயிலில் அவர் மக்களுக்குக் காட்சி கொடுப்பதற்கும் நின்று பேசுவதற்கும் வசதியாக ஒரு மேடை இருந்தது. ஒலி பெருக்கிக் கருவிகளும் இணைக் கப் பெற்றிருந்தன. அதிகாலை வேளையில் அச் சரப்பாக்கத்தில் கூடியிருந்த மக்கள் நல்ல அமைதியைக் கடைப்பிடித்தார்கள். ஆகை யால் அண்ணல் இங்குச் சிறிது நேரம் பேசினர். (அச்சரப் பாக்கம் கிராமவாசிகளின் சார்பாக டாக்டர் பி. கே. ஷெனாய் அவர்களுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டார்.)

வழியெல்லாங் கூட்டம்

இரயிலில் சென்ற அண்ணலைக் காண வழியிலிருந்த ஒவ் வொரு கிராமத்திலும் மக்கள் கூடியிருந்தனர். இந்த இடங் களிலெல்லாம் இரயில் நிற்காது என்பதைக் கிராம மக்கள் அறிந்திருந்தும் இவ்வாறு திரண் டிருந்து இரயில் போனபோது ஆரவாரம் செய்து அவர்பால் தாங்கள் வைத்திருந்த அளவிலா பக்தியை வெளிக்காட்டினர். ஓர் ஊரிலோ, ஒரு நாதசுவரக் குழு நாதசுரம் வாசித்துக் கொண்டிருந்தது.

அமைதி இன்மை

அச்சரப்பாக்கத்தைப் போன்ற சிறிய ஊர்களைச் சேர்ந்த மக்கள் கூடக் கட்டுப்பாடாக இருந்து அண்ணலைக் கண்டு அவர் கூறியதைக் கேட்கும் பேறு பெற, விழுப்புரம், திருச்சி போன்ற பெரிய நகரங்களைச் சேர்ந்த மக்கள் அமைதியாக இல்லாததன் காரணமாக அவருடைய பேச்சைக் கேட்க முடியாமற் போனதுடன் அவரைச் சரி வரக் காண முடியாமலும் போய் விட்டது. விழுப்புரம் இரயில் நிலையத்தில் புதுச்சேரிக்குப் பாதை பிரியும் மைதானத்தில் இருபதாயிரம் மக்கள் கூடியிருந்தனர்; வி. குப்புசாமி ஐயங்கார், சி. ஆர். ஜகதாம்பாள், வி. டி. கிருஷ்ணவேணி ஆகியோர் தலைமையில் ஆண் பெண் தொண்டர்கள் அமைதியை நிலை நாட்ட எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. ஆகவே சுமார் பத்து நிமிடங்

களுக்கு காந்திஜி தரிசனங் கொடுத்து விட்டுத் தம் பெட்டிக் குப் போய்விட்டார். நகரசபை உயர்நிலைப் பள்ளியில் மூன்றாவது படிவம் படித்துக் கொண்டிருந்த மாணவன் வி. காளகஸ்தி - கிருஷ்ணகிரி வைத்தியனுதன் ஆச்சாரியா ரின் மகன் - ஒரே ஓர் அரிசியில் காந்திஜி கொடியைப் பிடித்துக் கொண்டிருப்பது போன்ற ஓர் உருவத்தைச் செய்து அளித்ததை எல்லோரும் பாராட்டினர். வயதான அம்மையார் ஒருவர் ஒரு சிறு கல்லைத் தூக்கிக் கொண்டு வந்து, அது அரிஜனங்களுக்காகக் கட்டப்படவிருக்கும் ஒரு பள்ளிக்குப் போட விருக்கிற அஸ்திவாரக் கல்லென்றும் அதை அண்ணல் ஆசீர்வாதம் செய்து தரவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். காந்திஜி அந்தக் கல்லை அந்த அம்மையாரிடமிருந்து வாங்கி, ஆசீர்வாதம் செய்து கொடுத் தார். உளுந்தூர்ப்பேட்டையில் இதற்கு நேர்முரணாக, மக்கள் அமைதியின் உருவமாக அமர்ந்திருந்தார்கள். காந்திஜியின் உணவுப் பழக்கத்தை அறிந்த ஒருவர், ஒரு மூட்டை நிறைய நிலக்கடலை கொண்டு வந்து கொடுத்தார். (சேலத்தைச் சேர்ந்த ஏ. சுப்ரமணியம் இங்கு வந்திருந்து காந்திஜிக்குத் தம் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண் டார்.) விருத்தாச்சலத்தில் இரயில் நிலையத்தில் கூட்டத் தினரை விலக்கி இரயில் புறப்படுவது மிகவும் சிரமமாகப் போய் விட்டது. அரியலூரில் சுமார் ஏழாயிரம் பேர் மிகவும் அமைதியாக இருந்ததைக் கண்டு உள மகிழ்வ டைந்த அண்ணல் அதைப் பாராட்டு முகத்தான் தம் குழுவினரை ராம் துன் பாடச் சொன்னார். (இங்கு மக்க ளின் சார்பாகப் பி. வேங்கடாசலம் பிள்ளை பண முடிப்பை அளித்தார்.) இங்கு டாக்டர் டி. எஸ். எஸ். ராஜன் காந்திஜி குழுவினருடன் வந்து சேர்ந்து கொண்டார். ஸ்ரீ ரங்கம் இரயில் நிலையத்தில் கூட்டம் அளவுக்கு மீறி இருந்ததால், கூச்சலும் குழப்பமும் நெரிசடியும் இருந்தன.

திருச்சிராப் பள்ளி

திருச்சிராப்பள்ளியில் அண்ணலைக் காண்பதற்காகத் திரண்டிருந்த இரண்டு இலட்சம் மக்களும் இரயில் வருவ தற்கு முன் அமைதியாகத் தான் இருந்தார் கள். ஆனால் சிலோன் லேபர்சைடிங் பக்கத் தில் இரயில் வந்து நின்று பக்கத்தில் போடப் பெற்றிருந்த தனி மேடையில் காந்திஜி ஏறப் போன போதுதான் அவரை அருகில் இருந்து காணவேண்

டும் என்ற ஆவலில் முன்னால் ஓடி வந்தனர்; கூச்சலும் குழப்பமும் உண்டாயிற்று. ''அமைதியாயிருங்கள், நான் பேசுகிறேன்'' என்று அண்ணல் இந்துஸ்தானியில் சொன்னதை ஜி. சுப்ரமணியம் தமிழில் மொழி பெயர்த்துக் கூறினார். ஆனால் கூச்சல் குறையும் வழியாகத் தோன்றவில்லை. ஆகவே மேடைக்கு வந்த காந்திஜி இறங்கி மீண்டும் தம் இரயில் பெட்டிக்கே சென்று விட்டார். கூட்டத்தில் அமைதி ஏற்பட்டது. அவர் மீண்டும் மேடைக்கு வந்தார். ஆனால் இம்முறையும் கூட்டம் அவரை நோக்கி வரவே, கூட்டத்தினரின் கட்டுப்பாடின்மையைக் கண்டு கவலையடைந்தவராக காந்திஜி திரும்பி இரயில் பெட்டிக்குச் சென்று விட்டார். இதன் பின்னர் இரயில் புறப்பட்டு ஜங்ஷன் முன்னால் இரண்டொரு நிமிடங்கள் நின்றது. அங்கு இரயில் வேத் தலைமை நிருவாகி ஜே. எப். சி. ரெய்னல்ட்ஸ், தலைமைப் போக்கு வரத்து சூபரின்டெண்டெண்ட் சிட்னிஸ்மித் ஆகியோரை காந்திஜிக்கு டாக்டர் ராஜன் அறிமுகப்படுத்திவைத்தார். திருச்சியில் ஸ்ரீரங்கம், பொன்மலை, ஜங்ஷன் ஆகிய மூன்று இடங்களில் காந்திஜியின் இரயில் நின்றதில், பொன்மலையில்தான் கூட்டம் வெற்றியாக முடிந்தது. அங்குப் பெரும்பாலும் தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த ஆண்களும் பெண்களுமாகச் சுமார் பத்தாயிரம் பேர் அமைதியாக அமர்ந்திருந்தனர். காந்திஜியும் பேசினார்.

மணப்பாரை

மணப்பாரை மைதானத்தில் ஐம்பது பெண்கள் உள்பட ஏராளமானோர் சர்க்கா வைத்து நூற்றுக் கொண்டிருந்தது அண்ணலின் உள்ளத்தை அதிகம் கவர்ந்தது. அவர் சொன்னார்: ''சுயராஜ்யம் விரைவில் கிடைத்து விடும் போலத் தோன்றுகிறது. சுயராஜ்யத்திற்கான மார்க்கமும் அதன் அடித்தளமும் சர்க்காதான்.'' அம்பாத்துரையில் மகாத்மாவின் தனி இரயிலுக்குப் பாதையை ஒழித்துக் கை இறக்கி வைத்திருந்தார்கள். சின்னஞ்சிறுமி மக்கள் தைரியமாகக் கைகாட்டிக் கம்பியை அறுத்து, இறங்கியிருந்த கையை ஏற்றி, வண்டியை நிறுத்தி வரவேற்றனர்!

மதுரையில் காந்திஜியைக் காண வேண்டும் என்ற ஆர்வம் மக்களிடையே கரை புரண்டோடியதும் அதை

யொட்டி ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் உலகமெல்லாம் அறிந்த ஒரு முக்கிய வரலாறுகிவிட்டன. மதுரை இரயில் சந்திப்பில் இறங்கினால் மக்கள் கூட்டத்தைத் தாள முடியாது என்று கருதி, சுமார் பத்து மைல் தூரத்தில் சமயநல்லூருக்கும் அப்பால் உள்ள ஒரு லெவல் கிராசிங்கில் இரயில் நிறுத்தப் பெற்று காந்திஜியும் பியாரிலாலும் இராஜகுமாரி அம்ருத் கௌரும் இறங்கினர்கள். மதுரை நகரப் பிரமுகர்களான ஏ. வைத்தியநாத ஐயர், என். எம். ஆர். சுப்பராமன், சிதம்பரபாரதி, மதுரை ஸ்ரீ மீனாட்சி ஆலய நிருவாக அதிகாரி ஆர். எஸ். நாயுடு, டாக்டர் இராம சுப்ரமணியம் ஆகியோரும் வி. ஐ. முனுசாமிபிள்ளையும் காந்திஜியை இங்கு வரவேற்றார்கள். அங்கிருந்து மதுரைக்கு காந்திஜி வந்த காரை டாக்டர் இராம சுப்ரமணியம் ஓட்டிக் கொண்டு வந்தார். இடையில் மதுரை மாவட்டக் கலெக்டரான பிரிச்சர்டு வந்து சேரவே அவரை காந்திஜிக்கு இராம சுப்ரமணியம் அறிமுகம் செய்து வைத்தார். வழியிலேயே மக்கள் வெள்ளத்தின் பிரவாகம் தெளிவாகத் தெரியத் தொடங்கிவிட்டது.

மதுரை

பந்தய மைதானத்தில் காந்திஜியைக் காண்பதற்காகக் கூடியிருந்த கூட்டம் மதுரை வரலாறு காணா மாபெருங் கூட்டமாகும். காந்திஜி குழுவில் வந்தவர்கள் கூட அவ்வளவு பெருங்கூட்டத்தைத் தாங்கள் பார்த்ததில்லை என்று கூறினார்கள். மக்கள் சமுத்திரம் என்றால் உண்மையிலேயே அது மக்கள் சமுத்திரந்தான்; எவ்வளவு குறைந்தாலும் ஐந்து இலட்சம் பேர் பந்தய மைதானத்தில் கூடியிருந்திருப்பார்கள். இவ்வளவு பெரிய கூட்டங் கூடியதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. 1937-ஆம் ஆண்டிற்குப் பின் அதாவது, ஒன்பது ஆண்டுகள் இடைவெளிக்குப்பின், இப்போது தான் அண்ணல் வருகிறார் என்பது ஒரு காரணம். தமிழக உள் பகுதியில் மதுரை, பழனி ஆகிய இரு இடங்களுக்கு மட்டுமே அண்ணல் சென்றது மற்றொரு காரணம். மதுரையில் அவர் தங்கிய காலம் மிகவும் சுருக்கமாக இருந்ததாலும் அவர் பங்கு கொண்ட ஒரே பொது நிகழ்ச்சி இந்தக் கூட்டமாக இருந்ததாலும் இந்த ஓர் இடத்திற்கே வந்து அவரைக் காணவும் அவர் பேச்சைக் கேட்கவும் வேண்டியிருந்தது மூன்றாவது காரணம். மற்றும், டாக்டர்

மக்கள் கடல்

சுசிலா நய்யார் அப்போது எழுதியது போன்று, ''காந்தி ஜிக்கோ வயதாகி விட்டது, அவரை இனி எப்போது நாம் காணப்போகிறோமோ?'' என்று மக்களுக்கிருந்த ஒரு தாபமும் இதற்குக் காரணமாய் இருந்திருக்கலாம். இதனால் மதுரையைச் சுற்றியிருந்த மாவட்டங்களிலிருந்து மட்டுமல்லாது, இலங்கையிலிருந்து கூடப் பலர் அண்ணலைக் காண மதுரைக்கு வந்திருந்தார்கள். அந்தப் பெரிய மக்கள் பேராழிக்கு மத்தியில் தீவு போன்று அமைந்திருந்த ஒரு மேடையில் காந்திஜியும் அவர் குழுவினரும் சில தலைவர்களும் இருந்தார்கள். இந்த மேடையானது மதுரை நிட்டிங் கம்பெனி செலவில் அதன் அதிபர் என். எம். ஆர். வெங்கடகிருஷ்ண ஐயருடைய நேரடி மேற்பார்வையில் அற்புதமாக அமைக்கப்பெற்றிருந்தது.

முதல் குழப்பம்

காந்திஜி தம்மைச் சுற்றியிருந்த மக்கள் பேராழியைப் பார்த்தவுடன் ஒரு முடிவுக்கு வந்தார். எத்தனையோ கூட்டங்களைக் கண்டு அனுபவம் பெற்றவர் அவர். ஆகவே, இவ்வளவு பெரிய கூட்டத்தில் பிரார்த்தனையில் தாம் வழக்கமாகப் படிக்கும் அத்தனை பாடல்களையும் படிக்க முடியாது என்பதை முடிவு செய்து கொண்டார். மேலும், கூட்டத்தில் அமைதி இல்லாமல் கூச்சலாக இருந்து கொண்டிருந்தது. ஆகவே இராம பஜனை பாடுமாறு கனு காந்தியிடம் சொன்னார். இதனால் ஒரு சிறிது அமைதி ஏற்பட்டது போலத் தோன்றியது என்றாலும், காந்திஜியின் பின்னால் இருந்த சிலர், அவரைச் சரியாகக் காண முடியவில்லை என்ற காரணத்தினாலோ என்னவோ முன்னால் தள்ளிக்கொண்டு வந்தார்கள். இக்கூட்டத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கு இதுதான் முதன் முதலில் போடப்பெற்ற பிள்ளையார் சுழியாகும். இதன் காரணமாக காந்திஜியின் முன்னால் இருந்த கூட்டம் அமைதியாய் இருக்கப் பின்னால் இருந்த கூட்டத்திலிருந்து பெரிய சத்தம் ஓயாது வந்து கொண்டிருந்தது. நான்குபுறத்திலும் உள்ள மக்கள் தம்மைக் காண விரும்புகிறார்கள் என யூகித்து அண்ணல் மேடையிலே சுற்றிச் சுற்றி நடந்து வந்தார். பின்னர் பேசவந்தொடங்கினார்:

''இம்மாபெருங்கூட்டத்தில் இவ்வளவு பெரிய சத்தம் இருப்பதைக் கண்டு நான் வருந்துகிறேன். இச்சத்தத்தின்

காரணமாக நான் ஒன்றுமே கூறமுடியாமற் போய் விடுமோ என்றும் அஞ்சுகிறேன். மேடையின் முன்னுல் இருப்பவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். மற்றவர்களும் அவ்வாறு அமைதியாக இல்லாவிட்டால், நான் இந்த மேடையின் மீது இருப்பது கூடக் கடினமாகப் போய் விடும். இவ்வளவு பெரிய சத்தத்தை என்னுடைய தற்போதைய உடல் நிலையில் தாங்க முடியாது. ஆயினும் என் முன்னுல் இத்தனை பேர் அமைதியாக அமர்ந்திருப்பதைக் காணும்போது அவர்களுக்காகவாகிலும் ஏதாவது சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது. மதுரை ஒரு புகழ் பெற்ற நகரம், ஒரு புண்ணியத்தலம். உங்களுடைய ஆலயத்தை அரிஜனங்களுக்குத் திறந்து விட்டிருக்கிறீர்கள். அந்த ஆலயம் அரிஜனங்களுக்குத் திறந்து விடப் பெற்றதிலிருந்தே அங்கு வந்து வழிபட வேண்டுமென்று நான் விரும்பினேன்....''

காந்திஜி பேச்சு

இவ்வாறு அண்ணல் சொல்லிக் கொண்டு வந்தபோது, இடைவிடாது பெருஞ் சத்தம் இருந்து கொண்டிருந்தபடியால் அவரால் தொடர்ந்து பேச முடியவில்லை. சத்தம் வந்த திக்கு ஆகவே தம் பேச்சை நிறுத்திவிட்டு, சத்தம் வந்த திக்கை நோக்கிச் சொன்னர்: ''உங்களுடைய சத்தத்திற்கும் அமைதியின்மைக்கும் என்பால் நீங்கள் கொண்டுள்ள அன்பும் அபிமானமுமே காரணம் என்பதை நான் அறிவேன். நீங்கள் எல்லோரும் என்னைக் காண வேண்டுமென்று விரும்புகிறீர்கள். ஆனுல் உங்களுக்கு நான் ஒன்று கூறிக் கொள்வேன். இத்தகைய பொறுமையற்ற, கட்டுப்பாடற்ற அபிமானத்தை அன்பு என்று சொல்ல முடியாது. இவ்வாறு நடந்து கொண்டால் விடுதலை பெறுவதற்கு உங்களுக்கு உரிமை இல்லாமற் போய்விடும்.'' (மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்ட காங்கிரஸ் குழுக்கள் 25,000 கதர்ச் சிட்டங்களையும் எஸ். எஸ். அருணுசலம் செட்டியார் ஒரு வெள்ளிச் சர்க்காவையும் மதுரை நகர வணிகர் குமாஸ்தாக்கள் சங்கம் ஒரு மூங்கில் இராட்டை, ஒரு வெள்ளி மைக்கூடு, பேனு ஆகியவற்றையும், இந்துஸ்தானி வித்யார்த்தி பிரேமி மண்டல், அவனியாபுரம் பஞ்சாயத்து போர்டு முதலியன சார்பாக வரவேற்புரைகளும் இக்கூட்டத்தில் காந்திஜியிடம் அளிக்கப் பெற்றன. மதுரை ஜவுளி வணிகர் சங்கத்தின் சார்பாக அதன் தலைவரான முகமது அப்துல் கரீம்

6,600 ரூபாய் பண முடிப்பு அளித்தார்; மற்றும் பலரும் பணமுடிப்பு அளித்தார்கள். மேடையில் அவரிடம் தங்கத்தால் செய்யப்பெற்ற ஒரு மூவர்ணக்கொடி, ஒரு தங்கத் தக்ளி, இரண்டு வெள்ளித் தக்ளிகள் ஆகியவையும் அளிக்கப்பெற்றன. தங்கத்தால் செய்யப்பெற்ற மூவர்ணக் கொடியை அளித்தவர் தங்க வணிகரான ஏ. எஸ். எஸ். எம். சோமசுந்தரம் செட்டியார்.) இன்று கூட்டத்தில் அமைதியற்ற நிலை இருந்ததற்குக் கூட்டம் கட்டுக்கடங்காத பெரிய கூட்டமாக இருந்ததும், கூட்டத்திலிருந்து பலர் காந்திஜி அருகில் வந்து அவரைக் காணவும் அவர் பாதத்தைத் தொட்டுக் கும்பிடவும் விரும்பினர்கள் என்பதும் மட்டும் காரணமல்ல; அவர் பேசியது பின் புறத்தில் இருந்தவர்களுக்குக் கேட்காததும் முக்கியமான காரணமாகும்.

காந்திஜி படுத்தார்

பேச்சை இத்துடன் முடித்துவிட்டு, கூட்டத்தினரைக் கட்டுப்பாடாக இருக்குமாறு கேட்டுக் கொண்டு, காந்திஜி இறங்கத் தயாரானார். அப்போது எல்லாப் பக்கங்களிலிருந்தும் கூட்டம் பந்தலை நோக்கி நெருங்கியது. அக்காலத்தில் இத்தகைய கூட்டங்களில் போலீசார் வந்து அமைதியை நிலை நாட்டுவதில்லை. காங்கிரஸ் தொண்டர்கள் தான் அப்பணியைச் செய்வது வழக்கம். ஆனால் அன்றிருந்த கூட்டமோ காங்கிரஸ் தொண்டர்களின் சக்திக்கு அப்பாற் பட்டதாக இருந்தது. கலைந்து செல்லுமாறு ஒலி பெருக்கி மூலம் வேண்டிக் கொண்டதும் பலன் அளிக்கவில்லை. மேடையைச் சுற்றிலும் பல வரிசைகளாகக் கட்டப்பெற்றிருந்த வேலிக்கம்புகள் நொறுங்கின. ஆனால் மேடைக்கு ஓரத்தில் போடப் பெற்றிருந்த வேலி மட்டும் இந்த மோதுதலுக்கும் தாக்குப் பிடித்தது. கூட்டத்தில் கொஞ்சமுங் கட்டுப்பாடின்றிப் போய் விட்டதைக் கண்ட காந்திஜி, "நான் செல்வதற்கு நீங்கள் அனுமதிக்கும் வரை நான் மேடையைவிட்டு நகரப் போவதில்லை" என்று கூறிக் கொண்டே மேடையில் விரிக்கப் பெற்றிருந்த மெத்தையில் படுத்துக்கொண்டார். மேடையிலிருந்த விளக்குகள் அணைக்கப்பெற்றன; சத்தம் கேட்காதவாறு அவர் காதுகளில் விரலை வைத்து அடைத்துக் கொண்டார். ஆனால் இவ்வாறு காந்திஜி சத்தியாக்ரகம் செய்யத் தொடங்கியவுடன் கூட்டத்தில் ஒரு பகுதியினர் கலைந்து சென்றார்

களானாலும் மற்றவர்கள் காந்திஜியின் தரிசனம் தங்களுக்குக் கிடைத்தாக வேண்டுமென்று ''எதிர் சத்தியாக்ரகம்'' செய்தார்கள். இவ்வாறு ''சத்தியாக்ரகமும் எதிர் சத்தியாக்ரகமும்'' சுமார் ஒன்றரை மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றது. ராஜாஜி உள்படப் பல தலைவர்கள் திருப்பித் திருப்பி வேண்டியும் கூட்டம் கலைந்து செல்லவில்லை. ஒன்றரை மணி நேரம் கழித்துத்தான் மக்கள் கொஞ்சங் கொஞ்சமாகக் கலையத் தொடங்கினர். சுமார் எட்டே முக்கால் மணிக்கு நிலைமையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு, சத்தமும் குறைந்தது. காந்திஜியும் எழுந்து மேடையில் விளக்குப் போடுமாறு சொன்னார். அப்போதும் அங்குப் போகாமல் நின்று கொண்டிருந்த கூட்டம் அவரைக் கண்டு மனநிறைவு கொண்டு கலைந்தது. மேடையிலிருந்து அவர் சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் நிறுத்தப் பெற்றிருந்த தம் காரில் போய் ஏறுவதற்குச் சுமார் கால்மணி நேரமாகி விட்டது.

காந்திஜி வருத்தம்

மதுரையில் கூட்டம் நடந்து கொண்ட முறையும் தாம் நடந்து கொண்ட முறையும் காந்திஜியின் மனத்தை உறுத்தியிருக்க வேண்டும். அவர் இதைப் பற்றி மீண்டும் மீண்டும் சிந்தித்துப் பார்த்திருக்கிறார். வர்தாவிற்குத் திரும்பிச் சென்ற வழியில், ''மதுரை கற்பித்த பாடம்'' என்ற தலைப்பில் ''அரிஜன்'' இதழுக்கு அவர் ஒரு கட்டுரை எழுதினார். அதில் அவர் தம்முடைய சத்தியாக்ரகம் முதன் முதலாக இப்பொதுக் கூட்டத்தில் தோற்றுப் போனதாகக் குறிப்பிட்டார். மேலும், ''மதுரையில் ஐந்து இலட்சம் பேருக்குக் குறையாமல் கூடியிருந்திருப்பார்கள். அத்தகைய நிலையில் கூச்சலும் சலசலப்பும் தவிர்க்க முடியாதவையே. மேலும் என்னைப் போன்ற ஒரு சத்தியாக்ரகியை அந்தக் கூட்டம் சமாளித்தாக வேண்டும். ஆனால் முதல் முறையாக என்னுடைய சத்தியாக்ரகம் தோல்வியடைந்துவிட்டது. மக்களுடைய சத்தியாக்ரகமோ கட்டாயம் தோல்வி அடைந்துதானாக வேண்டும். நான் பேசாமல் இருந்தவரை அவர்கள் மிகுந்த பொறுமை காட்டினர். பின்னால் இருந்தவர்களுடைய மோதல் எவ்வளவோ இருந்தும் என் முன்னாலும் இருபக்கங்களிலும் அமர்ந்திருந்தவர்கள் சத்தமில்லாமல், அமைதியாகவே உட்கார்ந்திருந்தனர். ஆனால் மேடைக்குப் பின்னால் சத்த

மும் சலசலப்பும் குறையாமல் இருந்து கொண்டேயிருந்தது. ஆகையால் மேடையிலிருந்த மாதர்களையெல்லாம் இறங்கிப் போகுமாறு நான் சொல்லி விட்டேன். ராஜாஜி, கனு காந்தி, இராம கிருஷ்ண பஜாஜ் ஆகிய மூவர் மட்டுந் தான் மேடையில் இருந்தார்கள். மக்கள் வழிவிட்டு விட்டதாகப் பின்னர் கூறினர். ஆனால் நான் எழுந்த போதோ மக்கள் மீண்டும் அமைதி குலைந்தனர். ''நான் பேசுவதாக இல்லை. ஆகையால் தயவு செய்து போய் விடுங்கள்'' என்று முன்னாலும் பக்கத்திலும் இருந்த மக்களை வேண்டிக் கொண்டேன். அவர்கள் அமைதியாக இருந்தார்கள். ஆனால் கலைந்து செல்லவில்லை. ஆகையால் அன்றிரவு கூட்டங் கலையும்வரை அல்லது கூட்டம் எனக்கு வழிவிடும் வரை அங்கேயே தூங்கிவிடுவது என்று எண்ணினேன். ஆசை காட்டுபவராகக் கனு காந்தி மீண்டும் வந்து, மக்கள் நான் செல்வதற்கு வழி விடுவார்கள் என்று கூறினர். கூட்டத்திலிருந்து சற்றுத் தொலைவில் கார் நிற்கும் என்றும் சொன்னர். என்னுடைய பலவீனத்தில் நான் அதற்கு இணங்கினேன். அந்தப் பலமான ஏணியில் நான் சில படிகள் இறங்கிச் சென்ற போது கூச்சல் போட்டுக் கொண்டிருந்த அதே கூட்டம்-இப்போது மிகவும் குறைந்திருந்தது-மீண்டும் நெருக்கியடித்துக் கொண்டு முன்னால் வந்தது. சத்தம் இல்லாமல் கட்டுப்பாடாக இருந்து வழி விட வேண்டுமென்று நான் வேண்டிக் கொண்டிருந்தேன். அதற்காகவே காத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அது நிறைவேறவில்லை. ஆனால் அதே சமயம் அது ஒரு விஷமத் தனமான கூட்டமும் அல்ல. அவர்கள் யாரைச் சுவாமி என்று கருதுகிறார்களோ அவரை நோக்கிச் சத்தம் போட்டுக் கொண்டு நெருக்கியடித்துக் கொண்டு முன்னால் செல்வதுதான் அவர்களுடைய அன்பை வெளிக்காட்டுவதற்கு அவர்கள் அறிந்த ஒரே வழி. அவர்களைப் போன்ற மண்ணாலான சுவாமி இது. அவர்களுடைய பலத்த சத்தத்துடன் கூடிய ஆர்ப்பாட்டத்தை இந்தச் சுவாமி பாராட்டவும் செய்யாது. நான் ஒரு பொறுமையில்லாத, திறமையற்ற ஆசான் என்பது அன்று மெய்ப்பிக்கப்பெற்றது. நான் இன்னுங் கொஞ்சம் பொறுமையாக இருந்திருந்தால், உளமார்ந்த, அமைதியான அன்பு என்னவென்பதை அந்தக் கூட்டமே கற்றுக் கொண்டிருக்க முடியும். ஒரு வேளை சுயராஜ்யத்திற்குத் தேவையான கட்டுப்பாட்டையும் கற்றுக் கொண்டிருக்கலாம். இதைப் போன்ற மற்

ரொரு நிலை மறுமுறையும் வந்தால், அதை எவ்வாறு சமாளிப்பது என்பதை நான் மிக நன்றாக அறிவேன்.... எப்படியும், இந்த நிகழ்ச்சியில் யார் மீதும் குற்றம் கூறுவதற்கில்லை; யாரும் வெட்கப்படுவதற்குமில்லை.''

சிவகங்கை பங்களா

இம்முறை அவர் வந்தபோது அவர் தங்குவதற்கு வைகை ஆற்றின் வடகரையில் உள்ள சிவகங்கை பங்களாவில்-அது இப்போது நகராட்சி அலுவலகமாக இருக்கிறது- ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. இதன் மாடியில் அவர் தங்கியிருந்த அறையை இன்று கூட காந்திஜி மண்டபம் என்றுதான் அழைக்கிறார்கள். அவர் சிவகெங்கை பங்களாவிற்குப் போய்ச் சேர்ந்தபோது, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தவர்களை அழைத்துக் கோபத்துடன், ''நான் 125 ஆண்டுகள் வாழ விரும்புகிறேன்; நீங்கள் என்னைக் கொல்லப் பார்க்கிறீர்கள்'' என்று கூறினார். ஸ்ரீ மீனாட்சி ஆலயத்திற்கும் மறுநாள் வரமுடியாதென்று சொல்லிவிட்டார். மக்கள் பக்தி மிகுதியால் கட்டுக்கடங்காமல் இவ்வாறு நடந்துவிட்டார்கள் என்றும் தரிசனத்திற்காக அவர்கள் துடித்துக்கொண்டிருப்பதால் காலையில் நான்கு மாசி வீதிகளிலும் காரில் பவனி வந்து பின் கோவிலுக்குப் போகலாமென்றும் கூறி அதற்கு எவ்விதச் சிரமமும் இல்லாமல் ஏற்பாடு செய்வதாகவும் உறுதி அளித்தபின்தான் அவர் ஒப்புக்கொண்டார். அன்றிரவு மிகவும் குளிராக இருந்தாலும் மொட்டை மாடியிலேயே படுத்துத் தூங்கினார்,

3-2-46

தூக்கம் இல்லை

காந்திஜியின் வருகை ஏற்பாட்டுப் பொறுப்பில் ஈடுபட்டிருந்த ஏ. வைத்தியநாத ஐயர், என். ஏம். ஆர். சுப்பராமன், டாக்டர் இராமசுப்ரமணியம், டி. கே. இராமா ஆகியோருக்கு அன்று இரவு தூக்கமே இல்லை. மறுநாள் அதிகாலையில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தெருவாகப் பொறுப்பேற்றுக் கொண்டு தெருவில் மக்கள் நடக்கும் மேடையிலிருந்து அவர்கள் கீழே இறங்காமல் பார்த்துக்கொண்டார்கள். ஸ்ரீ மீனாட்சி கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்யச் சென்றுவிட்டு மகாத்மாவும் நான்கு சித்திரை வீதிகளிலும்

மாசி வீதிகளிலும் காரில் வந்து எல்லா மக்களுக்கும் காட்சி கொடுத்தார். காந்திஜி சென்ற காரைத் தொழிலதிபரும் வணிகருமாகிய என். எம். ஆர். கிருஷ்ண மூர்த்தி ஓட்டிச் சென்றார். முதல் நாளைப் போன்றல்லாமல் மக்கள் அமைதி யாகவும் கட்டுப்பாடாகவும் இருந்தார்கள். தெருவெல்லாம் காங்கிரஸ் கொடிமயமாக இருந்தது.

மெய் மறந்த வழிபாடு

''நான் உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவன்'' என்று காந்திஜி திருப்பித் திருப்பிக் கூறி வந்தாராயினும் அவர் மறுநாள் காலையில் ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்திற்கு வந்தபோது மெய் மறந்து காணப்பெற்றார். அதிகாலையில் அவர் வழக்க மாக வழிபாடு நடத்தியபோதே அவர் முகத்தில் சாதாரணமாகக் காணப்பெறுத ஒரு பக்தி உணர்வு தென்பட்டதாகச் செய்தியாளர்கள் எழுதியிருக் கின்றனர். சிவகங்கை மாளிகையிலிருந்து ஆலயத்திற்குப் புறப்பட்டு அவர் காரில் ஏறப்போனபோது அங்கி ருந்தே ஆலயத்தின் நான்கு கோபுரங்களையும் பார்த்து விட்டாராதலால் பயபக்தி உணர்வுடன் கண்ணை மூடிக் கொண்டு வாயால் ஏதோ முணுமுணுத்தார். (கீழ வெளி வீதி, இராமநாதபுரம் சாலை, கீழமாசி வீதி ஆகிய தெருக் களின் வழியாக காந்திஜி கார் சென்றது.) சிவகங்கை பங்களாவிலிருந்து ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்திற்கு வந்தது வரை அவர் யாரிடமும் எதுவும் பேசவில்லை. ஆலயத்திற் குள் நுழைந்து சுற்றிப் பார்த்த போதும், இவ்வாறு தம் சுற்றுச் சூழ் நினைவில்லாமல் வாய்க்குள் ஏதோ முணுமுணுத் துக் கொண்டுதான் இருந்தார். உண்மையிலேயே காந்திஜி வந்தது ஒரு வழிபாட்டு யாத்திரைதான்; ஒரு யாத்திரிகராகத் தான் வந்தார் என்பதை அவர் மெய்ப்பித்தார்.

ஆலயப் பெருமை

ஸ்ரீ மீனாட்சி ஆலயம் தமிழகத்தில் உள்ள பழம்பெரும் கோவில்களில் ஒன்றாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மதுரையம்பதியில் உள்ள இத் திருக்கோவிலைப் பற்றி ஹாலஸ்ய புராணத்திலும் திருவிளையா டற் புராணத்திலும் நிறையக் கூறப்பெற்றிருக் கிறது. இதனுள் உள்ள சிற்ப வேலைப்பாடுகளும் இதன் நான்கு புறவாசல்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு மன்னர்களால் கட்டப்பெற்ற கோபுரங்களும் உலகப் புகழ் பெற்றவையாகும். பாண்டிய மன்னர்களும்

நாயக்க மன்னர்களும் இந்த ஆலயத்தைக் கட்டுவதிலும் புனருத்தாரணம் செய்வதிலும் பெரும் பங்கு கொண்டிருக் கின்றனர். ஆலயத்திற்குள் நுழையும்போதே ஒரு தெய்வீக உணர்வு உள்ளத்தில் பொங்கியெழும் என்று இந்த ஆலயத் திற்கு வந்த பெரியோர்கள் பலர் கூறிய கருத்து அன்று காந்திஜி வந்தபோதும் தெளிவாகத்தெரிந்தது. காந்திஜி யுடன் தக்கர்பாபா, வி. ஐ. முனுசாமி பிள்ளை, காமராஜ் ஆகியோர் வந்தார்கள். ராஜாஜிக்குச் சளி பிடித்திருந்ததால் அவர் வரவில்லை. காந்திஜியுடன் அரிஜனங்கள் சிலரும் - மாதர்கள் உள்பட - சென்றார்கள். டி. எஸ். எஸ். ராஜன், நிருவாக அதிகாரி ஆர். எஸ். நாயுடு ஆகியோரும் மற்ற அதிகாரிகளும் பட்டர்களும் கோவிலில் அம்மன் சந்நதி முன் வந்து நின்று, நாதசுரம் முழங்க காந்திஜியைப் பூரண கும்ப மரியாதையுடன் வரவேற்று அழைத்துச் சென்றார்கள். ஆலயத்திற்குள் மட்டுமல்லாது காந்திஜி சென்ற தெருக் களில் கூட அழகான கோலங்கள் போடப்பெற்றிருந்தன.

உள்ளேயும்

ஆலயத்தினுள் தாங்கொணாத கூட்டம் இருந்தது. அனுமதிச் சீட்டுப் பெற்றுத்தான் அந்த நேரத்தில் கோவி லுக்குள் நுழைய வேண்டுமென்று முதலில் அறிவிக்கப்பெற்றிருந்தது. ஆனால் அந்தக் பெருங்கூட்டம் கட்டுப்பாடுகளெல்லாம் காந்திஜி ஆலயத்திற் குள் நுழைந்தவுடன் தவிடுபொடியாயின. காந்திஜியை அம்மன் உட்பிரகாரத்திற்கும் கர்ப்பக் கிரகத் திற்கும் அழைத்துச் செல்வது பெரும் பாடாகிவிட்டது. ஆனாலும் மாபெருங்கூட்டங்களைக் கண்டு பழகிப்போன காந்திஜி இதையெல்லாம் அற்புதமாகச் சமாளித்து விட்டார்.

அர்ச்சனை


கர்ப்பக்கிரகத்தினுள் இருட்டாக இருந்ததால், காந்தி ஜிக்கு வழி தெரிவதற்காக, எண்ணெய் விளக்குகளைத் தரை யில் தாழ்த்திப் பிடித்து வழி காட்டினர்கள். மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி பெயரில் அம் மனுக்கு அர்ச்சனை நடைபெற்றது. அர்ச்சனை செய்த பட்டர் அம்மனின் பெயர்களை வெகு வேகமாகச் சொல்லிக் கொண்டு போனார். அண்ணல் குறுக் கிட்டு, மெதுவாகச் சொல்லுமாறு சொன்னார். அம்மனிட மிருந்து வந்த ஆன்மிக உணர்வு என்னும் வெள்ளத்தை மாந்தித் திளைத்தவராக அண்ணல் காணப் பெற்றார்.

அர்ச்சனை முடிந்த பின்னர் அவர் தலையில் பரிவட்டம் கட்டி நெற்றியில் குங்குமம் இட்டார்கள். பிரசாதத்தை காந்திஜி பெற்றுக்கொண்டு. அம்மனை வணங்கிவிட்டு சுந்தரேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று அங்கு சுந்தரேசுவரரையும் உத்சவரையும் ஸ்ரீ நடராஜரையும் வணங்கினர். காந்திஜி பெயரில் ஸ்ரீ சுந்தரேசுவரருக்கும் அர்ச்சனை செய்யப் பெற்றது. பின்னர், திருவிழாக்களில் எடுத்துச் செல்லப்பெறும் வாகனங்களையும் கல்யாண மண்டபத்தையும் அவருக்குக் காண்பித்தார்கள்.

கலியாணமண்டபத்தில் அர்ச்சகர்களும் கோவில் தர்மகர்த்தாக்களும் அவருக்கு மாலையிட்டுப் பிரசாதம் வழங்கினர்கள். இவ்வாறு, சுமார் ஒன்றே கால்

கோவிலில் இருந்த நேரம்

மணி நேரம் கோவிலுக்குள் அவர் இருந்திருக்கிறார். ஆலயத்தில் உள்ள பார்வையாளர் புத்தகத்தில் காந்திஜி இந்தியில்



என்று* எழுதியதன் ஆங்கில மொழி பெயர்ப்பு வருமாறு: "I am glad that the desire that I had entertained for years is fulfilled to day." (தமிழ் மொழிபெயர்ப்பு: பல ஆண்டுகளாக எனக்கு இருந்த ஆசை இன்று நிறைவேறியதில் மகிழ்வடைகிறேன்.)

இவ்வாறு மதுரை யாத்திரையை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு மதியத்தில் அவர் பழனிக்குப் புறப்பட்டார்.

புறப்பாடு

அவர் புறப்பட்டபோது, சிவகங்கை பங்களாவின் முன் வாசலில் ஏராளமான பேர் கூடிவிட்டார்கள். ஒதுங்கியிருந்து காந்திஜியின் காருக்கு வழி விடுமாறு எவ்வளவோ சொல்லியும் கூட்டம் விலகுவதாகத் தெரியவில்லையாகையால் பின் புற வழியாக அவர் சென்றார்.

* போட்டோ அனுப்பி உதவியவர்: ஸ்ரீ மீனாட்சி ஆலய திருவாசகஅறிகாரி ஏ. சண்முக சுந்தரம்.

மதுரைச் சந்திப்பிலிருந்து சுமார் ஆறு மைல் தூரத்தில் உள்ள அலங்கா நல்லூர் லெவல் கிராசிங்கில் இரயில் ஏறி காந்திஜி சென்றார். வழி நெடுக இரயில் நிலை யங்களில் மக்கள் திரள் திரளாக நின்று அவரை வழியனுப்பி வைத்தார்கள். சோழவந் தானில் இரயில் நின்றது. திண்டுக்கல்லில் அந்

ஒட்டன் சத்திரம்

நகரத்து மக்களும் பக்கத்து கிராமங்களைச் சேர்ந்தவர்களும் நிறையத் திரண்டிருந்து உற்சாகமாக வரவேற்றார்களென்ற போதும் கூட்டத்தில் ஓயாத சத்தம் இருந்ததால், காந்திஜி பேசவில்லை. ஒட்டன் சத்திரத்தில் மக்கள் காட்டிய அமைதி யையும் ஒழுங்கையும் பார்த்துவிட்டு அண்ணல் அயர்ந்து போய்விட்டார். ''சென்னையிலிருந்து நான் வந்த பயணத்தில் உங்களூரைப்போன்று மக்கள் அமைதியாயிருந்த ஊர்கள் மிகவும் சொற்பமே. இத்தகைய கட்டுப்பாடு உங்களுக்கு மட்டுமல்லாது இந்த நாட்டிற்கும் நல்லதாகும். அதுவும், விரைவில் விடுதலை கிட்டப்போகும் இந்த நேரத்தில் மிக மிக அவசியம். ஒரு சில மாதங்களில் விடுதலை கிடைத்துவிடும் என்று நம்புகிறேன்,'' என்று அண்ணல் கூறினார். (இங்கு, தல காங்கிரஸ்காரரான வடிவேலுப் பிள்ளை காந்திஜிக்குக் கதர் மாலை அணிவித்து, மக்கள் சார்பாகப் பண முடிப்பும் வழங்கினார்.)

உண்மையில் ஒட்டன் சத்திரக் கூட்டம் பழனிக் கூட்டத் திற்கு ஒரு முன்னோடியான சமிக்ஞை போன்றுதான் அமைந் திருந்தது. பழனியில் கூட்டம் நடைபெற்ற இடத்திற்கு அருகில் உள்ள லெவல் கிராசிங் கில் (இரயில் நிலையத்தைத்தாண்டி) காந்திஜி வந்த தனி இரயில் நிறுத்தப் பெற்று, யாவ பரிவாரத்துடன் வந்து காந்திஜியைப் பழனிப் பிரமுகர்கள் வரவேற்றனர். மதுரைப் பொதுக்கூட்டத்திற்கு நேர் முரணாக அமைதியின் உருவமாகவே பழனிப் பொதுக் கூட்டம் இருந்தது. இதற்குப் பல காரணங்கள் உண்டு. கூட்டம் நடைபெற்ற இடம் ஒரு மலைச்சாரல் (பழனி இரயில் நிலையத்திற்கு எதிரே உள்ளது.) அந்த மாலை நேரத்தில் காந்திஜியின் உருவம் எல்லோருக்கும் நன்கு தெரியுமாறு உயரமான இடத்தில் காந்திஜி நிற்கச் சாய்ந்த தளத் தில் அவர் உயரத்திற்கும் சற்றுக் கீழே மக்கள் அமர்ந்திருந் தனர். கூட்ட அமைப்பாளர்களுக்கும் பொது மக்களுக்கும், மதுரைப் பொதுக்கூட்டம் ஒரு படிப்பினையாக இருந்ததால்

பழனிக் கூட்டம்

அவர்கள் எச்சரிக்கையுடன் இருந்தனர். மேலும் மதுரைக் கூட்டம் தோல்வியடைந்தவுடன் டாக்டர்பி. என். இராம சுப்ரமணியமும் அப்போது அங்கு போலீஸ் சூபரின்டெண் டாக இருந்த ஸ்பிட்லரும் கூடி ஆலோசித்ததன் படி, பழனிப் பொதுக்கூட்டத்தில் சாதாரண ஆடையில் பல போலீசார் அமர்ந்திருக்குமாறு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பழனியில் இலட்சுமிபதிராஜு தலைமையில் நல்ல இளைஞர்களைக் கொண்ட ஒரு தொண்டர் படை சுழன்று பணியாற்றிப் பழனி நிகழ்ச்சிகள் அனைத்துமே வெற்றியாக நடைபெறுமாறு செய்தது மற்றொரு காரணம்.

ஆலய வழிபாடு

இக்கூட்டத்தில் உரையாற்றியபோது, 'மதுரையில் ஸ்ரீ மீனாட்சியம்மன் கோவில் அரிஜனங்களுக்குத் திறந்து விடப் பெற்றதனால்தான் அங்குச் சென்று நான் வழிபட்டேன். அவ்வாறு வழிபட்ட போது ஒரு புது ஆன்மிக முக்கியத்துவத்தையும் உணர்ந்தேன். உங்களுடைய அமைதியைக் காணும்போது என்னுடைய யாத்திரை பலன் தந்துவிட்டது என்று கருதுகிறேன்,'' என்று காந்திஜி கூறினார்.

ஓய்வு

டாக்டர் இராமசுப்ரமணியம் கூறுகிறார் : கூட்டம் முடிவடைந்தவுடன் காந்திஜி சற்று ஓய்வாக வெளியே சென்று வரலாம் என்று கருத்துத் தெரிவித்தார். ஏதாவதொரு கிராமத்திற்குக் காரை ஓட்டிச் செல்லுமாறும் இப்பகுதியிலுள்ள கிராமங்களை காந்திஜி காண்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என்றும் ராஜாஜி சொன்னார். ராஜாஜி, காந்திஜி, டாக்டர் சுசீலா நய்யார், பழனி வழக்கறிஞரும் தேசிய வாதியுமான சுந்தரராஜ ஐயர் (இதற்கு முன்பு காந்திஜி பழனிக்கு வந்திருந்தபோது இவர் வீட்டில்தான் தங்கியிருந்தார்.) ஆகியோர் காரில் ஏறிக்கொள்ள நான் காரை ஓட்டிச் சென்றேன். ஒரு ஆற்றின் அருகே கார் சென்றபோது, ''ஆற்றுப்படுகையில் சற்று நேரம் உட்கார்ந்தால் என்ன?'' என்று காந்திஜி கேட்டார். ஆனால் இது அவ்வளவு உசிதமானதாகத் தோன்றவில்லை. ''இங்கேயும் ஆள் கூடிவிடும். நீங்கள் நிம்மதியாக ஓய்வு எடுக்க முடியாது, உங்களைப் பார்க்க வரும் ஆவலில் சிறிது குழப்பமும் ஏற்படலாம்'' என்று நான் சொன்னேன். காந்திஜியும் இந்த யோசனையை ஏற்றார். உடனே பக்கத்திலுள்ள தம்முடைய கிராமத்திற்குப்

போகலாமென்று சுந்தரராஜ ஐயர் சொன்னார். அங்கு அவருடைய வீடோ அல்லது உறவினர் வீடோ இருந்தது. காரை அந்த வீட்டிற்கு ஓட்டிச் சென்றோம். எல்லோரும் இறங்கி காந்திஜியைக் கூடத்திற்கு அழைத்துச் சென்றோம். அங்கு ஒரு தூணின் பக்கத்தில் காந்திஜி அமர்ந்தார். அத் தூணிலிருந்த வேலைப்பாடுகள் அவரைக் கவர்ந்தன. ''இந்நாட்டில் பார்த்தீர்களா, ஒவ்வொரு வீட்டிலும் ஏதாவதொரு கலை அழகு இருக்கிறது'' என்று அவர் சொன்னார். இதன் பின்னர் காந்திஜி, ''எனக்கு உற்சாகமாக இருக்கிறது, 'அரிஜனுக்கு' ஒரு கட்டுரை எழுதலாம் என்று நினைக்கிறேன்'' என்று சொன்னார். அந்த வீட்டில் அவர் தனியாக அமர்ந்து கட்டுரை எழுத இட வசதியில்லை, ஆகவே மொட்டை மாடியில் சென்று பார்த்தோம். அங்கு ஒரே குப்பையும் கூளமுமாக இருந்தது. நானும் டாக்டர் சுசீலா நையாரும் மாடியைக் கூட்டித் துப்புரவு செய்து, தண்ணீர் தெளித்து, பாய் விரித்து அவர் உட்கார்ந்து எழுதும் முறையில் பலகைகள் போட்டு இரண்டு அரிக்கன் விளக்குகளையும் வைத்தோம். காந்திஜி இங்கு அமர்ந்து கட்டுரை எழுதினார். நாங்கள் கீழே இறங்கி வந்துவிட்டோம். இதற்கிடையில் அந்த வீட்டுப் பாட்டியம்மாள்ஒரு தட்டில் சில முறுக்குகளை எடுத்துக் கொண்டுவந்தார்கள். அந்த அம்மாளுக்குத்தன் வீட்டிற்கு வந்திருப்பது மகான் காந்திஜி என்பது தெரியாது! அந்த அம்மாள் என்னிடம் தட்டைக் கொடுத்து, ''யாரோ வந்திருக்கிறாமே அவரிடம் இந்த முறுக்கைக் கொடப்பா,'' என்று சொன்னர்கள். நான் முறுக்கை எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றேன். காந்திஜி அந்தத் தட்டைப் பார்த்தவுடன், ''ஓ, முறுக்கு!'' என்று கூறினர். ''இதன் தமிழ்ப் பெயர் உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டேன்.

காந்திஜி: தென்னப்பிரிக்காவில் நான் தமிழர்களுடன் இருந்தேன் என்பதை மறந்து விட்டாயா? ஆனால் இவை எல்லாவற்றையுங் காட்டிலும் உங்களுடைய பலகாரங்களிலேயே இட்லிதான் சிறந்தது.

நான்: ஆம்! இட்லிதான் ரொம்ப ருசியானது.

காந்திஜி: ஆனாலும் நான் அதை ருசி பார்த்ததில்லை.

நான்: ஒரு நல்ல உணவை நீங்கள் இழந்து விட்டீர்களே.

காந்திஜி: என்னுடைய வாழ்க்கையில் இப்படி எத்தனையோ இழந்திருக்கிறேன்.''

அர்ச்சனை

பழனிமலை மீது அரிஜனங்கள் உள்படச் சுமார் இருநூறு பேர் தான் விசேட அழைப்பாளர்களாக அழைக்கப் பெற்றிருந்தனர். இவர்களைத் தவிர காந்திஜி குழுவினரும் பத்திரிகையாளர்களும் சுமார் அறுபது பேர் இருந்தார்கள். இவர்கள் எல்லோரும் முன் கூட்டியே போய் இரண்டு வரிசைகளாக அமர்ந்து விட்டனர். காந்திஜி உள்பிரகாரத்தில் அமர்ந்து-ஒரு புறம் ராஜாஜியும் மற்றொரு புறம் தக்கர் பாபாவும் அவர்பக்கத்தில் இருந்தார்கள்-பழனியாண்டவரை தரிசனம் செய்தார். இங்குக் கூட்டம் இல்லாததால் காந்திஜி நன்கு சுவாமி தரிசனம் செய்ய முடிந்தது. காந்திஜியின் பெயருக்கு அர்ச்சனை நடைபெற்றது. இந்த இடத்தில்கூட காந்திஜியும் மற்றவர்களும் அரிஜன நிதிக்காகப் பணம் வசூல் செய்தார்கள். பார்வையாளர்கள் புத்தகத்தில், ''இன்று இங்குஇருந்து இந்த ஆலயத்தில் தரிசனம் செய்ய முடிந்ததற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' ("I was happy to be here and be able to day to have darshan in this temple") என்று எழுதியிருக்கிறார். இங்கு காந்திஜி வரவேற்பு ஏற்பாட்டை மங்கள கவுண்டர், கே. ஆர். சுந்தரராஜையர், எஸ். ஏ. சேஷையர், சுந்தரமையர் ஆகியோர் சிறப்பாகக் கவனித்தார்கள்.

மேனுவும் காந்திஜியும்

காந்திஜியும் ராஜாஜியும் மேனுவில் (மலை மீது தூக்கிச் செல்வதற்குப் பயன்படும் ஒரு வகைச் சிறு பல்லக்கு) ஏறி வர, மற்றவர்கள் எல்லோரும் நடந்து படிகளில் ஏறி ஆலயத்திற்குச் சென்றார்கள். தரைக்கு இறங்கி வந்தவுடன், முதலில் வகுத்த திட்டப்படி காந்திஜி அரிஜன விடுதிக்குச் செல்வதாகவும் ஊழியர்களைச் சந்திப்பதாகவும் இருந்தது. ஆனால் மிகவும் களைப்பாய் இருப்பதாக காந்திஜி கூறி காரில் நேரே இரயில் நிலையத்தில் நின்றிருந்த தனி இரயிலுக்கு வந்து விட்டார். பழனிக்கு காந்திஜி வருகை புரிந்ததைக் கோவை அ. அய்யாமுத்து திரைப்படமாகப் பிடித்து, தாம் எடுத்திருந்த ''கஞ்சன்'' திரைப்படத்துடன் சேர்த்து வெளியிட்டார்.

பழனிக்கு வந்து பொதுக் கூட்டத்தில் பேசியதைக் குறித்தும் பின்னர் மலைமீது வழிபாடு செய்ததைப் பற்றியும் பழனியிலிருந்து சென்னைக்குத் திரும்பியபோது இரயிலிலேயே காந்திஜி கட்டுரை எழுதிவிட்டார். அதில் அவர்

கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்: ''மலையின் அடிவாரத்தில் இருந்து நான் ஆண்டவனை வழிபட்டிருந்தாலும் மலை உச்சிக்குச் சென்று வழிபடும் பழனி பற்றி சிலருடைய பிரார்த்தனையை விட ஆண்டவன் கட்டுரை னுக்கு நன்கு கேட்டிருக்கும் என்பதை உறுதியாக அறிவேன். எனினும், நான் பழனியாண்டவரைத் தரிசிக்கப் போகிறேன் என்று உறுதியாக நம்பியவர்கள், இக்கருத்தைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். நான் மலைமீது ஏறி வழிபடாவிட்டால் நாட்டிற்கு ஏதாவது கேடு ஏற்பட்டு விடலாம் என்று அவர்கள் எண்ணக்கூடும். மேலும், கூட்டத்தில் இருந்த மக்கள் காண்பித்த அமைதியைக் கண்டு மலை உச்சிக்குச் சென்று வழிபடமுடியும் என்ற நம்பிக்கையும் எனக்கு ஏற்பட்டது. சுமார் ஆறுமணிக்கு என் சொற்பொழிவை முடித்தேன். எட்டு மணிக்கெல்லாம், என்னால் மலைமீது செல்ல முடிந்து விட்டது. இவ்வாறு என்னுடைய யாத்திரை வெற்றியாக முடிந்தது. ஒரு மரம் காடாகாது. இந்த நிகழ்ச்சியிலிருந்து நாம் பொதுவான முடிவு எதற்கும் வரமுடியாது. ஆனாலும் இந்திய சுயராஜ்யத்திற்கு இது ஒரு சுப சகுனம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டாகத்தான் செய்கிறது.''

ராஜாஜி எதிர்ப்பு

பழனியிலிருந்து இரயில் புறப்படுவதற்கு முன் அப்போது தமிழக அரசியலில் இருந்த ஒரு முக்கியமான சிக்கலைப் பற்றியும் அது எவ்வாறு காந்திஜி வருகையில் எதிரொலித்தது என்பதைப்பற்றியும் நாம் அறியவேண்டும். இம்முறை காந்திஜி தமிழகத்திற்கு வந்தபோது ''ராஜாஜி எதிர்ப்பு இயக்கம்'' கடுமையாக இருந்தது. இதன் எதிரொலியாக எழுந்த ஐயப்பாடுகளும் வாக்குவாதங்களும் பல. சுந்தரராஜ ஐயரின் கிராமத்திற்குச் சென்றதும் அரிஜன விடுதிக்குச் செல்லாமல் இரயிலுக்கு காந்திஜி சென்றதும் அப்போது பெரிய கருத்து வேறுபாடுகளுக்கு இடம் அளித்தது. இரயில் எப்போது பழனியிலிருந்து புறப்படுகிறது என்பது தெரியாததன் காரணமாக, காமராஜ் தனி இரயிலில் போகமுடியவில்லை. அண்ணலுடைய வருகை ஏற்பாடுகளில் தொண்டாற்றிய ஊழியர்களை அவர் சந்திப்பதாக இருந்தது. ஆனால் அவர்களுக்கு அன்று காந்திஜியைக் காணும் பாக்கியம் கிடைக்கவில்லை. இதனால், ராஜாஜியும் அவருடைய ஆதரவாளர்களும், காந்திஜியைக்

காமராஜும் காமராஜுடைய ஆதரவாளர்களும் அணுக விடாமல் திட்டமிட்டுத் தடுத்துவிட்டதாக, ஒரு பலமான குற்றச்சாட்டு எழுந்தது. காமராஜ் பழனியிலிருந்து அந்த இரயிலில் போகாது, திண்டுக்கல் வரை காரில் சென்று அந்த இரயிலில் ஏறிக்கொண்டதை அப்போது சென்னை அரசு இந்திய அரசுக்கு அனுப்பிய அறிக்கையிலேயே குறிப் பிட்டது என்றால் இந்தக் கருத்து வேறுபாடு எவ்வளவு முக்கியத்துவம் அடைந்திருக்கும் என்பதை ஒருவாறு யூகிக்கலாம். இறுதியில் இப்புகாரை அண்ணலிடமே கொண்டு போனார்கள். பழனியிலிருந்து அண்ணல் சென்னைக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது ஒரு இரயில் நிலையத்தில் எழுத்து வடிவத்திலேயே அண்ணலிடம் இந்தப் புகாரை அளித்தார் ஒருவர். அதன் பின்னர், இதைக் குறித்துத் தம் ''அரிஜன்'' சஞ்சிகையில் 10-2-46-ஆம் தேதி இதழில் காந்திஜி கீழ்க்கண்டவாறு விளக்கி எழுதினார்:

யார் காரணம்?

''பழனியிலிருந்து நான் திரும்பி வந்த பயணத்தில் ஒரு இரயில் நிலையத்தில் இரயில் நின்றபோது, ஒருவர் என்னி டம் ஒரு கடிதத்தைக் கொண்டு வந்து கொடுத்தார். அதில் ராஜாஜி மீதும் எல். என். கோபாலசாமி மீதும் கடும் வசைமாறி கள் சாட்டப்பட்டிருந்தன. யாரையும் அவர் கள் என்னருகே வரவிடுவதில்லை என்றும் எனக்குத் தெரி விக்கப்பெற்றிருந்தது. ஆனால் நான் அறிந்தவரை இதற்கு நேர்மாறான நிலைதான் இருந்தது. உருப்படியான எதையும் என்னிடம் சொல்ல விரும்பியவர்கள் யாரும் என்னிடம் பேசுவதோ அல்லது எனக்கு எழுதுவதோ தடை செய்யப் பட்டிருக்க முடியாது. இந்தப் புகார்க் கடிதம் என்னிடம் அளிக்கப்பெற்றதே இதற்கு ஒரு சான்று. இதே தனி இரயிலில் என்னுடன் காமராஜ் நாடாரும் இருந்தார். பழனிமலை ஆலயத்திலும் என்னுடன் அவர் இருந்தார். ஆனால், இந்தப் பயணத்தில் ராஜாஜியும் கோபாலசாமியும் என்னிடம் மிக நெருங்கி இருந்தனர் என்பது உண்மையே. அவர்கள் தாம் இந்தப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தவர் கள். என்னுடைய மிகப் பழங்கால நண்பர்களில் ராஜாஜி ஒருவர். என்னுடைய கொள்கைகள், கோட்பாடுகள் எல்லா வற்றையும் சொல்லிலும் செயலிலும் மிகச்சிறந்த முறையில் விளக்கக்கூடியவர் அவர் என்பது எல்லோரும் அறிந்ததே. 1942-இல் அவர் என்னுடன் கருத்து வேறுபட்டார்

என்பதை நான் அறிவேன். இந்தக் கருத்து வேறுபாட்டைப் பகிரங்கமாக எடுத்துரைத்த அவருடைய தைரியம் வாழ்க! அவர் ஒரு பெரிய சமூக சீர்திருத்தவாதி. தம்முடைய நம்பிக்கையின் படி நடக்க அவர் அஞ்சுவதேயில்லை. அவருடைய அரசியல் விவேகமும் நாணயமும் மாசற்றவையாகும். ஆகையால் அவருக்கு எதிராக அங்கு ஒரு clique ('கும்பல்') இருப்பதைக் கண்டு நான் மனம் வருந்தினேன். சென்னையில் அதிகாரப் பூர்வமாக உள்ள காங்கிரசில் புறக்கணிக்க முடியாத செல்வாக்குள்ள (clique) கும்பல் அது என்பது வெளிப்படை. ஆனால், பொதுமக்கள் ராஜாஜியிடம் பக்தி கொண்டவர்களாயிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ள பொது மக்களிடையே அவருக்குச் செல்வாக்கில்லாமல் இருந்தாலும் என்னுடைய யாத்திரையின் வழி நெடுகிலும் அவ்வளவு திரளாக மக்கள் கூடி ஆர்ப்பாட்டத்தோடு என்னை வரவேற்றிருப்பார்கள் என்று கருதும் அளவுக்கு நான் கர்வியோ முட்டாளோ அல்ல. தென்னாட்டில் உள்ள காங்கிரஸ்காரர்களுக்கு எது சிறந்த முடிவாகப் படுகிறதோ அதன்படி அவர்கள் செயல்படலாம். ஆனால், 'ராஜாஜியின் விலைமதிப்பற்ற சேவையை இழந்து விடாதீர்கள்; தற்போதைய நிலையில் அவரைப் போன்று பொறுப்பு வகிக்கக்கூடியவர்கள் இல்லை,' என்று நான் எச்சரிக்காவிட்டால், நான் காங்கிரஸ் நிறுவனத்திற்கு விசுவாசமானவனாக இருக்க முடியாது.''

இந்தக் கட்டுரை சிக்கலைத் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக, அதன் கடுமையை அதிகமாக்கியது. தென்னாட்டுச் சுற்றுப் பயணத்தில் காந்திஜியை மற்றவர்கள் அண்டாமல் வைத்திருந்து, தம் கருத்தையே அண்ணல் கருத்தாக ராஜாஜி உருவாக்கி விட்டார் என்பதற்கு இதைவிடச் சிறந்த சான்று எதுவும் இல்லை என்று ராஜாஜி எதிர்ப்பாளர்கள் கூறினார்கள். சென்னை மாநில காங்கிரசில் அப்போதிருந்த ராஜாஜி எதிர்ப்பாளர்களை 'clique' என்று காந்திஜி குறிப்பிட்டது பலருக்குச் சொல்லொணா வருத்தத்தை அளித்தது. இவ்வாறு காந்திஜி குறிப்பிட்டது தம்மையும் தம்முடைய ஆதரவாளர்களையும் தாம் என்று கருதிய காமராஜ், பாராளுமன்றக் குழுவில்--அதாவது சட்டசபை உறுப்பினர் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்களைப் பொறுக்கும் குழுவில்--இருந்து விலகிக் கொள்வதாக

சிக்கல் அதிகமாகியது

அறிவித்தார். அச்சொல்லை எதிர்த்துப் பல தந்திகளும் கடிதங்களும் காந்திஜிக்குப் பறந்தன. காந்திஜி மீது சிறந்த பக்தி கொண்டவர்கள் கூட, தம்மைக் காண வந்த திரளான கூட்டத்திற்கு ராஜாஜி மீது மக்கள் கொண்ட பக்தியே முக்கிய காரணம் என்று அண்ணல் கூறியதற்காக மிகவும் மனம் வருந்தினர். ''மகாத்மாவின் வாயிலிருந்தும் உண்மைக்குமாறான சொற்கள் வரலாமா?'' என்று சிலர் கருதினர்கள். இவ்வாறு கருதிய (பிற்கால பூதானத் தலைவராகிய) எஸ். ஜகந்நாதன் (தமிழக நிர்மாண இயக்கத் தில் அப்போது முக்கிய தொண்டர்களில் ஒருவர்) மதுரை யில் உண்ணா நோன்பைத் தொடங்கிவிட்டார். இதன் பின்னர், clique என்ற சொல்லை காந்திஜி பயன்படுத்தியது குறித்தும், காமராஜ் பரராஜுமன்றக் குழுவிலிருந்து விலகியது குறித்தும் செய்தித்தாள்களிலும் அறிஜனிலும் கடுமையாக வாக்குவாதங்கள் வெளிவந்து கொண்டிருந்தன. ஆனாலும் இறுதிவரை அச்சொல்லைத் திருப்பிப்பெற மகாத்மா மறுத்து விட்டார்.

முதலமைச்சர் தேர்தல்

1946-ஆம் ஆண்டில் ராஜாஜியை முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுக்குமாறு மகாத்மா காந்தி கூறிய யோசனையை ஏற்க இயலாது என்று காமராஜ் பதிலளித்து விட்டார். பல்வேறுவித அரசியல் காரணங்களி னால் தமிழகத்தில் ராஜாஜி மீது வெறுப்பு இருக்கிறது என்றும் சட்டசபை உறுப்பினர் களின் பெரும்பான்மை ஆதரவை வைத்தே முதல் அமைச்சரைத் தேர்ந்தெடுக்க வேண்டி இருப்பதால் யாரை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்று சொல்ல முடியாது என்றும் தெரிவித்துவிட்டார். அதே சமயம் பிரகாசத்தை முதல் அமைச்சராகத் தேர்ந்தெடுப்பதை காந்திஜி ஆதரிக்கவில்லை. ''காந்திஜி கூறுவதை மீண்டும் நாம் தட்டக்கூடாது. ஏற்கனவே ஒருமுறை அவர் கூறியதை நம்மால் நிறைவேற்ற முடியவில்லை'' என்று கருதி, பிரகாசத்திற்கு எதிராக முத்துரங்க முதலியாரைக் காமராஜ் நிறுத்தினர். ஆனால் பின்னவர் (முதலியார்) இத் தேர்தலில் தோல்வி அடைந்தார்.* இப்போது நாம் இரயில் புறப் பட்ட இடத்திற்கு வருவோம்.

---

* எம். பக்தவத்சலம் பேட்டி.

பழனியிலிருந்து புறப்பட்ட தனி இரயில் அக்கரைப் பட்டியில் வந்து நின்றது. அன்று அங்கு தான் காந்திஜி குழுவினர் இராப் பொழுதைக் கழித்தனர்.

அக்கரைப் பட்டி

அ தி கா லை யி ல் இரயில் புறப்பட்டு திருச்சிராப்பள்ளியை அடைந்தது.

4-2-46

திருச்சி தஞ்சை

பழனியிலேயே காந்திஜியின் மௌனம் தொடங்கி விட்டது. ஆலயத்திற்குச் சென்று வழிபட வேண்டியிருந்த தால்தான் அன்று வெகு நேரங் கழித்து மௌனத்தைத் தொடங்கினர். (இதனால் தான், மறுநாள் சாஸ்திரியைச் சந்தித்த போதும் அவருடைய மௌனம் முடியவில்லை.) திருச்சிக்கு வந்தபோதெல்லாம் அவர் மௌனமாக இருந்தார். சென்னையிலிருந்து மதுரைக்குச் சென்றபோது காணப்பட்ட கூட்டமாக, இப்போதிருந்த திருச்சிக் கூட்டம் இல்லை. அது மிகவும் அமைதியாக, காந்திஜியைப் போன்று "மௌனமாக" இருந்தது. காந்திஜியும் தரிசனங் கொடுத்துவிட்டுத் தஞ்சைக்குப் பயணமானார். வரும்போது கார்டு லைன் வழியில் வந்த தனி இரயில் இப்போது மெயின் லைன் வழியாகத் திரும்பிச் சென்றது. தஞ்சையில் சுமார் இலட்சம் மக்கள் கூடியிருந்து காந்திஜியைக் கண்டனர். காந்திஜியின் இரயில் கும்பகோணத்திற்கு வந்தபோது, அரசலாறில் முழங்கால் அளவுத் தண்ணீரில் மக்கள் நின்று கொண்டிருந்தனர். பாலத்தின் மீது தனி இரயிலில் நின்று காந்திஜி காட்சியளித்தார். டாக்டர் மகாலிங்கம் தலைமையில் ஏராளமான தொண்டர்கள் இருந்து கூட்டத்தை ஒழுங்குபடுத்தினர்கள். மாயவரம், சீர்காழி, சிதம்பரம், கடலூர் ஆகிய நகர்களிலும் பெருங் கூட்டமாக மக்கள் இருந்து காந்திஜியைக் கண்டனர். விழுப்புரம் கூட்டத்தில் மறுபடியும் குழப்பம்தான். இரயில் அங்கிருந்து புறப்படுவதே கடினமாகப் போய்விட்டது. அங்கிருந்து புறப்பட்ட இரயில் மைலம், திண்டிவனம், மதுராந்தகம் ஆகிய இடங்களில் நின்று திருமணி குஷ்ட நோயாளிகள் நிலையத்தின் அருகே (செங்கற்பட்டிலிருந்து 2 மைல் தூரத்தில்) உள்ள இரயில் சாலைச் சந்திப்பில் நின்றது.

குஷ்ட நோயாளிகளுக்கு அண்ணல் காட்சி அளித்தார். இப்பிணியாளர்கள் திரட்டிய நன்கொடையான 23 ரூபாயை அந்நோயால் வாடிய ஒரு குழந்தையே காந்திஜியிடம் அளித்தது. டி. என். ஜகதீசன், டாக்டர் டி. ஸ்லோன், டாக்டர் ராஜா ஆகியோர் இங்கு வந்திருந்து காந்திஜியை வரவேற்றனர். பின்னர் நோயாளிகளிடம், ''நான் புறப்படலாமா?'' என்று சமிக்ஞை மூலம் காந்திஜி கேட்டார். அவர்களும் ''சரி'' என ஒப்புக் கொள்ளவே, அவர்களுடைய இரு கைகூப்பிய வணக்கத்தை ஏற்றுக் கொண்டு இரயிலில் புறப்பட்டார். இந்த நிகழ்ச்சி காந்திஜியின் உள்ளத்தைத் தொட்டு விட்டது என்பது பின்னால் தெரிந்தது. டி. என். ஜகதீசனுக்கு எழுதிய கடிதத்தில் இந்நிகழ்ச்சியால் தாம் புனிதமடைந்ததாக அண்ணல் குறிப்பிட்டுள்ளார். ''மதுரைக்கும் பழனிக்கும் நான் கடவுள்களைத் தரிசிக்கப் போனேன். ஆனால் திருமணியிலோ கடவுள்களே என்னைக் காண வந்துவிட்டார்கள்'' என்று உருக்கமாகக் கூறியுள்ளார்.

திருமணி

தென்னப்பிரிக்காவில் பொது வாழ்வைத் தொடங்கிய இளம் வயதிலிருந்தே குஷ்ட நோயாளிகளுக்குத் தொண்டாற்றுவது அவருடைய உள்ளத்திற்கு இனித்த தொண்டுகளில் ஒன்றாய் இருந்து வந்திருக்கிறது. இந்தியாவிற்கு வந்தபின் அவர் வகுத்த நிர்மாணத் திட்டங்களில் குஷ்ட நிவாரணப் பணியையும் சேர்த்துக் கொண்டார். அனைத்து இந்தியாவிலும் இப்பணி சிறப்புற நடைபெறுவதற்கு உதவியது போலத் தமிழகத்திற்கும் உதவினர்.

தொழுநோய் தொண்டு

முதலில் தமிழகத்தில், குஷ்ட நிவாரணப்பணி என்பது, இந்தியாவின் பிறபகுதிகளில் இருந்ததைப் போன்றே கிறித்தவ மதப் பிரசாரகர்களால் ஒரு சிறு அளவில் நடைபெற்றுக் கொண்டு வந்தது. அது விரிவடைந்ததும், ஒரு இயக்கமாகப் பரவியதும் கஸ்தூரிபா நினைவு நிதி மூலமாக அண்ணல் அதற்கான முயற்சி எடுத்துக் கொண்டபோதுதான். 1944-இல் கஸ்தூரிபா நிதி அமைக்கப்பெற்ற போது தமிழ் நாட்டில் குஷ்ட நிவாரணத் தொண்டை மேற்கொண்டிருந்த டி. என். ஜகதீசனும் அப்பணியில் முன்னரே

கஸ்தூரிபா நிதி

தீவிரமாக ஈடுபட்டிருந்த பெயர்பெற்ற டாக்டரான காக்ர னும் இப்பணிக்கு நிதி உதவி பெறும் பொருட்டு காந்திஜி யைக் காணச் சேவா கிராமத்திற்குச் சென்றார்கள். அண்ணல் காட்டிய ஆதரவினாலும் கஸ்தூரிபா நிதி நிருவாகக்குழு அளித்த உதவியினாலும், குஷ்ட நோயால் பீடிக்கப்பெற்றிருந்த குழந்தைகளுக்கும் மாதர்களுக்கும் சிகிச்சை அளிப்பதற்கான நிலையம் ஒன்று தொடங்கப் பெற்றது.

இரட்டிப்புப் பாக்கியம்

டி. என். ஜகதீசன் ஒரு நாள் அண்ணலைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது, அண்ணல் ஜகதீசனிடம் கூறிய சொற்கள் அவருடைய கருணை உள்ளத்தைத் திறந்து காட்டின. ஜகதீசன் ஒரு உயர் பட்டதாரி; கல்லூரிப் பேராசிரியராக இருந்தவர். அவருக்குத் தொழுநோய் வந்து பின் அதிலிருந்து குணமானவர். அவரை நோக்கி காந்திஜி கூறினார்: ''ஜகதீசன், ஏதோ ஒரு ஆசையின் காரண மாக நீங்கள் இப்பணியை எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்று நான் நினைத்தேன். அந்த அளவு நான் பாக்கியம் செய்திருக்கிறேனே என்றும் எண்ணினேன். ஆனால் இப்போதோ நான் இரட்டிப்புப் பாக்கியம் செய்தவன் என்பது புலனுகிறது'' என்றார். என்னே, அண்ணலின் கருணை உள்ளம்! குஷ்ட நிவாரண சேவையில் ஜகதீசன் ஆற்றிய தொண்டை காந்திஜி மிகவும் பாராட்டி யிருக்கிறார்.

''மூட வருகிறேன்''

தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மழவந்தாங்கலில் முதன் முதலாக, குஷ்ட நிவாரணப்பணி நிலையம் தொடங்கப் பெற்றபோது, அதைத் திறந்து வைக்க வருமாறு காந்திஜியை ஜகதீசன் கேட்டுக் கொண்டார். ஆனாலும் காந்திஜி அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ''அதைத் திறந்து வைக்க யாராவது ஒருவரை அழைத்துக் கொள்ளுங்கள். ஒரு மருத்துவமனையைத் திறந்து வைப்பது பெரிதல்ல. அதை மூடுவதற்கு நான் வருகிறேன்!'' என்று அவர் பதிலளித்து விட்டார். இப்பணி மூப்பது அல்லது நாற்பது ஆண்டுகள் நீடிக்கலாம் என்று காந்திஜிக்கு ஜகதீசன் எழுதி னார். காந்திஜி இதை ஒப்புக் கொள்ளவில்லை. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள், இத்தகைய நோய்களைப் போக்கி விட முடியும் என்பது அவருடைய நம்பிக்கை.

திருமணியிலிருந்து புறப்பட்ட இரயில் செங்கற்பட்டில் அத்தாட்சிப் பள்ளி விளையாட்டு மைதானத்திற்கு அருகே நின்றது. காந்திஜி வந்த இரயிலில் இருந்த மேடைக்குச் சமமான உயரத்தில் இரயில்வே லன் ஒரத்தில் ஒரு மேடை போடப்பெற்றி ருந்தது. ஆகவே, காந்திஜி அந்த மேடைக்குச் சென்று நாற்காலியில் அமர்ந்து காட்சி அளித்தார். தாம்பரத்திலும் இதே போன்று ஒரு மேடையில் அமர்ந்து காட்சி அளித்துவிட்டு காந்திஜி புறப்பட்டார்.

செங்கற்பட்டு

இந்த இரயிலில் தலைவர்கள், காந்திஜி குழுவினர் ஆகியோரைத் தவிர மற்றும் சில அதிகாரிகளும் சென்றனர் என்பதை இங்கே குறிப்பிடவேண்டும். இந்தத் தனி இரயிலானது சென்னைப் பகுதியில் எழும் பூர் டி. டி. எஸ். ரஞ்சிட்சிங் பொறுப்பிலும், மதுரைப் பகுதியில் டி. டி. எஸ். கேசவவர்மா பொறுப்பிலும் இருந்தது. உணவு அளிக்கும் பொறுப்பில் எம். சீத்தாராமையா இருந்தார். இன்ஸ்பெக்டர் பெர் ஞன்டஸ் தலைமையின் கீழ்ப் பாதுகாப்பிற்காக 2 சப்-இன்ஸ் பெக்டர்களும் இருபது போலீசாரும் வந்து கொண்டிருந் தார்கள். இவர்கள் எல்லாம் தங்கள் தங்கள் பணியைத் திறம்படச் செய்திருந்தார்களாகையால் கிண்டியில் வந்து இறங்கியவுடன் இரயில்வே அதிகாரிகளுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் காந்திஜி நன்றி தெரிவித்துக் கொண் டார். ''இந்து'' நாளிதழ் எழுதிய கட்டுரையில் உதவி போக்குவரத்து சூபரின்டென்டெண்ட் மேனன், மின்சார இரயில் கட்டுப்பாட்டு அதிகாரி இராம சுப்பன், இரயில் டிக்கெட்டு வழங்கும் ஏற்பாடுகளைச் செய்த போக்குவரத்துத் தணிக்கை அதிகாரி சுவாமிநாதன் ஆகியோருடைய சேவை களைப் பாராட்டியிருந்தது. மதுரைக்குப் போய்த் திரும்பிச் சென்னைக்கு வரும் வரை காந்திஜி வசூலித்த அரிஜன நிதி சுமார் ரூ. 32,000 ஆகும்.

அதிகாரிகள் சேவை

சென்னை நகரில் கிண்டி இரயில் நிலையத்தில் மீண்டும் வந்திறங்கியபோது, காந்திஜி மிகவும் களைப்புற்றிருந்தார். அவர் அங்கிருந்து நேரே இந்துஸ்தானி நகரில் உள்ள சத்தியநாராயணுவின் இல்லத்திற்குச் சென்றார். பின்னர், தியாகராயா ரோடுக்கும் விஜயராகவாச்சாரி ரோடிற்கும் இடையே உள்ள பிரார்த்தனை மைதானத்திற்குப் புறப்பட்டார்.

பிரார்த்தனைக் கூட்டம்

தம் பேச்சை இந்துஸ்தானியில் எழுதிக் கொடுக்க அதைக் கனு காந்தி கூட்டத்தில் படித்தார். ''சாந்தி இல்லா சுய ராஜ்யம் பூரணமானதாகாது. ஆண்டவனுடைய அருள் இல்லாது சாந்தி கிட்ட முடியாது. பிரார்த்தனை இல்லாது ஆண்டவனுடைய அருள் கிட்டாது. அதனால்தான் பிரார்த்தனை செய்யும் பழக்கத்தை மேற்கொள்ளுமாறு கூறுகிறேன்,'' என்று காந்திஜி தம் உரையில் கூறினார்.

பலர் சந்திப்பு

பிரார்த்தனைக் கூட்டத்திலிருந்து காந்திஜி சத்திய நாராயண இல்லத்திற்குத் திரும்பி வந்து அங்குத் தங்கி யிருந்த ஒரு மணி நேரத்தில் பலர் அவரைச் சந்தித்துத் தங்களுடைய வணக்கங்களைத் தெரி வித்துக் கொண்டார்கள். இவர்களில் சகோ தரி சுப்புலெட்சுமி ஒருவர். ஆந்திராவில் அரிஜனத் தொண்டு செய்வதற்காகப் பெத்தாபுரம் மன்னர் அளித்த ரூ. 10,000-ஐ புலுசு சாம்பமூர்த்தி கொண்டு வந்து கொடுத்தார். ஜி. இராமபிரமம், வி. நாகையா, சௌந்தரராஜன், பி. சூரிய நாராயண, ஜயந்திலால் சோக்சி, காசியப்பச் செட்டி ஆகியோர், நகரில் உள்ள திரைப்பட உற்பத்தியாளர்களும் ஜவுளி வணிகர்களும் தென்னிந்தியா வில் இந்துஸ்தானிப் பிரச்சார வேலை நடைபெறுவதற்காக அளித்திருந்த ரூ. 27,751 நன்கொடையைக் கொண்டு வந்து கொடுத்தனர். மலேயாவில் இந்தியர்களின் சார் பாக வழக்காடுவதற்காகக் கே. பாஷ்யத்துடன் செல்ல விருந்த ஆர். வெங்கட்ராமன் காந்திஜியைச் சந்தித்து ஆசீர்வாதம் பெற்றார்.

புறப்பாடு

இவ்வாறு சென்னை வருகையையும் மதுரை, பழனி யாத்திரைகளையும் முடித்துக் கொண்டு, இன்று இரவு சத்திய நாராயணவின் இல்லமாகிய காந்தி நிவாசிலிருந்து மகாத்மா காந்தி காரில் புறப் பட்டார். இந்திப் பிரச்சார சபையையும் வெள்ளிவிழாவின் பல்வேறு குழுக்களையும் சேர்ந்தவர்களும் சில காங்கிரஸ் பிரமுகர்களும் பத்திரிகை யாளர்களும் ஒரு சில பெண்களுமாகச் சுமார் நூறு பேர் அங்குக் கூடியிருந்து அவரை வழியனுப்பினர். அவர் சென்ற காரில் தேவதாஸ் காந்தியும் சர். என். கோபால் சாமி ஐயங்காரும் கூடச் சென்றார்கள். அவருடைய தனி

இரயில் அம்பத்தூரில் நிற்பதென்றும் அங்கு காந்திஜி காரில் வந்து ஏறிக்கொள்வதென்றும் ஏற்பாடு செய்யப்பெற்றி ருந்தது. காந்திஜி வழியில் சீனிவாச சாஸ்திரி இல்லத் திற்குச் சென்று (இந்தச் சமயத்தில் அவர் வீடு திரும்பி விட்டார்) அவரைக் கண்டு பேசினார். சீனிவாச சாஸ் திரியை காந்திஜி சந்தித்தது பற்றி 'அரிஜனில்' வெளியான கட்டுரை வெகு அழகாகக் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

மௌனப் பேச்சு

'திங்கட்கிழமை, காந்திஜியின் மௌன தினம். இதைக் கண்டபோதுதான் சாஸ்திரியாருக்குப் பெரும் ஏமாற்ற மாகப் போய்விட்டது. ஆகையால் சாஸ்திரி யார் பேச காந்திஜி தம் பதிலைத் துண்டுக் காகிதங்களில் எழுதிக் காண்பித்துக் கொண் டிருந்தார். 'மதுரைப் பிரார்த்தனைக் கூட்டத் தில் 5 அல்லது 6 லட்சம் பேர் கூடியிருந்தார்கள்; அவர் களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் சுற்றுப்புறக் கிராமங் களிலிருந்து வந்தவர்கள்' என்பதை சாஸ்திரியார் கேட்டு மிகவும் வியப்படைந்தார்.

பேச முடியவில்லை

காந்திஜி வந்து அவரை மூன்று முறை பார்த்தது சாஸ்திரியாருக்குச் சொல்லொணாத மகிழ்ச்சியை அளித் தது. 'சகோதரரே, நீங்கள் எனக்கு அசா தாரணமான கௌரவத்தை அளித்திருக்கிறீர் கள். குறிப்பாக இம்முறை இவ்வளவு அவ சரத்திற்கு மத்தியில் நீங்கள் என்னை வந்து பார்த்தது மிகமிக அதிகமாக கௌரவம் அளித்ததாகும். என்னுடைய சொந்த சகோதரர்கள், குமாரர்கள், என் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைக் காட்டிலும் நீங்கள் எனக்கு நெருக்கமானவர், அன்பானவர்,' என்று சாஸ்திரியார் கூறிய போது உணர்ச்சி வயத்தினால் அவ ருடைய குரல் தழுதழுத்தது. அவர் பேசியது பக்கத்தில் இருந்தவர்களுக்குக்கூடக் கேட்கவில்லை. 'ஏதோ ஓர் ஆன் மிக உறவு நம் இருவரையும் இறுகப் பிணைத்திருக்கிறது. வேறு வெளிப்படையான காரணம் எதுவும் கூறமுடியாது. கோகலே இதற்கு ஒரு சாதனமாக இருந்தார், அவ்வளவு தான்.' இவ்வாறு கூறிக்கொண்டு அவர் காந்திஜியிடம் நெருங்கி வந்து குசு குசுவென்று, 'நான் வார்த்தைகளை வீணுக்கவில்லை. நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதான்' என்று சொன்னார்.

காந்திஜி அமைதியாக இருக்கும்படி கூறினார். விடை பெற்றுக் கொள்வதற்காக எழுந்துவிட்டார். ஏனென்றால் சாஸ்திரியார் உணர்ச்சி வயப்பட்டுப் பேசமுடியாமல் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தார்.

கடிகாரம்

காந்திஜி எழுந்தபோது அவர் இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த கடிகாரம் எப்படியோ சாஸ்திரியின் கண்களில் பட்டுவிட்டது. 'ஓ, உங்களுடைய இணை பிரியாத் தோழன்! நீங்கள்உங்களுடைய கடிகாரத்தைத் தொலைத்து விட்டதாகவும், அதை இனிமேல் ஒருகாலும் பயன்படுத்தப் போவதில்லையென்றும் யாரோ சொன்னார்களே?' என்று கேட்டார். பக்கத்தில் இருந்த டி. ஆர். வெங்கட்ராம சாஸ்திரி, 'அது பவுண்டன் பேனா, கடிகாரம் அல்ல,' என்று திருத்தினார். சாஸ்திரியார்: 'ஓ, இப்போதுதான் எனக்குத் தெரிகிறது. ஆனால், யாராவது ஒருவர் உங்களுடைய கடிகாரத்தைத் திருடிக் கொண்டால் அதைப் பயன் படுத்துவதையும் விட்டுவிடுவீர்களோ?' காந்திஜி சிரித்தார். கடிகாரம் இல்லாமல் இருக்க முடியாது என்பதற்குஅடையாளமாகத் தலையை அசைத்தார். எல்லோரும் சாஸ்திரியாரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டனர்.'[1]

வெற்றி

மதுரைக்கும் பழனிக்கும் காந்திஜி போய்விட்டு வந்த சுற்றுப்பயணம் மகத்தான வெற்றியாக முடிந்தது. இந்தச் சமயத்தில் நாம் மொத்தமாக இந்த வருகையைக் குறித்து ஒரு பொதுவான கண்ணோட்டம் விடுவது அவசியம். ''காந்திஜி எந்த இடத்தில் இருக்கிறாரோ அந்த இடத்தில் தான் இந்தியாவின் உண்மைத் தலைநகரம் இருக்கிறது,'' என்று ஜான் கந்தர் என்ற பெயர் பெற்ற அமெரிக்க நூலாசிரியர் எழுதியது இம்முறை தமிழகத்தில் அதிகம் உண்மையாக இருந்தது. அன்னை கஸ்தூரிபாவை இழந்த பின் அண்ணல் சென்னைக்கு வந்த முதல் சுற்றுப்பயணம் இது. பஜாஜ் இறந்த பின்அவர் அடிச்சுவட்டில் ஜானகி பஜாஜ் இவ்விழாவிற்கு வருகை புரிந்து எல்லா ஏற்பாடுகளையும் கவனித்து உதவினர். இந்திப் பிரச்சார சபை விழாவில் பந்தல் போடுவது போன்ற வேலைகளைச் சபையின் பொது நிருவாகியான மகாலிங்கம் திறம்படச் செய்திருந்தார். இந்திப் பிரச்சார சபைக்குள் நடந்த கூட்டங்

கள் தவிர காந்திஜி வேறு அலுவல்கள் வைத்துக் கொள்ளாததால் (ஒரு கூட்டம் மட்டும் விதிவிலக்காக இருந்தது) தம்முடைய 'பழைய நண்பர்கள்' பலரை அவர் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் கிடைத்தது.

நிதி வசூல்

தட்சிணபாரத் இந்திப் பிரச்சார சபையின் வெள்ளி விழாவையொட்டி, சென்னை மகாஜன சபை தியாகராய நகரில் ''சேவாகிராம நிர்மாணத் திட்டப் பொருட்காட்சி'' என்ற பெயரில் ஒரு பொருட் காட்சியை நடத்தியது. இந்தப் பொருட் காட்சியில் பல கிராமக் கைத்தொழில் சங்கங்கள் பங்கு பெற்றன. அண்ணலின் பிரார்த்தனைக் கூட்டங்களில் நாளுக்குநாள் அரிஜன நிதிவசூல் அதிமாகிக்கொண்டே வந்தது. சராசரியாக ஒவ்வொரு நாளும் சுமார் எண்ணூறு ரூபாய் வசூலாயிற்று என்று சொல்லலாம். கையில் பணம் கொண்டு வராதவர்கள் மோதிரம், தோடு முதலியவைகளைக் கழற்றிப்போட்டார்கள். காந்திஜியிடம் அரிஜன நிதிக்காக வழங்கப் பெற்ற பொருள்கள் எல்லாம் சேவாகிராமப் பொருட்காட்சியில் ஒவ்வொன்றின் மீதும் விலை குறிப்பிடப்பெற்று விற்பனைக்காக வைக்கப்பெற்றன. இவைகளில் வைர நகைகள், தங்க, வெள்ளி ஆபரணங்கள், சந்தனக்கட்டைகளால் ஆன வேலைப்பாடு மிக்க பொருள்கள் ஆகியவையும் இருந்தன.

தங்கிய இல்லம்

காந்திஜி இம்முறை இங்கு வந்தபோது முதலில் இந்துஸ்தானிப் பிரச்சார சபையின் செயலாளராகிய சத்தியநாராயணுவின் இல்லத்தில்தான் இருந்தார். ஆனால் பின்னர் அவரைச் சந்திக்க வந்த கூட்டத்தைக் கண்டபோது, அந்த வீடு தாளாது என்று கருதி அதற்கு நேரே சுற்றுச் சுவருக்கு அப்பால் உள்ள மங்களவன் மாடியில் அவர் தங்குவதற்கு ஏற்பாடு செய்தனர். அவருடன் வந்த குழுவினர் அதே வீட்டில் கீழே தங்கினர்கள். இந்துஸ்தானிப் பிரச்சார சபையின் சுற்றுச் சுவரில் ஓரிருவர் நடந்து செல்வதற்கான அளவு இடித்து நடைபாதை விடப்பெற்றது. ஒரு யாத்திரையை அல்லது செயலை காந்திஜி மேற்கொண்டாரானால் எந்தக் குறிக்கோளுக்காக அது மேற்கொள்ளப்படுகிறது என்பதை முதலில் முடிவு செய்து அந்தக் குறிக்கோளிலேயே கண்ணுக இருப்பார் என்பது

வேறு எந்த வருகையையும்விட இவ்வருகையின் போது அதிகம் தெரிந்தது. இந்துஸ்தானிப் பிரச்சாரசபை வெள்ளி விழா நடைபெற்றவரை அவர் எந்தக் கூட்டத்தில் பங்கு கொண்டாலும் இந்துஸ்தானி கற்கவேண்டிய அவசியத் தையே வலியுறுத்தி வந்தார். மதுரைக்குப் புறப்பட்ட போதோ வழியெல்லாம் தீண்டாமை ஒழிப்பைப் பற்றித் தான் அவருடைய பேச்சு இருந்தது.

குழப்பம் கூச்சல்

பொதுவர்கப் பார்க்கும்போது, காந்திஜி நடத்திய அத்தனை பிரார்த்தனைக் கூட்டங்களிலும் கூட்டம் அதிகம் தான். நாளுக்கு நாள் கூட்டம் அதிகமாகிக் கொண்டே போயிற்று. அநேகமாக இப்பிரார்த் தனைக் கூட்டங்களில் ஒவ்வொரு நாளுமே ஏதாவது குழப்பம் இருந்து கொண்டுதான் இருந்தது. குழப்பமில்லாது கூட்டத்தை நடத்த காந்திஜி எவ்வளவோ முயற்சி செய்தார்; மக்களை அவர் மன்றாடி வேண்டிக் கொண்டார்; தம் திறமையை எல்லாங் காட்டி அற்புதமான அறிவுரைகளைக் கூறிக் கூட்டத்தை அமைதிப் படுத்த முயன்றார். படிப்படியாக ஒரு நாளுக்கு ஒரு நாள் சிறிது முன்னேற்றமும் தென்பட்டது. ஆனாலும் கூட்டத் தில் முழு அமைதி ஏற்படவில்லை. ஒருநாளோ, கூட்டம் முடிந்து மக்கள் திரும்பிச் சென்றபோது குழந்தைகளும் பெண்களும் கூட்டத்தில் சிக்கி மிதிபட்டு மயக்கம் அடைந்து விட்டனர்.

மதுரையில் வெடித்தது

ஆகவே மதுரையில் கூடியிருந்த அந்தப் பிரம்மாண்ட மான கூட்டத்தில், தொர்டர்ந்து மக்கள் அமைதியின்றி யிருந்தது காந்திஜிக்குப் பதட்டத்தை ஏற்படுத் தியதில் வியப்பே இல்லை. பொறுமையின் திருவுருவான அவரும் பொறுமை இழந்ததற் குச் சென்னையில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டங்களில் தொடர்ந்து நாள்தோறும் கூச்சலும் குழப்ப மும் இருந்ததும் மதுரைக்கு வந்த வழியில் விழுப்புரம், திருச்சி ஆகிய நகர்களில் குழப்பம் இருந்ததும் முக்கிய காரணங்கள் என்பதில் ஐயமில்லை.

இதற்கு முன்பும் காந்திஜியின் ஒரு கூட்ட ' ரிக்கார்டை அதற்கடுத்த காந்திஜி கூட்டம் தான் தோற்கடிக்கும். தரணியின் ஈடில்லா அந்தத் தலைமகன் தமிழ் இனத்தவர்

மீது காட்டிய அன்பும் அத்தகையது; தரணியின் மூத்த குடிமக்களான தமிழர்கள் அத் தலைமகனிடங் காட்டிய பக்தியும் ஈடில்லாதது. ஆனாலும் இம்முறை கூடிய கூட்டத்திற்கும் மற்ற கூட்டங்களுக்கும் ஒப்பீடே இல்லை. சென்னையிலிருந்த போது இரயில்களெல்லாம் தியாகராயநகரை நோக்கி ஓடிய வண்ணமாய் இருந்தனவோ என்று ஐயுறும் அளவிற்கு அத்தனை தனி இரயில்கள் விடப்பெற்றிருந்தன; ஒவ்வொரு மணிக்கும் ஆயிரக்கணக்கில், ஏன், பதினாயிரக் கணக்கில் கூட மக்கள் வந்துகொண்டிருந்தார்கள். 25-1-46ஆம் தேதியன்று பிற்பகல் இரண்டு மணியிலிருந்து நாலரை மணிக்குள் இருபதாயிரம் மக்கள் தியாகராயநகருக்கு விடப்பெற்ற மின்சார இரயில்களில் பயணம் செய்திருந்தார்கள் என்று கணக்கிடப் பெற்றது. இரயில் டிக்கெட் கொடுக்கும் அலுவலகம் விழாப்பந்தலுக்கே வந்துவிட்டது.

ஈடு இல்லை

''மகாத்மா காந்தியுடன் இதற்குமுன் பல சுற்றுப் பயணங்களில் நான் சென்றிருக்கிறேன் என்றாலும், இதைப் போன்று மக்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்ந்த காட்சியை நான் கண்டதேயில்லை. இன்று இந்து மதம் வலுப் பெற்றிருக்கிறது,'' என்று ராஜாஜி இச்சுற்றுப்பயணத்தின் முடிவில் கூறினார். காந்திஜியோ, ''பிரார்த்தனையின் முக்கியத்துவத்தை இந்தச் சுற்றுப்பயணத்தில் உணர்ந்தது போல் வேறு ஒரு போதும் நான் உணர்ந்ததில்லை. நாளையிலிருந்து இராம் பஜனைப் பாடலைப் பிரார்த்தனைக் கூட்டத்தில் பாடுமாறு நான் கனு காந்தியிடம் கூறியிருக்கிறேன்'' என எழுதினர்.

காந்திஜி ஒப்பம்

மதுரைக்குத் தாம் செல்வதற்காகத் தனி இரயில் எதுவும் விடவேண்டாமென மகாத்மா கூறத்தான் செய்தார். ஆனாலும் இரயில்வே அதிகாரிகள் தாம் விடாப் பிடியாக மகாத்மா தனி இரயிலில் செல்ல வேண்டுமென்பதில் கண்ணுங் கருத்துமாயிருந்தார்கள். பயணிகள் செல்லும் சாதாரண ரெயிலிலோ எக்ஸ்பிரஸ் இரயிலிலோ மகாத்மா செல்வதாக இருந்தால், குறிப்பிட்ட நேரத்தில் பயணிகள் ஊருக்குச் செல்ல முடியாது என்பது மட்டுமல்லாது பயணிகளுக்கு வழியில் கூடும் கூட்டத்தினரால் பெருந்

தனி இரயில்

தொல்லைகள் ஏற்படும் என அவர்கள் அஞ்சினார்கள். மேலும் அந்த இரயிலில் பயணம் செய்ய முன்வரும் கூட்டத்தையும் தாளமுடியாது. அதனால்தான் அவர்களே முன் வந்து மகாத்மா தனி இரயிலில் தான் செல்ல வேண்டுமென்று பிடிவாதமாக வலியுறுத்தினார்கள். இந்த இரயிலில் மூன்றாவது வகுப்பு மட்டும்தான் இருக்கவேண்டுமென்று மகாத்மா கூறிய நிபந்தனையை அவர்கள் ஒப்புக் கொண்டிருந்தாலும் முதல் வகுப்பில் இல்லாத வசதிகளெல்லாம் அதில் செய்து கொடுத்தார்கள். அதனால் தான் மதுரைக்குச் சென்ற வழியிலும் பழனியிலிருந்து திரும்பிய வழியிலும் காந்திஜியும் அவருடைய குழுவினரும் இரயிலிலேயே வசதியாகத் தூங்க முடிந்தது. மேலும், பழனியில் பொதுக் கூட்டம் நடைபெற்ற இடமும் இரயில்வேக்குச் சொந்தமான மைதானம் தான். இவ்வாறு இந்தப் பயணத்தில் இரயில்வேத்துறை மட்டுமல்லாது மற்ற அரசாங்கத் துறைகளின் ஒத்துழைப்பும் போற்றத் தக்கதாக இருந்தது. மகாத்மாவின் பெருமையை அவர்கள் உணர்ந்தது மட்டுமல்லாது, விடுதலை வரப்போகும் சமிக்ஞையை அறிந்திருந்ததும் இதற்குக் காரணங்களாக இருந்திருக்கலாம். ஆனாலும் பின்னதைக் காட்டிலும் முன்னதே முக்கிய இடம் வகித்தது என்பதில் ஐயமில்லை.

பார்க்க ஆவல்

காந்திஜியைக் காணவேண்டுமென்ற ஆசை மக்கள் உள்ளத்தில் கரைபுரண்டோடியது. மதுரையில் குறிப்பிட்ட சிலர் தான் அவர் தங்கியிருந்த சிவகங்கை மாளிகைக்குள் செல்ல அனுமதிக்கப் பெற்றார்கள். தேசியத்திற்கும் காந்தியத்திற்கும் தியாகம் செய்த என். எம். ஆர். சுப்பராமன் குடும்பமும் சிறந்த தொழில் திறனுக்கும் உயர்ந்த ஆற்றலுக்கும் பெயர் பெற்றதும் காந்தியவாதியான சௌந்தரம் இராமச்சந்திரனை அளித்ததுமான டி. வி. சுந்தரம் ஐயங்கார் குடும்பமும் மட்டும் தான் காந்திஜியைக் குடும்பமாகச் சென்று காண வாய்ப்பு அளிக்கப் பெற்றவையாகும். எத்தனையோ பேர் காந்திஜியைக் காண வேண்டுமென்று அவரை வரவேற்கும் பொறுப்பில் இருந்தவர்களைக் கெஞ்சி வேண்டிக் கொண்டார்கள்! ஒருவர், சிவகங்கை மாளிகைக்குள் சென்று காந்திஜியைக் காணத் தம்மை அனுமதிப்பதாக இருந்தால் ஆயிரம் ரூபாய் தரவும் முன் வந்தார் எனில் அப்பூமானைக் காண மக்களுக்கிருந்த ஆவலை என்னவென்று இயம்புவது!*

* என். எம். ஆர். சுப்பராமன் பேட்டி.

இப்படியெல்லாம் விரும்பியவர்கள் பலர் இருக்க ஓர் அரிஜனத் தோட்டிக்குக் கிடைத்த பெரும்பேறு வேறு யாருக்கும் கிடைத்திருக்காது எனக் கூறலாம். காந்திஜியின் வேலைகளைக் கவனிப்பதற்காக நியமிக்கப் பெற்ற இந்தத் தோட்டியுடன் அவர் தமிழில் பேசி அவனுடைய நலனைப்பற்றி அன்புடன் விசாரித்திருக்கிறார்.*

ஆத்திகர் நம்பிக்கை

மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்திற்கும் பழனி யாண்டவர் மலைக்கும் காந்திஜி வந்து சென்றதில் இங்குள்ள ஆத்திகப் பெருமக்களுக்கெல்லாம் மிகவும் மகிழ்ச்சி. விரைவில் விடுதலை வந்து விட்ட தையும் இதையும் இணைத்துப் பல பக்தர்கள் பின்னால் பேசினார்கள். பழனி மலையில் கோவிலுக்குள் காந்திஜி நுழைந்த போது ஒரு சேவல் மூன் மண்டபத்தின் மேலேயிருந்து கூவியதாகவும் இது ஒரு நல்ல சகுனம் என்றும் சிலர் கூறினார்கள். இதை ஒரு பக்தர் படமாகவே எழுதி வெளியிட்டார். காந்திஜி உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லாதவர் என்பது உலகம் அறிந்த ஓர் உண்மை. ஆனாலும் இத்தகைய பெரிய கோவில்களில் ஒன்றுமே இல்லை என்று கூறும் அளவிற்கு அவர் நாத்திகரல்ல. ஸ்ரீ மீனாட்சியம்மன் ஆலயத்திற்குள் சுற்றி வந்த போது தன்னை மறந்த நிலையில் அவர் இருந்ததைக் கண்டவர்கள் அந்தக் கோவிலில் அவர் ஏதோ ஒன்றைக் கண்டிருக்க வேண்டும் என்றுதான் கூறுவார்கள். ''மதுரையில் ஸ்ரீமீனாட்சியம்மன் ஆலயத்தில் வழிபட்டபோது ஒரு புது ஆன்மிக முக்கியத்துவத்தை நான் உணர்ந்தேன். (Gandhiji said that while in the temple he had realised a new spiritual significance—Hindu dated 4-2-46)'' என்று அண்ணாலும் கூறியிருக்கிறார். ஆலயங்களில் வழிபடுவோருக்கு அரிஜனங்களைக் குறித்து மனமாறுதல் ஏற்பட வேண்டும், இல்லையேல் வழிபாட்டால் பயனில்லை என்ற உண்மையை அவர் உணர்ந்தாரா? அல்லது இதற்கு மேம்பட்ட ஆன்மிக உணர்வு எதுவும் அவருக்கு உண்டாயிற்று? ஏனெனில் முதலில் கூறிய அந்த உணர்வு மீனாட்சி சொக்கநாதர் திருக்கோயிலுக்கு வருவதற்கு முன்பே அவர் உணர்ந்த ஒன்று தானே? ஒருவேளை அறிவு பூர்வமாக அவர் அறிந்திருந்த இந்த உண்மையை ஆன்மிக பூர்வமாக ஸ்ரீ மீனாட்சி ஆலயத்தில் அவர் உணர்ந்தாரோ? பழனி ஆலயத்திற்கு வந்ததைப் பற்றி அவர் தீட்டியிருந்த கட்டுரை

* பி. என். இராமசுப்ரமணியம் பேட்டி.

யையோ ''விடுதலைக்கு இது ஒரு சுபசகுனம்'' என்று அவர் முடித்திருந்தார். ஆகவே இந்த இரண்டு ஆலயங்களுக்கும் வந்து போனதில் அண்ணலுக்கும் என்றுமில்லாத ஒரு மகிழ்ச்சியும் மன நிறைவும் இருந்தது என்றே தோன்றுகிறது.

தமிழக தனிப்பேறு

இதில் அதிக மகிழ்ச்சிக்கு இடம் தரக்கூடிய ஒரு பேருண்மை என்னவென்றால், தமிழகத்திலேயே ''அடிமைகள் சேவை''யைத் தொடங்கிய தாகக் கூறிய தயாநிதி, அந்த அடிமை விலங்கு அறுபடப்போகிறது என்பதையும் முதன் முதலாகத் தமிழகத்திலேயே அறிவித்தார் என்பது தான். இதைக் காட்டிலும் ஒரு பெரிய சிறப்புத் தமிழகத்திற்கு வேறு என்ன வேண்டும்? தமிழகத்தின் பெருமையே பெருமை! தமிழகம் வாழ்க! என்றுமுள தென்றமிழ் இந்த அவதாரப் பெருமகனின் பெருமையை இயம்பி இசை கொள்க!!

பழைய காட்சி

ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு நாகரிக இளைஞராக நறுக்கு மீசையுடனும் முறுக்கான சூட், கோட்டுடனும் வந்த இளந் தலைவரான பாரிஸ்டர்-அட்-லா மோகன் தாஸ் காந்தி நம் மனக்கண்ணில் தோன்றுகிறார். அதற்குப் பின்பு பல்வேறு ஆண்டுகளில் பல்வேறு முறை வந்த காந்திஜி- படிப்படியாக மாறிக்கொண்டு வந்த காந்திஜி - படிப்படியாக உயர்ந்து கொண்டு வந்த காந்திஜி-நம் மனக் கண்ணில் தோன்றுகிறார். இப்போது இந்தி விழாவிற்காகவும் இந்துக்களை ஒன்றுபடுத்திய ஆலய வழிபாட்டிற்காகவும் வந்த காந்திஜி அம்பத்தூர் இரயில் நிலையத்தில் நிற்கிறார். 1896 எங்கே, 1946 எங்கே? எத்தனை மாற்றங்கள் காந்தி வாழ்க்கையில்? எத்தனை மாற்றங்கள் தமிழக வாழ்வில்! குன்றனைய வந்த ஒருவர் மலையனைய வராக உயர்ந்துள்ளார்; நம்மை உயரத் தூக்கி நிறுத்தினார்; அவர் உயர்வுக்கு நாமும் சற்றுக் காரணமாக இருந்திருக்கிறோம். இதில் அவருக்கும் பெருமை உண்டு, நமக்கும் பெருமை உண்டு. அவர் இதோ நம் தெய்வத் திரு மண்ணிலிருந்து விடைபெற்றுக் கொள்ளப் போகிறார்.

காந்திஜி அம்பத்தூர் இரயில் நிலையம் வந்து சேர்ந்த போது அங்குச் சுமார் இருநூறு மக்கள் கூடிவிட்டார்கள்.

அங்கிருந்த மக்கள் ''காந்திஜிக்கு ஜே'' என்று முழக்க மிட்டார்கள். சிலர் அவருடைய காலில் விழுந்து வணங்கி னார்கள். இரயில் நிலையத்தில் காந்திஜியை வழியனுப்ப வந்தவர்கள் கண்களில் நீர்துளிக்க அவரிடமிருந்து பிரியாவிடை பெற்றுக் கொண் டனர். தேவதாஸ் காந்தி விடை பெற்றுக் கொள்ள வந்த போது, தம் ஆசீர்வாதத்தைத் தெரிவிக்கும் முறையில், அவருடைய கன்னத்தை காந்திஜி தட்டிக் கொடுத்தார். இரயில் புறப்படும் தருணம்; மறுபடியும் ''காந்திஜிக்கு ஜே'' என்ற பெரும் முழக்கம்; அத்தெய்வத் திருப்பாதங்கள் அம்பத்தூர் மண்ணிலிருந்து இரயிலில் அடி எடுத்து வைத்தன.

விடை பெற்றார்

இம்முறை தமிழகத்திலிருந்து சென்றவர்தாம் மகாத்மா மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி. அப்புறம் அவர் இங்குத் திரும்பவேயில்லை.

எவ்வுயிர்க் குயிராம் ஈசன் இணையடி வாழ்க ஐயன்
செவ்விய வடிவமர்குந் திருவருள் இயற்கை வாழ்க
அவ்விரு தொடர்பு கண்ட அடிகளார் காந்தி வாழ்க
இவ்வுலகெங்கும் அன்னர் எழில் நெறி வாழ்க வாழ்க!

—திரு. வி. க.

—oOo—

அனுபந்தம்

மகாத்மா எந்த ஊருக்கு எப்போது வந்தார்?

1896 வருகை

அக்டோபர் 14 (புதன்)—சென்னை வந்து சேருதல் அக்டோபர் 26—சென்னை இந்து பிரம்மஞ்ஞான உயர்நிலைப் பள்ளியைப் பார்வையிடல்; மாலை—பச்சையப்பன் மண்டபத்தில் பொதுக்கூட்டம். அக்டோபர் 27 மாலை—சென்னையிலிருந்து கல்கத்தாவிற்குப் புறப்பாடு.

1915 (கஸ்தூரிபாவுடன்)

17-4-15 (சனிக் கிழமை) மாலை 6-15 — (ஹரித்துவாரி லிருந்து) சென்ட்ரல் இரயில் நிலையத்தில் இறங்கினர். பெசண்ட் காந்திஜியைச் சந்தித்துப் பேசினர்.

18-4-15—முக்கியமானவர்களைச் சந்தித்துப் பேசினர்.

19-4-15—மேலும் பலரைச் சந்தித்துப் பேசினர்.

20-4-15 காலை 11-00—ஜி. சுப்பிரமணிய ஐயர் இல்லம் சென்றார். பிற்பகல்—கோகலே கிளப் உறுப்பினர்களுடன் உரையாடல்.

21-4-15 மாலை—தென்னப்பிரிக்க இந்தியலீக் சென்னைக் கிளையின் சார்பாக வரவேற்பு.

22-4-15 மாலை—காஸ்மாபாலிடன் கிளப் வரவேற்பு.

23-4-15 மாலை 5-30—மகாஜன சபை, மாநில காங்கிரஸ் குழு கூட்டு வரவேற்பு.

24-4-15 மாலை 6-00—கஸ்தூரிபா காந்திக்கு மாதர்கள் வரவேற்பு. மாலை 6-15—சென்னை மாநில முஸ்லிம்லீக் தேநீர் விருந்து. இரவு 8-00—வழக்கறிஞர்கள் விருந்து (லாடின்னர்)

25-4-15 காலை 10-00—போராக்கள் வரவேற்பு. பிற்பகல் 2-30—அபேத ஐக்கிய ஆனந்த சமாஜத்தைச் சேர்ந்த பெண்கள் வரவேற்பு. பிற்பகல் 3-30—மைலாப்பூர் சமூக சேவா சங்கக் கூட்டம். மாலை 6-00—ஆர்ய வைசிய மகாசபை வரவேற்பு.

26-4-15 மாலை—எஸ். சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் வரவேற்பு. மாலை—இந்தியக் கிறித்தவர்களின் வரவேற்பு.

27-4-15 காலை—ஸ்ரீ இராமகிருஷ்ண மாணவர் இல்லம், வெங்கட்ரமண ஆயுர்வேத மருத்துவமனை, சமஸ்கிருத கல்லூரி (எல்லாம் மைலாப்பூரில் உள்ளவை) ஆகியவைகளைப் பார்வையிடல். மாலை 5-30—கஸ்தூரிபாவுக்கு லேடீஸ் ரெக்ரியேஷன் இளப் வரவேற்பு. மாலை 5-30—ஒய். எம். சி. ஏ. கட்டிடத்தில் மாணவர் வரவேற்பு. மாலை 6-15—அதே கட்டிடத்தில் பட்டதாரிகள் சங்க வரவேற்பு.

28-4-15 காலை—பச்சையப்பன் கல்லூரி ஆசிரியர்களுடன் உரையாடல். நகராண்மைக் கழக மாதிரி அரிஜனக் குடியிருப்பு, பிராட்வே தனியார் அரிஜனக் குடியிருப்பு, வண்ணரப்பேட்டையில் உள்ள நெசவு, சாயத் தொழிற்சாலை, ராவ்பகதூர் பி. தியாகராயச் செட்டியாரின் நெசவாலை ஆகியவைகளைப் பார்வையிடல். மாலை 6-00—அன்னிபெசண்ட் வரவேற்பு, (பிரமஞ்ஞான சங்கக் கட்டிடம்).

29-4-15 பிற்பகல் 2-00—தம்புச் செட்டித் தெரு இலட்சுமி ஞாபகர்த்த ஆர்யப் பாடசாலை வருகை. மாலை 6-00—லாட் கோவிந்த தாஸ் இல்லத்தில் குஜராத்திகள் வரவேற்பு. இரவு 8-20—தூத்துக்குடி எக்ஸ்பிரசில் தரங்கம்பாடிக்குப் புறப்பாடு (வி. எஸ். சீனிவாச சாஸ்திரியுடன்).

30-4-15 காலை— மாயவரத்தில் இறங்கினர். செம்மனூர் கோவில் வருகை. காலை 9-30—தரங்கம்பாடி வருகை. மாலை 5-00—கோட்டை மைதானத்தில் வரவேற்பு.

1-5-15 காலை—இராமபுரம், திலையாடி பயணம். மதியம்—மாயவரத்திற்குப் புறப்பாடு. பிற்பகல் 3-00—மாயவரம் சேருதல்; மாயவரத்தில் வரவேற்பு. இரவு—சென்னைக்குப் புறப்பாடு.

2-5-15 காலை—சென்னை வருதல். மாணவர்கள் சந்திப்பு.

3-5-15 மதியம்—சாஸ்திரியார் வீட்டில் விருந்து. மாலை—நெல்லூருக்குப் புறப்பாடு.

4,5,6-5-15—நெல்லூரில்

7-5-15 காலை 9-00—சென்னை சேர்ந்தார். மாலை 5-00—தென்னப்பிரிக்க இந்தியர் லீக் கூட்டம். மாலை 6-30—சுகுண விலாச சபை நாடகம் பார்த்தார். இரவு 8-30—பெங்களூருக்குப் புறப்பாடு.

1916

13-2-16—ஞாயிறு பிற்பகல் 2.30 டில்லி எக்ஸ்பிரசில் சென்னை வருகை. ...எஸ் சீனிவாச ஐயங்கார், ஜி ஏ நடேசன் சந்தித்துப் பேசினர்.

14-2-16—இரவு 8-00 கிறித்தவ மதப் பிரசாரகர் மாநாட்டில் சுதேசி பற்றிச் சொற்பொழிவு.

15-2-16—மதியம் 12-00 விக்டோரியா ஹாஸ்டல் மாணவர்களுக்குப் பேட்டி.

16-2-16—காலை 6-00 விக்டோரியா ஹாஸ்டல் மாணவர்கள் கூட்டம். காலை 8-00 ஒய். எம். சி. ஏ மண்டபத்தில் சொற்பொழிவு. மாலை 6-00 சென்னை சமூக சேவா சங்க ஆண்டு விழா, மாணவர்கள் வரவேற்பு.

17-2-16—மாலை 5-30 கிறித்தவக் கல்லூரி சங்கங்கள் கூட்டு ஆதரவில் விவாத அரங்கிற்குத் தலைமை தாங்கினர். இரவு புனிவிற்குப் புறப்பாடு.

1917

14-9-17—காலை சென்னை வருகை.

15-9-17—இரவு சென்னையிலிருந்து புறப்பாடு.

1919

18-3-19(செவ்வாய்)—காலை 9-45 பம்பாய் மெயிலில் சென்னை வந்தார். மாலை 5-30 பொதுக் கூட்டம். இடம்—திருவல்லிக்கேணி கடற்கரை.

19.3-19—மாலை சென்னை தொழிலாளர் சங்கக்கூட்டம்.

20-3-19—மாலை 5-30 பொதுக் கூட்டம். இடம்: திருவல்லிக்கேணி கடற்கரை.

21-3-19—காலை 8.00 டிராம் தொழிலாளர்கள் சந்திப்பு.

23-3-19—முக்கிய பிரமுகர்கள் கூட்டம். எதிர்கால வேலைத் திட்டம் பற்றிச் சந்திப்பு. (22-ஆம் தேதி இரவு 23-ஆம் தேதி காலையில் தான் அவர் அந்த "முக்கிய கனவை"க் கண்டார்). இரவு—தஞ்சைக்குப் புறப்பாடு.

24-3-19—தஞ்சை வருகை...பொதுக் கூட்டத்தில் சொற்பொழிவு.

25-3-19—காலை தஞ்சையிலிருந்து புறப்பாடு. காலை—போட் மெயிலில் திருச்சிக்கு வருகை. மாலை 6.00 பொதுக்கூட்டம்.

26-3-19—காலை போட் மெயிலில் மதுரைக்குப் புறப்பாடு. பிற்பகல் மதுரை வருகை. மாலை மதுரைக் கல்லூரி மைதானத்தில் பொதுக்கூட்டம். இரவு தூத்துக்குடிக்குப் புறப்பாடு.

27-3-19—காலை தூத்துக்குடி வருகை. மாலை ஊர்வலம், பொதுக் கூட்டம்.

28-3-19—காலை தூத்துக்குடியிலிருந்து புறப்பாடு: மதியம் மதுரை வந்து இரயில் மாறி நாகைக்குப் புறப்படுதல். இரவு 9-00 தஞ்சை சேருதல்.

29-3-19—காலை 7-00 நாகைக்குப் புறப்பாடு. (சாலிமங்கலம், கும்பயநத்தம் வழி.)

30-3-19—மாலை (நாகையிலிருந்து சென்னை வந்து) உடனே பெஜவாடாவிற்குப் புறப்பாடு.

1920

12-8-20—(வியாழன்) காலை 9-30 பம்பாய் மெயிலில் சென்னை வருகை. செய்தியாளருக்குப் பேட்டி. மாலை 5-50 பொதுக் கூட்டம்.

13-8-20—காலை கிலாபத் இயக்க நடவடிக்கை பற்றி ஆலோசனைக் கூட்டம்.

14-8-20—காலை ஆம்பூர் வழியாக வேலூருக்குப் பயணம். காலை வடஆர்க்காடு மாவட்ட கிலாபத் மாநாடு; மாலை 5-30 வேலூர் சேருதல். மாலை 6.00 பொதுக் கூட்டம். இரவு மெயில் இரயிலில் சென்னைக்குப் புறப்பாடு.

15-8-20 அதிகாலை 4-00 சென்னை திரும்பி வருதல். மாலை 6-00 தொழிலாளர் பொதுக் கூட்டம். இடம்: ஜார்ஜ் டவுன் கடற்கரை. இரவு குடந்தைக்கு இரயிலில் புறப்பாடு.

16-8-20—காலை 6.15 குடந்தை வருகை. காலை 6.30 மகாத்மா காந்தியும் மௌலானவும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பெற்றனர். காலை 7-30 பொதுக்கூட்டம்...பாபநாசம், நீடாமங்கலம். மாலை 4-30 நாகை வருகை. மாலை 5-15; நாகூர் வருகை...பொதுக்கூட்டம்.

17-8-20—காலை...நாகையிலிருந்து புறப்பாடு. காலை 10-30 தஞ்சாவூர் சேருதல். காலை 11-00 பொதுக்கூட்டம். மதியம் 12-00 தஞ்சையிலிருந்து புறப்பாடு. பிற்பகல் 1-45 திருச்சி சேருதல். பிற்பகல் 3-00 ஊழியர், பிரமுகர் கூட்டம். பிற்பகல் 4-30 ஊர்வலம் (பாலக்கரையிலிருந்து சௌக்மைதானம் வரை). மாலை 6-00 பொதுக் கூட்டம். இரவு 10-00 கள்ளிக் கோட்டைக்குப் புறப்பாடு.

18-8-20—அதிகாலை 3-30 ஈரோடு வருகை. இரயில் நிலையத்திலேயே கூட்டம். காலை 6-30 காலை உணவுக்குப் பின் கள்ளிக்கோட்டைக்குப் புறப்பாடு. பிற்பகல் 2-30 கள்ளிக் கோட்டை சேருதல்.

19-8-20—...மங்களூர் சேருதல்.

20-8-20—இரவு 9-30 சேலம் வருகை.

21-8-20—காலை 7-30 தண்ணீர்க் குழாயைத் தொடங்கி

வைத்தல். காலை 8-00. கிலாபாத் மாநாடு. காலை 10-00 பெங்களூருக்குக் காரில் புறப்பாடு.

21-8-20—இரவு 9-00 பெங்களூரிலிருந்து சென்னைக்குப் புறப்பாடு.

22-8-20—காலை.. சென்னை வருகை....கிலாபாத் இயக்கத் தலைவர்கள், ஊழியர்கள் சந்திப்பு....சட்டக் கல்லூரி மாணவர் கூட்டம்....பெஜவாடாவிற்குப் புறப்பாடு,

1921 (1)—கஸ்தூரிபாவுடன்

8-4-21 (வெள்ளி)—காலை 10-00 கஸ்தூரிபாவுடன் கல்கத்தா மெயிலில் சென்னை வருகை. யாகுப்ஹாசன் இல்லம் வருகை. பிற்பகல்...ஒத்துழையாமை இயக்கவாதிகள் கூட்டம். மாலை... மார்வாரிகள் கூட்டம். மாலை 6-00 பொதுக் கூட்டம் (இடம்: திருவல்லிக்கேணி கடற்கரை.) இரவு சத்தியமூர்த்தி சந்தித்துப் பேசினர். இரவு மெயிலில் பம்பாய்க்குப் புறப்பாடு.

1921 (2)

15-9-21—(வியாழன்) காலை 10-00 சென்னை வருகை. மாலை 5-30 பொதுக் கூட்டம்.

16-9-21—மாலை 4-45 மாதர்கள் கூட்டம். மாலை...துணி வணிகர் கூட்டம். மாலை 6-45 தொழிலாளர் பொதுக்கூட்டம். இரவு 8-00 மேற்படி கூட்டம் முடிந்த நேரம்.

17-9-21—காலை 6-18 சென்னையிலிருந்து புறப்பாடு – போட் மெயிலில். மதியம் 12-00 விழுப்புரம் இரயில் நிலையத்தில் வரவேற்பு. பிற்பகல் 2-00 திருப்பாதிரிப்புலியூர் இரயில் நிலையத்தில் வரவேற்பு. பிற்பகல் 3-00 பரங்கிப்பேட்டை வருகை. பிற்பகல் 4-00 பீயர்சன்னுடைய தேசியப் பெண்கள் பள்ளிக்கு அடித்தளக் கல் நாட்டு விழா. மாலை...கடலூருக்குக் காரில் புறப்படுதல். இரவு 8-00 கடலூரில் கடிலம் நதியில் பொதுக்கூட்டம். இரவு 10-30 கூட்டம் முடிந்த நேரம். இரவு 1-00 திரும்பிப் பரங்கிப்பேட்டை வந்து சேர்ந்த நேரம்.

18-9-21 காலை 6-00 பரங்கிப்பேட்டையிலிருந்து இரயிலில் புறப்பாடு. காலை 11-20 கும்பகோணம் வருகை. (தங்கியது கல்யாணராமன் தெருவில் உள்ள விடுதி). பிற்பகல் 3-30 பொதுக் கூட்டம். மாலை 5-00 குடந்தையிலிருந்து இரயிலில் புறப்பாடு (இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ்). இரவு 7-30 தஞ்சாவூர். இரவு 9-30 திருச்சி வருகை.

19-9-21—(திங்கள்) இரவு 8-00 பொதுக் கூட்டம். தமிழகத்திலேயே முதன் முதலாக ஒரு நகராட்சி காந்திஜிக்கு வரவேற்புரை அளித்த கூட்டம். இரவு 11-00 பொதுக் கூட்டம் முடிந்தது.

20-9-21—காலை ஸ்ரீரங்கம் நகராட்சி வரவேற்பு. காலை 10-15 திருச்சிக்குத் திரும்புதல்.

21-9-21—காலை...போட் மெயிலில் மதுரைக்குப் புறப்பாடு. காலை 10-45 திண்டுக்கல்லுக்கு வருகை. மதியம் 12-45 நகராட்சி வரவேற்பு. பிற்பகல் 2-15 பொதுக்கூட்டம். பிற்பகல் 3-40 திண்டுக்கல்லிருந்து மதுரைக்குப் புறப்பாடு. மாலை 6-00 மதுரை சேருதல். 6-15 பொதுக் கூட்டம். இரவு 9-00 மாதர்கள் சங்கத்தினர், இளைஞர் முஸ்லிம் சங்கத்தினர், குஜராத்தி வணிகர்கள் சந்திப்பு.

22-9-21—காலை 7-00 சௌராஷ்டிரர்கள் கூட்டம் (காந்தி பொட்டல்) முதன் முதலாகத் தமிழகத்தில் அரை ஆடையுடன் காந்திஜி தோன்றிய கூட்டம். காலை...மதுரையிலிருந்து புறப்பாடு. (காரைக்குடிக்கு மோட்டாரில்). காலை 9-30 மேலூர் சேருதல்... திருப்பத்தூர், குன்றக்குடி, பலவான்குடி, கோட்டையூர், காரைக்குடி, அமராவதிபுதூர். திருப்பத்தூர், குன்றக்குடி, பலவான்குடி. மதியம் 12-00 காளுடுகாத்தான் பள்ளத்தூர் வேலன்குடி. பிற்பகல் 1-00 கோட்டையூர், இரவு 7-00 காரைக்குடிப் பொதுக் கூட்டம்...அமராவதி புதூர். இரவு 8-00 தேவகோட்டை. இரவு...காரைக்குடி திரும்புதல்.

23-9-21—காலை காரைக்குடியிலிருந்து புறப்பாடு (மதுரைக்குக் காரில்.) மதியம் 12-00 திருநெல்வேலிக்கு இரயிலில் புறப்பாடு. பிற்பகல் 2-00 விருதுநகர் சேருதல். பிற்பகல் 4-45 கங்கை கொண்டான் இரயில் நிலையம். மாலை 5-45 நெல்லை வருகை. இரவு 7-30 பொதுக்கூட்டம்.

24-9-21—காலை 9-00 நெல்லையிலிருந்து இரயிலில் ஈரோட்டிற்குப் புறப்பாடு. மாலை 6-00 திண்டுக்கல்.

25-9-21—அதிகாலை 3-25 ஈரோடு. (ஈ. வெ. ரா. இல்லத்தில் நூல் நூற்றுக் காண்பித்தல்). பிற்பகல் 2-00 கோவைக்கு இரயிலில் புறப்பாடு. பிற்பகல் 4-30 திருப்பூர். மாலை 6-20 சிங்காநல்லூர் சேருதல். (இரயிலிலிருந்து இறங்கிக் காரில் கோவைக்குப் புறப்பாடு). மாலை 6-40 கோவை சேருதல். கோவை நகராட்சி வரவேற்பு. பெசண்ட் இல்லத்தில் தொழிலாளர் வரவேற்பு. ஆர். கே. எஸ். இல்லத்தில் மக்கள் சார்பாக வரவேற்பு. இரவு 11-00 கூட்டம் முடிவு.

26-9-21 — (மௌன தினம்). மாலை 4-25 சேலத்திற்குப் புறப்பாடு. இரவு 12-30 சேலத்தில் தங்கல்.

27-9-21—காலை கள்ளக்குரிச்சியிலிருந்து வந்த சர்க்காக்களைப் பார்வையிடுதல், காலை 8-00 செவ்வாய்ப் பேட்டையில் துணிவணிகர்கள், வரவேற்பு,...மாதர்கள் கூட்டம், நகராட்சி வரவேற்பு, நெசவாளர்கள் சந்திப்பு, மாணவர்கள் நூற்பதைப் பார்வையிடல், பொதுக்கூட்டம். இரவு திருப்பதிக்குப் புறப்பாடு.

1925

7-3-25 (சனி)—காலை...பேசின்பிரிட்ஜ் நிலையத்தில் வரவேற்பு (தொழிலாளர்கள்). காலை 7-30 சென்ட்ரல் இரயில் நிலை

யத்தில் வந்திறங்கல். ஊர்வலம். காலை 9-00 சினிவாச ஐயங்கார் இல்லம். பிற்பகல் 1-30 செய்தியாளருக்குப் பேட்டி. பிற்பகல் 3-30 இந்தி யுவதி சரணாலயம். பிற்பகல் 4-00 சென்னை நகராண்மைக் கழக வரவேற்பு. மாலை 6-00 பொதுக்கூட்டம். இரவு 7-45 இரயிலில் வைக்கத்திற்குப் புறப்பாடு (மேட்டுப் பாளையம் மெயில்).

8-3-25—காலை...சேலம், காலை...ஈரோடு, காலை...போத்தனூர்.

14-3-25—காலை 10-30 திருவனந்தபுரத்திலிருந்து புறப்பாடு. கன்னியாகுமரி வருகை. ஓய்வு. கடல்தரிசனம். பிற்பகல் 4-00 ஆலய தரிசனம். நாகர்கோவில், திருவனந்தபுரம் திரும்பினர்.

15-3-25—காலை 7-30 போத்தனூர் வருகை. தொழிலாளர் வரவேற்பு. காலை 10-00 திருப்பூர் வருகை. காலை...ஜெயராமன் நாயக்கருக்குப் பேட்டி. பிற்பகல் 2-00 முதல் 3-00 வரை கதர் அன்பர்களுக்குப் பேட்டி. இடுவம்பாளையம் நெசவு கேந்திரத்தைப் பார்வையிடல். பிற்பகல் 5-00 திருப்பூர் திரும்பி வருதல். மாலை... பொதுக் கூட்டம். இரவு ..புதுப்பாளையத்திற்குப் புறப்பாடு. இரவு 10-00 சங்கரிதுர்க் இரயில் நிலையம். இரவு 11-00 புதுப் பாளையம் ஆசிரமம்.

20-3-25—காலை...(காந்தி ஆசிரமத்தில் கட்டுரை எழுதுதல்). பிற்பகல்...இரத்தினசபாபதி கவுண்டர் இல்லத்திற்கு வருகை. மாலை...ஆசிரமத்தில் பிரார்த்தனை.

21-3-25—அதிகாலை 4-30 ஆசிரமத்தில் பிரார்த்தனை. மாலை 4-00 ஆசிரமத்தில் பிரார்த்தனை. இரவு 7-30 பொதுக் கூட்டம். மேட்டுப்பாளையம் மெயிலில் புறப்பாடு.

22-3-25—காலை சென்னை சென்ட்ரல் நிலையம் சேருதல். காலை 7-30 முதல் 10-00 வரை தலைவர்களுக்கும் அரிஜனப் பிரமுகர்களுக்கும் பேட்டி. காலை 10-00 நாராயண்காடு, புதுப் பேட்டை அரிஜனங்கள் கூட்டம். மதியம் 12-00 முதல் பிற்பகல் 2-00 வரை பேட்டி. பிற்பகல் 2-00 மாதர்கள் நூற்புப் போட்டி. பிற்பகல் 3-00 "இந்து" அலுவலகத்தில் காஸ்தூரி ரங்க ஐயங்கார் உருவப் படத் திறப்பு விழா. பிற்பகல் 4-30 காஸ்மாபாலிடன் கிளப் வருகை. மாலை 5-30 பொதுக் கூட்டம். இரவு 7-20 மாணவர் இல்லங்கள் கூட்டு விவாத சங்கம். இரவு 8-00 தொழிலாளர் கூட்டம்.

23-3-25—(மௌனதினம்) இரவு 8-00 முதல் 9-15 வரை இராமாயணப்படங்களின் காட்சியைப் பார்வையிடல்.

24-3-25—காலை 7-30 ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர்இல்லம். ...மைலாப்பூர் சமஸ்கிருத கலாசாலை....திருவல்லிக்கேணி கூட்டுறவுப்பண்டகசாலை. காலை 8-05 இந்திப் பிரசார வித்தியாலயம். 8-30 (மவுண்ட்ரோடு) சென்னை ஆயுர்வேத வைத்திய சாலை. 9-00 மதுவிலக்குப் பிரசாரகர்கள் கூட்டம். மதியம் 12-00 வரை காங்கிரஸ் ஊழியர்களுக்குப் பேட்டி. தமிழ் குருகுல விவகாரத்தில் சமரச முயற்சி (இதுதோல்வியடைந்தது.) பிற்பகல் 3-00

மாதர் கிறித்தவக் கல்லூரி...''சுயராஜ்யா'' அலுவலகம். பிற்பகல் 4-00 இராயபுரம் குப்பைத் தொட்டி மைதானத்தில் உள்ள இராப்பள்ளியைப் பார்வையிடல். 5-45 சிந்தாதிரிப் பேட்டை காங்கிரஸ் சபை வரவேற்பு. மாலை 6-00 சீனிவாச ஐயங்கார் இல்லத்தில் விருந்து. இரவு 7-30 ஏகாம்பரேஸ்வரர் அக்கிரகாரம் குளக்கரையில் முல்தானி, மார்வாரி, குசராத்திகள் வரவேற்பு. இரவு 8-00 பெத்துநாயக்கன் பேட்டையில் காங்கிரஸ் சபா வரவேற்பு, பொதுக்கூட்டம். இரவு 9-10 பம்பாய் மெயிலில் புறப்பாடு.

1927 (கஸ்தூரிபாவுடன்)

24-8-27 (புதன்)—காலை 7-00 பெங்களூரிலிருந்து புறப்பாடு ...சப்பாடி ரோடு...ஹோசூர்....சூலகிரி. காலை 10-30 கிருஷ்ணகிரி வருகை. பிற்பகல் 4-00 பொதுக் கூட்டம். திரும்பி பெங்களூர் பயணம்.

30-8-27—மதியம் 12-05 பெங்களூர் எக்ஸ்பிரசில் காட்பாடி இரயில் நிலையம் வந்து சேருதல். மோட்டாரில் வேலூருக்குப் புறப்படுதல். பிற்பகல் 1-00 வேலூர் வந்து சேருதல். மாலை வட ஆர்க்காடு மாவட்டக் கழக வரவேற்பு. மாலை 5-30 பொதுக் கூட்டம் (தலைவர் ரெவ.டி.போயர், ஹரிஸ் கல்லூரி முதல்வர்).

31-8-27—காலை பெண் வைத்தியர்கள் கூட்டம். மாலை 6-00 சித்தரஞ்சன் தாஸ் பார்க் திறப்பு விழா. மாலை 6-30 பொதுக் கூட்டம். இரவு 8-00 கூட்ட முடிவு.

1-9-27—காலை 8-00 மோட்டாரில் குடியாத்தத்திற்குப் புறப்பாடு. மாலை 5-30 குடியாத்தத்தில் பொதுக் கூட்டம். இரவு 8-45 வேலூர் திரும்பினர்.

2-9-27—காலை 8-00 ஆர்க்காடு பொதுக் கூட்டம். காலை 9-00 ஆரணிக்குப் புறப்பாடு. காலை 9-30 ஆரணி வருகை. பிற்பகல் 3-50 பொதுக் கூட்டம். (டிக்கெட் மூலம் அனுமதி) மாலை பெண்கள் கூட்டம். மாலை 5-45 (ஆரணி கோட்டை மைதானம்) பொதுக்கூட்டம்.

3-9-27—காலை 7-00 வேலூரிலிருந்து காரில் புறப்பாடு. காலை 9-45 சென்னை சேருதல். சி.எப். ஆண்ட்ரூஸ் முதலியோர் பேட்டி. பிற்பகல் எம். எஸ். எம். தொழிலாளர் சங்க அடித்தளக் கல் நாட்டு விழா (பெரம்பூர்). பேராவள்ளூர் தொழிலாளர் கூட்டம். இரவு 7-00 மாணவர் கூட்டம் (மவுண்ட் ரோடு).

4-9-27—காலை 7-30 ஒய். எம். சி. ஏ. கூட்டம். பிற்பகல் 3-00 கதர் வணிகர் சந்திப்பு. மாலை 4-15 இந்து உயர்நிலைப்பள்ளி பழைய மாணவர் சங்கம். மாலை 6-00 சாரணர் அணி வகுப்பு. மாலை 6-30 பொதுக்கூட்டம் (கடற்கரை)

5-9-27—மௌன தினம்.

6-9-27—காலை 8-00 மதுவிலக்குத் தொண்டர்கள் கூட்டம். காலை 9-00 இந்திப் பிரச்சாரகர்கள் கூட்டம்...சத்திய மூர்த்தி

பேட்டி...நீல்சிலை அகற்றல் சத்தியாக்ரக ஊழியர்கள் சந்திப்பு. ... ஈக்காடு வெஸ்லியன் மிஷன் தொழிற்பள்ளி. மாலை 6-00 திருவள்ளூர் பொதுக் கூட்டம் ... பூந்தமல்லி அனுதை விடுதி.

7-9-27 காலை 8-00 பச்சையப்பன் கல்லூரி மாணவர் கூட்டம், காலை ... டிராம்வே யூனியன் தொழிலாளர் வரவேற்பு. ... நீல்சிலை பற்றி சத்தியாக்ரகிகளுடன் ஆலோசனை. மாலை ... இராயபுரம் பொதுக்கூட்டம்.

8-9-27 காலை 6-00. பெரம்பூர் அருந்ததியர்புரம் வருகை காலை 11-00 மோட்டாரில் காஞ்சிபுரம் வருகை. மாலை 6-00 (காஞ்சிபுரம்) பொதுக்கூட்டம்.

9-9-27—காலை 7-30 குசராத்திகள், மார்வாரிகள், சிந்திகள் கூட்டம். மாலை 4-00பெண்கள் கூட்டம் (திருவல்லிக்கேணி). மாலை 5-00 தேசபந்துதாஸ் படத்திறப்பு விழா. மாலை 6-30 பரங்கிமலை ஆதம்பாக்கம் கூட்டம். இரவு...திருவனந்தபுரம் எக்ஸ் பிரசில் கடலூருக்குப் புறப்பாடு.

10-9-27—காலை 3-30 கடலூர் சேருதல் (இரயில் நிலையத் திலேயே தங்கல்). காலை 6-00 இரயில் நிலையத்தில் வரவேற்பு. காலை 7-00 நகராட்சி வரவேற்பு. மாலை 6-00 பொதுக்கூட்டம்.

11-9-27—காலை 8-00 சிதம்பரத்திற்குப் புறப்பாடு....சிதம் பரம் சேருதல். நந்தனூர் கோவில் அடித்தளக்கல் நாட்டுவிழா. மாலை...பொதுக்கூட்டம். இரவு 7-00 மாயவரத்திற்குப் புறப் பாடு. இரவு 9-00 மாயவரம் வருகை.

12-9-27—மௌன தினம்.

13-9-27—பிற்பகல் 2-30 மாயவரம் நகராட்சி மன்றத் தலைவர், தாலுகா போர்டுத் தலைவர் சந்திப்பு. பிற்பகல் 4-15 இசை வேளாளர் சந்திப்பு. மாலை 6-15 பொதுக்கூட்டம்.

14-9-27—காலை 7-00 கும்பகோணத்திற்குப் புறப்பாடு. காலை 8-00 திருவிடமருதூர் வருகை. மாலை 5-45 (கும்பகோணம்) பொதுக் கூட்டம். இரவு 8-30 பொதுக்கூட்டம் முடிவு. இரவு பண்டிதர்களுடன் விவாதம்.

15-9-27—காலை மன்னார்குடிக்குப் புறப்பாடு. காலை 7-30 நீடாமங்கலம் வருகை. காலை 8-00 இராசப்பன் சாவடி. காலை 8-20 மன்னார்குடி சேருதல்...தேசிய உயர்நிலைப்பள்ளி. காலை 8-45 பின்ட்லே கல்லூரி. மாலை 6-30 (மன்னார்குடி) பொதுக் கூட்டம்.

16-9-27—காலை 6-00 தஞ்சாவூருக்குப் புறப்பாடு. காலை 8-15 தஞ்சாவூர் வருகை. பிற்பகல் 3-30 முதல் 5-00 வரை நீதிக் கட்சித் தலைவர்களுக்குப் பேட்டி. மாலை 5-45. (தஞ்சை) பொதுக் கூட்டம். இரவு திருச்சி வருகை.

17-9-27—காலை 7-30 கோட்டை மார்க்கெட் அடித்தளக் கல்நாட்டு விழா. நகராட்சிமன்ற வரவேற்பு. பிற்பகல் 4-00 தென்னிந்திய இரயில்வேத் தொழிலாளர் சங்க அடித் தளக்கல் நாட்டு விழா (பொன்மலை). மாலை 6-00 வால்குடிக்குப் புறப்பாடு. இரவு 8-00 வால்குடி. இரவு 9-30 திருச்சி வருகை.

18-9-27—காலை 8-30 டாக்டர் ராஜன் மருத்துவ மனை எக்ஸ்-ரே நிலையத் திறப்புவிழா. மதியம் ரெவ. ஹெரால்டு பேட்டி.

20-9-27—காலை மாணவர்கள் கூட்டம்: ஒய். எம். சி. ஏ. யில் கிறித்தவர் வரவேற்பு. பிற்பகல் பெண்கள் கூட்டம், ஸ்ரீரங்கம் நகராட்சி வரவேற்பைக் கொண்டுவந்து கொடுத்தனர். பொதுக் கூட்டம் மழையால் தள்ளி வைப்பு.

21-9-27—ஸ்ரீரங்கம் விவேகானந்த ஆசிரம வரவேற்பைக் கொண்டுவந்து கொடுத்தனர். காலை 8-00 பொதுக் கூட்டம் (புத்தூர் மைதானம்). பிற்பகல் 3-00 புதுக்கோட்டைக்குப் புறப்பாடு. பிற்பகல் 4-00 புதுக்கோட்டை வருகை, மாலை 6-15 புதுக்கோட்டை பொதுக்கூட்டம்.

22-9-27—காலை 6-00 புதுக்கோட்டையிலிருந்து புறப்பாடு. குழிப்பிரை...இராமச்சந்திரபுரம்... கொத்தமங்கலம்... மதியம் காளுடு காத்தான். பிற்பகல் 2-00 பெண்கள் கூட்டம்.

23-9-27—காலை 7-00 காளுடு காத்தானிலிருந்து புறப்பாடு. பள்ளத்தூர்... கோட்டையூர்... காரைக்குடி.... அமராவதிபுதூர்... காரைக்குடி.

24-9-27—காலை 8-00 காரைக்குடி மாதர்கள் கூட்டம். மாலை...தேவகோட்டை பொதுக்கூட்டம். இரவு...காரைக்குடி.

25-9-27—மாலை 6-10 காரைக்குடிப் பொதுக்கூட்டம். இரவு 8-50 கூட்டம் முடிவு, இரவு 9-00 மௌனம் தொடக்கம்.

26-9-27— மௌன தினம்.

27-9-27—காலை 6-30 பாகனேரிக்குப் புறப்பாடு. நாச்சியார் புரம். காலை 8-00 சிறுவயல். காலை 8-30 திருப்பத்தூர். ஸ்வீடிஸ் மிஷன் கண்ணுஸ்பத்திரிக்கு வருகை...பாகனேரி வருகை. மாலை பாகனேரி பொதுக்கூட்டம்.

28-9-27—காலை 10-00 மதுரை வருகை. மாலை 5-45 நகராட்சி மண்டபத்தில் நகராட்சி வரவேற்பு. மாலை 6-00 பொதுக்கூட்டம் (தமுக்கம் மைதானம்).

29-9-27—மாலை ஸ்ரீ மீனுட்சி ஆலய கடைக்காரர் வரவேற்பு மாலை 6-30 சௌராஷ்டிர சமூக வரவேற்பு. இரவு 7-45 கூட்ட முடிவு.

30-9-27—நீதிக் கட்சித் தலைவர்களுடன் பேச்சு. பிற்பகல் 2-30 பெண்கள் கூட்டம். பிற்பகல் 5-00 கூட்டம் முடிவு. மாலை 6-30 திருமங்கலம் வருகை. இரவு 7-30 கூட்ட முடிவு. இரவு 9-00 மதுரை சேர்ந்தார்.

1-10-27—பிற்பகல் 3-55 பரமக்குடி வருகை. இரவு 11-00 இராமேசுவரம் எக்ஸ்பிரசில் மதுரை சேர்ந்தார். (இரயிலில் தூங்கினார்.)

2-10-27—காலை விருதுநகருக்குப் புறப்பாடு... விருதுநகர் சேர்ந்தார்...சத்திரம் திறப்பு விழா; மாலை 6-00 மணி பொதுக் கூட்டம்.

3-10-27— மௌன தினம்.

4-10-27— காலை 6-00 விருதுநகரிலிருந்து புறப்பாடு. காலை 8-00 இராஜபாளையம் சேருதல். பிற்பகல் 4-00 நாய்க்கன் பேட்டையில் மாதர்கள் நூற்பைப் பார்வையிடல்...பெண்கள் கூட்டம்...காந்தி கதர் வஸ்திராலயக் கூட்டம். மாலை 6-30 பொதுக்கூட்டம்.

5-10-27—காலை இராஜபாளையத்திலிருந்து புறப்பாடு. காலை 8-15 கழுகுமலை வருகை. காலை 9-00 கோவில்பட்டி வருகை. மாலை 6-00 பொதுக்கூட்டம் (கோவில்பட்டி). இரவு 7-30 கூட்டம் முடிவு.

6-10-27—காலை 6-00 கோவில்பட்டியிலிருந்து இரயிலில் தூத்துக்குடிக்குப் புறப்பாடு. காலை...ஸ்ரீ வைகுண்டம் வருகை. காலை 8-00 இரயிலில் தூத்துக்குடி வருகை. மாலை 6-30 பொதுக்கூட்டம்.

7-10-27—காலை 10-00 பாளையங்கோட்டை சேருதல். பிற்பகல் சுமார் 2-30 டாக்டர் ஈஸ்வரையா மருத்துவ சோதனை. பிற்பகல் 4-00 தனியாகக் கதர் உற்பத்தி செய்தவர்கள் பேட்டி. மாலை 6-00 திருநெல்வேலி நகரில் வணிகர்கள் குமாஸ்தாக்கள் வரவேற்பு. இரவு 7-15 பொதுக் கூட்டம். இரவு 9-15 கூட்டம் முடிந்தது.

8-10-27—காலை நெல்லையிலிருந்து புறப்பாடு. நாகர்கோவில் வருகை. பொதுக் கூட்டம். நாகர்கோவிலிலிருந்து திருவனந்தபுரத்திற்குப் புறப்பாடு.

8-10-27 முதல் 15-10-27 வரை—கேரளத்தில்.

16-10-27 (ஞாயிறு)—காலை 9-00 பாலக்காட்டிலிருந்து மோட்டாரில் கோவை வருகை. பிற்பகல் 3-30 மாதர்கள் கூட்டம். மாலை 5-30 பொதுக் கூட்டம்.

17-10-27—மௌன தினம்.

18-10-27—மாலை 4-30 பொள்ளாச்சி வருகை. மாலை 5-30 பொள்ளாச்சி பொதுக் கூட்டம். கோவை திரும்புதல்.

19, 20, 21 ஆம் தேதிகள்—கோவையில் ஓய்வு.

22-10-27—காலை 5-30 காரில் திருப்பூருக்குப் புறப்பாடு. ...கோபிச்செட்டிபாளையம்...ஊத்துக்குளி. காலை 10-30 திருப்பூர் வருகை. மாலை...வஸ்திராலயத்திற்கு வருகை.

23-10-27—அதிகாலை 3-45 கிதை வகுப்புத் தொடக்கம். காலை கரூர் பயணம். வெள்ளைக் கோவில்...திருப்பூரில் பேட்டி... பி. டி. ஆஷர் அண்டு கம்பெனி வரவேற்பு. மாலை...பொதுக் கூட்டம்.

24-10-27—மௌனம்.

25-10-27—அதிகாலை திருப்பூரிலிருந்து கள்ளிக்கோட்டைக்குப் புறப்பாடு. காலை 5-00 ஓட்டப்பாலம்.

1927-(2) கஸ்தூரிபாவுடன்

12-11-27—இரவு 10-00 இலங்கையில் வந்திறங்கல்.

13-11-27—பிற்பகல் செட்டிகள் சங்கத்தார், விவேகானந்த சங்கத்தார் வரவேற்பு.]

30-11-27—(புதன்) காலை 11-30 ஹார்டிஞ்ச் கப்பலில் தனுஷ்கோடி வருகை. பிற்பகல் 2-30 இராமநாதபுரம் வருகை. ...மாதர்கள் கூட்டம் பிற்பகல் 6-00 பொதுக் கூட்டம்.

1-12-27—காலை இராமநாதபுரத்திலிருந்து புறப்பாடு. இரவு ...கல்கத்தா மெயிலில் சென்னையிலிருந்து புறப்பாடு.

1927-(3)

23-12-27 (வெள்ளி)—காலை. கல்கத்தா மெயிலில் வருகை. கொருக்குப்பேட்டை இரயில் நிலையத்தில் இறங்கினார். மாலை 5-30 கதர் பொருட் காட்சித் திறப்பு விழா.

25-12-27—பிற்பகல் காங்கிரஸ் தலைவர் ஊர்வலத்தில் தலைவருடன் வந்தார்.

26-12-27—மௌன தினம். காங்கிரஸ் கூட்டத்திற்கு வந்திருந்தார்.

27-12-27—காங்கிரஸ் கூட்டத்திற்கு வந்திருந்தார்.

28-12-27—காலை...டாக்டர் முத்து சோதனை. இரவு... அமதாபாத்திற்கு (பம்பாய் வழியாக) புறப்பாடு.

1929

15-5-29 (புதன்)—திருத்தணி வருகை.

1933

20-12-33 (புதன்)—காலை 8-20 சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வந்திறங்குதல். காலை 8-45 ரிப்பன் கட்டிடத்தில் நகராண்மைக் கழக வரவேற்பு. காலை 10-00 சுதேசி, கதர் பொருட் காட்சித் திறப்பு விழா. காலை 11-30 முதல் பிற்பகல் 2-15 வரை ஓய்வு. பிற்பகல் 2-15 முதல் 2-45 வரை தீண்டாதார் ஊழியர்சங்க உறுப்பினர்களுடன் உரையாடல். பிற்பகல் 4-00 இந்திய மாதர் சங்கக் கூட்டம். 4.25 மாணவர்கள் கூட்டம் 4-45 தாய்மார்கள் சங்கக் கூட்டம். மாலை 5-00 முதல் மாலை 6-00 வரை ஓய்வு. மாலை 6-00 கடற்கரைப் பொதுக்கூட்டம்.

21-12-33—...நரியங்காடு என்ற வரதராஜபுரம் (எழும்பூர்) ...பெரிய மேட்டுச் சேரிகள்...பல்லக்கு மணியம் சேரி...தாமோதர் புரம்...கோபதிநாராயணசாமி செட்டியார் பூங்காவில் பரத சபை வரவேற்பு...வேதாரண்யபுரம் (புதுப்பேட்டை)...பெரம்பூர் சேரி. பிற்பகல் எம். எஸ். எம். இரயில்வே ஊழியர் வரவேற்பு; மாலை...இராயபுரம் பொதுக்கூட்டம். இரவு 7-15 பெரம்பூர் ஏரி மைதானப் பொதுக்கூட்டம். இரவு 8-00 சென்னை தொழிலாளர் சங்கக் கூட்டம்; இரவு 8-20 வாடியா பூங்காவில் டிபசண்ட் படத் திறப்பு. இரவு 9-00 பொதுக் கூட்டம் (சூளை).

22-12-33—அதிகாலை உடல் சோதனை-டாக்டர் ரெங்காச்சாரி...சத்தியமூர்த்திக்குப் பேட்டி. (சுமார்) காலை 8-45 அரிஜன சேவா சங்க வரவேற்பு. காலை 9-30 குஜராத்தி, சிந்தி, மார்வாரிகள் வரவேற்பு. காலை 10-00 சென்னை வைசிய சங்க வரவேற்பு. காலை 11-00 ஆந்திர மகாசபைக் கூட்டம், நாகேஸ்வர ராவ் பந்துலு படத் திறப்பு. மதியம் 12-00 கோடவுன் தெரு சேரிகளுக்கு வருகை. மாலை 4-15 முதல் 5-00 வரை தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபை பட்டமளிப்பு விழா. மாலை 6-00 முதல் 7-00 வரை தாழ்த்தப்பட்டோர் தலைவர்களுக்குப் பேட்டி; காரில் எண்ணூருக்குப் புறப்பாடு.

1934

22-1-34 (திங்கள்)—மாலை 4-30 நாகர்கோவில் சேருதல்... பொதுக் கூட்டம். இரவு...கன்னியாகுமரி சேருதல்.

23-1-34—காலை...கன்னியாகுமரியில் குளித்தல். மாலை 6-45 கன்னியாகுமரியிலிருந்து புறப்பாடு. இரவு 7-30 வள்ளியூர்... தாங்குநேரி. இரவு 9-00 திருநெல்வேலி.

24-1-34—காலை 6-30 அறம் வளர்த்த நாதபிள்ளைக்குப் பேட்டி; காலை 7-00 டி. ஆர். மகாதேவ ஐயர் சந்திப்பு; காலை...

பேட்டி, குழந்தைகளுக்குப் பெயரிடல்...கதர் பொருட்காட்சியைப் பார்வையிடல்... தோட்டிகளின் விடுதிகளைப் பார்வையிடல். ...பேட்டையில் நிதிஅளிப்பு...குற்றாலம் சாலையில்உள்ள மாக்கெட்டில் பொதுக்கூட்டம். காலை 9-30 தென்காசி வருகை, பொதுக் கூட்டம். காலை...குற்றாலம் வருகை, பிற்பகல் 2-15 நீர்வீழ்ச்சியைப் பார்க்கப் புறப்பாடு. பிற்பகல் 5-00 தூத்துக்குடிக்குப் புறப்பாடு. மாலை 6-00 ஸ்ரீ வைகுண்டம். இரவு 7-00 தூத்துக்குடி சேருதல்...பிரசன்ன விநாயகர் கோவில். இரவு 7-30 பொதுக் கூட்டம்.

25-1-34—காலை 6-00 போல்டன்புரம் சேரி வருகை. 6-50 தூத்துக்குடியிலிருந்து புறப்பாடு...எட்டயபுரம். காலை 9-15 கோவில்பட்டி வருகை...கழுகுமலை... சங்கரன்கோவில். காலை 11-30 இராஜபாளையம். மதியம் 12-00 வரவேற்பு முடிவு. மதியம் 12-00 முதல் பிற்பகல் 2-30வரை உணவு, ஓய்வு. பிற்பகல் 2-30. இராஜபாளையத்திலிருந்து புறப்பாடு. மாலை 4-30 சிவகாசி வருகை. மாலை 6-00 சூலக்கரை. இரவு 8-00 விருதுநகர் பொதுக் கூட்டம். இரவு 9-00 கள்ளிக்குடி. ... 9-45 திருமங்கலம். ... திருப்பரங்குன்றம். 11-15 மதுரை.

26-1-34—காலை 7-00 வணிக சபை வரவேற்பு ... சேரிகளுக்கு வருகை. காலை 8-30 நகராட்சி மன்ற வரவேற்பு. காலை 9-00 மாணவர்கள் கூட்டம். பிற்பகல் 2-00 ஊழியர்களுக்குப் பேட்டி. பிற்பகல் 3-00 மாதர்கள் கூட்டம். பிற்பகல் 4-00 இந்திப் பிரசார சபைக் கூட்டம். மாலை 5-45 பொதுக் கூட்டம். இரவு 7-00 பொதுக் கூட்டம் முடிவு. இரவு சுமார் 7-00 தொழிலாளர்கள் கூட்டம். சுமார் 8-00 தொண்டர்களுக்கு அறிவுரை. நகைகள், மற்ற பொருள்களை ஏலம் விடுதல்.

27-1-34—பிற்பகல் 2-30 மணிவரை மதுரையில் ஓய்வு. பிற்பகல் 2-30 மதுரையிலிருந்து செட்டி நாட்டிற்குப் புறப்பாடு. பிற்பகல் 3-00: தெற்குத் தெரு. ... மேலூர். பிற்பகல் 5-00 அமராவதி புதூர். மாலை 6-00 காரைக்குடி நகராட்சி வரவேற்பு ... பொதுக் கூட்டம். இரவு 7-55 தேவகோட்டை வருகை. இரவு தங்கல் தேவகோட்டை.

28-1-34—காலை...(தேவகோட்டை) இராம் நகரில் அரிஜனப் பள்ளி அடிக்கல் நாட்டு விழா. சித்தனூர் அரிஜன் சேரிக்கு வருகை. மதியம் 12-30 நாட்டார் பிரதிநிதிகள் சந்திப்பு—சமரசப் பேச்சு. பிற்பகல் 2-00 தேவகோட்டையிலிருந்து புறப்பாடு...திருப்பத்தூர் பொதுக் கூட்டம்...பாகனேரி பொதுக் கூட்டம்...சிவகங்கை பொதுக் கூட்டம். இரவு 7-00 மானாமதுரை பொதுக் கூட்டம். இரவு 7-30 மானாமதுரையில் இரயில் ஏறுதல்...மதுரை...திண்டுக்கல்.

29-1-34—மௌன தினம், காலை 4-00 பழனி. காலை 5-00 உடுமலைப்பேட்டை. காலை 6-00 பொள்ளாச்சி. காலை 8-30 செட்டிபாளையம்,...போத்தனூர்,...பெரிய நாயக்கன் பாளையம், ...காரமடை...மேட்டுப்பாளையம். காலை 10-30 குன்னூர்.

1-2-34—பிற்பகல் 4-30 குன்னூரில் ஆதி திராவிட ஜனசபை தூதுக்குழுவிற்குப் பேட்டி.

2-2-34—பிற்பகல் 3-00 கோத்தகிரிக்குப் புறப்பாடு; 3-50 கோத்தகிரி வருகை.

3-2-34—ஓட்டுப்பரை சக்கிலியர் குடியிருப்பு. தண்டக் காரன் சேரி ... பொதுக்கூட்டம். மாலை 5-00 பொதுக்கூட்ட முடிவு.

4-2-34—மதியம் ஆதி இந்துக்களுக்குப் பேட்டி. பிற்பகல் 2-45 குன்னூரிலிருந்து புறப்பாடு. பிற்பகல் 3-10 உதகமண்டலம் வருகை. பிற்பகல் பொதுக்கூட்டம். ஸ்ரீ இராமகிருஷ்ண மடம். ஓம் பிரகாஷ் மடம். வண்ணூர் குடியிருப்பு.

6-2-34—காலை 7-00 குன்னூரிலிருந்து கோவைக்குப் புறப்பாடு. மேட்டுப்பாளையம். அன்னூர். காலை 8-30 சொக்கம்பாளையம். 9-05 கருவலூர். 9-15 அவிஞ்சி, திரு முருகன் பூண்டி, அனுப்பபாளையம். காலை 10-15 திருப்பூர் (ராஜாஜி வந்து சேர்ந்தார்). பிற்பகல் 2-45 திருப்பூரிலிருந்து புறப்பாடு; பல்லடம். சூலூர். இராமநாதபுரம். பிற்பகல் 4-00 கோவை பெண்கள் கூட்டம்...அரிஜன மாணவர் விடுதி...குஜராத்திகள் கூட்டம்... அரிஜன தலைவர்களுக்குப் பேட்டி...பொதுக்கூட்டம்...பி.எஸ்.ஜி. நிறுவனத்திற்கு வருகை...மதுரை தேவி பாலவிஜேத நாடக சபை "நந்தனார்" நாடகம் பார்த்தல் ... போத்தனூர் இராமகிருஷ்ண வித்யாலயம்.

7-2-34—காலை 7-30 வித்யாலயத்திலிருந்து புறப்பாடு. ...வித்யாலயம் புதுக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டுவிழா; ...கிணற்றுக்கடவு, நல்லட்டிபாளையம். காலை 9-50 (இரயிலில்) பொள்ளாச்சி வருகை. காலை 10-30 பொள்ளாச்சியிலிருந்து புறப்பாடு. காலை 10-45 கோமங்கலம் புதூர். காலை 11-00 (காரில்) உடுமலைப்பேட்டை வருகை. பிற்பகல் 3-10 உடுமலைப் பேட்டையிலிருந்து புறப்பாடு. ... வன்னீர்வலசு வருகை. மாலை 5-00 பழனி. 5-30 பழனியிலிருந்து புறப்பாடு. இரவு 8-30 திண்டுக்கல். ... கோட்டை மைதானப் பொதுக்கூட்டம். . .பாலு சாமி ஐயர் சத்திரத்தில் பிரார்த்தனை, தங்கல்.

8-2-34—காலை 7-00 திண்டுக்கல்லிலிருந்து புறப்பாடு; 8-00 வத்தலக்குண்டு. 9-00 வடுகபட்டி. 9-40 பெரியகுளம். பிற்பகல் 2-00 பெரிய குளத்திலிருந்து புறப்பாடு...புதுப்பட்டி... தேனி...பழனிச்செட்டி பட்டி...வீரபாண்டி...சின்னமனூர். மாலை 5-15 கம்பம்.

9-2-34—காலை 7-00 கம்பத்திலிருந்து புறப்பாடு. ... கோம்பை....தேவாரம். பிற்பகல் 2-30 தேவாரத்திலிருந்து புறப்பாடு. பிற்பகல் 3-00 போடிவிலக்கு. மாலை 5-30 தேனியிலிருந்து இரயிலில் புறப்பாடு....ஆண்டிபட்டி....தொட்டப்ப

நாயக்கனூர். ... உசிலம்பட்டி. இரவு 7-30 செக்கானூரணி ... சோழவந்தான் (காரில் வருகை) இரவு 11-34 சோழவந்தானிலிருந்து இரயிலில் புறப்பாடு.

10-2-34—அதிகாலை 3-50 திருச்சி அடைதல். காலை 6-50 தங்கிய இடத்திலிருந்து புறப்பாடு. ... தென்னூர் பீர்தன் ஜுஹுர்மல் பாங்க்...ஸ்ரீரங்கம்.... மணச்சநல்லூர் ... சமயபுரம் ...சிந்தாமணி...சிந்தாமணிசேரி காலை 11-00 அரிஜன ஊழியர்கள் கூட்டம். பிற்பகல் சனாதனிகள், அரிஜனங்கள் பிரதிநிதிகளுக்குப் பேட்டி....தேவாங்க சபை வரவேற்பு... திருச்சி தாலுகா போர்டு வரவேற்பு. பிற்பகல் 4-00 பெண்கள் கூட்டம். 4-30 தேசியக் கல்லூரி ... பொதுக்கூட்டம் இரவு 8-30 பொதுக் கூட்டம் முடிவு.

11-2-34—காலை 6-30 வரகனேரி சேரிக்கு வருகை. 7-50 இரயிலில் கரூருக்குப் புறப்பாடு. ... முத்தரசனல்லூர் ... குழித்தலை. காலை 11-30 கரூர். பிற்பகல் 3-30 பொதுக் கூட்டம். பிற்பகல் 4-30 ஈரோட்டுக்குப் புறப்பாடு. பிற்பகல் 5-00 கொடுமுடி வருகை. மாலை 5-15 கொடுமுடியிலிருந்து புறப்பாடு. 6-00 ஈரோடு வருகை ... பொதுக் கூட்டம். இரவு 8-00 பவானிக்குப் புறப்பாடு. இரவு 8-30 பவானி. 9-45 திருச்செங்கோடு. 11-00 புதுப்பாளையம்.

12-2-34—மௌன தினம்.

13-2-34—காலை 7-30 பொதுக் கூட்டம். சுற்றுக் கிராமங்களிலிருந்து வந்தவர்களுக்குப் பேட்டி.

14-2-34—காலை 7-00 புதுப்பாளையத்திலிருந்து புறப்பாடு. காலை 7-50 நாமக்கல் வருகை. ... சேந்தமங்கலம் ... காளப்ப நாயக்கன்பட்டி ... பேலு குறிச்சி. காலை 10-00 இராசிபுரம் 10-10 இராசிபுரத்திலிருந்து புறப்பாடு. 11-00 சேலம் வருகை. பிற்பகல் 3-30 மாதர்கள் கூட்டம். பிற்பகல் 4-00 விஜயராக வாச்சாரியார் இல்லம். ... அரிஜன மாணவர் விடுதி ... காந்தி ஐயர் சிற்றுண்டிச் சாலை ... வைசிய இலக்கியச் சங்கம் ...பொதுக் கூட்டம். இரவு 7-20 இரயிலில் தஞ்சாவூருக்குப் புறப்பாடு.

15-2-34—காலை 6-00 தஞ்சாவூர் வருகை. காலை 7-30 தஞ்சாவூரிலிருந்து புறப்பாடு. ... ஐயம்பேட்டை. காலை 8-25 பாபநாசம். 9-00 கும்பகோணம் 9-05 விஸ்வகர்ம சங்கத்தார் வரவேற்பு. 9-15 நகராட்சி மன்ற படேல் மண்டபத்திற்கு வருகை. ... உயர்நிலைப்பள்ளியில் பொதுக்கூட்டம் .... பெண்கள் பண முடிப்பு...இந்தி பட்டமளிப்பு விழா...சுயமரியாதை இயக்கத்தினருக்குப் பேட்டி...குஜராத்திகள் பண முடிப்பு...அரிஜனங்களுக்குப் பேட்டி....உணவு, ஓய்வு. பிற்பகல் 2-30 திருவாரூருக்குப் புறப்பாடு. 2-50 நாச்சியார் கோவில். 3-00 திருசிரை...கொடவாசல் 4-05 கொரடாச்சேரி 4-50 கொரடாச்சேரியிலிருந்து புறப்பாடு; 5-00 திருவாரூர். 7-30 நாகப்பட்டினம் ... பொதுக்கூட்டம்.

16-2-34—காலை 7-00 நாசையிலிருந்து புறப்பாடு. 8-00 நாகூர் வருகை. 8-45 காரைக்கால் வருகை. 9-30 தரங்கம்பாடி. 10-25 மாயவரம். 11-30 சீர்காழி வருகை...பொதுக் கூட்டம்... ஓய்வு....கே. சிதம்பரநாத முதலியார்வீட்டிற்கு வருகை. பிற்பகல் 3-35 சிதம்பரம் வருகை....தில்லை சமரச சன்மார்க்க சங்கம்... காஸ்மாபாலிடன் கிளப் ... நந்தனர் மடம், பள்ளி. பிற்பகல் 4-00 தாலுகா போர்டு அலுவலகம். கதர் டிப்போ. மாலை சுமார் 6-30 பொதுக்கூட்டம்...அண்ணாமலை நகர். இரவு 7-00 அண்ணாமலைப் பல்கலைக் கழகம். இரவு 7-58 இரயிலில் கடலூருக்குப் புறப்பாடு. இரவு 9-06 கடலூர் வருகை.... நகராட்சி மன்ற மாவட்டக் கழகவரவேற்பு....தாலுகா போர்டு வரவேற்பு. இரவு 10-00 பொதுக் கூட்டம். 10-40 பொதுக் கூட்டம் முடிந்த நேரம்.

17-2-34—காலை அஞ்சலை அம்மாளுக்குப் பேட்டி. காலை 6-30 கடலூரிலிருந்து புறப்பாடு. 8-00 புதுச்சேரி வருகை. 10-00 பண்ருட்டி வருகை. காலை 11-00 காந்தி குப்பம், திருவெண்ணெய் நல்லூர். பிற்பகல் 2-30 திருபாசிரமம் மாடியிலிருந்து பொதுமக் களுக்குத் தரிசனம். பிற்பகல் 3-00 திருவண்ணாமலைக்குக் காரில் புறப்பாடு. பிற்பகல் 3-45 திருக்கோவிலூர். பிற்பகல் 4-30 திருவண்ணாமலை வருகை. மாலை 6-00 திருவண்ணாமலையிலிருந்து புறப்பாடு. இரவு 9-20 வேலூர் வருகை.

18-2-34—அதிகாலை 4-15 பிரார்த்தனை. காலை 7-30 காகிதப் பட்டரை அரிஜனப் பள்ளி....கிராம மக்கள் கூட்டம்....சேரி களுக்கு மீண்டும் வருகை. காலை 8-40 நகராட்சி மன்ற வரவேற்பு: ...மாவட்டக் கழக வரவேற்பு...பொதுக் கூட்டம். பிற்பகல் 1-05 வேலூரிலிருந்து புறப்பாடு. 1-20 காட்பாடி. பிற்பகல் 2-10 குடி யாத்தம் 2-20 பள்ளிகொண்டையிலிருந்து புறப்பாடு. 3-15 ஆம்பூர்...பெரியங்குப்பம் 4-05 வாணியம்பாடி...நட்ராம்பள்ளி கிராமம். 5-15 திருப்பத்தூர் 6-00 கிறித்து குல ஆசிரமம். 6-50 பொதுக் கூட்டம். இரவு 7-30 பொதுக் கூட்டம் முடிவு. 8-00 ஆசிரமத் தொண்டர்கள் கூட்டம். 8-30 கோவில்லா ஜபாலயத் திற்கு வருகை. இரவு 9-15 ஜோலார்பேட்டைக்குப் புறப்பாடு. இரவு 9-55 ஜோலார் பேட்டையிலிருந்து சென்னைக்குப் புறப்பாடு.

19-2-34—காலை 5-30 பெரம்பூர் இரயில் நிலையத்தில் இறங்கி, கோடம்பாக்கம் வந்து சேருதல்....மௌனதினம்....விஜநகரம் மகாராணி, அம்புஜம்மாளுக்குப் பேட்டி.

20-2-34—பிற்பகல் 3-30 தமிழ்நாடு அரிஜன சேவாசங்கக் கூட்டம்....பொதுக்கூட்டம். மாலை 5-30 பொதுக் கூட்ட முடிவு: ...ஏ. ரெங்கசாமி ஐயங்கார் இல்லத்திற்கு வந்து துக்கம் விசாரித்தார்.

21-2-34—காலை 9-58 காஞ்சிபுரம் வருகை. காலை 11-00 காஞ்சிபுரம் பொதுக்கூட்ட முடிவு. பிற்பகல் 2-15 மாடியிலிருந்து

மக்களுக்குத் தரிசனம். 2-35 மோட்டாரில் ஆரணிக்குப் புறப்பாடு. பிற்பகல் 3-30 வாலாஜாப்பேட்டை...3-45 இராணிப் பேட்டை...4-55 ஆரணி கோட்டை மைதானம். இரவு 7-30 ஆரணியிலிருந்து புறப்பாடு. இரவு 8-10 சோழிங்கபுரம். இரவு 9-00 அரக்கோணத்திற்கு வருகை....பொதுக் கூட்டம்....பெங்களூர் மெயிலில் குடகிற்குப் புறப்பாடு.

1937

11-1-37 (திங்கள்)—மாலை 5-30 பம்பாய் எக்ஸ்பிரசில் சென்ட்ரல் நிலையம் வந்திறங்குதல்...இந்திப் பிரச்சார சபை பிரார்த்தனைக் கூட்டம்...ஹரிஹர சர்மா இல்லம். உணவு, ஓய்வு....பிரார்த்தனைக் கூட்டம்....தாம்பரத்தில் இரயில் ஏறினர் (திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்) ..செங்கற்பட்டு இரயில் நிலையத்தில் வரவேற்பு.

12-1-37—காலை திண்டுக்கல் இரயில் நிலையத்தில் வரவேற்பு. காலை மதுரை இரயில் நிலையத்தில் வரவேற்பு. மதியம் 1-45 தென்காசி.

13-1-37—திருவாங்கூர் சமஸ்தானம்.

14-1-37—மாலை 5-30 நாகர்கோவில் வருகை....நாகராஜ சாமி, கிருஷ்ணசாமி ஆலயம் வருகை. மாலை 6-30 பொதுக்கூட்டம். இரவு 8-00 கன்னியாகுமரிக்குப் புறப்பாடு....கன்னியாகுமரியில் தங்கல்.

15-1-37—காலை 7-00 குமரி கடற்கரையில் உலவுதல்.... கோவிலுக்கு வருகை....விவேகானந்தா நூல் நிலையம் வருகை. காலை 8-00 மௌனம் தொடக்கம். மாலை 5-00 மௌனம் முடிவு. நாகர்கோவில் இந்திப் பிரேமிசபைக்குப் பேட்டி. சுமார் 5-15 கன்னியாகுமரியிலிருந்து புறப்பாடு. மாலை 5-30 சுசீந்திரம்...சுசீந்திரம் ஆங்கிலப் பள்ளிக்கு வருகை. இரவு 7-30 நாகர் கோவில் வழியாகத் திருவனந்தபுரம் செல்லுதல்.

16, 17, 18, 19 தேதிகளில் திருவாங்கூர் சமஸ்தானம்.

20-1-37—இரவு 8-00 கொட்டாரக்கரை வருகை.

21-1-37—காலை 7-00 திருக்கண்ணமனைக்கால் விஷ்ணு ஆலயத்தை அரிஜனங்களுக்குத் திறந்து வைத்தார். ...பொதுக் கூட்டம். இரவு 8-00 கொட்டாரக்கரை இரயில் நிலையம் வருகை. இரவு 10-30 உணவு உண்டதற்குப் பின் இரயில் ஏறுதல்.

22-1-37—காலை தாம்பரம் இரயில் நிலையத்தில் வந்திறங்கல். ... நாகேஸ்வரராவ் பந்துலு இல்லம் வருகை. ... கோடம்பாக்கம் தொழிற் புள்ளியைச் சுற்றிப் பார்த்தல். ... ''மெயில்'' செய்தியாளருக்குப் பேட்டி. பிற்பகல் இந்தியக் கிறித்தவர்கள் சந்திப்பு;

சீனிவாச சாஸ்திரியார், ஜி. ஏ. நடேசன் முதலியோர் சந்திப்பு. ...மாணவர் கூட்டம்....பிரார்த்தனை....குண்டூர் வழியாக சேவா கிராமத்திற்குப் புறப்பாடு.

1937 (2)

26-3-37—(வெள்ளி) பிற்பகல் 4-50 கிராண்ட்டிரங்க் எக்ஸ் பிரசில் பொன்னேரி இரயில் நிலையத்தில் வந்திறங்குதல். மாலை 6-00 மாம்பலம் இந்திப் பிரச்சார சபைக் கட்டிடத்திற்கு வருகை. மாலை 6-30 இந்திப் பிரச்சாரசபை பட்டமளிப்பு விழா. இரவு 9-30 (மாலைப்) பிரார்த்தனை.

27-3-37—காலை 7-45 பாரதீய சாகித்ய பரீஷத் கூட்டத்திற் குத் தலைமை தாங்குதல். ...கோகுலம் குடியிருப்பு வாசிகள் பேட்டி. மதியம் 12-00 ராஜாஜியுடன் ஆலோசனை. மதியம் 12-30 இந்தி சாகித்ய சம்மேளனத்தின் தொடக்க விழா. மாலை காங்கிரசு உறுப்பினர்கள் சந்திப்பு.

28-3-37—காலை 6-40 கோடம்பாக்கம் பள்ளிக்குப் புறப்படு தல். காலை 7-20 கோடம்பாக்கம் பள்ளி வருகை. பிற்பகல் 3-30 பரீஷத் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல். இரவு 7-00 செய்தி யாளருக்குப் பேட்டி. இரவு 9-30 தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபைக் கூட்டம். நள்ளிரவு வரை பேட்டி.

29-3-37—மௌனதினம்.

30-3-37—பொருட் காட்சி சாலைக்கு வருகை. கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரசில் வர்தாவுக்குப் புறப்பாடு.

1946

21-1-46 (திங்கள்)—பிற்பகல் 4-15 அம்பத்தூர் இரயில் நிலை யத்தில் வந்திறங்கினர். 4-50 இந்திப் பிரச்சார சபை வருகை. ...பிரிட்டிஷ் பார்லிமெண்ட்ரி தூதுக் குழுச் செயலாளர் சந்திப்பு. இரவு 7-00 மக்களுக்குக் காட்சி அளித்தார்.

22-1-46—அதிகாலை 4-00 பிரார்த்தனை, கீதாபாராயணம். காலை 8-30 முதல் 11-30 வரை உடம்பு பிடித்து விடுதல். பிற் பகல் சுமார் 5-00 வரை பேட்டி. மாலை 5-30 பிரார்த்தனைக் கூட்டம். இந்திப் பிரச்சார சபைக் கட்டிடத்திற்குள்ளேயே அரை மணி நேரம் உலாவுதல். இரவு 8-00 அரசாங்க மருத்துவ மனையில் சாஸ்திரியைச் சந்தித்தார்.

23-1-46—காலை, மாலை பேட்டி. மாலை 5-35 பிரார்த்தனைக் கூட்டம். இரவு 7-30 பாராளுமன்றத் தூதுக் குழு சந்திப்பு.

24-1-46—காலை 6-00 பாராளுமன்றத் தூதுக் குழு உறுப்பினர்கள் சிலர் சந்திப்பு. காலை 8-20 நிர்மாண ஊழியர் மாநாட்டைத் தொடங்கி வைத்தார். பிற்பகல் 3-00 இலிருந்து 4-30 வரை நிர்மாண ஊழியர்கள் மாநாடு. இரவு 7-30 முதல் 9-00 வரை பாராளுமன்றத் தூதுக் குழுவினர் சந்திப்பு. இரவு 9-30 மணிக்கு மேல் பேட்டி.

25-1-46—மதியம் வரை பேட்டி. காலை 3-00 இந்திப் பிரச்சார சபை வெள்ளி விழா. காலை 5-40 பிரார்த்தனை. காலை 6-45 கவர்னர் மாளிகைக்குப் புறப்பாடு. 7-00க்கு மேல் உலாவுதல். இரவு 7-40 முதல் 9-00 வரை கவர்னருடன் அந்தரங்கப் பேச்சு.

26-1-46—காலை சுதந்திர நாள் அனுசரிப்பு. பிற்பகல் 2-45 நிர்மாண ஊழியர்கள் மாநாடு. ...பேட்டி. ... இந்துஸ்தானிப் பிரச்சாரக்குகள் மாநாடு. ... அரிஜன மகாசபைக் கூட்டம். காலை பிரார்த்தனைக் கூட்டம்.

27-1-46—காலை 7-30 கஸ்தூரிபா டிரஸ்ட் ஊழியர்களைச் சந்தித்துப் பேசினார். மதியம் வரை பேட்டி. பிற்பகல் 1-30 நிர்மாண ஊழியர் மாநாடு ... தட்சிண பாரத் இந்திப் பிரச்சார சபைப் பட்டமளிப்பு விழா. வழக்கமான நேரம் பிரார்த்தனை. இரவு 7-30 மௌனம் தொடக்கம்.

28-1-46—மௌன தினம். காலை 7-00 இந்துஸ்தானி நகரைச் சுற்றிப் பார்த்தார். தியாகராய நகரில் அரிஜன தொழிற் பள்ளி கட்டும் இடத்தைப் பார்வையிடல். வழக்கமான நேரம் பிரார்த்தனைக் கூட்டம். இரவு 7-30 அழகப்பச் செட்டியார் சந்திப்பு.

29-1-46—காலை 7-00 நிர்மாண ஊழியர் மாநாடு இறுதி நாள் கூட்டம்....ஆதாரக் கல்விப் பட்டமளிப்பு விழா. பிற்பகல் 4-30 மாதர்கள் கூட்டம். மாலை 5-30 பிரார்த்தனைக் கூட்டம். இரவு 7-30 காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டம். இரவு 8-30 தூங்கச் சென்றார்.

30-1-46—காலை 7-00 இந்திப் பிரச்சார சபை ஊழியர்களையும் அவர்கள் குடும்பத்தினரையும் சந்தித்தல். பேட்டி. காலை 10-00 மாணவர் மாநாடு. பிற்பகல் 4-00 தேசிய எழுத்தாளர்கள், கலைஞர்கள் கூட்டம். பிற்பகல் 4-30 மாணவர் மாநாடு. மாலை 5-30 பிரார்த்தனைக் கூட்டம். இரவு 7-30 மகாகனம் சீனிவாச சாஸ்தியாரைப் போய்ப் பார்த்தார்.

31-1-46—காலை 7-00 தொண்டர்கள், வெள்ளி விழாக் குழு உறுப்பினர்கள், ஊழியர்கள் கூட்டம். பிற்பகல் பேட்டி-வணிகர்களுடன் உரையாடல்....மைலாப்பூரில் ஆந்திர மகிள சபாவுக்கு அடித்தளக்கல் நாட்டு வித்தார். பிற்பகல் 3-00 சி. பி. பேட்டி. பிற்பகல் 4-30க்குத் தொடங்க வேண்டியது தாமதமாயிற்று—தொழிலாளர் மாநாடு. பிற்பகல் 5-30க்குத் தொடங்க வேண்டியது தாமதமாயிற்று—பிரார்த்தனைக் கூட்டம்.

1-2-46—காலை 7-15 அரிஜன தொழிற் பள்ளிக்கு அடித்தளக் கல் நாட்டுதல். ... பேட்டி. பிற்பகல் கோடம்பாக்கம் அரிஜன தொழிற்பள்ளியில் அரிஜன சேவையில் ஈடுபட்ட நிறுவனங்களின் கூட்டம். மாலை 5-30 பிரார்த்தனைக் கூட்டம். இரவு 10-30 கிண்டி இரயில் நிலையத்திலிருந்து மதுரைக்கு இரயிலில் புறப்பாடு. இரவு 11-00 காட்டுப்பாக்கம் இரயில் நிலையம் (தங்கல்).

2-2-46—காலை 5-00 காட்டுப் பாக்கம் இரயில் நிலையத்திலிருந்து புறப்பாடு. காலை 6-30 அச்சரப்பாக்கம் ...விழுப்புரம் ... விருதாச்சலம்....காலை 11-15 அரியலூர் (டாக்டர் ராஜன் வந்து சேர்ந்தார்)....லால்குடி....ஸ்ரீரங்கம். மதியம் 1-30 திருச்சிராப் பள்ளி. பிற்பகல் சுமார் 5-00 சமயநல்லூரில் இறங்கல். மாலை 6-30 மதுரை பிரார்த்தனைக் கூட்டம் (குறிப்பிடப்பெற்ற நேரம் 5-30.) இரவு 8-45 கூட்டத்திலிருந்து புறப்பட்ட நேரம்.

3-2-46—காலை 7-30 ஸ்ரீமீனாட்சி சொக்கநாதர் ஆலயத்திற்கு வந்து வழிபட்டார். காலை 8-45 ஆலயத்திலிருந்து புறப்பாடு. மதியம் 1-00 மதுரையிலிருந்து பழனிக்குப் புறப்பாடு. மாலை 5-00 பழனி பொதுக் கூட்டம். இரவு 8-00 பழனியாண்டவர் ஆலயத்திற்குச் செல்லுதல். இரவு 10-00 பழனி தனி இரயிலுக்குத் திரும்பினர். இரவு 11-00 பழனி தனி இரயிலில் புறப்பாடு. அக்கரைப்பட்டி இரயில் நிலையத்தில் இரயிலிலேயே இரவு தங்கல்.

4-2-46—அதிகாலை அக்கரைப்பட்டியிலிருந்து புறப்பாடு. காலை 6-00 திருச்சிராப்பள்ளி. காலை 7-00 தஞ்சாவூர்....கும்பகோணம்....மாயவரம்...சீர்காழி. சுமார் 12-00 கடலூர்... விழுப்புரம்...திருமணி. பிற்பகல் 4-00 செங்கற்பட்டு. தாம்பரம். மாலை 5-00 கிண்டி இரயில் நிலையம் வருகை. மாலை 5-15 இந்திப் பிரச்சார சபை வருகை. மாலை 5-30 பிராத்தனைக் கூட்டம். இரவு 7-45 சத்திய நாராயணு இல்லத்திலிருந்து புறப்பாடு.... சாஸ்திரியார் வீட்டிற்குச் சென்று அவரைப் பார்த்தார். ...அம்பத்தூர் இரயில் நிலையத்தில் இரயில் ஏறினர்.

—o—

பொருட் குறிப்பு

அ

அன்னிபெசண்ட் 90, 130 142, 143, 159, 160, 161 178, 179, 184, 185, 189 190 முதல் 193, 211, 212 214, 216, 218, 224, 225 234, 266, 268, 279, 283 305, 389, 396, 542, 649

அஹிம்சை 107, 123, 129 137, 182, 184, 188, 201 205, 206, 207, 211, 239 251, 303, 310, 365, 382 902, 904, 905.

அலர்மேலுமங்கம்மாள் 147

எச். அனுமந்தராவ் 196

அரசியல் 20, 137, 158, 183 198, 209, 210, 213, 217, 266, 406, 661, 833.

அப்துல் குத்தூஸ்பாஷா— குத்தூஸ்பாஷா என்ற வரிசையைப் பார்க்கவும்.

அன்னிமேரி பீட்டர்சன் 331 335

அசலாம்பிகை 334

அரை ஆடை 352

கோவை அ. அய்யா முத்து 368, 450, 936

அரியநாயகம் 456

அரிஜனம் 329, 504, 615, 637 638, 645, 646, 651, 652 656, 657, 698, 706, 707 708, 709, 714, 715, 738 741, 748, 751, 752, 763 764, 767, 768, 773, 784 793, 794, 795, 796, 799 800, 802, 808, 809, 812 813, 814, 816, 820, 821 822, 831, 870, 873, 881 886, 899, 909, 913, 914 915, 925, 952

டி. எஸ். அவினாசிலிங்கம் 616 667, 711, 712, 733, 735 849, 878

க. அருணாசலம் 452, 616, 618

அரிசன சேவா சங்கம் 630, 636, 655, 750, 769, 795 796

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 781

அரக்கோணம் 272, 800

"அரிஜன்" பத்திரிகை 824 859, 862, 927

அம்புஜம்மாள் 155, 825, 831 871

அனந்தசார்லு 108, 109 114

அம்பத்தூர் 946, 953, 954

ஆ

ஆங்கிலேயர்கள் 12, 84, 200 879

ஆங்கிலம் 42, 77, 84, 100 101, 110, 132, 147 171, 273, 345, 375 843, 857, 879, 881, 882 902

ஆசிரியர் 100, 159, 541, 903

ஆடம் 109, 114

ஆதிநாராயண செட்டியார் 239, 243, 248, 370

ஆம்பூர் 270, 280

எம். கே. ஆச்சார்யா 334

ஆஷர் 413, 449, 725, 726 727

ஆரணி 468, 472, 799

ஆலயப் பிரவேசம் 623, 624 625, 657, 658, 764, 767 795, 798, 814, 815

ஆர்க்காடு 799

இ

இராமகிருஷ்ணர் 6, 791

இந்தியர்கள் 10 முதல் 24 31, 50, 53, 57, 64 68, 74 முதல் 77, 83, 84 85, 86, 96, 97, 105

முதல் 107 113-116, 141 153, 154, 179, 180, 183 194, 272
இந்துக்கள் 15, 113, 115 128, 149, 154, 264, 270 290, 389, 396, 772
இராயப்பன் 19, 30, 60, 62 63, 64, 65, 66, 68, 69 79, 84
இந்தியன் ஒப்பினியன் 38, 40 46, 52, 55, 59, 68, 74 76, 77, 100, 101
இந்தி 49, 100, 101, 253 254, 281, 345, 393, 407 480, 561, 592, 593, 640 692, 803, 810, 811, 814 823, 824, 825, 826, 827 828, 829, 830, 832, 833 836, 851 முதல் 858, 870 முதல் 872, 879, 881, 882 885, 889, 891, 896, 899 902, 906, 908, 910, 912 948, 949, 953
இரத்தினம் பத்தர் 64, 69 70
இலண்டன் 65, 69, 73, 82 84, 89, 106, 111
இந்தியா 20, 21, 31, 44 45, 79, 84, 105, 111 113, 115, 122, 123, 125 126, 137, 138, 139, 145 147, 179, 182, 183, 188 190, 191, 200, 217, 223 225, 242, 246, 256 258 272, 380
"இந்து" 107, 108, 113 115, 133, 142, 144, 183 192, 219, 233, 234, 267 279, 285, 296, 320, 326 353, 369, 423, 424, 469 634, 635, 729, 835, 855 944
சி. பி. இராமசாமி ஐயர் 130 178, 268, 278, 808, 910
வி. கே. இராமானுஜாச்சாரியார் 169, 171, 178
இராஜகோபாலாச்சாரியார் 192, 194, 236, 241, 243 244, முதல் 249, 262, 267 268, 271, 280, 284, 304 318, 319, 322, 339, 355 356, 371, 375, 385, 386 388, 391, 394, 395, 397 முதல் 400, 418, 450, 457 522, 523, 593, 598 600, 603, 604, 608 609, 611, 615, 627, 724 747, 757, 770 808 810, 812, 817, 821 825, 826, 830, 835 841, 843, 848, 854 856, 858, 861, 862 866, 869, 871, 872 882, 884, 888, 918 919, 934, 936-939
பி. என். இராமசுப்ரமணியம் 201, 695, 923, 929, 934
ஈ. வே. இராமசாமிப் பெரியார் 267, 385, 391 392, 399, 408, 440, 449 521, 622, 724, 855 869
இராமானுஜர் 321
இராம்ஜி கல்யாண்ஜி 307 322, 323, 327, 351
இரத்தினசபாபதி கவுண்டர் 416, 417
நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை 451, 759, 849 916, 917
இயேசு-198, 231, 332, 794
இராமநாதபுரம் 453, 559 589, 590, 712, 801
ஓ. பி. இராமசாமி ரெட்டியார் 455, 864, 865
இந்து சமயம் 28, 170, 311 332, 377, 512, 752 899, 900, 953
இரமணர் 544, 545, 546 654
இராஜபாளையம் 555, 556 557, 684, 685
இலங்கை 588
இலட்சுமி (தேவதாஸ்) 609 611, 828.
ஜி. இராமச்சந்திரன் 619 695, 774, 863, 867
இராமேசுவரம் 627
இராமகிருஷ்ண வித்யாலயம் 711, 732, 734, 735,

இலட்சுமி (சத்தியமூர்த்தி) 821, 873

ஈ

ஈரோடு 293, 305, 318 366, 385, 392, 393, 407 577, 754, 755

உ

உப்பு சத்யாக்ரகம் 598, 599
உதகமண்டலம் 626, 718 720, 721
உடுமலைப்பேட்டை 710, 736 737
உத்தமபாளையம் 739, 741 742

ஐ

ஐரோப்பியர்கள் 20, 74 100, 111

ஒ

ஒப்பந்தக் கூலி 1 முதல் 5, 11 12, 13, 15, 16, 63, 70, 114, 121, 238, 274
ஒயிட்ஹெட் 196, 220, 221
ஒத்துழையாமை இயக்கம் 178, 264 முதல் 270, 272 273, 274, 277, 281, 283 284, 289, 291, 299, 300 314, 320, 369, 388, 396 578

ஔ

ஔவை 844, 845, 846

க

கண்ணகி 28, 95
கஸ்தூரிபா காந்தி 30, 88 125, 126, 127, 128, 130 131, 133, 146, 147, 149 150, 155-157, 161 முதல் 170, 178, 179, 181, 187 306, 308, 309, 313, 531 589, 590, 608, 609, 632 802, 803, 822, 826, 831 836, 862, 863, 871 872, 891, 896, 942, 947
கட்டபொம்மன் 122
கஸ்தூரி ரங்க ஐயங்கார் 193 231, 233, 236, 243, 244 245, 267, 271, 279, 281 282, 291, 292, 309, 322 339, 388, 422, 423
கல்யாணசுந்தர முதலியார் 267, 271, 402, 440 563, 848, 849, 855, 954
கடலூர் 286, 318, 330 முதல் 332, 445, 498 499, 783, 941
கதர் 267, 302, 325, 345 357, 362, 394, 396 399, 405, 414, 421 437, 446, 473, 505, 614, 698, 700
கல்லிடைக்குறிச்சி 317
கல்யாண்ஜி-இராம்ஜி கல்யாண்ஜி-வரிசையைப் பார்க்கவும்
கரூர் 346, 583, 753
எஸ். கணேசன் 391
கன்னியாகுமரி 409, 411 453, 669, 670, 711 733, 809, 813, 815 816, 870
கருப்பண்ணச்செட்டியார் 366, 449
''கல்கி'' 450, 451, 610 849
கக்கன் 619, 623, 695
கம்பம் 739, 742
சங்கு கணேசன் 848
சா. கணேசன் 362, 540
கம்பர் 95, 844, 918, 919
கள்ளுக்கடை மறியல் — 316 317, 318, 352, 357, 631

கா

காந்தி-பாலசுந்தரம் சந்திப்பு 1, தமிழகத்தில் புகழ் 5, காந்திஜியும் தமிழர்களும் 5,

6, காந்திஜியும் வள்ளுவரும் 6, முற்பிறவியின் காரண மாகத்தான் தமிழர்களுடன் பிணைப்பு 6, தமிழன் உயர்த் திஞன் 7, காந்தியடிகள் உள்ளத்தில் குறள் நெறி 8, தமிழன் இணைந்த மூல காரணம் 9, காந்திஜி 1896 -இல் இந்தியா வருகை 20, சத்தியாக்ரகம் தோன்றி யது 22, காந்திஜிக்குச் சிறைத் தண்டனை 23, காந்தி - ஸ்மட்ஸ் சமரச உடன்பாடு 23, காந்திஜி தமிழ் ஆசிரியர் 26, பெண் கள் சிறை செல்லுதல் 30, தமிழ்ப் பெண்கள் வீரத் தைக் கண்டார் 32, காந்திஜி - வள்ளியம்மா உரையாடல் 37, வள்ளி யம்மாளுக்கு காந்திஜி அஞ்சலி 38, 39

ாகப் பனுக்கு காந்திஜி பாராட்டு 43 நாராயண சாமி மரணம்பற்றி காந்திஜி 46 தம்பிநாயுடுவுக்காக ஆதரவு - 55, தம்பிநாயுடு பற்றி 56, காந்திஜி தமிழ் கற்கத் தொடங்கியது 57, பி. கே. நாயுடு அபராதம் செலுத்தியது பற்றி காந்திஜி 59, சிறையில் முடி வெட்டுதல் 60, காந்திஜி யால் சுத்தத்தங்கம் என்று பாராட்டப் பெற்றவர் 62, மூன்றுவது வகுப்பில் பயணம் செய்ய இராயப் பனுக்கு அறிவுரை 66, இரத்தினம் பத்தருக்காக அக்கரை 69, லாசரஸ் வீட்டில் தங்கல் 71, வி. ஏ. செட்டியாரை கௌரவித் தார் 74, நாயுடு, அவர் வாழ்க்கைத் துணைவியாருக் குப் பாராட்டு 88, தமிழர் களுக்குப் பாராட்டு 90, 92 93, 94, 98 தமிழர்களுடன் நெருங்கிப் பழகியிருந்திருக் கூர் 97, தமிழருக்குக் கைம்மாறு 97, தமிழர் தான் ஆட்சியாளர்களாய் இருப்பார்கள் 98, முதன் முதலாக இந்தியா வந்தது, 106, சென்னையில் காந்திஜி யின் உரை 110, 1896-இல் சென்னையிலிருந்து புறப் பாடு 116, சென்னைக்குப் பாராட்டு 121, ஜி. ஏ. நடேசன் இல்லத்தில் காந்திஜி 132, 133, முதல் பொது நிகழ்ச்சி 140, சென் னையில் தமிழர்களுக்குப் பாராட்டு 141, வரவேற் புரை தமிழில் இருக்கவேண் டுதல் 172, அன்னி பெசண் டுக்கு காந்திஜி மறுப்பு-214, தெய்விகக் கனவு 243 முதல் 247, ராஜாஜியை முதன் முதலாகச் சந்தித்தது 245, பாரதி சந்திப்பு 248, 249, கையில் வெட்டுக் காயம் 336, காந்திஜியைப் பயில் வான் தூக்கிச் சென்றார் 366 காந்திஜியைக் கடத்தினர் 435, சத்தியத்திற்காக விடு தலையை பலி கொடுப்பேன்- காந்திஜி – 497, பண்டி தர்களைச் சந்தித்துப் பேசி யது–513 மாணவர்கள் உண்மையை ஒப்புக் கொண்டதற்குப் பாராட்டு 515, இரமணரும் காந்தி யும் 544, 545, 546, சங்கராச்சாரியாரை சந்தித் தார் 574 - 576 கதர்த் துறையில் தமிழகத்திற்கு காந்திஜி பாராட்டு 586, இலட்சுமி - தேவதாசுக்கு காந்திஜி அறிவுரை – 611, 612, அலங்காரமான ஏற் பாடுகளுக்கு எதிர்ப்பு–682, காந்திஜி நாடகம் பார்த் தார் 731, கார் விபத்து 732, கொரடாச் சேரியில் காந்திஜி பட்டபாடு 769, காந்திஜியின் உயிருக்கு ஆபத்து 781, ராஜாஜி யுடன் கருத்து வேறுபாடு 861 மதுரைப் பொதுக் கூட்டத்தில் அவதி - 924

முதல் 928, காந்திஜி கோபம் 929, செஞ்சியிலிருந்து கடைசியாக காந்திஜி புறப்பாடு 954
காங்கிரஸ் 20, 122, 124, 127 145, 173, 189, 224, 229 264, 267, 274, 278, 386 393, 396, 400, 591, 592 824, 825, 834, 854, 855 858, 859, 860, 865, 866 868, 898, 899, 900
காரைக்குடி 347, 348, 359 360, 362, 363, 534, 538 626, 702, 801
காமராஜ் 350, 685, 686 687, 688, 689, 690 872, 898, 899, 901 919 931, 937 முதல் 940
காஞ்சிபுரம் 184, 394, 445 488, 489, 797, 798, 869
காந்தி ஆசிரமம் 415, 451 756, 757, 758, 759
காரைக்கால் 772
காட்பாடி 790

கி

கிறித்தவர் 70, 295, 331, 332, 528, 564
கிறித்தவ மதம் 72, 565 566 முதல் 570, 792
கிருஷ்ணசாமி ஐயர் 127 130, 156, 161
கிருஷ்ணசாமி சர்மா 163 184, 268, 272
கிறித்தவப் பாதிரிமார் 197 216, 890, 942
கிருஷ்ணகுந்து 255, 357
கிலாபத் 274, 278, 280 281, 316
கிருஷ்ணகிரி 462, 463
கிறித்துகுல ஆசிரமம் 792 793
கிருஷ்ணசாமி பாரதி 813, 866, 867

கீ

கீதை 184, 198, 208, 312 378, 515, 516, 582, 585

கு

குறள் நெறி 7, 8, 9, 59
கும்பகோணம் 79, 145, 168 286, 318, 330, 335 முதல் 338, 342, 510, 511, 603 766, 769, 941
குறள்—திருக்குறள் என்ற வரிசையைப் பார்க்கவும்.
குத்தூஸ்பாஷா 271, 273 279
குடந்தை — கும்பகோணம் என்ற வரிசையைப் பார்க்கவும்
குமரப்பா 456, 877
குடியாத்தம் 467, 790
(டாக்டர்) குருபாதம் 543 544, 567, 569, 570
குற்றாலம் 626, 677, 864
குழந்தைகள் 642, 645
குடி 151, 152, 345, 358 432, 658, 794, 915
குமாரசாமி ராஜா 555, 557 684, 685, 686, 687
குன்னூர் 709 முதல் 714, 718, 722, 730
குஷ்ட நிவாரணம் 941, 942
குளித்தலை 753

கெ

(டாக்டர்) கெய்த்தான் 567 569, 570, 818, 819

கொ

கொள்ளிடம் 335, 336

கோ

கோகலே 26, 54, 67, 78 90, 113, 125, 126, 127 137, 139, 140, 148, 149 151, 158, 178, 193, 203, 266, 874, 875
கோபாலசாமி முதலியார் 237, 239
கோவில்கள் 256, 865

கோயமுத்தூர் 318, 366, 368 413, 448, 451, 577 626, 692, 711, 712 727, 728, 730, 732 735, 801, 881
கோத்தகிரி 716

ச

சத்தியாக்ரகம் 22, 23, 26, 29 38, 41, 58, 68, 85, 90, 91 127, 137, 138, 167, 182 230, 231, 233, 234 முதல் 237, 239, 240, 242, 246 250 முதல் 252, 254, 255 257, 259, 260, 268, 272 488, 653, 777, 789, 865, 866, 897, 927
சங்கர ஐயர் 109, 114
சர்வ மத சமானத்துவம் 188, 565, 566
சத்தியம் 93, 137, 184, 188 204, 205, 208, 211, 213 221, 239, 240, 303, 875 902, 904, 905, 907
சமூகத்தொண்டு 151 முதல் 153
சத்தியமூர்த்தி 231 முதல் 233 235, 236, 239, 248, 259 267, 271, 313, 322, 480 482, 484, 633, 808 821, 873
ஆர். கே. சண்முகம் செட்டியார் 368, 576
கே. சந்தானம் 280, 449, 450 604, 810
சங்கராச்சாரியார் 574, 575 576
சகஜானந்தா 616, 778
சமயபுரம் 750
சனாதனிகள் 748, 754, 755 762, 764, 766, 767 785, 797, 809,
சுயமரியாதை இயக்கம் 775 776

சா

சாதி 96, 199, 211
சாத்விக எதிர்ப்பு 127, 137 138, 179, 182, 634
சாஸ்திரி - சீனிவாச சாஸ்திரி என்ற வரிசையைப் பார்க்கவும்
உ. வெ. சாமிநாத ஐயர் 828 83

சி

சிறைத்தண்டனை 31, 50, 51 56, 60, 63, 65, 67, 73 75, 79
சிறைக் கொடுமை 40, 41 67, 86, 87
சிவகங்கைச் சீமைச் சகோதரர்கள் - 122
(சுவாமி) சிரத்தானந்தர் 126
வ. உ. சிதம்பரம்பிள்ளை 232 233, 237, 266, 267, 284, 340, 681, 848
சிதம்பரம் 286, 335, 336 503, 777, 941
சிவா 266, 360, 361, 382, 383, 384
சிவஞான கிராமணியார் 643 918
சிவகங்கை 709
சித்பவானந்த 718, 719
("தினமணி") சிவராமன் 848
சிவசண்முகம் 873. 909

சீ

சீனிவாச சாஸ்திரி 128, 136 137, 157, 164, 167, 176 178, 180, 186, 196, 202 233, 237, 274, 275, 278 303, 386, 389, 515, 612 782, 822, 840, 874, 875 876, 877, 906 முதல் 908 946, 947
வி. வி. சீனிவாச ஐயங்கார் 130 147
எஸ். சீனிவாச ஐயங்கார் 130 154, 155, 178, 180, 186 196, 267, 268, 274, 303 318, 334, 386, 397, 421 433, 435, 521, 797, 802

சீர்காழி 335, 336, 773, 774 941
சீதை 422, 537, 577

சு

டி ஏ. சுப்ரமணிய ஆச்சாரி 78 164, 167
ஜஸ்டிஸ்சர் சுப்ரமணிய ஐயர் 90, 108, 109, 127, 135 193, 233, 243, 268, 400
ஜி. சுப்ரமணிய ஐயர் 108 114, 124, 136
சுதேசி 125, 129, 134, 171 172, 183, 186, 188, 197 முதல் 201 வரை, 208, 211 265, 323, 325, 337, 357 371, 374, 397
"சுதேசமித்திரன்" 134 142, 144, 145, 153, 172 173, 210, 231, 248, 267 270, 271, 274, 276, 277 278, 283, 284, 313, 319 326, 353, 365, 478, 634
பேராசிரியர் சுவாமிநாதன் 163, 850
வி.ஏ. சுந்தரம் 187
கவிசுப்ரமணிய பாரதி 248 முதல் 250, 266, 319, 451, 849, 901, 902
(மதுரை) சுந்தரம்பிள்ளை 255
ஆர். டி. பி. சுப்ரமணிய நாடார் 255, 690
வ. வெ. சு. ஐயர் 271, 340 439, 440 முதல் 444 வரை
(மௌலானா) சயானி 319, 320, 323, 355, 358
சுப்ரமணியசிவா - சிவா என்ற வரிசையைப் பார்க்கவும்.
என். எம். ஆர். சுப்பராமன் 616, 617, 618, 692, 699 700, 812, 813, 878, 923 929, 951
(சங்கு) சுப்ரமணியம் 848
சுதந்திரம் 122, 125, 148 301, 324, 356, 385, 886 887, 945, 951, 952, 953

செ

சென்னை 20, 57, 88 முதல் 90 96, 105 முதல் 113, 116 117, 120 முதல் 124, 126 முதல் 128, 130, 134, 136 140 முதல் 142, 147, 148 159, 161, 177, 180 முதல் 182, 184, 186 முதல் 188 190, 195, 196, 208, 210 212, 222, 225, 230, 259 262, 269, 270, 273, 281 294, 299, 304, 305, 322 342, 374, 375, 380, 381 382, 387, 402, 404, 420 435, 445, 514, 589, 590 591, 593, 595, 627, 632 633, 658, 662, 733, 802 803, 809, 817, 826, 828 853, 854, 857, 865, 866 867, 868, 871, 877, 881 883, 903, 906, 908, 919
செல்வன் 46, 169
வி. ஏ. செட்டியார் 73, 74
சென்னை மாநிலம் 14, 42, 84 89, 123, 129, 154, 161, 177, 246, 268, 299, 300 337, 355, 376, 711, 824 830, 848, 852, 856, 857
செம்பனார்கோவில் 164, 165 185
செங்கற்பட்டு 286, 941, 944
சென்னை அரசு 269, 317, 322 464, 625, 807, 855
செட்டி நாடு 343, 346, 357 358, 362, 536, 539, 700 703, 705

சே

சேலம் 108, 109, 110, 269 270, 293, 294, 317, 319 370, 371, 407, 445, 448 451, 760
சேதுபதி 110
சேவாப் பேட்டை 294, 370
சேர்மாதேவி குருகுலம் 297 439 முதல் 444, 676

சை

சையத் முகமது 145, 146

சொ

ராய. சொக்கலிங்கம் 322 360, 701, 849
(''தினசரி'') சொக்கலிங்கம் 848

சோ

எஸ். சோமசுந்தரபாரதி 232 239
சோழவந்தான் 349, 351 352, 745, 746, 933

சௌ

சௌகத் அலி 269, 270 முதல் 272, 287, 290, 339
சௌராஷ்டிரர் 357, 550 551, 909

ட

டர்பன் 36, 44, 45, 65, 67, 69, 76, 100, 102, 105 111

டா

டால்ஸ்டாய் பண்ணை 25, 29 50, 88, 92
டால்ஸ்டாய் 217, 218

டி

டிரான்ஸ்வால் 12, 21, 22, 23 24, 30, 34, 36, 49, 56 61, 62, 63, 65, 67 70, 73, 76, 85, 86, 90 106, 180
டிரான்ஸ்வால் அரசு 27, 40 52, 60, 77

டீ

டீப்க்ளூப் சிறை 55, 66, 77, 79, 85, 86,

டெ

டெண்டுல்கார் 120, 129 201

த

தமிழர் 1, 3 முதல் 6, 7, 9 13 முதல் 17, 19, 25, 30 58, 71, 74, 76, 78, 80 84, 85, 86, 87 முதல் 89 90, 91, 92, 94, 95, 96 97 முதல் 100, 105, 106 114, 122, 123, 127, 128 131, 141, 142, 163, 164 182, 188, 192, 203, 244 259, 267, 365, 374 599, 837, 838, 841, 847 852, 857, 874, 883, 894 950.
தம்பி நாயுடு 25, 31, 47 48, 49, 50, 51, 52 53, 85.
தமிழ் 16, 23, 26, 57, 72 84, 85, 100, 101, 106 112, 132, 150, 151, 171 172, 187, 238, 253, 254 340, 361, 375, 562, 563 594, 656, 811, 828, 829 837 முதல் 844 வரை, 852 869, 872, 873, 879, 880 883, 886, 901, 909.
தரங்கம் பாடி 46, 127, 128 164, 165, 166, 168, 170 185, 186, 251, 508, 772.
தமிழகம், தமிழ்நாடு 5, 19, 29, 48, 106, 122, 124 126, 127, 129, 145, 148 149, 177, 183, 188, 195 222, 223, 224, 249, 251 252, 265, 266, 267 268, 269, 270, 273 297, 321, 365, 398 449, 454, 588, 589 599, 608, 632, 633, 634 668, 673, 707, 711, 712 725, 807, 808, 820 829, 852, 853, 854 857, 864, 865, 866, 868 871, 879, 880, 885, 947 953.

தயாப்ஜி 146, 147, 184.
தஞ்சை 168, 251, 252, 253 256, முதல் 258, 261, 286 287, 289, 338, 378, 452 520, 603, 626, 633, 763 765, 864, 941.
தனுஷ்கோடி 589.

தா

தாய் மொழி 97, 134, 171 199, 209, 222, 223, 858 885, 902.
தாகூர் 126, 226, 264, 315 379
தாம்பரம் 944

தி

திருமணச் சட்டம் 28, 35 94
திலகர் 15, 107, 159, 224, 229, 264 முதல் 266 287, 288, 389
திருச்சிராப்பள்ளி 110, 251 253, 254, 261, 289, 290 292, 293, 318, 327, 339 341 முதல் 343, 365, 366 383, 452, 525, 527 530, 633, 747, 750, 751 752, 801, 920, 921, 922 941, 949.
திருவள்ளுவர் 6 முதல் 9, 94 95, 97, 123, 125, 128 276, 361, 841, 844, 846
திருக்குறள் 9, 128, 361, 562 563, 842
திருமலைப் பிள்ளை 147
சி. ஆர். திருவேங்கடாச்சாரி 130
தில்லையாடி 164, 168, 169 186.
தியாகராசச்செட்டியார் 143 159, 268, 381, 424.
திருநெல்வேலி 281, 353 363 முதல் 365, 453, 558 671, 675, 676, 677, 711 712, 801, 853, 854.
திண்டுக்கல் 254, 290, 291 318, 346, 347, 348, 349 692, 710, 738, 739 801, 813, 817, 854, 933
திருப்பராய்த்துரை 291
திருப்பூர் 293, 366, 408 413, 450, 552, 577 582, 584, 723 முதல் 727
திருப்பாப்புலியூர் 331, 335
"தினமணி" 343, 466
திருப்பத்தூர் 358, 543 708, 792
திருகூட சுந்தரம்பிள்ளை 364 848
திருவாசகம் 842
திராவிட நாடு 374, 869
திருச்செங்கோடு 399, 420 724, 756
திருத்தணி 597, 809
திருச்செந்தூர் 678
திருவாரூர் 288, 770
திருவண்ணுமலை 398, 787
திருப்பரங்குன்றம் 820
தியாகராஜர் 880
திருமால் 6, 7

தீ

தீண்டாமை 129, 174, 188 209, 267, 311, 312, 321 337, 338, 339, 345, 365 368, 377, 396, 614, 632 633, 643, 655, 659, 665 672, 739, 740, 744, 747 763, 764, 770, 771, 784 798, 814, 886, 949

து

துரைசாமிபிள்ளை 79, 338
(ஜேம்ஸ்) துரைசாமி 76, 77
எம். பி. துரைசாமி ஐயர் 167
துரைசாமி ஐயங்கார் 271
எல்.கே. துளசிராம் 400, 550

தூ

தூத்துக்குடி 171, 251, 254 256, 257, 261, 316, 364 561, 588, 678, 679, 680 681, 684, 738, 739, 839

தெ

தென்னப்பிரிக்கா 7, 49, 67 72, 74, 78, 79, 82, 87 88, 100, 101, 105, 106 107, 114, 116, 127, 128 138, 139, 141, 145, 146 153, 154, 164, 165, 167 178, 179, 182, 224, 267 713
தென்னப்பிரிக்க இந்தியர்கள் 10, 14, 15, 17, 84, 90, 98 107, 112, 113, 127, 134 145, 149, 154
தென்னப்பிரிக்க சத்தியாக்ரகம் 34, 39, 127, 128
தென்னர்க்காடு மாவட்டம் 334, 452, 633

தே

தேவதாஸ் காந்தி 307. 609 611, 852, 854, 945, 954
தேவகோட்டை 361, 362 369, 537, 702, 703, 705, 707, 708, 752
தேவதாசி 492, 496, 509 510

தொ

தொழிலாளர்கள் 15, 30, 31 71, 109, 238, 240, 241 258, 285, 321, 329, 354 368, 428, 698, 699, 911
தொல்காப்பியர் 95

ந

நகை 33, 73, 529, 552, 557 558, 662
ஜி. ஏ. நடேசன் 90, 99, 127 130, 132 முதல் 137 140, 154, 156, 161, 163 173 முதல் 178, 180, 181 184, 186, 187, 196, 201 203, 226, 233, 248, 278 283, 307, 308, 390, 802, 822, 827, 840.
பி. நடேசன் 133
எம். எஸ். நடேச ஐயர் 169
எம்.சி. நஞ்சுண்டராவ் 243
நந்தனர் 503, 504, 505 614, 730
நகரத்தார் 532, 533, 588 596
நபிநாயகம் 358

நா

நாராயண பத்தர் 19, 105
நாடு கடத்துதல் 24, 40, 44 57, 65, 67, 73, 74, 77 78, 90, 98
நாகப்பன் 38, 39, 40, 41, 42 43, 46, 97, 252
நாராயணசாமி 38 முதல் 40, 44, 45, 46, 97, 252
பி. கே. நாயுடு 56, 57, 58 59, 60, 61, 62, 84, 85 400
நாய்க்கர் 169, 174, 175 176, 178, 186, 188
நாகப்பட்டினம் 251, 258, 259, 261, 287, 288, 525, 771
நாச்சியார் கோவில் 286
(டாக்டர் டி. எம்.) நாயர் 268
நாகூர் 288, 772
நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் 322
நாடார்கள் 365, 548, 558 559
நாகர்கோவில் 412, 574, 664 668, 809, 813, 814, 815 817
ஆர். எஸ். நாயுடு 547, 931
நாட்டார்கள் 705, 706, 707 708, 709, 715
நாமக்கல் 759

நி

நியூகேஸில் 30, 31, 56, 70 71, 78
"நியூ இந்தியா" 143, 159 191, 194, 195, 212, 214 215, 216, 225, 279 305, 306.
நிர்மாணத் திட்டம் 315, 370 387, 397, 398, 399

400, 886, 890, 891, 892 897, 904, 909

நீ

நீதிக்கட்சி 224, 268, 520 553, 869
நீடாமங்கலம் 287 முதல் 289
நீல்சிலை 481, 482
நீலகிரி 801

நெ

நெல்லை–திருநெல்வேலி என்ற வரிசையைப் பார்க்கவும்.

நே

நேட்டால் இந்தியர் காங்கிரஸ் 2, 19, 20,
நேடால் 12, 14, 17, 24, 30 63, 69, 73, 76, 77, 105 106, 111, 114, 115

ப

பக்தி 33, 76, 865
பச்சையப்பன் 46, 109, 110 159, 185, 485, 486
(பேராசிரியர்) பரமானந்த் 69, 84
பச்சைப்பிரசுரம் 106, 110 111
பத்ருதீன் தயாப்ஜி 107, 124 தயாப்ஜி என்ற பட்டியலையும் பார்க்கவும்.
பரமேசுவரன் பிள்ளை 108 110, 114
பஞ்சாயத்து 125, 199
பஞ்சமர் 161, 167, 170, 186 312, 321, 365, 369, 377
பகவத்கீதை-கீதை என்ற வரிசையைப் பார்க்கவும்.
(மூனகால) பட்டாபி ராமய்யா 255, 352, 616 619, 746
பரங்கிப் பேட்டை 318, 330 முதல் 332, 335
பண்ருட்டி 331
பந்துலு ஐயர் 336, 511
எம். பக்தவத்சலம் 369, 470 868, 901
பரதன் குமரப்பா 456, 877
பண்டிதர் 513, 518, 519 520
பழனி 710, 737 முதல் 739 870, 919, 932 முதல் 941 947, 951, 952
பவானி 755

பா

பாலசுந்தரம் 1 முதல் 5, 19 71, 72, 107, 110, 111
பாஷ்யம் ஐயங்கார் 108 644, 648, 663, 708 802, 810, 826, 831 881, 886, 914
பார்த்தசாரதி நாயுடு ஏ. சி. 114
பாரதி - சுப்ரமணிய பாரதி என்ற வரிசையைப் பார்க்கவும்.
பாஸ்கரதாஸ் 363
பாலையங்கோட்டை 563 564
கே. பாஷ்யம் 642, 826 881, 893, 945

பி

பிரிட்டிஷ் இந்தியர் சங்கம் 22 76, 82, 83
பிரிட்டோரியா 42, 87
சி. எம். பிள்ளை 59, 82, 83
பிள்ளையார்சுழி 101
பிறையாறு 128
பிரம்மசமாஜம் 146
டி. பிரகாசம் 147, 235 243, 322
பிரம்மச்சர்யம் 137, 188, 206 211
பிரகலாதன் 204
பிராமணர் - பிராமணரல்லாதார் சிக்கல் 295, 296 297, 298, 310, 311, 314 321, 365, 396, 477, 501 502, 521, 522, 523, 524 559, 560, 571, 572, 573

பிராமணரல்லாதார் 268 295, 296, 297, 310 முதல் 314, 320, 376, 396, 615
பிராமணர் 170, 295 முதல் 299, 309 முதல் 311 312 314, 345, 346, 376, 378 395, 614

பீ

பீட்டர்சன்–அன்னிமேரி பீட்டர்சன் என்ற வரிசையைப் பார்க்கவும்.

பு

புதுக்கோட்டை 290, 343 346 முதல் 348, 359, 363 531
புதுப்பாளையம் 399, 417, 419 756 முதல் 759
புதுச்சேரி 784, 785

பெ

பெண்கள் 25, 29, 31 முதல் 33, 36, 146, 150, 495 496, 528, 537, 543, 556 576, 642, 690, 695, 697 768, 831, 872. மாதர்கள் என்ற வரிசையையும் பார்க்கவும்.
பெரியகுளம் 740, 741
பெசண்ட்–அன்னி பெசண்ட் என்ற வரிசையைப் பார்க்கவும்.

பொ

பொய்யாமொழிப்புலவர்–திருவள்ளுவர் என்ற வரிசையில் பார்க்கவும்.
பொறையாறு 128, 166
பொள்ளாச்சி 579, 710, 735 894

போ

போனிக்ஸ் பண்ணை 30, 31 66, 71, 76, 78, 88, 100 137, 169
போப்பின் தமிழ்ப் புத்தகங்கள் 187
போலக் 37, 44, 64, 69, 89 90
போத்தனூர் 408, 413, 525 710, 711, 732, 735
போடி 745

ம

மகாஜன சபை 108, 116 124, 145
மதுவிலக்கு 125, 267, 319 321, 368, 385, 393, 431 479, 905, 906
"மகாத்மா" (நூல்) 129
மகாத்மா பட்டம் 127, 236
மதமாற்றம் 198, 565 569
மதுரை 251, 254 முதல் 257, 261, 290, 291, 326 346 முதல் 350, 353 முதல் 357, 363, 365, 400, 445 453, 547, 558, 604 605, 618, 622, 632, 692 693 முதல் 700, 709, 711 712, 728, 785, 801, 812 817, 820, 854, 864, 865 868, 870, 913, 919, 922 923, 924, 925 முதல் 933, 940, 944, 946, 947 949, 951, 952
மன்னர்குடி 287, 514, 515 517
மணப்பாரை 349

மா

மாணவர் 64, 77, 88, 121 128, 130, 132, 157, 158 173, 174, 186, 192, 194 195, 196, 201 முதல் 203 210 முதல் 212, 216, 220 221, 274, 275, 287, 288 342, 371, 427, 429, 432 465, 486, 515, 516, 527 541, 549 639, 655, 694 746, 750, 751, 868, 882 883, 903, 904, 921
மாணிக்கம் பிள்ளை 77

டி. மாதவராவ் 101, 102, 124
மாயவரம் 164 165, 166 169, 170, 172, 173, 183 185, 186, 286, 335, 336 506, 508, 773, 941
மாதர்கள் 93, 140, 172 184, 327, 371 முதல் 374 638, 761, 897, 943 பெண்கள் என்ற வரிசையையும் பார்க்கவும்.
மாணிக்க வாசகர் 353, 842 846
மாணமதுரை 709

மீ

(மதுரை—ஸ்ரீ) மீனாட்சி சொக்கநாதர் ஆலயம் 254 353, 621, 622, 623, 624 813, 864, 868, 870, 929 930, 934, 952

மு

முனுசாமி முதலியார் 34, 37 79
சர். டி. முத்துசாமி ஐயர் 102
முஸ்லிம்கள் 15, 128, 149 150, 154, 246, 253, 264 265, 270, 274, 279, 289 290, 389, 396, 866
(மௌலானா) முகமதலி 316 317, 354, 388, 396
முத்துரங்க முதலியார் 475 917, 940
முத்துலெட்சுமி ரெட்டி 492 495, 638, 889
வி. ஐ. முனுசாமி பிள்ளை 878 886, 923, 931

மெ

மெட்ராஸ் ஸ்டாண்டர்டு 108, 114, 119
மெட்ராஸ் மெயில் 109, 114 176, 182, 218, 219, 272 279, 306, 323, 324 330, 424, 478, 634, 661 673

மே

மேட்டுப் பாளையம் 710, 722

ய

யங் இந்தியா 264, 276, 277 300, 313, 377, 381, 384 385, 387, 388, 391, 400 467, 861

யா

யாகுப் ஹாசன் 130, 149 267, 269, 271, 279, 280 283, 319, 325, 339, 383 425

ரா

வ. ராமசாமி 248, 362
ராஜகிரி 253, 286, 287
டி. எஸ். எஸ். ராஜன் 251 278, 291, 318, 319, 340 344, 355, 356, 363, 381 441, 525, 526, 615, 616 669, 671, 682, 683, 684 685, 686, 689, 695, 701 708, 710, 711, 712, 733 747, 776, 778, 780, 788 791, 849, 919, 921, 922 931
என். ராமஸ்வாமி 449, 451 456

ரெ

ராவ்பகதூர் டி. ரெங்காச்சாரி 130, 143, 278, 386
டாக்டர். ரெங்காச்சாரி 649
ஏ. ரெங்கசாமி ஐயங்கார் 231 236, 243, 248, 259, 322 729, 749, 796
கே. வி. ரெங்கசாமி ஐயங்கார் 259, 749

லா

டி. லாசரஸ் 70, 71
லால்குடி 526

வ

வள்ளுவர்-திருவள்ளுவர் என்ற வரிசையைப் பார்க்கவும்.
வள்ளியம்மா 31, 33 முதல் 40, 46, 79, 95, 169, 252 253
(டாக்டர்) வரதராஜுலு நாயுடு 267, 293, 370 371, 400, 440, 442, 444 521
வடபாதிமங்கலம் 336
வர்ணாஷ்ரம தர்மம் 378, 513 522, 524, 536, 554, 577 578, 583
என். எஸ். வரதாச்சாரி 280 450, 474, 802
வணிகர்கள் 15, 24, 327 328, 329
வத்தலக்குண்டு 740

வி

விவேகானந்தர் 6, 110, 297 409, 915
வின்சென்ட்லாரென்ஸ் 71 72, 84
சி. விஜயராகவாச்சாரியார் 124, 239, 243, 262, 267 301, 302, 371, 372, 401 533, 534, 761, 900
விழுப்புரம் 286, 330, 920 941, 949
விஸ்வநாததாஸ் 350
வினோபாஜி 409
விதவைத் திருமணம் 487, 490, 513
விருதுநகர் 255, 553, 559 684, 688, 689, 690, 817
விடுதலை—சுதந்திரம் என்ற வரிசையைப் பார்க்கவும்

வெ

டி. வி. வெங்கட்ராமையர் 243, 283

வே

வேலிநிறுத்தம் 71, 241, 286 329, 381
வேலூர் 270, 280, 464, 788
கோ. வேங்கடாசலபதி 366 455, 619, 686, 689, 868, 898, 913
வேதாரண்யம் 600, 606, 607
சர்தார் வேதரத்தினம் 603 606, 616, 878

வை

ஏ. வைத்தியநாத ஐயர் 615 616, 618, 622, 623, 625 626, 692, 694, 695, 696 697, 810, 854, 864, 923 929

ஜ

டி. என். ஜகதீசன் 906, 909 941, 943

ஜா

ஜானகி 35, 79
ஜார்ஜ் ஜோசப் 178, 236 237, 255, 279, 293, 351 388, 547, 569, 691, 812

ஜெ

எஸ். ஜெகந்நாதன் 619, 940

ஜே

டாக்டர் ஜேசுதாசன் 567 569, 570, 792, 793

ஜோ

ஜோஹன்னஸ்பர்க் 14, 22, 25 31, 35. 36, 41, 42, 56, 63, 65, 73, 76, 79, 84, 87, 88, 93, 101, 141, 847

ஹ

ஹரிஹரசர்மா 163, 605, 669 796, 802, 810, 826 853, 854, 858, 881, 896, 917

ஹோ

ஹோசூர் 462, 463

ஸ்ரீ

ஸ்ரீரங்கம் 110, 253, 256, 345, 529, 603, 749, 921
ஸ்ரீராமகிருஷ்ண மாணவர் இல்லம் 429
ஸ்ரீராமகிருஷ்ண மடம் 644, 718
ஸ்ரீராமகிருஷ்ண ஆஸ்ரமம் 720

பட விளக்கம்

அடுத்த பக்கத்தில் இணைக்கப்பெற்றிருக்கும் படம் தமிழ் நாட்டில் காந்தியடிகள் வருகை புரிந்த முக்கியமான நகர்கள், ஊர்களைக் காண்பிக்கிறது. இருநூறுக்கு மேற்பட்ட இடங்களுக்கு அவர் வருகை புரிந்துள்ளார். ஆயினும். முக்கியமான இடங்கள் மட்டும் இப்படத்தில் இடம் பெற்றுள்ளன. என்கள் குறிப்பிடும் ஊர்களாவன :


1. ஹோசூர்
2. சூலகிரி
3. கிருஷ்ணகிரி
4. காட்பாடி
5. திருப்பத்தூர் (வ. ஆ.)
6. ஆம்பூர்
7. வேலூர்
8. குடியாத்தம்
9. ஆர்க்காடு
10. வாணியம்பாடி
11. ஆரணி
12. கொருக்குப் பேட்டை
13. அம்பத்தூர்
14. இராணிப்பேட்டை
15. சோழிங்கபுரம்
16. அரக்கோணம்
17. காஞ்சிபுரம்
18. சென்னை
19. தாம்பரம்
20. திருவள்ளூர்
21. பூந்தமல்லி
22. ஈக்காடு
23. செங்கற்பட்டு
24. அச்சரப்பாக்கம்
25. விழுப்புரம்
26. விருதாச்சலம்
27. அரியலூர்
28. லால்குடி
29. பெரம்பூர்
30. பரங்கிமலை
31. திருவண்ணாமலை
32. திருக்கோவிலூர்
33. கடலூர்
34. புதுச்சேரி
35. பண்ருட்டி
36. திருவெண்ணெய் நல்லூர்
37. சிதம்பரம்
38. சீர்காழி
39. மாயவரம்
40. கும்பகோணம்
41. திருவாரூர்
42. திருவிடமருதூர்
43. மன்னார் குடி
44. நாகப்பட்டினம்
45. நீடாமங்கலம்
46. நாகூர்
47. காரைக்கால்
48. தஞ்சாவூர்
49. திருச்சி
50. ஸ்ரீரங்கம்
51. மணச்ச நல்லூர்
52. கரூர்
53. குழித்தலை
54. புதுக்கோட்டை
55. கோட்டையூர்
56. காரைக்குடி
57. தேவகோட்டை
58. சிவகங்கை
59. மானமதுரை
60. பரமக்குடி
61. இராமநாதபுரம்
62. தனுஷ்கோடி
63. திண்டுக்கல்
64. சோழவந்தான்
65. மதுரை
66. திருப்பரங்குன்றம்
67. திருமங்கலம்
68. விருதுநகர்
69. சிவகாசி
70. கோவில்பட்டி
71. எட்டையபுரம்
72. நாங்குநேரி
73. தென்காசி
74. குற்றாலம்
75. தூத்துக்குடி
76. திருநெல்வேலி
77. பாளையங்கோட்டை
78. கன்னியாகுமரி
79. நாகர்கோவில்

80. பழனி
81. உடுமலைப்பேட்டை
82. கோமங்கலம்புதூர்
83. பொள்ளாச்சி
84. இணற்றுக்கடவு
85. காரமடை
86. மேட்டுப்பாளையம்
87. குன்னூர்
88. கோத்தகிரி
89. உதகமண்டலம்
90. உசிலம்பட்டி
91. கோயம்புத்தூர்
92. அவினுசி
93. பல்லடம்
94. ஈரோடு
95. பவானி
96. திருச்செங்கோடு
97. கோபிச் செட்டி பாளையம்
98. நாமக்கல்
99. இராசிபுரம்
100. சங்கரிதுர்க்
101. சங்கரன் கோவில்
102. ஸ்ரீ வைகுண்டம்
103. கங்கை கொண்டான்
104. வலங்கிமான்
105. திருசிரை
106. நாச்சியார் கோவில்
107. சாலிமங்கலம்
108. இராசப்பன் சாவடி
109. பாபனசம்
110. ஐயம் பேட்டை
111. சமயபுரம்
112. பெரியங்குப்பம்
113. நட்ராம்பள்ளி
114. தரங்கம்பாடி
115. ஆதம் பாக்கம்
116. பள்ளிகொண்டை
117. காட்டுப்பாக்கம்
118. பரங்கிப்பேட்டை
119. தில்லையாடி
120. ஜோலார்பேட்டை
121. காஞ்சு காத்தான்
122. பாகனேரி
123. திருப்பத்தூர்
124. மணப்பாரை
125. கொடைக்கானல்
126. இராஜபாளையம்
127. சுசீந்திரம்
128. மேலூர்
129. ஓட்டன் சத்திரம்
130. வத்தலக்குண்டு
131. பெரியகுளம்
132. தேனி
133. சின்னமனூர்
134. கம்பம்
135. தேவாரம்
136. செக்கானூரணி
137. திருப்பூர்
138. சூலூர்
139. ஊத்துக்குளி
140. புதுப்பாளையம்
141. சேலம்
142. ஸ்ரீ வில்லிபுத்தூர்

படம் எழுதியவர் : ஜெயம்

—●—

புலிகர் வருக புரிந்த புன்னியுக் கலங்கள்



திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
x (முன்னுரை)	12	அது	அவை
13	11	பிரிதிநிதியின்	பிரதிநிதியின்
25	32	காலெக்பாக்	காலென்பாக்
37	29	சிறகைக்குச்	சிறைக்குச்
40	27	கடத்தில்	கட்டத்தில்
41	18	இத்தவப் புதல்வன் ?	இத்தவப் புதல்வன்
46	28	வள்ளியப்பன்	வள்ளியம்மா
53	9	ஒரு	ஓர்
57	3	காந்திஜி கறிகத்	காந்திஜி அதிக முயற்சியுடன் கற்கத்
79	27	டிப்குலுஃப்	டீப்குளுஃப்
79	கடைசிவரி	இருக்கும்	இருக்கும்.''
88	35	ஹர்டிஞ்ச்	ஹாடிஞ்ச்
97	30	அதன்	அவர்கள்
97	33	அது	அவர்கள்
98	24	போராடினர்கள்''	போராடினர்கள்
112	27 முதல் 30	இங்கு...உண்டு	குறிப்பு : கடல் பயணத்தில் அவருக்கு வந்த சொறி சிரங்கு இங்கு வந்தபோதுகூடக் குணமாகவில்லை என்று தெரிகிறது.
126	35	கூறிபடி	கூறியபடி
136	3	விளங்குகிறது.''	விளங்குகிறது.
140	24	புரிந்துகொள்ளமாட்டீர்கள்.	புரிந்துகொள்ளமாட்டீர்கள்,
150	26	வழிபட்டுப்	வழிபாட்டுப்
156	2	பேசிக்கொண்டிருந்தார்.''	பேசிக்கொண்டிருந்தார்?

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
157	முதல்வரி	நிறுவகிப்பவர்களுடைய	நிருவகிப்பவர்களுடைய
169	3	தில்லீயாடிக்கு	தில்லையாடிக்கு
185	4	சுப்ரமணிய இல்லம்	சுப்ரமணியம் இல்லம்
194	12	மூறையில்	முறையில்
204	13	உன்று	என்று
216	29	''...(கூட்டம்	''...(கூட்டம்
242	21	சத்தியாக்ரகிரகளல்லாத	சத்தியாக்ரகிகளல்லாத
252	23	நாட்டில்	நாட்டின்
259	3	நாகபட்டினத்தில்	நாகப்பட்டினத்தில்
269	25	காந்திஜியின்...முழங்கினர்	இராமராஜ்யத்தை நிறுவ வேண்டுமென்று முழங்கினர். காந்திஜியின்
271	10	கூடடத்தை	கூட்டத்தை
271	கடைசிவரி	அப்தூல்ரகிம்	அப்துல்ரகிம்
280	30 முதல் 32	ஆகியோர் தங்கள்...அனுப்பினர்கள்.)	ஆகியோர்) தங்கள்...அனுப்பினர்கள்;
333	14	கொண்டிருந்தது.	கொண்டிருந்தபோது
333	33	வெளிநாட்டுச்	வெளிநாட்டுத் துணிச்
338	8	தடங்கல் படுமே	தடங்கல்படுமே''
338	16	உப்புச்சத்தியாக்கிரத்தில்	உப்புச் சத்தியாக்கிரகத்தில்
344	18	''இந்தச் சம்பவம்	இந்தச் சம்பவம்
346	14 முதல் 16	திரைப்படக் கொட்டகை	கொட்டகை
347	34	ஆபிரக்கணக்கில்	ஆயிரக்கணக்கில்
347	35	நகரட்சி	நகராட்சி
362	9	என்னேப்போன்ற	என்னேப்போன்று
375	8	இருக்கமுடியும்.''	இருக்கமுடியும்,''
375	24	சரிகட்டுவதற்காக	சரிக்கட்டுவதற்காக
375	26	காலமாகும்.*''	காலமாகும்.*
378	3	சத்தான்	சாத்தான்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
379	5	தங்கடைய	தங்களுடைய
379	15	நடந்த	நடந்த
385	13	தளபதியானூர்."	தளபதியானூர்.
397	22	இல்லம்களே	இல்லங்களே
410	23	வேண்டியதாயிற்று."	வேண்டியதாயிற்று.
443	33	குருகுலம் தோன்றிய	குருகுலம் தோன்றியது
496	14	உண்டாகிறது	உண்டாகியது
500	10	தாக்சிக்கொள்ள	தாக்கிக்கொள்ள
512	22	இருப்பதர்க	இருப்பதாக
528	24	இருக்கிறது	இருக்கிறது
544	14	தரப்படுகிறது என்று	தரப்படுகிறது" என்று
545	14	கூறுவதும் உண்டு	கூறுவதும் உண்டு.
585	24	காரணங்களே	காரணங்கள்
585	37	அச்சுக்குத்துதோரும்	அச்சுக் குத்துவோரும்
591	13	காங்கிரஸ். இந்தச் சென்னைக் காங்கிரஸ்	காங்கிரஸ், இந்தச் சென்னைக் காங்கிரஸ்;
616	13	டி. எஸ். என்; ராஜன்	டி. எஸ். எஸ். ராஜன்
638	8	எச்சரிக்கை	எச்சரிக்க
643	21 முதல் 23	இங்குமாலே...சூட்டினர்	குறிப்பு: இது 646 ஆம் பக்கத்தில் 27 ஆம் வரிக்குப்பின் வரவேண்டும். அதாவது திரு ம. பொ. சி. மாலே சூட்டியது இராயவரம் ராபின்சன் பூங்கா கூட்டத்தில்.
650	16	காலதாமதமாகி	காலதாமதமாக
714	8	பாாத்த	பார்த்த
725	கடைசிவரி	மதுறைகளி	துறைகளிலும்
736	28	பொதுகூட்டத்தில்	பொதுக்கூட்டத்தில்)
760	4	கூடுதுறை ஜாமீன்தாரான	கூடுதுறை ஜமீன்தாரான

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
767	15	திறந்து விடவிடவேண்டுமென்று	திறந்துவிடவேண்டுமென்று
789	9	மன்றத்தலைவர். வி.டி. ரெங்கசாமி ஐயங்கார்,	மன்றத் தலைவர், வி. டி. ரெங்கசாமி ஐயங்கார்.
791	10	சர்வஞானந்தர் அவர்கள்,	சர்வ ஞானந்தர் அவர்கள்.
804	7	ஏற்பாட்டைச் செய்திருந்தார்,	ஏற்பாட்டைச் செய்திருந்தார்.
814	27	பேட்டி கான	பேட்டிகாண
820	16	திறந்து வெளிக்கு	திறந்த வெளிக்கு
828	கடைசிவரி	எண்ணுகிறேன்	எண்ணுகிறேன்''
840	30	இருக்கிறார்களோ	இருந்தார்களோ
861	34	''யங் இந்தியா''வில்	ஹரிஜனில்
863	34	விசாரனை	விசாரணை
882	22	ஆர்பபாட்டத்தை	ஆர்ப்பாட்டத்தை
882	29	ஆணையிட்டார்கள்,	ஆணையிட்டார்கள்.
894	22	விசாரிதார்	விசாரித்தார்

Librarian
Connemara Public Library
Madras-600 008